
குமுதம்



கரும்பு நசுக்க இரும்பு ஆலை எதற்கு?
கட்டமைந்த பற்களின் வலிமை:
கால்ஷியம் ஸாண்டோஸ் மகிமை!
பற்களுக்கும் எலும்புகளுக்கும், பெரியவர்களைவிட இருமடங்கு கால்ஷியம் குழந்தைகளுக்குத் தேவை. உங்கள் குழந்தைக்குக் கொடுங்கள் ராஸ்ப்பெர்ரி இன்சுவையுள்ள கால்ஷியம் ஸாண்டோஸ்.
நாளொன்றுக்கு 4-6 வில்லைகளே போதும்—பற்களுக்கு நலம், எலும்புகளுக்கு பலம்; தவிர உடம்புக்கு வைட்டமின்கள் C, D, B12.
200 மற்றும் 50 வில்லைகள் அடங்கிய புட்டிகளிலும், தவிர ஸிரப் வடிவிலும் வருகிறது.
வளர்ச்சிக்கு கால்ஷியம்
4 மாத காலம் கால்ஷியம் சாப்பிட்ட குழந்தைகள், சாப்பிடாதவர்களைவிட வேகமாக வளர்ந்ததாக விஞ்ஞானப் பரிசோதனைகள் நிரூபிக்கின்றன.
கால்ஷியம் ஸாண்டோஸ்®
தினமும் தேவை எவருக்கும்
SANDOZ
எல்லா முக்கிய மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

dCP/CS/71. Tam

[illegible]

1

வைதிக முறைப்படி நடக்கும் கல்யாணத்தில், பிள்ளை ஜபிக்கும் பல மந்திரங்களில் ஒரு மந்திரத்தின் அர்த்தம்:

'இந்தக் கன்னிகையை ஒரு குறித்த காலம் வரை ஸோமன் என்கிற தேவதை காக்கிறார். பிறகு ஒரு காலம் வரை கந்தர்வனும், பிறகு அக்னியும் ரட்சிக்கிறார்கள். இந்த மூவரும் தங்கள் கடமையை முடித்துவிட்டார்கள். அடுத்த படி ரட்சிக்கும் பொறுப்பை ஏற்கிற என்னை அவர்கள் ஆமோதிக்கட்டும்.''

—நாற்பது சம்ஸ்காரங்களிலிருந்து.

மகிழ்ச்சியும் ஆரவாரமும், பங்களாவுக்குள் அடங்கி நிற்க முடியாமல் ஒவ்வொரு வாசல் வழியாகவும், ஜன்னல் வழியாகவும் வழிந்தோடின பிரம்மாண்டமான ஹால் நிறைய வசுதாவின் சிநேகிதிகள் துவம்சம் செய்து கொண்டிருந்தார்கள்.

ராஜலட்சுமி, மகளைப் பார்க்க மாடிக்கு விரைந்தாள். வசுதாவின் உடை அலங்காரம், முக சிங்காரம் இவற்றையெல்லாம் அவளுடைய நெருங்கிய தோழி நித்யாவும் இன்னும் இரண்டு மூன்று பெண்களும் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அவள் மாடியை அடைந்த போது, நான்கு பெண்களுக்கு நடுவில் வசுதா தவித்துக் கொண்டிருந்தாள். சிரித்த சிரிப்பில் கண்களில் நீர் துளித்திருந்தது.

''என்னடீ இங்கே அமர்க்களம்?'' என்று கேட்டுக் கொண்டே வந்த ராஜலட்சுமி ஒரு கணம் பிரமித்துப் போய் நின்றாள். அடுத்த கணம், தன் கண்ணே தான் பெற்றெடுத்த பெண்ணின்மீது படக்கூடாது என்று தோன்றியது.

வசுதா, ராஜலட்சுமியை விடச் சிவப்பு. அவளைவிட உயரம். அவளுடைய மூக்கைப் போல சற்றே உருண்டையாக இல்லாமல், அப்பா மூக்குப் போல அழகாக வளைந்து பிறகு நீண்டு ஒரு புள்ளியில் முடிந்திருந்தது. சின்னஞ்சிறு உதடுகள் குவிந்திருக்க, அவற்றின் செம்மை யௌவனத்தின் துடிப்பை அள்ளிக் கொட்டியது. காதின் ப்ளூ ஜாகர் வைரத் தோடு, விளக்கின் ஒளியில் கண்ணைக் கூச வைத்தது.

''டீ, உன் அம்மா!'' என்றாள் மாலினி.

''ஏன் அப்படி மலைச்சுப் போய் நிக்கறீங்க மாமி? உங்க பெண் தான். சந்தேகம் இருந்தா வந்து தொட்டுப் பாருங்கள்!'' என்றாள் சுஜா.

''மாமி, உங்க பெண்ணுக்கு பிரம்மா எல்லாத்தையும் கொடுத்திருக்கான்... தலை, கண், காது, மூக்கு, மார்பு...'' என்று இழுத்த நித்யாவை வாயாடிக் கமலம் இடைமறித்தாள்.

''அது நம்ம எல்லாரையும் விட ஜாஸ்தியே இருக்குடீ.. .வசு, உன் சைஸ் என்னடீ? 36, இல்லை 38?''

''எதுக்கும் இன்னிக்குப் பார்த்து வைத்துக்கொள்ளடி... ஒரு மாசம் போனா எப்படி ஆகியிருக்குன்னு தெரிஞ்சுக்கலாம்...'' என்றாள் கமலம்.

''என்னடீ இது, நீங்களே பேசிக்கொண்டு போகிறீர்கள். ராஜலட்சுமி மாமி நிற்கிறார். என் பேச்சை நடுவிலே கட் பண்ணிவிட்டு உபயோகமில்லாத விஷயத்தைப்பத்திப் பேசுகிறீர்கள்!'' என்றாள் நித்யா.

பி.வி.ஆர்

''எனக்கும் பீப்பி ஊதிக் கெட்டிமேளம் கொட்டுவார்கள். அப்புறம் கரெக்டா டென்த் மனத்திலே குவா குவான்னு ஒண்ணு வந்து விழும். அதுக்குத் தெரியும், உபயோகம் இருக்கா, இல்லையான்னு!'' என்றாள், கமலம்.

''ரெட் ஹில்ஸ்ஸிலேயே தண்ணீர் வத்திவிட்டது!'' என்றாள் சுஜா.

''ஹோல்டான்!'' என்று கத்திய நித்யா, ''மாமி, நான் சொல்ல வந்தது என்ன என்று கேட்பீர்களோ? கண், காது, தலை, மூக்கு எல்லாத்தையும் கொடுத்த பிரம்மா, நீங்கள் பெற்றெடுத்த பெண்மணி வசுதாவுக்கு ஒன்றைக் கொடுக்க மறந்துவிட்டான்!'' என்றாள்.

''என்னடீ சொல்றே?'' என்று கேட்டாள் ராஜலட்சுமி.

''மூளையைப் பத்திச் சொன்னாள் அவள்!'' என்ற கமலம், ''இப்போ தலையை வாரினப்போ, தலையிலிருந்து ஈறும் பேனும்தான் வரவில்லை. போனாப் போறது. மண்டைக்குள்ளேயிருந்து ஒரு கால் ஸ்பூன் மசாலா வரப்படாதோ? அதுவும் வரலே!'' என்றாள்.

''மூடுடீ, போர் அடிக்காதே!'' என்றாள் நித்யா. ''எங்களை மாதிரி ஃப்ரண்ட்ஸ், மிதிலையில் ஜானகிக்கு அலங்காரம் பண்ணிக் கொண்டிருந்த போது.. .''

''கல்யாணத்துக்கு முன்னாடியா, ஃபர்ஸ்ட் நைட்டுக்கு முன்னாடியா?'' என்று தனக்கு வந்த சந்தேகத்துக்கு விடை கேட்டாள் சுஜா.

''அதை அப்புறம் சொல்றேன். இதைக் கேளு!'' என்றாள் நித்யா. ''எங்கே நிறுத்தினேன். . . உம். . . அலங்காரம் பண்ணிக்கொண்டிருந்த போது திடீரென்று முழிச்சு நின்றாளாம். ஏன் தெரியுமோ? ஜானகிக்குப் புடவையை எங்கே கட்டுவதுன்னு புரியலையாம். ஏன் புரியலே தெரியுமோ? ஜனக புத்திரிக்கு இடையே இல்லாத மாதிரி இருந்ததாம். . .''

''வசுதாவுக்கு இல்லவே இல்லே என்கிறாயோ? அப்படியானால் உன் பாவாடைக்கு எங்கே முடிச்சுப் போட்டாள்?'' என்று கேட்டாள் கமலம்.

ராஜலட்சுமிக்குக் கோபித்துக் கொள்ளுவதா, சிரிக்கிறதா என்று தெரியவில்லை. இந்தக் காலத்துப் பெண்கள் என்னென்ன பேசலாம் எப்படி எப்படியெல்லாம் பேசுகிறார்கள்! உலகம் தெரியாத வயசில் கல்யாணமாகியிருந்தால் பெண்ணுக்கு அம்மா எல்லாம் சொல்லிக் கொடுத்து, அறைக்குள்ளே அனுப்பவேண்டும். இப்போ, ஊரிலே இருக்கிற புத்தகங்களைப் படித்துவிட்டு, கண்ட கண்ட சினிமாக்களைப் பார்த்துவிட்டு, பெண், அம்மாவுக்கே பாடம் சொல்லிக் கொடுக்கிறாள்!

மனத்தில் இமைக்கும் நேரத்தில் புரையோடிய எண்ணங்களைத் தாண்டி, ''அலங்காரம்தான் முடிஞ்சு போச்சே, நீங்கள் கீழே சாப்பிடப் போங்கள்!'' என்றாள்.

''ஆமாண்டீ சீக்கிரம் சாப்பிட்டு விட்டு வாருங்கள்,'' என்றாள் வசுதா.

''அதுக்குள்ளே நீ அந்த ரூமுக்குள்ளே குதிச்சுட மாட்டியே?''

''மாட்டேண்டீ, கமலம்.''

அவர்கள் எல்லோரும் போன பிறகு, ராஜலட்சுமி, ''அப்பாடி, ஒரு மழை பெய்ஞ்சு ஓய்ஞ்ச மாதிரி இருக்கு. கீழே நூறு பேர் போடற சத்தத்தை விட, இங்கே நாலு பேர் அடிக்கிற லூட்டி காதைத் துளைக்கிறது!'' என்றாள்.

''இவர்கள் எல்லாரும் என் கூடப் படிச்சவர்கள் அம்மா. இவர்களிலே எனக்குத்தான் முதல்லே கல்யாணம் ஆயிருக்கு. அதனாலே ஒரு தனி ஆரவாரம்!'' என்றாள் வசுதா.

''ஏண்டி வசுதா, என்னடா இவள் ஆயிரம் தடவை கேட்டு விட்டாளேன்னு எண்ணாதே. மாப்பிள்ளையை உனக்கு மனசாரப் பிடிச்சிருக்கா?''

வசுதா கலகலவென்று சிரித்தாள். ''அம்மா, நீ ஒரு பைத்தியம். எத்தனை தரம் கேட்பாய்?''

''பெண்ணைக் கொடுத்தியோ கண்ணைக் கொடுத்தியோன்னு சொல்லுவார்கள்..வசு, நீ என் கண் மாதிரி... அப்பா தேர்ந்தெடுத்த ஒரு ஏழைப் பிள்ளை. ஏதோ நல்லா படிச்சிருக்கான், லட்சணக்கேடு இல்லாமல் இருக்கான் என்பதைத் தவிர, அவனுக்கு வேறு என்ன இருக்கு? அதை நான் யோசிச்சுப் பார்த்தப்போ,



இவனை உனக்குப் பிடிக்கிறதோ இல்லை யோன்னு பயமாயிருந்தது. ஒளிவு மறைவு இல்லாம சொல்லு!''

''அம்மா, அவர் நேத்துக் காலையிலேதான் என் கழுத்திலே தாலியைக் கட்டினர். திருப்பதியிலிருந்து இங்கே வரும் வரை காரில் பழகியிருக்கேன். ஆனா அதற்குள்ளேயே, அவர் நல்ல மனிதராத்தான் அம்மா பட்டது. சொல்லப் போனல் ரொம்ப அப்பட்டமா, அதே சமயத்தில்..அழகா பேசுகிறர் அம்மா.. எனக்குப் பிடிச்சிருக்கு அம்மா!''


வசுதாவின் குரலில் தோய்ந்த நெகிழ்ச்சியை உணர்ந்த ராஜலட்சுமி பரவசமானள். அவளுடைய கண்கள் கனத்தன.

''ஒரு ஏழைப் பிள்ளையை நம் தலையில் அம்மாவும் அப்பாவும் கட்டிவிட்டார்கள் என்ற குறை உன் மனசில் என்றென்றைக்கும் தோணப் படாது வசு!''

''அம்மா, அப்பா நினைச்சிருந்தா குபேரன் பிள்ளையை இழுத்துக் கொண்டு வந்து மணையிலே உட்கார்த்தியிருப்பார். ஆனல் அப்பா ஒரு ஏழைப் பிள்ளையின் கையில் மஞ்சள் கயிற்றைக் கொடுத்தார் என்றல், அதுக்கு என்னம்மா அர்த்தம்? அந்தக் கயிற்றை நான் கழுத்தில் ஏந்திக் கொண்டு மாப்பிள்ளையின் ஏழ்மையில் மூழ்கணும்னு? இல்லை அம்மா. அப்பாவின் இருதயத்தில் ஒரு ஏழையின் மேல் அவ்வளவு இரக்கம், தாராளம்! அம்மா, அப்பா எவ்வளவோ தர்மங்கள் செய்திருக்கிறர். ஸ்கூல், காலேஜிலே எல்லாம் உபகாரச் சம்பளத்துக்கு நிதியை வாரி வாரிக் கொட்டியிருக்கிறர்... அதெல்லாம் காலக்கிரமத்தில் மறந்து போகக் கூடிய தர்மம். இப்போ ஒரு ஏழையைத் தன் மாப்பிள்ளையாக்கிக் கொண்டிருக்கிறரே, இதுதான் அம்மா அவர் செய்திருக்கிற மகத்தான செயல்! எந்தப் பணக்காரனுடைய நெஞ்சிலும் இப்படி ஒரு ஈரம் கசியாது அம்மா!''

''என் வயிற்றில் பாலை வார்த்தாயடி, வசு! வயித்திலே பாலை வார்த்தாய். நீ சந்தோஷமா, அமோகமா இருக்கணும்!''

சொன்ன ராஜலட்சுமி அவசர அவசரமாக, பக்கத்து அறைக்கு ஓடிப் போய், ஒரு குங்குமச் சிமிழுடன் ஓடி வந்தாள்.







மூன்றெழுத்திலே
குயில் உண்டு.
மயில் உண்டு.
அழகு உண்டு.
அன்பு உண்டு.
ஆனலும் மனமே!
ஏன்
பெருமூச்சுக்களைச்
சிந்துகின்றய்?
அரிசி என்பதும்
மூன்றெழுத்து
என்பதாலா?

—ப.உ. சண்முகம்

விடிந்த காலையில்,
வாசலில் வந்து
விழுகின்ற பேப்பரில்,
எழுத்துக் காட்டின்
இரைச்சல் நடுவே,
படக் கடலின்
பரபரப்பு மத்தியில்,
தவருமல்
ஒரு பெயர்
தெரிகிறது.
புல்லரிப்புத் தருகிறது.
அது,
என் பெயர்.

—ஜெயப் பிரகாஷ்

"இதை, இந்த மீனாட்சி குங்குமத்தை உன் நெத்தியிலே இடறேன். என்னன்னிக்கும் இது விளக்கு மாதிரி வழிகாட்டும். உன் கணவனை என்னன்னிக்கும் உன்கிட்டேயே வைத்துக் கொள்ளும்!"

கண்களில் நீர் மல்க ராஜலட்சுமி விரலை நீட்ட, வசுதா இசைவாகக் குனிந்து நெற்றியைக் காட்டினாள்.

ராஜலட்சுமி, "நான் கீழே போறேன் வசு...இன்னிக்கு ராத்திரியைப்பத்தி நான் ஒண்ணும் விசேஷமா சொல்லப் போறதில்லை. நீ படிச்ச பெண். எல்லாம் புரிஞ்சுப்பே...ஆனா ஒண்ணு. புருஷன் ஆசையா இருக்கணும்னா மனைவி அவனைச் சந்தோஷப் படுத்தித்தான் ஆகணும். அதுக்கு, படுக்கையை விட்டா வேறு இடம் கிடையாது. அதனாலே..., அதனாலே.." வார்த்தைகள் கிடைக்காமல் திண்டாடினாள்.

"புரிகிறது அம்மா..அவர் மனம்கோணாமல் நடந்துக்கிறேன்.. அதே சமயத்திலே என் மனம் கோணாமல் அவர் நடந்து கொள்கிறபடியும் கவனிச்சுக்கிறேன்!"

அம்மா அங்கே இருந்து போன பிறகு மாடி ஹால் வெறிச்சோடுவதை வசுதா உணர்ந்தாள். கீழே எல்லோரும் சாப்பிடுகிறார்கள். இன்னும் அரை மணி அல்லது முக்கால் மணி நேரத்தில் கோபியும் அவளும் ஒரே மஞ்சத்தில் உட்காரப் போகிறார்கள். படுக்கப் போகிறார்கள்.

திடீரென்று, அந்த அறையையும் மஞ்சத்தையும் ஜோடனைகளையும் பார்த்தால் என்ன என்ற ஆர்வம் எழுந்தது. சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, அவள் மெதுவாக நடந்து முதல் இரவு அறையினுள் பிரவேசித்தாள்.

உள்ளே காலை வைத்ததுமே ஒரு கணம் மூச்சு நின்றது, ஆச்சரியத்தில். மஞ்சத்தில் மல்லிகைப் பூக்களை அப்பாவே சிதற விட்டுக் கொண்டிருந்தார்! இரட்டைக் கட்டிலின் மேலேயிருந்து மோதிரம் மோதிரமாய் ரோஜாப் பூவளையங்கள் விழ, ஒவ்வொரு வளையத்திலிருந்தும் மல்லிகைச் சரங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

"என்னப்பா நீங்க போய் இந்த வேலையை எல்லாம்.."

"பின்னே யார் செய்யணும்? உனக்கு ஒரு அண்ணாவோ தம்பியோ



பெங்களூர் லால்பாக் பூங்காவில், ரஷ்ய—இந்திய விஞ்ஞான ஆராய்ச்சி சங்கம், விண்வெளிக் கண்காட்சியொன்றைச் சில மாதங்களுக்கு முன் நடத்தியது. 30 நாட்களில் இரண்டரை லட்சம் மக்கள் கண்காட்சியைப் பார்த்தார்கள். ரஷ்ய விண்வெளி வீரர்கள் பயணத்தின்போது சாப்பிட்டு மிஞ்சிய 'ஹேம்', பிஸ்கட்கள் முதலியவற்றைக் கூட கண்காட்சியில் வைத்திருந்தார்கள்.

இங்கே நிற்பவர் ரிசப்ஷனிஸ்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உமா.

தகவல்: எஸ்.என்.
வண்ணப் படம்: டி. பாபு ராஜ்

இருந்தால் அவன் செய்வான்...ஒரு வேலைக்காரனைக் கொண்டு செய்ய வைக்கிற காரியமா இது?"

"போங்க அப்பா!"

"வசு, நன்றாயிருக்காம்மா? மதுரைப் பிளேன் கொஞ்சம் லேட்டு. பன்னிரண்டு கூடை மல்லிகைக்கு ஆர்டர் கொடுத்திருந்தேன்..வாசனை கமகமன்னு இல்லை?"

"அப்பா..." வசுதா நெகிழ்ந்தாள்.

"மாப்பிள்ளை கோபி இருக்கானே அவன் ரொம்ப நல்ல பிள்ளைம்மா. மரியாதை தெரிஞ்சவன். உன்னை நன்றாக வச்சுக்குவான், அம்மா!"

"நானும் அவரை நல்லா வச்சுக்கிறேன் அப்பா!" என்று சொல்லிச் சிரித்தாள் வசுதா. "அம்மா உங்க கிட்டே காட்டற அன்பு, பக்தி, மரியாதையெல்லாம் நானும் காட்டறேன்!"

''கடைசியிலே சொன்னியே அதுதான் அம்மா முக்கியம். என்னிக்கும் நீ அவனை விட உசத்தி என்கிற எண்ணமே உன் மனசில் தோன்றக் கூடாது – அது உண்மையாகவே இருந்தாலும்,'' என்றார் சிவராமன்.

தோழிகள் புடை சூழ, வெள்ளித் தட்டில் பாலும் பழமும், பன்னீர் வீசியும், வெற்றிலை பாக்கு, வாசனைத் திரவியங்களும் நிரம்பிவழிய, வசுதா மெதுவாக நடந்து வந்தாள். என்னதான் வெளியே தைரியம் விளக்குப் போட்டுக் காட்டினாலும் உள் மனம் சற்றே, ஒரு திகிலில் நடுங்கியது. கால்கள் இடறுவதை உணர்ந்தாள். தொடைகள் திடீரென வியர்க்கின்றனவோ என்று பயந்தாள். மார்பு விம்மி விம்மி வெடித்துவிடும் போல இருந்தது.

அறை வாயிலில் எல்லோரும் திடீரென்று நின்றார்கள். பெண்கள் பாடினார்கள். ராஜலட்சுமி வசுதாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''உனக்குச் சந்திர சூரியர்களைப் போல் பிள்ளை பிறக்க வேண்டும்!'' என்றாள்.

வசுதா வெள்ளித் தட்டுடன் அறையினுள் பிரவேசித்தாள். ஊதுவத்தியின் தாழம்பூ மணம் லேசாக வீசியது. வெள்ளித் தட்டை ஒரு டீப்பாயின் மேல் வைத்துவிட்டு, தோழிகள் சாத்திவிட்ட கதவின் தாழ்ப்பாளைப் போடத் திரும்பினாள்.

''வசு..'' – கோபி மெல்லிய குரலில் அழைத்தான்.

''கதவைச் சாத்திவிட்டு வருகிறேன்.''

''இன்னிக்குக் கண்டிப்பாக யாரும் திறந்து கொண்டுவர மாட்டார்கள். இங்கே வந்து உட்கார்.''

வசுதா மெதுவாக நடந்து அவனருகே சென்றாள். மஞ்சத்தில் அவன் காலைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவள் அருகே வந்ததும், அவனுடைய வலது கரம் அவளுடைய இடையைப்பற்றி நாசூக்காக இழுத்தது.

இரு கன்னங்களும் உராய்ந்த போது, அவன் சொன்னான்:

''இதுக்கு நான் உன் அப்பாவுக்கு நன்றி செலுத்தணும். உன்னை எனக்கு அவர் கொடுத்த நிகழ்ச்சி வாழ்விலே மறக்க முடியாத நிகழ்ச்சி!''

''என் அப்பாவை உங்களுக்குச் சரியாகத் தெரியாது.''

''இப்போ தெரிந்து விட்டது. வெறும் தாராள மனசு உள்ளவர், பணத்தை எண்ணாமல் அளக்காமல் ஏழைகள் மீது கொட்டுகிறவர் என்றுதான் நினைத்திருந்தேன்.. தான் பெற்றெடுத்த கண்மணியையே எனக்கு, ஒரு சாதாரண சாமான்யனுக்கு அளித்ததிலிருந்து அவர் ஆயிரத்தில் ஒருவர் என்று தெரிந்து கொண்டேன்!''

ரங்கூன்
ரங்கூன்
ரங்கூன்

திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி ஐ.நா.வில் நடத்திய இசை நிகழ்ச்சி ரெகார்டாக வெளி வந்திருக்கிறது. அதில், முன்னுரையாக ஒரு குரல் கேட்கிறது:

''ரங்கூன் நகரில் வர்த்தக சமூகத்தைச் சேர்ந்த இந்தியர்கள் மத்தியில் கர்நாடக இசையை நான் சிறு வயது முதல் கேட்டு ரசித்திருக்கிறேன். எனக்குப் பழக்கமான இசை. ஆனால் உங்களுக்கு எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். உண்மையான உலக ஒருமைப்பாட்டிற்கு இசை நல்லதொரு வழிகாட்டி.''

இந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் காலம் சென்ற ஊதாண்ட்.

—விவேக்

திருவள்ளூர்
திருவள்ளூர்
திருவள்ளூர்

திருவள்ளூரைச் சேர்ந்த திரு. வி. எஸ். கஜேந்திரனைத் 'திருவாளர் தமிழ் நாடு 1975' ஆகத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். 28 வயதான இவர், டன்லப்பில் பணி புரிகிறார். இவருக்குத் திருமணம் ஆகி மூன்று குழந்தைகள் உள்ளன.



அவனுடைய வார்த்தைகள் அவளைப் பூரிக்க வைத்தன. அவளது தகப்பனாரின் உயர்வை எப்படி உணர்ந்து பேசுகிறார்! அவளுடைய உடல் தானாக அவன்மீது சாய, அவன் சற்றே நகர்ந்து அவளுடைய தலையைத் தன் மடிமீது வைத்துக் கொண்டார். அப்போது அவனுடைய முழங்கை அவளுடைய மார்பகத்தில் பதிய, அவள் மெய் மறந்தாள்.

"இந்த உலகத்திலே எல்லோரும் என் அப்பாவுக்கு ஒரு விதத்தில் இல்லாவிட்டால் ஒரு விதத்தில் கடன்பட்டிருக்கிறார்கள்... ஆனால் என் அப்பா. . . என் அப்பா யாருக்கும் கடன் பட்டதில்லை."

"ஆமாம், வசுதா... உன் அப்பாவுக்கு இப்போ ஒரு கடனும் இல்லை..."

அவனுடைய பேச்சில் 'இப்போ' என்கிற வார்த்தை ஒரு கனத்தோடு விழுந்துவிட்டதோ என்று பிரமை கொண்டாள் வசுதா.

மடியில் இன்னும் படுத்துக் கொண்டே, "என்ன சொன்னீர்கள், புரியவில்லை?" என்றாள்.

"உதவி செய்தவர்களை உன் அப்பா மறக்கவில்லை. அந்தக் காலத்தில் எங்கள் குடும்பம் அவருக்குச் செய்த ஒத்தாசையை அவர் உதாசீனப் படுத்தியிருக்கலாம். உலகம் அவரை ஏசாது. இகழாது. ஏனென்றால் அதற்குச் சரித்திரம் தெரியாது. ஆனால் அவர் உன்னை எனக்குக் கொடுத்துத் தன் கடனை, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் தீர்த்துவிட்டார்!"



இந்த நட்சத்திரத்தைப்
படம் பிடித்தவர்
ஒரு வட இந்திய நட்சத்திரம்.

பார்க்க: நடுப் பக்கம்

வசுதாவுக்குச் சுருக்கென்றது.

“என்ன சொன்னீர்கள்? கடனா! நன்றிக் கடனா? என் அப்பா தீர்த்துவிட்டாரா?”

“உனக்குத் தெரியாதா, இல்லை மறந்துவிட்டதா வசுதா? என் அம்மா தங்கம்மாவைப் பற்றி அவர் சொல்லியிருக்க வேண்டுமே...”

என்ன இது... தலைமுறை தலைமுறையாக அவர்கள் குடும்பம் பணக்காரக் குடும்பம்... யாருடைய நிழலிலும் அவள் அப்பா நின்றதில்லை. மழையிலே மாட்டிக் கொண்டால்கூட இன்னொருத்தர் குடையிலே ஒதுங்க மாட்டாரே! அவர் கோபியின் குடும்பத்துக்குக் கடன் பட்டிருந்தாரா? அதற்குப் பிரதியாகத்தான் இந்தக் கல்யாணமா...

அவள் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை அவன் கவனித்தான். “என்ன?...என்ன வசு?” என்றான்.

அவள் எழுந்து உட்கார்ந்த போது ஒரு கால் டீப்பாயின் மேல் மோதியது.

வெற்றிலைகள் விழுந்து மின்சார விசிறியின் காற்றில் சிதறின.

ஓர் ஆப்பிள் உருண்டு கட்டிலுக்கு அடியில் ஓடி ஒளிந்தது.

சிறிது பால் சிந்தி, கோலம் போட்டது.

(தொடரும்)

இறங்கினார்கள்- வரவில்லை



வேங்கமலை



பெருமாள்



சுவாமிநாதன்

பாவம்...திருவல்லிக்கேணி ஜாம் பஜார் பகுதியில் பாதாள சாக்கடையைச் சுத்தம் செய்வதற்காக மூன்று பேர் இறங்கினார்கள். மூன்று பேரும் இறந்துபோனார்கள்— விஷ வாயு காரணமாக.

பெருமாள், வேங்கைமலை, சாமிநாதன் ஆகிய மூன்று தொழிலாளிகளும் தாய்க்கு ஒரே பிள்ளைகள்; மூவருக்குமே திருமணமாகி, தலைக்கு 5 குழந்தைகள் இருக்கின்றன.

எத்தனையோ துறைகளில் என்னென்னவோ முன்னேற்றங்கள் அடைந்திருக்கிறோம். இந்தச் சாக்கடை அபாயத்துக்கு ஒரு பாதுகாப்புக் கிடையாதா?

—ஜியெஸ்

பெங்களூர்
பெங்களூர்
பெங்களூர்

பெங்களூர் மல்லேசுவரத்தில் ஒரு தேங்காய்க் கடையில் ஒவ்வொரு தேங்காயின் மீதும் அக்கடையின் முத்திரையைப் பொறித்து விற்கின்றனர். விற்பனை செய்த தேங்காயில் ஏதாவது அழுகியோ, கெட்டோ விட்டதென்றால், அதைத் திருப்பிப் பெற்றுக் கொண்டு, வேறொரு காய் தருவதற்கு இது வசதியாக இருக்கிறதாம்.

கண்டு எழுதியவர்: வா. ஸ்ரீவத்ஸன்.

நாகர்கோயில்
நாகர்கோயில்
நாகர்கோயில்

நாகர்கோவிலில் உள்ள பயோனியர் குமாரசாமி கல்லூரி மாணவர்களுக்கு, கல்விப் பயிற்சியுடன் குதிரைச் சவாரிப் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. ஆர்வமுள்ள பலர் குதிரையேற்றம் பயிலுகிறார்கள். இதற்கென 3 குதிரைகள் வாங்கப்பட்டு, தனி டிரெயினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(செய்தி: தின மலர்)
—கே. பி. எஸ்

குமுதம்
மதி:28 மலர்:17
13-2-75

கஃபூர் வேண்டாம்

திரு. கஃபூர் — பீகார் முதல்வர்—கறுப்பா சிவப்பா என்று நமக்குத் தெரியாது. ஆனால் அவர் மனம், அவர் மூளை எப்படிப்பட்டது என்பது தெளிவாகப் புரிந்துவிட்டது.

ஆபத்தான மூளை அது.

எந்த வழியில் வேலை செய்யக்கூடாதோ, எவ்வாறு இயங்கினால் அவருக்கும் அவர் கட்சிக்கும் நாட்டுக்கும் கேடு சூழுமோ அந்த வகையில் அது வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது.

இல்லாவிட்டால், மறுபடி பீகாருக்கு வந்து ஜெயபிரகாஷ் கிளர்ச்சி ஆரம்பித்தால் அவரைக் கைது செய்ய வேண்டியிருக்கும் என்று முன்பின் யோசிக்காமல் எச்சரிக்கை விடுத்துத் தொலைத்திருப்பாரா?

அடிப்படை அரசியலே தெரியாதவர்களை எல்லாம் இத்தனை பொறுப்பான பதவிகளில் ஏன்தான் உட்கார வைக்கிறாரோ, பிரதமருக்கே வெளிச்சம்.

பஞ்சதந்திரக் கதையொன்று உண்டு. கெட்டிக்காரக் குரங்கு ஒன்றைத் தன் மெய்க்காப்பாளனாக நியமித்திருந்தான் அரசன். அவன் தூங்கிக் கொண்டிருந்தபோது, ஓர் ஈ அவன் மூக்கு நுனியில் உட்கார்ந்தது. 'அரசன் மூக்கில் எப்படி உட்காரப் போயிற்று!' என்று ஆத்திரமடைந்த குரங்கு வாளை எடுத்து வீச, ஈயோடு மன்னன் மூக்கும் போயிற்றாம். (அண்மையில் செய்திப் படத் துறையினர் இதைக் கார்டூன் படமாக எடுத்துத் திரையிட்டிருந்தார்கள்.) ஜெயபிரகாஷைக் கைது செய்வதற்கும், கோபமேலீட்டால் குரங்கு பண்ணிய காரியத்திற்கும் அதிக வித்தியாசம் கிடையாது.


ஜெயபிரகாஷின் கிளர்ச்சியில் கலந்துவிட்ட வன்முறையை யாரும் ஆதரிக்கமாட்டார்கள். அதே நேரத்தில், ஊழலை எதிர்த்துப் போராடுகிறார் என்ற முறையில் அவருக்கு நாடெங்கும் ஆதரவு உண்டு என்பதை கஃபூர் மறந்துவிடக்கூடாது. ஓய்ந்து போயிருந்த எதிர்க்கட்சிகள் எல்லாம் கிடைத்தற்கரிய வரப் பிரசாதமாக அவரை வரவேற்று, அவரது இயக்கத்துக்கு முழு ஆதரவு தந்து அவரை உபயோகித்து வரும் சமயம் இது.

அரசியலை அரசியலால் சந்திக்கத் திறனில்லாமல், சிறைப் பேச்சு எடுத்தால் வேறு வினையே வேண்டாம். அது என்ன விபரீதத்தில் கொண்டுபோய் விடுமென்று சொல்ல முடியாது.

ஏற்கெனவே, சமஸ்திபூரில் மிஸ்ராவுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவில்லை, வெடி குண்டு வெடித்தபின் அவருக்குத் துரிதமாக வைத்திய உதவி செய்யவில்லை என்று கஃபூர் அரசுமீது குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது அரசியல் அரிச்சுவடியே படித்திராதவர்போல் பேசியிருக்கிறார். அவர் தொடர்ந்து பதவியிலிருந்தால், காங்கிரசுக்கு நல்லதல்ல என்று தோன்றுகிறது.

அனுபவம் உள்ளவரும், அமைதியோடு நிலைமையைச் சமாளிக்கும் ஆற்றல் உள்ளவருமான ஒருவரை அந்த இடத்தில் அமர்த்துவதுதான் புத்திசாலித்தனம்.



சினிமா பைத்தியம்

சினிமாவைப் பார்த்துக் கெட்டுப் போகிறார்கள் கெட்டுப் போகிறார்கள் என்று பிலாக்கணம் பாடுவது நம் நாட்டில் திரைப்படம் ஏற்பட்டது முதல் தொடர்ந்து வந்திருக்கும் ஒரு வழக்கம். (அதற்கு முன்பு அந்தப் பழி நாவல்கள் மீது சுமத்தப்பட்டது.)

சினிமாவைக் கண்டிக்கும் விஷயத்தில் யார் யாரோவெல்லாம் கைகோத்துக் கொண்டு விடுவார்கள். நல்லவர்கள், நடுத்தரமானவர்கள், வடிகட்டின போக்கிரிகள் எல்லோருமே ஒன்று சேர்ந்து விடுவார்கள். உண்மை என்ன?

சினிமா உலகத்தில் எத்தனையோ அசிங்கங்கள் நடந்து வந்திருக்கின்றன. மறுக்க முடியாது. பணம் பண்ணும் வெறி, கவர்ச்சி வியாபாரம் இவையெல்லாம் ஒரு போதையாக உருவாகியுள்ள இடம் அது. தவறான வழியில் இழுத்துச் செல்லக் கூடிய அம்சங்களைச் சுயநலம் கருதி அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். ஆனால் திரைப்படத்தின் நல்ல தன்மையை இருட்டடிப்பு செய்வதும் முறையல்ல. சுயநலம் இல்லாதவனே, பரோபகாரம் செய்பவனே, தீயவரை மோதி மிதித்துவிடும் ஆற்றல் பெற்றவனே, ஏழைகளின் கண்ணீரைக் கண்டு இரங்குபவனே நல்ல மனிதன் என்ற கருத்தை ஆழமாகப் பதிய வைத்தது சினிமா. ராமன் என்றும், அரிச்சந்திரன் என்றும், சாவித்திரி என்றும் இதிகாச புராணங்களில் வரக்கூடிய பாத்திரங்களின் உயர்ந்த குணங்களை நம்போன்ற சாதாரண மனிதர்களுக்குக் கொடுத்து, அவர்கள் மூலம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி மனத்தைத் தூய்மைப் படுத்திய பெருமை சினிமாவுக்கு உண்டு. சொல்லப் போனால், மனிதனுக்கு உயர்வைத் தரக்கூடிய இயல்புகளை—சத்தியம், கற்பு, தொண்டு—அடித்துச் சொல்லிப் பிரசாரம் செய்து வந்திருக்கும் கலைகள் இரண்டே இரண்டுதான்: கதாகாலட்சேபமும், சினிமாவும்.

படித்த வர்க்களிடையிலும், நல்லதை நல்லதென்றும் கெட்டதைக் கெட்டதென்றும் பாகுபடுத்திப் பார்ப்பது அநாகரிகமாகக் கருதப்பட்ட நேரத்திலெல்லாம், பெற்றோருக்குத் தரவேண்டிய மரியாதையையும், ஒழுக்கத்தின் மேன்மையையும், வாய்மையின் அவசியத்தையும், இல்லறத்தின் செம்மையையும் சினிமா ஆணித்தரமாகவும், அழகாகவும் செய்து விளம்பரம் வந்திருக்கிறது என்பதில் சந்தேகம் என்ன?

■■■■ சினிமாஸ்கோப்
■■■ சவர்ப் படம்
■■ …க்கி

சினிமா சம்பந்தப்[பட்ட]...
கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தா
லும், கலை என்ற அளவில் சினிமா
மிகச் சிறந்த தொண்டு செய்து வந்
திருக்கிறது என்பதை மனச்சாட்சியுள்ள
வர்கள் ஒப்புக்கொள்வார்கள். (செக்ஸ்
மட்டும்தான் குறை.

❋

ஜெயபாதுரியை அறிமுகப்
படுத்திய படம் ‘குட்டி’. சினிமா
மோகம் ஏற்பட்டு அதனால் வாழ்க்கை
யைக் கெடுத்துக் கொள்ளவிருந்த ஓர்
இளம் பெண்ணின் மனத்தை ஸ்டூடி
யோக்களுக்கு அவளை நேரில் அழைத்துச்
சென்று, நடிகர்களுக்கும் டைரக்டர்
களுக்கும் அறிமுகப்படுத்தி, ஷூட்டிங்
பார்க்கச் செய்வதன் மூலம் எப்படித்
திருத்த முடிந்தது என்பதைச் சித்திரிக்
கும் மெறைட்டுக் கதையை அடிப்படை
யாகக் கொண்டது அது.

இப்போது, குட்டி, ‘சினிமா
பைத்திய’மாக! வந்திருக்கிறது. உள்
ளூர்ச் சரக்கும் சேர்த்திருக்கிறார்கள்.

‘‘நீட்டு கையை,’’ என்று
ஆசிரியை எஸ்.வரலட்சுமி லேட்டாக
வந்த ஜெயசித்ராவை அதட்டியதும்
அவர் விடும் ரீல்கள் அபாரமானது.
‘ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தேன்,
மேடம். வயித்திலே என்னவோ கட்டி
மாதிரி... டாக்டரம்மா பார்த்துட்டு
கர்ப்பம்னுட்டாங்க...’’ என்று அவர்
ஷாக் கொடுக்க, ஆசிரியை பதற,
பிறகு, ‘எங்க அண்ணிக்கு மேடம்,’
என்று அழகாக முடித்து அந்தச் சந்
தடி சாக்கில் அடி வாங்கிக் கொள்ளா
மல் தப்பித்துக் கொள்கிறார்.

ஜெயசித்ராவின் [illegible]
குறிப்பிடத்தக்கவர் கமிஷன் ஏஜெ[illegible]
சச்சு. க.ஹாசனின் அலட்டிக்
கொள்ளாத முறை, மனத்தில் பதியக்
கூடியதாயும் அமைந்திருக்கிறது.

நடிகரை திடீரென்று வீட்
டுக்கு அழைத்து வந்துவிட்ட நாத்த
னாரின் அசட்டுத்தனத்தைக் கணவ
ரான மேஜரிடமிருந்து மறைக்
கும் கட்டத்தில் செளகாரின்
நடிப்புக்கு ஒரே எழுத்து—ஆ!

ஆனால் ஒரு
பெரிய குறை. குட்டி இனிப்
பாக, இதமாக இருந்
தது. சினிமாப்
பைத்தியம் அப்படி
யல்ல.



மாஞ்சா நூலால் வந்த வினை!

பம்பாய், பிப். 3

மாஞ்சா நூலில் எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டு சித்திரவதைப்பட்ட ஒரு புறுவால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.





அரிவாள் விழுங்கி !

தஞ்சை, பிப். 2

செம்பனார் கோவிலைச் சேர்ந்த பக்கிரிசாமி என்பவரது வயிற்றிலிருந்து அரிவாள் ஒன்றை ஆபரேஷன் செய்து டாக்டர் வெளியே எடுத்தார்.

மனைவியை எரித்த கணவர்!

பம்பாய், பிப். 3

குழந்தை பிறக்கவில்லையே என்று மனைவியிடம் ஆத்திரமடைந்தவர் அவள் மீது மண்ணெண்ணெய் ஊற்றி உயிரோடு [illegible]க்க முயன்றார்.



டெலிபோன் உரையாடலில் இந்த வாரம் 'ஆனந்த விகடன்' திரு. மணியன் பேசுகிறார். சீட்டுக் குலுக்கிப் போட்டதில் அவரோடு பேசுவதற்குக் குமாரி ரோஸ்லின் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மணியன்: வணக்கம். மணியன் பேசறேன்

குமாரி ரோஸ்லின்: வணக்கம். ரோஸ்லின் பேசறேன். உங்களுடைய டெலிபோன் 'காலு'க்காகத் தான் காத்திருந்தோம். நீங்க பேசப் போறீங்கன்னு தெரிஞ்சதும், எதிர் வீட்டிலே இருக்கிற என்னுடைய இரண்டு சினேகிதிகளும் இங்கே வந்து விட்டார்கள். உங்கள் எழுத்துக்களில் அவர்களுக்கு ரொம்ப ஆசை.

ம: சினேகிதிகள் என்ன செய்கிறார்கள்?

ரோ:— ஒருத்தி பானுமதி. கல்லூரியில் எம்.ஏ. லிட்டரேச்சர் படித்துக் கொண்டிருக்கிறாள். இன்னொருத்தி நிர்மலா. டென்த் ஸ்டாண்டர்ட் ப... கிறாள். ஆமாம், இன்றைக்குக் காலை... செய்... ருந்து நீங்கள் என்னென்ன கொண்டிருந்தீர்கள்? ரொம்ப 'பிஸியா?'

ம:— இன்றைக்கா? விடிய காலை நான்கு மணிக்கே எழுந்து காஞ்... புரம் கிளம்பிப் போனேன். அங்... பா... ஆசாரிய சுவாமிகளை பார்க்கப் ... அமைச... ருந்தேன். மத்திய நிதி அமைச... சுப்பிரமணியம் இருக்கிறாரே, அவரு... நேற்று முன் தினம்தான் 65'வது பிற... நாள். நான் அன்றைய தினம் டெ... யில் இருந்தேன். சி.எஸ்., ஆசாரி...





மணியன் பேசுகிறேன்


[illegible]ரைத் தரிசிக்க வேண்டும் என்று என்னிடம் சொன்னார். காஞ்சிப் பெரியவரை நான் தெய்வமாகக் கருதுகிறவன். அடிக்கடி அவரைத் தரிசிக்கச் செல்லுவதுண்டு. இந்த முறை சி.எஸ் அவர்களையும் அழைத்துக் கொண்டு செல்லும் ஒரு பாக்கியம் கிடைக்கவே, காலையில் அங்கு சென்றிருந்தோம். சி.எஸ் அவரைத் தரிசித்து ஆசி பெற்றார். காமாட்சியம்மன் கோவிலுக்கும் போயிருந்தோம். விசேஷ பிரார்த்தனையெல்லாம் முடிந்த பிறகு 11 மணிக்கே வீடு திரும்பிவிட்டேன். நீங்கள் இன்று காலையில் என்ன செய்தீர்கள்? சர்ச்சுக்குப் போனீர்களா?

குமாரி ரோஸ்லின்

ரோ: சொல்லப் போனால் நானும் காலையிலிருந்து ரொம்ப 'பிஸி' தான். சர்ச் சர்வீஸ் எட்டரை மணிக்கெல்லாம் முடிந்து விட்டது. நான் ஸ்டெல்லா மேரி கல்லூரியில் எம். எஸ்சி. படித்துப் பட்டம் பெற்ற பின் இந்தக் கல்லூரியிலேயே பாட்டனி டிபார்ட்மெண்டில் வேலை பார்க்கிறேன். 'காலேஜ்—ஸ்கூல் காம்பிளக்ஸ்' என்ற பெயரில் பாட்டனி, ஜூவாலஜி, பிசிக்ஸ், நியூ மாத்ஸ், கெமிஸ்டரி ஆகிய பிரிவுகள் சேர்ந்து ஒரு எக்ஸிபிஷன் நடத்தினோம். பல பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து மாணவிகள் எங்கள் கல்லூரிக்கு வந்திருந்தார்கள். இந்தமாதிரி ஒரு கண்காட்சியை முதன் முதலாக எங்கள் கல்லூரிதான் நடத்தியது. அதற்காகப் பப்பட் ஷோ முதலிய நிகழ்ச்சிகள் இருந்தன. பிற்பகல் வரை இருந்து விட்டு உங்களோடு பேசுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்களே என்று சீக்கிரமே வீட்டுக்குத் திரும்பிவிட்டேன். சின்ன வயதிலிருந்தே உங்களுக்கு எழுத்தில் ஆர்வம் உண்டா? ஜர்னலிஸம் கோர்ஸ் ஏதாவது படித்தீர்களா?

ம: எழுத வேண்டும் என்ற ஆர்வம் பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே இருந்தது. என் பெற்றோர் நான் ஒரு இஞ்சினியராக வேண்டுமென்று விரும்பினார்கள். அந்தப் படிப்பில் எனக்கு விருப்பமில்லை. ஆகவே, உயர்திரு. வாசன் அவர்களைச் சந்தித்து அவர்கள் பத்திரிகையில் பணியாற்ற வேண்டும் என்கிற ஆவலை வெளியிட்டேன். தேவன், சசி, நாடோடி, பி.ஸ்ரீ. போன்ற பெரிய பெரிய எழுத்தாளர்களெல்லாம் அப்போது விகடனில் பணியாற்றினார்கள். திரு. வாசன் என் ஆர்வத்தை உணர்ந்து என்னைப் பதினாவது உதவி ஆசிரியராகச் சேர்த்துக் கொண்டார். அவருடைய ஆதரவினாலும், ஊக்கத்தினாலும் படிப்படியாக முன்னேறி ஆனந்த விகடனிலேயே பொறுப்பான உத்தியோகத்தில் இப்போது இருக்கிறேன்.

ரோ: உங்கள் நாவல்கள்,



ரோஸ்லினுக்குப் பின்னால் பானுமதி நிர்மலா

பயணக் கட்டுரைகள் எல்லாவற்றையுமே அனேகமாக விடாமல் படித்திருக்கிறேன். பக்கத்தில் இருக்கும் என் சினேகிதிகளும்கூடத்தான். நீங்கள் எழுதிய நாவல்களில் உங்களுக்குப் பிடித்தது எது? மற்றவர்களைப் போலவே. 'எல்லா நாவல்களும் என்னைப் பொறுத்தவரையில் ஒரே மாதிரிதான்,' என்று சொல்ல மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

ம: இல்லை. இல்லை. எனக்கு மிகவும் பிடித்தது நான் எழுதிய முதல் நாவல் 'காதலித்தால் போதுமா?' தான்.

ரோ: நானும் அந்த நாவலைத்தான் வெகுவாக ரசித்தேன். இலவு காத்த கிளி என்கிற உங்கள் நாவல்தானே 'சொல்லத்தான் நினைக்கிறேன்' படமாக வெளிவந்தது? கதையைப் படித்தபோது உண்டான சுவாரசியம் படம் பார்த்தபோது எனக்கு ஏற்படவில்லை. உதாரணமாக, புஷ்பா என்கிற கதாபாத்திரம் நாவலில் நன்ருகச் சித்திரிக்கப்பட்டிருந்தது. படத்தில் வேறு மாதிரி எடுத்து விட்டார்களே? ஏன்?

ம: என்னுடைய ஆசிரியர் திரு. பால சுப்பிரமணியன்—வாசன் அவர்களின் குமாரர்—என்னிடம் 'பத்திரிகைகளில் எழுதுவதெல்லாம் சினிமாவாக எடுக்க முடியும் என்று நினைக்காதே. இது வேறே மீடியம், அது வேறு மீடியம்,' என்று சொல்வதுண்டு. முதலில் எனக்கு அது புரியவில்லை. அனுபவப்பட்ட பிறகுதான் புரிந்தது. பத்திரிகைகளில் வெற்றியாகக் கருதப்பட்ட கதைகள் சினிமாவில் வேறு மாதிரியாக ஆகிவிடும். மேல் நாடுகளில் அப்படியில்லை.

ரோ: ரேடியோ நாடகமாகக் கேட்டபோது கூட அது நன்ருக இருந்ததே?



ம: இலவுகாத்த கிளியை நானே நாடகமாக எழுதியிருந்தேன். சந்திரகாந்தா அதில் நடித்தார். ரொம்ப அற்புதமாக இருந்தது. சினிமாவாக அதை எடுக்க வேண்டும் என்ற பேச்சு எழுந்தபோது பாலசந்தர்தான் அதை நன்ருகச் செய்வார் என்று நினைத்தேன். 'இந்தக் கதையின் ஆசிரியன் நான். ஒரு படத் தயாரிப்பாளன் என்கிற முறையில் இந்தக் கதையின் பொறுப்பு முழுவதையும் உங்களிடமே ஒப்படைக்கிறேன். படம் முடிந்த பிறகு நான் அந்தப் படத்தைப் பார்ப்பேனே ஒழிய நடுவில் எந்த விமரிசனமும் செய்ய மாட்டேன். நீங்கள் எப்படி எடுக்கிறீர்களோ அதை அப்படியே ஒப்புக்கொள்கிறேன்,' என்று வாக்குக் கொடுத்துவிட்டேன்.

ரோ: ஓகோ! அப்படியேதான் செய்தீர்களா?

ம: நான் வாக்கைக் காப்பாற்றினேன். அவரைப்போல ஒரு 'கிரியேடிவ் ஆர்டிஸ்ட்' அந்தப் படத்தை எடுத்திருக்கிறபோது நான் குறுக்கே தலையிட விரும்பவில்லை. ஆனால் புஷ்பா கதாபாத்திரம் சினிமாவில் தன்னை இழக்கிற மாதிரி எடுத்திருப்பது எனக்குச் சரியில்லை என்று பட்டது. ஏனென்றால், தியாகம் பண்ணுவதற்கு எப்போதுமே ஒரு 'நோபிள் பர்பஸ்' வேண்டும்.

ரோ: கரெக்ட். ஜெயசுதா 'ரோல்' அவ்வளவு இம்பிரஸிவ் ஆக இல்லைதான்.

ம: கமலஹாசனேடு ஓடிப் போவதைத் தடுப்பதற்காக இவள் கற்பிழந்தாள் என்று சொன்னல் மறுநாளைக்கு இன்னெரு விமலஹாசன் வந்தாலும் ஓடிப் போயிருப்பாளே? ஆக, இது ஒப்புக்கொள்ள முடியாத விஷயமாக இருந்தாலும், பாலசந்தரைப் போல ஒரு பெரிய டைரக்டர்

சென்னையில் நடந்த 4'வது கிரிக்கெட் டெஸ்ட்டில் இந்தியா வெற்றி பெற்றதற்கு வங்காள முதன் மந்திரி சித்தார்த்த சங்கர் ரே இப்படி வாழ்த்துத் தந்தி அனுப்பினர்: 'வங்காள மருமகன்கள் பட்டோடி, பிரசன்னவுக்கும் அவரது குழுவுக்கும் வாழ்த்து. மற்றக் கல்யாணமாகாத குழுவினரையும் மேற்கு வங்காளப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளத் தூண்டவும், வங்காள மகன் இல்லாவிட்டாலும் - மருமகன்கள் புகழ் அடையட்டும்.'

(நவாப் பட்டோடி வங்காள நடிகை சர்மிளா டாகூரையும், பிரசன்ன அபர்ண சென்னையும் திருமணம் செய்துக் கொண்டார்கள்.)

—எஸ். என்.

எடுத்திருக்கும்போது அதற்கு மறுப்புச் சொல்லக்கூடாது என்று சமாதானப்படுத்திக் கொண்டேன். ஒரிஜினல் நாடகப்படி எடுத்திருந்தால் இன்னம்கூட நன்ருக அந்தப் படம் ஓடியிருக்குமோ என்று எனக்குத் தோன்றியது.

ரோ: எம்.ஜி.ஆர். அவரிடம் நீங்கள் நெருங்கிய நட்புக் கொண்டிருக்கிறீர்களே? அவரை நீங்கள் ஒரு சிறந்த அரசியல் தலைவராக நினைக்கிறீர்களா, நடிப்பாற்றல் மிகுந்த நடிகர் என்று கருதுகிறீர்களா? எதனுல் அவரிடம் நீங்கள் இவ்வளவு ஈடுபாடு கொண்டிருக்கிறீர்கள்?

ம: ஏற்கனவே நிறையப் பேர்கள் என்னைச் சந்தேகக் கண்களோடு பார்க்கிருர்கள். இப்போதுள்ள தி.மு.க. அரசியல் தலைவர்களில் முக்கியமான சிலர் எதற்காக இந்த மணியன் எம்.ஜி. ஆருக்காக ஓடி ஓடிச் சில காரியங்கள் செய்கிருர் என்று நினைக்கிருர்கள்.

ரோ: நான் வேறு இப்படி ஒரு கேள்வியைக் கேட்டு உங்களைத் தர்மசங்கடமான நிலையில் வைத்து விட்டேனு?


ம: இந்தக் கேள்வியை நீங்கள் என்னிடம் கேட்டதற்காகச் சந்தோஷப்படுகிறேன். எம்.ஜி. ஆர். அரசியல்வாதியா, நடிகரா என்பதெல்லாம் அப்புறம். முதலில் என்னைப் பொறுத்த வரையில் அவர் ஒரு நல்ல மனிதர். நட்புக்கு இலக்கணமாக விளங்குகிருர். எனக்கும் அவருக்கும் அரசியலிலேயே கருத்து வேறுபாடு உண்டு. நான் காங்கிரஸ்காரன். அவர் முதலில் தி.மு.க.வில் இருந்து இப்போது அண்ணு தி.மு. கழகத் தலைவராக இருக்கிருர்.

ரோ: (சிரித்து) நீங்கள் இந்திரா காங்கிரஸ்காரர் என்ருல் கருத்து வேறுபாடு எப்படி வரும்?

(அடுத்த இதழில்)

பேட்டி: பால்யூ

படம்: சுபா



ஆகா! என்ன பணிவு!

'பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிருேம்—ஆசிரியர்'

சாதாரணமாக இப்படித்தான் பத்திரிகையிலிருந்து கதை கட்டுரைகள் திரும்ப வரும். ஆனல் சீனவில் சில பத்திரிகைகள் கதை-கட்டுரைகளைத் திருப்பி அனுப்பும் போது அதோடு வைக்கப்படும் குறிப்புச் சீட்டில் இப்படி அச்சிடப்பட்டிருக்கும் என்று ஜூனியர் ஸ்டேட்ஸ்மன் சொல்கிறது:

'தங்கள் கதை—கட்டுரையைப் படித்துப் பார்த்தோம்.


உலகிலேயே சிறந்த படைப்பு உங்களுடையதுதான் என்று முடிவு செய்தோம். ஆனல் இதை வெளியிட்டால் அடுத்து வெளியிடும் கதை-கட்டுரைகள் இதே தரத்தில் இருந்தாக வேண்டும் என்று வாசகர்கள் தொந்தரவு செய்ய ஆரம்பித்து விட்டால், நாங்கள் எங்கே போவது? இம்மாதிரிப் படைப்புக்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட வருவதில்லை.

ஆகவே, உங்களிடம் ஆயிரம் தடவை மன்னிப்புக் கேட்டுக் கொண்டு உங்கள் கதை-கட்டுரையை இத்துடன் திருப்பி அனுப்புகிருேம்!

தங்கள் காலடியில் விழுந்து வணங்கும்,

தங்கள் வேலைக்காரனுக்கு

வேலைக்காரன்
—ஆசிரியர்'





2

கல்யாணத்தில்—

மணப் பெண், பிள்ளை கண்ணுக்கு அழகாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறாள்.

மாப்பிள்ளை செல்வ வசதிகளுடன் இருக்க வேண்டும் என்று பெண்ணைப் பெற்றவள் எதிர்பார்க்கிறாள்.

மருமகன் புத்திசாலியாக, அறிவுள்ளவனாக இருக்கவேண்டும் என்று பெண்ணைப் பெற்றவர் விரும்புகிறார்.

பந்து ஜனங்கள் பிள்ளையின் குலம் நல்ல குலமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

மற்ற ஜனங்கள் நல்ல ருசியான சாப்பாடு கிடைக்குமா என்று ஏங்குகிறார்கள்.

—வடமொழி நூலிலிருந்து.

காலையில் வசு ஹாலுக்குள் பிரவேசித்தபோது, ராஜலட்சுமி வெள்ளி டபராதம்ளருடன் அவள் முன் வந்தாள்.

"நான் சாப்பிட்டாச்சு, அம்மா."

"இதை மாப்பிள்ளைக்குக் கொண்டு போய்க் கொடு." ராஜலட்சுமி காப்பியை நீட்டினாள்.

பதில் பேசாமல் வாங்கிக் கொண்ட வசு மெதுவாக மாடிப்படியை நோக்கி நடந்தாள்.

முந்தின இரவு அவள் திடீரென எழுந்து உட்கார்ந்து வெளியே ஓடிவிடத் துடித்தபோது, கோபி சாதுரியமாகப் பேசினான். சிதறிய பாலைத் துடைத்து, பறந்தோடிய வெற்றிலைகளை ஒழுங்காக வைத்த அவன், அவளிடம், "உன் மனநிலை எனக்குப் புரிகிறது, வசு," என்று சொல்லி அவளுடைய இரு கைகளையும் தனது கைக்குள் பொதிந்து கொண்டான்.

"உன் அப்பாவை நான் ரொம்ப உயர்வா மதிக்கிறேன். இகழ்ச்சியா நினைச்சேன்னா, என்னைவிட ஒரு முட்டாளோ அயோக்கியனோ இருக்க முடியாது. சுய கௌரவத்துக்கும் தன்

பி.வி.ஆர்



மானத்துக்கும் பெருந்தன்மைக்கும் அவர் இலக்கணமாக இருக்கிறவர். நான் சொன்னதைத் தயை செய்து, சிலேட்டில் எழுதி அழிக்கிற மாதிரி அழிச்சிடு... இன்னிக்கு நீ சந்தோஷமா இருக்கணும்...நீ மனம் வாடறதைப் பார்க்கவா இந்த மல்லிகையும் ரோஜாவும் இங்கே இருக்கு?"

அவனுடைய பேச்சு அவளைத் திசை திருப்பியது என்றால், அவனுடைய ஸ்பரிசம் அவளை மயக்கியது. கண்கள் தாமாக மூடிக் கொண்டன. அவனுடைய மடியில் சாய்வதை அவள் உணர்ந்தாள். அவன் அவளை உலகத்தின் எல்லைக்கே மெல்ல மெல்லப் பூக்கரங்களால் இழுத்துப் போய்க் கொண்டிருந்தான். "விளக்கை அணைத்துவிடுங்கள்," என்று அவள் அரை விழிப்பில் முணுமுணுத்தபோது, "நமக்குள் மட்டுமே நம் ரகசியங்கள் இருக்கும்போது இருட்டுக்கும் வெளிச்சத்துக்கும் வித்தியாசமே இல்லை, வசு," என்றான். அதன் பிறகு அவள் உலகத்தையே மறந்தவளாகிவிட்டாள்.



அந்த அனுபவம் — முதல்
வம் — காலம் காலமாய் யுகம்
மனித வர்க்கத்தில் நடந்த,
க்கப் போகிற ஓர் உபாதை
வுக்கு அவளை எங்கேயோ
காண்டு போகும் என்று
வேயில்லை.

யில் ஹாலில் பேப்பர்
ண்டிருந்த கோபியைச்
பார்த்தபோது முந்தின
களெல்லாம் மீண்டும்
. வெட்கமும் சஞ்சல

க் கண்டதும் பேப்
வைத்த கோபி, "ஹலோ
ர்னிங்!" என்றான்.

காப்பியை நீட்டி
மார்னிங்."

தை வாங்கிக்கொண்டே,
த காட்டில் இருக்கும்
இப்போ நான் வீட்டிலே
க்கிறேன்," என்றான்.

"அப்போ ஒண்ணு செய்ய
நாம இரண்டு பேருமே இப்போ
காட்டுக்குப் போய்விடுவோம்!" — வசு
சிரித்தாள். பற்களின் வெண்மையில்
சூரிய ஒளி மங்கிப் போய்விட்டதாக
தோன்றியது கோபிக்கு.

அவன் காப்பியைக் குடிக்
காமல் அவளையே பார்த்தவனாய் இருப்
பதைக் கண்ட வசு, "சீக்கிரம் குடியுங்
கள். ஆறிப்போயிடும்," என்றாள்.
பிறகு சிரித்துக் கொண்டே, "நான்
ஆறிப்போக மாட்டேன். போதுமா?"
என்றாள்.

"நானும் ஆறவிடமாட்
டேன்," என்று சொல்ல வாயெடுத்த
கோபி, சிவராமன் வருவதைக் கண்டு
எழுந்து நின்றான்.

"உட்காருங்கள் மாப்பிள்ளை.
முதலில் காப்பியைக் குடித்து முடியுங்
கள்!" என்றார் அவர். "நாளைக்கு
ராத்திரி ரெயிலில் ஏ.ஸி. புக் பண்ணிட்
டேன். ஸ்பெஷலா ஆளை அனுப்பி உங்க
ளுக்குக் கூப்பேயும் போடச் சொல்லி
யிருக்கேன்."

"ஊட்டிக்கு ரிடர்ன் டிக்கெட்
வாங்கின சீப்... போக வர ஒண்ணரை
டிக்கட்தான்," என்றான் கோபி.





அட்வான்ஸ் கோலம்

தமிழ் நாட்டில் எவரும் இரவில் வீட்டு வாசலில் சாணம் தெளித்துக் கோலம் இடமாட்டார்கள். அப்படிச் செய்வது இழுக்கு என்றும் தரித்திரம் என்றும் சொல்லுவார்கள். ஆனால் ஸ்ரீரங்கப்பட்டினத்திலோ (கர்நாடக மாநிலம்) இரவு 8 மணிக்கு மேல் வீட்டு வாசலில் சாணம் தெளித்து, மாக்கோலமிடுகிறார்கள். 15 நாள் விடுப்பில் ஸ்ரீரங்கப்பட்டினத்திலுள்ள எனது தங்கையின் வீட்டிற்கு வந்த எனக்கு இந்த நிகழ்ச்சி வியப்பைக் கொடுத்தது. காரணம் என்ன என்று வினவினேன், இங்கு காலை 7 மணி வரை குளிர் அதிகமாக உள்ளதால் காலையில் வாசல் தெளிக்க முடியாது என்பதாலும், காலை 7 மணி வரை வாசல் சுத்தப்படுத்தாமல் இருப்பது தரித்திரம் என்றும் இரவில் முடிக்கிறார்களாம்.

—ஆர். பிரபாகர்

"நோ...நோ.. கோயமுத்தூர்லே உங்க ளுக்குன்னு கார் காத்திருக்கும். இரண்டு மணி நேரத் துலே ஊட்டி போய்ச் சேர்ந்துடலாம். மேட்டுப் பாளையத்திலிருந்து, ரெயில் லொங்கு லொங்குன்னு போகும்...போர் அடிக்கும்...இல்லியா வசு?"

எதிர்பாராதபோது தந்தை வந்துவிட்ட தால் ஏற்பட்ட குழப்பத்தில் வசு பேசாமலிருந்தாள்.

"மாப்பிள்ளை, இன்னிக்கு என்னென்ன புரோக்ராம் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"பதினொரு மணிக்கு மேலே அடையாறு வரைக்கும் போகணும். மூன்று மணிக்கு வந்துடு வேன். சாயங்காலம் வசுவின் கிளப்பில் பார்ட்டி. லேடீஸ் கிளப்பில் நான் ஒருத்தன்தான் ஜென்டில் மென்!"

"என்ன வசு, அப்படியா?"

"ஆமாம்ப்பா."

"மாப்பிள்ளை, நாளைக்கு நீங்க ஊட்டிக்குப் போறத்துக்கு முன்னாடி ட்ரிப்ளிக்கேன் ரூமைக் காலி செய்து விடுங்கள். நீங்க இங்கே இருந்தால், எனக் கும் நல்ல கம்பெனி கிடைக்கும்...பழைய கதை களையெல்லாம் பேசிக் கொண்டிருக்கலாம்.. அதாவது வசுவுக்கு வேறு வேலை இருக்கும்போது."

சிவராமன் இறங்கிச் செல்லும் வரை காத்திருந்த கோபி, அவள் கையைப் பற்றினான்.

...ருமணத்துக்கு ஏற்ற வயது என்ன?



உங்களுக்குப் பிடித்தமான ஆண்கள் யார்?

காஸ்ட்ரோ, கிஸிஞ்சர், பிராண்டோ.

...பெண்கள் உரிமை பற்றி?

இது ஆண்கள் உலகம். இருந்தாலும் ஆண்கள் இல்லாமல் பெண்கள் மட்டும் இருந்து என்ன பிரயோசனம்?

இந்திய சினிமா பற்றி ?

ரொம்பவும் நீளமாக இருக்கிறது.

திருமணம் செய்து கொள்ளச் சரியான வயதென்ன?

80. அப்போதுதான் அதுவே, செய்யும் கடைசித் தவறாக இருக்கும்.

உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை உண்டா?

உண்டு. விமானத்தில் பயணம் செய்யும் போது மட்டும்.

— இதாலிய நடிகை ஜினா லோலா பிரிகிடா புது டில்லியில் பேசியது.

டெலிபோன் அடித்தது.

''எனக்கு டெலிபோன் செய்ய யாரும் இல்லை, வசு! உனக்குத்தான்,'' என்றான் கோபி சிரித்துக்கொண்டே.

நித்யாதான் போனில் பேசினாள்.

''ஏண்டி, இப்பத்தான் அவர் சுப்ரபாதம் பாடி எழுப்பினாரா?''

''நான் கார்த்தாலேயே எழுந்துட்டேன்,'' என்றாள் வசு.

''ஏண்டி உன் குரலே ஒரு மாதிரி இருக்கு? ராத்திரி ரொம்பப் பேசினயோ? நீதான் கெட்டிக்காரியாச்சே, பேசாமலே காரியத்தை முடிச்சிருப்பே! எப்படி?சக்ஸஸ்தானே?''

''பேசாம இருடி!''

''நேத்து ராத்திரி உன்னை அலங்காரம் பண்ணி, பாட்டெல்லாம் பாடி உள்ளே தள்ளியிருக்கேன்! எப்படியடீ பேசாம இருக்கிறது? என்ன நடந்தது, சொல்லு!''

''என்ன நடக்கணுமோ அது.''

''அதை அப்படியே ஒன்று விடாம டயரிலே எழுது. அப்புறம் டயரியை என் கிட்டே கொடு.. உன் 'அவர்' எப்படி? ஆசையை எப்படிக் காட்டினார்? நளினமாக, நாசூக்காக வா.. இல்லே, சோத்தைக் காணாத பரதேசிப் பயல் மாதிரியா?''

''டயரியைக் காட்டறேன்... போதுமா?''

''ஏண்டி வசு, பக்கத்திலே அவர் இருக்காரா? அவசரப்படறியே!''



''இதென்னடி கிழிசல் புடவையுடன் ஆபீஸ் கிளம்பிட்டே?''

''புது மானேஜர் ஊழியர்களிடம் அடிக்கடி கைமாற்றுக் கேட்பவராம்!''

''இல்லே. நான் அப்புறம் போன் பண்றேன்.''

''சரி சரி, நான் குறுக்கே நிக்கலேடி!''

மாலை.

சிவராமனுடைய ஆபீஸ் அறைக்கு அடுத்த அறைக்குள் புத்தகம் ஒன்று எடுக்கப் பிரவேசித்த கோபி பக்கத்து அறையில் ராஜலட்சுமியுடன் அவர் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டான். அவன் அந்த அறைக்குள் வந்ததை அவர்கள் கவனிக்கவில்லை. இப்போது வெளியேறினால் அவர்கள் அவனைப் பார்க்கக்கூடும். என்ன செய்வது? ஒரு கணம் யோசித்த கோபி, சீக்கிரத்திலேயே ஒரு புத்தகத்துடன் வெளியேறி, வாசற்பக்கமாகச் சென்று போர்ட்டிகோவில் நின்று விடலாம் என்று முடிவு செய்தான்.

ஆனால் திடீரென்று அவனுடைய பெயரும் வசுவின் பெயரும் அவர்களுடைய பேச்சில் அடிபடுவதைக் கேட்டபோது அவனையும் மீறிய ஆர்வம் அவனை அறையினுள்ளேயே நிறுத்தியது.

''ராஜி, இன்னிக்கு வசு கிட்டே ஏதானும் பேசினயா?''

''ஏன், எதுக்குக் கேட்கிறீர்கள்?''

''வசு ஒரு மாதிரியா இருக்கிறாள்.''


''உங்களுக்குப் பிரமை.''

''இல்லே ராஜி. நான் மாடிக்குப் போனப்போ, அவன் காபி குடிச்சுட்டிருந்தான். அவள் எங்கோ பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள்.''

''நீங்க மனசை வீணா அலட்டிக்காதீர்கள். அவள் சந்தோஷமாகத்தான் இருக்கிறாள்.''

''நானும் கோபியும் பேசிக் கொண்டிருந்தோம். இவள் தானாகப் பேச்சிலே கலந்துக்கவே இல்லே. ஏதோ எங்கேயோ என்னவோ நடக்கிறது போல் நின்றாள்.. ராஜி, நான் தப்பு செய்துவிட்டேனா?''

''பேசாமல் போங்கள்..அவ அவனைப்பத்தியே நினைச்சுட்டிருந்திருப்பா.''



"கதையோ நாவலோ எழுத நான்கு முக்கியமான விஷயங்களைப் புகுத்தி எழுத வேண்டும். 1. செல்வச் சிறப்பு 2. பக்தி 3. பாலுணர்ச்சி 4. மர்மம்," என்றார் சாமர்செட். மாம்.

ஐந்தே நிமிடத்தில் ஒரு மாணவி, இதை எழுதிக் காட்டினார்:

ஒரு ராஜகுமாரிக்கு (செல்வச் சிறப்பு) இன்னும் திருமணம் ஆகவில்லை. அவள் சொன்னாள், "ஆண்டவனே (பக்தி), நான் இப்போது தாய்மை (பால் உணர்ச்சி) எய்தியுள்ளேன். என் வயிற்றிலிருக்கும் சிசுவின் தந்தை யார்? (மர்மம்) என்று சொல்ல வல்லேனில்லை. ஐயோ!"

—ஆர்கசி இண்டர்நேஷனலிலிருந்து: கீதா

"நம்ம தகுதிக்கு இவன் ஏற்றவனில்லைன்னு வசு நினைக்கிறாளோன்னு தோன்றிற்று. ஆனா நீ சொல்றதுதான் கரெக்டா இருக்கும்."

"அது சரி, ஹனிமூனுக்குப் போகிறார்களே, பணம் கொடுத்தாச்சா?"

"நாளைக்குத்தானே? அலமாரியிலிருந்து எடுத்துக்கட்டும்."

"இங்கிதம் தெரியலை. ரெண்டாயிரத்தை எடுத்து மாப்பிள்ளை கையிலே கொடுங்கள். ஹாண்ட்பாக்கிலேந்து எடுத்து வசு ஓட்டல்காரன் கிட்டே கொடுத்தா யாருக்கு அவமானம்? புருஷன் நிழல்லேதான் பெண் இருக்கணும்."

"எனக்கு இது தோணவேயில்லை ராஜி."

கோபி யோசித்துப் பார்த்தான்.

அவர் பயப்படுவது போல, வசு, தகுதி இல்லாத ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு விட்டோம் என்று உண்மையாகவே வருந்துகிறாளா? கோபி தனக்குத் தானே சிரித்துக்கொண்டான்.

போன மாதம்தான் சிவராமன் திடீரென்று அவனைச் சந்தித்தார். அவன் தங்கம்மாளின் பிள்ளை என்பதைக் கண்டு பிடித்த பிறகு ஒரு நாள்கூட இருவரும் மாலை வேளையில் சந்திக்கத் தவறியதில்லை. சென்னையில் பெரிய தொழில் அதிபர்களில் ஒருவராக இருக்கும் சிவராமனைப் பற்றி, அந்தக் காலத்தில் சித்தி சொல்லியிருந்தது நினைவுக்கு வந்தது. இப்போது சிவராமனே அவனுடைய தாயாரைப் பற்றி ஆயிரமாயிரம் சொல்லிச் சொல்லிக் கரைந்தார்.

தன்னைத் தம் மாப்பிள்ளையாக்கிக் கொள்ள அவர் விரும்புகிறார் என்று தெரிந்தபோது அவன் அவருடைய பணத்தைக் கண்டு பயப்படவில்லைதான். ஆனால் பணக்காரப் பெண் தன்னை எப்படி பாவிப்பாளோ என்ற ஓர் அச்சம் தலைதூக்கியது.

ஆனால் ஒரே இரவில் அவன் அவளை அறிந்துகொண்டுவிட்டான். அவளுடன் நிறைந்த வாழ்க்கை வாழ முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

ஒரு வழியாகப் புத்தகத்துடன் மாடியேறிய கோபி, ஹாலிலோ மற்ற அறைகளிலோ வசுவைக் காணவில்லை. அவள் எங்கே?

அவளுடைய அறையில் எட்டிப் பார்த்துவிட்டு வெளியேறக் கால் வைக்கையில், இணைந்திருக்கும் குளியலறையிலிருந்து திடீரெனச் சத்தம் கேட்டது.

ஒரு கணம் நின்றான்.

வசு குளிக்கப் போயிருக்கிறாள். அவளுடைய அழகு திடீரென அவனுடைய நினைவில் மோதி, அவனைக் குறும்புத்தனம் செய்யத் தூண்டிற்று.

ஓரிரு நிமிடங்கள் அசைவற்று நின்ற அவனுக்கு அறையை விட்டு வெளியேற மனம் வரவில்லை. மெதுவாக அடிமேலடி வைத்துக் கதவண்டை போனான். இரு கதவுகளும் சாத்தியிருந்தன. மெல்ல ஒரு கதவைத் தொட்டான்.

அவன் கையின் பலத்தில் கதவு நகர்ந்தது. கால்கள் தாமாக உள்ளே நடந்தன.

அப்போதுதான், கையில் சோப்பை வைத்துக்கொண்டு, அதைத்

ஆண் = பெண்

இந்த 1975'ஆம் ஆண்டு பெண்களின் உரிமைகளை எடுத்துச் சொல்லி வாதாடும் ஆண்டு. அதற்கென அவர்கள் ஒரு சின்னத்தைத் தேர்ந்தெடுக்கிறார்களே, அதைக் கவனித்தீர்களா?

ஒரு வட்டம். அதன் கீழ் சிலுவை மாதிரி கோடுகள். அது தான் பெண்ணினத்தைக் குறிக்கும் Genetic Symbol.

பெண்ணைக் காட்டியாகிவிட்டது. அவர்கள் அமைதியை விரும்புகிறவர்களாம். அதற்காகப் புறா படம். சரி.

அத்தோடு சின்னம் முடிந்துவிட்டதா? 'சமம்' என்பதைக் காட்ட = குறியையும் சேர்த்துவிட்டார்கள். மொத்தத்தில் தன் இனம், அமைதி, சம உரிமை மூன்றையும் அவியலாக்கியிருக்கிறார்கள்.

—ஆறடியான்

தேய்த்துக்கொள்ள மனம் வராமல், வசு கண்களை மூடியவளாய் ஏதோ யோசனையாக நின்றாள்.

திடீரென்று—

ஒரு கரம் அவளுடைய இடையைப் பற்றியது.

பயத்தில் அதை ஓர் ஆவேசத்துடன் உதறினாள்.

''தூக்கிவாரிப் போட்டுட்டுதா, வசு?''

''ப்ளீஸ்...ப்ளீஸ்...என்ன இதெல்லாம்? அப்பா வந்துடுவார்... அம்மா வந்துடுவார்..''

''வரமாட்டார்கள்.''

''இது பாத்ரூம்...பெட் ரூம் இல்லை.''

''எந்த ரூமானா என்ன வசு?''

சொன்ன அவள், அருகே இருந்த துவாலையால் தன்னை அவனிடமிருந்து மறைத்துக் கொண்டாள். அவளுடைய பயத்தில் மார்பு விம்மி, துவாலையைத் தள்ளிவிடுமோ என்றிருந்தது.

கோபி சிரித்தான்.

''இங்கே கூடவா உங்களுக்கு விளையாட்டு? கெட் அவுட்!''

டிரெஸ் செய்து கொண்டு வந்த வசு, மாடியில் பால்கனியில் நீண்ட மர பெஞ்சியில் கால்களைத் தொங்கப் போட்டு, புத்தகம் வாசித்துக் கொண்டிருந்த கோபியைக் கண்டு ஒரு கணம் நின்றாள். அவன் உட்கார்ந்திருந்த பழைய காட்டுமர பெஞ்சு கண்ணை உறுத்தியது.

''ஹலோ வசு, அதுக்குள்ளே ரெடியாயிட்டியா...இதோ. இந்தப் பக்கத்தை முடித்துவிட்டு வரேன்!''

அவள் சிணுங்கினாள்.

''அங்கே ஹாலிலே நிறைய சோபாக்களும் ரப்பர் மெத்தை போட்ட சேர்களும் இருக்கே. நீங்க இந்தப் பழைய மர பெஞ்சியிலேதானா உட்கார்ந்து படிக்கணும்?''

''எனக்கு இதுமாதிரி பெஞ்சியிலே உட்பார்ந்துதான் பழக்கம். ரப்பர் மெத்தை சோம்பலைத்தான் வளர்க்கும்.''

''நான் என்ன சோம்பேறியா? அதிலேதான் பிறந்து வளர்ந்திருக்கேன்.''

கோபி கலகலவெனச் சிரித்தான். ''நீ ஒரு விதி விலக்கு வசு... பின் எதுக்கு இந்த ஹைதர்அலி காலத்து மர பெஞ்சை இங்கே போட்டிருக்கிறார்கள்?''

''ஏதோ கிடக்கு.''


''ஒரு வேளை பழைய காலத்தை நினைச்சுப் பார்க்க இருக்கட்டும் என்றா?'' அவனுக்கு ஒரு கதை ஞாபகம் வந்தது. ''தாரான்னு ஒரு ஆட்டு இடையன் இருந்தான். அவன் திடீரென்று ராஜாவானான். அப்புறம் எங்கே போனாலும் கையிலே ஒரு பெட்டியையும் தூக்கிக் கொண்டு போவான்....''

அவன் வேடிக்கையான கதையொன்றைச் சொல்வதாக நினைத்துக் கொண்டு அடுக்கிக் கொண்டு போனான்.

அவளுக்கும் அந்தக் கதை தெரியும்... அந்தப் பெட்டிக்குள்ளே, தாரா ஆட்டை ஓட்டுகிற இடையனாக இருந்தபோது போட்டுக்கொண்ட கந்தல் இருந்தது. அந்த மாதிரி இந்த பெஞ்சா....

அவள் முகம் கடுத்தது.

(தொடரும்)


காம்ப்ளான்
இந்த 23-ஐயும் தருகிறது.
புரதம்
திசுக்களையும் செல்களையும்
உருவாக்க, பாதுகாக்க
லிப்பிடுகள்
பொங்கிப் பெருகும் சக்திக்கே
கார்போஹைடிரேட்
சக்தி மிகுந்த உடல் வலிமைக்கே
கால்ஷியம்
ஆரோக்கியமான பற்கள்,
எலும்புகளுக்கு
பாஸ்பரஸ்
உடல் சுரப்பிகள்,
பற்கள் எலும்புகளுக்கு
சோடியம்
இரத்தம் நன்முறையில் செயலாற்ற
குளோரைடு (Cl வடிவில்)
தசை இயக்கத்திற்கு,
பிடிப்புகளைத் தவிர்க்கும்.
பொட்டாஷியம்
மனத் தளர்ச்சி,
தசை அயர்ச்சிக்கெதிராகப் போராட
இரும்புச் சத்து
ஆரோக்கியமான ரத்தத்திற்கே
அயோடின்
தைராய்டு சுரப்பி தரமாக இயங்க
வைட்டமின் ஏ
ஆரோக்கியமான
கண்களுக்கு
வைட்டமின் பி1
வளர்ச்சி,
உறுதியான நரம்புகள்,
'பெரி-பெரி' நோய்
பீடிக்காதிருக்க
ரிபோஃப்ளேவின்
ஆரோக்கியமான வாய்,
நாக்கு, உதடுகள்,
கண்களுக்கு
நிகோடினமைடு
ஒளிவீசும் ஆரோக்கியமான
சருமத்திற்கே
கால்ஷியம் பென்டோதெனேட்
நரம்புகளையும் தசைகளையும்
வலுப்படுத்த
கோலின்
கல்லீரல் ஆரோக்கியமாக இயங்க
பைரிடாக்ஸின் (B6)
தசைகளை இணைப்பாற்ற
வைட்டமின் பி12
இரத்த சோகை பீடிக்காதிருக்க
ஃபாலிக் அமிலம்
புதிய இரத்த செல்களை உருவாக்க
வைட்டமின் ஸி
நோயெதிர்ப்புச் சக்தியைப் பெருக்கி,
ஸ்கர்வி நோய் வராதிருக்க
வைட்டமின் டி
உறுதியான பற்கள்,
எலும்புகளுக்கு
வைட்டமின் ஈ
கரு வளர்ச்சிக்கு
வைட்டமின் கே
இரத்தம் இயற்கையான
முறையில் உறைய உதவும்
இதர சிறு சிறு பொருட்கள்
வைட்டமின்களை உடல்
உறிஞ்சிக்கொள்ளவும், சுரப்பிகள்
நன்கு இயங்கவும் உதவும்.
காம்ப்ளான் வளரும் குழந்தைகள், சுறுசுறுப்பான இல்லத்தரசிகள்,
பரபரப்புடன் இயங்கும் அலுவலாளர்கள், கருத்தரித்த தாய்மார்கள்,
பாலூட்டும் அன்னையர், வயது முதிர்ந்தோர்,
பிணியாறுவோர் முதலியவர்களுக்கு சாலச் சிறந்தது.
பாலையும் விட இன்னும்
அதிகமான வைட்டமின்கள், புரதம்,
கால்ஷியம், இரும்புச் சத்து மற்றும்
இதர ஊட்டச் சத்துக்களை
காம்ப்ளான் அளிக்கிறது.
ஒப்பிட்டுப் பாருங்கள்:
ஒரு கோப்பை காம்ப்ளான் (33 கிராம்),
ஒரு கிளாஸ் பால் (200 மி.லி.)
பால் சேர்க்காமலேயே பருகலாம்!
Complan
Glaxo
Complan
ECONOMY PACK
உலகெங்கும்
உபயோகிக்கப்
படுவது—
க்ளாக்ஸோ
ஆராய்ச்சியில்
உருவானது.



3

''ஓ, பெண்ணே, ஏழு அடி தூரம் என்னுடன் வந்த நீ எனக்கு சகாவாவாய். நாம் இருவரும் சினேகிதர்களாகிவிட்டோம். உன்னைவிட்டு நான் பிரிய மாட்டேன். என்னைவிட்டு நீ பிரியக்கூடாது. பரஸ்பரம் நல்ல மனமுடையவர்களாக இருப்போம். நம் இருவர் மனமும் ஒத்திருக்கட்டும். வெளி இந்திரியச் செயல்களிலும் இருவரும் ஒத்திருப்போம்...''

—ஸப்தபதியில் ஒரு பகுதி.

அம்மாவின் பூஜை முடிவதற்காகக் காத்திருந்த வசு, பூஜை முடிந்த பின்பும் அவள் கையில் சின்னஞ் சிறு வெள்ளித் தட்டுடன் அப்பாவைத் தேடிப் போவதைக் கண்டு பொறுமை இழந்தாள். இப்படி ஏனோ அவளுக்கு எல்லாவற்றின் மேலும் எரிச்சலாய் வந்தது.

''அப்பா எங்கே, வசு?''

''தெரியாது. ஒரு வேளை மாடியில் இருக்கிறாரோ என்னமோ?''

''நைவேத்தியத்தைக் கொடுக்கலாம்னு பார்த்தா....''

''ஏன் அம்மா நீ தினமும் இந்தத் திராட்சையை எடுத்துட்டு அலையறே? அப்பாதானே பூஜை ரூமுக்கு வந்து வாங்கிக்கணும்?''

காதிலேயே வாங்கிக்கொள்ளாமல் மாடிக்குச் சென்று சிவராமனிடம் திராட்சைப் பழங்களைக் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்த ராஜலட்சுமி, ''ஏன் வசு, நான் பூஜைக்குப் போறத்துக்கு முன்னாடி நீ யார்கிட்டேயோ போர்ட்டிகோவிலே நின்னு பேசிட்டிருந்தாயே, யார் அது?'' என்றாள்.

''பொள்ளாச்சி வீட்டிலே குடியிருக்கிறவர். தபால்லே அனுப்ப[illegible] வாடகையை இந்த மாசம் நேரிலேயே கொடுத்திட்டுப் போக வந்திருந்தார்,'' என்றாள் வசு. ''ஏம்மா, மெட்ராஸ்லே மூணு பங்களா இருக்கு. அம்பது ரூபா வாடகை வருகிற அந்தப் பழைய வீடு பொள்ளாச்சியில் எதுக்கு? வித்துத் தொலைச்சுடப்படாதா?''

''எதுக்கு விக்கணும்?'' என்றாள் ராஜலட்சுமி. ''அது உன்னை என்ன செய்கிறது? உனக்கும் கல்யாணமாயாச்சு. எங்க பாரமும் போயாச்சு. நானும் அப்பாவும் நிம்மதியாக எங்க கடைசிக் காலத்தை அங்கே கழிக்கப்போறோம்! இந்தப் பங்களாவும் காரும்தான் சுகம்னு நினைச்சியா?''

''போனா நீ மட்டும்தான்





போகணும். அப்பா வரமாட்டார்.''

''அவரா!'' ராஜலட்சுமி பெருமூச்செறிந்தாள். ''அவர் மனசைப் பத்தி உனக்குத் தெரியாது. இந்த வீடு வாசல் சொத்து எல்லாத்தையும் காட்டி இதெல்லாம் உனக்கு வேணுமா, இல்லே, இந்த ராஜலட்சுமி வேணுமான்னு தெய்வம் வந்து கேட்டா, எல்லாத்தையும் உதறி எறிஞ்சுட்டு அவர் என்கிட்டே வந்து நிற்பார்... மேனகை ஊர்வசிதான் வரட்டுமே, அவர் என்னைவிட்டு அசையமாட்டார்.''

வசு முகம் சுளித்தாள். ''நீ அப்பாவைப் புகழ்கிறாயா இல்லே உன்னையே புகழ்ந்துக்கிறாயான்னு எனக்குப் புரியலே..அப்பா ஆசைப் பட்டு உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனா இவ்வளவு தூரத்துக்கு எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சுட்டு உன்பின்னே வருவார்னு எனக்குத் தோணலே.''

''உனக்குத் தோன்றா விட்டால் போறது. எனக்குத் தோன்றுகிறது, அது போதும்,'' என்ற ராஜலட்சுமி, திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவளைப்போல, ''ஆமாம். நீ இங்கேயே நின்னு பேசிட்டுருக்கியே, ட்ரிப்ளிகேனில் மாப்பிள்ளையின் ப்ரெண்ட் வீட்டு விருந்துக்குப் புறப் படலியா?'' என்று கேட்டாள்.

''போகணும்.''

''சீக்கிரம் ட்ரெஸ் பண்ணிக் கொள். இப்போதே மணி பத்தரை.''

''இதுக்கு மேலே என்ன ட்ரெஸ்? இந்த நைலக்ஸே போதும்.''

''என்னடீ இது... மாப்பிள்ளையோடு . அவர் சினேகிதர் வீட்

டைவர்ஸ்

பி.வி.ஆர்.

டுக்கு விருந்து சாப்பிடப் போறே...பட்டுப் புடவையை எடுத்துக் கட்டிக் கொள். உன் நெக்லஸையும் கல் வளையலையும் கொண்டு வரேன், இரு.''

கார் போய்க்கொண்டிருந்தது. வசு ஓட்டிக்கொண்டிருந்தாள். பக்கத்தில் கோபி. ஆனால் இருவரிடையிலும் மௌனம் நிலவிற்று.

காரை ஸ்டார்ட் செய்தபின் வசு தன்னுடன் ஏதாவது பேசுவாள் என்று அவன் எதிர்பார்த்தான். நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையைத் தாண்டி, ஜெமினியைக் கடந்து மவுண்ட் ரோடில் வண்டி வேகம் எடுத்த பின்பும் கூட அவள் வாயைத் திறக்கவில்லை. இரண்டு தடவைக்குமேல் அவனாகவே அன்று காலை அவளிடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தாயிற்று. அவள் மனத்தில் என்னென்னவோ நினைத்துக் கொண்டு ஓரிரு வார்த்தைகளாய்ப் பதில் பேசி அவனுடைய வாயை அடக்கி விட்டாள். அப்புறம் அவனுக்கும் வீம்பு ஏற்பட்டுவிட்டது. ஒன்றுமில்லாததற்கெல்லாம் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்கிறாளே! அவள் ஒருத்தியால்தான்



பிடிவாதம் செய்ய முடியுமா? முரண்டு செய்ய முடியுமா? அவன் ஆண். அவளுடைய கணவன். அதிகப்படியான அன்பைச் செலுத்தவும் முடியும். அவனால் ஆத்திரமாகவும் இருக்க முடியும். ஏழைகளுக்குத் தன்மதிப்பும் சுய கௌரவமும் மற்றவர்களைவிட அதிகம் என்று வசுவுக்குத் தெரியாது போலிருக்கிறது.

அவனாக ஏதாவது பேசுவான் என்று எதிர்பார்த்த அவளுக்கு அவனுடைய மௌனம் சுமையாகத் தோன்றியது. அவனுடைய நண்பன் வீட்டில் நடக்கும் விருந்துக்கு அவள் மறுப்புச் சொல்லாமல் வருகிறாளே, அதற்காகவாவது இதமாக இரண்டு வார்த்தைகள் அவன் பேசலாம். பேசவில்லை. வரட்டும்..

வீட்டு வாசலில் கோபியின் நண்பன் நாகராஜன் நின்று கொண்டிருந்தான். அவனுடைய கையைப் பிடித்தவளாய் அவன் அக்காவின் மூன்று வயதுப் பெண், ஒரு கத்திரிப் பூ நிற கவுனைப் போட்டுக் கொண்டு நின்றிருந்தாள்.

''என்னடா? உன்னை ரொம்ப நேரம் வாசல்லேயே நிக்க வைச்சுட்டேனா?'' என்றான் கோபி.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. இவ உள்ளே லூட்டி அடிச்சாள். இழுத்துட்டு வந்தேன்.. லல்லி, அக்காவுக்குக் குட்மார்னிங் சொல்லு,'' என்ற நாகராஜன், ''வாருங்கள்,'' என்று வசுவை வரவேற்றான்.

''ஏன் மாமா, இவதான் கோபி வீட்டு அக்காவா? இவ கல்யாணத்துக்குத்தானே நீ மட்டும் திருப்பதிக்குப் போனே?'' வீட்டினுள் பிரவேசித்த நாகராஜனைத் தொடர்ந்து கொண்டே கேட்டாள் குழந்தை.

''ஆமாம்.''

''ரொம்ப அழகா இருக்கா, இல்லே, மாமா?''

நாகராஜன் சிரித்துக்

'மாமியார் வீடு' படத்தில் ஜெய்சங்கருக்கு ஜோடியாக நிர்மலா நடிக்கிறார். 'மாமியார் வீடு' தலைப்புக்கும், மாமியாருக்கும் சம்பந்தமில்லை. 'ஜெயிலை'க் குறிக்கிறது இந்த மாமியார் வீடு.

—சதி

காணாத கண் காட்சி

மர்மம் என்ன?

திருச்சி சிந்தாமணி மைதானத்தில் சமீபத்தில் சுமார் ஐந்து லட்ச ரூபாய் செலவில் ஒரு பெரிய கண்காட்சி அமைக்கப்பட்டது. ஆனால் அதைத் திறந்து நடத்தத் திருச்சி மாவட்ட கலெக்டர் அனுமதி மறுத்துவிட்டார்.

முழுவதும் கட்டித் திறக்கப்படாமல் இருந்த இந்தக் கண்காட்சி சமீபத்தில் தான் பிரிக்கப்பட்டது.



கடந்த வருடமும் இதே மாதிரி ஏற்பாடுகள் எல்லாம் முடிவடைந்த பிறகு கண்காட்சி நடத்த அனுமதி மறுக்கப்பட்டுப் பின்னர் பிரிக்கப்பட்டது. மர்மம் என்ன?

—டி.எஸ். பரமானந்தம்

கொண்டே திரும்பிப் பார்த்தான். வசு புன்முறுவல் செய்தாள்.

''வீடு பழைய காலத்து வீடு, மிஸஸ் கோபி. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளணும்!'' என்றான் நாகராஜன்.

''ட்ரிப்ளிக்கேன்னு சொன்னாலே யாருக்கும் பழைய வீடுன்னு புரியும். சாயம்தான் புதுசா இருக்கும். ஆனா இந்த வீட்லே அதுவும் கிடையாது,'' என்றான் கோபி.

அந்த வீட்டில் மொத்தம் நான்கு குடும்பங்கள் குடியிருந்தன. நாகராஜன் பின்கட்டில் இருந்தான். ரேழியைக் கடந்ததும், ''வசு, என் ரூம் மாடியில் இருக்கு. ஊட்டியிலேந்து வந்ததும் அதைக் காலி செய்யலேன்னா உன் அப்பா விட மாட்டார். எனக்குப் பிடிச்ச ரூம்,'' என்றான்.

''ரூம் நல்ல ராசியான ரூம். பெரிய இடத்திலே கல்யாணமாகியிருக்கிறதே!''—நாகராஜன்.

''அக்கா அழகா இருக்கா, இல்லே மாமா?'' —லல்லி.

''எத்தனை வாட்டி சொல்லுவே?'' என்று கூறிச் சிரித்தாள் வசு.

பின்கட்டில், வலதுபுறத்தில் சமையலறை, தாழ்வாரம், ஒரு படுக்கை அறை என்ற பகுதி. பெரிதாக இருக்கும் தாழ்வாரத்தை, இடதுபுறக் குடித்தனக்காரரிடமிருந்து மறைக்க ஒரு பெரிய திரை கட்டியிருந்தார்கள். பழைய கோணிகளை ஒட்டுப்போட்டுத் தைத்த திரை.

நாகராஜனுடைய அம்மாவும் அக்காவும் (கைக் குழந்தையுடன்) முன்வந்து வசுவை வரவேற்றார்கள். மனைவி சீதா சற்றே தள்ளி நின்று கொண்டிருந்தாள். அவள் இன்னும் ஐந்தாறு மாதத்தில் தாயாகப் போகிறாள் என்பதை அவள் முகத்தழகும் உருவமும் காட்டிக் கொடுத்தன.

நாகராஜனுடைய தாயார் பாகீரதி, ''மகாலட்சுமி மாதிரி இருக்கே.. வாம்மா..வா.. இத்தனை பெரிய வீட்டுப் பெண், எங்க வீட்டுக்குப் படியேறி வருவியோ மாட்டாயோன்னு பயந்தேன்,'' என்றாள்.

''உட்காருங்கள்,'' என்றாள் சீதா.

''முதல்லே பாயைப் போடு, சீதா.''

''பரவாயில்லே,'' என்று சொன்ன வசு தரையிலேயே உட்கார்ந்தாள். குழந்தை லல்லி அவளுடைய தோளைத் தொட்டுக் கொண்டு நிற்க, வசு அவளைத் தன் மடி மீது அமர்த்திக் கொண்டாள்.

''கோபி, உனக்கு மகாலட்சுமி மாதிரி வாய்ச்சிருக்கு... நீங்க ரெண்டு பேரும் பார்வதி பரமேஸ்வரன் மாதிரி அமோகமாக இருக்கணும், ஆமாம். ஏம்மா வசு, உன் இடது கண் என்ன சிவந்திருக்கு?'' என்று கேட்டாள் பாகீரதி.

''ஒன்றுமில்லே...'' என்ருள் வசு.

''வாரத்துக்கு ரெண்டு தடவை எண்ணெய் தேய்ச்சு குளிச்சா இப்படிக் கண் பொங்காது.''

''ஆமாம் மாமி. ஒரு வார மாச்சு,'' என்ற வசு, பிறகு, ''சீதா, நீயும் உட்கார்ந்து கொள்,'' என்ருள்.

நாகராஜன் சொன்னுன்: ''அம்மா, இன்னிக்கு ரெண்டு பேரும் ஹனிமூனுக்கு ஊட்டி போகிருர்கள்.''

''இப்போ குளிராதோ? தை மாசம் ரொம்பக் குளிரும்னு சொல்வார்கள்,'' என்ருள் சீதா.

''இப்போ ரெண்டு பேருக்கும் குளிரும் தெரியாது, வெய்யிலும் தெரியாது. என்னடா கோபி?''

''உன் அனுபவத்திலே நீ சொல்றே!'' என்ருன் கோபி.

பிறகு நண்பர்கள் இருவரும் முன்பக்கத்தில் குடியிருக்கிற நண்பரைப் பார்க்கச் சென்ருர்கள்.

''நெக்லஸ் புதுசாக் கல்யாணத்துக்கு பண்ணினதா?'' என்று கேட்டாள் தாயார்.

''ஆமா,'' என்ற வசு மெதுவாகக் கழற்றி நீட்டினுள்.

பாகீரதியும் அவளுடைய பெண்ணும் அதை உன்னிப்பாகப் பார்க்க, சீதா சற்றே விலகி நின்று கவனித்தாள்.

''நல்ல காத்திரமா இருக்கு,'' என்ற பாகீரதி அதைத் திருப்பிக் கொடுத்தாள். சீதாவின் கண்கள் நெக்லஸ்மீது பதிந்திருப்பதைக் கண்டு, ''சீதா, நீ போட்டுப் பாரேன்?'' என்ருள் வசு.

சீதா தன் கணவன் நாகராஜனைப் பார்க்கத் திரும்பினுள்.

''அவர்கள் அந்த ரூமில் இருக்கிருர்கள்!'' என்ற வசு எழுந்து நெக்லஸை அணிவித்தாள். அவளுடைய செய்கைகளில் சீதா சிலிர்த்துப் போனுள்.

உள்ளே சென்று கொண்டிருந்த பாகீரதியிடம், ''பாட்டி பாட்டி! மாமி கோபி அக்கா நகையைப் போட்டுட்டிருக்கா. நீ வந்து அவளேக் கோபிச்சுக்கோ!'' என்று லல்லி கத்தினுள்.

எல்லோரும் சிரித்தார்கள்.

நெக்லஸைக் கழற்றப் போன சீதாவிடம், ''சத்து' உன் கழுத்திலேயே இருக்கட்டும்,'' என்ற வசு, சீதாவின் தாய்மை அழகைக் கண்டு தன்னுள் வியந்துபோய், ''இப்போ எத்தனே மாசம்?'' என்று கேட்டாள்.

''நாலு.''

''சீமந்தத்துக்கு என்னே அழைப்பாய் இல்லியா?''

''இது ஒரு கேள்வி! கோபி இல்லாம ஒரு விசேஷமும் எங்க வீட்டிலே நடக்காது. இனிமே கோபியின் குடும்பம் இல்லாம நடக்காது. இதை நீங்களே கழட்டிவிடுங்கள்.''

நாகராஜன், கோபி, வசு மூவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

''எனக்கும் போடு,'' என்று லல்லி அடம் பிடித்தாள்.

''நீதான் சாப்பிட்டாச்சே!'' என்று குழந்தையை இழுத்தாள் தாயார். ''பாயசம் சாப்பிடலேயே!'' என்று அலறினுள் லல்லி.

''டம்ளர்லே தரேன், வா.''

''மாட்டேன்..... போ.. நான் கோபி அக்காகிட்டேதான் ஒக்காரப் போறேன்.''


வசு லல்லியைத் தன் அருகே இழுத்துக் கொண்டாள்.

சாப்பாடு ஆனதும் சீதா வசுவை அழைத்துக் கொண்டு, கோபியின் அறையைப் பார்க்க மாடியை நோக்கிச் சென்ருள்.

''மாடிப்படி ஜாக்கிரதை. மரப்பலகை அங்கங்கே ஒடிஞ்சிருக்கும். விரிஞ்சு கிடக்கும்,'' என்று அவள் எச்சரிக்க மெல்ல மெல்ல வசு ஏறினுள்.

டெரஸ்ஸை அடைந்ததும் சீதா, ''முன் பக்கம் தட்டு வீடு. பின் பக்கம் ஓட்டு வீடு. அதனுலே டெரஸ் குறுகலாகப் போய்விட்டது. இதிலே ஒரு அறையைக் கட்டி, நாற்பது ரூபாய் சம்பாதிக்கிருர் வீட்டுக்காரர். என்ன சாமர்த்தியம்!'' என்ருள்.

கோபியின் அறைக்குள் காலை வைத்தபோது விளக்கேற்றப் புருஷன் வீட்டுக்குள் பிரவேசிப்பதான பிரஸ



உன்னாடு
பொன்னாடு

ஒளவையாருக்கு, பால் தரும் ஆடு ஒன்று தேவைப்பட்டது. ஓர் ஊரில் நூற்றுக் கணக்கான ஆடுகளை வைத்துக் கொண்டு மூன்று செல்வர்கள் இருந்தார்கள். மூத்தவன் வாதவர் கோன்; நடுவலன் வத்தவர்கோன்; கடைசித் தம்பி யாதவர்கோன். மூவரும் லோபிகள்.

ஒளவையார் ''ஒரு பால் கறக்கும் ஆடு தருக'' என்று கேட்டதும் முதல்வன் ''அன்புள்ள ஒளவையாரே, பின்னே தருவேன்'' என்றான். அடுத்தவனிடம் நடந்தார்; ''நாளை தருவேன்,'' என்றான். மூன்றாமவனாகிய யாதவர் கோனிடம் கேட்டபோது ''அம்மா! கொடுப்பதற்கு இப்போது சந்தர்ப்பம் இல்லை,'' என்று கூறிவிட்டான்.

ஒளவையார் இவனுடைய மொழியைக் கேட்டு மகிழ்ந்து 'யாதவர்கோன் இல்லை இனிது,' என்று பாடினார்.

'நாளை பின்னை என்று என்னை நடக்கவைத்துக் காலை ஒடிக்காமல் இல்லை என்று இன்றே தீர்த்துக் கூறினானே. இவன் சொல்லே இனியது,' என்றார்.

பின்னர் ஒளவையார் சேரர் பெருமானிடம் போய்க் கேட்டார். சேரர் கோன், குறைந்த விலையுடைய ஆட்டைத் தருவது தன் பெருமைக்கு இழுக்கு என்று எண்ணி, ஆட்டையும் அதனுடன் பொன்னாலாகிய ஓராட்டையும் தந்தான். ''சேரனே! உன்னாடு பொன்னாடு!'' என்று கூறி மகிழ்ந்தார். 'உன் ஆடு, பொன் ஆடு' என்று பொருள். மற்றொரு பொருள் 'உன் நாடு பொன்நாடு' என்பது.

சிறப்பார் மணிமுடிசேர் சேரமான் தன்னைச் சுறப்பாடு கேட்கவே பொன்னாடொன்றீந்தான். இரப்பார் என்பெறினுங் கொள்வர்; கொடுப்பவர், தரமறிவர் தங்கொடையின் சீர். —ஒளவையார்.

உண்டாயிற்று வசுவுக்கு. அறையினுள் நின்ற அவள் சுற்று முற்றிலும் பார்த்தாள். எட்டு அடிச் சதுரத்தில் அறை துப்புரவாக இருந்தது. ஒரு மூலையில் ஒரு சின்னஞ்சிறு மேஜை. அதன்மேல் ஐந்தரை மணியைக் காட்டி நின்ற அலாரம் கடியாரம். நான்கைந்து புத்தகங்கள். அருகே சற்று உயரத்தில் ஜாதிக்காய்ப் பெட்டியில் செய்த ஒரு மூன்று தட்டு ஷெல்ப். மேல் தட்டில் ஆங்கிலப் புத்தகங்கள். நடுத்தட்டில் தமிழ். கீழ்த்தட்டில் சோப்பு, ஷேவிங் செட், பற்பசை எல்லாம். ஒரு மூலையில் மங்கிக் கிடக்கும் பூட்சுகள். அதன் அருகே சுவரோரமாக, ஒரு கித்தான் படுக்கை. உள்ளே ஒரு தலையணையும் ஒரு போர்வையும் இருப்பதை வசு கவனித்தாள்.

''கோபியே தினமும் பெருக்கி மெழுகுவார். வெங்கடாசலபதி படத்துக்கு விளக்கும் ஏற்றுவார். அந்தப் படத்தை உள்ளே வைத்திருக்கிறார். இந்த ஆணியில்தான் அது தொங்கும்,'' என்று ஒரு ஆணியைச் சுட்டிக் காட்டினாள் சீதா. ''இந்த ரூம்லே ஒரு விசேஷம் என்னன்னா காத்து வராது. மழை பெய்தா தண்ணியும் உள்ளே வரும். சமுத்திரக்கரையிலே வீடுன்னு பேரு. ஆனா ஒரு நாள்கூட கோபி தன் குறைகளைச் சொன்னதில்லை.''

திடீரென்று தன்னுள் ஒரு சுனை பிறந்து பீறிட்டு வெடிப்பதை வசு உணர்ந்தாள். அவளுடைய கோபி ஏழைதான். ஆனால் கௌரவமான கேவலமில்லாத ஒரு வசீகரமான ஏழ்மையை அனுபவித்தவன். இதுவரை உணர்ந்தறியாத ஒரு மதிப்பும் அபிமானமும் ஏன், இரக்கமும்கூட அவளுள் தோன்றின.

'பணக்காரன் பணத்தை வாரி இறைத்து வீட்டை அழகுபடுத்துகிறான். ஏழைகளால் குடிசைகளையே அழகாக வைத்துக் கொள்ள முடியும் என்பதற்கு இந்த ரூமே ஒரு உதாரணம்' என்று அவளுக்குத் தோன்றிற்று.

திரும்பினாள்.

''மாடிப்படி ஜாக்கிரதை,'' என்றாள் சீதா, மறுபடி.

''மரப் பலகை. ஒடிஞ்சு போயிருக்கும். விரிஞ்சு கிடக்கும்!''

என்று வசு சிரிக்க, சீதாவும் சிரித்தாள்.

கீழே பாகீரதி கோபியிடம் பேசிக்கொண்டிருந்தாள்.

''நீ கொடுத்து வைச்சிருக்கேடா. உனக்குப் பெண்டாட்டி அமோகமா அமைஞ்சிருக்கா. ஏழை பணக்காரர் என்கிற வித்தியாசமே இல்லேடா... எங்க சீதாவிடம் எவ்வளவு பிரியமா இருக்கான்னு நினைக்கறே... அந்த நெக்லஸ் முப்பதாயிரம் பெறும். அதைக் கழட்டித் தன் கையாலேயே சீதா கழுத்திலே போட்டாள். இன்னும் திருப்பிக்கூட வாங்கிக்கலே. அவளுடைய நல்ல குணத்தைப் புரிஞ்சி கொண்டு நன்றாக வைச்சுக்கணும்,'' என்றாள்.

''நெக்லஸை சீதா கழுத்திலே பார்த்தேன். ஆனா அது, இவள் போட்டதுன்னு தெரியாது.''

''ஊட்டிக்குப் போறோம், திரும்பி வந்தப்புறம் காரை அனுப்பறேன், எல்லாரும் சாப்பிட வரணும்னு கூப்பிட்டா. அவ மனசு நிறைஞ்ச மனசுடா கோபி, நிறைஞ்ச மனசு!''

கோபியின் மனம் பெருமையால் நெகிழ்ந்தது.

''ரூமை என்ன செய்யப் போறே?'' என்று கேட்டாள் பாகீரதி.

''இன்னிக்கே காலி பண்ணிட்டு வான்னு மாமா சொல்றார். இந்த மாசம் போகட்டும், அப்புறம் பார்க்கலாம்னு இருக்கேன்.''

பாகீரதி, சீதா, லல்லி, அவளுடைய தாயார் எல்லோரும் வாசல் வரை வந்து கோபியையும் வசுவையும் வழி அனுப்பினார்கள். வசு கொடுத்த அன்பளிப்பை லல்லி இன்னும் கையில் வைத்துக் கொண்டிருந்தாள். காரில் ஏறியதும், ''எல்லாருக்கும் டாடா...லல்லி, டாடா!'' என்றாள் வசு.

கார் மெரினாவில் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது.

''எனக்கு சைக்கிள்தான் விடத் தெரியும். கார் ஓட்டக் கத்துக்கணும்னு ரொம்ப நாளாவே ஒரு ஆசை. ஆனா அதுக்கு வாய்ப்பே கிடைக்கலே!'' என்றான் கோபி.

''எனக்கும் கார் ஓட்டக் கற்றுக் கொடுக்கணும்னு ஒரு ஆசை. இதுவரை வாய்ப்பே கிடைக்கலே.'' வசு கலகலவெனச் சிரித்தாள்.

''இப்போ ரெண்டு பேருக்குமே வாய்ப்புக் கிடைச்சிருக்கு. இல்லியா, வசு?''

''ஊட்டியிலிருந்து திரும்பி வந்தப்புறம் கற்றுக் கொள்ளலாம்.''

''நீ கத்துத் தர்றபோது எனக்கு என்ன பயம்? ரோடிலே போகிறவர்கள்தான் பயப்படணும்!''

''இப்ப நீங்க ஏன் பயந்து கதவோடு கதவா ஒட்டி உட்கார்ந்திருக்கிறீர்கள்? பக்கத்திலே வாருங்கள்,'' என்றாள் வசு.

''டச் பண்றத்துக்கு முன்னாலேயே அதிகாரம் பண்றியா? ஓகே,'' என்று நகர்ந்தான் கோபி.

அவர்களிடையே நிலவி இருந்த எரிச்சலும் புகைச்சலும் இருந்த இடம் தெரியாமல் போயின.

(தொடரும்)

*

பெட்ரோல் பங்க் அநியாயம்

ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு, என்னுடைய ஸ்கூட்டர் எத்தனை கிலோ மீட்டர் ஓடுகிறது என்று அறிவதற்காக, ஒவ்வொரு பெட்ரோல் பங்கிலும், ஒவ்வொரு முறை பெட்ரோல் நிரப்பிப் பார்த்தேன்.

ஒரு பங்கில் போட்டால், 32 கி.மீ, அடுத்ததில் 30 கி. மீ. வேறொன்றில் 35 கி.மீ. ஓடியது. எனக்கு ஒரு சந்தேகம்: சில பெட்ரோல் பங்குகளில் அளவில் ஏதோ கோல்மால் நடக்கிறது.

அவர்கள் போடும் லிட்டர் சரியான அளவுதான் என்பதைக் கண்டு கொள்வதற்கு ஏதாவது முறை இருக்கிறதா?

—எஸ். நம்பிராஜன்



நாளைய தினம்பற்றி இன்றே சிந்தனையா...

ஆம்! சிந்தித்து செயல்படுவீர்...

நாளை என்ன நடக்கும் என்று ஒருவரும் அறிவதில்லை! எனவே இன்றே திட்டமிட்டு சேமிக்கத் துவங்கி, உங்களது அவசர தேவைக்கு அத் தொகை உதவிட வகைசெய்யுங்கள்.

இத்தகைய சேமிப்புக்கென்றே அமைந்தது இந்தியன் பாங்கின் ரெக்கரிங் டெபாசிட் திட்டம். நீங்கள் விரும்பும் தொகையை உங்களது வசதிப்படியுள்ள காலத்துக்கு சேமிக்கலாம். மாதம் குறைந்த பட்சமாக ரூ. 5/- அல்லது அதன் மடங்கில் சேமிக்கலாம். உங்களால் இயன்றால் மாதம் ரூ. 500/- கூட சேமித்து பயனடையலாம். மாதம் ரூ. 100/- நீங்கள் சேமித்தால் 122 மாதங்கள் முடிந்தபின் உங்களுக்கு ரூ. 21,203/- பாங்க் அளிக்கும்.


இன்றே சேமிக்கத் துவங்குங்கள்
எம்மிடம் சேமியுங்கள்


இந்தியன் பாங்க்

(இந்திய அரசுக்கு முழுதும் சொந்தமானது)
தலைமை அலுவலகம்:
17 வடக்கு கடற்கரைச் சாலை, சென்னை-600 001

இந்தியாவெங்கிலும் உள்ள கிளைகள் மூலம்
உங்கள் நலனில் அக்கறை காட்டும் பாங்க்

மாதம் தோறும் டெபாசிட் தொகை ரூ.	கீழ்க்கண்ட தவணைகளுக்கு பிறகு திரும்பிப் பெறக்கூடிய தொகை										
	12 தவணை	24 தவணை	36 தவணை	48 தவணை	60 தவணை	72 தவணை	84 தவணை	96 தவணை	108 தவணை	120 தவணை	122 தவணை
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
50	626.50	1305.25	2073.00	2897.50	3799.50	4946.25	6097.75	7369.75	8775.00	10327.50	10601.50
100	1253.00	2610.50	4146.00	5795.00	7599.00	9892.50	12195.50	14739.50	17550.00	20655.00	21203.00





4

''நான் சிரஞ்சீவியாக இருப்பதற்குக் காரணமாக இந்த மாங்கல்யக் கயிற்றை உன் கழுத்தில் கட்டுகிறேன். ஓ, பாக்கியவதி, நீயும் நூறுண்டு காலம் ஜீவித்திரு.''

—திருநாண்பூட்டின் அர்த்தம்.

சென்ட்ரல் ஸ்டேஷன். நான்காவது பிளாட்பாரம். இரவு மணி ஏழரை.

ஜன நெரிசலை லட்சியம் செய்யாமல், ஃபாண்ட்டாவை ரசித்து ருசித்துக் குடித்துக் கொண்டிருந்தாள் வசு.

கோபி தன்னுடைய பாட்டிலைத் திருப்பிக் கொடுத்தாகி விட்டது.

''ஹாய் வசு!'' என்ற குரல் கேட்டது.

வசுவும் கோபியும் திரும்பிப் பார்த்தார்கள். ''ஹாய் நித்யா!'' என்று வசு தன் தோழியின் கையைப் பிடித்தாள். பிறகு, ''பாவம், நீ எதற்கு இவ்வளவு தூரம் வந்தே சென்ட் ஆஃப் கொடுக்க!'' என்றாள்.

கோபி நீட்டிய ஃபாண்ட்டாவை வாங்கிக் கொண்டே, ''உன் ஹனிமூனுக்கு செண்ட் ஆஃப் கொடுக்கிறதைவிட எனக்கு வேறு வேலை இல்லைன்னு நினைச்சியா?'' என்றாள் நித்யா.

''அப்போ உனக்கு இங்கே என்ன வேலை?''

''ஐ ஆம் ஆல்ஸோ டிராவலிங்.....வித் டிக்கட்!''

''எந்த ஊருக்கு? டில்லியா?

பி.வி.ஆர்

அதோ அந்தப் பிளாட்பாரத்தில் கி[illegible]ண்ட் டிரங்க் நிக்கறது..சீக்கிரம் போ!''

''இந்திரா காந்தியை அப்புறம் பார்த்துக்கறேன்.. நௌ நித்யா இஸ் கோயிங் டு பொள்ளாச்சி!'' சொல்லிவிட்டு, ஒரே மூச்சில் கூல் ட்ரிங்க்கை உறிஞ்சினுள்.

''மெட்ராஸ்லே பெண் பார்க்க வரமுடியாம உன்னைப் பொள்ளாச்சிக்கு இழுக்கிறுர்களா?''

''யெஸ். பொள்ளாச்சி ஸப்—ரிஜிஸ்ட்ரார் நல்லவர்.''

''கங்கிராஜுலேஷன்ஸ்,'' என்றுன் கோபி.

''அவருக்கு வயசு என்ன தெரியுமா? ஒன்லி ஃபிஃப்டி டு..''

''ஏண்டி, அதுக்குப் பொள்ளாச்சிக்குப் போவானேன்! மெட்ராஸ்லே கிழவர்கள் நிறையப் பேர் இருக்கிறுர்களே!''

காலி பாட்டிலைப் பார்த்துக்கொண்டே நித்யா வசுவைப் பார்த்தாள். அவளுடைய பாட்டி இறப்பதற்கு முன்னுல் ஒரு வீட்டையும் நிலத்தையும் அவள் பெயருக்கு எழுதி வைத்திருந்தாள். அது விஷயமாக வக்கீலையும், ரிஜிஸ்திராரையும் பார்க்கத்தான் நித்யா இப்போது பொள்ளாச்சி செல்லுகிறுள்.

விஷயத்தைச் சொன்னுள் நித்யா.

''ஐ ஆம் வெரி ஹாப்பி,'' என்றுள் வசு.

''ஏண்டி வசு, என் பாட்டி உனக்கு என்ன துரோகம் பண்ணினுள்?''

''உனக்குச் சொத்து வந்தது பற்றி ஹாப்பின்னேன்,'' என்ற வசு, ''அது சரி, நீயும் எங்களோடு எங்க கம்பார்ட்மெண்டில் வாயேன்,'' என்றுள்.

''உன் கோபியின் முகத்





> ரகசியத்தைக் காப்பாற்றுங்கள்—அது உங்கள் அடிமை. அதை வெளியிடுங்கள்—அது உங்கள் எஜமானன்.
>
> வில் ஹென்றி

தைப் பாரு..பேய் அடிச்சமாதிரி ஆயிட்டுது..ஸார், கோபி ஸார்.. பயப்படாதீர்கள்..இவ கூப்பிட்டாளேன்னு நான் உங்க பெட்டிக்குள்ளே வந்து நந்தி மாதிரி நிற்க மாட்டேன். நீங்கள் ஹனிமூனுக்குப் போகிறீர்கள்!... வசு, வாயேன், என் கம்பார்ட்மெண்ட் வரை.."

"ஓகே!" என்ற வசு, "இதோ வந்துவிடுகிறேன். நீங்கள் உட்கார்ந்து கொள்ளுங்கள்!," என்று கோபியிடம் கூறிவிட்டு நகர்ந்தாள்.

"எப்படி இருக்கார்?"

"ஓகே!"

"ரொம்பப் பேசமாட்டார் போலிருக்கு.. பூனை மாதிரி இருக்கார்."

"பாய்ஞ்சா புலியாவும் இருக்கலாம் இல்லையா?"

"உன்மேலே தானே பாய்வார்?"

"பின்னே? உன்மேலே பாய நான் விடுவேனு?"

"ஊட்டியிலே எத்தனை நாள்?"

"ஒன் வீக். பொள்ளாச்சியிலே எத்தனை நாள்?"

"தெரியலை..ஒரு வாரமாவது ஆகும். நீயும் நானும் இல்லாவிட்டால் மெட்ராஸ் என்னவாகும்?"

"மழை பெய்யும்."

"ஏதோ நம்மால் ஆன காரியம். ஊட்டியிலே என்ன செய்யப் போறே?"

"உனக்கும் கல்யாணமாகும், அப்போ தெரியும்."

"நான் விரதம் இருப்பேன்."

"உன் விரதமும் என் விருந்தும் ஒண்ணுதான்..சரி சரி, இன்னமே போர் அடிச்சா, ரெயில் ஊதாமலே புறப்பட்டுப் போயிடும். நான் போறேன்."

"ஏன், ரெயில் கிளம்பறத்துக்கு முன்னுலேயே பசியா..உம், போ. அவர் காத்திருப்பார்."

கோபி ஏஸி பெட்டியில் உட்கார்ந்தான். ஏதேதோ நினைவுகள்.



என்ன இருந்தாலும்
ஸீனியர். தோஷமில்லை.

ஏர் கண்டிஷனில் முதன் முதலாகப் பிரயாணம் செய்யப் போகிறோம் என்ற எண்ணம் அவன் மனத்தில் எந்தவிதமான புல்லரிப்பையும் ஏற்படுத்தவில்லை. காலில் செருப்பில்லாமல் வெய்யிலின் இம்சையை உணராத அவன் இப்போது இந்தக் குளிரின் சுகத்தையும் ரசிக்கவில்லை.



—படம் : உங்க வீட்டுக் கல்யாணம்

சோ—மனோரமா

நித்யா பொள்ளாச்சி என்றதும் அவனுக்குத் தன் தாய் ஞாபகம் வந்துவிட்டது.

கோபி, அம்மாவின் முகம் மனத்தில் பதிவதற்கு முன்னாலேயே அவளை இழந்தவன்.

பொள்ளாச்சியில் தங்கம்மாள் ஒரு காலத்தில் சகல வசதிகளுடன் இருந்தவள். ஆனால் அவன் பிறந்தபோது அவளும், அவளுக்கு அவனை அளித்த அவனுடைய அப்பாவும் அன்றாட ஜீவனத்துக்கே கஷ்டப்பட்டார்கள். வசதிகள் நிறைய இருந்தவள் எப்படி எல்லா வசதிகளையும் இழந்தாள் என்று அறிவு தெரிந்த நாட்களில் கோபி அடிக்கடி தன்னையே கேட்டுக் கொள்ளுவான். ஆனால் யார் பதில் சொல்லுவார்கள்? சித்திக்குத் தெரிய நியாயமிருந்தது. ஆனால் அவள் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று மழுப்பி வந்தாள். சித்தி மூலமாகத் தெரிந்த கதையெல்லாம், அவன் பிறந்த ஆறு மாதங்களுக்கெல்லாம், கடன் உபாதை தாள முடியாமல் தகப்பனார் வடக்கே ஓடியதும் அதன் பிறகு ஒரு வருடத்துக்குப் பிறகு எலும்புருக்கி வியாதியில் அம்மா போனதும்தான். அதன் பின்னர், பல வருடங்களுக்குப் பின், தகப்பனாரும் ராஜ்கோட்டில் இறந்துபோனார் என்று தெரிய வந்தது.


அம்மாவின் நிலபுலன்களும் வீடும் கடனில் கரைந்து போய்விட்டதாகச் சித்தி சொல்லிக் கேட்டிருந்த கோபி, சொத்தின் பாரம் தனக்கு இல்லை என்ற ஓர் ஏழையின் திருப்தியுடன் வளர்ந்து வந்தான். திருச்சியில் ஈஆர் ஹைஸ்கூலிலும், அதன் பிறகு நேஷனல் காலேஜிலும் படித்த அவன் சென்னைக்கு வேலை தேடிப் புறப்படவும், சித்தி கான்பூரில் இருக்கும் தன் ஒரே பெண்ணுடன் கடைசி நாட்களைக் கழிக்க ரெயிலேறவும் சரியாக இருந்தது.

எட்டு வருடங்களுக்கு முன்னால், பத்தொன்பதாவது வயதில் சென்னை எழும்பூரில் இறங்கிய அவனுக்கு அதிருஷ்டவசமாக மூன்றாவது நாளே, ஒரு பெரிய துணிக்கடையில் பில் எழுதும் வேலை கிடைத்தது. முதல் வகுப்பில் பி.ஏ.பாஸ் செய்தது இந்தப் பில் எழுதும் வேலைக்குத்தானா என்று அவன் அலுத்துக் கொள்ளவில்லை. நியாயமான வழியில் கிடைத்திருக்கிற வேலையை அவன் ஒழுங்காகச் செய்தால் இரண்டு வேளை வயிறாரச் சாப்பிடலாமே?

மூன்று மாதங்களுக்குப் பிறகு நாகராஜனுடைய பரிச்சயம் ஏற்பட்டது.

இருவரும் திருவல்லிக்கேணியில் ஒரே ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சரியாக எட்டரை மணிக்கு இருவரும் சொல்லி வைத்துக் கொண்டாற்போல சந்திப்பார்கள். சந்திப்பு, பேச்சுக்கு ஒரு ஆதாரமாக இருக்க, பேச்சு இருவர் மனத்துக்கும் ஒரு பாலமாக அமைந்தது. அனாதையான கோபியின் மீது நாகராஜனுக்கு ஒரு தனி அன்பும் அபிமானமும் உண்டாயின.

"உனக்கு எவ்வளவு கொடுக்கிறார்கள்?" என்று நாகராஜன் ஒருநாள் கேட்டான்.


தினசரி உங்கள்
உடலுக்குத் தேவை
இந்த 23 அத்தியாவசிய
ஊட்டச் சத்துக்கள்.
பருகுவீர்
காம்ப்ளான்
போஷாக்குப்
பற்றாக்குறையிலிருந்து
உங்களைப்
பாதுகாக்கவே

காம்ப்ளான்
இந்த 23-ஐயும் தருகிறது.

புரதம்
திசுக்களையும் செல்களையும்
உருவாக்க, பாதுகாக்க
லிப்பிடுகள்
பொங்கிப் பெருகும் சக்திக்கே
கார்போஹைடிரேட்
சக்தி மிகுந்த உடல் வலிமைக்கே
கால்ஷியம்
ஆரோக்கியமான பற்கள்,
எலும்புகளுக்கு
பாஸ்பரஸ்
உடல் சுரப்பிகள்,
பற்கள் எலும்புகளுக்கு
சோடியம்
இரத்தம் நன்முறையில் செயலாற்ற
குளோரைடு (Cl வடிவில்)
தசை இயக்கத்திற்கு,
பிடிப்புகளைத் தவிர்க்கும்.
பொட்டாஷியம்
மனத் தளர்ச்சி,
தசை அயர்ச்சிக்கெதிராகப் போராட
இரும்புச் சத்து
ஆரோக்கியமான ரத்தத்திற்கே
அயோடின்
தைராய்டு சுரப்பி தரமாக இயங்க
வைட்டமின் ஏ
ஆரோக்கியமான
கண்களுக்கு
வைட்டமின் பி1
வளர்ச்சி,
உறுதியான நரம்புகள்,
'பெரி-பெரி' நோய்
பீடிக்காதிருக்க



ரிபோஃப்ளேவின்
ஆரோக்கியமான வாய்,
நாக்கு, உதடுகள்,
கண்களுக்கு
நிகோடினமைடு
ஒளிவீசும் ஆரோக்கியமான
சருமத்திற்கே
கால்ஷியம் பென்டோதெனேட்
நரம்புகளையும் தசைகளையும்
வலுப்படுத்த
கோலின்
கல்லீரல் ஆரோக்கியமாக இயங்க
பைரிடாக்ஸின் (B6)
தசைகளை இணைப்பாற்ற
வைட்டமின் பி12
இரத்த சோகை பீடிக்காதிருக்க
ஃபாலிக் அமிலம்
புதிய இரத்த செல்களை உருவாக்க
வைட்டமின் ஸி
நோயெதிர்ப்புச் சக்தியைப் பெருக்கி,
ஸ்கர்வி நோய் வராதிருக்க
வைட்டமின் டி
உறுதியான பற்கள்,
எலும்புகளுக்கு
வைட்டமின் ஈ
கரு வளர்ச்சிக்கு
வைட்டமின் கே
இரத்தம் இயற்கையான
முறையில் உறைய உதவும்
இத்ர சிறு சிறு பொருட்கள்
வைட்டமின்களை உடல்
உறிஞ்சிக்கொள்ளவும், சுரப்பிகள்
நன்கு இயங்கவும் உதவும்.

பால்
சேர்க்கா
மலேயே
பருகலாம்!

காம்ப்ளான் வளரும் குழந்தைகள், சுறுசுறுப்பான இல்லத்தரசிகள்,
பரபரப்புடன் இயங்கும் அலுவலாளர்கள், கருத்தரித்த தாய்மார்கள்,
பாலூட்டும் அன்னையர், வயது முதிர்ந்தோர்,
பிணியாறுவோர் முதலியவர்களுக்கு சாலச் சிறந்தது.

பாலையும் விட இன்னும்
அதிகமான வைட்டமின்கள், புரதம்,
கால்ஷியம், இரும்புச் சத்து மற்றும்
இதர ஊட்டச் சத்துக்களை
காம்ப்ளான் அளிக்கிறது.

ஒப்பிட்டுப் பாருங்கள்:
ஒரு சேர்வை காம்ப்ளான் (33 கிராம்),
ஒரு கிளாஸ் பால் (200 மி.லி.)



உலகெங்கும்
உபயோகிக்கப்
படுவது—
கிளாக்ஸோ
ஆராய்ச்சியில்
உருவானது

CMGC-6-183 TM

"நூறு ரூபாய்..சாயங்காலம் ஒரு கப் காப்பியும் கிடைக்கும்."

"பி.ஏ.பாஸ் செய்துவிட்டு இந்த வேலையில் முடங்கிக் கிடப்பானேன்?"

"வேறு என்ன செய்வது? எத்தனையோ கம்பெனிகளுக்கு மனுப் போட்டிருக்கிறேன்."

"எங்க கம்பெனியில் ஒரு லெட்ஜர் கிளார்க் உத்தியோகம் காலியாகப் போகிறது. நான் ஜெனரல் மானேஜரிடம் ஸ்டெனோவாக இருக்கிறேன்..ஒரு அப்ளிகேஷனையும் எடுத்துக் கொண்டு நாளைக்கு வா."

"சரி."

"இருநூற்று எழுபது ரூபாய் கிடைக்கும்."

"ரொம்ப தாங்க்ஸ்."

இப்படிக் கிடைத்த குமாஸ்தா வேலையில் முன்னேறி, கோபி எழுநூற்று எண்பது ரூபாய் வாங்கும் சூபரிண்டெண்டாக உயர்ந்து விட்டான்.

இரண்டு மாதங்களுக்கு முன்னால், திடீரென்று சிவராமன் அவனைத் தேடிக்கொண்டு வந்தார். சிவராமனை ஜெனரல் மானேஜரே அழைத்துக் கொண்டு வந்தார்.

அன்று மாலை சிவராமனை கோபி அவருடைய கம்பெனியில் சந்தித்தான். தங்கம்மாள் கொடுத்த கடனை வைத்துத்தான் அவர் பிஸினஸ் ஆரம்பித்ததாகக் கூறினார்.

"கோபி..நான் எத்தனை வருஷமாக உன்னைத் தேடித் தேடி அலைந்தேன் தெரியுமா?" என்றார்.

அதன் பின் பலமுறை இருவரும் சந்தித்துக் கொண்டார்கள். தன் தாயார் செய்த உதவியால் சிவராமன் இன்று ஒரு பெரிய தொழிலதிபராக இருக்கிறார் என்று பெருமைப்பட்டான் கோபி.

ஒரு நாள், அவர் அவனைத் தம் வீட்டுக்குச் சாப்பிட அழைத்தார்.

மனைவி ராஜலட்சுமியையும் பெண் வசுவையும் அவனுக்கு அறிமுகப் படுத்தினார்.

வசுவினுடைய உருவம், பளபளக்கும் மேனி, சிரித்து விளையாடும் கண்கள், உடலில் துள்ளித் ததும்பும் பெண்மை எல்லாம் ஒரு கணம் கோபியை மயங்க வைத்தன.

"எந்தக் காலேஜில் படித்தாய்?" என்றான்.

"எத்திராஜ். தென் லா."

"ஓ! டபிள் கிராஜுவேட்!"

"யெஸ். . ஹௌ அபவுட் யூ?" என்று கேட்டாள் வசு.

"நேஷனல் காலேஜ், ட்ரிச்சி. பி. ஏ.."

"எகனமிக்ஸ்?"

"கரெக்ட்."

சாப்பாட்டு மேஜையில் அவள் சாப்பிட்டுக் கொண்டே அனுயாசமாகப் பேசினாள். ஸ்பூன் அவளுடைய விரல்கள் இழுத்த இழுப்புக்கு வளைந்தது. இதெல்லாம் பணம் கொடுக்கும் பயிற்சி என நினைத்த கோபி திணறினான். கறியைச் சாம்பாருடன் இணைத்து ஸ்பூனால் சாப்பிட முடியவில்லை.

"நான் என் வழக்கப்படி சாப்பிடப் போகிறேன்!" என்ற அவன் கையால் பிசைய ஆரம்பித்தான்.

"தட் இஸ் குட்!" என்ற வசுதா "யார் யாருக்கு என்ன பழக்கமோ, அதைத்தான் அவர்கள் செய்ய வேண்டும். வாட் டு யூ ஸே, டாடி?" என்றாள்.

"யூ ஆர் நெவர் ராங், வசு!"



"புது முகமாக நான் சினிமா உலகில் நுழைந்த போது எனக்கு மாதம் 10 லவ் லெட்டர் வரும். எனக்குக் கல்யாணம் ஆன பிறகு வாரம் 100 லெட்டர் வந்தது. நாலு குழந்தை பிறந்த பிறகு டெய்லி 1000 காதல் கடுதாசு வந்திட்டிருக்கு."

அன்று, இந்த வசுதா தன்னுடைய எதிர்கால மனைவி என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

ஏ. ஸி. கோச்சில் உட்கார்ந்தபடி, எதிர்காலத்தைப் பற்றிய யோசனையில் அவன் ஆழ்ந்தான்.

பங்களா வாழ்க்கையைவிட்டு வசுதா அவனுடன் ஒரு சிறு வீட்டில் இருக்க வேண்டியிருக்கும். முதலில் சிரமமாக இருந்தாலும் சமாளித்துக் கொள்ளுவாள். ஒரு சிறு நல்ல வீடு கிடைக்காமல் போகாது. அதுவரை அறையை வைத்துக் கொள்ளலாம். சிவராமன் ஆட்சேபிப்பார். ஆனால் தொடர்ந்து மாமனார் வீட்டில் இருக்கத் தான் விரும்பவில்லை என்பதை உணர்த்தினால் அவர் புரிந்துகொள்ளுவார்.

ரயில் திடீரென நகர்வதை உணர்ந்த கோபி திடுக்கிட்டுப் பார்த்தான். வசு, ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து அவனையே பார்த்துப் புன்முறுவலித்துக் கொண்டிருந்தாள்.

ஊட்டிக்கு வந்த வசுவும் கோபியும் 'தமிழக'த்தில் தங்கினார்கள். வசதி நிறைந்த அறை. சுற்றிலும் பூச்செடிகள். யூகலிப்டஸ் மரங்களின் மணம். குளிர்ப் போர்வையில் உறைந்த ஊட்டியில் அந்த முன்னாள் மகாராஜாவின் அரண்மனையில் இளவரசி வசுவுடன் வந்திருப்பதான பிரமை கோபியின் மனத்துள் எழுந்தது.

தொடபெட்டாவுக்கு சிகரத்திற்கு ஒரு நாள் சென்றார்கள்.

"இதோ, இந்த டைரக்ஷனில்தான் மைசூர் இருக்கிறது. இப்படித் திரும்பிப் பார்த்தால் கோயமுத்தூர்..அதோ, அப்படிப் பார்த்தால்..."

"என்னால் எதையுமே பார்க்க முடியவில்லை, வசு.."

"ரொம்பக் குளிர்றதா!"

"அபத்தமா ஒரு கேள்வியைக் கேட்கிறாயே..உதடு தாளம் போடறது."

வசு சிரித்தாள். பிறகு, அவனுடைய கையை எடுத்துத் தன் தோளின் மேல் போட்டுக் கொண்டாள். அவனது கை அவளுடைய வலது கன்னத்துக்குப் போய் அங்கேயே நின்றது.

பட்டுப் புடவையை இடுப்பு வரை மறைத்த இளம் நீலநிற முழுக்கை ஸ்வெட்டர். நிம்மதியாகத் தூங்கும் குழந்தையைப் போல, அவளுடைய மார்பகம் ஸ்வெட்டரினுள் அடங்கி ஒடுங்கி அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய தலையைச் சுற்றிக் கட்டியிருந்த க்ரீம் நிற மப்ளர் நெற்றிக் குங்குமத்தின் சிவப்பை எடுத்து வீசியது.

பரிசு



யாருக்கு?

திருச்சியில் சென்ற ஜனவரி மாதம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிரதம சங்கங்களின் 12வது மாநில மாநாடு நடைபெற்றது. அதையொட்டி, சிறந்த முறையில் பணியாற்றி வரும் சேலம் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தைப் பாராட்டி, மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. கஸ்தூரிப் பிள்ளை அவர்களிடம் அமைச்சர் க. ராசாராம் அவர்கள் பலத்த கரகோஷத்திற்கிடையே கோப்பையைப் பரிசாக வழங்கினார்.

கரகோஷத்திற்குக் காரணம்: மகனே தந்தைக்குப் பரிசு வழங்கினார் என்பதுதான்.

—சி. மு. பாலு

"வந்து மூணுநாள் ஆச்சு. ஆனா நினைச்சபடி முதுமலைக்குப் போக முடியலே," என்றாள் அவள்.

"லேக்கிலே சுற்றியாச்சு. கூனூரிலே ஸிம்ஸ் பார்க் பார்த்தாச்சு. தினம் தினம் இரண்டு வேளை பொட்டானிகல் கார்டன்ஸ்லே உட்கார்ந்து தீர்த்தாச்சு...எஞ்சாய் பண்ணினோமா இல்லியா!"

"இல்லேன்னு யார் சொன்னது? முதுமலையிலே யானைகளைப் பார்க்கலாம். அதிருஷ்டம் இருந்தால் புலிகளைக்கூடப் பார்க்கலாம்... அப்பா

உங்கள் விருப்பம்

சென்ற மாதம் சென்னையில் ஓம் விக்னேஸ்வரா கல்சுரல் அகடமி ஆதரவில் ஒரு மெல்லிசை நிகழ்ச்சி நடத்தினார்கள். முன்கூட்டியே உறுப்பினர்களுக்கு ஒரு கூப்பனை அனுப்பி அதில் அவர்கள் விரும்பும் ஐந்து இந்திப் பாடல்களை வரிசைப் படுத்தி எழுதி யனுப்புமாறு கூறியிருந்தனர். ரசிகர்கள் அதிகம் விரும்பிய பாடல் ''பாம் பே டு கோவா'' படத்தில் வரும் 'தேகாணு' என்ற பாடல்தான்.

—ஜே. பாலாஜி

ஸ்பெஷலா ஃபாரெஸ்ட் ஆபீஸருக்கு எழுதியிருக்கிறார்.''

''நாளைக்குப் போவோம்,''

''சாரிங் கிராஸிலே சூடா காபி சாப்பிட்டுவிட்டுத் தமிழகத்துக்கு நடந்தே போகலாம்.''

''இரண்டு மைலுக்கு மேலே இருக்கும் வசு..''

''ஊட்டியிலே நடந்து கொண்டே இருக்கணும், இல்லாமப் போனா குளிர் கொன்னுடும்.''

''அதாவது, நடந்தாத்தான் உடம்பிலே ஒரு கதகதப்பு ஏற்படும் என்று சொல்றே!''

''கரெக்ட்.''

''நீயும் நானும் இப்படியே இருந்தாலே குளிர் போயிடுமே.'' அவளை அணைத்துக் கொண்டான்.

''இதுக்கு முன்னாடி நீங்கள் ஊட்டிக்கே வந்ததில்லையா?''

''ஹனிமூனுக்குத்தான் ஊட்டியைப் பார்க்க வருவேன்னு ஒரு சங்கற்பம்...'' என்றான் கோபி. பிறகு, ''நீ எத்தனை தடவை வந்திருக்கிறாய்?'' என்று கேட்டான்.

''வருஷத்துக்கு ஒரு தடவை.''

''அப்போ இருபத்துமூணு.''

''இல்லை, பதினெட்டு.''

''ஏன் வயசைக் குறைக்கிறே?''

''அஞ்சு வருஷம் மிஸ் ஆயிட்டுது.''

''இப்போ மிஸஸ் ஆயிருக்கே! இனிமே மிஸ் ஆக முடியாது.''

''கொஞ்சம் இருங்கள். உங்க ஜோக்குக்கு சிரிக்க முடியுமான்னு ட்ரை பண்ணிப் பார்க்கிறேன்.''

''நான் அதுவரையில் தூங்கட்டுமா?''

''தலையணை இல்லாமத்தான் தூங்கணும். இப்போ என் மடியிலே உங்க தலை பட்டா, பட்டுப் புடவையெல்லாம் எண்ணெயாகிவிடும்.''

''அப்போ, தமிழகத்துக்குப் போய் விடுவோம்..அங்கே புடவையை மாற்றிக் கொள்ளலாம்.''

''என்ன அவசரம், மெதுவாகப் போவோம்.''

''மணியைப் பார்..''

''நாலு.''

''அதுக்குள்ளே இருட்டற மாதிரி இருக்கு.''

''நான் சூரியனை நிறுத்தறேன்.''

''அதை நளாயினி செய்தாச்சு..முடியுமானா, குளிரை நிறுத்து.''

''குளிரை நிறுத்த முடியாது. வேணும்னா உட்கார வைக்கிறேன்.''

தமிழகத்தை அடைந்தபோது மணி ஐந்தரை.

அறையைத் திறந்ததுமே, ஒரு கடிதம் கீழே கிடப்பதைக் கண்டாள் வசு. அதை எடுக்க அவள் குனிந்தபோது, ''வசு, கடிதத்தை அப்புறம் படிக்கலாம்...'' என்று முணுமுணுத்துக் கொண்டே கோபி அவளை இழுத்தான். கட்டில் வெகு தூரத்தில் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

''கொஞ்சம் இருங்கள்...'' குனிந்து கடிதத்தை எடுத்த வசு, பிரித்தாள்.

படித்தாள்.

மீண்டும் ஒரு தடவை படித்தாள்.

''யார் கடிதம்?''

''நித்யா.... பொள்ளாச்சியிலிருந்து எழுதியிருக்கிறாள்..''

''என்னவாம்?''

அவள் பதில் சொல்லவில்லை.

(தொடரும்)

ஊஞ்சல்

5

விவாகத்தில் ஊஞ் சல் ஒரு விசேஷ நிகழ்ச்சி. லட்சுமியும் மகாவிஷ்ணுவும், பார்வதியும் ஈசுவரனும் இப்படி ஊஞ்சல் ஆடியதாகப் பாடி, அவர்களைத் தம்பதி நினைவில் கொள்ளவேண்டும்.

ஊஞ்சலின் இன்னொரு தத்துவம்:

மேலே இருக்கும் தெய்வத்தை விட்டு பூமிக்கு இறங்கி இருக்கிறோம் என்பதைத் தொங்கும் சங்கிலிகள் காட்டுகின்றன. ஊஞ்சல் முன்னும் பின்னும் செல்வது, நமது வாழ்க்கை அலைபோல சஞ்சலமானது என்பதை உணர்த்துகிறது.

ஊஞ்சல் அசைவற்று நிற்கிறது. அதைப்போல ஸ்திரமான ஒரு லட்சியத்தைத் தம்பதி பின்பற்ற வேண்டும்.

—சம்ஸ்காரங்களிலிருந்து.





இரட்டைக் கட்டிலில் சுவர் ஓரமாக ஒடுங்கிப் படுத்திருக்கும் வசுவை மங்கிய விளக்கின் ஒளியில் பார்த்த கோபியின் எரிச்சலும் ஆத்திரமும் இன்னும் அடங்கவில்லை. . .அன்று மாலை தொட்டபெட்டாவிலிருந்து தமிழகத்துக்குத் திரும்பியதும் அவளுக்கு வந்த கடிதம் அவளை வெகுவாக மாற்றி விட்டது. அது என்ன கடிதம், யாரிடமிருந்து வந்திருக்கிறது என்றுகூட அவள் முதலில் சொல்லவில்லை. அவன் கேட்ட கேள்விக்கு, 'நித்யா எழுதியிருக்கிறாள்,' என்று சொன்னாளே தவிர, வேறு ஒன்றும் பேசவில்லை.

அதன் பிறகு அவள் எதிலும் ஒரு சுவாரசியத்தைக் காட்டவில்லை. கடந்த மூன்று நாட்களாகச் சிரித்துக் கும்மாளமிட்டு, சப்பாத்தியை ருசித்துச் சாப்பிட்டு, பாலை உறிஞ்சிக் குடித்த அவள் இன்று ஒரு யந்திரமாக நடந்து கொண்டாள். தொட்டபெட்டாவிலிருந்து திரும்பியபோது அவளுக்கு இருந்த பரபரப்பும் ஆர்வமும் திடீரென்று மறைந்து விட்டன.. அவனுடைய ஆண்மையின் அவசரத்தில் அவன் அவளுடைய கைகளைப் பற்றிய




போது அவள் தன்னை விடுவித்துக் கொண்டாள். அவளுடைய பிணக்கை அவனுல் மன்னிக்க முடியவில்லை. ஆர்வத்தோடு அவன் காத்திருந்தான். அவள் உதாசினம் செய்தாள். அதுவே ஏமாற்றத்தையும் அதைத் தொடர்ந்து எரிச்சலையும் ஏற்படுத்தியது.

அவள் முதலில் படுத்துக் கொண்டாள். அவன் விளக்கை அணைத்துவிட்டுக் கட்டிலுக்கு வந்த போது, அவள் சுவரைப் பார்த்தவளாய்க் கிடந்தாள். முந்தின மூன்று இரவுகள் இப்படியா கழிந்தன?

இப்போது அவன் தன் எரிச்சலையும் ஆத்திரத்தையும் மறந்து அவளை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று யோசித்தான். தானுகக் கனியாததைத் தடி கொண்டு பழுக்க வைக்க முடியாது என்று அவனுக்குத் தெரியும். இருந்தாலும், முயற்சி செய்தான்.

''வசு. .''

''உம்.. .''

''ஏன் தள்ளிப் படுத்துக் கொண்டிருக்கிருய்?''

''தலைவலி.''

''திடீர்னு வந்துவிட்டதா?''

''ஆமாம்.''

''நான் நம்பணுமா?''

''உங்க இஷ்டம்.''

''வசு!''

''உம்.''

''நாம் எவ்வளவு ஆர்வமா அவசரமா வந்தோம்?''

''எனக்கு இப்போ தூக்கம் வருகிறது.''

''தலைவலியில் தூக்கம் வருமா, வசு?''

''தூக்கத்தில் தலைவலி போய்விடும்.''

''அப்படியா?''

''ஆமாம். குட்நைட்.''

மறுநாள் காலையில் கோபி எழுந்தபோது மணி ஆறு. வசு இன்னும் தூங்கிக் கொண்டிருந்தாள். முந்தின இரவின் ஏமாற்றம் இன்னும் அவனைக் குத்திக் குத்திக் கொண்டிருந்தது.

அவன் பல்லைத் தேய்த்து விட்டு மெதுவாகக் கதவைத் திறந்து வெளியே வந்தான். தமிழகத்தைச் சுற்றியுள்ள மரங்களையும், செடிகளையும் பனிப் படலம் ஒரு போர்வையாக உரு எடுத்து மூடியிருந்தது. முகத்தைக் குளிர் ஊசி ஊசியாகக் குத்தித் தாக்கியது. ஆனால் அவனுடைய கொதிக்கும் மனத்தைக் குளிர் குத்தவில்லை.

மீண்டும் அறைக்குள் பிரவேசிக்க விரும்பாமல், அவன் மாடிப்படி வழியாக இறங்கிக் கீழே வெராந்தாவுக்கு வந்தான். அரசாங்க ஜீப்புகளும் கார்களும் பனியில் ஒடுங்கிக் கிடந்தன. பால் சப்ளை பண்ணுகிறவன் சைக்கிளில் வந்து இறங்கினான். அவனுடைய கோலத்தையும் அவதியையும் மனத்துள் எண்ணிக் கொண்டே மெதுவாக நந்தவனத்தில் நடக்கலானான்.

நந்தவனத்தின் ரோஜாக்களும், அங்கங்கே ஓங்கி வளர்ந்திருந்த யூகப்லிடஸ் மரங்களும் கோபியின் கண்களுக்கு அழகாகத் தோன்றவில்லை.

ஆண்மை இழந்தவனைச் சூரியன் தோன்றினான். அங்கங்கே பனிப் படலம் சற்றே விலகினாலும் போர்வை இன்னும் கலையவில்லை. மேட்டுப் பாதையில் வெகுநேரம் நடந்த அவனுக்குத் திடீரென்று கால் வலிப்பதாகத் தோன்றவே, தமிழகத்தை நோக்கித் திரும்பினான்.

அறை வாயிலில் வசு நின்று கொண்டிருந்தாள். கோபி வந்ததும், "எங்கே போயிருந்தீர்கள்?" என்று கேட்டாள். அவள் 'மூட்' கொஞ்சம் மாறியிருந்தது.

"வாக்கிங்."

"என்னையும் எழுப்பியிருக்கக் கூடாதா?"

"நீ தலைவலியோடு தூங்கிக் கொண்டிருந்தாய்."

6-2-'75 இதழில் 'எண்கள்' துணுக்கில் உள்ளது போல் ஏழெட்டில் (ஐம்பத்தாறு) மரணம் அடைய வேண்டும் என்பது பொருந்தவில்லைதான். அது இப்படி இருந்திருக்க வேண்டும்!

ஆறெட்டில் சேரா புகழ், ஏழெட்டில் பெறுத ஓய்வு, எண்ணெட்டில் வராத சாவு.

—கோவை இளஞ்சேரன்

ஆறெட்டில் செய்யாத தர்மம், ஏழெட்டில் செய்யாத தவம், எட்டெட்டில் போகாத உயிர், என்றென்றும் துன்பம்தானே! —இதுவே சரியான பாட்டு.

—சு. வீரராகவன், கோவை-13

"ஏழெட்டில் ஒப்படைக்காத பொறுப்பும், எட்டெட்டில் இறவாத இறப்பும் வீணே."

—எஸ். ஆர். பாலகிருஷ்ணன்
கருங்கல்பாளையம்

கீழ்க்கண்ட அர்த்தம் பொருத்தமாக இல்லையா?

ஓரெட்டு —	ஒன்று எட்டு	18
ஈரெட்டு —	இரண்டு எட்டு	28
மூவெட்டு—	மூன்று எட்டு	38
நாலெட்டு-	நான்கு எட்டு	48
ஐயெட்டு —	ஐந்து எட்டு	58
ஆறெட்டு—	ஆறு எட்டு	68
ஏழெட்டு —	ஏழு எட்டு	7[illegible]

பதினெட்டு வயதுக்கு மேல் ஆட்டமும், 28 வயதுக்கு மேல் கல்வியும், 38 வயதுக்கு மேல் திருமணமும், 48 வயதுக்கு மேல் குழந்தை பெறுவதும், 58 வயதுக்கு மேல் பொருள் தேடுவதும், 68 வயதுக்கு மேல் நாடுகளைச் சுற்றுவதும் பயனற்றவை. அவ்வாறே 78 வயதுக்கு மேல் வாழ்வதும் இப் பஞ்ச காலத்தில் கடினமல்லவா?

—ஜெசிந்தா மரியசிங்கம்,
கோயமுத்தூர்-9

ஓரெட்டில் ஆடாத ஆட்டமும், ஈரெட்டில் கற்காத கல்வியும், மூவெட்டில் நடவாத திருமணமும், நாலெட்டில் பெருத பிள்ளையும், ஐயெட்டில் தேடாத பொருளும், ஆறெட்டில் சுற்ருத நாடும், ஏழெட்டில் பண்ணுத தியானமும், எட்டெட்டில் அடையாத ஓய்வும், ஒன்பதெட்டில் சாகாத சாவும் பயனற்றவைகளாகும்.

—ஆ. சுவிசேஷமுத்து
புது டெல்லி

ஏழெட்டில் பெருத மருமக்களும், எட்டெட்டில் பெருத பேரர்களும், ஒன்பதெட்டில் பெருத சாவும்—என்று இருந்தால் பொருத்தமாக இருக்குமே!

—மனசை ப. கிரன்

ஆறு எட்டில் பார்க்காத பேரன், ஏழு எட்டில் போகாத யாத்திரை, எட்டு எட்டில் வராத மரணம்.

—சபி முகம்மது, இளையங்குடி



''தலைவலி போய்விட்டது.''

''எனக்கு யாரும் சொல்லவில்லையே?''

''காப்பி சாப்பிடலாமா?''

''ரெடி.''

''ராத்திரி நான் அப்படி நடந்து கொண்டதில் கோபம்தானே?''

''ஆமாம் என்ருல் உடனே 'ஸாரி'ன்னு சொல்லப் போகிருயாக்கும்?''

வசு சிரித்தாள்.

''உங்கள் எரிச்சல் எனக்குப் புரிகிறது...வாருங்கள் சூடாகக் காபி சாப்பிடலாம் ...சரியாக ஒன்பதரை மணிக்கு ஜீப் வரும். இப்பத்தான் என் அப்பாவின் சிநேகிதருக்குப் போன் பண்ணினேன்.''

''ஓ, முதுமலைக்கா?''

''ஆமாம். ஜீப்பை ஒன்பதரை மணிக்கு அனுப்பறேன்னு சொன்னுர்.''

கோபி பேசாமல் அவளுடன் நடந்தான். டைனிங் ஹாலில் யாருமே இல்லை. காப்பியை அருந்திக்கொண்டிருக்கையில், ரிசப்ஷனில் இருக்கும் குமாஸ்தா திடீரென்று கையில் ஒரு காகிதத்துடன் வந்தான்.

''மிஸ்டர் கோபி,'' என்ற அவன் காகிதத்தை நீட்டினுன்.

அதைக் கோபி வாங்கிப் படித்துக் கொண்டிருக்கையில், ''ராத்திரி பத்தரை மணிக்கு ட்ரங்க் கால் வந்தது. நீங்கள் தூங்கிக் கொண்டிருந்தால் எழுப்பவேண்டாம் என்ருர்கள். செய்தியை எழுதிக்கொள்ளச் சொன்னுர்கள்,'' என்ருன் குமாஸ்தா.

''தாங்க்ஸ்..காப்பி சாப்பிடுகிறீர்களா?''

''நோ தாங்ஸ்..நான் இப்பதான் சாப்பிட்டேன்.. வரேன்.''

வசு கோபியையே பார்த்தாள். குமாஸ்தா போன பின்பும் அந்தக் காகிதத்தை அவன் மீண்டும் மீண்டும் படிப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தாள்.

கோபி மூன்றும் தடவையாகப் படித்து விட்டு, காகிதத்தை பாண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்.

பேன் இல்லாத பெண்களே
பெரிதும் விரும்பப்படுகிறுர்கள்...
ஐந்தே நிமிடத்தில் பேன்கள் அழிய
கென்ஸ்



புரூனட் அண்ட் பிளாண்ட்
ஃபிரஷ், மருத்துவக் கல்லூரி சாலை
தஞ்சாவூர்

FDS BB 2012 TAM B

காப்பியைக் குடித்த பின்; "போகலாமா?" என்று கேட்டான்.

"ஓ," என்ற வசு, "என்ன மெஸேஜ்?" என்று கேட்டாள்.

"ஆபீஸிலிருந்து ஜெனரல் மானேஜர் கொடுத்திருக்கிறார்."

மேற்கொண்டு அவன் விளக்கம் சொல்வான் என்று அவள் எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவன் ஒன்றுமே சொல்லவில்லை.

புரிந்துகொண்ட ரீதியில், "டிப் ஃபர் டாட்டா?" என்று கேட்டாள்.

"உனக்கு அப்படித் தோன்றினால் அது என் தப்பு இல்லை." கோபி எழுந்தான்.

"மணி எட்டரை ஆயிட்டது. குளித்து டிபன் சாப்பிட்டுக் கிளம்புவதற்குள் ஜீப் வந்து விடும்."

"முதுமலை டிரிப்பைக் கான்ஸல் பண்ண வேண்டும், வசு."

"ஏன்.. எதுக்காக?" ஒரு கணம் அயர்ந்து போய்க் கேட்டாள்.

"நாம் இன்னிக்கே மெட்ராஸ் திரும்பறோம் வசு..வேறு வழியில்லை."

"ஏன்?"

"எனக்கு அஸிஸ்டண்ட் மானேஜரா பிரமோஷன் ஆகியிருக்கு. நாளைக்கே பதவியை ஒப்புக்கொள்ளப் போகிறேன்."

"கங்கிராஜுலேஷன்ஸ். ஆனா ஏன் அவசரப்பட வேண்டும்?"

"முடியுமானால் உடனே வந்து சேர் என்று ஜெனரல் மானேஜர் சொல்லியிருக்கிறார்."

"எப்படியும் இன்னும் கொஞ்ச நாளில் இந்தக் கம்பெனியை உதறிவிட்டு அப்பாவின் கம்பெனிக்கு இன்னும் உயர்ந்த பதவிக்கு வரப் போகிறீர்கள். ஏன் வீணா மனசை அலட்டிக் கொண்டு அவசரப்படுகிறீர்கள்? 'அடுத்த வாரம் வருகிறேன்,' என்று தந்தி கொடுங்கள். வேண்டுமானால் நான் அப்பாவுக்குப் போன் பண்ணி, உங்க ஜெனரல் மானேஜரிடம் சொல்லச் சொல்லுகிறேன்."

"தாங்க்ஸ்!" என்ற கோபி, "நீ நினைக்கிறது போல நான் அவ்வளவு எளிதாக எனக்கு எட்டு வருஷமா பிழைப்பு அளித்த கம்பெனியை உதறி எறிஞ்சுட்டுப் போய்விட முடியாது, வசு. இப்போ பிரமோஷன் வேறு கொடுத்திருக்கிறார்கள். என்னை மதித்து நடத்தும் கம்பெனியை நான் அவமதிக்க மாட்டேன்... என் ஜெனரல் மானேஜர் என்மேலே அபிமானம் வைத்திருக்கிறவர்," என்றான்.

"அப்போ?"



சுந்தர ராஜன் சொன்ன கதை

ஒரு படப்பிடிப்பின் இடைவேளையில் கதாநாயகனும், கதாநாயகியும் பேசிக் கொண்டிருந்தார்கள். இதே கதாநாயகனைப் போட்டுப் படம் எடுத்த ஒரு தயாரிப்பாளரும் அருகில் இருந்தார். அவர் படம் சமீபத்தில் வெளியாகி, படு தோல்வி அடைந்திருந்தது.


தயாரிப்பாளரிடம் கதாநாயகி கேட்டார்: "ஏன் சார், உங்க படம் சரியாவே ஓடலியாமே?"

அவசர அவசரமாகக் குறுக்கிட்ட கதாநாயகன், "ஒரே இடியும் அடைமழையுமாக இருந்தது இல்லையா? அதனால் தான் அப்படி," என்றார்.

தனக்கு வந்த ஆத்திரத்தை அடக்கியபடி தயாரிப்பாளர் சொன்னார்: "ஆமா...ஆமா..நம்ம ஹீரோ சொல்வது தான் சரி. குடை வைத்திருந்தவர்கள் எல்லாம் வேறு படத்துக்குப் போய் விட்டார்கள்."


—மேஜர் சுந்தரராஜன் சொல்லக் கேட்டு

—பி. கிருபாகரன்.



சமைய லுக்குப் பயன் படுத்தும் பொருட்களை வைத்திருக்கும் பாத்திரம், உருப்படி இவைகளின்மீது, பொருள்களின் விலையையும் எழுதி வையுங்கள். விலையைப் பார்க்கும்போதெல்லாம் கை கொஞ்சம் தானே இழுத்துக் கொள்ளும்.

—கஸ்தூரி



''ஸாரி, வசு. . . வீ ஹாவ் டு கான்ஸல் முதுமலை, அண்ட் வீ ஹாவ் டு ரிடர்ன் டு மெட்ராஸ்.''

''ஆனால் இன்னொரு தடவை ஹனிமூன் வருமா?''

''ஒரு அதிருஷ்டத்தை இன்னொரு அதிர்ஷ்டம் துரத்திவிட்டது.''

இருவரும் கோயமுத்தூரை அடைந்தபோது மாலை மணி நான்கு.

கொச்சின் மெயிலில் சென்றால், காலைஆறு மணிக்கே சென்னையை அடைந்து விடலாம் என்று நினைத்தான் கோபி.

''வசு, முதல்லே காரை உங்க கம்பெனி பிராஞ்ச்சிலே சேர்த்து விடுவோம்,'' என்றான் அவன்.

''மணி நாலுதானே ஆறது? கார் நின்றதும் முதல்லே ஸ்டேஷனுக்குப் போய் டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்யலாம்..''

கோயமுத்தூர் ஸ்டேஷனில் இறங்கிய கோபி, பின் ஸீட்டிலிருந்த பெட்டிகளை எடுத்தான்.

''உங்க பெட்டியை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்,'' என்றாள் வசு.

''ஏன், உன் பெட்டியை நான் தூக்கக்கூடாதா? பெண்டாட்டி பெட்டியைத் தூக்கினால் புருஷன் குறைந்து போய்விடுவானா என்ன?''

''இல்லை. உயர்ந்துதான் போவார்,'' என்று சொல்லிச் சிரித்த வசு, ''நான் இன்னிக்கு மெட்ராஸ் வரலை,'' என்றாள்.

''என்ன!''—கோபி திடுக்கிட்டான்.

''நீங்கள் போய் உங்கள் உதவி மானேஜர் பதவியை ஒப்புக் கொள்ளுங்கள்..நான் பொள்ளாச்சிக்'குப் போறேன்.''

''பொள்ளாச்சிக்கா! எதற்கு?''

''இரண்டு மூன்று நாள் நித்யாவுடன் நிம்மதியா இருந்துட்டு வரேனே?''

அவன் முகம் கறுத்தது.

''இந்த எண்ணம் இப்பத்தான் தோன்றிற்று, இல்லே ஊட்டியிலிருந்து புறப்படறபோதே ஏற்பட்டதா, வசு?''

''எப்பத் தோணினா என்ன? நீங்கள் நிம்மதியாகப் போங்கள். நான் மெதுவாக வரேன்..பிராஞ்ச் மானேஜர்கிட்டே சொல்லி, அப்பாவுக்கு ராத்திரியே போன் பண்ணச் சொல்றேன். கார்த்தாலே சென்ட்ரலுக்குக் கார் வரும்.''

''தேவையில்லை. உன் அப்பாவைத் தொந்தரவு செய்வானேன்? நான் ட்ரிப்ளிகேனுக்குப் போகிறேன்..''

''ஓட்டல்லேயா சாப்பிடப் போகிறீர்கள்?''

''எட்டு வருஷமா அங்கே தான் சாப்பிட்டேன்,'' என்றான் அவன் காரமாக.

அவன் நடந்தான்.

அவள் காரை ஸ்டார்ட் செய்தாள்.

(தொடரும்)



வெர்ஸ்

பி.வி.ஆர்

6

"பெண்ணே, பூஷா என்கிற தேவன் என் மூலமாக உன் கையைப் பிடித்து அக்னியின் அருகே அழைத்துச் செல்லுகிறான். ஓமங்கள் முடிந்த பின், அசுவினி தேவர்கள் உன்னை என் வீட்டுக்கு அனுப்புகிறார்கள். பிறகு, வீடு உன்னுடையது. நீயே அதற்கு எசமானி. அந்த பாக்கியத்தைப் பெற நீ என்னுடன் சேர்ந்து கர்மங்களைச் செய்வாயாக..."

—கல்யாணத்தில் மாப்பிள்ளை சொல்லும் பூஷா என்கிற மந்திரத்தின் அர்த்தம்.

கோயமுத்தூர் ரெயில் நிலையத்தினுள் செல்லும் கோபியை மீண்டும் ஒரு தடவை பார்க்க வேண்டும் என்று உள் மனம் ஒரு வினாடி நினைத்தாலும் வசு தன்னையே அடக்கிக் கொண்டு பொள்ளாச்சியை நோக்கிக் காரைச் செலுத்தலானாள்.

அவள் எத்தனை ஆர்வத்துடன், எவ்வளவு ஆசையுடன் முதுமலைக் காடுகளைப் பார்க்கக் காத்திருந்தாள்! கோபியும் அவளும் ஒரே யானை மீது உட்கார்ந்து, கோரைப் புல் புதர்களிடையே பவனிவர அவள் எப்படித் துடித்துக்கொண்டிருந்தாள்! யானை மேல் இருந்தபடியே மான்களையும் வித விதமான பறவைக் கூட்டங்களையும் காட்டு எருமைகளையும் பார்க்கலாம் என்றிருந்த அவளுடைய ஆசையை அவன் ஒரே அடியாக முறியடித்துவிட்டான். ஒருவர் உடலை ஒருவர் அறிந்துகொள்ள மட்டும்தானா தேனிலவு? அவன் அவளுடைய மனத்தைப் புரிந்து கொள்ளாமல் தேனிலவின் சுருதியையே கலைத்துவிட்டான்.

கோபிமேல் இதுவரையில் அவள் உணர்ந்தறியாத ஒரு கோபமும் ஆத்திரமும் அவளுள் தோன்றின.

மணிக்கூண்டு எதிர்ப்படவே வசு மணியைப் பார்த்தாள். பன்னிரண்டில் முள் நின்றுபோயிருந்தது. தன் கைக் கடியாரத்தை நோக்கினாள். சரியாக ஐந்து. இந்த வேகத்தில் போனால் இருபத்தாறு மைல்களைக் கடக்க ஒன்றரை மணி நேரம் ஆகும் என்று மனம் கணக்குப் போட்டது. ஒரு மணி நேரத்தில் போய்விட வேண்டும் என்ற எண்ணம் தோன்றவே, அக்ஸலரேடரை அழுத்தினாள்.

என்ன இருந்தாலும் கோபிக்குப் பண்பாடு போதாது என்று அவளுக்குத் தோன்றிற்று. நித்யாவிடமிருந்து அவளுக்கு வந்த கடிதத்தில் அவளைச் சிறிதே கலக்கிய ஒரு செய்தி இருந்ததால்தான் கடிதத்தைப் பற்றிக் கோபியிடம் அவள் ஏதும் சொல்லவில்லை. அவனிடம் அவள் எல்லாவற்றையும் சொல்ல வேண்டும் என்று அவன் எப்படி எதிர்பார்க்கலாம்? என்னதான் கணவன் மனைவி என்றாலும், ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்க்கை தனிதானே? அதைப் புரிந்து கொள்ளாமல், பிரமோஷன்பற்றி அவனுக்கு வந்த டெலிபோன் செய்தியை அவன் வேண்டுமென்றே அவளிடம் சொல்லவில்லை.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, அவன் திருவல்லிக்கேணி அறைக்கே போகப் போவதாகக் கூறியது, அவளை அவன் வேண்டுமென்றே அவமானப்படுத்தச் சொன்னதுபோலத் தோன்றியது. எட்டு வருடங்களாக ஓட்டலில் சாப்பிட்டதை ஒரு பெருமையாக, ஜம்பமாக ஏன் குறிப்பிட வேண்டும்? அவள் வீட்டுச் சாப்பாட்டைவிட, இரண்டு ரூபாய் கொடுத்து டிக்கெட் வாங்கிக் கும்பலோடு கும்பலாக உட்கார்ந்து சாப்பிடும் சாப்பாடு உசத்தியா? அவளுடைய அம்மாவும் அப்பா

வும் அவ்வளவு பெரிய பங்களாவில் இருக்கும்போது கோபி திருவல்லிக்கேணி அறைக்குப் போவது விவேகமா? நாகரிகமா?

திடீரென்று குளிர்ந்த காற்று அவள் கன்னத்தில் அறைந்தது. சாலையில் ஒரு பெரிய மஞ்சள் பலகையில், 'கிணத்துக்கிடவு' என்ற பெயர் எழுதியிருந்ததை அவள் கவனித்தாள்.

பாதையில் ஒரு பஸ் நின்று கொண்டிருந்தது. எதிரே ஒரு பார வண்டி மெதுவாக வரவே, காரை பஸ்ஸுக்குப் பின்னால் நிறுத்தினாள். பஸ் அருகே ஒருவன் ஒரு கூடையுடன் 'சுண்டல்' 'சுண்டல்' என்று கத்திக் கொண்டிருந்தான்.

சுண்டலின் விசேஷத்தைப் பரீட்சை பார்க்க ஒரு நிமிஷம் சபலம் தோன்றினாலும், மறு நிமிடமே, சுண்டல் விற்கிறவனின் அழுக்கு வேட்டியும் கூடையின் அசிங்கமான தோற்றமும் அதை விரட்டிவிட்டன. அதே நேரம் நித்யாவின் ஞாபகம் வந்தது. அவள் மட்டும் காரில் இருந்திருந்தால் உடனே நிறுத்தச்சொல்லி ஒரு ரூபாய்க்கேனும் சுண்டல் வாங்கினால்தான் ஆயிற்று என்று அடம் பிடித்திருக்க மாட்டாளா?



''என் குரூப் ரத்தமும் உங்க ரத்த குரூப்பும் ஒன்றுதான் என்று டாக்டர் சொன்னார். தயவு செய்து உங்கள் ரத்தத்தை எனக்குத்தந்துதவ முடியுமா?''

வசு பெருமூச்சு விட்டாள். நித்யா ஊட்டிக்கு எழுதியிருந்த கடிதம் அவளுக்கு மனப் பாடம் ஆகியிருந்தது. அதில் அவளைக் கலக்கிய வரிகள் மீண்டும் கண்முன் தோன்றின.

''....என் பாட்டி எனக்குத் தன் சொத்தையெல்லாம் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறாள் என்று அன்னிக்கே சொன்னேன் இல்லியா? இன்னிக்கு ஒரு கிரயப் பத்திரத்தைப் படித்துப் பார்த்தேன். இருபத்தெட்டு வருஷம் முன்னாலே பதிவான டாகுமெண்ட். அதிலே மரக்கடை குமாஸ்தா ஒருவர் சாட்சிக் கையெழுத்துப் போட்டிருந்தார். அதைப் பார்த்ததும் ஒரு நிமிடம் அயர்ந்துபோய் விட்டேன். ஏன் தெரியுமா? அவர் பெயர் கே.ஆர்.சிவராமன்! எவ்வளவு வேடிக்கையான கோயின்ஸிடன்ஸ் பார்த்தாயா? அதிருக்கட்டும், ஹனிமூனெல்லாம் எப்படி இருக்கிறது? அனுபவி, ராணி, அனுபவி...''

அவள் அப்பா ஒரு முன்னாள் மரக்கடை குமாஸ்தாவா! கடிதத்தை முதலில் படித்தபோது அதிர்ந்துபோனாள் வசு. பிறகு அவளுக்கே சிரிப்பு வந்தது. உலகத்தில் ஒரே ஒரு கே.ஆர். சிவராமன்தான் இருக்க முடியுமா என்ன? இதே பெயர், இதே இனிஷியல் எத்தனையோ பேர்களுக்கு இல்லையா? ஆனால் உள்ளுக்குள் ஒரு சந்தேகம் அடிக்கொருதரம் தலை காட்டிக் கொண்டே இருந்தது. நித்யா குறிப்பிட்ட பத்திரத்தில் அந்தக் கையெழுத்தைப் பார்த்தாலொழிய அது தீர வழியில்லை.

பொள்ளாச்சியில், பாலக்காடு ரோடில் வலதுபுறமாக இருக்கும் மகாலிங்கபுரத்தில் இருந்த நித்யாவின் தாத்தா வீடு, சென்னை அண்ணா நகர், அசோக் நகர் போல பெரிதாக இல்லாமலிருந்தாலும், காலனி நேர்த்தியாக இருந்தது.

''யார் இது? வசுவா!'' என்றாள் நித்யா. ''என்னடி பூதம் மாதிரி இப்படித் திடீர்னு வந்து என்னைக் கலக்கறே...வா,வா ....தாத்தா! தாத்தா! நான் அடிக்கடி சொல்லுவேனே, அவள் கந்தர்வப்

பெண் மாதிரி பூமியிலே குதிச்சு வந்து நிக்கிறாள்....''

உள்ளே ஓட முயன்ற நித்யாவை வசு பிடித்து நிறுத்தினாள். ''ஏண்டி பறக்கறே..? பேசாம இரு.''

''அது சரி. எங்கே உன் அவர்? வாசல்லேயே நிறுத்தி வைச்சிருக்கியா? உள்ளே அழைச்சிட்டு வாடீ! ஆமாம், ஏன் அதற்குள் வந்துவிட்டீர்கள்? ஊட்டி ஒத்துக்கலையா? குளிர்னு உங்க ரெண்டு பேருக்கும் குஷியா இருக்கணுமே... போர்வைகூட வேண்டாம்..''

''பேசாம இருடீ மண்டு. நான் உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்.''

''அப்போ அவர்? ஊட்டியிலேயே அம்போன்னு விட்டுவிட்டியா?''

''அவர் மெட்ராஸ் போயாச்சு.''

''ஏண்டி? ஏன்? அவர் மட்டும் மெட்ராஸுக்குத் தனியா போயிட்டார்னு என்னடீ காரணம்? சண்டையா? யுத்தத்துக்கு முன்னாலே— அதாவது குடும்ப வாழ்க்கைக்கு முன்னாலே நிலவுகிற போர் ஓய்வு காலம் தானே ஹனிமூன். ஹனிமூன்லேயே யுத்தம் ஆரம்பிச்சுட்டுதா...''

''ஏண்டி வளவளன்னு பொரிஞ்சு தள்றே..அவருக்கு ஆபீஸிலிருந்து அவசரமா ஒரு மெஸேஜ் வந்தது. பிரமோஷனாகியிருக்கு...அவர் உடனே புறப்பட்டுப் போகணும்னு சொன்னார். அங்கே அவர் ஆபீஸுக்குப் போனா, நான் மத்தியானம் பூரா மொட்டு மொட்டென்று உட்கார்ந்து கொண்டு பொழுதைக் கழிக்கணும். சரி, உன்னோடுதான் இரண்டு மூணு நாள் இருக்கலாமேன்னு இங்கே வந்தேன். முதல்லே எனக்கு ஒரு கப் காபி கொடு. போ—''

''இருடி..ஒரே நிமிஷம்.'' நித்யா ஓடினாள்.

நித்யா கொண்டு வந்து கொடுத்த காப்பியை வாங்கிக் கொண்டிருக்கையில்தான், நித்யாவுக்குப் பின்னால் ஒரு பெரியவர் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தாள் வசு. உடனே எழுந்து நின்றாள்.

''தாத்தா, இவள்தான் என் டியரஸ்ட் ஃபிரண்ட் வசுதா. இவளுக்குக் கூடக் கல்யாணமாயிட்டுது



வளர்ந்த பின்னும்கூடக் குழந்தைத்தனம் போகாமல் கையில் கரடிப் பொம்மையுடன் இருக்கும் இந்த ஸ்ரீநடிகை யார்?

தாத்தா!'' நித்யா கேலியுடன் குழைந்தாள்.

''உனக்கும் ஆகும், கவலைப் படாதே!'' என்ற அவர், ''உட்கார்ந்து சாப்பிடும்மா!'' என்றார்.

பிறகு சிறிது நேரம் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். அது நித்யாவுக்குப் பொறுக்கவில்லை.

''பிரண்ட் வந்திருக்கிறாளே, அவளும் பேத்தியும் பேசிக் கொண்டிருக்கட்டும், நாம் கீதைக்குப்போவோம்னு தோணும, என்ன தாத்தா..'' என்று சிணுங்கினாள்.

''பார்த்தாயா அம்மா, இவளுக்குப் பாட்டியின் சொத்து வந்திருக்காம், என்னையே துரத்தறாள். நாளைக்கு என்னுடைய சொத்தும் வந்துவிட்டால் இன்னும் என்னென்ன செய்வாளோ!'' என்று சிரித்துக் கொண்டே அவர் நகர்ந்தார்.

அவர் சென்ற பிறகு வசுவும் நித்யாவும் அரட்டை அடிக்க நிறைய அவகாசம் கிடைத்தது.

பேச்சோடு பேச்சாக வசு கேட்டு வைத்தாள்.

"அந்தப் பழைய பத்திரத்தைக் கொஞ்சம் காட்டேன். கோத்துக் கோத்து, நுணுக்கி நுணுக்கி எழுதியிருப்பார்கள் இல்லையா.."

"அது எதுக்கு இப்போ?"

"சும்மா பார்க்கத்தான்."

"என் சொத்தின் மதிப்பு என்னன்னு தெரிஞ்சுக்க ஏண்டி இப்படி ஒரு யத்தனம் பண்றே, வசு!" என்று சிரித்த நித்யா, "வா, உன்னை அந்தக் கிட்டு மாமாகிட்டே மாட்டி விடறேன். பத்திரம் அவர் கிட்டேதான் இருக்கிறது. இன்னிக்கு சர்க்கார்லே எது நல்லது செய்தாலும், 'அதை அன்னிக்கே நான் சொன்னேன்,' என்பார். வா, போவோம்."

"சிரமமானால் வேண்டாம், நித்யா!" என்றாள் வசு. தனக்கு அக்கறை இல்லை என்பதைக் காட்டிக் கொள்ள அளவுக்கு மீறி மனம் துடித்தது.


"சரிதான் வாடீ!"

சாட்சிக் கையெழுத்து விஷயத்தை நித்யா அறவே மறந்துவிட்டிருந்தாள். அது வசுவுக்கு ஒரு வகையில் நிம்மதியைக் கொடுத்தது.

கிருஷ்ணமூர்த்தி தம் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். நித்யாவைப் பார்த்த அவர், "வாம்மா, மெட்ராஸ் கேர்ள்!" என்று சொல்லி எழுந்தார்.

"இவள் என் ஃபிரண்ட். வசுதான்னு பேரு..மெட்ராஸ்லேருந்து வந்திருக்கிறாள்."

"பார்த்தாலே தெரிகிறதே! வெரிகுட்.. என் பெயர் கிட்டு என்கிற கிருஷ்ணமூர்த்தி. வயசு அறுபத்திரண்டு. என் பிள்ளையாண்டான் நான் இல்லாமலே என் சஷ்டியப்த பூர்த்தியை டில்லியில் கொண்டாடினதாக லெட்டர் போட்டான். அந்த லெட்டரை நான் கண்ணில் ஒத்திக் கொண்டு கிழிச்சுப் போட்டேன். நாப்பது வருஷமா வித்து, டாகுமெண்ட் எழுதிக் கொடுத்து, வயத்தைக் கட்டி வாயைக் கட்டி அவனைப் படிக்க வைச்சு ஆளாக்கினேன். பெரிய



இசை பாடுகின்றவர்கட்குப் பணம் பெரிதன்று. கேட்டு இடமறிந்து ரசிக்கின்றவர்கள்தான் முக்கியம்:

ஒரு சிறந்த இசைவாணன் மூட மன்னனிடம் பாட வந்தான். அந்த அரசனுக்கு ராகம் என்ருல் வராகந்தான்.

கீழே கறுப்புக் கம்பளியை விரித்து, கால் பெருவிரலில் கறுப்புக் கம்பளிக் கயிற்றைக் கட்டித் திரைக்குப் பின் மந்திரி அக்கயிற்றைப் பிடித்து நின்ருன். மந்திரி கயிற்றை அசைத்தால் அரசன் தலையை அசைப்பான். இவ்வாறு இன்னிசையரங்கு நடந்து கொண்டிருந்தது. இசைவாணன் மிகவுயர்வாகப் பாடினுன், அமைச்சர் கயிற்றை வேகமாக இழுத்தார். கயிறு அறுந்து விட்டது. அரசன், ''பாடகரே! பாட்டைச் சிறிது நிறுத்தும். கயிறு அறுந்து விட்டது. மந்திரி! கயிற்றை முடிந்து விடு!'' என்று கத்தினுன். இந்த விஷயத்தையறிந்த பாடகன் மூடனிடம் பாடவந்த தன் அவல நிலையை நினைத்து வருந்தினுன்.

இதனை இரட்டைப் புலவர்கள் உணர்ந்து பாடுகின்ருர்கள்.

மூடர்முன் பாடல் மொழிந்தால்
அறிவாரோ
ஆடெடுத்த தென்புலியூர்
அம்பலவா—நாடறியச்
செந்திருவைப் போல் அணங்
கைச் சிங்காரித் தென்ன பயன்?
அந்தகனே நாயகன் ஆனுல்?

ஒரு பெண்ணை எத்தனை அழகாக அலங்கரித்தாலும் கண்ணில்லாத கணவன் அவளைக் கண்டு ரசிக்க முடியாது தானே? ஆதலால் அறிஞர் முன்னே பாடுவதையே பாடகன் விரும்புவான்.

இடத்திலே கல்யாணம் ஆச்சு. அவ்வளவுதான். கத்திரிக்காய் விக்கறவனும் ஸ்டாம்பு விக்கறவனும் ஒண்ணுன்னு என்னை உதாசீனப்படுத்தருன். போகட்டும், என்னை இவன் அலட்சியப் படுத்தினுல், இவனுடைய பிள்ளை இவனை அலட்சியப்படுத்த மாட்டானே? ஆமாம், நான் என்னைப்பத்தியே பேசிட்டிருக்கேனே..என்னம்மா செய்திட்டிருக்கிறே மெட்ராஸ்லே?'' என்ருர் கிட்டு மாமா.

''அவளுக்கு இப்பத்தான் கல்யாணமாச்சு..ஏன் மாமா, நகல் எடுத்தாச்சா?''

''எடுத்து மூணு மணி நேரமாகிறது. நானே கொண்டு வரணும்னு இருந்தேன். பரம்பிக்குளம் என்ஜினியர் சுந்தரம் வந்தான். இங்கே ஒரு வீடு வாங்கருணும். இரு. கொண்டு வரேன்...''

அவர் உள்ளே போனதும், ''இவர் பிள்ளையைப்பற்றி யார் கேட்டார்கள்? இப்படித்தான், சொந்தக்காரர்களைப்பற்றி ஏதாவது தூஷித்துக் கொண்டே இருப்பார்..இல்லாமல் போனு, பரம்பிக்குளம், அலியார் திட்டத்தைப்பற்றி ஆரம்பித்து ஓயாம போர் அடிப்பார்,'' என்ருள் நித்யா.

''யார் யாரை அடிக்கிரு?'' என்று கேட்டுக் கொண்டே வந்த கிட்டு மாமா டாகுமெண்ட்டைத் தந்தார்.

அதை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினுர்கள்.

பத்திரத்தை வசுவிடம் கொடுத்துவிட்டு நித்யா உள்ளே போனதும், வசு படபடக்கும் உள்ளத்துடன் கடைசிப் பக்கத்துக்குத் தாவினுள்.

இரண்டு சாட்சிகளில் ஒருவர் கே.ஆர்.சிவராமன், கணியூர் ராமஞதனுடைய மகன் என்றிருந்தது. கையெழுத்து அவளுடைய அப்பாவின் கையெழுத்துத்தான். சந்தேகமேயில்லை. விலாசத்தைப் பார்த்தாள்.

'குமாஸ்தா, ஆனைமலை மரக்கடை, பொள்ளாச்சி,' என்று இருந்தது.

(தொடரும்)

உறுத்தல்

ஹௌரா மெயில் 'ரேக்' வந்து பிளாட் பாரத்தில் கடகட கடகடவென்று ஓசைப்படுத்தி ஓய்ந்து விட்டுக் கிரீச் கிரீச் ஒலியுடன் நின்றது.

பெட்டி— படுக்கை— கூடை தினுசுகளுடன் காத்திருந்த குடும்பம் ஒன்று உள்ளே புகுந்தது, எதிரே நின்ற கம்பார்ட்மென்ட்டின் கதவைத் திறந்து கொண்டு. ஸ்கர்ட் ப்ளவுஸ் அணிந்த இரு அரை டிக்கெட் சிறுமிகள், ஒரு முழுக் கைச் சட்டை பாண்ட்ஸ் வாண்டுப் பையன், தொடர்ந்து அவர்களுடைய தாயார்க்காரி, கடைசியில் வயதான அம்மாள் ஒருத்தி—அநேகமாய் அந்தக் குழந்தைகளுக்குப் பாட்டியாய் இருக்கும்—தாய் வழியோ, தகப்பன் வழியோ.

சாமான்களை யெல்லாம் ஒழுங்குபடுத்திக் கொண்டு அவர்கள் அமர்வதற்குள், ஓர் ஏழைச் சிறுமி சின்னஞ் சிறிய தொரு தகர ஸூட் கேசுடன் உள்ளே ஏறினாள். அவள் இடது கையில் ஒரு காக்கித் துணிப் பை தொங்கியது. பிளாட்பாரத்தை ஒட்டிய ஜன்னல் பக்கத்துத் தனி ஸீட்டில் அவள் அமர்ந்தாள்.

''நான் இப்பிடியே உட்கார்ந்துக்கறேன்,'' என்று அந்தச் சிறுமி வெளியே எவரிடமோ சொன்னாள். நல்ல பெரிய மனிதக் களையுடன் வாட்ட சாட்டமாக நடுத்தர வயதைத் தாண்டுகிற பிராயத்துப் பேர்வழி ஒருவர் அங்கு நின்றிருந்தார். அவர் தலையை உள்ளே விட்டு அவளுடைய இடத்தைப் பார்வையிட்டார். ''பெட்டி பத்திரம்,'' என்றார்.

சிறுமி, ''ஆட்டும்,'' என்றாள்.

''இடம் இருக்குமா எனக்கு?'' என்ற கனத்த குரலில் கேட்டுக்கொண்டே ஒருவர் ஏறினார்.

காவியாடை உடுத்தியிருந்தார். கையில் ஒரு ஸ்கௌட் ஹாவர் ஸாக் மாதிரியான பை. காலில் கட்டைச் செருப்பு இல்லை; சாதாரணத் தோல் பாதரட்சைதான். அவர் உள்ளே ஓரிடம் பிடித்து, காலடியில் தொங்கு பையை வைத்தார்.

''சாமியார்தானே இவர்?'' என்று பையன் அக்காள் ஒருத்தியின் காதைக் கடித்தான்.

''மெதுவாய்ப் பேசுடா பாப்பு,'' எனக் கடிந்து கொண்டாள் தமக்கை.

''ஏன், தம்பி என்ன சொல்றான்?'' என்று சாமியார் சிரித்தவாறே விசாரித்தார்.

''ஒன்றுமில்லே. நீங்க சாமியார்தானே என்று கேட்கிறான்.''

இது குடும்பத்து அன்னையின் விளக்கம்.

சாமியார் சிரித்துக் கொண்டார். அவரை ஓரக் கண்களினால் கவனித்தாள் பாட்டியம்மாள். என்னவோ தனக்குள் பேசிக் கொண்டாள்.

ர. வேங்கடரத்தினம்

வண்டி கூக்குரல் எழுப்பிவிட்டுக் கிளம்பலாயிற்று. அவசர, அவசரமாக ஓடிவந்து தொற்றிக் கொண்டார் ஒரு சர்தார். பிரம்மாண்டமான பெட்டியோடு வந்தேறிய அந்த மனிதர் வெகு அலட்சியமாக ஒற்றைக் கையினால் பெட்டியை மேலே தூக்கி மேற் பலகையில் வைத்ததைப் பாப்பு ஆச்சரியத்தோடு பார்த்தான்.

''கிரிக்கெட்டர் பேடி மாதிரியே இல்லே இந்த மாமா?''— இப்போதும் பாப்புதான் கேட்டது.

''தொண்டையைப் பார், தொண்டையை! எருமைக் கடா பேசற மாதிரி!'' இந்தத் தடவை கடிந்து கொண்டவள் வேறொரு அக்காள்.

ஜன்னலின் வழியே வெளியே நகரும் உலகத்தையே பார்த்துக்கொண்டு, ஓரத்து ஆசனத்துச் சிறுமி அமர்ந்திருந்தாள். இடுப்பில் சாதாரணப் பாவாடை, சற்றுப் பழையது. மேலே ஒரு பூப் போட்ட சீட்டி ரவிக்கை; நடுவிலே தொப்புளுக்கு,





மேலே முடிச்சுப் போட்டிருந்தது. முகம் பளிச்சென்று இருந்தாலும், பவுடரோ வேறு பூச்சோ இல்லை. காதில் இரண்டு பக்கமும் திருவிழாக் கடைகளில் விற்கிற முக்கால் ரூபாய் சமாசாரம் மின்னியது. தலை எண்ணெய் தேய்த்துக் குளித்த மாதிரி பின்னப்படாமல் தளர்வாயிருந்தது.

அவள் பெட்டிக்குள் இருந்த எவரையுமே கவனிக்க மாட்டாளோ என்னும்படி, விடாமல் வெளிப்புறமே பார்த்துக் கொண்டு இருந்த விதத்தை வைத்த கண் வாங்காது சாமியாரிலிருந்து சர்தார் வரை எல்லாருமே கவனித்தனர்.

பாப்பு என்னவோ நச்சரிக்கத் தொடங்கினான் அம்மாவை.

"அதுக்குள்ளேயேவா?" என்று பெற்றவள் கடிந்து கொண்டாள்.

"பரவாயில்லே, அம்மா. கொடுத்துடு எடுத்து," என்று முந்தானையைப் பற்றினான் அவன்.

பாட்டி பரிந்து கொண்டு வந்தாள். "என்ன வேணுமாம் அவனுக்கு?"

"சிப்ஸை எடு என்கிறான், அதுக்குள்ளேயே. நீங்களே சொல்லுங்கள், அம்மா."

"கொடுத்துடேன். சாப்பிட்டுக்கொண்டு வரட்டுமே."



"என் நாற்காலிக்கு மூன்றே முக்கால் கால்தான் இருக்கு... ."

"பரவாயில்லை! சாய்ந்தாடம்மா, சாய்ந்தாடு... சாயக்கிளியே சாய்ந்தாடு...!"

"நீங்களும் சேர்ந்துவிட்டீர்களா இதுகளோடே? ராத்திரி சாப்பாட்டுக்குத் தொட்டுக்க இருக்கட்டுமே என்று நினைத்தேன்."

"அப்படியானால், மில்க் சாக்லேட் எடு. அதையாவது டேஸ்ட் பண்ணிட்டு வரலாமே?" என்றான் பாப்பு. பிறகு அவனே பிளாஸ்டிக் டப்பா ஒன்றைத் திறந்து பாக்கெட்டைப் பிரித்தான். சர்தார் தாடி உரோமத்தைக் கை விரல்களினால் திருகி விட்டுக் கொண்டே கவனிக்கலானார். சாமியார் பார்த்தார். மாமியார் நோக்கினாள். ஓரத்து ஆசனத்தில் இரு[illegible] பெண் மட்டும் உள்ளே நிகழ்வதைக் கவனிக்காது இருந்தாள்.

பெரிய பாளம் பாளமாக இருந்தது சாக்லேட் 'பார்'. பங்கு போட ஏற்றவாறு சாக்லேட் மேலேயே கட்டம் கட்டமாகக் கோடு போட்டிருந்தது. பாப்பு இரண்டு கட்டத்தை எடுத்து. "இந்தா. உங்கள் ரெண்டு பேருக்கும். ஆளுக்கு ஒன்று," என்று நீட்டினான்.

அம்மாவுக்கு ஒரு சதுரம். தன் வாயில் இரண்டு துண்டங்களை அடக்கிக் கொண்டான். "சர்தார் மாமா," என்று அழைத்து அவரிடம் ஒன்றைக் கொடுத்தான். "தாங்க்யூ" என்ற எதிர் மரியாதையுடன் ஏற்றுக் கொண்டார் அவர். உஸ் உஸ் என்ற ஓசையுடன் நாக்கில் ஊறும் சாக்லேட் ரசத்தைப் பருகிச் சுவைத்தவாறு, அவன் எஞ்சி நின்ற கட்டங்களை வினியோகிக்க இரண்டாம் சுற்றுத் தொடங்கினான்.

சிறுமியை ஏற்றிவிட்டுப் போனவர் வந்தார். அவள் மடி[illegible] தொப்பென்று பத்திரிகை ஒன்று வி[illegible]தது.

"என்ன பண்ணிக் கொண்டிருக்கே? கோகுலம் படி; உனக்காகத்தான் வாங்கினேன். அர்ஜுன்—கிருஷ்ணனுக்கு நீ கதை சொல்ல உதவும். படி, வரேன்." அவர் போய் விட்டார். வேறு கம்பார்ட்மெண்ட்டில் ஏறியிருந்தார் போலும்.

பழையபடி சாக்லேட் வழங்கும் விழா தொடரலாயிற்று.

"தாத்தா, நீங்க சாப்பிடுவீங்களா? இந்தாங்க," எனக் கேட்

டுக் கொண்டே காவியுடைக்காரரிடம் நீட்டினுன் ஒரு சதுரத்தை.

"எனக்கா? எனக்கு எதுக்கு?" அவர் சிரித்துக் கொண்டே சொன்னுர்.

"வெறும் மில்க்தான். வேறு ஒன்றும் இதிலே கிடையாது." அம்மா விளக்கம் தந்தாள்.

"இன்றைக்கு ஏகாதசி ஆச்சே என்று பார்க்கிறேன்." அவர் கூறிய இந்தத் தடையை நொடிப் போதில் பாப்புவே தகர்த்தெறிந்தான்.

"பாலும் பழமும் சாப்பிடுவீர்கள் இல்லையா, தாத்தா? இதுலே மில்க்கும் ப்ரூட்ஸூம் தான் இருக்கு. வேறு எதுமே கிடையாது. இந்தக் கார்ட்டன்லே உள்ள படத்தைப் பாருங்க. ப்யூர் மில்க் அண்ட் ந்யூ ப்ரூட்ஸ் என்று போட்டிருக்கே."

இதற்குள் சாமியார் வாயில் போட்டுச் சுவைத்தாகி விட்டது. "திவ்வியமாய்ப் பண்ணியிருக்கான்," என்று அவரே நற்சாட்சியமும் வழங்கினுர்.

"இன்னென்று கொடுடா தாத்தாவுக்கு," என்று அன்னை கூற அப்படியே அவன் செய்தான். சாமியார் சுவைத்துத்தான் தின்றதாகத் தோன்றியது. காவி உடுத்துக் கொண்டால் என்ன? முன்னே யாரோ ஒருவர் பிரவசனத்திலே அடிக்கடி சொல்வாரே? வீட்டிலே குழம்பிலே உப்புப் போதவில்லையென்று கோபித்துக் கொண்டு போகிறவர்கள் சிலர் ஆபத் சந்நியாசம் என்பதும் உண்டு. ஆபத்து என்ருல், ஆதி சங்கரரா காலை வந்து முதலை கவ்வுவதற்கு? காரியாலயத்திலே கணக்கு ஒழுங்காய் வராமல், கையாடியது வெளியே தெரிந்து விடும் போன்ற நிலைமை வந்ததும் தலை மறைவாய்ப் போகிற சந்நியாசம்! இந்த சாக்லேட் சாமியார் என்ன தினுசோ?

ரண்தீர் கபூரை உற்று?

ரண்திர் கபூர் விமானத்தில் பயணம் செய்தபோது படிக்க ஏதாவது கேட்டார். பணிப்பெண் அவரிடம் இலஸ்ட்ரேட்டட் வீக்லியைக் கொடுத்தார். ரண்திர் ஒரு வினுடி மேலட்டையைப் பார்த்துவிட்டு சோதிடப் பகுதியைப் பிரித்துத் தன்னுடைய ராசிபலனைப் பார்த்தார். பிறகு காமிக்குகளைப் படித்துவிட்டு ஜோக்குகளைப் பார்த்தார். பிறகு பத்திரிகையைத் தூரப் போட்டுவிட்டார். இவ்வளவையும் ஒருத்தர் உன்னிப்பாகக் கவனித்து வந்தார்.

அந்த ஆசாமி: இலஸ்ட்ரேட்டட் வீக்லி ஆசிரியர் குஷ்வந்த் சிங். —கே. ஆர்.





"மர நிழலில்தானே நிற்கிறோம்! குடை எதற்கு?"

"நான் சலவைச் சட்டை போட்டிருக்கிறேன். காக்காய்களுக்குக் கண்ணை உறுத்தும். விட்டு வைக்காது."

"இன்னும் ரெண்டே ரெண்டு மிச்சம்," என்று பாப்பு தன் விரல்கள் இரண்டை விரித்துக் காட்டினான்.

"பாட்டிக்கு ஒன்று கொடுடா," என்று அம்மா சொல்லவே, பாட்டியினிடம் ஒன்றை நீட்டினான்.

"எனக்கு எதுக்கு அம்மா இதெல்லாம்?"

"பரவாயில்லே. உங்கள் பிள்ளையினுடைய கம்பெனியிலே பண்ணினதுதானே?"

ஒரு கட்டம் இடம் பெயர்ந்தது.

சாமியார் விசாரிக்கத் தொடங்கினார். "உங்கள் மகன்தான் சாக்லேட் கம்பெனி வைத்திருக்கிறாரா?"

பெரியம்மாளுக்குப் பெருமிதம் பிடிபடவில்லை. "ஆமாம்," என்று அவள் இழுக்கும் முன்பே, குடும்பத் தலைவி விளக்கினாள்.

"பாப்பு, சொல்லேண்டா. உங்கப்பாதான் சேல்ஸ் எக்ஸிக்யூடியாய் இருக்கிறார் என்று."

"நல்ல சாக்லேட்," என்றார் சாமியார்.

"தாத்தா, உங்களுக்கே பிடிச்சிருக்கா இந்த மில்க் சாக்லேட்? எக்ஸலெண்ட் ஐடியா! எங்க டாடிகிட்டே சொன்னால் ஒரு அட்வர்டைஸ்மெண்ட் கொடுத்துடுவார். சாமியார்களும் சுவைக்கும் ஒரு சாக்லேட்... டிங்..டிங்..டிங்."

பாப்புவின் இந்தப் பேச்சை அவனைப் பெற்றவள் உள்ளூர ரசித்தாலும், உதட்டளவில் கடிந்து கொண்டாள். "சுத்த வால்! ரேடியோவிலே கமர்ஷியல் ப்ரோக்கிராம் கேட்டுக் கேட்டு, எங்கே வந்தாலும் டிங்..டிங்..டிங் என்று ஆரம்பிச்சுடுது!"

பாப்புவின் கையில் ஒரே ஒரு கட்டம்.

"அம்மா, இன்னும் ஒன்று மிச்சம் இருக்கு."

பெட்டியில் உள்ள அத்தனை பேரில், அதைச் சுவைக்காதவள் அந்த ஓரத்து ஸீட் சிறுமிதான். அவள் என்னவோ வெளியே தான் பார்த்துக் கொண்டு இருந்தாள். பாப்பு மெதுவாக, "அந்தப் பெண்ணுக்குக் கொடுத்துடட்டுமா?" என்று கேட்டான். "கொடேன்," என்றாள் சாக்லேட்காரர் சம்சாரம்.

"இந்தா, உனக்கொரு பீஸ் மில்க் சாக்லேட்." சிறுமி திடுக்குற்ற மாதிரியாகத் திரும்பினாள்.

"வேண்டாம்."

"ரொம்ப ஜோராய் இருக்கும். டேஸ்ட் பண்ணிட்டுச் சொல்லு."

"நான் இதெல்லாம் சாப்பிட மாட்டேன். இங்கே வந்திட்டு வந்திட்டுப் போறாரே, அந்த ஐயா வீட்டிலே குழந்தைகளைப் பார்த்துக்கிற வேலைக்காரக் குட்டி நான். எனக்குச் சாக்லேட் எதுக்கு?"

சிறுமி திரும்பிக் கொண்டு விட்டாள்.

எல்லோரும் மௌனமானார்கள். ஏன் என்று அவர்களுக்கே புரியவில்லை.

டார்ச் செல்

டார்ச் செல்களை ஒவ்வொரு நாளும் பயன்படுத்தியவுடன் வெளியே எடுத்து வைத்தால் மட்டும் போதாது. வெய்யில் படும்படியாக வைக்க வேண்டும். இப்படிச் செய்தால் அவை பல நாட்களுக்குப் பிரகாசமான ஒளியைக் கொடுக்கும்.

—ஜோசப் ஜெயராஜ்



காட்சி - 1

(சிறிய பாங்க் ஒன்றின் அலுவலகம்.)

அக்கவுண்டண்ட் வெங்கப்பா (தன் நாற்காலியில் அமர்ந்தவாறு) வரவர ரொம்ப அநியாயமாப் போச்சு.

ரகு: என்ன சார், இன்னைக்கும் உங்க வீட்டுக் குழாய் மோசடியா?

வெங்கப்பா: கடியாரத்தைப் பார்த்தீங்களா? மூணு நாளா அப்படியே நிற்குது.

ரகு: ஹார்ட் ஃபெய்லியரோ?

வெங்கப்பா: கடியாரம் நல்லாத்தான் இருக்கு. கீ கொடுப்பாரில்லே.

(பியூன் மாடசாமி மிடுக்குடன் உள்ளே பிரவேசிக்கிறான்.)

வெங்கப்பா: இந்தாப்பா மாடசாமி, கடியாரத்துக்குக் கொஞ்சம் கீ கொடுக்கிறயா?

(மாடசாமி மௌனமாகத் தண்ணீர் குடித்துவிட்டு வெங்கப்பாவைக் கடக்கிறான்.)

வெங்கப்பா: வந்தாவனு கொடுக்கிறியா?

மாடசாமி: நீதான் குடேன்.

(வெளியே போகிறான்.)

ஒரு கை பார்க்கிறேன்

'யோகேஷ்'

ஆனந்த்ஜி: நீங்க அவன் வந்ததும் வராததுமாச் சொல்லியிருக்கக் கூடாது. அவனுக்கு எது செய்யறதுக்கும் ஒரு மூடு வேண்டியிருக்கிறது.

வெங்கப்பா: கஸ்டமர் முன்னாலே அசிங்கமில்லே? எனக்கா மணி பார்த்துக்கறதுக்குச் சொன்னேன்?

(மாடசாமி பென்சில் ஒன்றைச் சீவியவாறு வருவது தெரிகிறது.)

ரகு: மாடசாமி, இந்தப் பேனாவுக்குக் கொஞ்சம் இங்க் போட்டுத் தர்ரியா?

மாடசாமி: இதோ வந்து போடறேன். நீங்க அப்படி வெச்சிடுங்க.

ரகு: (சமாளித்துக் கொண்டு) இல்லப்பா, பரவாயில்லே. தாங்க்ஸ். நானே போட்டுக்கறேன்.

மாடசாமி: செய்ங்க.

(சீவிய பென்சிலைச் சட்டைப் பையில் கூர்ப்பக்கம் அழகாக மேலே தெரியும்படி வைத்துக் கொண்டு, வெளியே தான் உட்காரும் ஸ்டூலில் ஆடும் காலுக்குக் காகிதம் வைக்கும் வேலையில் ஈடுபடுகின்றான்.)

கணேஷ்: மாடசாமி! கேஷ் விண்டோவெல்லாம் ஒரே ஒட்டடை தூசி. அப்படியே கொஞ்சம் மேஜையையும் துடைத்து விடு.

மாடசாமி: மேஜைதானே சார்? கர்சீப் இருக்குதில்லே. எடுத்து ஒரு தட்டுத் தட்டிக்க சார். ஒட்டடையை வேணும்னு நான் அப்புறம் பார்க்கறேன்.

ரகு: காஷியர் சார். இதுக்குத்தான் பொடி போடறது நல்ல பழக்கம்கறது.

கணேஷ்: என்னய்யா உளர்றே?

ரகு: பொடி போடறவங்களாயிருந்தால் கட்டாயம் கர்சீப் இருக்குமே. நீங்க இப்போ கைக்குட்டைக்கு எங்கே போவீங்க?

கணேஷ்: என்னைப் பார்த்துத் துடைத்துக்கோய்யான்னுட்டுப் போறான்..என்ன திமிர்!

ஆனந்த்ஜி: சார், உரக்கப் பேசாதீங்க. மாடசாமி காதிலே விழப் போவுது.

ரகு: பயந்து சாகிறீரே அவன் கிட்டே! ஏன்?

ஆனந்த்ஜி: போன வருஷம் கிருகப் பிரவேசத்தின்போது நவக்கிரக ஹோமம் பண்ணினேனே இல்லையா?

வெங்கப்பா: எல்லாருக்கும் சாப்பாடு கூடப் போட்டீர்களே. ஏ ஒன் விருந்து.

ரகு: மறக்க முடியாத பால் பாயசம்.

ஆனந்த்ஜி: மாடசாமிகிட்டே சிமெண்

போச்சுடா சாமி!

'என் நண்பர் சமீபத்தில் சென்னை சென்று திரும்புகையில் விட்டு ஸ்டீல் அலமாரி சாவியைக் கைப் பையுடன் தவற விட்டுவிட்டார். மறு சாவியும் அலமாரிக்குள்ளேயே இருக்கிறது.

வேறு சாவி கேட்டு டீலரை அணுகினார். அவர்ஒரு பாரம் கொடுத்து அலமாரியின் சாவி தொலைந்துபோன விபரம் எழுதி, தான் தான் அவ்வலமாரிக்குச் சொந்தக்காரர் என்ற உறுதி மொழியுடன் நீதிபதியொருவரின் கையெழுத்தும் பெற்று வரச் சொன்னார். நண்பர், போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரின் உதவியை நாடியதும் அவர், கோர்ட் பீஸ் ஸ்டாம்பு ஒரு ரூபாய்க்கு ஒட்டிய விண்ணப்பத்தைக் கோர்ட்டாருக்கு கையெழுத்து வேண்டிய பாரத்துடன் சமர்ப்பிக்கச் சொன்னார். அவ்வாறு செய்தது மட்டுமின்றி, கோர்ட்டில் தன் பெயர், விலாசம், சாவி தொலைந்த விவரம் யாவும் கூறிய பின்பு கையெழுத்தும் பெற்று டீலரிடம் திரும்பினார். அவரோ அதோடு விட்டபாடில்லை. ''உங்கள் அலமாரியின் சாவித் துவாரத்தை மூடியிருக்கும் வட்டமான பில்லையையும் கொண்டு வாருங்கள். அதன் பின்புறம்தான் சாவியின் எண் இருக்கிறது'' என்றார். (அந்த மூடி அவ்வளவு முக்கியமானது என்பது எவ்வளவு பேருக்குத் தெரியும்?) தற்போது டீலர், நண்பர் கொடுத்த தகுந்த ஆதாரங்களுடன் எண் குறித்துள்ள பில்லையையும் பம்பாய் தயாரிப்பாளருக்கு அனுப்பியுள்ளார். எப்போதுதான் சாவி வருமோ!

—அ. அப்துல் கரீம்

டுக்காக வாங்கின கடனைத்தான் இன்னும் தர ஒழியலே.

வெங்கப்பா: ஓகோன்னானும்! மாடசாமிகிட்டே நீங்களும் கடனா?

ரகு (வியப்புடன்): நீங்களும் என்று 'உம்' போடறீரே அக்கவுண் டன்ட் சார்..அப்படியானால்...

வெங்கப்பா: நான்கூடப் போன வருஷம் கொஞ்சம் வாங்கறாப் போல நிலைமை. பையனை மெடிகல்லே சேர்த்தேன் இல்லையா?

கணேஷ்: சரிதான். என் கதைதானா அவ்விடத்திலும்? நானும் ரண்டாயிரம் வாங்கியிருக்கிறேன்.

ரகு: நானும் வாங்கியிருக் கிறேன் ஓர் ஆயிரம்.

வெங்கப்பா: நம்மைக் காட் டிலும் சம்பளம் குறைவு அவனுக்கு. நாம் போய் அவன்கிட்டே கடன் வாங் கியிருக்கிறோம். வெட்கக்கேடு!

ரகு: நமக்குச் சம்பளம் அதி கமே தவிர சைட் பிஸினஸாக வெண் ணெய்க் கடை வைத்திருக்கவில்லையே?

வெங்கப்பா: சே! ஆபீஸ் பிரெஸ்டிஜே போச்சு.


ரகு: ஒரு இங்க் போடச் சொன்னால்கூடத் துரைக்கு முடியலே. என்ன அலட்சியம்!

கணேஷ்: மேஜையை நான் கைக்குட்டையாலே துடைச்சுக்கணு மாம். ஐயா வந்து ஒட்டடை விஷயத்தை முடிந் தால் கவனிப்பா ராம்...

வெங்கப்பா: இதுக்கெல்லாம் ஒரே வழிதான் இருக்கு.

கணேஷ்: என்ன, என்ன?

ஆனந்த்: சொல்லுங்க சார். புண்ணியமுண்டு.



வெங்கப்பா: நாமெல்லாம் பல்லைக் கடித்துக் கொண்டு எப்படியா வது அவன் கடனை அடைத்து விட் டால்..

கணேஷ்: ..பயலை வைக்க வேண்டிய இடத்தில் வச்சுடலாம்.

ரகு: பிரமாதமான ஐடியா! ஈட்டிக்காரன் காலிலே விழுந்தாவது என் கடனை அடைத்துடறேன்.

கணேஷ்: கிராமத்திலே எனக்கொரு வீடு இருக்கு. வந்த விலைக் குத் தள்ளிடறேன்.

வெங்கப்பா: சீட்டு ஒண்ணு பிடிச்சிருக்கேன். போகுது கழுதை. ஐந்நூறு தள்ளி எடுத்திடறேன்.

ஆனந்த்: ஒய்ஃப் ஜுவெல்ஸ் கொஞ்சம் இருக்கு. விற்றாவது தீர்த் துடறேன்.

காட்சி -2

(மாடசாமியிடம் இருந்த கடனை எல்லோரும் அடைத்த மறுநாள். மாடசாமி வழக்கம்போல டீக்கான டிரெஸ்ஸில் டாணென்று எட்டரைக்கு அடியெடுத்து வைக்கிறான்.)

வெங்கப்பா: என்ன, ஐயா வுக்கு ஆபீஸ் டைம் என்னன்னு தெரியுமில்லியா?

மாடசாமி (திடுக்கிட்டு): சரியான டைமுக்குத்தானே வந்திருக் கிறேன். வாட்சை வேணும்னா பாருங்க.

ஆனந்: வாட்சை ஏன் பார்க்கணும்? கொட்டாப்புளி மாதிரி வால்கிளாக் இருக்கே. அதைப் பார்.

மாட: நின்னுபூட்டி ருக்கு. ஒண்ணரை காட்டுது.

வெங்கப்பா: வளவள ன்னு பேசாமல் முதலிலே அதுக் குக் கீ கொடுப்பா. பாங்கியா லட்சணமாவா இருக்கு இது?

(ரகு விறுவிறுப்பாக உள்ளே வருகிறான். தன் ஸீட்டில் போய் உட்கார்கிறான்.)

ரகு: இந்தாப்பா மாட சாமி. சீக்கிரமாக ஒரு டம்ளர் தண்ணி கொண்டா. க்விக்.

மாடசாமி: தண்ணி?



"'பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத சப்ளை செய்வதை நான் கண்டிக்கிறேன், சார்!''

''நீ சொல்வதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேம்பா.''

இப்பத்தான் சார் வர்ரே. அதுக்குள்ளே யுமா?

ரகு: அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசாதே. தண்ணி கேட்டாக் குடு.

மாடசாமி: டம்ளர் இருக்குதோ, தாரவாந்து பூடுச்சோ...

காஷியர் கணேஷ் (வந்துகொண்டே): அது எப்படிப்பா தாரை வாந்து பூடும்? எவர் சில்வர் லோட்டா வாச்சே. கொஞ்சமாவது உனக்கு அக்கறை இருந்தால்தானே...

மாடசாமி: சரிதான் சார். தேடிப் பார்த்துக் கொண்டாரேன். அரை அவுரு ஆகும்.

ரகு: இப்ப அஞ்சு நிமிசத்திலே வந்தாகணும் தண்ணி. குடிக்கறதுக்குக் கேட்கலே. ஸ்பாஞ்சுலே விடுவதற்குக் கேட்கறேன். ஆபீஸ் வேலை தான். தெரிஞ்சுக்கோ...

(ஏஜண்ட், கையில் பிரீஃப் கேஸுடன் எரிச்சலுடன் வந்து கோபமாகத் தன் அறைக்குச் செல்கிறார், விஷ் செய்தவர்களுக்கு அரை குறையாய்த் தலையாட்டியபடி. ஏஜண்டின் அறைக்குள்ளிருந்து அடுத்த கணம் சத்தம் வருகிறது.)

ஏஜண்ட்: மாடசாமி! ஏ, மாடசாமி!

(மாடசாமி உள்ளே விரைகிறான்.)

வெங்கப்பா (சிரிப்புடன்): ரகு, உன் குண்டு இவ்வளவு சீக்கிரம் வெடிக்கும் என்று நான் நம்பவில்லே.

ரகு: சும்மாவா! ஏஜெண்ட் மேஜைமீது முழுசாக ஒரு புட்டி இங்க் அல்லவா கொட்டி வைத்திருக்கிறேன்! பயலுக்கு நம்மகிட்டே வாங்கின டோஸ் பற்றுது. மோதிரக் கையால் குட்டுப்படணும்.

ஆனந்தஜி: படட்டும். நன்றாகப் படட்டும்.

(சில நிமிஷம் கழித்து.)

வெங்கப்பா (வியப்புடன்): என்ன திடீரென்று அலை ஓய்ந்த மாதிரி ஏஜண்ட் ரூம் கப்சிப்பென்றாகிவிட்டது.

கணேஷ்: ஏன் சார், நம்ம கிட்டே வாயாடற மாதிரி ஏஜண்ட் சார்கிட்டே ஏதாவது சொல்லி, அவர் அவனை அறைஞ்சு, எதிர்பாராத ஷாக்கிலே மயங்கி விழுந்திருப்பானோ?

ரகு: ஒரு கால் அவன் ஏஜண்ட் மீது கையை வெச்சு அவர் தான் மயக்கமாயிட்டாரோ...

(ஏஜண்டின் அறைக் கதவு திறக்கிறது. மாடசாமி வெளிவருகிறான். பின்னால் ஏஜெண்டு.)

வெங்கப்பா: சார், கடியாரம் நின்னு பத்து நாளாச்சு. மாடசாமிகிட்டே நூறு தரம் சொல்லியிருப்போம். கீயே கொடுக்கலே.

ஏஜண்ட்: என்ன மிஸ்டர் வெங்கப்பா...இதெல்லாம் சின்ன வேலை. ஸில்லி திங்க்ஸ்...நாம பின்னே என்னதான் பண்ணுகிறோம்?

வெங்கப்பா (அதிர்ச்சியுடன்): நாங்களே கடியாரத்துக்குச் சாவி கொடுக்கணும் என்கிறீர்களா?

ஏஜண்ட்: ஆமாம். இதிலே என்ன கௌரவக் குறைவு? நம்ம வீட்டிலே வால் கிளாக் இருந்தால் அதுக்கு நாம கொடுக்க மாட்டோமா?

கணேஷ்: காஷ் கவுண்ட்டரில் ஒட்டடையை நீங்களே பாருங்கள்... யார் யார் என்ன வேலையைச் செய்யணுமோ அது அதை அவங்க செய்தால் தானே சார் நல்லது ... நானா ஒட்டடை அடிக்க முடியும்?

ஏஜண்ட்: நீங்க அடிக்காவிட்டால் நான் அடிக்கிறேன்.

(மூலையிலிருந்த ஒட்டடைக் கொம்பை எடுத்து ஒட்டடை அடிக்க ஆரம்பிக்கிறார். காஷியர் ஓடிச் சென்று அவர் கையைப் பற்றுகிறார்.)

கணேஷ்: விடுங்க சார். நீங்களெல்லாம் இதைச் செய்யக் கூடாது. லெட் மாடசாமி டு தீஸ் திங்க்ஸ்...

ஏஜண்ட்: மாடசாமி இதை விடப் பெரிசா ஒன்றைச் செய்து நம் பிராஞ்ச் மானத்தைக் காப்பாற்றி யிருக்கிறார்.

கணேஷ்: மாடசாமி பிராஞ்ச் மானத்தைக் காப்பாற்றினார்! என்ன சார் சொல்கிறீர்கள்?

ஏஜண்ட்: சொல்கிறேன். எத்தனை லட்சம் டெபாசிட் கலெக்ட் பண்ணி என்ன பிரயோசனம்? நம்ம டார்கெட்டுக்கு இருபதாயிரம் ஷார்ட் அடித்தது. நானும் எத்தனையோ இடத்திலே முண்டிப் பார்த்துவிட்டேன். பைசா பெயரவில்லை. தக்க சமயத்துக்கு நம்ம மாடசாமி தன் கிட்டேயிருந்த இருபதாயிரத்தை வாலண்டரியா நான் கேட்காமலே நம்ம பிராஞ்சிலே டெபாஸிட் பண்ணப் பெருந்தன்மையுடன் முன்வந்தார். இல்லாவிட்டால் அவ்வளவு திரட்டியதற்கும் பயன் இல்லாமல் போயிருக்கும், புரிந்ததா? மிஸ்டர் மாடசாமிக்கு இந்த பிராஞ்சே ரொம்பக் கடன்பட்டிருக்கு.

மாடசாமி (ரகுவிடம் [illegible]லாக): பேனாவுக்கு இங்க் போடணும் னீங்களே?

ஏஜண்ட்: என்ன ரகு, இங்க் போடணும்னு நான் போட்டுத் தர மாட்டேனா? மிஸ்டர் மாடசாமி டீ சாப்பிடப் போகட்டும். இங்க் பாட்டில் எங்கிருக்கிறது?

ரகு: நானே போட்டுக் கொள்கிறேன் சார்.

(ஏஜண்ட் தன் அறைக்குத் திரும்புகிறார்.)

ரகு (தலையில் அடித்துக் கொண்டே): இதுக்கா போய் நான் ஈட்டிக்காரன் காலிலே விழுந்தேன்? மடையன்! மடையன்!

கணேஷ்: ஏழாயிரம் பெறு மானமுள்ள வீட்டை மூவாயிரத்துக்கு விற்றேனே, என் புத்தியை என்னவென்று சொல்ல?

வெங்கப்பா: அநியாயமா ஐந்நூறு தள்ளிச் சீட்டை எடுத்தேன். என்னைப்போல முட்டாள் உண்டா? என் புத்தியைச் செருப்பாலே அடித்துக் கொள்ளணும்.

ஆனந்த்ஜி: ஒய்ஃப் ஜுவெல்ஸை எல்லாம் விற்றுத் தொலைத்தேன். என் புத்தியை மாடசாமியின் செருப்பாலே அடிக்கணும்!


வீட்டுக்கு எதிரில் ஒரு கோவில் இருந்தால் என்ன செய்ய வேண்டும்?

கோடம்பாக்கம் பசுமர்த்தி தெருவில் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு வீட்டுக் காம்பவுண்ட் சுவரில் ஒரு சாமி சிலையை வைத்து மாடம் கட்டியிருந்தார்கள்.

காரணம்: இந்த வீட்டின் எதிரே ஒரு கோவில் இருக்கிறது. கோவிலின் எதிரே வீடு கட்டுவது சாஸ்திரப்படி சரியல்ல. ஆகையால் எதிர்பாராமல் அப்படி ஏற்படும்போது தங்கள் வீட்டுச் சுவரில் ஒரு சாமி சிலையை வைத்துக் கோவில்போல் செய்து விடுவார்களாம்.

தெருவின் நேர் எதிரேயுள்ள தெருக்குத்து வீடுகளுக்குக்கூட இப்படிச் செய்து விடுவார்களாம். சிவாஜி கணேசன் வீட்டு வாசலில் உள்ள கோவில்கூட இப்படி ஏற்பட்டது தானும்.

—பேபி



7

''துருவனே, நீ அழிவு இல்லாத துருவன்; சத்தியத்துக்குக் காரணமானவன். உன்னைச் சுற்றி இருக்கும் நட்சத்திரங்களுக்கு நீ கட்டுத் தறி போல இருக்கிறாய். சத்துருக்கள் உபாதை இல்லாமல், இவளை உன் போல ஸ்திரமாக இருக்கச் செய்.''

—பெண்ணுக்குத் துருவ நட்சத்திரத்தைக் காட்டும் போது சொல்லப்படும் மந்திரத்தின் அர்த்தம்.

சூரியனின் காலைக் கதிர்கள் ஹாலினுள் ஊடுருவி, சோபாவில் கால்களைத் தூக்கி மடக்கி உட்கார்ந்து பேப்பரைப் பார்த்துக் கொண்டிருந்த வசுவின் மடிமேல் விழுந்தன. இரவு முழுதும் தூங்காத கண்கள் பொங்கி வலிக்க, அவள் தன்னையே வெறுத்துக் கொள்ளும் நிலையில் இருந்தாள். கடிகாரம் எட்டு அடித்ததைக் கேட்டபோது கோபியின் நினைவு மனத்தில் தோன்றியது. காலை ஆறு மணிக்கு அவன் சென்ட்ரலை அடைந்திருப்பான். இப்போது திருவல்லிக்கேணி அறையில் இருப்பான். இன்னும் ஓரிரு மணி நேரத்தில், குமாஸ்தா பதவியிலிருந்து சூபரிண்டெண்டாக உயர்ந்தவன், உதவி மானேஜர் பதவியில் அமர்ந்திருப்பான்.

''என்னடி வசு, கண்ணை மூடிக் கொண்டு பேப்பர் படிக்கிறியா?'' நித்யாவின் குரல் அவளைக் கண் திறக்கச் செய்தது. ஏறிட்டுப் பார்த்தாள்.

''எதையோ நினைச்சுட்டு நீ உன்னையே தின்னுட்டிருக்கே!'' என்று ஆரம்பித்த நித்யா, ''நீ எதைத் தின்பே. . . கார்த்தாலேயும், ராத்திரியும் பசித்துக் கொண்டே இருக்கு போலிருக்கு, கோபியைக் கடிச்சுக் கடிச்சுத் தின்கறே!'' என்றாள்.

''உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போயேன், நித்யா!''

''போயிட்டுத்தான் இருக்கேன். நீயும் புறப்படு. . நானும் தாத்தாவும் வக்கீலைப் பார்க்கக் கிளம்பறோம். வா, போகலாம்!''

''நான் வரலை. . .ராத்திரி சரியாவே தூங்கலை. அசதியா இருக்கு. நீ போனதும், இந்த சோபாவிலே காலை நீட்டிவிடுவேன். . .''

நித்யா சிரித்தாள்.

''ரொம்ப சரி. பேப்பரைப் போர்த்திட்டுத் தூங்கு. . ஒன்பது ஒன்பதரைக்கெல்லாம் வந்துடறோம்.''

நித்யா போனபிறகு வசு எழுந்தாள். கால்கள் சோர்ந்து கடுத்தன. வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. கண்ணை மூடினால், அப்பா, கோபி, மரக்கடை எல்லாம் சுற்றிச் சுற்றி வருகின்றன.

திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. பல ஆண்டுகளுக்கு முன் அப்பா வேலை பார்த்த அந்த மரக்கடைக்குச் சென்று பார்த்தால் என்ன?

பொள்ளாச்சி சந்தை, ரெயில்வே ஸ்டேஷன் எல்லாம் கடந்து வேட்டைக்காரன் புதூர் செல்லும் பாதையில் இருந்தது ஆனைமலை மரக்கடை. அவள் அதை அடையும் போது மணி எட்டே முக்கால்.

கடைக்கு முன்னால் ஒரு லாரி

ி.வி. ஆர்

லாரி சென்றது. அதைத் தள்ளிய ஆட்களும் வெளியேறிய பிறகு வசு மெதுவாக நோட்டம் விட்டுப் பார்த்தாள்.

ஒரு கிழவன் எதையும் லட்சியம் செய்யாமல் தன் புகையிலையின் ரசத்தில் மெய் மறந்திருந்தான். அவன் அவளைப் பார்க்கவில்லை. அவள் கடையினுள் பிரவேசித்தாள்.

"என்ன அம்மா வேணும்?"

ஒரு சின்னஞ்சிறு அறையிலிருந்து நெற்றி நிறைய விபூதியும் குங்குமமுமாய் இருபத்தெட்டு அல்லது முப்பது வயது மதிக்கத்தக்க ஒருவன் வந்து நின்றான்.

"உங்ககிட்டே என்ன மரம் இருக்கு?" என்றாள்.

"உங்களுக்கு என்ன மரம் வேண்டும்?"

"ரோஸ்வுட் இருக்கா?"

"இல்லேம்மா. உசத்தி தேக்கு இருக்கு. இப்பவெல்லாம்

நின்று கொண்டிருந்தது. பத்து அடி நீளமுள்ள ஒரு தேக்கு மரத்தை நாலைந்து பேர்களாக லாரியிலிருந்து கீழே உருட்டி விடுவதில் ஈடுபட்டிருந்தார்கள். லாரியை விட்டு இறங்க மனமில்லாதது போல அந்த மரம் கிடந்தது. இன்னும் இரண்டு மூன்று பேர் வந்து கை கொடுத்த பின், வேறு வழியின்றி மரம் கீழே உருண்டு விழுந்தது.







தலைக்கு மேலே வெள்ளம் போன பிறகு சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன?

சிவகுமாரின் தலைக்கு மேல் இருப்பவர்: புஷ்பா.

படம்: தங்கத்திலே வைரம்.

—திரைஞானி

ரோஸ்வுட் வைச்சுக்கறதில்லே.''

''அப்படியா. . .? நீங்க ரொம்ப நாளா இங்கே இருக்கிறீர்களா?''

''முதலாளி எட்டு வருஷத்துக்கு முன்னாலே இந்தக் கடையை வாங்கினார். அதிலேருந்து இருக்கேன்.. ஏன் கேட்கறீங்க...''

''ரோஸ்வுட்தான் இல்லியே. நான் வறேன். . .வந்து. . . இந்தக் கடையிலேதான் சிவராமன்னு ஒருத்தர் ரொம்ப வருஷத்துக்கு முன்னே இருந்தார் போலிருக்கு. உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாதும்மா. எனக்கு ராமநாதபுரம் ஜில்லா. எட்டு வருஷமாத்தான்..கொஞ்சம் இருங்க.. இந்தாப்பா மயில்சாமி, இங்கே வா. அவன் நாப்பது வருஷமா இருக்கான். அவனுக்குக் கண்டிப்பாகத் தெரிஞ்சிருக்கும்.''

மயில்சாமி, தன் புகையிலை மயக்கம் கலைந்து விட்டதே என்ற எரிச்சலுடன் எழுந்திருப்பதாகத் தோன்றியது வசுவுக்கு.

''பரவாயில்லே, நீங்க அங்கேயே இருங்க. நானே வறேன்.''

இரண்டடி நடந்த கிழவன், வசு அருகே வந்ததும், ''என்ன?'' என்று கேட்டான்.

அவனுடைய சுருங்கித் தொங்கிய தாடையும், நெற்றியின் வயசு மடிப்புகளும், எழுபது வயது இருக்கும் என்று காட்டின.

''மரம் எடுக்கலாம்னு வந்தேன். அப்படியே சிவராமனைப்பத்திக் கேட்கலாம்னு தோன்றிற்று.''

''எந்த சிவராமன்?''

''முன்னே இங்கே குமாஸ்தாவா இருந்தாராம்...''

''அவரா! நாலு வருஷம் இந்தக் கடையிலேதான், அதோ அந்தப் பிள்ளையாண்டான் மாதிரி இங்கே குமாஸ்தாவாக இருந்தாரு. பிறகு ஒரு நாள் கடைக்கு வரலே. உடம்பு சரியில்லேன்னு நினைச்சோம்..அப்புறம், ரொம்ப நாளைக்கு அப்புறம்தான் தெரிஞ்சுது, ஆள் ஊரை விட்டு ஓடிப் போயிட்டார்னு...''

அவளுக்கு நெஞ்சை என்னவோ செய்தது.

''ஓடிப் போயிட்டாரா!''

''ஓடிப் போனாரோ, இல்லே நடந்துதான் போனாரோ, கடையை விட்டுப் போயிட்டாரு. அவ்வளவுதான்...ஆமாம். அவரைப்பத்தி நீங்க ஏன் விசாரிக்கிறீங்க?''

ஏதோ நொண்டிச் சமாதானம் சொல்லிவிட்டு அவள் மகாலிங்கபுரத்தை அடைந்தபோது மணி பத்து. நித்யா இன்னும் வரவில்லை.

சிறு துளி பெரு வெள்ளம்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யுங்கள்

TNSC BANK

டெபாஸிட்டுகளுக்கு எங்கள் வட்டி விகிதங்கள் :

1. சீசன் டெபாஸிட்டுகள்- ரூ 1000/-மும் அதற்கு மேலும் — வருடத்திற்கு
   15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை — 3.25%
   46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை — 3.75%
2. தவணை டெபாஸிட்டுகள்- ரூ 100/-ம் அதற்கு மேலும்

காலம்	வருடத்திற்கு
91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக	5.75%
6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக	6.25%
9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக	7.25%
1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுககு குறைவாக	8.25%
3 வருடங்களும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை	9.25%
5 வருடங்களுக்கு மேல்	10.25%

3. சேவிங்ஸ் கணக்கு — 5.75%
4. நடப்பு (current) கணக்கு — வட்டி கிடையாது



தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.

379, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோடு, சென்னை-600 001
தந்தி : 'URBANK' போன் : 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ் :MS 7225

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு), அண்ணா சாலை (அண்ணா சிலை), அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர், கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லீஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெனாய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி

TNSCB : 122/78

சோபாவில் உட்கார்ந்தவள் கண்ணை மூடிக் கொண்டாள்.

"என்ன வசு, ரொம்பக் களைப்பா?" கோபி!

தனக்கே உரித்தான புன்முறுவலுடன் கேட்ட கோபி, சோபாவில் அமர்ந்து, அவளுடைய தோளைத் தொட்டான்.

"நீங்களா? மெட்ராஸ் போகலியா?"

அவளுடைய கன்னத்தை வருடிக் கொண்டே, "ஈரோடிலே இறங்கி, பஸ்ஸிலே ஓடோடி வந்தேன் வசு..எனக்கென்னமோ மனசே எதிலும் ஓடலே... நீ அப்படிப் பிரிஞ்சு போனது முள்ளாய்க் குத்திட்டே இருந்தது." என்றான் அவன்.

"நீங்கதான் முள்ளாக் குத்த முடியும்னு நினைச்சேன். முள்ளையே முள் குத்தறது ஆச்சரியமாயிருக்கு."

"நான் என்ன பேசினாலும் உனக்கு அது முள்ளாய்க் குத்தினால், நான் என்ன செய்வேன் வசு...ஆமாம், இது என்ன டாகுமெண்ட், இங்கே கிடக்கு?"

அவன் டீப்பாயின் மேலிருந்த தஸ்தாவேஜை எடுக்கவும், வசு குபீரென்று பாயவும் சரியாக இருந்தது.

"அதை என்கிட்டே கொடுங்க."

"என்ன டாகுமெண்ட்?"

"என்னவாக இருந்தா உங்களுக்கு என்ன?"

"நான் என்ன இதைச் சாப்பிட்டுவிடவா போகிறேன்?"

அவன் டாகுமெண்டைப் பிரித்துப் பார்க்க ஆரம்பித்தான்.

அவள் ஆத்திரத்துடன் அதை அவனிடமிருந்து பறித்தாள். அவள் பறித்த வேகத்தில், கடைசித்தாள் அவன் கையிலேயே சிக்க, ஓரிரு தாள்கள் கீழே சிதறின.

அவன் கண்களில் வியப்பு மேலிட அவளைப் பார்த்தான்.

"அடே! கே. ஆர். சிவராமன்! உன் அப்பா அல்லவா? மரக்கடை குமாஸ்தா என்று சாட்சிக் கையெழுத்துப் போட்டிருக்கிறாரே!"

அவள் உதடுகள் துடித்தன. வார்த்தைகள் வரவில்லை.

"இந்தக் காலத்திலே குமாஸ்தாவுக்கு நானூறு முன்னூறுன்னு சம்பளம் கிடைக்கிறது. உன் அப்பா காலத்திலே முப்பது நாப்பதுக்கு மேலே கொடுத்திருக்க மாட்டாங்க."

"போதும் நிறுத்துங்க."

"குமாஸ்தாவாக இருந்தவர் இன்றைக்கு இவ்வளவு பெரிய இண்டஸ்டிரியலிஸ்டாக உயர்வதென்றால்.."

அவள் கண்களில் கண்ணீர் முட்டிற்று.

"ஐயையோ! அழுகிறாயா!" அவன் பரிகாசம் செய்தான். "நீ அழுதால் நான் இப்பவே போய்விடுவேன். நான் போகவேண்டாம்னு அழுகையை நிறுத்து. தன் அப்பா குமாஸ்தான் ஒவ்வொரு பெண்ணும் அழ ஆரம்பிச்சா, நம்ம நாட்டிலே பாதிப் பெண்கள் அழுதுட்டுத்தான் இருக்கணும்."


அவள் வெடித்தாள்.

"உங்க பேச்சுப் புளிச்சுப் போயிட்டுது. நீங்க போகிறதானால் போங்கள்! யாரும் தடுத்து நிறுத்தவில்லை."

"அதுக்கு முன்னாடி..." கோபி சிரித்தான்.

"சிரிக்காதீங்க..."

"நான் வந்த காரியத்தைச் சொல்கிறேன் வசு..



"வில்லன் பைரவனைக் கான்ஸல் பண்ணுங்க சார்!"
"ஏனம்மா?"
"இதுவரை அவரே 14 படங்களில் என்னைக் கற்பழிச்சாச்சு. வேறு புது ஆள் போடுங்க."

சுவர் யுத்தம் ?

கோவை நகரில் கௌலிபிரவுன் ரோட்டில் ஹவுஸிங் யூனிட் காம்பௌண்ட் சுவரில், பொது மக்கள் அனைவரும் நின்று படித்து ரசிக்கும் வண்ணம் சுவரெழுத்துக்கள் காணப்படுகின்றன. கிறிஸ்தவ சமயத்தார்க்கும் பெரியார்க் கட்சிக்காரர்களுக்கும் இச்சுவரெழுத்துப் போட்டி நடைபெற்றுள்ளது.

■■ இயேசு சீக்கிரம் வருகிறார்.

—அல்லேலுயா இயக்கம்.

அதுவரை மக்கள் என்ன செய்வது?

—தி. க.

■■ அதுவரை பாவம் செய்தலை விட்டு மனந்திருந்தி நட!

—அ. இயக்கம்,

இப்போது எங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார்?

—தி. க.

■■ நீ மனம் திருந்தட்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறார். —அ. இ.

—பா. கிருபாகரன்

இப்பத்தான் யாருமில்லியே... உனக்குக் கூச்சமா இருந்தா, வாசல் கதவையும் ஜன்னல்களையும் சாத்திடறேன்... நித்யா வர்றத்துக்கு நாழியாகும்... சோபா நீள அகலமா இருக்கு...''

அவன் அவளுடைய கையைப் பற்றி இழுத்தான். அவளுடைய உடல் அவன் மேல் விழுந்தது. புடவை விலகியது. இரு கைகளாலும் அவளுடைய முதுகைச் சுற்றி பின்னிக் கொண்டான். அவனுடைய மார்பை விட்டு விலக முடியாமல் அவள் திணறினாள். தன் உதடுகளை அவனுடைய வாய் கவ்விப் பிடிப்பதை அவள் உணர்ந்தாள்.

''போங்கள் வெளியே!''

வசு தொண்டை கிழியக் கத்தினாள்.

''என்னம்மா, நான் இப்பத்தான் உள்ளே நுழைஞ்சேன். அதுக்குள்ளே வெளியே போன்னு கத்தறியே...''

திடுக்கிட்டு விழித்த வசு, வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தாள்.

ஸ்டாம்ப்வெண்டர் கிட்டு மாமா புன்முறுவலுடன் நின்றுகொண்டிருந்தார்.

''தூங்கிவிட்டேன், சார்.''

''அதிலே ஒரு சொப்பனம் இல்லே? சொப்பனத்திலே யாரை விரட்டிட்டிருந்தே?''

''ரொம்ப ஸாரி,'' என்ற வசு, ''தயவு செய்து உட்காருங்கள். இதோ வரேன்,'' என்று சொல்லி அவசர அவசரமாக முகத்தை அலம்பிக்கொள்ளச் சென்றாள்.

அவள் மீண்டும் ஹாலுக்குள் வந்தபோதும், அவள் ஓரளவு நிதானம் அடைந்திருந்தாள். அப்பாவைப்பற்றி மேலும் விவரம் அறிய இது ஒரு சந்தர்ப்பம்..

''என்ன, நித்யாவும் தாத்தாவும் இன்னும் திரும்பி வரலையாக்கும்?''

''இல்லே,'' என்ற வசு, ''உங்க கையெழுத்து ரொம்ப நல்லாயிருக்கு, மாமா...மணி மணியாக இருக்கு,'' என்றாள்.

''நீ எங்கே பார்த்தே என் கையெழுத்தை?'' என்று கேட்ட கிட்டு மாமா, ''தமிழ்நாட்டிலேயே என் கையெழுத்துதான் பெஸ்ட்னு ரொம்பப் பேர் சொல்லுவார்கள்!'' என்றார்.

''நித்யா நேத்து ஒரு டாகுமெண்டைக் கொண்டுவந்தாளே அதிலே பார்த்தேன்.''

''ஓ, அதுவா. அது ரொம்ப நாள் முன்னாடி எழுதினது. இருபத்தஞ்சு வருஷத்துக்கு மேலே இருக்கும்.''

''அந்த டாகுமெண்ட்லே உங்க கையெழுத்தும், யாரோ மரக்கடை சிவராமன்னு போட்டிருந்ததே அந்தக் கையெழுத்தும்தான் லட்சணமாக இருந்தது.''

''கணியூர் ராமனாதனுடைய பிள்ளை சிவராமனா... அவன் இப்போ இண்டஸ்டிரியலிஸ்ட் அம்மா...உங்க மெட்ராஸ்லேதான் இருக்கான்.''

''அப்படியா! மரக்கடை குமாஸ்தா தொழிலதிபர் ஆனது பெரிய ஆச்சரியம்தான்.''

'' என்ன ஆச்சரியம்? ரெண்டும் ரெண்டும் நாலுன்னு எல்லா

ருக்கும் தான் கூட்டத் தெரியும். ஆனா அதை எப்போ கூட்டறது என்று ஒண்ணு இருக்கே... அதை அவன் நன்ருப் புரிஞ்சுட்டு கூட்டிருன். இன்னிக்கு மெட்ராஸ்லே ஒகோன்னு இருக்கான்.''

''எனக்கு ஒண்ணும் புரியவில்லே...''

''இந்த சிவராமனுடைய சிநேகிதனுக்கு ஒரு காண்ட்ராக்ட் கிடைச்சு இருந்தது. ஏதோ ஆர்மி டெப்போவுக்கு என்னமோ சப்ளே செய்யணுமாம். அதுக்குப் பத்தாயிரம் ரூபாய் டெபாஸிட் கட்டத் தேவைப்பட்டது. சிவராமன் எல்லார்கிட்டேயும் சிரிச்ச மூஞ்சியோட பேசுவான். அவன் நினைச்சா, எங்கேயிருந்தாவது கடன் வாங்கிக் கொடுக்க முடியும்னு சிநேகிதன் நினைச்சான்.''

''அப்புறம்? ரெண்டுபேரும் பார்ட்னராகி விட்டார்களாக்கும்.''

''அப்படி ஆகியிருந்தால், சிவராமனுக்கு நான் முட்டாள் பட்டம் கட்டியிருப்பேன். அவன் மேலே பெரும் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்த ஒரு பெண், கூடப் பிறந்த அண்ணனுக்கு ஹெல்ப் பண்ற மாதிரி கடன் கொடுத்து உதவினுள்.''

''யார் அந்தப் பெண்?''

''தங்கம்மா என்று பேர். தாயில்லாப் பெண். அப்பா படுத்த படுக்கை. இவன் அவருக்கும் சரி, அவளுக்கும் சரி ஒரு பெரிய தூணுக இருந்தான். பாவம், அவள் பார்க்கறதுக்கு அழகா இருக்க மாட்டாள். வெறும் கறுப்புன்னு பரவாயில்லேயே. தார்க்குச்சி மாதிரி இருப்பாள். சிவராமன் எத்தனேயோ இடங்களுக்குப் போய் ஜாதகங்கள் வாங்கிட்டு வருவான். பார்க்க வந்தவர்களெல்லாம், சொஜ்ஜி, பஜ்ஜி சாப்பிட்டதோடு சரி.. அண்ணு அண்ணுன்னு அவள் உயிரை விடுவா...தங்கை தங்கைன்னு இவனும்



மதுரைப் பல்கலேக் கழகத்தின் புதிய துணை வேந்தர் திரு.எஸ்.வி.சிட்டி பாபு சொன்னர்: ''நான் இந்தப் பல்கலேக்கழகத்துக்கு Vice - Chancellor ஆக இருப்பதைவிட Wise Chancellor ஆக இருக்கவே ஆசைப்படுகிறேன்.''

—அன்பன்

அலேயா அலேஞ்சான்.. கல்யாணம் நிச்சயமாறப்போ பணத்தைத் திருப்பிக் கொடுக்கறேன்னு கேட்டான்...அவள் அப்பா கிட்டே கெஞ்சிக் கூத்தாடி வாங்கிக் கொடுத்தாள்... அவ்வளவு நம்பிக்கை...''

''உம்... அப்புறம் என்ன ஆச்சு?''

''காண்டிராக்டை அவனே எடுத்துச் செய்தான். முன்னுக்கு வந்துவிட்டான்.... மெட்ராஸிலிருந்து திரும்பி வரவில்லே. இங்கே அந்தப் பெண்ணின் அப்பன் காரன் பிராணனே விட்டான். ஊரிலேருந்து பெரியப்பா வந்து அவளே ஊருக்கு அழைச்சிட்டுப் போனுர். கொஞ்ச நாள்லே கல்யாணமுமாச்சு..''

''தங்கை கல்யாணத்துக்கு அண்ணன் வரலேயா...''

''தந்தி கொடுத்திருந்தான்னு கேள்வி. காண்ட்ராக்ட் வேலேயிலே வரமுடியாமல் போயிருக்கும். கெட்டிக்காரன். ஒரு துரும்பு கிடைச்சுது. அதைப் பிடிச்சுட்டு ஒரு மகா சமுத்திரத்தையே தாண்டிவிட்டான்!''

''அந்தப் பெண் இப்போ எங்கே?''

''சிவலோகத்திலே. அவள் ஒரு அற்பாயுசு. ஒரு பிள்ளேயைப் பெத்துப் போட்டுவிட்டு போய்ச் சேர்ந்தாள். பேருதான் தங்கம்மா...சாகிறபோது கழுத்திலே மஞ்சள் சரடுதான் இருந்தது.''

''அப்படியா?''

''சரி, நான் உன்கிட்டே பேசிட்டே இருந்துட்டேன். பாவம், உன் தூக்கமும் என்னுலே கலேஞ்சுது. தூங்கு. நான் வருகிறேன்.''

வசு பதில் பேசவில்லே. அவளுக்குக் கோபி மீதிருந்த ஆத்திரம் இரட்டிப்பாயிற்று.

(தொடரும்)

கல்லூரி மாணவர்) இந்து இளைஞர் மன்றத்தின் மாநிலப் பேரவைத் தலைவராக இருக்கிறார். அநேக கல்லூரி மாணவர்கள் இந்து சமய வளர்ச்சியில் ஆர்வம் காட்டுகிறார்கள். சமய வழிப் போதனைகளைப் பேரவை நடத்தும் 'அருளோசை' பத்திரிகையின் மூலம் வெளியிடுகிறோம். மாணவர்களுக்குக் கடிதம் எழுதும் முறையில் நானே அந்தப் பத்திரிகையில் கட்டுரைகள் எழுதி, சமய விளக்கங்கள் கூறி வருகிறேன். ஒவ்வொரு பட்டதாரி மாணவனுக்கும் Hand Book of Hinduism என்ற புத்தகம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதே போல திருமுறைகள் திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் திரட்டு எவ்வளவு வேண்டுமானாலும் மாணவர்களுக்குக் கொடுக்கிறோம். பேரவை வெளியீடுகள் பெரும்பாலும் இலவச வெளியீடுகள்தாம். அதற்காக ஒரு அச்சகம் வைத்திருக்கிறோம். அலுவலர் மூலம் தங்களுக்குப் புத்தகங்கள் அனுப்பி வைக்கிறேன்.

சி: ரொம்ப நன்றி. அடிகளார் சமீபத்தில் ஏதோ 'ரிட் மனு' தாக்கல் செய்திருப்பதாக அறிந்தேன். அதைப் பற்றிக் கொஞ்சம் விளக்கலாமென்றால்.....

கு: தனியார் பள்ளிகளை ஒழுங்குபடுத்துவதென்று அரசு ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. இங்கேயே என் பக்கத்தில் பள்ளித் தாளாளர்கள் பல பேர்கள் நிற்கிறார்கள். அந்தச் சட்டத்தில் கிறிஸ்துவ மிஷனரிகளுக்கு 'மைனாரிடி' என்ற பெயரால் அரசின் அனுமதியின்றிப் பள்ளிகளைத் திறக்கலாம் என்று உரிமை கொடுத்திருக்கிறார்கள். நமக்கு அந்த உரிமை இல்லை. ஆகவே, அரசை எதிர்த்து 'ரிட்' போடுவதைத் தவிர வேறு என்ன வழி? கிறிஸ்துவர், இஸ்லாமியர் போன்ற நம்முடைய சமுதாய மைனாரிட்டி சகோதரர்களுடைய உரிமைகளுக்கு நாம் பாதுகாப்பாக இருப்பது நம் கடமைதான். ஆனால் கிறிஸ்துவ சமுதாயத்தில் பிறந்தவர் ஒரு பள்ளியை நடத்துகிறார் என்பதற்காகவே அது மைனாரிட்டி ஸ்கூல் ஆகி விடுகிறது. இந்து சமுதாயத்தில் பிறந்த ஒருவர் நடத்துகிறார் என்றால் அது மெஜாரிட்டி ஸ்கூல் ஆகி விடுகிறது. அந்த முறை தவறு என்பதுதான் என் கருத்து. கிறிஸ்தவர்கள், அவர்களுடைய சமுதாயம், மொழி, கலாசாரம், பண்பாட்டைக் காப்பாற்றிக் கொள்ள நடத்தும் பள்ளிகளுக்கு விதி விலக்கும் பாதுகாப்பும் அரசு கொடுக்கட்டும். ஆட்சேபணையில்லை. ஆனால் பொதுக் கல்வி நிறுவனங்களில்—அங்கே இந்துப் பிள்ளைகளும் படிக்கிறார்கள்—அப்படிப்பட்ட பள்ளிகளைத் திறப்பதற்கு அவர்களுக்கு முன் அனுமதி தேவையில்லை, எங்களுக்குத் தேவை என்று வருகிற போது அரசியல் சட்டத்தின் முன் நாங்கள் இருவரும் சமமாக நடத்தப் படவில்லை என்கிற அடிப்படையில் அரசை எதிர்த்து வழக்குப் போட்டிருக்கிறோம். அவ்வளவுதான்.

(அடுத்த இதழில் முடியும்)





> ஓ பெண்ணே! சூரியன் இந்திரன் முதலான தேவர்கள், நான் இல்லறம் நடத்த உன்னை எனக்கு அளித்துள்ளார்கள். அவர்கள் சாட்சியாக நான் உன்னை மணந்து கொள்ளுகிறேன். நீயும் நானும் முதுமை எய்தினுல்கூட, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதபடி உன் கையை நான் பிடிக்கின்றேன்.
>
> —கல்யாணத்தில் பாணிக்கிரகண மந்திரத்தின் அர்த்தம்.

8

"வசு."

"உம்...."

பிற்பகல் மூன்று மணிக்கு நித்யாவும் வசுவும், ஆளியாறு அணையை நோக்கிக் காரில் சென்றுகொண்டிருந்தார்கள். வெய்யிலே தெரியவில்லை.

"கோபி உன் கன்னத்தைக் கிள்ளியிருக்கிருரா?"

"உம்."

"எப்படி? இப்படியா?" நித்யா கிள்ளினுள்.

"டீ. .வலிக்கிறது."

"உன்னை இன்னும் என்னென்ன பண்ணிஞர்?"

வசு புன்னகை செய்தாள். "வயசு வந்த பெண் கேட்கிற கேள்வியா இது?"

"வயசு வந்த பெண்ணுக இருப்பதால்தான் இப்படி எல்லாம் கேட்கிறேன். இன்னும் என்னென்ன பண்ணிஞர்?"

"சும்மா இருக்க மாட்டாய்?"

"பூனை எலியைக் கவ்வுவதற்கும், தன் குட்டியைக் கவ்வுவதற்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கு இல்லையா?"

"பேசாமல் வா."

"வசு.." நித்யா நெருங்கி உட்கார்ந்தாள்.

"இப்படிக் கலாட்டா பண்ணிஞல் எப்படியடீ கார் ஓட்டுவது?"

"காரை நிறுத்துடீ . .ஹவ் கோர்ஸ்?"

"உன் ஆராய்ச்சியை வேறு எங்காவது கொண்டு போய் வைத்துக் கொள்."

"வசு."

"உம்."

"எனக்கும் கல்யாணம் ஆகுமுன் . ."

"உம்?"

"அதுக்கு முன்னுலே நீ எல்லாம் சொல்லித்

பி.வி.ஆர்

தரணும். கோபி நல்ல டீச்சரா?''

''ஏன், உனக்கும் டீச் பண்ணணுமா?''

''அமெரிக்காவாக இருந்தால், நீ டைவர்ஸ் பண்ணிக் கொள், எனக்கு டீச்சர் வேணும்னு சொல்லுவேன்..''

வசு அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. மௌனமானுள்.

ஆளியாறு அணைக்கட்டில் நீர் அப்போது அதிகம் இல்லை என்றாலும், நீர்ப்பரப்பைக் கண்டு வசு வியந்து போனுள். அணைக்கட்டின் மேல் நடக்க நடக்க, உடல் மேல் வீசிய மலைக் காற்றில் அவள் தன்னையே மறந்து கொண்டிருந்தாள்.

தன்னை மறக்கத்தானே அவள் அங்கு வந்ததே?

''டயமாகிறது வசு... மணி ஐந்தரை.. சீக்கிரம் இருட்டிவிடும்,'' என்று எச்சரித்தாள் நித்யா.

எட்டத்தில் ஒரு பெரிய படகுக் கார் வந்து நின்றது. அதிலிருந்து ஐம்பது வயது மதிக்கத் தகுந்த ஒருவரும், அவரைத் தொடர்ந்து இரு பெண்களும் இறங்கினுர்கள். அவர் புல் தரையில் உட்கார, பெண்கள் எதிர்த் திசையில் நடக்க ஆரம்பித்தார்கள்.

''வசு!''

''என்ன?''

''அவர் யார் தெரியுமா?''

''தெரியாது.''

''ஒரு காப்பி எஸ்டேட், இரண்டு ரப்பர் எஸ்டேட், ஊட்டியிலே, கோயமுத்தூர்லே பங்களாக்கள் எல்லாத்துக்கும் சொந்தக்காரர்.. .''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''தாத்தா வீட்டிலே பார்த்திருக்கேன்.''

''அப்படியா?''

''புதுப் பணக்காரர்..''

''அப்படின்னு?''

''எட்டு வயசிலே ஒரு வெள்ளைக்காரனுக்கு எடுபிடி ஆளா வந்தார். கூட இருந்து இருந்து, காப்பி எஸ்டேட்களின் நுணுக்கங்களையெல்லாம் கற்றுக் கொண்டார். கடைசியிலே எஸ்டேட் மானேஜராளுர். அப்புறம் வெள்ளைக்காரன் போகிறபோது, எஸ்டேட்டைப் பிரிச்சு, ஒரு பாதியை இவருக்குக் கொடுத்தான். அதை பலூன் ஊதற மாதிரி ஊதி ஊதி இன்னிக்கு இவ்வளவு பெரிய பணக்காரராக ஆகியிருக்கிருர். ஆளுல் ஒன்று. எல்லாம் சொந்த முயற்சி... யாரையும் ஏமாத்திச் சொத்துச் சேர்க்கலை...''

வசுவுக்குச் சுருக்கென்றது.

நித்யா தொடர்ந்து சொன்னது எதுவும் அவளுடைய காதில் ஏறவில்லை. அப்பாவை மறக்க ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்று அவள் நித்யாவுடன் வந்தாள். வந்த



என்.எஸ்... மணியம் பட... தில் கே. ஆர். விஜயாவுக்கு ... ஜோடியா... ரங்க மன்னு... என்ற நடி... புக் கல்லூ... மாணவரை...

இடத்தில், நித்யாவே சிவராமனைக் கொக்கி போட்டு இழுத்து அவளுக்கு முன்னால் நிறுத்திவிட்டாள்.

''புறப்படலாமா? டயமாயிற்று என்றுயா?'' வசு காரை நோக்கி நடக்கலானான்.

அங்கலக்குறிச்சி அருகே, கார் ஒரு வளைவில் திரும்பும்போது திடீரென்று ஒரு சத்தம் கேட்டது. சக்கரங்கள் ஆடின. வசு பிரேக்கை அழுத்தினாள். கார் நின்றது.

மீண்டும் ஸ்டார்ட் செய்தாள். இஞ்சின் அலறியது. கியரைப் போட்டாள். கியர் விழவில்லை. முதல் கியரிலிருந்து விடுவிக்கப் பார்த்தாள். சிக்கிக் கொண்டது.

குற்றமா?

போடலாம் என்று தோன்றி யிருக்கிறது. ஆனால் அவரை ஸ்கிரீன் டெஸ்ட்டில் பார்த்த விஜயா, ''சிறப்பாக நடிக்கிறார், நன்றாகவும் இருக்கிறார். ஆனாலும் வேண்டாம்,'' என்று கூறி விட்டாராம். காரணம்? ''ரங்கமன்னர் எனக்கு மகன்போல இருக்கிறார். எப்படி எனக்கு ஜோடியாக நடிக்க முடியும்? ''

—'அசோக்குமார்'



ரங்கமன்னர்

''நித்யா!''

''என்னடீ.. என்ன ஆச்சு?''

''கியர் பாக்ஸ் அவுட்.''

''இப்போ என்ன செய்யறது?''

''கார் ஓடாது.''

''அப்போ?''

''இங்கே எங்காவது பக்கத்திலே போன் இருக்குமா?''

ஒரு வழிப்போக்கன் சொன்னான்.

''இன்னும் ஒரு பர்லாங் போனா, ஒரு பங்களா இருக்கும்மா... அமிர்தம்மா பங்களான்னு கேட்டா சொல்லுவாங்க.. அங்கே போன் இருக்கு...''

அவர்கள் அமிர்தம்மா வீட்டை அடைந்தபோது மணி ஆறே முக்கால். போர்ட்டிகோவில் ஒரு சின்னஞ் சிறு கார் நின்று கொண்டிருந்தது.

படியேறிய நித்யா, ''அம்மா, அம்மா!'' என்று கூப்பிட்டாள்.

ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு, நாற்பத்தைந்து அல்லது நாற்பத்தெட்டு வயது மதிக்கத் தகுந்த ஒருத்தி அரக்குக் கலர் புடவையில் வந்து கொண்டிருந்தாள். அவள்தான் அமிர்தமாக இருக்க வேண்டும் என்று அவளுடைய முகத்தின் பொலிவைக் கண்டு புரிந்து கொண்டார்கள். நல்ல சிவப்பு நிறம். நெற்றியில் குங்குமமும் விபூதிக் கீறலும் மின்னின. கண்ணைப் பறிக்கும் வைரத்தோடு, வைர பேசரி.

அவளுடைய அலட்சியமான நடை அவள் பெரிய பணக்காரி என்று தூக்கிக் காட்டியது.

''நாங்கள் பொள்ளாச்சியிலிருந்து வந்தோம். கார் திடீரென்று ரிப்பேராகி விட்டது.''


''என் காரிலே பெட்ரோல் இரவல் கொடுக்கற அளவுக்கு இல்லே.'' மிடுக்குடன் சொன்னாள் அமிர்தம்.

''எங்களுக்குப் பெட்ரோல் வேண்டாம். காரை ஒர்க்ஷாப்புக்குத்தான் எடுத்துக் கொண்டு போகணும்... அதுக்கு எங்க கோயமுத்தூர் பிராஞ்சுக்கு போன் பண்ணினால்தான் முடியும். அவர்கள் இன்னிக்கு ராத்திரியே ஆள் அனுப்புவார்கள்,'' என்றாள் வசு.



பெரியவளாகி உங்களை விட்டுப் பிரிந்த நெடுங்காலத்திற்குப் பின்பும் புகைப்படம் அவளை மறவாது.

SIMOES/AG/2/75 TAM



ஒவ்வொரு 120 ரோல் பிலிம் சுருளுக்கும், உங்களுக்கு 12பெரிய (6x6) புகைப்படங்கள் கிடைக்கும். தனி விலைக்கு ஒரு விசேஷ தோளுறை போர்ட்ரேய்ட் லென்ஸ் மற்றும் ஃபனாக்கள் கிடைக்கின்றன. துல்லியமான பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மென்டுகளுக்கும் ஆக்ஃபா கேவர்ட் போட்டோ பேப்பர்களே வேண்டுமென வற்புறுத்துங்கள். அங்கீகாரம் பெற்ற எல்லா ஆக்ஃபா கேவர்ட் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஏகபோக விநியோகஸ்தர்கள்:

ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்.,

மர்ச்சென்ட்ஸ் சேம்பர்ஸ், 41, நியூ மெரீன் லைன்ஸ்,

பம்பாய்-400 020.

கிளைகள்: பம்பாய் . நியூ டெல்லி . கல்கத்தா . சென்னை .

® புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆன்ட்வெர்ப/லீவர்குஸன் அவர்களின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க். தயாரிப்போர்: நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

"டிரங்க் காலா?"

"ஆமாம். பேசி முடிஞ்சதும், என்ன சார்ஜ் ஆச்சுன்னு விசாரித்துப் பணத்தைக் கொடுத்துவிடுகிறோம்," என்றாள் நித்யா.

இருவரையும் ஏற இறங்கப் பார்த்தாள் அமிர்தம். அவளுடைய பார்வையைச் சந்தித்தபோது, வசு அவளுடைய கண்களின் கூர்மையைக் கண்டு பிரமித்துப் போனாள்.

இந்த முகமும் கண்களும் இருபது இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் எவ்வளவு அழகாக இருந்திருக்கும்! எத்தனை உள்ளங்களைக் கிளறித் திணற அடித்திருக்கும்!

அமிர்தம், "சரி, சீக்கிரம் பண்ணுங்கள். டிரங்க் கால் கிடைச்சுப் பண்ண எவ்வளவு நேரமாகும்?" என்றாள்.

"லைட்னிங் காலாகப் போடுகிறோம்," என்றாள் வசு.

அவளிடம், "நம்பர்?" என்றாள் நித்யா டயலில் கை வைத்தபடி.

வசு நம்பரைச் சொன்னாள். பிறகு, அமிர்தம் பக்கம் திரும்பி, "உங்க பெயர்தானே அமிர்தம்மா?" என்று கேட்டாள்.

அமிர்தம் வாயால் பதில் பேசவில்லை. தலை அசைத்தாள். பிறகு, சோபாவில் அமர்ந்து ஒரு செய்தித்தாளை எடுத்து வைத்துக்கொண்டாள்.

தன்னையும் நித்யாவையும் அவள் உட்காரகூடச் சொல்லவில்லையே என்ற தாபம் வசுவின் மனத்துள் தோன்றினாலும், அவள் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. முன்பின் தெரியாத இடத்தில், ஓர் உதவியை நாடி வந்திருக்கிற இடத்தில் உபசாரத்தை எதிர்பார்ப்பது பண்புக் குறைவு என்று அவளுக்குத் தெரியாமலில்லை.

எதிர்பார்த்ததற்கு முன்பாகவே கோயமுத்தூர் லைன் கிடைத்தது.

"சார், நான் அங்கலக்குறிச்சியிலிருந்து பேசறேன். நானும் உங்க கம்பெனி ப்ரொப்ரைட்டர் சிவராமனுடைய பெண் வசுவும் இங்கே மாட்டிக்கிட்டிருக்கோம்.. கியர் பாக்ஸ்லே ஏதோ கோளாறு.."





ஒரு நண்பர் வீட்டில் பிரஷர் குக்கருக்குப் பக்கத்தில் ஒரு சின்ன நோட் புக்கைக் கண்டேன். அதன் பயன் :

குக்கரில் வைக்கப்படும் பொருள்கள், 7,8 நிமிஷம் என ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வேக வைக்க வேண்டும் அல்லவா? அதைச் சரிவர அமுல்படுத்த, பிரஷர் குண்டைப் போட்ட நேரத்தை அந்தச் சின்ன நோட்டில் எழுதி விடலாம். இடையே வரும் அலுவல்களினால், பேச்சால் அந்த நேரத்தை மறந்துவிடாமலிருக்கவும், மாறாக ஒன்றை நினைத்துவிடாமலிருக்கவும் அந்தக் குறிப்பு உதவுகிறது. 'உஸ்' என்ற சப்தம் வர 4-5 நிமிடங்கள் ஆகின்றன என அனுபவத்தில் தெரிகிறது. ஆதலால் சாதம் போன்றவைகளுக்கு 11-12 நிமிஷத்தில் எடுத்துவிடலாம் குக்கரை. 'காஸ்கட்' சரிவர வேலை செய்யாமல் 'உஸ்' வராவிட்டாலும் கவலைப்பட வேண்டியதில்லை!

— வனஜி

நித்யா பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்துக்கொண்டிருந்த வசு சோபாவிலிருக்கும் அமிர்தம் அசைவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள்.

திடீரென அமிர்தத்தின் முகத்தில் ஒரு தனிப் பிரகாசம் பிறந்துவிட்டதாக வசுவுக்குத் தோன்றியது. அவள் தன்னையே ஒரு புதுப் பார்வையுடன் பார்ப்பதையும் உணர்ந்தாள்.

பேசி முடித்ததும், "வசு, இப்பவே அனுப்புகிறேன் என்றார் மானேஜர்.. பன்னிரண்டு ரூபாய் ஐம்பது பைசா ஆகியிருக்கு," என்றாள் நித்யா.

"உட்கார் வசு," என்ற அமிர்தம், "நீயும் உட்கார்," என்று நித்யாவைப் பார்த்துக் கூறினாள்.

வசு உட்காரவில்லை. கைப்பையிலிருந்து பணத்தை எடுத்தாள்.

"பரவாயில்லை. பணம் கொடுத்தால்தான் ஆச்சா?"

காதையே நம்ப முடியாதவளாக வசு பார்த்தாள். பிறகு, "உங்களுக்கு ரொம்பத் தொந்தரவு கொடுத்திருக்கிறோம்...இதை வாங்கிக் கொள்ளுங்கள்," என்றாள்.

"கொஞ்சம் இருங்கள். காப்பி கொண்டு வருகிறேன்."

"நேரமாகி விட்டது," என்றாள் வசு.

"உங்க இரண்டு பேரையும் என் கார்லே பொள்ளாச்சியிலே கொண்டு போய் விடச் சொல்றேன்.. உட்காருங்கள்."

நித்யாவும் வசுவும் ஒருவரை ஒருவர் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டார்கள்.

"ரொம்பத் தாங்க்ஸ்... நீங்கள் இவ்வளவு தூரம் ஹெல்ப் பண்ணினதற்கே நாங்க ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறோம். வா, நித்யா."

"குங்குமம் வாங்கிக் கொள்ளுங்கள்."

நித்யாவிடம் குங்குமச் சிமிழை எடுத்து வந்து நீட்டிய அமிர்தம், வசு சற்றும் எதிர்பாராவண்ணம், தன் கையாலேயே அவளுடைய நெற்றியில் குங்குமத்தை இட்டாள். ஏன் இப்படிச் செய்கிறாள் என்பதே வசுவுக்குப் புரியாத விந்தையாக இருந்தது.

காரைப் பத்திரமாக அமிர்தம்மா வீட்டில் நிறுத்திவிட்டு பஸ்ஸில் திரும்பும்போது, "ஏண்டி, அமிர்தம் திடீர்னு அப்படி மாறினாளே, என்ன சொக்குப் போடி போட்டே?" என்று நித்யா கேட்டாள்.

வசுவுக்குப் புரியவில்லை.

"நான் பேசக் கூட இல்லை."

"பின் என்ன காரணம்?. அவளே உன் நெற்றியிலே குங்குமம் இட்டாள்!"

"சரியா இட்டிருக்கிறாளா?"

"உம்...நன்றாகவே இட்டிருக்கிறாள். பன்னிரண்டரை ரூபாய் டிரங்க் சார்ஜ் கொடுத்ததற்கு, நாம் அவளுடைய காரிலேயாவது வந்திருக்கலாம். இல்லியா?"

"சே போ!" என்றாள் வசு.

(தொடரும்)

''ஓ, பெண்ணே, நீ இந்தக் கல்லின்மீது ஏறு. இல்லறத்தில் என்ன துன்பம் வந்தாலும், இந்தக் கல்லைப்போல அசையாமல் இரு.''

—அம்மி மிதித்தலின் அர்த்தம்.

9

''வசு, இங்கே இருந்தது தான் இருந்தே, இன்னும் இரண்டே இரண்டு நாள் இரு. நானும் உன்கூட மெட்ராஸ் வந்து விடுகிறேன்!'' என்றாள் நித்யா.

ஆனால் வசுவுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

''வந்தாச்சு, உன்னைப் பார்த் தாச்சு, பேசியாச்சு... உன் வேலையை யெல்லாம் முடித்துக்கொண்டு அப் புறம் வந்து சேர்,'' என்றாள்.

''ராத்திரி கோபி உன்னைத் தட்டித் தட்டி எழுப்பினராக்கும்? அது தான் அடிச்சுக் கட்டிக் கொண்டு போறியா?''

''அப்படியேதான் இருக்கட் டுமே?''

''மகாராணிக்கு உடம்பெல் லாம் எரிகிறது போலிருக்கு.. மகா ராஜா சந்தனம் தடவி அணைச்சுப் பார்!''

''பேசாம இருடீ..''

நித்யா கிண்டலைத் தொடர்ந் தாள்.

''நேத்து ராத்திரியே கவ னிச்சேன். நீ படுக்கையிலே புரண்டு புரண்டு பெருமூச்சு பெருமூச்சா உதிர்த் திட்டிருந்தே... எனக்குக்கூடப் பரி தாபமா இருந்தது. நான் கோபியா இருந்திருக்கக் கூடாதான்னு ஆசைப் பட்டேன். காதல்ஞ மைண்ட் மட்டும் வொர்க் பண்ணும். கல்யாணமா யிட்டா.. .''

''எது எது எப்பப்போ வொர்க் பண்ணனும்னு எனக்குச் சந் தேகம் வர்றப்போ உன்கிட்டே வர் றேன்.''

நித்யா கோயமுத்தூர் வரைக்கும் வந்து, வசுவைக் கொச் சின் மெயிலில் ஏற்றிவிட்டுச் சென்றாள்.

பி.வி.ஆர்



டைவர்ஸ்

போர்டிகோவில் டாக்ஸி வந்து நின்ற போது மணி ஏழு. வசு கைப் பெட்டியுடன் இறங்கினுள்.

ஹாலில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த சிவராமன், "அட, வசுவா? வரேன்னு ஏம்மா போன் பண்ணவில்லே, காரை அனுப்பியிருப்பேனே?" என்ருர்.

"தோணலே." மனத்துள் அடங்கி நிற்கும் வெறுப்பு தலே தூக்க அவள் சுருக்கமாகப் பதில் சொன்னுள்.

சிவராமன் டாக்ஸிக்குப் பணம் கொடுத்து அனுப்பிவிட்டு, "கோபி வந்ததும் போன் பண்ணினுர், நீ இரண்டு நாள் கழித்து வருவாய் என்று," என்ருர்.

"பொள்ளாச்சிக்குப் போயிருந்தேன் நித்யாவைப் பார்க்க."

"நித்யாவைத்தான் இங்கே தினம் பார்க்கிருயே.."

"ஊரைப் பார்க்கலாம்னு போனேன்."

"பொள்ளாச்சி என்ன, பாம்பேயா இல்லே, கல்கத்தாவா ஊர் பார்ப்பதற்கு?" என்ருர் அவர். பொள்ளாச்சி என்ற பெயரே அவருக்குப் பிடிக்கவில்லே என்பதைக் குரலிலிருந்த எரிச்சல் காட்டிற்று. "இல்லே, மதுரை, தஞ்சாவூர் மாதிரி பெரிய க்ஷேத்திரமா? அங்கே என்ன இருக்கு?"

அங்கே மரக்கடை இருக்கிறது, தங்கம்மாள் இருந்த வீடு இருக்கிறது என்று வெட்டுத் துண்டாகச் சொல்லிவிடத் துடித்து வசுவுக்கு. அடக்கிக் கொண்டு உள்ளே சென்ருள்.

பூஜை அறையினுள் ராஜலட்சுமி துளசி இலேகளே ஆய்ந்து பூக்கூடையில் போட்டுக் கொண்டிருந்தாள்.

காதுகளில் கமலங்கள் ஒளி வீச, நெற்றியில் குங்குமம் பளிச்சிட, இன்னும் காயாத கேசத்தை ஒரு துவாலேயில் ஒளித்து வைத்து, எவ்வித சலனமுமில்லாமல் தன் கைக்காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கும் அம்மாவைப் பார்த்தபோது, அப்பாவைப் பற்றிய விவரமெல்லாம் அவளுக்குத் தெரிந்திருக்குமா என்ற சந்தேகம் வசுவுக்கு உதித்தது.

உள்ளுணர்வு யாரோ அருகே நிற்கிருர்கள் என்று எச்சரிக்கை செய்யவே நிமிர்ந்து பார்த்தாள் ராஜலட்சுமி.

"ஏன் இதற்குள் திரும்பி விட்டே? பொள்ளாச்சியிலே இன்னும் பாக்கி இடங்களேயெல்லாம் பார்த்து விட்டுச் சாவகாசமாக வர்றதுதானே?" என்ருள் சிடுசிடுப்பாக.

"நித்யா அங்கே இருந்தாளேன்னு போனேன் அம்மா."

"மாப்பிள்ளேயுடன் ஊட்டிக்குப் போனவள், திரும்பி வர்றபோது அவரோடு திரும்பிவிட வேண்டியது தானே?"

"அதான் சொன்னேனே, நித்யாவைப் பார்க்கப் போனேன்னு. ஏன் பொரிஞ்சு தள்றே?"

"தாலி ஏறி ஏழு நாள் ஆகவில்லே. புருஷனேத் தனியா அனுப்பி விட்டு, நீ சினேகிதி வீட்லேபோய் உட்கார்ந்திருக்கே..."

"இப்போ என்னே என்ன செய்யச் சொல்றே?"

"போய்க் காப்பியைக் குடி. அப்புறம் பேசலாம்."

மாடிக்குப் போகும்போது, சிவராமன் செய்தித் தாள் படித்துக் கொண்டிருந்த காட்சி வசுவின் கண் முன் வந்து நிற்கவே, திடீரென உடலெல்லாம் கோபம் வியாபித்தது. தங்கம்மாள் என்கிற ஒரு பெண்ணிடம் கடன் என்று சொல்லி ஏமாற்றிப்

பத்தாயிரத்தை வாங்கிக் கொண்டு ஊரை விட்டே ஓடி வந்தவர், எவ்வளவு நிம்மதியுடன் பேப்பர் படிக்கிறார்? இவருக்கு எப்படித் தூக்கம் வருகிறது? இவரால் எப்படிச் சிரிக்க முடிகிறது?

குளித்துவிட்டுக் கண்ணாடியைப் பார்த்து வகிடு எடுத்துக் கொள்ளுகையில், கண்கள் வெறுப்புக் கட்டிகளாக ஜொலிப்பதை அவளே உணர்ந்தாள். தந்தையும் கணவனும் இரு கண்களின் தாக்குதலுக்கு இரையாகிக் கொண்டிருந்தார்கள்.

அவள் கீழே இறங்கி வந்தபோது, அம்மா அப்பாவுக்குப் பூஜைத் தீர்த்தம் கொடுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவர் எழுந்து நின்று பயபக்தியுடன் கரம் நீட்டிப் பெற்றுக் கொண்டார். அவள் விபூதி கொடுத்தாள். இட்டுக் கொண்டார். நைவேத்தியம் பண்ணிய திராட்சைப் பழத்தைக் கொடுத்தாள். வாயில் போட்டுக் கொண்டார்.

வசுவுக்குப் பற்றிக்கொண்டு வந்தது. எல்லாம் நடிப்பு!

பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தபோது வசு தன் தாயிடம் கேட்டாள்.

"நீ எப்பம்மா கடைசியா பொள்ளாச்சிக்குப் போயிருந்தே?"

"பொள்ளாச்சிக்கா? போனதே கிடையாது," என்றாள் ராஜலட்சுமி.

"அப்பா அந்த ஊரில் இருந்திருக்கிறாரே?"

"அது கல்யாணத்துக்கு முன்னாடி. அவருக்குப் பூர்வீகமான ஊர் பொள்ளாச்சிக்குப் பக்கம்தான்."

"பொள்ளாச்சியில் என்ன செய்து கொண்டிருந்தார்?"

"ஆர்மி காண்டிராக்ட் எடுத்தார்."

"அதுக்கு முன்னால்?"

"தெரியாது."

பெரிய வெடி குண்டைத் தூக்கிப் போடும் பாவனையில் வசு அறிவித்தாள்.

"ஒரு மரக் கடையில் குமாஸ்தாவாகக் கணக்கு எழுதிக் கொண்டிருந்தாராம்."

ராஜலட்சுமியிடம் ஒரு சலனமும் இல்லை.

"இருக்கலாம்."

"என்னம்மா சாதாரணமாகச் சொல்லிட்டே?" ஏமாற்றம் வசுவின் வார்த்தைகளில் கொப்புளித்தது.

"கணக்கு எழுதினால் அதிலே என்ன வசு கேவலம் இருக்கு? யாரையும் ஏமாத்தாமல் இருந்தால், எந்தத் தொழில் வேணும்னாலும் செய்யலாம்."

வசு பிடித்துக் கொண்டு விட்டாள். "அது கரெக்ட். 'ஏமாற்றாமல் இருந்தால் எந்தத் தொழிலும் கௌரவமானதுதான் என்று வைத்துக் கொள்வோம். ஆர்மி டெப்போ காண்ட்ராக்டுக்குப் பதினாயிரம் ரூபாய் தேவைப்பட்டிருக்கிறது அப்பாவுக்கு. கடன் என்ற பெயரில் ஒரு பெண்ணிடம் பதினாயிரம் ரூபாய் வாங்கி, சொல்லாமல் கொள்ளாமல் ஊரை விட்டே ஓடிவிட்டிருக்கிறார்! அது தான் ஒரு கௌரவமான மனிதர் செய்கிற காரியமா?"

"நாக்கை அடக்கிப் பேசு. இதெல்லாம் உனக்கு யார் சொன்னது?"

"பொள்ளாச்சியே சிரிக்கிறது. ரொம்ப நாளா இருக்கிற

கா வே ரி

மகளா, மருமகளா?

காவேரி நதியை மைசூரிலுள்ளவர்கள் கர்நாடகத்தின் செல்வ மகள் என்றும் தமிழ் நாட்டின் மருமகள் என்றும் அழைக்கிறார்கள். காவிரி நீர் தமிழ் நாட்டில் இருபத்தேழு லட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பயன்படுகிறது, ஆனால் கர்நாடகத்தில் ஏழு லட்சம் ஏக்கர்களுக்குத்தான் பயன் படுகிறது என்கிறார்கள்.

—எஸ்.என்.

வர்... அவர் சொன்னர்... கிட்டு மாமான்னு பேரு.''

''எவனே வயிற்றெரிச்சல்காரன் இல்லாததையும் பொல்லாததையும் சொன்னுல் அதை அப்படியே நம்பிக் கொண்டு அப்பாவைப் பற்றித் தூஷணையாகப் பேசலாமா? உனக்கு வெட்கமாயில்லே? ஆர்மி காண்டிராக்டுக்காக உன் அப்பா கடன் வாங்க வேண்டிய அவசியமே இல்லே... அவர் வாங்கவும் இல்லே.... வாங்கியிருக்கவும் மாட்டார்.''

வார்த்தைகளினூடேயே, பழைய நினைவுகள் அலைகளாக ராஜலட்சுமியின் மனத்தில் மோதின. காண்டிராக்டுக்கு வேண்டிய பணத்தைச் சிவராமனுக்கு அவள் அண்ணன் ராஜாமணி கொடுத்தது அவளுக்குத் தெரியும். பணம் போடும் கூட்டாளியாக அவள் சகோதரன் ராஜாமணியும், உழைக்கும் கூட்டாளியாக சிவராமனும் இருந்தார்கள். அவர்களுக்கிடையே இருந்த நட்பும் அன்னியோன்னியமும்தான் கடைசியில் ராஜலட்சுமி – சிவராமன் கல்யாணமாகப் பரிணமித்தது.

'இப்படியா நீ நினைச்சிட்டிருக்கே, அம்மா?' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டு சிரித்தாள் வசு.

ராஜலட்சுமி பேச்சைத் திருப்பினுள்.

''அது சரி, மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டு வர நீ எப்போ புறப்படப் போறே....''

''அவருக்கு வழி தெரியும்.''

''வசு.. உனக்கு நாலு வருஷம் முன்னுலே டியூஷன் சொல்லிக் கொடுத்தாரே, வாஞ்சிநாதன்? அவரும் அவர் மனைவியும் வந்திருந்தார்கள், பெண்ணுக்குக் கல்யாணமாம்.''

''அதுக்கு என்ன?''



விடை : 48'ம் பக்கம்





''தலைவர் அவர்கள், அவர் ஒரு முட்டாள், மடையன், உதவாக்கரை, சாப்பாட்டு ராமன், தடிக் கழுதை, என்றெல்லாம் யாராவது சொன்னால், அதையெல்லாம் பாராட்டாத உள்ளம் படைத்தவர். சோம்பேறி, கஞ்சன், டம்பாச்சாரி என்றாலும் கோபிக்காத நல்ல உள்ளம் கொண்டவர் என்று கூறி என். . .''

''வாஞ்சிநாதன் பிள்ளையும் மாப்பிள்ளையும் ஒரே கம்பெனியில்தானே இருக்கிறார்கள்? அவன் கிட்டேயும் அவள் பெண்டாட்டிகிட்டேயும் மாப்பிள்ளை உன்னைப்பத்தி ரொம்ப உயர்வாகச் சொன்னாராம்.''

''ஓகோ,'' என்றாள் வசு. மனத்துக்குள் ஒரு குறுகுறுப்பு. கோபி அவளைப்பற்றி உயர்வாக சொன்னாராமா! என்ன சொல்லியிருப்பார்?

ரா ஜ ல ட் சு மி சிரித்துக் கொண்டே விவரித்தாள். ''பார்க்கிறதற்குக் கர்வமாக இருக்கிறவள் மாதிரி தோன்றும். ஆனால் மனசு ரொம்ப நல்ல மனசு என்றாராம்.''

''உம். அப்புறம். . . .''

''நீ புத்திசாலியாம். வெறும் காலெஜ் படிப்புமட்டுமில்லாமல், எல்லா விஷயங்களையும் நல்லாத் தெரிஞ்சு வைச்சிருக்கியாம்.''

வசுவையும் மீறிக் கொண்டு ஒரு புன்னகை அவள் முகத்தில் பூத்தது. ''ப ர வா யி ல் லை யே, என் கிட்டே நேரடியாச் சொல்லாததையெல்லாம், ஃப்ரண்டுகிட்டே சொல்லியிருக்கிறார் போலிருக்கு.''

''இன்னும் கேள். 'இவ்வளவு அழகான ஒரு பெண் மனைவியாய் வாய்ப்பாள்னு நான் எதிர்பார்க்கவேயில்லை' என்றாராம்.''

வசுவுக்குப் புல்லரித்தது. ''மாடி அறையில் புத்தகங்களும் துணிகளும் கன்னா பின்னாவென்று கிடக்கு. .'' என்று நகர்ந்தாள்.

அன்று மத்தியானமெல்லாம் அவள் மனத்தில் கோபிதான் சுற்றிச் சுற்றி வந்தான். முதல் இரவு, ஊட்டி 'தமிழகத்துக்குள்' பெரிய அறை, அறையில் இருந்த இரட்டைக் கட்டில், கோபியின் உடற்கட்டு, அவனுடைய பரந்த மார்பு, அவனுடைய உதடுகள், கண்களில் பிரதிபலித்த அவசரம், உடம்பின் கொதிப்பு எல்லாம் அவளுள் சுற்றிச் சுற்றித் தட்டாமாலை ஆடின.

படுக்கைக்குப் புது விரிப்புக்களைப் போட்டாள். தலையணைகளுக்கு உறை மாற்றினாள். இரத்தச் சிவப்புப் போர்வைகளை அழகாக மடித்து, கால் மாட்டில் வைத்தாள்.

பால்கனியில் நின்றபடி கடியாரத்தைப் பார்த்தாள். ஐந்தரை. ஐந்து மணிக்கே டிரைவரிடம் சொல்லித் திருவல்லிக்கேணிக்குக் கார் அனுப்பியிருந்தாள்.

இளம் பச்சைப் புடவையில் அவள் மின்னிக் கொண்டிருந்தாள். புருவங்களுக்கு லேசாக மை தீட்டிக் கொண்டிருந்தாள். வலது கன்னத்தில் ரூஜ் அதிகமாகி விட்டதோ என்ற சந்தேகம் முளைத்தது. இல்லை என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அதோ கார் சத்தம்.

பால்கனிச் சுவரில் சாய்ந்து கொண்டு குனிந்து பார்த்தாள்.

டிரைவர் இறங்கிக் காரைச் சுற்றி வந்து பின் கதவைத் திறந்தான். திறந்தவன், வழிவிட்டு யாருக்கும் ஒதுங்கி நிற்கவில்லை. காருக்குள் கை விட்டு, பெரிய பொட்டலம் ஒன்றை எடுத்துக்கொண்டு கதவைச் சாத்தினான்.

காகிதப் பொட்டலம். லாண்டரியின் அங்க லட்சணங்களோடு இருந்தது.

''டிரைவர்!'' என்றாள் வசு, மாடியிலிருந்தபடி.

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

''பெரிய ஐயாவுடைய துணிகள் அம்மா. லாண்டிரியிலிருந்து வாங்கிட்டு வர்றேன்.''

''அது சரி. அவர் எங்கே?''

''அவர் வரலிங்க. உங்களை அங்கே வரச் சொன்னார்.''

அ வ ளு க் கு ச் சொரேல் என்றது. (தொடரும்)

கண்ணீர் தாசர்கள்

கவிஞர் கண்ணதாசன் பெத்தடின் ஊசி போட்டுக்கொள்ளும் செய்தி பல கவியுள்ளங்களுக்கு அதிர்ச்சி தந்துள்ளது :

கவலையை ஓட்டு!

சத்தியம் குலைப்போர் செய்யும்
தவற்றினைத் திருத்த உன்றன்
தத்துவப் பாடல் வேகம்
தனிமருந்தாகு மன்றோ?
முத்தமிழ் தழைக்க உன்றன்
மூச்சது நிலைக்க வேண்டும்;
'பெத்தடின்' ஊசி போடும்
பெரும் பிழை செய்ய லாமோ?

கவலையை ஓட்டு! நின்றன்
கவிகளில் கருத்தை நாட்டு!
சிவனையும் வாழ வைக்கும்
செங்கவி கண்ண தாசா!
அவனியில் நெடிது வாழும்
ஆசையால் உடலைப் பேணி
எவனையும் திருத்தும் பாவால்
எமனையும் துரத்து வாயே!

—புத்தனேரி சுப்பிரமணியம்

கண்ணதாசனுக்கு......

நோவினை எண்ணி நோன்பது முறியினும்
நாவினை நடத்தி நல்லொளி விளைக்கட்டும்.
பெண்மையின் படுகையில் விழைவது வளரினும்
உண்மையின் விளக்கங்கள் மொழிவதும் வளரட்டும்.
அண்மையில் சேய்மையில் உறவுகள் கலையினும்
திண்மையில் தூய்மையில் தெளிவுகள் மலரட்டும்.
போதையின் பாதையில் போவது வாழினும்
கீதையின் பார்வையில் கீதங்கள் பொழியட்டும். —ப. ந. சிவானந்தம்

குத்தலாமோ ஊசி ?

பெத்தடின் ஊசி போடும்
பெருமிதம் கவிஞர் கோமான்
முத்தமிழ்ப் பாக்க ளாலே
மொழிந்திடக் கேட்டோம் நாமும்
நித்தமும் வளரும் துன்பம்
நீங்கிட மருந்தா இல்லை?
'பெத்தடின்' ஊசி முருகப்
பெருமானு, துன்பம் போக்க?

மற்றவர் குற்றங் கண்டே
மனம்மிக வெந்து நொந்தால்
குற்றமும் செய்தால் அந்தக்
குறையதில் தீரும் என்றார்
குற்றமும் குற்றத் தாலே
குறையுமா? உலகீர் சொல்வீர்
நற்றமிழ்க் கவிஞர் சொன்னல்
நாமென்ன மறுப்பா சொல்வோம்?

—நாகு. ஆறுமுகம்





பொதுவாக ஒருவர் அணிந்த மாலையைப் பிறர் அணியக் கூடாது என்று சாஸ்திரம் கூறுகிறது. கல்யாணத்தின் போது பெண்ணும் பிள்ளையும் மாலை மாற்றிக் கொள்ளுகிறார்கள். இந்த நிகழ்ச்சி அவர்கள் ஒன்றாகி விட்டவர்கள் என்பதைக் குறிக்கிறது.

—மாலை மாற்றிக் கொள்ளுவதன் கருத்து.



கோபி வரவில்லை. அதோடு மட்டுமல்ல. அவளை அங்கே வரச் சொல்லியிருக்கிறான். பால்கனியிலிருந்து திரும்பிய வசுவின் மனத்தில் ஆத்திரம் மேலோங்கியது.

அவள் கோபிக்காக அறையை முழுதும் சுத்தம் செய்தாளே! கீழே தோட்டத்திலிருந்து புத்தம் புதுப் பூக்களைப் பறித்துத் தன் கையாலேயே டீப்பாயின் மேல் வைத்தாளே! அவனுக்காகப் பிற்பகல் முழுதும் அங்குமிங்குமாக ஓடி விளையாடி வேலை செய்தாளே! அவனே . .

வசு முகத்தில் பவுடர் இருக்கிறதா கலைந்து விட்டதா என்று கண்ணாடியைப் பார்க்க நிற்கவில்லை. இந்தப் புடவை போதுமா, வேறு கட்டிக் கொள்ள வேண்டுமா என்று மனத்தை ஓடவிடவில்லை. கைப் பையில் எவ்வளவு பணம் இருக்கிறது, நடுவில் பெட்ரோல் இல்லாமல் கார் நின்றுவிட்டால் என்ன செய்வது என்றெல்லாம் யோசிக்க அவளுக்குத் தோன்றவில்லை.

கிளம்பினாள்.

உடனே கோபியிடம் சூடாக நாலு கேள்வி கேட்காவிட்டால் அவளுக்குத் தலை வெடித்துவிடும் போலிருந்தது.

ஹாலில் சோபாவில் உட்கார்

ந்திருந்த ராஜலட்சுமியையும் லட்சியம் செய்யாமல் அவள் வெளியேறினுள்.

நாகராஜனின் வீட்டு வாச லில் யார் யாரோ நின்று கொண் டிருந்தார்கள். ஆனுல் அவனே அவ னுடைய தாயாரோ, மனைவியோ இல்லை. வசு அவசர அவசரமாக ரேழியைக் கடந்து கூடத்தை அடைந்து, மாடி ஏறினுள்.

கோபி சுவாமி படத்துக்கு மல்லிகைச் சரம் சாத்திக் கொண் டிருந்தான். பக்கத்திலே ஊதுபத்தி தயாராக இருந்தது.

"வா வசு, நல்ல சமயத்தில் தான் வந்திருக்கிறுய்!" என்றுன்.

அவள் மௌனமாக நின்றுள். அவனுடைய நிதானம் எரிச்சலை அதிக மாக்கியது. அவன் பத்திகளைக் கொளுத்தி, படத்துக்குக் காட்டிவிட்டு, சுவரின் துவாரத்தில் செருகும் வரை யில் காத்திருந்தாள்.

"உட்கார், வசு."

"நான் உட்கார வர வில்லை."

"ஏன் கோபமாயிருக்கே?"

"கார் அனுப்பியிருந் தேனே?"

"இப்போ நேரேயே வந் திருக்கிறுய்!" சிரித்த கோபி, மீண்டும் "முதலில் உட்கார் வசு. உட்கார்ந் தாலே மனசுக்கு ஒரு நிம்மதியும் அமை தியும் கிடைக்கும்," என்றுன்.

வசு கோபத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"கிளம்பலாமா?" என்றுன் அவன் சிரித்துக் கொண்டு. அவள் சீற்றம் சற்றுக் குறைந்தது.



"ஆமாம். பெட்டியை இங்கேயே வைத்தால் எப்படி? அதில் தானே உங்கள் துணிமணிகளெல்லாம் இருக்கிறது?" என்ருள்.

"இப்போ உன்னை ஒரு புது இடத்துக்கு அழைத்துக் கொண்டு போகப் போகிறேன். அப்புறம் நானும் நீயும் நல்ல ஓட்டலுக்குப் போய்க் காப்பி சாப்பிடப் போகிருேம்."

அவன் அறையை விட்டு வெளியேறி நடக்க, வசு பின் தொடர்ந்தாள்.

அவள் காரை நகர்த்தியதும்—

"மேற்கு மாம்பலம்," என்ருன் கோபி.

"அங்கே யார் இருக்கிருர்கள்?"

"நீ ஆச்சரியப்படும்படியாக நான் ஒரு காரியம் செய்திருக்கிறேன். கொஞ்சம் பொறுமையாக இரு."

"மயிலாப்பூர் வழியாகப் போகலாம். போகிற வழியில் வீட்டில் இறங்கி..."

"நோ ப்ளீஸ்.. நான் சொல்லுகிற வழியில் போ.. மவுண்ட்ரோட்.. ஃப்ளை ஓவர்.. ஸன் தியேட்டர் வழியாக டி.நகர், துரைசாமி ரோட் ஸப்வே.. அசுவமேத மண்டபம்.. அப்புறம் சொல்றேன்."

"அசுவமேத மண்டபத்தில் காலட்சேபம் ஏதானும் நடக்கிறதா? அங்கே என்னை அழைத்துக் கொண்டு போகிறீர்களா?"

அவன் அதற்குப் பதில் சொல்லவில்லை.

"நீ என்னிக்கு பொள்ளாச்சியிலிருந்து திரும்பினே?" என்று கேட்டான்.

"இன்னிக்கு."

"பொள்ளாச்சி எப்படி இருக்கிறது?"

அவளுக்கு எரிச்சலாக வந்தது.

"ஊட்டி மாதிரி ரொம்ப அழகா இருக்கு.. ஒரு பெரிய க்ளாஸ் ஹவுஸ், ஒரு ஏரி, பொடானிகல் கார்டன்ஸ். எல்லாம் இருக்கு.. எங்கே பார்த்தாலும் யூகலிப்டஸ் மரங்கள் தான்.." என்ருள்.


அவன் கிண்டல் செய்தான்.

"பொள்ளாச்சி ரொம்ப மாறியிருக்கு... ஏரியை எங்கே எப்போ வெட்டினுர்கள்? அதிலே போட்டிங் போனுயா?"


"ஏன் என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறீர்கள்?"

"நீதானே சொன்னுய், பொள்ளாச்சி ஊட்டி மாதிரி இருக்கிறது என்று? அதான் கேட்டேன்."

"ஊட்டியில் உங்ககிட்ட என்ன சொல்லியனுப்பினேன்? நான் சொன்னதை மீறி எப்படித் திருவல்லிக்கேணி அறையிலே தங்கப் போச்சு?"







—கே. ஆர்.


50,000 ரூபாய்
மதிப்புள்ள பரிசுகள்
பெறுங்கள்
பாரியின் 'ஏற்றதருணம் ஏது' போட்டியில்
சேருங்கள்
2 முதற் பரிசுகள் — ரூ 10,000
மதிப்புள்ள நகைகள். உங்கள்
விருப்பம் போல்
2 இரண்டாவது பரிசுகள் — ரூ 5,000
மதிப்புள்ள நவீன குக்கிங் ரேஞ்ச்
அல்லது ரெப்ரிஜிரேட்டர்
50 ஆறுதல் பரிசுகள் — ரூ 400
மதிப்புள்ள காஞ்சீபுரம் பட்டுச்சேலைகள்
முழு விவரங்களடங்கிய
நுழைவுத்தாட்கள்
உங்கள் அருகாமை
யிலுள்ள பாரி
விற்பனை
யாளரிடம்
பெறுங்கள்.
Parry's
Parry's Pick-The
பாரியின் 'ஸ்வீட் பாங்க்'
தரமான பாரி மிட்டாய்கள் அடங்கியது.
கண்ணைக் கவரும் ஆறு அழகிய
வண்ணங்களில். 450 கிராம்
மிட்டாய்களுக்கு
விலை ரூ 12 தான்!
பாரீஸ்
கன்பெக்ஷனரி
லிமிடெட், சென்னை
முந்துங்கள்!
போட்டி
முடியும் நாள்
ஜூன் 15.
1975
SAA/PRS/1665
Parry's



சமீப காலமாகப் பெரு
பாலான பல்லவன் போக்குவரத்து
கழகப் பேருந்துகளில் வள்ளுவரின் பட
தையும், திருக்குறளையும் காணவில்லை
புதிதாகச் சென்னை நகரெங்கும் விட
பட்டுள்ள பல்லவன் பேருந்துகளி
எதிலும் திருவள்ளுவரையும் காணோம்
திருக்குறளையும் காணோம். ஏன்?

— எம். ஏ. பாட்சா

■

காஞ்சியில் வேலை பார்க்
கும் நான் தாம்பரத்திலிருந்து காஞ்சி

''அதுதான் என் வீடு. அதுதான் எனக்குப் பிடிக்கிறது.''

''ஏன், என் வீட்டிலே என்ன குறைச்சலாம்?''

''உன் வீடா! உங்க அப்பா வீட்டைச் சொல்கிறாயா?''

''எங்க அப்பாவுக்கு நான் ஒரே பெண்.''

''வசு, நீ இல்லாதபோது அந்த வீட்டில் எனக்கு ஒன்றுமேயில்லை. நீ இருந்தால் எனக்கு அங்கே எல்லாமே இருக்கு..''

''நான்தான் வந்துவிட்டேனே? காரை அனுப்பினால் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வரவேண்டியதுதானே?''

''வாஸ்தவம்தான். நான் அப்படிப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தால், எத்தனை நாட்களுக்கு அங்கேயே பெட்டியை வைப்பது? அதை யோசித்துப் பார்த்தாயா?''

''யோசனைக்கு இடமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.''

''இப்போ நாம் போகிற இடத்தைப் பார்த்ததும், நீயே யோசிக்க ஆரம்பித்துவிடுவாய்.''

அசுவமேத மண்டபத்தை ஒட்டி ஓடிய தெருவில் கார் சென்றது.

''மெதுவாகப் போ!'' என்றான் கோபி. பிறகு, ''அதோ அந்த வீட்டு வாசல்லே ஒரு அம்மாள் குழந்தையுடன் நிற்கிறாளே அதுக்கு அடுத்த வீட்டுக்கு முன்னால் நிறுத்து,'' என்றான்.

கார் நின்றது. கோபி இறங்கினான். வசு உட்கார்ந்த இடத்திலிருந்தே பார்த்தாள். அகலமில்லாத, உயரமான ஒரு வீடு.

''வா, வசு.''

அவள் இறங்கினாள். இந்த வீட்டில் யார் இருக்கிறார்கள்? யாரைப் பார்க்கக் கோபி இப்படித் துடிக்கிறான்?

வீட்டின் பக்கவாட்டை நோக்கிக் கோபி நடக்க, அவள் பின் தொடர்ந்தாள்.

பக்கவாட்டில் மூன்றடி அகலத்தில் ஒரு கதவு. பாக்கெட்டிலிருந்து சாவியை எடுத்த கோபி, ''இன்னிக்குத்தான் சாவி கிடைத்தது,'' என்று சொல்லிக் கொண்டே பூட்டைத் திறந்தான்.

வசுவுக்குப் புரிந்துவிட்டது. அவளை அவமானப்படுத்த வேண்டும் என்ற எண்ணமா என்ன, கோபிக்கு?

குறுகலான மாடிப் படி. அதன் முடிவில் நீள அகலமில்லாத அறை. மூன்று பக்கங்கள் ஜன்னல் ஏதுமின்றி அடைத்துக் கிடக்க, வீட்டின் பின்புறத்தைக் காட்ட நான்காம் பக்கம் வாய்திறந்து கிடந்தது. வசு பார்த்தபோது, கிணற்றடியில் ஒரு பத்து வயதுப் பையன் கன்றுக்குட்டியைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தான். மாடிப்படி அறையை அடுத்தாற்போல, நீளமான ஒரு அறை. இடது புறத்தில், ஒருவர் மட்டுமே நிற்கக் கூடிய அளவுக்கு ஒரு பால்கனி. (வேறு

புரம் செல்லுவதற்கு சீசன் டிக்கெட் வைத்திருந்தேன். அதைச் சில நாட்களுக்கு முன்பு தாம்பரம் ஸ்டேஷனில் தொலைத்து விட்டேன்.

மறுநாள் எனக்கு ஒரு கவர் காத்திருந்தது. பிரித்துப் பார்த்தேன். சீசன் டிக்கெட்டும், ஒரு சிறிய கடிதத் துண்டும் இருந்தன.

'நான் வேலை விஷயமாக ஒரு சிபாரிசு பிடிக்கச் செல்லும்போது தாம்பரம் ஸ்டேஷனில் இதைக் கண்டெடுத்தேன். எனக்கு உங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்பினால் நான் முயற்சி செய்யும் வேலை எனக்குக் கிடைக்க வேண்டுமென்று உங்களுக்கு இஷ்டமான தெய்வத்திடம் வேண்டிக் கொள்ளுங்கள்.'

நானும் கோயில் ஒன்றிற்கு வேண்டிக் கொண்டு விட்டேன். சம்பந்தப்பட்டவருக்கு வேலை கிடைத்து விட்டது என்று தெரிந்தால், வேண்டுதலை நிறைவேற்றி விடுவேன்.

—நண்பரின் அனுபவத்தைக் கேட்டு எழுதியவர்: 'கருடா' வைத்தியநாதன்.

என்ன பெயரும் வைக்க முடியாததால் பால்கனி என்று குறிப்பிடும் நிர்ப்பந்தம் உண்டாயிற்று.) நீளமான அறைக்கு அடுத்தாற்போல, அறையின் எட்டடி அகலத்துக்கு ஏற்ற ஒரு சமையலறை.

"பாத்திரங்களையும் சமையல் சாமான்களையும் வைத்துக் கொள்ள நிறைய ஷெல்ஃபுகள் இருக்கு," என்றான் கோபி.

"ஷெல்புதான் இருக்கு, சமையலறையைக் காணோம்!" என்றாள் அவள்.

"ஹால் நீளமாக இருக்கிறது."

"தென்ன ஓலைகூடத்தான் நீளமாக இருக்கிறது."

"உனக்குப் பிடிக்கவில்லையா, வசு?"

"இதில் குடியிருக்க வீட்டுக்காரர் எத்தனை ரூபாய் தருகிறார் உங்களுக்கு?"

"உனக்கு நன்றாகப் பேசத் தெரியும் என்கிறது எனக்கும் தெரியும் வசு! மெட்ராஸில் என் சம்பளத்திற்கு அடங்குகிற மாதிரி ஒரு வீட்டைத்தான் நான் பார்க்க முடியும். அட்வான்ஸ் கூடக் கொடுத்தாகிவிட்டது."

"சிறை வாழ்க்கைக்கு அட்வான்ஸ் கொடுக்கறது அபத்தம்... உங்களுக்கு எங்க பங்களா பிடிக்கலைன்னா சொல்லுங்கள். சாந்தோமிலே ஒரு சின்ன வீடு இருக்கு. மாடியிலேந்து பார்த்தா சமுத்திரம் தெரியும். அங்கே போகலாம்."

"பிறரிடமிருந்து சலுகைகளை நான் எதிர்பார்ப்பதில்லை."

"லட்சியங்களை அடுக்கிக் கொண்டே போகாதீர்கள். அது உடம்புக்கு நல்லது இல்லை."

"இந்தத் தை மாதம் முடியறதுக்குள்ளே, நாம் இங்கே வந்து பால் காய்ச்சிச் சாப்பிடலாம்..."

"சாப்பிட்டுவிட்டு உடனேயே காலி செய்வதானால் எனக்கு ஆட்சேபணை இல்லை." வசு மாடிப் படியில் தடதடவென்று இறங்கினாள்.

கோபி மாடியிலேயே நின்றான். இருக்கிற ஒரே ஜன்னல் வழியாகப் பார்த்தான்.

அவள் காரில் ஏறிக் கொண்டாள். கதவைச் சாத்தினாள்.

கார் மெதுவாக நகர்ந்தது.

கண்ணை விட்டும் அகன்றது.

கோபி, சிறிது நேரம் அங்கேயே நின்றிருந்தான். பிறகு நிதானமாக இறங்கினான். கதவைத் தாளிட்டுப் பூட்டினான்.

சாவியைப் பாக்கெட்டில் போடுகையில்தான், அங்கே சில்லறை ஏதும் இல்லை என்ற நினைவு பிறந்தது.

மேற்கு மாம்பலத்திலிருந்து திருவல்லிக்கேணிக்கு ஐந்து மைலுக்கு மேலே இருக்கும்.

இப்போதே நடக்க ஆரம்பித்தால், இரவு ஒன்பது மணிக்காவது போய்விடலாம்.

அவன் நடக்கலானான்.

(தொடரும்)

ஏன் சொல்லாமல் விட்டோம்?


சௌம்யா பெருமூச்சு விட்டபடி அந்த வயலினையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்ணில் நீர் துளித்தது. அதை எடுத்துத் தோளில் சாய்த்துக்கொண்டு, வில்லை மெல்ல இழுத்தாள். இனிய நாதம் கிளம்பிற்று. அவள் கணவன் சேகர் உயிரோடு இருந்தவரை அவளால் வயலினைத் தொட முடியவில்லை. ஒருமுறை கைக்குச் சூடுகூடப் போட்டுவிட்டான். இனிமேல் அவள் வாழ்வில் ஒரு நல்ல திருப்பம் ஏற்படப் போகிறது என்று நினைத்திருக்கையில்...ஒரு புதிய சிக்கல்...


ஜானகி மாமியோடு பேசும்போது தான் அது வெளிப்படையாகத் தெரிந்தது.

"சௌம்யா, ராமமூர்த்தியிடம் குழந்தை சந்தரைப் பற்றிச் சொல்லி விட்டாயல்லவா?'' என்றாள் ஜானகி.

சௌம்யா துணுக்குற்று நிமிர்ந்து உட்கார்ந்தாள். "'இல்லை மாமி. இனிமேல் தான் சொல்ல வேண்டும். என்னவோ குழந்தையைப்பற்றி அவரிடம் ஒன்றுமே சொல்லத் தோன்றவில்லை.''

"வேண்டாம் சௌம்யா, சொல்லவே வேண்டாம். சந்தரைப் பற்றி அவரிடம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை,'' என்றாள் ஜானகி.





"ஏன் மாமி, எப்படிச் சொல்லாமல் இருக்க முடியும்?"

"குழந்தையைப் பற்றிக் கவலைப்படாதே. என் பெண் வனிதா இரண்டு மாதத்தில் கணவனிடம் போய் விடுவாள். அப்புறம் நான் ஒண்டிக் கட்டை. எனக்கும் பொழுது போகணும். ஒரு பிடிப்பு இருக்கணும். சந்தர் என்னிடமே வளரட்டும். உனக்கு ஏற்கெனவே குழந்தை இருக்கிறதென்றால் அவர் யோசிப்பாரோ என்னவோ.."

"என்ன மாமி, அப்படியாவது நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமா என்ன, குழந்தையை விட்டு விட்டு?"

"சரி தான் போ. மறுபடி ஆரம்பித்து விட்டாயா? கேள், சௌம்யா. குழந்தை வெளியூருக்கா போகிறான்? அடிக்கடி என்னைப் பார்க்க வருகிற சாக்கில் நீ குழந்தையைப் பார்த்துப் போகலாம். ஏன் சொல்கிறேனென்றால், நீ ஒருத்தனின் மனைவியாக வாழ்ந்தவள் என்று அவருக்குத் தெரியும். உன்னைக் கன்னி கழியாதவள் என்று நினைக்க இடமில்லை. ஆனால் குழந்தையை வளர்க்க வேண்டிய பொறுப்பும் தன்னைச் சேருகிறதே என்று அவர் தயங்கினால் என்ன செய்வது?"

'ரத்னா'



சௌம்யாவின் முகத்தில் குழப்பம் பரவியது.

''மாமி... மாமி.. நிஜமாகவா? நான் செய்கிற காரியம் சரிதான் என்று நீங்கள் நிச்சயமாகவே நினைக்கிறீர்களா? சொல்லுங்கள் மாமி. சில சமயம் மனம் குழம்புகிறது. இதனால் ஒன்றும்...'' தடுமாறினாள் அவள்.

''அசடே, ஏன் இப்படி அவதிப்படுகிறாய்? நாலு வருஷமாக அந்தப் பாவி சேகரிடம் நீ பட்ட கஷ்டங்களை நான் பார்க்கவில்லையா?''

சில விநாடிகள் இருவருமே கடந்த கால நினைவுகளில் மிதந்தார்கள்.

சேகர் வாட்டசாட்டமான ஆண் பிள்ளையாகச் சௌம்யாவைக் கவர்ந்தவன்தான். ஆனால் அத்தனை விசாலமான மார்பில் குறுகிய உள்ளம் இருந்ததைக் கல்யாணத்திற்குப் பிறகுதான் உணர்ந்தாள். அழகன் என்று பூரிப்புடன் இருந்தவளை அழ வைத்து வேடிக்கை பார்த்தான். கெட்ட பழக்கங்கள் அத்தனையும் அவனிடம் இருந்தன.

அவன் காலமாகி இரண்டு வருடத்துக்கு மேலாகிவிட்டது. சங்கீத ரசனை உள்ள ராமமூர்த்தி என்ற இளைஞன் - மனைவியை இழந்தவன் - சௌம்யாவை மணக்க முன் வந்தான்.

''மாமி, உங்கள் சின்னத் தங்கை சவிதா சின்ன வயதில் வீணாகிப் போனாளே. நீங்கள் அவளுக்கு மறு மணம் செய்து வைக்கவில்லையே? எனக்கு மட்டும் ஆதரவாகச் சொல்லுகிறீர்களே?'' சௌம்யா வினவினாள்.

''சௌம்யா! அசடாக நூறு வயது பிள்ளையை விடப் புத்திசாலியாக அற்ப ஆயுசுப் பிள்ளையே தேவலை என்று மார்க்கண்டேயரின் பெற்றோர் வரம் கேட்டது தெரியுமில்லையா? அது போலதான் தாம்பத்ய வாழ்வும். ஒரே ஒரு நாள் அன்பும் ஆசையும், காதலும் கனிவுமாக வாழ்ந்தால் கூடப் போதும். அந்த ஒரு நாள், நிறைவான நினைவில். ஒரு பெண் ஆயுள் முழுதும் விதவையாக வாழ்ந்து விடுவாள். சவிதாவின் கணவன் இரண்டு வருஷங்கள்தான் இருந்தான். அதிலும் நோயாளியாக இல்லற வாழ்க்கையே வாழ முடியாதபடிதான் இருந்தான். ஆனால் அவன் தன் மனைவிக்காக எத்தனை உருகினான்! மனம் கசிந்து அழுது அழுது சவிதாவுக்காக அவன் பட்ட வேதனை கொஞ்சமில்லை. சவிதாவை மறு மணம் செய்து கொள் என்று கூடச் சொன்னான். ஆனால் அந்த இரண்டு வருஷங்கள் அவன் காட்டிய பரிவு, ஆதங்கம், அன்பு, ஆசை இதற்காகச் சவிதா இரண்டு ஜன்மங்கள் கூட அழுது அழுது அவன் நினைவில் வாழலாம். அவன் இடத்தில் இன்னொருத்தனை எப்படி ஏற்பாள் அவள்? ஆனால் நீ வாழ்ந்தது ஒரு வாழ்வா? அது கெட்ட கனவு. அதை மறந்து இனி மேல் தான் நீ வாழ வேண்டும் சௌம்யா.''

ஜானகி இவ்வளவு தூரம் எடுத்துச் சொல்லிய பிறகும்—

சௌம்யா இருதலைக்கொள்ளி எறும்பாகத் தடுமாறினாள். குழந்தை இருப்பதை ராமமூர்த்தியிடம் இப்போது சொல்லாமல் பின்னால் தெரிவது உசிதமாகவும் படவில்லை. இப்போது சொல்லவும் தயங்கினாள். ஏன், ஏன்?

உங்களுக்காக பிலிப்ஸ் வழங்கும் இந்த அபூர்வமான மியூஸிக் ஸிஸ்டம் பல அரிய சிறப்புகள் கொண்டது...



இந்த பிலிப்ஸ் ஜீஎஃப் 533 செய்து காட்டுவதை வேறெந்த ரெகார்டு பிளேயரும் செய்யமுடியாது.

மெயின்ஸ்-பாட்டரி ஸிஸ்டம் ஜீஎஃப் 533

OBM 3454 TM

இதில் மோனோ இசைத்தட்டு ஒலி பிரமாதமாக இருக்கும்; ஸ்டீரியோ கூடத்தான். இது ஸ்டீரியோ கார்ட்ரிஜ் மற்றும் அவுட்புட் வசதி கொண்டது. இதை உங்கள் ரேடியோவுடன் இணைத்துப் பாருங்கள். என்ன ஆச்சரியம்! இதோ ஸ்டீரியோ தயார்.



ஸ்டீரியோவாகவும் மாற்றிக்கொள்ளலாம்

இதை நேரடியாக டேப்-ரெகார்டிங் செய்யவும், புதிவு செய்ததைத் திருப்பிக் கேட்கவும் பயன்படுத்தலாம். மோனோ, ஸ்டீரியோ, இரண்டுமே!

மெயின்ஸில் இயக்குங்கள்; அல்லது பாட்டரிகளில். மின்விசை நின்று விட்டால், இது தானாகவே பாட்டரிகளில் இயங்குகிறது.



இது எப்பொழுதும் ஒரு நிலையான வேகத்தில் இயங்குகிறது என்பதை நம்பலாம். இதை உறுதிப்படுத்துகிறது விசேஷ எலெக்ட்ரானிக் ஸ்பீட் 'கவர்னர்'.

இசைத்தட்டின் ஒலி முடிந்ததும், இது தானாகவே நின்றுவிடுகிறது. இது மட்டுமா? இதில் வால்யூம் மற்றும் தொனிக் கட்டுப்பாடுகளும், வெவ்வேறு 3-ஸ்பீட்களும் உள்ளன.

இதை வீட்டிலும், வெளியிலும் இயக்கலாம். (இன்பமாகப் பொழுது போக்க, வசதியாக வெளியில் எடுத்துச் செல்லலாம் என்பதை எண்ணிப் பாருங்கள்!)

இதன் அழகிய தோற்றமே உங்களைக் கவர்ந்துவிடுமே! மரம், போலிஸ்டைரீன் மற்றும் அலங்கார அலுமினியத்தில் அழகான அமைப்பு கொண்டது.

இத்தனை சிறப்புகளும் கொண்ட பிலிப்ஸ் மெயின்ஸ்-பாட்டரி ஸிஸ்டம் ஜீஎஃப் 533-ஐ, இவ்வளவு குறைந்த விலையில், பிலிப்ஸ் தொழில் நுட்பத் திறன் மட்டுமே உங்களுக்கு வழங்க முடியும்.

இன்றே உங்கள் பிலிப்ஸ் வியாபாரியைக் காண்க.

பிலிப்ஸ்

38

சுவாமி விளக்குக்காகப் பஞ்சில் திரி திரிக்கும் போது சிறிது விபூதியை உள்ளங் கையில் பூசிக் கொள்ளுங்கள். பஞ்சு கையில் ஒட்டிக் கொள்ளாமல் சுலபமாகத் திரிக்க முடியும்.

—ஆ. பெ. சண்முகம் ராஜும்



சௌம்யா விம்மி விம்மி அழுதபடி இருந்தாள். அவள் ஏன் சொல்லாமல் இருந்து விட்டாள்? அத்தனை சுய நலமா? இப்பவும் என்ன? இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றன. சொல்லி விடலாமே. ஜானகி சொன்னது அவளைத் தடுமாற வைத்தது. சொல்லா விட்டால் என்ன? குழந்தையை மாமியே வளர்க்கட்டும். அடிக்கடி வந்து பார்த்துப் போகலாமே.

அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே ராம மூர்த்தி டெலிபோன் செய்தான், சௌம்யாவைப் புறப்பட்டு வரும் படி.

சௌம்யா டெலிபோன் செய்தியைச் சொன்னதும், ''சமர்த்தாய் இரம்மா. கல்யாணத்துக்கு எல்லா ஏற்பாடும் செய்து விட்டாரே. இப்ப போய் எதையாவது சொல்லிக் குழப்பி விடாதே'' என்றாள் ஜானகி. சௌம்யா தலையை அசைத்துவிட்டுக் கிளம்பினாள்.

அவள் உள்ளத்தையே பிரதிபலிப்பது போல் ஜானகி பேசினாள்: ''சௌம்யா, என்ன யோசிக்கிறாய்? இதோ பார், நான் சொல்லுகிறேனே என்று தப்பாக நினைக்காதே. நீயும் ராமமூர்த்தியும் நாலைந்து மாதங்களாகப் பழகுகிறீர்கள் இல்லையா? இருவரும் மனம் விரும்பிக் கல்யாணம் செய்து கொள்ளவும் முடிவு செய்து விட்டீர்கள் இல்லையா? இத்தனை மாதங்களின் சந்திப்பில் உனக்குச் சந்தரைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று ஏன் தோன்றவில்லை?''

சௌம்யாவின் கரு விழிகளிலிருந்து கண்ணீர் வழிந்தது.

''அசடே, அழாதே,'' என்றாள் ஜானகி. ''தோன்றாதது உன் தப்பில்லை. நீ வாழ்ந்த நினைவே உனக்கு இல்லை. அத்தனை வெறுப்பும் கசப்பும் விரக்தியும் நிறைந்து விட்டது. அதுதான் காரணம். சந்தர் பிறப்பதற்கு முன்பே சேகர் போய்விட்டான். குழந்தை பிறந்து மூன்றும் மாதமே நீ வேலைக்குப் போய்ச் சேர்ந்துவிட்டாய். உன் உடம்பு இருந்த லட்சணத்தில் நீ குழந்தைக்குப் பால் ஊட்டக் கூட முடியவில்லை. அவன் பிறந்ததிலிருந்து என் மடியில்தான் வளர்கிறான். உனக்குத் தாய்ப் பாசம் இருக்கும். உண்மைதான். உனக்கு இளம் வயது. சுகமோ இன்பமோ அனுபவிக்காதவள். ராமமூர்த்தியின் அன்பும் ஆதரவும், ஆசையும் கை நீட்டி உன்னை அழைக்கிறது. இளமையின் வேகம் தாய்ப் பாசத்தை அடக்கி விட்டது. சௌம்யா. வருந்தாதே. நீ வாழ வேண்டும்.''

ராமமூர்த்தியின் ஏற்பாட்டின் படி ரிஜிஸ்டர் கல்யாணம் முடிந்தது.

கல்யாணத்துக்கு ஆபீஸ் நண்பர்கள் சிலர் வந்திருந்தனர். சௌம்யாவுக்கு உற்ற தோழியாக வனிதாவும் வந்திருந்தாள். ராமமூர்த்தி



''எம்.ஏ. பாஸ் பண்ணினாலொழிய எனக்குக் கல்யாணம் கிடையாது என்று என் அப்பா சொல்லி விட்டார். அதனாலே கொஞ்சம் பொறு கமலா.''

''அப்படியா? இப்ப என்ன படிக்கிறீர்கள்?''

''டென்த் ஸ்டாண்டர்டு.''

யின் அக்காள் சுந்தரி பெங்களூரிலிருந்து வந்து தம்பியின் சீர்திருத்தக் கல்யாணத்தைச் சந்தோஷத்தோடு நடத்தி வைத்தாள். செளம்யாவின் அழகு, அடக்கம், பணிவு எல்லாமாக அவளைக் கவர்ந்து மலர வைத்தன. செளம்யாவை ஆதரவுடன் அணைத்து ஆசீர்வதித்தாள். ஹோட்டல் ஒன்றில் விருந்துடன் கல்யாணம் முடிந்தது.

அன்று இரவே சுந்தரி பெங்களூருக்குக் கிளம்பியாக வேண்டும் என்று கூறியபோது செளம்யா சில நாட்கள் தங்களுடன் தங்கிவிட்டுப் போகும்படி வேண்டினாள்.

''இல்லேம்மா.. இப்ப குழந்தைகளுக்குப் பரீட்சை சமயம். கோடை விடுமுறையின் போது குடும்பத்தோடு வந்து டேரா போட்டு விடுகிறேன். என்ன?'' சிரித்தபடி கூறினாள் சுந்தரி.

ரயிலில் ஏறி உட்கார்ந்த பின்னர் சுந்தரி, தம்பியிடம், ''நான் சொன்னது நினைவிருக்கா மூர்த்தி? கல்யாணம் ஆகிவிட்டது. உன் குழந்தையை அழைத்து வைத்துக் கொள். என்ன?'' என்றாள்.

''ஆகட்டும் அக்கா.'' ராமமூர்த்தி பதில் சொன்னான்.

ரயிலும் கிளம்பியது. செளம்யா திகைத்து நின்றாள். சுந்தரிக்குக் கை ஆட்டி விடை கொடுக்கக் கூட முடியாதபடி அவள் மனத்தில் திகைப்பு.



''கொத்தவால் சாவடிக்குப் போய் இருபது கடைகளில் துவரம் பருப்பு சாம்பிள் வாங்கிட்டு வந்துட்டேன். இந்தா! பருப்புத் துவையல் அரைத்துவிடு.''

ராமமூர்த்தி மனைவியை இழந்தவர் என்று தெரியும். அவர் மனைவி மதுரம் பாயும் படுக்கையுமாகவே இரண்டு வருஷங்கள் வாழ்ந்து எழுந்திருக்காமல் போய்விட்ட துர்ப்பாக்கியவதி என்று ராமமூர்த்தியே சொல்லியிருக்கிறார்.

ஆனால் அவர் குழந்தை? அதைப் பற்றி அவர் சொல்லவே இல்லையே! அவரும் அவளைப்போல மறைத்து விட்டாரே? ஆண்கள் பயப்படத் தேவை இல்லையே. முதல் மனைவியின் குழந்தையை வளர்ப்பதற்கென்று சாக்குச் சொல்லி இரண்டாம் தாரம் கல்யாணம் செய்து கொள்பவர்களாயிற்றே? ராமமூர்த்தி ஏன் சொல்லவில்லை?

அன்றிரவிலிருந்து அவர்கள் குடித்தனம் ஆரம்பமாகியது. மகிழ்ச்சியான சமயங்களில் கூட அவளுக்குச் சந்தரின் நினைவு வந்தது. குற்றம் புரிந்துவிட்ட உணர்வில் தவித்தாள்.

வயலினை எடுத்து வைத்துக் கொண்டு வாசிக்க முயன்றாள். இப்போது தடைவிதிக்க யாருமில்லை. ஆனால் ஏனோ அவளுக்கே உற்சாகமில்லாமல் போய்விட்டது. இத்தனை மாதங்களில் அவள் சந்தரைப் பற்றி அதிகமாக நினைத்ததே இல்லை. தூக்கிக் கொஞ்சியதில்லை. அவன் சிரிப்பை, விளையாட்டைக் கண்டு மகிழ்ந்ததில்லை. ஜானகிதான் குழந்தையை வளர்த்தாள். செளம்யா ஆபீஸிலிருந்து வந்ததும் சில நாட்கள் ஜானகியாகவே குழந்தையைச் செளம்யாவின் மடியில் வைப்பாள். ''கொஞ்சம் வைத்துக் கொள்ளடி. தவழ்ந்து தவழ்ந்தே ரகளை பண்ணுகிறான்...'' என்பாள்.

அப்போதுகூட செளம்யா குழந்தையை வைத்துக் கொண்டே ஏதேனும் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருப்பாளே தவிர அவனைக் கொஞ்சி, சீராட்டி விளையாடியதில்லை.

இப்போது ஏன் அவனையே நினைக்கிறாள்? அவளுக்கே புரியவில்லை.

அன்று ராமமூர்த்தி குழந்தைக்காக விளையாட்டுப் பொருள்களை வாங்கி வந்து குவித்தான். பொம்மைகள், ஓடும் ரயில், பலூன்கள், குதிரை...

செளம்யா ஊமையாக நின்றாள்.

அவர்கள் இருவருமே சில

தினங்கள் லீவு எடுத்திருந்தார்கள்.

''சௌம்யா! நான் போய்க் குழந்தையை அழைத்து வருகிறேன்,'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினான்.

சௌம்யா தலையை அசைத்தாளே தவிர வாய் திறந்து எதுவும் கேட்கவில்லை.

குழந்தை ஆணா, பெண்ணா? தெரியாது. என்ன வயதிருக்குமோ? சௌம்யா பெருமூச்சு விட்டாள். தான் சுமந்து பெற்ற குழந்தையை அவளால் சீராட்டி வளர்க்க முடியவில்லை. இன்னொருத்தியின் குழந்தையை வளர்க்க வேண்டும். துக்கம் பொங்கியது. அவள் தவறு செய்து விட்டாள். வெகு நேரம் சிந்தித்தாள். கணவனிடம் உண்மையைக் கூற வேண்டும்.

அவள் ஏன் பயப்பட வேண்டும்? அவனுடைய குழந்தையை அவள் ஏற்கும்போது அவளுடைய குழந்தையின் பொறுப்பை ஏன் அவன் ஏற்கக் கூடாது? என்ன சொல்லுகிறார் பார்க்கலாமே? முடியாது என்பாரா! அவளும் சம்பாதிக்கிறாளே? அவள் குழந்தைக்கு உரிமை இல்லையா? சௌம்யாவின் மனம் பல விதமாகக் குழம்பியது. எப்படியும் ஒரு நாள் தெரியும். அதை இப்போதே சொல்லி விடலாமே. தீர்மானமாக முடிவு செய்து கொண்டாள்.

மாலை நாலு மணி இருக்கும்.


ராமமூர்த்தி ஆட்டோவில் வந்து இறங்கினான். கதவைத் திறந்து விட்டு சௌம்யா அடுப்பில் காயும் பாலை இறக்க உள்ளே சென்று விட்டாள்.

சில விநாடிகள் கழித்துக் கூடத்திற்கு வரும் போது ராமமூர்த்தியும் குழந்தையுடன் உள்ளே நுழைந்தான். அவன் தோளில் சாய்ந்திருந்த குழந்தையைக் கண்டு ஒரு துள்ளுத் துள்ளி மயங்கி விழாமல் இருக்க நாற்காலியைப் பிடித்துக் கொண்டாள் சௌம்யா.

குழந்தை சந்தர் அவளைப் பார்த்துச் சிரித்தது. ''ம்..மா... மா..மா...'' மழலை உதிர்ந்தது.

''சௌம்யா, இந்தா நம்ம குழந்தை.'' சிரித்தான் ராமமூர்த்தி.

''இது... இது... உங்களுக்கு...''





பேச முடியாமல் திணறிஞள் சௌம்யா. உடல் வியர்த்தது. கால்கள் நடுங்கின.

''சௌம்யா! நீ சொல்லவில்லேயே தவிர எனக்கு எல்லாம் தெரியும். வனிதா கூறிஞள். சௌம்யா, நீ என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லே. சீர்திருத்தம் என்பது வெறும் சிற்றின்ப மயக்கத்துக்காக அல்ல. எப்ப உன்னே மணந்து கொள்ள நிச்சயித்து, நீயும் ஒப்புதல் தந்தாயோ... அப்பவே தீர்மானித்து விட்டேன். நீ சில நாளாகத் தெளிவில்லாமல் சலனமாக இருந்ததையும் கண்டு கொண்டேன். இன்னமும் உன்னே வருத்தக் கூடாதென்று இன்று போய் அழைத்து வந்தேன்.''

''என்னே மன்னியுங்கள்.. நான்...நான்...'' சௌம்யா அவன் காலடியில் சரிந்தாள்.

மற்ருெரு கையால் அவளேத் தூக்கி நிறுத்திஞன். அணைத்தான்.

''உங்கள் குழந்தை..?''

''இவன்தான் நம்ப குழந்தை. என் அக்கா சுந்தரிக்கும் தெரியும். ஸ்டேஷனில் அவள் கூறியதும் இவனேப் பற்றித்தான்,'' என்றவன், ''இந்தா பிடி,'' என்று குழந்தையை அவளிடம் நீட்டிஞன்.

அன்றிரவு, ராமமூர்த்தி ரசித்துக்கொண்டிருக்க, அவள் வயலினே எடுத்து வைத்துக்கொண்டு வாசித்தாள்.

அமுதமாகப் பொழிந்தது இசை.

சாமுத்ரிகா லட்சண சாத்திரம்

கூந்தலின் ஓர் இழையை வைத்து, சாமுத்ரிகா லட்சணப்படி பெண்ணின் உருவம் இப்படித்தான் இருக்கும் என்று ஓர் ஓவியர் கரெக்டாக ஊகித்துப் படம் வரைந்ததாகப் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையில் ஒரு சம்பவம் வரும். இந்தத் துணே நடிகையின் போஸைக் கவனியுங்கள் (சிவாஜி கணேசனின் தங்கையாக 'இளேய தலேமுறை' என்ற படத்தில் நடிக்கிருர்) நேர் தோற்றம் எப்படி இருக்கும் என்று கற்பனே செய்து கொண்டு 60'ம் பக்கத்தைப் புரட்டிச் சரி பார்த்துக் கொள்ளுங்கள்.

டைவர்ஸ்

முன் கதை

தொழிலதிபரும் பணக்காரருமான சிவராமன் தன் பெண் வசுவுக்கு ஏழைப் பையனான கோபியை மணமுடித்தபோது வசு மகிழ்ச்சி அடைகிறாள். ஓர் ஏழையைக் கை தூக்கிவிட வேண்டும் என்று அப்பா நினைத்தது எத்தனை பெருந்தன்மை என்றெண்ணிப் பூரிக்கிறாள். ஆனால், முதலிரவின் போது—

முன்னொரு காலத்தில் அவள் அப்பா மிக ஏழையாக இருந்ததாயும், அப்போது கோபியின் தாய் தங்கம்மா அவருக்குக் கை கொடுத்ததாயும், அந்த நன்றிக் கடனைத் திருப்பத்தான் இந்தத் திருமணம் என்றும் கோபி சொல்கிறான். வசுவுக்கு நம்பிக்கையில்லை. எரிச்சல் படுகிறாள்.

தேன் நிலவுக்காக இருவரும் ஊட்டி செல்கிறார்கள். அங்கேயும் கோபியின் சொல்லும், செயலும் தன் அப்பாவின் பழைய வாழ்க்கையைக் குத்திக் காட்டுவதாகவே இருப்பதாகப் பொருமுகிறாள் வசு. கோபி தனியே சென்னை திரும்ப, தோழி நித்யாவைச் சந்திக்கும் சாக்கில் வசு பொள்ளாச்சி செல்கிறாள். அங்கே ஒரு மரக் கடையில் தன் தந்தை குமாஸ்தாவாக இருந்ததாயும், தங்கம்மா என்ற ஒரு தாயில்லாப் பெண்ணும் அவரும் அண்ணன் - தங்கை போலப் பிரியமாய்ப் பழகி வந்தார்களென்றும், அந்தப் பெண்ணின் கல்யாணத்துக்காக அவள் அப்பா வைத்திருந்த பதினாயிரம் ரூபாயை வாங்கி, சிவராம் ஒரு காண்டிராக்ட் பிடித்ததாயும், அதன்பின் படிப்படியாய் முன்னுக்கு வந்ததாயும், ஆனால் அவர் அந்தப் பணத்தைத் திருப்பித் தரவேயில்லை என்றும் கேள்விப்பட்டுத் திடுக்கிடுகிறாள். நித்யாவுடன் காரில் உல்லாசப் பயணம் போகும்போது கார் ரிப்பேராகிவிடவே, அமிர்தம்மா என்ற பணக்காரியின் வீட்டில் போன் செய்ய நுழைகிறார்கள். முதலில் மிகவும் அகம்பாவமாக இருக்கும் அமிர்தம்மா, வசு இன்னாரின் பெண் என்ற தகவல் அறிந்ததும், பிரியம் காட்டுகிறாள்.

வசு சென்னை வருகிறாள். கோபிக்குக் கார் போகிறது. அவன் வராமல், அவளை வரச் சொல்லிச் செய்தி அனுப்புகிறான். அவள் கோபத்தோடு போகிறாள். கோபி அவளை அழைத்துக்கொண்டு மாம்பலத்தில் தனிக் குடித்தனத்துக்காக அமர்த்தியிருக்கும் சிறிய பழைய வீட்டைக் காண்பிக்கிறான். அவள் அவன் முகத்தில் அடித்தாற்போல் பேசிவிட்டு, காரை எடுத்துக்கொண்டு போய் விடுகிறாள். அவன் நடந்தே திருவல்லிக்கேணிக்கு வர வேண்டியதாகிறது.

11

சினமுற்றிருக்கும்போது எச்சரிக்கையோடு இருங்கள். புயல் அடித்துக்கொண்டிருக்கும்போது யாரேனும் கப்பலில் பயணத்தைத் துவக்குவார்களா?

—டாண்டெமிஸ்

வசு அவனைத் தனியே விட்டுக் காரில் சென்று விட்டதும், கோபி திருவல்லிக்கேணியை நோக்கிக் கால்நடையாகவே செல்ல வேண்டியதாயிற்று.

தன்னை இப்படி அவமானப் படுத்திய வசுமீது, தூக்கி எறிந்து பேசிவிட்ட தன்னுடைய மனைவிமீது, அவனுக்கு ஆத்திரம் ஏற்படாமல் இல்லை. பழைய ஹாஸ்டல் வார்டனை—அவருடைய அன்பு முகத்தையும் ஆதரவான குரலையும்—நினைத்துப் பார்த்துத் தன் கோபத்தை அடக்கிக் கொண்டான்.

துரைசாமி ரோட்டைக் கடந்து பனகல் பார்க்கை நெருங்குகையில் எப்போதோ நடந்த அந்தச் சம்பவம் மனக் கண்முன் தோன்றியது.

பி.வி.ஆர்

அப்போது அவன் கல்லூரியில் முதல் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். என்னதான் சித்தி அவனைத் தன் வீட்டில் வைத்துக்கொண்டு பாதுகாத்தாலும், அவனுடைய வறுமை அவனைப் பிடுங்கித் தின்றது. கல்லூரி முதல்வர் அவனுக்கு இலவச உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தார். ஹாஸ்டலில் பிற மாணவர்களுக்கு கோபி இலை போட்டுத் தண்ணீர் கொடுக்கவேண்டும். சிற்சில சமயங்களில் ஹாஸ்டலில் சிப்பந்திகள் இல்லாதபோது சாதம், குழம்பு என்று பரிமாற வேண்டும். இந்த வேலைகளைச் செய்ததால் அவனுக்கு இலவசச் சாப்பாடு. இதை அவன் ஓர் அவமானமாகக் கருதவில்லை. இலவச உணவை ஒரு கண்ணியத்தோடும் கௌரவத்தோடும் பெற்றுக் கொள்ளத்தான் வேலையை அளிக்கிறார்கள் என்று நினைத்தான். ஆனால் எல்லா மாணவர்களும் அதே ரீதியில் நினைக்கவில்லை.



ஒருநாள் மத்தியானம் குழம்பு பரிமாற வேண்டியதாயிற்று. பாகற்காய் சாம்பார்.

''பாகற்காய் இல்லாமல் போடுடா கோபி.'' என்றான் சுகுமாரன் என்ற மாணவன்.

சாம்பார் பக்கெட்டைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு நின்ற கோபி, அகப்பையில்' பாகற்காய்த் துண்டுகளை ஒதுக்கி, குழம்பை எடுத்தான். ஓரிரண்டு துண்டுகள் அவனையும் மீறி அகப்பையினுள் இடம் பெற்றுவிட்டன.

சுகுமாரனுடைய கலத்தில் பாகற்காய்த் துண்டுகள் விழுந்தன.

''டேய் தரித்திரம், நான் என்ன சொன்னேன், நீ என்ன செய்கிறாய்?'' சுகுமாரன் கத்தினான்.

''ஸாரி, சுகுமார். தவறி விழுந்து விட்டது,'' என்றான் கோபி.

''சோத்துக்கு வக்கு இல்லாவிட்டால் ஓட்டல்லே போய் வேலை செய்யறது தானே? இங்கே ஓசிச் சாப்பாடு போடறுங்கன்னு ஏன் காலேஜுக்குப் படிக்கவர்றே?''

சீற்றம் தலைக்கேறிய நிலையில் கோபி, மீண்டும், ''ஸாரி,'' என்றான்.

''என்னடா ஸாரி..எச்சக்கலையைத் தின்ன வேண்டிய

நாய் ஹாஸ்டலுக்குள் நுழைந்திருக்கே.. போடா!'' சுகுமாரன் பேச்சோடு நிற்காமல், கையையும் அவன் முகத்தை நோக்கி வீசினன். அவன் கையில் பாதி பிசைந்திருந்த சாதத்திலிருந்து பல பருக்கைகள் கோபியின் முகத்தில் சிதறின.

முகத்தில் கோபம் மின்னியது. கண்களில் தீப்பொறி பறந்தது. அடுத்த கணம்,..

பாகற்காய் சாம்பாரை அப்படியே சுகுமாரன் தலையில் கொட்டினன். அகப்பையால் மண்டையில் தட்டினன்.

பத்தாவது நிமிடம் அவன் ஹாஸ்டல் வார்டன் முன்னல் இழுத்துச் செல்லப்பட்டான். வார்டன் வயது நிறைந்த பாதிரியார். தீர விசாரித்தார். பிறகு எல்லா மாணவர்களையும் அனுப்பிவிட்டு அவர் சொன்னர்.



37'ம் பக்கத்தில் உள்ளது வரலட்சுமியின் படம்.



பெண்கள் சம்பந்தப்பட்ட லவ் ஸீன்கள் முன்பெல்லாம் கே. எஸ். ஜி. படங்களில் தவறுமல் வரும். இப்போது காணேம். வரலட்சுமி ஜெயலலிதாவை அணைத்துப் பிடித்திருக்கும் இந்தக் காட்சி 'அவளுக்கு ஆயிரம் கண்கள்' படத்தில் வருகிறது.

"கோபி, நீ ஏழை. உன் ஏழ்மையைச் சுகுமாரன் பரிகாசம் செய்தபோது உனக்குக் கோபம் வந்தது இயற்கை. அந்தச் சாம்பார் சூடாக இல்லாததால் சுகுமாரன் தப்பினுன். நீ கொட்டியது மட்டும் சூடாக இருந் திருந்தால் என்னவாகியிருக்கும்?"

கோபிக்கு அவர் கூறியது நியாயமாகப் பட்டது.

"என்னை மன்னித்து விடுங் கள் ஃபாதர். நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்," என்ருன்.

"பால் பொங்கும்போது என்ன செய்கிறேம்? இறக்கி வைக்கி றேம். இல்லாவிட்டால் கொஞ் சம் தண்ணீரைத் தெளிக்கிறேம். கோபமும் பால் பொங்குவது போலத் தான். அமைதியாக இருக்கும் போது கோபத்தை அடக்க எல்லாருக்கும் வழி தெரியும். ஆனல் கண்மூடித்தனமான கோபம் வரும்போது? அப்போதுதான் நீ கோபத்தை உணர்ந்து அதைப் பொறு மையென்கிற நீரால் அடக்க வேண் டும்," என்று அவர் அன்புடன் அறி வுரை சொன்னுர்.

அவமான உணர்ச்சியிலுல் சினம் பொங்கும் போதெல்லாம அவர் குரல் கோபியின் காதில் ஒலிக் கும். சினம் தானே தணிந்துவிடும்.

கோபி திருவல்லிக் கேணியை அடைந்தபோது மணி ஒன்ப தரை ஆகிவிட்டது. அவன் வழக்கமாகச் சாப்பிடும் ஓட்டலில் ஒன்பது மணிக்கு மேல் ஒன்றும் கிடைக்காது.

நேரே அறையை நோக்கி நடந்தான். நாகராஜன் வீட்டில் சாப் பிட வேண்டியதுதான்.

நாகராஜன் சீதாவிடம் இலை போடச் சொன்னபோது, அவள் சமை யலறையைக் கழுவிக் கொண்டிருந் தாள். கூடத்தில், அயர்ந்து தூங்கும் லல்லியைக் கொசு கடிக்காமலிருக்க விசிறிக் கொண்டிருந்த பாகீரதி, "என்னடா கோபி, இப்படிச் சாப்பிடா மல் வந்து நிக்கறியே? இப்பத்தான் சாதத்தில் தண்ணீர் ஊத்தினுள். அதை எப்படியடா உனக்குப் போடறது?" என்று கேட்டாள்.

"பரவாயில்லே. மோர் சாதம்தானே?" என்ருன் கோபி.

கையைக் கழுவி விட்டு இலையைப் போட்ட சீதா, தன் கணவனிடம், ''உங்க சிநேகிதர் முகம் ஒரு மாதிரியாக இருக்கு,'' என்றாள்.

''உன் பெண்டாட்டியை அழைச்சுட்டுப் போனியே, அவளுக்கு வீடு பிடிச்சுதா?'' என்று கேட்டாள் பாகீரதி.

சாதத்தைப் பிசைந்த கோபி பதில் சொல்லவில்லை.

மோரைப் போட்டுக் கொண்டே சீதா, ''பிடித்திருக்காது. பிடித்திருந்தால் தனியே இங்கே வந்து சாப்பிடுவாரா?'' என்று கேட்டாள்.

''ஏண்டா, அப்படியா?'' என்றான் நாகராஜன்.

''வேறு விஷயம் பேசுடா, நாகராஜா,'' என்றான் கோபி.

அப்புறம் ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. கோபி தன் அறைக்குப் படுக்கச் சென்றபோது நாகராஜன் அவனுடன் போய்க் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு வந்தான்.

''வீடு ஏன் பிடிக்கலையாம் அந்தப் பெண்ணுக்கு?'' என்று அவனைக் கேட்டாள் பாகீரதி.

அவன் சும்மா இருந்தான்.


''வசுவுக்கு அந்த வீடு பிடிக்கலேன்னா, நான் அவள பேரிலே குற்றம் சொல்லமாட்டேன். கோட்டை மாதிரி பங்களாவில் இருந்தவளைக் கொண்டு போய் ஒரு சின்ன வீட்டில் குடி வைத்தால்? எலிப் பொந்து மாதிரி இருக்கும் அவளுக்கு,'' என்றாள் சீதா.

''எலிப் பொந்தோ புலிக் குகையோ, புருஷன் எங்கே இருக்கானோ அங்கேதான் பெண்டாட்டியும் இருக்கணும். அதுதான் தர்மம்,'' என்றாள் பாகீரதி.

''என்னைக் கேட்டால், கொஞ்ச நாட்களுக்குக் கோபி வசுவின் வீட்டிலேயே இருந்துவிட்டு, அப்புறமா வேறு வீடு பார்த்துக்கொண்டு போகலாம்,'' என்றாள் சீதா.

யோசனையிலிருந்த நாகராஜன், ''அதைத்தான் நானும் சொல்ல வந்தேன்,'' என்றான்.

''கொஞ்ச நாள் இருக்கறதுன்னு ஆரம்பிச்சா அவ்வளவுதான். அங்கேயே டேரா அடிக்க வேண்டியது



''சார், அரை நாள் லீவு
ண்டும்?''

''எதற்கு?''

''மதுரையில் அக்கவுண்டண்
ய் இருக்கிற என் அம்மா லீவிலே
ங்கே வந்திருந்தாள். நம் ஹெட்
பீஸில் டெஸ்பாட்சா இருக்கிற என்
ண்டாட்டியும் லீவு போட்டிருந்
ள். வெய்யில் நல்லா காய்கிறதே
ன்று வற்றல், வடாம் பிழியறதற்
கக் கூழ் கிளறிக் கொண்டார்கள்
மியாரும் மருமகளும். கிளறின
ழ மொட்டை மாடியில் அச்சிலே
ிந்து காய வைக்க, ஒரு ஏணி
ியாக என் பெண்டாட்டி ஏறி
ள். ஏணி சரிந்து, அவள் கீழே
இருந்த என் அம்மாமேலே விழ, இரண்டு பேருக்கும் நல்ல காயம் பட்டு ஆஸ்பத்திரியிலே கிடக்கிறார்கள். வீட்டிலே திண்டாட்டத்தைப் போக்க விழுப்புரத்தில் சூப்பிரண்டாக இருக்கிற என் மாமியார் லீவில் வருகிறாள். அவளை ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் வரவேற்று அழைத்து வரத்தான் அரை நாள் லீவு தயவு செய்யணும்!''

—வன

ரா.
தீட்டு

■ மகாராஷ்டிர மாநிலத்தின் பொதுக் கணக்குக் குழுவின் அங்கத்தினரான ஒரு பெண்மணி, உடன் இருந்த அரசாங்க அதிகாரியைப் பார்த்துக் கேட்டார்: ''இதென்ன செலவு காண்பிக்கப்பட்டிருக்கிறது! அநியாயமா இருக்கிறதே?''

அதிகாரிக்கு ஒன்றும் புரியவில்லை. கணக்குப் புத்தகங்களை வாங்கிப் பார்த்தார். விஷயம் புரிந்தது. சிரிப்பைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார். ''அம்மணி, அவை 'sundaries' இல்லை. sundries (சில்லறைச் செலவுகள்)'' என்று விளக்கினார்.

—செம்பா

தான்! என்றாள் பாகீரதி. "கோபிக்கும் என்னதான் தனியே வரணும்னு மனசு தவிச்சாலும், வரமுடியாத நிலை உண்டாகிவிடும். பெரிய பணக்காரர் வீட்டுப் பெண். அதுவும் ஒரே பெண். சிணுங்குவாள். அம்மாவை விட்டு வர்றது கஷ்டம்னு சொல்லுவாள். மாமனார்க்காரர் வேறே வந்து உபதேசம் சொல்வார். கோபியால் இந்தண்டையும் நகர முடியாது; அந்தண்டையும் நகர முடியாது. தாலியைக் கட்டினான்; இரண்டு நாள் இருந்தான், ரொம்பச் சரி, ஆனா இனிமே பெட்டி படுக்கையோட மாமனார் வீடு ஏறினானோ, அப்புறம் கடைசி வரை மாமனார் வீடே கதின்னு ஆயிடும்." பாகீரதி மூச்சு விடாமல் பேசினாள்.

தூங்கும் லல்லி அசைந்து படுத்தாள்.

"கோபிக்கு மனசிலே வலு இருந்தா நீங்க சொல்றபடி ஒண்ணும் நடக்காது. இப்பத்தான் கல்யாணமாயிருக்கு. அவள் மனசை நோக அடிப்பானேன்?" என்ற சீதா, "வீட்டை என்ன செய்தாராம்? வேண்டாம்னு சொல்லி அட்வான்ஸைத் திருப்பிக் கேட்டாராமா?" என்றாள்.

நாகராஜன், "வீடு எடுத்தது எடுத்ததுதானாம். 'அவள் மனசு மாறி வரும் வரையில் பூட்டிக் கிடக்கும்,' என்கிறான். 'என்னடா, இடியட் மாதிரிப் பேசறே? வீடு பிடிக்கலைன்னா வேறு வீடு பார்க்கலாமே,' என்றேன். 'அவளுக்கு எந்த வீடும் பிடிக்காது நாகராஜா. அவளுடைய அப்பாவின் பங்களாதான் பிடித்திருக்கு. ஆனா அது எனக்குப் பிடிக்கவில்லை,' என்கிறான்," என்றான்.

"வசு என்னதான் சொன்னாளாம்?" என்று கேட்டாள் சீதா.

"இவனை விட்டு விட்டுத் தன் பாட்டுக்குக் காரை ஓட்டிக்கொண்டு போய் விட்டாளாம். இதைவிட அழுத்தமா அப்படி அவள் என்ன சொல்லிவிட முடியும்?"

"சே, வசு நல்ல பொண்ணு. அன்னிக்கு நம்ம வீட்லே எப்படிப் பழகினாள். இவன் ஏதானும் அவளுக்குக் கோபம் வரும்படியா பேசியிருப்பான்," என்றாள் பாகீரதி.

"சீதா, உன்னைத்தான் வசு அழைத்திருக்கிறாளே.. அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வா. இவன் என்ன சொல்லி அவள் என்ன அழுது கொண்டிருக்கிறாளோ?" என்றான் நாகராஜன்.

"நாளைக்குப் போகிறேன்," என்றாள் சீதா.

மறுநாள் முழுதும் காரியாலயத்தில் வேலை கடுமையாக இருந்ததால், கோபி வேறு எதிலும் கவனத்தைச் செலுத்தவில்லை. திருவல்லிக்கேணிக்குத் திரும்பும்போது, மணி எட்டு அடித்து விட்டது.

வீட்டு வாசலில் நாகராஜனின் மனைவி சீதா லல்லியுடன் நிற்பதை கோபி கண்டான். சீதா அவனைப் பார்த்ததும் சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு வீட்டினுள் விரைந்தாள்.

அவனுக்குப் புரியவில்லை. நின்று இரண்டு வார்த்தை பேசும் அவள், என்றுமில்லாதபடி ஏன் இப்படி உள்ளே விரைகிறாள்?

(தொடரும்)

வயதான கிராமவாசி சொன்னார்: "ம்..பென்சனை நம்பிப் பிழைப்பு நடத்த வேண்டியிருக்கு."

எனக்கு ஆச்சரியம். "நீங்கள் என்ன கவர்மெண்ட் வேலையா பார்த்தீங்க, பென்சன் வர்றத்துக்கு?" என்றேன்.

"ம்...நீங்க ஒண்ணு. பெண் (மகள்) சன் (பிள்ளை) இவர்களை நம்பித்தான் இருக்கேன்," என்று சிரித்தார் அவர்.

—ஜி. பானு

நாடு இருக்கும் வறட்சி நிலைமையில் இந்த விருந்து சாப்பிடும் அட்டைப் படம்தான் உமக்குக் கிடைத்ததா?

ஈரோடு-3 முஷ்தரி அஸிஸ் ஜான்

நிலைமையோ வரட்சி. அட்டையோ விருந்து!

சர்க்கரையும் சாக்கடையும்

'உண்ணு விரதம்' என்ற தலையங்கத்தைத் திருமதி இந்திரா காந்தி படித்தார்களோ இல்லையோ, ஆகஸ்டில் வைப்பதாக இருந்த குஜராத் மாநிலத் தேர்தல்களை ஜூனிலேயே வைக்கப் போவதாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். உங்கள் வாய்க்குச் சர்க்கரை.

தேவகோட்டை சித. பழநியப்பன்

நாட்டின் மிகப் பெரும் சுதந்திரப் போராட்ட வீரரும், 80 வயது தியாகியுமான திரு. மொரார்ஜி ஏதோ பிரதமர் பதவிக்காக ஆசைப்படுவது போல் கார்ட்டூன் போடுவதும் தலையங்கம் எழுதுவதும் தங்கள் சாக்கடைப் புத்தியையே காட்டுகிறது.

அன்னூர் டி.எஸ். முருகேசன்

தலைப்பு—ரத்து செய்யுங்கள்

'டைவர்ஸ்' என்ற தலைப்பில் தொடர் கதை வெளியிட்டு வருகிறீர்கள். அதன் அர்த்தம் 'வெவ்வேறான' எனப்படும். ஆனால் தாங்கள் 'விவாக ரத்து' என்ற அர்த்தத்தில் வெளியிட்டிருந்தால் அது 'டிவோர்ஸ்' என்று குறிப்பிட வேண்டும்.

குரோம்பேட்டை டி. எஸ். இளங்கோவன்

ரசனை ஒரு கேடாக்கும்

புகைப் படப் போட்டியில் சிறந்த படங்கள் 127 இருக்க, நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்களே மூன்று படங்கள், அவை உங்கள் ரசனைக்கு எடுத்துக் காட்டு!

திருநெல்வேலி ஆர். அனந்த ராமகிருஷ்ணன்

படம் சரியில்லை

நமது புத்தாண்டு மலரில் ராஜ திலகத்துக்கு 'லதா' அவர்கள் தீட்டியிருக்கும் ஓவியத்தில் கண்ட காட்சி என் கதையில் கிடையாது. பழங் காலத் தமிழகப் பெண்கள் யாரும் நிர்வாணமாக நீராடியது கிடையாது. அத்தகைய நீராட்டத்தைப் பற்றி நான் என் கதைகளில் எழுதியதும் கிடையாது. சிறு துண்டத்தை நன்றாகக் கட்டி, கழுத்தில் வளைத்து இழுத்துச் செருகிக் கொண்டுதான் தமிழ்ப் பெண்கள் நீராடுவது வழக்கம். இத்தகைய ஒரு ஓவியம் 'லதா'வின் கற்பனையில் எழுந்திருப்பது வருந்தத் தக்கது. ஒளிவு மறைவில்தான் இன்பமும் அழகும் இருக்கின்றன. வெளிப்படையில் இல்லை.

சென்னை-17 சாண்டில்யன்

என் பரிசு எங்கே?

'சொந்தங்கள் வாழ்க' விமரிசனத்தில் படம் முழுக்க உட்கார்ந்து பார்த்துவிட்டு வந்ததற்காகப் பரிசு கேட்டிருக்கிறார் விமரிசகர். அவருடைய விமரிசனங்களை ஒரு வரி விடாமல் பொறுமையோடு படிக்கும் எனக்கு அல்லவோ அவர் பரிசு கொடுக்க வேண்டும்?

சின்னசேலம் அரசி கோவிந்தராஜன்

டாக்டர் அழகப்பாவைப் பற்றி திரு. சா. கணேசன் எழுதியுள்ள கட்டுரையைக் குறிப்பிட்டு சென்னை—2 வி. சுப்பிரமணியன் அறிவிக்கிறார்: காரைக்குடி உயர்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் திரு. என்.எஸ். வெங்கட்ராமன் தாம் ஏழ்மை நிலையில் இருந்தாலும் டாக்டர் அழகப்பா அவர்கள் கொடுத்த ரூபாய் பத்தாயிரத்தையும் பள்ளிக்கூடத்துக்கே தந்துவிட்டாராம்.

அரசாங்க வேலைக்கான சர்வீஸ் கமிஷன் பரீட்சையை 26 வயது வரை எழுதலாம் என்றும், 'வயது' கதையில் கூறப்பட்டுள்ளது போல வயதுக் கட்டுப்பாடு 24 அல்ல என்றும் தெரிவிக்கிறார், திருப்பூர்—2 மு. நடராஜன்.


சீதையின் தந்தை பெயர் ஸீரத்வஜர் என்றும், ஸீர என்றால் கலப்பை என்றும் வாரியார் கட்டுரையில் கூறப்பட்டிருப்பது போல் 'மரவுரி' என்பதல்ல என்றும் சென்னை—28 கா.ஸ்ரீ.ஸ்ரீ. கூறுகிறார்.

12

ஏட்டுவித விவாகங்களில், காந்தர்வ விவாகம் ஒருவிதம். ஆணும் பெண்ணும் இச்சையால் ஒன்றுகூடி, பிறகு விவாகம் செய்து கொள்ளுவது காந்தர்வ விவாகம். காமமே இதில் பிரதானமாகும்.

—சம்ஸ்காரத்திலிருந்து.

ராஜலட்சுமி போர்டிகோவுக்கு வந்தபோது மாலை மணி ஏழு. கணவர் சிவராமன் இன்னும் வரவில்லை. கோபியை அழைத்துவர, திருவல்லிக்கேணிக்குப் போன வசுவையும் இன்னும் காணோம். கோபிக்காக அவள் விருந்து தயார் பண்ணச் சொல்லியிருந்தாள். அவனுக்கு என்ன பிடிக்கும் என்ன பிடிக்காது என்று இன்னும் அவள் புரிந்து கொள்ளாததால், வசுவுக்குப் பிடித்ததையெல்லாம்



செய்யச் சொல்லியிருந்தாள். பொரித்த கூட்டும், பன்னீர் ரசமும் தயாராகிக் கொண்டிருந்தன. கணவர் சிவராமன் அன்று இரவு காரில் கோயமுத்தூர் போக இருக்கிறார். அதற்கு முன் எல்லோருமாக உட்கார்ந்து சாப்பிட வேண்டும்.

அதோ, வசுவின் கார்!

கார் வந்து நின்றது. கோபி இல்லாததைக் கண்டதும் ராஜலட்சுமி மனம் துணுக்குற்றாள்.

காரிலிருந்து இறங்கி, கதவைப் படாரென்று சாத்திவிட்டுத் தன்னை நோக்கிவரும் வசுவுக்காக நின்றாள்.

அவள் தன் அருகே வந்ததும், ''வசு!'' என்றாள்.

''என்னம்மா?''

''மாப்பிள்ளை வரலியா!''

''காருக்குள்ளே ஒளிஞ்சுட்டிருக்காரா, பாரு.''

இதுமாதிரித் தூக்கி எறிந்து பேசும் குணம் வசுவுக்கு இயற்கையாக வரக்கூடியதுதான் என்றாலும், சாதாரணமாகத் தாயிடம் அப்படி நடந்து கொள்ளமாட்டாள். இன்று இப்படிப் பேச வேண்டும் என்றால் ஏதோ நடந்திருக்க வேண்டும்.

ராஜலட்சுமி தன்னைத் தயார் செய்து கொண்டு பக்குவமாகக் கேட்க ஆரம்பிப்பதற்குள், வசு மாடிப் படி ஏறிவிட்டாள்.

ராஜலட்சுமி மாடியை அடைந்தபோது, வசு புடவை மாற்றிக் கொண்டிருந்தாள்.

''வசு..''

''உம்...''

''ஏன் மாப்பிள்ளை வரலே?''

''நான் அழைச்சிட்டு வரலே.''

''ஏன்... உங்க ரெண்டு பேருக்காக ஸ்பெஷலாகச் சமைக்கச் சொன்னேன்.''

''நான் இருக்கேனே, சாப்பிட.''

''என்ன நடந்தது?''

''ஏதோ நடந்தது.''


மேற்கொண்டு எப்படிக் கேட்பது என்று ராஜலட்சுமி யோசித்துக் கொண்டிருக்கையில், சிவராமன் வருவதை உணர்ந்தாள்.

"உன் அப்பா வருகிறார்."

"அதுக்கு என்ன செய்யணும் என்கிறே?"

"ஏன் இன்னிக்கு இப்படிக் கோபமா இருக்கே, வசு?"

"நான் சரியாத்



தான் இருக்கேன்."

சிவராமன், "ராஜீ, என்ன நடந்தது? வசு என்ன சொல்லுகிறாள்?" என்று கேட்டார்.

ராஜலட்சுமி, மகள் சொன்னதைக் கூறினாள்.

"வசு, என்னம்மா நடந்தது? கோபி ஏதானும் கோபித்துக் கொண்டானா?"

அப்பாவை ஒருதரம் ஏற இறங்கப் பார்த்த வசு, அம்மா பக்கம் திரும்பினாள்.

"அம்மா, மாப்பிள்ளை எனக்கு வீடு பார்த்திருக்கிறார்."

"அப்படியா!" என்றார் சிவராமன். பிறகு தொடர்ந்தார். "கல்யாணத்துக்கு அப்புறம் அவன் நம்ப வீட்டுக்கே வந்துவிட வேண்டும் என்றுதான் முதல்லே நினைச்சேன். திருவல்லிக்கேணி ரூமைக் காலி பண்ணவும் சொன்னேன். ஆனா அவன் இப்போ வீடு பார்த்ததிலிருந்து தனிக்குடித்தனத்தைத்தான் விரும்புகிறான்னு தெரியறது. நீ என்ன சொன்னே?"

"மூஞ்சியிலே அடிச்ச மாதிரி சொல்லிட்டேன். மேற்கு மாம்பலத்திலே கொசுவுக்கும் ஆடு மாடுகளுக்கும் நடுவே ஒரு பொந்திலே என்னைக் குடியேற்றப் பார்த்தார். நான் காரை எடுத்துட்டு, 'உங்கள் வீட்டில் நீங்களே இருங்கள்'னு வந்துவிட்டேன்."

சிவராமனும் ராஜலட்சுமியும் கலவரத்

அச்சத்தை

தோடு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

அன்றிரவு சிவராமன் மனைவியிடம் சொன்னார்.

"வசுவுக்குப் பாவம் ஒண்ணும் தெரியவில்லை. ராஜி, நீதான் அவளைப் பக்குவமாக நம்ம வழிக்கு மெள்ளக் கொண்டு வரணும். எப்போ கோபி தன் எண்ணத்தைத் தெரியப் படுத்தினானோ, அப்போ இவள்தான் தாழ்ந்து போகணும். அவனாக இங்கே வந்து நம்ம கூட இருந்தா, எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் நாம வற்புறுத்தக்கூடாது."

அன்றிரவு சிவராமன் கோவை செல்வதாகப் புறப்பட்டுச் சென்றார்.

மறுநாள் காலை சந்தர்ப்பம் கிடைத்தபோது மகளிடம், "வசு, நான் உன் அப்பா கூட எப்படி இருக்கிறேன், எப்படி நடந்து கொள்ளுகிறேன்னு உனக்குத் தெரியும். இந்த இருபத்தஞ்சு வருஷ தாம்பத்தியத்திலே, நாங்க ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஒரு மனவேற்றுமை இல்லாம இருக்கோம். இதைப் பார்த்துக்கூட நீ ஏதும் கற்றுக்கொள்ளவில்லை.. போனால் போறது...இனிமேயாவது நீ ஒழுங்காக நாங்க சொல்றதைக் கேளு..." என்று சொல்வதென்று தீர்மானம் செய்து கொண்டாள்.

ஆனால் சந்தர்ப்பம்தான் கிடைக்கவில்லை. காலையிலிருந்தே ராஜலட்சுமி கண்ணில் வசு தென்படவில்லை. காப்பி குடிக்க வந்தவள், உடனே தினசரிப் பேப்பர்களை எடுத்துக் கொண்டு மாடிக்குச் சென்றுவிட்டாள்.

சிவராமனும் முந்தின இரவு கோயமுத்தூர் போய்விட்டார். ராஜலட்சுமிக்கு வீடே வெறிச்சோடுவதாகத் தோன்றியது.

காலைச் சாப்பாடு ஆனதும் ஹாலுக்கு வந்தாள். அதே சமயம், இருபத்து நாலு அல்லது இருபத்தைந்து வயது மதிக்கத் தகுந்த ஒரு பெண் படி ஏறி வந்து கொண்டிருப்பது தெரிந்தது. முகத்தில், தாய்மையின் ரத்தம் கொட்டி நிற்பதையும், பூசினாற் போன்ற உடற்கட்டையும் கண்ட ராஜலட்சுமிக்கு வருகிறவள் யார் என்று புரியவில்லை.

"நமஸ்காரம்," என்று கை கூப்பிக்கொண்டே பிரவேசித்த அந்தப் பெண், "என் பெயர் சீதா. உங்கள் மாப்பிள்ளையின் சிநேகிதருடைய மனைவி," என்றாள்.

ராஜலட்சுமிக்கு சீதாவைப் பார்க்கவே மகிழ்ச்சியாக இருந்தது.

"வாம்மா. நாகராஜன் மனைவியா? உன்னைப்பத்தி வசு வாய் நிறையச் சொன்னாள். அவளுக்குப் பெரிய விருந்தா பண்ணிப் போட்டீர்களாமே.. வா...உட்கார்ந்து கொள்."

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஒரு பச்சடியும் சாப்பாடும் ரசமும் எல்லார் வீட்டிலேயும் வைக்கிறதுதானே... வசு இருக்கிறாளா?"

"உம். இருக்கா...மாடியிலே இருக்கா...கூப்பிடறேன்."

"வேண்டாம். நானே போய்ப் பார்த்துக்கறேன்..."

"இப்ப எத்தனை மாசம் உனக்கு?"

"அஞ்சு."

"என்ன சாப்பிடறே, காப்பியா, கூல் ட்ரிங்க்கா..."

ராஜலட்சுமி அம்மாளின் உபசாரம் சீதாவின் உள்ளத்தைக் குளிர்வித்தது.

"ஒண்ணும் வேண்டாம். உங்களைப் பார்த்தப்புறம்தான், வசுவுக்கு அவ்வளவு நல்ல குணம் யார்கிட்டே யிருந்து வந்திருக்குன்னு தெரிகிறது."

ஒருத்தரைத் தைரியசா[லி]
என்று சொன்னால் அவருக்குப் பயமே
ஏற்படாது என்று அர்த்தமல்ல.

ஒன்றுக்கொன்று தொடர்[பு]
உண்டு என்றாலும், தைரியம் மன[த்]
தைப் பொறுத்தது; பயம் உடலை[ப்]
பொறுத்தது. உயரமான மாடிப்படி
ஏறினால் மூச்சு இரைக்கிறது. அது
உடலின் வாகு. அப்படித்தான் சி[ல]
விபரீத சம்பவங்களையோ, பயங்கரங்
களையோ பார்க்கும்போது உடம்பு
தன்னிச்சையாகப் பயப்படுகிறது.

மாவீரன் நெப்போலியனால்,
"தைரியசாலிகளிலெல்லாம் பெரிய...

வெல்ல

தைரியசாலி' என்று புகழப்பட்டவர் தளபதி மார்ஷல் நே என்பவர்.

ஆனல் வாட்டர்லூ யுத்தத்தின் போது, நேயின் கால்கள் பயத்தினல் கிடுகிடுவென்று நடுங்கத் தொடங்கிவிட்டன. குதிரைமேல் ஏறி உட்காரக் கூடஇயலாத அளவுக்கு அவை நடுங்கின.

ஆனல் தளபதி நே தமது கால்களை அலட்சியமாக ஒருமுறை நோக்கினர். பின்னர் இவ்வாறு அவற்றைப் பார்த்துக் கர்ஜித்தார்.

''ஏ நடுங்கும் கால்களே, நன்ருக நடுங்குங்கள். நான் உங்களை எங்கே கூட்டிச் செல்லப் போகிறேன் என்பதை அறிந்தால் நீங்கள் இன்னும் மோசமாக நடுங்குவீர்கள்.'' இப்படிக் கூறிவிட்டு அவர் அடுத்த விஞடி குதிரையில் ஏறி யுத்த களத்தின் மையப் பகுதிக்குப் புறப்பட்டு விட்டார்.

அச்சம் என்பது உடல்கூறில் ஏற்படுவதே தவிர, உள்ளத்துக்கு ஏற்படுவது கிடையாது என்று நே நம்பினர்.

தைரியசாலி பய உணர்வுகளின் ஆட்சிக்கு அடிபணியாமல் தானே எஜமானுகி அவற்றை வெல்லுகிருன். தைரியமற்றவன் பயத்துக்கு அடிமையாகிருன்.

—த ஆர்ட் அஃப் கரேஜியஸ் லிவிங்

ராஜலட்சுமி சிரித்தாள். ''அப்படி என்ன குணத்தை அவளிடம் நீ கண்டுட்டே?''

''எனக்கு, சின்ன வயசிலிருந்தே பணக்காரர்கள்னு ஒரு பயமாக்கும். எப்போதும் அதிகாரமா, திமிரா, ஏழைகளைத் தூக்கி எறிஞ்சு பேசுவார்கள் என்று ஒரு எண்ணம் உண்டு. ஆனு, அதெல்லாம் எவ்வளவு தப்புன்னு இப்பத்தான் தெரிய ஆரம்பிச்சுருக்கு. வசு எப்படி நடந்துகொள்ளுவாளோன்னுகூட நான் முதல்லே பயந்தேன்...ஆனு, ஒரு நொடியிலே என் பயத்தை அவள் போக்கிட்டா.''

'வசுவா இவ்வளவு நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்டிருக்கிருள்!' ராஜலட்சுமிக்கு வியப்பாகவும் பூரிப்பாகவும் இருந்தது.

தன் பெண்ணைப் பற்றி இவ்வளவு உயர்வாகப் பேசும் சீதாவைப் பார்த்து அவள் மிகவும் நெகிழ்ந்து போனுள். அவள் ஏதோ கேட்க வாயெடுக்கவும், வசு மாடியிலிருந்து இறங்கி ஹாலுக்குள் பிரவேசிக்கவும் சரியாக இருந்தது.

''ஹலோ வசு...நீ என்னை இன்வைட் பண்ணி ஒரு வாரம் ஆயிட்டுது. இன்னிக்குத்தான் வர முடிஞ்சுது,'' என்ருள் சீதா, உரிமையுடன்.

''ஓகோ,'' என்ருள் வசு.

அவள் நின்ற தோரணையும் பார்த்த பார்வையும் சீதாவைக் குழப்பின.

''எங்கேயாவது புறப்பட்டுக் கொண்டிருக்கிருயா, வசு?'' என்ருள்.

''என் டிரெஸ்ஸைப் பார்த்தா தெரியலையா?'' என்ருள் வசு, பட்டென்று.

சீதாவுக்கு முகத்தில் அறை பட்டாற் போலிருந்தது. எழுந்துகொண்டாள்.

''அப்போ நான் வரேன்.''

சீதா எழுந்து நிற்பதைக் கண்டபோது, ராஜலட்சுமியின் இதயம் வேதனைப்பட்டது. வசுவைப் பற்றி இந்தப் பெண் மனம் திறந்து பேசினுள். புகழ்ந்தாள். ஆனல் வசு? சே, என்ன பெண் இவள்?

''வசு, சீதாவுக்குக் குங்குமம் கொடு. போய் அவளைக் காரில் இறக்கி விட்டுவிட்டு வா!'' என்ருள் அவள்.

சீதா, ''நான் வந்த மாதிரி, பஸ்ஸிலேயே போய்க் கொள்ளுகிறேன்,'' என்ருள்.

ராஜலட்சுமி குங்குமம் எடுத்துக் கொடுத்தாள். கண்களில் நீர்

முட்டி நிற்க, சீதா குங்குமத்தை வாங்கிக் கொண்டாள். வசு காரில் ஏறிக் கொண்டு எங்கோ போய்விட்டாள்.

"நீ எதையும் மனசிலே வைச்சுக்காதே அம்மா."

"இல்லே....இந்த வசு என் கண்ணுக்குத் தெரியலே. ஏன்னு, அன்னிக்குப் பார்த்த வசு தான் என் மனசிலே பதிஞ்சிருக்கா... ...நான் வரேன்."

அவள் போகும் கோலத்தைக் கண்டபோது, ராஜலட்சுமியின் நெஞ்சு வெடித்தது.

சீதா போன பிறகு ராஜலட்சுமிக்கு இருக்கை கொள்ளவில்லை. வசுவின் போக்கு அவளுக்கு ஒரு புதிராகத் தோன்றியது. கோபி மீதுள்ள ஆத்திரத்தையும் கோபத்தையும் சீதா மீது காட்டியிருக்கிறாள். கோபி மீது ஏன் ஆத்திரமும் கோபமும் உண்டாக வேண்டும்?

இன்னொரு உண்மையும் அவளுடைய மனத்தை நோகச் செய்தது. பொள்ளாச்சியிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து வசு அப்பாவிடம் முன்னைப் போலப் பழகுவதில்லை. தினமும் அவரிடம் சிரித்துச் சிரித்துப் பேசுகிறவள், அவர் மாதிரி யாருமே இருக்க முடியாது என்று பூரித்துப் போகிறவள், ஏன் அப்பாவிடம் பேச்சுக் கொடுப்பதில்லை?

இதற்குக் காரணம், கோபியின் தாயார் தங்கம்மாளை சிவராமன் பத்தாயிரம் ரூபாய்க்கு ஏமாற்றிவிட்டார் என்று யாரோ சொன்ன செய்திதானே? ராஜலட்சுமி அவ்வளவு தூரம் பெண்ணிடம் அடித்துச் சொல்லிய போதும், சிவராமன் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கி இருக்கிறார், தங்கம்மாளை ஏமாற்றி இருக்கிறார் என்றே நம்புகிறாள். அவளுடைய இந்தப் பிடிவாத எண்ணத்தின் காரணமாக, ராஜலட்சுமிக்கே சந்தேகம் பிறந்துவிட்டது. இந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்யவும் தன் மனத்துக்குச் சமாதானம் தேடிக்கொள்ளவும் தான், தன் அண்ணன் ராஜாமணிக்குக் கடிதம் எழுதி, அவரை வரச் சொன்னாள். ராஜாமணியிடமிருந்து பதில் வரவில்லையாயினும் அவர் கூடிய சீக்கிரம் வந்துவிடுவார் என்ற நம்பிக்கை குறையவில்லை.

அவளுடைய நம்பிக்கை வீண்



ஹேமா சௌத்ரி தென்னிந்திய பிலிம் வர்த்தக சபை நடத்தும் நடிப்புப் பயிற்சிப் பள்ளியில் தேர்வு பெற்று வெளி வந்திருக்கும் முதல் குழுவில் மாணவி.

வண்ணப்படம்: சரஸ்வதி சத்திய மூர்த்தி

போகவில்லை. அன்று மத்தியானம் மூன்று மணிக்கு ராஜாமணி வந்தார்.

"என்ன ராஜி, காலியான சினிமா கொட்டகை மாதிரி இருக்கு வீடு. சிவு எங்கே? வசுவையும் காணோம்?" என்று கேட்டுக் கொண்டே ராஜாமணி வந்தார்.

"வாருங்கள், அண்ணா. ஏன் பதில் கடிதமே போடலே? அவர் கோயமுத்தூர் போயிருக்கார்...வசு வெளியே போனா."

"அறுவடை மும்முரமாக நடக்கிறது. நீ அவசரம்னு எழுதினாயே என்று வந்தேன். இன்னிக்குச் சாயங்காலமே திரும்ப வேண்டும்."

சிறிது நேரம் கழித்துப் பேச்சு மெல்லத் தொடர்ந்து கடைசியில் அந்தக் காலத்துக்குத் தாவியது.

"ஏன் அண்ணா, நீங்கள் அவரைப் பார்ட்னரா சேர்த்துக் கொண்டீர்களே அப்போ அவர் எவ்வளவு ரூபாய் மூலதனமாப் போட்டார்?" என்று ஆரம்பித்தாள் ராஜலட்சுமி.

"ஏன், எதுக்குக் கேட்கிறே?"

"கேட்கிறேன். சொல்லுங்கள். எனக்குத் தெரியணும்."

"முதல்லே வேலைன்னுதான் சிவு வந்தார். நல்ல புத்திசாலி, நிறையச் சுறுசுறுப்பு. பார்க்கறதுக்கும் ஜோரா இருந்தார். எல்லாத்தையும் கணக்குப் போட்டுப் பார்த்தேன். வேலைக்கு வைச்சுக்கறதைவிட, கூட்டாளியா வைச்சுக்கறது நல்லதுன்னு தோன்றிற்று. என் தங்கையை என் கீழே வேலை செய்கிறவருக்குக் கொடுக்கறதைவிட, கூட்டாளிக்குக் கொடுக்கறது மேல் இல்லியா?"

அவள் அதையெல்லாம் கேட்கத் தமையனை வரவழைக்கவில்லை. "அவர் வந்தபோது அவர் கையிலே பத்தாயிரம் ரூபாய் இருந்தது. அதை என்ன செய்தார்?" என்றாள்.

ராஜாமணி உஷாரானார்.

"அவர் கையிலே என்ன இருந்தது, மடியிலே என்ன இருந்ததுன்னு நான் பார்க்கலே. கேட்கலே.."

அண்ணனின் பதில், ராஜலட்சுமிக்குச் சந்தேகத்தை ஊட்டியது.

"அவர் யார் கிட்டேயிருந்தோ பத்தாயிரம் கடன் வாங்கியிருக்கிறார். அதை உங்களோடு நடத்திய பிஸினஸில் போட்டதாகக் கேள்விப்பட்டேன்."

"ஊஹூம்."

"பிஸினஸில் பத்தாயிரம் போடலியா?"

"இல்லே."

"அப்போ அதை என்ன செய்தார்னும் உங்களுக்குத் தெரியாது?"

ராஜாமணி, "ராஜி, கொஞ்சம் தண்ணீர் தாயேன்," என்றார்.

அவள் போனதும், இந்த வீட்டில் ஏதோ விபரீதம் நடக்கிறது என்று அவர் ஊகித்தார். அமிர்தம்மா என்கிற அங்கலக்குறிச்சி பெண்ணிடமிருந்து சிவராமனை மீட்டு, தன் தங்கையின் கணவனாக்கிய கதை இப்போது ராஜிக்குத் தெரிந்துவிட்டதா?

சிவராமனை அமிர்தத்திடமிருந்து ஒரே அடியாய்ப் பிரிக்கத் தேவையாக இருந்தது பணம் ஒன்றுதான். பதினைந்தாயிரம் கொடுத்தால் தன் பெண் அமிர்தத்தை வேறு இடத்தில் கல்யாணம் செய்து கொடுப்பதாக அவளுடைய தாயார் வாக்குறுதி அளித்தாள். கொடுக்காவிட்டால் என்ன நடக்கும் என்பதையும் உணர்த்தினாள்.

சிவராமனிடம் பத்தாயிரம் இருந்தது. ராஜாமணி கூட ஓர் ஐயாயிரம் போட்டு தாம் எடுத்த காரியத்தை முடித்தார். சிவராமன்— அமிர்தம் தொடர்பை பணம் எனும் கத்திரி மூலம் அறுக்க உதவி செய்தார்.

சிவராமனுடைய பத்தாயிரம் ரூபாய் இப்படித்தான் செலவாயிற்று என்று எப்படி இப்போது தங்கையிடம் சொல்ல முடியும்? மழுப்பிவிட்டார்.

ராஜாமணி பழைய அமிர்தம்மாவைக் கொண்டுவந்து ராஜலட்சுமி முன் நிறுத்த ஆசைப்படவில்லை. ஆனால் சினிமாக் கதைபோல, அன்று சாயந்தரமே எழும்பூர் ஸ்டேஷனில் அவளைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அவர் டிக்கெட் வாங்கிக் கொண்டு திரும்புகையில், நடுத்தர வயது உள்ள ஒருத்தி, பட்டுப் புடவையும், வைரத்தோடுமாக முதல் வகுப்புப் பிரயாணிகள் நுழையும் வாசலருகே நின்று கொண்டிருந்தாள். பழைய அமிர்தம், இப்போது எப்படி மாறியிருக்கிறாள்! ராஜாமணி வியந்தார்.

அவருடைய வியப்பு திகைப்பாக மாறியது, எங்கிருந்தோ வந்த சிவராமனைப் பார்த்ததும்.

"ஏங்க இவ்வளவு நேரம்?" அமிர்தத்தின் குரல், தூணுக்குப் பின்னாலிருந்து ராஜாமணி காதில் விழுந்தது.

"பிளாட்பாரம் டிக்கெட்டுக்குப் பெரிய 'க்யூ'. போகலாமா?" என்றார் சிவராமன்.

இருவரும் ராஜாமணியைப் பார்க்கவில்லை.

(தொடரும்)

◻ ◻

பரிசுத்த கீதம்

கினீ, மொராக்கோ, இராக், குவெய்த், ஆப்கானிஸ்தான் நாட்டுத் தேசிய கீதங்களில் வார்த்தைகளே கிடையாது.

—ஆர். எம்.

பி.வி.ஆர்.

கடவாளம்

கணவன் திருமணமான பிறகு மனைவியை வண்டியில் ஏற்றிக்கொண்டு தன் வீட்டுக்குச் செல்லும்போது சொல்லுகிறான்:

'பெண்ணே, நல்ல இலவ மரத்தில் செய்யப்பட்டதும், பல வகை வர்ண முள்ளதும், தங்கம் போல் பிரகாசிப்பதும், நல்ல சக்கரமுடையதும், நன்கு ஓடுவதுமான இந்த வண்டியில், உன் சிதனங்களுடன் ஏறு.''

—சம்ஸ்காரங்களிலிருந்து.

13

கோபிக்குப் புரியாத புதிராக இருந்தது: நாகராஜன் மனைவி சீதா ஏன் அவனைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டு வீட்டினுள் போக வேண்டும்?

லல்லி சீதாவைத் தொடர்ந்து ஓட, கோபி உள்ளே பிரவேசித்தான். ஒரு வேளை மாமியாருக்கும் மருமகளுக்கும் ஏதேனும் பூசலோ? நாகராஜனுடைய அக்கா வேறு வந்திருக்கிறாள். மாமியாரும் நாத்தியும் ஏதாவது சொல்லி, சீதாவின் மனத்தைப் புண்படுத்தியிருப்பார்களோ?

ரேழியைக் கடந்து செல்லுகையில் அவனுக்கு அவனுடைய கேள்வியே அபத்தமாகப் பட்டது. மாமியார், நாத்திமீது வருத்தமிருந்தால் சீதா அவன்மீது கோபிப்பானேன்?

கூடத்தில் பாகீரதி காலை நீட்டிப் படுத்துக் கொண்டிருந்தாள். சீதாவும் நாத்தியும் சமையலறையில் இருந்தார்கள். கோபி ஒரு நிமிடம் நின்று பார்த்துவிட்டு, தனது அறைக்குச் சென்றான்.

அவன் மீண்டும் கீழே வந்த போது, பாகீரதி எழுந்து உட்கார, நாகராஜன் கையில் தட்டுடன் நின்று கொண்டிருந்தான். கோபியைக் கண்டதும் பாகீரதி, "கோபி, நீயும் ஒரு பிடி சாப்பிடு," என்றாள்.

"பரவாயில்லே. இன்றைக்கு நான் ஓட்டல்லே போய்ச் சாப்பிடப் போகிறேன்," என்ற கோபி, "நாகராஜா. உன் மனைவி எங்கே?" என்று கேட்டான்.

நாகராஜனுக்கு விஷயம் ஒன்றும் தெரியாது. சீதாவின் முகம் சரியாக இல்லை என்ற அளவில் மட்டும் கவனித்திருந்தான்.

"ஏன் உள்ளே இருக்கிறாள்..சீதா.. சீதா. இங்கே வா!" என்றான்.

சீதா மெதுவாக வந்தாள்.

"என்னைப் பார்த்ததும் பேயைப் பார்த்து ஓடுகிற மாதிரி உள்ளே வந்தார்கள். என்ன காரணம்னு தெரியலே!" என்றான் கோபி.

"நான் கூட கவனித்தேன்," என்றான் நாகராஜன். "மூஞ்சி தொங்கிக் கிடக்கே, வீட்டில் என்ன நடந்ததோண்ணு நினைச்சேன்."

"இந்த வீட்டிலே ஒண்ணும் நடக்கலேடா நாகராஜா.. அம்மாவும் அக்காவும் பெண்டாட்டியை வாட்டி வதக்கி எடுத்திருக்கிறார்கள்னு நீ உன் மனசிலே கணக்குப் போட்டுட்டிருக்காதே..." என்றாள் பாகீரதி.

நாகராஜன் பதில் சொல்லுவதற்குள் கோபி, "இந்த வீட்டில் ஒன்றும் நடக்கவில்லை என்றால் வேறு எந்த வீட்டில் என்ன நடந்தது? எப்போதும் சிரிச்ச முகத்துடன் இருக்கிறவர்கள் ஏன் இப்போ இப்படி இருக்கிறார்கள்?" என்று கேட்டான்.



"அவளையே கேளுடா நாக ராஜா," என்றாள் பாகீரதி.

"சீதா, என்ன நடந்தது? கோபி சொல்கிற மாதிரி உன் மூஞ்சி பார்க்கவே சகிக்கவில்லை," என்றான் அவன்.

"ஏய், நான் அப்படிச் சொல்லவில்லை. எதையோ உள்ளே அடக்கி வைத்துக் கொண்டு இருக்கிறார்கள்னுதான் சொல்றேன்."

"என்ன சீதா?"

"ஒண்ணுமில்லே."

"ஏண்டி, என்கிட்டே சொல்லி மத்தியானமெல்லாம் அழுதியே, இப்போ சொல்லேன்!" என்றாள் பாகீரதி.

சீதா ஒரு முறை நாகராஜனை ஏறிட்டுப் பார்த்தாள். கோபி பக்கம் திரும்பவேயில்லை.

மின்னலாக ஓர் எண்ணம் உதித்து சந்தேகமாக மாறியது கோபியின் மனத்தில்.

"வசு வீட்டுக்குப் போனீர்களா?"

சீதாவின் கண்கள் கலங்குவதைக் கண்டு அவன் திடுக்கிட்டான்.

"வசு என்ன சொன்னாள்?"

பாகீரதிதான் பதில் சொன்னாள்.

"அவள் முகம் கொடுத்துப் பேசவேயில்லையாம்."

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை, அம்மா," என்றாள் சீதா.

"நீதானே சொன்னே.."

"ஏன் சீதா, என்ன நடந்தது? வசு நம்ப கோபியின் ஒய்ஃப் என்கிறதால்தானே நீ தயங்கறே.. கோபி நம்ப வீட்டு மனுஷன்.. அவன் ஏதும் தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டான்.. தைரியமாகச் சொல்லு."

சீதா பதில் சொல்லவில்லை. அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென்று கொட்டியது.

பாகீரதி, "இவள் அவளோட அம்மாவோடு பேசிட்டிருந்திருக்கா. அப்போ அவள் மாடியிலிருந்து இறங்கி வந்திருக்கா .. அவ்வளவுதான். அப்புறம் இவள் ஆர்வமா, ஆசையா பேசப் போயிருக்கா, அவள் பேசாமலே போயிருக்கா. வசு கோபமாயிருந்தாலும், ஒரு பத்து நிமிஷம் உட்கார்ந்து பேசினா சந்தோஷப்பட்டிருப்பேன் என்கிறாள்," என்றாள்.

கோபியின் நரம்புகள் கோபத்தில் புடைத்து எழுந்தன.

போன வருஷம் இதே சமயம் தான், பாகீரதி அம்மாள் ஊரில் இல்லை. மூத்த பெண் வீட்டுக்கு, சேலத்துக்குப் போயிருந்தாள். கோபி திடீரென்று ஒரு நாள் மாலை தலைவலி என்று படுத்தான். நாகராஜன் கொடுத்த மாத்திரைக்குத் தலைவலி பதில் சொல்லவில்லை. ஜுரமாகத் திரும்பியது. மாடியில் தன்னந்தனியாக ஜுரத்தில் அவதிப்பட்டான். முதல் இரண்டு நாட்களுக்கு நாகராஜன் கஞ்சியும் பாலும் காப்பியுமாகக் கொடுத்து வந்தான். ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு தான், டைபாயிடு எனத் தெரிந்தது. தன்னை உடனே ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடுமாறு கோபி எவ்வளவு மன்றாடியும் நாகராஜனும் சீதாவும் செவி சாய்க்கவில்லை. மாடி அறை

லிருந்து அவனைத் தங்கள் போர்ஷ
ருக்கே கொண்டு வந்து படுக்கை அறை
ில் படுக்க வைத்தார்கள். அந்தச் சின்
ஞ் சிறு அறையில்தான் நாகராஜன்—
தாவின் வாழ்க்கையே ஆரம்பித்தது.
ண்பனுடைய மெத்தையில் அவன்
டுத்தான். காலை, மத்தியானம், மாலை,
இரவு என்ற வித்தியாசம் இல்லாமல்,
தா ஒரு தாய்போல் சிகிச்சை
செய்தாள். டாக்டர் சொன்ன நேரத்
துக்கு மருந்து கொடுப்பது, நான்கு
மணிநேரத்துக்கொரு தடவை ஜுரத்
தைக் கணக்கெடுத்துக் குறித்து வைத்
துக் கொள்வது, ஜுரம் தணிந்த பின்
இருதடவை வேக வைத்த சாதத்தை
மோரில் கரைத்துக் கொடுப்பது எல்
லாமே சீதா செய்தாள். நாகராஜன்
ஆபீஸை உதறி எறிய முடியாத நிலையில்,
தாவைத் தவிர யார் இருக்கிறார்கள்?

கோபியின் மனத்தில், தனக்
கொரு தங்கை இல்லையே என்ற தாபம்
அடிக்கடி எழும். அவனுடைய டைபா
ிடு அதைத் தணிய வைத்தது.

சீதாவின் மனம் நோகும்படி
சு நடந்து கொண்டு விட்டாளே!
காபி கொதித்தான்.

அவனுக்கும் வசுவுக்கு
ிடையே ஆயிரம் கருத்து வேற்
றுமைகள் இருக்கலாம். ஆனால் ஒன்றும்
அறியாத ஒரு நல்ல பெண்ணை, அது
ும் தாய்மையின் பூரிப்பில் திளைத்துக்
கொண்டிருக்கிறவளை, வசு எப்படி
அவமானப்படுத்தி மனம் புண்படச்
செய்யலாம்?

அவன் உறுதி சொன்னான்:
"அவள் சார்பாக நான் உங்ககிட்டே
மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.
அவளையும் உங்ககிட்டே மன்னிப்புக்
கேட்க வைக்கிறது என் பொறுப்பு."

"சேச்சே, இதென்ன பேச்சு!
ங்களோ அவளோ மன்னிப்புக் கேட்
கும்படியா என்ன நடந்துவிட்டது?"
சொல்லி விட்டு சீதா உள்ளே போனாள்.

ராஜலட்சுமிக்கு
அண்ணா ராஜாமணி கொடுத்த தக
வல்கள் திருப்தி அளிக்கவில்லை. கூட்டு
வியாபாரத்தில், கணவர் சிவராமன்
பத்தாயிரம் ரூபாயைப் போடவில்லை
என்பதை அவர் தெளிவுபடுத்திவிட்டார்.
அந்தப் பணத்தை சிவராமன் என்ன
செய்தார் என்பதை விளக்கவில்லை.
ஒருவேளை அவருக்கே தெரியாதோ




என்னமோ?

ராஜலட்சுமியின் மனம்
வேதனைப்பட்டது. அவளுடைய கணவர்
யாரையும் ஏமாற்றக் கூடியவர்
அல்ல என்று அவள் மனப்பூர்வமாக
இத்தனை நாள் நம்பியிருந்தாலும்,
வசு அடித்துப் பேசியதிலிருந்தும்,
அண்ணா மழுப்பியதிலிருந்தும் ஏதோ
நடந்திருக்கிறது என்று அவள் நினைத்
தாள்.

அவள் தன் சிந்தனையில் மூழ்
கிக் கிடக்கையில், யாரோ போர்ட்டி
கோவில் நிற்பதை உணர்ந்தாள்.

அருகே போய்ப் பார்த்த



1945'ம் ஆண்டில் எனக்கு காங்கேயம் என்ற ஊரில் விரிவுரை. அங்கிருந்து அதிகாலை 6 மணிக்குப் பழநிக்குப் போகும் பஸ்ஸில் ஏறினேன்.

அந்த பஸ் காலை 11 மணிக்குப் பழனியைச் சேரும். 11–30 மணிக்கு ரயில் ஏறி மாலை மதுரை போக வேண்டும். நான் ஏறிவந்த பஸ் பழநிக்கு அருகில் வந்தவுடன் ரயில்வே கேட்டு மூடப்பட்டிருந்தது. ரயில் ஸ்டேஷனை அடைந்தவுடன் கேட்டு திறக்கப்பட்டது.

ரயில் ஏற ஓடினேன். 10 அடி தூரம் இருக்கின்றபோது ரயில் என்னை உதாசீனம் செய்துவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டது. என் மனம் மிகவும் ஒடிந்துவிட்டது.

பழநி ரயில்வே ஸ்டேஷனில் உள்ள காவல்துறை நிலையத்தில் என்னுடைய சாமான்களை வைத்துவிட்டு, ரயில் நிலையத்திலுள்ள உணவு விடுதியில் உணவு செய்தேன்.

காவல்துறை நிலையத்தில் அமைதியாக அமர்ந்து கட்டுரைகள் எழுதினேன். மாலை 5–30 மணிக்கு ரயில் வந்தது. அதில் ஏறி மதுரையை நோக்கிப் புறப்பட்டேன். நான் ஏறிய முதல் வகுப்பில், ஒருவர் அமர்ந்திருந்தார்.

அவர் என்னை அன்புடன் வரவேற்றுக் கும்பிட்டு உரையாடினார்.

"உங்களைக் கண்டு பேச வேண்டும் என்று நான் பல காலம் முயன்றேன். முடியவில்லை. இன்று பழநியாண்டவன் கூட்டி வைத்தான். மாதந்தோறும் கார்த்திகையில் தாங்கள் பழநி வந்து விரிவுரை புரிய வேண்டும். அதற்கான பொருளை நான் தருவேன்," என்று கூறி 100 ரூபாய் தந்தார்.

அது முதல் 10 ஆண்டுகள் பழநியில் கிருத்திகை தோறும் சுவாமி தரிசனமும் விரிவுரையும் நடைபெற்றன. அன்று ரயில் தவறியதால் இந்தப் பெருநலம் எனக்குக் கிடைத்தது.

போது. இரண்டு ஆட்கள் சிரித் முகத்துடன் நிற்பது தெரிந்தது.

"ஐயாவைப் பார்க்க வந் ருக்கிறோம்," என்றான் ஒருவன். வயு முப்பத்தைந்து இருக்கும்.

"அவர் ஊரில் இல்லை. நாளை மறுநாள்தான் வருவார்."

"நாளை மறுநாள் கண்டிப் பாக வந்து விடுவார் இல்லையா?" என்று கேட்டான் இன்னொருவன்.

"ஆமாம்.. உங்களுக்கு என்ன வேணும்?"

"நாங்க அயோத்தியாபுரத் திலிருந்து வருகிறோம்.. ஐயா எங்க குப்பத்துக் குழந்தைகளுக்கு புஸ்தகங்களும், துணிகளும், நிதி உதவி செய் திருக்கிறார். அலமாதியிலிருந்து மூணு சீமை மாடு வாங்கிக் கொடுத்திருக்கி றார். சின்னக் குழந்தைகளுக்கெல்லாம் காலையிலும் மாலையிலும் நல்ல பால் கொடுக்க வசதி பண்ணியிருக்கிறார்.. அதனாலே—"

இன்னொருவன் தொடர்ந் தான். "அதனாலே, நாளை மறுநாள் எங்க குப்பத்து ஜனங்க அவரைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்த ஏற்பாடு செய்திருக்கிறோம். இதுவரையிலே, பொன்னாடை பாராட்டையெல்லாம் வேணாம், எனக்குப் பிடிக்காதுன்னு எங்க கையைக் கட்டிப் போட்டாரு. ஆனா இந்த வாட்டி நாங்க அவரை விடப்போறதில்லை...."

ராஜலட்சுமியின் மனம் பெருமையால் பூரித்தது.

"நாளை மறுநாள் வந்து பாருங்க," என்று சொல்லி விடை கொடுத்தாள்.

ஹாலுக்குள் அவள் பிரவேசித்த போது, சுவரில் இருக்கும் சுவாமி படங்கள் கண்ணில் பட்டன. மும்மூர்த்திகள் அவளை ஈர்த்தார்கள். மனம் எண்ண ஆரம்பித்தது.

கேவலம் பத்தாயிரம் ரூபாய் பற்றிப் பேசும் அந்தப் பொள்ளாச் கிட்டு மாமா இவரைப் பற்றி வேறு ஏதாவது பேச முடிந்ததா? மகா விஷ்ணு லட்சுமியை மார்பிலே வைத்திருக்கிறார். அதற்கும் மேலே சிவன் பார்வதிக்குத் தன் உடம்பின் பாதியையே கொடுத்து விட்டார். பிரமன், வெறும் நாக்கோடு நிறுத்திக் கொண்டார்.

ஆனால் அவளுடைய கணவர் சிவராமன்? தன் மனசையே அவளுக்குக் கொடுத்து விட்டாரே!

சிவராமன் ஒரு பெரிய பணக்காரர். தொழிலதிபர். ஆனால் இந்த இருபத்தைந்து வருட தாம்பத்தியத்தில் ஒரு வாய்த் தடுமாறல், ஒரு சந்தேகமான நடத்தை, சபல புத்தியின் ஒரு சாயல் உண்டா?

இந்த விஷயத்தில் அவள் கொடுத்து வைத்தவள். எத்தனையோ பெண்களுக்குக் கிட்டாத பாக்கியம் இது. அவளுடைய பரிசுத்தமான அன்புக்கும் பதிபக்திக்கும் கிடைத்துள்ள பரிசுகள்...

ராஜலட்சுமி பொள்ளாச்சியை மறந்தாள். தங்கம்மாவை மறந்தாள். ராஜாமணியை மறந்தாள். தன்னுடைய பூரிப்பிலேயே திளைத்துப் போனாள்.

திடீரென்று போன் அழைத்தது. எடுத்தாள்.

"ஹலோ!"

" யார் பேசறது? வசு இருக்கிறாளா? கோபி பேசறேன்."

அவனுடைய குரலுக்கும் கடுமை உண்டு என்பதை முதன் முதலாக உணர்ந்தபோது ராஜலட்சுமி அயர்ந்து போனாள். வசுவிடம் ஏன் இவ்வளவு கோபம்? "நான் ராஜலட்சுமி பேசறேன். சௌக்கியமா? வசு வெளியே போயிருக்கிறாள். வர்ற நேரம்தான்..ஊட்டியிலேருந்து வந்தப்புறம் நீங்கள் வீட்டுக்கே வரலையே.. எப்போ வரலாம்னு இருக்கிறீர்கள்?"

"வரேன், அம்மா. நீங்களும் மாமாவும் சௌக்கியம் தானே?"

"இருக்கிறோம். அவர் கோயமுத்தூர் போயிருக்கிறார். இன்னிக்கு ராத்திரி சாப்பிட வாருங்களேன்."

"பரவாயில்லே..இன்னிக்கு வரலே..,இன்னொரு நாள் வரேன். நான் வசுகிட்டே பேசணும்னு போன் பண்ணினேன். அப்புறம்...ஊட்டியிலே உங்களுக்கும் மாமாவுக்கும் நீலகிரித் தைலம் வாங்கினேன். அது என் பெட்டியிலே தான் இருக்கு. அப்புறமா கொடுத்து அனுப்பறேன்."

"கொடுத்து அனுப்ப வேண்டாம். இன்னிக்கு சாப்பிட வர்ற போது கொண்டு வாருங்கள். முந்தாநாள் உங்களுக்காக நாங்க காத்துக் கொண்டிருந்தோம்...."

"என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். நான் அவசியம் ஒரு நாள் சாப்பிட வரேன்.. வசு வந்தால் சொல்கிறீர்களா.. ஆபீசுக்குப் போன் பண்ணச் சொல்லுங்கள்."

"கொஞ்சம் இருங்கள்.. கார் சத்தம் கேட்கிறது. வசு வந்துவிட்டாள்..போனை வைக்காதீர்கள்.."

போனைக் கையில் வைத்துக் கொண்டே ராஜலட்சுமி பார்த்தாள். வசு படி ஏறி வந்து கொண்டிருந்தாள்.

ராஜலட்சுமி பெருமூச்சு விட்டாள். தானும் தன் கணவரும் இவ்வளவு அன்னியோன்னியமாக, ஒருவர் மேல் ஒருவர் உயிரையே வைத்திருக்க, அவர்களுக்குப் பிறந்த பெண்..

இவ்வளவு நல்ல பிள்ளையுடன் முரண்டு செய்துகொண்டு வாழத் தெரியாமல் வாழும் பெண்ணைப் பார்க்க பார்க்க அவளுடைய வயிறு அவளையே அள்ளித் தின்றது.

(தொடரும்)

பொன்னாடை போர்த்தினார்கள்—

திருவனந்தபுரத்தில் ஒரு பெண்கள் கல்லூரியருகே மாணவர்கள் கூட்டமாக நின்று, ஒரு சுமைதாங்கிக் கல்லை நன்றாகத் தேய்த்துக் கழுவிச் சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். சந்தனம், வாசனை திரவியங்களால் நறுமணம் பூசி ஒரு பட்டாடையைப் போர்த்தினர். அதன் பக்கத்தில் ஒரு பலகையில் பின் வருமாறு எழுதி இருந்தனர்.


"இச் சுமைத்தாங்கிக் கல்லானது 1895-ஆம் ஆண்டு மார்ச் 25-ம் நாள் 'எட்மண்ட் ஒயிட்' என்றஆங்கிலேயரால் நிறுவப்பட்டது. இக்கல்லின் 81-வது பிறந்த நாளை ஒட்டி இச்சுமை தாங்கியின் அமைதியான தியாக உணர்வுடன் கூடிய சேவையைப் பாராட்டுகிறோம்..."

—'மோதி'

குமுதம்

மதி:28 மலர்:28
1-5-75

தயவு செய்து விளக்குங்கள்



திரு. ஜெயப்பிரகாஷ்

திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் இன்னும் சில தினங்களில் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்யப் போவதாகத் தெரிகிறது.

வேலூரில் வைத்தியம் பார்த்துக்கொள்ளும் நோயாளியாகவோ, குடிசை மாற்றுவாரியம் கட்டியுள்ள குடியிருப்பு ஒன்றைத் துவக்கி வைக்கும் திறப்பாளராகவோ அவர் இப்போது வரவில்லை. இம்முறை, அனைத்திந்திய எதிர்க் கட்சித் தலைவராக வரப் போகிறார்.

அவரது வருகையின்போது பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மிக முக்கியமான நிகழ்ச்சி: நிதியளிப்பு.

ஆம். மே மாதம் ஐந்தாம் தேதியன்று, சுதந்திரக் கட்சியின் சார்பாக அவருக்கு ஒரு லட்ச ரூபாய் தரப் போகிறார்கள் என்று செய்தி வெளியாகியிருக்கிறது.

வேடிக்கைதான்.

பொதுவாக, ஜெயப்பிரகாஷின் பேச்சுக்களில் புரட்சி, புரட்சி என்ற சொல் அடிக்கடி முழங்கும். அதுவும் அவர் சாதாரணப் புரட்சியோடு திருப்தியடைவதில்லை. "முழுப் புரட்சி வேண்டும்! மொத்தப் புரட்சி வேண்டும்!" என்பது அவர் கோஷம்.

மிகத் தீவிரமானது என்று கருதப்படும் சீனப் புரட்சியை அவர் வெகுவாக ஆதரித்துப் பேசியதுண்டு. முற்போக்கு சக்திகளின் பிரதிநிதி என்று அவர் தன்னைச் சொல்லிக் கொள்கிறார்.

அப்பேர்ப்பட்டவருக்கு, சுதந்திரக் கட்சி நிதியளிக்கப் போகிறது!

'புரட்சி' என்ற சொல்லுக்கு நேர் விரோதமான ஒரு பதம் இருக்குமானால் அது 'சுதந்திரக் கட்சி' தான்—கீரியும் பாம்பும் மாதிரி.

ஏற்கெனவே, பிஜு பட்நாயக் போன்ற கறைபட்ட பல கோடீசுவரர்கள்தான் ஜெயப்பிரகாஷ் இயக்கத்துக்கு உறுதுணையாக இருந்து அவரைத் தங்கள் சுயநலம் கருதித் தூண்டி விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்போது சுதந்திரக் கட்சியும் பகிரங்கமாகக் கைகோத்துக் கொள்கிறது.

இதையெல்லாம் பார்க்கும்போது, "ஜெ. பி. அவர்களே! 'முழுப் புரட்சி மொத்தப் புரட்சி,' என்று சொல்கிறீர்களே? அதன் அர்த்தம் என்ன? திட்டவட்டமாகச் சொல்லுங்கள்," என்று அவரை முன் கூட்டியே கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது என்று தோன்றுகிறது.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும், கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. குமுதம் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெடில் அச்சிட்டவர்: ஏ.பி.ஏ. பெரியகருப்பன். குமுதம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர்: பி.வி. பார்த்தசாரதி. ஆசிரியர்: எஸ்.ஏ.பி. அண்ணாமலை. முகவரி: 83, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை—600010.



திருமணச் சடங்கின்போது இப்படி ஒரு வேண்டுகோள் பிள்ளையிடமிருந்து மந்திரமாக வருகிறது:-

''ஓ, பெண்ணே, நீ நல்ல கண் உள்ளவளாக, பதிக்குத் தீங்கு செய்யாதவளாக, எனது சகோதரர்களிடம் அன்பு உள்ளவளாக இரு... எனக்கும் என்னைச் சார்ந்தவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடு.''

14

''வசு, உனக்கு போன். மாப்பிள்ளை கூப்பிடுகிறார்.''

ராஜலட்சுமியிடமிருந்து ரிஸீவரை வாங்கிக் கொண்ட வசு, ''ஹலோ,'' என்றாள்.

''வசு, உன்னோடு கொஞ்ச நேரம் தனியாகப் பேச வேண்டியிருக்கிறது,'' என்றான் கோபி. ''எங்கே சந்திக்கலாம்?''

அவளுக்கு அவன் கேள்வி தேவையற்றதாகப் பட்டது.

''நான் இங்கேதான் இருக்கிறேன்,'' என்றாள்.

''இல்லை வசு. குறுக்கீடு இல்லாமல் ஒரு அரை மணி நேரமாவது உன்னோடு தனித்து இருக்க வேண்டும்.'' அவன் சற்று நிதானித்தான். ''ஒன்று செய்யலாமா? சாயந்தரம் மெரினாவுக்கு வந்துவிடேன்?''

அவன் கெஞ்சிக் கேட்பது போலிருந்தது அவளுக்கு.

''ஓகே'' என்றாள். ''இடம்?''

பி.வி.ஆர்

''ராணி மேரி கல்லூரிக்கு எதிரில். ஃபைவ் தர்ட்டி ஷார்ப்.''

''சரி.''

அவள் ரிஸீவரை வைத்ததும், ''என்ன சொல்கிறார்?'' என்று கவலையுடன் கேட்டாள் ராஜலட்சுமி. ''எத்தனை தரம் கூப்பிட்டாலும் வர மாட்டேன் என்கிறாரே, ஏன்?''

''வராமல் எங்கே போகிறார்? எல்லாம் வருவார்,'' என்று சொல்லிவிட்டு மாடிக்குச் சென்றாள் வசு.

வசு ஒரு சிமெண்ட் பெஞ்சியின் மீது உட்கார்ந்திருந்தாள். ஆள் காட்டி விரலில் கார்ச் சாவி வளையம் தட்டாமாலை ஆடிக் கொண்டிருந்தது. அப்பப்பா, என்ன கூட்டம்! கைத்தடிகளுடன் டாக்டர் கட்டளைப்படி வாக்கிங் போகும் கிழவர்கள். மணலில் குதித்து விளையாடும் குழந்தைகள். குழந்தைகளை விளையாட விட்டு விட்டுத் தங்களுடைய பேச்சில் மூழ்கிப் போகும் பெற்றோர்கள். பெண் எங்கே தன்னை விட்டு ஓடிவிடுவாளோ என்று பயந்து அவளுடைய கையை அழுத்திப் பிடித்துக் கொண்டு கடற்கரையில் ஒரு தனி இடத்தைத் தேடி நாடும் காளைகள். மாங்காய்க் கீறலிலிருந்து உருளைக் கிழங்கு வறுவல் வரை என்னவெல்லாமோ விற்றுக் கொண்டு வரும் அன்றாடங் காய்ச்சிகள்.

''வசு.''

திரும்பினாள். கோபி.

''மணி ஐந்தே முக்கால்,'' என்றாள், சற்றே கண்டிக்கும் குரலில்.

''ஐ ஆம் வெரி ஸாரி. கடைசி நிமிஷத்திலே ஒரு வேலை முளைத்துவிட்டது. நீ ரொம்ப நேரமாக் காத்துட்டிருக்கியா?''

"ஐந்தரை என்றீர்கள். ஐந்து இருபதுக்கே வந்தேன். . ."

"ஸாரி," என்றான் அவன் மறுபடியும். "அதோ, அந்தப் படகுக்குப் பக்கத்திலே போய் உட்காரலாம்."

"ஓகே." என்று எழுந்து நடந்தவள், "இப்போ எங்கே குடி இருக்கிறீர்கள்? ட்ரிப்ளிகேன் டஞ்ஜனா, இல்லே, மாம்பலம் எலிப் பொந்தா?" என்றாள்.

"ட்ரிப்ளிகேன் டஞ்ஜன் தான்."

"அப்படியா..இங்கேயே உட்காருவோமா?"

"உம். . ."

இருவரும் உட்கார்ந்தார்கள். அவன் கேட்டான்.

"ஆமாம், நீ என்ன செய்யப் போகிறாய்? டஞ்ஜனுக்கு வருவியா, இல்லே, எலிப் பொந்துக்கு வரப் போறியா?"

"நான் எங்கேயும் வரப் போவதில்லே. உங்களைப் பாலெசுக்கு அழைச்சுட்டுப் போக முயற்சிப்பேன். சரி.. ஏதோ தனியாகப் பேச வேண்டும் என்றீர்களே?"

"ஆமாம்." அவன் சற்று மௌனமாக இருந்தான். பிறகு, "நாகராஜன் மனைவி வந்திருந்தாளாமே? அவளிடம் என்ன சொன்னாய்?" என்று ஆரம்பித்தான்.

அவள் வியப்புடன், "ஒன்றும் சொல்லவில்லையே? ஏன்?" என்றாள்.

"நீங்கள் என்னதான் பேசிக் கொண்டீர்கள்?"

"என்ன பேசியிருக்க முடியும்? அவள்தான் வந்தவுடனே புறப்பட்டுவிட்டாளே?"



"அதற்குக் காரணம் அவள் இல்லே. நீதான். அவளோடு பேச உனக்கு நேரம் கிடைக்கவில்லையாமே?"

அவள் புருவங்களைச் சுளித்தாள்.

"பின்னே? வேலை கெட்ட வேளையில் சொல்லாமல் கொள்ளாமல் வந்தாள். ஒரு முப்பது பைசாவைத் தூக்கி எறிஞ்சு போனில் எங்கேஜ்மென்ட் ஃபிக்ஸ் பண்ணியிருந்தால், என்ன நேரத்துக்கு வரணும்னு சொல்லியிருப்பேன்."

"நீ சொல்ற டயத்துக்குத்தான் உன்னைச் சந்திக்க முடியும் என்று பாவம், அவளுக்குத் தெரியாது."

"இப்ப நீங்க வந்திருப்பது சீதாவுக்காக என்று புரிகிறது. ஓ. கே. அவள் மீது உங்களுக்குக் கரிசனம் இருப்பதில் நியாயம் இருக்கிறது. ஏன்னு கேட்டா அவள் உங்களுடைய சிநேகிதரின் மனைவி. அதற்காக நான் என்னுடைய மனசில் அவளுக்கு இடம் ஒதுக்க முடியாது."

அவள் பேசிய விதம் அவனுக்கு ஆத்திரம் மூட்டிற்று.

"புழுதி படிஞ்ச அறைகளிலே நல்ல சாமான்களை வைக்க முடியாது," என்றான் எகத்தாளமாக.

"அவள் நல்ல சாமானில்லே. என்னைப் பொறுத்த வரையில் அவள் வெறும் குப்பை."

அவன் கண்கள் சிவக்க, "ஸ்டாப் திஸ் நான்சென்ஸ்," என்றான்.

"ஓ, அவளைக் குப்பைன்னு உங்களுக்கு இவ்வளவு கோபம் வர்றதா?"

"நீ இப்போ மன்னிப்புக் கேட்கணும். . . இன்னிக்கே. . ."

"உங்க கிட்டே இப்போ எதுக்கு நான் மன்னிப்புக் கேட்கணும்? என்ன தப்பு செய்திட்டேன்?"

"நோ. . . என் கிட்டே நீ மன்னிப்பு கேட்க வேண்டாம். நான் அதை எதிர்பார்க்கவும் இல்லே. . ."

"பின்னே?"

"சீதாவிடம்."

"என்ன!" தன் காதுகளையே அவளால் நம்பமுடியவில்லே. "நான் அவளிடம் எதுக்கு மன்னிப்பு கேட்கணும்?" என்றாள் தன் சீற்றத்தை அடக்கிக் கொண்டு.

"நீதானே அவளை உன் வீட்டுக்கு அழைத்தாய்?"

"இல்லேன்னு சொல்லலியே."

"அப்புறம் அவள் வந்தபோது, ஏன் லட்சியமே செய்யாமல் போனாய்?"

"லட்சியம் செய்யறதுன்னா என்ன செய்யணும்? தூக்கித் தலைமேலே வைச்சுக்கணுமா? அவள் என்னைவிட கனம் ஜாஸ்தி."

"தூக்கி எறிஞ்சு பேசினாயாம்."

மிஸ் மம்பா

மயக்காத புன்னகை.



அண்மையில் ஞாயிற்றுக் கிழமை மாலே, நண்பர்களோடு மெரீனு கடற்கரைக்குச் சென்றிருந்தேன்.

தலேயில் காவித் தலேப்பாகை யும், அதில் 'பிறை' வடிவச் சின்னமும் அணிந்து சில பேர் (சில பெண்களும்கூட) ஏதோ பிரார்த்தனே மாதிரிச் செய்து கொண்டிருந்தனர்.

சற்று நேரத்தில் அப்பிரார்த்தனே முடிவுற்றது. ஒரு துண்டுப் பிரசுரம் மிகச் சிலருக்கு மட்டுமே அவர்களால் வழங்கப்பட்டது. நானும் ஒன்றைப் பெற்றேன். படித்தேன். இத்துடன் இணேத்துள்ளேன்.

இது தமிழா? 'திராவிடர்' மொழியா? மலேயாள பாஷையா? நீங்களும் குழம்பலாமே!

—'ஆளுரான்'

...ந்நன்று—

மகா சங்கல்ப்பம்

ஆதியே துணை

மறலி கைதீண்டா சாலேஆண்டவர்கள் மெய்மதம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை-வந்து(தீண்டி யுகங்கோடி கால ளரக வேதனேக்குப் போகாமல் அதை மாற்றிப் பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே — சதுர் யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்திருக்க, அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்ம வித்தைச் செயலானது மா னெடுங்காலங்களாக மக்கள் புழக்கத் தில் இல்லாது— உலகத்தை விட்டு - மறந்து மறைந்தே போய்விட்ட இறுதிக் காலமாகிய இதுனேரம் - எமபயத்தைக் கடத்தி அதே பிரம்ம வித்தையாகிய சுவர்க்கபதி பரமபத முத்திச் செயலினில்-ஏற்றிவைக்கும் கல்க்கி ...கதி என்னும் - மூக்குக்த வெளியோ ...ச்சு ...ாத தவறுடைய - வைண் உரக்கமற்ற ...ங்ளி குல தெய்வம் - மெய்வழிச் சாலே ...டவர்கள் மெய்மதத்தில் ஞங்கள் ...ஆகி இருக்கிருேம்.

...னன் மனத்திஞேர் - யாரா... சேர்ந்து கொள்ளலாம்.

இது என்ன மொழி?

"நான் தூக்கவேயில்லே. தூக்கியிருந்தால்தானே அப்புறம் எறிவதற்கு!"

"என்னிடமே இப்படி என்ருல் அவளிடம் எப்படி நடந்து கொண்டிருந்திருப்பாய் என்று தெரியும்."

"ஓ. கே. இது உங்களுடைய அபிப்பிராயம். அதுக்குக் குறுக்கே நிற்கவோ, எதிர்த்துப் பேசவோ எனக்கு உரிமை இல்லே...என் நாகரிகத்துக்கும் அது சரியாகாது. நடந்ததைச் சொல்லுகிறேன், கேளுங்கள்."

"சொல்லு."

"கேளுங்கள். உங்க சீதா வந்தபோது நான் மாடியிலே டிரெஸ் பண்ணிட்டிருந்தேன். அவள் கீழே அம்மாவுடன் பேசிக் கொண்டிருந்தாள். நான் இறங்கி வந்தேன். 'நீ என்னே இன்வைட் பண்ணி ஒரு வாரம் ஆயிட்டுது. இன்னிக்குத்தான் வரமுடிஞ்சுது,' ன்னு சொன்னுள். அப்புறம் என் டிரெஸ்ஸைப் பார்த்து விட்டு, நான் எங்கேயாவது புறப்பட்டுக் கொண்டிருக்கிறேனுன்னு கேட்டாள். ஆமாம் என்றேன். நடந்தது இதுதான்."

"கதையை அழகாச் சொல்லிட்டே. அவள் ராத்திரி பூரா சாப்பிடவேயில்லே. அழுது கொண்டிருந்தாள்."

"அப்ஸர்டா இருக்கே! அம்மா என்கிட்டே அவளேக் காரில் கொண்டுபோய் இறக்கிவிட்டு வா என்ருள். நான் பதில் சொல்றதுக்குள்ளே, சீதா முந்திரிக்கொட்டை மாதிரி, 'நான் வந்த மாதிரி பஸ்ஸிலேயே போய்க் கொள்ளுகிறேன்' என்று சொல்லிட்டா. எனக்கு அவளேக் காரிலே ட்ராப் பண்றதுக்குக் கூட ஒரு சான்ஸ் கொடுக்கலே."

"அதுக்குக் காரணம் நீ அவளே முதல்லேயே உன் அலட்சியத்தாலேயே ட்ராப் பண்ணின்துதான்."

"அவ்வளவுதானே? நாம் புறப்படலாமா? உங்களே வேணும்னு இப்ப நான் ட்ராப் பண்ணத் தயார்."

"இப்போ, நீ என்னுடன் ட்ரிப்ளிகேன் வர்றே."

"வந்து?"

"சீதாகிட்டே மன்னிப்புக் கேட்கப்போறே."

"நெவர்! நான் அவகிட்டே மன்னிப்புக் கேட்கறதா? எனக்கு என்ன பைத்தியமா? சொல்லப்போனு அவள்தான் என்கிட்டே மன்னிப்புக் கேட்கணும். ஒன்றுமில்லாத சின்ன விஷ

யத்தை இவ்வளவு பெரிசு பண்ணி உங்களைத் தூண்டி விட்டிருக்கிறாளே!''

''வசு!''

''நான் அவசரமா வெளியே போக இருக்கும்போது வந்தா, என் வேலையைத் தூக்கி ஒரு மூலையிலே எறிஞ்சுட்டு அவகிட்டே ஊர் சமாசாரங்களை அளந்து கொண்டிருக்க முடியுமா?'

''எனக்கு அதெல்லாம் தெரியாது வசு. நீ அவள்கிட்டே மன்னிப்புக் கேட்டுத்தான் ஆகணும்.''

''அதுக்கு வேறு ஆளைப் பாருங்க..ஆஃப்டர் ஆல் ஒரு குமாஸ்தா மனைவி, அவள் காலில் நான் விழுவதாவது!''

அவனுக்கு உதடு துடித்தது.

''வசு, நீ பணக்காரி. அந்தத் திமிர் உன்னை என்னவெல்லாமோ பேச வைக்கிறது!''

''ஏழைகள்னு அவங்க எப்பவுமே தப்பே செய்ய முடியாதா? இல்லே, பணக்காரங்க செய்யறதெல்லாம் தப்பாத்தான் இருக்கணும்னு கட்டாயமா? ஆமாம், நான் ஒண்ணு கேட்கிறேன்... கட்டின மனைவி நான்...உங்களுக்கும் எனக்கும் இடையே எத்தனையோ ஆயிரமிருக்கும். அது நமக்குள்ளே நாம் தீர்த்துக்க வேண்டிய விஷயம்... இவள் யார் நடுவிலே?''

''அவள் ஒன்றும் நடுவில் வரவில்லே, வசு.. உனக்குக் கொஞ்சமாவது பண்பாடு இருந்தால், சாதாரண டீஸன்ஸி இருந்தால்..''

அவள் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

''சீதாமேலே உங்களுக்கு இவ்வளவு அக்கறை உண்டுன்னு இப்பத்தான் தெரிகிறது...வெறும் அக்கறை தானா? இல்லே...இல்லே...''

அவன் துடித்துப் போனான்.

''சீ, என்ன பேத்தறே?''

வசு மணலைத் தட்டிக் கொண்டு எழுந்தாள். ''உலகத்திலே என்ன வேணும்னாலும் நடக்கும். ஆச்சரியப்படறதுக்கு ஒண்ணுமில்லே.''

கோபிக்கு நெற்றி நரம்புகள் புடைத்தன.

வசு அதைப் பொருட்படுத்தவில்லை. போய்க் காரில் ஏறிக் கொண்டாள்.

(தொடரும்)

'எல்லோரும் நல்லவரே.' விமரிசனத்தில் லோகேஷை 'பம்ளி மாஸ் முகம்,' என்று எழுதியிருக்கிறீர்கள். உமது விமரிசகர் ஒருவர்தான் 'ஆண் அழகன்,' என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது?

பரன்குன்றுபுரம் ஏஸ். கந்தசாமி

நீர் என்ன, ஆண் அழகனா?

காட்சி முதற்கொண்டு வசனம் வரை எல்லாம் அப்பட்டமாகக் கன்னடப் படத்தின் தழுவலாக உள்ளது. அதைப்பற்றி ஒரு வார்த்தை அப்பட்டமாக எழுதாமல்...

செங்கல்பட்டு கே. காந்திமதி கிருஷ்ணமூர்த்தி

முறைதான் ஜி!

மொரார்ஜி காங்கிரஸ் — காமராஜ் காங்கிரஸ் கார்டுன் பார்த்தேன். நியாயம், நீதி, நேர்மை, நடுநிலை, அகிம்சை, வாய்மை, தியாகம், தொண்டு, சாந்தி, தர்மம், பொது நலம், உழைப்பு—இவைகளைத் தாங்கள் குப்பைகளென்று கருதுகிறீர்களா?

மருதூர் ச. ரெங்கராஜன்

தங்களின் சாக்கடைப் புத்திக்கு, மொரார்ஜி தேசாய் போன்ற தேசீயவாதிகள் குப்பையாகக் காட்சியளிப்பதில் வியப்பேதுமில்லை!

நாவல்பூர் ஒய். பி. ஜேம்ஸ்

தேனீ நட்சத்திரம்

நடிகை லெட்சுமியின் ஒரு வார டைரியைப் படித்தேன். மிகவும் அருமையாக இருந்தது. தேனீ போன்று சுறுசுறுப்பாக ஒவ்வொரு மணித் துளியையும் பயனுள்ள பொழுதாகச் செலவிட்டு வருவதை அறிந்து வியப்புற்றேன்.

பெங்களூர்-21 தே. மாயம்பெருமாள்

லட்சுமியின் டைரி கிடைத்தாலும் கிடைத்தது. நாள் கிழமைகூட மறந்துவிட்டீர்களா! 20—4—75 என்பதற்குப் பதிலாக 20—4—74 என்று போட்டுள்ளீர்களே!

வேலூர்-8 ஆர். துளசிதாஸ்

பாவமில்லை, புண்ணியம்

'பாவம் அமெரிக்கா' என்ற தங்களது அற்புதமான தலையங்கம் என் கண்ணில் நீரை வரவழைத்துவிட்டது. உலகமெங்கணும் ஜனநாயகம் நிலவவும், ஏழ்மையும் அறியாமையும் அகலவும் அமெரிக்கர்கள் செய்திருக்கும் சேவையை யாருமே மறுக்க முடியாது.

அம்பத்தூர் எஸ். ஈசுவரன்

அமெரிக்காவிடமிருந்து இதுவரை பெற்ற சகல உதவிகளையும் மறந்து, கொஞ்சம்கூட நன்றியுணர்ச்சி இன்றி அவர்கள் மீது இஷ்டத்திற்கு வசைபாடும் நமது பாரதத் தலைவர்களை தலையங்கத்தில் கண்டிக்காமல்...

செங்கோட்டை கே. ராமசுப்பிரமணியன்

மீதி எங்கே?

'ரூபாய் ஐந்து கோடி மிச்சம்' என்ற துணுக்கில் 294 பேர் இறந்ததால் ரூபாய் ஐந்து கோடி மிச்சம் என்றுள்ளது. கணக்கிட்டுப் பார்ப்பின் ரூபாய் எண்பத்தெட்டுக் கோடியே ஐம்பத்து மூன்று லட்சம் மிச்சம் வருகிறது. சொச்சம் என்னவாயிற்று?

மதுரை-3 குமரகம் ரமேஷ்

மதுரைப் பல்கலைக் கழகத்தில் பயாலஜி டிபார்ட்மெண்டில் வேலை செய்யும் மூன்று டெக்னீஷியன்களும், மூன்று டைப்பிஸ்டுகளும், பெண்களே என்று கூறுகிறார் மதுரை எஸ். ராமஸ்வாமி.

தனிவாழ்விலும் சரி, பொது வாழ்விலும் சரி, எளிமை, அடக்கம், நற்பண்பு இவற்றை ஒட்டி வாழ்ந்து மறைந்த அண்ணா, 'தென்னாட்டுக் காந்தி,' என்ற பட்டத்திற்குப் பொருத்தமானவர் என்றும் இன்றைய தி.மு.க. தலைமையினரை வைத்துக் கொண்டு அண்ணாவை எடைபோடக் கூடாது என்றும் குனியமுத்தூர் பா.சு. மணியன் நினைக்கிறார்.

அண்ணா அவர்கள் 'தினத்தந்தி' ஆசிரியரைச் சபாநாயகராகத்தான் வைத்திருந்தாரேயன்றி 'அரசு' பதிலளித்திருப்பதைப்போல் அமைச்சராக அல்ல என்று நினைவூட்டுகிறார் காரைக்குடி வி. ஆர். நாராயணன்.



இந்தத் தட…
போ…

மேஜையின் செருகு அறையைத் திறந்து, கடைசி முறையாகப் பார்த்துக் கொண்டாள் அவள்.

அந்தக் கைத்துப்பாக்கி, தொட்டிலில் தூங்கும் குழந்தைபோல, கவர்ச்சியாயும், சாதுவாயும் களங்கமற்றும் காட்சியளித்தது. சிந்தனையுடன் அதைத் தடவிக் கொடுத்தாள்.

'இத்தனை நாளைய கஷ்டங்களுக்கும் அவமானங்களுக்கும் தோல்விகளுக்கும் நீ இன்று முற்றுப்புள்ளி வைக்கப் போகிறாய்!' என்று அதனிடம் வாய்விட்டே சொல்லிவிட்டு, செருகு அறையைச் சாத்தினாள். ஜன்னல் வழியே வெளியே நோக்கினாள்.

சிவக்கொழுந்து இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார்.

அவர் இங்கே வருவது இது தான் கடைசித் தடவையாக இருக்கப் போகிறது!

வெறுப்புடன் சிரித்துக் கொண்டாள்.

கடை விளக்குகளை அணைக்க வேண்டும் என்ற அறிவிப்புக்காகச் சங்கு ஊதியது. மணி ஏழரை என்று அர்த்தம். எட்டுக்குத்தான் சிவக்கொழுந்து வருவதாகச் சொல்லியிருக்கிறார்.

அறையை விட்டு வெளியே வந்தாள். வெறிச்சோடியிருந்த வீட்டின் மௌனம் அவளை ஒவ்வொரு மூலையிலிருந்தும் வரவேற்றது. காலி செய்யப்பட்டுவிட்ட அலமாரிகள்; வெளியேற்றப்பட்டு விட்ட பீரோக்கள்; துடைக்கப்பட்டுவிட்ட பெட்டிகள்; ஓவியங்களும் நிலைக் கண்ணாடிகளும் கழற்றப்பட்டு விட்டதால் வெள்ளைத்

'பீமா'

திட்டுத் தெரியும் சுவர்கள் — செழுமையான குடும்பம் சீரழிந்த கதையைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தன. இந்த வீடு மட்டுமென்ன? விற்றுகி விட்டது. பத்து நாள் 'க்ரேஸ் டயம்' கொடுத்திருக்கிறுன் வாங்கியவன்.

ஹாலுக்கு வந்தவள், இன்னும் எடுக்கப்படாமல் மிஞ்சியிருந்த ஒரே ஒரு பொருளைப் பார்த்தாள். அவள் தந்தையின் படம். வைரக் கடுக்கனும் நரை மீசையும் சரிகைத் தலைப்பாகையும் தங்க பிரேம் போட்ட மூக்குக் கண்ணுடியுமாக ராமலிங்கம் கம்பீரமாகப் புன்னகை செய்து கொண்டிருந்தார். அது அவர் தன்னைப் பார்த்து ஏளனம் செய்வது போலிருந்தது அவளுக்கு.

'ஏமாளியாக, உலகம் தெரியாதவளாக, எடுப்பார் கைப்பொம்மையாக, சொல்பவர் பேச்சுக்கெல்லாம் தலையாட்டுகிறவளாக என்னை வளர்த்து விட்டு, திடீரென்று ஒருநாள் காலமாகி, நடுத்தெருவில் என்னை நிற்க வைத்த குற்றவாளி நீங்கள். பரிகாசமா பண்ணுகிறீர்கள் இப்போது?' என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொல்லி விட்டு மீண்டும் முன் அறைக்குத் திரும்பினுள்.

ஏமாறப் தில்லை

மறுபடியும் ஒருமுறை செருகு அறையைத் திறந்து பார்த்தாள்.

கைத்துப்பாக்கி பத்திரமாயிருந்தது.

வாசலைப் பார்த்தாள். இன்னும் சிவக்கொழுந்து வரக் காணேம். வந்துவிடுவார். கட்டாயம் வந்துவிடுவார். பேராசை பிடித்த மனிதன். வராமலிருக்க மாட்டார்.

அப்பாவுக்கு ரொம்ப வேண்டியவர் — நெருங்கிய சினேகிதர் — என்று எல்லாரும் நினைத்திருக்கிறுர்கள். அவளும் அப்படித்தான் நினைத்திருந்தாள். உண்மையில் சிவக்கொழுந்துவைக் கைதூக்கி விட்டவரே அவள் அப்பா தான். முப்பது வருடங்களுக்கு முன், பசுமடம் பஸ் நிலையத்தில் இருவரும் மூட்டை தூக்கும் தொழிலாளர்களாகப் பாடுபட்ட காலத்தை ராமலிங்கம்

சங்கீத வித்வான்களிலே அதிகமான எல். பி. ரிகார்டுகள் (லாங் பிளேயிங் ரிகார்டுகள்) கொடுத்தவர் இவர்களில் யார்? (1) எம். எஸ். சுப்புலட்சுமி, (2) பால சந்தர், (3) எம்.எல். வசந்த குமாரி, (4) மதுரை சோமு.

விடை:72'ம் பக்கம்

மறந்தவரேயல்ல. (ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு, அந்தப் பஸ் நிலையத்தில் ஒரு பிள்ளையார் கோவில் கட்டுவதற்காக ஐயாயிரம் ரூபாயை நன்கொடைகூட வழங்கினுர்.) பிறகு சென்னைக்கு வந்து கொத்தவால் சாவடியில் மளிகைக் கடையொன்று குத்தகைக்கு எடுத்தார். சில பெரிய ஓட்டல்களை நிரந்தர வாடிக்கை பிடித்தார். முன்னுக்கு வந்தார். கல்யாணம் செய்து கொண்டு ஒரே மகளைப் பெற்றுர்.

சிவக்கொழுந்துவுக்கு அவரைப் பற்றிச் செய்தி கிடைத்தது. புறப்பட்டுச் சென்னை வந்தார். 'ராமலிங்கம், என்னையும் கொஞ்சம் ஆளாக்கி விடப்பா' என்று கெஞ்சினுர். ராமலிங்கமும் பழைய தோழமையை மறக்காமல், தானே முதல் போட்டு, திருவல்லிக்கேணியில் ஒரு கட்பீஸ் எம்போரியம் வைத்துக் கொடுத்தார். சிவக்கொழுந்துவுக்கும் திறமை இருந்தது. ராமலிங்கமாவது கொஞ்சம் நியாய அநியாயம் பார்க்கிறவர். பிஸினஸ் என்று வந்துவிட்டால் அதெல்லாம் காற்றில் பறக்க விட்டு விடுகிறவர் சிவக்கொழுந்து. ஆகவே கிடுகிடுவென்று பணக்காரராகிவிட்டார்.

ஆனுல் அந்த நன்றியை மனத்தில் வைத்துக் கொண்டு, நண்பனின் மகளுக்கு ஏதாவது உதவி செய்தாரா? கிடையாது.

அவள் பொருமியவாறு குறுக்கும் நெடுக்குமாக நடந்தாள். உள்ளத்தில் மூண்டிருந்த வெறுப்பை வெளிப்படுத்துவதுபோல மெல்லிய உதடுகள் துடித்தன.

எந்த நிமிடத்திலும் சிவக்கொழுந்து வரப் போகிறுர்.

கேட்க வேண்டியதைக்

ஸ்கூட்டர் கார்



இவர் ஓட்டுவது MESSERSCHMITT என்ற பெயருடைய கேபின் ஸ்கூட்டர். மூன்று பேர் அமர்ந்து செல்லக்கூடிய இந்த ஸ்கூட்டர் இரண்டாவது உலக யுத்தத்தின்போது மிகுதியாகச் செய்யப்பட்ட சிறு விமான இயந்திரங்களைக் கொண்டு, போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மேல் நாட்டில் செய்யப்பட்டதாகும்.

—'ஆனந்த்'

கேட்டுவிட்டு, இந்தத் துப்பாக்கியை அவர் முகத்தெதிரே நீட்டும்போது —

ஹாலிலிருந்த தந்தையின் படத்துக்கு அவள் பார்வை மீண்டும் தாவியது.

திடீரென்று இறந்துபோன அதிர்ச்சிமட்டுமல்ல; கழுத்துக்கு மேல் கடன் வைத்திருந்தார் என்ற பயங்கர உண்மையும் அப்புறமல்லவா தெரிந்தது!

''யார் எதற்கு நன்கொடை கேட்டாலும் கொடுத்துக் கொண்டிருந் தார். நான் எத்தனை சொல்லியும் கேட்கவில்லை, மற்றப்படி அவரிடம் கெட்ட பழக்கம் கிடையாது. தங்கம் என்றால் தங்கம்!'' என்று சிவக் கொழுந்து பாராட்டுரைகளும் ஆறுதல் களும் அள்ளி வீசிவிட்டு, கடன்களை அடைப்பதற்கு என்ன செய்ய முடியுமோ அதெல்லாம் செய்தார். ஒரு திருகாணி மிச்சம் வைக்காமல் எல்லாவற்றையும் விற்றார். சிலவற்றைத் தானே விலை போட்டு வாங்கிக் கொண்டார்.

அதிலேதான் அவருடைய பேராசைப் புத்தி வெளிப்பட்டது.

அவளைப் பெற்றவுடனேயே இறந்துவிட்ட அம்மாவின் ஒரு ஜோடி வைரக் கம்மல் இருந்தது. அப்பா ரொம்பப் பத்திரமாகப் பாதுகாத்து வந்தது. அதையும் விற்றாக வேண்டிய நிலை வந்துவிட்டது.

''பத்தாயிரத்துக்கு நான் எடுத்துக் கொள்கிறேன்,'' என்றார் சிவக்கொழுந்து.

சம்மதித்தாள். அந்தத் தொகையும் கடனை அடைக்கச் சரி யாகிவிட்டது.

ஒரு வாரம் முன்பு அவளை சௌகார்ப்பேட்டையில் தற்செயலாகப் பார்த்த அக்முல் சந்த் சௌகார், ''என்னுங்கோ, உங்க ஃபாமிலிக்கு நான் எத்தனை நாள் ஃப்ரண்ட்ஷிப்? வைரக் கம்மல் நம்பளண்டை சொல் லாமல் அந்த சிவக்கொழுந்து கையிலே பத்தாயிரம் ரூவாக்கி கொடுத்தீங் களே? அந்த மன்சன் பதினெட்டாயிரத் துக்கு வித்திட்டான். நம்பள் பதினை யாயிரம் தந்திருப்போமே?'' என்றார் சௌகார்.

அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஒன்றும் பதில் சொல்ல முடியாமல் திரும்பிவிட்டாள்.

நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிவிட்டது. கடைசியாய் வைத் திருந்த சில்லறைகளும் காலியாகி

விட்டன. ஆணுயிருந்தால் என்ன வேண்டுமானுலும் செய்து கொள்ள லாம். பெண்ணுயிருப்பவள் அடுத்த வேளைக்கு என்ன செய்வது என்கிற அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

சிவக்கொழுந்து செய்த துரோகம் — தான் ஏமாந்துபோன அவலம்—விழிப்பாயில்லாததால் அடைந்த நஷ்டம் — அவளை உறுத்திக் கொண்டேயிருந்தது.

நேற்று சிவக் கொழுந்து வுக்குச் சொல்லியனுப்பியிருந்தாள் ஒரு விஷயம் — கடைசியாக ஒரு விஷயம்— பேச வேண்டியிருப்பதாக. எட்டு மணிக்கு வருகிறேனென்று —

இதோ வந்துவிட்டார்.

"ரொம்ப அவசரமாகக் கூப்பிட்டாயாம். வந்தேன். நிறைய ஜோலி இருக்கிறதம்மா!" என்ருர் உட்காராமலே.

"கொஞ்சம் உட்காருங்களேன்," என்ருள் அவள்.

மேஜைக்கு மறுபுறமிருந்த முக்காலியில் சிவக்கொழுந்து உட்கார்ந்தார்.

"அம்மாவின் வைரக் கம்மலை நல்ல விலைக்கு விற்றுவிட்டீர்களாமே?" என்ருள் அவள், அவருடைய முகத்தில் விழிகளைக் கூர்மையாக நாட்டி.

அவளுடைய பேச்சில் தொனித்த கடுமை அவருக்கு வியப்பளித்திருக்க வேண்டும். சற்றுத் திகைத்த மாதிரி இருந்தார்.

பின்னர் அசட்டுச் சிரிப்பு சிரித்தார். "வைரம், தங்கம், வெள்ளி இதுவெல்லாம் ஒரு நாளிருந்த விலை மறுநாள் இருக்குமா தங்கச்சி? குறையும்போது வாங்கி ஏறும்போது விற்பதுதானே வியாபாரிக்கு அழகு?"

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். என்னிடம் இதுவரை எத்தனையோ வாங்கிப் போயிருக்கிறீர்கள். ஒவ்வொன்றிலும் இதே மாதிரிதான் லாபம் பார்த்திருப்பீர்கள், இல்லையா?"

கைத்துப்பாக்கியை எடுத்து மேஜைமீது வைத்தாள். "இதைப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்."

சிவக்கொழுந்துவின் திறந்த வாய் திறந்தபடியே நின்றுவிட்டது. "வந்து. .வந்து. ."

"அப்பா ரொம்பக் காலமாக வைத்திருந்தது. கடைசி கடைசியாக இதை நான் உபயோகிக்க வேண்டியிருக்கும் என்று நான் ஒரு நாளும் எண்ணியதில்லை." கைத்துப்பாக்கியுடன் அவரை நெருங்கினுள். "சிவக்கொழுந்து சார்! இந்தமுறை நான் ஏமாறப் போவதில்லை! சரியானபடி சிக்கியிருக்கிறீர்கள்."

"என்னம்மா சொல்கிருய்?"

"நேற்றே இதை வெளியே எடுத்துப் போய் விசாரித்துவிட்டு வந்துவிட்டேன். அருமையான பழைய மாடல். ஆயிரம் ரூபாய்க்கு ஒரு பைசா குறையமாட்டேன்."

ஒரு நிமிடம் சிவக்கொழுந்து மௌனமாயிருந்தார். பிறகு, "சரியம்மா..." என்று கூறி, சட்டைப் பையிலிருந்து பர்சை வெளியெடுத்தார். நோட்டுக்களை எண்ணலானுர்.

அவள் அந்தக் கைத்துப்பாக்கியைப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள். இந்தப் பணமும் செலவழித்த பிறகு எதை விற்கப் போகிருேம் — விற்பதற்கு என்ன இருக்கிறது என்ற கவலையில் அவள் மனம் ஆழ்ந்தது.



ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ரேஷன் கடை ஒன்றின் அறிவிப்புப் பலகையில் மேலே கண்ட வாசகம் காணப்பட்டது.

'கோட்டைப்பட்டிக்கு மட்டும்' என்பதைத்தான் அப்படிப் பிரித்து எழுதிவிருந்தார்கள்.

—தேவசேனுதிபதி

விவாகங்கள் தர்மத்துக்காகவும், சந்ததிக்காகவும் தான் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். பெண் பிறக்க வேண்டும் என்று பிள்ளை விரும்பினால், கல்யாணத்தின்போது பெண்ணின் வலது கட்டை விரலை விட்டுவிட்டு, மற்ற நான்கு விரல்களையும், அவளுடைய உள்ளங் கையையும் சேர்த்துத் தன் கைக்குள் பொதிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மகன் வேண்டுமென்றால், பெண்ணின் கட்டை விரல் ஒன்றே போதும்.

—சாத்திரம்

டைவர்ஸ்

பி.வி.ஆர்.

15

ராஜலட்சுமிக்கு வசுவின் போக்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது. கோபியை வசு சந்தித்து விட்டு மெரினாவிலிருந்து வீடு திரும்பி ஒரு மணி நேரத்துக்கு மேலாகிவிட்டது. கடற்கரையில் என்ன நடந்தது, கோபி என்ன பேசினான் என்பதுபற்றி வசு வாயே திறக்கவில்லை. வந்ததும் வராததுமாக சாரைப் பாம்பு போல மாடிக்குப் போய்விட்டாள். முகமும் கடுகடுவென்றிருந்தது.

ராஜலட்சுமி கடியாரத்தைப் பார்த்தாள். எட்டேகால். வசுவைச் சாப்பிடக் கூப்பிட்டு, அந்தச் சாக்கில் விசாரித்தால் என்ன?

மகளைக் கூப்பிட அவள் ஹாலுக்குள் பிரவேசிக்கவும், வசுவே வரவும் சரியாக இருந்தது.

"வசு, சாப்பிடலாமா?" என்றாள் ராஜலட்சுமி.

"பசிக்கவில்லை, நீ வேணும்னா சாப்பிட்டுக் கொள்."

"ஏன் பசிக்கலே? மணியைப் பார். எட்டேகால் தாண்டி விட்டது."

"ரெண்டு கேக் சாப்பிட்டேன். ஒரு கோக்கும் குடிச்சேன்."

ராஜலட்சுமிக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. கோபியும் வசுவும் ஒன்றாக உட்கார்ந்து ஏதோ சாப்பிட்டிருக்கிறார்கள் என்பதை நினைக்கும்போது மனத்திலிருந்த சுமை சற்றுக் குறைந்துவிட்ட மாதிரி இருந்தது.

"அப்படியா.. கோபி என்ன சாப்பிட்டார்?"

"கோபி சாப்பிட்டால்தான் நான் சாப்பிட வேண்டுமா?"

ராஜலட்சுமிக்குத் திகைப்பாக இருந்தது.

"ஏன், என்ன ஆச்சு?" என்றாள்.

"அவருக்கு என்னைப் பிடிக்கவில்லை. எனக்கு அவரைப் பிடிக்கவில்லை." என்றாள் வசு. "என்பாட்டுக்கு நான்

வந்துவிட்டேன், வழியில் ஓட்டலில் சாப்பிட்டு வந்தேன்.''

பகீரென்றது ராஜலட்சுமிக்கு. ''அப்படி என்ன கோபம் உங்களுக்குள்?'' என்ருள்.

''அவர் தெருவிலே ஒரு எருமைக் கன்றுக்குட்டி லோல்படறது. அதைக் கவனிக்காமல், குட்மார்னிங் சொல்லாமல் அலட்சியப்படுத்திவிட்டேன். அதன் காலைப் பிடித்து மன்னிப்புக் கேட்கச் சொன்னுர். மாட்டேன் என்றேன். அதான் என்மேல் கோபம்.''

ராஜலட்சுமிக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை. வற்புறுத்திக் கேட்டதன்பேரில், நடந்ததை எல்லாம் வசு விவரித்தாள்.

ராஜலட்சுமிக்குக் கோபியின் மன வேதனை புரிந்தது.

''நேத்து நானே கவனிச்சேன் அந்தப் பெண் சிரிச்ச முகமா என்கிட்டே சரளமாப் பேசிட்டிருந்தா.. உன்னை 'ஓகோன்னு' தூக்கி வைச்சுப் புகழ்ந்தா... நீதான் அவளை மூஞ்சியிலே அடிக்காத குறையாய்ப் பேசி அனுப்பினே! அப்படிச் செய்திருக்கக் கூடாது.''


''ஓகே அம்மா. உனக்கும் மாப்பிள்ளைக்கும் நான் செய்ததுதான் தப்புன்னு பட்டா என்னுலே ஒண்ணும் செய்ய முடியாது. இதைப்பத்தி இப்போ உன்கிட்டே வேறே தனியா விவாதிக்கப் போறதில்லை.''

வசு, சோபாவில் உட்கார்ந்து ஒரு புத்தகத்தை எடுத்துப் பிரிக்கலானுள்.

பெண்ணையே ஓரிரு நிமிடங்கள் உற்று நோக்கிய வண்ணமிருந்தாள், ராஜலட்சுமி. நிலைமை மோசமாகிக்கொண்டே போவது அவளுக்குத் தெரிந்தது. விரிசல் இன்னும் அதிகமாகிவிடாதபடி ஏதாவது செய்ய வேண்டும். கணவர் சிவராமன் உடனிருந்தால் இந்தத் தர்மசங்கடத்தைச் சமாளிக்க எவ்வளவோ உதவியாக இருந்திருப்பார்.

''வசு..'' குழைவுடன் கூப்பிட்டாள்.

பிரித்த பத்திரிகையை மடிக்காமலேயே, ''என்ன?'' என்று கேட்டாள் வசு. அவளுடைய கண்கள் ஏறிட்டுப் பார்க்கவில்லை.



"ஏன் இப்படி இருக்கிருய்? உனக்கே இது நன்ருக இருக்கிறதா?" என்ருள் ராஜலட்சுமி.

"எப்படி இருக்கிறேன்?" என்று திருப்பிக் கேட்டாள் வசு.

இரவு ராஜலட்சுமி சரியாகத் தூங்கவே இல்லை. இதுவரை சுகமாகக் கழிந்துவிட்ட தன் வாழ்க்கையில் வசுவினுல் ஏதும் கசப்பு நேர்ந்துவிடுமோ என்ற அச்சம் அவளை ஆட்கொண்டுவிட்டது. கோபியிடம் வசு எப்படி நடந்து கொள்கிருள், அது அவனை எப்படிப் பாதிக்கிறது என்று முழுமையாகத் தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பமில்லாத சூழ்நிலையில் தான் இருப்பதை எண்ணி அவள் புழுங்கினுள்.

எப்படியாவது கோபியை ஒருமுறை வீட்டுக்கு வரவழைத்து, மனம் விட்டுப் பேசினுல் எல்லாம் சரியாய்ப் போய்விடும் என்ற நம்பிக்கை உதித்தது. கோபி நல்லவன். சொன்னுல் எடுத்துக் கொள்வான். அவள் ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்.

மறுநாள் பிற்பகல் மூன்று மணிக்கு, முந்தின இரவு தோன்றிய யோசனையைச் செயலாக்க, டெலிபோனை எடுத்தாள். கோபியைக் கூப்பிட்டாள்.

"கோபி பேசுகிறேன்."



"தோசைக்காக நான் எவ்வளவு நேரம் காத்திட்டிருப்பது?"

"சூடா தோசை வேணும்னு 10 நிமிஷம். சுடவைத்த தோசைக்கு 5 நிமிஷம். சூடு ஆறின தோசை இப்பவே ரெடி."

"வசுவின் அம்மா பேசுகிறேன். வந்து...வீட்டில் அவரும் இல்லை. எனக்கும் கொஞ்சம் உடம்பு சுகமில்லை..."

"ஏன்? என்ன உடம்புக்கு?" அவன் குரலில் உண்மையான கவலை தொனிப்பதை அவள் உணர்ந்தாள்.

"சொல்லும் படியாகவோ, சீரியஸாகவோ ஒன்றுமில்லை. கால் குடைச்சல்தான். வேறென்றுமில்லை... ஊட்டியிலேருந்து யூகலிப்டஸ் ஆயில் வாங்கி வந்திருப்பதாகச் சொன்னீர்களே?"

"ஆமாம். ரூமில் வைத்திருக்கிறேன். போய்க் கொடுத்தனுப்புகிறேன்."

"அவ்வளவு அவசரமில்லை. ராத்திரிதான் தேய்த்துக் கொள்ளணும். இன்னிக்கு ஏழு மணிக்கு நீங்களே ஒரு நடை வந்துவிட்டுப் போனுல் எனக்கு சந்தோஷமாக இருக்கும்."

"ஏழு மணிக்கா..?"

"ஆமாம். ஏன் யோசிக்கிறீர்கள்? நம்ம வீட்டில்தான் சாப்பாடு."

"இன்னிக்குச் சாப்பாடு வேண்டாம்."

"போனதடவையும் இதையே தான் சொன்னீர்கள். ஏன், நம்ம வீட்டுச் சாப்பாடு உங்களுக்குப் பிடிக்கலையா?" சிரித்துக் கொண்டே கேட்டாள் ராஜலட்சுமி.

"நோ. நோ. அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. வந்து, வந்து..."

"வந்து, வந்து என்று தயங்காதீர்கள். வந்து விடுகிறேன்னு சொல்லுங்கள்."

அவன் ஏதோ ஆரம்பித்தான். அவள் அவனைப் பேசவிடவில்லை.

"தாங்ஸ்..அப்புறம் யூகலிப்டஸை மறக்காதீர்கள்," என்ருள்.

"இல்லை. வசு இருக்கிருளா? என்ன செய்கிருள்?"

"போர்ட்டிகோவில் காரை ஏதோ குடைந்து கொண்டிருக்கிருள்.

இதோ கூப்பிடுகிறேன்...''

அவன் அவசரத்துடன் தடுத்தான். ''வேண்டாம், பரவாயில்லே. ஏழு மணிக்குத்தான் வரச் சொல்கிறீர்களே, அப்போ பேசிக்கொள்ளுகிறேன். போனை வைச்சுடட்டுமா?''

''சரி, தாங்க்ஸ்.''

ஏதோ ஒரு சுமை திடீரென்று இறங்கினாற் போன்ற உணர்ச்சியில், ராஜலட்சுமி திருப்தியுடன் சோபாவுக்கு வந்தாள். அதே சமயம் கையில் ஓரிரு ரிப்பேர் சாமான்களுடன், முகமெல்லாம் வியர்வை கொப்புளிக்க வசு பிரவேசித்தாள்.

''என்ன அம்மா, கோயமுத்தூரா? ரொம்ப நேரம் பேசிட்டிருந்தே?''

''உன் அப்பாவுடன் பேசவில்லே.. ..அவருடைய மாப்பிள்ளையோடே பேசிட்டிருந்தேன்.''

''அவர் எதுக்கு போன் பண்ணினார்? இன்னிக்கும் என்னை எங்கேயாவது வரச் சொல்லி உன் மூலமாக ஆர்டர் போட்டிருக்கிறாரா?''

''வசு, நீ இனிமே நாக்கைக் கொஞ்சம் அடக்கிப் பேசக் கத்துக்கணும். அவர் இன்னிக்கு ஏழு மணிக்கு இங்கே வருகிறார்.''

''ஓ, அப்படியா! வெரிகுட்! உன்னை மத்தியஸ்தத்துக்குக் கூப்பிடுறாரா?''

''அவர் யாரையும் எங்கேயும் கூப்பிடலே. . அவரைச் சாப்பிடச் சொல்லியிருக்கேன். வந்ததும் வராததுமா நீ ஏடாகூடமா ஏதும் பேசாதே. பேச வேண்டியதை எல்லாம் நான் பேசிக்கிறேன். .நீ பேசாமல் இருந்தால் போதும். சிரிச்ச மூஞ்சியா இரு.''

வசு பால்கனிக்கு வந்த போது, கீழே கார்ச் சத்தம் கேட்டது. எட்டிப் பார்த்தாள்.

அவள் இதுவரை பார்த்திராத ஒரு புது 'பியட்' மெதுவாக வந்து கொண்டிருந்தது.

யார் வருகிறார்கள்?

வசு பார்த்தாள்.

கார் நின்றதும், வசு இதுவரை பார்த்ததே இல்லை — இறங்கி,



மழை வேண்டி, மழைக்காக ஏங்கும்போது வங்காளக்குடியானவர்கள் பாடும் இந்தப் பாடல் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. பாடலை இயற்றியவர்: ஜஸீமுத்தீன். (ஆங்கில மொழி பெயர்ப்பு.)

கவிதையில்

"I will sell the jewel in my nose and buy an umbrella for your head"

என்ற வரிகள் என்னை மிகவும் கவர்ந்தன.

முழுக் கவிதையையும் பிரசுரியுங்கள். சென்னையில் மழை பொழியட்டும்.

BLACK CLOUD


Black Cloud come down, come down;
Flower-bearing Cloud, come down. come;
Cloud like cotton, Cloud like dust,
O let your sweat pour down!

Blind Cloud, Blind Cloud, come,
Let your twelve Brother Cloudlets come,
Drop a little water that we
May eat good rice.

Straight Cloud, Strong Cloud, come,
Lazy Cloud, Little Cloud, come,
I will sell the Jewel in my nose and buy
An umbrella for your head!

Soft Rain, gently fall,
In the house the plough neglected lies,
In the burning sun the farmer dies,
O Rain with laughing-face, come!'

—எஸ். கண்ணன்



கல்கத்தாவில் பல அலுவலகங்களில் உபயோகப்படுத்தப்பட்ட கம்ப்யூட்டர் கார்டுகளை, தனியார் பஸ் துறையினர் சிறிய துண்டுகளாக வெட்டி பஸ் டிக்கட்டுகளாகப் பயன்படுத்துகிறார்கள். சென்னையில் ஐ.ஐ.டி.யில் உபயோகப் படுத்தப்பட்ட கம்ப்யூட்டர் கார்டுகள் ஏராளமாகப் பயனற்று உள்ளன. இந்தக் காகிதப் பஞ்சக் காலத்தில் அவற்றைப் பல்லவா போக்குவரத்துக் கழகம் மொத்தமாக வாங்கி (ஓசியில்!) பஸ் டிக்கட்டுகள் தயார் செய்யலாமே?

—ஆர். வைத்தியநாதன்

காரை இடம் வந்து முன் ஸீட்டுக் கதவைத் திறந்தான். கதவு திறந்ததும், நித்யா இறங்கினாள்.

கார்க் கதவைத் திறந்தவன் இப்போது நித்யாவின் இடது கையைப் பிடித்துப் படி ஏறி நடக்கலானான்.

இது என்ன கூத்து? யார் இவன்? இவனை நித்யா எங்கே பிடித்தாள்? நித்யாவுக்குக் கதவைத் திறந்து விடுகிறான். அவளுடைய கையைப் பிடித்து அழைத்து வருகிறான். ஆச்சரியத்தையும் மீறி, அவளுக்குள் அவளே அறியாமல் ஒரு தாபம் பிறந்தது. அவளுடைய கோபி ஒரு தரமாவது, இவ்வளவு சிரத்தையுடன் அக்கறையுடன். அன்புடன் நடந்து கொண்டிருக்கிறானா?

''ஹாய் வசு!'' என்ற குரல் அவளைத் தட்டி எழுப்பியது.

''ஹலோ நித்யா!''

''ஏண்டி, நாங்க கீழே வந்து இறங்கறதை மேலேந்து பார்த்துட்டிருந்தியா? அப்படியே ஜம்ப் பண்ணி எங்களை வரவேற்கிறதில்லையா? மீட் மிஸ்டர் முரளி...மை அத்தைஸ் ஸன், அண்ட் மை ஃபியான்ஸே.... இவள் தான் நான் சொன்னேனே அவள்..வசு. நீங்க பொள்ளாச்சிக்கு வர்றதுக்கு முந்தின நாள் அங்கேயிருந்து புறப்பட்டுப் போனாள்.''

''க்ளாட் டு மீட் யூ,'' என்றான் முரளி.

வசு ஒரு நிமிடம் அப்படியே நின்றாள். பிறகு புன்னகை செய்தபடி—

''என்னடீ இது? குடுகுடுன்னு வந்து நிக்கறே. அத்தை பிள்ளை என்கிறே. வருங்காலக் கணவர் என்கிறே.. எனக்குத் தலை சுற்றுகிறது..'' என்றாள்.

''எனக்கே அப்படித்தான் சுற்றிற்று, எங்க தாத்தா திடுதிப்னு ஊரை எல்லாம் கூட்டி நிச்சயதார்த்தம் நடத்தப் போறேன்னு சொன்னப்போ...'' என்றாள் நித்யா. பிறகு முரளி பக்கம் திரும்பி, ''ஏன், உங்களுக்கும் உங்க தலை சுத்தியிருக்கணுமே. சுத்திற்றா?'' என்று கேட்டாள்.

அவன் ஜோக் அடித்தான்.

''எனக்குத் தலை கொஞ்சம் கனம் ஜாஸ்தி.''

வசு சிரித்தாள்:

''ஏண்டி நித்யா, இப்படி ஒரு அத்தை பிள்ளை உனக்கு ஏத்த வயசிலே இருக்கிற புராணத்தையே நீ எனக்குச் சொன்னதில்லையே?''

''இவரைப் பற்றி நான் என்னிக்காவது நினைச்சிருந்தால்தானே உன்கிட்டே ஸ்பெஷலா சொல்றதுக்கு.. சின்ன வயசிலிருந்தே, யு.பி., அஸ்ஸாம், ஸிக்கிம்னு ஹிமாலயன் பார்டர்லேயே இருந்து விட்டார். இவருடைய அப்பா வேறே அந்தக் காலத்திலிருந்தே உர்ரென்று ஒரு முறுக்கிலே இருந்து எங்களை எல்லாம்

மதிக்காமல் இருந்து விட்டார்!'' என்றுள் நித்யா. ''வசு, என் பாட்டி சொத்து எழுதினுள் இல்லையா . . . இவருக்கும் வேறு எழுதித் தொலேச்சிருக்கிருள். பாட்டியின் சொத்து, ஒரே முழுச் சொத்தா இருக்கணும்னு தாத்தா ஒ ஒன்னு ஒரே அடியா அலறிக் குதிக்க ஆரம்பிச்சார் . . . என் அப்பா ஓடோடி வந்தார் பொள்ளாச்சிக்கு. இவரோட அம்மாவும் வந்திருந்தா . . . அக்கா, தம்பி, ரெண்டு பேரும் மந்திராலோசனை செய்து தாத்தாவின் முடிவுக்கு ஓ. கே. சொன்னுங்க. போதுமா . . .''

''ஐ ஆம் வெரி ஹாப்பி, நித்யா!''

''உன் ஹாப்பினஸையெல்லாம் ரிஸர்வ் பண்ணிவை. இப்ப முதல்லே புறப்படு.''

''எங்கேடீ?''

''முதல்லே நகைக் கடை. பேர்ல்ஸ் செலக்ட் பண்ண உன்னே விட்டா யார் இருக்கா எனக்கு? இவர் எனக்கு பேர்ல் நெக்லஸ் வாங்கணும்னு ஒத்தைக் காலில் நிக்கருர் . . . இவர் ஒரு அசடு. இப்பவே . . .''

''பேசாமே இருடீ, கழுதே,'' என்றுள் வசு. ''முதல்லே கீழே போகலாம். காப்பி சாப்பிடுவோம்.''

''உன் அம்மாவை இன்னும் பார்க்கலே.''

''எல்லாம் பார்க்கலாம். எப்போ கல்யாணம்?''

''நிச்சயதார்த்தம் நடந்த வேகத்தைப் பார்த்தபோது, மறுநாளே கல்யாணம் நடக்கும்னு எதிர் பார்த்தேன். பஞ்சாங்கம் சதி பண்ணிவிட்டது. நாளேக்கு எட்டாம் நாள்! இன்னெரு சங்கதி தெரியுமா?'' என்றுள் நித்யா, மாடிப்படி இறங்கிக்கொண்டே.

''என்ன?''

''உன்னுடைய அவரும் என்னுடைய இவரும் ஒரே கம்பெனியில் தான் வேலே பார்க்கிருர்கள். போன வருஷம் ஹெட் ஆபீஸ்லே ஒரு கான்ஃபரன்ஸின்போது டில்லியில் மீட் பண்ணியிருக்கிருர்கள் . . . இந்த விஷயத்திலே நான் உன்னே விட ஒசத்தி. இவருக்குப் பிரமோஷன் ஆகி ரெண்டு வருஷமாகிறது . . . உன்னுடைய கோபிக்கு . . .''

''ஸ்டாப் இட், நித்யா, ப்ளீஸ்,'' என்றுன் முரளி.





சினி
தேர்ந்

மனேரமா (நடிகை)



சிவாஜி கணேசன் (நடிகர்)



ஏவி.
(கு



கே. பாலசந்தர் (டைரக்டர்)



லட்சு



மனேகர்
(புராண நாடகம்)



கே. ராஜகோ
(தியேட்டர்

டைவர்ஸ்



பி.வி.

16

ஒரு பெண் வெகு காலம் விவாகம் செய்துகொள்ளாமல் தவமிருந்தாள். ஒரு தடவை நாரத முனிவரை அவள் விருந்துக்கு அழைத்தாள். விவாகமாகாத பெண்ணுக்கு நற்கதி இல்லை என்றும் அப்படிப்பட்டவளிடமிருந்து விருந்து பெறுவது பாவம் என்றும் மறுத்துவிட்டார் நாரதர். பிறகு அவருடைய யோசனையின்படி, தன் தவத்தில் பாதியைத் தானம் செய்த அவள், ஒருவரை மணந்து நற்கதி பெற்றாள்.

—ஒரு புராணக் கதை.

சிவராமன் சென்னையில் ஒருநாளும் இரவுச் சாப்பாட்டை ரசித்தது கிடையாது. இயந்திரம் போன்ற வாழ்க்கை. அதன் இயக்கத்தில் எல்லாம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நடக்கும். மத்தியானம் ஒருமணிக்குப் பகல் உணவு, பிற்பகல் நான்கு மணிக்குக் காரியாலயத்தில் ஒரு கோப்பை தேனீர். வீட்டுக்கு ஆறு மணிக்குத் திரும்பினால் ராஜலட்சுமி சும்மா இருக்கமாட்டாள். தட்டு நிறையப் பலகாரத்துடன் வந்து நிற்பாள். இரவுச் சாப்பாட்டை இந்தப் பலகாரம் கெடுத்துவிடப் போகிறதென்று சிவராமனுக்கு உள்ளூற ஓர் எரிச்சல் இருந்தாலும், ராஜலட்சுமியிடம் மறுக்க அவரால் முடியாது. டிபனும் ருசியுள்ளதாக இருக்கும்.



அடை சேவை, ரவா தோசை என்று ஏதானும் ஒன்று அவரை இழுக்கும். அவ்வளவுதான். இரவுச் சாப்பாட்டைப் பெயருக்குக் கொறிக்க வேண்டிய நிலை.

அங்கலக்குறிச்சியில் அமிர்தம்மாவிடம் இருக்கும் மூன்று நாட்கள், ஒவ்வொரு மாதமும் அவர் எதிர் பார்க்கும் நாட்கள். அவரே அதிசயிக்கும் வண்ணம் அவருடைய உடம்பு கலகலப்பாக இருக்கும். ஒரு புது சக்தி பிறந்துவிட்டாற் போன்ற குதூகலம் தோன்றும். இந்தப் புது சக்திதான் மாதத்தின் மற்ற இருபத்தேழு நாட்களுக்கு உயிர் அளிக்கிறது என்று அவர் எண்ணுவார்.

இதற்கெல்லாம் காரணம் அவருடைய அமிர்தம்மாதான். சிவராமனுக்கு எது எப்போது பிடிக்கும் என்பதிலிருந்து அதை எந்தெந்த நேரங்களில் எப்படி எப்படிக் கொடுக்க வேண்டும் என்பதுவரை அமிர்தம்மா ஒரு வேத நியதியாகக் கொண்டிருந்தாள். காலை ஆறு மணிக்கு ஒரு காப்பி. ஒன்பது மணிக்குப் பழரசம். பன்னிரண்டரை மணிக்குச் சாப்பாடு—அதுவும் அவருக்குப் பிடித்த கறி கூட்டுடன். நாலரை மணிக்கு வெறும் தேனீர். இரவு ஏழரை மணிக்குச் சாப்பாடு. பத்து மணிக்குப் பாலும் பழமும்.

அன்று இரவு சாப்பிடுகையில், வழக்கம் போல அவர் அதில் காணும் ஒரு குறையை அமிர்தம்மாவுக்கு உணர்த்தினர்.

''சாம்பார், பொரியல், ரசம் எல்லாவற்றிலுமே உப்பு போதாது அமிர்தம்!''

''இதுக்கு மேலே உப்புப் போட்டால் பிளட் பிரஷர் இன்னும் ஏறும். வயசு ஆச்சுன்னு நாக்கைக் கொஞ்சம் அடக்கப் பழகிக்கணும்,'' என்றாள் அமிர்தம்மா.

''அதுக்காக எல்லாம் சப்பென்று இருக்கணுமா என்ன?''


''உங்க ராஜி சமுத்திரத்துக்குப் பக்கத்திலே இருக்காள்...சாம்பாரையும் ரசத்தையும் அந்தத் தண்ணியிலேயே வைச்சு, போதாததற்குக் கடை உப்பையும் வேறு அள்ளிப் போடுவாள் போலிருக்கு.. அது உங்க நாக்கிலே நன்றாக ஊறி அட்டை மாதிரி ஒட்டிக் கொண்டிருக்கு...வடாம் என்ணெயிலே பொரிச்சது. அதையே தின்னுட்டிருக்காதீங்க.''

வடகத்தை எடுக்கப்போன சிவராமன் அதை இலையிலேயே போட்டுவிட்டு, ''அப்பப்பா! இங்கே வந்தால் ஒரே ரோதனைதான். பச்சைக் குழந்தையை நடத்தற மாதிரி என்னை ஆட்டி வைக்கிறே!'' என்றார்.

''சரி, சரி...சீக்கிரம் எழுந்திருங்க...ரேடியோவிலே நல்ல பாட்டு இருக்கு. கேட்கலாம்.''

மோர் சாதத்தைக் கையில் எடுத்த சிவராமன் அதை வாய்க்குக் கொண்டுபோகவில்லை. அமிர்தத்தையே பார்த்தார். அவளுடைய வைரத் தோடும் பேசரியும் விளக்கின் ஒளியில் மின்னின.

இந்த முகமும் கண்களும் இன்று நேற்றிலிருந்தா அவரை ஆட்டி வைக்கின்றன? முப்பது வருடங்களுக்கு முன்னால் இதே அங்கலக்குறிச்சியில் முதன் முதலாக அவளைப் பார்த்தது முதல் அவள் அவரை இருக்கை கொள்



''டெய்லி பாத்திரம் தேய்த்துக் கழுவணும். என்ன கேட்கிறாள்?''

''பித்தளை பாத்திரம் ஒரு [illegible]க்கு 25 காசு. எவர்சில்வருக்கு [illegible] காசு. [illegible] 10 காசு.''

ளாமல் தவிக்க வைத்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய உடற் கட்டு, அள்ளித் தின்னும் சதை அழகு, முகத்தின் பொலிவு, கண்ணின் தீட்சண்ணியும் இவையெல்லாம் அவரை அன்று என்ன பாடு படுத்தின! எத்தனை நாட்கள், மாதங்கள் அவர் தூங்காமல் இளமையின் வெறியில் தவித்துப் போயிருக்கிறார்! திட்டமிட்டிருந்தபடி அவளை முறைப்படி திருமணம் செய்து கொள்ள முடியாமல் போய், அவரும் அவளும் ஒரு ரகசிய வாழ்க்கையை அனுபவிக்க ஆரம்பித்த பிறகு, நாளடைவில் அலுப்பு ஏற்பட்டுவிடும் என்றுதான் அவர் எதிர்பார்த்தார். தேய்க்கத் தேய்க்கச் சந்தனம் கமழ்வதுபோல, நாள் ஆக ஆக அமிர்தம் புதுப் புது வெள்ளமாக, வானமாக மாறிக் கொண்டே வந்தாளே தவிர, ஒரு இயந்திரமாக மழுங்கவில்லை...

திடீரென்று கேட்ட அமிர்தத்தின் குரலில் சிவராமன் திடுக்கிட்டு விழித்தார்.

''என்ன யோசிச்சுக்கிட்டிருக்கீங்க, கையிலே சாதத்தை வைச்சுட்டு?



''தயவு செய்து எப்படியாவது அந்த ரெயிலை நிறுத்துங்க!''

''இப்போதுதானே அதிலிருந்து இறங்கினீங்க?''

''ஸ்லீப்பர் கோச்சில் என் ஸ்லிப்பர் தங்கிட்டுதே!''

திடீர்னு உங்க ராஜியின் நினைவு வந்துவிட்டதா?'' அமிர்தம்மா சிரித்துக் கொண்டே கேட்டாள்.

சிவராமனும் சிரித்தார். இத்தனை நேரம் அவர் நினைத்ததெல்லாம் இந்த அமிர்தத்தைப் பற்றி. ஆனால் அவள் நினைக்கிறாள், அவர் ராஜியைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்ததாக.

''மெட்ராஸிலே ஒரு நாள் கூட ராஜி உன்னைப்பற்றி என்னிடம் கேட்டதில்லை, அமிர்தம். கேட்டிருந்தால் என்னாலே பதிலே சொல்ல முடியாது.''

''ஏன்னா, நான் ஒருத்தி இருக்கிறதே அவளுக்குத் தெரியாது.''

அவர் கை அலம்புகையில் போன் அடித்தது. அமிர்தம் எடுத்தாள். 'சரி' என்று ஒரு வார்த்தையை உதிர்த்துவிட்டு வைத்தாள்.

துவாலையால் கையைத் துடைத்துக் கொண்டே, ''யார், அமிர்தம்?'' என்றார்.

''கோயமுத்தூர் பிராஞ்சிலிருந்து கூப்பிட்டார்கள். மெட்ராஸிலிருந்து உங்க ராஜி போன் பண்ணினாளாம். எதுக்குன்னு தெரியாது.''

சிவராமனுக்குத் துணுக்கென்றது. கோயமுத்தூர் செல்வதாகத்தான் ராஜலட்சுமியிடம் சொல்லிவிட்டு வந்திருந்தார் அவர்.

போன் செய்ய வேண்டிய அவசர சமாசாரம் என்னவாக இருக்கும் என்ற கேள்வியைக் காட்டிலும், அவர் கோயமுத்தூரில் இல்லை என்ற விஷயம் அவள் மனத்தில் சந்தேகத்தைத் தூண்டிவிட்டுத் தொலைத்திருக்கப் போகிறதே என்ற கவலை அவரை ஆட்கொண்டது.

சிவராமன் மெட்ராசுக்கு டிரங்க் கால் போட்டார்.

எதிர்பார்த்த நேரத்துக்கு முன்பாகவே சென்னை கிடைத்தது.

''ராஜி, நான்தான் பேசறேன்,'' என்றார் அவர், பதற்றத்தை மறைத்துக்கொண்டு. ''கோயமுத்தூருக்குப் போன் பண்ணினதாகச் சொன்னார்கள். என்ன விஷயம்?''

''இப்போ எங்கே இருந்து பேசுகிறீர்கள்?''

''நான் வந்து...பொள்ளாச்சிக்குப் பக்கத்திலிருந்து...இங்கே

நம்ப கம்பெனிக்காக ஒரு விசேஷமான மெஷினைத் தயார் செய்கிறார்கள். அது விஷயமா இன்னிக்குக் கார்த்தாலே இங்கே வந்தேன்... சரி, எதற்கும் போன் பண்ணினாய்?''

''எல்லாம் நம்ம வகையைப் பத்திதான்.'' அவள் குரலில் வருத்தம் தொனித்தது.

''ஏன், என்ன சொல்றாள்?''

''ஏதானும் சொன்னால் தானே? தன் போக்கிலே போய்க் கொண்டிருக்கிறாள்...கோபிகிட்டே அவள் நடந்துக்கிற விதம் சரியாக இல்லே. நீங்க எப்போ வர்றீங்க?''

அவர் சமாதானப்படுத்தினார். ''எல்லாம் சரியாகிவிடும் ராஜி.''

''நானும் அப்படித்தான் இதுவரையில் நம்பியிருந்தேன்...''

''கோபி நல்ல பிள்ளை...''

ராஜலட்சுமி ஆதங்கப்பட்டாள். ''அவர் நல்லவர்தான். ஆனால் இவள் ஓட ஓட விரட்டிக் கொண்டே போகிறாளே!''

''எல்லாப் பெண்களும் உன்னைப்போல இருக்கணும்னு நீ எதிர்பார்க்கலாமா, ராஜி? இந்தக் காலத்துச் சிறுசுகளை நம்மாலே புரிஞ்சுக்கவே முடியவில்லே...''

''காலத்திலே ஒண்ணும் கோளாறு இல்லே.''

''வந்து கவனிக்கிறேன்... நாளன்னிக்கு வரேன்...வேறு ஒரு விஷயமும் இல்லியே?''

''வகை ஃபிரண்டு நித்யா இருக்காளே, அவளுக்கு அடுத்த வெள்ளிக்கிழமை கல்யாணம்... பொள்ளாச்சியிலே...''

''ரொம்ப சந்தோஷம், ராஜி. வகை புருஷனோடே ஒற்றுமையாக இருப்பாள். நீ கவலைப்படாமல் தூங்கு...''

''தெய்வம்தான் அவளைக் காப்பாத்தணும்... வைக்கட்டுமா?''

''உம். சரி.''



பாம்பு டான்ஸ் ஆடுபவர் ஜெயபாரதிதான். ஒரு வேடிக்கை: இத்தனை நாள் கழித்து இப்போதுதான் தன் சொந்த ஊரில் நாட்டிய அரங்கேற்றம் செய்தாராம்: படம்: 'அரைக் கள்ளன் முக்கா கள்ளன்.' —''சலன்''

போனை வைத்துவிட்டுச் சிவ ராமன் திரும்பினார்.

"என்னவாம்?" என்று கேட்டாள் அமிர்தம்.

சிவராமன் பதிலே பேச வில்லை. மனைவியைச் சமாதானப்படுத்தி விட்டாலும், வசுவைப்பற்றிய கவலை அவருக்கும் வந்துவிட்டது.

அமிர்தம்மாள் அவரையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந் தாள். ராஜலட்சுமியோடு நாலு வார்த்தை பேசிய மாத்திரத்தில் சிவ ராமன் தன்னை மறந்துவிட்டார் என் பதைக் காணும்போது அவள் மனம் நொந்துபோனாள்.

திடீரென்று அவள் கண் களில் கண்ணீர் பெருகலாயிற்று.

விசும்பல் ஒலி கேட்டுத் திரும்பிய சிவராமன் திடுக்கிட்டார்.

"அமிர்தம்! என்ன இது!" என்றார்.

அவள் வெடித்தாள். "என் கழுத்திலே நீங்கள் ஒரு தாலியைக் கட் டித் தொலைச்சிருந்தீங்கன்னா, எனக்கும் அந்த மூல விக்ரகம் மாதிரி ஒரு தனி மகத்துவமும் புனிதத் தன்மையும் இருந் திருக்கும்...அன்னிக்கு நீங்களும் கட் டலை. நானும் வெளுத்ததெல்லாம் பால்னு உங்க காலின் கீழேயே கிடந் தேன்...இப்போ எல்லாம் லேட்டாப் போய்விட்டது. விக்ரகம் இல்லாத கோயில்லே நான் ஒரு உடைஞ்ச சிலை போலக் கிடக்கிறேன்..."

அவள் தொண்டை அடைத் துக் கொண்டது. அவளை இம்மாதிரிச் சமயங்களில் எப்படிச் சமாதானப் படுத்துவது என்பதைச் சிவராமன் நன் றாக அறிவார்.

அவர் மெதுவாக எழுந்து, அவளுடைய இடையைப் பிடித்துத் தம் பக்கம் இழுத்து அணைத்துக் கொண்டே அவர்களுடைய அறைக்குச் சென்றார்.



'டாக்டர் ஷிவாகோ' என்ற ஆங்கிலப் படத்தில் ஓமர் ஷெரீஃப் ஒரு காட்சியில் 'ட்வைலைட்' வெளிச்சத் தில் (சூரியன் அஸ்தமனமானாலும் வெளிச்சம் குறையாத நேரம்) தோன்று கிறார். அதைப் பார்த்தது முதல் அதே போல் ஒரு வண்ணப் படம் எடுக்க ஆசைப் பட்டு, இதை எடுத்தேன்.

—உத்ரா

(படத்தில்: மஞ்சு பார்கவி)

திடீரென ராஜியின் முகம் மின்னலடிக்கத் தோன்றியது. இடை யில் பதிந்திருந்த கையில் முள் தைத் தாற்போன்ற வலி உண்டாவதை உணர்ந்தார். முள் இருப்பது அமிர்தத் திடமா அல்லது அவரிடமேதானா என்று சிந்திக்க அவருக்குச் சக்தியில்லாமற் போய்விட்டது.

(தொடரும்)

பூம்புகாரில் நடைபெற்ற சித்திரை முழுநிலா முத்தமிழ் விழாவில் பந்தலில் பார்வையாளர்களாக அமர்ந்திருந்தவர்கள் மீது, வயலில் மருந்து தெளிக்கும் ஸ்ப்ரேயர்கள் மூலம் பன்னீர் தெளிக்கப் பட்டது. அது வெய்யிலுக்கு மிகவும் இதமாக இருந்தது.

—பி. எம். சி.



இப்படியும் ஒரு பெண் ■

''என்னங்க, எப்படி இருந்தது?''

''எது எப்படி இருந்தது?''

''இத்தனை நேரம் சாப்பிட்டீங்களே, அதைத்தான் கேட்கிறேன். பூசணிக்காய் அல்வா. புஸ்தகத்தைப் பார்த்துச் செய்தேன்.''

''புஸ்தகத்தைப் பார்த்தா செய்தே? புஸ்தகத்தையே செய்த மாதிரி இருந்தது.''

''ஹுக்கும்! மூணு பிளேட் மொத்தமாய் அடிச்சதிலே ஒண்ணும் குறைச்சலில்லே. வாய்விட்டு ஒரு வார்த்தை பாராட்டிடாதீங்க. முத்து உதிர்ந்திடும்.''

''உதிர்ந்தா கோத்துச் செயின் பண்ணிக்கோ. ஆமாம், என்ன இது புது மேனரிஸம்—சேஷ்டை?''

''எதைச் சொல்றீங்க?''

''பேசிட்டிருக்கிறப்போ கையிலே ஒரு ரிப்பனை வைச்சு உருவிக்கிட்டேயிருக்கியே?''

''அடடே, இதுவா? பானுமதி படம்....''

''ஓகோ! டிங் டிங்கா?''

''அதென்னங்க டிங் டிங்?''

''ரேடியோ விளம்பரத்திலே பானுமதியே வாயாலே டிங் டிங் போடறுங்க, அதைச் சொன்னேன். சரி, நீ சொல்லு.''

''அந்தக் கடைசி சீன்லே பாருங்க, ஸ்ரீ காந்தை மடக்கி, துரோகம் செய்த பொண்ணுக்குத் தாலியைக் கட்டப் போறியா இல்லியான்னு சவுக்கை எடுத்துச் சொடேர் சொடேர்னு..''

''இந்தா இந்தா! இரண்டடி தள்ளி நின்னுக்கிட்டுப் பேசு! கையிலே ரிப்பனு, சவுக்கா?''

''ஐய! ஆண்பிள்ளை சிங்கத்தைப் பார்க்கலே!''

''சினிமாவுக்குப் போனோம், டிராமவுக்குப் போனோம், ஏதோ இரண்டு நல்ல பழக்கத்தைக் கத்துக்கிட்டு வந்தோம்னு இல்லே. ஏன், பானுமதி பாடுவாங்களே, நீயும் பாடணும்னு ஆசைப்படக் கூடாதா?''

''பாடறதைக் காட்டிலும் பேசறது நல்லா இருந்ததுங்க. ஏங்க,

பானுமதிக்கும் நெடுஞ்செழியனுக்கும் ஏதாச்சும் தகராறு?''

''ஏய், ஏய்! என்ன ரூட் எங்கெல்லாமோ போகுது?''

''சில இடங்களில் நெடுஞ் செழியன் பேசற மாதிரி, பல் இடுக் காலே வார்த்தையை அரைச்சுக் கூழாக் கிப் பேசுறார். பாட்டிலேகூட ஒரு அடியை அந்த மாதிரி பாடுறார்.''

''அடுத்த தடவை நாவல ரைப் பார்க்கிறப்போ என்ன தகரா றுன்னு விசாரிச்சுக்கிட்டு வந்து தேவி யாருக்குத் தெரிவிக்கிறேன். வேறே என்ன செய்யறுங்க?''

''அவரையும் தங்கச்சி பத் மினியையும் ஒரு அம்மா ஏமாத்தி ஹைதராபாத் கூட்டிட்டுப் போருள். அங்கே தங்கையை ஒரு வில்லன் கெடுக் கப் பார்க்கிறுன். பானுமதி கதவைத் தட்டோ தட்டுன்னு தட்டுறார். திறக் கலே. அவ்வளவுதான்! ஒரு சோபாவை வேகமாய்த் தள்ளிட்டு வந்து கதவு மேலே மடார்னு ஒரு மோதல் மோதி, அந்த ஆளை அடி அடின்னு அடிச்சு, துரத்தினவங்க மேலே மேஜையைத் தள்ளி, ஒரே இதுதான். போங்க!''

''இரு, இரு. மறுபடி ரிப் பனை உருவ ஆரம்பிச்சிட்டியே! வில்லன் யார்?''

''ஆரம்பத்திலே பார்த்தால் தங்கவேலு மாதிரி இருக்கு. அப்புறம் தேங்காய்னு தோணுது.''

''போன வாரம்தானே ஒரு படத்திலே நல்லவரா வந்தார்?''

''ஒரு நாள் உத்தமியா இருக்கிறவங்க, மறு நாள் ராட்சசியா மாறுவதில்லையா உலகத்திலே? உதாரணமா—''

''உதாரணம் எதுவும் வேண்டாம். மனோரமா நடிச்சிருக் காங்க இல்லே?''

''பிடிச்சிருக்காங்க.''

''என்ன?''

''சுருட்டு!''

''கண்ராவி!''

''சுத்து வட்டராம் இரண்டு மைல் தூரத்துக்குள்ளே யார் கையிலே சுருட்டு இருந்தா லும் என்னமாய் மூக்குத் துடிக் குது!''

''இன்னும் கண்ராவி!''

''ஆனால் தான் எப்படி சினிமாப் பைத்தியம் பிடிச்சு மெட்ருஸ் வந்து சேர்ந்தேன் என்கிறதை நல்லா சொல்ருங்க. பேசற ஜோரிலே புட வையை முழங்கால் வரை தூக்கறதும் உடனே பானுமதி, 'இறக்கு! இறக்கு!' ன்னு கண்டிக்கிறதும் தமாஷாயிருந் தது.''

''நாகேஷுக்கு என்ன வேலை?''

''பாவம், சங்கீத வித்வானு வரணும்னு தலைகீழாய் நிற்கிருர். கிட் டப்பான்னு பேர் வைச்சுக்கிருர். கிட் டப்பாவோட பழைய ரிக்கார்டைப் போட்டு, நான்தான் பாடினேன்னு அளக்கிருர். ஒண்ணும் நடக்கல்லே.''

''அது சரி, கதையிலே அவர் என்னவா வர்ருர்னு சொல்லலியே?''

''என்னவாவா? இருங்க. யோசிச்சு சொல்றேன். பானுமதிக்கு ஒரு தங்கை. அவங்களை நல்லபடியா வாழ வைக்கம்ணுங்கிறதுதான் அக்கா வுக்கு ஒரே லட்சியம். ஒரு நாள் என்ன, ஆகிறதுன்ன..என்னவோ ஆகிறது. மொத்தத்திலே ஒரு நீதி இருக்குதுங்க கதையிலே.''

''ஆமாம், ஆமாம். இருக்கு.''

''அட, உங்களுக்கும் அது தெரிகிறதா?''

''நல்லாத் தெரியுதே?''

''என்ன நீதி?''

''பெண்கள் சினிமா பார்க் கக் கூடாது.''



றது ந-

கடலோரக்...

மாப்பிள்ளே குடையைப் பிடித்துக் கொண்டு காசிக்குப் புறப்படுகிருன். பெண்ணைக் கொடுக்கிறவர் குறுக்கிடுகிருர்.

"அலங்காரம் செய்து என் பெண்ணை உனக்குத் தருகிறேன். அவளை மணந்து, அவளையும் அழைத்துக் கொண்டு காசிக்குப் போகலாம். இப்போது என் வீட்டுக்கு வா!"

—பரதேசிக் கோலத்தின் முடிவு இல்லறத்துக்கு ஆரம்பம்.

17

விநாயகர், லட்சுமி, பரமசிவன் முதலான படங்களின் மீது மலர்களைக் கை அர்ச்சித்துக் கொண்டிருக்க, ராஜலட்சுமியின் மனமெல்லாம் தீர்த்தம் வாங்கிக் கொள்ள இறங்கி வரப்போகிற கணவன்மீது நிலைத்திருந்தது.

சிவராமனும் வந்தார். சிரம் தாழ்த்தி, வலது புறங்கையை இடது உள்ளங்கை மேல் வைத்துத் தீர்த்தமும் வாங்கிக் கொண்டார்.

"ராத்திரி ரயிலில் நன்ருகத் தூங்கினீர்களா?"


"ஏதோ தூங்கினேன்," என்ருர் அவர். "வசு எங்கே?"

"நேற்றும் முந்தாநாளும் ஒரே அலைச்சல். நகைக் கடை, புடவைக் கடை, சிநேகிதிங்க வீடுன்னு நித்யாவுடன் அலைஞ்சு தீர்த்துவிட்டாள். நேற்று பூரா வீட்டிலே சாப்பிடவேயில்லை..."

"வசு."

ஒரு கணம் நின்ற வசு, "என்னப்பா?" என்ருள்.

பி.வி.ஆர்



''நான் இன்னிக்குத்தான் ஊரிலேருந்து வந்தேன்.''

''அப்படியா?''

சிவராமன் சிரித்தார்.

''நல்ல பெண்ணம்மா நீ! நான் மூன்று நாளா வீட்டில் இல்லை. இன்னிக்குத்தான் வந்திருக்கிறேன்... இதைக்கூட நான் சொல்லித்தான் உணரவைக்க வேண்டியிருக்கிறது.''

''நீங்க மாசாமாசம் வெளியூர் போறதும் வர்றதும் சகஜம்தானே? அது சரி, எதுக்கு என்னைக் கூப்பிட்டீர்கள்?''

''உட்கார் வசு.''

வசுவுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

''அப்பா, நித்யாவுக்குக் கல்யாணம். வருகிற வெள்ளிக்கிழமை. அம்மா சொல்லியிருப்பாள்னு நினைக்கிறேன்...நான் அவளுடன் ஆயிரம் இடத்துக்குப் போகணும். போய்...''

''உன் அம்மா நித்யாவின் கல்யாணத்தைப் பற்றி மட்டும் சொல்ல



வில்லே, வசு. இன்னும் என்னென்னவோ சொன்னுள்.''

வசுவின் கண்கள் ராஜ லட்சுமி பக்கம் ஒரு தடவை சென்று விட்டுத் திரும்பின.

''என்னென்னவோ என்ருல்?''

''முதலில் உட்கார்.''

வசு உட்கார்ந்தாள்.

''மாப்பிள்ளே ஏன் இங்கே வர்றதில்லே?''

இந்த விஷயமாகத்தான் இருக்கும் என்று அவள் முன்பே ஊகித் திருந்தாள்.

''அவர் காரணம் சொல்ல வில்லே.''

அவளது பதில் இவ்வளவு அலட்சியமானதாக இருக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லே. ''அவர் பேச்சை நீ கேட்கிறதே இல்லேயாம். அம்மா சொன்னுள். அப்படி இருக் கிறது அவ்வளவு நல்லதல்லம்மா. ஹி இஸ் யுவர் ஹஸ்பண்ட்,'' என்ருர்.

''ஸோ வாட்?'' என்ருள் வசு. ''அவர் சொல்ற அசட்டுத்தனத் துக்கெல்லாம் தலேயாட்ட நான் ஒன் றும் பூம் பூம் மாடு அல்ல.''

''அசட்டுத்தனமா! அவர் அப்படி என்ன சொல்லிவிட்டார்?''

''எங்களுக்குள் ஆயிரம் பேசிப்போம். அதையெல்லாம் உங்க கிட்டே நான் சொல்லமாட்டேன். நான் சொல்லணும்னு நீங்கள் எதிர் பார்க்கிறதும் நாகரிகம் இல்லே.''

சிவராமன் பொறுமை இழந் தார். ''நீயும் கோபியும் வீட்டிலும் சினிமாவிலும் பீச்சிலும் சிரிச்சுக் கும் மாளமடிச்சுக் கொஞ்சிக் கொண் டிருந்தீங்கன்னு, என்ன கொஞ்சிக்கிறீர் கள்னு கேட்கமாட்டேன். அப்படிக் கேட்டா அது அநாகரிகம் மட்டுமல்ல; முட்டாள்தனமும்கூட. ஆனுல் நீங்க ரெண்டு பேரும் வடக்கு தெற்கு துரு வங்களாய் நிற்கும்போது உங்களுக்குள் என்ன நடக்கிறது என்று கேட்பது என் கடமை. கேட்காமல் இருப்பதுதான் தப்பு.''

அவள் அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

''நீங்கள் கேட்டு நான் சொல்வதாகவே வைத்துக் கொள் வோம். எங்கள் பிரசினே தீர்ந்துவிடுமா?''

''முதல்லே பிரசினேயைச் சொல்லு...''

பட்டென்று, ''இதை அவ ரிடமே கேட்கலாமே?'' என்ருள் அவள்.

''முதல்லே உன்னிடம் கேட் பதுதான் முறை. நீ என் பெண் இல் லேயா?''

''பெண்ணேவிட மாப்பிள்ளே தான் உங்களுக்கு உசத்தி. ரொம்பக் கஷ்டப்பட்டு, ஊரெல்லாம் தேடி அலேஞ்சு அவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு என் முன்னுலே நிறுத்தி, 'இவர்தான் உன் புருஷன்'னு ஆர வாரம் செய்திருக்கிறீர்கள். அவரிடமே முதலில் விசாரியுங்கள்.''

''வசு!'' என்ருள் ராஜ லட்சுமி. தந்தைக்கும் மகளுக்கும் இடை யில் பேச்சு இப்படிப் போகும் என்று அவள் எதிர்பார்க்கவில்லே. சிவராமன் பக்கம் திரும்பி, ''ஒன்றுமில்லே. வசு வுக்கு மேற்கு மாம்பலம் போர்ஷன்


ஒரு ரூபாய்
மிச்சப்படுத்துங்கள்!
CINTHOL
LUXURY TOILET POWDER
BY
CINTHOL
LUXURY TOILET POWDER
சிந்தால்
சோப் வாங்கும்போது
சிந்தால் பவுடர் விலையில் ஒரு
ரூபாய் மிச்சப்படுத்துங்கள் *
கூப்பன் அறிவிப்புடன் கூடிய சிந்தால் சோப் வாங்குங்கள், உறையின் பின் பக்கத்தில் ஒரு கூப்பன் இருக்கும். அதை உங்கள் டீலரிடம் கொடுத்து, ஒரு ரூபாய் தள்ளுபடியில் சிந்தால் டாய்லெட் பவுடர் (எந்த சைஸானாலும்) வாங்கிக் கொள்ளுங்கள்.
Save Re.1
COUPON ON REVERSE
OPEN WRAPPER CAREFULLY
CINTHOL
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
இந்த வாய்ப்பை நழுவ விடாதீர்கள்!
இன்றே முந்துங்கள்!
* ஸ்டாக்குகள் உள்ளவரையே இந்தச் சலுகை உண்டு
Interpub/GS/13/75 TM

பிடிக்கவில்லை. வேறு நல்ல பங்களா பாருங்களேன்?''

வசு எழுந்தாள்.

''தயவு செய்து என் பிரசினையை நானே தீர்த்துக்கொள்ள விடுங்கள். அனாவசியமாக போதனை, உபதேசம்னு உங்கள் ரெண்டு பேருடைய பிஸினஸ் டயத்தையும், பூஜைநேரத்தையும் வேஸ்ட் பண்ணுதீர்கள்.'' முகத்திலடித்தாற்போல் பேசிவிட்டாள் வசு.

சிவராமன் கண்கள் சிவந்தன.

''வசு, நீ இருக்க வேண்டிய இடம் உன் புருஷன் வீடு. இதை மறக்காதே,'' என்று ஞாபகப்படுத்தினார்.

ஓரடி நகர்ந்த வசு, அப்படியே நின்றாள். பிறகு, அப்பாவைப் பார்த்தாள். ''அதாவது எனக்கு இனிமே இந்த வீட்டில் இடமில்லை என்கிறீர்களா?''

ராஜலட்சுமி, ''டீ வசு, என்னம்மா இது!'' என்றாள். ''அந்த அர்த்தத்தில் அவர் சொல்லவில்லை.''

''அந்த அர்த்தத்தில் சொல்லியிருக்காவிட்டால் சரி. அப்படியே சொல்லியிருந்தாலும் பரவாயில்லை. நானும் கொஞ்சம் படித்திருக்கிறேன். வேலை கிடைக்காமல் போகாது. நான் வரேன்.''

சிவராமன் வாய் அடைத்துப் போய் நின்றார். ராஜலட்சுமியின் கண்களில் நீர் முட்டிற்று.

அதைக் கண்டார் சிவராமன்.

''நீ கவலைப்படாதே, ராஜி,'' என்று தேற்றினார். ''அவளை அவள் வழிக்கே விட்டுப் பார்ப்போம். அவிழ்த்து விட்ட கன்றுக்குட்டி மாதிரி திசை தெரியாம ஓடறு...எல்லாம் சரியாகி விடும்!''

உண்மையாகவே அவர் தம் வார்த்தைகளை நம்பினாரா அல்லது





இவரை யார்... பார்க்கிறார்? சரிபார்க்க 66'ம் பக்கம்

மனைவியைச் சமாதானப்படுத்தும் வகையில் கூறினரா? அது அவருக்கே தெரியாது.

நித்யாவின் கல்யாணத்துக்காக வசுவும் ராஜலட்சுமியும் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள்.

ரயில் அரக்கோணத்தை அடைந்தது. இருவர் மட்டுமே படுக்கக் கூடிய 'கூப்பே' பெட்டியில் 'கீழ் பர்த்தில்' ராஜலட்சுமி படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள். மேல்தட்டில் படுத்திருந்த வசுவுக்குத் தூக்கம் வரவில்லை. தொண்டை உலர்ந்து தாகம் எடுத்தது. ஐஸ் போட்ட பானம் ஏதானும் கிடைத்தால் தொண்டைக்கு இதமாக இருக்கும் என நினைத்தாள்.

பிளாட்பாரத்தில் ஒருவன் வண்டியைத் தள்ளிக்கொண்டு வந்தான்.

திடீரென்று தேன்நிலவுக்குச் சென்ற நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. இதே மாதிரி ஒரு பெட்டியில்தான் அவள் கோபியுடன் கோயமுத்தூருக்குச் சென்றாள், அந்த நாள் ஒரு சந்தோஷ நாள். இன்றும் அவள் ஒரு சந்தோஷம் தரும் நிகழ்ச்சியை—பொள்ளாச்சியில் நடக்கிற நித்யாவின் கல்யாணத்தை—முன்னிட்டுத்தான் போகிறாள். ஆனல் அவள் மனத்தில் மகிழ்ச்சியோ பூரிப்போ இல்லை.

ஐஸ் போட்ட ஆரஞ்சு ஜூஸைச் சாப்பிட்டுவிட்டு நிமிர்ந்தாள். கோபி, தண்ணீருக்காக க்யூவில் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

"எண்பது பைசா அம்மா," என்றான் வண்டிக்காரன், அவளிடமிருந்து காலித் தம்ளரை வாங்கிக் கொண்டே.

ஏதோ ஒன்று அவளை உந்த, "இன்னொண்ணு கொடு அப்பா," என்றாள் அவள். அவன் கொடுத்தான்.

"நீ போய்த் திரும்பறபோது கிளாஸை வாங்கிக் கொள்... இந்தா முதல்லே பணத்தை வாங்கிக் கொள்."

தண்ணீருக்காக நின்று கொண்டிருந்த ஏழெட்டுப் பேர்களில் மூன்று பேர்தான் பாக்கி. மூன்றுவது ஆள் நகர்ந்து கொண்டிருந்தான். கோபி இரண்டாவது ஆளுக்கும் விட்டுக் கொடுத்துவிட்டுச் சுற்று முற்றும் பார்த்தான்.

"ஹலோ வசு...பொள்ளாச்சிக்குத்தானே?"

"ஆமாம். நீங்கள்?"

"நித்யாவின் கணவனும், நானும் ஒரே ஆபீஸ்...நான் வராமலிருக்கக்கூடாது," என்றான்.

"இந்தாருங்கள், கூல் டிரிங்."

இமைக்கும் நேரம் கோபி தயங்கினான்.

"வேண்டாம், வசு. நீ சாப்பிடு."

"நான் சாப்பிட்டாச்சு. இது உங்களுக்காக வாங்கியதுதான். நான் உங்களை அப்பவே பார்த்துவிட்டேனே?"

அவன் புன்னகை செய்தான்.

"இது குடிச்சாலும் தாகம் அடங்கப் போவதில்லை. நான் வரட்டுமா. வண்டி புறப்படப் போகிறது. சீக்கிரம் ஏறிக்கொள்..."

கோபி போய்விட்டான்.

வண்டிக்காரன் தம்ளரைப் பெற்றுக்கொள்ள வந்தான்.

"என்னம்மா, இன்னுமா குடிக்கலே...ரெயில் ஊதிட்டதே அம்மா."

அவள் ஜூஸுடன் தம்ளரைத் திருப்பிக் கொடுத்தாள்.

(தொடரும்)

'இலஸ்டிரேடட் வீக்லி' ஆசிரியர் குஷ்வந்த் சிங், 'டிபோனே' பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில் தம்மைப் பதவியிலிருந்து நீக்கச் சூழ்ச்சி நடக்கிறதாகக் கூறியிருக்கிறார்.

—'சைக்கோ'

18

சப்தரிஷிகளின் பத்தினிகளுக்கு இருத்திகா என்று பெயர். அவர்களுள் சிறந்தவளாக அருந்ததியை மற்ற இருத்திகாக்கள் மதித்து ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

அத்தகைய அருந்ததியை மணப் பெண் பார்க்கும் போது, அவள் எட்டாவது இருத்திகாவாகத் திகழ பெரியோர்கள் ஆசிர்வாதம் செய்கின்றனர்.



நீலகிரி எக்ஸ்பிரஸ் கோயமுத்தூரை அடைந்தபோது மணி ஏழு. பொள்ளாச்சிக்கு அவர்களை அழைத்துச் செல்ல சிவராமனுடைய கம்பெனிக் கார் அவர்களுக்காகக் காத்திருந்தது. ராஜலட்சுமியும் வசுவும் ஏறிக் கொண்டார்கள். சிவராமன் சௌகரியப்பட்டால் பின்னர் வருவதாகச் சொல்லியிருந்தார்.

கார் உக்கடத்தைத் தாண்டுகையில், கோபியை அரக்கோணத்தில் முந்தின இரவு சந்தித்த நிகழ்ச்சியைத் தாயிடம் கூறலாமா என்று வாயெடுத்த வசு, அடக்கிக் கொண்டாள்.

''ஏன் முன்னடி சொல்லவில்லை? அவரையும் நம்ம காரில் அழைத்துக் கொண்டு வரவேண்டியதுதானே?'' என்று அம்மா நச்சரிப்பாளே.

பொள்ளாச்சியை அடைந்த போது மணி எட்டே கால் நித்யா வின் தாத்தா, சிவராமனுடைய குடும் பத்தின் சௌகரியத்துக்காக, கிட்டு மாமாவின் வீட்டைக் காலி செய்து கொடுக்கச் சொல்லியிருந்தார். அங்கு போய்க் குளித்துவிட்டுக் கல்யாண வீட்டுக்குச் சென்றார்கள்.

வசுவைக் கண்டதும் நித்யா வுக்கு ஒரே உற்சாகம். சதா அரட்டை தான். "நித்யா! உன் குறும்புப் பேச் சையும் கலகலப்பையும் பார்க்கிறபோது நீதான் மணப் பெண்ணு என்று சந்தேக மாக இருக்கிறது!" என்று அவள் தாத்தாவே கண்டித்தார். நித்யா அதையெல்லால் லட்சியம் செய்யவில்லை.



ஜானவாசத்தின்போது மொட்டை மாடியிலிருந்து அவள், "ஏய் வசு!" என்று உரக்க அழைக்கும் அளவுக்கு அவள் கட்டுப்பாடு இல்லாமல் நடந்க கொண்டாள். ஆனால் மாப்பிள்ளை அதைப் பொருட்படுத்தவில்லை. காரி லிருந்தபடி நித்யாவைப் பார்த்துச் சிரித்தான். மாப்பிள்ளை அழைப்பு முடிந்ததும் சாப்பிட்டுவிட்டு வசுவும் ராஜலட்சுமியும் தங்கள் ஜாகைக்குத் திரும்பினார்கள்.

ஜானவாசத்தின் போதுதான் ராஜலட்சுமி கோபியைப் பார்த்தாள். "வசு! மாப்பிள்ளை வந்திருக்கிறார்!" என்றாள் உற்சாகத்தோடு.

"அதற்கென்ன இப்போ?" என்றாள் வசு, அலட்சியமாக.

இரவு படுக்கு முன் ராஜ லட்சுமி கேட்டாள். "ஏண்டி வசு, இங்கே இவ்வளவு இடம் இருக்கே மாப்பிள்ளை சௌகரியமா வந்து படுத்துக்கொள்ளலாமே? அவரைப் பார்த்தாயா?"

வசு சிடுசிடுத்தாள்.

"ஏம்மா நீ அவரைப் பற்றியே கவலைப்படுகிறாய்? பேசா மல் தூங்கு."

அதன் பிறகு ராஜலட்சுமி வாய் திறக்கவில்லை.

மறு நாள்.

கல்யாண ஆரவாரம் பந்தலெல்லாம் நிரம்பி வழிந்தது. கூட்டத்தில் மணமேடை அருகே உட்கார்ந்திருந்த வசுவுக்குத் திடீ ரென்று தலைவலிப்பதுபோல இருந் தது. வெளியே போய்க் கொஞ் சம் நல்ல காற்றைச் சுவாசித்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்து வெளியே வந்தாள்.

வாசலில் யாரோ ஒரு பெரிய மனிதர் அப்போதுதான் வந்து இறங்கிக் கொண்டிருந்தார். வசு வாழை மரத்தின் அருகே தயங்க வேண்டியதாயிற்று.

யாரோ இருவர் பேசிக் கொள்வது அவள் காதில் விழுந் தது.

"யெஸ். அவள்தான் வசு. இண்டஸ்டிரியலிஸ்ட் சிவராம னுடைய பெண். பக்கத்திலே வெள்ளை ஷர்ட் போட்டுக்கொண்டு நிற்கிறானே அவன்தான் அவள் ஹஸ்பெண்ட்."

ஏற்கெனவே அந்த இடத் தில் கோபி தற்செயலாக வந்து நின்று கொண்டிருப்பது அப்போது தான் வசுவுக்குத் தெரிந்தது.

"பொருத்தமான ஜாடி. அவள் அழகாக இருக்கிறாள். அவ னும் லட்சணமாக இருக்கிறான்."

"இந்தக் கூட்டத்திலேகூட ஒருத்தரை விட்டு ஒருத்தர் பிரிஞ்சு போறதில்லை, பார்த்தாயா?"

வசு, பக்கத்தில் நிற்கும் கோபியைப் பார்த்தாள். அதே சமயம் அவனும் வசு பக்கம் திரும் பினான். மறுவினாடி அவன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொள்ள, வசு உள்ளே திரும்பினாள்.

மாங்கல்ய தாரணம் ஆனதுமே கூட்டம் முழுதும் சாப்பாட்டுக் கூடத்தை நோக்கிப் படைஎடுத்தது. பந்தலில் அங்குமிங்குமாகச் சிலர் உட்கார்ந்திருந்தார்கள். கை விசிறியால் விசிறிக்கொண்டிருந்த வசு உற்சாகத்தோடு ராஜலட்சுமியிடம், "அம்மா!" என்ருள்.

"என்ன வசு?"

"வா, உன்னை அறிமுகப்படுத்துகிறேன்."

"யாருக்கு?"

"வாயேன்!"

அமிர்தம்மா எட்டத்தில் உட்கார்ந்திருந்தாள். எதிர்பாராமல் அவளைப் பார்த்ததில்தான் வசுவுக்கு அத்தனை பரபரப்பு.

"சௌக்கியமா? உங்களை நான் எதிர்பார்க்கவேயில்லை," என்ருள் வசு. அமிர்தம்மாள் நிமிர்ந்து பார்த்தாள். "வசு!" என்ருள் முகம் மலர. வசு சொன்னுள்.

"நித்யா வீட்டாரையோ, பிள்ளை வீட்டாரையோ உங்களுக்குத் தெரியும்னு எனக்குத் தெரியாது."

"நித்யாவைத் தெரியாதே தவிர அவள் தாத்தா எங்களுக்கு ரொம்ப நாளாகப் பழக்கம்."

"அப்படியா!" என்ற வசு தன் அம்மாவின் இடது கையைப் பிடித்தவளாய், "இவங்கதான் என் மதர்.. அம்மா, நான் அங்கலக் குறிச்சியிலே கார் ரிப்பேர் ஆனப்போ ஒரு வீட்டுக்குப் போய்க் கோயம்புத்தூருக்குத் தகவல் கொடுத்தோம்ணு சொன்னேன் இல்லையா? இவர் வீட்லேதான். அமிர்தம்மான்னு பேரு," என்ருள்.

"ரொம்ப சந்தோஷம்."

மதிக்க வேண்டியவர்களிடம் வசு மரியாதை காட்டவில்லை என்ற காரணத்தால், அவளால் மதிக்கப்படுபவர்கள் நல்லவர்களாக இருக்க முடியாது என்று உள்ளுணர்வு சொல்லிற்றோ என்னவோ, அமிர்தம்மாளிடம் ராஜலட்சுமிக்கு ஈடுபாடு ஏற்படவில்லை.

"சாப்பிட்டாச்சா?" என்ருள் வசு.

"இல்லை. இனிமேத்தான்."

"அடுத்த பந்தியிலே உட்காருவோம். சேர்ந்தே சாப்பிடுவோம்."

"உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?" என்ருள் ராஜலட்சுமி.

"முருகன் அந்த பாக்கியத்தைக் கொடுக்கலை."

"அவர் என்ன செய்கிருர்?"

அமிர்தம்மாள் சற்றுத் தயங்கினுள்.

"வியாபாரம்."


"நீங்க மெட்ராஸ் வர்றதுண்டா?"

"அவசியம் நேரும்போது வருவேன்."

"நீங்கள் அடுத்த தடவை வரும்போது எங்க வீட்டுக்கு அவசியம் வரவேண்டும்," என்ருள் வசு. ராஜலட்சுமி பேசாதிருந்தாள்.

சிவராமன் கொஞ்சம் தாமதமாகத்தான் வந்தார். அவரை எட்டத்தில் கண்டதும் ராஜலட்சுமி அவரிடம் எழுந்து சென்ருள்.

அம்மா போனதும், வசு



லதா பெயருக்கேற்ப கொடிபோல் படர்ந்திருப்பது சரி. ஆனால் முழங்காலிட்டுக் கொண்டிருக்கிற முத்துராமனின் தலை லதாவின் மோவாய் கிட்டே வந்து இடிக்கிறதே. லதா உயரம் கம்மியா அல்லது முன்னுல் கொஞ்சம் வளைந்து கொண்டிருப்பதால் அப்படித் தோன்றுகிறதா? அல்லது காமெராக் கோணமா? படம்! நான் உன்னை மறக்கவில்லை.



''எப்படி என் அம்மா?'' என்று கேட்டாள்.

அமிர்தம்மா பொதுப்படையாக, ''உன் அம்மா இல்லியா?'' என்று சிரித்தாள்.

வசுவும் சிரித்தாள்.

''அம்மா ரொம்ப நல்லவள்,'' என்றாள் வசு.

''பார்த்தாலே தெரிகிறது.''

''ரொம்பக் கர்னாடகம். புருஷனுடைய நிழலைத் தொட்டு வணங்கற அளவுக்குப் பதிபக்தி.''

ராஜலட்சுமியிடம் வசுவைப்பற்றிச் சிவராமன் ஏதும் விசாரித்திருப்பார் போலும். அவள் ஏதோ சொல்ல, அவர் திரும்பிப் பார்த்தார். வசுவும் அமிர்தம்மாவும் பேசிக்கொண்டிருப்பது அவருக்குத் தெரிந்தது.

''ராஜி, பேசிக் கொண்டிருங்கள், இதோ வந்து விட்டேன்.'' என்று உள்ளே விரைந்தார். சில நிமிடங்களில் வெளியே கிளம்பி விட்டார்.

இரவு ரயிலில் வசுவும் ராஜலட்சுமியும் சென்னை திரும்ப வேண்டும். இடையில் மூன்று நான்குமணி நேர சாவகாசம் இருந்ததால், ஆழியாறு அணையைப் பார்த்து வரலாம் என்று புறப்பட்டார்கள்.

''வேறு யாரானும் வருகிறார்களா?''

''உனக்கு மனசு இருந்தா மாப்பிள்ளையைக் கூப்பிடு. அவரும் பார்க்கலாம்.''

''அவருக்கு இதெல்லாம் பிடிக்காது.''

ராஜலட்சுமிக்குக் கோபம் வந்துவிட்டது.

''என்னடி, இன்னும் ரெண்டு நாள் சேர்ந்தாப்பலே வாழலே, அதுக்குள்ளே எது பிடிக்கும் எது பிடிக்காதுன்னு உனக்குப் புரிஞ்சுட்டுதோ?'' என்றாள்.

''சரிம்மா, இந்தக் கல்யாண வீட்டிலேயுமா என் பிரச்னையை அலசணும்? இதோ பார், இப்போ மணி இரண்டு பத்து. மூணு மணிக்கு அளியார். நாலு மணிக்கு புறப்பட்டு வந்த வழியிலே, அமிர்தம்மா வீட்டுக்கும் போய் வருவோம்..என்ன!''

''அது சரி, உன் அமிர்தம்மா வீட்டுக்குப் போகலாம்னு சொல்றியே, அவள் இங்கேயிருந்து போயாச்சா?''


''சாப்பாடு ஆனதும் போனார்களே.. உனக்குத் தெரியாதா?''

''என்கிட்டே சொல்லிக்க நிற்க முடியல்லே போலிருக்கு.''

''அவள் ரொம்ப லட்சணமாயிருக்கா இல்லியா, அம்மா?''

''உடம்பிலே பட்டுப்புடவை. காதிலேயும் மூக்கிலேயும் வைரம். நெத்தியிலே பெரிசா குங்குமம். லட்சணத்துக்கு எப்படிக் குறைச்சல் இருக்க முடியும்?''

''டெல்லி மாப்பிள்ளைக்கு மாம்பழக் கூடையை கூட்ஸிலே அனுப்பினேமே, மாங்கொட்டை பத்திரமாக வந்து சேர்ந்ததென்று லெட்டர் போட்டிருக்கிருர்.''



■

மனைவி: ''இதென்ன உங்க பல் இடுக்கிலே மீசை?''


கணவன்: ''ஹி... ஹி...ஹி... மாம்பழத்தைக் கடித்து இழுத்தேன். நார் மாட்டிட்டுது.''



■

டிக்கெட் கௌண்டரில்:

''மாம்பழத்துக்கு ஒரு டிக்கட். ஸாரி .... மாம்பலத்துக்கு ஒரு டிக்கட்.''



■


பாட்டி: ''சேலத்துக்குப் போய்ப் பெண் பார்த்தியே. என்ன நிறம்?''

பேரன்: ''மா நிறம்.''



■

''பீத்தர், கோவா, பங்கனபள்ளி, ருமானி, ஒட்டு மாம்பழம் இவைகளில் தலா இரண்டு கூடை வாங்கிட்டு வாங்க. இன்று எனக்குப் பழகாரம்.''



■

''கண்ணே! உன் மாம்பழக் கன்னத்தில் என்ன காயம்? வண்டு கடித்து விட்டதா?''

''வண்டுஇல்லே; வாண்டு! என் சின்னத் தம்பி கடித்து விட்டான்.''



''கண்ணைப் பார்த்தாயா. எவ்வளவு கூர்மை. மேலுங் கீழுமாகப் பார்த்தே ஒரு ஆளை எடை போட்டு விடுவார்கள் போலிருக்கு.''

''என்னை எப்படி எடை போட்டாளோ?''

''நீ அப்பாவைப் பார்க்கப் போனப்போ, உன்னைப் பத்திச் சொன்னேன், என் அம்மா நல்லவள்னு பார்த்தாலே தெரிகிறது'' என்ருள்.

ராஜலட்சுமிக்குச் சிரிப்பு வந்தது.

''நீ சர்ட்டிபிகேட் கொடுத்துட்டே உன் அம்மாவுக்கு, அவளும் ஆமோதிச்சுட்டா.. இனிமே என்ன குறை?''

ஆழியாறு அணையை அடையும் வரை வசு கல்யாணத்தில் நடந்த வேடிக்கைகளைப் பற்றிப் பேசிச் சிரித்துக் கொண்டே வந்தாள். கல்யாணம் நடக்கையில் கிட்டு மாமா அரை மணிக்கு ஒரு தடவை சமையற்கட்டுக்குச் சென்று காப்பியும் டிபனுமாகத் தின்று தீர்த்தது, மாப்பிள்ளை நித்யாவுடன் அட்டை போல் ஒட்டிக் கொண்டது, ஒரு தடவை நித்யா பகிரங்கமாக அவனைக் கிள்ளியது எல்லாம் அவள் வாயிலிருந்து மழையாகக் கொட்டின.

ஆழியாறு நீர்த்தேக்கமும் நீர்த்தேக்கத்துக்கு அப்பால் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கும் மலைகளும் இனிய காட்சிகளாக விளங்கின.

ஆழியாறிலிருந்து திரும்பினுர்கள்.

திடீரென்று வசு, ''அதோ பார் அம்மா அந்த மேட்டிலே ஒரு வீடு தெரியறதே உள்ளே தள்ளி, அதுதான் அமிர்தம்மா வீடு,'' என்ருள்.

ராஜலட்சுமியின் உள்ளம் ஏனே துணுக்குற்றது.

அவர்கள் கம்பெனிக் கார் உள்ளே இருப்பது அவள் கண்ணில் பட்டது.

சிவராமன் அதிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

இடவசதிமிக்க அழகானதொரு
உலகத் தரம் வாய்ந்த
ரெ:ஃப்ரிஜெரேட்டரைப்
பற்றி கனவு கண்டு கொண்டிருந்தால்
விழித்தெழுந்து நன்ருகப் பாருங்கள்

ஆல்வின்




இப்பொழுது ஆல்வின் பிரமிக்கத்தக்க உருமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. முன்பைவிட அதிக அழகானதாகவும், முன்பைவிடக் குறைவான இடத்தை அடைத்துக் கொள்வதாகவும் அமைந்துள்ளது. தொழில் நுட்ப அம்சங்களிலும் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆல்வின் ரெ:ஃப்ரிஜெரேட்டர். ஒற்றைக் கதவுடையதானுலும், அதி நவீன இரட்டை டெம்பரேச்சர் கொண்ட இரட்டைக் கதவு மாடலானுலும், 300-லிட்டர் சம்ராட் அல்லது 380-லிட்டர் ஜம்போ ஆகியவற்றில் எதுவானுலும், மிகச் சிறந்ததாகவும், அதிக நம்பிகைக்குரியதாகவும், அதிக நிசப்தமாகவும் இயங்குகிறது.

ரேட்டிங்
கடுமையான பரிசீலனைகளுக்குப் பிறகு ஆல்வினின் ஒற்றைக் கதவு மாடல்களுக்குக் கிடைத்துள்ள ஐஎஸ்ஐ சான்றிதழ் ஆல்வினின் இணையற்ற தரத்திற்குச் சான்ருகும்.



தி ஹைதராபாத் ஆல்வின் மெடல் ஒர்க்ஸ் லிட்.,
சனத் நகர், ஐதராபாத்-500 018.



திறமையான
ஆல்வின் சர்வீஸ்
4 மண்டல அலுவலகங்கள்
மற்றும் 110 சர்வீஸ்
சென்டர்கள் மூலம் —
போன் செய்தால் போதும்.

ஆல்வின் —
மிக உயர்ந்த நம்பிக்கைக்கு உரிய இன்றைய ரெஃப்ரிஜெரேட்டர்.



டைவர்ஸ்

19

"அக்னி தேவனே, நான் மணந்து கொண்ட இப் பெண்ணிடம் நானறியாமல் சில தோஷங்கள் இருக்கலாம். அவை எனக்கும் என் சந்ததிக்கும் செல்வத்துக்கும் நாசத்தைத் தரலாம். அத் தோஷங்கள் இவளை விட்டு அகலட்டும்."

—மாப்பிள்ளை சொல்லுகிற ஒரு மந்திரத்தின் அர்த்தம்.

"வசு," என்றாள் ராஜலட்சுமி.

"ஏன் அம்மா?" என்றாள் அவள். உள்ளே தங்கள் கம்பெனி கார் நிற்கிறதையோ, சிவராமன் அதில் உட்கார்ந்திருப்பதையோ அவள் கவனிக்கவில்லை.

"திடீரென்று தலையை வலிக்கிறது. பொள்ளாச்சிக்குத் திருப்பு."

"உடம்பு சரியில்லையா அம்மா? அமிர்தம்மா வீட்டில் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக் கொள். அவசியம் நேர்ந்தால் அந்தம்மாவே டாக்டருக்குச் சொல்லி அனுப்புவாள்."

"வசு, இப்போ நீ பொள்ளாச்சிக்குப் போகப் போறியா, இல்லியா?"

ராஜலட்சுமி அப்படிச் சீறுவாள் என்று வசு எதிர்பார்க்கவில்லை.

"சரிம்மா, கத்தாதே," என்றவள், மௌனமாக வண்டியைத் திருப்பினாள். உடம்புக்கு வந்தாலே கோபமும் கூட வரும்போலிருக்கிறது என்று நினைத்தாள் அவள்.

அன்று மாலை அவர்கள் சென்னை திரும்ப வேண்டியவர்கள். ஆனால் ராஜலட்சுமிக்கு மனம் குழம்பிப் போயிருந்தது. ரயில் பிரயாணம் செய்யும் நிலையில் உடம்பு இல்லை என்று சொல்லி ஒத்திப் போட்டுவிட்டாள். அமிர்தம்மாவின் வீட்டில் அவளுடைய கண்வருக்கு என்ன வேலை? கோயமுத்தூருக்குப் போவதாகச் சொல்லிச் சென்றவர் அங்கே என்ன செய்துகொண்டிருக்கிறார்? அமிர்தம்மாவின் முகம் அவள் கண் முன் வந்து நின்றது. கல்யாண வீட்டில் அவளைப் பார்த்தபோது இனம் தெரியாத ஒருவித வெறுப்பு மனத்துள் எழுந்தது ஞாபகம் வந்தது. ஏன்?... ஏன்?...என்னென்னவோ ஊகங்கள்... சந்தேகங்கள்...வேதனைகள்...

பி.வி.ஆர்.

''ஏம்மா, இப்போ உடம்பு எப்படி இருக்கு?'' என்றாள் வசு.

''பரவாயில்லை.''

''நானும் பார்க்கிறேன். வந்ததிலிருந்து நீ சரியாகவே பேசற தில்லே. காப்பி டிபன்கூட வேண்டாம்னு சொல்லிட்டே.''

''வேண்டியிருக்கவில்லை.''

''டாக்டரைக் கூப்பிடு வோமா?''

''அதெல்லாம் வேண்டாம்.''

நித்யாவுக்கு, வசு மேலும் ஒருநாள் தங்கப் போகிறாள் என்பதில் மகிழ்ச்சி.

''வசு, நாளைக்குக் காலையிலே சரியா ஆறரை மணிக்கு ரெடியா இரு. எங்களுடன் திருமூர்த்தி மலைக்கு வரப் போகிறாய்!'' என்றாள்.

மறுநாள் காலை ஆறரை மணி. ராஜலட்சுமிக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை என்று தெரிந்தது. நித்யாவுடன் வசு உல்லாசப் பயணம் கிளம்பினாள்.

காரின் முன் பக்கத்தில் முரளிக்கு அருகே நித்யா உட்கார்ந்திருப்பதைப் பார்த்த வசு, ''குட் மார்னிங், போத் அஃப் யூ!'' என்று சொல்லிக்கொண்டே, பின் கதவைத் திறந்தாள்.

அடுத்த கணம் திடுக்கிட்டாள். கோபியும் உள்ளே உட்கார்ந்திருந்தான்.

''நித்யா ரொம்ப போர் அடிக்கிறாள். ஒரு ரிலீஃபுக்கு என் பிரண்ட் இருக்கட்டும்னு நினைச்சேன்,'' என்றான் முரளி.

''நம்ம ரெண்டு பேருக்கும் வேறு என்ன பொருத்தம் இருக்கோ இல்லியோ, மனப் பொருத்தம் கண்டிப்பா இருக்கு...இதே எண்ணத்திலே தான் நான் என் பிரண்ட் வசுவை இன்வைட் பண்ணினேன்...'' என்றாள் நித்யா.

வசு உட்கார்ந்தாள். முரளி வண்டியை ஓட்ட நித்யா வாய் வலிக்காமல் பேசிக்கொண்டே வந்தாள்.

வசு கோபி பக்கம் ஒரே ஒரு தடவை திரும்பினாள். கோபி இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தான். அதன் பின் அவன் பார்வையைக் கவர அவள் முயலவில்லை.

திருமூர்த்திமலையை அடைந்த போது மணி எட்டரை. அமணலிங்கர் ஆலயத்தை அணைத்துக்கொண்டு நதி ஓடியது.

அர்ச்சனையும், தரிசனமும் முடிந்தபின், ஒரு தேங்காய் மூடியைப் பாறைமேல் போட்டு உடைத்த நித்யா தேங்காய்ச் சிதறை வசுவிடம் நீட்டினாள். முரளியும் கோபியும் சற்றுத் தூரத்தே நிழலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''வசு, சரியா பத்தரை மணிக்குப் புறப்படலாம். இன்னும் ஒண்ணரை மணி நேரம் இருக்கு. அது வரையில் கோபியுடன் மெட்ராஸில் என்னென்ன முடியலையோ அதையெல்லாம் பேசித் தீர்த்துக் கொள்...நானும் அவரும் அக்கரைக்குப் போகிறோம்.''

''நானும் வர்றேனே?''

''உளறாதே... ஒரு ஒண்ணரை மணி நேரம் நாங்க சந்தோஷமா இருக்கப்படாதா?''

வசு சிரித்து வைத்தாள். அதற்குள் முரளியும் நித்யாவும் சிதறிக் கிடக்கும் பாறைகளைத் தாண்டித் தாண்டி அக்கரையை அடைந்தார்கள். அடைந்தவர்கள் மரங்களுக்குப் பின்னால் மறைந்தார்கள்.

''வசு!,'' என்ற குரல் கேட்டது.



''கங்கிராஜுலேஷன்ஸ்! நடிகை பளாபளா தேவியின் நாய் உன்னைக் கடிச்சிட்டுதாமே!''

கோடை காலத்தில் தயிர் கடையும் போது வெண்ணெய் திரண்டு வர அதிக நேரமாகிறதா?

குளிர்ந்த நீருள்ள பாத்திரத்துக்குள் தயிர்ப் பாத்திரத்தை வைத்துக் கடைந்தால் சிறிது நேரத்தில் வெண்ணெய் திரளும்.

—திருமதி குழந்தைவேல்.



பார்த்தாள்.

கோபி.

"ஏன் அங்கே தனியே நிற்கிறாய்? இங்கே வா," என்றான் அவன். ஒரு பாறைமேல் உட்கார்ந்து, காலால் ஓடும் தண்ணீரை அளைந்து கொண்டிருந்தான்.

ஒரு நிமிடம், 'இவர் என்ன கூப்பிடுவது, நாம் என்ன போவது,' என்று நினைத்தாள். பிறகு, தயங்கித் தயங்கி நடந்தாள். அவன் அருகே வந்ததும், "உட்கார் வசு," என்றான் அவன்.

உட்கார்ந்தாள்.

"உன் அப்பாவை நான் சாப்பாட்டுக்கு அப்புறம் பார்க்கவே யில்லையே?"

"கோயமுத்தூருக்குப் போய் விட்டார்."

சிறிது நேர மௌனம்.

"அம்மா அப்பாவுக்கு ஒரே வருத்தம்," என்றாள் வசு.

"ஏன்?"

"ஊட்டியிலிருந்து வந்த பிறகு நீங்கள் ஒரு தடவைகூட வீட்டுக்கு வரவில்லை."

"ஏன்னு சொல்றதுதானே?"

"சொன்னேன்."

"அப்போ வருத்தப்பட்டிருக்க முடியாதே?"

"பின்னே?" அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"உன்மேலே கோபம்தான் ஏற்பட்டிருக்கும்."

"தப்பு என் மீதா?"

"நானும் தப்பு செய்திருக்கலாம்தான். ஆனா என்னாலே அனுசரித்துக் கொண்டு போக முடியும்."

"என்னாலே முடியாது என்கிறீர்களா?"

"அது உனக்கே தெரியும். நீ கோபுரத்தின் உச்சியிலே நிக்கறே! இறங்கி வந்தால் எல்லாம் தெளிவாகிவிடும்."

அவள் பொருமினாள். "நீங்கதான் ஒரு கோபுரத்தின் உச்சியிலே நிற்கறதாகப் படுகிறது எனக்கு."

"அப்போ உனக்குப் பார்வை சரியில்லை, வசு."

"ஏன் என்மேலேயே குற்றத்தைச் சுமத்துகிறீர்கள்?"

"என்மேலே குற்றம் இருந்தால் எடுத்துக் காட்டு. நான் என்னைத் திருத்திக் கொள்கிறேன்."

"உங்களுக்கு ரொம்பப் பிடிவாதம். நான் எதைச் செய்தாலும் சொன்னாலும், அது உங்க தன்மதிப்பையும் சுய கௌரவத்தையும் குத்தறதாக நினைக்கிறீர்கள்."

"என்னைப் போன்ற ஏழைகளுக்கு இருக்கிற சொத்தே தன்மதிப்பும், சுய கௌரவமும்தான். அதுகூட இருக்கக்கூடாது என்கிறாயா?"

அவளுக்குச் சிரிப்பு வந்தது.


"நீங்களா ஏழை! ஒரு காலத்திலே நீங்க ஏழையா இருந்திருக்கலாம். அப்படிப் பார்த்தா எல்லாருமே ஒரு காலத்தில் ஏழைகள்தான்... இப்ப நீங்க ஏழையா? ஒரு பெரிய கம்பெனியிலே ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிற உதவி மானேஜர்!"

"இருக்கலாம்... ஆனாலும் உலகம் உன்னைப் பணக்காரியா ஏத்துக்கற மாதிரி என்னை ஏத்துக்கொள்ளவில்லையே."


"சரி. ஆல்ரைட்... நாம் ரெண்டு பேரும் இப்படி எதிர் எதிர் துருவங்களிலே ஒருவருக்கொருவர் ஒளியாயும் இல்லாமல், நிழலாகவும் இல்லாமல் எத்தனை நாள் நிற்பது?"


''நான் சின்னப் பெண்ணுக
இருக்கும்போது நான்
என்ன ஆவேன் என்று என்
தாயாரைக் கேட்டேன்''
...பிறகு நான் ஒரு
மங்கையானேன்.
நளினமான
நங்கையாக வளர
சொகுசான
VIMAL
A RELIANCE PRODUCT
சேலைகள்
டிரெஸ் துணிகள்.
தவிர இன்றைய நவநாகரிக
ஆண்களுக்கு—டபிள் நிட் டெக்ஸ்லின்
சூட்டிங்குகளும், இணையான
ஷர்ட்டிங்குகளும்.

முதல் நூறு தமிழர்க



எம். எஸ். சுப்புலட்சுமி
(இசை)



கே. பி. சுந்தராம்பாள்
(இசை)



ருக்மணி தே
(பரத நாட்டி

இசை, நாட்டியம், ஓவியம், சிற்பம், அயல் நாட்டு உறவு, நிர்வாகம், சமூக சேவை ஆகிய துறைகளைச் சேர்ந்த தமிழர்களைத் தேர்ந்தெடுத்துத் தந்தவர் தமிழ்நாடு முன்னாள் தொழில் அமைச்சர் திரு. ஆர். வெங்கடராமன். நூறு தமிழர்களின் பட்டியல் இத்துடன் நிறைவு பெறுகிறது. அதை முற்றிலுமோ, கூடுமான வரையோ ஒத்துள்ள பட்டியல் தந்தவருக்குப் பரிசு வழங்கப்படும்.



ஆர். வெங்கடராமன்(தலைவர், ஐ.நா. அட்மினிஸ்டிரேடிவ் ட்ரிபியூனல்.)



சி.வி. நரசிம்மன் (செய
ஐக்கிய நாடுகள் கவுன்

''இதே கேள்வியை நானும் உன்னிடம் கேட்க வேண்டும் என்றுதான் இருந்தேன் வசு! புருஷன் மனைவி என்றால், நாரிலே தொடுக்கும் பூன்னு நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஒண்ணோடு ஒண்ணு இழைஞ்சு ஓடற நூல் போல இருக்கணும்னு எதிர்பார்க்கிறவன் நான். ஆனா இப்போ நீ ஒரு தண்டவாளம். நான் ஒரு தண்டவாளம். என்னிக்குமே அது ஒண்ணு சேராதுன்னு தோணும்படியா இருக்கு.''

''தண்டவாளம்னு நினைச்சா அப்படித்தான் தோணும்.''

''பின் எப்படி நினைக்கறதுன்னு நீயே சொல்லு.''

வசு யோசித்தாள். என்ன உதாரணம் சொல்லுவது? சற்று நேரத்துக்குப் பிறகு, ''நீங்க சொன்ன உதாரணமே நன்றாயிருக்கு. பூவும் நாரும்.''

''நீ பூ, வசு. நான் நார். நான் என்னிக்குமே தயாராக இருக்கிறேன். நீதான் பூக்கூடையிலிருந்து வெளியே வரமாட்டேன் என்கிறாய்.''

''இப்போது நான் தயார்னு சொன்னால் என்ன செய்வீர்கள்?'' என்றாள் அவள், பெருந்தன்மையோடு.

''என்னிடம் உன்னைத் தொடுக்க ஆரம்பிப்பேன். பூ நாரோடு இணைந்து ஒரு பெரிய மாலையாகி விடும்.''

''மாலையை எங்கே வைப்பது, எப்படி வைப்பது என்பது பற்றி முடிவு செய்ய வேண்டும்.''

''அதை நான் ஏற்கனவே செய்துவிட்டேன்.''

''மேற்கு மாம்பலமா?''

''ஆமாம்.''

''அந்த முடிவை மாற்ற மாட்டீர்களா?''

''உனக்கு அந்த இடம் பிடிக்கலைன்னா, உனக்குப் பிடித்த இடத்துக்குப் போவோம்.''



டி. பாலசரஸ்வதி
(பரத நாட்டியம்)



கோபுலு
(ஓவியம்)



கணபதி ஸ்தபதி
(சிற்பம்)



ஜி. பார்த்தசாரதி
(அயல்நாட்டு உறவு)



வி.கிருஷ்ணமூர்த்தி (பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் சேர்மென்.)



சௌந்தரம் ராமச்சந்திரன்
(சமூக சேவை)

"அப்புறம். . . இன்னும் ஒன்று."

"என்ன?"

"என் அப்பா உங்களுக்குப் பெரிய பதவி தர என்றைக்கும் ரெடி."

"அதைப்பற்றி இப்ப என்ன வசு? இப்பத்தான் எனக்குப் பதவி உயர்வு கிடைத்திருக்கிறது. அடுத்த உயர்வுக்கு எத்தனை வருஷமாகுமோ... கண்டிப்பாக ஒரு நாள் எனக்கு இந்த வேலையும் அலுத்துப் போகலாம். அப்போ உன் அப்பா தர்ற வேலையைப்பத்தி யோசிப்போமே!"

"ஓ. கே."

"இன்னும் ஒரே ஒரு சின்னப் பிரசினை பாக்கி இருக்கு வசு... எப்போ பெரிசெல்லாம் தீர்ந்ததோ, நான் சொல்லப் போறது பிரசினையாகக்கூடத் தோணுது."

"என்ன?" அவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"நாகராஜனுடைய மனைவி சீதா..."

"சீதாவை இப்போ எதுக்கு இழுக்கிறீர்கள்?" முதன் முதலாக வசுவின் குரலில் உஷ்ணம் பிறந்தது.

"அவள் உன்னை மதிச்சு, உன்னைப் பார்க்க உன் வீட்டுக்குப் படியேறி வந்தாள்."

"அதற்கும் நம்ம பிரசினைக்கும் என்ன சம்பந்தம்?"

"அவளுடைய கூடப் பிறவாத அண்ணனாக நான் இருக்கிறேன். என் தங்கை உன்னைப் பார்க்க வந்தபோது..."

"அதைப்பத்தித்தான் நாம் பீச்சிலே பேசித் தீர்த்தாச்சே!"

"பேசினோம். தீர்க்கவில்லை. நீ அவளிடம் இன்னும் மன்னிப்புக் கேட்கவில்லை."

வசுவுக்கு முகம் தக்காளிப் பழம்போல் சிவந்துவிட்டது.

"ஸில்லி! ஸ்டுபிட் ஐடியா.. செய்தது குற்றமானால் நீங்க சொல்ற துக்கு முன்னாலேயே நான் மன்னிப்பு கேட்டிருப்பேன்...அவள்கிட்டே மன்னிப்புக் கேட்கற அளவுக்கு நான் முட்டாள் இல்லே."

"நீ புத்திசாலின்னு நினைச்சேன், வசு."

"நான் அவளிடம் மன்னிப்பே கேட்காமல் போனால்..."

"நம்ம பிரசினை முழுதும் தீரவில்லேன்னு அர்த்தம்."

"அப்போ?"

"பிரசினையைத் தீர்க்கறதும் தீர்க்காததும் இப்போ உன் கையிலே இருக்கு."

"நான் அவள் காலடியிலே விழுந்து மன்னிப்பு கேட்பதென்றால்... நோ...நெவர்!"

அவன் குரலில் ஓர் இறுக்கம் புகுந்தது. "அப்படி என்றால் நீயும் நானும் என்றைக்குமே பெயரளவில் தான் தம்பதியாக இருந்து தாம்பத்தியம் நடத்த வேண்டியிருக்கும்."

"அப்படிப் பெயரளவில், இல்லாததை இருக்கிறதாகப் பிறர் நினைக்கும்படியாக எதற்கு வாழ வேண்டும்?"

"என்ன சொல்லுகிறாய்?"

"ஊருக்கும் உலகத்துக்கும் நீங்களும் நானும் புருஷன், மனைவி என்று ஊரையும் உலகையும் இனிமேலும் ஏமாற்றுவானேன்!"

"அப்போ? நீ எதைச் சொல்ல வருகிறாய் என்று எனக்குப் புரிகிறது."

அவள் ஒன்றுமே பேசவில்லை. அந்த மௌனம் அவன் சொன்னதை ஆமோதிப்பது போலிருந்தது.

இருவரும் அசையாமல் அப்படியே பாறைமேல் பாறையாக உட்கார்ந்திருந்தார்கள்.

கோபத்தில் வசுவின் கண்கள் கனத்தன. அவள் ஓடும் தண்ணீரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கோபி தூரத்தே தெரிந்த அமணலிங்கர் ஆலயத்தைப் பார்த்தவனாய் உட்கார்ந்திருந்தான்.

திடீரென்று, துள்ளிக் குதித்து வந்த நித்யா, "வசு!" என்று கத்தினாள்.

வசு திரும்பிப் பார்க்கவில்லை.

"என்னடி, இத்தனை நேரம் நீங்க ஜாலியாப் பேசினதையெல்லாம் நினைச்சுப் பார்த்து மெய் மறந்து போயிட்டியாடி!" என்றாள் அவள்.

(தொடரும்)

ஆல்பர்ட் ஷ்வைட்சர் லாம்பரீனில் தம் மருத்துவப் பணியைத் தொடங்கியபோது ஆப்பிரிக்க மக்கள் அவருக்குத் தந்த தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றால் சோர்வுற்ற ஷ்வைட்சர் ஒருமுறை தமக்குள் புலம்பிக் கொண்டாராம்: "இப்படிப்பட்ட காட்டுமிராண்டிகளுக்கு இடையே டாக்டராகத் தொண்டாற்ற வந்த நான் எவ்வளவு பெரிய முட்டாளாக இருந்திருக்க வேண்டும்!"

அதைக் கேட்ட அவருக்கு உதவியாக இருந்த ஜோசப் என்ற ஆப்பிரிக்கர் கூறினாராம்: "ஆம், இந்த மண்ணுலகத்தில் நீங்கள் பெரிய முட்டாள்தான், ஆனால் சொர்க்கத்தில் அல்ல."

[வெர்னர் பிஷ்ட் எழுதிய ஆல்பர்ட் ஷ்வைட்ஸர் என்ற நூலிலிருந்து.]

—தகவல்: இரா. மோகன்

காம்ப்ளான்
இந்த 23-ஐயும் தருகிறது.

புரதம்
திசுக்களையும் செல்களையும்
உருவாக்க, பாதுகாக்க
லிப்பிடுகள்
பொங்கிப் பெருகும் சக்திக்கே
கார்போஹைட்ரேட்
சக்தி மிகுந்த உடல் வலிமைக்கே
கால்ஷியம்
ஆரோக்கியமான பற்கள்,
எலும்புகளுக்கு
பாஸ்பரஸ்
உடல் சுரப்பிகள்,
பற்கள் எலும்புகளுக்கு
சோடியம்
இரத்தம் நன்முறையில் செயலாற்ற
குளோரைடு (Cl வடிவில்)
தசை இயக்கத்திற்கு,
பிடிப்புகளைத் தவிர்க்கும்,
பொட்டாஷியம்
மனத் தளர்ச்சி,
தசை அயர்ச்சிக்கெதிராகப் போராட
இரும்புச் சத்து
ஆரோக்கியமான ரத்தத்திற்கே
அயோடின்
தைராய்டு சுரப்பி தரமாக இயங்க
வைட்டமின் ஏ
ஆரோக்கியமான
கண்களுக்கு
வைட்டமின் பி1
வளர்ச்சி,
உறுதியான நரம்புகள்,
'பெரி-பெரி' நோய்
பிடிக்காதிருக்க



ரிபோஃப்ளேவின்
ஆரோக்கியமான வாய்,
நாக்கு, உதடுகள்,
கண்களுக்கு
நிகோடினமைடு
ஒளிவீசும் ஆரோக்கியமான
சருமத்திற்கே
கால்ஷியம் பென்டோதெனேட்
நரம்புகளையும் தசைகளையும்
வலுப்படுத்த
கோலின்
கல்லீரல் ஆரோக்கியமாக இயங்க
பைரிடாக்ஸின் (B6)
தசைகளை இளைப்பாற்ற
வைட்டமின் பி12
இரத்த சோகை பிடிக்காதிருக்க
ஃபாலிக் அமிலம்
புதிய இரத்த செல்களை உருவாக்க
வைட்டமின் சி
நோயெதிர்ப்புச் சக்தியைப் பெருக்கி,
ஸ்கர்வி நோய் வராதிருக்க
வைட்டமின் டி
உறுதியான பற்கள்,
எலும்புகளுக்கு
வைட்டமின் ஈ
கரு வளர்ச்சிக்கு
வைட்டமின் கே
இரத்தம் இயற்கையான
முறையில் உறைய உதவும்
இந்த சிறு சிறு பொருட்கள்
வைட்டமின்களை உடல்
உறிஞ்சிக்கொள்ளவும், சுரப்பிகள்
நன்கு இயங்கவும் உதவும்.

பால் சேர்க்காமலேயே பருகலாம்!

காம்ப்ளான் வளரும் குழந்தைகள், சுறுசுறுப்பான இல்லத்தரசிகள், பரபரப்புடன் இயங்கும் அலுவலாளர்கள், கருத்தரித்த தாய்மார்கள், பாலூட்டும் அன்னையர், வயது முதிர்ந்தோர், பிணியாறுவோர் முதலியவர்களுக்கு சாலச் சிறந்தது.

பாலையும் விட இன்னும் அதிகமான வைட்டமின்கள், புரதம், கால்ஷியம், இரும்புச் சத்து மற்றும் இதர ஊட்டச் சத்துக்களை காம்ப்ளான் அளிக்கிறது.

ஒப்பிட்டும் பொருள்கள்:
ஒரு கோப்பை காம்ப்ளான் (33 கிராம்),
ஒரு கிளாஸ் பால் (200 மி.லி.)



உலகெங்கும்
உபயோகிக்கப்
படுவது—
கிளாக்ஸோ
ஆராய்ச்சியில்
உருவானது.

CMGC-6180 TM

டைவர்ஸ்

20

நெல், உளுந்து, எள், பச்சைப் பயறு, கடுகு ஆகியவை பாலிகைக்கு உள்ள தானியங்கள். இவற்றைச் சிறிது ஊற வைத்துப் பின்னர் பாலிகையில் போட்டு, கல்யாணம் நடக்கும் நான்கு நாட்களும் காலையிலும், மாலையிலும் தண்ணீர் விட்டு வைக்க வேண்டும். நான்கு நாட்களில் முளை கிளம்பி ஓங்கி வளரும்.

இந்த வளர்ச்சி, தம்பதியின் வளர்ச்சிக்கும் சந்ததியின் வளர்ச்சிக்கும் அறிகுறியாகும்.

—பாலிகையின் விளக்கம்

வசு, நித்யாவுடன் திருமூர்த்தி மலைக்குப் போயிருந்தாள். ராஜலட்சுமி தனியே இருந்தாள். தனிமை அவளுக்கு இப்போது மிகவும் தேவையாக இருந்தது.

தன் கணவர் சிவராமனை அமிர்தம்மா வீட்டில் பார்த்ததிலிருந்து அவள் மனம் குழம்பிப் போய்த் தவித்தாள். அமிர்தம்மாவின் வீட்டில் சிவராமனுக்கு என்ன வேலை இருக்க முடியும் என்ற கேள்வியில் ஆரம்பித்த சிந்தனை, அவருக்கும் அவளுக்கும் ரகசியத் தொடர்பு இருக்குமோ என்ற சந்தேகத்தில் முடிந்தது.

ஆனால் அவரிடம் அவள் வைத்திருந்த அளவு கடந்த நம்பிக்கை—அவரிடத்தில் அவள் காட்டி வந்த பக்தியின் அஸ்திவாரம்—பலமாக இருந்தது. அது இலேசில் அசைந்து கொடுக்கவில்லை.

சிவராமனிடம் எத்தனையோ குறைகள் இருக்கலாம். எடுத்துச் சொன்னாலும் திருத்திக் கொள்ள முடியாத பழக்கங்கள் இருக்கலாம். ஆனால் இது நாள்வரை அவர் அவளைத் தவிர வேறு எந்தப் பெண் மீதும் அகக் கண்ணின் இமைகளைக் கூடச் செலுத்தியதில்லை என்று ராஜலட்சுமி பூரணமாக நம்பியிருந்தாள். இப்போது... அமிர்தம்மாவின் தோற்றம் அவள் கண் முன்னால் வந்து நின்றது. அமிர்தம்மா வயதுக்குச் சம்பந்தமில்லாத யௌவனத்துடனும் சோபையுடனும் இருக்கிறாள். அவளுடைய அழகு பார்ப்பவரை—குறிப்பாக வயதானவர்களை—கவ்விப் பிடிக்கும் அழகு. அவளுடைய பார்வை மற்றவர்களை இழுக்கக்கூடிய வசியப் பார்வை. என்னதான் சிவராமனுடைய கண் இமைகள் மூடிக்கொண்டாலும், அமிர்தம்மா அவற்றைத் திறந்து, அவரை வசீகரித்துத் தன்பால் இழுத்துக் கொண்டிருக்கலாமே!

ராஜலட்சுமி தவித்தாள். கிட்டு மாமா வீட்டு ஹாலில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து நடந்து அவளுக்குக் கால்கள் வலித்தன. அதிகாலையிலேயே திருமூர்த்தி மலைக்குச் சென்ற வசு இன்னும் திரும்பவில்லை. வயிறு பசியால் இரைந்தாலும் வாய்க்கு ஒன்றும் வேண்டியிருக்கவில்லை. அவள் என்னதான் எல்லா சுவாமி படங்களிலும் ராமன் ஒருவரையே பார்த்தாலும், ராமருடைய உருவம் கிருஷ்ணனாகவும் முருகனாகவும் மாறிக்கொண்டே வந்தது.

திடீரென்று சின்ன வயதில் நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது.

ராஜலட்சுமிக்கு வயது பதினாறு அல்லது பதினேழு இருக்கும். அப்பா அவளையும் அண்ணன் ராஜாமணியையும் அழைத்துக் கொண்டு சேலத்துக்குப் போயிருந்தார். அங்கே ஒரு கல்யாணம்.

எல்லோரும் ஜானவாசத்துக்குப் போயாகி விட்டது. மணமகளுக்கு உறவுகாரப் பெண்—அவள் பெயர் சாரதா — ராஜலட்சுமியுடன் அன்னியோன்னியமாகப் பழகினாள்.

பி.வி.ஆர்



வெற்றிலே எல்லாம் கொடுத்து, பிள்ளை வீட்டார் இறங்கியிருக்கிற வீட்டிலே வச்சுட்டு வரச் சொன்னார். நான் திரும்பி வர்றதுக்குள் நீ கிளம்பிப் போயிட்டே."

"உனக்கு வேணுமின்னு கேட்டிருந்தா நானே கொடுத்திருப்பேன்."

ராஜலட்சுமி, அருகே இருந்த மேஜை மேல் கைக் கடியாரத்தை வைத்து விட்டு, முகம் கழுவக் குளியலறைக்குச் சென்றாள். முகத்தைக் கழுவிவிட்டுத் திரும்பியவள், தலையை வாரி, புதுப் புடவையையும் கட்டிக் கொண்டபின், மேஜை மேல் வைத்திருந்த மல்லிகைப் பூவை எடுக்கப் போனாள். அப்போதுதான், மேஜை வெறிச்சோடுவதாகப் பட்டது அவளுக்கு. அங்கே வைத்திருந்த கைக் கடியாரத்தைக் காணவில்லை! சாரதாவையும் காணவில்லை.

சாரதாவிடம் போய், "என் ரிஸ்ட் வாட்ச்சைக் காணவில்லை," என்றாள்.

"பாத்ரூம் போறதுக்கு முன்னாடி மேஜை மேலே வைத்தாயே!" என்றாள் சாரதா.

"திரும்பி வரும்போது அதையும் காணோம். உன்னையும் காணோம்!"

சாரதா உடனேயே அழ ஆரம்பித்தாள். "நீ அந்தப் பக்கம் போனதும் கல்யாணப் பெண்ணோடு அப்பா வந்து, தட்டு நிறையப் பாக்கு

கேவலுக்கிடையே, "சத்தியமா எனக்கு ஒண்ணும் தெரியாது. நான் உன் வாட்ச்சை எடுக்கவில்லை. நான் ஏழைதான். ஆனா திருடற குணம் இல்லை," என்றாள் சாரதா.

சொன்னவள் அழுது கொண்டே போனாள்.

அவள் போன சில நிமிடங்களுக்கெல்லாம் ராஜாமணி வந்தான். வந்தவன், "ராஜி, வர வர உனக்குக் கொஞ்சம்கூடப் பொறுப்பே இல்லாமல் போய்விட்டது," என்றான்.

ஏற்கெனவே குழம்பிப்போயிருந்த ராஜலட்சுமி, "என்ன அண்ணா?" என்றாள்.

"ஜானவாசத்துக்கு நீ புறப்பட்டாச்சான்னு பார்க்க வந்தேன். வீட்டிலே யாரும் இல்லை. நீ போயாச்

சுன்னு நினைத்துத் திரும்பினேன். அப்போ இது கண்ணிலே பட்டது. உன் அவசரத்திலே இதை மேஜை மேலே தூக்கி எறிஞ்சுட்டுப் போயிருக்கே!''

ராஜாமணி, பாக்கெட்டிலிருந்து கடியாரத்தை எடுத்துக் கொடுத்தான்.

ராஜலட்சுமி இடிந்து போய் விட்டாள். வீண் சந்தேகம் அவளை எப்படி ஆட்டிப் படைத்து ஒரு ராட்சசி ஆக்கிவிட்டது. சாரதாவைத் தேடிப் பிடித்து மன்னிப்புக் கேட்பது என்று சங்கற்பம் செய்து கொண்டாள். ஆனால் அப்புறம் சாரதா அவள் கண்ணில் படவே இல்லை.

அந்தச் சம்பவம் இப்போது ராஜலட்சுமியின் நினைவுக்கு வந்தது.

அமிர்தம்மா வீட்டில் பார்த்தது சிவராமன்தானா? வேறு யாராகவேனும் இருக்கக் கூடாதா? அப்படியே சிவராமனாக இருந்தாலும் ஏதேனும் பிஸினஸ் விஷயமாக அமிர்தம்மாளைச் சந்திக்கப் போயிருக்கலாம்.

திடீர் என்று ஒரு யோசனை தோன்றியது அவள் மனத்தில். ஏன் அமிர்தம்மாவின் வீட்டுக்கே செல்லக் கூடாது? அவளைத்தான் வசு ஏற்கெனவே அறிமுகம் செய்திருக்கிறாளே. இப்போது சிநேகிதி என்ற முறையில் போய்ப் பார்த்துவிட்டுத் தன் சந்தேகத்துக்கு ஒரு தீர்வு காணலாமே?

சிவராமன் அடிக்கடி கூறும் அறிவுரை ஒன்று ஞாபகத்துக்கு வந்தது. இரவில், ஏதாவது சத்தம் கேட்டாலோ, நிழல் ஆடினாலோ, பயத்துடனும் சந்தேகத்துடனும் படுக்கையிலேயே கிடக்காமல் விளக்கைப் போட்டுப் பார்த்து விட வேண்டும் என்பார். அவருடைய அறிவுரையை இப்போது அவர்மீதே பிரயோகப்படுத்த நேர்ந்திருக்கிறது.

விளக்கைப் போட்டு ராஜலட்சுமி பார்க்கப் போகிறாள்.

அமிர்தம்மா காலையிலிருந்தே, தான் கற்ற வித்தைகளையெல்லாம் செய்து பார்த்து விட்டாள். சிவராமனுடைய தலைவலி குறையவில்லை. நெற்றியின் இரு பக்கங்களிலும் வலிக்கிறது என்று சிவராமன் மாத்திரைகளைச் சாப்பிட்டார். நீலகிரித் தைலம் தடவிக் கொண்டார். பயன் இல்லை. பன்னிரண்டு மணிக்கு வேண்டா



இங்கே ஜோதிலட்சுமி ஆடும் நாட்டியத்துக்குப் பெயர் என்ன? வயிற்று வலி டான்ஸா? அதனால்தான் துடிக்கிறாரோ!

படம்: புல்லம்மா சபதம்

—ச. வே. ரா. மோகன்

வெறுப்பாக ஏதோ சாப்பிட்டார்.

"நீங்கள் இங்கே வந்து இருப்பது இரண்டு நாளோ மூணு நாளோ. அப்பத்தானு, உங்களுக்கு இந்தத் தலை வலியும் உடம்பு வலியும் வரணும்?" என்றாள் அமிர்தம்மா.

அவளுடைய குரலில் தாபம் புரையோடியது.

"உன் கை பட்டே குணமாக வில்லையே, அமிர்தம்," என்று சிரித்தார் சிவராமன்.

"மெட்ராஸுக்குப் போனதும் முதல்லே, உங்க கண்ணை டெஸ்ட் பண்ணிக்கணும். கடைசியா எப்போ கண்ணுடியை மாத்தினீங்க?"

"நாலு வருஷம் ஆச்சு."

"அதுதான். அதுவேதான். இவ்வளவு வயசாகிறது, மூணு வருஷத்துக்கு ஒரு தடவை டெஸ்ட் பண்ணி, கண்ணுடியை மாத்திக்கணும்னு தெரியலையே, உங்களுக்கு!"

"ஏது நேரம் அமிர்தம்?"

"சரி, அடுத்த மாசம் இங்கே வரவேண்டாம். கண்ணை டெஸ்ட் பண்ணிக்குங்க...."

"நீ தியாகம் செய்யலாம். ஆனு என்னுலே வராம இருக்க முடியாது. மாசத்திலே நான் ரெண்டு மூணு நாள்தான் வாழறேன். அந்த வாழ்க்கையையும் குலைக்கப் பார்க்காதே."

"நேத்து வசு உங்க ராஜலட்சுமியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தாள்."

"தெரியும்."

"அவளுக்கு என்னைப் பிடிக்கவில்லையோன்னு தோன்றிற்று. சரியாய்ப் பேசவில்லை."

"ராஜிக்கு உன்னைப் பிடித்தால் என்ன, பிடிக்கலேன்னு என்ன?"

"மனசுக்குள்ளேயே சிரிச்சுக்கிட்டேன்.. எதை நினைச்சுத் தெரியுமா?"

"சொல்லேன்."

"சொன்னு நீங்க பயந்து போயிடுவீங்க."

"சும்மா சொல்லு. நீ இருக்கறப்போ எனக்கு என்ன பயம்?"

"நீங்களும் நானும் இங்கே இப்படி இருக்கிறோம்னு உங்க பெண்டாட்டிக்குத் தெரிஞ்சா, அவள் என்ன செய்வான்னு நினைச்சுப் பார்த்தேன்."

"என்ன செய்வாள் என்று நினைக்கிருய்?"

"நீங்கள் என்ன நினைக்கறீங்க? ஒன்னு அலறி அழுவாளா?"

"மாட்டாள். அவள் என்னைத் தெய்வமா வழிபடுகிறவள். தெய்வம் தப்பு செய்யாது என்று நம்புகிறவள். நான் செய்கிறது எதுவும் அவளுடைய நன்மைக்காக என்று நினைக்கிறவள்."

"நீங்களும் நானும் இப்படி இருக்கிறது கூட அவளுடைய நன்மைக்காகவா?" சொல்லிவிட்டு அமிர்தம் கலகலவென்று சிரித்தாள்.

"நீ இப்படிச் சிரிக்காதே. என் தலை வலி போயிடும்போல இருக்கு. தலை வலி போயிட்டா, நீ என் நெத்தியை வருடமாட்டே!"

"வயசு இவ்வளவு ஆகியும் இந்த நப்பாசை போகலையே?"

"உனக்கு எப்படி உன் வயசு ஏறஏற இளமையும் அதிகமாகிறது?"

"இப்பக் கொஞ்சம் தூங்குங்கள்."

"ஓடிகொலோனைத் தடவி விடு. ஜன்னல் கதவை யெல்லாம் சாத்து."



"உன் இடுப்பிலே பீரோ சாவி, பெட்டிச் சாவி, லாக்கர் சாவி, பெட்ரூம் சாவி, கிச்சன் ரூம் சாவி, ஸ்டோர் ரூம் சாவி என்று செருகிட்டியே! எனக்கென்று எந்தச் சாவியும் கிடையாதா?"

"ஏன், பாத் ரூம் சாவி இருக்கே!"

"அப்புறம் இதே கட்டிலில் பக்கத்தில் உட்கார்ந்து காலையும் பிடிக்கணும். அவ்வளவுதானே?"

"அவ்வளவுதான்." அமிர்தம் ஓடிகொலோனை எடுக்க எழுந்தாள்.

ராஜலட்சுமி அமிர்தம்மாவின் வீட்டுக்குள் பிரவேசித்தபோது சரியாக மணி இரண்டு. அங்கலக்குறிச்சி பஸ் நிலையத்திலிருந்து வெய்யிலில் நடந்து வந்ததில் உடம்பெல்லாம் வியர்வை கொட்டியது. முந்தானையால் முகத்தைத் துடைத்துக்கொண்டே ஹாலினுள் காலை வைத்தாள்.

வீட்டில் ஆள் அரவமே இல்லை.

திறந்து கிடக்கும் வீட்டில் யாராவது இருந்துதான் ஆகவேண்டும் என்று நினைத்த அவள், இடது புறமாக இருக்கும் அறைக்குள் எட்டிப் பார்த்தாள். ஒரு வீணை மட்டுமே அந்த அறையில் இருந்தது.

வலது புறத்தில் இருக்கும் அறையிலிருந்து மின்சார விசிறி ஓடும் ஒலி கேட்டது. மெதுவாக நடந்தாள்.

கதவு முழுதும் சாத்தாமல் ஒருகணித்திருந்தது.

வெளியே நின்றபடியே பார்த்தாள்.

பெரிய இரட்டைக் கட்டிலில், கண்ணை மூடிக் கொண்டு சிவராமன் படுத்திருந்தார். கையில் ஒரு பாட்டிலுடன் வந்த அமிர்தம்மா, கட்டிலின் மேல் உட்கார்ந்தாள்.

உடனேயே அந்த இடத்தை விட்டு ஓடி விட வேண்டும் என்று மனம் பதறினாலும் ராஜலட்சுமி நிதானமாக நின்று கவனித்தாள். அமிர்தம்மா அவள் வெளியே நின்று கொண்டிருப்பதைக் கவனிக்கவில்லை என்ற தைரியம் வேறு அசையாமல் நிற்கச் செய்தது. மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

அமிர்தம்மாளின் விரல்கள், சிவராமனுடைய நெற்றியில் ஓடின. பிறகு பாட்டிலை மூடி பக்கத்திலே வைத்துவிட்டு மீண்டும் அவர் நெற்றியை வருட ஆரம்பித்தாள்.

அவளுடைய, விரல்கள் நெற்றியை விட்டு, சிவராமனுடைய கன்னத்துக்கு இறங்கியபோது, ராஜலட்சுமி மெதுவாகத் திரும்பி நகர்ந்து வெளியேறினாள்.

பாதையில், வெய்யிலில் மீண்டும் நடந்தபோது, தெருவெல்லாம் ஒரே கண்ணாடிச் சிதறல்களாகக் காட்சி அளித்தது.

இவ்வளவு உடைந்த கண்ணாடிச் சிதர்கள் எங்கிருந்து வந்தன என்று ராஜலட்சுமி யாரிடமும் கேட்கவில்லை.

எல்லாம் அவள் தினம் தினம் பார்க்கும் ராமர் படத்தின் கண்ணாடித் துண்டுகள் என்று அவளுக்கு மட்டும் தானே தெரியும்?

(தொடரும்)

கஷ்டம்! கஷ்டம்!

மனைவி: இங்கே இருந்த காப்பியை யார் குடித்தது?

கணவன்: ஏன், நான்தான். காப்பி என்றுமில்லாமல் இன்று மிகவும் நன்றாக இருந்தது.

மனைவி: ஐயையோ! அது நம் வேலைக்காரிக்கு அல்லவா வைத்திருந்தேன். நீங்கள் ஏன் குடித்தீர்கள்? எனக்குத்தான் கஷ்டம். சாயங்காலம் வர மாட்டாள்!

— 'ராம்ஜி'

டைவர்ஸ்

டி.வி.ஆர்.

21

மரத்தாலாகிய இந்த ஓடம் எங்களுக்கு ஆபத்து இல்லாமல் அக்கரையில் கொண்டுபோய்ச் சேர்க்கட்டும்.

பெண்ணே, என்னுடன் வரும் நீ நீண்ட ஆயுளும் கீர்த்தியும் உள்ளவளாக வேண்டும்.

—கல்யாணமான பிறகு பெண்ணை அழைத்துக்கொண்டு தன் வீட்டுக்குச் செல்லும் கணவன் நதியைக் கடக்க ஓடத்தில் ஏறும்போது சொல்லும் மந்திரத்தின் அர்த்தம்.

நேரம் செல்லச் செல்ல, கன்னத்தின் வலி குறையக் குறைய, வசுவின் உள்ளத்து வலி ஏறிக் கொண்டே போயிற்று. ரயிலில் அம்மாவுடன் சென்னை திரும்பும்போதும், சென்னையில் வீட்டுக்கு வந்த பிறகும் அவள் யாரிடமும் அந்தச் சம்பவத்தை வெளியிடவில்லை. அவளையும் அறியாமல் பல தடவைகள் அவளுடைய கைவிரல்கள் கன்னத்தைத் தொட்டுப் பார்த்துக்கொண்டன.

கோபியை இது நாள் வரையில் அவள் ஒரு முரடனாகவோ, நாகரிகமும் பண்பும் இல்லாத அரக்கனாகவோ நினைத்துப் பார்த்ததில்லை. தன் மனைவியைக் கைநீட்டி அடிக்கும் அளவுக்குத் தரம் குறைந்தவனா அவன்! நினைத்துப் பார்க்கையில் உள்ளம் கேவி அழுதது. அதே சமயத்தில் அவள் இது வரை உணர்ந்தறியாத வெறுப்பும் உண்டாகியது. வெறும் வார்த்தைகளால் அவளை வெல்ல முடியாத அவன், அவளுடைய வாயை அடக்கப் பலாத்காரத்தைப் பிரயோகித்து விட்டான்.

திடீரென்று இன்னொரு எண்ணமும் பிறந்து கோபத்தை மேலும் வளர்த்தியது. திருமூர்த்தி நதிப்படுகையிலேயே, இருவரும் சேர்ந்து வாழ்வதில் அர்த்தமில்லை என்று அவள் கூறியிருந்தாள். அதைக் கோபியும் ஆமோதித்திருந்தான். அக்கணமே, இருவரும் பரஸ்பரம் வேற்று மனிதர்களாக ஆகிவிட்டார்கள். அதன் பின் அவளிடம் அனுவசியமாகப் பேச்சுக் கொடுக்கவும், உரிமை கொண்டாடவும் கோபிக்கு எந்தவித பாத்தியதையும் கிடையாது. கைநீட்டி அடிக்க என்ன உரிமை இருக்கிறது?

மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதில் மனம் மூழ்கியது. அப்பாவின் குடும்ப வக்கில், கம்பெனி வக்கீல், பல ஆண்டுகளாகக் குடும்பத்தின் சிநேகிதராக இருக்கும் வேதராமனிடம் அவள் போகத்தான் போகிறாள். அவளுடைய பிரசினைக்கு வழி பெறத்தான் போகிறாள். அதற்கு முன் அம்மாவிடம் ஒரு வார்த்தை சொல்லிவிடுவது நல்லது என்று பட்டது.



அவள் மெல்ல மாடிப்படியில் இறங்கினுள். கடியாரம் எட்டு அடித்துக் கொண்டிருந்தது.

கடைசி மாடிப்படியில் கால் வைக்கும்போது, சிவராமன் ராஜலட்சுமியிடமிருந்து பயபக்தியுடன் பூஜைத் தீர்த்தம் வாங்கிக்கொண்டிருப்பது தெரிந்தது. வசு நின்று பார்த்தாள். தீர்த்தம் வாங்கிக்கொண்ட சிவராமன், ராஜலட்சுமி கொடுத்த மலர்களை வாங்கி, ஒன்றை எடுத்துக் காதில் செருகிக் கொண்டார்.

அந்தக் காட்சியைக் கண்டதும், ராஜலட்சுமியிடம் கலந்தாலோசிக்கும் யோசனையை வசு கைவிட்டு விட்டாள்.

திரும்ப மாடிப் படி ஏறும்போது கை கன்னத்தைத் தொட்டுப் பார்த்தது.

திருமூர்த்தி கோவிலிலிருந்து நித்யா, முரளி, கோபி, வசு நால்வரும் புறப்பட்டபோது தனக்கும் கோபிக்கும் இடையே நடந்த பேச்சின் எதிரொலி இன்னும் அடங்காமல் ஒலிக்கவே, வசுவால் கலகலப்பாக இருக்க முடியவில்லை.

திருமூர்த்தி அணைக்கட்டைத் தாண்டுகையில், நித்யா, ''வசு, சொல்ல மறந்தே போயிட்டேன். நம்ம புரோகிராமில் ஒரு சின்ன மாறுதல்!'' என்றுள்.

காரில் முரளியும் கோபியும் முன் ஸீட்டில் உட்கார்ந்திருந்தார்கள். வசுவுக்கு வலது பக்கத்தில் நித்யா அமர்ந்திருந்தாள்.

வசு திரும்பிப் பாராமலே, ''என்ன?'' என்று கேட்டாள்.

''இப்போ நேரே பொள்ளாச்சிக்குப் போகவில்லை. கணியூருக்குப் போகிறும். அங்கே எங்க தாத்தா

வின் அண்ணு மனேவி இருக்கிருள். தொண்டுக் கிழம்... தொண்ணூத்து அஞ்சு வயசு. ..அவளேப் பார்த்துவிட்டு வரணும்.''

முரளிக்கு அப்போதுதான் ஞாபகம் வந்தது. ''கோபி, உன்னுடைய சொந்த ஊர்கூட கணியூர் தானே?'' என்ருன்.

''என் அம்மா பிறந்து வளர்ந்த ஊர்..நான் பிறந்த ஊர்..''

''நீ பிறந்த வீட்டை, உன் அம்மா பிறந்த வீட்டைப் பார்க்க உங்களுக்கு ஒரு சான்ஸ் வந்திருக்கிறது.''

கணியூரை அடையும்போது மணி பதினென்றுக்கு மேலாகிவிட்டது.

நித்யாவின் பாட்டி வீட்டு வாசலில் கார் நின்றது. அதற்கு மூன்ருவது வீட்டில்தான் கோபியின் தாயார் தங்கம்மாவின் வீடு இருந்தது. முரளியும் நித்யாவும் பாட்டி வீட்டுக்குள் நுழைய, கோபி, வசுவைப் பார்த்தான்.

வசு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''நமக்குள் ஆயிரம் இருக்கலாம் வசு, ஆனு இப்போ அதை இங்கே வெளிச்சம் போட்டுக் காட்டணுமா... வா, என் அம்மா பிறந்து வளர்ந்த வீடு எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம்,'' என்ருன்.

வசு மௌனமாகப் பின் தொடர்ந்தாள்.

திண்ணேயில் ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள்.

கோபியையும் வசுவையும் பார்த்த அவள், அசையாமலேயே, ''யாரு, என்ன வேணும்?'' என்று கேட்டாள்.

''என் பெயர் கோபி. இந்த வீட்டில் பிறந்து வளர்ந்த தங்கம்மாவின் பிள்ளே நான். இவள் என் மனேவி. பட்டணத்தில் இருக்கிருேம்...''


''ஏண்டா, நீ தங்கம்மா பிள்ளேயா? அவள் உன்னேப் பெத்துப் போட்டதும் அம்மாவை முழுங்கிட்டு சித்தியோடு ஓடினியே, அந்தப் பிள்ளேயா நீ? இப்போ எப்படியடா இருக்கே...சௌகரியமா இருக்கியா?''

''இருக்கேன் பாட்டி!''

''சாகிற வரைக்கும் பிறத்தியாருக்கு உபகாரமா இருந்தா. ஆனு அவளுக்குப் பிரதியுபகாரமா ஒரு ஜீவன் இல்லே... எல்லாம் நன்றி கெட்ட சவங்கள்..வீட்டைப் பார்க்கத்தானே வந்தே..நன்ருகப் போய்ப் பாரு..உன் பெண்டாட்டி அழகா இருக்கா..தங்கம்மா இருந்தா பூரிச்சுப் போவா..''

ரேழியைத் தாண்டி கோபி நடந்தான். கூடம், முற்றம், தாழ்வாரம், பின்கட்டு எல்லாம் பார்த்தான். சுவரெல்லாம் காரை உதிர்ந்து கிடந்தது. தூண்களும் விட்டங்களும் உளுத்துப் போய்க் கிடந்தன.

தொழுவத்தைத் தாண்டி இறங்கிப் புறக்கடைக்கு வந்தான். பின்னுல் வசு வந்து கொண்டிருந்தாள்.



இரவு நேரங்களில் மதுரை விதிகளில் கை வண்டிகளில் வைத்துக் கொண்டு 'பருத்திப் பால்' 'பருத்திப் பால்' என்று விற்று வருகிருர்கள். பருத்தி விதைகளிலிருந்து எடுக்கப் படும் பாலுடன் சர்க்கரை ஏலக்காய் முதலியவைகளேச் சேர்த்து மிகவும் ருசியான பானமாகத் தருகிருர்கள்.

மற்ருெரு விசேஷம் என்னவென்ருல் இங்கு உள்ள தியேட்டர் களில் படம் பார்த்துக் கொண்டிருக்கும்போது திடீர் என்று படம் பார்த்துக் கொண்டிருப்பவர்களில் சிலர் 'பருத்திப் பால்! பருத்திப் பால்!' என்று கத்துகிருர்கள்! படம் 'போர்' அடித்தால் இப்படிக் கத்துவது இங்கு வழக்கமாம்.

—அ. ஜனகர் ராஜன்

தாயைப் பற்றிய நினைவுகள் கோபியை நெகிழ வைத்திருந்தன.

''வசு, பணம் சேர்த்து, இந்த வீட்டை நானே வாங்கலாம்னு இருக்கேன்,'' என்றான் உணர்ச்சி வசப்பட்டவனாக.

''ஏன்?''

''இது என் அம்மா பிறந்த வீடு. . . இதனுள் கால் வைத்தபோதே என் அம்மா என்கூட நடந்து வந்த மாதிரித் தோன்றிற்று.''

வசு கேலியாகச் சிரித்தாள். அவன் முகம் சுண்டிப் போயிற்று.

''சிரிப்பாக இருக்கா . .''

முகத்தில் அலட்சியம் தெரிய, அவள் சொன்னாள்:

''இல்லே, இது யார் வீடு, என்ன சரித்திரம்னு யோசிக்கப் பார்த்தேன். நேரு பிறந்த வீடா, இல்லே பாரதி பிறந்த வீடா . . .ஆஃப்டர் ஆல் ஒரு ஆர்டினரி பெர்ஸன் பிறந்த வீடு. .''

சட்டென்று அவனுக்குக் கோபம் வந்துவிட்டது.

''இது என் அம்மாவின் வீடு. நான்தான் வாங்கப் போறேன். . என் அம்மாவுக்குச் சரித்திரம் இல்லாமலிருக்கலாம். . ஆனால், அவளால் உன் அப்பாவுக்கு ஒரு சரித்திரம் கிடைச்சுது . . . நீ தங்கத் தட்டில் சாப்பிடும் படியான செல்வம், என் அம்மாவாலே கிடைச்சுது.''

அவள் உதடுகள் துடித்தன.

''நான்சென்ஸ். . உங்க அம்மா என்ன என் அப்பா கையிலே அட்சய பாத்திரத்தையா கொடுத்தாள்? இல்லே, அலாவுதீன் விளக்கைக் கொடுத்தாளா? எதை மனசிலே வைச்சுட்டு உங்க அம்மா என் அப்பாவுக்குப் பணம் கொடுத்தாளோ? சோழியன் குடுமி சும்மா ஆடாதும்பாங்க. . .''

கோபியின் தலை சுற்றியது. நெற்றி நரம்புகள் புடைத்து எழுந்தன. அவனுடைய தாயாரைப் பற்றிக் கேவலமாக ஒரு குரல் பேசுகிறது. அது யார் குரல், ஏன் அப்படிப் பேசுகிறது, என்றெல்லாம் நினைத்துப் பார்க்கவில்லை. பார்க்கவும் சக்தி அற்றுப் போய்விட்டான்.

கண்ணை மறைத்த கோபத்தில், அவன் கல்லூரி ஹாஸ்டல் வார்டனுடைய அறிவுரையையும், உபதேசத்தையும் மறந்து விட்டான். கோபம் பீறிட்டுக் கொண்டு வரும் போதுதான் நிதானத்தைக் கையாள வேண்டும் என்ற அடிப்படைத் தத்துவத்தை அவன் மறந்துவிட்டான்.

''என்ன சொன்னே?''

ரெடி; கெட்செட்; கோ!

பாலசந்தர் தயாரிக்கும் 'மன்மத லீலை' படத்தில் புதுமுகம் ஓய். விஜயா அறிமுகப் படுத்தப்படுகிறார்.

—சுராஜ்



அவனுடைய விரல்கள் சம்மட்டிபோல அவளுடைய இடது கன்னத்தைத் தாக்கியபோது, அதிர்ச்சியில் சாய்ந்து விழாமல் இருக்கச் சமாளித்துக் கொண்டவள், நின்று அவனை விறைத்துப் பார்த்தாள்.

தன் தவற்றை, விரல்கள் வசுவின் கன்னத்தில் பதிந்த உடனேயே உணர்ந்த கோபிக்கு என்ன பேசுவது என்று புரியவில்லை.

''வசு. .வசு.. .''

அவனுடைய குரல் அவளுடைய காதில் விழவில்லை. அவள் சாரைப் பாம்பு போல விரைந்து போய்க் கொண்டிருந்தாள்.

"சார், நீங்க எங்க அப்பாவின் கம்பெனி லாயர், பெர்ஸனல் லாயர், குடும்பத்துக்கு வேண்டியவர்னு உங்ககிட்டே வந்தேன்.. . நீங்க இத்தனை நேரமா என்னைக் குடைஞ்சு எடுத்தீர்களே தவிர, உருப்படியா என் பிரசினைக்கு வழி திரும்படியா ஒரு அட்வைசும் பண்ணவில்லை,'' என்று குறைப்பட்டுக்கொண்டாள் வசு.

வேதராமன் சிரித்தார்.

''உன் பிரசினை என்னன்னு உனக்கே தெரியவில்லை, வசு.. .''

''நான் இவ்வளவு தூரம் சொல்லியும் உங்களாலே புரிஞ்சுக்க முடியலேன்னு, நீங்க என்ன அட்வகேட்.. .?''

வேதராமன் சீற்றம் அடையவில்லை. அவருடைய குணமே, கட்சிக்காரர்களிடம் சினம் கொள்ளாதது தான். அதுவும் வசு வெறும் கட்சிக்காரி அல்ல. குடும்ப சிநேகிதர் சிவராமனுடைய பெண்.

சிரித்துக் கொண்டே, ''நான் ஒரு சாதாரண அட்வகேட்தாம்மா. ஆனா எனக்கும் புரியும்படியாக உன் எண்ணத்தை விளக்கிச் சொல்லவில்லையே,'' என்றார்.

''நான் எவ்வளவோ முயற்சி பண்ணிப் பார்த்துவிட்டேன் சார். . உடைஞ்சு போன பீங்கானை ஒட்ட வைக்க முடியாதுன்னு புரிந்துவிட்டது.''

''உடைந்தது பீங்கான் தானா. .?''



பெங்களூர் 'டெக்கான் ஹெரால்டி'ல் இப்படியொரு செய்தி (16-4-75) வெளிவந்திருந்தது:

காலை நேரம். பெங்களூர் பேலஸ் ரோடு (குட்டஹள்ளி) பகுதியில் பேப்பர் போடும் பையன் ஒவ்வொரு வீடாக பேப்பர் போட்டுக் கொண்டே போய்க் கொண்டிருந்தான். 'நெப்போலியன்' என்ற வீட்டு நாய் அவனைத் துரத்தியது. அவன் அதனிடமிருந்து தப்பிக்க எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தான். முடியாமல் போகவே ஒரு கல்லால் அதை அடிக்கப் போக அது அந்த இடத்திலேயே மரணம் அடைந்தது. செய்தியைக் கேள்விப்பட்டுச் சட்டம் அப் பையனைத் தண்டித்து ரூ. 50 அபராதம் விதித்தது.

மேற்கண்ட செய்தியைத் தொடர்ந்து, அதே பத்திரிகையில், 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதியில் சில கடிதங்கள் வந்தன. அதில் ஒன்று:

தங்களுடைய 16'ம் தேதி பேப்பரில் கண்ட செய்தி என் மனத்தை உலுக்கிவிட்டது. பாவம், ஓர் ஏழைப் பையன் அதுவும் பேப்பர் போட்டுப் பிழைக்கும் ஒருவனுக்கு ரூ. 50 அபராதம் விதித்தது எவ்வளவு மோசமான காரியம்! அந்த நாய் அவன் ரோடில் போய்க் கொண்டிருந்த பொழுது அவனைத் துரத்தியது. அவனுடைய தற்காப்புக்காக அவன் கல்லை எறிய நேர்ந்தது. ஒரு வேளை அவனைக் கடித்திருந்தால்? அப்பையன் அந்த நாயின் எஜமானர் வீட்டிற்குள்ளேயே இவ்வேலையைச் செய்திருந்தால் அபராதம் விதிப்பது பொருத்தமாகும். நம்முடைய சட்ட திட்டங்கள் இவ்வளவு மோசமாகவா போய்விட்டன!

—எ. எஸ். முத்து

"ஆமாம்."

"ஏன் உடைஞ்சுது? யார் உடைச்சா. . .யார் காரணம்?"

"தப்பு ரெண்டு பேர் மேலேயும் இருக்கலாம். ஆனு நான் பண்ணின தப்புக்கு நான் மன்னிப்புக் கேட்கக் கூடத் தயாராக இருக்கிறேன். . .ஆனு. . ."

"ஆனுல்?"

"செய்யாத தப்புக்கும் மன்னிப்புக் கேட்கணும்னு அவர் கட்டாயப்படுத்தினுர். . ."

"இப்போ என்ன செய்யணும் என்கிருய்?"

"சட்டபூர்வமான விடுதலை. . லீகல் ஸெபரேஷன். . .டிவோர்ஸ்."

"என்ன காரணம் காட்டுவே?"

"எவ்வளவோ."

"இதோ பாரும்மா. ரெண்டு மூணு முக்கிய காரணங்களில் ஏதாவது ஒண்ணு பலமாக இருந்தால் தான் நான் உனக்கு அட்வைஸ் பண்ண முடியும்."

"என்ன ஸார் காரணங்கள்?"

"நான் சிலவற்றைக் கொஞ்சம் அப்பட்டமாகக் கேட்பேன். . . நீ தப்பா எடுத்துக்கக் கூடாது."

"கேளுங்கள். நான் ரெடி. . கோர்ட்டுக்குப் போறதுன்னு முடிவுக்கு வந்தாச்சு. . . நான் எதுக்கும் தயார்."

"உனக்கும் அவருக்கும் உறவு எப்படி?"

"அதான் இப்ப இல்லேயே. . நேத்தோடு எல்லாம் தீர்ந்தாச்சு."

"நான் அதைக் கேட்கவில்லே."

"பின் எதைக் கேட்கிறீர்கள்?"

"உங்களுடைய ஃபிஸிகல் ரிலேஷன்ஷிப். . . ரெண்டு பேரும் சேர்ந்திருந்த நாட்களில் உங்கள் இல்லற வாழ்க்கை. . ."

"யூ மீன் அவர் ஸெக்ஸ் லைஃப்?"

"எக்ஸாட்லி. அது சரியா இல்லாமற்போனு, அதுவே மற்றப் பிரசினையைப் பெரிதாக்கிவிட வாய்ப்பு இருக்கிறது."

"எனக்குப் புரிகிறது சார். . அந்த லைஃபில் ஒரு கோளாறும் இல்லே."

"குட். . .வெரி குட். . . உன்னைத் தவிர, வேறு பெண்ணோடு கோபிக்கு ஏதானும் தொடர்பு உண்டா?"

இதுவரை மடமடவென்று பதில் சொல்லிவந்த வசு சற்று நிதானித்தாள்.

(தொடரும்)

திருச்சியைவிட மதுரை...

திரு. கி. வா. ஜகன்னுதன் சில நாட்களுக்கு எங்களூரான தூத்துக்குடியில் தங்கியிருந்தார். அவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

சமீபத்தில் மதுரை திருச்சி இரண்டு ஊர்களுக்குப் போய் வந்த நான், வெய்யிலைப் பற்றிப் பேசுகையில், "திருச்சியில் வெய்யில் அதிகம். மதுரையில் திருச்சியைக் காட்டிலும் 2 டிகிரி கூடுதலாக உள்ளது," என்றேன். உடனே அவர் சொன்னுர்: "அதற்குக் காரணம் தெரியுமா? மதுரையில் யூனிவர்சிடி இருக்கிறதல்லவா?"

—டி. ஆர். சீனிவாசரங்கன்

"முதல் தரமானதே எனக்கு வேண்டும்— இரண்டாம் பட்சமானதல்ல"



— என்கிருள் சுசித்ரா.



"ஹார்லிக்ஸ் ஒன்று தான் மழைக்கால நோய்களைத் தடுக்க உதவுகிறது."

நோயை எதிர்க்கும் சக்தியை வளர்த்து, ஒவ்வொரு நாளும் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது.

மழைக் காலத்தில் உடலில், நோயை எதிர்க்கும் வலு குறைந்திருக்கும்— இருமல், ஜலதோஷம், ஜுரம், வயிற்றுக் கோளாறு போன்ற நோய்கள் அடிக்கடி ஏற்படலாம். தனது குடும்பத்தை இந்த நோய்களிலிருந்து காதது, மழைக்காலம் முழுதும் ஆரோக்கியமாக வைத்திருக்க, சுசிதரா முழுக்கவனத்துடனிருக்-கிருள். எல்லாவற்றுக்கும் மேல், அவள் அவர்களை ஒவ்வொரு நாளும் கண்டிப்பாக ஹார்லிக்ஸ் அருந்துமாறு செய்கிருள்.

அவளுடைய டாக்டர் கூறியது போன்றே, ஹார்லிக்ஸில் உயிர் காக்கும் புரதங்களும், நோயை எதிர்க்கும் சக்தியை வளர்த்து, ஆரோக்கியத்தைக் காக்கும் கார்போஹைட்ரேட்சும் விடமின்களும் பரிபூர்ணமாக உள்ளன— முக்கியமாக மழைக்காலங்களில்.

சுசித்ரா போன்ற தாய்மார்கள் ஹார்லிக்ஸை நம்புகிருர்கள். டாக்டர்களும், ஏறக்குறைய 100 ஆண்டுகளாக அதைச் சிபாரிசு செய்து வந்துள்ளார்கள், இந்தியாவில் மட்டுமல்ல— உலகெங்கிலும்.





முழுமையான ஊட்டம்பெற -

ஹார்லிக்ஸ்

இதில் ஆரோக்கியமிருக்கிறது

ஹார்லிக்ஸ் ஒரு பதிவு பெற்ற ட்ரேட் மார்க்

HT-Hx-3749A-ITem.



டைவர்ஸ்

பி.வி.ஆர்

22

புருஷன் வீட்டுக்குச் செல்லும்போது அவன் கூறும் பல மந்திரங்களில் ஒரு மந்திரத்தின் அர்த்தம்:

என் வீட்டிலுள்ள மற்ற மருமகள்களிடமும் மாமனார் மாமியார் குழந்தைகளிடமும் என் சகோதர சகோதரிகளிடமும் செல்வாக்கு உள்ள எஜமானி போல் இரு—அன்பாக நடந்து அவர்கள் உன்னைக் கொண்டாடும்படி இரு. புதிய இடம் என்று பயப்படாதே.

கணியூரில் தாயார் பிறந்து வளர்ந்த வீட்டில் நடந்த சம்பவத்துக்குப் பிறகு கோபி ஒரு நிலையில் இல்லை. வசு அவனுடைய தாயாரைப் பற்றி ஏளனமாகப் பேசியது தவறுதான். ஆனால் அந்தத் தவறை அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லையே! ஒரு சீற்றத்தில், ஒரு ஆவேசத்தில் அவன் அவளுடைய கன்னத்தில் விரல்கள் பதியும் வண்ணம் அடித்து விட்டான். அடித்ததில் வசுவுக்கு ஏற்பட்ட வலியைவிட அவனுக்குத்தான் நெஞ்சில் வலி அதிகமாக உண்டாயிற்று. ஒரு பெண்ணைக் கை நீட்டி அடித்துவிட்டோமே, பண்பையும் நாகரிகத்தையும் மறந்து போய் விட்டோமே என்று வருந்தினான்.

நடந்ததை வசு நித்யாவிடம் சொல்லவில்லை என்பதைப் புரிந்து கொண்ட கோபி அது பற்றி ஒரு வகையில் திருப்தி அடைந்தாலும், அவன் செய்த காரியம் அவனை வதைத்துக் கொண்டே இருந்தது. வசுவிடம் நேரடியாகச் சென்று நடந்ததையெல்லாம் மறந்து விடச் சொல்ல வேண்டும் என்று அவனுக்குத் துடித்தது. ஆனால் அதற்கு வாய்ப்பே ஏற்படவில்லை.

மறு நாளே சென்னைக்குத் திரும்பிய அவன், வசுவைச் சந்திக்கும்போது எப்படி ஆரம்பிக்க வேண்டும், என்னென்ன பேச வேண்டும் என்றெல்லாம் மனத்துள் தீர்மானித்துக் கொண்டான்.

அவனுடைய வெளிறிப் போன முகத்தையும், எதிலும் சிரத்தை இல்லாமல் நடந்து கொள்ளும் மாற்றத்தையும் கண்ட நாகராஜன் துருவித் துருவி விசாரித்தான்.

''இரண்டு மூன்று நாளாக ஒரே அலைச்சல்...ரெயிலில் வேறு தூக்கமே இல்லை,'' என்றான் கோபி.

''டேய், என்னிடமிருந்து எதையோ மறைக்கிறாய்...நீ சொல்ல விரும்பவில்லை என்றால் நான் வற்புறுத்திக் கேட்கப் போவதில்லை. பொள்ளாச்சியில் என்ன நடந்தது...வசு எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்டான் நாகராஜன்.

ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் நண்பனிடம் சொல்லி ஆறுதல் பெற்றால் என்ன என்று தோன்றியது. அரக்கோணம் ஸ்டேஷனில் அவள் குளிர் பானம் அளிக்க முன்வந்ததிலிருந்து கணியூரில் அவளுடைய கன்னத்தில் அடித்தது வரை எல்லாவற்றையும் கூறினான்.

''நீங்கள் ரண்டு பேருமே இன்னும் ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்,'' என்ற நாகராஜன், ''இதனால் குடி முழுகவில்லை. இன்னும் சந்தர்ப்பம் இருக்கிறது,'' என்றான்.

''இல்லையடா... கண்ணாடி உடைஞ்சது உடைஞ்சதுதான்.''

''ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக் கொடுக்கிற பக்குவம் இல்லை. அதனால் எல்லாமே அஸ்தமித்துவிட்டதாக நினைக்கிறீர்கள்.''

''நாகராஜா, விட்டுக் கொடுக்கிறது என்றால் என்ன? சுய கௌரவத்தையும் மரியாதையையும் காற்றில் பறக்க விட வேண்டும் என்கிறாயா?''

''கோபி, நீ முட்டாள் மாதிரி பேசுகிறாய்... கட்டின பெண்டாட்டியிடமா உன் சொந்த கௌரவத்தையும் சுய மரியாதையையும் காட்டுவது? ஒரு பெரிய கோடீசுவரனுடைய பெண் உன்னை மனமார விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கிறாளே. அவள் தன் கௌரவத்தையா அப்போது நினைத்துப் பார்த்தாள்? ஏதோ சில சௌகரியங்களை வாழ்க்கையில் அனுபவித்துப் பழக்கப்பட்டுப் போய் விட்டாள். அதே சௌகரியங்களை உன்னிடமும் எதிர்பார்க்கிறாள். 'நான் எப்போதும் அழுக்குச் சட்டையே போட்டுக் கொண்டு வளர்ந்தவன். உனக்காக நல்ல சட்டை போட மாட்டேன்' என்று நீ பிடிவாதம் பிடிக்கிறாய்...''

''இல்லை. நான் அவளுக்காக வேறு வீடு பார்க்க ரெடி என்று சொல்லியாகி விட்டதே...''

''வெறும் வார்த்தையில் தானே? காரியத்தில் காட்டு..சீதாவிடம் மன்னிப்பு கேட்டுத்தான் ஆகணும்னு பிடிவாதம் பிடிக்காதே .... வசு தான் தப்பு செய்திருக்கிறாள் என்று உனக்கு எப்படித் தெரியும்? சீதாவும் செய்திருக்கலாம் இல்லையா?''

கோபி மனம் குழம்பிப் போனான்.

''வசு இப்படியெல்லாம் இருப்பாள் என்று நான் நினைக்கவே யில்லை நாகராஜா!'' என்றான்.

''நீ நினைக்கிறது போலவே அவளும் உன்னைப் பற்றி நினைக்கலாம் இல்லியா?''

''இருக்கலாம்.''

பாங்க்:

'உங்களுக்குப் பணம் தேவையில்லை என்று தகுந்த முகாந்திரங்களோடு நிரூபித்தால் கடன் கொடுக்கும் இடம்'

—டேட்லைன் டெல்லி



பிடித்த டிசைனில் துணி எடுக்கிறோம். ஆனால் வெட்டுகிற போது அந்த டிசைனில் பெரும் பகுதி போய் விடுகிறது. அட்டையிலுள்ள மீனு குப்தாவின் உடையில் அந்த அபாயம் கிடையாது. துணியை முதலில் தைத்துவிட்டு, பிறகு பிடித்த டிசைனை அதில் பிரிண்ட் செய்யும் புது முறையில் தயாராகிறது இந்த உடை.

வண்ணப்படம்: சரஸ்வதி சத்தியமூர்த்தி

"இப்போ நான் சொல்லுவதை முதலில் கேள். குளித்து விட்டு எங்கள் வீட்டில் சாப்பிடு. ஆபீஸுக்குப் போ. அங்கேயிருந்து வசுவுக்கு போன் பண்ணு. சாயங்காலம் மீட் பண்றதாகச் சொல். அதுக்கு முன்னாடியே, கணியூரில் நடந்ததை மறந்து விடச் சொல்லு."

கோபி இடைமறித்தான்.

"நீ நினைக்கிற மாதிரி அவள் மறப்பாள் என்று எனக்குத் தோன்றவில்லை."

"நான் சொல்றபடி செய்து பார். கல்யாணம்னா ஆயிரம் இருக்கும். யார் கண்டார்கள், உன் வசுவே மனம் வருந்திக் கொண்டிருக்கலாம் இல்லியா?"

"எதற்காக?"

"உன் அம்மாவைப் பற்றி ஏளனமாகப் பேசியதற்காக."

"அது இந்த ஜன்மத்தில் நடக்காது."

"ஏன் சவால் விடுகிறாய்... சாயங்காலம் சந்தித்துப் பேசு... தயவு செய்து சீதாவைப் பற்றிப் பேசிக் குட்டையைக் குழப்பாதே!"

"ராஜி, இன்னிக்கு ஒரு பார்ட்டி இருக்கிறது. நான் திரும்பி வர நேரமாகும்," என்று சொல்லிக் கொண்டே வந்த சிவராமன், ராஜலட்சுமி உட்கார்ந்திருந்த சோபாவுக்கு முன்னால் டீப்பாயின் மேலிருந்த பெட்டியைப் பார்த்ததும், "யார் வந்திருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

"என் அண்ணா ராஜாமணி ஏதோ காரியமாக வந்திருக்கிறார். சாப்பிட்டுவிட்டுப் போயிருக்கிறார். சாயங்காலமே திரும்பிவிடுகிறார்," என்றாள் ராஜலட்சுமி.

"நான் அவசரமாகப் போய்க் கொண்டிருக்கிறேன், பார்க்க முடியவில்லேன்னு சொல்லிவிடு," என்றார் சிவராமன்.

அவர் செல்லுவதையே பார்த்துக் கொண்டிருந்த ராஜலட்சுமியின் கண்முன் அமிர்தம் தோன்றினாள். இந்த அமிர்தம் எப்போது இவருடைய வாழ்க்கையில் பிரவேசித்தாள்? நாம் வந்த பிறகா, அல்லது அதற்கு முன்பேயா? முன்பாக இருந்தால் எப்படி நம்மை இந்த வீட்டுக்குள் அனுமதித்தாள்? சிவராமன் நம்மை ஏமாற்றிக் கொண்டிருப்பது போல அமிர்தத்தையும் ஏமாற்றி வருகிறாரா? அல்லது எல்லாம் தெரிந்த பிறகும் அமிர்தம் அவரை ஏற்றுக் கொண்டிருக்கிறாளா?

அவள் தன் சிந்தனையில் மூழ்கிக் கொண்டிருக்கையில் ராஜாமணி வந்தார்.

"வா, அண்ணா. காப்பி கொண்டு வரட்டுமா?"

"மூச்சு விடப்படாது. இப்பத்தான் தோசை, போண்டா, காப்பி எல்லாம் சாப்பிட்டேன்," என்றார் ராஜாமணி. பிறகு, "சிவராமன் எங்கே?" என்று கேட்டார்.

ராஜலட்சுமி விஷயத்தைக் கூறினாள். பிறகு, "அண்ணா, உன்னிடம் ரெண்டொரு சந்தேகம் கேட்கணும்," என்றாள்.

"கேளேன்." அவர் முகத்தில் சஞ்சலம் தோன்றிற்று.

"என் கல்யாணத்துக்கு முன்னாலே கொஞ்ச காலம் நீ வியாபார விஷயமா பழனி, பொள்ளாச்சின்னு போயிட்டிருந்தே இல்லியா?"

அவர் சிரித்து மழுப்பினார்.

"ஆமாம். இன்னும் பல்லடம், தாராபுரம், சத்தியமங்கலம்னு போவேன். ஏன், அதுக்கு இப்ப என்ன?"

"சும்மா கேட்டேன். நீ பொள்ளாச்சியிலேதானே இவரைச் சந்திச்சே?"

"ஆமாம்."

"அப்போ அவர் என்ன செய்து கொண்டிருந்தார்?"

"ஏதோ ஒரு வேலையில் இருந்தார்."

"அது தெரியும்."

"பின்னே எது தெரிய வேண்டும்னு நீ கேள்வி கேட்கறே. அன்னிக்கு வந்தபோதும் இது மாதிரித்தான் ஏதேதோ கேட்டே....எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது."

"இரு அண்ணா. அன்னிக்கு நான் கேட்டது அவர் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கினாரா, அப்படியானால் அதை உன் வியாபாரத்தில் முடக்கினாரா என்று. நீதான் இல்லைன்னு சொல்லிவிட்டாயே?"

"சரி, இப்போ எதுக்கு அஸ்தி வாரமா என்னென்னவோ கேட்க ஆரம்பிக்கிறே, ராஜி?"

"அமிர்தத்தைத் தெரியுமா?"

"எந்த அமிர்தம்?"

"பொள்ளாச்சிக்குப் பக்கத்திலே அங்கலக்குறிச்சி இருக்கே..."

திடீரென்று ராஜாமணி துள்ளினார். "ஓ, அமிர்தமா? அங்கலக்குறிச்சி அமிர்தம். அது சரி, அவளுக்கும் சிவராமனுக்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தம் இருக்கிறதே."

ராஜாமணி அளந்தார்.

"என்ன பேத்தறே, ராஜி! உன் கல்யாணத்துக்கு முன்னாடியே அமிர்தத்தின் கல்யாணம் நடந்துவிட்டது. நானும் சிவராமனும் அமிர்தத்தின் அப்பா ரொம்பக் கட்டாயப்படுத்தியதன் பேரில் கல்யாணத்தன்று ராத்திரிகூடச் சாப்பிட்டோம்."

"அப்படியா?"

"அமிர்தம் இப்போ நாக்பூரில் இருப்பதாகக் கேள்வி. நான்கு வருடங்களுக்கு முன் அவளுடைய அப்பாவும் அம்மாவும் ஜி. டி. எக்ஸ்பிரஸில் வந்து கொண்டிருந்தார்கள். நான் விஜயவாடா ஸ்டேஷனில் சந்தித்தேன். ரெயில் கிளம்பற மட்டும் பேசிக்கொண்டிருந்தோம். இவ்வளவுக்கும் அப்போ காலை மூன்று மணி."

"என்ன சொன்னார்கள்?"

"அமிர்தத்துக்கு மூன்று பெண்களும், இரண்டு பிள்ளைகளுமாம். எல்லாரும் நாக்பூரில் படித்துக் கொண்டிருக்கிறார்களாம்...அவளுடைய புருஷனுக்கு, பாவம், அதிக சம்பளம் இல்லையாம்..."

"இவ்வளவு பொய் பேச எப்போ அண்ணா கற்றுக்கொண்டாய்?"

அவர் முகத்தில் அசடு வழிந்தது.

"நீ எதையோ மனசில் வைத்துக் கொண்டு அனாவசியமாக் குழப்பிக்கொள்கிறே ராஜி..."

"அதுக்குத் தீர்வு காணத்தான் உன்கிட்டே கேட்டேன். நீ ரொம்ப சாமர்த்தியமாக நடிக்கப் பார்க்கிறே...நான் மன நிம்மதியுடன் இருக்கணும் என்கிற ஆசையில் நீயும் ஏமாற்றப் பார்க்கிறே, அண்ணா!"

"நீ ஏதோ நிழலைப் பார்த்துப் பயப்படறே, ராஜி!"

'இல்லை, நான் உருவத்தையே பார்த்துவிட்டேன்,' என்று சொல்ல வாயெடுத்தாள் ராஜலட்சுமி.



"இந்தப் பையனைச் சிவன் கோயில் கருணை இல்லத்தில் சேர்க்க வேண்டாம், பெருமாள் கோயில் கருணை இல்லத்தில்தான் சேர்க்கணும் என்கிறீர்களே ஏன்?"

"புளியோதரைன்னா உயிர் இவனுக்கு."

அதற்குள் போன் அடித்தது.

''அதைக் கவனி!'' என்ற ராஜாமணி மெல்ல நழுவினார்.

அதே சமயம் வசுவும் ஹாலுக்குள் பிரவேசித்தாள்.

போனை எடுத்த ராஜலட்சுமி ''வசு, உனக்குத்தான்,'' என்றாள்.

வசு போனை எடுத்தாள்.

''நான்தான் கோபி,'' என்று குரல் கேட்டது.

மறுகணம் வசு போனை டக்கென்று வைத்தாள். பிறகு, அம்மா இருக்கும் திசையையும் பாராமல் மாடிப்படியை நோக்கி நடந்தாள்.

''வசு ஏன் போன்லே பேசாம டக்குனு வைச்சே?''

''ராங் நம்பர்.''

''என்னடி உளர்றே?''

''உளறலே...ராங் நம்பர் லேருந்து ராங் பெர்ஸனுக்கு போன்..''

எகத்தாளமாகப் பேசிவிட்டு வசு சென்ற பின்புதான், இத்தனை நேரமாகத் தன் தலைவலியை மறந்து போயிருக்கிறோம் என்று நினைத்தாள் ராஜலட்சுமி. அக்கணமே கோபி ஊட்டியிலிருந்து வாங்கிவந்த நீலகிரித் தைலம் நினைவுக்கு வந்தது.

அது சிவராமனுடைய அறையில் இருந்தது. அங்கு சென்றாள்.

மர அலமாரியில் அது இல்லாமற் போகவே, பீரோவைத் திறந்தாள்.

எடுத்த எடுப்பிலேயே கண்ணில் பட்டது ஒரு நகைப் பெட்டி. திறந்து பார்த்த ராஜலட்சுமி அயர்ந்து போனாள்.

பிரமிக்கத்தக்க ஜொலிப்புடன் ஒரு வைர நெக்லஸ் கண்ணைக் கூச வைத்தது. அதன் மயில் பதக்கத்தைப் பார்த்துக் கொண்டே நின்றவளின் மனத்தில் அடுத்த வாரம் வரப் போகும் தன்னுடைய பிறந்த நாள் நினைவுக்கு வந்தது. ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் பரிசு கொடுக்கும் சிவராமன் இந்த ஆண்டு இதையா வாங்கியிருக்கிறார்! மகிழ்ச்சியிலும் திருப்தியிலும் அவள் தன் தலைவலியை மறந்து போனாள்.

(தொடரும்)

தேவருக்கு மணி விழா



கண்ணதாசன்

காதவழி தூரமெல்லாம்
கால்கடுக்க நடந்தாலும்
தேவரைப்போ லொருவரை நாம்
தேடுவதும் அரிதாமே!

வேலிருக்கும் முருகனிடம்
வேண்டுதலைக் கொடுத்தாலும்
பாலிருக்கும் பொன்மனதைப்
பார்ப்பதுவும் அரிதாமே!

பாலிருக்கும் பொன்மனத்தைப்
பார்க்கத்தான் வேண்டுமெனில்
தேவரைத்தான் நாம்பார்ப்போம்
தெய்வமே திருமுருகா!

ஆளில்லாக் கோவில்ஒரு
ஆயிரத்தில் ஒன்றுதிரு
நாளில்லா மருதமலை
நடத்தியவன் தேவர்பிரான்!

எங்கெங்கே முருகனுக்கோர்
இடமுண்டோ அங்கங்கே
பங்காகத் தேவருக்கோர்
பாகமுண்டு கண்டோமே!

இறைவனுக்குப் பங்காளி
எத்தனைபேர் இருந்தாலும்
முருகனுக்குப் பங்காளி
முதலுறவு தேவர்பிரான்

வள்ளிதனை மறந்துவிட்டு
வடிவேலன் சென்றாலும்
தெள்ளுதமிழ் மறவர்மகன்
தேவரைத்தான் மறப்பானா!

தெய்வானை தனைவெறுத்துத்
திருமுருகன் சென்றாலும்
கைநிறையப் பொருள்கொடுக்கும்
கண்ணியனை வெறுப்பானா?

மன்னவர்கள் கட்டிவைத்த
மகத்தான கோவில்களைத்
தென்னவர்கள் கண்முன்னே
திருத்தியவர் தேவரன்றோ!

தேனூறும் கேணியெனத்
தினம்ஊறும் பெரும்பொருளை
வானூரும் முருகனுக்கே
வழங்கியவர் தேவர்பிரான்

நல்லோனை, தூயோனை
நாணயத்தில் மிக்கோனைப்
பல்லாண்டு வாழவைப்பாய்
பரம்பொருளே திருமுருகா!







மிருதுவான, குளுமையான மெத்தையில் உங்கள் செல்வமகள் துயில் கொள்ளட்டும். மெத்தையை அவள் நனைத்தாலும் கவலையில்லை. துர்நாற்றம் வீசாதபடி அதனைச் சுத்தப்படுத்திக் கொள்ளலாம். இதமாக அணைத்து இன்பத் துயில் கொள்ளச் செய்யும் மெத்தையே இளஞ்சிட்டுப் போன்ற உங்கள் மகளுக்குத் தேவை.

நாளெல்லாம் உழைத்து உருக் குலைந்து போகும் உங்கள் மனைவிக்கு, களைப்பைப் போக்கும் மென்மையான சுகத்தை யூ-ஃபோம் ஸியஸ்டா மெத்தை அளிக்கட்டும்.

வயது முதிர்ச்சியால் தளர்ச்சியடைந்திருக்கும் உங்கள் அன்னையை அரவணைத்து இதமளிக்கட்டும் யூ-ஃபோம் ஸியஸ்டா மெத்தை.

இந்த சுகம் என்றும் நிலைத்திருக்கும் இணையற்ற சுகம். வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் சுகம். அதுவே யூ-ஃபோம்—பரிசோதிக்கப்பட்டு, உத்தரவாதம் அளிக்கப்பட்ட உயரிய நுரை. 14 ஆண்டுகளாக இந்நாட்டில் பரவலாகப் பயன்படுத்தப்படும் நுரை.

உறுதிப்படுத்திக் கொண்டு வாங்குங்கள்


யூ-ஃபோம்

முதல் பாலியூரிதேன் நுரை

FDSH UF 755 TAM

டீலர்கள் மற்றும் ஷோ ரூம்கள்:

சென்னை: ஸதர்ன் வேர்ஹவுஸ் கம்பெனி, 38/3, மவுண்ட் ரோடு: 163, லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை. ■ கொச்சின்—எர்ணாகுளம்: XXI/348-A, M. G. ரோடு. ■ கள்ளிக்கோட்டை: 1020-D, மாதவன் நாயர் ரோடு.



23

பெண் கேட்கப் பிள்ளை நான்கு நண்பர்களை அனுப்பி வைக்க வேண்டும். அப்போது சொல்லுகிற மந்திரத்தின் அர்த்தம்:

'எனக்காகக் கன்னிகையின் வீட்டுக்குச் செல்லுகின்ற உங்களுடைய வழி கல்லும் முள்ளும் இல்லாமலிருக்கட்டும். அர்யமா, பகன் எனும் தேவர்கள் எங்களைச் சேர்த்து வைக்கட்டும். எங்களுடைய தாம்பத்தியம் சிறக்கட்டும்.'

—சம்ஸ்காரத்திலிருந்து

ராஜலட்சுமி வைர நெக்லஸைக் கண்டதும் பரவசப்பட்டாள். இருக்கை கொள்ளவில்லை. வருடா வருடம் சிவராமன் அவளுடைய பிறந்த நாளுக்கு ஏதாவது பரிசு கொடுப்பது வழக்கம். ஒரு வருடம் ஒரு ஜோடி கல் வளையல் கொடுத்தார். போன வருடம் ஒரு வைர மோதிரம். ஆனால் இந்த வருடம் இவ்வளவு உயர்ந்த வைர நெக்லஸ் கிடைக்கப் போகிறது என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை.

நெக்லஸின் விலை மதிப்பு அவளை பிரமிக்க வைக்கவில்லை. அதை வழங்கப் போகும் கணவரைப் பற்றி நினைத்து நினைத்துத்தான் ஆச்சரியப் பட்டாள். அவள் அறியாமல் இன்னொருத்தியின் வீட்டில் தகாத சகவாசத்தில் ஈடுபட்டிருக்கும் சிவராமன் அவளுடைய பிறந்த நாளை மறக்காமல் ஒரு பெரிய பரிசை வாங்கி, கடைசி நிமிடத்தில் அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்த இருக்கிறார்!

அமிர்தம்மா என்னதான் சிவராமனை இழுக்க முயற்சித்தாலும், அவர் என்றென்றும் தன் பக்கம் தான் இருப்பார் என்ற நம்பிக்கை ராஜலட்சுமியின் மனத்துள் வளர்ந்து கொண்டே வந்தது. ஓர் அப்பாவி உள்ளத்தை முறையும் தரமும் கெட்ட ஒருத்தி எத்தனை நாட்களுக்குத் தான் சிறைப்படுத்தி வைக்க முடியும்? குழந்தை தடுக்கி விழுந்தால் குழந்தையை யாராவது கண்டிப்பார்களா? அவளுடைய சிவராமன் ஒரு குழந்தை. பச்சைக் குழந்தை. அது இப்போது எடுப்பார் கைப்பிள்ளையாகி விட்டது. இதற்குக் காரணம் அந்தப் பாழாய்ப் போன அமிர்தம்மாதான். இனி ராஜலட்சுமி செய்ய வேண்டியதெல்லாம், கணவருக்கு அமிர்தம்மாவிடமிருந்து ஒரேயடியாக விடுதலை வாங்கிக் கொடுக்க வேண்டியதுதான். அது எப்படி என்றுதான் இனிமேல் யோசிக்க வேண்டும்.

ராஜலட்சுமி நெக்லஸைத் திரும்ப வைத்து பீரோவைப் பூட்டி விட்டு வந்தாள்.

"அம்மா!"

மாடியிலிருந்து தடதடவென்று இறங்கி வந்தாள் வசு.

"என்ன?"

"நாளைக்கு உனக்குப் பிறந்த நாள்!"

"எப்படிக் கண்டு பிடிச்சே?"

"அப்பாதான் காலண்டர்லே கொட்டை கொட்டையா எழுதி வைச்சிருக்காரே? அது போறாதுன்னு தேதியைச் சுத்தி ரெட் இங்க்காலே ஒரு சுவர் எழுப்பியிருக்கார்."

"இப்போ எங்கானும் போகப் போறியா?"

"உனக்கு ஏதாவது பிரஸெண்ட் வாங்கிவரட்டுமா? என்ன வேணும் சொல்லு?"

ப.வி.ஆர்.

''சொன்னு உன்னுலே வாங்கித் தர முடியுமா, வசு?''

''ஏன்? இப்படிக் கேட்டுட்டியே? இந்த வசுவாலே முடியாததுன்னு ஒண்ணு இருக்கா?''

''இதோ பாரு வசு, உன் வாய்ப் பந்தலை என் கிட் டே போடாதே. . .''

''என் கிட்டே ச வா ல் விடாதே, ஆமாம். உன் பிறந்த நாளுக்கு நான் என்ன பரிசு வாங்கித் தந்தால், நீ சந்தோஷப் படுவே?''

''நான் வெறும் சந்தோஷம் மட்டும் பட்டாப் போதாது. என் மனசு நெறைஞ்சு பூரிக்கணும்.''

''ஓ.கே! சொல்லு, அம்மா!''

''கோபியை நாளைக்குச் சாப்பிடக் கூப்பிடணும். அவன் கூட நீ வாழணும்!''

வசு அவளுடைய இந்தக் கோரிக்கையை எதிர்பார்க்கவில்லை.

''டு லேட் அம்மா. உன் பிறந்த நாள் கொஞ்சம் முன்னடியே வந்திருந்தா ஒருவேளை என் மனசு இளகியிருக்குமோ என்னவோ! டு லேட். .''

விருட்டென்று செல்லும் வசுவைப் பார்த்துப் பெருமூச் செறிந்தாள் ராஜ லட்சுமி.

இரவு ஏழு மணிக்குச் சிவராமன் வந்தார்.

''ராஜி . . . ஒரு கிண்ணதில் தயிர் சாதம் மட்டும் பிசைந்து வை. தொட்டுக்கக் குழம்பையும் அதிலேயே போட்டு வை. . நான் அஞ்சு நிமிஷத்திலே வரேன்!''

சொன்னவர் மாடிக்கு விரைந்தார். ராஜலட்சுமிக்கு ஒன்றும் புரியவில்லை. கம்பெனியில் ஏதானும் அவசர மீட்டிங்கா? அல்லது பாக்டரியில் ஏதாவது பிரசினை முளைத்து விட்டதா?

சிவராமன் சொன்னபடி ஐந்தாவது நிமிடம் ஒரு தோல் பெட்டியுடன் இறங்கி வந்தார். வலது கையில் ஓர் அட்டைப் பெட்டி இருந்தது.

டீப்பாயின் மேல் இருந்த கிண்ணத்தைப் பார்த்துக் கொண்டே சிவராமன் அட்டைப் பெட்டியை



உடனே வரவும்

பூர்ணிமாவுக்குப் பத்து பதினைந்து நாளாகவே வலி இருந்தாலும் பிரசவம் ஆகவில்லையென்றும் உடனே அவன் புறப்பட்டு வருவது நல்லது என்றும் பாட்டி எழுதியிருந்தாள். சுதர்ஸன் மிகுந்த கவலையுடனும் பதட்டத்துடனும் சென்னைக்குப் புறப்பட்டான்.

பூர்ணிமா தன் அறையில் படுத்துக்கொண்டிருந்தாள். சுதர்ஸன் கூறினான். "பூர்ணி, பாட்டி என்ன சொன்னாள் தெரியுமா? மனசிலே ஏதாவது ஆசையிருந்தால்கூடக் குழந்தை பிறக்கிறது டிலே ஆகுமாம்."

"உக்கும். எனக் கொண்ணும் எந்த ஆசையுமில்லே."

"சரி. உனக்கென்று பம்பாயிலிருந்து அல்வா வாங்கி வந்திருக்கிறேன். கொஞ்சம் சாப்பிடறியா?"

கணவனைக் கண் கொட்டாமல் ஒரு நிமிடம் பார்த்த அவள் இதழ்களில் புன்னகை அரும்பியது. "இப்படிக் காதைக் கொண்டு வாங்க."

அவள் அருகே குனிந்தான். காதில் அவளுடைய உதடுகளின் ஸ்பரிசம் அவனுக்குக் கிளுகிளுப்பூட்டியது. அவள் கூறியது தெளிவாகக் கேட்காததால் இன்னும் நெருக்கமாகி, "என்ன?" என்றான்.

அவள் கன்னங்களில் திடுமென்று நாணச் சிவப்பு ஏறியது.

சுதர்ஸன் மூளையில் பளிச் சென்று ஒரு பொறி தட்டியது. ஒரு கால்..விளக்கு அணைந்தது.

"அச்சோ! என்னது இது.. விடுங்க.."

ஆஸ்பத்திரியில் குழந்தையை எடுத்துவந்து அவன் பாட்டி எல்லாருக்கும் பெருமையுடன் காட்டிக் கொண்டிருந்தாள். பக்கத்து வார்டிலிருந்த பெண்மணி ஒருத்தி, "பாட்டிம்மா.. பாவம், எத்தினி வாட்டி கூட்டி வந்து கூட்டிவந்து போனிங்க. இப்பவாவது பிறந்ததே! என்னவோ கஷாயம் போட்டுத் தரணும்னீங்களே.... போட்டுத் தந்தீங்களாக்கும்?" என்றாள்.

பாட்டி சிரித்தவாறு சுதர்ஸனைப் பார்த்தாள்.

—உதங்கர்

நீட்டினார். "ராஜி, உனக்குப் பிறந்த நாள் பரிசு!"

ராஜலட்சுமி வாங்கிக் கொண்டாள். அட்டைப் பெட்டியில் ஒரு ஹாண்ட்பாக் இருப்பதை அவள் புரிந்து கொண்டாள். ஆனால் அதனுள் இருப்பதை — வைர நெக்லஸை — சிவராமன் இன்னும் ரகசியமாகவே வைத்திருக்கிறார்.

பெட்டியைப் பிரித்து, திறந்து பார்ப்பதற்குள் அவர், "ராஜி, நான் அவசரமாகக் கோயமுத்தூர் போகிறேன். இன்னும் இரண்டு நாளில் வந்துவிடுவேன்.. . நாளைக்கு நான் போன் செய்கிறேன்," என்றார்.

அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

மனைவியின் மௌனத்தைப் புரிந்து கொண்ட சிவராமன், "என்ன செய்கிறது ராஜி? வருத்தப்படாதே. நீ நீண்ட நாள் வாழ்ந்து என் மனசை எப்போதும் போல குளிரச் செய்யப் போறே!" என்றார்.

அவசர அவசரமாகச் சாப்பாட்டையும் முடித்துக்கொண்டார்.

அவர் காரில் ஏறிச் சென்றதும், ராஜலட்சுமி பெட்டியைப் பிரித்தாள். எதிர் பார்த்தது போலவே ஹாண்ட் பாக். முதலைத் தோலில் செய்த கவர்ச்சியான ஹாண்ட் பாக். திறந்தாள்.


உள்ளே, வேறு ஒன்றும் இல்லை. 'ராஜிக்கு—அன்புடன்—சிவராமன்' என்றிருந்தது.

கொஞ்ச நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தவள், மெள்ள மாடிக்குச் சென்றாள். சிவராமன் பீரோவைப் பூட்டாமலேயே போயிருந்தார். பீரோவின் எல்லாத் தட்டுக்களையும் துழாவித் துழாவிப் பார்த்தாள்.

நெக்லஸ் இல்லை.

சிவராமன் கோயமுத்தூரிலிருந்து திரும்பி வந்த பிறகு, பிறந்த நாளைப்பற்றி ஒன்றுமே கேட்கவில்லை. அவளும் எந்தவித மாற்றத்தையும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

ஒரு நாள் மத்தியானம் மூன்று மணி இருக்கும்.



இது நடிப்பல்ல.
அனுபவித்துப்
பருகுகிறார் என்பது
பார்வையிலேயே
தெரிகிறதில்லையா?

(சாரதா)

""ராஜி, ராஜி, வசு எங்கே?"" என்றார் சிவராமன்.

""மாடியில் இருக்கிறாள்.""

""வசு, வசு. . .""

ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு வசு, மாடியிலிருந்து கொண்டே, கிராதியைப் பிடித்தவளாய், ""என்ன அப்பா, என்ன ஆச்சு?"" என்று கேட்டாள்.

""மொதல்லே இங்கே வா! அப்புறம் என்ன ஆச்சுன்னு சொல்லுகிறேன்!"" என்றார் சிவராமன்.

வசு அவசரப்படவில்லை. தான் எதற்கும் தயார் என்று சவால் விடுகிறவளைப் போல இறங்கி வந்தாள்.

""வசு, உன்னாலே என் மானமே போகிறது!""

""ஏன், என்ன செய்தாள்?"" என்று கேட்டாள் ராஜலட்சுமி.

""நீ ஏம்மா கேட்கறே? எல்லாம் அவரே சொல்லுவார். உம்! சொல்லுங்க அப்பா!""

""நீ வக்கீல் வேதராமன் கிட்டே போயிருக்கே!""

""ஆமாம், போனேன்.""

""எதுக்கு?""

""காரணத்தையும் சொல்லியிருப்பாரே?""

""சொன்னார்.""

""பின்னே எதுக்குக் கேட்கிறீர்கள்?""

வசு பேசிய முறை ராஜலட்சுமிக்குப் பிடிக்கவில்லை.

""வசு, ஏன் அப்பாகிட்டே வாயாடறே? என்ன நடந்தது? ஏன் வக்கீல்கிட்டே போனே?"" என்றாள்.

வேதராமனிடம் வசு போன காரியத்தைச் சிவராமன் விளக்கினார். ராஜலட்சுமி வசுவின் பக்கம் திரும்பினாள்.

""ஏண்டி வசு, நீ உன் மனசிலே என்னதான் நினைச்சிட்டிருக்கே? தாலிங்கறது என்ன, திருவிழாக் கடையிலே வாங்கற சாதாரண பம்பரக் கயிறுன்னு எண்ணமா?""

''ஒருத்தன் கட்டி விட்டான் என்கிறதுக்காக, பம்பரம் மாதிரி ஆட முடியாதுங்கறதுக்காகத்தான் அதைத் தூக்கி எறியப் பார்க்கறேன், அம்மா!''

''வசு, உன் அம்மாவின் கழுத்தைப் பார். முப்பது வருஷத்துக்கு முன்னுலே அவ கழுத்திலே நான் தாலியைக் கட்டினேன். மூணே முக்கால் நாழிகூட அதை அவள் சரடு மாத்தறத்துக்காகக் கழட்டினதில்லே. புதுச் சரடு மாத்தறபோது முதல்லே ஒரு மஞ்சளேக் கட்டி வைச்சுப்பாள்.''

''அப்பா, என்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கறதோடு உங்கள் பொறுப்பு முடிந்தது. எப்படி வாழணும்னு தீர்மானிக்க வேண்டியவள் இனி நான்தான்... நான் வக்கீலேயும் பார்ப்பேன், அவசியம் நேர்ந்தா, சுப்ரீம் கோர்ட்டையும் பார்ப்பேன்!''

''பார்த்தாயா ராஜி, என்ன பேச்சுப் பேசருள்! நீயாவது அவளுக்கு நல்ல புத்தி சொல்லு.''

''வசு, நமக்காக இல்லேன்னுலும் இந்த ஊர், உலகத்துக்காக நாம வாழ்ந்துதான் ஆகணும்!''

''என்னுலே வேஷம் போட முடியாதம்மா.''

''வசு, இப்போ என்னேயும் உன் அம்மாவையும் பாரு! எல்லாரும் 'லட்சிய தம்பதி'ன்னு பேசிக்கொள்கிருர்கள், புகழ்கிருர்கள்.''

''ஆமாம்.'' ராஜலட்சுமிக்குத் தொண்டை அடைத்தது.

''என் வாழ்க்கை, என் பெர்ஸனல் மேட்டர். அதிலே குறுக்கிட உங்க ரெண்டு பேருக்குமே உரிமை இல்லே!'' என்ருள் வசு.

வசு மாடி ஏறிப் போனுள்.

சிவராமன் பெருமூச்செறிந்தார்.

''ராஜி, நீயும் நானும் எப்படி இருக்கிருேம்! இவள் எப்படி இருக்கிருள், பார்!''

ராஜலட்சுமி மௌனமாக இருந்தாள்.

அன்று மாலை ஆறு மணிக்கு ராஜலட்சுமி போர்ட்டிகோவில் நின்று கொண்டிருந்தாள். வசு ஐந்து மணிக்கே வெளியே போயாகிவிட்டது. சிவராமனும் வீட்டில் இல்லே.

ஒரு பையன் சைக்கிளில் வந்து இறங்கினுன்.

அவனேப் பார்த்ததுமே ராஜலட்சுமிக்குப் புரிந்து விட்டது. ஒரு பிரபல நகைக் கடையில் அவன் வேலே பார்ப்பது அவளுக்குத் தெரியும்.

''வணக்கம் அம்மா,'' என்ற அவன், ''இதை ஐயா கிட்டே கொடுத்திடுங்க,'' என்ருன்.

''என்னது?''

''வெளியூர் விலாசத்துக்கு நகையையும் பில்லேயும் அனுப்பச் சொல்லியிருந்தார். ஆனு அவர் நகையை மட்டும் எடுத்துட்டுப் போனுரு. பில் தங்கிட்டது.''

ராஜலட்சுமி பில்லேப் பார்த்தாள். அங்கலக்குறிச்சி விலாசம்!

அவன் கிளம்புவதற்குள், ''இந்தாப்பா, இதைத் தபால்லேயே அனுப்பிச்சுடு. ஐயா இப்போ இல்லே,'' என்ருள்.

அவன் போய் வெகு நேரமாகியும், அமிர்தம்மாவின் நெக்லஸ் ராஜலட்சுமியின் கழுத்தில் பாம்பாகச் சுற்றி நெரித்துக் கொண்டே இருந்தது.

(தொடரும்)

●●●●●●

'அவ்வையார்' என்ற வழக்கு அம்மையார்' என்பது போன்றதாகும். இராஜராஜன் தமக்கையார் 'குந்தவ்வையார்' எனப்பட்டதும், கம்பணவுடையார் மனேவி 'இராமதேவி அவ்வையார்' எனப்பட்டதும் காண்க. 'அவ்வையார்' என்பதே 'ஔவையார்' என்பதிலும் பொருட் சிறப்புடைய வழக்காகும். இச் சொல்லே 'அவ்வா' எனத் தெலுங்கில் குறைந்து வழங்குகிறது.

—டாக்டர் மா. இராசமாணிக்கனுர் (தமிழ்ப் புதையல்)


ஆகா, கிளியைப் போல அழகான பறவை உண்டா?
என்ன புத்திசாலித் தனம் ...
என்ன பேச்சு!
.. கிளின்னு எனக்கு ரொம்பப் பிடிக்கும்!
அதை அப்படியே வறுத்து மசாலா போட்டு ...
குருமா பண்ணினால் என்ன ஷோக்கா இருக்கும் தெரியுமா?

24

"ஓ நீர்த்தமே, மந்திரம் சொல்லி உன்னைக் கடலுக்கு அனுப்புகிறேன். நீர் இடைவெளி இல்லாமல் சேர்ந்து இருப்பது போல, என் சந்ததி தொடர்ச்சியுடன் இருத்தல் வேண்டும்."

—கல்யாணத்தின்போது வரன் கூறும் ஒரு மந்திரத்தின் அர்த்தம்.

இந்த நான்கு நாட்களில் மூன்றும் தடவையாகக் கோபி மேற்கு மாம்பலம் வீட்டுக்குப் போனான். முதல் நாள் வந்திருந்தபோது வீடெல்லாம் ஒரே புழுதியாக இருந்தது. கீழே குடியிருக்கிறவர் வீட்டிலிருந்து ஒரு துடைப்பத்தை வாங்கிவந்து ஹாலையும் சமையலறையையும் சுத்தம் செய்து இரண்டு மூன்று வாளித் தண்ணீரால் கழுவி விட்டான். இரண்டாம் தடவை வரும்போது கையோடு வேங்கடாசலபதி படத்தை எடுத்து வந்து ஹாலில் மாட்டினான்.

இன்று மூன்றும் தடவை வரும்போது கையில் ஒரு அகல் விளக்கும் ஒரு சிறு குப்பியில் நல்லெண்ணெயும் ஒரு பொட்டலம் பூவும் இருந்தன.

பஸ்ஸை விட்டு இறங்கும் போது தான் செய்வதெல்லாம் பைத்தியக்காரத்தனமாக ஒரு கணம் பட்டது. வசுவைக் கல்யாணம் செய்துகொண்ட அவன், அவள் இந்த வீட்டினுள் வலது கால் வைத்து, மெல்ல மெல்ல நடந்து புகுந்து சுவாமி படத்தின் முன் அவனுடன் சேர்ந்து நிற்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆசை நிராசையாகப் போனது மட்டுமில்லாமல், இனி என்றென்றும் அந்த ஆசைக்கே இடம் இருக்கக்கூடாது என்ற ரீதியில் வசு நடந்து கொண்டுவிட்டாள். நிலைமை இப்படி மாறிவிட்டபின் அவன் இந்த மாதிரிப் படமும் விளக்கும் பூவுமாய்த் திருவல்லிக்கேணியிலிருந்து மேற்கு மாம்பலம்வரையில் உடலை வருத்தி வருவது பைத்தியக்காரத்தனம்தானே?

பி.வி.ஆர்

அதே மனம் அவனுக்கு ஒரு திருப்தியையும் தந்தது. என்னதான் அவனும் வசுவும் பரஸ்பரம் இப்போது பிரிந்து நின்றாலும், சுமுகமான நிலையில் இருந்த ஒரு சில நாட்கள் சந்தோஷமாக இருந்திருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டதே, திருமணத்துக்கு ஒரு வாரம் இருக்கும் போதுதான். அப்போது வசு அவனுடைய ஏழ்மையையே உயர்வாக மதிப்பதாக அவனுக்குத் தோன்றியது. அவளுடைய சிரித்த முகமும் வெடுக் வெடுக்கென்ற பேசும் தன்மையும் அவனை வெகுவாகக் கவர்ந்தன. சிவராமனும் ராஜலட்சுமியும் அவனிடம் ஒரு விசேஷ அன்பையும் அபிமானத்தையும் காட்டினார்கள். முதல் இரவின் ஆரம்பம் எப்படி இருந்த போதிலும், முடிவு இருவருக்குமே ஒரு நிறைவைத் தந்தது. வசு அதன் பின் நாகராஜன் வீட்டில் நடந்து கொண்ட விதம், சீதாவின் கழுத்தில் தன்னுடைய விலை உயர்ந்த நெக்லஸைத் தானே அணிவித்த பெருந்தன்மை, அக்கா குழந்தையை எடுத்து மடிமீது வைத்துக் குலாவிய மனத்தாராளம் எல்லாம் அவன் நினைவுக்கு வந்து அவனைப் புல்லரிக்கச் செய்தன.

இந்த நினைவுகளைத்தான் அவன் என்றென்றும் மனத்தில் விளக்காக ஏற்றி வைத்துக் கொள்ள வேண்டும். அதன் ஒளியில்தான் அவன் தன்னுடைய ஆரம்பிக்காத ஆரம்பமே ஆகாதுபோலிருக்கும்—தாம்பத்தியத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். கையில் இருக்கும் அகல் விளக்கை அவன்

சுவாமி படத்துக்கு முன் வைத்து ஏற்றினால்கூட, அது அவன் மனத்தில் சதா எரிந்து கொண்டிருக்கும் இன்ப நினைவுகள்தான்.

அவன் மாடி ஏறினான். பூட்டைத் திறந்து ஹாலுக்குள் வந்தான். திடீரென, கோலம் போட்டால் என்ன என்று தோன்றியது. அவனுக்குப் புள்ளிக் கோலம் போடத் தெரியும். ஆனால் மாவுக்கு எங்கே போவது? கீழ் வீட்டில் எங்கோ போயிருந்தார்கள்.

கோலமில்லாமலேயே விளக்கேற்றிவிட்டு வேங்கடாசலபதியைப் பார்த்தான். அந்தத் தெய்வத்தின் உருவம் ஒருகணம் மனத்தில் பதிந்தாலும், குமுறிக் கொண்டு வந்த நினைவு அலைகளும் தாபமும் வசுவை அவன் முன் தள்ளின.

"இந்த வீட்டில் நீ அல்லவா வசு விளக்கை ஏற்ற வேண்டும்?" என்று அவனுடைய வாய் அவனையுமறியாமல் முணுமுணுத்தது.

அவன் சமையலறையினுள் எட்டிப் பார்த்தான். அது வெறிச்சோடியது. வசு மட்டும் இருந்தால் இப்போது இந்தச் சமையலறை உயிர்த் துடிப்பில் துள்ளிக் கொண்டிருக்கும்.

ஓர் அரை மணி நேரம் ஹாலினுள்ளேயே வளைய வளைய வந்துவிட்டு அவன் புறப்பட நினைத்தான்.





அப்போது திடீரென்று, 'வதரிங் ஹைட்ஸ்' என்ற நாவலில் அவன் படித்து ரசித்த காட்சி ஒன்று நினைவுக்கு வந்தது. காதலில் தோல்வியுற்ற ஒருவன், அவள் இன்னொருவனுடைய மனைவி ஆனபிறகு இறந்து போனதும், அவளைப் பெட்டியில் வைத்துக் கல்லறையில் அடக்கம் செய்கிறான். காதலன் நள்ளிரவில் கல்லறைக்குச் சென்று மண்ணை வெட்டிப் பெட்டியைத் திறந்து காதலியின் உடலைத் தழுவுகிறான்.

இந்தக் காட்சி கோபியினுடைய உள்ளத்தில் அருவருப்பை ஏற்படுத்தவில்லை. மாறாக, ஒரு பிரமிப்புத்தான் காதலனைப் பற்றி எழுந்தது.

இப்போது அவனுக்கும் அந்தக் காதலனுக்கும் என்ன வித்தியாசம்?

கோபி மீண்டும் நடந்து பஸ் ஏறித் திருவல்லிக்கேணி சென்றான். வசுவை மேற்கு மாம்பலம் வீட்டில் வைத்துப் பூட்டி வைத்துவிட்டு வந்தாற்போன்ற பிரமை அவனுள் உண்டாயிற்று.

மறுநாள் ஏற்கனவே சொல்லி வைத்துக் கொண்டபடி, கோபி வக்கீல் வேதராமனைச் சந்தித்தான்.

"வசு வந்திருந்தாள்," என்றார் அவர் சுருக்கமாக.

"அதுதான் சொன்னீர்களே."

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், கோபி?"

"நானாக இந்த விஷயத்தைப்பற்றி நினைக்காதபோது, வசு எடுத்திருக்கும் நடவடிக்கையைப் பற்றி என்ன நினைத்து என்ன புண்ணியம், சார்?"

"ஐ லைக் யூ கோபி. வசு ரொம்ப இம்மெச்யூராப் பேசுகிறாள். என்ன சொன்னாலும் புரிஞ்சுக்க மாட்டேங்கறா. வீட்டிலே ரொம்பச் செல்லம். கொஞ்சம் கர்வம்கூட ஜாஸ்தி."

கோபி கோபத்துடன் எழுந்தான். "ஸார், மிஸ்டர் வேதராமன், வசு இன்னும் என் மனைவிதான். அவளைப்பற்றி என்னிடமே நீங்கள் தூஷிக்கிறது விவேகமுமில்லை, பண்புமில்லை."

வேதராமனுக்கு மனம் பூரித்தது.

வே தராமனிட மிருந்து புறப்
்ட்ட கோபி நேரே தன் ஆபீசுக்கு
ந்தான். அவனுக்காக நித்யாவின்
ண்ன் முரளி அரைமணி நேரமாகக்
ாத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

''ரொம்ப ஸாரி... என்ன
ப்பிடறே, காப்பியா டீயா?'' என்று
ட்டான் கோபி.

''நான் உன்னை ஒரு முக்கிய
ஷயமாகப் பார்க்க வந்திருக்கிறேன்.''

''என்ன, சொல்லு.''

''நான் இன்னும் மெட்ரா
லே ஒரு மாசம் இருந்தாகணும்.
ன் தாத்தா கோடம்பாக்கத்திலே
காஞ்சம் நிலம் என் பேருக்குத் தந்
ருக்கிருர். அதை விற்று விடலாம்னு
ருக்கேன். அதுவுமில்லாம ஒரு தடவை
பாள்ளாச்சிக்குப் போய் வரணும்.
ு டாகுமெண்டுகளை ரிஜிஸ்தர் செய்
ணும். அதனுலே...''

''ஒரு மாசம் இருக்கப்
ாகிருய். நித்யா வீட்டிலேதானே?''

''அது விஷயமாத்தான்
ன்னைப் பார்க்க வந்திருக்கிறேன்.''

''என்ன பிரசினை?''

''நித்யா வீடு என்னமோ
பரிசுதான். ஆனு இப்போ அது
னக்கு ஒரு சத்திரமாப் படுகிறது.
கப்பட்ட சொந்தக்காரர்கள். நித்யா
ன் மாமா தம் குடும்பத்தோடே பம்
ாயிலிருந்து வந்திருக்கிருர். அவருக்கு
ணு பெண், இரண்டு பிள்ளை. அப்
றம் நித்யாவின் அண்ணு, அவன்
பண்டாட்டி குழந்தைகள். அப்புறம்
ட்சுவே வேண்டாம். நித்யாவின்
ம்மா அப்பா...இதுக்கு நடுவிலே
ன்.''

''எனக்குப் புரிகிறது. நன்
கப் புரிகிறது. அது சத்திரம்தான்.
யும் நித்யாவுமாக ஒரு சில நிமிஷ
ரம்கூடத் தனியா ஹாப்பியா இருக்க
டியலே, இல்லியா!''

''கோபி, சொன்னுல் வெட்
கேடு. நான் மாடியிலே அவள்
ாமா பக்கத்திலே படுத்துக்கறேன்.
வருடைய கடைசிப் பிள்ளை உருண்டு
ருண்டு என் படுக்கைக்கு வந்து என்
லே மோதுகிருன்...''

''நித்யா, மாமிகூடப் படுத்
க்கிருளாக்கும்? முரளி, உன்னைப்

இவரைத் தெரியாதோ?

அறிஞர் அப்பய்ய தீட்சிதர் ஒருநாள் அதிகாலையில் ஆற்றங்கரைக் குச் சென்று குளித்து சிவ சின்னங்கள் தரித்து, சிவப் பழமாக வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

அவர் வசித்துவந்த வீதியின் முனையிலே ஒரு வீட்டு வாசலில் இரண்டு பெண்மணிகள் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பய்ய தீட்சிதரைப் பார்த்துவிட்டு ஒரு பெண்மணி மற்ருெருத்தியிடம், ''யார் இவர்?'' என்று கேட்டதும், அதற்கு அந்த அம்மாள், ''இவரைத் தெரியாதோ உனக்கு? நம்ம ஆச்சாள் அகமுடையான்!'' என்று பதிலளித்ததும் தீட்சிதரின் காதில் விழுந்தது.

அவர் மெள்ளத் தமக்குள் சிரித்துக்கொண்டார். 'புலவர் என்ருே, பல நூல்களை இயற்றியவர் என்ருே குறிப்பிடாமல் மனைவியின் பெயரைச் சொல்லி அல்லவா நம்மை இன்னுர் என்று அடையாளம் சொல்கிருர்கள்!' என்று எண்ணியவர், அதையே வைத்து, 'அஸ்மின் க்ராமே ஆச்சாள் ப்ரஸித்தா:' (என் கிராமத்திலே ஆச்சாள்தான் பிரசித்தம்!) என்று முடிவடையும் சுலோகம் ஒன்றை இயற்றிஞராம்.

—காருகுரிச்சி மகாதேவன்.



பார்த்து எனக்கு ரொம்பப் பரிதாபமாக இருக்கிறது.''

''வெறும் வாய் வார்த்தையோடு உன் பரிதாபத்தைக் காட்டாதே. செய்கையில் காட்டு!''

''என்ன செய்யணும் என்கிறே? உன் நித்யாவின் மாமாவை பாம்பேக்கு விரட்ட ஏதாவது வழி செய்யணுமா?''

''நீ மேற்கு மாம்பலத்திலே ஒரு போர்ஷன் எடுத்து வைச்சிருக்கே இல்லே?''

''ஆமாம், அதுக்கு என்ன?''

''நீயும் வசுவும் இன்னும் கொஞ்ச நாட்களுக்கு அங்கே குடி போகப் போறதில்லேன்னு நித்யா சொன்னுள்.''

''அது ரொம்பச் சின்ன போர்ஷன்.''

''ஒரு ரூமும் சமையல் அறையும் இருக்கா இல்லியா?''

''அதுக்கு மேலேயே இருக்கு.''

''அது போதும். இப்போ அதுதான் எனக்கு மயன்கட்டின மண்டபம். ஒரு மாசத்துக்கு அதை எனக்குத் தா. என்ன வாடகை நீ கொடுக்கிறியோ அதை நான் உனக்குத் தந்து விடுகிறேன்.''

''நீ எப்போது அங்கே போ
லாம்னு இருக்கே?''

''நீ சரி என்று சொன்
முப்பதாவது நிமிஷத்தில்.''

மறுநாள் பிற்பகல் மூன்
மணிக்கு மேற்கு மாம்பலம் வீட்டி
கோபி அவர்களுக்காகக் காத்திரு
தான்.

ஒரு டாக்ஸியில், முரளியுட
நித்யாவும் ஓர் ஓரத்தில் ஒண்டி நெருங்கி
உட்கார, சாமான்கள் அவர்களைச் சுற்
அடைத்துக் கிடந்தன. பாத்திரங்கள்
பெட்டி, படுக்கை, பக்கெட் என்று
என்னென்னவோ.

மகிழ்ச்சியில் துள்ளி ஓடு
கன்றுக்குட்டியைப் போல, வாய்
சிரிப்பு அடங்காமல் நித்யா கீழுக்கும்
மாடிக்குமாக ஓடி ஓடி, சாமான்களை
யெல்லாம் வைத்தாள். அவளும் முரளி
யும் பெட்டியைத் தூக்கிக் கொண்டு
மூச்சு வாங்க மாடி ஏறுவதைக் கண்ட
கோபி, பெருமூச் செறிந்தான். இப்படி
பெட்டியை அவனும் வசுவும் தூக்கிக்
கொண்டு செல்லவில்லையே?

ஹாலெல்லாம் சாமான்கள்
இறைந்து கிடந்தன.


''மிஸ்டர் கோபி,
நீங்க செய்திருக்கிற உ
வியை நாங்க என்
னென்னிக்கும் மறக்க
மாட்டோம்!'' என்றுள்
நித்யா.

''மறக்காமல் இருக்க
என்ன செய்யப் போறே
நித்யா?'' என்று கேட்
டான் முரளி.

''என்ன செய்
லாம்.... என்ன செய்
யலாம்?'' என்று ஒரு
நீண்ட நிமிஷம் தன
குள்ளேயே யோசனை
செய்கிறவளைப் போ
பாவனை செய்துவிட்டு
''ஆங், நமக்குப் பிற
கப்போற பிள்ளைக்கு
கோபின்னு பெயர்
வைத்துவிடுவோம்,''
என்றுள்.

அமெரிக்காவில் சில பள்ளிகளில்—குழந்தைகளை வகுப்புக்கு அனுப்பும்போது சில தாய்மார்களும் வகுப்பறையில் ஓர் ஓரமாக உட்கார்ந்திருப்பார்களாம். விஷமம் செய்யும் குழந்தைகளை அடக்குவதில் ஆசிரியர்களுக்கு உதவ; சொல்லித்தரப்படும் பாடங்களைக் குழந்தைகள் சரிவரப் புரிந்துகொள்ள; கற்றுத்தரும் ஆசிரியர்களுக்கும் பொறுப்புணர்ச்சியை உண்டாக்க; தாங்களும் அம்முறைகளை அறிந்துகொள்ள— இப்படிப் பல காரணங்களுக்காகத் தாய்மார்கள் வருகிறார்கள்.

என்ன விஷமம் செய்யலாம்?



எப்படி அதைத் தடுக்கலாம்?

(பேராசிரியர் எம். வி. ராமசந்திரன் அவர்களின் 'அயல்நாட்டு கல்வி முறை' என்ற சொற்பொழிவிலிருந்து.)

—எல்.எஸ்.

முரளி கலகலவெனச் சிரித்துக்கொண்டே, ''சரி, பிள்ளை பிறக்காமல் பெண்ணுகப் பிறந்தால்? வசுன்னு பேர் வைப்பியா?'' என்ருன்.

''நோ...நோ...வசுவுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? பெண்ணுகப் பிறந்தால், கோபிகான்னு பேர் வைப்போம். ஓகே?''

''நீ என்ன வேணும்ஞலும் பேர் வை. இப்போ சாமான்களை எல்லாம் ஒழுங்கு படுத்தணும்...''

''கோபி, போயிடாதீங்க. இப்ப நான் பாலைக் காய்ச்சப் போறேன். ஸ்டவ், பால், காப்பிப் பொடி எல்லாம் கொண்டு வந்திருக்கிருேம்,'' என்ருள் நித்யா.

''சொல்லிக்கொண்டே நின்ருல் எப்படி? போய் ஆரம்பிக்கிறது.''

''முதல்லே சமையல் அறையிலே கோலம் போடணும், நித்யா. கோபி, மாவு இருக்கா?''

''ஐயய்யோ மறந்துவிட்டேனே!''

''கீழ் வீட்டிலே இருக்கும். கொஞ்சம் வாங்கிக் கொண்டு வருகிறேன்.''

கோபி அவசர அவசரமாக வெளியேறிஞன்.

அவன் திரும்பி வந்து ஒரு டப்பாவை அவளிடம் கொடுத்தபோது நித்யா சொன்ஞள்: ''கோபி, உங்களை மாதிரி ஒருத்தரைக் கல்யாணம் செய்து கொள்ள வசு ரொம்பக் கொடுத்து வைத்திருக்கிருள். உங்களுக்கு எல்லாம் தெரிந்து இருக்கிறது!''

''இதை ஏன் இவன்கிட்டே சொல்றே? உன் ஃபிரண்ட் வசுகிட்டே சொல்லு.''

''சொன்னேன், சொல்லாமலா இருப்பேன்? ஆஞ இப்போ நான் பார்க்கிற வசு என் ஃபிரண்ட் வசுவா இல்லியே.''

''சரி, சரி. புலம்பாதே.''

பேச்சின் திசையை மாற்ற நினைத்த கோபி, ''ஹால்னு பேர்தான். ரொம்பச் சின்னது,'' என்ருன்.

''இதிலே அசுவமேத யாகம் பண்ணலாம்,'' என்ருள் நித்யா.

''நீயும் நானும் இதிலே யாகமா செய்யப் போறேம்? போ. மொதல்லே காப்பி கொண்டு வா. கோபிக்கு வேண்டுமோ வேண்டாமோ, இப்ப எனக்கு வேணும்!''

''என்னைத் துரத்தறதிலே என்ன வேகம்!''

நித்யா கோலமாவை எடுத்துக்கொண்டு சமையலறைக்குச் சென்ருள்.

கோபி தன் மனத்தின் தாபத்தை அடக்கி மறக்க முரளியுடன் சேர்ந்து சாமான்களை ஒழுங்காக வைப்பதில் ஈடுபட்டான்.

(தொடரும்)

ஒரு குத்துக்கு எத்தனை டாலர்?



கோலாலம்பூரில் நடைபெற்ற குத்துச் சண்டைப் பந்தயத்தில் உலக சாம்பியன் முகம்மது அலிக்குக் கிடைத்த தொகை: இருபது லட்சம் டாலர். இது ரொம்பக் குறைவாம். இதற்கு முன்பு ஜார்ஜ் போர்மனை எதிர்த்து ஃ.ஜெயர் நாட்டில் நடைபெற்ற குத்துச் சண்டையின்போது அவருக்கு ஒரு கோடி டாலர் கிடைத்தது. வருகிற அக்டோபரில் மணிலாவில் நடைபெறவிருக்கும் பந்தயத்தில் ஒன்றேகால் கோடி டாலர் கிடைக்கவிருக்கிறது.

ஆதாரம்: லிங்க்



ஜங்கு வார்த்தை

பிரமீளா (17)

பொண்ணு பிறந்தால் ஆம்பிளைகிட்
கழுத்தை நீட்டிக்கணும்

—எஸ். வீரபத்திரன், மது



நந்திதா போஸ் (10)

நாகம் அடங்கிவிட்டது

ரா. மு. விஜயன், கும்பகோணம்



ஜெயசுதா (22)

தன்னக டிம்பிள், நடிப்பில் சிம்பிள்

—கே. சாந்தாதேவி, தஞ்சாவூர்



குட்டி பத்மினி (19)

ந்தையில் முன்னேற்றம், குமரியில் பின்னேற்றம்

—இ. சிவாஜி, கிரக்களூர்



ஜெயசித்ரா (23)

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

[illegible], கோயம்புத்தூர்-1



ஜெயசங்கர் (24)

தமிழ்ப் படங்களின்
எண்ணிக்கையை அதிகரிப்பவர்

—ஐ. எம். ஜெயசிலன், சென்னை-6



எஸ். வரலட்சுமி (21)

பாட்டும் நானே, நடிப்பும் நானே

—சுகுமாரி அருணகிரி, சென்னை-11



புஷ்பலதா (18)

என் உலகமே லிட்டில்
ஸ்டேஜ்தான்

—ஏ.சி. வர்மன், நெய்வேலி-3



உஷா நந்தினி (16)

'பூவுடன் சேர்ந்த'—
பழமொழிக்கு விதிவிலக்கு

—இங்ஸ்லி, ராஜபாளையம்



மஞ்சுளா (15)
பேச்சில் மழலை—நடிப்பில் குழந்தை
—இ. ராஜாவின் ரோஜா, திருவள்ளூர்



மூர்த்தி (11)
க்ாமிக்—அட்—லர்
—எஸ். முத்துகிருஷ்ணன், சென்னை-33



எம். ஆர். ராதா (14)
ராதா—வெளியில் வந்தபின் சாதா
—எல். நாராயணசாமி, கோயம்புத்தூர்



குமாரி பத்மினி (13)
பேரொளியின் பெயர் பெற்றும்
பின்னொளியாய் இருப்பவர்
—சுகந்தா ராமகிருஷ்ணன்,
பக்காள்கோட்



கே. ஆர். விஜயா (9)
சிரித்துச் சிரித்து என்னைச் சிறையிலிட்டாய்
வி. ஆர். ராமானுஜம், வெலிங்ட



ஜெயா (20)
குகநாதன் கண்டெடுத்த குழந்தை முகம்
—வி. அருணசலம், சென்னை-2



பி. ஆர். வரலட்சுமி (12)
(படங்களில்) அடிக்கடி வரா லட்சுமி
—ஜி. ஆறுமுகம் கோயம்புத்தூர்-13



வெண்ணிற ஆடை நிர்மலா (8)
எடுப்பதைவிட நடிப்பதே மேல்

நெஞ்சில் இட்ட நெருப்பு!



கண்ணதாசன்

வானளாவிய மாளிகை ஒன்றுகாண்;
    வண்ணமிக்க சென்னையிற் கட்டினோம்!
ஈனராய மானிடப் பாவிகள்
    எவர்கொளுத்தினர் என்ப தறிகிலோம்
மானம்போய மாதரின் வாழ்க்கைபோல்
    வானைமுட்டிய தீயினைக் கண்டனம்
தீனர்தங்கள் குரலொலி போலவே
    தீக்கிடையிலும் வெடிஒலி கேட்டனம்

தமிழர்நாட்டினில் தழைத்ததோர் மாளிகை
    தாயிழந்த மகவென ஆயது
இமைதிறந்து நோக்கிய கண்களோ
    இரங்கிநின்றுகண் ணீரினைப் பெய்தன!
நமதுசொத்துஇந் நாடென நாடிடா
    நன்றிகெட்ட நாய்களின் செய்கையால்
அமுதமேந்தும் கலசம் அழிந்தது,
    அட்சயபாத்திரம் தீயினில் வெந்தது.

உயிரைவைத்து உதவுமோர் நிறுவனம்
    உயிலைவைத்துப் பூட்டிய மாளிகை
கயிறிழந்த கன்னிபோல் நிற்பதைக்
    காணக்காணக் கலங்கிடும் நெஞ்சமே!
வயலெரிந்ததை உழவன் கண்டபோல்
    வயிறெரிந்தது தீயினைக் கண்டதும்!
பயிரைமேய்ந்த பாதகர் தம்மையே
    பரமன்காட்டுவான்; பக்தியை நம்புவோம்!

என்னஇந்த மானிடச் சாதியோ
    இலைபறித்திட மரத்தினை வெட்டுதும்!
தன்னைஈன்ற தாயகம் என்பதை
    தாய்மறந்த சேய்கள் மறந்தவோ!
மின்னிமின்னி எழுந்தவெந் தீயிடை
    மேன்மையாம்தமிழ்ப் பண்புகள் வெந்தன!
கன்னிபெற்ற பிள்ளைகள் செய்கையால்
    கடவுள்பெற்ற பிள்ளைகள் நொந்தன!

தத்துவம்இது தங்களுக் கென்பதை
    சாற்றவோர்சில மூடரும் உண்டுகாண்!
பித்தருக்கிது தத்துவம் ஆம்எனில்
    பேடிமைஎனச் சாற்றுக மைந்தரே!
சத்தியத்தினைத் தணலில் எரிப்பது
    தத்துவம்எனில் தத்துவம் சாகவே!
இத்தகைத்த குணங்களை வெல்லுவோம்
    இனியபாரதம் என்றும் செழிக்கவே!

25

கூடவர்ஸ்

பி.வி.ஆர்

பிரவேச ஹோமத்துக்காகத் தன் வீட்டுக்கு மனைவியை அழைத்துச் செல்லுமுன், வண்டியின் இடது வலது சக்கரங்களுக்கு முன்னால் சிவப்பு, நீல நிற நூல்களைப் போடவேண்டும். இதன் பிறகு கூறப்படும் மந்திரத்தின் அர்த்தம்:

'நம்முடைய அன்னியோன்னியம் வளரக் கூடாது என்று பகைவர்கள் ஏதேனும் சூன்யம் வைத்திருந்தால் அதை இந்த நூல்கள் நாசம் செய்யட்டும்.

—சம்ஸ்காரம்.

வசு நிலை கொள்ளாமல் தவித்தாள். படிக்க உட்கார்ந்தால், புத்தகத்தின் எழுத்துக்கள் கண்முன் மங்கி மங்கி உருத் தெரியாமல் குலைந்துபோயின. ரேடியோவைத் திருப்பினால் அவளுக்குப் பிடித்த ஐரோப்பிய சங்கீதம் நாராசமாக அலறியது. படுத்தால் தூக்கம் வரவில்லை. உட்கார்ந்து கொண்டே இருந்தால் மனம் அவளையே சாப்பிட ஆரம்பித்தது.

அவள் மாடிக்கும் கீழுக்கும் ஆயிரம் தடவை ஏறி இறங்கி இருப்பாள். தாகம் இல்லாதபோதே தண்ணீரைக் குடித்தாள். பசித்தபோது சாப்பிடப் பிடிக்கவில்லை.

வக்கீல் வேதராமனுக்கு இதுவரை இரண்டு தடவை போன் செய்தாகி விட்டது. பாழாய்ப் போகிற குமாஸ்தா தான் போனை எடுத்தார். அவளுடைய மேட்டரைப் பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாதாம். இரவு எட்டு மணிக்கு மேல் மீண்டும் போன் செய்யச் சொன்னார்.

திடீரென்று, "ஹாய், வசு!" என்ற குரல் கேட்டது.

வசு மெல்ல ஏறிட்டுப் பார்த்தாள்.

நித்யா.

"ஏண்டி, என்னடி சூனியத்தைப் பார்த்து உட்கார்ந்திருக்கே...கம் ஆன், சரியா ஜோரா உட்காரு!" என்றாள் அவள்.

'நான் சூனிய உலகத்தில்தான் இருக்கிறேன்,' என்று சொல்ல நினைத்த வசு எண்ணத்தை மாற்றிக் கொண்டாள். நித்யாவுக்கும் வேதாந்த சித்தாந்தங்களுக்கும் ரொம்ப தூரம். யதார்த்த உலகம் தான் நித்யாவின் உலகம்.

"ஏண்டி நித்யா, நீ இந்த உலகத்தில்தான் இருக்கிறாயா?"

"இந்தக் கேள்வியை நான்



உன்கிட்டே கேட்கணும். நேத்து கூட போன் செய்தேன்....அது பாட்டுக்கு அடித்துக் கொண்டே இருந்தது. அது சரி, இப்ப என்ன செய்யறே?''

''நீதான் பார்க்கிறுயே?''

''பாவம், காலங்கார்த்தாலே எழுந்து, கோலம் போட்டு, அடுப்பு மூட்டி, பாலைக் காய்ச்சி, காப்பி கொடுத்து, அதுக்கப்புறம் சமையல் செய்து போட்டு, மத்தியானத்துக்கு டிபனேயும் பண்ணி கோபியை ஒரு வழியாய் ஆபிசுக்கு அனுப்பி விட்டு, சாயந்தரத்துக்கு என்ன டிபன் செய்யலாம்னு யோசிச்சுக் கொண்டிருக்கிருயா!''

வசு சிரிக்கவில்லை. ஒரு சாதாரண தாம்பத்தியத்தில் நடக்கக் கூடிய இந்த நிகழ்ச்சிகள் தனக்கு என்றுமே இல்லை என்ற தாபம் உள்ளே அவளையும் மீறி எழ, ''ஏண்டி அறுக்கறே!'' என்று கேட்டாள்.

''சரி சரி, இன்னிக்குச் சாயங்காலம் நீ என் வீட்டுக்கு வர்றே..ஒரு சின்னப் பார்ட்டி.... சரியா அஞ்சு மணிக்கு. ஆறரை மணிக்கு அமெரிக்கன் எம்பஸியிலே ஒரு ஒண்டர்ஃபுல் பிக்சர்.... அப்புறம் எட்டேகால் மணிக்கு டாஜ்லே டின்னர்.. என்னுடைய மிஸ்டர் முரளி, உன்னுடைய மிஸ்டர் கோபியையும் அழைக்கலாம்னு சொன்னுர். நான் கூடாது என்று சொல்லிட்டேன்..இன்னிக்கு நீதான் சீஃப் கெஸ்ட்!''

''என்ன விசேஷம்?''

''புது வீடு போயிருக்கிருேம். கொண்டாட வேண்டாம்? தவிரவும், கல்யாணம் ஆனப்புறம் நீயும் நானும் எங்கேடீ உட்கார்ந்து பேசியிருக்கோம்? தாலியைக் கட்டிய நிமிஷத்திலிருந்து, என்னையே அவர் சுத்திச் சுத்தி வருர்....''

''ஆமாம், நீ பெரிய ரம்பை.''

''அவருக்கு நான் ரம்பை தானேடி....''

''சரி சரி, வரேன். எங்கே புது வீடு..?''

''எல்லாம் உனக்கு ரொம்ப தெரிஞ்ச இடம்தான். ஒரு மாதத்துக்கு வேணும்னு அவர் கேட்டார். கோபி உடனே சாவியைக் கொடுத்து விட்டார்.''

வசு திகைத்தாள்.

''அந்த எவிப் பொந்தா?''



''ஆனல் பொந்துக்குள்ளே இரண்டு பேர், அதுவும் நாங்க ரெண்டே பேர், ஒருத்தருக்கொருத்தர் ஒண்டி ஒதுங்கிக் கொள்றது எவ்வளவு ஜோரா இருக்கு தெரியுமா? நீ மட்டும் அன்னிக்கு சரின்னு குடி போயிருந்தே, இப்போ நீ பாடற ராகமே வேருக இருந்திருக்கும்!''

''நான் வரணும் என்கிறுயா?''

''கண்டிப்பாக ஐந்து மணிக்கு வந்து விடு. வரவில்லையோ, உன் வீட்டுப் படியிலே



கால் வைக்கிறது இதுதான் கடைசித் தடவை!''

''பயமுறுத்தாதே......நீ கால் வைக்கலேயேன்னு எங்க வீட்டு வாசல்படி ஒண்ணும் அழலே.. வரேன்.''

''சரியா ஃபைவ் ஓ கிளாக்!''

''அதான் தமிழிலே சொன்னாயே?''

அவள் பார்த்து, காலால் உதைத்து உதறிய அந்த போர்ஷனுக்குள் பிரவேசித்ததுமே வசு பிரமித்துப் போனாள். ஓர் இடத்தின் ரம்யமும் அழகும் அதன் நீள அகலத்தைப் பொறுத்தது அல்ல என்பதை முரளியும் நித்யாவும் நிரூபித்துக் காட்டி விட்டார்கள். கூடத்தின் சுவர்கள் இள நீல நிறத்தில் மின்னின. ஓரிரு ஓவியங்கள் அதை அலங்கரித்தன. ஒரு சுவாமி படம். கீழே ஒரு சிறு ஸ்டாண்டு. அதில் ஒரு குத்துவிளக்கு.

சமையலறை துப்புரவாக இருந்தது. பாத்திரங்களும் தட்டுக்களும் நேர்த்தியாக அடுக்கப்பட்டிருந்தன.

கூடத்தின் நடுவே இருந்த டீப்பாயின் மேல் வைத்திருக்கும் ஒரு நவீன பொம்மையைப் பார்த்துக் கொண்டே வசு சொன்னாள்: ''நித்யா, ரொம்ப ஜோரா வைச்சிட்டிருக்கியே!''

''நீ வந்திருந்தால், கீழே ரத்னக் கம்பளத்தை விரிச்சிருப்பே. சுவரெல்லாம் பிகாஸோவின் ஓவியமாக வழிஞ்சிருக்கும்,'' என்று கேலி செய்தாள் நித்யா.

''முரளி எங்கே?''

''உனக்குப் பிஸ்தா ஐஸ்க்ரீம் வாங்கி வர பிளாஸ்க்கைத் தூக்கிட்டுப் போயிருக்கிறார். இப்ப வந்து விடுவார்.''

''ஓ! எனக்குப் பிடிச்சதை வாங்கி வரச் சொல்லியிருக்கியா!''

''ஏன், எனக்கு மட்டும் பிடிக்காதா.. வசு, இவர்கிட்டே ஒரு பெரிய வீக்னெஸ்.''

''என்னடி வீக்னெஸ்? பயமுறுத்தறே—''

''நீ நினைக்கிற வீக்னெஸ் இல்லே.. தன்னைப் பத்தி மறந்தே போய் விடுகிறார். எப்பப் பார்த்தாலும் எனக்கு என்ன பிடிக்கும், எதைச் சொன்னால் எனக்குத் திருப்தியா இருக்கும், மகிழ்ச்சியா யிருக்கும்னு மனசை

மலையாளத்தில் தயாராகும் 'அஷ்டமி-ரோஹிணி' படத்தில் பிரேம் நசிருக்கு ஜோடியாக நடிக்கிருர் புதுமுகம் திபா. தமிழில் வெளிவந்த 'பெற்ருல் தான் பிள்ளையா?' படம்தான் மலையாளத்தில் இந்தப் பெயரில் தயாராகிறது. பிரேம் நசிருடன் நடிக்கும் எழுபதாவது கதாநாயகி நடிகையாம் திபா!

ரொம்ப அலட்டிக்கருர்!''

''இது வீக்னெஸா?'' சொல்லும்போதே, கோபி அவள் கண்முன் தோன்றினுன்.

''பின் என்ன? அவருக்கு எது பிடிக்கும், நான் என்ன செய்தால் அவர் மனசு குளிரும்னு நான் மண்டையை உடைச்சுக்கறேன். தெரிய மாட்டேங்கறது. அவருக்குப் பிடிக்கிறதெல்லாம் எனக்குப் பிடிக்கணும்னு நான் பார்க்கிறேன்.. அவர் என்னடான்னு..''

சினிமா தியேட்டரில் கடைசி வரிசையில், ஓரமாக மூன்று ஸீட்டுகளில் அவர்கள் உட்கார்ந்தார்கள். நித்யா நடுவே உட்கார்ந்து, முரளியிடமும் வசுவிட்மும் மாறி மாறிக் கையால் அடித்தும் கிள்ளியும் பேசிக்கொண்டே இருந்தாள்.

நிழலாட்டத்தில் வசுவின் மனம் லயிக்கவேயில்லை. ஒரு காதல் கதை. இளம் ஜோடிகளின் வாழ்க்கை. காட்சிக்குக் காட்சி காதல்தான்.

இடையிடையே வசு ஓரக் கண்ணுல் நித்யாவைக் கவனித்தாள். திரையில் காணும் காட்சிக்கு அவள் முரளியுடன் ஒத்திகை நடத்துவது போல இருந்தது. அவர்களுடைய லேசான சிரிப்பு ஒலி அவளுடைய நெஞ்சைக் கிளறியது.

அவளுக்கு ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது. கோபி, தன்னுடைய பிடிவாதத்தால், போலி சுய கௌரவத்தால்—ஏன், முட்டாள்தனத்தால்—அவளுடைய வாழ்க்கையையே நாசம் பண்ணி விட்டான்.

சே, அவளுடைய பருவ ஆசைகளும் உணர்ச்சிகளும் சமுத்திரத்தில் விழும் மழையாகி விட்டன. பூக்களின் மென்மையை உணராத, உணரச் சக்தி அற்ற, ஒரு அரக்கனிடம் அவள் அகப்பட்டுக் கொண்டு விட்டாள். இனி, அவள் யாரோ. அவன் யாரோ.

திடீரென்று அவளுடைய கையை நித்யா வருடுவதை உணர்ந்தாள். காதலியைக் காதலன் அணைத்துத் தழுவிக் கொண்டிருந்தான். மெய் மறந்து போன நிலையில் நித்யா வசுவை முரளி என நினைத்துக் கொண்டாள் போலிருக்கிறது.

நித்யாவின் கையை மெதுவாக விலக்கின வசு, ''கையை அங்கே கொண்டு போ, நான் வசு,'' என்ருள். சிரிக்க வேண்டும் என்று தோன்றிய போதிலும், தகிக்கும் நெஞ்சிலிருந்து சிரிப்பு வரவில்லை.

எட்டே கால் மணிக்கு வெளியே வந்த போது வசு ஆத்திரத்தில் அலுத்துப் போனுள்.

''நித்யா! நான் வீட்டுக்குப் போறேன்!'' என்ருள்.

''என்னடி இது? டின்னர்?''

''நீங்க ரெண்டு பேரும் போய்ச் சாப்பிடுங்கள்.''

''அதுக்கு உன் உத்தரவு தேவை இல்லை.. சும்மா வாடி!''

''இல்லே நித்யா.. நான் போறேன்.''

முரளியிடம் மன்னிப்புக் கேட்கக்கூட வசுவுக்குத் தோன்றவில்லை. அவளுடைய மனமெல்லாம் வக்கீல் வீட்டில் நிலைத்திருந்தது.

கார், அவளுடைய ஆத்திரத்திலும் கோபத்திலும் பறந்தது.

''வா அம்மா வசு.. என்ன இந்த நேரத்தில்?'' என்று வரவேற்ருர் வேதராமன்.

''மற்ற நேரத்தில் தான் உங்களைப் பார்க்க முடியலேயே, ராத்



யானை யாசீர்வாதம்

முதுமலைக் காட்டு இலாகாவின் அரசு ஊழிய
களான இந்த யானைகள் இரட்டைச் சகோதர
கள். தேவர் பிலிம்ஸ் (நல்ல நேரம்—தமிழ், இந்தி) நடிக
களும் கூட. சிறு சிறு சர்க்கஸ் வித்தைகள் காட்டி மகிழ
விக்கத் தெரிந்தவர்கள். ஓர் யானை மண்டியிட்டு வணங்க
பின்னுல் உள்ள யானையின் துதிக்கை ஆசி கூறுவபோல்
இதன் தலைமீது வைக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

—எஸ். ஜி. சேஷகி

திரி எட்டு மணிக்கு மேல் தான் நீங்க ஃப்ரீயா இருப்பீங்கன்னு உங்க கிளார்க் சொன்னுர்!''

''இப்ப என்ன ஆச்சு? ஏன் இப்படிப் பதட்டப்படறே?''

''என் மேட்டரை நீங்க சரியாகவே கவனிக்கலை.. அதுக்கு பதிலா என் அப்பாகிட்டே போய் என்னென்னவோ உளறியிருக்கிங்க.. நான் உங்க கிளையண்ட். நான் சொன்னதை எப்படி நீங்க மத்தவங்க கிட்டே அறிவிக்கலாம்?''

''தப்புதாம்மா.. உன் அப்பா மத்தவங்களோட சேர்த்தின்னு இப்பத்தான் தெரிந்தது. சரி, நான் இனிமே வக்கீலாவே இருக்கேன். நீ என் கட்சிக்காரியாகவே இரு.. என்ன வேணும்?''

''டிவோர்ஸ்.. லீகல் ஸெபரேஷன்.. ரிலீஸ் ஃப்ரம் காஞ்ஜுகல் ரைட்ஸ்!''

''எல்லாம் பெரிய பெரிய வார்த்தைகளா இருக்கு. எனக்கு ஒண்ணும் புரியலை,'' என்ருர் வேதராமன் சிரித்துக் கொண்டே.

''விளையாடாதீங்க.. ஒரு டம்ளர் தண்ணியை இப்போ என் நெஞ்சு மேலே வைச்சா அது கொதிக்க ஆரம்பிச்சுவிடும்.''

''அதே தண்ணியை கோபி நெஞ்சு மேலே வைச்சா அது ஐஸாகிவிடும்.. நீ ஐஸ்க்ரீம் கூடப் பண்ணிச் சாப்பிடலாம்!''

''என்ன உளர்றீங்க ஸார்?''

''ஆமாம் வசு.. நான் உன்கிட்டே அப்ப சொன்னபடி, கோபியை வரச் சொன்னேன். பேசினேன். அவனுக்கு இதிலே சம்மதமேயில்லைன்னு பட்டது. உன்னைப் பத்தி குறைவா, குற்றம் சாட்டிப் பேசினேன். அவன் என்னை எச்சரிக்கறது போலப் பேசிவிட்டான். தன்

னுடைய மனைவியைப் பிறர் தூஷிக்கறதை அவன் பொறுக்க மாட்டானாம்! எப்படிப் போகிறது கதை!"

"அது நான் நினைக்கிறபடிதான் போகணும்.. ஐ வாண்ட் எ டிவோர்ஸ், நதிங் பட் எ டிவோர்ஸ்."

"அவன் ஒப்புக்கலேன்னா?"

"கேஸ்."

"அதுக்கு இன்னும் காத்துக் கொண்டிருக்கணும். மூணு வருஷம் ரெண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் பேசிக்கக் கூடாது...."

"இதோ பாருங்க, ஐ டோண்ட் கேர் அபவுட் யுவர் லீகல் பாயிண்ட்ஸ்.. நான் ஏதானும் டிக்ளேர் பண்ணணுமா? பண்றேன். கையெழுத்துப் போடணுமா? போடறேன்.."

"நீ ரொம்பப் பிடிவாதமா இருக்கே வசு."

"அது என் சுபாவம், யூ கான்ட் சேஞ்ச் இட்.."

வக்கில் வேதராமன் ஒரு ஸ்டாம்பு பேப்பரை எடுத்தார்.

"இந்தா, இதன் கீழ் உன் கையெழுத்தைப் போட்டுக் கொடு. என்ன எழுதணுமோ அதை எழுதி வைக்கிறேன். நாளைக்குக் கார்த்தாலே வந்து படிச்சுப் பார்.. அப்புறம் மேலே ப்ரொஸீட் பண்ணலாம்."

வசு கையெழுத்துப் போட, மேஜை மேலிருந்த பேனாவை எடுத்தாள். அதே சமயம், உள்ளேயிருந்து வந்த சமையற்காரன் ஒரு டம்ளரில் பாலைக் கொண்டு வந்து வைத்தான்.

அவள் கையெழுத்துப் போட்டு முடிந்ததும், "வசு, நல்ல பசும்பால் சாப்பிடுகிறாயா?" என்று கேட்டார் வேதராமன்.

"நோ, தாங்க்ஸ்! நான் பால் சாப்பிடுகிற நிலையிலே இல்லை."

"விஷம் சாப்பிடற நிலைக்கு வந்து விட்டதாக நினைக்கிறது முட்டாள்தனம்!"

"நான் விஷம் குடிச்சு என்னையே மாய்ச்சுக்கறதுக்கு, அப்படி ஒண்ணும் முட்டாள் இல்லை."

வசு வீட்டை அடைந்த போது மணி ஒன்பதரை. ராஜலட்சுமி ஹாலில் உட்கார்ந்து பக்த விஜயம் படித்துக் கொண்டிருந்தாள்.

வசுவை அவள் கவனிக்கவில்லை. ஆனால் அதே சமயம் ஹாலினுள் பிரவேசித்த சிவராமன், "என்ன வசு, ஏன் இவ்வளவு நேரம்?" என்று கேட்டார்.

"நேரமாகி விட்டது."

"அதான் கேட்டேன் ஏன் என்று. போய்ச் சாப்பிடு."

"எனக்குப் பசிக்கலை."

"இன்னிக்குக் கம்பெனியிலிருந்து வரபோது தற்செயலா கோபியைப் பார்த்தேன். காரிலே அவனை ட்ரிப்ளிகேன்லே டிராப் பண்ணிட்டு வந்தேன்."

வசு எகத்தாளமாகச் சிரித்தாள்.


"நீங்க அவருக்கு லிஃப்ட் கொடுத்தீங்க....நான் அவரை டிராப் பண்ணப் போறேன்.... இரண்டுக்கும் எவ்வளவு வித்தியாசம் தெரியுமா அப்பா!"

"தெரியும் வசு! உனக்கும் அவனுக்குமிடையே இருக்கிற வித்தியாசம்!"

ராஜலட்சுமி பக்த விஜயத்தை விட்டு வெளியே வரவில்லை.

(தொடரும்)

★



"உன் மனைவி பிறந்த வீடு போயிருப்பதாகச் சொன்னாயே! எந்த ஊர்?"


"எதிர் வீடு."

ஊதல்

1

எண்ணூரை நோக்கிச் செல்லும் அகன்ற நேரான தார் ரோடு. வலக்கைப் பக்கம் நீலக் கடலின் தொடுவானம் தெரிகிறது. அந்தப் பின்னணியில் இரண்டொரு குட்டித் தொழிற்சாலைகளின் கட்டிடங்கள் தெரிகின்றன. பிற்பகல் மூன்று மணி. இங்கொன்றும் அங்கொன்றுமாக எப்போதாவது ஒரு முறை செல்லும் கார்களைத் தவிர வேறு நடமாட்டம் இல்லை.

சாலையின் ஓரமாகக் கனகராஜும் அவனுடைய தோழனொருவனும் நின்றிருக்கிறார்கள். கனகராஜுக்கு வயது முப்பதுக்குள் இருக்கும். இடுங்கிய கண்கள் . அகலமில்லாத நெற்றி. புஸ்ஸென்று வளர்ந்த கிருதா. ஒல்லியானவன்.



அவனுடைய தோழன் மோட்டாவான, சிவப்பான ஆள். கையில் வைத்துள்ள கறுப்பு ப்ரீஃப்கேசைக் கனகராஜிடம் தருகிறான்.)

கனகராஜ்: (எச்சரிக்கையுடன் நாற்புறமும் பார்த்துவிட்டு, பெட்டியை அங்குல அகலத்துக்குத் திறந்து) ஓ! மொத்தமுமே கொண்டு வந்துட்டியா? (சட்டென மூடுகிறான்)

தோழன்: ஆமாம். அத்தனையும் இருக்கு. புத்தம்புது ட்ரைக்ளீன் சமாசாரமாக்கும். இருபத்தைந்து பர்செண்ட் கிடைச்சால் போதும்.

கனக: உஷ்! (ஒரு கார் அவர்களைத் தாண்டிச் சென்றபின்) இருபத்தையாயிரத்துக்கு இதைத் தாராளமாய் மாத்திடலாம்.

தோழன்: அசல் காகிதம் கிடைக்கிறதில்லை, அதனால்தான் மாட்டிக்கிறாங்கன்னு ஒரு போலீஸ் புத்திசாலி கட்டுரை எழுதியிருந்தான். படிச்சியா? இது மொத்தமும் ஒண்ணும் நம்பர் காகிதம். அவனோட பாட்டன் வந்தால்கூடக் கண்டு பிடிக்க முடியாது..! என்னப்பா, யோசனையிலே ஆழ்ந்திட்டே?

கனக: ஒண்ணுமில்லே. இதை வாங்கிட்டு அசல் சரக்குத் தரக்கூடிய பார்ட்னர் ரெண்டு பேர் பம்பாயிலே இருக்காங்க. அடுத்த வாரம்தான் வருவாங்க.

தோழன்: வரட்டும். அவசரமில்லை.

கனக: அது சரி. அதுவரையிலே பெட்டியை நீயே வைத்திரு.

தோழன்: கனகு! அதோ தெரியுதே சமுத்திரம், அதன் சாட்சியா சொல்கிறேன். எனக்கு உன்மேலே நம்பிக்கை உண்டு. எடுத்துப் போய் வைச்சுக்க.

கனக: சே, சே! நம்பறது நம்பாதது என்னப்பா இருக்கு இதிலே?

ஆதிசேஷன்

அதற்குச் சொல்லலே. உன்னண்டை இருந்தால் பத்திரமா இருக்கு மேன்னு பார்க்கிறேன்.

தோழன்: கொஞ்ச நாளாய் நம்ம கிரகம் ஒரு தினுசாயிருக்கப்பா, கழுகாட்டம் சில பயல்கள் சுத்தறுங்க. எவன் எந்த நிமிஷத்திலே நம்ம கழுத் திலே கத்தியை வைக்கப் போருனேன்னு உஷாரா பார்த்திட்டு வர்றேன்.

கனக: நீயாவது ரூம் வைச் சிருக்கே. எனக்கு பிளாட்பாரம்தான்.

தோழன்: ஏன், அவளிடம் போய் இரேன்.

கனக: எவளிடம்?

தோழன்: என்னப்பா அப்ப டிக் கேட்டுட்டே? உன் இவள் — லீலாவைத்தான் சொல்றேன்.

கனக: ஓ, லீலாவா! (முகத் தில் வெறுப்பும் கசப்பும் பரவ) அது ஒரு விடியா மூஞ்சி. எப்பப் போனுலும் அழுகைதான். நான் அதன் முகரை யிலே முழிச்சு ஆறு மாசமிருக்கும்.

தோழன்: இப்ப அதெல் லாம் பார்த்தால் முடியுமா? எனக் கென்னவோ அதான் பெஸ்ட்டுன்னு தோணுது.

கனக: வேறே வழியில்லே. போய்த் தொலேகிறேன்.

(பெட்டியுடன் விடை பெறு கிருன்).

2

(தங்கசாலேப் பகுதியில், மணிக்கூண்டருகே ஒரு சந்து. எட்டுக் குடித்தனங்கள் வசிக்கும் தாழ்வான ஓட்டு வீட்டில், கொல்லேப்புறத்துப் போர்ஷன் — அதாவது ஒரே ஓர் அறை. அந்த அறையில் என்ன இருக்கிற தென்பதைக் காண முடியாதபடி புகை மண்டிக் கிடக்கிறது. அப்படியே விலகி னுலும், அப்படியொன்றும் பார்க்கத் தக்கதாக அங்கு இல்லே — இரண்டொரு தகர டப்பாக்களேயும் சீசாக்களேயும் தவிர. இருபத்தைந்து வயதுள்ள லீலா குமட்டி அடுப்பை ஊதிக்கொண் டிருக்கிருள். கண்கள் சிவந்திருக்கின் றன. அறையின் வாசற்படியில் நிலேப் படியின் குறுக்காக உட்கார்ந்தபடி காகிதங்களேக் கிழித்துப் போட்டுக் கொண்டிருக்கிருன், அவளுடைய மூன்று வயதுக் குழந்தை விஞேத்).

லீலா: ஏண்டா விஞேத் இப்படி...(கசப்புடன்) சரி, சரி. நான் ஒரு குப்பை, நீ ஒரு குப்பை, இந்த வீடே ஒரு குப்பை, நீயும் போடு. ஒண் ணும் தப்பில்லே. (அடுப்பை ஊதத் தொடங்குகிருள்.)



விஞேத்: ஊதல் பண்ண ஞும்னு பார்க்கிறேன். வர மாட்டேங்குதும்மா. (அருகில் வந்து, அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு) அம்மாம்மா, எனக்கு ஒரே ஒரு ஊதல் பண்ணிக் கொடும்மா, மாட்டியா! பீப்பி டும்டும்னு ஊதணும்மா.

லீலா: பீப்பீ டும்டும் எல்லாம் நம்ம வாழ்க்கையிலே கிடையாதுன்னு ஆயிட்டுதுடா, கண்ணு.

விஞே: போம்மா நீ, சும்மா சும்மா அழுதுக்கிட்டு!

லீலா: நான் அழறதை நிறுத்தி ரொம்ப நாளாகுது, விஞேத். (மடியில் அவனை உட்கார்த்தி வைத்துக்கொண்டு) இதோ பார், நான் ஆஸ்பத்திரிக்குப் போகணும். டியூட்டிக்கு நேரமாகுது. நீ சமர்த்தா பானு வீட்டிலே விளையாடிட்டிருக்கணும்.

விஞே: போம்மா, நான் பானு வீட்டுக்குப் போக மாட்டேன். அவங்க சாப்பாட்டு டயத்துக்கு, 'நீ வெளியிலே போய் விளையாடிட்டிரு' ண்ணு சொல்லி, கதவைச் சாத்திக்கிருங்க.

லீலா: (பெருமூச்சுடன்) ஏழைக்கு ஏழை தான் மனசு இரங்குவாங்கண்ணு சொன்னவன் பைத்தியக்காரன்!

[கண்ணுடி முன் நின்று நெற்றிக்குப் பொட்டு வைத்துக் கொள்கிருள். கழுத்தை ஏக்கத்துடன் பார்த்துக்கொள்கிருள்.]

லீலா (தனக்குள்): இப்படியே, தாலி இல்லாத தாரமாக இன்னும் எத்தனை நாள் இருப்பது? நாளுக்கு நாள் அவமானமாயிருக்கு... ஊகூம். இந்தக் கழுத்து இப்படி இருக்கக் கூடாது. அடுத்த தடவை அவர் வருகிறபோது, தாலிக்காக நான் எதை வேண்டுமாஞலும் தியாகம் பண்ணத் தயார்னு வற்புறுத்திச் சொல்லணும்.

(அறை வாசலில் நிழலாடுகிறது)

லீலா: யார்? (எழுந்து பார்த்து) நீங்களா! வாங்க, உள்ளே வாங்க. எதற்காக நிற்கிறீங்க வெளியே?


(கனகராஜ் உள்ளே வருகிருன், கையில் பெட்டியுடன்.)

கனக: நீ கூப்பிடாமல் உள்ளே வரக் கூடாதுன்னு நிற்கிறேன், லீலா,



நான் கல்கத்தாவில் வருடங்களாக வாழ்ந்து வ கிறேன்.

சென்ற மே மாதம் 27 தேதி செவ்வாய்க்கிழமையன் நானும் என் கணவரும் மதரா சுக்குப் போகவேண்டி நேர் தது. ஹவுரா எக்ஸ்பிரசுக்க க் காத்திருந்தோம். அ இரவு 10–40–க்குக் கிளம்பு றது. 14–ஆம் நம்பர் பிளாட பாரத்திலிருந்து.



அடுத்தது 15–ம் நம்ப பிளாட்பாரம். ஒரே கும்மி ட்டு. எக்ஸ்பிரஸ் வண்டி 9–4 மணிக்கு பிளாட்பாரத்திற்கு வந்து கொண்டிருந்தது. ஜன கள் வண்டியில் ஏறுவதற்கு ஓடிக்கொண்டிருந்தார்கள்



அச்சமயம் எங்கிருந்தோ ஒரு திருடன் வெடுக்கென்று என் கழுத்தில் உள்ள புடவை யைப் பிடித்து என்னை ஒரு திருப்புத் திருப்பி, பக்கத்தில் உள்ள 15'ம் நம்பர் பிளாட்பா ரத்தில் தானும் குதித்து, என் னையும் ரயில் தண்டவாளத் தில் தள்ளிவிட்டான். நான் 'ஐயோ ஐயோ' என்றலறிய தும் என் கணவர், என்னைப் பிடிப்பதற்காகத் தானும் பிளாட்பாரத்திலிருந்து கீழே குதித்தார். அவர் குதிப்பதைப் பார்த்த திருடன் என்னைவிட்டு விட்டு இருட்டில் மறைந்துவிட டான். நான் பிரக்ஞை இழந்து விழுந்தேன்.

என் கணவர் என்னைத் தூக்கி நிறுத்தினதும்தான் எனக் குப் பிரக்ஞை வந்தது. என் கழுத்தில் இருந்த கொடியும் சங்கிலியும் கடவுள் கிருபையால் தப்பின. என் கணவர் என்னைத் தூக்கும்போது அதே பிளாட்பாரத்தில் கூட்ஸ் வண்டி வந்து கொண்டிருந் தது. நல்ல காலம். எங்களைக் கீழே இருந்து மேலே ஜனங்கள் தூக்கிவிட்டார்கள்.

கல்கத்தாவில் இப்பொழுது நிறைய இந்த மாதிரி திருட்டுக்கள் நடக்கின்றன.

—ராஜம் சுப்ரமணியம்



எனக்கு இங்கே நுழைய என்ன உரிமை இருக்கு?

லீலா: (சிரித்தபடி) இதோ அந்த உரிமை இருபத்தைந்து வயசில், ஐந்தடி இரண்டங்குல உயரத்தில், லீலாங்கிற பெயரில் இருக்கிறது. உள்ளே வாங்க.

(கனகராஜ் உள்ளே நுழைந்து அறையின் மூலையில் பெட்டியை வைக்கிறான்).

கனக: ஒரு காஸ்மெடிக் கம்பெனியில் ரெப்ரசென்ட்டேடிவாய்ச் சேர்ந்திருக்கிறேன், லீலா, இதிலே சாம்பிள்கள் இருக்கு. பத்திரம்.

லீலா: யாரும் தொட மாட்டாங்க. அப்படியே வையுங்க. காப்பி போடறேன்

(அறையின் மறு கோடியில் மௌனமாக இவ்வளவையும் பார்த்தபடி நின்றிருக்கும் விநோத், மெல்ல வந்து தாயின் முதுகைக் கட்டிக் கொள்கிறான்)

கனக: போடா, வெளியே போய் விளையாடிட்டிரேன். இங்கே என்ன வேடிக்கை?

லீலா: ஆறு மாதம் கழிச்சு வந்திருக்கிறீங்க இல்லே? அதனாலே உங்களையே பார்த்திட்டிருக்கான்.

கனக: சரி, சரி. பார்த்தது போதும். போடா!

(லீலா காப்பி தயாரிக்கிறாள்.)

லீலா: எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டேங்கறீங்க.. உங்களுக்கும் வேலையாயிட்டது இப்ப.. நானும் ஏதோ பிரைவேட் நர்ஸிங் ஹோமில் வேலைக்கு இருக்கிறேன். இனிமேலும் நீங்க எங்கெங்கோ போக வேண்டாம்.

கனக: சரி சரி. ஆரம்பிச்சிடாதே.

லீலா: நான் ஆரம்பிக்கல்லே. நீங்க ஆரம்பிங்களேன்னுதான் சொல்றேன். குடியும் குடித்தனமும் ஆரம்பியுங்க, ஒழுங்கான பொறுப்பான வாழ்க்கை ஆரம்பியுங்க. நம்ம கண்மணிக்கு ஒரு எதிர்காலத்தைக் கொடுக்க ஆரம்பியுங்க. எல்லாம் நல்லதா ஆகும்.

(லீலா குழந்தையை அருகே கூப்பிடுகிறாள்).

லீலா: அப்பாவுக்குக் காப்பி கொண்டு போய்க் கொடு. இந்தா.



சில பேருக்கு, சிரிக்கும்போது கண் மூடிக் கொண்டு விடுகிறது. குழந்தையாக இருந்தால் அது ஓர் அழகுதான்.

வண்ணப்படம்: ஆர்.பி.எஸ். மணி

விநோத்: போம்மா. நான் மாட்டேன்.

லீலா: விநோத்! அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. (கையை ஓங்குகிறாள்).

கனக: விடு சனியனை! அதற்கு என்னைக் கண்டாலே பிடிக்கல்லே.

3

(அதே அறை. இரவு பதினொரு மணி இருக்கும். அலமாரியில் பெட்ரூம் விளக்கின் கறுப்பு நாக்கு அசைந்தாடிக் கொண்டிருக்கிறது. கனகராஜும் லீலாவும் அருகருகே படுத்திருக்கிறார்கள். நடுவே குழந்தை விநோத் தூங்குகிறான்.)

கனக: லீலா! ஏய்! (தாபத்துடன் அடிக் குரலில் கூப்பிடுகிறான்).

லீலா: விழிச்சிட்டுதான் இருக்கேன். எனக்கு மட்டும் தூக்கம் வருமா?

கனக: வேறே ஒண்ணுக்கும் துப்பில்லாமல் போனாலும் இதுக்கு மட்டும் வந்திட்டான் பாருண்ணு நீ மனசுக்குள் சிரிச்சிட்டிருக்கே இல்லையா?

லீலா: சத்தியமாய் இல்லீங்க. நான் வேறே ஒண்ணுக்கும் துப்பு இல்லாவிட்டாலும் இது ஒண்ணு மட்டுமாவது உங்களுக்குக் கொடுக்க முடியுதேன்னு சந்தோஷப்படறேன்.



'குமாரி மஞ்சுளாவா! ஆச்சரியமாக இருக்கிறதே! 'எடுப்பார் கைப்பிள்ளை' படத்தில் இப்படித் தோன்றுகிருராம். ஆள் பாதி ஆடை பாதி என்பது உண்மைதான் போலும்.

(அவன் கழுத்தைக் கட்டிக் கொள்கிருள்.)

கனக: (அவளை முத்தமிட்டபடி) ஒழுங்கான குடும்பம் ஆரம்பியுங்கன்னு காலையில் சொன்னுய் இல்லே! பார்த்திட்டே இரு. இன்னும் கொஞ்ச நாள் தான். இந்தக் கனகராஜ் லட்சாதிபதியாகிவிடுவான். திருமதி லீலா கனகராஜோட கழுத்திலும் காதிலும் டாலடிக்கும்!

லீலா: அவ்வளவு வேண்டாம். ஒரே ஒரு நகை...

(விநேத் ஏதோ சிணுங்குகிருன்.)

லீலா: இருங்க, இவனை நகர்த்திவிட்டு வர்றேன்.

(குழந்தையை அணைத்து எடுத்து, அறையின் இன்னெரு மூலையில் கிடத்துகிருள். அவனது பிஞ்சு விரல்கள் ஒரு காகித ஊதலைப் பற்றியபடி இருப்பதைக் கண்டு புன்னகை செய்கிருள். விளக்கை அணைத்துவிட்டு வந்து படுக்கிருள்.)

கனக: லீலா, எத்தனை நேரம்! (அவளை இறுக அணைத்தபடி, தனக்கும் அவளுக்குமிடையேயுள்ள துணித் தடையை அகற்ற முற்படுகிருன்.)

லீலா: பொறுங்களேன். இரவு பூரா இருக்குது. (புடவையைத் திரும்பப் போர்த்துக் கொண்டு சிறிது விலகி) இப்படியே எத்தனை நாளைக்கு இருக்கிறதுன்னு எனக்கு மனசுக்குக் கஷ்டமாய் இருக்குதுங்க.

கனக: ஏய்! என்ன திடீர்னு தத்துவத்திலே இறங்கறே! இதுதான் நேரமா அதுக்கு?

லீலா: ஆமாங்க. இதுதான் நேரம். சாப்பிடறப்போ சாப்பாட்டைப் பத்தியும், வேலே செய்கிறப்போ வேலையைப் பத்தியும் பேசற மாதிரி, இந்தச் சமயத்திலே தான் இதைப் பத்திப் பேசணும்.

கனக: (கோபமாக) என்ன சொல்றே நீ?

லீலா: (அவன் கையை எடுத்து தன் கழுத்தில் தடவிக் காட்டுகிருள்). இது இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி வெறுமையாகவே இருப்பது?

கனக: அதையெல்லாம் பொழுது விடிஞ்சு பேசிக்கலாம்.

லீலா: என் வாழ்க்கை அஸ்தமனமாயிட்டிருக்குதே, அதைப்

பாருங்க.

கனக: லீலா! இப்போ நீ கிட்டே வரப் போறியா இல்லையா? (வலுக்கட்டாயமாக அவள் இதழ்களில் முத்தமிடுகிறான். புடவைத் தலைப்பை மறுபடி பற்றுகிறான்.)

லீலா: (திமிறி விலகிக் கொண்டு) காரணமாய்த்தான் சொல்றேன். அதோ நம்ம செல்வம் தூங்குது. பாருங்க. அவன் ஒருத்தன் போதும்—தகப்பன் தெரியாத குழந்தை என்கிற அந்தஸ்துக்கு. ஊரறிய இதோ தாலி கட்டறேன் கட்டறேன்னு நாலு வருஷமாய் தள்ளிப் போட்டுட்டீங்க. இந்த ரெண்டும்கெட்டான் நிலைமையிலேயே இன்னொரு குழந்தையும் பிறக்கணுமா?

கனக: அதெல்லாம் பிறக்காது. நான் ஜாக்கிரதையா இருக்கிறேன்.

லீலா: ஒரு ஜாக்கிரதையும் வேண்டாங்க. அது நல்லா பிறக்கட்டும். மதிப்பாய், கௌரவமாய், தலைநிமிர்ந்து சொல்லிக்கிற மாதிரி இன்னும் பத்துக் குழந்தைகள் கூட நான் பெத்துக்கத் தயார். ஆனால் அதுக்கு முன்னால், மனைவிங்கிற மதிப்பை ஊரறிய எனக்குக் கொடுக்கணும். இந்தக் கழுத்திலே ஒரு தாலி உங்க கையாலே ஏறணும். அந்த ஒரு பாக்கியத்துக்காக நான் எந்தத் தியாகமும் செய்யத் தயார்!

கனக: இடுப்பிலே ஒரு மூணு வயசுக் குழந்தையை வைச்சிட்டு, கழுத்திலே தாலியைக் கட்டிக்கப் போறியாக்கும்! பைத்தியக்காரி! சிரிப்பாங்க.

லீலா: பரவாயில்லீங்க. நாலு நாள் சிரிச்சிட்டு அப்புறம் ஓய்ஞ்சிடுவாங்க. ஆயுள் பூரா, தலைமுறை தலைமுறையாய் உங்களையும் என்னையும் நம்ம குழந்தைகளையும் பார்த்துச் சிரிப்பாங்களே, அதுக்கு இது எவ்வளவோ தேவலை.

கனக: அதாவது, பேரம் பண்ணுகிறாய்?

லீலா: என்ன பேரம்!

கனக: தாலியைக் கட்டினால் தான் இனி உன் கிட்டே வரலாம் என்கிறாய்?

லீலா (கொஞ்சலாக அவன் கன்னத்தில் தட்டியபடி): அப்படித்தான் வைச்சுக்குங்களேன். (தலையை வருடியவாறு) இதோ பாருங்க. நீங்க எதுவும் செலவழிக்க வேண்டாம். ஏதோ என் கையிலே ஐம்பது நூறு இருக்கு. முன் கட்டிலே ஒரு அய்யர் இருக்கார். நாளைக்கே அவர் மூலமாய் ஏற்பாடு பண்ணிடறேன். தாலி கட்டியானதும் குடித்தனக்காரங்களையெல்லாம் சும்மா கூப்பிட்டு வெத்திலை பாக்குக் கொடுத்தால் போதும்.

கனக: ரைட்! இப்போ...

(அணைந்துக்கொள்கிறார்கள்.)

4

(காலை பத்து மணி. லீலாவின் போர்ஷன் கலகலவென்று இருக்கிறது. ஊதுவத்தியின் மணம் கமழ, குத்து விளக்கு எரிகிறது. அக்கினி வளர்த்துக் கொண்டிருக்கிறார் புரோகிதர். குடித்தனக்காரர்கள் ஆண்

போன வார அட்டையில் அந்தப் பெண் ஆடுவது ஸ்னூக்கர் ஆட்டம்தான்.

உலகிலேயே முதன் முதலாக 'ஸ்னூக்கர்' விளையாட்டு துவங்கப்பெற்ற இடம் எங்கள் நீலகிரி மாவட்டம்தான். பீல்டு மார்ஷல் சர் நெவில் சேம்பர்லின் என்பவரால் 1875'ம் ஆண்டு ஊட்டி கிளப்பில் இது ஆரம்பிக்கப்பட்டது. (இவ்வருடம் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.)

ஒரு விளையாட்டு வீரர் குறி தவறி, பந்தை அடிப்பதற்குப் பதிலாக மேசையில் விரிக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த விரிப்பைக் கிழித்துவிட்டார். உடனே 'ஸ்னூக்கர்' என்று கத்திவிட்டார். (ஸ்னூக்கர் என்பதற்கு ஆங்கிலத்தில் 'தவறிவிட்டது' என்ற ஒரு பொருள் உண்டு.) அந்த வார்த்தையே இந்த விளையாட்டிற்கு நிலையான பெயராக அமைந்துவிட்டது.

ஆதாரம்: 'இந்து'—ஜே. சேகர்



களும் பெண்களுமாய்ப் பத்துப் பதினைந்து பேர் கூடியிருக்கிறார்கள். குழந்தை வினோத் லீலாவிடம் வருகிறான்.)

வினோத்: அம்மா! இன்னிக்குப் பீப்பீ உண்டா?

லீலா: இல்லேடா, கண்ணு. நாதசுரத்துக்கு நூறு ரூபாய் கேட்கிறாங்க...

வினோத்: நான் வைச்சிருக்கேம்மா ஊதல்!

(காகித ஊதலை ஊதிக் கொண்டே வாசலுக்குச் செல்கிறான்.

எல்லாரும் சிரிக்கிறார்கள். மேலும் சிலர் வந்து அமர்கிறார்கள். புரோகிதர் மந்திரம் சொல்ல, கனகராஜ் சொல்கிறான். திருமாங்கல்யத்தைப் பெற்றுக் கொண்டு, லீலாவின் கழுத்தில் கட்டுகிறான்.)

லீலா: இன்றைக்குத்தான் என் குறை...(திடுக்கிட்ட குரலில்) யாரது வாசலில்?

(இரண்டு மூன்று போலீஸ்காரர்களும் ஓர் அதிகாரியும் வருகிறார்கள். ஒரு குடித்தனக்காரர், குழந்தை வினோத்தைத் தூக்கிக் கொண்டு உள்ளே வருகிறார்.)

குடித்தனக்காரர்: (லீலாவையும் கனகராஜையும் சுட்டிக்காட்டி) அதோ அவர்கள்தான் இந்தக் குழந்தையோட பேரண்ட்ஸ். இதோ பாருங்க. இப்பக்கூடக் குழந்தை கையிலே...

(ஊதல் காகிதத்தைப் பிரித்துக் காட்டுகிறார். வினோத்தின் கால் சட்டைப் பையிலிருந்தும் சில காகிதங்களை வெளியே எடுக்கிறார்.)

கல்யாணத்துக்கு வந்திருப்பவர்கள்: ஆ! எல்லாம் நூறு ரூபாய் நோட்டு!

லீலா: (கனகராஜை உலுக்கி) ஐயையோ! என்னங்க இதெல்லாம்?

குடித்தனக்காரர்: எல்லாம் கள்ள நோட்டுங்க! காலையிலே உங்க குழந்தை வைத்துக்கொண்டு விளையாடுவதைப் பார்த்தேன். சந்தேகம் வந்து போலீசில்...

(கனகராஜ் நழுவி ஓட முயலுகிறான். ஆனால் போலீஸ்காரர் பிடித்துவிடுகிறார்.)

லீலா: என்னங்க, இதெல்லாம் உண்மையா?

[ஒரு போலீஸ்காரர் கனகராஜின் பெட்டியை எடுத்து வந்து இன்ஸ்பெக்டரிடம் நீட்டுகிறார்.]

போலீஸ்: சார். இதோ இந்தப் பெட்டிதான். கள்ள நோட்டுக்கள் மொத்தமும் இதில் இருக்கிறது.

(கனகராஜைப் போலீசார் அழைத்துச் செல்கிறார்கள்.)

ஒரு பெண்: (லீலாவை அணைத்துக் கொண்டு): தாலி கட்டிக்கணும்னு துடியாத் துடிச்சே. அது இப்படியா முடியணும்?

லீலா: ஆமாம் அக்கா. தாலிக்காக எந்தத் தியாகமும் செய்வேன்னு சொன்னேன். தாலி வந்திட்டுது. ஆனால்...அவர்...அவர்...

(கனகராஜைப் போலீஸ் அதிகாரிகள் அழைத்துச் செல்கிறார்கள். லீலா கண்களில் நீர் வழிய, எல்லாப் பெண்களுக்கும் குங்குமம் வெற்றிலை வழங்கத் தொடங்குகிறாள்.)



கவர்னர்: ஷா.
முதன் மந்திரி: ரே.
மந்திரி: பை.
நடிகர்: சோ.

—பெருமாநல்லூர் சம்மு.

டைவர்ஸ்

26

நீ ரிக், நான் சாமம்; நான் சாமம், நீ ரிக். ரிக்கும் சாமமும் ஒன்றை விட்டு ஒன்று பிரியாது இருப்பது போல நாம் இருவரும் இருக்க வேண்டும்.

—மாப்பிள்ளை, விவாகத்தின் போது கூறும் ஒரு மந்திரத்தின் அர்த்தம்.

அப்பாவிடம் ஏகத்தாளமாகப் பேசிவிட்டோம் என்ற திருப்தியில், தடதடவென்று மாடி ஏறித் தன்னுடைய அறைக்குள் பிரவேசித்த வசுவின் மனத்தில் வீசிய புயல் மெல்ல மெல்ல அடங்கியது. இனி அவளுக்கும் கோபிக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. என்றாவது ஒரு நாள் எங்கேயாவது தெருவிலோ பீச்சிலோ அவன் எதிர்ப்பட்டாலுங்கூட அவள் புன்னகை பூக்கவோ, 'குட் மார்னிங்' சொல்லவோ தேவையில்லை.

கல்யாணமான நாளிலிருந்து இன்றுவரை நடந்ததெல்லாம் ஒரு சரித்திரம். ஏன், ஒரு சகாப்தமே கூட. இந்தச் சரித்திரமும் சகாப்தமும் அவளுக்கு மெள்ள மெள்ள மறந்துபோய் விடும். எல்லாமே ஒரு துர்ச் சொப்பனம்போல மறைந்துவிடும்.

திடீரென்று போன் அலறியது.

எடுத்தாள். ஒரு திகைப்புடன் கேட்டாள். ஒரு நடுக்கத்துடன், "இதோ... புறப்பட்டுவிட்டேன்," என்றாள்.

அவள் தடதடவென்று மாடிப்படிகளில் இறங்கி ஓடியபோது கூடத்தில் ராஜலட்சுமி இன்னும் பக்த விஜயத்திலிருந்து வெளியே வரவில்லை. சிவராமன் சோபாவில் உட்கார்ந்து ஏதோ ஒரு பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தார்.

பி.வி.ஆர்

வசு காரை நோக்கி ஓடினாள். அது இரண்டடி நகர்ந்த பிறகு தான், இடது முன் சக்கரம் ஜீவனற்றுப் போய் இருப்பதை உணர்ந்தாள். வேதராமன் வீட்டிலிருந்து திரும்புகையில் எங்கேயோ ஓர் ஆணி ஏறி இருக்கிறது. அப்பாவின் காரை எடுக்கலாமா என்ற கேள்வி எழுந்த மறுகணமே அதை மறந்தாள். அவரிடம் போய் சாவிக்காக நிற்க, அவளுடைய ரோஷம் மறுத்தது.

டாக்ஸியைத் தேடிக்கொண்டு ஓடினாள்.

வசு தடதடவென்று இறங்கி வெளியே ஓடுவதைக் கண்ட சிவராமனுக்கு ஆச்சரியத்தைவிடக் கோபமே மேலிட்டது.

"ராஜி!" என்றார்.

ராஜலட்சுமி காதில் விழுந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை.

"ராஜி!" என்று அவர் இரைந்தார்.

இப்போது ராஜலட்சுமி ஏறிட்டுப் பார்த்தாள்.

"பார்த்தாயா? வசு இப்பத்தான் வந்தாள். மறுபடியும் எங்கேயோ போய் விட்டாள்.... மணி ஒன்பதரை!"

"தடுத்து நிறுத்தியிருக்கலாமே?" ராஜலட்சுமி, பக்த விஜயத்தில் விட்ட பகுதியைத் தேடலானாள்.

"ராஜி!" என்ற அவர், அவள் தம்மைப் பார்க்கிறாளா இல்லையா என்பதையும் கவனிக்காமல், "இவள் போகிற போக்கு எனக்குப் பிடிக்கவேயில்லை!" என்றார்.

"எல்லாருக்கும் பிடிக்கிறபடிதான் எல்லாரும் போகிறார்களா?"

"என்ன சொல்றே நீ?"

"அவள் என் வயிற்றிலே பிறந்த பெண்ணானாலும் தைரியமும் துணிச்சலும் இருக்கு."

"அப்படீன்னா?"

"எனக்கு இல்லேன்னு அர்த்தம்."

சிவராமனுக்குத் திகைப்பாக இருந்தது. "என்ன ராஜி. உன் பேச்சே இன்னிக்குப் புதிசா இருக்கு!"

"பேசாமலே இருந்து இருந்து உள்ளுக்குள்ளே புழுங்கிப் புழுங்கிச் சாகிறதைவிட, பேசித் தீர்த்துட்டா மனசுக்குக் கொஞ்சம் சமாதானம் இருக்கும் போலிருக்கு."

"நான் என்ன கேட்டேன்? நம்ம பெண் வசுவின் போக்கைப் பார்த்தாயா என்றேன்."

"நீங்கள் அவளுடைய போக்கைப் பார்த்தாயான்னு என்னைக் கேட்கிறீர்கள். இந்த வீட்டிலே மத்தவர்கள் போகிற போக்கைப் பார்த்தீர்களான்னு நான் யாரைக் கேட்கிறதாம்?"

"எனக்குப் புரியலே, ராஜி."

"புரிஞ்சாலும் புரிஞ்சுதுன்னு சொல்வீர்களா?"

அவர் எழுந்து அவளிடம் வந்து நின்றார்.

"சரி, சரி. கண்டிப்பாக உனக்கு ஏதோ ஆகியிருக்கு...பொம்மனாட்டிகளுக்கு நாற்பது நாற்பத்தஞ்சு வயசு ஆனாலே, மனசு கொஞ்சம் நாளுக்குக் குதர்க்கமா ஓடும்னு சொல்லுவார்கள்...நீ எதையோ அசை போட்டுக் கொண்டிருக்கே, ராஜி! என்கிட்டே கூடச் சொல்லமாட்டேன் என்கிறே?"

ராஜலட்சுமி துணிந்துவிட்டாள்.

"சொன்னா என்ன செய்வீர்கள்...கொஞ்சம் கண்ணீர் வடிப்பீர்கள்...அப்புறம் நெகிழ்வீர்கள்...அப்புறம், பிஸினஸ் இருக்கு ரெயில் ஏறணும்னு ரெயில் ஏறுவீர்கள்...நீங்க ஏறுகிற ரெயில் எங்கே போகிறது, அந்த இடத்திலே என்ன பிஸினஸ்னு இன்னும் எனக்குத் தெரியாதுன்னு நினைக்காதீர்கள்..."

ஒரு நிமிடம் சிவராமன் சிலையாகிப் போனார்.



"எந்த இடம் என்ன பிஸினஸ்னு நீ கற்பனை பண்ணிவைச்சிருக்கே ராஜி!"

"நான் பண்ணி வைச்சிருக்கிறது கற்பனையா இருந்தா என்னைவிட அதிருஷ்டசாலி யாருமே இருக்க முடியாது!"

"ராஜி, இன்று வரை உனக்கும் எனக்கும் இடையில் எந்த ரகசியமும் கிடையாது. ஆனா இப்போ நீ பேசற பேச்சைப் பார்க்கிறபோது உன்கிட்டேயிருந்து நான் எதையோ மறைச்சு வைச்சிருக்கிற மாதிரிப் படுகிறது. நான் எதை உன்னிடமிருந்து மறைத்து வைக்க முடியும்?"

"ஏன் கேவலம் ஒரு வைர நெக்லஸை ஏன் அலமாரியில் மறைத்து வைத்தீர்கள்?"

ஒரு கணம் சிவராமன் முகம் மாறிற்று. மறுவினாடி சமாளித்துக் கொண்டு கலகலவென்று சிரித்தார்.

"பூ. இவ்வளவுதானா! நான் என்னமோன்னு நினைச்சேன். அப்பப்பா, இந்தப் பொம்மனாட்டிகள் மனசிலே சந்தேகம் ஒரு அணுவா ஆரம்பிச்சுப் பேயா வெளியே வருகிறது. . .ராஜி, இதைக் கேளு. . .இந்த வருஷம் உன் பர்த்டேக்கு அந்த நெக்லஸை வாங்கிட்டு வந்தேன். . . பதினாலாயிரம் ரூபாய். அதிலே மயில் பதக்கம் இருந்தது. வீட்டுக்குக் கொண்டு வர்ற வழியிலே, என் ஃபிரண்டு ஒருத்தர் வீட்டுக்குப் போனேன். அவருக்கு வைரம் பார்க்கத் தெரியும். நெக்லஸ்லே மூன்று கல் சுகமில்லே என்றார். ஒன்றிலே ரத்தபிந்து இருக்கு, இன்னொண்ணிலே காக்காப்புள்ளி இருக்குன்னார். பச்சைக் கல்லிலே மயில் பதக்கம் உன் நட்சத்திரத்துக்கு ஏத்தது இல்லேன்னார். சரி, அப்புறம் இன்னொண்ணு வாங்கிக்கலாம்னு இருந்தேன்."



மானேஜர்: "ஹய்யோ... ஹயோ...! எல். ஐ. சி. கொண்டை போட்டிட்டு உள்ளே வராதே!"

புத்தகத்தை விட்டுக் கண்ணை எடுக்காமல் அவள் குத்தலாகக் கேட்டாள். "என்னுடைய நட்சத்திரத்துக்கு ஒத்துவராத நெக்லஸ் அங்கலக்குறிச்சி அம்மாளுக்கு ஏத்ததாக இருந்ததாக்கும்?"

மின்சாரத்தால் தாக்குண்டவரைப்போல சிவராமன் துள்ளினார். "என்ன பேத்தறே?"

"நான் இன்னிக்குப் பேசறது எல்லாமே உங்களுக்குப் பேத்தலாகக் கேட்கிறது, இல்லியா? உங்க நெக்லஸுக்கான பில்லை மறுநாளே கடையிலிருந்து ஒரு சிப்பந்தி கொண்டுவந்தான். அதைத் தபாலில் அனுப்பும்படி நான் தான் சொன்னேன்!"

அவர் மௌனம் சாதித்தார்.

"இதுவும் பேத்தலா?"

அவள் கேட்ட தோரணை அவருக்குக் கோபமூட்டிவிட்டது.

"ராஜி, மூடு வாயை! நீ என்னை வேவு பார்க்கிற அளவுக்கு உயர்ந்துட்டே இல்லே? அந்த அங்கலக்குறிச்சி அம்மான்னு ஏகத்தாளமாய்ப் பேசினாயே, அவள் யார் தெரியுமா?"

"அமிர்தம்மா!"

"பெயரைக் கரெக்டாச் சொல்லிட்டே.. ஆனா அவள் யார்னு தெரியுமா?"

"தெரியும். ஆனா சொல்ல நா கூசுகிறது. ஏன் தெரியுமா, நான் உங்களுடைய தாலி கட்டிய பெண்டாட்டி. நல்லது, பொல்லாதது எல்லாவற்றிலும் கூட இருக்க வேண்டியவள்."

"உனக்கு இன்னும் என்னென்ன தெரியும்?"

"இதுக்கு மேலே தெரியறத்துக்கு ஒண்ணும் இல்லே."



அட கண்ராவியே!

'மிடுக்கு கால் மீசை முக்கால்' ராம்தாஸா இவர்? நம்ப முடியவில்லை. 'தாய் வீட்டுச் சீதனம்' படப்பிடிப்பின் இடைவேளையின்போது எடுத்த படம்.

—'டூல்'

''எல்லாம் உன் அண்ணன் ராஜாமணி உளறிக் கொட்டியிருக்கிறுன்!''

''அவர் உளறியிருந்தால் தேவலையே.. நான் நம்பியே இருக்க மாட்டேன். ஏன் தெரியுமா, மணையிலே உட்கார்ந்த நாளிலிருந்து நான் உங்களை ஒரு ராமராக நினைச்சு வணங்கியிருக்கேன்.. ஆனு நான் நினைச்ச ராமர் இங்கே இல்லே என்று எனக்கே தெளிவாயிட்டுது..''

''கேவலம் ஒரு நெக்லஸை வைச்சுட்டு நீயே ஒரு ஆரம்பம்—முடிவு என்று எல்லாம் கோலம் போட்டாயாக்கும்?''

''இல்லே..நான் நேரே வந்து அங்கலக்குறிச்சியிலே அவள் வீட்டிலேயே பார்த்தாயிற்று.''

அவள் தொடரவில்லே.

அவருடைய ரத்தம் கொதித்தது.

''பூனை மாதிரி இருந்து கொண்டு என்னென்ன துப்பு எல்லாம் துலக்கி இருக்கே..? அப்புறம் இங்கே வீட்லே பூஜை, தீர்த்தம்னு வேஷம் போடறே?''

''ஆமாம், நான் போட்ட வேஷம் யாரையும் பாதிக்கலே. நான் வேஷம் போட்டு உங்களை ஏமாத்தலே. நான் செய்யற பூஜை என்னை ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள் காப்பாற்றுதாண்ணுதான் அழுதுட்டிருக்கேன். ஆனு நீங்க போட்டுக் கொண்டு வருகிற வேஷம்?.. சே!''

''ஆல்ரைட்! நான் இது வரையில் வேஷம் போட்டேன், ஆனு இனிமே அதுக்கு அவசியமில்லே. கலேச்சு விடறேன்.. நீ மணையிலே உட்காருவதற்கு முன்னேயே அவள், அந்த அமிர்தம் மணையிலே உட்கார்ந்திருக்க வேண்டும்.. அதுக்கு ஊரே எதிர்த்து வந்தது. அதிகாரம் மட்டும் இருந்திருந்தால் அமிர்தத்தை நாட்டை விட்டே துரத்தியிருப்பார்கள்.. ஏன், உன் அண்ணன்தான் அவள் மண்டையில் கடைசி அடி அடித்தான்.. பணத்தால் எதையும் தீர்த்து விடலாம்னு என்கிட்டேயிருந்த பத்தாயிரத்தை வாங்கி அமிர்தம்மாவின் அப்பாவிடம் கொடுத்தான்..''

அவருக்கு மூச்சு வாங்கியது.

"என் அண்ணா கொடுத்த அடியுடன் கதை முடியவில்லையே!" என்றாள் அவள்.

"நான் முடிய விடவில்லை. சமூகம் அவளை என்னுடைய மனைவியாகப் பார்க்கத் தடை போட்டது. ஆனால், அவள் என்னுடைய தாலி கட்டாத மனைவியாக வாழ்வதை லட்சியமே செய்யவில்லை. அப்புறம்.. அப்புறம் எனக்குப் பணமும் காசும் குவிந்தபோது, என்னைத் தியாகின்னு கூட வாழ்த்தினார்கள்."

"கட்டின பெண்டாட்டியைப் பிணமா மதிச்சு, அதுக்குச் சந்தனம் பூசி அலங்காரம் செய்து விட்டு, கட்டாத ஒருத்திக்கு வாழ்வு கொடுக்கிறதுக்குப் பெயர் தியாகம்னா நீங்க பெரிய தியாகி தான்!"

"இவ்வளவுக்கும், அவள் என்னை மறந்து போயிருந்தாள். நான் உன்னுடன் சந்தோஷமாக வாழணும்னு வாயார வாழ்த்தினாள். என்னென்னிக்கும் கல்யாணமே செய்து கொள்ள மாட்டேன்னு கூடச் சபதமெடுத்தாள்."

"அதைக் காப்பாத்தத்தான் நீங்கள் சமய சஞ்சீவியாக வாய்த்தீர்களே!"

சிவராமனால் பொறுக்க முடியவில்லை. "ஆல் ரைட், ஆல் ரைட்.. இதுதான் என் கதை....இனிமே நீ என்ன வேணும்னாலும் செய்து கொள்... இப்போது என் நெஞ்சிலிருந்து ஒரு பாரம் இறங்கி விட்டது. உன்னை ஏமாத்திக் கொண்டிருக்றேன் என்கிற நெஞ்சுறுத்தல் இருக்காது."

"இனிமே நான் என்ன செய்ய முடியும்?"

"வசு தன் ஹஸ்பெண்டை 'டிராப்' பண்றதாகச் சொன்னாள். நீயும் உன் பெண் வழியிலே செல்லலாம்.. நான் குறுக்கே நிற்க மாட்டேன்."

"போவேன்..ஆனா என் வயசு? அவளுடைய யுகமும் என்னுடைய யுகமும் ஒண்ணா? பாம்பை மிதிக்கிற வயசிலே அவள் இருக்கிறாள். பழுதையை மிதிக்கவும் பயப்படற நிலையிலே நான் இருக்கேன். சொத்து சுகம் வேண்டாம். புருஷனுடைய அன்பு தான் வேணும் எனக்கு. இப்போ அது இல்லைன்னு தீர்மானமாகத் தெரிந்து விட்டதனாலே..."

"அதனாலே என்ன செய்யப் போறே? இந்த வீட்டிலே நீ மட்டும்.. நீ மட்டும் இருந்து கொள். வக்கீலைக் கொண்டு, நாம் நமக்குள் எல்லாவற்றையும் பிரித்துக் கொள்ளுவோம்."

"பிரிக்க முடியாததுன்னு ஒண்ணு இருக்கே.... தாம்பத்தியத்தைப் பிரிக்க வேதங்களில் கூட இடமில்லே..."

"அப்போ?"

"இனிமே நீங்கள் நீலகண்டரா இருங்கள்.... நான் நீலாயதாட்சியாகவே இருந்து கொள்றேன்.. இனிமே நான் வாழா வெட்டிங்கறது நம்ம ரெண்டு பேருக்கும் தெரிஞ்ச ஒரு ரகசியமாக இருக்கட்டும்."

சிவராமன் அயர்ந்து போனார். ராஜலட்சுமி தொடர்ந்தாள்.

"இப்போ நடந்ததெல்லாம் நம்முடைய நாடகத்தின் கடைசிக் காட்சி.. அதை நாளைக்கே நாம் மறந்து விடவேண்டும். நான் பூஜை செய்வேன். நீங்கள் இருக்க வேண்டும். தீர்த்தம் தருவேன். த[illegible] குனிந்து வாங்கிக் கொள்ள வேண்டும்.. தயை செய்து ஒத்துழைக்கணும். வசுவும் மற்றவர்களும் நம்மை லட்சிய தம்பதின்னு எடை போடறாங்க. அந்த எடை அதிகம். குறைவு வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்!"

(தொடரும்)

தர்மபுரியிலிருந்து சேலத்திற்கு ஒரு தனியார் பஸ்ஸில் பிரயாணம் செய்தேன். பஸ் ரொம்ப மெதுவாக ஓடிக்கொண்டிருந்தது. பிரயாணிகள் முணுமுணுத்தார்கள். ஊஹூம், டிரைவர் வண்டியில் வேகத்தைக் கூட்டுவதாக இல்லை.

பஸ்ஸிலிருந்த ஒருவர் டிரைவரைப் பார்த்து, "டிரைவர் சார், மாட்டு வண்டிக்காரர் ஒருவர் சைடு (வழி) கேட்கிறார். சைடு கொடுங்கள்," என்றார். பிறகு பார்க்க வேண்டுமே, பஸ்ஸின் வேகத்தை.

—வை. பாண்டியன்



27

மணப்பெண் மணமகனைத் தொட்டுக் கொண்டிருக்க, அவன் பதினாறு ஓமங்களைச் செய்கிறான். நான்காவது ஓமத்தின் அர்த்தம்:

''இவள் பிறந்த வீட்டை விட்டுப் பதியின் வீட்டுக்கு வருகிறாள். கன்னிகைக்குரிய நியமங்களை விட்டுவிட்டாள். அதனால் யாதொரு தோஷமும் இல்லாமலிருக்க, ஆத்ம சொரூபத்துக்கு ஆஜ்யத்தைத் தருகிறேன்.''

—சம்ஸ்காரம்

நித்யாவின் கணவன் முரளிக்கு விபத்து!

டாக்ஸி அவள் இருக்கும் தெருவைக் கடந்து நெடுஞ்சாலையை அடைந்து நிதானமாக ஓட ஆரம்பித்த பிறகுதான், வசு நிலைமையை எண்ணிப் பார்க்கலானாள். டெலிபோனில் வந்த செய்தி அவளைத் திடுக்கிட வைத்துவிட்டது.

அவளும் நித்யாவும் முரளியும் சினிமா பார்த்துவிட்டுச் சரியாக எட்டேகால் மணிக்கு அமெரிக்கன் எம்பஸியை விட்டு வெளியே வந்தார்கள். குழம்பிய மனநிலையிலிருந்த வசு சாப்பாடு வேண்டாமென்று சொல்லிவிட்டுக் காரில் புறப்பட்டு வந்துவிட்டாள். நித்யாவும் முரளியும் ஏமாற்றத்தோடு டாஜ் கொரமாண்டல் ஓட்டலை நோக்கி நடக்க ஆரம்

பி.வி.ஆர்.

போட்டி
எமனுடன்

அந்தக் கண்டக்டரின்பெயர் ஜெபமணி. சுமார் 30 வயதான இவரது சொந்த ஊர் குமரி மாவட்டம், காஞ்சிரகோடு கிராமம்.

1972 அக்டோபர் மாதக் கடைசியில் கோவில்பட்டி அருகே எக்ஸ்பிரஸ் பஸ் ஒன்று வன்முறைக் கும்பல் ஒன்றினால் தடுத்து நிறுத்தப்பட்டுத் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. அந்தப் பஸ்ஸில் கண்டக்டராக வந்த ஜெபமணி சாமர்த்தியமாக பஸ்ஸிலிருந்து இறங்கித் தப்பித்துவிட்டார்.

1974'ல் கோவில்பட்டிக்கும் சாத்தூருக்கும் மத்தியில் பஞ்சு ஏற்றி வந்த லாரியும் ஓர் எக்ஸ்பிரஸ் பஸ்ஸும் மோதியதில் பல பயணிகள் மாண்டனர். அந்த எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் கண்டக்டராகச் சென்றவர் ஜெபமணிதான். அப்போதும் உயிர் தப்பினார்.

பித்திருக்கிறார்கள். ஜெமினியைத் தாண்டுகையில் ஓர் ஆட்டோ ரிக்ஷா அவன் மீது மோதியிருக்கிறது. அவனை உடனே நித்யா டாக்ஸியில் ஏற்றிக்கொண்டு ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சென்றிருக்கிறாள். பலத்த காயம் ஏதும் இல்லை என்றும் உடனடியாகத் திரும்பிவிடலாம் என்றும் ஒரு டாக்டர் சொன்னாராம்.

எப்படியும் நித்யாவும் முரளியும் மேற்கு மாம்பலம் வீட்டுக்குத்தான் திரும்புவார்கள் என்ற நம்பிக்கையில் வசு டாக்ஸியை மேற்கு மாம்பலம் வீட்டுக்குப் போகச் சொன்னாள். 'பாவம் நித்யா' என்று அவள் உள்ளம் முணுமுணுத்தது.

இரவு பத்து மணிக்கு மேற்கு மாம்பலம் வீட்டை நெருங்கியபோது வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. டாக்ஸிக்காரனிடம் ஒரு பத்து ரூபாய் நோட்டை வீசி எறிந்துவிட்டு மீதிச் சில்லறையை எதிர்பார்க்காமலேயே அவள் அவசர அவசரமாக மாடி ஏறினாள்.

நாகராஜனும் சீதாவும் ஹாலில் உட்கார்ந்திருந்தார்கள். இவர்கள் எங்கே?..

வசு மனத்தில் உதித்த கேள்விக்கு நாகராஜன் பதில் சொன்னான். விபத்து பற்றிக் கோபிக்குச் செய்தி போயிருக்கிறது. நாகராஜனுடன் புறப்பட்டிருக்கிறான். சீதாவும் அவர்களுடன் கிளம்பியிருக்கிறாள். நித்யா அவளுக்குப் பழக்கமில்லை என்றாலும், இந்த மாதிரி சமயத்தில் பெண்ணுக்குப் பெண் ஒத்தாசையாக வேண்டியிருக்கும் என்று அவளுக்குத் தோன்றியிருக்கிறது.

"முரளிக்கு எப்படி இருக்கிறது?" என்று வசு கேட்டாள்.

"ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு மாற்றியிருக்கிறார்கள்," என்றான் நாகராஜன்.

"உட்கார் வசு," என்றாள் சீதா.

"ஜெனரல் ஆஸ்பத்திரிக்கா? அடி ஒன்றும் பலமாக இல்லை என்றார்களே!" என்றாள் வசு. அவளுக்கு நாகராஜன் கொடுத்த செய்தி அதிர்ச்சியை அளித்தது.

"நாங்கள் ராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலிருந்துதான் வருகிறோம். ஆட்டோ மோதினதில் கீழே விழுந்த முரளிக்கு மண்டையில் அடி. ரத்தம் கசிகிறது. எதற்கும் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிப் பார்க்கலாம் என்று தீர்மானம் செய்தார்கள். நீங்க வர்றதுக்கு அஞ்சு நிமிஷம் முன்னாடி போன் பண்ணினேன். பயப்படும்படியா ஒண்ணும் இல்லை என்றார்கள்."

வசு பெருமூச்சு விட்டாள்.

"நாங்கள் மூன்று பேருமா சினிமா பார்த்து விட்டு வெளியே வந்திருக்கிறோம். எட்டேகால் மணிக்கு நான் இப்படி வந்திருக்கிறேன். அவர்கள் அப்படிப் போயிருக்கிறார்கள். சே! இதைத்தான் விதின்னு சொல்லுகிறார்கள் போலிருக்கு!" என்றாள் அவள். "நானும் டாஜ் ஓட்டலுக்குப் போவதென்று முடிவு செய்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது. பாவம் நித்யா, எவ்வளவு சந்தோஷமாக இருந்தாள் தெரியுமா?"

"நாளைக்கே அவள் பழையபடி ஆகிவிடுவாள். நீ கவலைப்படாதே," என்றாள் சீதா. அவள் சொற்கள் தனக்கு மிகுந்த ஆறுதலைத் தருவதை வசு உணர்ந்தாள்.

சென்ற ஜூலை ஏழாம் தேதி, நாகர்கோவிலிலிருந்து சென்னைக்குச் சென்ற எக்ஸ்பிரஸ் பஸ், கோவில்பட்டிக்கும், சாத்தூருக்கும் மத்தியில் ஓடப்பட்டி கிராமத்தில் புளியமரத்தில் மோதியது. இம்முறை ஜெபமணி தப்பவில்லை. பலியாகிவிட்டார்.



ஆதாரம்: தினமலர். —'முத்து'

"முரளியைப் பற்றிப் பயப்படவே வேண்டாம். அவன் பிழைத்து எழுந்து வந்தபின் நாங்கள் எல்லோரும் திருப்பதிக்குப் போய் தரிசனம் செய்துவிட்டு வரலாம் என்று இருக்கிறோம்" என்றான் நாகராஜன். "சீதா, பேசிக்கொண்டே இருந்தால் எப்படி.. வசு சாப்பிடவில்லையோ என்னமோ. ஏதானும்உள்ளே இருக்கா?"

"பிரெட், ஜாம் எல்லாம் இருக்கு. நித்யா பாலைக் காய்ச்சி வைத்திருக்கிறாள்," என்றாள் சீதா.

"நான் போய்க் கொஞ்சம் பழம் வாங்கிக் கொண்டு வருகிறேன்."

'எனக்கு ஒன்றும் வேண்டாம்' என்று சொல்ல நினைத்த வசு மனத்தை மாற்றிக் கொண்டாள். உண்மையிலேயே அவளுக்குப் பசி காதை அடைத்தது. சினிமா பார்த்த போது மனத்தில் கொழுந்து விட்டு எரிந்த ஏமாற்றத்திலும் வெறுப்பிலும் அவளுக்கு டாஜ் ஓட்டலில் சாப்பிடப் பிடிக்கவில்லை. அதன் பின் வக்கீல் வேதராமனுடன் பேசி விட்டு வீட்டுக்குத் திரும்பியவளுக்குச் சாப்பிட நேரம் கிடைக்கவில்லை. விபத்தைப் பற்றிக் கேட்ட அதிர்ச்சியில் அவள் பசியைச் சிறிது நேரம் மறந்து போயிருந்தாள். ஆனால் இப்போது முரளியைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று டாக்டர்களே கூறியதில் மனத்துக்கு ஒரு சமாதானம் கிடைத்தது. பசியும் ஞாபகத்துக்கு வந்தது.

நாகராஜன் போவதையே ஒரு நிமிடம் பார்த்து நின்ற வசுவின் நெஞ்சில் நன்றி பெருக்கெடுத்தது. 'அவனும் அவனுடைய மனைவியும் எப்படி இவ்வளவு வாஞ்சையுடன் இருக்கிறார்கள்? அவர்களுடைய பண்பும் மனிதாபிமானமும் ஏன் அவளைச் சிலிர்க்க வைக்கிறது? அவள் சீதாவை மதிக்காமல் இருந்திருக்கிறாள். சீதா பட்ட அவமானம், கோபிக்கே தெரிந்திருக்கிறபோது கணவன் நாகராஜனுக்கா தெரியாமலிருக்கப் போகிறது? ஆனால் அவர்கள் இருவரும் எந்த விதமான விரோதமும் பாராட்டாமல் அவளைக் கவனிக்கிறார்கள்...'

"என்ன வசு யோசிக்கிறே?"

சீதாவின் குரல் கேட்டு வசு திடுக்கிட்டாள்.

"ஒன்றுமில்லை."

"ரொட்டியைத் தரட்டுமா?"

"நானே எடுத்துக்கறேன் சீதா."

"நீ பேசாம இரு.. ஜாடியில் நெய் இருக்கு.. டோஸ்ட் பண்ணித் தறேன்."

"நீ ஏன் எனக்காகச் சிரமப்படணும்.."

"ஒரு ஸ்லைஸ் ப்ரெட்டை டோஸ்ட் பண்றதில் என்ன சிரமம் இருக்கு? பாவம், நித்யா உன்னுடைய டியரஸ்ட் ஃபிரண்ட். இப்போ உன் மனம் எப்படிக் கலங்கியிருக்கும்னு எனக்குப் புரிகிறது!"

"இப்போ உனக்கு உடம்பு எப்படி இருக்கு? சீமந்தம் எப்போ?"

"அடுத்த மாசம். நான்கூட என் அம்மா கிட்டே போய்க் கொஞ்ச நாள் இருக்கலாம்னு பார்க்கிறேன்."

"பிரசவத்துக்கு அங்கேதானே போகணும்?"

"ஊஹூம். இவர் வேண்டாம் என்கிறார். மெட்ராஸில் நல்ல நல்ல நர்ஸிங் ஹோமெல்லாம் இருக்கிறப்போ, பட்டிக்காட்டுக்குப் போவானேன் என்கிறார்."

வசு ஒரு கணம் மெய் மறந்தாள். இப்படிக் கணவன் - மனைவிகளுக்கிடையே பரஸ்பர அன்பும் அரவணைப்பும் இருந்தால், குடிசையில் இருந்து கொண்டு கஞ்சியைக் குடித்தே வாழ்ந்து விடலாமே!

வசு ரொட்டியைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் மாடிப்படியில் குரல்கள் கேட்டன.



கீதா தன் அன்பு
வாடிக்கையாளர்களை
இன்முகத்துடன்
வரவேற்கிறது!
கீதாவின் மகத்தான சலுகை விற்பனையில்
கலந்து கொண்டு லாபத்தில் பங்கு கொள்ளுங்கள்.
எண்ணற்ற இதயம் கவரும் எழிலூட்டும் வண்ணப்பட்டு
ஜவுளி ரகங்களுக்கும், ரெடிமேட் ஆடைகளுக்கும்.
கீதா வழங்கும் விலைச்சலுகை விபரம் பாருங்கள்.
பட்டுப் பிரிவு ரூ. 20 முதல் 100 வரையான விலை குறைப்பு
பட்டு தவிர அனைத்து ஜவுளி ரகங்களுக்கு 10% சலுகை உண்டு
தள்ளுபடிக் கவுண்டர் 30% முதல் 50% வரை தள்ளுபடி உண்டு
ரெடிமேட் ஆடைகள் 15% சலுகை உண்டு
குறிப்பு: பின்னி மற்றும் பாம்பே டையிங் மில் ஜவுளி ரகங்களுக்கு சலுகை வழங்க இயலாமைக்கு வருந்துகிறோம்.
உங்கள் விருப்பம்போல் தேர்ந்தெடுக்க உங்கள் கீதாவுக்கு விஜயம் செய்யுங்கள்.
கீதா
சில்க் & சாரி பஜார்
31-32, N. S. B. ரோடு, திருச்சி-620002
CROWN 88

'கோபி' என்று வசு தன்னுள் முணுமுணுக்க, சீதா, "வசு, கோபியே வந்து விட்டார். அவர் நேரே ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து தான் வருகிறார்!" என்றாள்.

வசு பதில் கூறுவதற்குள் ஒரு சீப்பு பழத்துடன் நாகராஜன் பிரவேசித்தான். கோபியும் பின் தொடர்ந்து வந்தான். வசுவைப் பார்த்ததும் ஒரு வினாடி நின்றான். பிறகு, "ஹலோ வசு! நீ இங்கேயா இருக்கிறாய்!" என்றான். "ஏண்டா, இவள் இங்கே வந்திருக்கிறாள் என்று நீ சொல்லவில்லை?"

"அப்புறம் இந்த ஸர்ப்ரைஸ் இருக்காதே!" என்று சொல்லிச் சிரித்தான் நாகராஜன்.

"எனக்கும் ஏதானும் தாருங்கள். ரொம்பப் பசிக்கிறது." என்றான் கோபி.

"ஐயய்யோ, இப்பத்தான் தீர்ந்தது. நான் ரெண்டு ஸ்லைஸ் சாப்பிட்டேன்," என்று சீதா தன்னையே நொந்து கொண்டு கூறினாள்.

"பழம் இருக்குடா," என்றான் நாகராஜன்.

வசு எழுந்தாள். கோபியின் அருகே வந்து தட்டை நீட்டினாள். இரண்டு ஸ்லைஸ் ரொட்டி இன்னும் அதில் இருந்தது.

அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"பரவாயில்லை, வசு. நீ சாப்பிடு."

"நான் மூன்று சாப்பிட்டாச்சு."

"நாகராஜா, இரண்டு பழத்தை உரிச்சுத் தட்டிலே போடு." என்றான் கோபி.

"சரியான சோம்பேறி!" என்ற நாகராஜன், "முரளி எப்படியிருக்கிறான்னு உன் மனைவி கிட்டே சொல்லேண்டா," என்றான்.

"ஏண்டா, அவனுக்கு ஏதானும் ஆபத்துன்னு தோணினா, நான் இங்கே வந்திருப்பேனா? இல்லே இந்த ரொட்டியும் பழமும் தொண்டையில் இறங்குமா?" என்ற கோபி, "வசு, உன் ஃபிரண்ட் நித்யா ஊரையே ஒரு கலக்குக் கலக்கி விட்டாள். ராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலேயே அவனை டிஸ்சார்ஜ் பண்ணிடலாம்னு இருந்தார்கள். ஆனா நித்யா, பிடிவாதமா தலைக்குள் அடிபட்டிருந்தாலும் பட்டிருக்கும், சோதனை செய்யணும்னு ஒரு கால்லே நின்றாள்," என்றான்.

"சோதனை முடிஞ்சிட்டதா?" என்று கேட்டாள் வசு.

"முடிஞ்சுட்டுது. அடி ஒண்ணுமில்லை... ஐ மீன், ஒரு கோளாறும் இல்லை."

"முரளி ஏதானும் சொன்னாரா? நித்யா இப்போ என்ன செய்கிறாள்?"

"டாஜ் ஓட்டல் சாப்பாடு இப்படி அநியாயமாய்ப் போயிட்டுதேன்னு என்கிட்டே அங்கலாய்ச்சான். நீயும் அவர்களுடன் சாப்பிடுவதாக இருந்ததாமே.. கடைசி நிமிஷத்திலே வரலேன்னு போய் விட்டாயாம்!"

"ஆமாம். நான் அவர்களுடன் என் காரில் போயிருந்தால் இந்த ஆக்ஸிடண்ட் ஆகியிருக்காதோ என்னமோ!"

"அவன் தலையில் அடிபடணும்னு இருக்கிறப்போ நீ எப்படி அவர்களுடன் போயிருக்க முடியும்? நாகராஜா, நீ என்ன சொல்கிறாய்?"

பதில் வராமற் போகவே அவன் திரும்பிப் பார்த்தான். வாசற்கதவண்டை நின்று கொண்டிருந்த நாகராஜனைக் காணவில்லை. கோபி சமையலறைக்குள் எட்டிப் பார்த்தான்.

"எங்கே ரெண்டு பேரும்?"

"இங்கேதானே இருந்தார்கள்!"

"ஒரு வேளை மறுபடியும் கடைக்குப் போயிருப்பானோ, எனக்

சாப்பிட வந்தவரிடம்

சாப்பிட வந்தவரிடம் சர்வர் கேட்டார்:

"என்ன வேணும்?"

"பத்து ஸ்பெஷல் தோசையின் ஓரத்தைக் கட் பண்ணிக் கொண்டுவா."

—வே. வைத்தியநாதன்

கும் சாப்பிட ஏதானும் வாங்க லாம்னு?'' வசுவுக்கும் புதிராக இருந்தது.

''அப்படி இருந்தாலும் இந்த சீதாவைக் காணுமே,'' என்றாள்.

''சீதா எனக்குத் தெரிஞ்சு ஒண்ணுமே சாப்பிடவில்லே. எட்டே முக்காலுக்குக் கம்பெனிக்கு போன் வந்தது. வாட்ச்மென் என் வீட்டுக்கு ஓடி வந்தான். அப்போ மணி ஒன்பது. அப்பத்தான் சீதா சாப்பிட உட்கார்ந்திருந்த சமயம். செய்தியைக் கேட்டதும் பதறிக் கொண்டு எங்களுடன் ஆஸ்பத்திரிக்கு வந்து விட்டாள்.''

''அப்போ அவளுக்கும் இன்னும் ஏதாவது வாங்கிக் கொடுக்கலாம்னு அழைத்துக் கொண்டு போயிருப்பார் நாகராஜன்.''

''இருக்கலாம். இரு, நான் உனக்குப் பால் கொண்டுவந்து தருகிறேன்.''

''வேண்டாம். நானே எடுத்துக் கொள்கிறேன்.''

''பரவாயில்லே. நீ பழத்தைச் சாப்பிடு. சீதாவும் நாகராஜனும் வந்து விடுவார்கள்.'

''அவர்கள் திரும்பிப் போகும் போது நான் அவர்களுடன் போய் விடுகிறேன்,'' என்றாள் வசு.

''ஏன், கார் இல்லியா?''

''ஃப்ரண்ட் வீல் பஞ்சர்.''

கோபி டம்ளரை நீட்டினான். அதை வாங்கிக் கொண்ட வசு, ''உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

''எனக்கு இப்போ தேவை மோர்தான். நெஞ்சைக் கரிக்கிறது.''

நேரம் ஆகிக்கொண்டே இருந்தது.

''ஏன் அவர்கள் சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று போனார்கள்?..மணி பதினொன்றாகி விட்டதே!'' என்றாள் வசு.

''நாம் ரெண்டு பேரும் பேசிக் கொண்டிருக்கிறப்போ டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு நாகராஜன் நினைத்திருப்பான். சீதாவைத்தான் உனக்குத் தெரியுமே. அவனுக்கு அவள் நிழல்.''

அந்த இருவரையும் பற்றி நினைக்கும்போது வசுவுக்கு மனத்தில்

ருவித நெகிழ்ச்சி உண்டாயிற்று.

''என்கிட்டே ரெண்டுபேரும் ராம்பப் பரிவா இருந்தார்கள்.. பூமாம், நித்யா என்ன சொன்னுள்? ங்கே எப்போ வருகிருளாம்?''

''இன்னிக்கு ராத்திரி பூரா ரளியை ஆஸ்பத்திரியிலேயே வைச்க்கலாம்னு முடிவு பண்ணியிருக்கிார்கள். அதுக்கு அவசியம் இல்லே ான். ஆனு எதற்கும் இருக்கட்டும்னு ாக்டர் சொன்னுர். நித்யா முரளி க்கத்திலேயே உட்கார்ந்திருக்கிருள்.''

''அப்போ இப்போதைக்கு பரமாட்டாளா?''

''மாட்டாள்.''

வசுவிடத்தில் ஒரு மாறுதல் ரற்பட்டிருப்பதைக் கோபி உணர்ந்தான். ஆனுல் அது நிலேயான மாறுதலாக இருக்குமா? அவனுல் நிச்சயமான முடிவுக்கு வரமுடியவில்லே.

திடீரென்று ஒரு ஜன்னல் கதவு அடித்துக் கொண்டது. லேசான தூறல்களின் ஒலி கேட்க ஆரம்பித்தது.

''மழை வரும் போலிருக்கு,'' என்ருள் வசு.

''மழை வந்தே விட்டது. சாரல் அடிக்காமலிருக்க ஜன்னலே எல்லாம் சாத்தணும்.'' கோபி கதவுகளேச் சாத்த எழுந்தான்.

லேசாகத் தொடங்கிய மழை இப்போது கொட்ட ஆரம்பித்தது.

''மணி பதிஞென்றரை,'' என்ருள் வசு.

''அவர்கள் இனிமேல் திரும்புவார்கள் என்று எனக்குத் தோன்றவில்லே. வசு, இனி இந்த இருட்டிலும் மழையிலும் உன்னுல் வீட்டுக்குப் போக முடியாது. இந்த வட்டாரத்தில் இந்த வேளேயில் ஒரு டாக்ஸியும் கிடைக்காது.''

''அப்போ என்ன செய்கிறது?'' என்று கேட்ட வசு, திகைப்புடன் அவனேப் பார்த்தாள்.

இந்த எலிப் பொந்தில் இரவைக் கழிப்பதைத் தவிர வேறு வழியே இல்லேயா?

(தொடரும்)

ஏன்?

"இப்போது எனக்கு லீவ் தரப் போகிறீர்களா, இல்லையா?" என்று ரங்கதுரை கடுமையாகக் கேட்டார்..

"உங்களுக்குத் திடீரென்று இப்போது ஏன் லீவ்?" என்று மானேஜர் கடுமையான குரலில் திரும்பக் கேட்டார்.

"அதைப் பற்றி உங்களுக்கு என்ன? காரணத்தைச் சொன்னுல் மட்டும் உடனே கொடுத்துவிடப் போகிறீர்களா என்ன? காரணத்தைச் சொல்ல மாட்டேன். உடனடியாக எனக்கு லீவ் வேண்டும். இதுவரை எனக்கு லீவ் கொடுக்கக் கூடாது என்று வேண்டுமென்றே வன்மம் கட்டிக் கொண்டு இருந்தீர்கள். இன்றைக்கு லீவ் வாங்காமல் இந்த அறையை விட்டுப் போக மாட்டேன்." ரங்கதுரை ஆவேசமாகப் பேசினுர்.

ரங்கதுரை மிகவும் சாது என்று எல்லோரிடத்திலும் பேர் எடுத்தவர். பலமுறை அவருக்கு லீவ் கிடையாது என்று மானேஜர் சொன்னபோதெல்லாம் அநாவசியமாகத் தர்க்கம் செய்யாமல் தலையைக் குனிந்து கொண்டு போய்விடுவார். இன்று அவர் நடத்தையே வேறு விதமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

"என்ன, மிரட்டிப் பார்க்கிறீர்களா?" மானேஜரின் உதடுகள் துடித்தன.

"மிரட்டல் இல்லை. என்னுடைய உரிமை; கேட்கிறேன். மற்ற எல்லோருக்கும் ஒரு 'ட்ரீட்மெண்ட்' எனக்கு ஒரு 'ட்ரீட்மெண்டா?' சாது சாது என்று பெயர் வாங்கிக் கட்டிக் கொண்டதால் நீங்கள் எப்படி வேண்டுமானுலும் என்னைக் கசக்கிப் பிழியலாம் என்று நினைத்துக் கொண்டு விட்டீர்கள். இந்தப் பத்து வருஷ சர்வீஸில் மொத்தம் நாற்பது நாட்கள்தான் லீவு எடுத்திருக்கிறே[ன்]. அது கூட நீங்[கள்] வருவதற்கு மு[ன்]னேதான். ம[ற்ற]வர்களெல்லா[ம்] கேட்டால் உட[னே] 'சாங்ஷன்'. நா[ன்] கேட்டால் ... க்குப்பா? கண்ட[னோ]டு சுற்றுவத[ற்]காக ஸ்டெ[னோ] சுசீலா மத்தியானம் மூன்[று] மணிக்கு உங்[க]ளிடம் வந்து பர்[மி]ஷன் கேட்டா[ல்] உடனே பல்[லை]யிளித்துக்கொண்[டு] 'அதற்கென்ன[?] போய்விட்[டு] வாயேன்' என்[று] சொல்லிவிடுகிறீர்கள். நீங்கள் கூட[...] சில சமயம் அவள் போனப்புற[ம்] ஏதோ ஆபீஸ் வேலை என்று சாக்கு[ப்] போக்குச் சொல்லிவிட்டுக் கிளம்பி யிருக்கிறீர்கள்."

'ஏது, இவ்வளவு தூரம் ரங்க[துரை] பேசுகிறுனே' என்று கோபத்தாலும், ஆச்சரியத்தாலும் மானேஜர் நிலைகொள்ளாமல் தவித்தார்.

"இந்தாருங்கள் லீவ் லெட்டர். 'சாங்ஷன் செய்கிறேன்' என்று கையெழுத்துப் போடுங்கள்," என்று ரங்கதுரை லீவ் லெட்டரை நீட்டினுர்.

மானேஜர் படித்தார்.

"மானேஜர் அவர்களுக்கு. எனக்கு மிகவும் அவசரமாகப் பத்து வருஷம் லீவ் வேண்டியிருக்கிறது. நான் செத்துப் போகப் போகிறேன். தயவு செய்து அனுமதிக்கவும்," என்று அதில் எழுதியிருந்தது.

மானேஜருக்கு ஒன்றுமே புரியவில்லை.

"என்ன ரங்கதுரை, இது என்ன விளையாட்டு? உங்களுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது?"

ரங்கதுரை எதையுமே காதில் வாங்கிக்கொள்ளவில்லை.

"மரியாதையாக 'அனுமதிக்கிறேன்' என்று கையெழுத்துப் போடும். என் பையனுக்கு ஸ்கூல் அட்மிஷனுக்கு ஒரு நாள் லீவ் கேட்டேன். முடியாது என்று சொல்லிவிட்டீர்கள்.

'ஜே'



அந்த வருஷம் முடிய அவன் வீட்டிலேயே உட்கார்ந்திருந்தான். என் மனைவிக்கு உடம்பு ஸீரியசாகப் போன போது இரண்டு மணி நேரம் பர்மிஷன் கேட்டேன். தலைமை அலுவலகத்திற்குக் கடிதமெல்லாம் போயாக வேண்டும் என்று சொல்லிவிட்டீர்கள். என் மனைவியே என்னை விட்டுப் பிரிந்து போய்விட்டாள். இப்போது நான்...'' ரங்கதுரை கத்தினார். அவர் கண்கள் ஜிவு ஜிவு என்று ரத்தக் கட்டிகளாக எரிந்தன. ''நானே செத்துப் போவதற்கு லீவ் கேட்கிறேன். ஹெட்கிளார்க் சுந்தரம் ஜலதோஷம் என்று சொன்னதற்கு மூன்று நாள் லீவ் கொடுத்தீர்கள். பியூன் சண்முகம் டைபாயிடில் விழுந்தபோது இரண்டு மாசம் லீவ். ஜலதோஷத்திற்கு இரண்டு நாளும், டைபாய்டுக்கு இரண்டு மாதமும் லீவ் கொடுக்கும்போது செத்துப் போவதற்குப் பத்து வருஷம் லீவ் கொடுக்கக் கூடாதா?''

சந்தேகமில்லாமல் மெண்ட்டல் ஆஸ்பத்திரி கேஸ்தான். பியூனைக் கூப்பிடுவதற்கு மணியைத் தட்டப் போனார் மானேஜர்.

''மணியைத் தொட்டால் கொன்று விடுவேன்!'' என்று ரங்கதுரை சரேலென்று தன் பாக்கெட்டிலிருந்து ஒரு பிச்சுவாக் கத்தியை, பளபளவென்று மின்னும் கத்தியை, உருவி மானேஜரின் முகத்திற்கு நேரே பிடித்தார்.

மானேஜருக்கு முகமெல்லாம் வியர்த்தது. உடம்பு ஆடியது.

ரங்கதுரை அதட்டினார்.

''உம். கையெழுத்துப் போடும்.''

''......''

''போடமாட்டீர்களா?''

மானேஜரின் டை ரங்கதுரையின் கத்தி பட்டு டைகள் ஆயின. சலவை மடிப்புக் கலையாத சட்டை எவர்சில்வர் பாத்திரக்காரனுக்குத் தயாராகியது.

''ஐயோ, இந்தப் பைத்தியக்காரனுடைய லீவ் லெட்டரில் கையெழுத்துப் போட்டால் என் கதி

என்னவாகும்? செத்துப் போவதற்கு லீவ் சாங்ஷன் செய்தால், பிறகு, எனக்குப் பத்து வருஷத்துக்கு இங்க்ரிமெண்ட் கிடைக்காது,' என்று பயத்தாலும் பீதியினாலும் நடுநடுங்கிக் கொண்டே பரிதாபமாய் ரங்கதுரையைப் பார்த்தார் சாம்பசிவம்.

கத்தி கழுத்துக்கருகில் வந்து விட்டது.

“போடு, போடப் போகிறாயா இல்லையா...” என்று ரங்கதுரை கத்தியைக் கழுத்தில்...

உடனே பரபரவென்று மானேஜர் லீவ் லெட்டரில் கையெழுத்துப் போட்டார். 'செத்துப் போவதற்கு லீவ் சாங்ஷன் செய்கிறேன்' என்று ரங்கதுரை சொன்னபடியே எழுதினார்.

ரங்கதுரையின் முகத்தில் இருந்த குரூரம் மறைந்தது. 'ஹாஹா' என்று பெரிதாய்ச் சிரித்தபடியே லீவ் லெட்டரை எடுத்துக் கொண்டு அட்டகாசமாய் அந்த அறையை விட்டு வெளியே போனார்.

கிழிந்த சட்டையும், டையும், வியர்த்து விறுவிறுக்கும் உடம்புமாக ஒரு நிமிஷம் பிரமை பிடித்துப்போய் உட்கார்ந்திருந்த மானேஜர், “பியூன்! பியூன்!” என்று கத்தினார். அவர் அலறிய அலறலைக் கேட்டுப் பியூனும் ஹெட் கிளார்க்கும் அறைக்குள் ஓடி வந்தனர்.

“பிடியுங்கள்! அந்தப் பைத்தியத்தைப் பிடியுங்கள். ரங்கதுரையைப் பிடியுங்கள்,” என்று கூவினார் மானேஜர்.

“என்ன சார் இது? சட்டையெல்லாம் கிழிந்துபோய்...ரங்கதுரையா? அதைச் சொல்வதற்குத்தானே நானே அவசர அவசரமாக உள்ளே வந்தேன். பாவம், அவர் ஆபீஸிற்குச் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது, சுமார் ஒரு மணிக்கு முன்னால், சைக்கிளை ஒரு ராட்சஸ லாரி இடித்து..அதே இடத்தில் பாவம்.. இன்றைக்கு ஆபீஸிற்கு விடுமுறை விட வேண்டும் சார்... நல்ல மனிதருக்குப் போய் இப்படி..” என்று ஹெட்கிளார்க் சொல்லியபடியே கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

மானேஜர் நாற்காலியில் செயலற்றுப் போய் உட்கார்ந்திருந்தார்.



அரசர் மீது கல்

வையகம் காக்கும் மன்னர்கள் கடுமையாகவும் இருப்பார்கள். அதே சமயத்தில் கருணையாகவும் இருப்பார்கள்.

ஒரு மன்னன் ஒரு நாள் மாலை அரண்மனை நந்தவனத்தில் பளிங்கு மேடை மீது அமர்ந்து அமைச்சர்களுடன் அரசாங்க அலுவல்களை ஆராய்ந்து கொண்டிருந்தான்.

மதிலுக்கு வெளியே சென்ற ஒரு வழிப்போக்கன் நந்தவனத்தில் வானளாவி யிருந்த மாமரத்தில் கல் எறிந்தான். அக்கல் பட்டு மாம்பழம் உதிர்ந்தது. மற்றொரு கல் எறிந்தான். அது குறி தவறி மன்னவன் தலையில் வீழ்ந்தது. தலையில் புண்பட்டு உதிரம் ஒழுகியது.

காவலன் ஓடிச் சென்று கல்லெறிந்தவனைப் பிடித்து இழுத்து வந்தான்.

அமைச்சர்கள், “அடேய்! பாவி! இப்படிக் கல்லெறிந்து அறநெறி வழுவாத அரசர் பெருமானுடைய தலையைப் புண்ணாக்கி உதிரம் வடியுமாறு செய்து விட்டாயே! இது மன்னிக்க முடியாத குற்றம். உனக்கு என்ன தண்டனை தந்தாலும் தகும்” என்றார்கள்.

ஆனால் அரசன் அந்த ஆளை நோக்கிப் புன்னகை பூத்தான். அங்குள்ள மந்திரிமார்களைப் பார்த்து, “அன்பர்களே! இவர் எறிந்த கல்லுக்குக் கனிந்து ஓரறிவு படைத்த மாமரமே கனி தந்ததே. நான் ஆறறிவு படைத்த அறந்தாங்கும் அரசன். என் மீது கல்லெறிந்ததற்காக இவனுக்கு நம் அரண்மனையில் வாழ் நாள் முழுவதும் வடை பாயசத்துடன், அறுசுவையுணவு தருமாறு உத்தரவிடுகிறேன். அப்பா! நீ அஞ்சாதே. மகிழ்ச்சியுடன் போய்வா. தினம் ஒரு வேளை அரண்மனையில் வந்து உணவு செய்து கொள்.” என்று கருணையுடன் கூறினார்.

பாப்ஜியும் நானு...
சுற்றினே...



ஜெமினி கணே...

என் மனைவி பாப்ஜி அமெரிக்காவுக்குச் சென்று மூத்த மகள் ரேவதியைச் சந்திக்க வேண்டுமென்று நீண்ட நாளாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

எனக்கு ஷூட்டிங் அடுத்தடுத்து இருந்துகொண்டே இருந்ததால் பிரயாணத்தை ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தேன்.

பாலாஜி ஒப்பந்தம்

ஒருநாள் பாலாஜி என்னிடம் வந்து, "சிவாஜியுடன் ஒரு படத்தில் நடிக்க உங்களை ஒப்பந்தம் செய்வதாக இருக்கிறேன்," என்றார். மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டேன்.

பிறகு பாலாஜி, "ஷூட்டிங் இருக்கிறது. இந்த மாதத்திலிருந்தே எடுக்கிறேன். நான் ஃபாரின் போகிறேன். நீங்கள் நடியுங்கள்," என்றார்.

நான், "நானும் ஃபாரின் போக ஏற்பாடு செய்திருக்கிறேன். ஷூட்டிங் நீ போய் வந்த பிறகு வைத்துக் கொள்ளலாமே?" என்று கூற, பாலாஜியும் ஒப்புக்கொண்டார்.

இப்படி ஒரு படத்தின் ஷூட்டிங்கைத் தள்ளி வைத்துவிட்டு என் மனைவியுடன் 22'ம் தேதி டெல்லியிலிருந்து புறப்பட்டேன்.

போகும் வழியில் இங்கிலாந்தில் சில நாள் தங்கினேன்.

லண்டனில் கண்டதென்ன?

அங்கு பாப்ஜியுடன் டவர் அஃப் லண்டனைப் பார்த்தேன். 300 கேரட் டயமண்டையும் கோகினூர் வைரத்தையும் பாப்ஜி பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டாள்.

பிறகு ஷேக்ஸ்பியர் பிறந்த ஊரான ஸ்ட்ராட்ஃபோர்டைப் பார்க்க வேண்டுமென ஒருவர் கூற, பாப்ஜியும் பார்த்துவிட்டு வரலாம் என்றாள்.

அங்கு ஷேக்ஸ்பியர் இருந்த போது எப்படியோ அப்படியே இப்பவும் எல்லாப் பொருள்களும் சூழ்நிலையும் தோன்றும்படி வைத்திருந்தார்கள்.

ஜாகை மாறுவது சுலபம்

அமெரிக்காவில் ஜூன் 28'ம் தேதி முதல் ஜூலை 17'ம் தேதி வரை தங்கினேன்.

க்ளாக்ஸ்பெர்க்கில் எனது மகள் ரேவதியும் மருமகன் சுவாமிநாதனும் டாக்டராகப் பணியாற்றி வருகிறார்கள்.

ஜூலை முதல் தேதி வாக்கில் எனது மகளுக்கு மாற்றலாகி க்ளாக்ஸ்பெர்க்கிலிருந்து ஷிகாகோ செல்ல வேண்டியிருந்தது.

பெரும்பாலும் அங்கு எல்லோரும் இடம் மாறிக் கொண்டேதான் இருப்பார்களாம். ஆனால் இடம் மாறுவதில் சிரமம் இருக்கவில்லை. 'யூ ஹால்' என்று ட்ரெயிலர் மாதிரி வண்டி இருக்கிறது. அதில் எல்லாச் சாமான்களையும் போட்டு நம் காருடன் இணைத்துக் கொண்டு செல்ல வேண்டியதுதான்.

ஈ. வி. சரோஜாவின் சகோதரர்

நாங்கள் 28'ம் தேதியே க்ளாக்ஸ்பெர்க்கிலிருந்து கிளம்பிவிட்டோம். அங்கு சென்றால் 1'ம் தேதிதான் அப்பார்ட்மெண்ட் சாவி கொடுக்க முடியும் என்று சொல்லிவிட்

டார்கள். தெரிந்தவர் ஒருவர் வீட்டில் தங்க உத்தேசித்தோம். ஈ.வி. சரோஜாவின் சகோதரர் நடராஜன் சாமான்களை இறக்கி வைப்பதில் உதவி புரிந்தார். என்னைப் பார்க்க வந்த அவருக்கு வந்தவுடன் இந்த வேலை தான் சரியாக இருந்தது, பாவம்.

நடராஜன் அங்கு மெக்கானிகல் இன்ஜினியராகப் பணியாற்றி வருகிறாராம்.

ஷிகாகோவில் பாலாஜி என்னைச் சந்தித்தார். அவர் மனைவியுடன் என் குடும்பத்தாரும் சேர்ந்து சுற்றக் கிளம்பினோம். என் மகள் ரேவதி டிரைவ் செய்தாள்.

__உட்லண்ட்ஸ் கிருஷ்ணராவ்__

நியூயார்க்கில் உட்லண்ட்ஸ் அதிபர் திரு. கிருஷ்ணராவ் இருப்பதாகக் கேள்விப் பட்டேன். அவரைச் சந்திக்கச் சென்றேன். 'மெட்ராஸ் உட்லண்ட்ஸ்' என்ற பெயரில் சமீபத்தில் தான் அங்கு ஓர் ஓட்டல் திறந்ததாகக் குறிப்பிட்டார்.

இதுவரை அங்கு போட்ட சாப்பாடு போல் எங்கும் நான் சாப்பிட்டது இல்லை. ரொம்ப நன்றாக இருந்தது.

எல்லாப் பொருட்களும் கிடைக்கும் ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோரை என் மனைவியுடன் சென்று பார்த்தேன். வேண்டுமென்ற பொருளை எடுத்துக் கொண்டு கவுண்டருக்கு வந்தால் சட் சட்டென்று பஞ்ச் செய்து விலைகளைப் போட்டு பில் போட்டு விடுகிறார்கள்.

யாராவது பொருளைத் திருடிவர முயன்றால் தப்பிக்க முடியாதாம். டெலிவிஷனில் அதைப் பார்த்துக் கொண்டே இருந்து பணம் கொடுக்காமல் வெளியே செல்லுபவர்களைச் சரியாகப் பிடித்து அபராதமும் போட்டு விடுவார்களாம்.

பெட்ரோலெல்லாம் ஒரே விலையாக எல்லாக் கடைகளிலும் இல்லை. பெட்ரோலில் பல விதமிருக்கிறது.

__சித்ரா கிருஷ்ணசாமியின் மகள்__

மார்க்கண்ட் டவுனில் எனது மனைவியுடன் ஒரு ரிசப்ஷன் அட்டெண்ட் செய்தேன். லிங்கன் வசித்த வீட்டைப் பார்த்தேன். பீட்டர்ஸ்பர்க்கில் சித்ரா கிருஷ்ணசாமியின் மகளைச் சந்தித்தேன்.

ஒரு ஃபாக்டரியைப் பார்வையிட்டபோது அங்கு ஒருவர் எல்லாவற்றையும் சுற்றிக் காண்பித்து வந்தார். என்னிடமும் ஆட்டோகிராப் வாங்கினார். பிறகுதான் தெரிந்தது அவர் அங்கு பணி புரியும் வேலையாள் அல்ல, முதலாளி என்று. எனக்கு மிக





பத்மினி

வும் ஆச்சரியமாகப் போய்விட்டது. அவரிடம் ஆட்டோகிராப் வாங்கிக் கொண்டு நான் புறப்பட்டேன்.

பாரதி கல்சுரல் அசோசியேஷனில் ஓர் விருந்து வைத்தார்கள். டென்னிஸ் ராக்கட் எனக்குப் பிரசண்ட் செய்தார்கள். அவர்கள் இறுதியாகப் பார்த்த படம் வெள்ளி விழாவாம். அதில் நான் டென்னிஸ் ஆடுவதைப் பார்த்து ராக்கட் பிரசண்ட் செய்தார்கள்!

மருமகனுக்கு அபராதம்

நயாகராவைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது என் மருமகன் சுவாமிநாதன் வசமாகமாட்டிக்கொண்டு ஃபைன் கட்டவேண்டியதாயிற்று. ஐம்பத்தைந்து மைல் வேகத்தில்தான் செல்ல வேண்டுமாம் காரில். அவர் ஐம்பத்தேழு மைல் வேகத்தில் சென்றார். உடனே போலீஸ் வந்து பிடித்துப் பதினைந்து டாலர் அபராதம் விதித்து விட்டார்கள்.

இன்டர்நேஷனல் டிரைவிங் பாஸ்போர்ட் என்னிடம் இருந்தும் இந்த மாதிரி ஏடாகூடமாக ஏதாவது ஆகிவிடப் போகிறது என்று ஸ்டியரிங்கைத் தொடுவதில்லை.

முதலாவது ஏஷியன் கான்பரன்ஸ் நடந்ததால், எனக்கு ஸ்பெஷல் இன்விடேஷன் கொடுத்தார்கள். என்னை அறிமுகப்படுத்திவைத்தார்கள்.

பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களையும் அங்கு சந்தித்தேன்.

பத்மினிக்கு ஃபோன்

பத்மினிக்குப் போன் செய்தேன். இரண்டு நாட்களில் வெளியூர் செல்லப் போவதாக அவர் தெரிவித்ததால் அவர் வீட்டிற்குச் செல்ல முடியவில்லை. நேரம் கிடைக்கவில்லை.

நான் முன்கூட்டியே தெரிவிக்காமல் சென்றிருந்தும் டின்னர்கள் அட்டெண்ட் செய்யவே நேரம் சரியாக இருந்தது. போன் என்றாலே எனக்கு பயம். யார் எந்த டின்னருக்கு இன்வைட் பண்ணுகிறார்களோ என்று.

வடிவேல் தியேட்டர்ஸ் என்ற நாடக அரங்கைத் திறந்து வைத்தேன். வடிவேலு வாத்தியார் நாடகம்தான் முதன் முதலில் அந்த அரங்கத்தில் அரங்கேறியது.

என்னுடைய 'கல்யாண ரகசியம்' என்ற லேட்டஸ்ட் நாடகத்தை அங்கு போட வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தனர். ஸ்கிரிப்டை அனுப்பிவைத்தால் பத்மினியை ஹீரோயினாகப் போட்டு ரிகர்சல் நடத்தி வைப்பதாயும், நான் அடுத்தமுறை போகும்போது அந்த நாடகத்தை நடத்தலாம் என்றும் கூறினார்கள். ஸ்கிரிப்டை அனுப்பிவைத்தேன்.

நிறைய படம் பார்க்க வேண்டுமென்று நினைத்தேன். முடியவில்லை. மூன்று படங்கள்தான் பார்க்க முடிந்தது.

பல பேட்டிகள் கொடுத்தேன். ஒருவர், ''ஏன் பாலிடிக்ஸைப் பற்றி உங்களிடம் கேள்விகள் யாரும் கேட்கவில்லை?'' என்றார். அங்கிருந்த மற்றொருவர். ''வி ஆர் நாட் இன்ட்டரஸ்டட் இன் சௌத் இன்டியன் பாலிடிக்ஸ்,'' என்று கூறிவிட்டார்.

நேரத்தை மிகவும் மதிப்பு வாய்ந்ததாகக் கருதி மின்னல் வேகத்தில் செயல்படுகிறார்கள். எதற்கெடுத்தாலும் பட்டன் சிஸ்டம். ஆனால் ஒரு விஷயத்தில் அனாவசியமாக வேஸ்ட் செய்கிறார்கள். அது கார் பார்க் செய்வதுதான். இப்பொழுது ஃப்ளை ஓவரில் (ஜெமினி) நமக்கு வேலை இருக்கிறது என்றால் மாம்பலத்தில் காரை பார்க் செய்துவிட்டு நடந்து வரவேண்டியது கூட இருக்கும். இடம் அவ்வளவு நெருக்கடி.

வாஷிங்டனில் நாமக்கல் கவிஞரின் பெண் திருமதி சரஸ்வதி ரங்கநாதனைச் சந்தித்தேன்.


எனது மகள் ரேவதியும் மருமகன் சுவாமிநாதனும் வேலைக்குச் சென்று விடுவதால் பேரன் ராஜேஷைக் கவனிக்க ஆளில்லை. அவனுக்கு ஸ்கூல் லீவ். எனவே பாப்ஜியைத் தன்னுடன் தங்கும்படி ரேவதி கேட்டுக் கொண்டாள். பாப்ஜியும் ராஜேஷைக் கவனித்

துக் கொள்ள அங்கு தங்கி விட்டாள். அடுத்த மாதம்தான் வருவாள்.

அவன் மூன்று வயது வரை இங்குதான் இருந்தான். தமிழ் நன்ருகப் பேசுவான். ஆனல் இப்பொழுது அங்கு சென்ற பிறகு தமிழை மறந்து விட்டான், நான் மாப்பிள்ளையிடமும் ரேவதியிடமும் கண்டிப்பாகச் சொல்லி விட்டேன், தமிழில்தான் வீட்டில் பேச வேண்டுமென்று. நானிருந்த வரை ராஜேஷுடன் தமிழில் பேசினேன். அவன் புரிந்து கொள்கிருன். ஆனல் அவன் எவ்வளவு முயன்றும் தமிழில் பதில் சொல்ல முடியவில்லை. பெரும்பாலான தமிழ்க் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் நிலையும் இதுதான்.

அமெரிக்காவைப் பொறுத்த வரை எல்லாம் மெஷின் லைப்தான். அப்பா அம்மா உறவு, பாசம் போன்றவைகளைக் காணமுடியவில்லை.

இப்பொழுதுகூட சாவித்திரியை நினைத்துக் கொண்டால் வீணகச் செலவு செய்து சொத்தையெல்லாம் இழந்து விட்டாளே என்று மிகவும் வேதனைப்படுவேன். இப்படி அங்கு யாரும் மனைவியைப் பற்றியோ குழந்தைகள் உறவினர்களைப் பற்றியோ நினைப்பதே இல்லை.


கிருஷ்ணு ராவ்

எனது பெண் ஒரு பரிசு கொடுத்தாள் எனக்கு. அதன் மதிப்பு18 டாலர்தான். அது ஒரு எக்ஸர்ஸைஸ் கருவி. "நடிகர் என்கிறீர்கள். தொப்பை ஏறுகிறது. குறையுங்கள்," என்று கூறி அதைக் கொடுத்தாள்.

தினமும் வீட்டில் அதில் எக்ஸர்ஸைஸ் செய்கிறேன். படுத்துக் கொண்டே பெடல் செய்வதைப்போலத்தான்.

ஊரிலிருந்து வந்தவுடன் 10 பவுண்டு குறைந்திருக்கிறேன். முதலில் 171 பவுண்டு. இப்பொழுது 161 பவுண்டு. இன்னும் எடையைக் குறைக்க வேண்டும்.

பேட்டி: பாரி வள்ளல்

புதிர்: நாற்பது கிலோ எடைக் கல் உடைந்து விட்டது!

ஒரு கடைக்காரர் அன்றைய தினம் காலையில் எழுந்ததும் யார் முகத்தில் விழித்தாரோ. கடையிலிருந்த நாற்பது கிலோ எடையுள்ள எடைக் கல்லைக் கீழே போட்டு உடைத்து விட்டார். நாலு துண்டாக எடைக்கல் உடைந்து விட்டது. துரதிருஷ்டத்திலும் கடைக்காரருக்குக் கொஞ்சம் அதிருஷ்டம். உடைந்த அந்த நாலு பகுதிகளை உபயோகித்தே, அவர் ஒன்றிலிருந்து நாற்பது வரை எத்தனை கிலோ கேட்டாலும் நிறுத்துக் கொடுத்தார்.

அதற்கு வசதியாக எடைக்கல் உடைந்திருந்தது. துண்டுகள் ஒவ்வொன்றும் எந்த அளவு எடை இருந்தால் அப்படி ஒன்றிலிருந்து நாற்பது கிலோ நிறுத்து தர முடியும்?

ஒரு குறிப்பு:
எடைக்கற்களை அவசியத்துக்குத் தக்கபடி தட்டுகளில் மாற்றிக் கொள்ளலாம். ஆனல் ஒரே தடவையில நிறுத்துத் தந்துவிட வேண்டும். இன்னெரு விஷயம்: உடைந்த துண்டுகளின் எடை முழுமையான எண்கள் கொண்டவை. பத்தரை எட்டே முக்கால் என்பது போல பின்னமாக உடையவில்லை.

விடை: 102'ம் பக்கம்.

28

ஓ, விஸ்வாவசுவே, எழுந்திரும்: இளம் பருவத்திலிருந்து இதுவரை இவளிடம் வசித்தீர். இப்போது நான் இவளுக்குப் பதியாகிவிட்டேன். நாங்கள் சதிபதியாக இருக்க தயவு செய்து அருள் புரியும்.

—சேஷ ஓமம் மந்திரம்

ஜன்னலைச் சாத்துகையில் மழை கோபியின் முகத்தில் அடித்தது. ஒரு வழியாகக் கொக்கியை இழுத்து மாட்டிவிட்டு, அவன் வாசற் கதவையும் பூட்டினான்.

வசு, மௌனமாகப் பக்கத்து நாற்காலியின் மேல் கிடந்த துவாலையை எடுத்து நீட்டினாள்.

''ஷர்ட்டெல்லாம் நனைந்திருக்கிறது.''

''ஆமாம்,'' என்ற கோபி, ''நீ தூங்கவேண்டாம்?'' என்று கேட்டான்.

''தூக்கம் வரும்னு தோணலை.''

''உட்கார்ந்திருந்தே இரவைக் கழிக்கப் போகிறாயா?''

''உங்க சட்டை நனைந்திருக்கிறது.''

''ஆமாம். மாற்று சட்டை இல்லை... நீ படுத்துக்கொள்.''

''முரளியின் சட்டையைப் போட்டுக் கொள்ளுங்கள்.''

அவன் சட்டையைக் கழற்றி

ப.வி.ஆர்.



னான். மார்போடு ஒட்டிக் கொண்டிருந்த பனியனையும் கழற்றினான்.

''சரி, இப்போ கொஞ்சம் எழுந்திரு. நாற்காலிகளை ஓர் ஓரமாக வைத்துவிட்டு, உனக்குப் படுக்கை விரித்துத் தருகிறேன்.''

''எனக்குப் படுக்கை ஒன்றும் வேண்டாம்.''

''பின்னே தரையில் படுத்துக்கொள்ளப் போறியா?''

''நீங்க படுத்துக் கொள்ளுங்கள். நான் சேரிலேயே உட்கார்ந்து கொள்கிறேன்.''

''ராத்திரி பூராவுமா?''

''ஆமாம்... பன்னிரண்டு ஆகப் போகிறது. இன்னும் நாலஞ்சு மணி நேரம்தானே.''

''வேண்டாம் வசு, தூக்கம் வரலைன்னாலும், காலை நீட்டிப் படுத்துக் கொள். இல்லாமற்போனால் நாளைக்கு உடம்பெல்லாம் வலிக்கும்.''

''ஒரு ராத்திரிதானே?''

''உன் இஷ்டம்.''

கோபி ஒரு ஜமுக்காளத்தையும் தலையணையையும் எடுத்துக்கொண்டான்.

பிறகு, ஜமுக்காளத்தைக் கீழே போட்டுவிட்டு, முரளி—நித்தியாவின் மெத்தையைப் பெஞ்சிலிருந்து அலாக்காகத் தூக்கித் தரையில் போட்டான். பிறகு, ''தேவைப்பட்டால் விரித்துக் கொள்!'' என்றான்.

''பாவம், நித்யா,'' என்றாள் வசு.

''ஏன்?''

''அவள் இன்னிக்குப் பூரா தூங்கவே மாட்டாள். முரளியையும் தூங்க விடமாட்டாள்.''

''அது அவள் குணம்.''



"எல்லாத்திலும் ஒரு பரபரப்பு, ஒரு அவசரம்."

"முரளி அவள்மேல் உசிரையே வைச்சிருக்கான்."

"அதுக்கு அவள் கொடுத்து வைத்திருக்கிறாள்."

"எப்படியோ அவள் நன்றாக குணமடைஞ்சு ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வந்தால் போதும்."

"உங்க நாகராஜனும் சீதாவும் இப்படிச் செய்வார்கள்னு நான் நினைக்கவேயில்லை."

"சொல்லாமல் கொள்ளாமல் வெளியே போய்விட்டார்கள்! உன்னை அவர்களுடன் அனுப்பியிருப்பேன்."

"ஆமாம். நானும் அவர்களுடன் திரும்பிப் போகலாம்னுதான் நினைச்சேன்."

"பாவம், உன் அம்மாவும் அப்பாவும் கவலைப்படுவார்கள்."

"போன்லே சொல்லக்கூட வழியில்லை."

கீழே கிடந்த ஜமுக்காளத்தை எடுத்து, ஹாலின் ஓரத்தில் கதவுக்குப் பக்கமாக விரித்தான் கோபி.

"சீதாவுக்கு அடுத்த மாதம் சீமந்தமாம்," என்றாள் வசு.

"ஆமாம். அவள் பிறந்த வீட்டுக்குப் போகணும் என்கிறாள். நாகராஜனுக்கு இஷ்டமில்லை. அவள் இஷ்டப்படி செய்யறதுதான் நல்லதுன்னேன்."

"........"

"நீ என்ன சொல்றே வசு?"

"எனக்கு என்ன தெரியும்? ஒவ்வொரு வீடு ஒவ்வொரு விதம். வீட்டுக்கு வீடு வாசற்படின்னு சொல்கிறார்களே தவிர, எத்தனையோ வித்தியாசம்!"

"வாஸ்தவம்தான்... என்னைப்போல வீடே இல்லாதவர்களுக்குத்தான் நிம்மதி...வாசற்படியே இல்லை."

வசுவுக்குச் சுருக்கென்றது. எதைக் குறிப்பிடுகிறான் கோபி? தான் ஒரு ரூமில் இருந்துகொண்டு ஓட்டலில் சாப்பிடும் யதார்த்தத்தையா? அல்லது கல்யாணமாகியும் ஒரு குடும்பம் என்று இல்லை என்கிற வெறுமையையா? என்ன பதில் சொல்லுவது என்று யோசித்த அவளுக்கு ஒன்றும் சொல்ல வரவில்லை.

"நீங்கள் என்ன சினிமா பார்த்தீர்கள்?" என்று கேட்டான் கோபி திடீரென்று.

"ஒரு இங்கிலீஷ்—ஸாரி, அமெரிக்கன் பிக்சர்."

"நன்றாயிருந்ததா?"

"நித்யா — முரளிக்குப் பிடிச்சிருந்தது."

"உனக்குப் பிடிக்கவில்லையாக்கும்?"

"ரசிக்கும்படியான மனநிலையில் நான் இல்லை."

"உன் மனசுதான் எதையாவது கற்பனை பண்ணி உலுப்பிக் கொண்டே இருக்குமே?"

இப்போது வசுவுக்குக் கோபம் வந்தது. அவள் எதைப் பற்றி, யாரைப்பற்றிக் கற்பனை பண்ணி மனசை உலுப்பினாள்? வெள்ளித் திரையில் இரு இளசுகள் தங்களுடைய காதலில்



அட்டையில்: நடிகை ஜெயசுதா; காய்கறி கடைக்கார உமாராணி; பக்கத்து கடை கண்ணனின் பெண் குழந்தை சுசிலா.

வண்ணப் படம்: உத்ரா. ஏற்பாடு : எஸ். ரஜத்

56'ம் பக்கம் பார்க்க



நாரத கான சபா கரூரில் நடத்திய ஒரு வார நாட்டிய விழாவில் கோயம்புத்தூர் நிருத்திய ஜோதி குமாரி ஜெயந்தி ராஜகோபால் முதல் நாளான 26.7.75 அன்று நடனமாடி எல்லோரையும் கவர்ந்தார். திரு. டி. கிருஷ்ணன், I. P. S., D. I. G., விழாவைத் தொடங்கி வைத்தார்.

நாட்டையில் புஷ்பாஞ்சலி (அலரிப்பு) எடுப்பாக விளங்கியது. குமாரி ஜெயந்தி ராஜகோபாலின் நடனத்தில் ஒவ்வோர் அம்சமும் பாவம் நிறைந்திருந்தது. பரத நாட்டியத்தின் கலாசாரச் சிறப்பு வெளிப்படும் வகையில் கடைசி வரை தரம் ஓங்கியிருந்தது. கல்யாணியில் ஜதிஸ்வரமும், கேதார கௌளையில் 'பாண்டிய நர்ட்டுக் குழந்தையும் நீயே' என்ற தில்லானாவும் குறிப்பிடத்தக்கன. குருவான நிருத்திய கலாகேசரி பந்தநல்லூர் பி. கணபதியப்பன் சீரிய முறையில் நட்டுவாங்கம் செய்தார்.

லஷ்மி மில்ஸ் குரூப் திரு. ராஜகோபால் (தென்னிந்திய மில் அதிபர் சங்கத்தின் தலைவர்) அவர்களின் புதல்வி நிருத்திய ஜோதி குமாரி ஜெயந்தி ராஜகோபால்.

கரூர்வைசியா பாங்கின் சேர்மன் திரு. பி. ஜி. சரண்யன் குமாரி ஜெயந்தியின் நடனத்தை மிகவும் பாராட்டி வாழ்த்தினார். கரூர் வைசியா பாங்கின் டெவலப்மெண்ட் மானேஜரான திரு. வி. ராதா கிருஷ்ணா குமாரி ஜெயந்தியின் பரத நாட்டியக் கலைத் திறமையைப் பாராட்டினார். கரூர் வைசியா பாங்கின் டைரக்டர் திரு. எம். எஸ். கோவிந்த ராஜுலு செட்டியார் கரூர் வைசியா பாங்கின் சார்பில் குமாரி ஜெயந்திக்கு கலை வேலைப்பாடமைந்த தஞ்சாவூர்த் தட்டு ஒன்றை வழங்கினார்.

ADVT.


ரூ. 30,000 மதிப்புள்ள
மேடிமிக்ஸ் இலவச தங்கப் பரிசுத் திட்டத்தின்
மூலம் பரிசு பெறும் முதல் அதிர்ஷ்டகாரர்.
எங்கள் பரிசு திட்டத்தில் 5 மேடிமிக்ஸ் பரிசுக் கூப்பன்களை
சேகரித்து அனுப்பிய குமாரி K. லட்சுமி அவர்களுக்கு
திரைப்பட நடிகர் மக்கள் கலைஞர் ஜெய்சங்கர்
½ பவுன் தங்க மோதிரத்தை பரிசாக அளிக்கிறார்
நீங்களும் அதிர்ஷ்டக்காரரானால்,
இலவச தங்க நகைகளைப் பரிசாகப் பெறலாம்
இப்பரிசுத் திட்டம்
31-1-1976
வரை உண்டு
MEDIMIX
AYURVEDIC TOILET SOAP
இன்றே வாங்கிடுவீர்
CHOLAYIL PHARMACEUTICALS
1, Palayakara Street, MADRAS-600023.

SUBHODAYA

மெய்மறந்து கிடக்கையில் அவளுடைய மனம் எதைப்பற்றி நினைத்து வேதனையில் புழுங்கிக் கொண்டிருந்தது? அவளுடைய பெண்மையை ஆளுவதற்கு என்று ஒருவன் வாய்த்திருந்தும், அவனுடைய ஆண்மை அவளுக்குக் கிட்டாத நிலையைப் பற்றி அவள் எண்ணியது இந்தக் கோபிக்கு எப்படித் தெரியும்?

"நீங்கள் பார்த்திருந்தால் நீங்களும் ரசிக்க முடியாமல் தவித்திருப்பீர்கள்."

"ஓ... அப்படிப்பட்ட படமா?"

"ஆமாம்... பெண்ணின் ஆசைகளையெல்லாம் உணர்ந்து அறிந்து புருஷன் திருப்தி செய்கிறான்."

"அது மாதிரி, அந்தப் பிள்ளைக்கு ஆசை ஏதும் கிடையாதோ?"


"இருக்கு."

"அதை அந்தப் பெண் எப்படி மதிக்கிறாள்? ஒருவேளை புரிந்து கொள்வதே இல்லையோ?"

"அதுதான் கிடையாது. அவளும் அவனைப் புரிந்து கொள்ளுகிறாள்."

"இதுதான் கதைன்னு கண்டிப்பா, நித்யா — முரளிக்குப் பிடித்திருக்க வேண்டும்."

"அதுதான் எனக்குப் பிடிக்காமல் போய்விட்டது."



"ஹலோ! டெலிபோன் ஆபீஸ் தானே! டெலிபோன் பூத் கதவை ஓங்கி அறைந்து சார்த்துகிறபோது கீழே விழுந்திட்டேன். தூக்கி நிறுத்த நாலு ஆளை அனுப்புங்க."

"ஐ ஆம் ரியலி வெரி ஸாரி."

"நீங்கள் ஏன் வருத்தப் படணும்?"

"நான் தூங்கலாமா?"

"தூங்குங்கள்."

"குட்நைட்."

"குட்நைட். விளக்கை அணைத்து விடட்டுமா?"

"வேண்டாம். நீ உட்கார்ந்திருக்கிறபோது விளக்கை அணைத்து விட்டால் எதையோ பறிகொடுத்த மாதிரி தோணும்."

"இ ங் கே ப டி க் க ஒரு புஸ்தகம்கூட இல்லையே?"

"குட்நைட்."

ஏதோ ஒரு சவாலில் இரவு பூரா உட்கார்ந்திருக்கப் போகிறேன் என்று வசு சொன்னாளே தவிர, அவளால் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் ஆணி அடித்ததைப்போல இருக்க முடியவில்லை. வெளியே இன்னும் மழை பெய்து கொண்டிருந்தது. இந்த மாதத்தில் இப்படி மழை பெய்யும் என்று எந்த வானிலைக்காரரும் அறிவிக்க முடிவதில்லை. மழையுடன் குளிரும் வேறு அவளைக் குத்தின. கால்களைத் தொங்கப் போட்டிருந்தவள், இரு கால்களையும் தூக்கி நாற்காலியில் வைத்துக் கொண்டாள். ஐந்தே நிமிடத்தில் அந்த நிலையும் அசௌகரியமாகப் பட்டது. எழுந்து நின்றாள். கோபி அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். வாசற் கதவுப் பக்கமாக முகம் திரும்பியிருக்க, அவனுடைய முதுகு மட்டும் அவள் கண்ணுக்குத் தெரிந்தது.

தலையைத் திருப்பினாள். சமையலறை வெறிச்சோடியது. கோபி கீழே போட்டிருந்த மெத்தையைப் பார்த்தாள். கீழே உட்கார்ந்து அதன் மேல் சாய்ந்து கொண்டாள். முதுகுக்கு இதமாக இருந்தது. கொஞ்சம் காலை நீட்டிக் கொண்டாள். கால் நாற்காலி மேல் இடித்தது. மீண்டும் எழுந்து ஓசைப்படாமல் நாற்காலியை எடுத்து சமையலறையில் வைத்துவிட்டு வந்தாள். மறுபடியும் சாய்ந்தாள். காலை நீட்டிக் கொண்டாள். தலைக்கு மெத்தை வெகு உயரமாக இருப்பதாகத் தோன்ற ஆரம்பித்தது. இன்னும் இப்படியே போனால், கழுத்து சுளுக்கிக் கொள்ளும் என நினைத்தாள். ஹாலினுள்ளே

ஒரு ஐந்து நிமிடம் வளைய வளைய வந்தாள். சுவரில் மாட்டப்பட்டிருக்கும் வெங்கடாசலபதியின் படம் கண்ணில் பட்டது. கண்டிப்பாக நித்யா கொண்டு வந்திருக்கமாட்டாள் என நினைத்தாள்.

கண் கோபி பக்கம் திரும்பியது. இன்னும் அதே கோலத்தில் அவன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான். இந்த டியூப் லைட்டின் வெளிச்சம் அவனுடைய உறக்கத்தைப் பாதிக்காதது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவள் மெத்தை மேல் உட்கார்ந்து கொண்டாள். மனம் வெறிச்சோடியது. எதையாவது நினைத்துப் பார்க்கலாம் என்று தோன்றியபோது அன்று பார்த்த சினிமா கண்முன் தோன்றியது. அவளால் ஏன் ரசிக்க முடியவில்லை? படம் முழுக்க முழுக்க ஒரு இளம் ஜோடியைப் பற்றிய கதை. ஆன்மிக வாழ்க்கையைப் பற்றிய படமாக இருந்திருந்தால் ஒருவேளை அவள் முதலிலேயே எழுந்து வெளியே வந்திருப்பாள். ஒரு லௌகிக, யதார்த்த வாழ்க்கையை வெள்ளித் திரையில் பார்த்தபோது ஏன் எரிச்சல் வந்தது? அவளுடைய ஏமாற்றத்தை அது உணர்த்தியதா? அந்த ஏமாற்றத்துக்குக் காரணம் யார், எது என்று தெரியும்போது மனம் குமுறியதா?

அவள் மெத்தையினின்றும் எழுந்தாள். ஒரு கோபம், ஒரு எரிச்சல். ஏன் ஒரு வெறி அவளை மீண்டும் தாக்க ஆரம்பிக்கிறதோ என்ற பயம் அவளைக் கவ்வியது. அடுத்த கணமே, நித்யா—முரளி, சீதா—நாகராஜன் இவர்களெல்லாம் அவள் முன் தோன்றினார்கள். ஒரு தோப்பில் அவள் தனிமரமாக இருக்கும் உண்மைதான் அவளுடைய மனத்தின் வேசாறலுக்குக் காரணம் என்பதை அவளே உணர்ந்தாள்.

அந்தப் பெரிய படுக்கையை விரித்தபோதுதான், அதன் ஒரு விளிம்பு கோபியின் ஜமுக்காளத்தின் மேல் விழுந்து அதை மறைக்கிறது என்பதைப் பார்த்தாள். மெத்தையை இழுத்துவிட வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை.

விளக்கை அணைத்தாள். படுத்தாள். திடீரென்று தான் மெத்தையிலும் கோபி ஜமுக்காளத்திலும் படுப்பது அசம்பாவிதமாகத் தோன்றியது. இனி இந்த மெத்தையைச் சுருட்டி வைத்து, வேறு ஒரு ஜமுக்காளத்தைப் போட்டுக் கொள்ளுவது இயலாத காரியம்.

என்ன செய்வது?

"தூங்குகிறீர்களா?" கேள்வியே அபத்தமாகப் பட்டது. இதை உணர்ந்ததும் அவள் மீண்டும், "தூங்குகிறீர்களா?" என்று கேட்டாள். குரல்



லாரல் (ஹார்டிக்கு) அப்பளம் அனுப்பிய திருப்பூர்க்காரர்

திருப்பூர் சுரேந்திரநாத்தின் பொழுதுபோக்கு சினிமா நட்சத்திரங்களுக்குக் கடிதம் எழுதுவது—உள்நாட்டு நட்சத்திரங்களுக்கு அல்ல; வெளிநாட்டு நட்சத்திரங்களுக்கு!

ஹாஸ்ய நடிகரான ஸ்டான் லாரலுக்கு சில வருடங்களுக்கு முன் ஒரு கட்டு அப்பளம் அனுப்பினார் சுரேந்திரநாத். (அப்பளத்தின் விலை ஒரு ரூபாய். தபால் செலவு பதினெட்டு ரூபாய்!) ஸ்டான் லாரல் தனது வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகத் தெரிவித்திருக்கிறார்.

அதேபோல் 'நீச்சல் அழகி' என்று புகழ் பெற்றிருந்த எஸ்தர் வில்லியம்ஸுக்கு ஒரு காஞ்சிபுரம் பட்டுப் புடவை அனுப்பினார். பதிலுக்குத் தனது கவர்ச்சிப் படம் ஒன்றையும், அழகிய கர்சீப் ஒன்றையும் அனுப்பிவைத்தார் அந்த நீச்சலழகி.

மர்மமன்னன் ஆல்பிரட் ஹிச்காக்குக் கடிதம் எழுதியபோது அவர் தனது கையெழுத்திட்ட மிகப் பெரிய புகைப்படம் ஒன்றையும் இவருக்கு அனுப்பினார்.

அவளுக்கே பலமாகக் கேட்டது.

கோபி, ''வசு, சூப்பிட்டாயா?'' என்றான். ''ஏன் விளக்கை அணைச்சுட்டே?''

''உட்கார்ந்து உட்கார்ந்து அலுத்தது. நீங்க மட்டும் ஏன் அதிலே படுத்துக்கணும்...''

''பரவாயில்லே.''

''இங்கே நிறைய இடம் இருக்கு. போர்வையும் இருக்கு.''

கோபி திரும்பிப் படுத்துக் கொண்டான். இருட்டில் வசுவின் முகம் தெரியவில்லை.

''வசு.''

''உம்...''

''நீ நிம்மதியாகத் தூங்கு.''

வசு மெத்தையின் ஓட்டுக்கு வந்தாள். கோபியின் மூச்சு அவளுடைய முகத்தில் பட்டுத் தகித்தது.

''நீங்கள் திரும்பிப் படுத்துக்கொண்டு விட்டீர்களா?''

''ஆமாம்.''

''அதான், நீங்க விடற மூச்சு என்மேலே பட்டது.''

''ஸாரி.''

''இன்னும் கொஞ்சம் நகர்ந்து வாருங்கள். நானும் நகர்ந்து கொள்கிறேன். மெத்தை அகலமாக இருக்கு.''

கோபி சற்றே நகர்ந்தான். அவனுடைய கால் வசுவின் கால்மீது பட்டது.

''ஸாரி,'' என்றான் அவன்.

''எதுக்கு?'' நகராமலே வசு கேட்டாள்.

''உன்னை மிதித்துவிட்டேன்.''

''நீங்க இன்னும் ஜமக்காளத்திலேயே இருக்கிறீர்கள்,'' என்றாள்.

அவன் இன்னும் நகர்ந்தான்.

''வசு, இப்போ உன் மூச்சு என் மேலே படறது.''

''நான் ஸாரி சொல்லப் போறதில்லே,'' என்ற அவள், அவனுடைய ஒரு கை தன் கையைப் பிடிப்பதை உணர்ந்தாள்.

''ரொம்ப நாள் ஆச்சு இல்லே?'' என்றான்.

''ஆமாம்.'' அவள் முனகினாள்.


(தொடரும்)



யார்?

101'ம் பக்கம்

மேரிக்குத் தடை



■ கயானாவில் ஒரு சட்டம். மேரி என்ற பெயர் இருக்கும் பெண்கள் மட்டும் விபசாரத் தொழிலில் ஈடுபடக் கூடாது.

■ அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் எத்தனை டீ ஸ்பூன் தண்ணீர் இருக்கிறதோ அத்தனை அணுக்கள் ஒரு டீ ஸ்பூனில் இருக்கின்றன.

■ ஒரே நேரத்தில் சைனாவில் வசிக்கும் அத்தனை பேர்களும் தங்கள் இருப்பிடத்தை விட்டுச் சட்டென்று எழுந்து குதித்தால் அதனால் ஏற்படும் அதிர்ச்சியால் எழும்பும் கடலலைகள் அமெரிக்கா முழுவதையும் மூழ்கடித்துவிடும்.

■ மெக்சிகோவில் உள்ள அலாமாஸ் என்ற ஊரில் உள்ள சிறையிலிருந்து கைதி யாராவது தப்பிவிட்டால், தப்பிய கைதி மேற்கொண்டு எத்தனை காலம் ஜெயிலில் இருக்க வேண்டுமோ அத்தனை காலம், அந்த நேரத்தில் டியூட்டியில் இருந்த சிறைக் காவலர்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

■ அதிக அளவு சப்தத்தைக் கொண்டு ஒரு கெட்டியான இரும்புப் பெட்டியில் ஓட்டை போட்டுவிடலாம்.

■ பனிப் பிரதேசத்தில், குளிரில் வாழும் எஸ்கிமோக்கள் ரெப்ரிஜிரேட்டர்களை உபயோகிக்கிறார்கள், தங்கள் உணவு வகைகள் உறைந்துவிடாமலிருக்க.

■ கொகாகோலாவின் பார்முலா (தயாரிப்பு) ரகசியம் முதலில் ஏழு பேர்களுக்குத்தான் தெரிந்திருந்ததாம். இப்போது இரண்டு பேர்களுக்குத்தான் அந்த ரகசியம் தெரியும். அந்த இரண்டு பேர்களும் ஒரே விமானத்தில் சேர்ந்து பயணம் செய்யமாட்டார்கள். ஓர் ஆண்டுக்கு விளம்பரத்துக்காகச்செலவாகும் தொகை 35 மில்லியன் டாலர்கள். இந்தப் பணத்தில் உலகில் உள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு பாட்டில் கொகாகோலா இனாமாகக் கொடுக்கலாம். இன்று தினமும் 90 மில்லியன் பேர்கள் உலக முழுவதும் 158 நாடுகளில் கொக்கா அருந்துகிறார்கள்.

ஆதாரம்: வுட் யு பிலீவ் இட்.

—கே. சுப்ரமண்யம்.

கல்யாணமான கையோட, மஞ்சள் வேஷ்டி மாறுமே, உங்க ஊர் அபிராமி அம்மன் சந்நிதிக்கு வந்து பட்டுப் புடவை சாத்தறதா நேர்ந்து கிட்டது. என்ன காரணமோ நடத்தலே. மறந்திட்டுது. நீங்களும் பேசாமே இருந்திட்டீங்க. ஒரு ரூபாய் பணத்தை மஞ்சள் துணியிலே கட்டி வேண்டிக்கிட்டேன். 'தாயே, மன்னிச்சுக்கோடி அம்மா... தாயும் சேயும் பிழைச்சு எழுந்திருக்கட்டும். உன் கடனைச் செலுத்தறேன்,' என்று வேண்டிக்கிட்டேன்.''

மாமியார் கண்களைத் துடைத்துக் கொண்டாள். மாமனார் தொடர்ந்தார்: ''டாக்டர் மறுபடி ஆறு மணிக்கு வந்து பார்த்தாங்க. 'கவலைப்படாதீங்க....இப்போ எல்லாம் நார்மலா இருக்கு....இரண்டு மணி நேரத்திலே பிரசவம் ஆகும்'னு சொன்னார்...எட்டு பத்துக்குப் பிறந்தது....பரணி நட்சத்திரம்,'' என்றார் அவர் வாயெல்லாம் பல்லாக—தன் பேரன் அப்போதே தரணி ஆள்வதைப்போல்.

பாலனுக்கு உடலெல்லாம் புல்லரித்தது. அதே ஆறு மணிக்கு அவன் செல்விக்கு வாங்கிய புடவையை குருக்கள் அபிராமி அம்மனுக்கு அணிவித்திருப்பார்.

ஒரு வாரம் கழித்து அவன் கடை வாசலில் கார் வந்து நின்றது. பிரசிடெண்ட்தான்.

''என்ன தம்பி...புடவைக்குப் பணம் இன்னும் வாங்கிப் போகலே?''

''அதனாலே என்னங்க. அம்மனுக்குத்தானே சார்த்தினீங்க? என் பங்கும் சேரட்டுமே!'' என்றான் பாலன் உள்ளம் நிறைந்தவனாய்.



ஆகா, என்ன செல்லம்!



ஆஸ்திரியாவில் உள்ள வயிட் ஹாவென் என்ற சிறு நகரத்தில் பிற்பகல் மணிக்குத் தினம் ஒரு நிகழ்ச்சி நடக்கும். ஜான்கிராமணி என்பவர் தன்னுடைய செல்ல வளர்ப்பைச் சாலையில் அழைத்துச் செல்வார்.

ஒன்பதடி நீளம், கால் டன் எடையுள்ள ஜோக்கி என்ற முதலைதான் 'செல்லம்!'

அவர் எவ்வளவு ஒய்யாரமாக தலையின்மீது சாய்ந்துகொண்டு படிக்கிறார் பாருங்கள்! காரில் போகும்போது ஜோக்கியும் ஜானின் மீது ஓய்வு எடுத்துக் கொள்கிறது.

—'டிட்பிட்ஸ்'



29

சந்ததி சம்பத்துக்களுடன் இந்த வீட்டுக்கு நீ எஜமானியாக இருந்து, ஜாக்கிரதையுடன் உடம்பை ரட்சித்து, சுகம் அனுபவி. வயதானபின் அனுஷ்டான முறையை நீயும் மேற்கொண்டிரு. பெரியோர்கள் எல்லா பாக்கியங்களையும் ஆசிர்வதிக்கட்டும்.

—சம்ஸ்காரம்

மறு நாள் காலையிலேயே நித்யா முரளியை அழைத்துக் கொண்டு தன் தகப்பனுருடைய வீட்டுக்குச் சென்று விட்டதால் வசுவுக்கும் கோபிக்கும் ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

வீட்டு வாசலில் டாக்ஸி நின்றதும் கோபி, ''வசு, இப்போதே மணி எட்டு ஆகி விட்டது. நான் ரூமுக்குப் போய்க் குளித்து, டிரெஸ் பண்ணிக்கொண்டு ஆபீஸுக்குப் போறதுக்குள்ளே ஒன்பதரை ஆகி விடும்,'' என்றான்.

''நோ நோ. உள்ளே வந்து பத்து நிமிஷமாவது இருந்து விட்டுத்தான் போகணும்,'' என்றாள் வசு. பிறகு, ''டிரைவரைக் கொண்டு ஸ்டெப்னியைப் போடச் சொல்றேன். என் காரிலேயே உங்களைக் கொண்டு போய் விடுகிறேன்,'' என்றாள்.

கோபியும் இறங்கினான்.

அவர்கள் இருவரும் படியேறி வருவதைக் கண்ட ராஜலட்சுமி அயர்ந்து போனாள். இரவு வந்த மற்றொரு போனிலிருந்து, முந்தின இரவு அவசர அவசரமாக வெளியேறிய வசு நித்யா வீட்டுக்குத்தான் போயிருக்க வேண்டும் என்று ஊகித்திருந்தாள். காலையில் இந்த இருவரும் இப்படிப் பட்ட குதூகலத்தோடு சேர்ந்து வருவதை அவள் பார்த்து மகிழ்ந்து போனாள். தன்னுடைய அவல நிலைக்கு அவள் கண்ட காட்சி அருமருந்தாகப் பட்டது.

வசு மூச்சு விடாமல் விவரத்தைக் கூறிவிட்டு, ''எங்களுக்கு முதல்லே காப்பி வேணும் அம்மா!'' என்றாள்.

''இதோ!'' என்று ஓடினாள் ராஜலட்சுமி. மறுநிமிடம் காப்பி வந்தது.

''காப்பி சாப்பிட்டு விட்டுப் பேப்பரைப் படியுங்கள். அப்புறம் குளித்துச் சாப்பிட்டு விட்டுப் போகலாம்,'' என்றாள் வசு கோபியிடம்.

''மாற்று உடைக்கு எங்கே போறது? உன் அப்பா பாண்ட்லே நீயும் ஒளிஞ்சுக்கலாம்,'' என்றான் கோபி.

''வேஷ்டி தரேன். உங்க ரூம்லே போய் பாண்டை மாட்டிக் கொள்ளுங்கள். அப்புறம் உங்க ஆபீசிலே ட்ராப் பண்றேன்.''

''ஓகே, நீ லிஃப்ட் தரப்போ நான் ஏன் அலட்டிக்கணும். ஆமாம், எங்கே உன் அப்பா?''

''வெளியில் போயிருக்கிறாராம். கெய்ஸரைப் போடறேன். குளிக்கத் தயார் பண்ணிக் கொள்ளுங்கள்.''

ஒன்பதே கால் மணிக்கு புறப்படுவதற்கு முன் தபால்காரன் கடிதங்களைக் கொடுத்து விட்டுப் போனான். அவற்றில் ஒன்று வசுவின் கண்ணை ஈர்த்தது. யாருக்கோ கல்யா

ப.வி.ஆர்.



...ரம், இன்விடேஷன் வந்திருக்கிறது ...ன்று எண்ணிப் பிரித்துப் பார்த்தாள்.

லெதர் எக்ஸ்போர்ட் சிவ ...தானத்தின் கல்யாணம் நடந்து இருபத் ...தந்து ஆண்டுகள் முடிகிறதாம். ...வள்ளி விழா கொண்டாடுகிறாராம்.

''வெரி குட்!'' என்ற வசு, ...அம்மா, இந்த மாசம் நம்ம வீட்டிலும் ...ரு பெரிய ஃபங்க்ஷன்!'' என்றாள்.

கோபி அருகே நிற்பதையும் ...பாருட்படுத்தாமல். ''என்னடி விசே ...ம்?'' என்று கேட்டாள் ராஜலட்சுமி.

''இது எந்த வருஷம்? ...ஸவன்டி ஃபைவ். இந்த மாசம் தான் ...ன் வெட்டிங் டே. ஸில்வர் ஜூப்ளி ... வறது. இன்னும். . இன்னும் ...ன்னிரண்டு நாள் இருக்கு!''

''அதுக்கு என்ன செய்ய ...வும் என்கிறே?''

''சினிமாவில் வருகிற ...ரி உன்னையும் அப்பாவையும் ...ணையிலே உட்கார்த்தி வேடிக்கை ...ர்க்கப் போகிறோம். ஆடப் ...பாறோம், பாடப் போறோம்.''

''மொதல்லே மாப்பிள்ளை ...ய ஆபீஸ்லே டிராப் பண்ணிட்டு ...ற வழியைப் பாரு. . ஸில்வராம் ஜூபிலியாம்!'' என்றாள் ராஜலட்சுமி.

''வசு சொல்றதிலே என்ன தப்பு?'' என்ற கோபி, ''வசு, இந்த விஷயத்தில் நான் உன் கட்சி. ஜாம் ஜாம்னு நடத்திடுவோம். என்னுடைய இந்த மாசச் சம்பளத்தில் உன் அம்மா வுக்குப் பட்டுப் புடவை, அப்பாவுக்குப் பட்டு வேஷ்டி! ஒகே!''

வசு திரும்பி வரும் போது பெரிய அட்டைப் பெட்டியுடன் வந் தாள்.

''அம்மா இதைப் பாரு.''

''என்னடீ?''

''பாரேன்!'' என்ற வசு தொடர்ந்து, ''அவரோடு நானும் ஆபீஸுக்குள்ளே நுழைஞ்சேன். ரெண்டு பேருமாய்ச் சேர்ந்து இன்விடேஷனை எப்படி எழுதறதுன்னு மண்டையை உடைச்சிட்டோம். கடைசியா ஸிம்பிளா அவரே கையெழுத்துப் பிரதியைக்

துணுக்

இலங்கையில் விற்கப்படும் 'நிரோத்' சாதனங்களுக்குப் பெயர் 'பிரீதி'.

—மெடியா

■

நான் திருமணம் செய்து கொள்ளாததற்குக் காரணம், எந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது என்று தெரியாததால் அல்ல. எந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்பது புரியாததால்.

—சத்ருகண் சின்ஹா.

■

நான் ரிட்டயர் ஆக மாட்டேன். வயது ஆக ஆகத்தான் நடிப்புத் திறன் அதிகமாகும். நான் நடிக்காமல் உயிரோடு இருப்பதையே நினைத்துப் பார்க்க முடியவில்லை.

—ஷர்மிளா தாகூர்

■

ஒரு கார் டிரைவர் ஒரு பாதசாரியைக் கீழே அடித்துத் தள்ளி விட்டார். உடனே அவரைக் காரில் ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போவதாகச்சொல்லிவிட்டுப்போனார். கொஞ்ச தூரம் போனதும் அடி பட்ட மனிதனுக்குத் தன்னிடமிருந்து விஸ்கி பாட்டிலை நீட்டினார். அந்த மனிதனும் வலியை மறக்க நன்றியோடு பாட்டிலை வாங்கி நிறையக் குடித்தார். கொஞ்ச நேரத்தில் கார் ஒரு போலீஸ் ஸ்டேஷன் வாசலில் நின்றது. ஒரு போலீஸ்காரரைக் கூப்பிட்டு, "இந்த ஆசாமி குடித்து விட்டு என் காரில் எதிரில் வந்து மோதிக்கொண்டார்," என்றார். மது நெடி அடித்த அந்த ஆசாமியைப் போலீஸ்காரர் ஸ்டேஷனுக்குள் தள்ளிக்கொண்டு சென்றார்!

—ஜே, எஸ்.

■

இங்கிலாந்தில் பத்து பவுன் நோட்டுகளில் ஒரு புறம் ராணியின் படமும் மறுபுறம் ப்ளாரென்ஸ் நைட்டிங்கேல் படமும் இருக்குமாம்.

—ஹிம்மத்

கொடுத்து அனுப்பினார். ஒரு மணி நேரத்திலே ப்ரூஃப் வந்தது. கரெக்ட் பண்ணினோம். அனுப்பினோம். ஆயிரம் காப்பி போதும் இல்லியோ?"

ராஜலட்சுமிக்கு என்ன சொல்லுவது என்று புரியவில்லை. ஓர் அழைப்பிதழை எடுத்துப் பார்த்தாள். படித்தாள்.

இதயத்தில் கசிந்த கண்ணீரை அடக்க முயன்று கொண்டே, "நன்றாகத்தான் பிரிண்ட் பண்ணியிருக்கிறாய் வசு. ஆனா அவசியமில்லாத ஒரு காரியம்," என்றாள்.

"ஏம்மா இதைப் போய்க் காரியம்னு சொல்றே? காரியம்னாலே அர்த்தம் வேறே அம்மா."

"நாங்க எதுக்கு வெள்ளி விழா கொண்டாடணும்?"

"அம்மா, எலியும் பூனையுமா தினம் தினம் அடிச்சுட்டு, கடிச்சுட்டு இருக்கிறவர்களெல்லாமே ஸில்வர் ஜூபிளி, அலுமினிய ஜூபிளின்னு பணத்தை வாரிக் கொட்டி ஊராருக்கு வெளிச்சம் போடறாங்க. நீயும் அப்பாவும் அப்படியா அம்மா?"

"நாங்க பின்னே எப்படீன்னு நீ நினைக்கிறே?"

"லட்சிய தம்பதி. அப்பாவின் நிழல்மேலே உன் கால் பட்டுட்டா அவருக்கு வலிக்கும்னு நினைக்கிறவள் நீ. ராத்திரியிலே ஒரு தடவை இருமினாக் கூட, டாக்டருக்கு போன் பண்ண ஓடறவர் அவர். அவருடைய பாடலுக்கு நீ சுருதியா இருக்கே.. உன்னோடே கீதத்துக்கு அவர் ராகமா இருக்கார்.. "

ராஜலட்சுமி பொங்கிவரும் நெஞ்சு நீரை வாய் வார்த்தையால் அடக்கப் பார்த்தாள்.

"வசு, இன்னிக்கு நீ நான் பார்க்கிற வசுவாகவே இல்லை. நீ மாறி இருக்கிறாய்."

"இல்லை அம்மா."

"எப்படியோ, நீ மாறினால் சரி. மாப்பிள்ளை சாயங்காலம் வருவார் இல்லியா?"

"நாங்க ரெண்டு நாள்லே மேற்கு மாம்பலம் வீட்டுக்குப் போறோம் அம்மா."

"அப்படியா!"



31'ம் பக்க விடை: சிவகுமார்—ஸ்ரீப்ரியா

''ஆமாம். .அப்படி ஒண்ணும் போர்ஷன் சின்னதா இல்லே. வேணும்னு கொஞ்ச நாளைக்கு அப்புறம் வேறே தேடிக்கலாம்...அதிருக்கட்டும்... உன் வெடிங் டே விஷயமாய் எல்லா ஏற்பாடுகளையும் நானும் அவரும் செய்யப் போறோம். .நீங்க யாரும் குறுக்கே வரப்படாது. உனக்குச் சாய்ஸே இல்லே.இது சிறியோர்களால் நிச்சயிக்கப்படுகிற பெரியோர்களின் கல்யாணம்! என் கல்யாணத்துக்குத் தயார் பண்ணின அட்ரெஸ் லிஸ்ட் இருக்கு. இப்போதே எழுத ஆரம்பிக்கப் போறேன்.''

''வசு, அப்பா முடியாதுன்னா என்ன செய்வே?''

''பயமுறுத்துவேன்...''

''என்னன்னு?''

''மேற்கு மாம்பலம் வீட்டுக்கு உன்னையும் அழைச்சுட்டுப் போயிடுவேன்னு!''

ராஜலட்சுமி வாய் விட்டுச் சிரித்தாள்.

மாலையில் சிவராமன் வந்ததும் ராஜலட்சுமி வேண்டாவெறுப்பாக நடந்ததையெல்லாம் சொன்னாள்.

''நான்சென்ஸ்...'' என்றார் அவர்.

''எனக்கும் அப்படித் தான் படறது. ஆனா வசு எல்லா ஏற்பாடுகளையும் ஆரம்பித்து விட்டாள். மாப்பிள்ளை வேறே அவளுக்குப் பக்க பலமாக நிற்கிறார்.''

''எனக்கு இஷ்டமில்லே.''

''எனக்கு மட்டுமென்ன, இன்னொரு தடவை உங்களோட மணையிலே உட்காரணும்னு ஆசையா, இல்லே,

வெறியா..?''

''கான்ஸல் பண்ணி விடறேன்.''

''நானே பண்ணத்தான் பார்த்தேன். ஆனு முடியலே..வசு இப்போ சந்தோஷமா இருக்கிறுள். மாப்பிள்ளையுடன் அவள் இன்னிக்குக் கார்த்தாலே படி ஏறி வந்த போது எனக்கு உடம்பெல்லாம் சிலிர்த்தது.''

''நம்ம கல்யாணத்துக்கு ஸில்வர் ஜூபிளியா.. வெட்கக் கேடு!''

''நான் சொல்ல வேண்டிய வார்த்தை..ஆனு இப்போ ஊருக்காக நாம் பாலேக் குடிக்க வேண்டியிருக்கு..''

''இல்லாமப் போனு?''

''நாம இரண்டு பேரும் இப்ப குடிச்சுட்டிருக்கிறது விஷம்னு வெளியே தெரிஞ்சு விடும்.''

''எப்படி?''

''நான் வசுகிட்டே தலே அசைச்சாச்சு.....அவளும் அம்பது அறுபது. இன்விடேஷன் ஸ்டாம்ப் ஒட்டி அநுப்பிச்சாச்சு..இனிமே நீங்க முடியாதுன்னு பிடிவாதம் பிடிச்சால் அவமானம் மட்டுமில்லே, அவதூறும்வரும்.''

''நான் கவலேப்பட வில்லே.''

''நான் படறேனே.''

''ஐ டோண்ட் கேர்.''

''நான் நேத்து ராத்திரி உங்ககிட்டே கெஞ்சிக் கேட்டதையெல்லாம் அதுக்குள்ளே மறந்து போயிட்டீங்களா?''

''வீட்டுக்குள்ளே நாம லட்சிய தம்பதியா இருக்கணும்னு நீ ஆசைப் படறே!''

''இல்லே, வீட்டுக்கு வெளியேயும் அப்படித்தான் நினேக்கிறுர்கள். இப்ப நீங்க உங்க பிடிவாதத்தை விடலேன்னு வெளியே சிரிக்க ஆரம்பிப்பார்கள். வசு உங்ககிட்டே காரணம் கேட்பாள். அவளுக்கு என்ன பதில் சொல்லுவீர்கள்?''

சிவராமன் கண்ணில் அனல் தெறிக்க ராஜலட்சுமியைப் பார்த்தார்.

''ஓகே! ஆனுல் ஒரு கண்டிஷன்.''

''என்ன!''

''நீ யாரை மனசார வெறுக்கிறியோ அவளும் வருவாள்.''


ராஜலட்சுமி திகைத்துத் திடுக்கிட்டுச் சிலேயாகப் போவாள் என்றுதான் சிவராமன் எதிர்பார்த்தார். ஆனுல் அவள் சிரித்தாள்.

''நான் அமிர்தம்மாவை வெறுக்கவில்லேயே! நான் இப்போ யாரை மனசார வெறுக்கிறேன்னு உங்களுக்குத் தெரியலேயா?''


''அந்த வெறுப்பு மியூச்சுவல். பரஸ்பரம் ரெண்டு வெறுப்புப் பிண்டங்கள் மாலேயும் கழுத்துமாக மணையிலே உட்கார்ந்து ஊராருக்காகப் பல்லேக் காட்டிச் சிரிக்கப் போகிறது. இதுக்கு ஒரு விருந்து. ஒரு கும்மாளம். ஓகே! ஆனு அமிர்தம் வருவாள். அவள் இல்லாம இது நடக்காது.''

''அதான் சொல்லிவிட்டீர்களே?''

''உனக்குத் தான் என் புராணம் பூரா தெரிந்தாகி விட்டதே. இனிமே, பிட்டுப் பிட்டு உடைச்சுச் சொல்றதுக்கு என்ன? அன்னிக்கு நீயும் நானும் மணையிலே உட்கார்ந்திருந்தப்போ அவள் ஏதோ ஒரு வீட்டில் எங்கோ ஒரு மூலேயில் உட்கார்ந்து விசித்து விசித்து அழுது கொண்டிருந்தாள்... அந்த நாளுக்கும் ஸில்



குறி தப்பவில்லை



இன்ஸ்பெக்டர் ஒருவர் பள்ளி ஒன்றுக்கு வருகை தந்தார். மாணவ மணிகளைத் தணிக்கை செய்ய முனைந்தார். எனவே ஒரு மாணவனை எழுப்பி, கரும்பலகையில் ஒரு வாக்கியத்தை எழுதி அந்த மாணவனை ஒழுங்கு படுத்திக் குறியீடு இடுமாறு கூறினார். அவர் எழுதிய வாக்கியம், **The inspector said the teacher is a fool.** இதை **punctuate** பண்ணும்படி கூறினார். அந்த மாணவன் அதை **The inspector said, "The teacher is a fool"** என மாற்றியவுடன் அந்த வகுப்பு ஆசிரியரின் முகம் வெட்கத்தால் சிவந்தது. தன்னை இழிவு படுத்த எண்ணிய இன்ஸ்பெக்டரைப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தால் வகுப்பு மாணவர்களிலே அறிவுக் கூர்மையான மாணவனை எழுப்பினார். "இந்த வாக்கியத்தை இன்னொரு விதமாகவும் மாற்றலாம். நீ செய்," என்றார். அந்த புத்திசாலியான மாணவன் ஆசிரியரின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு கரும்பலகையை நோக்கிச் சென்று **"The inspector," said the teacher, "is a fool."** என்று திருத்திக் குறியீடு செய்தான். இன்ஸ்பெக்டர் முகம் சிவந்தாலும், அந்த மாணவனின் அறிவுக் கூர்மையையும் ஆசிரியரையும் பாராட்டினர்.

—ச. சாத்ராக்

வர் ஜூபிலி வேண்டாம்? அவள் இங்கேயே நம்ம வீட்டு ஹாலிலேயே உட்கார்ந்து. ."

ராஜலட்சுமி இடைமறித்தாள். "ஹாலில் ஒரு மூலையை அவளுக்காக ஒதுக்கி வைக்கிறேன். போதுமா?"

சிவராமன் பதில் சொல்ல வார்த்தைகளைத் தேடினார். தடுமாறினார். கடைசியில் அவை தெறித்தன.

"சே, வாழ்க்கையில் என்ன விபரீதம் பார்! . ஒரு சின்ன இட மாற்றம் எவ்வளவு பயங்கரமாகப் போய் விட்டது. மணையில் இருக்க வேண்டியவள் மூலையில் இருக்கப் போகிறாள்."

"நீங்கதான் மூலையையே மணையாக்கி விட்டீர்களே!"

"சரிதான், மூடு வாயை."

"சரி. ஆனா நீங்க ஒரு மணி நேரத்துக்கு வெளியே போகாதீர்கள்."

"ஏன்?"

"சௌந்தரிய லஹரி பாடப் போகிறேன். அப்புறம் பாயசம் நைவேத்தியம் செய்வேன். அதை வாங்கிக் கொண்ட பிறகு எங்கே வேணும்னாலும் போங்கள்!"

"சீ, என்ன பித்தலாட்டம்!"

"நீங்கள் உங்களையே அலசிப் பார்த்துக்க இதுதானா நேரம்?"

"உன் பூஜையைச் சொன்னேன்."

"நான் உங்க நெஞ்சிலே நடக்கிற நாடகத்தைப் பத்திக் கேட்டேன். . ."

"ராஜி!" அவர் கத்த வாய் எடுத்தார். அதற்குள் போர்ட்டிகோவில் கார்ச் சத்தம் கேட்டது.

"உஸ். .வசுவும் கோபியும்!" என்றாள் ராஜலட்சுமி.

"வா கோபி, வா. .நீயும் இந்தப் பொல்லாத பெண் வசுவும் சேர்ந்து செய்கிற கலாட்டாவைப் பத்தித்தான் பேசிக் கொண்டிருந்தோம்," என்றார் சிவராமன்.

"உன் அப்பா எடுத்த எடுப்பிலேயே சரின்னுட்டார், வசு!" என்றாள் ராஜலட்சுமி.

"என் அப்பாவைப் பத்தி எனக்குத் தெரியாதா. அம்மா! நீ கிழிச்ச கோட்டை அவர் தாண்ட மாட்டாரே! இன்னிக்கு இந்த ஸிட்டியிலே நீங்கதானே ரியல் மிஸ்டர் அண்ட் மிஸர்ஸ்!"

கோபி சிரிக்க, வசுவும் கூடவே சிரித்தான். அது ஒரு போலி வியாதியாகப் பெரியவர்களையும் தழுவிக் கொண்டது.


(தொடரும்)

TRIKAYA/dac/2 tam




உங்கள் பயிர்களை தாக்கும் பூச்சிகளுக்கெல்லாம் நீங்கள் கடும் விஷம் தருகிறீர்களா அல்லது குடிநீர் தருகிறீர்களா ?

சாதாரண எண்டோசல்பான் நீரில் சீராகக் கலப்பதில்லை. எனவே உங்கள் பயிரின் ஒரு பகுதிதான் பாதுகாப்புப் பெறுகிறது. மீதிக்குக் கிடைப்பது வெறும் தண்ணீர் திவலைகள்தான், அதனால் அவை பூச்சிகளை எதிர்த்து நிற்கும் சக்தி பெறுவதில்லை.



தேவிசல்பானிலுள்ள விசேஷ பரவும் பொருள், சமமான கலவை கிடைக்கச் செய்கிறது; அதோடு உங்கள் பயிருக்கும் பரிபூரணப் பாதுகாப்புக் கிடைக்க உதவுகிறது. தாவரத்தின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள எல்லாப் பூச்சிகளையும் அழித்து விடுகிறது.



இப் பரிசோதனையை நீங்களே செய்து பாருங்கள்

2 கிளாஸ்களில் சம அளவு நீர் நிரப்பவும்.



நீங்கள் உபயோகிக்கும் எண்டோசல்பானில் 4 துளிகளை ஒரு கிளாஸில் விடவும். ஆனால் சாதாரண எண்டோசல்பான் அடியில் தங்கி, அழுக்கு பழுப்பு நிறமாக மாறும்.



இப்போது மற்றொரு கிளாஸில் 4 துளிகள் தேவிசல்பான் விடவும். தண்ணீரை அடைந்தவுடன் தேவிசல்பான் பரவ ஆரம்பித்து, பால் வெண்மையான திரவமாக மாறும்.


க்ளாக்ஸோ
ஸன்ஷைன்
குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு
சுபோத்–உடலிலே சுத்தமான சிவப்பு இரத்தம்.
ராய்–மற்றவர்களைவிட நல்ல வளர்ச்சி
விவேக்– பாலருந்தும் வேளையை ஆவலுடன் நோக்குகிறான்.
ஷாலினி–வலுவுள்ள உறுதியான எலும்புகள்
SUNSHINE
Glaxo
BUILDS BONNIE BABIES
ARDISED MILK FOOD, ESPECIALLY DESIGNED FOR INFANT FEEDING
ROLLER-DRIED
ENRICHED WITH VITAMINS
Interpub/GL/2/75 tam
க்ளாக்ஸோ குழந்தை. கொழுகொழுவென்ற குழந்தை



30

விவாக அக்னியைத் தம்பதி உயிரோடு இருக்கும்வரை காப்பாற்றி, தினந்தோறும் ஔபாசனம் செய்து வர வேண்டும். இதை எடுத்துச் செல்லும்போது, மனைவிக்கும் அக்னிக்கும் குறுக்கே யாரும், எதுவும் போகக்கூடாது.

—சம்ஸ்காரத்தில் ஒரு நிபந்தனை

வீடே கல்யாண வீடாகத் திமிலோகப்பட்டது. பூத்துச் சிரிக்கும் மலராக வசு எல்லா இடங்களிலும் சுற்றிச் சுற்றி வந்து, எல்லோரையும் ஒரு முறைக்குப் பன்முறையாக உபசரித்தாள். வருவோரை வரவேற்கவும், செல்வோருக்கு விடை கொடுத்து அனுப்பவும் முரளியையும் நித்யாவையும் அவள் நியமித்திருந்தாள். நாகராஜன் ஹாலில் நிரம்பி வழியும் கூட்டத்துக்குச் சிற்றுண்டிகள் சரியாக வழங்கப்படுகின்றனவா என்று மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

தற்செயலாக வசு, ஒரு ஜன்னல் அருகே அமர்ந்திருந்த சீதாவிடம் வந்தாள். தாய்மையின் கனத்தில் சீதா ஓடி ஆடி வேலை செய்ய முடியாமல் சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தாள். வசுவைக் கண்டதும் அவள் எழுந்திருக்க முயன்றாள்.

"நீ பேசாமல் உட்கார்," என்றாள் வசு.

"என்னால் ஒரு காசுக்கும் உபயோகமில்லை, வசு. நீ எப்படி அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருக்கிறாய்? நான் ஒரு பாத்திரத்தைக் கூட எடுத்து வைக்கலை," என்றாள் சீதா.

"பேசாமல் இரு. இப்போ நீயும் ஓடறதுன்னு ஆரம்பிச்சா, அப்புறம் என்னவாகும்? அதோ பார் நாகராஜனை! அவர் என்னமாய் பம்பரமாகச் சுற்றுகிறார்!" என்றாள் வசு.

"இந்தப் புடவை உனக்கு எவ்வளவு நன்றாயிருக்கு தெரியுமா? உன் நிறத்துக்கு எப்படி அமைஞ்சிருக்கு!"

"பொறுமையா?" வசு சிவந்தாள்.



டைவர்ஸ்

பி.வி.ஆர்.

''பெருமை!''

''ஆமாம், அவர் எங்கே?''

''கொஞ்சம் முன்னே பின் கட்டுக்குப் போவதைப் பார்த்தேன். வேட்டியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு கோபி ஓடற கோலத்தைப் பார்த்த போது என் மனசு ரொம்பப் பூரிச்சுப் போச்சு வசு... அவர் நெஞ்சு பூரா வும் இந்த விழாவில் என்னமா லயிச் சிருக்கு தெரியுமா?''

''தெரியும்,'' என்ற வசு பின்கட்டை நோக்கி ஓடினுள். எல் லோரும் நன்ருக ஆடம்பரமாக உடை உடுத்திக்கொண்டு வந்து போகும் இடத்தில் கோபி மட்டும் ஒரு எட்டு முழ வேட்டியைக் கட்டிக்கொண்டு, ஒரு சாதாரண கதர் ஷர்ட்டை அணிந் தவனுய் அலேந்து கொண்டிருந்தான். நாகராஜன் கூட நல்ல பாண்ட்டும், டெரிலின் ஸ்லாக்குமாய் வந்திருக்கி ருன். கோபியைப் போலவே ஒரே கம்பெனியில் பணியாற்றும் முரளி, எவ்வளவு நேர்த்தியாக உடை அணிந்து வந்திருக்கிருன்?

எண்ணங்களை மனத்தினுள் சிதறவிட்டுக்கொண்டே, எதிர்ப்படுகிற வர்களுக்குப் புன்முறுவல் செய்து கொண்டு அவள் பின்கட்டை நோக் கிப் புறப்படுகையில் ''வசு!'' என்ற ஒரு குரல்—அவளுக்குப் பழகிய குரல் —திடீரெனக் கேட்டது.

வசு பார்த்தாள்.

அமிர்தம்மா!

மகிழ்ச்சியோடு அவள் அமிர் தம் இருக்கும் ஹாலின் மூலேக்குப் பறந்தாள். வழியில் ஒருத்தியின் முழங் காலே மிதித்து விட்டதற்கு 'ஸாரி' சொல்லக்கூட மறந்து போனுள். இது வரை அமிர்தம் வந்திருப்பதையோ, அவள் ஹாலில், இரு சுவர்களின் சந்திப்பில் சாய்ந்து உட்கார்ந் திருப்பதையோ கவ னிக்கவேயில்லே.

''வாங்க, வாங்க. இப்பத்தான் உங்களேப் பார்க்கிறேன்..''

''நீ ஒரு இடத்தில் நின்று கவ னித்தால் தானே? பர பரவென்று பறந்து கொண்டிருக்கியே!''

''டிபன் காப்பி கொண்டு வரேன்.''

''சாப்பிட்டாச்சு.''

''நீங்க வந்திருப்பதை நித்யாகூடச் சொல்லவில்லே. ஆனுல் அவ எப்படிச் சொல்லமுடியும்? வாசலே விட்டு உள்ளே வரக் கூடாதுன்னு கட்டளேயிட்டிருக்கிறேனே! நீங்க எப்போ மெட்ராசுக்கு வந்தீங்க?''

''இன்னிக்குத்தான்,'' என்ற அமிர்தம்மா, ''வசு, இன்னும் கொஞ் சம் கிட்ட வா!'' என்று தாழ்ந்த குர லில் அழைத்தாள்.

வசு நெருங்கினுள்.

“உட்கார்! ஒரு நிமிஷம் தான்.”

வசுவுக்கு ஆயிரம் வேலைகள் இருந்தபோதிலும், அமிர்தம்மாவின் வேண்டுகோளை நிராகரிக்க முடியவில்லை.

“என்ன?”

“இதிலே என்னுடைய அன்பளிப்பு இருக்கிறது. இதை அப்புறமா கொடுத்துவிடு...”

“ஏன்... நீங்களே, அதோ மணையிலே இருக்கிற அம்மா—அப்பா பக்கத்திலே போய்க் கொடுக்கலாமே. அதுதானே நன்றாயிருக்கும்?”

“நான் ஏன் சொல்றேன்னு உனக்குப் புரியாது வசு. தயவு செய்து நீயே உன் கையால் கொடுத்துவிடு. அதுவும் சாவகாசமாக.”

“சரி,” என்ற வசு அமிர்தம்மா கொடுத்த அந்தச் சிறு நகைப் பெட்டியை வாங்கிக்கொண்டு ஓடினாள். கோபியை அவள் உடனடியாகப் பார்த்தாக வேண்டும்.

பின்கட்டில் கோபியைப் பார்த்ததும் அவளுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. இரண்டு மூன்று சமையற்காரர்களுக்கு நடுவே நின்று அவன் எதையோ சுவைத்துக் கொண்டிருந்தான். இப்போது அவன் உடம்பில் அந்தச் சாதாரண கதர் சட்டை கூட இல்லை. வேட்டியும் பனியனுமாகச் சிப்பந்திகளின் நடுவே ஒரு சிப்பந்தி போலக் காட்சி அளித்தான்.

வசு அவன் அருகே போனாள்.

“இன்னும் ஒரு நாலு பழம் புழிஞ்சு போடுப்பா... கோஸ் மல்லி சப்னு இருக்கு!” என்று கோபி அபிப்பிராயம் சொல்லிக் கொண்டிருந்தான்.

“நன்றாயிருக்கு, நீங்களும், உங்க வேஷமும்!” என்றாள் வசு.

அவளுடைய குரலின் கடுமையை உணர்ந்த கோபி சிரித்தான்.

“என்ன சிரிக்கிறீர்கள், அங்கே எவ்வளவு பேர் இருக்கிறார்கள்... நீங்கள் இந்த வீட்டுக்கு மாப்பிள்ளை... இங்கே சமையற்கூடத்தில் நின்னுட்டு உப்பு போதாது, புளிப்பு போதாதுன்னு லெக்ச்சர் பண்ணிக் கொண்டு நிற்கிறீர்கள்.”

“இங்கே யாரும் பொறுப்பா நிற்கலைன்னா, கலத்தில் சாப்பாடு விழற போது அது சொத்தை, இது சொள்ளைன்னு சாப்பிடறவர்கள் சொல்லுவார்கள் வசு.”

“அதுக்காக? நீங்களும் பரிசாரகனா இங்கே நிற்கணுமா! நீங்கள் என்ன சரக்கு மாஸ்டரா?”

“நான் ஸ்கூலுக்கும் காலேஜுக்கும் போயிருக்காவிட்டால் ஒரு வேளை இந்த வேலைக்குத்தான் வந்திருப்பேனோ என்னவோ!”

“சரி சரி. மொதல்லே டிரெஸ்ஸை மாற்றுங்கள். உங்கள் ஜானவாச ஸூட் எங்கே போச்சு? கல்யாண ஸூட் என்னாச்சு? அதைப் போட்டுத் தொலைச்சுட்டிருக்கக் கூடாதா?”

வசு சொல்லிவிட்டுத் திரும்பினாள். கையிலிருக்கும் நகைப் பெட்டி ஒரு பெரிய சுமையாகத் தோன்றியது. அதை மாடிக்குச் சென்று அலமாரியில் வைத்துவிட்டு வந்தாள்.

உள்ளுக்குப் பொருமியபடி, சிறிதும் மகிழ்ச்சியில்லாமல் ஹாலில் ஓர் இரட்டை சோபாவில் உட்கார்ந்திருந்த சிவராமனும் ராஜலட்சுமியும் களைத்துப் போனார்கள்.

யாரோ ஒரு நண்பர் தம்பதி சகிதமாக நெருங்கவே, நறநறப்பைப் புன்முறுவலாக மாற்றிக் கொண்டார்.

“நாங்க வறோம், சிவராமன்! சாப்பாடு அற்புதமா இருந்தது.”

“தாங்க் யூ!”

அவர்கள் போனதும், ராஜலட்சுமி கழுத்தில் இருக்கும் ரோஜா



சென்னை அயன்புரத்தில் சதர்ன் ரயில்வே குவார்ட்டர்ஸ் கிணறுகளில், இப்படி சிலேடையாக எழுதி வைத்திருக்கிறார்கள்.

'எழில்'



ஹேய், மூக்குக் கண்ணாடியைக் கழற்றி வைத்துவிட்டு நிர்மலாவிடம் விளையாடக் கூடாதோ? கண்ணாடி கீழே விழுந்து உடைந்துவிட்டால் எந்த மாமியார் வீட்டில் வாங்கித் தருவார்கள்?
படம்: மாமியார் வீடு

மாலையை எடுத்துச் சோபாவிலேயே வைத்துவிட்டு, நித்யாவை அழைத்தாள். நித்யா, வசுவைக் கூப்பிட்டாள். ஏற்கனவே தயாராக வைக்கப்பட்டிருந்த பூத்தட்டுகளை நித்யாவும் வசுவும் சுமந்து வர, ராஜலட்சுமி பெண்கள் அமர்ந்திருந்த பகுதிக்குச் சென்றாள்.

இருபது அல்லது இருபத்தைந்து பெண்களும் வயது வந்த பெண்களும் ராஜலட்சுமி தங்களை நோக்கி வருவதைக் கண்டதும் எழுந்து நின்றார்கள். வசு பூத்தட்டை நீட்ட ராஜலட்சுமி அதை வாங்கி ஒவ்வொருவருக்குமாக வழங்கினாள்.

அமிர்தத்துக்கு வலப்புறமாக இருந்த பெண்ணுக்குக் கொடுத்தாகி விட்டது. நித்யா கையில் இன்னும் இரண்டே தட்டுகள் எஞ்சியிருந்தன. ஒன்று அமிர்தம்மாவுக்கு. கடைசித் தட்டு, அவளுக்கு இடது பக்கமாக இருக்கும் பெண்ணுக்கு.

ராஜலட்சுமி, வசு கொடுத்த தட்டை அமிர்தம்மாவுக்குக் கொடுக்காமல் இடப்புறமாக இருக்கிறவள் பக்கமாக நீட்டினாள்.

கவனப்பிசகாக அம்மா தவறு செய்துவிட்டாள், அதை உடனே நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஒரு பதறலாக வசுவின் மனத்துள் எழுந்தது.

ஒன்றையும் கவனிக்காதது போல திரும்பி நடந்த தாயாரிடம் வசு, ''அம்மா, அமிர்தம்மாவை மறந்து விட்டாயே?'' என்று கிசுகிசுத்தாள்.

''இதோ வரேன், அப்பா கூப்பிடறார்,'' என்று ராஜலட்சுமி சிவராமன் இருக்கும் இடத்தை நோக்கி விரைந்தாள்.

வசு, நித்யாவிடமிருந்து தட்டை வாங்கி அமிர்தம்மாவிடம் நீட்டினாள். அவளும் புன்முறுவலுடன் வாங்கிக் கொண்டு, ''நல்ல குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு தீர்க்காயுசாக இருக்க வேண்டும், வசு!'' என்றாள்.

ராஜலட்சுமி கணவரைப் பார்த்துச் சிரித்தாள்.

பழிவாங்கிவிட்டோம் என்கிற கர்வம் தெரிந்தது அதில். உதடுகள் அசையாமல் கறுவினார் சிவராமன்.

அமிர்தம்மாவை மூலையில் உட்காரவைத்து அவள் அவமானப் படுத்துவாள் என்று சவால் விட்டு ராஜலட்சுமி அதை நிறைவேற்றியும் விட்டாள்.

கணவனும் மனைவியும் வாய்விட்டு ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. ஆனால் உள்ளங்கள் மோதிக் கொண்டன.

''கவனித்தீர்களா?''

''அதைவிட வேறு என்ன வேலை?''

''எல்லாச் சுமங்கலிகளுக்கும் கொடுத்தேனே...''

''அவளை நீ உதாசீனப் படுத்தினாய். ஆனால் வசு அவளுக்குக் கொடுத்துவிட்டாள்.''

''பாவம் வசு. நெற்றியிலே குங்குமமும், தலையிலே பூவும் வைச்சுட்டிருக்கிறவர்களெல்லாம் சுமங்கலிகள்னு நினைக்கிறா.''

''நீ இவ்வளவு மட்டம்னு நான் நினைக்கலை.''

''நீங்கள் வாழ்வு இல்லாதவர்களுக்காக உயிரையே விடுகிற உயர்ந்த லட்சியவாதிங்கற உண்மை இதுவரை எனக்கும் தெரியாம இருந்தது.''

''எல்லாம் என் தப்பு! முதுகெலும்பு ஒடிஞ்சு போய், ஒரு நாயை மணையில் உட்கார்த்தி வைச்சேன். அதுக்கு இன்னிக்கு அனுபவிக்கிறேன்!''

''மூலை எது மணை எதுங்கிற ஞானமே இல்லாதவர்களுக்கு அனுபவம்னு ஒண்ணு இருக்க முடியுமா?''

கோபி அவர்களிடம் நெருங்கி வந்தான். ''மாமா! அத்தை! நீங்க ரெண்டு பேரும் இன்னும் சாப்பிட வரவில்லை.''

''இதோ வருகிறோம், கோபி,'' என்றார் சிவராமன், போலிப் புன்னகையுடன்.

''நீங்கள் சாப்பிட்டாச்சா?'' என்று கேட்டாள் ராஜலட்சுமி.


(தொடரும்)



31

வெறும் கேவல போகத்துக்காகவோ, வீட்டு வேலைகளுக்காகவோ பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளுவதில்லை. அறக் காரியங்கள் செய்யவும், குடும்பத்தின் நல்ல குழந்தைகளுக்குத் தாயாகவும் விளங்கவே அவள் மனைவி ஆகிறாள்.

—சம்ஸ்காரம்.



அன்று மாலை ஏழு மணிக்கு அமிர்தம்மா இருக்கும் ஒட்டல் அறைக்குள் சிவராமன் பிரவேசித்தபோது அவள் ஊருக்குச் செல்லத் தன்னைத் தயாராக்கிக் கொண்டிருந்தாள்.

நாலாக மடித்துக் கொண்டிருந்த புடவையை எட்டாக மடிக்க மறந்து போய், "என்னங்க, நான் உங்களை இப்போ இங்கே எதிர்பார்க்கவில்லையே... ஏன், ரிஸப்ஷன்லேயிருந்து வந்து விட்டீர்களா?" என்று கேட்டாள் அவள்.

"ஆறே முக்காலுக்கே நான் என் வேஷத்தைக் கலைத்துவிட்டு ஓடி வந்து விட்டேன் அமிர்தம். எனக்கு இருப்புக் கொள்ளவில்லை."

"சே, என்ன காரியம் செய்து விட்டீர்கள்? அவர்களெல்லோரும் என்ன நினைத்துக் கொள்ளுவார்கள்?"

"சாயங்காலம் கூட்டம் அதிகமில்லை," என்ற அவர், "அமிர்தம், நீ என்னை மன்னித்துவிடு!" என்றார்.

"என்ன உளர்றீங்க?"

"ராஜலட்சுமி உன்னை அவமானப் படுத்திவிட்டாள்."

"எப்போ?"

"என்ன, ஒண்ணும் தெரியாதவளைப் போல் கேட்கிறே? எல்லோருக்கும் மஞ்சளும் குங்குமமும் புடவையும் கொடுத்த அவள் உன்னை வேண்டுமென்றே ஒதுக்கி விட்டாள்."

"மறந்து போயிருப்பாள். அதைத்தான் வசு நிவர்த்தி செய்து விட்டாளே."

"இல்லை அமிர்தம். உன்னை மூலையில் உட்கார வைப்பேன்னு அவள் கறுவினாள். உன்னை அவமானப் படுத்துவேன்னு சபதம் எடுத்தாள். அதில் அவள் ஜெயித்தாள்..."

"பைத்தியக்காரத்தனமாக எதையும் உளறுதீர்கள். ராஜி ஜெயிக்கவும் இல்லை, நான் தோற்கவுமில்லை... எனக்கு டயமாகிறது. இன்னும் அரை மணி நேரத்தில் டாக்ஸி வந்து விடும்."

"இல்லை அமிர்தம், இன்னிக்குக் காலையில் என் நெஞ்சு உடைஞ்சுது. ரத்தத்தை நான் எனக்குள்ளே அடக்கிக் கொண்டேன். உன்னை இந்த வெள்ளி விழா நாடகத்துக்குக் கூப்பிட்டதே தப்பு. என்னை மன்னித்துவிடு."

அமிர்தம்மா மௌனமாகக் கையிலிருக்கும் புடவையை மேலே மடித்துப் பெட்டியில் வைத்தாள்.

"நம்ம கதை வசுவுக்குத் தெரியாது இல்லையா?" என்றாள் அவள்.

"தெரியாது."

"என்னென்னிக்கும் தெரியாம இருக்கணும்."

"தெரியாம இருக்க நான் பார்த்துக் கொள்றேன்..."

"இல்லை... இனிமே நீங்க பார்த்துக் கொள்ள வேண்டாம்."



"என்ன சொல்றே?"

"ஆமாம்..தயவு செய்து இனிமே அங்கலக்குறிச்சியிலே நீங்க உங்க நிழலைக் கூடக் காட்டக் கூடாது!"

அவர் திடுக்கிட்டார்.

"அப்படின்னா என்ன அர்த்தம்? நீ மாசா மாசம் மெட்ராஸுக்கு வந்துடறேன்னு சொல்றியா?"

"சே, நான் என்ன வேதனையுடன் பேசறேன் என்கிறதையே புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்களே? இனிமே, இந்த வெள்ளி விழா நாளிலிருந்து நமக்குள்ளே இருந்து வந்த தொடர்பு, சொந்தம், பிணைப்பு எல்லாம் தீர்ந்து விட்டது."

"என்ன!"

"ஆமாம். நமக்குள்ளே இருந்து வந்த வரவு-செலவுக் கணக்கு ஒரு முடிவுக்கு வந்து விட்டது."

"இல்லை. முடியாது. ராஜி கழுத்திலே தாலியைக் கட்டினேன் தான். அவள் ஊருக்கும் உலகத்துக்கும் என் மனைவிதான். ஆனா...ஆனா..நீ... நீ..."

"ஆமாம்..இந்த இரண்டு அந்தஸ்தும் இல்லாதவள். நான் உங்களுக்கு, உங்க கண்ணுக்கு ஒரு ரோஜாப்பூ தான்...ஆனா நான் வெறும் காகிதப்பூ என்கிறதையே நீங்க மறந்து போயிட்டீங்க..."

"இல்லே அமிர்தம். நீ தான் உயிருள்ள பூ...அவள்...அவள் தான் நீ சொல்ற காகிதப் பூ. இப்போது எங்களுக்குள்ளே எந்த ஈடுபாடும் இல்லை. நாங்கள் வெறுமனே நடிக்கிறோம்."

அவள் வேதனையுடன் புன்னகை செய்தாள்.

"இதுக்குக் காரணம் யார்? நான்தான். நமக்குள்ளே ஊறிப் போன உறவை அவள் புரிந்து கொண்டு விட்டாள். அவளுடைய நெஞ்சின் கசிவை நான் உணர்கிறேன். ஒரு பெண்ணின் மனசை இன்னொரு பெண்ணால் தான் புரிந்து கொள்ள முடியும். உங்க மனசிலே தான் இல்லை, நான் தான் இருக்கிறேன் என்கிற உண்மையை அறிந்து கொண்டும் அவள் உங்களுடன் ஊர் அறிய, உலகமறிய, மனைவி என்கிற பெருமையுடன் வாழ்கிறாள். அந்தத் துணிவுக்கு, நெஞ்

சுறுதிக்கு நான் ஒரு பரிசு அளித்து விட்டேன்...''

''என்ன அமிர்தம்?''

''என்ன பரிசு என்று கேளுங்கள்.''

''என்ன பரிசு?''

''விவாக ரத்துன்னுதான் சொல்லணும். ஆனு நீங்க என் கழுத்திலே ஒரு நூலைக் கட்டவில்லை. அதனுலே நமக்குள்ளே இதுவரை நடந்து வந்தது விவாக வாழ்க்கை இல்லை. ஒரு பொய்மையான ஆண் - பெண் உறவு. பெயரில்லாத குழந்தை போல ஒரு கௌரவமும் அந்தஸ்தும், ஏன், நேர்மையுமில்லாத வாழ்க்கை. இந்த வாழ்க்கையை நான் இன்னியோடே ரத்து செய்து விட்டேன்...''

''ஐயோ அமிர்தம்..''

''இனிமே நான் மனச்சாட்சி உறுத்தாம வாழ்வேன்.''

''எனக்கு இங்கே மாசத்தில் இருபத்தேழு நாள் நரக வாசம், அங்கலக்குறிச்சியிலே மூன்று நாள் சொர்க்க வாசம் என்று இருந்தேன். அந்த மூணு நாளையும் பறிக்கிறயா?''

''இல்லை..இனிமே நான் மாதத்தின் முப்பது நாளையும் மனச்சாட்சி உறுத்தாம வாழப் போகிறேன்.''

''முடியாது. அமிர்தம்' நீ எடுத்திருக்கும் முடிவுக்கு நான் கட்டுப் பட மாட்டேன். என்னல் உன்னைப் பார்க்காமலிருக்க முடியாது. உன்னுடன் பேசாமலிருக்க முடியாது. என் மனசுக்குக் குளிர்ச்சியே நீ தான். மரத்தை வெட்டி நிழலைப் பறித்து விடாதே...''

''நீங்கள் போகலாம்.''

''போறேன்..ஆனு அடுத்த வாரமே நான் அங்கலக்குறிச்சிக்கு வருவேன்.''

''வந்தால் ஒரே முறைதான் என்னைப் பார்ப்பீர்கள். திருப்தியா?''

''என்ன சொல்றே?''

''நீங்க இரண்டாம் தடவை என்னை உயிரோடு பார்க்க மாட்டீர்கள்...''

அவர் தள்ளாடினுர்.

''உனக்கு ஏன் இந்த வைராக்கியம் அமிர்தம்? அவள் தன் முட்டாள்தனத்தால் உன்னைச் சபையில் நாலு பேருக்கு நடுவில் அவமானப்படுத்தி விட்டாள் என்ற கோபத்தில் ஏன் இப்படி ஒரு முடிவை எடுத்து என்னை வதைக்கிருய்?''

அமிர்தம்மா சிரித்தாள். ''உங்களுக்குப் புரிய வைக்கிற பாடே பெரும் பாடாக இருக்கிறது. ராஜியால் நான் அவமானப்படவில்லை. நான் அவளுடைய இடத்தில் இருந்திருந்தால் நான் இன்னும் மோசமாக நடந்திருப்பேன். எல்லோர் முன்னிலையிலும் அவளை வெளியே துரத்தி இருப்பேன். அவள் குடும்பம் என்கிற கோவிலில் கணவன் என்கிற தீபத்தை ஏற்றி வைத்து ஆராதனை செய்கிருள். தீபத்தின் புகையையும் காந்தலையும் கண்டு மனம் கசிகிருளே தவிர எரிச்சல் பட்டு அதை அணைக்க முற்படவில்லை. அவளுடைய இந்தத் தன்மை ஒரு பெரிய லட்சிய மனைவிக்குத் தான் இருக்க முடியும். நான் இனியும் புகையையும் காந்தலையும் வளர்க்க ஆசைப்படவில்லை. எனக்கு நேரமாகிறது.. நீங்கள் போகலாம்.''

''என்னை இரண்டாம் தடவையாக விரட்டப் பார்க்கிருய்.''

''இல்லை..நான் உங்களிடமிருந்து விலகுகிறேன்...''

''அப்போ?''

''நம்ம கதை, இல்லை இல்லை, சரித்திரம் முடிந்து விட்டது.''



''25 பைசா டிக்கட் பத்தொன்பது வாங்கிட்டு ஐந்து ரூபாய் நோட்டு தந்தீர்களே; மீதிக்குச் சில்லறை இல்லை. நிரோத் தரட்டுமா?''

"அமிர்தம், நீ இவ்வளவு நேரம் பேசினாய். நான் ஒன்று சொல்லுகிறேன். அதுவும் ஒரு முடிவுதான்.. ஆனால் சரித்திரத்தின் முடிவு இல்லை.."

"நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்னு எனக்குத் தெரியும்.."

"என்ன?"

"மெட்ராஸை விட்டு, ராஜியை ஒரே அடியாய் ஒதுக்கி விட்டு அங்கலக்குறிச்சிக்கே வந்து விடுகிறேன் என்று!"

"ஆமாம்...ஆமாம்.. இதே முடிவுதான்."

அமிர்தம்மா கலகலத்தாள். "நான் கேவலம் ஒரு சரித்திரத்துக்கு முடிவு கட்டுகிறேன். எந்தக் கல்வெட்டிலும் சிற்ப ஓவியங்களிலும் பிரதி பலிக்கக் கூடாத, முடியாத சரித்திரம்! ஆனால், நீங்கள்? ஒரு சகாப்தத்தையே சின்னா பின்னமாக நிர்மூலமாக்கி விட்டு ஒரு நிழலைத் தொடர்ந்து ஓடி வருகிறேன்னு பிதற்றுகிறீர்கள். உங்களுக்கு உங்கள் மனைவிதான், உங்கள் குடும்ப சாம்ராஜ்யத்தின் ராணியாக இருக்க முடியும்..."

சிவராமன் இடிந்து போய் உட்கார்ந்தார்.

"டாக்ஸி வந்து விட்டது," என்றாள் அமிர்தம்மா.

"நான் என் காரில் கொண்டு போய் விடுகிறேன்..."

"இந்த அறையிலேயே பிரிவு உபசாரம் நடத்திக் கொள்கிறதுதான் நல்லது. நான் வருகிறேன்..ராஜி மேலே நீங்க ஆசையாக இருக்க முடியாதுன்னு எனக்குத் தெரியும். ஆனா அன்பாக இருக்கப் பழகிக் கொள்ளலாம். வசு நல்ல பெண்.. கொஞ்சம் அவசரப்படறாள்..அவள் மேல் கோபி உயிராக இருக்கிற மாதிரித் தோணறது. அவர்கள் நன்றாக வாழ வேண்டும்."

"நீ தான் உன் வாழ்க்கையையே குலைத்துக் கொள்ளுகிறாய்..."

"எனக்கு வாழ்க்கைன்னு எதுவுமே என்னிக்குமே இருந்ததில்லை. ஒரு பெண்ணுக்கு வெறும் உடல் தாகம் மட்டும்தானா? என்னுடைய நெஞ்சின் தாகம் இந்த ஜன்மத்தில் அடங்குகிற தாகம் இல்லை...நெஞ்சின் தாகம் அடங்க என் காலத்தில் ஏது தாலி?



சார்லி சாப்ளின் புகழேணியின் உச்சியில் இருந்த சமயம், லண்டன் டெலிவிஷனில் ஒரு விசேஷப் பேட்டிக்கு ஏற்பாடாகியிருந்தது. லண்டன் நகரில் உள்ள அவ்வளவு டெலிவிஷன்களும் சுறு சுறுப்பாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தன.

சார்லியின் நகைச்சுவை நிமிடத்துக்கு நிமிடம் விறுவிறுப்பாக இருந்தது. திடீரென்று டெலிவிஷனிலே சத்தம்வருவது நின்றுவிட்டது. திரையில் ஏதோ உற்சாகமாகப் பேசும்காட்சி மட்டும் ஊமையாய்த் தெரிந்தது. சம்பந்தப்பட்ட டெலிவிஷன் அதிகாரிகள் விழுந்தடித்து ஓடி என்ன கோளாறு என்று ஓரிரு நிமிடங்களுக்குப் பதறிவிட்டனர். இரண்டு நிமிடங்கள் கழித்து, சார்லி சாப்ளின் கடகடவென்று சிரித்தார். தொடர்ந்து ஒலியும் கிடைத்தது. பிறகுதான் புரிந்தது—அந்த இரு நிமிடங்களும் அவர் ஏதுமே சத்தம் போடாமல் வாயை மட்டும் அசைத்து எல்லோரையும் திணறடித்துவிட்டிருக்கிறார்!

—கும்பகோணம் வி. ஜெயராமன்



பாகிஸ்தான் ஜனாதிபதி புட்டோ தனது சம்பளத்தை ரூ. 3,500லிருந்து ரூ. 5,000 ஆக உயர்த்திக் கொண்டிருக்கிறார்.

—டைம்ஸ் ஆஃப் இந்தியா

நான் வறேன். உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.'' அமிர்தம்மாவின் தொண்டை கரகரத்தது. அடுத்த கணம், அவள் பெட்டியுடன் அறையை விட்டும் வெளியேறினாள்.

சிவராமன் ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந்தார். தம்முள்ளிருந்து ஏதோ ஒரு ஜோதி வெடித்து வெளியேறிப் பீறிட்டு விரைவதாகத் தோன்றியது அவருக்கு. இனி அவர் ஒரு வெறும் மனிதர்!

இதற்கெல்லாம் காரணம் யார்? ராஜலட்சுமி! ராஜி! ராஜியே தான்..அவளை..ஜோதியை வெளியே விரட்டிய அந்த இருளை..அந்த இருளை..

வந்தவர்கள் எல்லோரும் சாப்பிட்டு விட்டுப் போயாகி விட்டது.

ஹால் சோபாவில் அம்மாவும் வசுவும் உட்கார்ந்திருக்க, கோபி இறைந்து கிடந்த சாமான்களை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தான், ''எல்லாம் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம், மாப்பிள்ளை!'' என்றாள் ராஜலட்சுமி.

''வெள்ளிப் பாத்திரங்களெல்லாம் மூலைக்கு ஒன்றாகக் கிடக்கிறது. சந்தன பேலா, பன்னீர் வீசி, தட்டு, கிண்ணம்...'' கோபி முடிக்கவில்லை.

''எல்லாம் அங்கேயே இருக்கட்டும். யாரும் தூக்கிக் கொண்டு போய் விட மாட்டார்கள்,'' என்றாள் வசு.

கோபி அவளைச் சட்டை செய்யவில்லை.

''நீங்க பேசாம வந்து உட்காருங்கள். காலையிலே வேலைக்காரன் எல்லாவற்றையும் எடுத்து அலம்பி வைப்பான்...ஏம்மா, அப்பா எங்கே?''

''தெரியாது.''

''உன்கிட்டே சொல்லாமலா போனார்?''

''இதோ வரேன்னு போனார். ஏதோ முக்கியமான காரியமாக இருக்கும்...இல்லாமப் போனா இன்னிக்குப் போவாரா?'' என்று ராஜலட்சுமி கேட்டாள்.

அவள் பேசி முடிக்கவும் போர்ட்டிகோவில் கார் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

''அதோ, அப்பா வந்து விட்டார்..'' என்று எழுந்தாள் வசு. கோபியும் அவள் அருகே வந்தான்.



கல்கத்தாவில் இம்மாதம் நடைபெற்ற அகில இந்திய நாஷனல் ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றிபெற்றிருக்கிறார் கனேரிவாலா என்ற கல்கத்தா பி.காம் மாணவர். (நவம்பர் 25'ம் தேதி 19 வயது முடிவடைகிறது.)

ஸ்பெயினில் நடைபெற்ற ரோலர் ஸ்கேட்டிங் உலகப் போட்டியில் கலந்து கொண்ட முதல் இந்திய மாணவர் இவர்.

கல்கத்தா பந்தயத்தில் இவரோடுகூட ஸ்கேட்டிங் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவர் குமாரி கும்கும் பக்ஷி.

—என். பி.

படி ஏறி வந்த சிவராமன் ஹாலினுள் பிரவேசித்ததும், ராஜ லட்சுமி எழுந்தாள்.

"ஏம்ப்பா, உங்க பிஸினஸ் வேலையை இன்னிக்குமா கவனிக்க ணும்? ரிஸெப்ஷன் முடியறதுக்கு முன் னுடியே ஓடி விட்டீர்களே?" என்று வசு கடுகடுத்தாள்.

ராஜலட்சுமி குறுக்கிட்டாள்.

"வசு, நீ பேசாம இரு. ரிஸெப்ஷன்னு உனக்கு மட்டும்தான் தெரியுமோ? விஷயம் எவ்வளவு ஸீரி யஸா இருந்தா அப்பா இதையெல் லாம் விட்டு விட்டுப் போவார்?. சரி சரி, நீ மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டு மாடிக்குப் போ...நீங்க முதல்லே உங்க டிரெஸ்ஸைக் கழற்றி வேட்டி கட்டிக் கொண்டு வாருங்கள். லலிதா சகஸ்ர நாமம் இன்னிக்கு ரொம்ப அமர்க் களமா நடந்தது. கை கால் அலம்பி னப்புறம் புஷ்பமும் நைவேத்தியமும் தரேன்."

சிவராமன் மௌனமாகத் தம் அறையை நோக்கி நடந்தார். ராஜலட்சுமியும் பூஜை அறையை நோக்கி நடந்தாள்.

மாடி ஏறிக் கொண்டே வசு, "ரியலாகவே என்னுடைய பேரண்ட்ஸ் ஒரு ஐடியல் கப்பிள்," என்றாள்.

"லட்சத்தில் ஒண்ணு."

"இதுக்கு என்ன கார ணம்னு நீங்க நினைக்கறீங்க?"

"மனசு. ஸாரி, இரண்டு மனசும் ஒன்றுகி, ஒன்றுக்கொன்று வித்தியாசம் தெரியாமப் போற நிலைமை!"

"அந்த நிலைமை வாய்க்கத் தவம் செய்யணும்," என்றாள் வசு.

"அவசியம் இல்லை. இரண்டு மனசும் ஒன்றை ஒன்று ஆழம் பார்க் கிறதை விட்டு, ஒன்றை ஒன்று துரத்து கிறதை விட்டு, நிலையாக இருந்து விட்டால், ஒன்றை ஒன்று நெருங்கி நெருங்கி...நெருங்கி..."

கோபி அவளைத் தன்னுடன் இழுத்துக் கொண்டான்.

"இது மனசு நெருக்கமில்லை, வெறும் உடல் நெருக்கம்தான்."

"இதுவே அதுக்கும் அஸ்தி வாரமாக இருக்கும்..."

"மன நெருக்கம் இருந்தாத் தான் உடல் நெருக்கமே சோபிக்கும்.."

"இந்த வேளையில் நாம் ஏன் பிலாஸபியில் நேரத்தை வீணுக்க வேண்டும் வசு? அதைப் பகலில் வைத் துக் கொள்ளுவோம்!"

கீழே, ஹாலில் தீர்த்தத் தைக் கொடுத்து விட்டு, பூந்தட்டி லிருந்து பூக்களை எடுத்தாள் ராஜ லட்சுமி.

அவள் கைக்கு வந்தது ஒரு ரோஜாப்பூ. அதைச் சிவராமன் வாங்கிக் கொண்டார். அவர் உடம் பின் சூட்டில் அது வாட ஆரம்பிப்பது போலத் தோன்றியது.

"ராஜி, நீ தோற்று விட்டே!"

"சந்தோஷம்."

"அவள் ஜெயித்து விட் டாள்."

"அப்படியானுல் அவள் புத்திசாலி!"

"பெண்டாட்டி என்கிற பிணைப்பிலே, நீ ஒரு லட்சியத்தோடு வாழ்ந்ததில் அதிசயமில்லை, ஆனுல் ஒரு பிணைப்பும் இல்லாதவள், சமூகத் தில் ஒரு அந்தஸ்தும் கௌரவமும் இல்லாதவள், லட்சியவாதியாகச் சுடர் விட்டு எரிகிறுளே, அது பெரிய சாதனை...அமிர்தம் ஜெயித்து விட் டாள்."

"இப்பவே வாழ்த்துத் தந்தி கொடுங்கள்...இந்த மாதிரி வெற்றிகளுக்கு, தபால் ஆபீஸ்லே ஏதானும் கோட் லெட்டர் இருக்கா? ஏன்னு கேட்டா தந்தி அடிக்க அதிகம் செலவு ஆகாது!"

(தொடரும்)

"நேற்று மாலை இருட்டில் பாக்கலை நான் முத்தமிட்ட பெண் நீதானே?"

"எத்தனை மணிக்கு?"

—ப்ளேபாய்

சமைக்கத் தெரியாத மனைவியா! சே சே சே!

மூர்த்தியை ஊருக்கு வழியனுப்பி வைத்த அத்தனை நண்பர்களும், இன்று அவனை வரவேற்பதற்கு வந்து காத்திருந்தனர். எல்லோருக்கும் நடுநாயகமாக நின்று, ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந் தாள் சாவித்திரி மாமி.

சாவித்திரி மாமியின் சிறிய வீட்டின் வாசற்புறத்து அறையில் குடியிருப்பவன் தான் மூர்த்தி. சாவித்திரி மாமி வருடத்தில் பதினொரு மாதங்கள் கிராமத்திலேயேதான் இருப்பாள். வரும் சமயங்களில் வீட்டின் பின் அறையில் தங்கிக் கொள்வாள்.

அவளுக்கு மூர்த்தியிடம் அலாதியான ஓர் அன்பு உண்டு. ஒண்டிக்கட்டையான அவன் ஒட்டல் சாப்பாட்டைச் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்கிறானேயென அவளுக்கு ரொம்பக் கவலை.

''மூர்த்தி, காலாகாலத்தில் கல்யாணம் செய்துகொள் என்றால் காதிலேயே போட்டுக் கொள்ளாமல் இருக்கிறாயே! இனிமேல் உன்னை நான் எதுவும் கேட்டுக் கொண்டிருக்கப் போவதில்லை. அடுத்த தடவை நான் கிராமத்திலிருந்து வந்ததும், உனக்கு ஒரு பெண்ணைப் பார்த்து நிச்சயம் செய்துவிட்டுத்தான் வேறு வேலை பார்க்கப் போகிறேன்'' என்று கூறினதும், பயந்து போன மூர்த்தி, ''மாமி ...மாமி... அப்படி எதையாவது செய்து வைத்து விடாதீர்கள். அப்புறம் என் மாலாவின் கதி?'' என்று சொன்னதும், மாமி கையை ஒரு சொடுக்கு சொடுக்கி, கண்களை அகல விரித்து, வாயைப் பெரிதாகத் திறந் தாள்.

''அப்படியா விஷயம்? அது தானே பார்த்தேன்! ஆமாம், யார் அந்த மோகினி?'' என்று கேட்டாள்.

''நீங்கள் நினைப்பது போல எதுவுமில்லை. மாலாவின் அப்பா, எனக்கு மாமா முறை ஆகவேண்டும். இந்தக் கல்யாணம் என் பெற்றோர்கள் உயிருடன் இருந்தபோதே நிச்சயிக்கப்பட்டு விட்டது. அவள் படித்துக் கொண்டிருக்கிறாள். இந்த வருடத்துடன் பட்டப் படிப்பு முடிகிறது. உடனே கல்யாணம்தான்,'' என்றான்.

கஸ்தூரி பஞ்சு

மாமிக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. ''இன்னும் இரண்டே மாதம்தான். ஓடியே போய் விடும் பார். உன் சாப்பாட்டுக் கஷ்டம் தீர்ந்து விடும்,'' என்றாள்.

''ஆமாம் மாமி. நான் கூட அதற்காகத்தான் துடித்துக் கொண்டு காத்திருக்கிறேன். எனக்கோ ஒரு சாதம் வடிக்கக்கூடத் தெரியாது. எல்லாவற்றிற்கும் ஓட்டலையே நம்பியிருக்கும் என்னை, அவர்கள் சாப்பாடு போட்டே கொன்று விடுவார்கள் போலிருக்கிறது,'' என்று வருத்தப் பட்டுக் கொண்டான் மூர்த்தி.

''ஏதேது, நீ காய்ந்து கிடப்பதைப் பார்த்தால், பெண்டாட்டி வந்த பிறகு, ஒரு நாளைக்கு நான்கு வேளைக்குக் குறையாமல் அவள் கைச்சமையலைச் சாப்பிடுவாய் போலிருக்கிறதே!'' என்று கேலி செய்தாள் மாமி.

''நான்கு தடவை சாப்பிடுவேனோ, இல்லை நாற்பது தடவைகள் சாப்பிடுவேனோ, அது தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்கிறேன். அதன் பிறகு ஒருவேளை கூட ஓட்டலில் கையை நனைக்க மாட்டேன்,'' என்று உறுதியாகச் சொன்னான் அவன்.

ஓட்டல் சாப்பாட்டில் அத்தனை வெறுப்பு ஏற்பட்டு விட்டிருந் தது

அந்த மூர்த்திக்குத்தான் கல்யாணம். பதினைந்து நாட்களுக்கு முன்னால் கல்யாணம் செய்து கொண்ட அவன் இன்று காலை வண்டியில் புது மனைவியுடன் வரப்போகிறான். அந்தத் தம்பதிகளை வரவேற்கத்தான் எல்லாரும் காத்திருந்தார்கள்.

சாவித்திரி மாமி சமையலறையில் புகுந்து பம்பரமாகச் சுழன்றாள். வடை, பாயசத்துடன் விருந்து சாப்பாடு தயாரித்து முடிப்பதற்கும் வாசலில் வாடகைக் கார் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

ஏற்கனவே கரைத்து வைத்திருந்த ஆரத்தித் தட்டுடன் வாசலுக்கு விரைந்த அவளை, ஆர்வத்துடன் பின் தொடர்ந்தனர் அவன் நண்பர்கள்.

டாக்ஸி கதவைத் திறந்து கொண்டு இறங்கின மூர்த்தியின் பின்னால் இறங்கப் போகும் அவன் மனைவியைப் பார்க்க அத்தனை ஜோடி கண்களும் ஆவலுடன் காத்திருந்தன.

ஆனால் என்ன ஏமாற்றம்! கீழே இறங்கின மூர்த்தி, உடனேயே டாக்ஸிக் கதவை, 'பட்' டென்று அடித்துச் சாத்திவிட்டு, டிக்கியிலிருந்த சாமான்களையெல்லாம் இறக்கி வைத்து விட்டு, மீட்டரைப் பார்த்துப் பணத்தைக் கொடுத்தான்.

''ஏண்டா மூர்த்தி, உன் மனைவி வரவில்லை?'' என்று ஆதர்சத்துடன், வாசல் என்பதையும் பார்க்காமல், உரத்த குரலில் கேட்டாள் சாவித்திரி மாமி.

''உள்ளே வந்து விவரமாகச் சொல்கிறேன் மாமி,'' என்ற மூர்த்தி நண்பர்களின் உதவியுடன், சாமான்களை யெல்லாம் கொண்டு வந்து நடுக் கூடத்தில் வைத்தான்.



''மூர்த்தி, இதென்ன மூடு மந்திரம்? ஏன் அவளை அழைத்துக்கொண்டு வரவில்லை? ஓட்டலுக்குப் போவதை விடுவதற்கு இன்னும் மனம் வரவில்லையா?'' என்று எகத்தாளமாகக் கேட்டாள் மாமி.

''சரியாகச் சொன்னீர்கள் மாமி. ஜோடியாக ஓட்டலுக்குப் போக மனசு வரவில்லை. அது தான் தனியாக வந்து விட்டேன்,'' என்று சிரித்துக்கொண்டே சொன்னான் அவன்.

''ஸ்டுபிட். விளையாடாதேடா. விஷயத்தை விளக்கமாகச் சொல்லு,'' என்று அதட்டினான் ஒரு நண்பன்.

''டேய், என் மனைவிக்குச் சமையல் என்கிற வார்த்தைக்கு 'ஸ்பெல்லிங்' கூடத் தெரியவில்லை. பார்த்தேன். சரி, ஆறு மாத அவகாசம். அதற்குள் சமையலில் நன்றாகத் தேர்ச்சி பெற வேண்டும். பிறகுதான் குடித்தனம்

என்கிற முடிவுக்கு வந்துவிட்டேன்,'' என்றான் மூர்த்தி.

''நன்றாகத்தான் இருக்கிறது இந்தக் காலத்துக் குழந்தைகளின் போக்கு. நான்கு நாளைக்கு உப்பும் உறைப்பும் கொஞ்சம் கூடக் குறையப் போட்டால் தானாகவே பழக்கத்தில் பக்குவம் வந்துவிடாதோ? இதற்காகப் போய்க் கல்யாணமாகியும் பிரம்மசாரியாக இருப்பதாவது?'' என்றாள் மாமி.

ஆறு மாதம் ஓடிப்போயிற்று. கல்யாணம் செய்து கொண்டு மூர்த்தி வந்ததற்கு மறுநாள் கிராமத்திற்குப் புறப்பட்டுப் போன சாவித்திரி மாமி அதன் பிறகு வரவேயில்லை.

மூர்த்தி, மாமிக்கு ஒரு கடிதம் போட்டான். ''மாமி, இக்கடிதம் கண்டவுடன் தயவு செய்து புறப்பட்டு வரவும். மாலாவை அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன். நாளை மறுநாள் உங்களுக்கும் என் நண்பர்கள் சிலருக்கும் என் வீட்டில் விருந்து கொடுக்கப் போகிறேன். வந்து விருந்துச் சமையலை சாப்பிட்டுவிட்டு, பிறகு அபிப்பிராயம் சொல்லுங்கள்,'' என்று எழுதியிருந்தான்.

மாமி, புறப்பட்டு வந்தாள்.

மூர்த்தியும், மாலாவும் மாமியைத் தடபுடலாக வரவேற்றனர்.

அவர்களைப் பின்தொடர்ந்து சமையலறைக்குள் நுழைந்த மாமி, பிரமித்துப் போனாள்.

பலவிதமான உணவு தினுசுகள், மணம் கமகமக்க, பரிமாறுவதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்தது.

''மாமி, இப்போது என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான் மூர்த்தி.

''மாலாவை அப்போதே அழைத்துக்கொண்டு வராமல், விட்டுவிட்டு வந்தது, ரொம்பவும் முன்யோசனையான காரியம்தான்,'' என்று மாமி மனப்பூர்வமாகப் பாராட்டினாள்.

''பின்னே எனக்குத் தெரியாதா மாமி! அவளையும் பக்கத்திலே வைத்துக்கொண்டு கற்றுக் கொண்டிருந்தேனானால், இவ்வளவு சீக்கிரம் வந்திருக்குமா?'' என்று மூர்த்தி சொன்னதும், மாமிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''டேய் மூர்த்தி, நீ...நீ... என்ன சொல்றே? சமையல் நீ கற்றுக் கொண்டாயா? இதெல்லாம் நீ சமைத்ததா?'' என்றாள், திகைப்புடன்.

மூர்த்தி சிரித்தான். 'மாலா சமைத்திருக்கிறாள் என்று நினைத்துவிட்டீர்களா? அப்படிக் கனவுகூடக் காணாதீர்கள். நான் மாலாவுக்குத் தாலி கட்டின அன்றைக்கே தெரிந்துகொண்டுவிட்டேன், அவளுக்கு ஏழு ஜென்மத்திற்கும் சமையல் வராது என்று. நானே சமைக்கக் கற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்கிற முடிவுக்கு வந்து...''

மூர்த்தி பேசப்பேச மாமிக்குத் தலையைச் சுற்றியது.




நீயும் பொம்மை நானும் பொம்மை

சாந்தோம் ரோஸரி மெட்ரிகுலேஷன் பள்ளியினர் ஆண்டு தோறும் ஏழை எளிய குழந்தைகளுக்கு உதவும் நோக்கத்தோடு ஃபான்ஸி ஃபேட் நிகழ்ச்சிகள் நடத்துவார்கள். அதற்காகப் பரிசுச் சீட்டு விற்பார்கள்.

ஒரு ரூபாய் பரிசுச் சீட்டு வாங்கிய சிறுமி ஏ. ஷோபாவுக்கு ஒரு பொம்மை முதல் பரிசு கிடைத்தது. மதர் டால் என்று ஷோபா அதை அழைக்கிறாள்.

பொம்மையுடன் குழந்தைகள் ஏ. ஷோபா, எச். தீபா.

வண்ணப்படம்: உதயகுமார்.



எங்கள் இருவருடைய இதயங்களையும் விச்வ தேவர், ஜல தேவதை, வாயு தாதா ஆகியவர் பரஸ்பரம் சிநேகம் உள்ளவர்களாகச் செய்யட்டும்.

—மணமகன் மணமகளைப் பார்த்துச் சொல்லும் பல மந்திரங்களில், ஒரு மந்திரத்தின் அர்த்தம்.

32

மேற்கு மாம்பலம் வீட்டுக்குக் குடியேறிய அந்தப் பத்து நாட்களில் வசுவும் கோபியும் ஒருவருக்கொருவர் எத்தனை தடவைகள் சண்டை போட்டுக் கொண்டார்கள், எவ்வளவு நேரம் தங்களுக்குள் மனம் லயித்துப் பேசிக் கொண்டார்கள் என்று அவர்கள் கணக்கெடுக்கவும் இல்லை, எழுதி வைக்கவுமில்லை. ஏன் சில சாதாரண வார்த்தைகள் வசுவை அப்படி ஆத்திர மூட்டவைக்கின்றன என்பது கோபிக்குப் புரியாத புதிராக இருந்தது. தன் கணவன் ஒரு தொட்டாற்சுருங்கியோ என்று சிற்சில சமயங்களில் வசு தன்னையே கேட்டுக் கொண்டாள்.

அன்று காலை மணி எட்டரை இருக்கும்.

குளித்துவிட்டுக் கோபி சமையலறையினுள் எட்டிப் பார்த்தான்.

"வசு!"

"புரிகிறது. நான் என்ன செய்யட்டும்? பருப்பு வெந்தால்தானே அதைக் கரைத்துப் புளித் தண்ணீரில் கொட்டலாம்? நீங்க பறந்தால் எப்படி?"

"சாதம் வடித்தாகிவிட்டது இல்லியோ?"

"உம்."

"மோருஞ் சாதம் போடு.."

"ஓகே!" என்ற வசு, "ஆமாம், ரெண்டு நாளா என் கார்

பி.வி.ஆர்

கொட்டற மழையில் நனைந்து கொண்டிருக்கு...அது உங்க கண்ணிலும் பட மாட்டேங்கறது,'' என்று ஆரம்பித்தாள்.

''எந்த ஊரிலே யார் வருண ஜபம் பண்ணுகிறுளோ தெரியவில்லே, இந்த மாசம் இங்கே மழை கொட்டுகிறது.''

''உங்க மாதிரி நல்ல மனசு இருக்கிறப்போ வருண ஜபம்னு யாராவது உட்கார்ந்து செய்யணுமா என்ன?'' என்று கிண்டல் செய்த வசு, ''வீட்டுக்காரர்கிட்டே சொல்லி ஒரு ஷெட் கட்டச் சொல்லுங்க...நான் வேணும்னு கடன் கொடுக்கிறேன்,'' என்றுள்.

''வீட்டுக்காரர் வட்டி கொடுப்பாரோ என்னமோ?'' என்றுன் கோபி. பிறகு, ''வசு, நமக்குக் கார் தேவைதானு?'' என்றுன்.

''உங்க வரும்படியை நினைச்சுப் பார்க்கறப்போ தேவை இல்லே தான். ஆனு எனக்கு வேணும். எனக்கு ஆயிரம் ஃபிரண்ட்ஸ் இருக்கிறுர்கள்... ஆயிரம் இடத்துக்குப் போக வேண்டியிருக்கும்!''

''சாதம் போடறியா?''

திடீரென்று மாடிப்படியில் காலோசை கேட்டது. கீழ்ப் பகுதியில் குடியிருக்கும் வீட்டுக்காரர்.

''மிஸ்டர் கோபி சார்!''

''இதோ வரேன்.''

''ஒண்ணுமில்லே. விறகு வண்டி வந்திருக்கு. உங்க வீட்டுக் காரைக் கொஞ்சம் தள்ளி வைச்சால் விறகை நாங்க எங்க வீட்டுக்குள்ளே கொண்டு போகலாம்.''

''வசு!''

''எல்லாம் காதில் விழுகிறது. இதோ வரேன். ஒரு காரை வைச்சுக்கக்கூட இடமில்லே.''

முணுமுணுத்துக்கொண்டே வந்தவள், ''ஏன் சார், என் ஹஸ்பெண்ட் இன்னிக்கு உங்ககிட்டே பேசுவார். சீக்கிரம் ஒரு ஷெட் கட்ட ஏற்பாடு செய்யுங்கள். பண முடை இருந்தால் நான் பணம் தறேன். மாசாமாசம் வாடகையில் பிடிச்சுக்கலாம்,'' என்றுள்.

வீட்டுக்காரர் விழித்தார்.

''வசு, முதல்லே காரை ஸ்டார்ட் செய்து நகர்த்தி வைத்து

வரி ஆலோசனை

வருமான வரி, விற்பனை வரி, ஏனைய நேர்முக, மறைமுக வரிகள் பற்றிய கட்டுரைகள், சந்தேக விளக்கங்கள், உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கள் இடம் பெற்றுள்ள 'வரி ஆலோசனை' என்ற மாதப் பத்திரிகை 3-ஏ, வாரன் சாலே, சென்னை-6'லிருந்து வெளிவருகிறது. ஜூன் மாதத்து இதழில் இடம் பெற்றுள்ள 'என்ன கஷ்டம்?' என்ற நாடகத்திலிருந்து ஒரு பகுதி:

சுந்தரம் செட்டியார்: அப்போ சரிங்க. சாயபு ரூ. 10,000 கடன் கேட்கிறுர். நான் அவர் வீட்டை அடமானம் போட்டுப் பத்திரம் எழுதி அவர் செலவில் ரிஜிஸ்டர் செய்து கொடுத்தா, தர்ரேன்னு சொல்லியிருக்கேன். மற்றப்படி சொத்துப் பற்றித் தங்களுக்குத் திருப்தியாயிருந்தால் அடமானப் பத்திரம் என் மனைவி பேருக்குத் தயார் செய்துவிடுங்கோ. அவள் பேரு அங்கயற்கண்ணி.

வக்கீல் விஸ்வநாதன்: அதற்கென்ன, எழுதி விட்டா போறது. ஏன் மிஸ்டர் காதர் சாயபு, உங்க வீட்டின் தற்கால மதிப்பென்ன?

சுந்தரம் செட்டியார்: என்னங்க, ரூ. 50,000 இருக்காதுங்களா? புதுக் கட்டடம். இரண்டரை கிரவுண்டு பிளாட் ஏரியாவே ஆகுது... என்னைக் கேட்டால் சரியான மதிப்பு ரூபாய் அறுபதினுயிரங்க. என்ன லொகாலிடி!

வக்கீல் விஸ்வநாதன்: அப்படீன்னு இன்கம்டாக்ஸ் கிளியரன்ஸ் சர்டிபிகேட் வாங்கியாகணும். அதுக்குத்தான் கேட்டேன். சொத்தின் மதிப்பு 50,000'க்கு மேல் இருந்தால் இன்கம்டாக்ஸ் கிளியரன்ஸ் இன்றிப் பத்திரத்தைப் பதிவு செய்ய மாட்டார்.

காதர் சாயபு: ஏங்க, சொத்தின் மதிப்பை ரூ. 60,000'ன்னு காண்பிச்சாதானே இந்த வம்பு எல்லாம்? பேசாமல் இதன் மதிப்பு ரூ. 40,000'ன்னு போட்டுக் காரியத்தை முடித்துக் கொடுங்க சார்.

வக்கீல் விஸ்வநாதன்: என்ன பாய்? பூனை கண்ணை மூடிண்டா பூலோகமே இருண்டு போய் விடுமா? சொத்தின் மதிப்பை நீங்க குறைச்சால் அது குறைஞ்சு போயிடுமா? பதிவாளர் மதிப்பு சரியாக யிருக்கா என்று பார்க்க முதலில் கார்ப்பரேஷன் டாக்ஸ் ரசீதைப் பார்ப்பார். அதைக் கொண்டுதான் மதிப்பிடுகிறுர்கள்.



கால் வண்ணம்

பத்மப்ரியாவுக்கு உடம்பை அப்படியே ஸ்லிம்மாக வைத்துக் கொள்ள முடியும் என்பதில் ஒரளவு நம்பிக்கை இருந்தாலும் வேறொரு விஷயத்தில் அவருக்குப் பெரிய குறை இருந்தது: அவருடைய முதல் படம் வெளிவந்தபோது என்னதான் மேக் அப் போட்டிருந்தாலும் கை காலிலுள்ள முடியெல்லாம் அசிங்கமாகத் தெரிந்ததைக் கவனித்தார்.

அந்தக் குறையைப் போக்குவதற்கு ஏதாவது வழியுண்டா என்று அக்கம் பக்கத்தில் விசாரித்தபோது, அவர்கள் சஃபையர் தியேட்டரிலுள்ள ஒரு முடியலங்கார ஷாப்பைச் சிபாரிசு செய்தார்கள்.

அங்கு போய் அவர் தமது கை கால் ரோமத்தை ப்ளீச்சிங் — அதாவது சலவை செய்து கொண்டார். உடல் நிறத்துக்கு ஏற்ப கைகால் ரோமத்தின் நிறத்தை மாற்றிக் கொண்டுவிட்டார். இப்பொழுது மேக் அப் போட்டால் முடி நிறம் தெரியாது.

"நான் நடிகையான பிறகு இந்த ஒரு மாற்றத்தைத் தவிர வேறு எந்த மாற்றமும் செய்து கொள்ளவில்லை," என்கிறார் பத்மப்ரியா.

—வள்

விட்டு வா. விறகு வண்டிக்காரன் பாவம், காத்துக் கொண்டிருக்கிறான்."

"அடுப்பிலே பருப்பு வேகிறது."

"அதுதான் வேகலேன்னு சொன்னாயே. . . சார், ஷெட்டைப் பத்தி அப்புறம் பேசிக் கொள்ளலாம். . நீங்க ஒண்ணுக்கும் கவலைப்படாதீங்க," என்றான் கோபி.

கையில் கார் சாவியுடன், "ஆமாம் சார், அவர்...அவர் கவலைப் படமாட்டார். ஏன்னு கேட்டா, கார் என்னுடைய கார்," என்றாள் வசு.

வீட்டுக்காரர் சிரித்தார்.

"மிஸ்டர் கோபி. ஐ லைக் யுவர் ஃபாமிலி. இருபது வருஷமா நானும் பார்க்கிறேன், என் பெண்டாட்டி ஒரு நாளைக்காவது எங்கிட்டே மல்லுக்கு நிற்பாளான்னு. . . உஹூம். . நான் எதைச் சொன்னாலும் உடனே கேட்டுவிடறாள்!"

"ஐ பிடி யுவர் ஒய்ஃப்!" என்ற வசு தடதடவென்று இறங்கினாள்.

அவள் திரும்பி மாடிக்கு வந்தபோது, கோபி ஆபீஸ் செல்லத் தயாராக இருந்தான்.

"எங்கே கிளம்பிட்டீங்க?"

"மணி எட்டே முக்கால். இப்போ நடக்க ஆரம்பிச்சால்தான் ஒன்பது மணிக்கு ஸ்டேஷன்லே இருக்கலாம். ஒரு ட்ரெயினை விட்டால் லேட்டாகிவிடும்."

"எலக்ட்ரிக் டிரெயினுக்கு யார் ஸீஸன் டிக்கெட் வாங்கச் சொன்னா?"

"என் வரும்படி அப்படி."

"சரி, சரி. சாப்பிட வாருங்கள். நான் காரில் கொண்டு விடுகிறேன்."

புருஷன் சாப்பிடாமல் தொலையட்டும் என்று முன் கணம் மனம் கறுவிய வசு, திடீரென நெகிழ்ந்தாள்.

கோபி ஒன்றுமே பேசவில்லை.

அன்று மாலை கோபி திரும்பி வரும்போது கையில் ஒரு சிறு பாக்கெட் இருந்தது.



''நான் வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டியதாகப் புரளி கிளப்பிவிட்டிருக்கிருயாமே! என் மாமனுருக்கு காஷியர் உத்தியோகம் தந்து, என் மனைவியை டைப்பிஸ்டாகப் போட்டு, என் தம்பிக்கு செக்ஷன் ஆபீஸராகப் பதவி உயர்வு கொடுத்ததைத் தவிர, வேறு என்ன சலுகை யாருக்குக் காட்டினேன் என்று சுட்டிக் காட்ட முடியுமா உன்னுல்?''

''வசு.''

''நான் தலை வாரிக்கொண்டிருக்கிறது உங்க கண்ணுக்குத் தெரியலையா?''

''வாயைத் திற.''

''என்ன விஷயம்? முரளியும் நித்யாவும் வருகிற டயம்.''

''கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலே ஒரு புது ஓட்டல் ஆரம்பிச்சிருக்கா. அசல் நெய்லே பண்ணின ஸ்வீட். . . உனக்குத்தான் ஸோன்பப்டி பிடிக்குமே. . .''

''எவ்வளவு வாங்கினீர்கள்?''

''நாம ரெண்டு பேர்தானே? இரு நூறு கிராம் வாங்கினேன். கிலோ இருபது ரூபாய்.''

''சீ! என்ன அற்பத்தனம்' இதே எங்க அப்பாவானுல் குறைஞ்சது நாலு கிலோ வாங்கியிருப்பார்.''

''ஏன், உங்க வீட்டு மாட்டுக்குப் புண்ணுக்குப் பருத்திக் கொட்டைக்குப் பதிலா ஸோன் பப்டிதான் போடுவார்களோ? ஓ, அதுதான் அன்னிக்குக் காப்பியிலே ஸோன் பப்டி நெடி வீசிற்று. . .இந்தா.''

''இந்த அற்பத்தை நீங்களே சாப்பிடுங்கள். . . இரு நூறு கிராமாம். . . தாராள குணம் உடம்போடு பிறக்கணும். பரம்பரை பரம்பரையா வரணும்!''

அவனுக்குக் கோபம் வந்துவிட்டது.

''என் பரம்பரையிலே யாரும் ஒரு பொம்மனுட்டிகிட்டே கடன்னு சொல்லிஏமாத்தி, பத்தாயிரம் ரூபாயைக் கபளீகரம் செய்யலை. செஞ்சிருந்தா ஒருவேளை, நானும் நாலு கிலோ ஸோன் பப்டி வாங்கி மாட்டுத் தொழுவத்திலே கொட்டியிருப்பேன்!''

அவள் சிலிர்த்துக் கொண்டாள். ''ஏன் என் அப்பாவை இழுக்கிறீர்கள்?''

''உன் அம்மா பரம்பரையைப் பத்தித் தெரியாது. அதனுலே.''

''மூடுங்க வாயை! உங்க அம்மா லட்சணம் தெரியாதாக்கும்?''

''நீ என்ன கண்டுட்டே?''

''அதை வாயாலே வேறே சொல்லணுமா?''

அவன் ஆத்திரத்துடன் கை ஓங்க, வசு லாகவமாக நகர்ந்தாள்.

''உங்க கை என் மேலே பட்டதோ, அவ்வளவுதான். இன்னியோடே நம்ம குடும்ப வாழ்வு தொலைஞ்சுது.''

''ஆமாம். இதுமாதிரி நீ வீருப்புப் பேசி அதை நான் கேட்டு, எனக்குக் காது புளித்துவிட்டது.''

வசு ஏதோ பேச ஆரம்பிப்பதற்குள், ''என்ன, யுத்தம் முடிஞ்சுதா?'' என்ற குரல் கேட்டது.

பார்த்தார்கள். முரளி. அருகே நித்யா.

''ரொம்ப இண்ட்டரஸ்டிங் டியூவல். . . நீங்களும் இருக்கிறீர்களே. ஒரு நாள் கை ஓங்கி இருக்கிறீர்களா?'' என்றுள் நித்யா. பிறகு, ''வசு, சில மேனுடுகளிலே புருஷன் தன் கை வலிக்க அடிச்சாத்தான் பெண்ணுக்கு ஆனந்தமாம். அதுவும். . .அதுவும். . .பெட்ரூம்லே. . . .''

முரளி, ''நித்யா, இப்போ நான் உன் ஆசையை நிறைவேற்றிவிடுவேன். அப்புறம் உன் வாயிலேருந்து விழற பல்லை நீதான் பொறுக்கி வைச்சுக்கணும்!'' என்றுன்.

''உட்கார் நித்யா.''

''என்னடி சண்டை?''

''தினம் தினம் இப்படி ஏதானும் நடக்கிறதுன்னு கோபியே சொல்றுனே. இன்னிக்கு என்ன ஸ்பெஷல்?'' என்ற முரளி, கோபியைப் பார்த்தான்.

‘‘ஸோன் பப்டி!’’ என்றான்
காபி.

‘‘வசு, நாளைக்கு ராத்திரி
ழு நாற்பதுக்கு ரெயில். முடியும்னு
ந்து ஒரு கொகாகோலா வாங்கிக்
காடுத்து டாட்டா சொல்லிட்டுப்
பா!’’ என்றாள் நித்யா. முரளிக்கு
ல்லிக்கு டிரான்ஸ்ஃபர் ஆகியிருந்தது.

‘‘ஃபர்ஸ்ட் கிளாஸ் கூப்பே
ானே?’’ என்றாள் வசு.

‘‘செகண்ட் கிளாஸ், த்ரீ
யர். கண்டக்டர் உட்பட எழுபத்
ாறு பேர் இருப்பார்கள். . . காலோடு
ால் இடிச்சுக்கறத்தோடு நிறுத்திக்க
வண்டியதுதான்.’’

‘‘செகண்ட் கிளாஸா!’’

‘‘ஆமாம். அதுவும் டில்லி
பாறதே!’’ என்ற முரளி, ‘‘ஆபீஸ்
ஷயமா போறப்போ ஃபஸ்ட்கிளாஸ்.
ன்னு, ஆபீஸ் கௌரவத்தைக் காப்
ாத்தணும். இது சொந்தச் செலவில்
ிரயாணம். இரண்டு பேரும் ஃபஸ்ட்
ளாஸ்லே போனா, கிட்டத்தட்ட அறு
நூறு ரூபாய் காலியாயிடும்!’’

‘‘முரளி, சிக்கனத்தைப்பத்தி ஒரு கட்டுரை எழுதி, வசுவுக்கு அனுப்பி வை. . .இரண்டு பேர் சாப்பிட எத்தனை கிலோ ஸோன் பப்டி வேணும்னு குறிப்பிடு. . .’’

‘‘மூடுங்கள் வாயை!’’

‘‘வசு, நானும் இவரும் நாளைக்குக் கார்த்தாலே உன் அம்மா அப்பாவைப் பார்த்து, சொல்லிக் கொள்ளப் போகிறோம். ஏதானும் உன் அம்மாகிட்டே சொல்லணுமா?’’

‘‘நாளைக்கு மத்தியானம் அம்மாவே இங்கே வருகிறாள்.’’

‘‘அப்பா?’’—நித்யா.

‘‘அப்பா இல்லாம அம்மாவா? என் பேரண்ட்ஸ் ஐடியல் கபிள்.’’

‘‘உங்களைப் போல!’’ என்றாள் நித்யா சிரிக்காமல்.

மறுநாள் காலை சுமார் எட்டு மணிக்கு நித்யாவும், முரளியும்

ரகாசமல்ல  பிரசாதம்

‘பிரியா விடை’ பெரியவர்
ிரசாத்தின் படம். அது பிரகாசத்தின்
டம் என்பதுபோல் தங்கள் விமர்சனம்
மைந்ததற்கு என் நன்றி.

‘கடுகத்தனை நயம் கூட
ல்லாமல் புராதனப் பழசான இந்தக்
தையை எழுத நான் எதற்கு?’ என்று
ழுத்தந் திருத்தமாகக் குட்டியிருக்
றீர்கள்.

படைத்த விருந்திலே பக்கு
ம் பிடிக்கவில்லை என்றால், பண்ணிய
ரை விட்டுவிட்டுப் பரிமாறுபவனைச்
டுவது நல்ல வேடிக்கைதான்!

திரைக் கதை வசனத்திற்கு
ன் பொறுப்பாக்கப் பட்டிருப்பது
ண்மையென்றாலும், வரிக்கு வரி
ர்த்தைக்கு வார்த்தை, வடக்குப்
தாயி’லிருந்து விலகக் கூடாது என்
பது, தப்பாத வெற்றிச் சரித்திரங்களைக் கண்ட பிரசாத்தின் விருப்பம். அதற்கு மாறாக நிற்க நான் துணியவில்லை. காரணம்—

தன் பங்கிற்காகத் தன் உடன் பிறந்தாரோடு பிடிவாதம் பிடிக்கலாம்; தந்தையோடுகூடப்பிடிக்கலாம்; தாத்தாவிடம் பிடிப்பது தர்மமல்ல என்று விட்டு விட்டேன். விளைவு? உங்கள் விமர்சன விளையாட்டிற்கு நல்லவேட்டை.

முடிவாக, உங்களுக்குத் தெரிந்த விவரங்களையே உங்கள் கவனத்திற்கு வைக்கிறேன். இந்தப் ‘புராதன பழசு’ தான் வசூலில், ஆந்திராவில் அள்ளிக் குவித்திருக்கிறது. வடநாட்டில் ‘பாபி’யை விட வாரிச் சுருட்டியிருக்கிறது.

அன்புடன்,
ஆ. சு. பிரகாசம்

புலம்பல்

என் தம்பி ஒருநாள் ஹிப்பி டைப் கிராப் செய்வதில் ஸ்பெஷலிஸ்ட்டான நுங்கம்பாக்கம் பார்பர் ஷாப்புக்குப் போய், பதின்மூன்று ரூபாய் (ஷாம்புபாத் ரூ. 6. முடிவெட்ட ரூ. 6. டிப்ஸ் ரூ. 1) அழுதுவிட்டுப் பேருக்குக் கொஞ்சம் ட்ரிம் பண்ணிக்கொண்டு வந்தான்.


ஷாம்பு போட்டுக்கொள்ள ஆறு ரூபாயா! நான் அங்கு முடி வெட்டிக்கொள்ளப் போகுமுன் கொஞ்சம் உஷாரானேன்.

கடை சொந்தக் காரர் என்னைப் பார்த்து விட்டு ஷாம்பு போட்டுக்கொள்ள வேண்டும் என்றார். "நீங்கள் இப்படி சொல்வீர்கள் என்று தெரியும். நேற்று இரவு ஷாம்பு போட்டுக் கொண்டுதான் வந்திருக்கிறேன்," என்றேன்.

"அது போதாது. மறுபடியும் இங்கு போட்டுக் கொள்ள வேண்டும்," என்றார்.

விவாதித்தேன். பயனில்லை.

முறுக்காக வெளியேறி ஒரு 'ஜீப்' சலூனில் நுழைந்தேன்.



எப்படி ட்ரிம் செய்ய வேண்டும் என்று விவரமாகச் சொன்னேன். சில நிமிடத்திற்குள் எக்கச்சக்கமாகத் தலை மயிர் வெட்டப் பட்டதை உணர்ந்தேன். போச்சு! என் முடியெல்லாம் முடிந்துவிட்டது.

பலருக்கு என்னை யாரென்று அடையாளம் தெரிவதில்லை! நானே என்னை அறிமுகம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் என் வீட்டில் பலருக்குத் திருப்தி.

—எஸ். ரஜத்

சித்தார்கள். ஊதுவத்தியின் மணம் காற்றோடு இழைந்து வந்தது.

பூஜை.

ராஜலட்சுமி மணி அடித்தாள். தீபாராதனை காட்டினாள். திராட்சையையும் கற்கண்டையும் நைவேத்தியம் செய்தாள்.

தீர்த்தத்தை ராஜலட்சுமி கொடுக்க, இடது உள்ளங்கை மேல் வலது உள்ளங்கையை வைத்து, பக்தி சிரத்தையுடன் சிவராமன் வாங்கிக் கொண்டார். துளசியையும் சங்கு புஷ்பங்களையும் வலது காதில் செருகிக் கொண்டார்.

"ஓ, வாட் எ ப்யூட்டிஃபுல் ஸைட்!" என்றான் முரளி, மனம் நெகிழ.

சிவராமன் அப்போதுதான் அவர்களைப் பார்த்தார். வரவேற்றார். எல்லோரும் உட்கார்ந்தார்கள்.

"இரு, நித்யா, காப்பி கொண்டு வருகிறேன்."

தலைநிறையப் பூவும், வைரத் தோடும், வைர பேசரியுமாய் ஜொலிக்கும் ராஜலட்சுமியைப் பார்த்தபோது, சாட்சாத் மகாலட்சுமியையே பார்ப்பது போல இருந்தது முரளிக்கு.

அவள் பட்டுப் புடவை சரசரக்க நடந்து உள்ளே போன பிறகு, நித்யாவைப் பார்த்தான். அவளும் அவனைப் பார்த்தாள்.

"நித்யா, இந்த மாதிரி ஒரு லட்சியத் தம்பதியை நான் இதுவரை புராணங்களில்தான் படிச்சிருக்கேன்... இப்படியும் இருக்க முடியுமா?"

"வசு—கோபியும் ஒருவிதத்தில் ஒண்டர்ஃபுல் கபிள்தான், தெரியுமா?"

"அப்படியா?"

"இங்கே இவர்கள் உள்ளும் புறமும் ஐக்கியமாக இருக்கிறார்கள்... அங்கே நீங்கள் பார்க்கிறது புறம் மட்டும்தான். தேங்காய் மட்டைக்குள்ளே வழுக்கையும் இளநீரும் ஒண்ணோடு ஒண்ணு இழைஞ்சு இருக்கே. அது மாதிரி வசுவும் கோபியும் இழைஞ்சு இருக்கிறார்கள். அந்த வெளிச் சண்டை கூட, நாள் போகப் போகச் சரியாகி விடும்."

சிவராமனே காப்பியுடன் வந்தார். அவருக்கு நிழலாகச் சிற்றுண்டிகளுடன் ராஜலட்சுமி வந்தாள்.

முற்றும்

கேள்விகள்

■ பஸ்களைத் தேசிய உடைமையாக்கக் காங்கிரஸ் வாயளவில் சொல்லிற்றே தவிர, காரியத்தில் தி.மு.க.தான் காட்டிற்று என்று பண்ருட்டியார் கூறியிருப்பது உண்மையா?

சென்னை நகரத்துப் பஸ் போக்குவரத்தைத் தனியார் கம்பெனிகளிடமிருந்து காங்கிரஸ் அரசு ஏற்றுக் கொண்டது அந்த இளைஞருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அப்போது அவர் கைக் குழந்தையாக இருந்திருக்கக் கூடும்.

■ பெண்கள் செலவாளிகள் என்று ஜனசங்க உறுப்பினர் குற்றம் சாட்ட, அவர்கள் சேமிப்பாளர்கள் என்று ஸி. எஸ். வாதாடியிருக்கிறார். உண்மை என்ன?

தத்தம் வீட்டில் நிலைமை எப்படி என்று இருவரும் காட்டிக் கொடுத்துவிட்டார்கள்.

■ சில நல்ல மருந்துகள் கிடைப்பதில்லையே?

மருந்துகள் நல்லவையாக இருக்கலாம். மருந்துக் கம்பெனிக்காரர்களின் மனமும் அப்படியிருக்க வேண்டும் என்று கட்டாயமில்லையே? நமக்கு உயிர்ப் பிரசினை, அவர்களுக்கு வியாபாரம்.

■ பிரார்த்தனை செய்வதால் என்ன லாபம்?

குறைந்தபட்சம், அதனால் என்ன நஷ்டம்?

■ திருமதி சத்தியவாணி முத்து அவர்களின் பிறந்தநாள் சுவரொட்டிகளைப் பார்த்தீர்களா? 'அன்னையார் வாழ்க,' என்று போட்டிருந்தது.

பெண்களைத் தாய்மார் என்று அழைப்பதுதானே நம் மரபு? 'சத்தியவாணிமுத்து அம்மாள்,' என்றால் என்ன, 'அன்னை சத்தியவாணி முத்து' என்றால் என்ன?

■ திருமதி விஜயலட்சுமி பண்டிட் பிரதமரை ஆதரிக்கிறாரா?

ஊஹூம். அத்தை மடி மெத்தை அல்ல.

■ அனைத்திந்தியத் தலைவர்களில் குளுமையான குரல் உள்ளவர் யார்?

ஜகஜீவன்ராம்.

■ எல்.ஐ.ஸி.யிடம் கடன் வாங்கிப் பாலாறு திட்டம் ஆரம்பிக்கப் போகிறார்களாமே?

அன்றைக்கே எல்.ஐ.ஸி. இருந்தது. பாலாறு இருந்தது. தண்ணீர்க் கஷ்டமும் இருந்தது. ஆனால் திட்டம் இன்றைக்குத்தான் வந்திருக்கிறது.

■ பெரியாரின் கவர்ச்சி எதில் இருந்தது?

பேச்சுத் திறமை உட்படப் பல உண்டு. அவற்றில் அவரது சிவப்பு நிறமும், அதைத் தூக்கிக் கொடுக்கும் வண்ணம் அவர் அணிந்த கறுப்பு உடையும் ஒன்று.



கேள்விகள் அனுப்பலாம்

விலக்கப்பட்ட கனி (மலையாளம்)

மலையாளத்தில் டப்பிங் செய்யப்பட்ட கன்னடப் படத்தை ஒரு தமிழன் பார்ப்பதும், 'சொஜ்ஜி செய்வது எப்படி' என்ற சமையல் குறிப்பு ஒன்றை ரஷ்ய மொழியில் படித்து விட்டு ஒரு ஜப்பானியன் அதைச் செய்ய முயல்வதும் ஒன்றுகத்தான் இருக்கும் என்று முதலில் சந்தேகிக்கத் தோன்றிற்று. அப்படியல்ல.

சுலபமாக, தெளிவாகப் புரிகிறது. ஏனென்றுல் கதை அப்படி.

காயம் பட்டு ராணுவத்திலிருந்து திரும்பிவருகிருன் கணவன். ஆண் ஆணுக இல்லாத சூழ்நிலையில் பெண்.. . ஹூம், அவளும் பெண் தானே?

முதல் பாராட்டைப் பெறுவது காமெரா. டைரக்‌ஷனும் (அக்கா ஜெயந்தியைப் படுக்கையில் காணுத தங்கை ஆரத்தி, வேறெங்கும் தேடாமல் சொல்லி வைத்தாற்போல் சர்ரென்று அந்த இளைஞனின் படுக்கையறைக்கு வரும் ஓர் அசட்டுக் காட்சியைத் தவிர) திருப்திகரமாக அமைந்திருக்கிறது.

ஜெயந்தி, நடிப்பில் ஒரு பி.ஏ. சம்பாதிக்கக் கூடியவராக இருக்கலாம். ஆனுல் அவர் ஏற்றுள்ள பாத்திரம் ஆரம்பத்திலேயே நம் அனுதாபத்தை இழந்துவிடுகிறது. இளைஞனுடன் பிக்னிக் புறப்படுவதும்; அவன் பின்னுல் மோட்டார் சைக்கிளில் ஏறிக் கொள்வதும்; அவன் தோள்மீது கை வைத்துக் கொள்வதும்; அவன் அண்டர்வேருடன் சுனையில் மல்லாந்து





படுத்துக் கொண்டு குளிக்கும்போது பார்த்துக் கொண்டிருப்பதும் —ஒழுங்கான குடும்பப் பெண் நடந்து கொள்கிற முறையா இது? சட்!

நேர்மாறான பாத்திரமாகத் தங்கையைப் படைத்திருக்கிறார்கள். கல்யாணமான அக்காக்காரியிடம் காட்டிய அதே டெக்னிக்கைக் கன்னியான ஆரத்தியிடம் விட்டுப் பார்க்கிறான் வாலிபன். தோளைப் பிடித்துக் கொண்டால்தான் பாதுகாப்பு என்கிறான், எனக்கு பாலன்ஸ் தெரியும் என்கிறாள். (நிரூபித்தும் காட்டுகிறாள்.) அண்டர்வேருடன் குளிக்கிறான். அவள், 'இந்த இடம் எவ்வளவு புனிதமாக இருக்கிறது!' என்று சொல்லிக் கண்ணை மூடிக் கொண்டு தியானத்தில் அமர்ந்துவிடுகிறாள். அணைக்கிறான், அறை கொடுக்கிறாள். அறைந்துவிட்டு ஏதும் நடக்காததுபோல் அவனுடன் சகஜமாகப் பழகும் விதம் ஏ ஒன்.

காதலிலேயே கிளுகிளுப்பு உண்டு என்றால், காமத்தைப்பற்றி, அதுவும் முறைகெட்ட காமத்தைப்பற்றி, கேட்கவே வேண்டாம். இளைஞனின் முதுகில் மெள்ளக் கல்லால் தேய்த்துவிட்ட ஜெயந்தி, உணர்ச்சி வசப்பட்டவராய்க் கைவிரல்களால் தடவிக் கொடுக்கிறாரே— இதயங்களை வேறு எந்தப் படத்தில், எந்தக் காட்சி இவ்வளவு படபடக்க வைத்திருக்கிறது? கண்ணராவி என்னவென்றால், தவறு என்று தெரிந்தும் மறுபடி மறுபடி தீயில் விட்டில் பூச்சியாக விழுகிறாரே, அதுதான்.

அர்த்தபுஷ்டியுள்ள மௌனங்கள்—படத்தின் பிரதான ஆயுதம். ஆனால் வெடுக் வசனத்துக்கும் பஞ்சமில்லை. (உதாரணம்: 'உங்கள் மாதிரி ஒருவர் எனக்குக் கிடைத்தால் நல்லது என்று சொன்னாரே தவிர, நீங்கள் கிடைத்தால் நல்லது என்று சொல்லவில்லையாக்கும்!')

பாட்டுக்களை மியூஸிக் டைரக்டர்தான் மெச்சிக் கொள்ள வேண்டும்.

■■■■ மாம்பழம் ■■■ பலாப்பழம் ■■ வாழைப்பழம் ■ வேப்பம்பழம்


கீச்! கீச்!
காஷ்மீரில் அமைதி
ஷேக்


தாய்மார்களே! பொங்கி வரப்போகுது புது வெள்ளம்!
பொற்குடம் ஏந்திப் புறப்பட்டு வந்திடுவீர்!
பாலாறு திட்டம்
வீராணம் திட்டம்
இந்த வசனத்துக்கெல்லாம் குறைச்சலில்லே. முதலிலே போட்ட குழாய் என்ன ஆச்சு?

வெற்றி



பரங்கிக்காய் போல் உருண்டையாககீழ்ப் பகுதி சற்றேஅகன்று மேல்புறம் குவிந்த மொட்டைத் தலே. குறுகிய நெற்றியில் ஜாக்கிரதையாக க்ஷவரம் செய்து ஒதுக்கப்பட்ட புருவங்கள். சிரித்தால் கோடு இழுத்தாற் போல் மூடிக்கொள்ளும் ஈர்க் குச்சிக்

கண். மழமழவென்ற தொள தொளப்பான கன்னம், வளைந்து கீழிறங்கும் மீசை. கழுத்துப் பகுதி அனேகமாகத் தோளோடு ஐக்கியமாகிவிட்டிருந்தது. முழங்காலைத் தொடும் நீளக் கைகள். மகோன்னதமான குதிர்த் தொப்பை. வலுவான தொடை. மெல்லிசான உறுதியான கால். ஐந்தரை அடி உயரமான அந்தச் சிவப்பு உடம்பு, பழைய வெயிட்டில் சொல்லப் போனால் நானூறு பவுண்ட்.

புருவத்துக்கும் மீசைக்கும் கறுப்புப் பென்ஸிலால் டச் பண்ணி, உதட்டுக்குச் சாயம் தீட்டி, கன்னங்களுக்கும் உடம்புக்கும் பவுடர் போட்டு, கழுத்தில் துவளத் துவள உடும்பு பொறித்த டாலர் அணிந்து, செந்நிறத்தில் நீல ஓரத்துடன் கூடிய ஸாடின் அங்கியை முதுகில் தொங்கவிட்டுக் கொண்டு, நான்கு விரல் பட்டைக்குப் பளபளப்பான ஜிகினாக் கரையுடன் கூடிய வெல்வெட் ஜட்டியுடன் கோதாவில் இறங்கி, ஆரவாரிக்கும் கூட்டத்தினருக்குக் கம்பீரமாகக் கைகளைத் தூக்கி மும்முறை வணக்கம் செலுத்துகிற உருவம்தான் மல்யுத்த வீரர் கலியுக பீமன்.

முக்கியமான நகரங்களில் நடைபெறும் மல்யுத்தப் போட்டியின் வண்ண அறிவிப்பிலுள்ள விவரங்களின் படி, கலியுக பீமன் தமிழகத்தின் தலை சிறந்த மல்யுத்த வீரர். அவருக்குப் பல சிறப்புப் பெயர்களும் பட்டங்களும் உண்டு. 'தமிழக கிங்காங்' 'சதை மன்னன்' 'பேரிடிச் சக்ரவர்த்தி' 'சிங்கப்பூர் உடும்பு' முதலியன.

இவ்வளவு விவரங்களிருந்தனவே தவிர அவரது சொந்தப் பெயர் தாஸ் என்பது அனேகம் பேருக்குத் தெரியாது. சின்ன வயதில் தமிழ்நாட்டிலிருந்து போய்ச் சிங்கப்பூரில் கொஞ்ச நாள் தங்கியிருந்தபோது அங்கு ஒருவரிடம் மல்யுத்தம் பயின்றார்— முக்கியமாக உடும்புப்பிடி. கொஞ்ச நாளென்றாலும் அது இப்போது நோட்டீஸில் போட்டுக் கொள்ளக் கூடுதலான ஒரு பட்டப் பெயராக உதவியது.

மல்யுத்த வீரர் என்றாலும் தாஸுக்குக் கர்வம் கிடையாது. மனைவி யமுனாபாய்க்கு உடம்பு சரியில்லாத நாட்களில் ஈரானி ஓட்டலில்தான் அவருக்கு நாஷ்டா. விஸ்தாரமாக அவர் சாப்பிட்டுக் கொண்டிருப்பதை வேடிக்கை பார்க்கும் சிலர் இவர் காதுபட, 'அதோடா கலியுக பீமன்! இன்னுமா நொக்குறானய்யா. நேற்று என்னமாக மண்ணைக் கவ்வினான்' என்று தங்கள் வியப்பையும் விமரிசனத்தையும் தெரிவித்தாலும் கோபம் கொள்ள மாட்டார். அடிக்கடி வாயில் ஊறும் உமிழ்நீரை 'இஸ்ஸ்' என்று உறிஞ்சிக் கொண்டு, 'நேற்று தோத்துப் போச்சு. நாளைக்கி ஜெயிச்சுப் போகும்,' என்று நிதானமாக அவர்களைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்துச் சலாம் செய்வது அவருக்கே உரிய பெருந்தன்மை. சர்வர்களுக்கு ஒவ்வொரு நாஷ்டாவின் போதும் இரண்டு ரூபாய் பக்ஷீஸ் தராமலிருக்கமாட்டார்.

ஆலிண்டியா மல்யுத்த ஆட்டத்தின் கண்ட்ராக்டர் சுரவர்த்தி, தற்செயலாகத்தான் தாஸை ஒரு சிறிய அரங்கத்தில் பார்த்தார்—மல்யுத்த வீரராக அல்ல. எடைதூக்கும் வித்தைக்காரராக.

அப்போது வேலூரில் பம்பாய் ஷோ நடந்து கொண்டிருந்த சமயம். ஒரு பல்பொடி ஸ்டால்காரர், கூட்டம் சேர்க்க தாஸைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார். ஸ்டால் அருகே பிரம்மாண்டமான உருண்டைப் பாறை ஒன்றை உயரத் தூக்கி அனாயாசமாகக் கைதட்டல் பெற்றுக் கொண்டிருந்த அவரைச் சுரவர்த்தி கைகுலுக்கிப் பாராட்டிவிட்டுத் தன்னை அறிமுகம் செய்து கொண்டு, தனியாக அழைத்துப் போய்ப் பேசினார்.

''உங்கள் அபாரமான உடம்பு மல்யுத்தத்துக்கே உரியது. இவன் தருகிறதைப் போல நாலுமடங்கு நான் தருகிறேன். மாதச் சம்பளமாக வேண்டுமானால் அப்படி வாங்கிக் கொள்ளுங்கள். ஷோவுக்கு இத்தனையென்று காண்ட்ராக்ட் பண்ணிக் கொண்டாலும் சரி.''

மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளத்துக்குத் தாஸ் அவரிடம் ஒப்பந்தம் செய்துகொண்டு 'கலியுக பீமன்' ஆனார். ஷோ நடந்தாலும் நடக்காவிட்டாலும் சம்பளம் ஐந்நூறு. ஷோ நடக்கும் தினங்களில் பேட்டா ஐம்பது தனி.

சுரவர்த்தி வெற்றிகரமான கண்ட்ராக்டர். இல்லாவிட்டால் அகில

யோகேஷ்



அதிசயமாகப் பூ வைத்துக்கொண்டிருக்கிறு
ஹெலனின் வாரிசு—புரட்டுக.

இந்திய மல்யுத்தப் போட்டிகளில் பங்குகொள்ளும் பத்து ஜோடிகள் அவர் கைவசம் இன்று இருப்பார்களா?

விதவிதமாக அந்த ஜோடிகளைப் பிரித்து மோத விடுவார்.

ஆனல் ஒரே ஆள் எப்போதும் ஜெயித்துக் கொண்டிருந்தால் ரசிகர்களுக்கு அலுப்பு ஏற்பட்டு வடும். ஆகவே சீசனுக்குச் சீசன் 'நம்பர் ஒன்' மாறும்படி ஏற்பாடு செய்து வைப்பார். அந்த அரேஞ்ச்மெண்ட்டின்படி இப்போது கொஞ்ச நாளாய் 'டைகர் ஸிக்கந்தர்' தான் ஜெயிப்பதென்று ஏற்பாடு.

ஆரம்பத்தில் டைகர் தோற்கிருற்போல் — சில பாயிண்டுகளை இழக்கிற மாதிரி—காட்டிக்கொள்வான். ஆனல் ஆட்ட இறுதியில் பறந்து பறந்து பீமனை வலப்பக்கமும் இடப் பக்கமுமாக உதைத்து மாமிச மலைபோல் கீழே வீழ்த்திச் சித்திரவதைப் படுத்தி வென்று விடுவான்.

பல நாட்கள் நிஜமாகவே பீமனுக்கு வலியின் கொடுமையால் இரவெல்லாம் தூக்கம் வராது. தப்பித் தவறித் தாடைப் பக்கமாக உதை விழுந்து இரண்டொரு பல்கூட உடைந்திருக்கிறது.

அன்றும் அப்படித்தான் நேர்ந்தது.

மல்யுத்தம் முடிந்து அன்றைய பேட்டா ஐம்பது ருபாயை வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டு வீடு திரும்பினுர். அவர் மனைவி யமுனபாய் இதமாக வென்னீர் வைத்து, வீங்கின இடங்களுக்கெல்லாம் ஒத்தடம் கொடுத்தாள்.

மகன் சென்னப்பன் மீது தான் அவளுக்கு ஆத்திரமாய் வந்தது.

வயது இருபது ஆகிறதே! கொஞ்சமாவது பொறுப்பு இருக்கிறதா? கல்லூரியில் ஆசையோடு சேர்த்து என்ன பிரயோசனம்? பல கெட்ட பழக்கங்கள்.

இதோ இப்போது கூட இங்கே அவள் கணவனுக்குச் சிசுருஷை செய்யும்போது, அங்கே பக்கத்து அறையிலிருந்து சிகரெட் நெடி வருகிறது.

சென்னப்பன்தான் புகை பிடிக்கிருன். ஆத்திரத்துடன் அங்கே சென்ருள்.

''அடேய் சென்னு, உனக்கே நல்லாவா இருக்கு? அப்பா எவ்வளவு அடிபட்டு, காயம்பட்டு எப்படி வந்திருக்கிருர் பார்! நம் குடும்பம் நன்ருக இருக்கணும், நீ நன்ருக இருக்கணும், படித்து மேலுக்கு வரணும் என்பதற்காக இத்தனை உதைகளையும் பொறுமையாக வாங்கிட்டு வருகிருர்!''

''சரிதான் போம்மா!'' என்ற பிள்ளை சிகரெட் முனையை ஜன்னல் சட்டத்தில் தேய்த்தான்.

அவளுக்கு ஆத்திரமாக வந்தது. ''நீயும் ஒரு பிள்ளையாடா? உன் அப்பாவைப் பாருடா. எப்படி வீங்கி

யிருக்கிறது, மோவா யிலிருந்து ரத்தம் கசிகிறதே! கவனித் தாயா? ஒவ்வொரு நாளும்சித்திரவதைப் பட்டுக் கொண்டு உடம்பு வீங்கி, அந்த டைகர்கிட்டே தோற்றுப்போய் அவமானத்துடன் வருகிறாரே... பாவி.. உனக்காகத் தாண்டா."



"தே, சும்மா இரம்மா! வாள் வாள்னு கத்திக் கிட்டு! திறமை இருந்தால் கோதா விலே இறங்கணும். இல்லாட்டி வேறே தொழிலுக்குப் போவணும். தெரி யாத தொழில்லே நுழைஞ்சு, தொட ர்ந்து உதை வாங் கிக் கட்டிக் கிட் டால் அதுக்கு நானு ஜவாப்?"

"அடேய்! அடேய்! வாய் புழுத்துப் போகும்டா! அப்படிப் பேசாதே! உன் அப்பாவுக்கா திறமை யில்லே? நினைச்சாரானல் ஒரே அடி யிலே நூறு பேரைச் சாய்ச்சிடுவார். கண்டிராக்டரோட பேச்சுக்காக இப்ப டித் தோற்கிற மாதிரி நடிக்கிறார்!"

"அப்படித்தான் அவரும் சொல்லிட்டிருக்கார். நீயும் நம்பிக் கிட்டிருக்கிறே! உண்மையான சாமர்த் தியம் இருந்தால் எவனாவது இப்படி உதை தின்பானு? நீ ஒரு பைத்தியம்!"

அந்தண்டை அறையில் படுத் திருந்த பீமனுக்கு, மகன் பேச்சு தெளி வாகக் காதில் விழுந்தது.

விண்விண்ணென்று தெறித்த பின் மண்டையைத் தடவிக் கொண்டே ராத்திரி தூங்கினர்—ஒரு முடிவுக்கு வந்த வராக.

மறுநாள்.

முந்திய நாள் கலந்து கொண்ட அதே டைகர் சிக்கந்தருடன் கலியுக பீமன் மோதத் தயாரானர். கல்லா நிரம்பி வழிந்து கொண்டிருந் தது.

மணி அடித்தது. காந்தம் போல் இரண்டு ஜோடிக் கைகளும் பிடித்த பிடியை விடாமல் கவ்வின.

சிக்கந்தர் விருட்டென்று பின் வாங்கி, பீமனின் அகன்ற கால் இடுக் கில் தலையை மின்னலென நுழைத்து, சல்லிக்கட்டுக் காளை ஆளைத் தூக்கிப் போடுவது போலத் தூக்கிப் போட் டான். கூட்டம் "ஆஹா!" என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்வது பீமனின் காதில் விழுந்தது. முதுகு தரையில் பட்டதும் அவர் சாதாரணமாக அசைந்து ஆடித் தொப்பையைத் தடவி விட்டுக்கொண்டு, 'ஹூங்' என்ற உறு மலுடன் மெதுவே எழுந்து, காண்டா மிருகம் தலையை நெட்டிக் கொண்டு வருவதுபோல டைகர் மேல் பாய் வார். மறுபடி உதை வாங்குவார்.

ஆனல் இன்று வித்தியாச மாக அடுத்த விநாடியே எழுந்து கொண்டுவிட்டார். டைகரைத் தலை யால் தாக்குவதற்குப் பதில் கைகளைக்

> **ம**ற்றவர்கள் செய்ய முடியாததைச் செய்வது திறமை. திறமையினாலும் செய்ய முடியாததைச் செய்வது மேதை.
>
> —வில் ஹென்றி

கொடுத்துச் சரேலென்று இழுத்து டைகரின் முதுகுப் பக்கமாகச் சென்று தன் கைகளை அவனுடைய அள்ளையில் கொடுத்துத் தலைக்கு மேல் லாக் செய்து கொண்டு அவனைத் திணறடித்தார். டைகருக்கு மூச்சு வாங்கியது. அசல் உடும்புப் பிடிபோல் லாக் இருக்கிறது.

''ஆ! ஊ! ஆ!'' என்று அசிங்கமாகக் கத்தினான்.

பீமன் அவனை ஓரேயடியாகக் கீழே தள்ளி தொம் தொம் என்று தன் தொப்பையுடன் அவன் மீது நாலுதரம் விழுந்தார். டைகர் தன் ஜன்மத்தில் இத்தகைய கனமான அடிகளையும் பிடியையும் அனுபவித்ததில்லை. கூட்டத்தினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய, ரெஃப்ரீ அடுத்த ரவுண்டுக்காக எண்ணிக்கைகளை எண்ண, கண்டிராக்டர் குழப்பமும் திகைப்புமாய் அரங்கத்தை நோக்கி விரைய, ஸ்மெல்லிங் ஸால்ட் கொண்ட முதலுதவிப் பெட்டியுடன் இரண்டு பேர் அவரைத் தொடர... எல்லாம் தலைகீழ்! மாமூலாக ஜெயிக்கும் மல்யுத்தவீரர், இந்தியா நம்பர் ஒன்று, பேச்சு மூச்சற்று அரங்கத்தின் தரையில் கிடந்தான்.

ரசிகர்கள் மகிழ்ச்சியுடன் கூவினர், ''வெல்டன் பீமா!''

தண்ணீருடனும் டவலுடனும் ஒரு பையன் டைகருக்கு சிசுருஷை செய்து கொண்டிருந்தான்.

மெதுவே எழுந்தான் டைகர். முதல் தடவையாகக் கலியுக பீமனைப் பார்க்க அவனுக்கு உள்ளுக்குள் நடுக்கமெடுத்தது.

மூன்று, நாலு, ஐந்து என்று ரவுண்டுகள் ஆயிற்று. ஆறாவது ரவுண்டிலும் டைகருக்குத் தோல்வி!

கூட்டத்தில் ஒரே ஆரவாரம்.

மேடையை நோக்கிச் சில ரசிகர்கள் ஓடிவந்து தாஸுக்கு மாலையிட்டனர். சிலர் கட்டிக் கொண்டனர். சிலர் கையெழுத்து வாங்கிக் கொண்டனர். புகைப்படம் சிலர் எடுத்தனர்.

ஆட்டம் முடிந்தது.

கலியுக பீமனை சுரவர்த்தி தன் அறைக்குக் கூட்டிப் போனார். அவருடைய பார்ட்னர்களான இரண்டு சிந்திகளின் முகமும் கடுகடுவென்றிருப்பதை அவர் கவனித்துக் கலக்கமடைந்தவாறு நின்றார். அறையின் மூலையிலிருந்த ஸோபா—கம்—பெட்டில் குப்புறப் படுக்க வைத்த நிலையில் டைகருக்கு ஒரு சிப்பந்தி முதலுதவிச் சிகிச்சை செய்து கொண்டிருந்தார்.

''இதோ இன்றைக்குச் சேர வேண்டிய பேட்டா. நான் நியாயம் தவறாதவன். இனிமேல் நீங்கள் இங்கே வரத் தேவையில்லை. போகலாம்,'' என்றார் சுரவர்த்தி.

யமுனாபாய் மாலைகளைப் பார்த்தாள். ஆவலுடன் ''என்ன இன்றைக்கு விசேஷம், மாலை கீலை! பேட்டா கொடுங்கள். பீரோவிலே வைத்துவிட்டு வருகிறேன்.''

அவர் யந்திரம்போல ரூபாயை எடுத்துக் கொடுத்தார். பிறகு அரங்கத்தில் தான் அடைந்த வெற்றியையும், கண்டிராக்டர் அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டதையும் மனைவியிடம் கொஞ்சம் கொஞ்சமாக விவரித்தார்.

அவள் கையிலிருந்த கரண்டி லொட்டென்று கீழே விழுந்தது. வற்றலான வெளுத்த முகத்தில் ஜிவுஜிவென்று செந்நிறம் ஏறத் தொடங்கியது.

''என்னம்மா பண்ணினார்?'' என்றான் அங்கு வந்த சென்னப்பன்.

''ஜெயிச்சுட்டு வரணும்னு தோணிட்டுதாம் ஜெயிச்சுட்டு வரணும்னு! ஒப்பந்தத்தை மீறி அந்த டைகரை அடிச்சாராம். உடம்பிலே அவ்வளவு திமிர்டா.. வேலையிலிருந்து நின்னுக்கண்ணு சொல்லிட்டாங்க!''

ஆவலுடன் மகனைப் பார்த்தார் பீமன். அவன் நிச்சயமாகத் தனது வீரத்தைப் பாராட்டத்தான் போகிறான்....

சென்னப்பன் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு, ''அப்பா, நீ ஒரு மக்கு; வேலையை எவனாவது விடுவானா இந்தக் காலத்திலே!'' என்றான்.



பொட்டலம்

கலைச்செழியன்

"பொட்டலத்தை பத்திரமாக வைத்துக் கொண்டீர்களா அத்தான்...?" என்று கேட்டபடி பின்னால் வந்தாள் வனிதா.

காலில் செருப்பை மாட்டிக் கொண்டு புறப்பட்ட மணி, மனைவியின் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன்பு மடியைத் தொட்டுப் பார்த்து கொண்ட பிறகு, "ம்...ம்.." என்றான்.

"போகும் போதே கடையில்..."

"கொடுத்து விட்டுப் போகிறேன். பற்ற வைத்து வைத்திருப்பார்கள். வரும் போது வாங்கி வந்து விடுகிறேன்."

"விவரம் தெரியாதவராக இருக்கிறீர்களே..."

"எதுக்கு விவரமில்லையாம்?"

"பவுன் விற்கிற விலை தெரியுமில்லையோ?"

"தெரியாமல் என்ன. நானூறைத் தாண்டி ஐந்நூறைத் தொடுவதற்கு ஓடிக் கொண்டிருக்கிறது."

"இப்போ கொண்டு போய்க் கடையில் ஐந்து பவுன் சங்கிலியை ஒரு சிறு பற்ற வைப்புக்காகக் கொடுத்துவிட்டுப் போவதாய்ச் சொல்கிறீர்களே?"

"ஓ! அதைச் சொல்கிறாயா?"

"வேறு எதைச் சொல்கிறேனும்? இதோ பாருங்கள். மத்தியானச் சாப்பாட்டிற்குக் கிளம்புவதற்கு முன் அரை மணி நேரத்திற்குப் பர்மிஷன் கேட்டுக் கொண்டு கிளம்பி, கடைக்கு வந்து சங்கிலியைக் கொடுத்துப் பற்ற வைக்கச் சொல்லுங்கள். இருந்து வாங்கி வந்து விடுங்கள்.."

"ஆகட்டும்."

"கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு பார்க்க வேண்டும். சிகரெட் பற்ற வைக்கவோ, டீ குடிக்கவோ போய் விடாதீங்க."

அவள் உபதேசம் அவனுக்கு அலுப்பாகத் தோன்றிற்று. "இவ்வளவு சொல்கிறாயே, நீயே போய்ப் பற்ற வைத்துக் கொண்டு வாயேன்?" என்றான்.

"போவேன். நாலு ஆண் பிள்ளைகள் இருக்கிற இடத்தில் வயிற்றை உப்பிக் கொண்டு நிற்கக் கூச்சமாக இருக்கிறது," என்றவள் லேசாகச் சிரித்தாள்.

"ஓகோ..." என்ற மணியும் புன்னகைத்துவிட்டு, "பயப்படாதே, நீ சொன்னபடியே செய்கிறேன். வரட்டுமா?" என்று கூறிவிட்டு வெளியில் வந்தான். வனிதா உள்ளே சென்றாள்.

இரண்டு வீடு தாண்டியிருப்பான். அப்படியே நின்று விட்டான்.

அவன் மகன் அன்பனை ஒருவர் துரத்திக் கொண்டு வந்தது தான் காரணம்.

பயம் கௌவிப் பிடிக்க ஓடி வந்தவன், "பாருப்பா! அந்த மாமா என்னை அடிக்க வரார்!" என்று கூவியபடி தந்தைக்குப் பின்புறம் நின்று கால்களைப் பிடித்துக் கொண்டான்.

"ஏண்டா, எதுக்காக அடிக்க வருகிறார்?"

"ஒண்ணு மில்லேப்பா.... சும்மாத்தான்."

அதற்குள் அந்த மனிதரும் வந்து விட்டார். ஓடி வந்த வேகம் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கிற்று.

"என்ன சார்..எதுக்காக இவனைத் துரத்தறீங்க? என்ன தப்புப் பண்ணினான்?"

"அவனையே கேளுங்கள் சார்.."

"ஒன்றுமில்லை என்கிறானே?"

"ஒரு தப்பும் செய்யாமல் ஒரு பிள்ளையைத் துரத்திக் கொண்டு வருவேனா சார்? நானும் பல நாளாய்ப் பார்த்துப் பார்த்து ஏமாந்த பிறகு தான் இன்றைக்கு அவனைக் கண்டு பிடித்துத் துரத்திக் கொண்டு வந்தேன்."

"தயவு செய்து நடந்ததைச் சொல்லுங்கள். எனக்கு ஆபீசுக்கு நேரமாகி விட்டது."

"இந்தப் பொட்டலத்தைப் பாருங்கள் சார்..." என்றவர் கையிலிருந்த பொட்டலம் ஒன்றைக் கொடுத்தார். வாங்கிப் பிரித்துப் பார்த்த மணியின் முகம் அருவருப்படைந்தது.

"உங்கள் பையன் வேலை சார் இது."

"என்ன சொல்கிறீர்கள்?"

"தெருவில் கிடக்கிற வெத்து காகிதங்களைப் பொறுக்க வேண்டியது...அதில் இப்படிக் கல், மண்ணுங்கட்டி, செத்துப் போன பல்லி என்று எதையாவது வைத்து மடித்துத் தெருவில் போட்டு விட்டு ஒளிந்து நின்று பார்த்துக் கொண்டிருப்பது... யாராவது எடுத்துப் பிரித்துப் பார்த்து விட்டுப் போட்டால், 'ஹய்யா, ஏமாந்துட்டார். ஏமாந்துட்டார்..' என்று கூச்சல் போட்டுச் சிரிக்க வேண்டியது. தெருவிலே மற்றவர்களும் சிரிப்பார்கள். இது ஒரு விளையாட்டா சார்? பிள்ளையை இப்படியா வளர்ப்பது?"

மணிக்குப் பிள்ளை மேல் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. "டேய் அன்பா! நீதான் செய்தாயா?" என்றான் மகனை இழுத்தபடி.

"இனிமே இல்லைப்பா."

"அப்படியானால் நீதான் இப்படிப் பொட்டலம் கட்டிப் போட்டாயா? வாடா வீட்டுக்கு!" திரும்பினான். "சாரி சார், அவனுக்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். நீங்க போங்க, நான் கண்டிக்கிறேன்."

"வாயால் கண்டிங்க சார். அடிக்காதீங்க," என்று கூறியபடி சென்றார் அவர். (சிலர் இப்படித்தான் கிளறி விட்டுவிட்டுப் பிறகு பரிதாபப் படுவார்கள்.)

உள்ளே இருந்து ஓடி வந்தாள் வனிதா. மகன் படுகிற அடிகளையும், கோபாவேசமாகக் கண் மண் தெரியாமல் அடிக்கும் கணவனையும் கண்டு திடுக்கிட்டுத் திணறி விட்டாள்.

"அடிக்காதீங்க! அடிக்காதீங்க! ஏன் இப்படி அடிக்கறீங்க? என்ன குற்றம் செய்தான்?" என்று கூவியபடி அன்பனைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டாள்.

"ராஸ்கல்! செய்வியாடா! தோலை உரிச்சிட மாட்டேனா? அப்பா அடிக்க மாட்டார் என்கிற திமிரில் தானே இந்த மாதிரி செய்யறே? கொன்று விடுவேன் கொன்று!" என்று கூவியபடி அவனை இழுத்தான் மணி.

"இனிமே செய்யமாட்டேம்பா..." என்று பரிதாபமான குரலில் அலறினான் அன்பன்.

"நிறுத்துங்க. அடிச்சது போதும். என்னவென்று சொல்லுங்க. நான் கண்டிக்கிறேன். மாட்டை அடிப்பதைப் போலவா பிள்ளையை அடிப்பார்கள்? அவன் முதுகைப் பாருங்கள், உங்கள் கை விரல்கள் தெரிகிறது. பட்டைப் பட்டையாக வீங்கிட்டுதுங்க," என்று கெஞ்சியபடி அழுதாள் வனிதா.

ஆத்திரத்தில் அடித்து விட்டானே தவிர வனிதாவும் அன்பனும் கதறிய கதறல் மணியையும் கலக்கி விட்டது. "பின்னே என்ன வனிதா! கண்ட அசிங்கத்தையெல்லாம் தாளில் வைத்துப் பொட்டலம் கட்டித் தெருவில் போடுகிறானாம். எடுத்துப் பார்த்து ஏமாந்தால் இவன் சிரிக்க வேண்டியது! தினமும் இப்படியே செய்கிறானாம். நல்லாவா இருக்கு?" கோபமாகவே பேசினானே தவிர, கூறும் போதே கலங்கி விட்டான் மணி.

"அவ்வளவு தானே? சொன்னால் திருந்தி விட்டுப் போகிறான். இதற்காகவா இப்படி அடிச்சுட்டீங்க? நேரமாகிறது, நீங்கள் போங்க. 'படிக்க மாட்டேன் என்கிறான். கண்டிக்கக் கூடாதா?' என்று நான் சொன்னால், 'தன்னால் வயது வந்ததும் படிப்பான். இதற்குப் போய் அடிக்கக் கூடாது' என்பீர்களே? இப்படிப்பட்ட நீங்களே அடித்துத் துவட்டி விட்டீர்கள். போங்களத்தான், போங்க."

"அது என்னவோ வனிதா, அவர் சொன்னதும் என்னையறியாமல் கோபம் வந்து விட்டது," என்றவன், மனைவியைத் தனியாக அழைத்துச் சென்று, "வனிதா, என்னை மன்னித்துக் கொள்..." என்றான்.

"என்னங்க பேச்சு இது? பேசாமல் போங்க."

"இல்லை வனிதா. பலமாக அடித்து விட்டேன். ஒத்தடமாவது கொடு, என்ன?"

"ஆகட்டும், போய் வாங்க."

தெரு வரையில் வந்து கணவனை அனுப்பி விட்டுத் திரும்பினாள் வனிதா. கைக் கடியாரத்தைத் திருப்பிப் பார்த்தபடி மணி நடையைத் துரிதப்படுத்தி நடந்தான்.

அவனுக்கு முன்னால் சென்று கொண்டிருந்தவர், கீழே கிடந்த



பொட்டலம் ஒன்றைக் காலால் எத்
திக் கொண்டே, ''சட்! இந்தத் தெரு
வில் எல்லாம் வானரங்களாகப்
பிறந்து விட்டதுகள். கண்டதை வைத்து
மடித்துத் தெருவில் போட்டு வேடிக்கை
பார்ப்பது ஒரு விளையாட்டு!'' என்று
முனகியபடி நடந்தார்.

அவனுக்குப் பின்னல் வந்த இன்னெரு பெரியவர், கீழே கிடந்த பொட்டலம் ஒன்றை எடுப்பதற்குக் குனிந்து விட்டார். நினைவு வந்து நிமிர்ந்து கொண்டார். ''இனி மலா ஏமாறுவேன்? என்ன அசிங்கம் எடுத்து வைத்து மடித்திருக்கிருனுங்களோ என்னவோ...'' என்று தனக்குள் பேசியபடி நடையைக் கட்டினுர்.

மணி பதினென்று.

கட்டிலில் முனகியபடி படுத்திருந்தான் அன்பன். போர்வையால் போர்த்தியிருந்தும் அவன் உடல் வெட வெடத்துக் கொண்டிருந்தது. தன் சினேகிதர்களுடன் வேடிக்கையாக ஆரம்பித்த இந்தக் குறும்புத்தனம் இப்படியொரு உதை வாங்கித் தருமென்று அவன் நினைக்கவேயில்லே.

அன்று—

மூன்று மாதங்களுக்கு முன்பு.

குண்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள் அவன் சினேகிதர்கள். அன்பன் மட்டும் ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தான். முதல் நாள் இலந்தைப் பழம் பொறுக்கித் தின்னச் சென்றபோது முள் குத்தியதால் அவனுல் விளையாட முடியவில்லே.

விளையாட்டுப் பிள்ளையல்லவா? கைகள் துறுதுறுத்தன. அங்கு கிடந்த பேப்பரை எடுத்துக் கொஞ்சம் மணலை வைத்துப் பொட்டலமாகக் கட்டித் தெருவில் எறிந்தான்.

வேகமாக வந்து கொண்டிருந்த பேண்ட் போட்ட ஒருவர் ஆவலுடன் பொட்டலத்தை எடுத்துத் துப்பறிந்தார்... ஏமாற்றத்துடன் வீசி விட்டுச் சுற்று முற்றும் பார்த்தார்.

''ஹையா...மாமா ஏமாந்து விட்டார்...'' என்று கூறிக் கொம்மாள மிட்டான் அன்பன்.

''ஏண்டா போக்கிரிப் பயலே! என்னடா வேலே இது?'' என்று கூறிச் சிரித்தபடி போய் விட்டார் அவர்.

மற்றப் பையன்களிடமெல்லாம் அன்பன் சொன்னுன். கேட்க வேண்டுமா விளையாட்டுப் பிள்ளைகளின் கொண்டாட்டத்தைப் பற்றி!

தெருப் பூராவும் பொட்டலங்கள் தான்.

''ஹே, மாமா ஏமாந்துட்டார்!'' என்றே, ''தாத்தாவுக்கு ஆசையைப் பாருங்கடோய்!'' என்றே, ''மாமியைப் பாருங்கடா, பொதையல் எடுத்துட்டாங்க!'' என்றே எடுப்பவர்

சென்ற ஒன்பதாம்
ஞாயிறு அன்று மாலே
முதல் 5 மணி வரை
னே வானெலியில் ஒலி
ப்பட்டது நேயர் விருப்
4-55க்கு, ''இறுதியாக
பைத் தேடி என்ற
தில் டி.எம். சௌந்தர
றும் ஜெயலலிதாவும்
யது. இப் பாடலே விரும்
கேட்ட நேயர்கள்..''
எனப் பெயர்களைக் கூறினுர்கள். சில நொடிகள் கழித்து அறிவிப்பாளர், ''எதிர்பாராத காரணத்தால் இப்பாடலே ஒலி பரப்ப இயலாமைக்கு வருந்துகிறேம்'' என அறிவித்தார். குறிப்பிட்ட இசைத் தட்டு கீழே விழுந்து உடைந்து விட்டதா? அல்லது அச்சமயத்தில் கிடைக்க வில்லேயா? நிகழ்ச்சி முடிய ஐந்து நிமிட அவகாசமும் இருந்தது. அதற்குப் பதிலாக வாத்திய இசை ஒலி பரப்பியதற்குக் காரணம் என்ன?



—கு. நடராசன்

களின் வயது, தராதரம் பார்த்துக் கூச்சல் போடு வார்கள்...

மணி மாலையில் வேர்த்து விறுவிறுத்து வந்தான். அவனுடைய முகம் பேயறைந்ததைப் போன்றிருந்தது... அன்பனைப் பற்றி விசாரிப்பான் என்று எதிர்பார்த்த வனிதா அவன் அங்கும் இங்கும் அலைந்து எதையோ தேடுவதைப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

"மோசம் போய் விட்டேன் வனிதா. நீ என்னமோ எச்சரிக்கையுடன்தான் ஒவ்வொன்றையும் சொல்லுகிறாய். சங்கிலியை நான்..."

"சங்கிலியைத் தொலைச்சிட்டீங்களா? ஐயோ! எங்கே அத்தான் போட்டீங்க?" கதறி விட்டாள் வனிதா.

"போன இடம் தெரிந்தால் எடுத்து வந்துவிட மாட்டேனா? எங்கே, எப்போது தவறியது என்று தெரியவில்லையே..."

"ஆபீஸில் பார்த்தீங்களா?"

"ஆபீஸ் மட்டுமல்ல, காலையிலிருந்து எங்கெங்கு போனேனோ அங்கெல்லாம் பார்த்தாகி விட்டது, கிடைக்கவில்லை..."

கையைப் பிசைந்தாள் வனிதா. கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டாள். அவளும் சேர்ந்து வருந்தினால் அவன் மனம் உடைந்து விடுவான். போனதை எண்ணி வருந்தி என்ன பயன்?

"கவலைப் படாதீங்க. காலையிலிருந்து அன்பனுக்கு சுரம். எழுந்திருக்காமல் கிடக்கிறான். இந்த விசனத்தில் நீங்களும் படுத்து விடாதீர்கள்."

"பாவி நான்! பலமாக அடித்து விட்டேன்..." என்றவன் எழுந்து அன்பன் படுத்திருந்த கட்டிலுக்குச் சென்றான். பின்னால் சென்ற வனிதா, "பிள்ளையைப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் போய் டாக்டரைக் கூட்டி வருகிறேன்," என்று கூறியபடி அவனுடைய பதிலுக்குக் கூடக் காத்திராமல் வெளியில் சென்றாள்.

"அன்பா.. என்னடா பண்ணுது?" என்று மணி கண்ணீர் விட்ட அதே சமயம்—

"என்னங்க! சங்கிலி கிடைத்துவிட்டதுங்க!" என்றபடி ஓடி வந்தாள் வனிதா. அவள் கையில் சங்கிலியும், அதைச் சுற்றிய தாளும் இருந்தன!

"எங்கே... எப்படிக் கிடைத்தது!" ஒரே மகிழ்ச்சி.

"நம்ம அன்பனின் விளையாட்டால் தான் நம்முடைய சங்கிலி திருப்பிக் கிடைத்தது!"

"என்ன சொல்கிறாய் நீ?"

"வெளியில் போனேனா? நம்ம தெருவில்தான்...யாரோ ஒருத்தர் இந்தப் பொட்டலத்தைக் காலால் எத்தித் தள்ளினார். பொட்டலம் என் காலடியில் வந்து விழுந்தது... அவர் திரும்பிப் பார்த்தபடி நடந்தார். காலையில் நான் மடித்து நூல் போட்டுக் கட்டிக் கொடுத்த பொட்டலம் என்பதைப் பார்த்ததுமே தெரிந்து கொண்டேன். குனிந்து எடுத்தேன். 'இந்தாம்மா, அந்தப் பொட்டலத்தில் ஒன்றும் இருக்காது, மண், அல்லது கல் இருக்கும். ஏமாந்து விடாதே' என்று சொல்லிக் கொண்டே போய் விட்டார். ஓட்டமாக உள்ளே வந்து பிரித்துப் பார்த்தேன். போன உயிர் வந்து விட்டதுங்க. இவன் மட்டும் அப்படியொரு விளையாட்டு விளையாடாமல் இருந்தால், பொட்டலத்தை எவனாவது கொண்டு போய் இருப்பான் இல்லைங்களா?" சிரித்தாள் வனிதா.

"அட! என் பையிலிருந்து காலையில் தவறி விழுந்த சங்கிலிப் பொட்டலம் இவ்வளவு நேரமாகப் போவோர் வருவோர்க்குக் கால் பந்தாகப் பயன்பட்டிருக்கிறது..." என்று கூறிச் சிரித்த மணி, "இவனைப் போய் அடித்தேனே நான்...பார்த்துக் கொள். டாக்டரைக் கூட்டி வருகிறேன்," என்று கிளம்பினான்.



மாவு ஆட்டும் உரல் வாங்குவதானால் விளிம்பிலிருந்து குழிப் பகுதி சிறிது சரிவாக இருக்கும்படி கல்லை வெட்டச் சொல்லி வாங்கவும். மாவு ஆட்டினால், கையால் அடிக்கடி தள்ளிக் கொண்டிருக்கும் வேலை குறையும்.

—எஸ். ரஷீத் அலி

(தேங்காய் சீனிவாசன் மன்னிக்கவும்)

பாடியவர் :

ஜெயிச்சுட்டே—லாயிட் நீ ஜெயிச்சுட்டே !
இழந்துட்டேன் வாய்ப்பை நான் இழந்துட்டேன்!
உன்னிடத்தில் தோற்றதில்
வெற்றி எனக்கு!
லாயிட்! யார்கிட்டேடா தோற்றேன் ?
சாதாரண பிளேயரிடமா?
உன்னிடத்தில் தோற்றதிலே
வெற்றி எனக்கு—
அதை நீ புரிந்துகொண்டால்
அதில் நன்மை இருக்கு.
லாயிட், ஜெயிச்சுட்டேடா நீ! ஜெயிச்சுட்டே!
ராபர்ட்சின் பந்தைப் பார்த்து
இந்த டீம் பயந்தது
அவன் பந்திலேதான் விக்கெட்டையும் இழந்தது.
அகந்தை பிடித்துக் கொண்டு
ஆடாமல் இருந்தேன்
அதன் விளைவை நீ பாரடா—உன்னை இந்தக்
கலியுகத்தில் வென்றவன் யாரடா?



லாயிட்! உனது ஆட்டக்காரர்களின் நடுவே
நான் ஒருவகை பைத்தியம்!
ஹோல்டருக்கு முன்னால் நான் எம்மாத்திரம்!
ஆறு பந்து போட்டதில் எத்தனை எல்.பி.டபுள்யூ!
நல்ல இரத்தம் உடலில் ஓடி என்ன பயன்?

லாயிட்! ஆடணும் என்று தோணும்
போது சக்தியில்லை
சக்தியிருக்கிறப்போ ஆடமுடியலே!
ஷர்மிளாவின் உருவம் பந்தில் தெரிவதால்
அடிக்க முடியலே!
இதை உணர்ந்த பிளேயர் எல்லாம்
உனது காலடியிலே!

லாயிட்! நான் ஒரு பைத்தியக்காரன்!
நீ ஒரு பெரிய பிளேயர் என்று தெரிந்தும்
நான் ஆடவந்தேனே!
உன்னை நினைக்கும்போதே பயம்
நெஞ்சைப் பிளக்கிறது!
நீ எப்படி என் முன்னே வருவே!
உன்னை அறிந்து கொள்ளாமல்
ஆடவந்தேனடா!
நீ பெரிய காப்டன் என்பதை
அறிந்து கொண்டேனடா!
இனியும் நான் ஆடாமல் இருப்பதற்கு
எடுத்துக்காட்டிய
மன்னவன் நீயே லாயிட்டே! நீ ஜெயிச்சுட்டே!

—நவனீதகிருஷ்ணன்

உமா கல்யாணி



ஜீவாவின் மனம் தான் பரபரத்துக் கொண்டிருந்ததே தவிர செயலில் தேக்கம் தான்.

போவதா... வேண்டாமா?

அழையாத வீட்டில் நுழையலாமா?

அது என்ன அன்னியர் வீடா? அல்லது தூரத்து உடன் பிறந்த உறவில் கல்யாணமா? இரண்டும் இல்லை. உடன் பிறந்த தம்பியின் கல்யாணம். உடன் இருந்து நடத்தி வைக்க வேண்டியவள் ஜீவா. ஆனால் நிலைமை என்ன?

அவள் விலக்கி வைக்கப்பட்டு விட்டாள்.

இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறது. டவுன் பஸ்ஸில் போனால் பதினைந்தே நிமிடத்தில் போய்விடலாம். தம்பியின் திருநாண் பூட்டு விழாவைக் கண் குளிரக் கண்டு மகிழலாம்.

இடுப்பில் வைத்து வளர்த்த தம்பி. அவள் சம்பாதனையில் படித்த தம்பி. ஆனால்... ஆனால்...?

திருமணம் செய்து கொண்டுவிட்டால் தம்பியின் படிப்புக்குத் தடை ஏற்படலாமோ என்று, அந்த ஆசையையே அவித்துக் கொண்டவள் ஜீவா. அவனை உயர்ந்த படிப்புப் படிக்க வைக்க ஓடி ஓடிச் சம்பாதித்தாள். அவன் படிப்பு முடிந்து, தலை நிமிர்ந்த பின் வேண்டுமானால் தானும் ஒரு துணைவரின் நிழலுக்குள் ஒதுங்கலாம் என்று எண்ணியிருந்தாள். ஆனால்...அது நிகழாமலேயே போய்விட்டது.


முறையாக நர்ஸ் பயிற்சி பெற்றிருந்த ஜீவா, முதலில் ஓர் அரசாங்க மருத்துவ மனையில்தான் பணி புரிந்தாள். பிறகு சின்னதாக ஒரு மருத்துவ மனையைத் துவங்கித் தனியாகத் தொழில் நடத்தலானாள்.

ஆரம்பத்தில் சிரமத்துடன் ஓடிய தொழில், நாளடைவில் பெருகி வளரலாயிற்று. தம்பி தெய்வநாயகத்தைப் படிக்க வைத்தாள். படித்தானோ, படித்தானோ அப்படிச் சாவகாசமாக அவன் படித்தான். சுமாரான திறமைதான் அவனுக்குப் படிப்பில்.

அக்கா அவனைக் கட்டாயப் படுத்தப் படுத்த, படிப்பின்மீது ஆர்வத்துக்குப் பதில்



சிதைவு


''பெண்ணை அழைச்சிட்டு வாங்கோ.''
புரோகிதர் கூறினார். தம்பிக்கு வரப் போகிறவளைக்
காணும் ஆவல் துள்ள எட்டிப்
பார்த்தாள் ஜீவா.
தோழியர் சூழ மணப்பெண் வந்து
கொண்டிருந்தாள்.
இவளா?
இவளா? இவளா?

வெறுப்பே அவனுக்கு ஏற்பட்டது.

ஆனால் ஜீவா, தம்பியை எப்படியும் ஒரு பட்டதாரியாக்கி நல்லதொரு வேலையில் அமர்த்தும் வரை சளைப்பதில்லை என்று தீவிரமாக இருந்தாள். "ஏன் அக்கா உயிரை எடுக்கிறே? நான் எக்கேடோ கெட்டுப் போறேன். எனக்கு டீயும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம்," என்று அவள் போட்டுக் கொடுக்கும் டீயைக் கோபத்துடன் பிளாஸ்கிலேயே வைத்து விட்டு அவன் தூங்கின நாட்கள் உண்டு.

"ப்ளீஸ் அக்கா. படிப்பு எனக்கு ஏறலே. ஏதாவது பெட்டிக் கடை வச்சுக் குடுத்துடு. சந்தோஷமா வியாபாரம் செய்யறேன்," என்று கெஞ்சிப் பார்த்திருக்கிறான்.

அவள் உறுதியான புன்னகையுடன் இதைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்லுவாள். "டேய், உனக்காச்சு, எனக்காச்சுடா. எத்தனை வருஷமானாலும் என்ன செலவானாலும், நீ பட்டதாரி ஆகித்தாண்டா தீரணும்."

"ஊரை விட்டு ஓடிட்டால் என்ன பண்ணுவே?"

"துரத்திட்டு வருவேன். காலிலே சங்கிலி போட்டுக் கட்டிப் போடுவேன். கையிலே புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொல்லுவேன்."

பல மார்ச்சுகள், பல செப்டம்பர்கள்.

ஒரு வழியாக அந்த அத்தி மரமும் பூத்தது. தெய்வநாயகம் பி.ஏ. தேறினான். ஹிஸ்டரி பி.ஏ., அதுவும் படையெடுத்த பாஸ் என்றாலும் தன் லட்சியம் நிறைவேறிய திருப்தி அவளுக்கு ஏற்பட்டது. முழுத் திருப்தியல்ல. இன்னும் பாதிக் கிணறு இருக்கிறதே. அவனுக்கு ஒரு நல்ல வேலை தேடி அமர்த்திக் கொடுத்தாள்.

எப்படியோ சிபாரிசு பிடித்து அவனுக்கு விளம்பரக் கம்பெனி ஒன்றில் நல்ல வேலை கிடைத்து விட்டது. வேலை அலவன்ஸ், போனஸ் அது இது என்று நல்ல சம்பளம் கிடைத்தது.

தம்பிக்கு வேலை கிடைத்த மகிழ்ச்சிக்காக, வீட்டில் ஒரு சின்ன விருந்து அளித்தாள் ஜீவா.

மிகவும் வேண்டியவர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர்.

1. சி.பி சிற்றரசு பற்ற
ஒரு சிறு குறிப்பு வரைக.

2. "ரோமாபுரி பாண்டியன்"
நூலை எழுதியது யார்?

3. பெரியார் ஈ.வெ.ரா மறை
தது எந்த ஆண்டு?

4. மதுரையின் முதல் மேயர்
யார்?

5. அண்ணா எந்த ஆண்டு
முதலமைச்சரானார்?

இதெல்லாம் என்ன கேள்வி
கள்? 8-2-75 அன்று நடைபெற்ற தமிழ்

தெய்வநாயகத்தின் மேல் அக்கறை கொண்டிருந்த கல்லூரி புரொபசர் ஸ்ரீராமும் வந்திருந்த விருந்தினர்களில் ஒருத்தர். விருந்துக்குப் பிறகு, "என்னப்பா தெய்வம், உன் ஸிஸ்டர் உன்னைக் கஷ்டப்பட்டு படிக்க வைத்து விட்டாள். கல்யாணமும் செய்து வைத்துவிட்டால் அவள் பொறுப்பு முடிந்தது. இனி உன்



நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷன் எட்டாவது குருப்புக்கான தேர்வுக்..ரிய பொது அறிவு கேள்வித் தாளில் கேட்கப் பட்ட கேள்விக ளில் சில.

—தேர்வு எழுதிய அரக்கோணம் பாண்டிய..

எதில்?

பொறுப்புத்தான்.''


''என் பொறுப்பா?''

''ஆமாம் தெய்வம்,'' என்றவர் தனியே அவனைக் கூட்டிப் போய்ச் சிறிது பேசிக் கொண்டிருந்தார்.

அதன் விளைவாக அக்காவிடம் அவன் மனம்விட்டு விவா

மூக்குக் கண்ணாடியை இன்ன வடிவத்தில் ..ன் அணிவது என்று .விவஸ்தை கிடையாதா?

நம்ம ஊரிலேயும், காலத்துக்கு ஏற்றபடி ..ண்ணெண்ணெய் டின், அரிசி மூட்டை, குழாய் ..தலிய வடிவத்தில் கண்ணாடி அமைக்கலாமே? ..ம்: டிட்பிட்ஸ். —மான்மேனியன்



திக்கத் தொடங்கினான்.

''அக்கா, புரொஃபசர் ராம் இன்று ஒரு விஷயம் சொன்னார். கேள்விப் பட்டிருப்பாயே?'' என்றான் தயக்கத்துடன்.

ஜீவா சிரித்தாள் வறட்சியாக. கண்ணாடியைப் பார்த்தவாறே தம்பியிடம் பேசினாள்.

''தெய்வம், எனக்கு இனிமேல் கல்யாணம் அவ்வளவு பாந்தமாக இருக்காது. என் தலையிலுள்ள நரையை மறைக்க நான் எவ்வளவு கஷ்டப்படுகிறேன் தெரியுமா?''


''அக்கா, என்னைப் பற்றிய கவலையாலேயே நரைத்து விட்டது உனக்கு. இனிமேலாவது சந்தோஷமாயிருக்கக் கூடாதா? எப்போது பார்த்தாலும் டிஸ்பென்ஸரியும் வாசலில் ரிக்ஷாவில் வந்து இறங்கும் நோயாளிகளும், பிரசவப் பெட்டியும் தானா? போதுமக்கா இந்தக் கண்ணராவி வெள்ளை டிரஸ். இனிமேல் நீ பட்டுப் புடவைதான் கட்டிக்கணும். நான் சம்பாதிப்பதே நம் குடும்பத்துக்குப் போதும்.''

கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தை அவள் இன்னமும் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு கேலியாக, ''நீ கொஞ்சம் சீக்கிரம் படித்திருந்தால் எனக்கு இவ்வளவு வயசாகியிருக்காது.'' என்றாள்.

அவனுக்குச் சுருக்கென்றது. ''தப்புத்தான் அக்கா. எனக்காக நீ செய்த தியாகத்துக்கெல்லாம் சிகரமாக, ஆயுசுக்கும் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்கப் போகிறாயா? அக்கா, பிழைக்கிறதுக்கு வழியில்லாத நிலையில் வேணுமானால் நீ பண்ணிட்டிருந்த பாவமான தொழிலை சரின்னு சொல்லலாம். ஆனால் நான்தான் இப்போ நேர்மையான முறையிலேயே சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டேனே..''

அவள் காதில் தீப்பந்தம் செருகுவது போலிருந்தது. ''டேய், கொஞ்சம் வாயடக்கிப் பேசுடா.''

''நீ என்னைச் சொல்லலாம். நான் உன்னைச் சொன்னால் ரோஷம் வந்துட்டுதா? எனக்காக நீ இன்னும் பாவத்தைப் பண்ண வேண்டாம்னு கெஞ்சிக் கேட்டுக்கறேன் அக்கா. நான் ஏன் ஒழுங்காப் பரீட்சையில் பாஸ் ஆகவில்லை



யென்றால் அது கூட என் தப்பாயிருக்காது. நீ எத்தனையோ பேர் வயிற்றை எரிச்சுச் சம்பாதிச்சுக் கொட்டின பணத்தைத் தானே நான் பீஸாகக் கட்டினேன்...''

அவள் கொதித்தாள்.

''வாயை மூடுடா..நன்றி இல்லாத நாயே..''

''நன்றியோடு இருக்கறதுக்காகத்தான் அக்கா உன் கிட்டே இப்படிக் கெஞ்சறேன். ஆத்திரப்படறேன். நான் இந்த வீட்டில் இருக்கணும்னா இரண்டு கண்டிஷன் அக்கா. நம்பர் ஒன்: நீ உன் தொழிலை—அதாவது கோபிச்சுக்காதே, கௌரவமாகச் சொல்றேன்—உன் லேடி டாக்டர் பிராக்டிஸை விட்டுடணும். நம்பர் டூ: நீ கல்யாணம் பண்ணிக் கொள்ளணும். என் புரொஃபசர் ஸ்ரீராம் கூடப் பிரம்மசாரிதான்.''

தம்பி இவ்வளவு பேசிய பிறகு ஜீவா மனமொடிந்து போய் விட்டாள். அவள் பிடிவாதமும் தெய்வநாயகத்தின் வீம்பும் மோதிக்கொண்டதன் விளைவாக, அவன் சொன்னபடியே அவளிடமிருந்து பிரிந்து தனியே போய் விட்டான்.

மதுரை நகரின் இரு கோடிகளில் இரு குடும்பமும் வாழ்ந்தன. எப்போதாவது மீனாட்சியம்மன் கோவிலிலோ, ஜங்ஷனிலோ, தம்பியை எதிர்ப்பட வாய்ப்புக்கள் நேரும். அவள் அவனுடன் பேச விழைந்தாலும் அவன் நிர்த்தாட்சண்யமாக ஒதுங்கி விடுவான்.

இன்று அவனுக்குத் திருமணமாம்.

தம்பியின் மண விழாவாவது பிரிந்த குடும்பத்தை இணைக்காதா என்று சபலப்பட்டுக் கொண்டிருந்த ஜீவாவிற்கு, அவன் இப்படித் தன்னை ஒதுக்கி வைத்தது பெரும் ஏமாற்றத்தை அளித்தது. மண விழாச் செய்தி கூட அவளிடம் பணியாற்றும் ஆயா வந்து சொன்ன பிறகுதான் தெரியும்.

அழைப்பில்லாமல் போனால் வரவேற்பு இல்லை என்பது தெரிந்தாலும்...ஆசை அவளை விடவில்லை. வரவேற்றால் இருப்பது என்றும், வரவேற்கவில்லையானால் மௌனமாகத் திரும்பி விடுவது என்றும் தீர்மானித்துக் கொண்டாள்.

இதன் பிறகு சுறுசுறுப்பு வந்து விட்டது. விரைவில் குளித்துத் தலையையும் வாரிப் பின்னல் போட்டுக் கொண்டு கிளம்பி விட்டாள்.

நாதஸ்வர ஓசை அவளை வீதி முனையிலேயே வரவேற்றது. மனத்தில் பரபரப்புடன் வீட்டை நோக்கி நடந்தாள்.

''வாங்க, வாங்க,'' என்று எவரோ அவளை வரவேற்று, பன்னீர் தெளித்து, மலரும் சந்தனமும் கொடுத்து வரவேற்றார்கள்.

அவளுக்கு உரிமையும் கடமையும் உண்டு வந்தவர்களை இப்படி வரவேற்க. ஆனால்...அவளையே இப்படி மூன்றாவது நபரைப் போல வரவேற்கிறார்கள்.

வேதனை நெஞ்சை நெருட உள்ளே நுழைந்தாள்.

அதோ தெய்வநாயகம்!

மணக் கோலத்தில்...கம்பீரமாக அமர்ந்திருக்கிறான்.

அவனிடம் நேரே செல்வதா, அல்லது இப்படி ஒதுங்கி

நின்று பார்த்துவிட்டுப் போய்விட லாமா என்று எண்ணித் தயங்கினாள். தன்னால் அங்கே குழப்பமோ, ரசா பாசமோ ஏற்பட்டு விடக் கூடாதென் பதில் ஜீவா கவனமாக இருந்தாள்.

தெய்வநாயகம் ஜீவாவைப் பார்த்து விட்டான்.

சட்டென அவன் முகம் கறுத்து இறுகியது. ஜீவா வாடிப் போனாள்.

அழைப்பில்லா விட்டாலும் வந்தவளையாவது வெறுக்காமல் இருந் தால் என்னவாம்? பாசக் கதவு அடைபட்டா போயிற்று?

அவன் முகம் கடுகடுவென்று மாறியது. வந்தான்.

''இப்போ உன்னை இங்கே கூப்பிட்டது யார்?'' என்று கேட்டான்.

எல்லோரின் பார்வையும் அங்கே விழவே, ''சரி...சரி. வந்த மட்டும் சரி. உறவை மட்டும் இங்கே காட்ட வேண்டாம்,'' என்று வெடுக் கென்று கூறிவிட்டுப் போய் விட்டான்.

''பெண்ணை அழைச்சிட்டு வாங்கோ.'' புரோகிதர் கூறினார். தம்பிக்கு வரப் போகிறவளைக் காணும் ஆவல் துள்ள எட்டிப் பார்த்தாள் ஜீவா.

தோழியர் சூழ மணப் பெண் வந்து கொண்டிருந்தாள்.

இவளா?

இவளா? இவளா?

'கடவுளே..இது கூடாது. இவள் என் தம்பி மனைவியாக ஆகக் கூடாது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.'

'ஓ'வென மனம் அலறியது.

உள்ளிருந்து ஒரு குரல் சீறி எழுந்து கேட்டது.

'உனக்கென்ன போகிறது?

அன்று உன் தம்பி உன் னைக் குற்றம் சாட்டியபோது நீ ஏற்றுக் கொள்ள மறுத்தாயே, மறந்துவிட்டதா ஜீவா?'

அவளால் பேச முடியவில்லை.

'உனது தொழில் உன் தம் பியை வந்து நேரடியாகப் பாதிக்கும் போதுதான்... விழிப்பு வருகிறதா ஜீவா?'

அவளால் பேச முடியவில்லை.

'டேய், நான் பீஸுக்காக மட்டும்...அதிகமாய்க் கிடைக்கிற பீஸுக்காக இதைச் செய்யலே. தப்புப் பண்ணுகிற ரெண்டு சாதியிலே ஒண்ணை மட்டும் தண்டிக்க இந்தச் சமுதாயத்துக்கு என்ன உரிமை இருக்குடா? சம்பந்தப்பட்ட ஆணை மட்டும் புனிதமான மணமேடை ஏற விடுகிற சமுதாயம், சம்பந்தப்பட்ட பெண்ணை மட்டும் விலக்கி வைப்பானேன்? தப்பான கர்ப்பத்தை இரகசியமாய் அழிச்சிட்டா அவளை மேடை ஏற்ற இந்தச் சமுதாயம் ஒத்துக் கொள்கிறது. இல்லையா? அதைத்தான் நான் செய்றேன். அறியாமல் கெட்டுப் போன பெண்களோட இரகசியமான கர்ப்பத்தை அழிச்சு அவங்களுக்கு மறுபடியும் ஒரு புது வாழ்வு கிடைக்க வழி பண்றேன். இதை நீ பாவமான தொழில்னு ஏன் சொல்றே? முடியாது. நான் இதை விட முடியாது..'

இப்படித்தான் அன்று அவன் கேட்டபோது வாதிட்டாள். இப் போது...

இரண்டு ஊசி, கொஞ்சம் நூல்...



சேலம் மாவட்ட இந்திரா காங்கிரசின் மூன்று நாள் பயிற்சி முகாம் மேட்டூரை அடுத்த சின்ன தாண்டாவில் நடந்தது.

சிறப்புப் பேச்சாளர்களில் திருமதி கல்யாணி குமாரமங்கலம் குறிப்பிடத்தக்கவர். அவர் முகாமிற்கு வரும் போது பிளாஸ்டிக் உறையில் கம்பளி நூலும், இரண்டு பெரிய ஊசிகளும் கொண்டு வந்தார். பேசி முடித்த பின்னர் உறையில் இருந்த நூலை எடுத்து மூன்று தினங்களும் ஸ்வெட்டர் பின்னிக் கொண்டே இருந்தது எல்லாரது கவனத்தையும் கவர்ந்தது.

—பெஞ்சமின் அப்பாத்துரை

ஜீவா அனைவரையும் விலக்கிக் கொண்டு அவசரமாக மண மேடையை நோக்கி முன்னேறினாள். "நிறுத்துங்கள்! நிறுத்துடா தெய்வம், நிறுத்து! உன் அக்கா சொல்கிறேன். நிறுத்து."

ஸ்தம்பித்தது திருமண வீடு. மணமக்களுக்கு ஆசி கூறி அவர்கள் மேல் தூவுவதற்காகப் பெரியோர்களின் கையில் தயாராக இருந்த அட்சதையும் மலர்களும் திகைத்தன. நாதசுரமும் தவிலும் அதிர்ச்சியால் ஊமையாகின. மின் விசிறி ஒன்றின் துருப் பிடித்த கிரீச் கிரீச் ஓசை மட்டுமே அந்தப் பெரிய திருமண ஹாலில் கேட்டது.

"அக்கா," என்றான் ஆத்திரத்துடன் தெய்வம்.

ஜீவா மணமகளின் கழுத்திலிருந்த மாலையைப் பறித்து அறுத்துப் போட்டாள் வெறி பிடித்தவளைப் போல. "ஏண்டி, உனக்கு என்ன தைரியமிருந்தால்....! கெட் அவுட்... போ வெளியே."

"ஜீவா!" வெடித்தது தெய்வத்தின் குரல். "இவள் என் மனைவி."

"ஆக முடியாதுடா. இவள் என் பேஷண்ட்".

"வாயை மூடு. இவள் தான் என் மனைவி," என்றவன் மணமகளின் தந்தையிடம் மன்னிப்புக் கோரும் குரலில், "ஸாரி ஸார்.. என் ஸிஸ்டருக்கு ஹிஸ்டீரியா அடிக்கடி வருவதுண்டு..அவளை அதனால் தான் கூப்பிடலை....நீங்க ப்ரொஸீ பண்ணுங்க.." என்றான்.

கெட்டி மேளம் ஒலித்தது

அவள் கழுத்தில் தாலியை கட்டினான் தெய்வம்.

'இந்த அம்மா ஏ பைத்தியம் போல முகத்தை மூடி கொண்டு விம்மி விம்மி அழுது?' என்று ரிக்ஷாக்காரன் நினைத்துக் கொண்டான்

ஜீவா பைத்தியம்தான் அவளுக்குப் புரியவில்லை. தம்பிக் நல்லது சொல்லிக் கூட அவன் துக் கொள்ளவில்லையே, எவளோ ஏற்கனவே கெடுக்கப்பட்டுக் கரு சிதைவு செய்து கொண்டவளுக்கு, ஒழு நடத்தை கெட்டவளுக்கு, பிடிவாத மாகத் தாலி கட்டுகிறானே..

ஆனால் அவளுக்குத் தெ யாத இன்னொன்றும் உண்டு. அந் எவனோ ஒருத்தன் அவள் தம்பிதான் என்பது.

கல்யாணத்துக்கு முன்னா காதலியை அவன் தாய்மைக்கு ஆளா வைத்து விட்டான். என்னதான் அவன் வாக்குறுதி கொடுத்தாலும், காத பயந்து போய்க் கருச்சிதைவு செய்து கொண்டு விட்டாள். தன் அக்கா விடமே அவள் அதைச் செய்து கொண்டு விட்டாள் என்பது அவன் அறியாத ஒன்று. மணமேடையில் எல்லோர் எதிரிலும் அந்தரங்கமான தன் விஷயத்தைப் போட்டு அக்கா உடைப்பது அவனுக்குப் பொறுக்க வில்லை என்பதும் அவளுக்குத் தெரியாது.



வருக! வருக!

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுதல் இன்று.



ஊரை விட்டு த் திரும்பி வரும்பொழுது—

மீண்டும் வருக!

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு.

சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்தைச் சேர்ந்த பொம்ம சமுத்திரம் என்னும் கிராமத்திற்குச் சென்றால் ஊரின் முன்னால் இச் கண்ட வரவேற்பு பலகையைக் காணலாம்.



தகவல்:
வரகூர் வேணுகோபாலன்.

சோதனை மேல் சோதனை



ரிடையர்டு சிப்பாய் வடிவேலுவின் வீட்டிற்கு அவரது மூன்றாவது பெண் ராஜாயியை மணப் பெண்ணாக வரிக்கக் கோரிப் போனவர்களில் சிங்காரம் பன்னிரண்டாவது ஆள். வடிவேலுவின் ஆஜானுபாகுவான உடலையும், பயங்கரமாக வளைந்து கிடந்த மீசையையும் பார்த்துப் பயப்படாமல், இடிபோன்ற அந்த மனிதரது குரலைக் கேட்டு நடுங்காமல், அந்த வீட்டில் சம்பந்தம் கொள்வதில் விருப்பம் காட்டியவர்கள் அவர்களில் ஆறு பேர் மட்டுமே. அந்த அறுவரிலும் வடிவேலுவின் நிபந்தனைக்கு முகம் சுளிக்காமல் கட்டுப்பட்டவன் சிங்காரம் ஒருவனே.

சிப்பாய் வடிவேலுவிற்கு வரிசையாக மூன்று பெண்கள். பிள்ளைக் குழந்தை கிடையாது. எனவே, வீர தீரமுள்ள ஒரு மாப்பிள்ளை கிடைக்க வேண்டுமென்று அவர் ஆசைப்பட்டதில் தவறில்லை.

முதல் பெண் பாஞ்சாலியைத் தன் சினேகிதரின் பிள்ளை கோபாலுக்குத் தானே முன் வந்து மணமுடித்து வைத்தார். அவன் அப்பனைப்போல் ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொள்ளும் அளவுக்கு அவன் பெரிய ஸ்போர்ட்ஸ் மன்னாக வருவான் என்று திட நம்பிக்கையும் கொண்டிருந்தார். ஆனால் அவன் வீரம், உடற்பயிற்சிப் பள்ளியில் உடன் படித்த மாணவர்களுடன் போட்டியிடுவதோடு நின்றுவிட்டது. கல்யாணமாகி இரண்டு மாதங்கள் கழித்து ஒரு குமாஸ்தா வேலை தேடிக் கொண்டு மனைவியை அழைத்துக் கொண்டுவிட்டான். இன்றுவரை வடிவேலு அவன் முகத்தில் மீண்டும் விழிக்கவில்லை.

இரண்டாவது மருமகப் பிள்ளை பங்காருசாமி, ராணுவத்திலிருந்து திரும்பிய ஆள். 'அறுபத்தி அஞ்சுலே ஆறுபேரைக் கொன்னேன். எழுபத்தி ஒண்ணிலே எட்டுப் பேர் அவுட்' என்று தன் புராணம் பாடிக் கொண்டிருந்தான். வடிவேலுவின் பெண் பாக்கியமும் அவன் பேச்சில் மயங்கிப் போனாள். வடிவேலு தன் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்தார். ஒரு வாரம் ஆகியிருக்கும். மிலிடரி போலீஸ் தேடிக்கொண்டு வந்து கையோடு அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள். மருமகப்பிள்ளை யுத்த களத்தையே பார்த்ததில்லை என்றும் ராணுவத்தில் ரொட்டி சுட்டுக் கொண்டிருந்தான் என்றும் தகவல் புரிந்தது. அங்கேயிருந்தும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வந்ததால் தேடிக்கொண்டு வந்துவிட்டார்களாம்.

மூன்றாவது பெண் ராஜாயி. ராஜாயி நிஜமாகவே ராஜாத்திபோலத்தான் இருந்தாள்.

இவளையாவது ஓர் அசல் வீரனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும் என்று வடிவேலு ஒரு முடிவுக்கு வந்தார்.

வீரன் என்பதை எப்படிப் பரீசோதிப்பது?

மாப்பிள்ளைப் பையன் பூட்டிக்கிடந்த ஒரு வீட்டில் ஒருநாள் இரவு தனியாகத் தங்க வேண்டும் என்பதே வடிவேலு வைத்த பரீட்சை! நல்ல கட்டில், சுகமான மெத்தை உண்டு. ஆனால் விளக்கு மட்டும் இருக்காது. ஒரே ஓர் இரவு மட்டும்தான்.

ஆனால் ஒருவனும் முன் வரவில்லையே!.. முப்பது வருஷங்களாக மயானத்திற்குப் பக்கத்தில் பூட்டிக் கிடந்த வீட்டை அல்லவா வடிவேலு காட்டுகிறார்?

அந்த வீட்டில் இரட்டைக் கொலை நடந்ததாக ஒருவர் எடுத்துச் சொன்னார். மோகினிப் பிசாசு ஒன்று நட்ட நடு ராத்திரியில் குரல் வளையைப் பிடித்த கதையை இன்னொருவர் விவரித்தார். வெள்ளைப்புடவை கட்டிக்கொண்டு வந்த தலையில்லாத ரத்தக் காட்டேரி நெஞ்சைப் பிளந்து குருதியைக் குடித்த பயங்கரத்தைப் பக்கத்தில் இருந்து பார்த்ததுபோல் பாட்டி ஒருத்தி வர்ணித்தாள். இப்படிப்பட்ட வீட்டில் ஒரு ராத்திரி தங்க வேண்டும்!

பெண் கேட்டு வருபவனுக்கு அன்று இரவு படுக்கப் போகுமுன் நல்ல விருந்து உண்டு. ''காலையிலே நீ உயிரோடு திரும்பறியோ இல்லையோ.. நல்லா அனுபவிச்சுச் சாப்பிடு,'' என்று வடிவேலு சொல்வதைக் கேட்ட பிறகு எந்தத் துணிச்சல்காரனுக்குத் தைரியம் வரும்?

''உன்னை உள்ளே வச்சு வெளிப் பக்கம் இழுத்துப் பூட்டுவேன். காலை ஏழு மணிக்குத்தான் வந்து திறப்பேன்.. என்னதான் நீ தொண்டை கிழியக் கத்தினாலும் யாரும் அந்தப் பக்கம் வரமாட்டார்கள்,'' என்பார் வடிவேலு.

வந்தவர்கள் எழுந்து ஓடுவார்கள்.

ஆரம்பத்தில் ராஜாயிக்கு இது தமாஷாக இருந்தது.

ஆனால்—தபால்கார சிங்காரம் வந்த பிறகு—அவள் மனத்தில் ஒரு சபலம் ஏற்படத் தொடங்கியது. அவன் சைக்கிளில் உந்தி ஏறும் அழகு, தலையின் மேல் சாய்த்து விறைப்பாக வைத்துக் கொள்ளும் அந்தச் சிவப்பு பார்டர் குல்லாய், அரும்பு மீசை, சிரிக்கச் சிரிக்கப் பேசும் பாங்கு ஒவ்வொன்றையும் ரசித்தாள். அவர்களுக்குள் ரகசியமாய்ச் சந்திப்பும் காதலும் கூட முளைத்து விட்டன! தனக்கு ஏற்ற அர்ச்சுனன் இவனே என அவள் முடிவுக்கு வந்த பிறகும் கூட முரட்டுத் தகப்பன் விட்டுத் தரவில்லை. சிங்காரமும் பரீட்சையில் பாஸ் பண்ணத்தான் வேண்டும் என்று கூறிவிட்டான்!





உங்கள் வாழ் நாளில் பயனற்ற பகுதியை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் என்ன மிஞ்சியிருக்கும்? உங்கள் குழந்தைப் பருவத்தைக் கழித்துவிடுங்கள். அதைப் போலவே நீங்கள் தூங்கிய பொழுது; உணர்வற்றே ஓடிவிட்ட நேரம்; நோய்வாய்ப்பட்ட நாட்கள்; பூரண ஆயுளோடு நீங்கள் வாழ்ந்ததாய் வைத்துக் கொண்டாலும் அதில் உபயோகமாய்க் கழித்த காலம் எத்தனை மணியிருக்கும்!

—டாண்டமிஸ்

நீடலேனி ஆடதியில்
குமாரி பிரபா,

அன்று மார்க்கெட்டுக்குப் போய்வரும் வழியில் ராஜாயி சிங்காரத்தைத் தனியாகச் சந்தித்தாள்.

"என்னங்க..நீங்க.." என்று தயக்கத்துடன் ஆரம்பித்தாள் அவள்.

"நீ எதற்கும் பயப்படாதே," என ஆறுதல் சொன்னான் சிங்காரம். "பரீட்சையிலே பஸ்ட் கிளாஸ் வாங்குவேன்!"

"அந்த வீட்டிலே உங்களுக்கு எதினுச்சும்.." ராஜாயி கையைப் பிசைந்தாள்.

"உசிரே போகட்டும், ராஜாயி..கவலையில்லை..ஒண்ணு, அங்கே ஜெயிச்சு ஊர்வலமா வந்து உன் கழுத்திலே தாலி கட்டறேன். இல்லேன்னு நாலு பேர் என்னை ஊர்வலமா.."

"ஐயையோ. அப்படி எல்லாம் சொல்லாதீங்க.." என அவன் வாயைப் பொத்தினுன் ராஜாயி.

வெள்ளிக்கிழமை இரவு சிங்காரத்திற்குப் பலமான விருந்து.

"இன்னும் கொஞ்சம்...இன்னும் கொஞ்சம்!" என உபசரித்தார் வடிவேலு.

உணவு முடிந்த பிறகு எல்லோரும் அவனைக் கொண்டு போய் 'அந்த' வீட்டில் விட்டார்கள். முறுக்குத் தொய்யாத கயிற்றுக் கட்டிலும், மெத்தையும் தயாராக இருந்தன. குடிக்கத் தண்ணீர் பக்கத்தில் இருந்தது. சிங்காரத்தின் கையில் ஒரு தீப்பெட்டிகூடக் கிடையாது.

அவனை உள்ளே வைத்துப் பூட்டும்போது மணி ஒன்பது. பக்கத்தில் எங்கோ ஆந்தை அலறியது. தூரத்திலிருந்து நரி ஊளையிடும் ஒலி கேட்டது. அடுத்த அறையில் வெளவால்கள் சத்தமிட்டபடி பறந்தன.

அன்று இரவு ராஜாயி கண் கொட்டவில்லை. ஒவ்வொரு தெய்வத்திற்கும் படையல் வைப்பதாக வேண்டிக் கொண்டாள்.

வடிவேலுவும் சற்றுக் கவலைப் பட்டார். 'பையன் தைரியசாலிதான். இவ்வளவு தூரம் துணிந்து உள்ளே போக நல்ல நெஞ்சுரம் தேவை.. ஆமாம், மெய்யாகவே அங்கே பேய் இருந்து அவனை அடித்துப் போட்டால்!..போலீஸ் நம்மைச் சும்மா விடுமா? இன்று உடனிருந்து ஒத்துப் பாடிய இதே ஊர் நாளைக்குக் கல்லை எடுத்து எறியுமே?'

காலை ஐந்து மணிக்கே புறப் பட்டுவிட்டார் வடிவேலு. ஊர்ப் பெரிய மனிதர்கள் இருவர் உடன் வரப் பாழடைந்த வீட்டுப் பக்கம் விரைந்தான்.

சற்றுப் பின்னால் ராஜாயியும் வேகமாக வந்தாள்--தெருக் கோடிப் பெருமாள், ஊர்க் கோடி அங்காளம்மன், மயானக்கரைப் பிள்ளையார் ஆகியவர்களிடம் கன்னத்தில் போட்டுக் கொண்டவாறு.

பூட்டைத் திறந்தவர்கள் மெதுவாக உள்ளே போய்ப் பார்த்தார்கள். கையையும் காலையும் அகட்டிப் போட்டபடி குப்புறப் படுத்துக் கொண்டிருந்தான் சிங்காரம்.

பதற்றத்துடன் ஓடிய வடிவேலு சிங்காரத்தை அவசரம் அவசரமாகத் திருப்பினான். நல்ல வேளை, மூச்சு இருந்தது. ஆழ்ந்த உறக்கம். தட்டி எழுப்பினார்கள்.

கண்களைக் கசக்கிக் கொண்டு எல்லோரையும் மலங்க மலங்கப் பார்த்தான். சிங்காரம்.

"என்ன? அதற்குள் விடிந்து விட்டதா?" என்று அவன் பதட்டமில்லாமல் கேட்டான்.

அத்தனை பேரும் அப்படியே அசந்து போனார்கள்!

சிங்காரம்–ராஜாயி கல்யாணத்திற்கு ஊரே திரண்டது. அவன் துணிச்சலாகச் செய்த காரியத்தை எல்லோரும் பெரிதாகப் பேசினார்கள்.

முதலிரவு.

ராஜாயியும் சிங்காரமும் தனியாக இருந்தார்கள்.

"மணி பன்னிரெண்டு... தூக்கம் வரலையா?"—அவள் கேட்டாள்.

"தூக்கமா? எனக்கா?.." சிரித்தான் சிங்காரம். "எனக்குச் சாதாரணமா உறக்கமே வராது.. மாத்திரை போட்டுக்கிட்டாத்தான் தூங்க முடியும்," என்றான்.

"இன்னைக்குப் போட்டுக்கினியா?" என்று கேட்டாள் அவள் வெகுளியாக.

"எந்தப் பைத்தியக்காரன் இன்னிக்குப் போட்டுப்பான்?" எனக் சிங்காரம் அவளைத் தன்னிடம் இழுத்துக் கொண்டான்.

ராஜாயிக்கு ஒரு சந்தேகம். "அப்படியானால் – அன்னிக்கு. .பாழடைந்த வீட்டுக்குப் போனபோது.."

"ஒன்றுக்கு இரண்டு மாத்திரையா முழுங்கி வைச்சேன். அவுங்க கதவைப் பூட்டிக்கிட்டுப் புறப்படறத்துக்குள்ளே நான் தூங்க ஆரம்பிச்சுட்டேனே!" என்றான்.

பாவம், வடிவேலு! தான் மூன்றாவது முறையும் ஏமாந்தது அவருக்குத் தெரியாது!


சமீபத்தில் பம்பாயில் ஒரு விலை உயர்ந்த பூனையின் உரிமையைப் பற்றி இருவர் தொடுத்த வழக்கில் நீதிபதி இவ்வாறு உத்திரவிட்டார்.

"பூனையை ஒரு சாக்கில் போட்டு, உடனே அவிழ்த்துவிட வேண்டும். வாதியும் பிரதிவாதியும் இரண்டு பக்கங்களில் நிற்க வேண்டும். பூனை யார் பக்கம் தாவுகிறதோ, அவர்தான் உண்மையான சொந்தக்காரர்."

பூனை நகைச்சுவை உள்ளது போலும். அவிழ்த்து விட்டதும் நேராகக் கதவு வழியே வெளியே ஓடிவிட்டது.

(ஆதாரம்: டைம்ஸ் ஆப் இந்தியா)

—'செம்பா'





சுந்தரம்: ஜுபிடர் விரல் என்பது ஆள்காட்டி விரல். நமது பிரதமரின் விரல் அடிப்பாகத்தில் உள்ள ஜுபிடர் மேட்டிலும் விரலிலும் விசேஷமான நட்சத்திரக் குறிகள் உண்டு. எந்தக் கூட்டத்தில் பேசினாலும் அவருடைய அந்த விரலுக்கு ஒரு சக்தி உண்டு.

ராதாகிருஷ்ணன்: அரசியல் ரீதியாக இந்திரா காந்திக்கு முன்னைவிட எதிர்ப்பு அதிகம் இருப்பதாகத் தெரிகிறதே, ஏன்?

சு: ஒரு ஜனநாயக நாட்டில் அந்த மாதிரி எதிர்ப்புகள் இருப்பது நியாயம்தானே? இவ்வளவு கஷ்டங்கள் வந்தபோதிலும், ஒரு பெண்மணி மனம் தளராமல் ஆட்சிப் பொறுப்பைச் சமாளிப்பது என்பது வேறு எவராலும் முடியாது. மூன்று, நான்கு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். பாகிஸ்தானோடு சண்டை வந்தது, பங்களா தேஷ் விவகாரம், இயற்கையின் விளைவால் அநேக இடங்களில் மழையில்லாமல் விளைச்சல் பாதிக்கப்பட்டது. ஒரு தேசத்தை ஆளுகிற பெண்மணி என்கிற முறையில், அவருடைய நிதானத்தினாலும் மனப்போக்கினாலும் தான் இதைவிட ஒரு மோசமான நிலைமையை நாம் அடையாமல் இருக்கிறோம். இந்த அளவுக்காவது நாம் சந்தோஷமாக இருப்பதற்கு அவர்களுடைய சாமர்த்தியமான ஆட்சித் திறன் தான் காரணம் என்பது என் அபிப்பிராயம்.

ரா: இலங்கையில் அரசியல்வாதிகள் யாருக்கேனும் கை பார்த்திருக்கிறீர்களா?

சு: அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த குணதிலகா அவர்களுக்கும் கை பார்த்தேன். பெரும் மழையால் சிலோன் பாதிக்கப்படும் என்றும் சிங்களவருக்கும் இலங்கைத் தமிழருக்கும் ஒரு கலகம் மூளுமென்றும் கூறியிருந்தேன். இரண்டும் அங்கு நான் இருந்த போதே நடைபெற்றன. குணதிலகாவே ஒரு கூட்டத்தில் என்னை அறிமுகப்படுத்தி, 'இந்தியாவிலிருந்து வந்திருக்கும் கைரேகை ஜோதிட நிபுணர் கூறிய இரண்டு விஷயங்களும் பலித்து விட்டன' என்று கூறினார். மூன்றாவது சங்கதிதான் பெரிய அதிர்ச்சியைத் தரும் நிகழ்ச்சியாக அமைந்து விட்டது. பண்டாரநாயகா அவர்களின் உயிருக்கே 1959 செப்டம்பர் 25'ம் தேதி ஆபத்து வரக் கூடும் என்று நான் கை பார்த்துச் சொல்லி, அதன் பிரகாரம் டைப் அடித்து எழுதியும் கொடுத்திருந்தேன். அதன்படியே பண்டாரநாயகாவைச் சுட்டு விட்டார்கள்.

ரா: நீங்கள் அங்கேயே இருந்தது ஆபத்தாக முடிந்திருக்குமே? வேறு ஏதாவது உளவு தெரிந்து தான் அப்படி நேர்ந்து விட்டதோ என்று சந்தேகம் ஏற்பட்டிருக்குமே?

சு: பண்டாரநாயகாவின் கை பார்த்த விஷயத்தை முன் கூட்டியே எழுதிக் கொடுத்து விட்டதை அவர்கள் 'ரிகார்ட்' செய்து வைத்திருந்தார்களே? குணதிலகாவே என்னைக் கூப்பிட்டு நீங்கள் சொன்ன படியே இந்த மாதிரி ஒரு துயரச்



இல்லை

முரளி

"சோத்து வாசலாம் சோத்து வாசல்! பேர் வைச்சாங்க பார் ஊருக்கு. பொணத்துக்கு ரதிதேவின்னு பேர் வைக்கற மாதிரி!" பொருமினான் கரிய மாணிக்கம்.

பேரன் பேத்திகளின் கந்தல் துணிகளை மூட்டை கட்டிக்கொண்டிருந்த கருப்பாயிக் கிழவி— அவன் தாயார்—"மாணிக்கம், பெத்த தாயை வேணுமானாலும் திட்டு. பொறந்த ஊரை மட்டும் தப்பாப் பேசாதேடா. உன் அப்பனுக்கும் பாட்டனுக்கும் முப்பாட்டனுக்கும் கொட்டிக் கொடுத்த மண்ணுடா இது!" என்றாள்.

"ஆமாம், அந்தப் பழங் கதையையே பேசிக்கிட்டிருங்க!" என்று அலுத்துக் கொண்டான் கரிய மாணிக்கம். "தள்ளாமையாய்ப் போச்சு. வீட்டுக்குள்ளேயே இருக்கிறீங்க. வெளியே போய்ப் பார்த்தீங்கன்னா தெரியும், உங்க ஊர் இருக்கிற லட்சணம்!"

கருப்பாயி சோகத்துடன் சிரித்தாள். "ஏன் தம்பி, மூட்டை மூட்டையா நெல்லு கொண்டு வந்திட்டிருந்த வரை உன் ஊர். ரெண்டு வருசம் மழை பொய்ச்சுப் போயிட்டா என் ஊரா?"

ஒரு கையில் துருப்பிடித்த டிரங்குப் பெட்டியும் இன்னொரு கையில் குமட்டி அடுப்புமாக உள்ளேயிருந்து வந்தாள் கண்ணுத்தா. மாமியாரிடம், கூறினாள்: "ஏம்மா, அவரோட பேசிக்கிட்டு? ஓரோர் ஆம்பிள்ளை எந்தச் சீமைக்கெல்லாமோ போய்ச் சம்பாதிச்சு, புள்ளை குட்டிகளுக்குப் பணம் அனுப்பறாங்க. இவர் என்னடான்னா, இருக்கிற ஆடு மாடுங்களை வித்து வயித்தை நிரப்பிக்கலாமேன்னு கணக்குப் போடறார். எத்தனை நாளைக்கு விற்க முடியும்? என்ன ஆச்சு? நிலத்தை விட்டு, வீட்டை விட்டு, ஊரை விட்டு, பஞ்சம் பொழைக்கத் தஞ்சாவூருக்குப் போலாமா, மதுரைக்குப் போலாமான்னு ஆயிட்டுது நிலைமை!"

கரியமாணிக்கம் மனைவியின் பக்கம் கோபமாகத் திரும்பினான். "இதோ பார், நீ சும்மா சும்மா அந்த அய்யாத்துரை விசயத்தைப் பேசி என் ஆத்திரத்தைக் கிளப்பாதே. லெச்சிமியை வித்தது முட்டாத்தனம்னு நான்தான் தெனம் தலையிலே போட்டுக்கிறேனே? அந்த அய்யாத்துரை திருட்டுப் பயல் நான் ஏமாந்த சமயம் பார்த்து எழுநூத்தைம்பது ரூபாய் மாட்டை முன்னூறுக்குத் தட்டிட்டான். ஒருநாள் இல்லாட்டி ஒரு நாள்..."

"சரி,சரி. கிளம்புங்க. எலே ராசு, சின்னி, மன்னாரு!" என்று கண்ணுத்தா குரல் கொடுத்தாள். ஒட்டிப் போன வயிறும் பரட்டைத் தலையுமாய் எங்கோ அண்டை அசலில் திரிந்து கொண்டிருந்த குழந்தைகள் ஓடிவந்தன. பசி ஒரு பக்கம் இருந்தாலும் வெளியூர் போகிறோம் என்ற குதூகலம்

அவைகளுக்கு. ''கிளம்பியாச்சாம்மா?'' என்று ஆர்வமாகப் பரபரத்தார்கள்.

''ஏம்மா, பஸ் ஸ்டாண்டு வரையிலே நடப்பீங்க இல்லே? தஞ்சாவூர் பஸ் கிடைச்சாலும் சரி, பரமக்குடி பஸ் கிடைச்சாலும் சரி, ஏறிக்கலாம்,'' என்றான் தாயிடம் கரியமாணிக்கம்.

''இந்தச் சீமை பூராவையே சுத்தினவள்தாண்டா நான். நடக்கிறேனா இல்லையா பாரேன்,'' என்று சவால் விட்ட கிழவி, மூலையில் சாத்தியிருந்த கோலை எடுத்துக் கொண்டாள். பேரனின் கையைப் பிடித்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள். தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்துவந்த இடத்தைக் காலி செய்கிறோமே என்கிற துக்கம் பொங்கிவந்த போதிலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ''தாயி மகமாயி ஒருநாளும் நம்மைக் கைவிட மாட்டாள். அடுத்த வருசம் இதே நாளிலே, இதே வீட்டிலே என் மகனும் மருமகளும் பேரக் குழந்தைங்களும் விளக்கேத்தி வாழத்தான் போறாங்க. இந்தக் கிழவியும் அதைக் கண்ணாலே பார்க்கத்தான் போறேன்!'' என்று அவள் வாய்விட்டுச் சூளுரைத்தாள்.

ஒரு மண்வெட்டியும் கடப்பாரையும் மட்டும்தான் கரியமாணிக்கம் எடுத்துக்கொண்டான். மிஞ்சியிருந்ததும் அவ்வளவுதான். ஏர், கலப்பை, அரிவாள் எல்லாம் நாலைந்து மாதத்துக்கு முன்பே விற்றாயிற்று. வீட்டைப் பூட்டவே தேவையிருக்கவில்லை.

''ஏன் தம்பி, லாடக்கார சோமு இங்கே இருந்தானே, இப்ப இல்லியா? அட, வெள்ளச்சாமி வீடு கூடப் பூட்டிக் கிடக்குதே? திருவாட்டி உடையான் என்ன ஆனான்?'' என்று கிழவி பாவம் புலம்பிக் கொண்டே வந்தாள்.

''புத்திசாலிங்க எல்லாம் முன்னேயே போயிட்டாங்க அம்மா.''

கிராமத்தைச் சுற்றியிருந்த மூன்று கண்மாய்களும் வரண்டுவிட்டதால், விளைச்சல் நிலம் வெடித்துக் கிடந்தது. இரண்டு இளவயதுப் பெண்கள் தலையிலே ஒன்றும் இடுப்பிலே ஒன்றுமாய்ப் பானைகளைத் தூக்கிக்கொண்டு தள்ளாடி வந்து கொண்டிருந்தார்கள். கிழவி அவர்களை அடையாளம் கண்டு கொண்டு ''சேர்வையோட பெண்ணில்லே நீங்க?'' என்றாள்.

''ஆமாம் பாட்டி.''



வயதானவர்கள் வயது ஆகாதது மாதிரி நடிக்க விரும்புகிறார்கள். இளவயதுக்காரர்களோ வயதான மாதிரி நடிக்க ஆசைப்படுகிறார்கள்.

அட்டையில்: குமாரி கே. ஆர். உமா

வண்ணப்படம்: உத்ரா

''தண்ணியா கொண்டுக்கிட்டு வர்றீங்க? எங்கே கிடைச்சது?''

''மாவட்டி ஊருணியிலே உரைகிணறு போட்டிருக்காங்க பாட்டி.''

அந்தப் பெண்களில் ஒருத்தி பானையைக் கீழே இறக்கினாள். ''நாலு மைல் போய்க் கொண்டு வர்றோமே யொழிய, தண்ணியைப் பாருங்க, சேறும் சகதியுமா சுரண்டிக்கிட்டு வர்றோம். இந்தத் தண்ணி ஊறி வர்றதுக்காக இரண்டு மணி நேரம் காத்திட்டிருந்தோம். இந்த லச்சணத்திலே கிணத்துக்கு முள்ளு வேலி போட்டுக்கிட்டிருக்காங்க. அசலார் வரக்கூடாதாம்!''

கிழவி ஒரு கை தண்ணீரை எடுத்துப் பார்த்து, மறுபடி பானைக்குள்ளேயே ஊற்றிவிட்டு, ''தேத்தாம் கொட்டை போட்டு வை. கொஞ்சம் தெளிஞ்சாப்பலே ஆகும். பொழுது சாயற முன்னாலே வூட்டுக்குப் போம்மா கண்ணு. காலம் கெட்டுக் கிடக்கு,'' என்றாள்.

தொலைவில் பஸ் ஸ்டாப் தெரிந்தது.

(தொடரும்)


தையாக..


இல்லை
இல்லை
இல்லை
இல்லை
இல்லை

"ஹை! அதோர் பஸ்!" என்று குதித்தார்கள் குழந்தைகள்.

பஸ்ஸின் உருவமே தெரியவில்லை. அப்படியொரு கூட்டம் பஸ்ஸைச் சுற்றிலும். எல்லார் தலையிலும் மூட்டை முடிச்சுக்கள். ஜன்னல் கம்பி வழியாகவே உள்ளே குதிக்க முயன்றுர்கள் சிலர். உள்ளேயிருப்பவர்கள் அவர்களை வெளியே தள்ளினர்கள். பஸ் ஸ்டாண்ட் கூட்டத்தில் பலர் கரிய மாணிக்கத்துக்குத் தெரிந்தவர்கள். சிலர் கண்ணுத்தாவுக்கு உறவுகூட. எல்லாருமே பஞ்சம் பிழைக்கப் புறப்பட்டுவிட்டவர்கள்தான். ஆனால் ஊரிலே திருவிழா, அதற்குப் போகிறேன், மச்சான் கல்யாணத்துக்குச் செல்கிறேன் என்று அறிந்தே பொய் சொன்னுர்கள். பாழும் கௌரவம்!

லுங்கி கட்டிய ஆள் ஒருவன், கரியமாணிக்கத்தை நெருங்கி, "தஞ்சாவூருக்கு டிக்கெட் வாங்கித் தர்றேன். பத்து ரூபாய் கூடப் போட்டுத் தர்றியா? இல்லாட்டி இன்னும் எட்டு நாள் இங்கே நின்னுலும் பஸ் கிடைக்காது," என்றுன்.

பத்து ரூபாயா! அவ்வளவு பணம் கையிலே இருந்தால், கிராமத்தை விட்டே புறப்பட்டிருக்க வேண்டாமே? அந்த அய்யாத்துரை மாதிரி உள்ளூரிலேயே கொட்டி முழக்கிக்கொண்டு இருந்திருக்கலாமே? கண்ணுத்தா பல்லைக் கடித்துக் கொண்டாள்.

பஸ் ஸ்டாப்புக்குப் பக்கத்து வீடுதான், கரியமாணிக்கத்தின் மாட்டை வாங்கிய அய்யாத்துரையினுடையது. கதவு சாத்தியிருந்தது. வாசலில் யாரும் இல்லை. "தூத்தெறி...ராஸ்கோல்!" என்று வீட்டு வாசலில் காறித் துப்பினுன் கரியமாணிக்கம்.

"தொரையும் தொரைசானியும் மலையாளத்துக்குப் போயிருக்காங்களாம். சொன்னுங்க. நம்மைப்போல எத்தனை பேரை ஏமாற்றி ஆடு மாடு வாங்கியிருக்கிறன்? கொள்ளை விலைக்கு அங்கே விற்கலாமில்லே? அதான் போயிருக்காங்க!" என்று சொல்லிவிட்டு, தன் பங்குக்கும் ஆத்திரம் காட்டினுள் கண்ணுத்தா.

குழந்தைகள் மூன்று பேருக்கும் புரியவில்லை. இருந்தாலும், அப்பா அம்மாவுக்கு அந்த வீட்டாரைப் பிடிக்கவில்லை என்பதை அறிந்து கொண்டதால், ஆளுக்கொரு சிறு கல்லை எடுத்து அந்த வீட்டின்மீது எறிந்துவிட்டு நடந்தார்கள்.

கிழவிக்குப் பொறுக்கவில்லை. "தம்பி, நீயும் சரி, கண்ணுத்தா, நீயும் சரி, இப்படி நன்றியில்லாமே பேசக்கூடாது. லெச்சுமி நல்ல உசத்தி மாடுதான். நீ உயிராத்தான் வளர்த்திட்டு வந்தே. ஆனல், அதை அய்யாத்துரை திருடிக்கிட்டா கொண்டு போனுன்? நீ தூங்கிட்டு இருக்கிற வேளையிலே அவிழ்த்து ஓட்டிக்கிட்டா போனுன்? விலை பேசி, கையிலே ரொக்கம் கொடுத்து இல்லே வாங்கிட்டுப் போனுன்? சம்மதிச்சுத்தானே கொடுத்தே? இப்ப ஏன் ஆத்திரப்பட நீங்க ரெண்டு பேரும்?"

மகனும் மருமகளும் கிழவியின் கோபத்துக்கு அஞ்சிப் பேசாமலிருந்தார்கள்.

"அதுவும் எப்படிப்பட்ட சமயத்திலே உனக்காக மாட்டை வாங்கிக்கிட்டுப் பணம் கொடுத்தான்? மறந்திட்டியா?" என்று கிழவி மேலும் கடிந்து கொண்டாள்.

கரியமாணிக்கத்துக்கு நன்ருய் நினைவிருக்கிறது.

இரண்டாவது வருஷமாக அவனுடைய நிலம் பொய்த்துப் போய் விட்டது. ஐப்பசி மாதத்தில் ஒரே ஒரு நாள் பெய்த மழையை நம்பிக்கொண்டு அவனுடைய கிராமத்தார் பலர் ஏமாந்தது போல அவனும் ஏமாந்து, இருந்த விதை நெல்லைச் செலவழித்து நாற்றுப் பாவி விட்டான். அதன் பிறகு ஒரு நாள்கூட வானம் கறுக்கவில்லை. கிணறுகளை எவ்வளவு தோண்ட முடியுமோ அத்தனையும் ஆயிற்று. பம்ப் செட் போட்டால், தீய்ந்து கொண்டிருக்கும் பயிரைக் கொஞ்சம் காப்பாற்றலாம் என்று சிலர் சொன்னுர்கள். அதுவும் லேசில் வாடகைக்குக் கிடைக்கவில்லை. இரண்டு மணி நேரத்துக்கு நூறு ரூபாய் கேட்டார்கள். விளைச்சலில் பாதி தருகிருயா என்றுர்கள். வைக்கோலிலும் பாதி கொடுக்க வேண்டும் என்று கெடுபிடி பண்ணினர்கள். பம்ப் செட் பேரம் பண்ணி முடிப்பதற்குள், ஒருநாள் இரவோடு இரவாக எவனே

அந்தக் காய்ந்த கதிரையும் அறுத்துக் கொண்டு போய்விட்டான் மாட்டுக்குத் தீவனம் போட.

வீட்டிலே மனிதர்கள் பட்ட பட்டினியைக் காட்டிலும், தொழுவத்திலேயிருந்தவாறு அந்த லெச்சுமி 'ம்மா! ம்மா' என்று கொடுத்த அவலக் குரல்தான் வயிற்றைப் பிசைந்தெடுத்தது. ஒரு நாள் பச்சைப் பனையோலையை எங்கிருந்தோ வெட்டிக்கொண்டு வந்து போட்டான். அதைக் காய வைத்துப் போட்டிருக்க வேண்டுமாம். மாட்டுக்கும் பசி. அவனுக்கும் தெரியாது. விளைவு! மூன்று நாள் போலச் சோர்ந்து படுத்துவிட்டது.

"வாயில்லா ஜீவனை ஏம்பா வதைக்கிறே? யாரும் கேட்டாங்கண்ணு கொடுத்திடு," என்று கிழவிதான் சொன்னாள். கரியமாணிக்கத்துக்கு அரை மனசு. கண்ணுத்தாவுக்கோ அதைப் பிரியக் கடுகத்தனையும் சம்மதமில்லை. ஆனால் நாளாக ஆக நிலைமை மோசமாகவே, விற்கத் தீர்மானித்தார்கள். பழைய சிநேகிதனான அய்யாத்துரை அதை வாங்க முன்வந்தான். கரியமாணிக்கத்துக்கு ரொம்பக் கோபம். 'கையில் பணம் வைத்திருப்பவன் சும்மாவோ கடனாகவோ தரக்கூடாதா?



"எதற்கு உங்க கட்டை விரலில் வேப்பெண்ணெயைக் கொட்டிக் கொள்கிறீர்கள்?"

'குழந்தைக்கு விரல் சப்புக் கொட்டுகிற பழக்கத்தை நிறுத்த வேண்டாமா?"

மாட்டை விலைக்கு வாங்கிக் கொண்டு தான் தர வேண்டுமா?' என்று மனைவியிடம் சொல்லிச் சொல்லிப் பொருமினான். அதற்கேற்றாற்போல், அய்யாத்துரை முன்னூறு ரூபாய் கொடுத்து வாங்கிச் சென்ற பிறகு, 'அடடா! என் கிட்டே சொல்லக்கூடாதோ? நான் முன்னூத்தைம்பது கொடுத்திருப்பேனே?' என்று பஞ்சாயத்து ஆபீஸ் அருணகிரி சொன்னார். மெய்யாக அந்த விலைக்குப் போயிருக்குமோ போயிருக்காதோ, அய்யாத்துரை தங்களை ஏமாற்றி விட்டானென்று கரியமாணிக்கமும் கண்ணுத்தாவும் முடிவு கட்டிவிட்டார்கள்.

"என்னதான் சொல்லுங்க. லெச்சுமி வீட்டோடே இருந்தவரையிலே இத்தனை கஷ்டம் ஏற்படவில்லை," என்றாள் கண்ணுத்தா.

கருப்பாயி குறுக்கிட்டாள்!

"இந்தக் கிழவி வீட்டுக்குள்ளே அடைஞ்சு கிடக்கிறா, இதுக்கு என்ன தெரியும்னு நினைக்கிறீங்க ரெண்டு பேரும், நான் விசாரிச்சுக்கிட்டேதான் இருக்கேன்," என்றாள் அவள். "கமுதி சந்தையிலே ஆயிரம் ரூபாய் இரண்டாயிரம் ரூபாய் மாடெல்லாம் இருநூறு ரூபாய்க்குப் போக மாட்டேங்குதாம், தெரியுமா? 'வைக்கக் கட்டு எட்டு ரூபாய் விக்குது. யாருக்கு வேணும் மாடு?' அப்படிங்கறாங்களாம். வாங்கறவனும் அடிமாட்டுக்குத்தான் ஓட்டிக்கிட்டுப் போறாங்களாம். அய்யாத்துரை லெச்சுமியை வாங்கிட்டுப் போகாமல் இருந்தால், இன்னும் குறைச்சல் விலைக்குக் கசாப்புக் கடைக்கு வித்திட்டு, அந்தப் பாவத்தை வேறே கட்டிக்கணும்!"

"என்ன சொல்றீங்க? பத்து ரூபாய் அதிகமாப் போட்டுத் தர்றீங்களா? தஞ்சாவூர் டிக்கெட் இப்பவே வாங்கித் தர்றேன்," என்று மீண்டும் கேட்டான் லுங்கிக்காரன்.

கருப்பாயிக் கிழவி சொன்னாள் "தம்பி, நான் சொல்றேன் கேள். பஸ்ஸும் வேணும், மோட்டாரும் வேணும். இப்படி நடையிலேயே ஊர் ஊராய்த் தங்கி, தஞ்சாவூருக்குப் போயிடலாம். போற வழியிலே பொழப்புக்கும் ஏதாவது கிடைக்கும்."

கரியமாணிக்கத்துக்கு அது தேவலை என்றுதான் தோன்றியது.

லேட்..

ராமேஸ்வரர் தேவஸ்தானக் கல்லூரியில் ஆசிரியர்கள் யாரும் காலம் தாமதித்து வருவதில்லை. கல்லூரி முதல்வர் இது குறித்து நேரடியாகக் கண்டிப்புச் செய்யாத போதும் அவர்கள் நேரம் தவறாமல் வருகிறார்கள். காரணம், தினசரி கையெழுத்திடும் வருகைப் பதிவேட்டின்மீது 'பேப்பர் வெயிட்'க்குப் பதிலாக, தமது சொந்த டைம்பீஸ் அலாரத்தை வைத்துள்ளார். கடியாரத்தை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டுதான் கையெழுத்திட வேண்டியிருக்கும். தாமதமாக வருகிறவர், அதற்குரிய காரணத்தைத் தாமாகவே சொல்லும்படி நேரிடுகிறது.

—தி. ரா. தாமோதரன்

"உங்களாலே நடக்க முடியுமா?" என்று சந்தேகப்பட்டான்.

"நீங்க நடங்க. நான் பின்னாலேயே வர்றேனா இல்லியா பார்," என்றாள் தாய்.

ஒன்பதாவது மைலில் இருந்த நெய்யூர் கிராமத்தை அவர்கள் அடைந்தபோது இரவு பத்துக்கு மேல் ஆகிவிட்டது. பெரிய குழந்தைகள் இருவரும் தோளிலேயே தூங்கி விட்டார்கள் களைப்புடன். கடைசிக் குழந்தை, "தண்ணி வேணும்மா," என்று நச்சரித்துக் கொண்டிருந்தது.

மாரியம்மன் திடலில் அந்த நேரத்திலும் நல்ல கூட்டம். பஞ்சம் பிழைக்கப் புறப்பட்ட பல குடும்பங்கள் அங்கே முகாமடித்திருந்தன. திருவிழாக் கூட்டங்களில் அங்கங்கே அடுப்புப் புகைகிறமாதிரி இங்கேயும் ஒரே புகை மூட்டம்தான். ஆனால் திருவிழாவின் கும்மாளத்தைத்தான் காணோம். மயானத்தில் பிசாசு நடமாடுகிறமாதிரி ஓசையில்லாமல் அவர்கள் என்னவோ எரித்துக் கொண்டிருந்தார்கள் கும்பல் கும்பலாய். கிட்டே நெருங்கிப் பார்த்த பிறகுதான் கருவேலங் கரி தயாரிக்கிறார்கள் என்று தெரிந்தது. சுள்ளிகளைப் பொறுக்கி எடுத்து வந்து கரி மூட்டம் போட்டுவிட்டு, பக்கத்திலேயே காவல் உட்கார்ந்திருந்தார்கள்.

கலயத்தில் தண்ணீருடன் உட்கார்ந்திருந்த ஒரு பெண்ணிடம் கண்ணாத்தா, "தங்கச்சி, கொஞ்சம் தண்ணி கொடேன். குழந்தை தவிக்குது," என்றாள்.

"ஏம்மா வயித்தெரிச்சல்! கருவேலமுள் எரிஞ்சதும் பக்குவம் பார்த்து அணைக்கணுமில்லே? அதுக்காக நானே தாகத்துக்குக் குடிக்காமல் இந்தத் தண்ணியைக் காப்பாத்திட்டிருக்கேன். வேறே எங்கேயாச்சும் போய்க்கேள்," என்றாள் அவள்.

"தண்ணி கொடுக்காட்டி போவுது. கருவேலங்கரி தயாரிக்கிறதாவது எப்படின்னு சொல்லு. சம்பாதிக்க ஒரு வழி தெரிஞ்சுக்கிறேன்," என்றாள் கண்ணாத்தா.

"எல்லாக் கருவேல மரத்தையும் வெட்டியாச்சு. இப்பத்தான் நீ பிழைப்புக்கு வர்றியாக்கும்!" என்று கசப்புடன் சிரித்தாள் அந்தப் பெண். "முன்னெல்லாம் மூட்டை பத்து ரூபாய்க்கு வாங்கிக்கிட்டாங்க. இப்பத்தான் ஆளுக்கு ஆள் விறகு வெட்டறாங்களே. கடைக்காரர், 'நான் வாங்கி வைச்சுக்கிட்டு மதுரைக்கா பார்சல் பண்ண முடியும்? மூட்டை அஞ்சு ரூபாய்னா கொடுத்திட்டுப் போ'ங்கறார்!"

"கண்ணாத்தா, இங்கே வா," என்று கூப்பிட்டான் கரியமாணிக்கம். அவன் கையில் குண்டு குண்டாய் இரண்டு மூன்று கிழங்குகள் இருந்தன. "அங்கே ஒரு ஆள் வித்திட்டிருந்தான். அடுப்பை மூட்டி இதை ஏதாச்சும் செய்," என்றான்.

"இப்படிக் காட்டு, தம்பி," என்று கிழவி அவனைக் கூப்பிட்டு,

கிழங்கை வாங்கிப் பார்த்தாள். மறு நிமிடம் அவைகளைப் பறித்துத் தூர எறிந்தாள். ''சாணக்குட்டிக் கிழங்கு தம்பி இதெல்லாம்! கையால் தொடாமல் வேக வைச்சு ஊற வைச்சு அரைக்கணும். கையிலே பட்டுச்சோ அரிப்புத் தாங்காது!''

''கொட்டிக் கிழங்குன்னு சொன்னனே அம்மா?'' என்று மகன் திகைத்தான்.

கருப்பாயி தன் துணிப் பையிலிருந்து எடுத்துத் தந்தாள், வேறு சில கிழங்குகளை. ''இந்தா, இதுதான் கொட்டிக் கிழங்கு. நம்ம ஊரிலேயே தோண்டிப் பறிச்சு எடுத்தாந்தேன்,'' என்று கூறி மருமகள் கையில் கொடுத்தாள். ''உனக்கு இதை எப்படிச் செய்யணுமின்னு தெரியுமில்லே?''

''சொ ல் லி க் கொடுங்களேன், நொடியிலே செய்திடறேன்.''

''அடுப்பை மூட்டு.''

கரியமாணிக்கம், பெரிதாக ஏழெட்டுக் கற்கள் எடுத்து வந்தான். கண்ணுத்தா சுள்ளிகளைப் போட்டு அடுப்பைப் பற்ற வைத்தாள். கிழவி, அருகிலேயே உட்கார்ந்து கொண்டு, ''இந்தா புளியங்குழை. இதையும் சேர்த்துப் போடு. அந்தப் புளிப்பு இருந்தால்தான் இது அவியும். வாயிலேயும் வைக்கலாம்,'' என்றெல்லாம் சொல்லித் தந்தாள்.

கண்ணுத்தாவுக்குப் புகைச் சலினால் மட்டுமின்றி, துக்கத்தினாலும் கண்ணீர் தளும்பிக் கொண்டிருந்தது. இந்த மாதிரிப் பிச்சைக்காரச் சமையலுக்கு அவள் பழக்கப்பட்டவளேயல்ல. எல்லாம் 'லெச்சுமி' வீட்டை விட்டுப் போனதாலே வந்த துரதிருஷ்டம்.

'ஏன் மச்சான் அதை விற்கணும்?' என்று அவளும் சொல்லித்தான் பார்த்தாள். ஆனால் வேறு வழியில்லையே? கிழவி இப்போது சொல்கிறாள்— நியாயமான விலைதான் அய்யாத்துரை கொடுத்தான் என்று. ஒரு நாளுமில்லை. முடை என்று தெரிந்து தட்டிக் கொண்டு போய்விட்டான். இந்த மாதிரி எத்தனை பேர் தலையைத் தடவி இன்றைக்கு அவன் வளமாக வாழ்கிறானே!..

ஒரு பெருமூச்சுடன், கிழங்கை அவிய வைத்து இறக்கினாள் கண்ணுத்தா.

சூழ்போல அதை உருட்டி வைத்துக் கொண்டாள் கையில்... 'எங்கே இருந்தாச்சும் தண்ணீர் கொண்டாரேன்,' என்று போயிருந்தான் கரியமாணிக்கம்.

''அம்மா..பசிக்குது அம்மா. ஏதாச்சும் போடுங்க தாயே!''

ஒரு சிறுவன் அவள் எதிரில் கையேந்தி நின்றான். இருட்டில் அவன் முகம் முதலில் சரியாகத் தெரியவில்லை.

'இந்தக் கந்தல் உடையையும் கிணற்றுக்குக் கீழேயிருந்து கேட்கிற மாதிரியான குரலையும் பார்த்தால் நம் குழந்தைகள் எவ்வளவோ தேவலை போலிருக்கிறது!' என்று எண்ணிக் கொண்டாள். சிறுவன் மீது பரிதாபம் ஏற்பட்டது. ஒரு கோலியத்தனை கிழங்கு மாவை உருட்டி அவனிடம் நீட்டிய சமயம்—

நிலா வெளிச்சத்தில் அவன் முகம் ஓரளவு புலப்பட்டது.

கோபம் பீரிக்கொண்டு வந்தது, கையை ஓங்கினாள். ''ஏண்டா, நீ அய்யாத்துரையோட மகன் இல்லே?''

அந்தச் சிறுவனும் அப்போது தான் அவளைக் கண்டான். உடனே

துளசியும் வில்வமும்

துளசி உஷ்ணத்தைக் கொடுக்கக் கூடியது. வில்வம் குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியது. அதனால்தான் இடுகாட்டில் இருக்கும் சிவனுக்கு வில்வத்தையும், கடலின் நடுவில் துயில் கொள்ளும் விஷ்ணுக்குத் துளசியையும் உபயோகிக்கிறார்கள்.

—தாத்தா கூறக் கேட்டு: திவின்

''ஐய்யய்யோ!'' என்று ஓட்டம் பிடித்தான். எதையோ திருடிக்கொண்டு ஓடுகிறானாக்கும் என்று நினைத்த வேறு சிலர், ''பிடி! பிடி பையனை!'' என்று துரத்த, தண்ணீர்க் குவளையுடன் திரும்பிக்கொண்டிருந்த கரியமாணிக்கம் அவன் மீது மோதிக்கொண்டு, தண்ணீர் சிதற, அவன் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டு, ''நீ...நீ...அய்யாத்துரையோட மகன் இல்லே?'' என்றான்.

கண்ணுத்தாவும் கருப்பாயிக் கிழவியும் வந்து சூழ்ந்து கொண்டு விட்டார்கள்.

''உன் அம்மா அப்பா எல்லோரும் மலையாளத்துக்குப் போயிருக்கிறதாய்க் கேள்விப்பட்டேனே..'' என்றான் கரியமாணிக்கம்.

''ஆமாங்க..ஆனால் உங்ககிட்டே மாடு வாங்கினரே தவிர கொஞ்ச நாளிலே எல்லாருக்கும் ரொம்பக் கஷ்டமான நிலைமை ஏற்பட்டுப் போச்சுங்க. உங்க மாட்டை இன்னும் நூறு ரூபா நஷ்டத்துக்கு வித்திட்டு, பாம்பு பிடிக்கலாம்னு கேரளாவுக்குப் போனார்...''

''பாம்பா?''

''அங்கே பாம்புத் தோல் பாக்டரி நிறைய இருக்குதாமே? நம்ம ஊரிலே பாம்பு பிடிச்சுப் பிடிச்சுப் பழக்கம் உண்டு அவருக்கு. அதனாலே போனார். ஆனால் அதுவும் பிரயோசனமில்லே. 'நம்ம ஊரிலே தண்ணியே கிடையாது. பாம்புங்க வெளியே வருது. இங்கே கேரளாவிலே மழை கொட்டுது. பாம்பு வெளியே வரவே மாட்டுங்குது'ன்னு லெட்டர் எழுதிட்டார்.''

''அதனாலே?''

''எங்களையெல்லாம் தஞ்சாவூருக்கு வரச் சொல்லிட்டார். அவரும் அங்கே வந்திடுறாராம். நான், அம்மா, தங்கச்சி எல்லாரும் நேத்துப் புறப்பட்டோம். தங்கச்சிக்குத்தான் ரொம்பப் பசி. அம்மாவாலே ஒண்ணும் முடியல்லே. அடிச்சுக் கொல்லுங்க. அதுக்குத்தான் ஏதாச்சும் வாங்கிட்டுப் போக நினைச்சேன்..ஆனால்.. இப்படித் தெரிஞ்சவங்ககிட்டேயே பிச்சை கேட்போம்னு நினைக்கலிங்க...'' சிறுவன் குரல் தழதழத்துக் கொண்டே வந்து அழுகையில் முடிந்தது.

கண்ணுத்தாவுக்கும் கரிய மாணிக்கத்துக்கும் முதல் தடவையாக அய்யாத்துரையின் குடும்பத்தை எண்ணிக் கண்ணீர் வந்தது. ''இந்தப் பஞ்சம் ஒரு பெரிய முதலை....யாரையும் விட்டு வைக்கவில்லை...'' என்று எண்ணிக் கொண்டான் கரியமாணிக்கம். கண்ணுத்தா அந்தச் சிறுவனை அணைத்துக் கொண்டாள். அவள்கண்ணீர் அவன் உச்சந்தலையில் விழுந்தது.

கிழவி மெதுவாகச் சொன்னாள்: ''அம்மாவைப் போய்க் கூட்டிட்டு வாப்பா. நாங்களும் தஞ்சாவூர்தான் போறோம். அங்கே ஏதோ பொழைப்புப் பார்த்துக்கலாம்..''

கூட்டத்திலே யாரோ சிரித்தார்கள். ''எங்கே போறீங்க பாட்டி? தஞ்சாவூருக்கா?''

''ஏம்பா சிரிக்கிறே?''

''அங்கே அறுவடையெல்லாம் எப்பவோ முடிஞ்சு போச்சு. அத்தோடு, 'ஏனயா எங்க பொழைப்பைக் கெடுக்க வர்றீங்க?'ன்னு உள்ளூர்க்காரங்க அடிக்க வர்றாங்க!...''


ஆனால் கிழவியின் உறுதி தளரவில்லை. ''தஞ்சாவூர் இல்லேன்னா கும்பகோணம். அதுவும் இல்லேன்னா மாயவரம். தாயி மகமாயி வழி காட்டாமல் போயிட மாட்டாள். கொஞ்ச நாள் கொஞ்ச நாளேதான்....ஆத்தா... கண் திறக்கட்டும்.. பொறந்த மண்ணுக்குத் திரும்பிடாமலா போயிடுவோம்...''

(ஆதாரம்: 'தினமலர்,' டிசம்பர் மாத இதழ்களில் வெளிவந்த செய்திகள்.)




''ஐயோ! பத்மா! நம்ம பெட் ரூமிலும் குண்டு!''
''வெடி குண்டு இல்லே அத்தான். குண்டு பெருச்சாளி.''

உ:பாஸ்:போமின் டானிக்...







:பாஸ்:போமின் அயன்

பெண்களுக்கான அயன் டானிக்

:பாஸ்:போமின் அயன் சத்து மிக்க சிவப்பு இரத்தம் உருவாகக் காரணமாயிருந்து உதவுவதுடன் சக்தியையும் பெருக்குகிறது. பெண்களுக்கான :பாஸ்:போமின் அயனைத் தவருமல் தினம் உட்கொள்ளுங்கள்.

:பாஸ்:போமின் விடமின்

குடும்பத்திற்கான விடமின் டானிக்

:பாஸ்:போமின் குடும்ப ஆரோக்கியத்திற்குத் தேவையான விடமின் பி காம்ப்ளெக்ஸ் மற்றும் பல்வேறு கிளிஸரோபாஸ்பேட்டுகள் அடங்கிய விடமின் டானிக்காகும்.

குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ

2 :பாஸ்:போமின் டானிக்

:பாஸ்:போமின் அளிக்கும் இரு டானிக்குகளும் பசியைத் தூண்டி, வலிவைப் பெருக்கி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் கூட்டுவனவாகும்.

®
® SQUIBB SARABHAI CHEMICALS LTD.

® இ.ஆர்.ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட் அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும்.
[illegible] இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

Shilpi SC 8A/74 tam



புல்லுக் கட்டு தங்கம்மா

புல்லுக்கட்டைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு தங்கம்மா புறப்படும்போது, பொழுது சாய்ந்து விட்டது.

அவள் நடந்த நடையும் பட்ட சிரமங்களும் வீண் போகவில்லை. தெய்வம் கண் திறந்து பார்த்துவிட்டது!

நாளைக்கு இந்நேரம்...

நினைக்கும்பொழுதே மகிழ்ச்சியில் தங்கம்மாவுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. புதிய தெம்புடன் அவள் நடை போட்டாள்.

ஒரு மாதத்திற்கு முன்பு அவளுக்கு எப்படியொரு சோதனை ஏற்பட்டது! ஹைரோடில் அவள் கணவன் லாரி மோதி நினைவில்லாத நிலையில் யாரோ அவனை ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்துவிட்டு வந்து தங்கம்மாவிடம் கூறியபோது அவள்தான் எவ்வளவு அலறியடித்துக் கொண்டு ஓடினாள்!

அன்றைக்கு நினைவு தப்பிப் போய் அவனிருந்த நிலையைக் கண்டதும்..

''காமாட்சியம்மா.. நீதான் அவரைப் பிழைக்க வைக்கணும்!''... என்று அவள் மனமுருகி அழுததற்கு இன்று பலன் கிடைத்து விட்டது.

இந்தப் புல்லுக்கட்டை விற்ற காசை எடுத்துக் கொண்டு நாளைக்குக் காலையில் கோவிலுக்குப் போய் அர்ச்சனை செய்துவிட்டு ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும். அவனை 'டிஸ்சார்ஜ்' செய்ய மத்தியானத்துக்கு மேல் ஆகிவிடுமாம்!..

பொழுது வேகமாக இருட்டிக் கொண்டு வந்தது.

அவளும் வேகமாக நடக்கலானாள்.

பாதையோரத்து விளக்குக் கம்பங்களில் வெளிச்சம் உயிர் பெற்றுக் கொண்டிருந்தது.

தெருத் திருப்பத்தில் விளக்குக் கம்பத்தினடியில் நின்று கொண்டிருந்த நெட்டையான மனிதன் தன்னையே கவனித்துக் கொண்டிருப்பதை அவள் பார்த்தாள்.

தொளதொளவென்று ஜிப்பா அணிந்து கொண்டு ஜிப்பாவின் இரு பக்கத்துப் பைகளுக்குள்ளும் தன் கைகளை நுழைத்துக் கொண்டு நின்றிருந்தான் அவன்.

அவனைப் பார்த்தால் புல்லுக் கட்டு வாங்குவதற்காக நிற்பவனாகத் தோன்றவில்லை அவளுக்கு. எவனாவது காலியாக இருக்கும். இருந்து விட்டுப் போகட்டுமே? தங்கம்மாவைப் பற்றி அவனுக்குத் தெரிந்திருக்காது.

ஒரு சமயம்..அந்த வட்டாரத்தில் பிரசித்தி பெற்ற மைனர் ரங்கசாமி அவளிடம் வாலாட்டி விட்டுப் பட்ட பாடு! இவன் ஊருக்குப் புதிசு போல இருக்கிறது.

''என்னுங்க..? புல்லுக்கட்டு வேணுமா...?'' என்று அவளாகவே அவனிடம் விசாரித்தாள். கேட்டுவிட்டு அவன் பதிலை எதிர்பாரால் நடந்து கொண்டிருந்த அவளை, ''இந்தாம்மா,'' என்ற அவன் குரல் தடுத்து நிறுத்தியது.

''கேட்டுப்புட்டு நீ பாட்டுக்கு நடந்தா எப்படி?'' என்றான் அவன்.

''நிசம்மாத்தான் கேக்கறேன். நீ வாங்கப் போறியா..?''

''தூரத்திலே நீ வர்றதைப் பாத்துப்புட்டுத்தானே நிக்கறேன்! விலையைச் சொல்லு.''

''நாலரை ரூபா..!'' வழக்கமாக விற்கும் விலைக்குச் சற்றுக் கூடுதலாகவே சொல்லி வைத்தாள்.

''சரி...வா...'' என்று

பீஷ்மன்

சொல்லிவிட்டு வேறு பேரத்திற்கே இட மில்லாமல் நடக்க ஆரம்பித்தான் அவன். "பக்கத்திலேதான் வீடு. கொண்டுப் போட்டுட்டுப் போயிடு."

தங்கம்மாவுக்குச் சற்றுத் தயக்கமாக இருந்தது. சற்றுத் தூரம் நடந்தால் கோவில் மதிலை யொட்டி நிற்கும் குதிரை வண்டிக் காரர்களில் எவனிடமாவது எப்படியும் விற்றுவிடலாம்—ஆனால், அங்கே நிச்சயம் இந்த விலை கிடைக்காது. மூன்று ரூபாய் கிடைத்தாலே அதிசயம். அவள் நடந்தாள்.

புல்லுக்கட்டை அவன் சுட்டிக் காட்டிய இடத்தில் இறக்கிப் போட்டுவிட்டு, சும்மாடாய்த் தலையில் சுருட்டி வைத்துக் கொண்டிருந்த புடவைத் தலைப்பை உதறினாள் தங்கம்மா.

ஜிப்பாப் பைகளுக்குள் கைகளை நுழைத்துக் கொண்டு வீட்டுக்கு உள்ளும் வெளியும் அர்த்தமில்லாமல் அலைந்து கொண்டிருந்த அந்த மனிதனைப் பார்த்து அவளுக்கு எரிச்சல் தான் வந்தது. காசைக் கொடுத்து அனுப்பித் தொலைத்தால் என்னவாம்?

"காசு கொடுங்க! நேர மாச்சு..நான் போகணும்.." என்று இரைந்தாள் அவள்.

சுற்றும் முற்றும் திரும்பித் திரும்பிப் பார்த்துவிட்டு, "பாப்பா..! பாப்பா...!" என்று கூப்பிட்டான் அவன்.

எந்தப் பாப்பாவும் வரக் காணோம்.

'மனிதன் ஏதும் நாடக மாடுகிறானோ?' சந்தேகமாக இருந்தது அவளுக்கு.

"காசு கொடுங்க. நேர மாச்சு!" என்றாள் அவள் மறுபடியும்.

"என் தங்கச்சி பாப்பா வைக் கூடக் காணலே. இதோ, இந்த மேசை டிராயரிலேதான் தம்பி பணம் வச்சிருக்கு...! கொஞ்சம் பெரிய மனசு பண்ணி, நீயே வந்து இதைத் திறந்து உனக்குச் சேர வேண்டியதை எடுத்துக்கோ.."

தங்கம்மாவின் முகம் ஜிவு ஜிவென்று சிவந்து போயிற்று. கடைசியில், அவள் சந்தேகப்பட்டபடிதான் நடக்கிறது!

"சே! என்னய்யா நினைச்சே என்னை? மரியாதையா பணத்தைக் கொடுத்து அனுப்பறியா..இல்லே..!" என்று சீறினாள் அவள்.


அந்த மனிதன் வெல வெலத்துப் போனான். "அய்யய்யோ... எப்படித் தப்பா நினைச்சுட்டே அம்மா என்னை..?" என்று தழு தழுக்கும் குரலில் கூறிக்கொண்டே ஜிப்பாப் பைகளுக்குள் நுழைத்துக் கொண்டிருந்த கைகளை வெளியே இழுத்து அவள் முன்னே நீட்டினான் அவன்.

தொழுநோயால் அழுகிக் கொண்டிருக்கும் அந்தக் கைகளைப் பார்த்து அதிர்ந்து போனாள் அவள்.

"இந்தக் கைகளாலே இந்த வீட்டிலே நான் எதையுமே தொடற தில்லே தாயே! அப்படி இருக்கிறப்போ மேசை டிராயரைத் திறந்து உனக்கு எப்படிப் பணத்தை எடுத்துக் கொடுப்பேன்? குதிரைக்குப் போடற புல்லைக் கூட என் கையாலே நான் தொடறது இல்லே.... தம்பி ஊரிலே இல்லாததாலே தான் இன்னைக்கு இந்தச் சங்கடம். குதிரை பட்டினி கிடக்கப் போகுதேன்னுதான் நானே கிளம்பினேன்..."


தங்கம்மாவின் கைகள் தன்னை யறியாமலே அவனைப் பார்த்துக் கும்பிட்டன. "என்னை மன்னிச்சிடுங்க..!" என்று சொல்லிவிட்டு விடுவிடென்று நடக்கத் தொடங்கினாள் அவள்.

*



பேப்பரில், அணையில் இருக்கும் நீரின் மட்டம் போட்டிருந்தது. அதைப் படித்த எங்கள் 7 வயது பையன், "நீர் மட்டமாக இருந்தால், அதைக் குடிக்கக் கூடாது," என்று சொல்கிறான்.

—எஸ். செல்வாம்பாள்



பிள்ளைவாள் ஓட்டலில் சுடச்சுடக் கிடைக்கும் பக்கோடா,
அதோடு ராலிஃபேன் தரும் குளுகுளு காற்றோட்டம்.
மாதர் சங்கத்தின் அரட்டையைக் கவனிக்காமல்
வேகமாகச் சுழலும் ராலிஃபேன். மருத்துவ
மனையின் தாழ்வாரத்து மருந்து நெடி, மந்தகாசமாகக்
காற்று வீசும் ராலிஃபேன். பொது நூலகத்தின்
ஆழ்ந்த அமைதியினூடே ஓசையின்றி பரந்த சுற்றளவிற்கு
ராலிஃபேன் தரும் இதம். ரசிகர் மன்றத்தில்
நடக்கும் சூடான விவாதத்தைத் தணித்து வைத்து
சீராக ஓடிக்கொண்டிருக்கும் ராலிஃபேன்.
இடத்திற்கேற்ற இங்கிதத் தன்மையை
மிக நன்றாக புரிந்து வைத்துள்ளது
ராலிஃபேன்

உங்க வீட்டு கல்யாணம்

காதலி சுபாவின் வீட்டில் டிகானு போடுவதற்காகக் கொள்ளைக் கார 'பிச்சைக்கண்ணு'வைப்போல் வேடம் அணிகிறார் தேங்காய். உண்மைப் பிச்சைக்கண்ணுவே வந்து சேர்ந்து குட்டையைக் குழப்பி விடுகிறாள்— இதுதான் காசேதான் கடவுளடா வை நினைவு படுத்தும் இந்தப் படத்தின் கதை. (அதில் சாமியார், இதில் கொள்ளைக் காரி.)

இனிப்புப் போதாது என்கிற தீர்ப்பையே தேங்காய் பெற்றுக் கொள்ள நேர்ந்தாலும், பலே என்கிற ஷொட்டை மனோரமாவுக்கு மனப்பூர்வமாகக் கொடுக்கலாம். வருங்காலக் கணவனை சோவை ஐயராத்துப் பொண்ணு அடாபுடாவென்று எவ்வளவு அன்புடன் அழைக்கிறார்!

சோ வேண்டுமென்றே ஒரு தடவை 'டீ' போட்டுக் கூப்பிட அவர் அதிர்ந்துபோய், 'என்னடா மணி டீங்கறே?' என்று கேட்க, அவர், 'நீ மாத்திரம் என்னை டாங்கலாமா?' என்று மடக்க, அவர், 'நான் உன்னைவிட மூணு வயசு மூத்தவளோன்னோ?' என்று அடக்க. . . மறக்க முடியுமா?

வசனத்தில் ஹாஸ்யம் சரளமாக உதிர்கிறது. ஆனால் பொறுக்கியெடுக்கத் தரப்பட்டிருக்கும் அவகாசம் தான் அதிகம்.

விளக்கெண்ணெயையும் குடித்துக் கொண்டு முகத்தையும் சிரிக்கிறாற்போல் வைத்துக் கொள்ளச் சொன்ன மாதிரி, கொள்ளைக்காரனை வீட்டில் வைத்துக் கொண்டு வெளியில் யாருக்கும் தெரியாதபடி நடக்க வேண்டிய நிலைமையில் தங்கவேலு தண்ணீர் பட்ட பாடாய் (அதாவது பழைய தண்ணீர்) ஜமாய்க்கிறார்.

முக மூடியாம். கொள்ளையாம். அதுவும் 'பிச்சைக் கண்ணு,' என்ற பயங்கரத் திருடன் ஒரு பெண்ணும். ஒரே பத்தத்துக்கு முன் 'அ'னு.

இடுப்பும் வயிறும் ஜோதிலட்சுமி சொல்கிறபடி யெல்லாம் கேட்கின்றன. உண்மை. அதற்காக அவர் இப்படி முறமாகி அரிசிபுடைத்து, விரசத்தைக் கடந்து, ரொம்ப விரசத்தைத் தாண்டி, ரொம்ப



ரொம்ப விரசத்தை எட்டி எட்டிப் பிடித்திருக்க வேண்டாம்.

உங்கள் வீட்டில் கொள்ளைக்காரி புகுந்துவிட்டாளா? அவளைப் பிடிக்கச் சுலபமான வழி: அவள் குளிக்கும்போது ஜன்னல் வழியே கோலை விட்டு ஆடைகளை அப்புறப் படுத்திவிடுங்கள்.





விளக்கம்

'பெட்ரோல் பங்க் அநியாயம்' என்னும் தலைப்பில் ஒருவர் எழுதியிருப்பதைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது. இரண்டாவது மூன்றாவது கியர்களில் செல்லும்போது ஸ்கூட்டரில் அதிகமான பெட்ரோல் செலவாகும். 'டாப்' கியரில் செல்லும்போது பெட்ரோல் குறைவாகச் செலவாகும். அது அந்த நண்பருக்குத் தெரியாது போலும்! அவர் ஸ்கூட்டரில் ஒரு லிட்டருக்கு 30 கி.மீட்டர் செல்லும்போது இரண்டாவது மூன்றாவது கியர்களிலும் 35 கி.மீ. செல்லும்போது 'டாப்' கியரிலும் சென்றிருப்பார்.

சேரன்மாதேவி இளங்கோ தன்சிங்

பெட்ரோலைக் கார், ஸ்கூட்டரின் பெட்ரோல் டாங்க்குக்குள் செலுத்தும்போது அதன் முனையில் ஓர் பிடி உள்ளது. இந்தப் பிடியை அழுத்திக் கொண்டால்தான் பெட்ரோல் பம்பிலிருந்து காருக்குள் செல்லும். இந்த வால்வு மெதுவாகத் திறந்தாலும் அல்லது முழுமையாகத் திறந்தாலும் (நன்கு அழுத்திப் பிடித்தால்தான் முழுமையாகத் திறந்ததாகப் பொருள்.) அளவு காட்டும் மீட்டர் ஓடும். இதனால் பெட்ரோல் போடுபவர்கள் குறிப்பிட்ட அளவு போடச் சொன்னால் கடைசியில் அழுத்தத்தைத் தளர்த்தி விடுவார்கள். இப்படி மீதமாகும் பெட்ரோல்...

சென்னை—600033
எஸ். ராஜாராம்

லேபர் இன்ஸ்பெக்டர்கள் தங்களுக்கு வரையறை செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள 'பெட்ரோல் பங்க்கு'களுக்குத் திடீர் வருகை செய்து அளவுக் கருவிகளைப் பரிசோதித்து மோசடிகள் இருக்குமேயானால் பங்க் உரிமையாளர்கள் மீது கோர்ட் நடவடிக்கைகள் எடுக்கவும் அரசினரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளார்கள்.

லெட்சுமாங்குடி,
ஆர். சுப்பிரமணியன்

சோ மனோரமா காலைப் பிடித்தால், 'என்ன இருந்தாலும் ஸீனியர். தோஷமில்லை,' என்கிறீர். ஜெயசித்ரா கண்ணுடி போட்டுக் கொள்வதைப் பற்றி ஆட்சேபமில்லை என்கிறீர். போகிற போக்கைப் பார்த்தால் ஒவ்வொரு நடிகர், நடிகையும் இனிமேல் உம்மிடமிருந்து 'நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட்' பெற்றுக் கொண்டுதான் நடிக்க வேண்டும் போல் இருக்கிறதே!

சென்னை-33 என். ரங்கராஜன்

தேடிக்கு மூடி

'4-55'க்கு வானொலியில் நடந்தது என்ன?' என்றதுணுக்கின் தொடர்ச்சி: வாத்திய இசைத்தட்டைப் பாதியில் நிறுத்தி மீண்டும் 'அன்பைத் தேடி' படப் பாடலை ஒலிபரப்பினுர்கள். ஆனல் அதற்குள் மணி 5 ஆகிவிட்டதால் பாடலைப் பாதியில் நிறுத்திவிட்டார்கள். துணுக்கு எழுதியவர் அவசரப்பட்டு அதற்குள் வானொலியை நிறுத்திவிட்டார் என்று நினைக்கிறேன்.

வேலூர்-4 கே. ஏ. வெங்கடேசன்

எத்தனையோ பிரசினைகளுக்குப் பதில் வராத நிலையில், 'அன்பைத் தேடி' பாடல் ஒலிபரப்பாதது ஏன் என்ற கேள்வி ரொம்ப அவசியமானது தான். சென்னை வானொலி நிலயத்தார் உடனே பதில் கூறிவிட்டால் நல்லது.

சென்னை-18 கோமதி நடராஜன்

இவ்விடம் சர்டிபிகேட் கிடைக்கும்

ஆந்திரத்தைப் பார்!

தமிழரது சுயமரியாதை பற்றிய கேள்விக்கு இந்த விஷயத்தில் கேரளா, கர்நாடகம், ஆந்திரா எல்லாம் தமிழ்நாட்டை விட எவ்வளவோ மேல் என்று பதிலளித்திருப்பது தவறு. நினைத்த இடத்தில் எல்லாம் 'இயற்கையின் அழைப்பு'க்குப் பதிலிறுப்பதும், ஓட்டலில் சாப்பிட்ட தட்டிலேயே கை கழுவி அந்த நீரிலேயே வாயைக் கழுவுவதும் ஆந்திராவில் அன்ருட நிகழ்ச்சிகள். தமிழ்நாடு இந்த விஷயத்தில் ஆயிரம் மடங்கு தேவலாம்.

விசாகப்பட்டனம்-5 சு. பழநியப்பன்

'இல்லை'யா? இருக்கிறது!

'இல்லை,' என்கிற கதையைப் படித்தேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டுள்ள பகுதிகளான கடலாடி, முதுகுளத்தூர், சாயல்குடி ஆகிய ஊர்களிலும், பரமக்குடியைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தினம்தோறும் மூட்டை முடிச்சுகளுடன் 'பஞ்சம்' பிழைக்கத் தஞ்சை செல்லும் மக்களின் அவல நிலையை அப்படியே எழுத்துருவில் படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர். உண்மையிலேயே தன் கலப்பையைப் பரமக்குடியில் விற்றுவிட்டு, கிடைத்த ரூபாயைக் கொண்டு தஞ்சைக்குப் பிழைக்கச் சென்ற கடலாடி விவசாயியைச் சென்ற வாரம் முதன் முதலாகக் கண்டேன்.

பரமக்குடி ஜி. ▯ால்மரியதாஸ் யாதவ்

அந்தநாள் சாதனை

இந்தியாவின் தலைசிறந்த ஆட்டக்காரர்களில் ஒருவரான பட்டோடியைப் பற்றி எழுதியிருந்த கவிதை இந்தியக் கிரிக்கெட்காரர்களையே தலைகுனிய வைக்கிறது. உங்கள் விசன கவிதையில் இருக்கும் பட்டோடிதான் 46 டெஸ்ட்டுக்களில் 2793 ரன்கள் எடுத்திருக்கிருர். இந்தியாவில் 1000 ரன்களைத் தாண்டிய 21 பேட்ஸ்மென்களில் 8,வது இடத்தை (சராசரி 34.91) அடைந்திருக்கிருர். ஒரு முறை 203 ரன்கள் எடுத்தும் ஆட்டமிழக்காமலிருந்திருக்கிருர்.

சின்னப்பன் பாளையம் டி. பால மோகன்

நவநீதா! என்னைச் சொல்லிக் குற்றமில்லை. எஞ்சீனியரைச் சொல்லிக் குற்றமில்லை. காலம் செய்த கோலமடா பம்பாய் வாங்கடே ஸ்டேடியம் செய்த குற்றமடா! (பட்டோடிக்காக) பம்பாய்-22

பொன்ராஜ்

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும், கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. குமுதம் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெடில் அச்சிட்டவர்: ஏ.பி.ஏ. பெரியகருப்பன். குமுதம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர்: பி.வி. பார்த்தசாரதி. ஆசிரியர்: எஸ்.ஏ.பி. அண்ணுமலை. முகவரி: 83, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை—600010

சார்க்கத்தில் வசிக்கும் திரு. மோகன் மாரமங்கலம் அவர்களுக்கு,

வணக்கம் பல. குடி நீர் ாரியத் தலைவர் உங்கள் தலைமேல் ரட்டிருக்கிற பழியைப் பற்றி நீங் ளும் படித்திருப்பீர்கள். ஏதோ ஒரு ர் இறந்து போய்விட்டால் பிறகு வரைப் பற்றி என்ன சொன்னாலும் ாயைத் திறக்கமாட்டார்கள் என்று லபேர் நினைக்கிறார்கள். ஆவியுலகம் ற்றித் தெரியாத அப்பாவிகள் இவர் ள். ''வீராணம் திட்டம் தாமத தற்கு நானென்றும் காரணமல்ல'' ன்று உடனடியாக, திரு. கந்தப்பன் ட்டுக் கதவுத் தாழ்ப்பாளை லொடக் லொடக்கென்று (நள்ளிரவில்) சப்தப் டுத்தித் தெரியப்படுத்திவிடுங்கள். ன்று நாள் அந்தமாதிரி தொடர்ந்து ன்னல்களிலும் கதவுகளிலும் ஓசை ழுப்பினால் போதும். நாலாம் நாள் ரு. கந்தப்பன் தான் சொன்னது ப்பு என்று அறிக்கை விடுத்துவிடு ார்.

இப்படிக்கு,
ஓர் ஆவி ஆதரவாளன்

■ ■

ாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர் ளுக்கு,

வணக்கம். மலேரியாவைத் டுப்பதற்காக, பெண் கொசுக்களை லடாக்க ஆராய்ச்சி நடத்துவது ருமையான யோசனை. ஒவ்வொரு காசுவாகப் பிடித்து, கருத்தடை ஆப ரஷன் செய்து அனுப்பி விட்டால், ப்புறம் மலேரியா ஜுரம் தலை வைத் படுக்குமா தமிழ்நாட்டுப் பக்கம்? ன்னொரு யோசனையும் தோன்றுகிறது: ாக்கடைத் தண்ணீர் தேங்கக் கூடிய குதிகளில், 'இரண்டுக்கு மேல் எப் பாதும் வேண்டாம்' - 'அளவான டும்பமே வளமான குடும்பம்' என் து போன்ற குடும்பக் கட்டுப் ாடு போஸ்டர்களை ஒட்டினால் என்ன? கொசுவுக்குப் படிக்கத் தெரியாதே ன்று சில எதிர்க் கட்சிக்காரர்கள் கேட்கக் கூடும். சாக்கடைகளுக்குப் பக் த்தில் கொசுப் பள்ளிக்கூடங்கள் கட்டி ட்டால் போகிறது!)

இங்ஙனம்
ஒரு தி.மு.க. தோழர்.

மர்மம்!

7-2-'75 அன்று இரவு பத்து மணி அளவில் அதிராமப் பட்டினம் டி.வி.எஸ். பார்சல் சர்வீஸில் ஒரே கூட்டமாகஇருந் தது. காரணம்: பார்சல் ஆபீஸ் வாசலில் இரண்டு தினங்களா கக் கேட்பாரற்றுக் கிடந்த மரப் பெட்டிதான். போலீஸ் வந்து பெட்டியைப் பார்த்தார்கள். நகர்த்தவே முடியவில்லை. அவ் வளவு கனம். உள்ளே ஏதோ சத்தம் கேட்டது வெண்கலம் போல். சிலையா? தஞ்சாவூர் கஸ்டம்ஸ் ஆபீஸுக்கு உடனே தகவல் கொடுத்தார்கள். பெட்டி திறக்கப்பட்டது. துணிகள், கண்ணாடி, அரிவாள் மணை இது மாதிரி பொருள்கள். அடியில் இருந்தது ஒரு பெரிய பொருள். மிளகாய் அரைக்கும் அம்மி! மறுநாள் காலையில்தான் விவரம் தெரிந்தது. ஆபீஸில் வேலை பார்க்கும் ஒருவருக்குத் திடீர் மாற்றல் வந்துவிட்டதாம். எல்லாச் சாமான்களையும் ஒரு பெட்டியில் போட்டுப் பார் சல் செய்வதற்காக ஒரு வண் டியில் போட்டு டி.வி.எஸ். ஆபீ சுக்கு அனுப்பிவிட்டுத் தன் ஆபீ சுக்குப் போய் இருக்கிறார். திடீ ரென அவருக்கு வெளியூர் போகும் வேலை வந்துவிட்ட தால், பெட்டிதான் ஆபீஸில் இருக்குமே அப்புறம் போய்ப் பார்சல் பண்ணிக் கொள்ளலாம் என நினைத்து வெளியூர் போய் விட்டாராம்.

—பட்டுக்கோட்டை குணசீலன்





பட்டாம்பூச்சி ■ ■

'சினிமாப் பைத்தியம்—இரண்டாம் பாகம்' என்று தலைப்புக் கொடுத்திருக்கலாம்.

அதிலே ஒரு பெண் சினிமா மோகம் பிடித்து அலைகிருள். இதிலே ஒரு ஆண்.

அவனவன் தண்ணீருக்கு ஆலாய்ப் பறக்கிருன். பிரகாசத்துக்கு மட்டும் எங்கேதான் கிடைத்ததோ—கதையை இத்தனை தண்ணீர்ப் பதமாக அடிக்க! சித்ராவும் ஹாசனும் சென்னைக்கு வந்து சேருவது வரையில் எவ்வளவு ஸ்லோ!

கிராமத்தை விட்டு வெளியேறி விடுவது என்ற தீர்மானத்துடன் கமலஹாசன் லாரியில் ஏற, அதே தீர்மானத்துடன் கிளம்பிவிட்ட ஜெயசித்ரா அவரைக் கூவியழைக்க, இருவரும் புயல் வேகத்தில் ஓடி ஒருவரையொருவர் தழுவிக் கொள்ளும் காட்சியில் இளமை மட்டுமல்ல, தூய்மையான காதலும்கூட வெளிப்பட்டிருக்கிறது.

மனைவியிடம் பிரியமாய் இருப்பது எப்படி என்பதை நாகேஷுக்குக் கற்றுக் கொடுத்ததாகச் சொல்லி, அதை மறுபடி நகலெடுத்து ஜெயசித்ராவிடம் வர்ணிக்கும் 'மொனோ ஆக்டிங்' கமலஹாசனுக்கு அப்பாவித்தனமான குறும்புத்தனம் கவர்ச்சியைத் தருகிறது. இல்லாத காதலியை அருகில் அழைத்து, அணைத்து, தலைசீவி விட்டு, முகத்தைத் தன் பக்கம் திருப்பி, பிறகு ஸாரியைச் சிறிது சிறிதாகப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருக்கும்போது ஜெயசித்ராவுக்குக் கிளுகிளுப்பு உண்டானதில் வியப்பில்லை.

ஒரு புதுமை: காதலியிடம் வம்பு பண்ணிய வில்லனிடம் மோதத் தெரியாமல் மோதி, செமத்தியாய் வாங்கிக் கட்டிக் கொண்டு, அடி உதை அழுகையுடன் விழுந்து கிடக்கும் ஹீரோவை எங்காவது பார்த்ததுண்டா? கமலஹாசனை அப்படித்தான் சித்திரித்திருக்கிருர்கள். அப்புறமாவது வீரத்தைக் காட்டினுல் பரவாயில்லையே? அதுவும் கிடையாது. நாகேஷைக் கமலஹாஸன் பின்பற்றுவது தெரிகிறது. ஆனுல் நாகேஷிடம் சோகத்துக்குப் பின்னுல் ஓர் உறுதி இருக்கும். அது இங்கே மிஸ்ஸிங்.

நட்சத்திரமாக வரவேண்டும் என்று ஹாசனுர் தவியாய்த் தவிக்கிருராம். ஆனுல் மெட்ரூஸ் ஓட்டலில், இரட்டைக் கட்டிலில், காதலியின் மேனியில்தான் சினிமா சான்ஸைத் தேடு தேடென்று தேடுகிருரே தவிர, வேறு துரும்பெடுத்துப் போடக் காணுேம் வெகு நேரம் வரை. பிள்ளையாண்டானுக்கு நட்சத்திர ஆசையைக் காட்டிலும் காதல் மோகம்தான் அதிகம் இருக்கும் போலிருக்கிறது என்று எண்ண வைத்துவிட்டு, திடீரென்று ஒரு கவர்ச்சிக் கன்னி (?) அவரைச் சொக்குப் போட்டுக் கூப்பிட்டாள், கட்டியவளையும் காதலியையும் மறந்து அவள் பின்னே ஓடி விட்டார் என்ருல், பேராசிரியர் சார், யாரால் நம்ப முடியும்?

சாதாரண இடங்களிலெல்லாம், தேவையில்லாமல் கருத்துள்ள வசனத்தைக் கொடுத்துவிட்டதாலோ என்னவோ கிளைமாக்ஸ் காட்சியில் உரையாடல் படுபாதாளத்தில் விழுந்து விடுகிறது. தன்னைக் கைவிட்டுப் போகிருரே என்று ஜெயசித்ரா கதறுவதிலும் சரி, தனக்குச் சினிமா சான்ஸ் தான் பெரிது என்று க.ஹாசன் வெட்டிக் கொள்வதிலும் சரி, உண்மையின் ஒளியைக் காணுேம். வார்த்தைக் குவியல்கள் மட்டுமே இருக்கிறது.

டைட்டில் காட்சிகள் இவ்வளவு கிளுகிளுப்பாய் எந்தப் படத்திலேனும் வந்திருக்குமா என்பது சந்தேகமே. பெண் விரல்களும் ஆண் விரல்களும் என்ன விளையாட்டு விளையாடுகின்றன! எத்தனை கிள்ளல்!

வரலட்சுமி—பாகம் குறைவு தான். ஆனுல் அழுத்தம் ஜாஸ்தி.

சில இடங்களில் டைரக்ஷன் பாராட்டும்படி இருக்கிறது.

இளமை கொஞ்ச நேரத்துக்கு பாபி பாணியில் கும்மாளமடித்தாலும் போகப் போக அலுப்புத் தட்டுவது ஒரு பெரிய குறை. முடிவு: ஃபணுல்!

14 கேள்விகள்



☐ ஜே. கோபாலகிருஷ்ணன், அய்யனூர்

கனவுக் கன்னி ஹேமமாலினியின் கலைத் தொண்டைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

கலையைக் காட்டிலும் கிசு கிசு பத்திரிகைகளுக்கு மிகவும் உபயோகமாக இருந்துவருகிறுர்.

☐ தா. மனுசன், பாலூர்

தமிழக அரசு வெளியிட்டுள்ள 3'ம் வகுப்பு தமிழ்ப்பாட நூலில் (47'ம் பக்கம், 27'ம் பாடம்) 6'வது வரியில் 'அம்மாளுக்கு' என்ற சொல் இரண்டு தடவை வந்துள்ளது. 'அம்மாவுக்கு' என்று தானே வரவேண்டும்?

"அப்பாவுக்கு," என்பது. 'அப்பானுக்கு' என்று வராமலிருந்ததே, அதுவரை மகிழ்ச்சிதான்.

☐ ஏ. டி. தாமோதரன், சென்னை-1

மொரார்ஜி தேசாய் பிரதமரானுல்?

அந்த அளவுக்குத் துரதிருஷ்டம் பிடித்ததல்ல நம் நாடு.

☐ ஆர். ராமதாஸ், பட்டுக்கோட்டை

குப்தஞான் (வாழ்க்கையின் ரகசியம்) என்ற திரைப்படத்தின் இரண்டாவது பகுதி எப்போது வெளிவரும்?

ரகசியத்தின் முதல் பகுதியைப் பார்த்த சிலருக்கு, 'குப்தஞான்' என்றதும் சப்த நாடியும் ஒடுங்கி விடுகிறது. நீங்கள் தைரியசாலிதான்.

☐ ஆர். சுப்பிரமணியன், லெட்சுமாங்குடி

திரு. ம. பொ. சி. அடுத்த தேர்தலிலும் தி. மு. க.வை ஆதரிப்பாரா?

கடைசிவரை ஆதரிப்பார். அவர் செய்ந்நன்றி மறவாதவர்.


☐ எஸ். கோபாலய்யா, பெருந்துறை

நாடு திருந்த ஒரே வழி என்ன?

அதைக் காட்டக்கூடிய

போராடும் ஜெயப்பிரகாஷ் நாராயணனே, தென்னுட்டில் ஊழலை எதிர்த்துப் போராடும் எம்.ஜி.ஆர் எதிர்ப்பது ஏன்?

பீகாரில் ஊழலை எதிர்க்கப்



□ எஸ். எஸ். பேபி, திருவனந்தபுரம்

மிஸ்ராவின் கொலை சம்பந்தமாக விசாரணை எதுவும் நடைபெறுகிறதா?

நான்கு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எல்லோரும் வேலையில்லாத, படித்த இளைஞர்கள். ஒருவன், மாங்கீரிலுள்ள துப்பாக்கித் தொழிற்சாலையில் முன்பு வேலை பார்த்தவன். பேடையை நோக்கி எறி குண்டு வீசிவிட்டு, அது வெடிக்கு முன் வேகமாக ஓடும்போது அவர்களை, ஸ்டேஷனில் பழம் முதலியன விற்கும் ஒரு வாலிபன், 'ஏன் ஓடுகிறீர்கள்?' என்று கேட்டிருக்கிறான். மூச்சு விட்டால் தொலைத்துவிடுவோம் என்று அவனை மிரட்டினார்களாம். குண்டு வீசக் காரணம் என்ன என்பது போகப் போகத்தான் தெரியும்.

□ குமாரவேணி ரங்கராஜன், மாராடி

பிளாஸ்டிக் அரிசி சாப்பிடலாமா?

அது, படி என்ன விலை என்பதைப் பொறுத்திருக்கிறது.

□ கெ. நாராயணன், கோவை—3

லட்சுமி—பாஸ்கர் எப்படியிருக்கிறார்கள்?

அவரவர் வீட்டில் அவரவர் இருக்கிறார்கள். காந்தி நகரில் இருந்தபடி பாஸ்கர் இன்ஷூரன்ஸ் ஆபீசுக்குப் போய்வருகிறார். ஆள்வார்ப்பேட்டையில் லட்சுமி கட்டிக் கொண்ட புதிய வீட்டில் மறுதரப்பு மூன்று தலைமுறைகளும்—பாட்டி, மகள், பேத்தி—இருந்து வருகிறார்கள்.

□ ப. த. பாலான், திருப்பூர்

மழைக்காக வருண ஜபம், தொழுகை, மற்றும் பிரார்த்தனை செய்வதை விடுத்து, அனைவரும் ஒன்று சேர்ந்து மண் வெட்டி, கடப்பாரை மற்றும் கூடை சகிதமாகப் புறப்பட்டால் கங்கையையே காவிரியுடன் இணைத்துவிடலாமே?

முதலில் யார் புறப்படுவது என்பதுதான் கேள்வி.



□ கே. செல்வகுமார், சென்னை

சென்னையில் தற்போது பிரபலமான டாக்டர் யார்?

டாக்டர் கலைஞர்.

□ அப்பயங்கர், சென்னை.

'அரசு' என்ற பெயரில் ஒளிந்திருப்பது யார்? வி. டி. அரசா?


'அப்பயங்கர்' என்ற பெயரில் ஒளிந்திருப்பது யார்? சாம்புவா? சங்கர்லாலா?

□ ஏ. அப்துல் ரஹீம், நிரவி.

'மேல்நாட்டு மருமகள்' படத்தில் உஷா உதுப் பாடிய பாப் இசை கேட்டீர்களா? பாட்டு எப்படி?

தபதபதபதானே? கேட்கிறவர்களுக்கே மூச்சு இரைக்கும்படி பாடியிருக்கிறார்.

'அரசு'



நடுக் கூடத்தில் எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். உத்தியோக விஷயமாக மூன்று மாதங்களாக ஊர் ஊராக அலைந்து கொண்டிருந்த என் கணவர் அன்று தான் ஊர் திரும்பியிருந்தார். திடீரென்று அவர் ஒரு துள்ளுத் துள்ளித் தன் இடது கையை உதறினார்.

"என்ன, என்ன?" எல்லோரும் பதட்டத்துடன் கேட்டனர்.

"பல்லி!"

அவர் கையிலிருந்து கீழே விழுந்து சுவரை நோக்கி ஓடிற்று.

"எங்கே விழுந்தது?" என்று என் மாமியார் கேட்டார்.

"இங்கே, இடது கை மேலே," என்று அவர் சொன்னார். என் நாத்தனார் சுமித்ரா உடனே பஞ்சாங்கத்தைத் தேடிப் புறப்பட்டாள்.

பஞ்சாங்கத்தைப் புரட்டிப் பார்த்த சுமித்ரா, "இடது கையா, வலது கையா அண்ணா?" என்று கேட்டாள்.

"இடது தோள். ஏன்? கலகம்னு போட்டிருக்கா?"

"தோளுக்கு ஒன்றுமே போடவில்லை," என்றாள் சுமித்ரா.

"புஜத்திற்கு?"

கண்களை ஓடவிட்ட சுமித்ரா, அதைப் படித்துவிட்டுப் பஞ்சாங்கத்தை மூடிவிட்டாள். "என்ன போட்டிருக்கிறது?" என்றேன் ஆவலுடன்.

அவள் பேசாமல் பஞ்சாங்கத்தை எடுத்துக் கொண்டு வாசல் ரூமுக்குப் போய்விட்டாள். ரேடியோ அடியில்தானே வைத்திருக்கிறாள், நாமாகப் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டவள் பத்து நிமிஷம் கழித்து அந்தப் பக்கம் போய்ப் பார்த்தேன். பஞ்சாங்கத்தைக் காணோம். இவரிடம் தனியாகக் கேட்டேன்.

அவரும் பேசாமல் போய் விட்டார்.

மனத்தைக் கவலை பறிக்கத் தொடங்கியது. ஏன் ஒருத்தரும் ஒன்றும் சொல்ல மறுக்கிறார்கள்? பஞ்சாங்கத்தையும் ஒளித்து வைத்து விட்டார்கள்?

இரவு நாங்கள் தன்மையில் சந்தித்ததும், ஆவலுடன் என்னை நெருங்கிய அவரை நான் தடுத்தபடியே, "பஞ்சாங்கத்தில் என்ன போட்டிருந்தது? முதலில் அதைச் சொல்லுங்கள். ஏதோ விபரீத பலன் போட்டிருக்கிறது. எனக்குத் தெரிய வேண்டாமா?" என்றேன்.

"சீ பைத்தியமே, விபரீதமாக ஒன்றும் போடவில்லை," என்று என்னை அணைக்க முயன்றார்.

"அப்படியெல்லாம் சொல்லி என்னை ஏமாற்ற முடியாது. பலனைச் சொன்னால்தானாயிற்று..." என்றேன் சற்றுக் கோபத்துடன்.

"சரி.சரி.கோபித்துக் கொள்ளாதே. இதோ பஞ்சாங்கமே பீரோ பின்னால் இருக்கிறது," என்றவர், "இந்தா. நீயே பார்த்துக்கொள் எனக்கு என்ன பலன் போட்டிருக்கிறது என்று?" என்றார்.

பார்த்தேன்—என் முகம் ஜிவ்வென்று சிவந்துவிட்டது.

'இடது புஜம்-ஸ்திரீ சம்போகம்.'

'ஹேமா'

பல சுவையான செய்திகளைத் தொகுத்து எழுதிக் கொடுப்பதற்காகவே ஒருவரை நியமித்து இருக்கிறோம்.

தா: சில பேர்களுக்கு வானொலி நிகழ்ச்சிகள் பூராவும் ஒரே பக்திமயமாக இருப்பது ஒரு 'அலர்ஜி' யாக உள்ளது.

கோ: 'பகுத்தறிவுச் சிந்தனைகள்' என்று தனியாக சில சமயம் ஒலி பரப்புகிறோமே? பகுத்தறிவாளர்கள், அறிவியல் துறையில் 'முன்னேற்றம் வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் இவர்களையெல்லாம் தருவித்து உரையாடல்கள் நிகழ்த்துகிறோமே?

தா: 'விவிதபாரதி வர்த்தக ஒலிபரப்பு' நிகழ்ச்சிதான் அதிகம் பேர்கள் ரசிக்கிறார்கள் இல்லையா?

கோ: அதுவும் எங்கள் நிலையத்தைச் சேர்ந்த பகுதிதான். அதற்கு வேறு ஒரு நண்பர் பொறுப்பாக இருக்கிறார். பொழுது போக்கு அம்சத்தையே அதிகமாக விரும்புகிறவர்கள் அலுப்பில்லாமல் கேட்கும்படியாக, திரைப்படப் பாடல்கள், நகைச்சுவை நாடகங்கள் தயாரித்து வழங்குகிறார்கள்.

தா: 'க்விஸ்' புரோகிராமில் எப்போதும் கல்லூரி மாணவர்களையே தான் கலந்து கொள்ள அழைக்கிறீர்கள். எங்களைப் போன்ற தொழில் துறை இளைஞர்கள், பாங்கி சிப்பந்திகள், அரசாங்க ஊழியர்கள் இவர்களை அழைத்தால் என்ன?

கோ: நல்ல ஐடியாதான். தொழிலாள நண்பர்களை இந்த மாதிரி நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்தியதுண்டு. நான் திருச்சியில் பணியாற்றியபோது 'ஓபன் ஹவுஸ்' என்று ஒருமுறை பொது மக்கள் சில பேர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி ஒன்றைச் செய்து பார்த்தேன்.

தா: கர்நாடக சங்கீதத்திற்கு இப்போது 'மவுசு' எப்படி?

கோ: எங்கள் கணக்குப்படி திரைப்பட இசைக்கு முதலிடம். அடுத்தபடியாக—வரிசைப் பிரகாரம்—செய்தி அறிக்கைகள், நாடகங்கள், துதிப்பாடல்கள். கிளாசிகல் மியூசிக் 28 சதவிகிதம் ரசிக்கிறார்கள் என்று தெரிகிறது.

தா: உங்கள் இலாகாவில் உங்களுக்குப் பிடித்தமான பகுதி எது?

கோ: ராஜாஜி, நேரு, டாக்டர் மு.வ., ராஜரத்தினம் பிள்ளை, டைகர் வரதாச்சாரியார், அரியக்குடி போன்ற பல துறை மேதைகளின் குரல்களை ஒலிப்பதிவு செய்து பாதுகாத்து வைத்திருக்கும் பகுதிதான்.

தா: தங்களோடு பேசியதில் பல புதிய விஷயங்களை அறிந்து கொண்டேன். நன்றி.

பேட்டி: பால்யூ. படம்: சுபா

இதோ கீழ்க் கண்ட ஒரு நாட்டுப் பாடலைச் சமீபத்தில் ஸ்ரீலங்கா வானொலி தமிழ்ச் சேவையில் ஒலிபரப்பினார்கள்.

...ண்டி கண்ணு, என்னடி செய்தாய்?

...டி கண்ணு என்னடி கண்ணு
என்னடி செய்தாய்
...டுக் குட்டிக்கு ஆறுதல்
சொன்னேன்
சும்மாவா இருந்தேன்?

...டி கண்ணு என்னடி கண்ணு
என்னடி செய்தாய்
...ழி முட்டைக்கு மையிட்டு
வச்சேன்
சும்மாவா இருந்தேன்?



ஏண்டி கண்ணு என்னடி கண்ணு
என்னடி செய்தாய்
பாம்புக் குட்டிக்குப் பல்லு
விளக்கினேன்
சும்மாவா இருந்தேன்?

—சுபாஷிணி கேசவன்

சுகத்துக்கு ஒருத்த

ஏழு மில்களுக்குச் சொந்தக்காரரான செல்வந்தரான சொக்கலிங்கம் கொஞ்ச நாளாக உடல் நலிவுற்று, தமது விசால மான பங்களாவை விட்டு வெளியே போக முடியாமல் ஏறக் குறைய சிறையி லிருப்பவரைப் போல இருந்து வந்தார்.

கடைசியாக, மிகுந்த யோசனைக்குப் பிறகு, தமது பிள்ளைகள் இரண்டு பேரையும் கூப்பிட்டார்.

நெடுநேரம் தன் மகன்களை அவர் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கண்ணி லிருந்து நீர் வடிவதைப் பார்த்துத் திடுக்கிட்ட பூபதி, "அப்பா, உங்கள் உடம்பு நிச்சயம் குணமாகிவிடும்," என்று அவரைக் கட்டிக் கொண்டான்.

இளங்கோ அவர் கால்களை இதமாகப் பிடித்துவிட்டபடி, "மாற்று கிட்னி ஆபரேஷன் இந்தக் காலத்தில் டாக்டர்களுக்கு வெகு சிறிய சமாசாரம். வெற்றிகரமாக நடைபெறு மப்பா. பயம் வேண்டாம்," என்றான்.

சொக்கலிங்கம் தன் மனத்தி லுள்ளதை எப்படிச் சொல்லுவது என்று தெரியாதவராய்த் தடுமாறு பவர் போலிருந்தார். "நான் அதற்காக வருத்தப்படவில்லை. நான் பிழைப் பதைவிட சாவதே மேலென்று நினைக் கிறேன்." பிறகு சிரமப்பட்டுத் தலை யணைக்கடியிலிருந்து சில தஸ்தாவேஜிகளை எடுத்து அவர்களிடம் காட்டினார்.

அத்தனையும் அவர் எழுதிக் கொடுத்த கடன் பத்திரங்களின் நகல்கள்.

பூபதி அலட்சியத்துடன், "இது ஒரு கடனப்பா..இதற்கா கவலைப் படுகிறீர்கள்?" என்றான்.

"நாங்கள் தொழில் செய்து அடைக்கிறோம் அப்பா," என்றான் இளங்கோ.

அவனை வைத்த கண் வாங்காமல் பார்த்தார் அவர். பிறகு சற்றே நிறம் குறைவாக அதே அச்சில் வார்த்தாற் போன்ற பூபதியைப் பார்த்தார். அவனது உறுதியான மோவாயும் அலட்சிமான பெரிய கண்களும், நம்பிக்கையைக் காட்டும் எடுப்பான நாசியும் அவர் பார்வையில் சிறிது நேரம் நின்றன.

"கண்களா, நீங்கள் இரட்டையர்களாகப் பிறந்தபோது நான் இரட்டை மகிழ்ச்சி அடைந்தேன். இப் போது இரட்டைத் துன்பம் அனுபவிக் கிறேன். என்னுடைய கடைசி ஆசையையும் திட்டத்தையும் உங்களிடம் சொல்லிவிடுகிறேன். அது ஒன்றுதான் நான் உங்களுக்கு இனிச் செய்யக் கூடியது."

அவர் தன் திட்டத்தை விளக்கினார். இருவருமே கஷ்டப்படு வதைக் காட்டிலும், ஒருவனாவது சுகப் படுவது மேல். அவரது நெருங்கிய நண்பர் உமாபதிக்குப் பிள்ளை இல்லை. அவருக்கு ஒருவனைத் தத்துக் கொடுத்து விட்டால் அவனாவது சௌக்கியமாக இருக்கலாம். மற்றவன் பாடுபட்டுக் கடனை அடைக்க முடலலாம்.

முதலில் சகோதரர்கள் சம் மதிக்கவில்லை. பிறகு தந்தையின் விருப் பத்தைத் தட்டமுடியாமல் ஒப்புக் கொண்டார்கள். சீட்டுக் குலுக்கியதில், சுகப்படும் வாய்ப்பு பூபதிக்குக் கிடைத் தது.

"அண்ணா! என் மனங் குளிர்ந்தது! கடவுள் என் பிரார்த்த னைக்குக் கருணை காட்டிவிட்டார்," என்று பூரித்தான் இளங்கோ.

பூபதியின் முகம் களையிழந்து கண்ணீல் நீர் கோத்தது. "தம்பி, இரட்டையராக நம்மைக் கடவுள் பிறப்பித்ததே நாம் இருவரும் சுகமோ துக்கமோ அதைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்று தானே?"

"பூபதி!" தந்தை கூப்பிட் டார். "கடவுளின் திருவுள்ளம் நீ சுகம் அனுபவிக்க வேண்டும் என்று இருக்கிறது. மறுக்காதே. எங்களைப் பற்றியோ இந்தக் கடனைப் பற்றியோ

எஸ். விஜயலட்சுமி

துக்கத்துக்கு ஒருத்தன்



இனிக் கவலைப்படக்கூடாது,'' என்றார்.

சொக்கலிங்கம் அந்திம காலத்தில் இட்ட விசித்திரமான கட்டளைப்படி சில தினங்களில் பூபதி, தந்தைக்கு மிகவும் நெருங்கியவரும் குடும்ப நண்பரும், பல தேயிலைத் தோட்டங்களின் சொந்தக்காரருமான உமாபதியின் பிள்ளையானான்.

உமாபதி தன் அரண்மனை போன்ற பங்களாவில் அவனை மனதார உபசரித்து எல்லா வசதிகளையும் செய்து தந்தார்.


பூபதியின் மனம் அமைதிப் படவில்லை. ''உண்மையில் என் உடம்புதான் அப்பாவின் கட்டளைக்குப் பயந்து இங்கு இருக்கிறதே தவிர உள்ளம்

பிஞ்சு மனம்

''இந்தப் பயல் கத்திரிக் காயை முற்ற விடாமல் பிஞ்சி லேயே பறிச்சிடுருனே! சொன்னு கேட்கிருனு?

''அந்த அடுத்த தோட்டத்தில் எப்படி ஒரு காயையும் பறிக்காமல் அத்தனையையும் முற்ற விடுகிருர்கள்! அது இவனுக்குத் தெரியுதா?'' என்று தன் மகனைப் பற்றி வருத்தமாக ஒருவர் கூறி வந்தார்.

பத்து நாள் கழித்துப் பார்த்தால், முற்றிய காய்களைப் பறித்த பின்பு அடுத்தவர் தோட்டத்தில் செடி காய்க்காது சாம்பியிருந்தது; இவர் தோட்டத்தில்



காய்ப்பு இன்னும் நடந்து கொண்டே இருந்தது!

தாவர இயலின்படி பிஞ்சுகளைப் பறித்து விற்பதுதான் லாபகரமானதாம்!

—எஸ். செளந்தரபாண்டியன்

பூராவும் ஊரிலேயேதானிருக்கிறது. தம்பி எப்படிச் சிரமப்படுகிருனே? நான் இங்கு சுகவாசியாக இருக்கிறேன், எவ்வளவு துரதிருஷ்டமானவன்,'' என்று புலம்பினுன்.

வருடங்கள் பல கழிந்தன.

சொக்கலிங்கம் இறந்ததும் அவர் பயந்தபடியே அவரது சொத்துக்கள் கடனுக்குப் போயின. அப்படியும் மாத்தூர் ஜமீந்தாரிடம்—அதாவது முன்னுள் ஜமீந்தார்—இரண்டு லட்சம் பாக்கியிருந்தது.

இளங்கோ அவரைச் சமாதானப் படுத்தினுன்—தான் உழைத்து அவர் கடனை எப்படியும் அடைத்து விடுவதாக.

அரும்பாடு பட்டுக் கடைசியில் ஒரு மருந்துக் கம்பெனியில் அக்கவுண்ட்டண்ட்டாக வேலைக்குச் சேர்ந்தான். ஐந்நூறு ரூபாய் கிடைத்தது—மாதம் பிறந்ததும் முன்னூறு ரூபாயைக் கொண்டு போய் மாத்தூர் ஜமீந்தாரின் பங்களாக் கணக்கப் பிள்ளையிடம் தருவான்.

சில மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் கணக்கப் பிள்ளை பணம் வாங்கிக் கொள்ள மறுத்து அவனை முதலாளி அழைப்பதாகச் சொல்லி அவரது அறைக்குக் கூட்டிப் போனுர்.

மாத்தூர் அவனைத் தன்னுடன் பிரியமாக அணைத்துக் கொண்டு தட்டிக் கொடுத்தார்.

''நீ நிறையச் சம்பாதித்து என் கடனை அடைக்க நானே ஒரு வழி வகுத்துத் தருகிறேன்,'' என்றவர், விருந்துச் சாப்பாடு ஆனதும் அவனிடம் தன் திட்டத்தைக் கூறினுர். ''ஒவ்வொரு தடவை நீ வெற்றி அடையும்போதும் உனக்குப் பத்தாயிரம் ரூபாய். இருபதே தடவை.''

இளங்கோ பிரமித்தான். மறுநாள் யோசித்துச் சொல்வதாகக் கூறி அவரிடம் விடை பெற்றுன். பிறகு வந்து ஒப்புக் கொண்டான்.

ஒரு தினம் அண்ணன் பூபதி வழக்கம்போல் இரவு நேரம் தூக்கம் பிடிக்காமல் தன் அறையில் உட்கார்ந்திருந்த சமயம்—

ஈன சுரத்தில் எங்கிருந்தோ ஓர் அழுகை ஒலி அவன் காதில் விழுந்தது. அந்தக் குரல் எதையோ தெளி

வில்லாத வார்த்தைகளால் புலம்பிக் கொண்டிருப்பது மீண்டும் மீண்டும் கேட்டவாறிருந்தது.

கதவைத் திறந்து கொண்டு, நிலா படிந்த கடற்கரை ஓரமாக நடந்தான். காற்று வீசிக் கொண்டிருந்தது, கடற்பாசிகளின் மணத்தைத் தாங்கியவாறு.

கடற்கரை மணலிலிருந்த ஒரு குடிசை அருகே பெண் ஒருத்தி அலங்கோலமாக அழுது கொண்டிருந்தாள்.

கட்டு மரத்திலே தன் மண்டையை மோதிக் கொண்டவள் திடுமென்று ஓடிக் கடலில் குதித்து விட்டாள். பூபதி காப்பாற்றியிராவிட்டால் முழுகி இறந்திருப்பாள். துயரத்துக்கான காரணம் அவளது அழுகையினூடே அவனுக்குத் தெரிய வந்தது, பெருமூச்செறிந்தான். கட்டுமரத்தில் சென்ற கணவனை இரண்டு நாளாய்க் காணோமாம்.

பூபதி எப்படியும் அவள் கணவனைத் தேடிக் கண்டு பிடித்துக் கொண்டுவருவதாக வாக்களித்துவிட்டு பங்களாவுக்குத் திரும்பினான்.

இளங்கோவின் யந்திரப் படகு இருளில் பொறுமையாகக் காத்திருந்தது சரக்குக்காக. கரையோரம் மறைவிடத்துக்காகப் பிரத்தியேகமாக வளர்க்கப்பட்ட புதர்கள் அவனுக்கு அனுசரணையாக இருந்தன.

இன்னும் மூன்று பயணம் வெற்றிகரமாக அவன் செய்தாகிவிட்டால் அப்பாவின் கடன் பூர்ணமாக அடைபட்டுவிடும். இருண்ட சமுத்திரத்தில் கறுப்பு நிழலுக்காக அவன் கண்கள் உன்னிப்பாகக் கவனித்தன.

ஏன் சரக்கு இன்னும் வரவில்லை?

திடுமென்று கரைப் பக்கமிருந்து ஒரு மோட்டார்ப் படகு எதிர்ப்பட்டது. அதன் முகப்பு விளக்கு கடலின் இருண்ட உடம்பின்மீது ஒளி வெள்ளமாகப் பாய்ந்து புரண்டு புரண்டு எதையோ தன் வெளிச்சக் கண்களால் தேடுவதைப் போலிருந்தது.

பயமும் மிரட்சியும் இளங்கோவை வேட்டை நாய்களெனக் கவ்வின.





365 இரவுகள்

அவள் ஒரு தொடர் கதை நூறுவது நாள் விழாவில் தமிழக முதல்வர், ஏவி. எம், கண்ணதாசன், ஜெமினி, புட்டண்ணு முதலியோர் கலந்து கொண்டனர். ராஜ் கபூர் பிரதான விருந்தாளி. இடம்: மியூஸிக் அகாடமி. கண்ணதாசன் பேசினார்:

“எனக்கும் முதல்வருக்கும் அரசியல், மற்ற வேறுபாடுகள் இருந்தாலும் நாங்கள் இருவரும் நீண்டநாளாகவே நண்பர்கள். இருவரும் சினிமாவில் இருந்த ஆரம்ப காலத்தில் நடந்த நிகழ்ச்சி ஞாபகம் வருகிறது. ஓர் அழகிய பெண், சினிமாவில் நடிக்க சான்ஸ் கேட்டு வந்தாள். ஏதோ காரணத்திற்காக அவளுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை.

ஓர் ஆண்டு கழித்து, மீண்டும் அவள் சினிமா கம்பெனிக்கு வந்தாள். ‘எவ்வளவு அழகாக இருந்த பெண் இப்படி ஒரு வருடத்திற்குள் அழகு மங்கி சிதைந்து காணப்படுகிறாளே’ என்று சொன்னேன்.

அதற்கு கருணாநிதி, “‘ஒரு வருடத்திற்கு முன்னூற்று அறுபத்தைந்து இரவுகள் ஆயிற்றே!’’ என்றார்.

கண்ணதாசன் இந்தச் சம்பவத்தைக் கூறியதும், மியூசிக் அகடமி முழுவதும் ஒரே சிரிப்பு, கை தட்டல். மேடையிலிருந்த ராஜ் கபூருக்கு இதை அருகில் இருந்த திரு. ஏவி. எம். ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் காதில் சொன்னார். ராஜ் கபூர் புரிந்து கொண்டு கைதட்டிச் சிரித்தார். ரசிகர்கள் தொடர்ந்து மற்றொரு முறை ஆரவாரம் செய்தனர். முதல்வரும் வேறு வழியின்றி, சிரிப்பில் கலந்து கொண்டார்.

—ராஜு

காவல் படகு! இஞ்சின் ஓசையை நிறுத்தித் தன் படகைச் சட்டென்று திசை திருப்பி வெளிச்சம் படாத ஓரப்பகுதிக்குக் கொண்டு சென்றான்.

அடுத்த விநாடி தூரத்திலிருந்த படகிலிருந்து யாரோ அதிகாரி ஒருத்தர் கூவும் ஓசை அவன் காதில் தெளிவில்லாமல் விழுந்தது.

அந்தப் படகும் பின்தொடர்ந்தது. ஆனால் அதிலிருந்து ஏன் துப்பாக்கிக் குண்டுகள் தன் படகைத் துளைக்கவில்லை என்று அவனுக்குப் புரியாமலிருக்கும்போதே அந்தப் படகு அவனுக்கு மிக அருகே வந்துவிட்டது.

"தம்பி! இளங்கோ!" வந்த படகிலிருந்த பூபதி கூவினான்.

"அண்ணா!" என்றவன் பிரமித்துப் போனான். திகிலெல்லாம் குதூகலமாக வடிவாயிற்று.

பூபதி தன் படகிலிருந்து இறங்கி இளங்கோவைத் தழுவிக் கொண்டு நீண்ட நேரம் விசும்பி விசும்பிக் கண்ணீர் வடித்தான்.

"தம்பி, அப்பாவுக்கு நீதான் என்னைக் காட்டிலும் செல்லமானவன். எப்படிக் கறுத்து, இளைத்து, உருமாறிவிட்டாய்."

தம்பி அண்ணனைப் பார்த்து வேதனையுடன் சிரித்தான். "அண்ணா, சுகப்படப் போனவன் மாதிரி உன்னைப் பார்த்தால் தெரியவில்லை. என்னைவிட வற்றிப் போயிருக்கிறாய். அப்பாவின் நண்பர் உன்னைச் சரியாக உபசரிக்கவில்லை என்று தோன்றுகிறது."

"அப்படிச் சொல்வது பாவம் தம்பி. என்னால்தான் அனுபவிக்க முடியவில்லை. எனக்கு அவர் எல்லாச் சவுகரியங்களும் செய்து தந்திருக்கிறார். மறுத்ததேயில்லை. உன்னை இன்று சந்திக்கும் அதிருஷ்டம்கூட அவர்களால்தான் எனக்குக் கிடைத்தது. காணாமல் போன ஒரு மீனவனை இரண்டு நாளாக இந்தக் கடல் முழுதும் தேடி வருகிறேன்—ஒருகால் அவன் எங்காவது உயிர் பிழைத்து மீட்கப்படுவதற்காகத் தவித்துக் கொண்டிருக்கிறானே என்று. தெய்வம் உன்னை எனக்குக் காட்டித் தந்தது."

"அப்படியா! நான் காத்திருக்கும்போது ஒரு மீனவன் ஒரு கட்டையைப் பிடித்துக்கொண்டு மிதந்திருப்பதைக் கண்டேன். காப்பாற்றிப் படுக்க வைத்திருக்கிறேன்," பூபதிக்கு ஆனந்தப் பெருக்கெடுத்தது.

அப்பாவின் கடனை அடைப்பதற்காக ஜமீன்தார் தனக்கு இட்டிருக்கும் கடத்தல் பணியைப் பற்றித் தம்பி அண்ணனிடம் விவரித்தான்.

"தம்பி, நான் உன் படகில் ஏறிக்கொள்கிறேன். நீ என் படகில் ஏறிக் கொள். இவ்வளவு நாள் நான் உயிரோடு இறந்தது போதும். இனி மேலாவது சந்தோஷமாக வாழ்வதற்குக் கருணை பண்ணப்பா."

இளங்கோ திகைத்தான்.

"அண்ணா, என்ன சொல்கிறீர்கள்?"


"இடத்தை மாற்றிக் கொள்வோம் என்கிறேன். நான் கடத்தல் பொருள்களுடன் செல்கிறேன். நீ சீக்கிரம் போய் என் படகில் ஏறிக் கொள். ஐந்து வருடம் நான் அனுபவிக்காத சுகத்தை அனுபவிக்க உன்னிடம் பிச்சை கேட்கிறேன்."

இளங்கோ பூபதியின் படகில் ஏறிப் புறப்பட்டுவிட்டான்.

பூபதி சுறுசுறுப்பாகப் படகைச் செலுத்தத் தொடங்கினான். பழக்கமில்லாததால் அவன் சீக்கிரமே துவண்டுவிட்டான்.


காவல் படகுகள் அவனை மொய்த்துக் கொண்டன. அதிகாரிகள் படகில் குதித்து அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

பூபதியின் முகம் ஐந்து வருடத்திற்குப் பிறகு முதல் தடவையாக மலர்ந்தது. இதயத்தில் மகிழ்ச்சி பூத்தது.



திருச்சியில் 73'ம் நம்பர் பஸ்ஸில் பெண்கள் உட்காரும் வரிசைக்கு மேலே 'தாயினம்' என்று எழுதியிருக்கிறார்கள்.

—சீதாலட்சுமி சுப்ரமணியன்



மத்தியப் பிரதேச கஜு-
ராஹோ கோவிலின் உள் தளக் கூரை
அலங்காரம்.



எழும்பூர் ரயில் நிலையத்
தில் கட்டிடம் எழுகிறது.

சென்னையில்
ஓய்வாக
தொப்பியில் ஒரு
வீரர்களின்
ல் காணலாம்.



எங்க வீட்டுப்
பாப்பா.

சென்னைக் கடற்
கரையில் மாலை நேர
மீனவர் குடும்பம். ஈரால்
வகைக்கு வரி கூட்டி
யிருக்கிறார்கள்.





"எங்கே போய்விட்டாள்? வயசு வந்த பெண்ணுக லட்சணமாக இல்லையே இவள்! அம்மா கஷ்டப்படுகிறளே என்று ஒத்தாசையாக வீட்டுவேலையைச் செய்கிருளா?" என்று முணு முணுத்தபடி மதிய உணவு தயாரித்த சாமான்களைக் கழுவிக் கொண்டிருந்தாள் சாந்தம்மாள்.

"அம்மா...!" என்று கொஞ்சல் கலந்த குரலில் அழைத்தபடி துள்ளி ஓடிவந்தாள் சுமதி.

"அதில் ஒண்ணும் குறைச்சலில்லே. எங்கேடி போனே? இந்தச் சட்டி பானையைக் கழுவக் கூடாதா?"

"ஏன் கூடாது. விலகும்மா நான் கழுவுறேன்," என்று கூறிய சுமதி ஓடிச் சென்று தாயின் கையில் இருந்த பானையைப் பிடுங்கினுள்.

"இவ்வளவு நேரமாக எங்கே போயிருந்தாய்?"

"சாலாட்சிப் பாட்டி வீட்டுக்குத்தான் போனேன் அம்மா..."

"அதுக்கு இப்பத்தான் நேரம் பார்த்தியாக்கும்?"

"அந்த ரேவதி இல்லேம்மா, சாலாட்சிப் பாட்டியோட பேத்தி? அவள் கிட்டே சொல்லியிருந்தேன், இன்னைக்கு வர்றதாய். சொல்லிட்டு ஏமாத்தலாமாம்மா?"

"ஆமாம்! ஒரு பத்து வயசுக் குட்டியிடம் சொல்லிவிட்டால், பெரிய இதுவாக்கும்? சரி, சாலாட்சிப் பாட்டிக்கு இப்ப எப்படி இருக்கு?"

சுமதி கடகடவென்று சிரித்துவிட்டு, "நம்ம நாட்டு வைத்தியர் நடராசுதானே மருந்து கொடுக்கிறர்? சீக்கிரமே பாட்டிக்கு மோட்சம் கிடைச்சுடும் அம்மா! ஆனால், உயிர் இழுத்துக்கிட்டே இருக்குது. பாட்டிக்குச் செத்துப் போகவே மனசில்லே!"

லேசாகச் சிரித்தாள் சாந்தம்மாள். கழுவிச் சுத்தம் செய்த பானை சட்டிகளை வாசலில் வெய்யில் உள்ள பகுதியில் வைத்தாள்.

"என்னம்மா சிரிக்கிறே?"

"இதே சாலாட்சிக் கிழவி ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு மூச்சுக்கு மூன்று தடவை, 'முருகா, என்னைக் கொண்டு

போய் விடப்பா, இனிமேல் எதற்காக நான் பூமிக்கு பாரமாக இருக் ணும்?' என்று வேண்டிக் கொண்டதை இந்த இரண்டு காதுகளால் கேட்டிருக்கேன். அதே கிழவி இப்போது சாகப் பயப்படுகிருள்...'' என்று கூறியவள், ''அந்தப் பெண் ரேவதி சோறு சமைத்தாளாமா?'' என்று கேட்டாள்.

''பின்னே இவ்வளவு நேரம் அந்த வீட்டில் எனக்கென்ன வேலே..?''

''சோறு ஆக்கிஞயா...?''


''அந்த வேலேயை அவள் செய்துவிட்டாள். புடலங் காயை அரிந்து வைத்துக் கொண்டு 'கூட்டு' வைப்பது எப்படி என்று விழித்துக் கொண்டிருந்தாள். அதை வைத்துக் கொடுத்து விட்டு வந்தேன்.''

சுமதி டப்பா டப்பாவாகத் திறந்து எதையோ தேடி ஞள்.

''என்னடி பார்க்கிறே?''

என்னவோ ஒரு தேவை

கலேச்செழியன்





பின் வரும் சொற்களைக் கண்ணாடி முன் காண்பித்து அதில் தெரியும் பிரதிபலிப்பைப் படித்தால் எந்தச் சொல் மாறுமல் இருக்கும்?

MADAM, ANNA, AMMA, NUN.

56'ம் பக்கம் பார்க்க.

MADAM ANNA AMMA NUN

"முறுக்கு வச்சிருந்தியே அம்மா? ஒண்ணே ஒண்ணு.."

"அழகாத்தான் இருக்குது. பத்தொன்பது வயதுப் பெண் தின்னக் கேட்பது!" என்று செல்லமாய்க் கோபித்துக் கொண்ட சாந்தம்மாள், மகள் கேட்ட தின்பண்டத்தை எடுத்துத் தந்தாள்.

மத்தியான வேளை. கண்ணப்பன் கடையை மூடிவிட்டுச் சாப்பாட்டிற்கு வந்திருந்தார். ஒன்றிரண்டு பெண்கள் இருந்தார்கள்.

"என்ன கண்ணப்பா!" வயதில் முதிர்ந்த அம்மாள் ஒருத்தி கூப்பிட்டாள்.

"என்னம்மா?"

"உன் அம்மா எதையோ மனத்தில் வைத்துக் கொண்டிருக்கிருள். அதுதான் உயிர் போகவில்லை..."

"என்னவென்று கண்டேன் நான்?"

"சில கிழவிகளுக்கு மண், பொன், இவைகளைப் பிரிந்து செல்ல மனம் வராது. எதற்கும் உன் நிலத்தில் கொஞ்சம் மண் எடுத்து வந்து அதைத் தண்ணீரில் போட்டு ஒரு நகையைத் தண்ணீர் விட்டு இழைத்து அதையும் சேர்த்து ஒரு மிடறு கொடுத்துப் பாரேன்..."

"சாந்தம்மா நேற்றே அதை செய்துவிட்டார்கள். வேறு என்னத்தை அம்மா நினைத்துக் கொண்டிருக்கிருர்களோ..." கண்ணப்பன் கலங்கினுர்.

"வருத்தப் படாதேப்பா. வயதானவங்க தானே? சந்தோஷமாக அனுப்பி வை."

"அம்மா இறப்பதைப் பற்றி நான் கவலைப் படவில்லை; ஆனுல்.." பெருமூச் செறிந்தார் அவர். ஏணையில் சின்னக் குழந்தை ஒன்று நெளிந்து கொண்டிருந்தது. அதைச் சமாதானப் படுத்தத் தெரியாமல் பெரிய பெண் விழித்துக் கொண்டிருந்தாள்.

சாலாட்சி, கண்ணப்பன் சிறுவனுக இருந்தபோதே மாங்கல்யத்தை இழந்துவிட்டவள். மகனை வளர்ப்பதற்காக வெய்யில் மழை என்று பாராமல் சொந்த நிலத்தில் பாடுபட்டு உழைத்தாள். கடை வைத்துத் தந்தாள். நல்ல இடத்தில் மணமுடித்தும் வைத்தாள். ஆனுல்—

நான்கு மாதங்களுக்கு முன் பேரிடி விழுந்தது. கண்ணப்பனின் மனைவி திடீரென இறந்துவிட்டாள்.

மருமகளின் மறைவுக்குப் பின் குழந்தைகளை எப்படியோ கவனித்து வந்த சாலாட்சியும் திடுமென்று ஜுரம் என்று படுத்துவிட்டாள்.

வெள்ளரிக்காயை வெடுக் வெடுக்கெனக் கடித்தவாறு வீட்டுக்குள் ஓடிவந்த சுமதி, நாலைந்து பெண்கள் கூட்டமாய்ப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு, ஆச்சரியப்பட்டாள். "இதோ சுமதியே வந்துட்டாள்," என்றுள் ஒருத்தி.

"என்ன அத்தை?" என்று கோடி வீட்டுச் சீதம்மாளை விசாரித்தாள் சுமதி.

"ஹூம்! எல்லாம் அந்தச் சாலாட்சி பாட்டியைப் பத்தித்தான்," என்று பெருமூச்சு விட்டாள் அந்தம்மாள்.

"ஏன், பாட்டிக்கு எப்படி இருக்கு?"

"இன்னும் அதே இழுப்புத் தான். பயங்கர இழுப்பு. ஏன் உசிர் போக மாட்டேங்குதுன்னு யாருக்கும் தெரியலே."

இன்னோர் அம்மாள் சொன்னாள்:

"பாட்டிக்குக் குறையெல்லாம் என்ன தெரியுமா? குழந்தைகளைப் பெற்றுப் போட்டுட்டு மருமகள் இறந்து போயிட்டாள். தானும் இறந்து போய்விட்டால் அந்தக் குழந்தைகளை இனிமேல் யார் பார்த்துக் கொள்வார்கள் என்ற கவலைதான்."

"பாவம் பாட்டி, அதற்கு நாம் என்ன பண்ண முடியும்?" என்றாள் சுமதி.

"தபால்காரர் பெண் கல்யாணி இல்லே, அவளை இதற்குத்தான் தயார்ப் பண்ணி வைச்சிருந்தோம். 'நான் உங்க பிள்ளையையும் பேத்திகளையும் பார்த்துக் கொள்கிறேன் பாட்டி'ன்னு சும்மாக்காணும் சொல்லும்படி கேட்டிருந்தோம். ஒப்புக் கொண்டிருந்தவள் திடுதிப்பென்று சேலத்திலே என்னவோ திருவிழான்னு சொல்லிக் கிளம்பிப் போயிட்டாள்."

சீதம்மாள் அன்புடன் சுமதியின் தலையைக் கோதிவிட்டாள்.

"கிழவி எப்படியும் செத்துப் போகணும். இப்படி இம்சைப்படக் கூடாது. சுமதிக் கண்ணு, நீதாம்மா அதற்கு ஒத்துழைக்கணும்."

"நானா?"

"ஆமாம்மா, கல்யாணி செய்யாததை நீ செய்யணும். செய்வாயா? சாலாட்சிப் பாட்டிக்கு உன் மேல் ரொம்பப் பிரியம். ரொம்ப நம்பிக்கை. நீ பாட்டி காதிலே 'பாட்டி, நீ கவலைப் படாதே. நான் உங்கள் மகனைக் கட்டிக் கொள்கிறேன். குழந்தையைப் பிரியமாக நான் வளர்க்கிறேன்'னு சும்மாவானும் சொல்ல வேண்டியது. கிழவிக்கு உடனே திருப்தியாகிவிடும். மனம் நிறைவாகக் கண்ணை மூடுவாள்."



'யாருக்கும் வெட்கமில்லே,' ('சோ' நாடகம்) படமாகிறது.

சிவகுமார், ஜனந்தா.

சட்டென்று கோபம் வந்துவிட்டது சுமதிக்கு. "நல்லாயிருக்குதே நீங்க சொல்றது? அந்த மாமாவுக்கு வயசு நாற்பதாகுது..." என்று அவள் சொல்லிக் கொண்டிருந்தபோது, உள்ளேயிருந்து சாந்தம்மாளும் வந்தாள். "பாருங்கம்மா, அந்தச் சாலாட்சி பாட்டிகிட்டே நான் போய், 'உங்க பிள்ளையை நான் கட்டிக்கிறேன்'னு சொல்லணுமாம்! எப்படி இருக்குது?" என்று தாயிடம் புகார் செய்தாள்.

"அதனாலென்னம்மா, ஏதோ கிழவி நல்லபடியா கண் மூடணும்ணுதானே சொல்றாங்க? சொல்லு, அதனாலே ஒண்ணும் தப்

பில்லே.'' என்றுள் சாந்தம்மாள்.

''இப்ப இப்படிப் பேசுவீங்க. அப்புறம் நீங்களே என்னைப் பரிகாசம் பண்ணுவீங்க.''

''சே, சே, மாட்டோம், சுமதி,''

''பிராமிசா?''

''பிராமிசாய்.''

''அப்படியானுல் சரி,'' என்று குதித்தோடி மறைந்தாள் சுமதி.

மறுநாள் மத்தியான்னம் சாலாட்சிப் பாட்டியைக் கவனிக்கச் சென்ற சுமதி, ''பாட்டி, பாட்டி,'' என்று அந்த மெல்லிய உடம்பை உலுக்கினுள். மூடியிருந்த கண் லேசாகத் திறந்தது.

கொடியெனத் துவண்டு கிடந்த சாலாட்சிப் பாட்டியின் காது பக்கம் குனிந்து, ''பாட்டி... நீ எதற்கும் கவலைப்படாதே. குழந்தையை வளர்த்து ஆளாக்க வேண்டிய பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். இன்னெரு விஷயம் பாட்டி, உங்கள் பிள்ளை தாரம் இழந்து தவிக்கிருர் என்ற கவலையும் வேண்டாம். நான்...அவரைக் கட்டிக் கொள்கிறேன்,'' என்றுள் சுமதி.

சாலாட்சிப் பாட்டியின் இறுதிச் சடங்குகள் நடந்து முடிந்தன.

வந்திருந்த உறவினர்கள் ஒவ்வொருவராய்ச் சென்று விட்டார்கள்.

கைக் குழந்தை அலறு அலறென்று அலறிக் கொண்டிருந்தது. கண்ணப்பனும் பெரிய பெண் ரேவதியும் அதைச் சமாதானப்படுத்திப் பார்த்தார்கள். அழுகை நிற்கவில்லை.

சுமதி உள்ளே வந்தாள்.

''இப்படிக் கொடுங்க.''

என்று குழந்தையை வாங்கித் தோளில் சாத்திக் கொண்டாள்.

மறுகணம் அழுகை நின்று விட்டது.

சுமதி மௌனமாகப் பால் கரைத்து, புட்டியில் ஊற்றிப் புகட்டினுள். குழந்தை தூங்க ஆரம்பித்தது. தோளில் சாத்தியபடி தன் வீட்டுக்குப் போனுள்.

''என்னடி இது?'' என்று சாந்தம்மாள் சிரித்தாள்.

சுமதி சிரிக்கவில்லை. ''சீக்கிரம் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணும்மா.''

''என்னடி சொல்றே? கல்யாணமா? மாப்பிள்ளை?''

''அ வ ர் தா ம் மா—ரேவதியோட அப்பா.''

நெருப்பை மிதித்த மாதிரி தாய் துடித்தாள். ''உனக்குப் பைத்தியம் கிய்த்தியம் பிடித்து விட்டதா என்ன?''

''நல்ல அறிவோடுதான் பேசறேம்மா. ஒரு கிழவிக்கு—அதுவும் செத்துப் போகப் போகிற பாட்டிக்கு—வாக்குக் கொடுத்துவிட்டு, அதை நிறைவேற்ருமல் இருக்கலாமா?''

''விளையாடறியா?''


''இல்லேம்மா. நான் விளையாடலே,'' என்றுள் சுமதி.

அவள் பழைய விளையாட்டுப் பெண்ணல்ல என்று சாந்தம்மாளுக்குப் புரிந்துவிட்டது.

''நாங்கள் படிக்கும் போதெல்லாம் ஆசிரியர் மேல் நாங்கள் அன்பைச் செலுத்தினேம்; நீங்கள் ஆசிரியர் மேல் அம்பைச் செலுத்துகின்றீர்கள். இதுதான் இடைப் போலி.''

(தமிழ்ப் பேராசிரியர் வகுப்பில் இலக்கணம் சொல்லித் தந்தபோது.)

—அ. இராச குரு





அப்பா சாப்பிடுகிற தட்டு

"அம்மா!. அம்மா!" என்று கூப்பிட்டாள் ராஜம். பதினெட்டு வயதுப் பெண்ணான அவள், தளதள வென்று இருக்கவேண்டியவள், மெலிந்து துரும்பாய்க் கிடந்தாள்.

"என்னம்மா ராஜம்?" என்றாள் தாய்.

"அப்பா எங்கேம்மா?"

"கீழே இருக்காரம்மா!"

"மேலே வரலியா?"

"வரலே."

"ஏனம்மா?"

"அவருக்கு....அவருக்கு.."

"அப்பாவுக்கு என்னம்மா? நீ சொல்ல வந்ததைச் சொல்லாமல் இழுக்கிறதைப் பார்த்தால் பயமா இருக்கு எனக்கு..."

"பயப்படும்படியா ஒண்ணுமில்லே."

"பின்னே ஏன் அம்மா அப்பா வரலே?. இந்த ஆஸ்பத்திரியிலே நான் ஒரு மாசத்துக்கும் மேலா படுத்துக் கொண்டிருக்கிறேன். அப்பா காலேலேயும் சாயங்காலத்திலேயும் தினம் ரெண்டு தரம் வந்து என்னைப் பார்த்துட்டுப் போவாரே?"

"வாஸ்தவம்தான்."

"அப்படி நான் படுத்துக் கொண்டிருக்கிற சமயத்திலே எல்லாம் ரெண்டு மூணு தரம் தினசரி மாடிப் படி ஏறி வந்தவர் இப்போ நான் டிஸ்சார்ஜ் ஆகிறப்போ மட்டும் ஏனம்மா வரலே?"

"அவருக்கு கால்லே காயம்.."

"காயமா!"

"நம்ம வீட்டிலே மார் பளவுக்கான பெரிய கண்ணாடி மாட்டியிருந்தோமே?"

"மேலச் சுவர்லே, ஜன்னல் பக்கமா?"

"ஆமாம், அதுவேதான். ஒட்டடை அடிக்கிறப்போ ஒட்டடைக் கம்பு பட்டு அது கீழே விழுந்து தூள் தூளாக நொறுங்கிப் போச்சு."

"ஐயோ!"

"கண்ணாடிச் சில் ஒண்ணு அப்பாவோட வலது பாதத்திலே குத்தி ரத்தம் 'களகளன்'னு கொட்டி, கால்லே மருந்து வைச்சுக் கட்டு போட்டிருக்கு..."

"அப்பாவை இப்பவே பார்க்கணும் போலிருக்கும்மா...பணத்தைக் கட்டிட்டு, டிஸ்சார்ஜ் சீட்டு வாங்கிட்டு வா. நாம் புறப்படலாம்."

"ராஜம்..!"

"கூப்பிட்டியாம்மா?"

சுகந்தி



புகையிலை கொடுத்து..

கேரளாவில் நிலம்பூர் காட்டில் மலைக் குகைகளில் வசிக்கும் ஆதிவாசிகளின் வாழ்க்கை[illegible] தயாரிப்பாளர் சோமசேகரன் படம் எடுத்திருக்கிறார்.

படத்தின் ஒளிப்பதிவாளர் வி. வில்லியம்ஸ் கூறினார்:

"ஆதிவாசிகளை வசியப் படுத்த நாங்கள் ஒரு உபாயத்தைக் கையாண்டோம். புகையிலை என்றால் அவர்களுக்குக் கொள்ளை ஆசை. புகையிலையைக் கொடுத்து அவர்களை படம் எடுக்கச் சம்மதிக்க வைத்தோம்." —திரைஞானி

"சாப்பிட வாம்மா!"

"தட்டுப்போட்டியாம்மா?"

"இல்லே ராஜம்....கையிலே பிசைஞ்சு போடறேன்."

"எனக்கும் அது ரொம்பப் பிடிக்கும் அம்மா."

"அப்பாவையும் கூப்பிடு ராஜம்."

"அப்பாவுக்கும் கையிலேயே பிசைஞ்சு போடப் போறியாம்மா?"

"ஆமாம்."

"இதோ அப்பாவே வந்துட்டார்!"

"நான் கொஞ்ச நாளாவே அம்மா கையிலே பிசைஞ்சு போட்டுத்தான் சாப்பிடறேன் ராஜம்."

"ஏம்மா, அப்பாவோட எவர்சில்வர் தட்டு எங்கே?"

"அதை ஒண்ணும் கேட்காதே."

"ஏம்மா?"

"நீ ஆஸ்பத்திரியிலே படுத்துட்டிருந்தப்போ அப்பாவுக்குச் செலவுக்குப் பணமில்லாமல் ரொம்ப கஷ்டப்பட்டார். வீட்டிலேயுள்ள சாமான்கள் எல்லாம் ஒண்ணொண்ணு மார்வாடி கடைக்குப் போயிட்டுது. சாதம் வடிக்கிற வெண்கலப் பானை, வென்னீர் போடற தவலை, அப்பா சாப்பிடற பெரிய எவர்சில்வர் தட்டுன்னு ஒண்ணொண்ணு போயிட்டுது!"

"அதுதான் அப்பா கையிலே சாப்பிடுறாரா?"

"ஆமாம்மா."

"அப்பா! என்கிட்டே இதெல்லாம் சொல்லாமத்தானே மறைச்சீங்க?"

"நீ குழந்தை. உனக்கேனம்மா அந்தக் கவலையெல்லாம்? சாப்பிடு."

"என்னங்க, ராஜம் எங்கே ரொம்ப நேரமாய்க் காணோம்?"

இதோ வருகிறாளே! எங்கேயம்மா போய்விட்டாய் நீ பாட்டுக்கு? என்ன அது பையிலே?"

"இந்தாங்க, கண்ணாடி, முன் மாதிரி சுவரிலே மாட்டுங்க. இந்தாங்க எவர்சில்வர் தட்டு. என் செலவுக்கு அப்பப்போ கொடுத்த பணத்தைச்

சேர்த்து வைச்சிருந்தேன். அதிலே வாங்கினதுதான்.''

''ஐயையோ.,.கண்ணாடி... தட்டு...''

''அப்பா! நீங்களும் அம்மாவும் நாடகம் போட்டதெல்லாம் போதும். என் முகத்தைப் பற்றி எனக்குத் தெரிந்துவிட்டது!''

''ராஜம்!''

''ஆமாம்மா. ஸ்டவ் பத்த வைக்கறப்போ டாங்க் வெடிச்சு என் மேலே நெருப்புப் பற்றிக்கொண்டதிலே என்னோட முகம் உருமாறி கோரமாயிட்டது. எனக்குத் தெரியும். ஆஸ்பத்திரியிலே படுத்திருந்தப்போ நான் கண்ணாடியிலே பார்த்துடக் கூடாதுன்னு நீங்க ரொம்பவும் ஜாக்கிரதையா முன்கூட்டியே காரியங்கள் எல்லாம் பண்ணினீங்க இல்லையா?''

''வந்து...''

''ஏம்மா! டிஸ்சார்ஜ் ஆகி நான் வீட்டுக்கு வந்தால் வீட்டிலேயுள்ள கண்ணாடியிலே பார்த்துவிடக் கூடாதேன்னு அந்தக் கண்ணாடியை உடைச்சது போறாதுன்னு அதை வேணும்னே காலிலே குத்திட்டு ரணகாயம் பண்ணிட்டிங்க. வீட்டிலே பெரிய பாத்திரங்கள், அகலமான பாத்திரங்கள் எல்லாம் இருந்தால் அதிலே தண்ணீர் வைச்சு அதன் தெளிவிலே எங்கே என் முகத்தை பார்த்துவிடுவேனோ என்கிற பயத்திலே பாத்திரங்களை—நீங்க சாப்பிடற எவர்சில்வர் தட்டைக்கூட— எடுத்துப் பரண்மேலே போட்டு வைச்சுட்டு எல்லாம் மார்வாடிக் கடைக்குப் போயிட்டுதுன்னு பொய் சொன்னீங்க.''


''ஆமாம்மா..''

''இவ்வளவு முன் ஜாக்கிரதை நீங்க பண்ணியும்கூட, வீட்டுக்கு வர்றப்போ, டாக்ஸி கண்ணாடியிலே என் முகத்தைக் கவனிச்சுட்டேன். எனக்குக் கடுகத்தனை வேதனையும் ஏற்படக்கூடாதுன்னு இவ்வளவு பாடுபடுகிற பெற்றோர் இருக்கிறவரையில் எனக்கென்னப்பா குறைவு? முகம் கோரமாயிருந்தால் இருக்கட்டும். என் வாழ்க்கை வெகு அழகாக அமையும். நிச்சயம்.''


''ராஜம்! என் கண்ணே!''


நம்ம ஓட்டலும் ஒரு ஓட்டலா? எதிர்லே ஜே.பி. ஓட்டல் கட்டி முடிச்சிருக்காங்க பாரு...
மோகன் தாரியா
முதல்லே உன் கணக்கை முடிச்சுடுவோமா?


இந்தப் பாழாய்ப்போன பஞ்சம் வந்து நம்மைத் தலை குனிய வைச்சிட்டுதே?
ஏன்? வரலாறு காணாத பஞ்சம்னு பெருமையடித்துக் கொள்ள வாய்ப்புக் கிடைத்திருக்கிறது இல்லையா?



ஆகா! என்ன கூட்டம்! எம்மாம் கூட்டம்! வயிறு குளிர்ந்தது!
டில்லி ஊர்வலம்
எனக்குப் பத்திகினு வருது. அங்கே கூட்டம் கூடினால் நமக்கு என்ன ஆச்சு?
மாநில சுயாட்சி



சமர்த்தா இந்தப் பைக்குள் வந்திட்டா உனக்கு வாழைப் பழம் தர்றேன். பா! பா!
இந்திரா எதிர்ப்பு
மூத்த காங்கிரஸ் மந்திரிகள்
அரசியல் சமாதி





தலைக்கு ஐந்து வார்த்தை

மொத்தம் எண்பது நட்சத்திரங்கள் இருக்கிறார்கள். பழைய முகம், புதிய முகம், குட்டி முகம் — இப்படிப் பல பேர்.

எல்லாரும் உங்களுக்குத் தெரிந்தவர்கள்.

ஒவ்வொருவரையும் பற்றி ஒவ்வொரு வாக்கியம் எழுதி அனுப்புங்கள். ஒரு வாக்கியத்துக்கு ஐந்து வார்த்தைக்கு மேல் போகக் கூடாது.

இடமிருந்து வலமாக எண்ணோ பெயரோ குறிப்பிட்டு, வாக்கியத்தை எழுதினால் போதும். படங்களைக் கத்திரித்து ஒட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை.

மிகச் சுவையான 80 வாக்கியங்களை எழுதியனுப்புகிறவருக்கு ரூ. 100 பரிசு உண்டு.

பரிசு பெறாதவற்றைத் திருப்பியனுப்புவதற்கில்லை.

உறையின்மீது 'தலைக்கு ஐந்து வார்த்தை' என்று குறிப்பிட்டு, 25.3.75க்குள் கிடைக்குமாறு அனுப்புங்கள்.

கேள் விகள்



பதில்கள் :

'அரசு'

☐ பக்கர், செய்யாறு.

விநோபாஜி அரசியலில் குதித்தால்... .?

பசுமாடு, பிரியாணியும் குருமாவும் சாப்பிட ஆரம்பித்துவிடும்.

☐ கோ. இராமானுசன், வழுதவூர்.

சென்னையில் சிவாஜி கணேசனுக்குச் சிலை வைத்தால் என்ன?

சென்னைச் சிலைகள்மீது உட்காரக் காக்கைகள்கூடக் கூச்சப்படுகின்றன. சாதாரண முக ஒற்றுமையை வரவழைப்பதே நம்மவர்களுக்குப் பெரிய காரியமாக இருக்கிறதே. ஆயிரம் முகபாவம் காட்டக்கூடிய சிவாஜியைத் திருப்திகரமாகச் சித்திரிக்கக்கூடிய சிற்பி இனிமேல்தான் பிறக்க வேண்டும்.

☐ பி. தர்மராஜ், சென்னை.

படக் காட்சி இறுதியில் 'ஜனகணமன' இசையுடன் தேசியக் கொடி காண்பிப்பதை நிறுத்தியதன் காரணம் என்ன?

சுமார் இருபத்தெட்டு வருடத்துக்கு முன்பு சென்னையில் ஒரு பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. மகாத்மா காந்தி சில நிமிடம் பேசினார். நன்றாக நினைவிருக்கிறது, ஒரு பிள்ளை ஒழுங்காக உட்கார்ந்து கேட்கவில்லை. ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரம் தோற்றது, போங்கள். காந்தியைத் தெய்வமாக மதித்த அன்றைய மக்களாலேயே அவர் பேச்சைப் பத்து நிமிடம் கட்டுப்பாடாக இருந்து கவனிக்க முடியவில்லை. இன்றைய சினிமாவுக்கு வருகிற மூன்றாம்தரக் கும்பலா மௌனமாக எழுந்து நின்று தேசிய கொடிக்கு மரியாதை செய்யப் போகிறது?

☐ ஆர். வெங்கடேஷ், உதகை.

சோவின் கருத்துக்களும், துணிச்சலும் எனக்கு மிகவும் பிடிக்கிறது. உங்களுக்கு?

அவர் ஓர் அதிசய மனிதர். படித்தவர்களில் அப்படியொரு தைரியசாலியைப் பார்க்க முடியாது.

☐ சாமு, கீரனூர்.

உடலெல்லாம் வெள்ளையாக இருக்கும் கொக்குக்கு அதன் கால்கள் மட்டும் கறுப்பாக இருப்பானேன்? இந்தக் கேள்விக்குப் பதில் தெரிந்தும் அதைக் கூறவிட்டால் உமது தலை வெடித்துச் சுக்கு நூறாகிவிடும்.

ஐயையோ, எனக்குத் தெரியாது. சத்தியமாகத் தெரியாது.

☐ வே. பா. குணசீலன், பெங்களூர்.

திரு. ஆதித்தனாருக்கு அமைச்சர் பதவி கிடைத்ததுபோல் தங்களுக்குக் கிடைத்தால் தி.மு.க.வைத் தாக்குவதை நிறுத்திவிடுவீர்கள் என்று நினைக்கிறேன்.

நல்ல ஐடியா. நினைக்கும் போதே நாக்கில் நீர் ஊர்கிறது. கீழ்ப்பாக்கத்துக்கு எழுதியதைக் கோபாலபுரத்துக்கு எழுதியிருக்கக் கூடாதா?

☐ ஆர். கே. கேயன், சென்னை.

மவுண்ட் ரோடிலுள்ள '————' தியேட்டரில் உட்கார்ந்து படம் பார்த்திருக்கிறீர்களா?

விதி யாரை விட்டது? ஒருமுறை. . . அது சரி, என்னை மான நஷ்ட வழக்கில் மாட்டி வைக்கத் தீர்மானித்துவிட்டீர்களா என்ன? வேண்டாம் சாமி. அது அருமையான முதல்தரத் தியேட்டர். ஆளை விடுங்கள்.





☐ ஜி. நிர்மலா, காரைக்குடி.

மூப்பது நாட்கள் உங்களுக்கு ஓய்வு கிடைக்கிறது. உலகத்தின் எந்த நாட்டில் அதைக் கழிக்க விரும்புவீர்கள்?

இந்தியாவில், தமிழ்நாட்டில், நான் பிறந்த கிராமத்தில்.

☐ எம். குணசேகரன், ஒட்டங்காடு.

இந்தியாவில் ராணுவ ஆட்சி ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா?

நகைச்சுவை இல்லாத நாட்டில்தான் ராணுவ ஆட்சி ஏற்பட முடியும். இந்தியா, சிரிக்கத் தெரிந்த நாடு.

☐ ப. காமராசன், நன்செய்புகழூர்.

முன்பு ஸ்ரீகாந்த் வேவ். இப்போது கமலஹாசன் வேவ் போலிருக்கிறதே?

இதெல்லாம் வேவ் அல்ல, வேவ்லெட்.

என் பெயரைப் புன்னகைநாதன் என்று மாற்றிக் கொள்ளலாம் என்றிருக்கிறேன். சிரிக்கப் போகிறார்கள்.

☐ எஸ் பாபு, பெங்களூர்.

கலைஞர் கருணாநிதியிடம் தாங்கள் காணும் நற்குணங்கள் என்ன?

தமிழ்ப் புலமை; பேச்சாற்றல்; உடனடியாகத் தீர்மானத்துக்கு வரும் விரைவு; தளராத தன்னம்பிக்கை.

☐ அப்துல் ரஹீம், நிரவி.

21'ல் ஆரம்பித்த உமது பதில்கள் 18, 19, 14 என்று விலைவாசிபோல் ஏறி இறங்குவது ஏன்?

ஏறின விலைவாசி இறங்குவதாவது! எந்த உலகத்தில் இருக்கிறீர்கள்?

☐ எம். எஸ். பத்மநாபன், மாராடி.

சத்யஜித் ராய் ஒரு மாநிலத்தின் முதல் மந்திரியானால் எப்படி இருக்கும்?

போர் அடிக்கும்.

☐ என். சந்திரசேகரன், கிருஷ்ணகிரி

தமிழ்மொழிப் படங்கள் ஏன் தங்கப் பதக்கம் பெறுவதில்லை?

தமிழன் காரியவாதி. தங்கக் குவியலைச் சம்பாதிக்கக் கூடிய சாதாரணப் படத்தைத் தயாரிக்க விரும்புவானே தவிர, கேவலம் ஒரே ஒரு தங்கப் பதக்கத்தை வெல்லக்கூடிய' தோல்விப் படத்தை உருவாக்க விரும்பமாட்டான்.

☐ ஏ. எம் அப்பாஸ், ஆலங்குடி

இந்திரா காந்திக்கு அடுத்துப் பிரதமர் ஆவதற்குத் தகுதி உடையவர்கள் யார்?

முன்பு நேருஜியின் மந்திரி சபையில் நம்பர் 2'ஆக இருந்து வந்த மொரார்ஜி தேசாய் அமெரிக்கா சென்றிருந்தபோது பத்திரிகை நிருபர்கள், "நேருவுக்குப் பிறகு நீங்கள்தானமே பிரதம மந்திரி?' என்று கேட்டார்கள். 'ஆம்,' என்றார் அப்பாவியான மொரார்ஜி. அன்று பிடித்தது கெட்ட காலம். நம்மால் யாருக்கும் கெட்ட காலம் வரக்கூடாது.

☐ சண்முக. தாயுமானவன், பொன்மலை

நேர்மை என்றால் என்ன?

ரெஃபர் திரு. மதியழகன். முதன்முதலில் கேட்டவர் அவர்தான்.

☐ என். சண்முகம்,

அண்ணாயிசம் என்றால் என்ன?

கலைஞரிசத்திற்கு எதிரி.

புது வெள்ளம் ■

'இந்தத் தம்மாத்தூண்டு உடம்பையும் இந்த முகத்தையும் வைத்துக்கொண்டு ஒரு தமிழ் நடிகையாலே கலர்ப் படக் கதாநாயகி அந்தஸ்துக்கு நேரடியாக வந்திருகக முடியுமா? சந்தேகம்தான். கன்னட ரூட். ஆகவே வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. ஆனல் ஒன்று நிச்சயம். 'பொறுக்கி, எச்சக் கலை, புறம்போக்கு,' என்று திட்டுகிற திட்டும், 'ஐ யைய்யா, என் தலை முடியை அறுத்துட்டானே! நீ நல்லா இருப்பியாடா?' என்று கீச்சுக் குரலில் அலறும் அலறலும் புது மஞ்சுளாவின் நடிப்புத் திறனுக்கு நாம் கொடுக்கக் கூடிய மார்க்கைப் பாதிக்குமானல் அது சரியான விமரிசனம் ஆகாது. வெள்ளியில் செருப்பு செய்திருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். பொருளென்னவோ செருப்புத்தான். ஆனல் சரக்கு வெள்ளியாயிற்றே! பணக்காரப் பெண் என்ற அகம்பாவம் காதல் வெப்பத்தினல் நெகிழத் தொடங்கும் கட்டத்தில், ஊர்ப் பெண்கள் விலகி ஓடுவதைக் கண்டு, 'அது தானே? என்னைக் கண்டு எதுக்காகப் பயந்து ஓடணும்? நானென்ன, பேயா பிசாசா? பெண் தானே?' என்று முணுமுணுக்கிறரே அந்த இடத்திலும் மற்றக் காதல் காட்சியிலேயும் அவர் காட்டும் முகபாவங்கள் அவருடைய கன்னட ரசிகர்கள் பைத்தியக்காரர்கள் அல்ல என்பதை [illegible]திப்படுத்துகின்றன.

இந்த ராஜநாகம் நம்பர் டூவில் சிவகுமாருக்குச் செமர்த்தியான சான்ஸ். எடை கூடினலும் சோடை போகவில்லை. குடும்பத்தில் அத்தனை பேரும் அவரை ரோஷம் கெட்டவர் என்று ஒரு புறம் திட்டிக் கொண்டிருக்க, அவர் அதைக் காதில் வாங்கிக் கொண்டாலும் இடிந்து போகாமல் ஈடு கொடுத்துப் பேசி, அது வேறு, சாப்பாட்டு விஷயம் வேறு என்று குழந்தைத்தனமான உரிமையுடன் சோற்று மலையைக் கரைக்கும் தோரணை ரசமாக இருக்கிறது. ஆவேசமான முக பாவங்களும் திருப்திகரம்.

கொழுந்தனுக்கும் அண்ணிக்கும் இருக்கக் கூடிய புஷ்பம் போன்ற தாய்மைப் பாசத்தை வெற்றிகரமாகச் சித்திரித்திருக்கிருர் புஷ்பலதா. கங்கிராட்ஸ்.

'ஹூம்! கட்டின புருசன் சரியா இருந்திருந்தா கண்ட கழுதைங்களெல்லாம் என்னை இப்படிப் பேசுமா?' மனேரமாம்மா, இப்படி நீட்டி நெளித்துப்பெருமூச்சு விட உங்களை விட்டா யாரும்மா கிடைப்பாங்க? கோழித் திருடன் சுருளி ராஜனைக் கோழியும் கையுமாய்ப் பிடித்துப் பண்ணையார் மனேகரிடம் நியாயம் கேட்கப் போவதும், அவர் உங்களை 'ஒரு தினுசாய்ப்' பார்த்ததும் ஜகா வாங்குகிற இடத்திலாகட்டும்; நடுநிசியில் உங்கள் மகள் மாவாட்ட வந்தவனுடன் படி தாண்டிப் போய் விட்டதைக் கவனித்த சிப்பந்தி உங்களை எழுப்பி நடந்ததை ஜாடையால் காட்ட, நீங்கள் அவனைத் தவருகப் புரிந்துகொண்டு 'அடப் பாவி! உன் வயசென்ன, என் வயசென்ன?' என்று சாடும் கட்டத்திலாகட்டும்; ஊரைக் கூட்டி 'ஐயோ, இந்த அநியாயத்தை யார்கிட்ட சொல்லுவேன், யாருகிட்டே சொல்லுவேன்?' என்று இடிந்து போய்த் தரையை அடிக்கும் சமயத்திலாகட்டும், ஒவ்வொரு அங்க அசைவிலும் முக மாறுதலிலும் யதார்த்தமான கலையழகு மிளிர்கிறது. உங்களுக்குப் பிரமாதமாகக் கொடுத்திருக்கிறது சுருளி ராஜனின் கை.

ஓரோரிடத்தில் காமெரா நடுங்கினலும் பொதுவாக அருமை. துளித் துளி பாட்டுக்கான காட்சிகள்; புது வெள்ளம் பாட்டுக்கான வெளிப்புறக் காட்சிகள்; இருட்டில் போய்க் கொண்டிருக்கும் பெண் யார் என்று கேள்வி எழும்ப, புஷ்பலதா திரும்பி லாந்தரை உயர்த்தி முகத்தைக் காட்டுவது—எப்படி செய்திருக்கிருர்கள்!

இருக்கிறது ஒரு ஈ மீசை. அதற்குள்ளே ஒரு பாகிஸ்தாஞ? வாசுவினுடைய வில்லத்தனம் இதமாய் இருக்கிறது.

ஊர் மேய்கிற பண்ணையார் [மனேகர்] இருக்கிருர். விசுவாசமுள்ள பண்ணையாள் [கோபாலகிருஷ்ணன்] இருக்கிருன்; அவனுக்கு ஒரு புரட்சிக்காரத் தம்பி இருக்கிருன்; புரட்சித் தம்பிக்கும் பண்ணையார் மகளுக்கும் மோதலுக்குப் பின் காதல் ஏற்படுகிறது—வைக்கோல் போரில் தீ வைக்கப்படும் காட்சியும் இருந்திருந்த[illegible] இது நூற்றுக்கு நூறு ஹைத[illegible] ரிலீசாக இருந்திருக்கும்.




உனக்கு ரொம்பப் பிடிக்குமே?
இந்தா அவல்.
ஷேக் அப்துல்லா
காஷ்மீருக்குத்
தனிச் சலுகைப்
பிரசினை
அம்மாடி! இனி
வெறும் வாயை
மெல்ல வேண்டாம்.
தி.மு.க.


அரசியல்
வேலூர்
மிஷன் ஆஸ்பத்திரி
வாசு



அன்பு முத்தத்துடன் அன்னை வழங்குவாள்
ஆசி பின்பு அவன் பசி தீர்ந்திட நாடுவான்
பூப்-ஸீ®
ஃபீடர்
பூப்-ஸீ®
ஃபீடர்களும் நிப்பிள்களும்
பூப்-ஸீ ஃபீடர்கள் 8 வித
வடிவங்களில் கிடைக்கிறது.
எந்தக் குழந்தைக்கும்
ஏற்ற விதத்திலே.
தயாரிப்போர்:
பம்பாய் லாடெக்ஸ் & டிஸ்பர்ஷன்ஸ் பிரை. லிட்.
83C, டாக்டர் அன்னி பெஸண்ட் ரோடு
வொர்லி, பம்பாய்-400 018
போன்: 391705/374323 தந்தி: POOPCEE
innovation/bld/t/08

அவரா!



லதா யந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய விரல்களின் வேகத்துக்கு ஈடு கொடுக்க மாட்டாமல் டைப்ரைட்டர் முனகியது.

"அம்மா, ஜி. எம். கூப்பிடறுர்," என்று பியூன் வந்து நின்றுன்.

லதா எழுந்தாள். செக்கச் சிவந்து தளதளவென்று வாளிப்பாக இருந்த அவள் உடலை வறுமைக்குச் சவால் என்பதா, இயற்கையின் கை வண்ணம் என்பதா? வறுமையை மீறி வாலிபத்தை அள்ளி அப்பிக் கொண்டிருந்த கட்டுடலை நீண்ட முந்தானையால் போர்த்துக் கொண்டு, சுருக்கெழுத்து நோட்டும் பென்சிலுமாக மரியாதையுடன் ஜெனரல் மானேஜரின் அறைக்குள் நுழைந்தாள்.

வழுக்கைத் தலையும் வயோதிகக் களையுமாக, ஐம்பது வயதைத் தாண்டிய ஒருவர் இருக்கவேண்டிய பிரம்மாண்டமான மேசைக்குப் பின்னுல், மிக வசதியான சுழல் நாற்காலியில், டெரிகாட்டன் பாண்ட்சும் முழுக் கைச் சட்டையுமாக அந்த இளம் வாலிபன்—ரவிசங்கர்—அரும்பு மீசையோடு அழகாகப் புன்னகை பூத்தபடி இருந்தாள்.



அழகாபுரி அழகப்பன்

"உட்கார், லதா."

"தாங்க் யூ சார்," என்றவள், பட்டும் படாமலும் நாற்காலியின் விளிம்பில் உட்கார்ந்து, நோட்டைப் பிரித்து வைத்துக்கொண்டு, அவன் சொல்லப் போவதை எழுதிக்கொள்ளத் தயாரானாள்.

அவன் மௌனமாய் இருந்தான். ஏர் கண்டிஷனரின் ரீங்காரமும் கடியாரத்தின் டிக்டிக்கும் தவிர வேறு ஓசையில்லை.

நிமிர்ந்து பார்த்தாள்.

"சொல்கிறீர்களா, சார்?"

"எஸ்.." என்று இழுத்தவன், சொன்னான். "டியர் மிஸ்... டியர் மிஸ், ஹௌ அபவ்ட் ஷேரிங் த ப்ளஷர் அப் மெரிட்டல் லைஃப் வித் ய யங், ஆக்டிவ் கை..."

எழுதத் தொடங்கிய அவள் நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தாள். "இந்தக் கடிதம் எந்தக் கம்பெனிக்கு?"

"கம்பெனி இல்லாத மிஸ் லதாவுக்கு. கம்பெனி உண்டாக்கிக்கொள்ள விருப்பம் தானா என்று..." அவன் சிரித்தான்.

எழுந்து நின்றாள் அவள். "மன்னிக்க வேண்

டும் ஏதாவது ஆபீஸ் வேலை இருந்தால் சொல்லுங்கள்.''

''தவருக நினைக்க வேண்டாம், லதா. நீ விரும்பினல் உன்னை என் வாழ்க்கைத் துணைவியாக... நான் உன்னைக் காதலிக்கிறேன்.''

''சாரி சார். சொந்த விஷயத்தைப் பற்றி அதிகாரியான உங்களோடு பேச நான் விரும்பவில்லை.''

அழகுப் பதுமையாக அவள் அசைந்தாடிச் செல்வதைப் பார்த்து அவன் ஏக்கப் பெருமூச்சு விட்டான். 'எவன் கொடுத்து வைத்திருக்கிருனே!'

மெரீனு கடற்கரையில் ஒரு படகின் பின்னுல் உட்கார்ந்திருந்த லதா கேட்டாள்: ''கணேஷ், இன்னும் எத்தனை நாட்களுக்கு நாம் இப்படியே பேசிக் கொண்டிருப்பது? உங்கள் அப்பாவிடம் என்னைப் பற்றி எப்போது சொல்லப் போகிறீர்கள்?''

அப்பாவின் பேச்சை எடுத்ததுமே கணேஷின் முகம் மாறி விட்டது. மணலில் விரலால் கோடு இழுத்துக்கொண்டே, ''அப்பாவை நினைத்தால்தான் பயமாயிருக்கிறது, லதா! அவர் ஒரு எக்ஸென்ட்ரிக் டைப். பலே என்று தட்டிக் கொடுத்தாலும் கொடுப்பார், பளார் என்று அறைந்து வைத்தாலும் வைப்பார்!'' என்ருன்.

''ஆண் பிள்ளை, அதிலும் காலேஜ் மாணவர். ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்?''

''அப்பாவைப் பற்றி உனக்குத் தெரியாது. பெரி பிஸினஸ் மன். ஓயாமல் வெளி நாடுகளில் சுற்றிக் கொண்டேயிருப்பர். வீட்டிலிருக்கும் போதும் உள்ளூர் கம்பெனிகளின் பிரச்னைகள். தனியா அவரைப் பார்த்துப் பேசச் சந்தர்ப்பட கிடைப்பது கஷ்டம். கிடைத்தாலும் அவருக்கு 'மூடு' இருக்கவேண்டு. செல்வாக்கு, அந்தஸ்து என்று பெய வட்டத்தில் பழகிக் கொண்டிப்பவர் ஏழைக் குடும்பத்துப் பெண்ணை உன்னை மருமகளாக ஏற்றுக் காள் வாரா என்பது சந்தேகமாக இருக்கிறது.''

''அப்படியானல் நானேஅவரிடம் கேட்கிறேன். சொல்லுங்க, யார் உங்கள் அப்பா?''

''ஏ.டி. தாமோதரன் என், பெயர். இன்றிரவு எப்படியும் அவரை பார்த்து விஷயத்தைச் சொல்லிவிட்டு நாளைக் காலை வெளியூருக்கு ஓடி விடுகிறேன்.''

அவள் சிரித்தாள். ''சரியான ஆண் பிள்ளை!''

''காலேஜ் நண்பர்களோடு கோவா போகிறேன். திரும்பி வர ஐந்தாறு நாட்களாகும். அப்பா சம்மதித்தால் நான் திரும்பி வந்ததும் நிச்சயதார்த்தம். சம்மதிக்காவிட்டாலும் நான் வருவதற்குள் கோபம் ஆறி விடும். பிறகு நாமே ஓர் ஏற்பாடு செய்து கொள்வோம்.''

''அப்பா சம்மதிக்கவில்லையென்று என்னைக் கை விட்டுவிட மாட்டீர்களே?''

''அந்தப் பயமே உனக்கு வேண்டாம்!''

சின்னப் பெண்ணுக்குத் தலை வாரிவிட்டுக் கொண்டிருந்த கோமதியம்மாள் அப்போதுதான் குளித்துவிட்டு வந்து புடவை மாற்றிக் கொண்டு சொர்ணச் சிலையாக நின்று கொண்டிருந்த பெரிய மகள் லதாவின்



''ரேடியோ ரசிகை ஒருத்தி உங்களுக்குத் தபால் எழுதியிருக்கிருள்.''

''உம்.. என்ன, படி.''

''விடியப் போகிறது, பொழுது விடியப் போகிறது என்கிற பாடலைக் காலை எட்டு மணிக்கு ஒலிபரப்புவதற்குப் பதிலாக இனி 9 மணிக்கு ஒலிபரப்பவும். அப்போதுதான் என் கணவருக்கு விடிகிற டயம்.''

வனப்பைப் பார்த்துவிட்டுச் சொன்னாள். ''ராஜகுமாரி மாதிரி இருக்கிறாள்! ராஜ குமாரன் எங்கே பொறந்திருக் கிறானோ! அந்தக் கடவுள்தான் கண் திறந்து பார்க்கணும்.''

வாசலில் ஏதோ கார் சத்தம் கேட்டது.

லதா எட்டிப் பார்த்தாள்.

பெரிய படகுக் கார் ஒன்று அந்தச் சந்துக்குள் திக்கித் திணறி நுழைந்து அவர்கள் வீட்டின் முன் நின்றது. பணக்காரப் பெரிய மனிதர் ஒருவர் சில்க் ஜிப்பா, வாயில் வேஷ்டி, ஜரிகை அங்கவஸ்திரம், வைர மோதிரம் சகிதம் சிரமப்பட்டுக் காரிலிருந்து இறங்கினார். வீட்டு நம்பரைப் பார்த்து விட்டு உள்ளே நுழைந்தார்.

''அப்பா, அப்பா! யாரோ வந் திருக்காங்க!'' என்று கூவியபடி உள்ளே திரும்பினாள் லதா. அந்த முகத்தை எங்கோ பார்த்த மாதிரி ஞாபகம்.

குமாரசாமி, ''நம்ம வீட் டுக்கு யாரம்மா வரப் போறாங்க?'' என்று கேட்டுக் கொண்டே கூடத்துக்கு வந்தார்.

''மிஸ்டர் குமாரசாமி வீடு?''

''இதுதான்.''

''லதா உங்க பெண் தானே?''


''ஆமா. நீங்க?''

''நான்தான் ஏ.டி. தாமோ தரன். உங்க பெண்ணை என் பைய னுக்குப் பேசி முடிக்க வந்திருக்கி றேன்.'' நறுக்குத் தறித்தாற்போல் பட்பட்டென்று பேசினார் வந்தவர். ஒரு வார்த்தை அனாவசியமில்லை.

உள் அறையிலிருந்த லதா பூரித்தாள்.

குமாரசாமி கலகலத்துப் போனார். ''நீங்களா! வாங்க, வாங்க! உட்காருங்க!'' என்று ஒரு பழைய நாற்காலியைத் துண்டால் துடைத்து விட்டு எடுத்துப் போட்டார். ''லதா உங்களைப் பற்றி நேற்றுத்தான் சொன் னாள். நீங்க வந்தது எங்க பாக்கியம்!''

''மிஸ்டர் சம்பந்தி, நான் பிஸினஸ்மன். இந்த வழவழா சங் கதியெல்லாம் பிடிக்காது. எது யார் பாக்கியமாக இருந்தாலும் சரி. நேற் றிரவு என் மகன் லதாவைப் பற்றிச் சொன்னான். அவள் கிடைக்காவிட் டால் வாழ்க்கையே இல்லை என்கிற



வாரியார் விருந்து

1955'ல் காஞ்சி புரத்தில் ஏகாம்பர நாதருடைய திருக் கோயிலில் திருமதில் திருப்பணி செய் து கொண்டிருந்தேன்.

ஒரு சமயம், சின்ன காஞ்சி புரம் பர்மா ஷெல் ஏஜண்டு திரு. சுந்தரராஜ் ஐயங்காரிடம் வசூலுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள்.

அவர் சொன்னார்: ''சுவாமி! எனக்கு இரு மனைவியர். சந்தானம் இல்லை. என் இளைய மனைவியுடன் ஒருநாள் ஏகாம்பர நாதருடைய ஆல யம் சென்றோம். என் மனைவியும் நானும் மாமரத்தை வலம் வந்தோம். என் மனைவியின் வலத் தோளில் ஒரு மாம் பிஞ்சு விழுந்தது.

''நான் அந்த மாம்பிஞ்சை மாவடியில் உள்ள சிவலிங்கத்தின் திருமுன் வைத்து நிவேதனம் செய்து அவளை உண்ணுமாறு கூறினேன். அவள் அதன்படி செய்தாள். அதே மாதம் அவள் கருவுற்றாள். பெண் குழந்தை பிறந்தது.

''பிறந்த குழந்தையின் வலத் தோளில் சிறு மாம் பிஞ்சைப் போன்ற கரிய மச்சம் இருந்தது! ஆண்டவன் தான் தந்த வரப் பிரசாதம் என்று இந்த அடையாளத்தை இட்டான் போலும். நீங்களே பாருங்கள்,'' என்று கூறி, அப்பெண் குழந்தையை அழைத்தார். குழந்தை அணிந்திருந்த கவுனைக் கழற்றி எனக்கு அம்மச் சத்தைக் காட்டினார்.

மிகவும் அதிசயமான காட்சி. பின்னர் அவர் ஆயிரம் ரூபாய்க்குச் சிமெண்ட் வாங்கித் தந்து உதவினார்.

மாதிரிப் பேசினுன். எதற்கு வம்பு? நான் பிஸினஸ்மன்; அவனுக்குப் பொருத்தமான பெண்ணைத் தேடிக் கண்டுபிடிக்க நேரமில்லாதவன். அவனே செலக்ட் செய்துவிட்டால் எனக்கு வேலே மிச்சம் தானே? ஓ.கே. சொல்லி விட்டேன். வாழப் போகிறவர்கள் அவர்கள். நாம் குறுக்கே நிற்பானேன்?''

''உலகத்திலே எல்லாரும் உங்க மாதிரி இருந்துட்டா...''

தாமோதரன் சட்டென்று பேச்சை வெட்டினுர். ''அது கிடக்கட்டும். பெண்ணை வரச் சொல்லுங்க.''

லதா அறைக்கு வெளியே வந்து வணங்கினுள்.

''பேஷ்! பயல் அழகான பெண்ணுகத்தான் செலக்ட் பண்ணியிருக்கிறுன். ஐ அப்ரீஷியேட் ஹிஸ் செலக்‌ஷன்!'' என்று திருப்தியுடன் சொன்ன தாமோதரன், ''உனக்கு இஷ்டந்தானேம்மா?'' என்று கேட்டார்.


அவள் நாணித் தலே குனிந்து சம்மதத்தைத் தெரிவித்தாள்.

குமாரசாமி மெதுவாக, ''மாப்பிள்ளையை நாங்கள் பார்த்ததில்லே...'' என்ருர்.

''அதனுல் என்ன நஷ்டம்? இப்போது பெண்ணுக்கும் பிள்ளேக்கும் பிடித்துவிட்ட பிறகு, நமக்குப் பிடிக்கவில்லே என்பதற்காக எதுவும் நிற்கப் போவதில்லே. அபிப்பிராயம் சொல்ல உரிமையில்லாதபோது பார்ப்பது அவசியமில்லே. இது காதல் கல்யாணம். இப்போது நான் வந்திருப்பது பெண் பார்க்க அல்ல; பேசி முடிக்கத்தான். வி ஆர் நாட் த கமாண்டர்ஸ் பட் ஒன்லி த எக்ஸிக்யூடிவ்ஸ். அன்டர்ஸ்டேண்ட்?'' என்று சிரித்தார் தாமோதரன்.

லதா தைரியமாக நிமிர்ந்து பார்த்தாள். ''உங்கள் மகன் என்னை ரொம்பப் பயமுறுத்தி விட்டார். கௌரவம், அந்தஸ்து, பெரும்புள்ளி என்று...''

பிரிட்டனைச் சேர்ந்த அலெக்சாண்டர் பைக் என்ற கட்டிடக் கலே நிபுணர் ஒரு விசேடமான வீட்டைக் கட்டி முடித்துள்ளார். வீட்டிற்குத் தேவையான மின்சாரம், குடிநீர், அடுப்பு எரிக்க வாயு எல்லாம் இந்த வீட்டிலேயே உற்பத்தியாகின்றன. எல்லாத் தேவைகளிலும் தன்னிறைவு பெற்று விளங்குகிறது இந்த வீடு.



இயற்கை தந்த சூரிய ஒளி, காற்று, மழை இவற்றைப் பயன்படுத்தி, இந்த வீடு தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்கிறது.

சூரிய ஒளியைக் கிரகித்து சேமித்து வைக்கும் சாதனம் ஒன்று இதில் உள்ளது. ஆண்டு முழுவதற்கும் தேவைப்படுகிற வெப்பத்தைக் கோடைக் காலத்திலேயே கிரகித்து சேமித்து வைக்கிறது இந்தச் சாதனம்.

இதிலிருந்து வீட்டின் தேவைக்கான மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஒரு ஜெனரேட்டர் உள்ளது. வெளியில் வீசுகிற காற்றைக் கொண்டே இந்த ஜெனரேட்ட[illegible] இயக்கிவிடலா[illegible] வீட்டின் தேவைக்[illegible] அதிகமாகவே க[illegible] மின் உற்பத்[illegible] செய்யும் திற[illegible] உள்ளது இந்[illegible] ஜெனரேட்டர்.

அடுத்து, த[illegible] ணீர்: மழை க[illegible] தில் பெய்[illegible] மழை நீரைச் சே[illegible] த்துத் தூய்மை[illegible] படுத்தி, குடிக[illegible] வும் பிற உபயோ[illegible] கங்களுக்கும் பய[illegible] படுத்த வசதி உ[illegible] ளது.

—வே[illegible]


கட்டமைக்கத்
தாய்ப் பாலின்
வரமிருக்கு,

என்ன லக்ஷ்மி?

அண்மையில் எனக்கு வந்த திருமண அழைப்பிதழ் ஒன்றில் (ஆங்கிலம்) மணப் பெண்ணின் பெயரைப் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது: ''தகனலட்சுமி'' என்றிருந்ததே காரணம். பிற்பாடு தமிழ் அழைப்பிதழைப் பார்த்ததும்தான் விஷயம் புரிந்தது. சரியான பெயர் 'தனலட்சுமி'. ஆங்கிலத்தில் அதை 'DHANALAKSHMI' என்று அச்சிடுவதற்குப் பதில் 'DAHANALAKSHMI' என்று தவறுதலாகப் போட்டுவிட்டார்கள்.

—சரோஜா ராமச்சந்திரன்

''நான் பெரும் புள்ளியாக இருக்கலாம். ஆனால், என் குழந்தைகளின் வாழ்வுக்குக் கரும் புள்ளியாய் இருக்க மாட்டேன். மிஸ்டர் சம்பந்தி, இதில் ஐயாயிரம் ரூபாய் இருக்கிறது. உங்கள் குடும்பத்துக்கு வேண்டிய துணிமணிகள் வாங்கிக் கொள்ளுங்கள். பெண்ணுக்கு வேண்டிய புடவைகள், நகைகளுக்கு நான் ஏற்பாடு செய்து விடுகிறேன். இன்றைக்கு நல்ல நாள். தாம்பூலம் மாற்றிக் கொள்ளலாமா.''

''ஆகட்டும்.''

தாமோதரன் வாசல் பக்கம் திரும்பினார். வரிசையான பித்தான்கள் பிராஸ்ஸோவில் பளபளக்க, வெள்ளை யூனிபாரம் அணிந்த டிரைவர் பெரிய வெள்ளித் தட்டில் மஞ்சள், பூ, பழங்கள், புடவை ஏந்தி வந்தான். அதை வாங்கிச் சம்பந்தியிடம் கொடுத்தார் தாமோதரன்.

கார் நகர்ந்து திரும்பியது. இன்பத் தென்றல் வீசியது போல் ஒரு சிலிர்ப்பு நிலவியது அங்கே.

கோமதியம்மாள் ஓடி வந்து லதாவைக் கட்டிக் கொண்டாள். தன் மகளுக்கு இப்படியொரு எதிர்பாரா அதிர்ஷ்டம் அடித்த உண்மையை அவளால் அவ்வளவு சுலபமாக நம்ப முடியவில்லை. வியப்போடு லதாவின் முகத்தையே பார்த்துவிட்டு முகத்தை வழித்துத் திருஷ்டி கழித்தாள்.

''என் முருகன் என்னைக் கைவிட்டு விடவில்லை. கேட்ட வரத்தைத் தட்டாமல் தந்திருக்கிறான். வட்டிக் கடையில் நூற்றைம்பது ரூபாய்க்குக் கணக்கெழுதுகிறவனின் பெண்ணுக்கு லட்சாதிபதி வீட்டு மாப்பிள்ளை! நடக்கிற காரியமா இது! முருகன் மனம் வைத்தால் எதுவும் நடக்கும்,'' என்று உருக்கமாகச் சொன்னார் குமாரசாமி.

அன்று பிற்பகல், ஒரு டாக்ஸியில் ஜவுளிக் கடை ஆசாமி ஒருவர் பெரிய மூட்டையுடன் வந்து இறங்கினார். ஐம்பது பட்டுப் புடவைகளைப் பரப்பி வைத்தார். ''தாமோதரன் சார் அனுப்பி வச்சாருங்க. எல்லாம் லேட்டஸ்ட் டிஸைன். உங்களுக்குப் பிடிச்ச ஒரு டஜன் புடவைகளை எடுத்துக்கச் சொன்னார்,'' என்றார்.

ஐம்பது புடவைகளும் ஐம்பது வண்ணக் கலவைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு டிஸைன். ஒன்று மற்றதை மிஞ்சி நின்றது. அண்டை வீட்டுப் பெண்களோடு சேர்ந்து ஒரு டஜன் புடவைகளைத் தீர்மானிப்பதற்குள் பொழுது போய் விட்டது.

மறுநாள் நகைக்கடை வேன் வந்து நின்றது.

இப்படி நாலைந்த நாட்கள் பொழுது போனதே தெரியவில்லை.

கணேஷைச் சந்தித்து இந்த வெற்றியைக் கொண்டாட வேண்டும் போலிருந்தது லதாவுக்கு. ஆனால், அவனை எங்கே போய்ச் சந்திப்பது? திருமணத்துக்கு அப்பா சம்மதித்து விட்ட மகிழ்ச்சியில் டூர் புரோகிராமைக் கான்சல் செய்துவிட்டு வீட்டிலிருக்கிறானோ, அல்லது கோவாவுக்குப் போய் விட்டானோ? லதாவுக்கு ஆபீஸ் இல்லாததால் அவனை வழக்கமான இடத்தில் பார்க்க முடியவில்லை. மேலும், நாளை மறுநாள் திருமணம் என்ற நிலையில், அவனைச் சந்திக்கலாமோ, கூடாதோ!

மதியத்துக்கு மேல் திருமண அழைப்பு அச்சாகி வந்தது. லதா

இன்று

எடுத்துப் பார்த்தாள். மிக ஆடம்பரமான தயாரிப்பு. வழவழப்பான முட்டை நிற அட்டை. அதன் மேல் தங்க நிற எழுத்துக்களும் சிவப்பு வெல்வெட் படங்களும்...அடேயப்பா! அழைப்பிதழ் ஒன்று இரண்டு ரூபாய் பெறும். ஏழைக் குடியில் பிறந்தவளுக்கு எவ்வளவு சிறப்பான திருமணம்!

லதா பிரித்துப் பார்த்தாள். புது டிஸைன் எழுத்துக்களில் சிம்பிளாக நாலைந்து வரிகள் அழகாக அச்சாகியிருந்தன. படித்துக் கொண்டே வந்தவளின் புருவங்கள் திடீரென்று இடுங்கின.

மணமகன் பெயர்: ரவி சங்கர்!

கணேஷுக்கு அப்படியும் ஒரு பெயரோ?

இருக்க முடியாதே! ரவி சங்கர், எம்.எஸ்ஸி. என்று போட்டிருக்கிறது. கணேஷ் இப்போதுதானே பி.எஸ்ஸி படித்துக் கொண்டிருக்கிறார்..

அப்போது அங்கே வந்த குமாரசாமி, "இன்விடேஷன் வந்தாச்சா? மளமளன்னு அட்ரஸை எழுதம்மா. இன்னிக்கே போஸ்ட் பண்ணியாகணும்," என்று அவசரப்படுத்தியபோதே அவள் முக மாறுதலைக் கவனித்து விட்டார். "என்னம்மா, ஏன் ஒரு மாதிரி இருக்கே?"

அவள் அவருக்குப் பதில் சொல்லாமல் வேகமாக வெளியே ஓடினாள்.

பக்கத்திலிருந்த டெலிபோன் பூத்துக்குப் போய் கணேஷ் வீட்டு நம்பரைச் சுழற்றினாள். கணேஷ் இருக்கிறானா என்று விசாரித்தாள். கோவாவுக்குப் போயிருப்பதாயும் அன்று பிற்பகல் ரயிலில் வருவானென்றும் யாரோ ஒரு வேலைக்காரன் சொன்னான். லதா அங்கேயே ஒரு டாக்ஸியைப் பிடித்து, சென்ட்ரலுக்கு விரைந்தாள்.

மாலை மூன்று மணிக்கு வந்து இறங்கிய கணேஷ் ஸ்டேஷனில் லதாவைப் பார்த்து ஆச்சரியப்பட்டான்.

"உங்கள் அப்பா..." என்று அவள் வேகமாக ஆரம்பித்த போதே அவன் குறுக்கிட்டான்.

"கேள், லதா. உன்னைப் பற்றி எப்படியும் சொல்லிவிடுவதென்று தான் அன்றிரவு அப்பாவின் அறைக்குப் போனேன். ஆனால், அவர் என்னை முந்திக் கொண்டு விட்டார். அண்ணாவுக்குத் திருமணம் பேசப் போவதாகச் சொன்னார். சரி, ஒரு வழியாக அவர் திருமணம் முடிந்த பிறகு நமது கதையைச் சொல்லலாம் என்று பேசாமல் திரும்பி விட்டேன்."

அவளுக்குத் திக்கென்றது. "உங்க அப்பாவின் பெயர் ஏ.டி. தாமோதரன் என்றுதானே சொன்னீர்கள்?"

"ஆமாம். ஏன்?"

"அவர் எங்கள் வீட்டுக்கு வந்து, பெண் பார்த்து, மணம் பேசி, திருமண அழைப்பும் அச்சாகி வந்து விட்டதே! யார் இந்த ரவி சங்கர்?" அழைப்பிதழை நீட்டினாள்.

வாங்கிப் பார்த்தவன் சிலையாக நின்றான். "என் அண்ணா! அவரும் உன்னைத்தானா விரும்பினார்!"

"யார் உங்கள் அண்ணா? அவர் என்னைப் பார்த்ததேயில்லையே? எப்படி என்னை விரும்பியிருக்க முடியும்?"

"தினமும் பார்க்கிறார். நீ வேலை செய்யும் ஆபீஸின் ஜெனரல் மானேஜர் அவர்தான்!"

"ஐயோ அவரா!" அவள் திகைத்தாள். "கணேஷ்! எதிர்பாராத குழப்பம் நேர்ந்து விட்டது. உங்கள் அப்பா மூத்த மகனுக்குப் பெண் கேட்க, நான் உங்களை நினைத்துக் கொண்டு, சம்மதித்து விட்டேன். இந்தக் கல்யாணத்தை உடனே நிறுத்துங்கள்!"

கணேஷ் நிதானமாகச் சொன்னான்: "அது முடியாது லதா.

1972 வரை கேரளாவில் நிதியமைச்சராக இருந்த திரு. சேஷன் இப்பொழுது கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக இருக்கிறார்—சினிமாவிலும் நடிக்கிறார்.

—டைம்ஸ் ஆப் இந்தியா

—கே. ஆர்.

இவ்வளவு ஏற்பாடுகள் நடந்த பிறகு... புடவையை மாற்றலாம்; நகையை மாற்றலாம்; மாப்பிள்ளையை மாற்ற முடியுமா? இதைக் கேட்டால் அப்பாவுக்குக் கடுமையான கோபம் வரும். கடைசியில் நீ எனக்கும் கிடைக்க மாட்டாய்..''

''அதற்காக நான் யாரோடாவது வாழ்ந்து விட முடியுமா? எனக்கு நீங்கள்தான் வேண்டும், கணேஷ்!''

''என் அப்பாவுக்கு உன்னைப் பிடிக்கவில்லையென்றால் நான் கவலைப்பட மாட்டேன். உன்னை வேறு யாருக்காவது ஏற்பாடு செய்தால் இப்போதே ஒரு கோவிலில் வைத்து உனக்குத் தாலி கட்டுவேன். ஆனால், இப்போது எதிர்க் கட்சியிலிருப்பவர்கள் அண்ணாவும் அப்பாவும். அண்ணா என்மேல் உயிரையே வைத்திருப்பவர்; அப்பா என்னைத் தாய் போல் வளர்த்தவர்; இந்தக் கல்யாணத்தை நிறுத்தினால் அவமானப்படப் போவது அண்ணனும், அப்பாவும்தான். என்னால் அதைச் செய்ய முடியாது, லதா!''

அவள் குமுறினாள். ''உங்கள் அண்ணன் தயவு உங்களுக்குத் தேவை. எனக்கென்ன தேவை? நானே கேட்கிறேன் அவரை.''

பங்களா பெரிய வாசலில் பெரிய கார்கள் மூன்று நான்கு நின்றன. ஆட்கள் நடமாட்டம் இருந்தாலும் அங்கே சலனமற்று ஓர் அமைதி குடி கொண்டிருந்தது.

அதற்குள் தாமோதரனே அங்கே வந்து விட்டார். ''லதாவா? இப்போதுதான் உனக்குக் கார் அனுப்பினேன். அதற்குள் நீயே வந்து விட்டாய். ரவி உன்னிடம் ஏதோ பேச வேண்டுமாம். மேலே போய்ப் பார்,'' என்று மாடியை நோக்கிக் கை காட்டினார்.

ரவியின் அறையிலிருந்து மூன்று டாக்டர்கள் வெளி வந்தனர். ''அதிக நேரம் பேசக் கூடாது. இரண்டொரு வார்த்தையோடு வந்து விடுங்கள்,'' என்று எச்சரித்துவிட்டுக் கீழே சென்றார்கள்.

கட்டிலில் படுத்திருந்தான் ரவி. அவன் கண்களிரண்டும் கட்டப்பட்டிருந்தன.

''சார், என்ன உங்களுக்கு?''


''யாரது, லதாவா? வந்து விட்டாயா? உன்னிடம் பேச வேண்டுமென்றுதான் துடித்தேன். என் கார் சர்வீசுக்குப் போய்விட்டதென்று என் தம்பியின் ஸ்கூட்டரில் போனேன். விபத்து நடந்து விட்டது. ஒரு கடையின் ஷோ கேஸில் போய் விழுந்தேன். கண்களில் கண்ணாடி பாய்ந்து விட்டது. இன்னும் சிறிது நேரத்தில் ஆபரேஷன் நடக்கப் போகிறது. எனக்கு மீண்டும் பார்வை வந்தாலும் வரலாம்; வராமற் போனாலும் போகலாம்...''

''கடவுளே!''

''நீ பயப்படாதே! இவ்வளவு ஏற்பாடுகளும் நடந்து விட்டதற்காக, நீ ஒரு குருடனுக்கு வாழ்க்கைப்பட்டுத்தான் ஆக வேண்டுமென்று கட்டாயப்படுத்த நான் சுயநலக்காரன் அல்ல. உனது நல்ல குணங்களின் ரசிகன் நான். உன்னை மணந்து கொள்வதாக நேரில் நான் கேட்டபோது, மேலதிகாரி என்றும் பாராமல் கண்டிப்பாக மறுத்துவிட்டாய். ஆனால் என் தந்தையை அனுப்பி முறைப்படி பெண் கேட்டபோது, உடனே ஒப்புக் கொண்டாய்!''

அவள் திடுக்கிட்டாள். 'ஐயோ, இவர் இப்படியா நினைக்கிறார்!'

''இவ்வளவு பண்பாடுள்ள நீ, இந்தக் கல்யாணம் நின்று போனால் மிகவும் பாதிக்கப்படுவாய்.



கா ஞ்சிபுரம் அண்ணா கலையரங்கில் ஒரு நாடகம் ஒன்றைப் பார்க்கச் சென்றிருந்தேன். கலையரங்கின் உட்புறக் கட்டிட வேலைகள் அரை குறையாய் இருந்தன. நிமிர்ந்து மேலே பார்த்த நான் திடுக்கிட்டேன். சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட பானைகள் அரங்கமெங்கும் கவிழ்ந்த நிலையில் தொங்கவிடப்பட்டிருந்தன. கட்டிட வேலைக்காரரை விசாரித்தேன். விஷயம் இதுதான்: அரங்கின் உட்புற வேலை முடிவடையாததால் எதிரொலி அதிகம் இருக்குமாம். அதைத் தவிர்க்கவே அந்த ஏற்பாடாம்!

—'கருடா' வைத்தியநாதன்

உன்னைத் துக்கிரி என்று ஊரே தூற்றும். உன்னைப் பெண் கேட்க யாரும் துணியமாட்டார்கள். என்னுல் நீ அப்படியொரு இழி நிலைக்கு ஆளாவதை நான் அனுமதிக்க மாட்டேன். அதனுல் ஒரு யோசனை...''

''சொல்லுங்கள்.''

''இன்னும் சற்று நேரத்தில் என் தம்பி இங்கே வந்து விடுவான். அவனைப் பார். உனக்கு ஆட்சேபணையில்லாவிட்டால், நீ அதே முகூர்த்தத்தில் அவனை மணந்து கொள்ளலாம். கணேஷ் நல்லவன். இந்தக் கல்யாணம் நின்று போவதால் ஓர் ஏழைப் பெண்ணின் வாழ்க்கை எப்படியெல்லாம் வீணுகும் என்பதை எடுத்துச் சொன்னுல் அவன் நிச்சயம் ஒப்புக் கொள்வான்!''

அவள் மௌனமாய் நின்ருள். அவள் கேட்க வந்த வரத்தை அவள் கேட்கு முன்னர் அவனே தருகிருன். ஆனுல்—

உண்மையை அறியாத உலகம் அவனைப்பற்றி என்ன பேசும்? பேசி முடித்த மாப்பிள்ளை பார்வையை இழந்துவிட்டான் என்றதும் அவனை ஒதுக்கிவிட்டு அவன் தம்பியைமணந்துகொண்ட சுயநலக்காரி என்றல்லவா ஏசும்?


ரவி எப்படிப்பட்டவன்! செல்வத்தில் திளைக்கும் இளவரசன்! அவனது அழகுக்கும் அந்தஸ்துக்கும் ஆயிரம் அழகிகள் காத்திருக்கிருர்கள். 'உன்னைப் பேசி முடித்த தோஷம் என் பார்வை போயிற்று. என் முகத்தில் விழிக்காமல் வெளியே போ!' என்று வெறுப்புக் கூச்சலிட வேண்டியவன், கண்ணை இழந்ததற்காகக் கூடக் கவலைப்படாமல், அவளைத் துக்கிரி என்று தூற்றுவார்களே என்று கவலைப்படுகிருன்! அவளுடைய நல்வாழ்வுக்காகத் தன் தம்பியிடம் சிபாரிசு செய்கிறேன் என்கிருன்!

லதா சொல்ல நினைத்தவற்றைச் சொல்ல முடியவில்லை.

''இவ்வளவு ஏற்பாடுகள் நடந்த பிறகு இனி மாற்றுவதற்கில்லை. நான் எதற்கும் தயாராகிவிட்டேன். வாழ்வோ, சாவோ, உங்களோடுதான் எனக்கு!'' என்று அவன் கால்களில் விழுந்தாள் அவள்.

38 குடை வாங்கினதும், உங்களுடைய பெயர், முகவரியைத் தெளிவாக நூல் கொண்டு தைத்துவிடுங்கள். காணாமல் போனால் உங்களிடமே திரும்பிவர வழியுண்டு.


—வனஜி



''அதோ போகிருனே, அவன் லட்சாதிபதி. எல்லோருக்கும் வாரிக் கொடுத்து இன்று ஏழையாக அலைகிருன்,'' என்று சிலரைப் பார்த்துப் பரிதாபப்படுகிறோம். ''அதோ போகிருனே, அவன் போன வருஷம் வரை எம். ஏ. பட்டதாரி. எல்லோருக்கும் கற்றுக் கொடுத்து இன்று எஸ்.எஸ்.எல். சி. யாகத் திரிகிருன்,'' என்று யாரையும் சொல்ல முடியாது. இதுதான் பணத்துக்கும் கல்விக்கும் உள்ள வேறுபாடு. கொடுத்தால் வளருவதே கல்வி.

—சென்னை வீனஸ் காலனியில் நடைபெற்ற பெரிய புராணச் சொற்பொழிவில் புலவர் திரு. கீரன் கூறியது.

—பெ. சு. சங்கரன்


கர்னடகா ராஜ்ய லாட்டரி
அமோகப் பரிசு
ரூ.5,00,000
2 ஆறுதல் பரிசுகள்
யுகாதி
அமோக குலுக்கல்
13-4-1975
ரூ. 18,77,160
எழுச்சியூட்டும் 8601 பரிசுகள்
6 முதல் பரிசுகள்
ரூ. 1,00,000
12 ஆறுதல் பரிசுகள்
6 இரண்டாவது பரிசுகள்
ரூ. 10,000
12 ஆறுதல் பரிசுகள்
6 மூன்றாவது பரிசுகள்
ரூ. 5,000
12 ஆறுதல் பரிசுகள்
96 நான்காவது பரிசுகள்
ரூ. 1,000
192 ஆறுதல் பரிசுகள்
192 ஐந்தாவது பரிசுகள்
ரூ. 500
384 ஆறுதல் பரிசுகள்
960 ஆறாவது பரிசுகள்
ரூ. 100
1920 ஆறுதல் பரிசுகள்
4800 ஏழாவது பரிசுகள்
ரூ. 50
அமோகப் பரிசு மற்றும் முதல் பரிசு பெறும் ஆறு எண்களின் முன்னும் பின்னும் உள்ள எண்களைக்கொண்ட டிக்கட்டுகளுக்கு ஆறுதல் பரிசுகள் உண்டு
MCA-MSIL-30

ரஸகுல்லா

ஹேமா ஆனந்ததீர்த்தன்

"அம்மா, ரஸகுல்லா டின்னை உடைக்கலையா?" என்று பாபு கேட்டான்.

"இன்னிக்கு வேண்டாண்டா. கோபுவுக்கு ஜுரமோ இல்லையோ? அவனாலே சாப்பிட முடியாது. டின்னை உடைச்சால் உடனே சாப்பிட்டுடணும். இல்லாட்டா ரஸகுல்லா கெட்டுப் போயிடும்," என்று அவன் தாய் ராதை சொன்னாள்.

"போம்மா, நேத்திக்கும் அப்படியே சொன்னே. இன்னிக்கும் அப்படியே சொல்றே. நாளைக்குக் கோபுவுக்குத் தேவலையானாலும் ஆகாவிட்டாலும் நீ டின்னை உடைச்சுத்தான் ஆகணும். இல்லாட்டா நான் சும்மா யிருக்கமாட்டேன். ஆமாம்," என்று பாபு சொல்லிவிட்டு அங்கிருந்து போய் விட்டான்.



ராதையும், கோதையும் ஓரகத்திகள். ராதையின் கணவன் சேகரன் அண்ணன்; கோதையின் கணவன் ரவி தம்பி. சகோதரர்கள் இருவரும் ஒருவரோடொருவர் ஒட்டிப் பாசத்தோடு பழகி வந்ததால் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். பாபு பிறந்து இரண்டு வருஷங்களுக்குப் பிறகு கோபு பிறந்தான். தகப்பனார்களைப் போலவே குழந்தைகள் இருவரும் அந்நியோன்னியமாகப் பழகி வந்தனர்.

சேகரன் ஆபீஸ் வேலை விஷயமாகக் கல்கத்தாவுக்குப் போயிருந்தவன் திரும்பி வந்தபோது ஒரு ரஸகுல்லா டின் வாங்கி வந்திருந்தான்.

அப்போது பார்த்து கோபுவுக்கு ஜுரம் வந்துவிட்டது. சேகரன் திரும்பி வந்த அன்று அவனுக்கு ஜுரம் விட்டிருக்கவில்லை. ஆனாலும், "அம்மா, பெரியப்பா ரஸகுல்லா கொண்டு வந்திருக்காராம்மா?" என்று முனகிக் கொண்டே கேட்டான்.

"கொண்டு வந்திருக்கார். இப்ப உனக்கு ஜுரமில்லையா? இன்னிக்குச் சாப்பிடக் கூடாது. நாளைக்குத் தேவலையானதும் சாப்பிடுவியாம். டின்னை உடைக்காம அப்படியே வைச்சிருக்கோம்," என்றாள் கோதை.

"ஆமாண்டா கோபு. உனக்குத் தேவலையாற வரைக்கும் நாங்களும் யாரும் சாப்பிட மாட்டோம்," என்றாள் ராதையும். ஆனால் குழந்தையான பாபுவுக்கு மட்டும் அவ்வளவு பொறுமை இருக்கவில்லை. தினம் நச்சரித்துக்கொண்டே யிருந்தான்.

நாலு நாளாயிற்று. கோபுவுக்கு ஜுரம் இறங்கி விட்டது.

"நார்மலாத்தான் இருக்கு. இன்னிக்கு நீ ரஸகுல்லா சாப்பிடலாம்," என்றாள் கோதை.

கோதை கோபுவிடம் அப்படி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, "தெர்மாமீட்டர் இருக்கா, கோதை? பாபுவுக்கு உடம்பு சுடறாப்பலே இருக்கு," என்று கேட்டுக்கொண்டே ராதை அங்கே வந்தாள்.

"அட கஷ்டமே. இப்பத்தான் இவனுக்குப் பார்த்தேன். நார்மல் இருந்தது. நிம்மதியாச்சுன்னு நினைத்தேன். அவனுக்கு வந்துட்டுதா?" என்று கூறியபடி தெர்மாமீட்டரைக் கொடுத்தாள்.

பாபுவின் வாயிலிருந்து தெர்மாமீட்டரை எடுத்துப் பார்த்த ராதை திடுக்கிட்டாள். 103 டிகிரி காட்டியது. பெருமூச்செறிந்தவாறே, அவனுக்கு நன்றாகப் போர்த்திவிட்டு, தெர்மாமீட்டரை அலம்பச் சென்றாள்.

"பெரியம்மா, ரஸகுல்லா கொடு பெரியம்மா," என்றான் கோபு.

ராதைக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

"கோபு, இரண்டு நாளா உனக்கு ஜுரம்னு டின்னை உடைக்கவே இல்லை. இன்னிக்கு உனக்குத்

தேவலை ஆயிட்டுது. பாபுவுக்கு ஜுரம் வந்துடுத்தேடா. இன்னிக்கு டின் உடைச்சா அவன் சாப்பிட முடியாதே,'' என்றாள் ராதை.

''போ, பெரியம்மா. எனக்கு அதெல்லாம் தெரியாது. எனக்கு இன்னிக்கு வேணும். அவ்வளவுதான்.''

கோதை கோபுவைக் கோபித்துக் கொண்டாள்: ''என்னடாது, இரண்டு நாளா பாபு வாயை மூடிட்டுப் பேசாமல் இருக்கலை? நீ மட்டும் சாப்பிட்டால் போதுமா?''

''கோதை, இவனை அழவிடாதே. சிறிசுதானே. பாபுவுக்கு என்னிக்குத் தேவலையாறதோ என்னமோ. அவனுக்குத் தேவலையானபிறகு இங்கிருந்தே வேறு நல்ல ஸ்வீட் வாங்கிட்டுவரச் சொல்லி குடுத்தாப் போறது. டின்னை உடைச்சு இவனுக்குக் கொடுத்துடு,'' என்ற ராதை டின்னைத் திறந்து கொண்டுவந்து தந்தாள் அவனிடம்.

''அம்மா,'' பக்கத்து அறையில் முனகினான் பாபு.

''என்ன பாபு?''

''அந்த ரஸகுல்லாவை என்னம்மா பண்ணினே?''

''அப்படியே வச்சிருக்கேன். கோபுகூடக் கேட்டான். உனக்குத் தேவலையானப்புறம் சாப்பிடலாம்னு சொல்லி அப்படியே உடைக்காம வச்சிருக்கேன்,'' என்றாள் ராதை. பொய் சொல்லுகிறோமே என்று அவள் மனம் அவளை உறுத்தியது.

''வேண்டாம்மா. கெட்டுப் போயிடும். உடைச்சுக் கோபுவுக்குக் கொடுத்துடு. எனக்கு எப்போ தேவலையாகப் போறதோ? அதுவரைக்கும் காத்துட்டிருக்காதே,'' என்றான்.

ராதையின் இதயம் அந்த வார்த்தைகளைக் கேட்டு நெகிழ்ந்தது. கோபுவைத் திரும்பிப் பார்த்தாள். அவன் பேசாமல் ரசகுல்லா டின்னை மூடி, அலமாரியில் திரும்பக் கொண்டு போய் வைத்துக் கொண்டிருந்தான்.

குமுதம்
மதி: 28 மலர்: 22
20-3-75



ஐடா ஸ்கட்டர்
..ஆஸ்பத்திரியை நிறுவியவர்..

வேலூர் ஆஸ்பத்திரி

வேலூர் எத்தனையோ சிறப்புக்கள் கொண்ட நகரமாக இருக்கலாம். ஆனால் சி.எம்.சி. மருத்துவமனைதான் அதற்குத் திலகம். அந்த ஆஸ்பத்திரி புகழ் தேடித் தந்த மாதிரி வேலூருக்கு வேறு எதுவும் செய்திருக்க முடியாது. எத்தனையோ தமிழர்கள் மனத்தில் எத்தனையோ ஆண்டுகளாக, வேலூர் வேறு அதன் ஆஸ்பத்திரி வேறு அல்ல. இரண்டும் ஒன்றுதான்.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், அனைத்திந்தியாவிலும் அந்த மருத்துவமனைக்குச் செல்வாக்கு உண்டு. திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கூடப் போன வருஷம் வேலூருக்கு வந்துதான் வைத்தியம் செய்துகொண்டார்.

இன்று வேலூர் ஆஸ்பத்திரி பழைய ஆஸ்பத்திரியாக இல்லை. வேலை நிறுத்தம். தடியடி. கலவரம். அரெஸ்ட். ஆஸ்பத்திரியில் வேலை செய்த சிலரே ஆஸ்பத்திரியில் படுத்திருக்க வேண்டிய கட்டாயம். டாக்டர்களைப் 'போலீஸார் அழைத்துச் செல்லும்' கண்ணராவி.

இந்த அசம்பாவிதங்கள் நீடித்தால் நிர்வாகத்தினர் மருத்துவமனையை வேறு இடத்துக்குக் கொண்டு போய்விடக்கூடும் என்று ஒரு எம்.எல்.ஏ எச்சரிக்க, "போகட்டுமே? போனால் குடியா முழுகிப் போய்விடும்?" என்று முதல்வர் சட்டமன்றத்தில் கனல் உமிழ்ந்ததாகத் தெரிகிறது.

அந்த அளவுக்கு அவருக்கு வேலூர் ஆஸ்பத்திரி மீது கோபம். ஏன் கோபம் ஏற்பட்டது, ஏற்பட்ட கோபம் எப்படி வளர்ந்தது என்பது தெரியவில்லை. மருத்துவமனை அரசாங்கக் கெடுபிடிக்கு ஆளாகியிருப்பதென்னவோ உண்மை. திடீரென்று ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து விற்பனை வரி அதிகாரிகள் தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றியதாகச் சொல்கிறார்கள். இருபத்து நாலு மணி நேரத்துக்குள் ஆஸ்பத்திரியின் முன் மதில் சுவர் இடிக்கப்பட வேண்டும் என்று நோட்டீஸ் தரப்பட்டதாகக் கூறுகிறார்கள். கல்லூரி வட்டாரத்திலிருந்தும், மருத்துவமனை நீர் சப்ளை இடத்திலிருந்தும் போலீஸ் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டது என்கிறார்கள்.

ஆஸ்பத்திரி என்பது மிகப் புனிதமான இடம். நோயாளிகளை மரணத்தினின்று மீட்கப் போராட்டம் நடத்தும் கருணை நிரம்பிய தலம். பீடத்தில் அமர்ந்துள்ள பெரியவர்கள் எதையோ நினைத்துக் கொண்டு எதையோ இடிப்பது நியாயமாகுமா? ஒரு பெரிய வைத்தியசாலை—அதுவும் சி.எம்.சி. ஆஸ்பத்திரியைப் போன்ற தொன்மையும், தொண்டும், திறமையும் நிறைந்த மருத்துவமனை — அரசியல் காரணங்களுக்காகப் பழிவாங்கப்படுவது, பொதுமக்களுக்கு அநீதி விளைவிப்பதாகும்.

முதலமைச்சர், ஆஸ்பத்திரி நிர்வாகிகள் ஆகிய இரு தரப்பினருமே சற்று சிந்தித்து ஒரு நியாயமான, நிலையான சமரசத்துக்கு வழி வகுப்பதே முறை.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும், கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. குமுதம் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெடில் அச்சிட்டவர்: ஏ.பி.ஏ. பெரியகருப்பன். குமுதம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர்: பி.வி. பார்த்தசாரதி. ஆசிரியர்: எஸ்.ஏ.பி. அண்ணாமலை. முகவரி: 83, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை—600010

சொல்ல வேண்டியிருக்கிறது ?

நமது கலை, கலாசாரம், நம்முடைய அணுசக்தி வளர்ச்சி இவற்றைப் பற்றியெல்லாம் என்னிடம் எந்த அமெரிக்கரும் கேட்டதில்லை. பத்திரிகைகளின் முதல் பக்கத்தில், வயிறு வீங்கிச் சோற்றுக்காக ஏங்கும் இந்தியக் குழந்தையின் படம் வெளியாகியிருக்கும். அதை எடுத்துக் கொண்டு வந்து, 'ஏனிப்படி இருக்கிறது உங்கள் நாடு?' என்று கேட்பார்கள்.

□ □ □

இந்தியா வாரம் என்று டெலிவிஷன் புரோகிராம் நடைபெற்றது. ஒரு பிரெஞ்சுக்காரர், தமிழ்நாடு உட்பட இந்தியா முழுவதும் சுற்றிப் பார்த்து எடுத்த "டாக்குமெண்டரி" படங்கள் டி.வி. யில் காட்டப்பட்டன. அப்பப்பா!

பழனி மலை அடிவாரத்தில், பிச்சைக்காரர்கள் எப்படி கோவிலுக்குப் போகிறவர்களை வழிமறித்துக் காசு கேட்கிறார்கள் என்பதையும், அதே போல் பல ஊர்களில் குஷ்ட ரோகிகள், அங்கவீனர்கள் ஆகியோரையும் படமெடுத்துக் காட்டி, 'இது தான் தமிழ்நாடு,' என்கிறார்கள். அந்தப் படங்களைத் தமிழர்கள் பார்க்க வேண்டும். பிறகுதான் நாம் எப்படி இருக்கக் கூடாது என்பது தெரியும்.

இதே போல் நாம் தொழிலிலும் விவசாயத்திலும் உற்பத்தியை அதிகரிக்கவில்லை என்பதையும், எப்போதும் பிச்சை கேட்கிறோம், அசுத்தமாக இருக்கிறோம், கண்ட இடங்களில் மலஜலம் கழிக்கிறோம், அநாகரிகமான பழக்க வழக்கங்களை மேற்கொண்டிருக்கிறோம் என்ற தகவல்களையும்தான் டெலிவிஷன் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் அமெரிக்க மக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அவற்றை அப்படியே நம்புகிறார்கள்.

□ □ □

ராஜஸ்தானத்தில் ஒரு 'மூஞ்சூறு கோயில்' இருக்கிறது. அதை டி. வி. யில் காட்டினார்கள். லட்சக் கணக்கான எலிகள் ஓடுகின்றன. விவசாயிகள் குடம் குடமாகப் பால் அபிஷேகம் செய்கிறார்கள். டெலிவிஷனில் அதைப் படமெடுத்துக் காட்டி, அடுத்த கணமே அதே ஊரில் ஒரு வேளை பாலுக்காக ஏங்கி நிற்கும் குழந்தையின் முகத்தையும் 'க்ளோசப்'பில் காட்டுகிறார்கள். அந்தக் குழந்தையின் ஏக்கமான விழி பார்ப்போரின் மனத்தில் சொல்ல முடியாத வேதனையை உண்டு பண்ணுகிறது.

'இப்படிப்பட்ட வறுமையை ஒழிப்பதற்கு உங்கள் மடாதிபதிகளும் மதத் தலைவர்களும் ஏதாவது செய்யக் கூடாதா?' என்று அமெரிக்கர்கள் கேட்கும்போது சங்கடமாய்த் தான் இருக்கிறது.

□ □ □

தமிழ் நாடகக் கலை முன்னைக்கு இப்போது நன்றாக வளர்ந்திருக்கிறது என்று எனக்குத் தோன்றியது. மேஜர் சுந்தரராஜன் நடித்த 'சந்ததி'யையும் மனோகர் நடித்த சில நாடகங்களையும் பார்த்தேன். எக்ஸெலன்ட்.

தியேட்டர்களில், முரளி கிருஷ்ணா தியேட்டர் ரொம்ப நன்றாக இருந்தது. தேவி பாரடைஸ் பெரிதாக இருக்கும் அளவுக்கு அழகாக இல்லை.

□ □ □

எங்கு பார்த்தாலும் அழகான தமிழ்ப் பெயர்களைக் கண்டேன். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

'கெடுதல் என்று தெரிந்திருந்தும் கண்ணதாசன் ஏன் பெதிடின் ஊசி போட்டுக் கொள்கிறார்?' என்று வாசகர் திரு.எஸ். தேவசேனாபதி (காரைக்குடி) கேட்டிருந்தார். பதில்: 21'ம் பக்கம்

ஆயிரத்தில் ஒருத்தி ■ ▮

இதற்குமுன் எத்தனையோ சிறைக்கூடக் காட்சிகளைத் திரையிலே கண்டிருக்கிறோம். ஆனால், பெண்களுக்கான சிறை, பெண் வார்டர், பெண் ரௌடிகள் – இதையெல்லாம் வைத்து முதன் முதலில் கதை பின்னியிருக்கிறார்களே என்று பார்க்கும்போது உற்சாகம் கொப்புளிக்கத்தான் செய்கிறது, மறுக்க முடியாது.

ஆனால், ஒரு பெண் வக்கீல் வாதாடி, கதாநாயகியைத் (விஜயாவைத்) தூக்குமேடையிலிருநது காப்பாற்றியபின், (எப்படி என்று கேட்காதீர்கள்) வக்கீலுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு அவரது சகோதரனை விஜயா மணந்தவுடன் மையிலிருந்த புது போய்ப் பழம் வந்து விடுகிறதே!

விஜயாதான் தன் தகப்பனாரைக் கொலை செய்தவர் என்று கூறி, 'உன் உயிரைக் கொடு, உயிரைக் கொடு' என்று ஸ்ரீகாந்த் விஜயாவின் உயிரோடு நம் உயிரையும் எடுப்பது ஒரு சங்கடமான அனுபவம்.

ஒரு தரம் நீதி மன்றத்தில் நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்ட பெண்ணை, அதே வழக்குக்காக மறுபடி எப்படிக் குற்றவாளி என்று கைது செய்ய முடியும்? கடவுளுக்கும் கதாசிரியருக்கும்தான் வெளிச்சம்.

ஓல்ட் மாடலாக இருந்தாலும், வசனம் சில சமயம் பளீர் பளீரென்று அமைந்திருப்பது உண்மையே. 'நீங்கள் சந்தனம். நின்றாலும் சந்தனம். விழுந்தாலும் சந்தனம். எரிந்தாலும் சந்தனம். நான் சவுக்கு. நின்றால் சவுக்கு. விழுந்தால் விறகு. எரிந்தால் கரி' என்று சுஜாதாவிடம் விஜயா சொல்வதும், டெலிபோனில் பேசியது சுஜாதா அல்ல என்று உணர்ந்து, 'ஹலோ! ராங் நம்பரா?' என்று ஸ்ரீகாந்த் கேட்டதும், 'ராங் நம்பர் இல்லை. ராங் மெம்பர்' என்று விஜயா பதில் தருவதும் உதாரணங்கள். வேசி தரும் இன்பத்தை மனைவி தரமுடியாது என்று பாலாஜி சொல்கிறார். பதில்: 'புத்தகத்தைப் படித்துப் பார்த்துவிட்டு அல்லவா விமரிசனம் செய்ய வேண்டும்? நீங்கள் புரட்டிக்கூடப் பார்க்கவில்லையே?' இருந்தாலும், திருஷ்டி பரிகாரமாகச் சில பசுமைப் புரட்சிகளைச் சேர்த்திருக்க வேண்டாம்.

சுஜாதாவா? சுஜாதனா? அவருக்கு ஏன் இந்தப் படத்திலும் ஆண் ரக வேடம் தொடர வேண்டுமோ தெரியவில்லை. தவிரவும், குணசித்திரம் சரியில்லை. வக்கீலாக அவர் ஆரம்பிக்கும் தடபுடல் என்ன, அப்புறம் அண்ணிக்கு லோட்டா போடும் ஆமாம் சாமித்தனம் என்ன!

விஜயாவை மணப் பெண்ணாக அறிமுகம் செய்து வைப்பது நல்ல நகைச்சுவை. ஆனால் நடிப்பில் குறை சொல்ல முடியாது.


பாலாஜி – அந்த மனிதர் எதற்காக ஜெயிலுக்குப் போனார்? அப்படி அவர் வாழ்க்கையில் என்ன தான் துயரம் ஏற்பட்டு ஓயாத குடிகாரராய் மாறினார்? அதுவுமா மர்மம்?

மெக்கானிக் யூனிபாரம் ஒன்று பாக்கியிருந்தது. அதையும் போட்டுவிட்டார்கள் மனோரமாவுக்கு. தேங்காயின் அணைப்புக்குக் குறுக்கே குறுக்கே அந்த ஹாரன் வந்து 'பாம் பாம்' ஒலிப்பது கடுகத்தனை வேடிக்கை. அத்தோடு சரி.

பழைய அம்பிகாபதி பார்த்ததில்லையா? என். எஸ். கிருஷ்ணனுக்கும் பி. ஜி. வெங்கடேசனுக்கும் நடக்கும் போட்டியைக் காணச் சந்தர்ப்பம் கிடைத்ததில்லையா? பரவாயில்லை. இந்தப் படத்தில் தேங்காய்ச் சுருளியைச் சந்தித்தால் போதும்.


யாருக்கோ தோன்றிவிட்டது — ஏ. சகுந்தலாவுக்கு நிறையப் பேசுகிற மாதிரிப் பாகம் கொடுத்தாலென்ன என்று. சந்தோஷமாய்க் கொடுக்கட்டும். ஆனால் அதற்கு விஜயாவின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கும் இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டாம். 'அன்றைக்கு நீங்கள் இருக்க வேண்டிய கட்டிலில் நான் இருந்தேனே, அப்போது உங்களுக்கு எப்படி இருந்தது? நீங்கள் தரவேண்டிய பாலை நான் கொடுத்தேனே, எப்படி உங்களுக்கு மனம் வந்தது?' என்றெல்லாம் அடுக்கடுக்காய்க் கேட்க, அதற்கு விஜயாவும் அடுக்கடுக்காய்ப் பதில் தருவது அறுவைடு த பவர் அஃப் ஆறு.

கொலையாளி யார் என்ற ஆவலைத் தூண்டிவிட்டு, கடைசியில் ஓர் எதிர்பாராத முடிவைக் கொடுத்ததால் படம் பிழைத்துக் கொள்கிறது.




கணவனுக்கு தெரியாமல் செய்த காரியம்

வள்ளி என்கிற வனிதை கணவனுக்குத் தெரியாமல் செய்து வந்த காரியத்தால் ரு 20,000/- பெற்ருள். அவளது சிறப்புப் பேட்டி இதோ!



கே. உங்களது கணவனுக்கு வருவாய் எவ்வளவு?

ப. மாதம் ரு. 200/-

கே. உங்களை இப்படிச் செய்யத் தூண்டியது எது?

ப. பொருளாதார சூழ்நிலை

கே. இவ்வளவு குறைந்த வருவாயில் உங்களால் எப்படி இதை செய்ய முடிந்தது?

ப. ஓ! அதுவா! பெண்களுக்கே உரித்தான முறையில் ஏமாற்றித்தான் சேமித்தேன். சிறிது சிறிதாக சேமிக்கத் துவங்கி தொடர்ந்து ரு. 50 வரை சேமித்தேன்.

கே. அப்படி சேமித்ததால் இப்போது உங்களுக்கு பெரும் பரிசு கிடைத்ததா?

ப. ஆம்! பாங்க் ஆப் மதுரைக்கு என் நன்றி. அவர்களது சிறு சேமிப்புப் பரிசு திட்டத்தில் தான் நான் சேமித்த தொகையை முதலீடு செய்தேன். என்னைப்போன்ற சாமானியர்களுக்கு சிறு சேமிப்பு எவ்வளவு முக்கியமானது என்பதை இந்த பாங்க் உண்மையில் உணர்ந்துள்ளது. ஏழை எளியவர்களின் முன்னேற்றத்திற்கு உதவுவதின் மூலம் சமுதாய உயர்வுக்கு வழி வகுக்கும் எங்கள் வங்கியின் பயனுள்ள திட்டங்களில் இதுவும் ஒன்று.

கே நீங்கள் மிகவும் சரி

சுவரென்று தெரிந்தும் மோதின்
தொல்லைகள் அவனைச் சாரும்!
கவரென்று தெரிந்தும் ஆடின்
கடன்கார ருவ துண்மை!
தவறென்று தெரிந்தும் செய்வான்
தண்டனை அனுப விப்பான்!
இவைநன்ருய் உணர்ந்த யானே
எனக்குளோர் தீங்கு செய்தேன்!

சத்தியம் தவறும் கூட்டம்
தருமத்தை மறந்த கூட்டம்
வித்தைகள் காட்டும் கூட்டம்
வேதனை வளர்க்கும் கூட்டம்
நித்தியம் பார்த்துப் பார்த்து
நெஞ்சமே வெந்து வெந்து
'பெத்தடின்' ஊசி போட்டேன்
பிறிதென்னைக் காப்பார் யாவர்?

சந்திக்கும் மனித ரெல்லாம்
தலையையே தின்கின் ருர்கள்.
வந்தித்து வாழ்த்துச் சொல்ல
வழியிலே ஒருவ ரில்லை!
நிந்தித்தே பழகிப் போன
நீசரைத் தினமும் கண்டேன்!
சிந்தித்தே ஊசி போட்டேன்;
சிறிதென்னைக் காக்க வேண்டி!

யோகியின் உள்ளம் கர்ம
யோகத்தில் ஆழ்ந்த சிந்தை
ரோகியின் நரக வாழ்க்கை
நோய்கொண்ட துணைவர் சேர்க்கை
போகியின் பருவ தாகம்
பொய்யான மயக்கம் துன்பம்
ஆகிய இவற்றைச் சேர்த்தால்
அடியவன் பெயரே தோன்றும்!

ஆமையின் கழுத்தைக் கண்டீர்;
அடியில்நீர் அறியா ஒன்று!
ஊமையின் மொழியைக் கேட்டீர்;
உண்மைநீர் அறியா ஒன்று!
நாம்எம துண்மை சொல்ல
நாணந்தான் குறுக்கே நிற்கும்!
சாமிதான் நம்மைக் காத்துச்
சாவினைத் தடுத்தல் வேண்டும்!

கண்ணதாசன்

ரிஸர்வ்டு

"தென் எனி சேஞ்ச் மதன்?"

"இல்லேப்பா..டிட்டோ டிட்டோ" — மதன், பழைய பூத் துவாலேயால், தன் புத்தம் புது ஜாவாவை முத்தமிடாத குறையாக ஒற்றி ஒற்றித் துடைக்கலானுன்.

எனக்குச் சீ என் ரு கி விட்டது. ட்வென்டியத் செஞ்சுரி யிலே இப்படியொரு பிள்ளேயா?

"பெண்ணுக்கு லேசா மேன் வரிசைப் பற்கள் தூக்கி ஞற்போல் இருக்கேடா, அதை.. அதைக் கவனிச்சியா மதன்?"


"டென்டிஸ்ட் கவனிச் சுப்பார் அப்பா! பாங்க் அக் கௌண்ட் கனமாயிருக்கே, அதை நீங்க கவனிச் சீங்களா?"

"சுத்தமாகப் படிப்பே இல்லே யாம்," என்றேன்.



ஸீட்

டி. மல்லிகா.



"படிப்பு யாருக்கப்பா வேணும்? தெருவுக்குப் பத்து கிராஜுவேட் பெண் இருக்கிறுங்க. ஆனல் பணம் காசோட கிடைக்கிறவள் எத்தனை பேர்?" என்று சொல்லி விட்டான் என் மகன்.

"பையனைப் புரிஞ்சுக்க முடியலை இல்லீங்க?"—என் தோளை ஒட்டி நின்று ஓதினுள் என் மனைவி கீதா.

ஆ! என் கண்மணி கீதாவின் கிளியோபாட்ரா கிளாமரில் நான் இந்த ஐம்பது வயதிலும் சரணுகதியடைகிறேன். என் பிள்ளை என்னடாவென்றுல் அழகான பெண் தேவையில்லை என்கிறுன்!

"அப்பா...அழகான பாண்ட் போட்டுகிட்டுத் தியேட்டர்லே கீழ் வகுப்பிலே உட்கார்வதைவிட, நாலு முழ மோட்டா கைத்தறி வேட்டி கட்டிக்கிட்டு மேல் வகுப்பு ரிசர்வ் ஸீட்டிலே ஒய்யாரமா, ரிலாக்ஸ்டா சாஞ்சிக்கிறதிலே தாம்பா சுகமேயிருக்கு!" என்கிறுன்.

இடியட்...பணம் இன்று வரும்... நாளை போகும்...அழகான மனைவியை ஆயுள் பூரா கண் நிறையப் பார்த்துப் பார்த்துப் பூரிக்கணும்னு ஒரு பையனுக்குத் தோன்ருதோ? ஊஹூம்!

"மதன், லவ் மாரேஜை நான் என்கரேஜ் பண்ணுகிறவன். உன் ஆபீஸ் ஸ்டெனோ...டெலிபோன் ஆபரேடர்ஸ், ஏன்? நீ தினமும் ஜீ.ஹெச் வழியாத் தானே போறே? எத்தனை அழகான யங் நர்ஸ்கள்! இப்படி யாரையாவது..."

நெஞ்சு ஸ்லாக்ஸ் பட்டனை நிமிட்டியபடி அழுத்தமாகச் சொன்னுன். "அப்பா.. போதிய செல்வம் இருந்தா, ஸ்டெனோவாகவும் ஆபரேடராகவும் நர்ஸாகவும் ஏம்ப்பா வர்ருங்க? அவ்வளவு சொத்துக்கும் இவள் ஒரே வாரிசு அப்பா!" ஜாவாவை உதைத்துக் கிளப்பிக் கொண்டு போய் விட்டான்.

"பிள்ளை கிட்டே ஒண்ணும் பாச்சா பலிக்கலை போலிருக்கு அய்யாவுக்கு..." என் கீதாவே என்னைக் கிண்டல் பண்ணுகிருள்.

"உக்கும்... வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாத மடையன்... பணம்..பணம்னு...எந்தப் பிணத்தையாவது..."

என் வாயைப் பொத்தினுள் கீதா.

"ஒன் திங் கீதா...படிச்ச பயல் இப்படிப் பணத்துக்குப் பேயாய் அலைய வேண்டாம்," என்றேன்.

"இப்போதே அந்தப் பெண் பிரபா ஒண்ணரைக் காரட்டில் வைரத் தோடு போட்டிருக்காள்...அது ரஃப் யூஸுக்காம். அவ கல்யாணத்தின் போது மூணு, மூணரை காரட்டில் ஒரே பெரிய தோடாய்ப் பண்ணிப் போடப் போறேன்னு அவ அம்மா

சொன்னுங்க...மூணரைக் காரட்! எப்படியிருக்கும்...இமாஜின் பண்ணிப் பாருங்களேன்...''

கீதாவே எதிர்க் கட்சிக்காக வாதாடுகிருள்! எனக்கு எரிச்சல் வந்தது. ''சரி, சரி!'' என்றேன்.

''அதை நம்ப மதன் கிட்டே சொன்னப்போ 'மை காட்—ஒரு காரட்டே அஞ்சாயிரமாகுது. மூணரைன்னு...அதுவே பதினேழாயிரத்து ஐந்நூறு ஆகுதே. அம்மா! கண்டிப்பா அந்தப் பெண்ணேயே முடிச்சுடு' என்று சொல்லிவிட்டான்!''

ஓஹோ! ரிசர்வ் ஸீட்டில் அழுத்தமா உட்கார்ந்துவிட்டானு? யமகாதகன்!

பணத்தைப் பற்றிக் கேவலமாய்க் கூறும் அத்தனை பழமொழிகளையும் என் காது பட மதன் கல்யாணத்தன்றே கேட்டாகி விட்டது!

ஆக, பணத்துக்கு ஆசைப்பட்டு, அழகில்லாத பெண்ணை என் பிள்ளைக்குக் கல்யாணம் செய்துவைத்துவிட்டேன் என்று என் மீதே பழி போட்டார்கள் எல்லாரும்!



'ஆச்சரியத்திற்கு என்ன இருக்கு ஆஷா? எங்களவர் குடும்பக் கட்டுப் பாட்டிலே படு தீவிரம்!'

ஆயிற்று...கிட்டத்தட்ட ஒரு வருடமாகப் போகிறது.

பெண் அழகியல்லவே தவிர, ஆணவமில்லாதவள்.

வாசலில் தந்திச் சேவகன்! அதைக் கையெழுத்திட்டுப் பிரித்துப் படிப்பதற்குள் எனக்கு உதறலெடுத்தது. வாசகத்தைப் படித்தவுடன் அழுவதா, சிரிப்பதா என்று தோன்ருமல், கீதாவைத் தேடி ஓடினேன். எதிரே வந்த மருமகள் பிரபா கூடக் கண்களுக்குத் தெரியவில்லை. அரண்டு போனவள் என்னைத் துரத்திப் பின்தொடர்ந்தாள்.

கீதாவிடம் தந்தியைக் காட்டினேன். படித்துவிட்டு அசந்து போனவள் ஆட்டுக் கல் பக்கத்தில் சரிந்து விட்டாள். நான் மாடிக்குத் தாவினேன்.

வாசகத்தைக் கொத்திக் குதருத குறையாக படித்த மதன், ஒரே கசக்காய் கசக்கி, மாடியிலிருந்து கீழே வீசினுன். ஊசலாடிய தந்தி வீழ்ந்தது. எரிமலை இப்படித்தான் உள்ளுக்குள் கொப்புளித்துக் கொதிக்குமோ! இமயமாக உயர்ந்து நின்ற மனிதனின் பேராசை—ஸ்மாஷ்—போச்சுடா போச்சு!

''என்ன மாமா தந்தியில்? நான் தெரிஞ்சுக்கலாமா?'' பிரபா பதைபதைத்தாள்.

''உன் அம்மாவுக்குக் குழந்தை பிறந்திருக்காம். பதினெட்டு வருஷம் கழித்து. ஒன்றில்லை—ட்ரிப்லெட்ஸ்!''

''அப்படீன்னு?''

''அப்படீன்னு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள். மூன்றும் ஆண் குழந்தைகள்! தாயும் குழந்தைகளும் சுகம்னு உன் அப்பா தந்தி கொடுத்திருக்கிருர்!''

''அப்பாவுக்குக் கன்கிராட்ஸ்ன்னு பதில் தந்தி கொடுத்துடுங்க மாமா...''

நான் மாடியைப் பார்த்தேன். அங்கே அவனில்லை. திரண்ட மாமஞர் சொத்துக்கு, தான்தான் ஒரே வாரிசு என்று எண்ணியிருந்தவனின் மனக் கோட்டை இப்படியா சரிய வேண்டும்!

ஏக போக ரிசர்வ் ஸீட் என்னவாச்சு மதன் கண்ணு?

காசியிலிருந்து கட்டில் வரா



காசியாத்திரை முடிந்து ரயில்வே ஸ்டேஷனிலிருந்து டாக்ஸியில் வீடு திரும்பிய வரதராஜன், பெட்டி படுக்கைகளை இறக்கியானதும், யாத்திரையைப் பற்றி ஆவலாக விசாரித்தவர்களுக்கெல்லாம் தமது முன் வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டே சுருக்கமாகக் கொஞ்சம் சொல்லிவிட்டு, கை கால் அலம்பிக் கொண்டு முகத்தைத் துடைத்துக் கொள்ளும்போதுதான் வெளிநடை ரூமில் தமது கட்டில் இல்லாததைக் கவனித்தார்.

ஒட்டடை, சுண்ணும்பு அடிக்க அகற்றி எங்கேயாவது வைத்திருப்பார்கள் என்று எண்ணியவாறே மூட்டையை அவிழ்த்து கங்கா ஜலத்தையும் காசிப் பாத்திரங்களையும் பிரசாதங்களையும் வெளியே எடுத்து வைத்தார்.

மருமகள் சரஸ்வதி அவரது பிரயாணத்தைப் பற்றி விசாரித்துவிட்டு, "காசிக்குப் போனு பிரியமானது எதையாவது விட்டுட்டு வரணு மாமே? நீங்க என்னத்தை மாமா விட்டீங்க?" என்று விசாரித்தாள்.

"ஊம், ஊம். விடாமல் இருப்பேனு?" என்றவர், "எங்கே என் பேரனைக் காணோம்? கூப்பிடும்மா அவனை!" என்றார்.

தெருவில் பம்பரம் ஆடிக் கொண்டிருந்த அவருடைய பேரன் கோபி பம்பரக் கயிற்றை விரலில் சுற்றிக் கொண்டே அவருக்கு அருகில் வந்து நின்றான்.

"தாத்தா, உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?" என்று டிராயரின் இரண்டு ஜேபிகளிலும் கையை விட்டுக் கொண்டு அமர்த்தலாகக் கேட்டான்.

"என்னடா விஷயம்?"

"உன்னுடைய கட்டில் இருந்ததே...அது எங்கே போயிருக்கு தெரியுமா?"

"தெரியாதே..."

"ஏலக் கம்பெனிக்குக் கொண்டு போய்ட்டாங்க."

"ஏலக் கம்பெனிக்கு அனுப்பிச்சிட்டாங்களா...ஏம்மா சரசு?" என்று நெருப்பை மிதித்தது போல் திடுக்கிட்டுக் கூவினர் வரதராஜன்.

"நான் எவ்வளவோ சொன்னேன் மாமா... உங்க பிள்ளை கேக்கலே! 'எல்லாம் மாடர்னு இருக்கிற வீட்டிலே அந்தப் பழங் காலத்துக் கட்டில் அசிங்கமா இருக்கு'ன்னு ஒரே பிடியா அவங்க லாரியிலே ஏத்தி அனுப்பிச்சிட்டாங்க."

"அசிங்கமா இருக்காமா அந்த மகாப் பிரபுவுக்கு? அந்தக் கட்டில் எவ்வளவு ஆகி வந்ததுண்ணு அவனுக்குத் தெரியுமா?" என்று சொத்தே பறிபோன மாதிரி அவர் தவித்தார்.

அது வெறும் கட்டில் மட்டுமா?

விவேகி

அவரும் வனஜாவும் வாழ்ந்த வாழ்க்கையின் இன்பமும் துன்பமும் கலந்த நினைவுகள் எல்லாம் உள்ளடங்கிய அடையாளச் சின்னமல்லவா?

அந்தக் கட்டிலை மாமனார் வீட்டிலிருந்து ஒரு லாரியில் கொண்டு வந்து இறக்கிய நாள் வரதராஜனுக்கு நேற்று நடந்தது போல் பளிச்சென்று ஞாபகமிருக்கிறது.

லாரி நுழையாத அந்தச் சந்தில் ரிவர்ஸில் வந்து சந்து முனையில் லாரியை நிறுத்தியதும், கூலிக்காரர்கள் நாலு பேர் கரேலென்ற உடம்பில் வியர்வை வடிய வடக்கு மூலையில் இருந்த அறைக்குக் கட்டிலைக் கொண்டு வந்து இறக்கியதும், புது வார்னிஷ் பளபளக்க அந்தக் கட்டில் மின்னியதும் வரதராஜனுக்கு இன்னும் பசுமை மாறாத நினைவுகள்...

இடுப்பில் கையை வைத்தவாறு சுவர்களுக்கு பின்னம் நேராதபடி கூலிக்காரர்களிடம் வேலை வாங்கிய வீட்டுக்காரம்மாள் வேதவல்லி, "கட்டில் வந்துட்டா மட்டும் போறாது கொழந்தே! சீக்கிரமே ஒரு தொட்டிலும் வரணும்," என்றாள்.

வனஜா கீழுதட்டைக் கடித்தவாறு மஞ்சள் முகத்தில் குப்பென்று ரத்தம் பாய, தலை குனிந்து கால் விரலில் வட்டம் போட்டாள்.

அதற்கப்புறம் தான் அந்தக் கட்டிலில் எத்தனை உல்லாசச் சிரிப்புக்கள்! எவ்வளவு பரிகாசங்கள்! எத்தனை அற்புதமான நேரங்கள்! கட்டில் வந்த வாரமே வரதராஜன் வர்ணக் கடை திறந்தார். எடுத்த எடுப்பிலேயே கொள்ளை கொள்ளையாகப் பொருள் குவிந்தது.

வசதியான வேறு வீட்டுக்கு ஜாகை மாற்றிக்கொண்டு போனார். கையோடு அந்தக் கட்டிலை எடுத்துச் செல்ல மறக்கவில்லை.

அந்தக் கட்டிலிலேயேதான் வனஜாவின் மூன்று குழந்தைகளும் புரண்டு விளையாடிப் பெரியவர்களானார்கள். அதே கட்டிலில்தான் வனஜா நோய் வாய்ப்பட்டுப் படுத்தாள். அந்தக் கட்டிலில் உயிர் விடுவதற்காகவே—ஆஸ்பத்திரியில் அவளுக்குச் சந்தேகமாகத் தோன்றியதும்—வீடு திரும்பி விட்டாள். வந்து சேர்ந்த மூன்றாவது நாள் உயிர் விட்டாள்.

அந்தக் கட்டில் வீட்டை விட்டு வெளியே போனதால் தன் வீட்டு லட்சுமியே போய் விட்டதென்று வீட்டுக்காரம்மா சொல்லுவாள். அவளுக்கு வாழ்க்கை சிரம தசையாகி விட்டது. முதல் பெண்ணுக்குக் கல்யாணமாகி அவள் வாழாமல் வந்து விட்டாள். இரண்டாம் பெண்ணுக்குப் போன சித்திரையில் திருமணம் செய்தாள். அந்தப் பெண்ணும் சீர் வரிசை சரியில்லை என்று கணவன் வீட்டுக்குப் போகவில்லையாம். ஒரு நாள் கண் கலங்கியவாறே வரதராஜனிடம் சொல்லிச் சொல்லி வருந்தினாள்.

"எனக்கும் வயசாய்ப் போச்சு வீட்டுக்காரம்மா! பையன்கள் அவன் அவன் இஷ்டப்படி போயிட்டிருக்காங்க. பழைய வீட்டை இடிச்சுக் கட்டினாங்க. அவங்க இஷ்டப்படியெல்லாம் பழைய சொத்தை வித்தாங்க. எல்லாம் புதுசா வேணும்னு துடிக்கிறாங்க. எப்படியாவது போங்கண்ணு விட்டுட்டேன். மனசிலே ஒரு விரக்தி வந்துடுச்சி. இப்படியே அவ படுத்து உயிர் விட்ட கட்டில்லேயே நானும் கண்ணை மூடிடணும். இப்ப அது ஒண்ணுதான் எனக்கு ஆசை," என்று வரதராஜன் சொன்னார்.

அவ்வளவு ஆசையும் பாசமும் வைத்திருந்த கட்டிலையா ஏலக் கடைக்கு அனுப்பிவிட்டார்கள்? அதுவும் அவர் காசிக்குப் போயிருந்த நேரம் பார்த்து? அவரால் பொறுக்க முடியவில்லை.



எப்படியும் அந்தக் கட்டிலை மீட்டுத்தான் தீர வேண்டும் என்ற உறுதியுடன் ஏலக் கடை விலாசத்தைக் கேட்டுக்கொண்டு புறப்பட்டார்.

"நாட்டுப் பிள்ளையார் கோவில் தெருவிலிருந்து இரட்டைக் கட்டில் ஒண்ணு ஏலத்துக்கு அனுப்பியிருந்தாங்களே...அதை விற்பனை பண்ணிட்டீங்களா..."

"இப்பத்தான் விலை பேசி எடுத்துக்கிட்டுப் போகப் பார்ட்டி வந்திருக்காங்க. உள்ளே பேசிக்கிட்டிருக்காங்க. இதோ..." என்றார் கடைக்காரர்.

வரதராஜன் ஆவலோடு திரும்பினார்.

வேதவல்லி — அவருடைய பழைய வீட்டுக்காரம்மாள்—நின்று கொண்டிருந்தாள்.

"எப்பண்ணு காசியிலிருந்து வந்தீங்க?" என்று முகம் மலர விசாரித்தாள்.

"இப்பத்தான்... கட்டிலை நீங்களா ஏலத்திலே எடுத்தீங்க?" என்று தர்மசங்கடத்தோடு கேட்டார் வரதராஜன்.

"ஆமாண்ணு... என் ரெண்டாவது பெண்ணுக்குச் சீர் கொடுக்க நான்தான் எடுத்தேன். ஏலத்தன்னிக்குப் பார்த்தவுடனே உங்க கட்டில்னு தெரிஞ்சு போச்சு. எவ்வளவு ஆகி வந்த கட்டில்! அது வந்தப்புறம் நீங்க எப்படி ஓகோண்ணு வாழ்ந்தீங்கண்ணு தான் எனக்குத் தெரியுமே. நீங்க மனசாரக் கொடுக்க மாட்டீங்கண்ணு நினைச்சேன்...இருந்தாலும், என் பெண்ணோட க்ஷேமத்துக்காக நீங்க விடத்தான் வேணும்..."

வரதராஜன் ஒரு கணம் திகைத்து நின்றார்.

மனமார ஆசைப்படுவதை விடுவதா! ...காசியிலே பண்டா சொன்ன அதே வார்த்தை! 'உங்களுக்குப் பிடித்தமானதை — ஆசைப்படறதை—விடணும்,' என்று சொன்னார். உண்மையாக ஆசை வைத்துள்ள பழத்தையோ காயையோ விடாமல் எதையோ—சும்மாவானும் விட்டுவிட்டு வந்தார். அது மனத்தில் உறுத்திக் கொண்டேயிருந்தது சென்ற நிமிடம் வரை...

எப்படியும் அவரிடமிருந்து அவருக்குப் பிரியமானதை வசூலித்து விடுவது என்பது இறைவனின் திட்டம் போலும்.


"எடுத்துக்கிட்டுப் போங்கம்மா," என்றார். அவர் மனம் நிறைந்திருந்தது.

ஊசியில் சுலபமாக நூலைக் கோக்க



ஊசியிலே நூலைக் கோப்பது பெரும்பாலும் பிரசினைதான். இதைத் தவிர்க்க இப்போது இந்தமாதிரி ஓர் உபகரணம் வந்திருக்கிறது. பிளாஸ்டிக் பிடியில் மெல்லிய ஸ்டீல் வளையக் கம்பி பொருத்தியிருக்கிறது. இந்தக் கம்பியை ஊசிக் காதுக்குள் எளிதாய் நுழைத்துவிடலாம். பிறகு கம்பி வளையத்தில் நூலை நுழைத்து, பிளாஸ்டிக் பிடியை இழுத்தால் ஊசிக் காதுக்குள் நூல் வந்துவிடுகிறது. சில கம்பெனியார்கள் பிளாஸ்டிக் டைரி போல் தயாரித்து அதற்குள் அவசரத் தேவைக்கான பித்தான்கள், கொக்கிகள், வண்ண நூல்கள், நான்கைந்து ஊசிகள், ஸேப்டி பின்கள் இவற்றுடன் இந்தக் கருவியையும் பொருத்தி அன்பளிப்பாகத் தருகிறார்கள். காகிதப் பஞ்சம் வந்ததோ இந்த மாதிரிப் புதுப் புது உத்திகள் உதிக்கின்றனவோ!

—வெ. ரா மோகன்.



குமுதம்

மதி: 28 மலர்: 29
27-3-75

கலைஞர்—சி.எஸ்.

திரு. சி. சுப்பிரமணியம் நிதி அமைச்சராக இருக்கும் வரையில் மத்திய அரசிடம் வறட்சி நிவாரண உதவி கேட்கப் போவதில்லை என்ற முதலமைச்சரின் கூற்றைக் காட்டிலும் ஒரு விசித்திரமான சபதம், விபரீதமான முடிவு இருக்க முடியாது.

முதலமைச்சருக்கும் சி. எஸ். ஸுக்கும் தகராறு இருக்கலாம். அதற்காகத் தமிழ்நாட்டு மக்களைப் பலி கொடுப்பதா?

மேற்கொண்டு நிதி அளிப்பதானல், கணக்குப் பார்த்த பிறகே கொடுக்க முடியும் என்று மத்திய நிதி மந்திரி தியாகராயநகர் பொதுக் கூட்டத்தில் பேசியதற்குப் பதில் கொடுக்கும் உரிமை முதல்வருக்கு உண்டு என்பதில் சந்தேகமில்லை. 'கணக்குக் கேட்க இந்த சுப்பிரமணியம் யார்?' என்று சாடட்டும். கணக்குக் கொடுக்க முடியாது என்று மறுக்கட்டும். உதவி வேண்டாம் என்று கூற அவருக்கு உரிமை ஏது?

கஷ்டப்படுகிறவர்கள், தமிழகத்திலுள்ள மக்கள்; உதவிக்கு வருகிறவர்கள், அனைத்திந்திய மக்கள். தமிழக மக்கள் சார்பாகக் கலைஞர் உதவி கேட்கிருர்; அனைத்திந்திய மக்கள் சார்பாக நிதி அமைச்சர் வழங்குகிருர். கேட்க மாட்டேன் என்று சொல்லவோ, கொடுக்க மாட்டேன் என்று மறுக்கவோ அவர்களுக்கு அதிகாரம் இல்லை.

பிள்ளைகள் பசியால் துடிக்கும்போது, பானையிலுள்ள சாதத்தை எடுத்துப் பரிமாற வேண்டியது தாயி[...] கடமை. தாயைப் போன்ற நிலை[...] உள்ளவர் முதலமைச்சர். அகப்பையின் மீது கோபித்துக் கொண்டு, நான் சாதம் எடுக்க மாட்டேன் என்று பிடி[...]வாதம் பிடிப்பது பொறுப்புள்ள ஒரு முதலமைச்சருக்கு அழகா?

'மத்திய உதவி இல்லாவிட்டால் என்ன? நாமே அதற்கான பணத்தை வசூல் செய்து கொள்ளலாம்,' என்கிருர் அவர்.

அந்த வசூல், மக்களுக்கு இனிப்பாக இராது என்று சொல்லத் தேவையில்லை. வருவதை வேண்டாமென்று மறுத்துவிட்டு, நம் மக்களைக் கசக்க வேண்டியது அவசியம்தான[...] என்று யோசிக்க வேண்டும்.

வசூலிக்கத்தான் வேண்டும் என்றுல், வசூல் பண்ணுங்கள். வரு[...]வதையும் வாங்கிக் கொண்டு இதையு[...] செய்தால் என்ன?

இன்றுள்ள சூழ்நிலையில் முதல்வர் எடுத்துள்ள முடிவு மக்[...]ளிடையே உள்ள கசப்பை அதிகப்படு[...]தவே செய்யும் என்பதில் சந்தே[...]மில்லை.

சி. எஸ். ஸே, 'பொதுவாக[...] தான் சொன்னேன். தமிழ்நாட்டை[...] மட்டும் குறிப்பாகச் சொல்லவில்லை,' என்று பெருந்தன்மையுடன் விளக்க[...] தந்த பிறகும், முதல்வர் பிடிவாத[...] பிடித்தாராஞல் அதைத் தமிழ் மக்[...]ளுக்கு ஏற்பட்டுள்ள மற்ருெரு து[...]திர்ஷ்டமாகவே கருத வேண்டியிருக்கு[...]


கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை[...] கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்[...] அமைக்கவும், கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. குமுதம் பிரிண்டர்[...] பிரைவேட் லிமிடெடில் அச்சிட்டவர்: ஏ.பி.ஏ. பெரியகருப்பன். குமுதம் பப்ளிகேஷன்[...] பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர்: பி.வி. பார்த்தசாரதி. ஆசிரியர்: எஸ்.ஏ.பி[...] அண்ணாமலை. முகவரி: 83, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை—600010

முதல் 100 தமிழர்கள் — அரசியல்

சியல்வாதிகளின் பட்டியலை அன்புகூர்ந்து தயாரித்துத் தந்தவர்: திரு. எம். பக்தவத்சலம்.




சுப்பிரமணியம்
(இ. காங்.)



கல்யாணசுந்தரம்
(வ. கம்யூனிஸ்ட்)



அப்துஸ் ஸமத்
(முஸ்லிம் லீக்)



காமராஜ்
(ப. காங்கிரஸ்)



எம். ஜி. ஆர்
(அண்ணா தி.மு.க.)



கருணாநிதி
(தி. மு. க.)



சத்தியவாணிமுத்து
(நா. மு. க)




பக்தவத்சலம்
(இ. காங்கிரஸ்)




பொன்னப்ப நாடார்
(ப. காங்கிரஸ்)



மாதவன்
(தி. மு. க.)



ராமமூர்த்தி
(இ. கம்யூனிஸ்ட்)



மனோகரன்
(அண்ணா தி.மு.க.)

குமுதம் இந்தக் கேள்விக்கு

தயாரிப்பாளர் சுந்தரம் கேட்கிறர்



தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் பிற மாநிலங்களுக்குப் போய்ப் படம் தயாரிப்பதை, கோடம்பாக்கத்தில் நடக்கும் ஒரு புரட்சியென்றும், அது மிக வெட்கக்கேடான விஷயமென்றும், சென்ற இதழில் கருத்து வெளியாகியிருக்கிறது.

ஒரு தமிழ்ப் படத் தயாரிப்பாளன் என்கிற முறையில் மட்டுமல்ல, நீங்கள் அந்தப் பகுதியில் பிரசுரித்திருக்கும் — 'சுனந்தா' வின் படம் நான் தயாரித்துள்ள 'யாருக்கும் வெட்கமில்லை' படத்தில் வருவதால், நீங்கள் என்னைத்தான் மறைமுகமாகக் குறிப்பிடுகிறீர்கள் என்ற முறையிலும், உங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலை, மற்றவர்களை விட எனக்கு அதிகமாக இருக்

தயாரிப்பாளர்கள் எல்லோரும் பணம் சம்பாதிக்கத்தான் படம் எடுக்கிறர்கள்.

எங்கு படம் எடுத்தால் தயாரிப்புச் செலவு குறையுமோ, அங்கேதான் அவர்கள் படம் எடுப்பார்கள்.

லாபத்திற்கு சென்னை, பெங்களூர் என்ற வித்தியாசம் கிடையாது. இந்த நிலையில் நாங்கள் வெளி மாநிலங்களில் படம் எடுக்கிறேமென்ருல், அதற்கு ஒரே காரணம், சென்னையில் படம் எடுத்தால் 'கட்டுபடி' ஆகவில்லை என்பதே.

ஏதோ பம்பாய்க்காரர்கள் இங்கே வந்து இந்திப் படம் எடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அது அந்தக் காலம்.

எந்த வட இந்தியத் தயாரிப்பாளரும் சென்னையில் இப்பொழுது படப்பிடிப்பை வைத்துக் கொள்ளவில்லை.

ஏன் இந்த நிலைமை?

கடந்த மூன்று ஆண்டுக் காலமாக மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் மாறி மாறித் திரைப்படத்

விதித்துத் தயாரிப்புச் செலவுகளை அதிகமாக்கி விட்டார்கள்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு 25 சதவிகிதம் சராசரி லாபம் என்று இருந்த திரைப் படத் தொழில் ''த்து ஆண்டுகளுக்கு முன்பு 10 சத விகிதம் ஆகிப் பின், எஃப். எம். எஸ், சிலோன் விலைகள் மிச்சம் என்ற நிலை இருந்தது.

இன்று எவ்வளவு சிக்கனமாகப் படம் எடுத்தாலும் தயாரிப்புச் செலவில் முக்கால் பகுதியைத்தான் விற்பனை மூலம் பெற முடிகிறது என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

இப்படிப் பொருளாதாரச் சீரழிவை வரிகள் மூலம் சர்க்கார் ஏற்படுத்தி விட்டதை எதிர்த்து, மாநில அளவில் ஐந்து நாட்கள் தியேட்டர்கள் மூடப்பட்டன சென்ற ஆண்டில்.

இந்த ஆண்டில் புதிதாக வந்த மத்திய எக்சைஸ் வரியை எதிர்த்துப் புதுப் படங்கள் ரிலீஸ் ஆகக் கூடாது என்று சில நாட்கள் சேம்பர் கட்டுப்பாடு செய்தது.

இரண்டு முயற்சிகளுப்

வரியினால் அதிகமாகும்பொழுது அண்டை மாநிலத்தில், அங்கு வந்து படமெடுத்தால் பணம் தருவதாகச் சட்டம் இயற்றினார்கள். ஏற்படும் நஷ்டத்தில் ஒரு பகுதியையாவது இந்த உதவிப் பணத்தின் மூலம் சமாளிக்கலாம் என்று தயாரிப்பாளர்கள் அங்கு போனார்கள். இதில் என்ன தவறு?

எனவே, அண்டை மாநிலத்திற்குப் படம் எடுக்கப் போன முதல் காரணம்—சர்க்காரின் ஈவு இரக்கமற்ற வரிக் கொள்கை.

இரண்டாவது காரணம்—இங்கு உள்ள கால் ஷீட் சார்ஜ்களை விட அங்கு கால் ஷீட் சார்ஜுகள் மிகவும் குறைவு.

மூன்றாவது காரணம் — இங்கு 'செட்' போடும் செலவை விட அங்கு 'செட்' போடும் செலவு குறைவு.

நான்காவது— தொழிலாளர்களுக்கும் ஸ்டுடியோ அதிபர்களுக்கும் ஏற்படும் தகராறினால், 'எந்த நிமிஷமும் படப் பிடிப்பு நின்று விடலாம்' என்ற பயம் இங்கு. அங்கு அவ்வளவு இல்லை.

ஐந்தாவதாக— மேக்கப் ரூம் சார்ஜ் முதல் மற்ற எல்லா வித சார்ஜ்களும் அங்கு குறைவு.

கடைசியாக— சென்னையில் நடிகர்களுக்கும் நடிகைகளுக்கும், நாடகங்கள், பொது நிகழ்ச்சிகள் என்று பல பிரசினைகள் வந்து விடுகின்றன. கால் ஷீட்களில் பாதி வீணாகி விடுகிறது. ஆனால் அவர்கள் வெளியூருக்கு வந்து விட்டால் அவர்களுக்குப் படப் பிடிப்பைத் தவிர வேறு வேலையில் கவனம் இல்லை; வேலை நன்றாக நடக்கிறது.

என்னுடைய நர்மதா ஆர்ட்ஸின் 'யாருக்கும் வெட்கமில்லை' படத்தைப் பொறுத்தவரை, பெங்களூர் சாமுண்டேஸ்வரி ஸ்டுடியோவில் குறுகிய காலத்தில் படத்தை முடித்து விட்டோம். டைரக்டர் திரு. சோ அவர்கள் ஒவ்வொரு நாளும் இரவு வெகு நேரம் வரை படப்பிடிப்பை நடத்தினார். மேலும் எல்லா நடிகர்களும், நடிகைகளும் டெக்னீஷியன்களும் நன்றாக ஒத்துழைத்து, படம் சீக்கிரம் முடிய மிகவும் உதவி செய்தனர். அங்கு எல்லா லீவு நாட்களிலும் மட்டுமல்ல, அதிக நேரம் வேலை செய்யவும் தொழிலாள நண்பர்கள் தயாராயிருந்தனர். ஸ்டுடியோ அதிபரும் மானேஜரும், படப்பிடிப்புக்குத் தடங்கல் ஏற்படாமல் எந்த உதவியும் செய்யக் காத்திருந்தனர்.

இத்தனை காரணங்கள் இருக்கும்போது வெளி மாநிலங்களில் போய் பிலிம் எடுப்பதில் என்ன தவறு?

சினிமாத் தொழிலின் எதிர்காலம் தமிழ்நாட்டைப் பொறுத்த வரை ஏமாற்றமாகத்தான் தெரிகிறது.

இப்படி ஒரு கற்பனை செய்து பாருங்கள்:

சென்னையில் அச்செழுத்துக் கம்பாசிங் கூலி மளமளவென்று ஏறுகிறது. அச்சுக் கோப்பு பன்மடங்கு ஏறுகிறது. போட்டோ எடுப்பதற்கும், அதைப் பிரிண்ட் போடுவதற்கும், பிளாக் செய்வதற்கும், செலவு உச்சாணிக் கொம்பில் ஏறிக் கொள்கிறது. மின்சார வெட்டிலிருந்து பத்திரிகை அச்சகங்களுக்கு அளிக்கப்படும் விதிவிலக்கு நிறுத்தப்படுகிறது. அச்சகத்திற்கு எப்பொழுது மின்சாரம் வரும், போகும் என்று தெரியாது என்ற நிலை ஏற்படுகிறது. இதே சமயத்தில் பக்கத்து மாநிலம் செலவினங்கள் குறைந்திருக்கின்றன. அந்த மாநிலத்தில் அச்சகம் வைத்துப் பத்திரிகை தயாரித்து வெளியிட்டால் அந்த மாநில அரசு ஒரு மானியத்தையும் வழங்குகிறது...

இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் 'குமுதம்' சென்னையில் அச்சாகுமா? அல்லது அந்த மாநிலத்தில் அச்சாகுமா? வெறும் விவாதத்திற்காக மட்டுமில்லாமல், மனச்சாட்சியை ஒதுக்கி வைத்து விடாமல் நீங்கள் இந்தக் கேள்விக்கு பதில் சொன்னால் அதுவே உங்கள் கட்டுரைக்கும், உங்கள் கேள்விகளுக்கும் பதிலாகி விடும்.

பதில் சொல்லுமா?

பூவை



கல்யாண வீடே பரபரப்படைந்தது.

"என்ன... ஏது?" என்று தான் எல்லோரும் கேட்டுக்கொண்டு இருந்தார்களே தவிர விஷயத்தை வந்து சொல்வாரில்லை.

உள்ளே போய் எட்டிப் பார்க்கலாமென்றால் நுழைய முடியாத படி சுவர் வச்ச மாதிரிப் பெண்கள் கூட்டம்.

வகை வகையான மலர்களின் கதம்ப வாசனை. அந்த வாசம் பூவிலிருந்து வருகிறதா அந்த உடம்பிலிருந்து வருகிறதா என்று தெரியாத ஒரு மயக்கம். திரும்புகிற பக்கமெல்லாம் கல்யாண வீட்டுக்கே உரிய காட்சிகளும் மணங்களும்.

"விலகுங்கெ... தள்ளிக்கிங்கெ...தூரப் போங்கெ; செத்த நகருங்களேன்..." என்ற குரல்கள் வந்ததே தவிர யாரும் விலகவுமில்லை; தள்ளிப் போகவுமில்லை. அதுக்குப் பதிலாக அது ஆட்களை மேலும் மேலும் அந்த இடத்துக்கு வரவழைத்தது.

"லேய், மணி. இங்கே வா," என்று சத்தங் கொடுத்தேன். அவன், கப்பலைத் துளைக்கிற டார்பிடோ மாதிரி இரண்டு பெண் இடுப்புகளுக்கு மத்தியில் தலையைக் கொடுத்து நுழைத்துக் கொண்டிருந்தான் உள்ளே புக.

பக்கத்திலிருந்தவர் என்னைக் கையமர்த்தி, "பேசாமெ இருங்கெ; பயல் போய்ட்டு வந்தாத்தான் விஷயம் என்னென்னு நமக்குத் தெரியும்," என்று சொல்லி முடிப்பதற்குள் மணி புகுந்துவிட்டான்.

கி. ராஜநாராயணன்

கல்யாணம் நடக்கிற வீடு, ஒரு பட்டகசாலையும் ஒரு அரங்கு வீடும் கொண்டது. முன் பக்கம் சமையல் கட்டும் மாட்டுத் தொழுவமும். அரங்கு வீட்டுக்குள்தான் கல்யாணப் பெண் இருந்தாள். சிங்காரித்து முடிந்தது. முகூர்த்த நேரமும் நெருங்கிவிட்டது. மணவடையில் வந்து மாப்பிள்ளை உட்கார்ந்து விட்டான். பட்டகசாலையில்தான் மணவடை. நாங்கள் பட்டகசாலைக்கும் சமையலறைக்கும் மத்தியிலுள்ள 'முத்தவெளி'யில் உட்கார்ந்திருந்தோம்.

நாங்கள் அங்கே ஜமுக்காளத்தில் உட்கார்ந்துகொண்டு வெற்றிலை போடுகிறோம் என்கிற பேரில், வெற்றிலைக் காம்புகளைக் கிள்ளியெறிந்தும் வெற்றிலையின் நரம்புகளைக் கிழித்துப் போட்டும் ஜமுக்காளத்தைக் குப்பையாக்கியும்; வெற்றிலைச் சக்கையையும் எச்சிலையும் துப்பித் துப்பித் தரையை அசுத்தப்படுத்திக் கொண்டு வாயையும் கறையாக்கிக் கொண்டும் அரசியல் பேசிக் கொண்டிருந்தோம். பேச்சில் 'கரீபி ஹடாவ்' பலமாக அடிபட்டது. கல்யாணம் எங்களுக்கு ரெண்டாம் பட்சமாகி விட்டது. ஒரு வகையில் உண்மையும் அதுதான்.

கல்யாணம் நடந்தது எங்கள் சித்தப்பாவின் வீடு. ஆனால் கல்யாணம் எங்கள் குடும்ப சம்பந்தப்பட்டது அல்ல. கல்யாணப் பெண் ஓர் அனாதை. சின்ன வயசிலேயே

அவள் எங்க சித்தப்பாவின் வீட்டுக்கு எருமை மாடு மேய்க்க வந்தாள். வீட்டு வேலையெல்லாங் கூடச் செய்வாள். சாப்பிடுகிற நேரம் தவிர அந்த எருமை மாடுகளின் சாண மூத்திர வாடையில்தான் வாசம் அவள்.

ஊமை இல்லையென்றாலும் வாய் திறந்து அதிகம் பேச மாட்டாள். செய்யச் சொல்லுகிற வேலையை எவ்வளவு நேரமானாலும் எந்த நேரமானாலும் தட்டாமல் செய்வாள். ராத்திரி பத்து மணி பதினொரு மணிக்கு, வீட்டு ஆட்கள் பூராவும் தூங்கிக் கொண்டிருப்பார்கள், தொழுவில் மாடுகள் தூங்கிக் கொண்டிருக்கும்; கடேசியில் பாட்டிதான் சொல்லுவாள், ''பேரக்கா; சரி போதும், நீ தூங்கப் போ.'' பாட்டிக்குத் தூக்கம் வரும்வரை கை கால்களைப் பிடித்து விடவேண்டும் அவள்.

பாட்டிக்குத் தூக்கமே வராது. ஒரு சின்ன கோழித் தூக்கம் போடுவாள். மூணு மணிக்குத் தொழுவின் கூரை மேல் உட்கார்ந்திருக்கும் சேவல் இறக்கைகளைப் படபடவென்று தட்டிச் சோம்பல் முறித்து ஒரு கொக்கரக்கோ சத்தம் கொடுக்கும். ஊரிலேயே முதலில் கூவுகிற சேவல் அதுதான். பாட்டிக்கு அதிலும் ஒரு பெருமை.

சேவலின் முதல் சத்தத்தை அடுத்து பாட்டியின் சத்தம் வரும். ''பேரக்கா, ஏட்டீ எந்தி!'' இந்த ஒரு வார்த்தைக்காகவே காத்திருந்தது போல் துள்ளி விழுந்து எழுந்திருப்பாள் பேரக்காள்.

காலையில் எழுந்ததும் சித்தப்பாவுக்கு முதல் காரியம் தன் கைக் கடியாரத்துக்குச் 'சாவி' கொடுப்பது.

பேரக்காவுக்கோ பாட்டியின் சத்தம் ஒன்றுதான் சாவி; உடனே முற்றம் தெளிப்பதிலிருந்து தொடங்கி விடும் வேலை.

பேரக்காள் அந்த வீட்டுக்கு வந்த பிறகு, அவளது உடம்பில் ஏற்பட்ட மாறுதல்களைப் போலவே அந்த வீட்டிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டது அவளால்.

தூக்கணாங் குருவிக் கூடு போலக் காட்சி அளித்த அவளுடைய தலை மயிரை சித்தப்பா முதல் காரியமாகக் குடி மகனை வரவழைத்து



''மரத்து மேலே ஏறி மாவிலை பறிக்கச் சொன்னியே, இந்தா! அம்மாடியோவ்! அப்பப்பா!''

மழுங்கச் சிரைக்கச் சொன்னார். கொஞ்ச காலம் இது தொடர்ந்து நீடித்தது. அப்போது, பேரக்காளைப் பார்க்கிறவர்கள், ''நல்ல, ஆட்டுரல் குழவி போல'' என்று சொல்லிச் சிரிப்பார்கள்.

அவள் வளர்ந்த பிறகு, மொட்டையிலிருந்து 'பாப்' வைத்துக் கொள்ள அனுமதித்தார்கள். சித்தப்பா வீட்டுப் பையன்களுக்கு பார்பர் வந்து கிராப் வெட்டிவிடும் போது பேரக்காளுக்கும் அது ஒழுங்காக நடைபெறும்—அவளைக் கேளாமலேயே.

அவளுக்குத் தாவணி கொடுத்துப் போட்டுக் கொள்ளச் சொன்ன போது சித்தப்பா வீட்டுத் தொழுவின் கூரை கொல்லம் ஓடு ஆக மாறியது.

அந்த வளர்த்தியிலும் அவள் பாப் வைத்துக் கொண்டிருந்தது, சிலர் அவளை இந்திரா காந்தி என்று பட்டப் பெயர் சூட்டி அழைத்தார்கள். பேரக்காள் அதுக்கு ஒன்றும் சொல்ல மாட்டாள். இந்திரா காந்தி தன்னைப் போல் ஒரு பெண் என்றோ, இந்தியாவையே ஆளும் ஒரு மாதரசி என்றோ அவளுக்குத் தெரியாது.

பாட்டிதான் ஒரு நாள் சித்தப்பாவைச் சண்டை பிடித்தாள். அதிலிருந்து அவள் பார்பரிடம் முடி வெட்டிக் கொள்வதில்லை.

சம்சாரி வேலைக்கு வரும் கொத்தாட்கள், ஊர்க் கிணற்றிலிருந்து குடம் குடமாகத் தண்ணீர் சுமக்க மறுத்தார்கள். அதனால் சம்சாரிகள் அறுநூறு, ஆயிரம் என்று செலவழித்து வீடு தவறாமல், 'அடி

பம்ப்" போட்டார்கள். சித்தப்பா வீட்டில் அந்த மாறுதல் ஏற்படவே இல்லை. குடம் உட்காருவதற்கு பேரக்காளின் உறுதியான இடுப்பு இருந்தது; குடத்தின் கழுத்தை இழுத்து அணைக்கப் பேரக்காளின் வலிமையான கை இருந்தது. பெரிய வாளியின் தாம்புக் கயிற்றைக் கிணற்றிலிருந்து தண்ணீரோடு இழுத்து இறைக்கும்போது அவளது பருத்த மார்பையும் புஜங்களையும் பார்த்துக் கிராமத்து இளவட்டங்கள் பெருமூச்சு விடுவார்கள்.

வேலை நெருக்கடியான விதைப்பு நாட்களில் சித்தப்பாவின் வீட்டுக்கு வேலைக்காரர்களின் தட்டுப்பாடு ஏற்பட்டதே இல்லை. அப்படி வந்து சேர்ந்தவர்களில் ஒருவன்தான் குமரய்யா. சந்தையில் மாடு பார்க்கிறதில் சித்தப்பா எவ்வளவு சாமர்த்தியசாலியோ அவ்வளவுக்கு வேலைக்காரனை இனம் கண்டு கொள்வதிலும் உண்டு.

குமரய்யா—பேரக்காள் 'நெருக்கத்தைக்' கண்டு பிடித்ததில் பாட்டி நிபுணியாக இருந்ததினால், அவள் இருவரையும் சேர்த்து வைத்து முடிச்சுப் போட்டு விடுவது என்று தீர்மானம் ஆயிற்று.

'நூறு கல்யாணம் கண்ட வீடு சிறப்பானது' என்று ஒரு நம்பிக்கை. ஆகவே இந்தக் கல்யாணத்தைத் தங்கள் வீட்டிலேயே தங்கள் செலவிலேயே நடத்தி வைப்பது என்று ஆரம்பித்து விட்டார்கள். இதனால் பேரக்காளும் குமரய்யாவும் அந்த வீட்டுக்கு மேலும் கடமைப்பட்டவர்களானார்கள்.

கிராமமே இந்தக் கல்யாணத்தில் ஓர் உற்சாகம் கொண்டிருந்தது என்று சொல்லலாம்.

மணி இப்பொழுது அந்தக் கூட்டத்துக்குள்ளிருந்து மீண்டு வந்து கொண்டிருந்தான். என்ன விஷயம் என்று கேட்பதற்கு முன்னால் அவனே ஓடி வந்து சொன்னான்.

கல்யாணப் பெண் மயக்கம் போட்டு விழுந்து விட்டாளாம்.

எங்கள் எல்லோருக்கும் ஒரே திகைப்பு. காரணம் விளங்கவில்லை. கூட்டத்தின் நெருக்கடியோ காற்றோட்டம் இல்லாததோ காரணமாக இருக்க முடியாது. அப்படி ஒன்றும் பேரக்காளின் உடம்பு மெல்லிசானது இல்லை. எத்தனையோ அதி மெல்லிசானதுகள் எல்லாம் அங்கே உள்ளே இருக்கின்றன. ஒன்றும் மயக்கம் போட்டதாகத் தெரியவில்லையே!

பாட்டிதான் சிரித்துக் கொண்டே வெளியே வந்தாள். அவள் இந்தக் கல்யாணத்துக்கு என்று தனக்காக எடுத்த புதிய நார்ப்பட்டு உடுத்தியிருந்தாள். சித்தப்பாவிடம் அவள் எதையோ சொல்லிவிட்டு சத்தம் போட்டுச் சிரித்தாள். சித்தப்பாவும் சிரித்த மாதிரி இருந்தது.

என்னவென்று விசாரித்து அறிய நான் எழுந்திருந்தேன். அதற்குள் பாட்டியே வெளியே வந்து எல்லோரிடமும் சொன்னாள். "கழுதை! ஒரு நாளாவது தலையில் பூ வைத்திருந்தாலல்லவா; இண்ணைக்குச் சிங்காரிக்கும்போது பூ வாசம் தாங்காமல் மயக்கம் போட்டுட்டது!"

பாட்டி சொன்னதைக் கேட்ட எல்லோருடைய முகங்களிலும் ஆச்சரியம் விரிந்து, பிறகு அது சிரிப்பாக வழிந்தது.

எனக்குச் சிரிப்பு வரவில்லை.

☐ ☐

தப்பான அர்த்தம்

சென்னையில் இந்திய சமூக விஞ்ஞானக் கழகம் சார்பில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் 'எங்கே போகிறது இந்திய ஜனநாயகம்?' என்ற தலைப்பில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பி. இராமமூர்த்தி பேசுகின்ற பொழுது, 'அகில இந்திய காங்கிரஸ் தலைவர் படுவா' என்று குறிப்பிட்டார். உடனே கூட்டத்தில் பலமாகச் சிரித்தனர். அவர் சொன்னார்: "'அசாம் மொழியில் 'படுவா' என்பது தான் உச்சரிப்பு. அதனால்தான் அப்படிச் சொன்னேன்—பருவா என்றால் இந்தியில ரொம்பவும் தப்பான அர்த்தம் வந்து விடும்."

—நூறு முகம்மது.



அந்தச் செய்தியை யார், எப்படி சேல்ஸ் மானேஜரின் மனைவியிடம் சொல்வது?

டூர் போயிருந்த சேல்ஸ் மானேஜர் சேதுராமன் விமான விபத்தில் இறந்துவிட்டார். மறுநாள் காலை செய்தித்தாளில் வந்துவிடும். இன்றிரவே ரேடியோவில் அறிவித்து விடுவார்கள். எப்படியும் செய்தி அவருடைய குடும்பத்தினருக்குத் தெரிந்து விடும் என்றாலும் தங்களுக்குத் தெரிந்த மறுநிமிடமே தகவல் தெரிவிப்பது கம்பெனிக்காரர்களின் கடமையாயிற்றே.

சேதுராமன் நல்ல கம்பீரம். உயரம். சிவந்த மேனி, 35 வயது. திருமணமாகி ஏழு ஆண்டுகள் தானிருக்கும். ஒரு மகன், ஒரு மகள்.

ரவை

மனைவியும் நல்ல அழகு. பணக்கார வீட்டுப் பெண். அவளுடைய அதிருஷ்டத்தினுல் தான் சேதுராமனுக்குச் சீக்கிரத்தில் பதவி உயர்வுகள் கிடைத்ததாகப் பரவலாகப் பேசுவதுண்டு. இப்போது அவர்கள், அவளுடைய அதிருஷ்டத்தைப் பற்றி என்ன சொல்வார்கள்?

காரியங்கள் மளமளவென நடந்தன. ஜெனரல் மானேஜர் போனில் டைரக்டர்களுக்குத் தகவல் தெரிவித்தார். இந்தியன் ஏர்லைன்ஸ் உடைமை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சடலத்தையும் உடைமைகளையும் எடுத்துவர விபத்து நடந்த இடத்துக்குக் காரில் பொறுப்பான நபரை அனுப்பினர்.

சேதுராமனின் மாமனர் தியாகராஜன் பிரபலமான பேப்பர் கம்பெனி ஒன்றின் உரிமையாளர். அவருக்கு முதலில் விஷயத்தை போனில் கூறினர், ஜெனரல் மானேஜர். தகுந்த முறையில் மகளிடம் அதை தெரிவிக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

மானேஜிங் டைரக்டரும் ஜெனரல் மானேஜரும் சேதுராமனின் வீட்டை அடைந்தபோது தியாகராஜன் தாங்க முடியாத துயரத்துடன் பேரக் குழந்தைகளை அணைத்துக்கொண்டு அழுது கொண்டிருந்தார்.

"வெரி சாரி, மிஸ்டர் தியாகராஜன்! இப்படி நடக்கும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. எங்களால் முதலிலே நம்பவே முடியலே.."

"இந்த இரண்டு குழந்தைகளைப் பாருங்க, சார்! கர்ப்பிணியாக இருக்கிற என் மகளைப் பாருங்க.."



கலாநிதி?

"அழாதீங்க சார். எங்களாலே உங்க துக்கத்தைச் சுலபமாகப் புரிஞ்சுக்க முடியுது. உங்களை விட நாங்க அதிகமாகவே பாதிக்கப்பட்டிருக்கிறோம். தினமும் பன்னிரண்டு மணி நேரம் எங்களுடனே வேலை செய்தவர். அவர் உழைப்பினுலேதான் எங்க கம்பெனி ஆல் இண்டியா கம்பெனியாயிற்று. இப்போதுகூட கல்கத்தா மார்க்கெட்டை இம்ப்ருவ் செய்யத்தான் போயிருந்தார்...."

"அவன் வீட்டிலிருக்கிற நேரத்திலே இந்தக் குழந்தைகளோடு சிரித்து விளையாடிக் குழந்தையாகவே மாறிடுவான் சார். நொடிக்கு ஒரு தரம் 'மீனு'ன்னு கூப்பிடாமல் அவனுலே இருக்க முடியாது. பாவி! எல்லோர் வயித்திலும் நெருப்பை அள்ளிக் கொட்டிட்டானே சார்."

"மிஸ்டர் தியாகராஜன்! இன்னும் சிறிது நேரத்திலே சேதுராமனுடைய.. அதைச் சொல்லவே நா கூசறது.... வந்துவிடும். நீங்கதான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மற்ற ஏற்பாடுகள் என்னென்ன செய்யணும்னு சொல்லணும். செய்ய நாங்க காத்துக் கிட்டிருக்கோம். ஆபீஸ் ஸ்டாஃப் அத்தனை பேரும் ரெடி."

ஜெனரல் மானேஜர், தியாகராஜனை வெளியே அழைத்துச் சென்றபோது, மானேஜிங் டைரக்டர் மீனுவைப் பார்த்தார்.

அவள் புடவைத் தலைப்பை வாயில் திணித்துக்கொண்டு கதறினுள்.

"நீங்க எதற்காகவும் அதைரியப்படக் கூடாது அம்மா. எங்க கம்பெனியை வளர்த்தவரே அவர்தான்.

ஒரே ஓட்டம்

"வாங்க மாப்பிள்ளே! கிழக்கே மூன்று மைல் போனுல் ஒரு குளம் இருக்கும். அதில் குளித்துவிட்டு, மேற்கே எட்டு மைல் போனுல் கிணறு இருக்கும். அதில் குடிநீர் பிடிச்சுட்டு வாங்க! சமைக்கிறேன்.''

''பரவாயில்லே. ஸ்டேஷன் எந்தப் பக்கம்?''

[illegible]

—விழுப்புரம் ஜெயம்

உங்க குடும்பத்தினுடைய எதிர்காலம் எங்க பொறுப்பு....''

மீனு உள்ளே ஓடிவிட்டாள். ஜெனரல் மானேஜரும் தியாகராஜனும் உள்ளே வந்தனர்.

காலம் யாருக்காகவும் காத்ருப்பதில்லை. இரண்டு வாரக் காரியங்களும் முடிந்து விட்டன. வந்து கூடி துக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் ஒவ்வொருவராகச் சொல்லிக்கொள்ளாமல் போனார்கள்.

ஜெனரல் மானேஜர் மீண்டும் வீடு தேடி வந்தார். ''மிஸஸ் சேதுராமன்! அவருடைய பிராவிடண்ட் ஃபண்டு, இன்ஷ்யூரன்ஸ் பணத்துக்கு உங்களைத்தான் 'நாமினி'யாக எழுதிக் கொடுத்திருக்கிறார். இரண்டு செக்குகளும் வந்துவிட்டன. இதை வாங்கிக்குங்க.. எங்க கம்பெனி டைரக்டர்கள் கூடி உங்க ஹஸ்பெண்டு கடைசியாக வாங்கிய சம்பளத் தொகையையே உங்களுக்கு மாதாமாதம் பென்ஷனாகத் தருவதென முடிவு செய்து விட்டார்கள். இது தவிர, உங்க குழந்தைகள் படிப்புச் செலவையும் கம்பெனி ஏற்றுக் கொள்ளும். அவர் இல்லையேங்கிற குறையைத் தவிர, வேறெந்தக் கஷ்டமும் உங்களுக்கு இருக்கக்கூடாது என்பதுதான் எங்க எண்ணம்.''

மீனு செக்குகளில் இருந்த தொகையைப் பார்த்தாள். லட்ச ரூபாய் இன்ஷ்யூரன்ஸ் செக். நாற்பதினாயிரத்துச் சொச்சம் இன்னொன்று. செக்குகளை பீரோ லாக்கரில் பூட்டி வைத்துக் கொண்டாள்.

மறுநாள் காலை தியாகராஜன் மீனுவை அழைத்துப் பேசினார்.

''மீனு! அரண்மனை மாதிரி வாடகை வீட்டில் நீயும் குழந்தைகளும் எதற்காகத் தனியாக கஷ்டப்படணும்? மாசாமாசம் கிடைக்கிற பென்ஷனைக் குழந்தைகள் பெயரில் சேமிப்பு செய்துவை உங்களை நான் காப்பாத்தறேன்.''

மீனு தலையசைத்தாள். சாமான்களை ஏற்றிச் செல்ல லாரிக்கு ஏற்பாடு செய்யத் தியாகராஜன் சென்றார்.

அவரை வழியனுப்பி விட்டு மீனு திரும்பிய போது எதிரே நின்றிருந்தாள் அந்தக் கிழவி. சாயம் போன கைத்தறிப் புடவை. மூளியான கழுத்து. குங்குமமில்லாத பாழ் நெற்றி. நகை நட்டில்லாத தளர்ந்த உடல். கையிலே ஒரு துணிப்பை.

''மீனு, உங்கப்பா சொல்றது சரிதான். நீயும் குழந்தைகளும் அங்கேயே போயிடுங்க. புருஷத் துணையில்லாம உன்னாலே தனியாகக் குடித்தனம் பண்ண முடியாது.''

''என் நிலைமை எப்படி ஆயிட்டுது பார்த்தீங்களா?''

''அழாதே மீனு! கலியுகம். என்னைப் போலக் கிழங்கட்டை சாகாமல் இழுத்துட்டிருக்கு. சேதுவைப் போல சின்னவங்க அல்பாயுசிலே போயிடறாங்க. குழந்தைகளைக் கண் கலங்காம பார்த்துக்கோ. சொல்லிக் கொண்டு கிளம்பக் கூடாதுன்னு சாஸ்திரம்.''

''கிராமத்துக்கா?''

''ஆமாம். பத்து மணி பஸ்ஸிலே மாயவரம் போயிட்டா அங்கிருந்து டவுன் பஸ்ஸிலே கிராமத்துக்குப் போயிடுவேன்.''

''இன்னும் கொஞ்ச நாள் என் தைரியத்துக்காக இங்கே இருக்கக் கூடாதா?''

''நீதான் இந்த வீட்டைக் காலி செய்துட்டு உங்கப்பா அம்மாவோட இருக்கப் போறியே. நான் அங்கேயெல்லாம் வந்து தங்கமுடியுமா?''

''கொஞ்சம் இருங்கள். வேலைக்காரனை அனுப்பறேன். அவன் உங்களை பஸ் ஏற்றிவிடுவான்.''

வேலைக்கார முனுசாமியுடன் கிழவி பஸ் ஸ்டாண்டுநோக்கி நடந்தாள்.

''பெரியம்மா! நீங்க இவங்களுக்கு சொந்தக்காரங்க மாதிரி தெரியுதே..ஐயாவைப் பெத்தவங்க, கிராமத்திலிருக்கிறாங்க போலிருக்கு.''

''ஆமாப்பா.செத்துப் போன உங்க

ஐயா அவனைப் பெத்தவளுக்கு ஏழாவது பிள்ளை. முதல் ஆறு பிள்ளைங்களும் சின்ன வயசிலேயே செத்துப் போயிட்டுது. இவன் பிறந்த ஒரு வருஷத்துக்குள்ளே இவனோட அப்பா தவறிட்டார். உம்! இவனை வளர்த்து ஆளாக்க அவ பட்ட கஷ்டம் நாய் கூடப் படாது. எத்தனை கஷ்டப்பட்டு என்ன பிரயோசனம். மத்தக் குழந்தைகளை சின்ன வயசிலே பறிகொடுத்தா, இவனையோ வளர்ந்து ஆளான நிலையிலே இழந்துட்டாள்..''

''ரொம்பக் கஷ்டமாயிருக்கும்மா அவங்களை நினைச்சா. ஐயா இருந்தப்ப, மாசாமாசம் அவங்களுக்குப் பணம் அனுப்பச் சொல்லி என்னைத்தான் போஸ்டாப்பீஸ் அனுப்புவாரு. மாசம் நூறு ரூபா அனுப்புவாருங்க.''

''கிராமத்திலே ஐயாவுக்கு சின்ன வீடிருக்கு. அதைப் பாத்துக்கிட்டு அவ நூறு ரூவாயிலே வாழ்ந்திட்டிருக்கிறாள்.''

''இப்ப அந்தம்மாவோட கதி என்னாகுங்க? கம்பெனிக்காரங்க பணத்தையெல்லாம் மீனும்மாவிடம் சேர்த்துட்டாங்க. பெத்தவங்களை யாருமே கவனிக்கலியே.''

''இதுலே என்ன அதிசயம்? உலகத்திலே பிள்ளைங்க அத்தனை பேரும் கல்யாணமானதும் பெத்தவங்களுக்குச் செய்யறதை -தானதர்மமாக் கருதறாங்க.''

''அந்தம்மா ஏன் சாவுக்கு வரலீங்க?''

''வந்திருந்தாங்களே.''

''ஐயோ! நான் பார்க்காமப் பூட்டேனுங்களே. அந்தம்மாவிடம் யாருமே துக்கம் விசாரித்ததாகக் கூட தெரியலீங்களே. எல்லோருமே மீனும்மாவுக்குத்தான் தைரியம் சொல்லிட்டுப் போனாங்க. நீங்கதான் பாவம்! ஓடியாடி கவனிச்சீங்க.''

''ஹூம்.''

''ஐயா கூட மீனும்மாவுக்குத் தெரியாமத்தான் ரகசியமா மணியார்டர் அனுப்பினாரு. பணக்கார இடத்திலே பிள்ளைக்குப் பெண் எடுத்தால், பிள்ளைக்கு சௌகரியம் ஏற்படலாம். ஆனால் பிள்ளையைப் பெத்த ஏழைங்க பெத்த பிள்ளையையே மறந்துடவேண்டியதுதான்.''

கிழவி திடுமென குலுங்கி அழுதாள். முனுசாமி திகைத்தான்.

''முனுசாமி! உங்க ஐயாவைப் பெத்தவளை யாருமே துக்கம் விசாரிக்கலேன்னு நீ குறைப்பட்டேயில்லே?''

''ஆமாங்க.''

''அந்தக் குறை நீங்கிப் போச்சு.''

''எப்படிங்க?''

''உருக்கமா, ஆத்மார்த்தமா நீயே அவளைத் துக்கம் விசாரிச்சிட்டியே. அந்தக் கிழவிக்கு அதுபோதும். ஒப்புக்கு ஓராயிரம் பேர் பேசறதைவிட, உண்மையா ஒருத்தர் விசாரிச்சாலே போதும்.''

முனுசாமி பிரமித்துக் கிழவியின் முகத்தைப் பார்த்தான். அதில் அவன் ஐயாவின் முகச்சாயல் தெரிந்தது. கொதிக்கும் வெய்யிலில் பாதங்கள் பொரிய, கிழவி பஸ் ஸ்டாண்டுக்கு நடந்தாள்.

புல்லாங்குழலைத் திருடியது யார்?

காரைக்குடி தமிழிசைச் சங்க ஆண்டு விழாவின்போது கலைமாமணி பட்டம் பெற்ற திரு. ரமணி அவர்களைப் பாராட்டிப் பட்டாடை போர்த்தினார்கள். அச்சமயம் பாராட்டு மடலை வாசித்த பேராசிரியர் கண்ணப்பன் வர்ணனை செய்தார். ''கண்ணன் என் கனவில் வந்து வேய்ங் குழலைக் காணோம் என்றான். திருடனைப் பிடித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். நான் திருடனின் அடையாளம் கேட்டேன். 'குழல் போன்ற உடம்பினை உடையவன்..திருவாரூர்க்காரன்' என்றான், கண்ணன். 'அப்படியானால் திருடன் இதோ இந்த ரமணிதான்' என்றேன் நான்.''


தகவல்: கே. உமா



என்னங்க, நாச்சியார்கோயிலைத்
தொறந்து விட்டுட வேண்டியது
தானுங்களா?

ஒருநாள் பூட்டவைத்த திருப்தியும்
இருக்கு. மறுநாளே திறந்துவிட்ட
பெருந்தன்மையும் இருக்கு.போதாதா?





கஸ்தூரி விஜயம் ■

"ஏட்டிக்குப் போட்டியா? என்னை விட்டுவிட்டு நீ சினிமாவுக்குப் போய்விட்டு வந்துவிட்டாயாக்கும். இப்போது திருப்திதானே?"

"நான் ஒன்றும் உங்களை விட்டுவிட்டுப் போகவில்லை. நீங்கள் தான் வரமாட்டேன் என்று சொல்லி விட்டீர்கள்."

"சரி, படம் எப்படி?"

"நன்றிக் கடன் நன்றிக் கடன் என்று சொல்லி நாலைந்து பெருச்சாளிகளை வைத்துக் கொண்டு வீட்டை நாசமாக்கிக் கொண்டிருக்கிறார் முத்துராமன். பெட்டிச் சாவி விஜயா கைக்கு மாறிய பிறகுதான் எல்லாம் ஒழுங்குக்கு வருகிறது. ரொம்ப நல்ல கதைங்க."

"ரொம்ப மட்டமான கதை. 'ஆண் கையில் பிள்ளையையும் பெண் கையில் பணத்தையும் ஒப்படைத்தால் உருப்படாது,' என்று ஒரு தெலுங்குப் பழமொழி உண்டு."

"எதற்குத்தான் பழமொழி இல்லை? பெட்டிச் சாவியை என்கிட்டே கொடுத்துப் பாருங்கள். தெலுங்குப் பழமொழி பொய் என்று நிரூபித்துக் காட்டுகிறேன்."

"அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். முதலில் உன் விமரிசனத்தை முடி."

"நாங்கள் ஒன்றும் விமரிசனம் பண்ண வேண்டிய தேவையில்லை."

"கோபம் வந்துவிட்டதாக்கும்? ஸாரி. முத்துராமன் எப்படி நடித்திருக்கிறார்?"

"முத்துராமன் முத்துராமன் மாதிரி நடித்திருக்கிறார்."

"பின்னே என் மாதிரியா நடிப்பார்?"

"ஸ்பெஷலாய்ச் சொல்ல ஒன்றுமில்லை என்று சொல்கிறேன்."

"முந்தின படத்துக்கு இந்தப் படத்தில் விஜயாவுக்கு எத்தனை பவுண்டு கூடியிருக்கிறது?"

"நீங்களும் அப்படி ஒன்றும் ஒல்லி இல்லை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்."

"சரி. இத்தனை ரூபாய் வேட்டாகியிருக்கிறது. படத்தைப் பற்றி ஏதாவது சொன்னால் என்னவாம்?"

"முத்துராமன் கையில் ஒரு பெட்டி வைத்திருக்கிறாருங்க. அந்த

மாதிரி ஒன்று கிடைக்குமா, பாருங்க ளேன்.''

''புது மாடலா? அழகாக இருக்கிறதா?''

''கரன்ஸி நோட் சுரபி தான். எடுக்க எடுக்கக் கற்றை கற்றை யாக வருகிறது. ரேஸ் போகிற சித்தப் பாவுக்கு ஒரு கற்றை. கல்யாணத்துக் குப் பிறகும் வீட்டில் தங்கி மொட்டை அதிகாரம் செய்யும் தங்கைக்கு ஒரு கற்றை. கிச்சன் முழுங்கி பட்லருக்கு ஒரு கற்றை—கணக்குக் கேட்காமல். கள்ளக் கடத்தல் பிஸினஸ் தம்பிக்கு அவன் வாயைத் திறக்கும் போதெல் லாம் ஒரு கற்றை.''

''கிழவர் வேடத்தில் சுப் பையா வருகிறாராமே?''

''காந்தி பொம்மையைக் கையிலே தூக்கி வைத்துக்கொண்டு.. அவர் மீசையும் அவரும்...சூத்திர தாரியாம், கிருஷ்ணபரமாத்மாவாம்..''

''சரி. எல்லாரைப்பற்றியும் ஏதாவது ஓட்டை சொல்லிக் கொண்டே யிருந்தால் எப்படி? என்ன சிரிக்கிறாய்?''

''பெரிய இடத்திலிருந்து பெண் வந்தால் அவர்களுடைய ஊழல் அம்பல மாகிவிடும் என்று நாகேஷ் கோஷ்டி பயப்படுகிறது. என்னடா வழி என்று யோசிக்கிறார்கள். யோசித்து, ஏற் கெனவே வேலைக்காரி மாதிரி அடங்கி ஒடுங்கி இருக்கிற விஜயாவையே வீட்டு மருமகளாக்கிக் கொள்கிறது என்று தீர்மானம் பண்ணுகிறார்கள். அப்போது அவர்கள் காலேஜ் ஸ்டூடண்ட்ஸ் மாதிரி போடுகிற கூச்சலும், இரைச்சலும் இப்போது நினைத்தாலும் சிரிப்பு வரு கிறது.''

''ரொம்பச் சிரித்துவிடாதே. தெற்றுப் பல்லெல்லாம் தெரிகிறது.''

''ஆனால் கல்யாணமான பிறகும் அவர்கள் பழையபடி நடந்து கொள்வது நன்றாக இல்லைங்க. என்ன தான் எல்லோருமாகச் சேர்ந்து விஜ யாவை வீட்டு எஜமானி ஆக்கினார்கள் என்றாலும், அதற்காக இப்படியா நாகேஷ் முதல் காதர் வரை தலைக்குத் தலை 'ஏய்!' என்று விரட்டுவார்கள்?''

''அதுதானே! தாலி கட் டின புருஷனாலேயே பெண்டாட்டியை விரட்ட முடியாத காலத்திலே—ஏன் அப்படி மேஜர் மாதிரி முறைக்கிறாய்?''

''நிஜமாகவே மேஜர் நன்றாக முறைக்கிறாருங்க. விஜயாவுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த எல்லாருமாய்ச் சேர்ந்து கொண்டுவந்த போலி ஆளை இரண்டே கேள்வி கேட்டு, பளார் என்று ஓர் அறை அறைந்து எப்படி உண்மையை வரவழைக்கிறார் தெரியுமா? ஆனால் மற்றப்படிக்கு அவர் ஓர் உபயோ கமே இல்லாத பாத்திரம்தான்.''

''அப்புறம்?''

''ஒரு சந்தேகம். கடையில் ஓர் இளைஞன் விஜயாவைப் பார்க்கி றான், இரண்டு பேரும் சிரித்துப் பேசிக் கொள்கிறார்களே, அது யார்?''

''என்னைக் கேட்டால்?''

''அப்புறம் அச்சாய் அவன் மாதிரி வருகிறானே, போலி மச்சத் தோடு, அந்தக் கடன்காரன் யார்? தலைமயிரைப் போட்டுப் பிய்த்துக் கொண்டாலும் புரியவில்லை.''

''அதெல்லாம் ஒன்றும் செய்து வைக்காதே. ஏற்கெனவே, அளக பாரம் ரொம்ப நீளம். விது பாலாவும் உண்டு போலிருக்கிறதே?''

''விதுபாலா நல்ல சுறு சுறுப்புங்க. அவர் கணவர் இருக்கிறாரே அவர் துளிகூட சுயமரியாதை இல்லாத ஆள். மூச்சுக்கு முன்னூறு முறை மானஸ்தன் என்று தம்பட்டம் அடித் துக் கொண்டுவிட்டு மனைவிக்கு முன்னால் தோப்புக்கரணம் போடுகிறார்.''

''உனக்கு வேடிக்கையாக இருக்கிறதாக்கும். நான் மட்டும் மானஸ்தனாக இருந்தால்...''

''போதும் நிறுத்துங்கள்.''

''உத்தரவு.''





பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து, விசாரணைக் கவுண்ட்டரைக் கடந்து இடப்புறமாக உள்ள 'ஏ' வார்டையும் அங்கு சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருக்கும் மனோ வியாதி நோயாளிகளையும் பார்த்துக் கொண்டே சென்றால், சிறைக் கூடம் போன்ற கம்பி போட்ட தனித் தனி அறைகளைப் பார்ப்பீர்கள். அந்த அறைகளில் ஒன்றில் இருபத்தைந்து வயதான வாலிபன் ஒருவன், "சார், உங்களைத்தானே? பூட்டிவிடுங்கள் சார்! நல்லாப் பூட்டி விட்டுப் போங்க சார்..பூட்டிவிடுங்கள் சார்!" என்று உங்களிடம் மன்றாடுவான். ஏற்கனவே அந்த அறை நன்கு பூட்டப்பட்டிருப்பதை நீங்கள் பார்த்து வியப்பீர்கள். அவன்தான் ரமேஷ்.

ரமேஷின் வாழ்க்கை துரதிருஷ்டம் நிறைந்தது என்பதில் துளியும் சந்தேகமில்லை. ஒவ்வொருவருக்கு ஒரு கெட்ட பழக்கம். பெண் மோகம் அவனது குறைபாடு. மல்லிகா போன்ற அழகான மனைவி வாய்த்த பின்னும்கூட அவனால் ஊர் மேயும் தனது தன்மையைக் கட்டுப் படுத்திக் கொள்ள இயலவில்லை. பாங்க் ஒன்றில் காஷியராக வேலையைத் துவக்கியவன், பெண் சபலத்துக்காக அவ்வப்பொழுது பணத்தைப் புரட்டியதன் விளைவாக அவனே உத்தியோகத்திலிருந்து புரளும்படி ஆகி, கிடங்குத் தெருவில் மருந்துக் கம்பெனியொன்றில் பிரதிநிதியாக ஊர் சுற்றினான். கலெக்ஷனாகிற பணம் பல ஊர் அழகிகளுக்குப் போய்க் கொண்டிருந்தது. வசூலாகவில்லையென்ற அடுக்கடுக்கான பொய் நீண்ட நாள் செல்லுபடியாகாததால் வேலையிலிருந்து தள்ளப்பட்டான். தனியாகக் கமிஷன் பிஸினஸ் அது இது என்று ஆரம்பித்து ஸ்டெனோ டைப்பிஸ்ட் ஒருத்தியிடம் வாங்கிய மிதி அடி அறையுடன் அவன் வேலை பார்த்த சகாப்தத்துக்கு மனைவி மல்லிகா முற்றுப் புள்ளி வைத்துவிட்டாள். "நீங்

நீல. குமார்



'அயல் நாட்டுப் பத்திரிகையில் ஒரு விளம்பரம் பார்த்தேன். மாடிப் படி வழியே இரண்டு பெண்கள் பார்த்துக் கொண்டிருக்கும் காட்சி என்னைக் கவர்ந்தது. அதே போல் மாடிப்படி எங்கே கிடைக்கும் என்று பத்து வீடுகளுக்கு மேல் தேடி, கடைசியில் கண்டு பிடித்து இந்தப் படத்தை எடுத்தேன்.

அட்டையில் ஸ்டெல்லா மேரி கல்லூரி மாணவிகள் குமாரி பிரபா, குமாரி ஆஷா.

—உத்ரா'

கள் இனிமேல் எங்கேயும் போக வேண்டாம். நான் சம்பாதிக்கிறதே போதும்.'' அவளுக்கு டெலிபோன் ஆபரேட்டர் வேலை.

''எங்கேயும் போக வேண்டாம்,'' என்று அவள் சொன்னது உத்தியோகத்தை மட்டுமல்ல, அவனுடைய வழக்கமான எந்த இடத்துக்கும் போக வேண்டாம் என்பதைத்தான். ஆனால் ருசிகண்ட பூனை அவ்வளவு சுலபமாக அடங்கிவிடுமா? அவள் சொல்லிக் கொண்டேயிருக்க அவன் தன் போக்கில் திருந்தாதவனாக இருந்தான். பகல் வேளைகளில் கண்காணிப்பாக அவனை அவளால் கட்டிக் காக்க முடிந்தது. ஆனால் ராத்திரி ஷிஃப்ட் அவளுக்குப் பெரிய பிரசினை. கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோல் சொல்லிவிட்டு அந்தண்டை அவள் டியூட்டிக்கு நகர வேண்டியதுதான், இவன் இந்தண்டை தன் மாமூல் வழிக்குப் புறப்பட்டுவிடுவான். பலநாள் போராட்டம், கண்ணீர், இவைகளுக்குப் பிறகு அவள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

ராத்திரி ஷிஃப்ட் வந்தாயிற்றென்றால் வீட்டுக்குள்ளே அவனை வைத்துப் பூட்டிக் கொண்டு போய் விடுவாள். அப்படிச் செய்வது அவளுக்கு வேதனையாகத்தானிருந்தது. இதற்காக அக்கம் பக்கத்தவர் அவளை வாய்க்கு வந்தபடி இடித்துச் சொன்னதும் உண்டு.

ஆனால் வக்கில்லாத ஓர் ஒழுக்கமற்ற கணவனுக்கு எப்படியோ வாழ்க்கைப்பட்டாயிற்று. அவனை எப்படிப் பாதுகாக்க வேண்டுமோ அப்படித் திருத்திக் கொண்டு வருவதில்தான் ஒரு பெண்ணின் சாமர்த்தியம் இருக்கிறது என்று தன்னைத் தேற்றிக்கொள்வாள்.

ஒரு நாள், வழக்கம்போல நைட் ஷிஃப்ட்டுக்குக் கிளம்பிக்கொண்டிருந்தாள்.

டிரெஸ்ஸிங் மேஜையிலிருந்து எழுந்து கைப் பையை மூடி, சமையலறைக்குச் சென்று வாட்டர் பாக்கில் வடிக்கட்டின நீரை ஊற்றி எடுத்துக்கொண்டு மணியை மறுபடி பார்த்தாள். அடக் கடவுளே, வாட்ச் நின்றல்லவா போயிருக்கிறது!

வாசல் கதவுக்கு வந்த பிறகுதான் கையில் பூட்டு மட்டும் இருப்பது தெரிந்தது. சாவி உள்ளே எங்கிருக்கிறதோ. மறுபடி சென்று தேடி எடுக்க நேரமில்லை.

ஒன்பதே முக்கால் பஸ்ஸை விட்டால் உபத்திரவம். ஏற்கனவே ஷிஃப்டில் லேட்டாகி சரியாக நேரம் 'பஞ்ச்' செய்வதில்லை என்று அவள் மேல் குறைபாடு.

ரீப்பர் அடித்த வெளி வாசல் கதவை இழுத்துச் சாத்தினாள். நாதாங்கியில் பூட்டை மாட்டினாள்.

அதைப் பூட்டுவது போல ஓசைப்படுத்தினாள். உள்ளே இருக்கும் கணவன் தான் பூட்டப்பட்டிருக்கிறோம் என்று சந்தேகத்துக்கு இடமின்றி நினைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக வழக்கத்தைவிட அதிகமாகவே ஓசைப் படுத்திவிட்டுக் கிளம்பிவிட்டாள்.


சுரேஷ் உள்ளே கட்டிலில் பொறுமியவாறு படுத்திருந்தான்.

'மனுஷன் எதற்குத்தான் இளமையோடு இருக்கிறுன்! அனுப விக்க வேண்டும். விதம் விதமாக அனுப விக்க வேண்டும். ஆனல் மல்லிகா பாவி பூட்டி வைத்து விட்டுப் போய்விடு கிருளே..'

பளிச்! எதிர் வீட்டு மாடி அறை விளக்கு எரிந்தது.

அந்த வீட்டில் ஓர் அழகான பெண் இருந்தாள். சின்ன வயதிலேயே விதவையாகிவிட்டவள். இருபத்தைந்து வயசுக்குள்தானிருக்கும். பெரிய கண்கள், செக்கச் சிவந்த நிறம். ஆனல் இருட்டிலே வளருகிற செடி மாதிரி கொஞ்ச நாளாகச் சோகமாக இருந்தாள். உணர்ச்சி வசப்பட்ட நிலையில் சில மாதங்களுக்கு முன் அவளுடைய உறவுகாரப் பையன் ஒருவனிடம் தன்னை இழந்துவிட்ட நிலையில் பெற்றோரிடம் எப்படி விஷயத்தைச் சொல்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். விதவா விவாகம் அது இது என்று சீர்திருத்தவாதி போலப் பேசிய உறவுப் பையனுக்கு வேறு இடத்தில் நிச்சமாகிவிட்டது என்பது மாலையில்தான் அவளுக்குத் தெரிந்தது. மானம் போகுமுன் உயிரை விடுவது என்று தீர்மானித்தவளாக மின்சார





ஏப்ரல் 12'ம் தேதியன்று புது டில்லியில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நடந்தது. அந்த விழாவில் பேசியவர்களில் அமைச்சர் இராசாராம் தமிழில் பேசினார். திரு.சி. சுப்பிரமணியம் முதலியோர் ஆங்கிலத்தில் பேசினார்கள். ஜனாதிபதி அவர்கள் அவருடைய ஆங்கில உரையில், பெயர்களைக் குறிப்பிடும் போது திரு. என்று சொன்னார்.

அயல் நாடுகளில் உள்ள தூதராலயங்களில் பகவத்கீதை புத்தகத்துடன் திருக்குறளின் ஆங்கிலப் பதிப்பும் வெளி நாட்டவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன என்ற தகவலைத் திரு. சி. சுப்பிரமணியம் வெளியிட்டார்.

—நன்செய்புகழூர் ப. காமராசன்

விசிறியில் சுருக்குக் கயிற்றைப் போட்டு வைத்துவிட்டு, தெருப்பக்கமிருந்து யாரேனும் கவனிக்கிறார்களா, பக்கத்து ஊருக்குப் போயிருந்த தன் பெற்றோர் வருகிறார்களா என்பதை ஜன்னல் வழியே கவனித்துக் கொண்டிருந்தாள்.

அந்தப் பெண் தன்னைச் சபலத்துடன் கவனிப்பதுபோல் சுரேஷிற்குத் தோன்றியது. உணர்ச்சி நரம்புகள் முறுக்கேறின.

இது ஒரு நல்ல சந்தர்ப்பம். விடக்கூடாது. சட்டையை மாட்டிக் கொண்டான். தலையை வாரி, முகத்துக்குப் பவுடர் அடித்துக்கொண்டான். கிளம்பி விட்டான். அப்புறம்தான் ஞாபகம் வந்தது—அட சட்! அவன் ஒரு கைதியாயிற்றே! மனைவியால் பூட்டி வைக்கப்பட்டிருக்கும் கைதி யாயிற்றே.

டப்பாயை ஆத்திரத்தோடு எட்டி ஓர் உதை விட்டான்.

சிலுங் என்று ஏதோ விழுந்தது.

சாவி!

அப்படியானால் மனைவி இன்று தன்னைப் பூட்டி வைக்கவில்லையோ? உடல் முழுவதும் பரவசமான வெறி பரவியவனாகக் கதவருகே ஓடினான். தட்டிக் கதவு வழியே கையை வெளியே விட்டுப் பூட்டை உலுக்கினான். வெறுமே சிக்க வைக்கப்பட்டிருந்த பூட்டின் கொக்கி திறந்து கொண்டது. கதவைத் திறந்தான். தெருவைக் கடந்தான். எதிர்வீட்டுக் கேட்டை சுவாதீனமாகத் திறந்து கொண்டு மாடிக்கு விறுவிறென்று ஏறினான்.

மாடி அறைக்கு ஆவலுடன் சென்ற அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. மின் விசிறியிலிருந்து தொங்கிய கயிற்றில் அந்த விதவைப் பெண்ணின் சவம் தொங்கிக் கொண்டிருந்தது.

அவனுக்கு நெஞ்சையடைப்பது போலிருந்தது. வியர்த்துக் கொட்டியது. கையிலிருந்த கைக்குட்டை நழுவிக் கீழே விழுந்தது. பயம் நெஞ்சைக் கவ்வப் படபடப்புடன் வீட்டுக்குத் திரும்பிவிட்டான்.

டியூட்டியிலிருந்து காலை ஆறுமணிக்கு வீடு திரும்பிய மல்லிகாவுக்கு நிம்மதியாயிருந்தது. பூட்டின பூட்டு பூட்டினாற்போல் அப்படியே நாதாங்கியிலிருப்பதைப் பார்த்து சாவி போட்டுத் திறப்பதுபோல் ஓசைப் படுத்தித் திறந்துகொண்டு உள்ளே சென்றாள்.

சுரேஷ் காலோடு தலை போர்த்தியவாறு கட்டிலில் படுத்திருந்தான். "என்ன, காப்பி கலக்கலாமா?" என்று எழுப்பினாள். அவன் திரும்பிப் படுத்துக் கொண்டுவிட்டான். கோபம் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டவள் காஸைப் பற்ற வைத்து, காப்பிக்கு நீர் வைத்துவிட்டு, பில்டரில் பொடியைப் போட்டுக் கொண்டிருந்த போது தெருப்பக்கம் ஒரே பரபரப்பான கூக்குரலும், யாரோ பெரிதாக அழும் ஓசையும் பலர் பல குரலில் என்னென்னவோ கூறிப் போவதும் கேட்டது.

திகைத்துக் குழம்பியவளாக வெளியே வந்து பார்த்தாள்.

எதிர் வீட்டு வேலைக்காரக் கிழவி கதறிக்கொண்டிருந்தாள்.

''என்ன, முனியம்மா.. என்ன சமாசாரம்?'' என்று கேட்டாள்.

''ஐயோ! சுலோம்மா தூக்கு மாட்டிகிட்டுச் செத்துடுத்துங்க. எந்தப் படுபாவியோ கெடுத்துட்டான்னு பேசிக்கிறாங்க!''

மல்லிகா ஆடிப் போய் விட்டாள். எதிர் வீட்டுப் பெண் மிகவும் சாது, ரொம்ப நல்லவள் என்று அவள் மேல் எப்போதும் அனுதாபம் உண்டு மல்லிகாவுக்கு. பரபரப்புடன் எதிர் வீட்டுக்குச் சென்றாள். அழகான அந்தப் பெண்ணின் உடம்பு தொங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்து அவளுக்கு அழுகை தாங்க முடியவில்லை. தற்கொலை செய்து கொண்ட பெண் உதைத்துத் தள்ளிவிட்டிருந்த ஸ்டூல் அருகே இருந்த ஒரு பொருள் தற்செயலாக மல்லிகாவின் கண்ணில் பட்டது. யாரும் பார்க்காத சமயம் சட்டென்று அதை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு விட்டாள்.

மனம் எரிமலையாகப் பொங்க வீட்டுக்குள் நுழைந்தாள் மல்லிகா. கதவைச் சாத்திவிட்டுக் கணவனை உலுக்கினாள் ஓர் உலுக்கு. அவன் கண்ணைக் கசக்கிக் கொண்டு, ''என்ன சமாசாரம்?'' என்றான். அவள் விழிகள் நெருப்பாயின. அடி வயிற்றிலிருந்து வந்தது ஆத்திரம். ''போதும் உங்கள் நாடகம்....ராத்திரி எங்கே போயிருந்தீங்க..ஒரு நாள் நான் அவசரப்பட்டுக் கதவைப் பூட்டாமல் போய்விட்டேன். அதற்கு இவ்வளவு பெரிய விபரீதமா?''

அவன் மழுப்பினான். ''நானா! எங்கேயும் போகலியே?''

அவளுக்கு ரத்தம் கொதித்தது. ''எங்கே உங்கள் கட்டம் போட்ட சிவப்புக் கைக் குட்டை?''

அவன் தேடினான். ''இங்கே தானே இருந்தது..ஏன்..எதுக்கு?''

"அது இங்கே இல்லே. ராத்திரி நீங்க போன இடத்திலே இருந்தது. இதோ!"

"மல்லிகா..மல்லிகா.. நடந்ததைச் சொல்றேன் எதிர் வீட்டு மாடிக்கு நான் போனது உண்மைதான். ஆனுல் நான் போகும் போதே அவள் தூக்கு மாட்டிக்கிட்டுச் செத்திருந்தாள். சத்தியம்."

"தூ!" வெடித்தாள் அவள். "போதும்..பொய் வேறயா? உங்களைத் திருத்தவே முடியாது. உங்க காற்று பட்டால்கூட அவுங்களுக்கு நரகம்தான் கிடைக்கும்.."

படாரென்று கதவைச் சாத்திக் கொண்டு அவள் வெளியே புறப்பட்டுப் போனவள் போனவளே.

கொஞ்ச நாள் கழித்து அவள் கடலில் விழுந்து இறந்துபோன சமாசாரம் அவனுக்குக் கிடைத்தது.

"மிஸ்டர்.. இந்தாங்க சார்.. உங்களைத்தானே.. கொஞ்சம் தயவு பண்ணி நல்லாப் பூட்டிட்டுப் போங்க சார்.." எட்டாம் அறையிலிருந்து அந்த வாலிபன் யாரையோ கூப்பிட்டுக் கெஞ்சிக் கொண்டிருந்தான்.


அந்த வழியே நடந்து கொண்டிருந்த மனிதர் புரியாதவராக, "என்னப்பா அந்த ஆள் சொல்றுர்?" என்று கேட்டார் அருகிலிருந்த வார்டனிடம்.

"அவன் அப்படித்தான் கெஞ்சிக்கிட்டிருப்பான். நீங்க பாட்டுக்குப் போங்க...." என்ருர் வார்டன்.

திருப்பத்தூர் (வ.ஆ.) தூய நெஞ்சக் கல்லூரி இலக்கியக் கழகத்தின் கட்டிடத்தில் மாடியில், புளிய மரத்தின் இலைகளைக் கொட்டித் தினமும் ஒரு வேளை தண்ணீர் ஊற்றி விடுகிருர்கள். அறையின் உள்ளே ஏர்கண்டிஷனை விட இதமாக, 'குளு குளு' என்று இருக்கிறது.

—த. கிறிஸ்தோபர்

38 ஜேஸ் பக்க


விருந்தை எதிர்பார்த்து வந்தவருக்கு
வெறும் வெத்திலை பாக்குத்தானா?
குஜராத்
உதட்டளவில்
உபசாரம்
பட்நாயக்
ஜெ.பி.


ஆரியபட்டா
இந்தியா
விஞ்ஞான
முன்னேற்றம்



அவன்தான் மனிதன்

"சிங்கப்பூர் என்ருல் சிங்கப்பூர், எப்படிக் காட்டுகிருர்கள் என்கிருய்!"

"நன்ருக இருக்கிறதாக்கும்?"

"நன்ருக இருக்கிறதா என்று சாதாரணமாய்க் கேட்கிருயே! பிரமாதமாக இருக்கிறது."

"ஓகோ."

"அந்தக் கடைகள், அவற்றில் விற்கப்படுகிற மாடர்ன் சாமான்கள், அந்தக் கட்டிடங்கள், அந்தத் தெருக்கள். அடடா! சிவாஜியும் மஞ்சுளாவும் முதலில் அங்கே சந்திக்கிருர்கள் என்ற சாக்கில் சிங்கப்பூரைப் பிழி பிழி என்று பிழிந்து எடுத்து விட்டிருக்கிருர்கள். குளு குளு என்றிருக்கிறது."

"எனக்குக் கப கப என்று எரிகிறது."

"ஏன் அப்படி? சமையலில் கொஞ்சம் மிளகாயைச் சரளமாக அரைத்து விட்டிருந்தாய். அது வேலை செய்கிறதா?"

"சிங்கப்பூர் கிடக்கட்டும். இதோ இருக்கிறது குமரி. திருவனந்தபுரம். ஊட்டி. கொடைக்கானல். எங்காவது கூட்டிப் போயிருக்கிறீர்களா?"

"கொஞ்சம் இரு. நாம் பெங்களூர் போனதில்லை?"

"நாலே நாள்."

"ஹைதராபாது?"

"உங்கள் அக்கா பெண் கல்யாணம். அதற்குப் போனேம்."

"போன ஊரெல்லாம் நினைவிருக்காது. போகாததை மட்டும் சொல்லு."

"சரி சரி. முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளாமல் படத்தைப் பற்றிச் சொல்லுங்கள். மஞ்சுளாதான் கதாநாயகியாக்கும்?"

"கொஞ்ச நேரக் கதாநாயகிதான். திடீரென்று வருகிருர். விதவிதமாக டிரெஸ் பண்ணிக்கொண்டு சிரித்துச் சிரித்துச் சிவாஜியை மயக்குகிருர். அவர் யார் என்றே தெரியவில்லை. ரிஷிமூலம், நதிமூலம், மஞ்சுளா மூலம் ஒன்றும் கேட்கக்கூடாது. கல்யாணமாகாமலே தாயாகிருர். பிரசவத்திலேயே அவுட் ஆகிவிடுகிருர்."

"அட பாவமே."

"பொறு. அப்புறம் அந்தக் குழந்தையும் கடலில் பந்து எடுக்கப் போகிறேன் என்று போய் அவுட் ஆகி விடுகிறது."

"உங்களுக்குக் கொஞ்சம் கூட இரக்கமே இல்லே. என்ன அவுட் வேண்டியிருக்கிறது, அவுட்! கேட்கிற போதே மனத்தை என்னவோ செய் கிறது."

"சிவாஜி, டாப். உணர்ச்சி களேயோ டயலாக்கையோ வாரி இறைக் காமல் பாலிஷாகச் செய்திருக்கிறுர்."

"அதிருக்கட்டும். குழந்தை போவதோடு கதை முடிந்துவிடுகிறதாக் கும்?"

"நாசமாய்ப் போயிற்று. அப்புறம் அவர் சிங்கப்பூரிலிருந்து மெட் ராசுக்கு வந்து தீப்பெட்டித் தொழிற் சாலே அமைத்துக் கொள்ளேயாய்ச் சம் பாதித்து டம்ப வள்ளலாய்ச் செலவழிக் கிறதுஎன்ன; காக்காய் பிடிக்கத் தெரி யாத முத்துராமனிடம் பிரியம் வைத்து அவருக்குப் பிரமோஷன் கொடுக்கிறது என்ன; பயிற்சிக்காக முத்துராமன் மேல்நாடு போயிருக்கிறபோது அவர் குழந்தையைத் தன் வீட்டில் வைத் திருப்பது என்ன— அந்தக் குழந்தை (பேபி சுமதி?) கை கால் உதைத்துக் கொண்டு அழுது பிடிவாதம் பிடிப்பது ரொம்ப நேச்சுரல். அட, அழுகைதான் அப்படி என்ருல் கிருஷ்ண வேடத்தில் ஒரு சிரிப்பு சிரிக்கிறதுபார்—பிரமாதம். அம்மாவுக்காக அது ஏங்கி..."

"மஞ்சுளாதான் போய்விட் டாரே அப்புறம் அம்மா யார்?"

"பழைய சாம்பியன் ஜெய லலிதாதான். அவர் சிவாஜிக்கு செகரடரி. அதே சமயம், வருங் கால மனேவி. அதற்குள் ஒரு சிக்கல் வந்து எல்லாவற்றையும் நாசம் பண்ணிவிடுகிறது. தாயில்லாத சுமதி, 'அம்மா வேண்டும், அம்மா வேண்டும்,' என்று அழவே, சிவாஜி ஜெயலலி தாவை வரவழைத்து 'இதுதான் உன் அம்மா' என்று அறிமுகம் பண்ணி வைக்கிருர். அப்புறம் முத்துராமன் வந்ததும், பொய் அம்மா, நிஜ அம்மா ஆகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது."

"அது எப்படி?"

"வீடு வரைக்கும் கொண்டு போய் விட்டு வரலாமென்று வந்த 'அம்மா'வை, ராத்திரி திரும்பிப் போகக் கூடாது, உன் கிட்டேதான் படுத்துக் கொள்வேன் என்று குழந்தை வீட் டிலேயே தங்க வைத்துவிடுகிறது. அப் புறம் அப்பாகிட்டே படுத்துக் கொள் கிறேன் என்று பிடிவாதம். அப்புறம் நீயும் வந்து அப்பாகிட்டே படுத் துக்கோ, இடம்தான் இருக்கிறதே என்று உபத்திரவம். இரண்டு பேர் கையையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு தூங்கிஞல்தான் அதற்குத் தூக்கம் வருகிறது..."

"உஷ்! கையை விடுங் கள். யாரும் வரப்போகிருர்கள். சிவாஜி காதல் என்ன ஆயிற்று?"

"டிராஜடிதான். சிவாஜி யின் விருப்பத்தைப் பூர்த்தி பண்ணுவ தாக நினேத்துக்கொண்டு ஜெயலலிதா முத்துராமனே மணக்கிருர். அந்தப் பேரிடி போன்ற ஏமாற்றத்தை, சிவாஜி அருமையாகக் காட்டியிருக்கிருர்."

"மொத்தத்திலே எப்படி?"

"புரு சமாசாரத்தை நினேத்தாலே எரிச்சல் வருகிறது. பல இடத்தில் இங்கிலிஷ் வாடை வீசுகிறது. ஆனல் பாட்டன் காலத்துச் சோகக் கதை."

"பாட்டன் காலத்துக் கதை யில் மாடர்ன் சிங்கப்பூர் வருமாக் கும்?"


"பாட்டன் காலத்துக் கதையை மாடர்னுக எடுத்திருக்கிருர் கள் என்று வைத்துக்கொள்ளேன். வாயேன் கிட்டே."

"போங்க அந்த ண்டை. எனக்கு வேலே இருக்கு."



“வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் உங்களுக்கு இளமைப் பருவம் வருகிறது. ஆகையால் முகப் பருக்கள் அதை மாசுபடுத்தவிடாதீர்கள்”

“உடல் வளர்ச்சியின் ஓர் அங்கமே முகப்பருக்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகையால் நான் எப்பொழுதுமே கிளியரெஸில் உபயோகிக்கிறேன். முகப்பருக்கள் ஒவ்வொரு முறை தோன்றும் போதும், அவற்றை அகற்ற அது எனக்கு உதவுகிறது” என்கிறார் 19 வயதான
பத்மினி கருடாச்சார்,
இண்டர் ஆர்ட்ஸ்,
எஸ். ஐ. ஈ. எஸ். காலேஜ், பம்பாய்.



நீங்கள் இளமைப் பருவத்தைத் தொடும்போது, உங்கள் உடல் உற்பத்தி செய்யும் உபரி எண்ணை சருமத் துவாரங்களை அடைத்துக்கொண்டு, முகப் பருக்களைத் தோற்றுவிக்கிறது. ஆகையால்தான் உங்களுக்குத் தவறாமல் கிளியரெஸில் தேவை. கிளியரெஸிலிலுள்ள விசேஷ மருந்துப் பொருட்கள் உபரி எண்ணையையும் அழுக்கையும் அகற்றி, ஒவ்வொரு முறை முகப் பருக்கள் தோன்றும்போதும் அவற்றைப் போக்குகின்றன. அநேக புதிய முகப்பருக்கள் தோன்றுவதைத் தடுக்கவும் உதவுகின்றன.

உங்கள் இளமைப் பருவத்தில் இரவுக்கு இரவாக முகப்பருக்களைப் போக்கவல்ல சிகிச்சை இல்லை என்பது நினைவிருக்கட்டும். ஆனால் உங்கள் முகப் பருக்களைக் கட்டுப்பாட்டில் வைக்க உறுதியான வழி கிளியரெஸில்.

கிளியரெஸில் எப்படி செயல்புரிகிறது

* ‘கேரடோலிடிக்’ ஆற்றல் முகப்பருக்களின் மேற்பொருக்கை உரித்து, அவற்றிலுள்ள நீர் வடிய உதவுகிறது.
* உலரும் ஆற்றல், முகப்பருக்களைத் தோற்றுவிக்கும் உபரி எண்ணையை அகற்றுகிறது.





பார்வதியும், மங்களமும் அன்று ஊரிலிருந்து வரப் போகிறார்கள் என்கிற தகவல் தெரிந்ததும் அலமேலு குன்றிப் போனாள். ஊரிலிருந்து வந்ததுமே அவர்கள் அவளைத் தேடி வருவார்கள். வந்து, "ஏண்டி அலமு, அன்று அப்படியொரு பேச்சுப் பேசி, அமர்க்களமாகச் சவால் விட்டாயல்லவா? இப்போ என்ன ஆயிற்று? நாங்கள் சொன்னது போலவே மண்ணைக் கவ்வி விட்டாயல்லவா? உம்...எடு பணத்தை!" என்று இரண்டு பேருமாக, ஆளுக்கொரு பக்கம் இழுத்துப் பேசி, எக்காளமிடப் போகிறார்கள்.

அவர்கள் பேச்சு நியாயம் தான். பந்தயம் கட்டிவிட்டு, தோற்றுப் போனால், பணத்தை உடனே கொடுத்துவிட வேண்டுமல்லவா?

அலமேலு பீரோவைத் திறந்து, பர்ஸை எடுத்தாள். அவள் கைகள், ஒற்றை ரூபாய்த் தாள்களை எண்ணின.

ஒரு மாதத்திற்கு முன்னால் ஒரு நாள். மாதர் சங்கத்தில் அங்கத்தினர்களெல்லோரும் ஹாலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"காத்யாயினி எங்கே காணோம்?" என்று ஒருத்தி கேட்டாள்.

"அவளைக் கூப்பிட அவள் வீட்டிற்குப் போயிருந்தேன். ஆனால் அங்கே அவளுக்கும் அவள் மருமகளுக்கும் நடந்து கொண்டிருந்த மல் யுத்தத்தைப் பார்த்ததும், பேசாமல் போன சுவடு தெரியாமல் திரும்பி விட்டேன்!" என்றாள் மற்றவள்.

பேச்சு, மாமியார் — மருமகள் விவகாரத்திற்குத் திரும்பி, வாதமும், பிரதிவாதமுமாக வளர்ந்து, சம்பாஷணையில் சூடு பறந்தது.

"இந்தக் காலத்துப் பெண்கள் படித்து விடுகிறார்களே தவிர, பண்பு எங்கே தெரிகிறது? 'தாட் பூட்'டென்று கொஞ்சமும் வளையாமல் பந்தயக் குதிரை மாதிரி நடந்து கொள்ளும் அவர்களை வைத்துக் கொண்டு எந்த மாமியாராலுமே குப்பை கொட்ட முடியாது!" காட்டமாகப் பார்வதி சொன்னாள்.

ஆனால் அலமேலுவுக்கு அவள் சொன்னது சரியென்று தோன்றவில்லை.

"அப்படிச் சொல்லாதே பார்வதி. பிறந்த வீட்டையும், பழ



கின மனிதர்களையும் விட்டுவிட்டு, நம்மையே நம்பி வருகிற அந்த இளம் வயதுப் பெண்களை, அனுபவப்பட்ட நாம் கொஞ்சம் அரவணைத்துக் கொண்டு போகத்தான் வேண்டும். அவர்களிடமிருக்கும் குற்றம் குறைகளைப் பெரிதாகப் பாராட்டாமல், நம் வயிற்றில் பிறந்த குழந்தைகள் செய்தது போல நினைத்துப் பாராமுகமாகப் போய்விட்டால், பிரசினைக்கு ஏது இடம்? அந்தப் பெண்ணும்தான் அப்புறம் நம்மை வேற்றாளாக எப்படி நினைப்பாள்? தன் சொந்தத் தாயாக நம்மையெண்ணி, 'அம்மா, அம்மா,' என்று நம்மைச் சுற்றி வர மாட்டாளா?'' என்றாள்.

அவ்வளவுதான். அந்தக் கணமே அங்கிருந்தவர்கள் இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்தனர். பார்வதியையும், அவள் ஆருயிர்த் தோழி மங்களத்தையும் ஆதரித்தவர்கள் ஒரு பக்கம். அலமேலு சொல்வது சரியானதுதான் என்று ஒப்புக்கொண்டவர்கள் இன்னொரு பக்கம்.

''அலமு, பின் விளைவுகளைப் பற்றிக் கொஞ்சமும் நினைத்துப் பார்க்காமல், வார்த்தைகளை ரொம்ப விட்டு விட்டாய். உன் மூத்த பிள்ளைக்குக் கல்யாணமாகப் போகிறது. இன்றைக்குப் பதினைந்தாம் நாள், நீ மாமியாராகி விடுவாய். சாதாரணமாக என்றால் உன்னை நாங்கள் அதிகம் கவனிக்க மாட்டோம். ஆனால் இப்போதோ, உங்கள் உறவு முறையை அணு அணுவாக ஆராய்வதுதான் எங்கள் முக்கியமான வேலை. நீ பேசினதில் ஒரு மாற்றுக் குறைவாக இருந்தாலும், நீ தோற்றுப் போனவளாகி விடுவாய். என்ன சொல்கிறாய்?'' என்று முகம் சிவக்க, கோபத்துடன் கேட்டாள் பார்வதி.

அலமேலு, மெல்லச் சிரித்துக் கொண்டாள். இரண்டு கைகளையும் தட்டினால்தான் சப்தம் வரும் என்பது அவளுக்குத் தெரியாதா?

''நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை பார்வதி, நீ என்ன சொன்னாலும் நான் அதற்கு ஒப்புக் கொள்கிறேன்,'' என்றாள்.

''பந்தயம் இருபத்தைந்து ரூபாய். நீ ஜெயித்தால் பார்வதி உனக்குக் கொடுத்து விடுவாள். அவள் ஜெயித்தால் நீ அவளுக்குக் கொடுத்து

கஸ்தூரி பஞ்சு

விட வேண்டும். என்ன...?'' என்ருள் மங்களம்.


''ஆகா, நான் தயார். என் மருமகள் வரும் வேளை, எனக்குப் பண வரவு ஏற்படப் போகிறது போலும்!'' என்று அலமேலு சொன்னதும், பார்வதிக்குக் கோபம் அதிகமாயிற்று. ஆத்திரத்துடன் ஏதோ சொல்ல ஆரம்பித்தவளின் கையைப் பற்றி அமுக்கி, அடக்கினுள் மங்களம்.

அதன் பின், இரண்டு மூன்று நாட்களில் பார்வதியும், மங்களமும் அவசர காரியமாக வெளியூர் கிளம்பிப் போய் விட்டனர்.

போவதற்கு முன்னுல், மறக்காமல் பார்வதி அலமேலுவைச் சந்தித்து, ''நான் வர ஒரு மாதமாகும். நான் இங்கே இல்லாவிட்டாலும் கூட, உன்னைக் கண்காணிக்க ஆட்களை வைத்துவிட்டுத்தான் போகிறேன்!'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போனுள்.

குறிப்பிட்ட முகூர்த்தத்தில் சேகரின் திருமணம் ஜாம் ஜாமென்று நடந்தது. வலது காலை முன்னல் வைத்து, அலமேலுவின் மருமகளாக, சுதா அந்த வீட்டினுள் அடியெடுத்து வைத்தாள்.

அவள் வீட்டிற்கு வந்த



மறுநாள், எதற்காகவோ, ''சுதா, இங்கே வாம்மா,'' என்று அலமேலு அவளைக் கூப்பிட்டாள்.

''இதோ வந்து விட்டேன் அத்தை,'' என்ற சுதாவின் வார்த்தைகள் அலமேலுவின் இதயத்தில் ஏமாற்றத்தின் முதல் அடியாக விழுந்தன.

சுதா, தாயற்ற பெண். அலமேலு, அவளைத் தன் மருமகளாக்கிக் கொள்ள விரும்பியதற்கு, அதுவே ஒரு முக்கிய காரணம் என்று சொன்னுல் மிகையில்லை.

பெண் பார்க்கப் போன அன்றே, சுதாவைத் தன்னருகே இருத்திக் கொண்ட அலமேலு, ''இதோ பாரும்மா சுதா, இத்தனை வருடங்கள்தான் நீ அம்மா இல்லாதவள். இனி, அப்படியில்லை. நான்தான் உனக்கு அம்மா. நீ அப்படித்தான் நினைத்துக் கொள்ளவேண்டும். பழக வேண்டும். கூப்பிட வேண்டும். புரிந்ததா?'' என்று வாத்ஸல்யத்துடன் சொல்லியிருந்தாள்.

அந்த அவளது முதல் வேண்டுகோளுக்கு ஆரம்பத்திலேயே இப்படியொரு மறுதளிப்பா? ஏமாற்றம் அடைந்தாள் அலமேலு. கல்யாணத்திற்கு வந்தவர்களில் பாதிப் பேர் வீட்டிலிருந்ததனுல், மேற்கொண்டு எதுவும் பேசாமல் விட்டாள்.

அப்புறம்...ஐந்தாறு நாட்கள் கழிந்தன. வந்தவர்கள் எல்லோரும் போயாகி விட்டது.

வீட்டிற்கு வந்த புதுப் பெண்ணிடம், அவள் தன்னை 'அம்மா' என்று அழைப்பதுதான் தனக்கு விருப்பமானது என்பதை நாசூக்காகவும், ஜாடைமாடையாகவும் அலமேலு உணர்த்தியும் கூட, சுதா தன் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை. மறந்தும் கூட, அம்மா என்று கூப்பிடாமல், அழுத்தம்திருத்தமாக 'அத்தை' என்றே அழைத்தாள்.

இடிந்து போனுள் அலமேலு. கொந்தளிக்கும் கடலலைகளைப்போல் அவள் உள்ளம் குமுறிற்று.

நினைவோர் ஆயில்



மிக அருமையான புகைப்படம் இது. திரு. டி. எஸ். நாகராஜன் எடுத்தது. 'பலாஹாரி பாபா' என்பவர் அவர் வீட்டுக்கு வந்து நான்கு நாட்கள் தங்கியிருந்தபோது எடுக்கப்பட்டது. சாமியாரின் தலைமுடியிலேயே இரு பெண்ணின் கவனமும் நிலைத்திருப்பதைக் கவனிக்கவும்.

பார்வதியும், மங்களமும் பேசினது எத்தனை அனுபவ பூர்வமான வார்த்தைகள் என்று நினைத்துக் கொண்டாள். கட்டியிருந்த மனக்கோட்டைகள் சரிந்து விட்ட அதிர்ச்சி, அவளை ஆட்டிப்படைத்தது.

நீர் நிறைந்த கண்களும் நடுங்கும் கரங்களுமாக நோட்டுகளை எண்ணிக் கொண்டிருந்தாள் அலமேலு.

"அம்மா .... அம்மா .... என்னம்மா இது?" சேகரின் குரல்.

கீழே விழுந்த குழந்தை அன்னையைப் பார்த்ததும் அழுவது போல, ஆருயிர் மகனின் அன்பு வார்த்தைகளைக் கேட்டதும், அலமேலுவின் துக்கம் கட்டுக்கடங்காமல் பெருகி வெளிப்பட்டது.

"நான் தோற்றுப் போயிட்டேண்டா சேகர்!"

விஷயத்தைக் கேட்டு அறிந்து கொண்ட மறுகணமே ருத்ரமூர்த்தியானான். "அம்மா, இத்தனை நாட்கள் இதை என்னிடம் சொல்லாமல் மறைத்தது பெரிய தவறு. நீ தோற்றுப் போவதாவது? விடுவேனா நான்?" என்று உறுமியவன், 'தாட், தாட்'டென்று படிகளைக் கடந்து மாடியேறி, "சுதா, இங்கே வா!" என்று இடிக் குரலில் கூப்பிட்டான்.

ஓடி வந்தாள் சுதா.

அவளிடம் அலமேலுவைச் சுட்டிக் காட்டி, "அதோ நிற்கிறார்களே, அது யார்?" என்று கேட்டான் சேகர்.

புதிரான அந்தக் கேள்வியின் பொருள் புரியாத சுதா, விழித்த படி, "ஏன் கேட்கிறீர்கள்? அத்தை

தான் நிற்கிறார்," என்றாள்.

அவ்வளவுதான். அவள் கன்னத்தில் 'பளாரெ'ன்று ஓர் அறை விழுந்தது.

"என்ன சொன்னாய்? அத்தையா? அவள் என்ன, உன் அப்பாவுடன் கூடப் பிறந்தவள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? அவள் என்னைப் பெற்றெடுத்த தாயாராக்கும். என் அம்மா, உனக்கு அத்தையா? உன்னைத் தன் மகளாகவே பாவிக்கும் என் தாயாரை அம்மா என்று கூப்பிட உனக்குப் பிடிக்கவில்லையா?"

"ஆமாம். பிடிக்கத்தான் இல்லை," என்று அமைதியாய்ப் பதில் சொன்னாள் சுதா.

சேகர், பேசச் சக்தியின்றி, ஸ்தம்பித்து நின்றுவிட்டான். கீழே நின்றுகொண்டு கேட்டுக் கொண்டிருந்த அலமேலுவோ அதிர்ச்சி தாங்காமல் மயங்கி விழும் நிலைக்குப் போய்விட்டாள்.

சுதாவே தொடர்ந்து பேசினாள்: "நான் ஏன் இப்படிச் சொல்கிறேன் என்பதையும் விளக்கி விடுகிறேன். என் அம்மா போன பிறகு நான் சித்தியிடம் வளர்ந்தேன். அவள் அசல் ராட்சஸி. ஆனால் வெளியுலகத்திற்கு நல்லவளாக வேஷம் போட வேண்டும் என்பதற்காக, என்னை வற்புறுத்தி, 'அம்மா' என்று கூப்பிடச் சொல்வாள். அந்த வார்த்தையின் போர்வையில்தான் தன் கொடுமைகளை மறைத்துக் கொண்டாள். ஆகவே சிறு வயதிலிருந்தே, அம்மா என்றால் அரக்கத்தனம் என்கிற அர்த்தம்தான் என் மனத்தில் வேரூன்றி விட்டது. உங்கள் தாயார் சாதாரணமானவர்களைப் போல இருந்திருந்தால் கூட, நான் நீங்கள் சொன்ன படி, அவரை அழைத்து விடுவே[ன்]. ஆனால் என் மாமியாரோ, தெய்வ[த்]தின் மறு பதிப்பாக இருக்கிற[ார்]. அப்படிப்பட்ட அன்புருவத்தை அ[ந்த] வார்த்தையைக் கொண்டு கூப்பி[ட] என் நாக்குக் கூசுகிறது. மனம் மரு[கு]கிறது. ஆனால்..ஆனால்... நீங்கள் ரொ[ம்]பவும் வற்புறுத்தினால், எப்படியாவ[து] 'அம்மா'வென்று கூப்பிடவே முய[ற்]சிக்கிறேன்.." தழதழத்தது குரல்.

அலமேலுவிற்கு உடம்[பு] புல்லரித்தது. தன் வயதை மீறி[ய] வேகத்துடன் மாடியேறியவள், சுதாவை மார்புடன் இறுகத் தழுவிக்கொண்[டு] "கண்ணே சுதா, நீ என்னை அத்[தை] என்றே கூப்பிடம்மா. கல்கண்[டு] என்கிற பெயரில் எனக்கு எட்டிக்கா[ய்] தேவையில்லை," என்றாள்.

அப்போது, கீழே மங்க[ள]மும், பார்வதியும் அட்டகாசமாக[ச்] சிரித்துக் கொண்டு உள்ளே நுழை[ந்]தனர்.

"ஏய், அலமு, ஒரு நாளைக்[கு] ஆயிரம் முறைகள் உன் மருமக[ள்] உன்னை அம்மா என்று கூப்பிட[ப்] போகிறாளாக்கும் என்று ஜம்பம் அடி[த்]துக் கொண்டாயே, என்ன ஆயிற்று?" என்றார்கள்.

மௌனமாகக் கீழே இறங்[கி] வந்த அலமேலு, ரூபாய்த் தாள்களை எடுத்துப் பார்வதியின் கையில் பு[ன்]னகையுடன் கொடுத்தபடி, "பந்தய[ம்] கட்டித் தோற்றுப் போய் விட்டே[ன்] னில்லையா? இந்தா," என்று சொன்[ன] போது, அவள் முகத்தில் தோல்வி[யி]யின் தொய்வு சிறிதுமின்றி, வெற்[றி]யின் பெருமிதம் கூத்தாடுவதை[க்] கண்டு, அவ்விருவரும் குழம்பிப்போ[ய்] நின்றனர்.

சே, சே! எத்தனை நஷ்டம்!

ஒரு மருந்துக் கடைக்காரர் தன்னுடைய மகனைக் கடையைப் பார்த்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு வெளியில் சென்றார். திரும்பி வந்தவுடன் மகன் ஒரு டானிக் பெயரைக் கூறி, "அதை ரூ. 3-71க்கு விற்றேன்," என்றான்.

உடனே அவர், 'அடடா! அதன் விலை ரூ. 37-10 ஆயிற்றே!' என்று வருத்தப்பட்டுவிட்டு, "இருந்தாலும் லாபம் 71 பைசா" என்றார்.

("பெண்ணுலகத்தில்' ஒலிபரப்பக் கேட்டு ரசித்தவர்: டி.எஸ். பி. சந்திரசேகர்.)

தலையைச் சீவவா போறீங்க?

உமா கல்யாணி

பள்ளி முடிந்து ஒற்றையடித் தடத்தின் வழியாக நடந்து வந்து கொண்டிருந்தாள் ஞானப்பூ டீச்சர்.

வெய்யில் இறங்கிவிட்ட மாலை வேளைதான் என்றாலும் கூட, பூப் போட்ட மலாயா வண்ணக் குடையை ஸ்டைலாக விரித்துப் பிரித்தபடியே, நீல வண்ணக் காலணிகள் மணலிலே தடம் பதிக்க வனப்பாக நடந்து வந்து கொண்டிருந்தாள். கையில் அழகுப் பை. அதனுள்ளே பொருட்களுடன் சின்ன டிபன் பாக்ஸ் ஒன்று. குட்டையான சடை மார்பிலே புரண்டு கொண்டிருந்தது.

பனை ஓலைகள் காற்றிலே சரசரத்துக் கொண்டிருந்தன. ஆங்காங்கே அந்திப் பனை சீவுகிற 'அண்ணாச்சி'களின் 'சரட் சரட்' என்கிற மரமேறுகிற ஓசை.

'ஆண்டவனே! அவரை எதிர்ப்பட வைத்து விடாதே,' என்று மானசீகமாக வேண்டிக் கொண்டாள் ஞானப்பூ.

என்று வேதமுத்து அவளிடம் அப்படி ஒரு விண்ணப்பம் செய்யத் துவங்கினானோ அன்றிலிருந்து அவள் இப்படி விலகி விலகித்தான் ஓடுகிறாள்.

வேதமுத்து ஞானப் பூவின் அத்தை மகன்தான். கறுத்துப் பெருத்த நெடிய உருவம். பனை ஏறிக் காய்ப்பு விட்ட முரட்டு உடம்பு. திருகு மீசை. சிவந்த விழிகள்.

சின்ன வயதிலே நம்பியாற்றிலே அவனுடன் போடாத கொட்டமா! கரையோரத்துப் புளிய மரங்களில் அவன் காய் பறிக்க, இருவருமாகப் பாறையின் மீது அமர்ந்து உப்புடன் உரசி உரசித் தின்பார்கள். இப்போது அதை எண்ணினாலே சிரிப்பாக வந்தது அவளுக்கு.

அவனுக்கு மேற்படிப்பு ஏறவில்லை. எட்டாவதுடன் படிப்பை முடித்துக்கொண்டு பனை ஏறலானான்.

ஞானப்பூவோ, எஸ். எஸ். எல். ஸி. முடித்ததும் ஆசிரியைப் பயிற்சியும் பெற்று, தான் கற்ற ஆரம்பப் பள்ளியிலேயே பணியாற்றலானாள். இப்போது பள்ளியிலிருந்துதான் ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறாள்.

முதலியார் தோட்டத்தை ஒட்டி இறங்கிப் போகும் ஒற்றையடித் தடத்தில் நடந்தால் ஊர் மிகவும் பக்கம். மெயின் ரோடு வழியாக நடந்தால் ஒரு மைல் சுற்று. இங்கே பனை மரக் கூட்டமானாலும் கூடப் பயம் கிடையாது. ஆங்காங்கே பனை ஏறிக் கொண்டிருப்பார்கள். ஆகவே ஞானப்பூ வழக்கமாக இந்தப் பாதையில்தான் வருவாள்.

அவள் கண்கள் சுழன்றன. வேதமுத்து எந்தப் பனையில் இருக்கிறானோ? பார்வையில் படவில்லை.

ஞானப் பூவின் மனக் கண்கள் வேதமுத்துவையும் ராபர்ட்டையும் முன்னே கொணர்ந்து ஒப்பிட்டுப் பார்த்தன. எவ்வளவு வேறுபாடு!

ராபர்ட் நல்ல கோதுமைச் சிவப்பு. சுருள் கிராப். கிராமத்திலே வெள்ளை உடை உடுத்து

ஸ்கூலுக்குப் போய் வருகிற நாசூக்கான உத்தியோகம். அவன்தான் அவளுக்குப் பொருத்தம் என்று ஊரே ஒப்புக்கொண்டது. குறிப்பாக அவள் பெற்றோர்களுக்கு அவனை மிகவும் பிடித்திருந்தது.

"ஞானப் பூ!"

பனங் காடே அதிர்கிற குரல்.

யாரைச் சந்திக்க நேர்ந்துவிடக் கூடாது என்று அவள் பயந்து பயந்து வந்தாளோ அவனே எதிரே வந்து நின்றான்.

வர்ணம் தீட்டிய பனை நார் பெல்ட் இடுப்பிலே. இடது பக்கம் சுண்ணாம்பு வைக்கிற சிறு பெட்டி தொங்கியது. பாளை அரிவாளின் கறுத்த கைப்பிடி, அரிவாள் பெட்டியை மீறிக்கொண்டு தெரிந்தது. இடுக்கி மட்டை துருத்தி நின்றது. விழிகள் சிவந்து மின்னின.

"உன் மனசிலே நீ என்னதான் நினைச்சுக்கிட்டு திரிகிறே?" என்றான் அவன். "இன்னிக்கு ரெண்டிலே ஒண்ணு தெரிஞ்சாகணும் எனக்கு!"

துணிச்சலை வரவழைத்துக்கொண்டு அவள் சொன்னாள்.

"இதோ பாருங்க, வீணாய் வழி மறிச்சு வாதம் பண்ண வராதீங்க. இருட்டப் போகுது. மீதிப் பனைகளை எல்லாம் போய் ஏறிட்டு வாங்க."


அவன் உறுமினான்.

"நான் சொல்வதைக் கேட்பியா மாட்டியா?"

அவளுக்கு உடம்பு வியர்த்தது. ஆனால் உறுதியாகச் சொன்னாள்.

"ஒரு பெண்ணுக்குக் கல்யாணம்கிறது ஒரு முறைதான். அது அவள் இஷ்டப்படிதான் நடக்கணும். யாரும் குறுக்கே வரக் கூடாது."





அவன் அவளையே முறைத்துப் பார்த்துக்கொண்டு நின்ருன்.

''நாலுபேர் கிட்டே சவால் விட்டுட்டு வந்திருக்கேன். இந்தக் கல் யாணம் நடந்தேதான் தீரும்.''

''அடே ..நீங்க ஜெயிக்க ணும்கிறதுக்காக நான் என் வாழ்க்கை யைப் பணயம் வைக்கணுமா? முடி யாது. என் முடிவை நான் எப்பவோ சொல்லியாச்சு. மறுபடியும் மறுபடியும் வந்து வற்புறுத்தினுல் மட்டும் நான் மாறவா போறேன்? உங்க அளவுக்கு என் நெஞ்சிலேயும் வலு உண்டு. நீங்க என்ன ..பாளை சீவுற அரிவாளை எடுத்துத் தலையைச் சீவிடுவீங்களா? அதுவும் நல்லதுதான். விருப்பம் இல் லாமல் கழுத்தை நீட்டுறதைவிட.. இந்த முடிவு எவ்வளவோ மேல்..'' ஞானப்பூவின் குரலில் தொனிப்பது விரக்தியா, துணிவா என்று அவனுல் இனங்காண இயலவில்லை.

அவன் மௌனமானான். அவனது ஊக்கம் வடிந்திருந்தது. தொய்ந்து தெரிந்தான். கை விரலால் இடுப்புப் பெட்டியைத் தட்டிக் கொண்டான். பார்வையைத் திசை திருப்பினான்

"ஞானப்பூ ..நீ சிரமத்தை விலைக்கு வாங்கப் போறே. வாழ்வை விளையாட்டாய் எண்ணுறே. இப்ப நீ எடுத்திருக்கிற முடிவுக்காக, அப்புறம் வாழ்நாள் முழுவதும் சிரமப்படப் போறே ..ஆமாம்."

"நான் தேர்வு செய்த வாழ்வினுடைய சிரமங்கள், எனக்குப் பூ மீது நடக்கிற மாதிரி."

"கொஞ்சமாவது பொருத்தம் பார்த்தாயா?"

"மனசு பொருந்தினாப் போறும்."

"எப்படியோ போ. இனி மேல் உன்னை மாத்த முடியாது. மாத்திடலாம்னு சவால் விட்டேன். தோற்றுப் போயிட்டேன். நேரமாச்சு .. இருட்டுறதுக்குள்ளே வீடு போய்ச் சேரு. எனக்கு இன்னமும் அஞ்சாறு பனை கெடக்கு." வேதமுத்து நகர்ந்தான்.

அவளும் நிம்மதியோடு நடந்தாள், அப்பாடா! பிரசினை ஓஞ்சுது. இனிமேல் பேசமாட்டார். அவளுக் மகிழச்சியாக இருந்தது. காலமெல்லா வேதமுத்துவை நெஞ்சிலே சுமந்திட் திடீர்னு வேறு ஒருவரைப் பண்ணிக் டின்னா முடியுமா? பொருத்தமென்ப மனசைப் பொறுத்தது. எல்லோரு கூடி ராபர்ட்டை அவளுக்குப் பொரு தம்னு சொன்னால், சரியாய்ப் போச்சா அவள் அப்படி எண்ண வேண்டாமா வேதமுத்துவிடமிருந்து அவளைப் பிரி கிறதுக்கு அவனையே பயன்படுத்துறுங் அவளைப் பெத்தவங்க. அவனு தாழ்வு மனப்பான்மையாலே .. ஒ பனை ஏறிக்கு மனைவியா வர டீச்சர் பொருத்தம் இல்லேன்னு. அவளை மறந்து விடச் சொல்லித் தொல்லை பண்ணிக் கொண்டிருந்தான். இனிமே மூச்சு விட மாட்டான்.

வேதமுத்து பனை ஏறுகிற 'சரட் சரட்' ஓசை, இனிமையான சங்கீதம் போல அவள் செவிகளில் வந்து விழுந்தது. இனி அவன்தான் அவள் கணவன்.

அவள் உல்லாசமாக நடக்க லானாள் ஊரை நோக்கி. கறுத்த வானில் வெள்ளி நிலா உதயமாகத் தொடங் கியது.

"என்ன அழகு!" என்று ஞானப்பூ ரசித்தாள்.

கூட்டமோ நாட்டமோ

டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் தமிழ்நாடு நாளிதழில் நான் பணிபுரிந்து வந்தேன். அவர் அடிக்கடி அரசியல் கூட்டங்களில் பேசுவார். கூட்டங்கள் அடிக்கடி கோகலே ஹாலில் நடக்கும். அவர் கூட்டத்தில் பேசுகிற நாட்களில் தனது நாளிதழ் அலுவலகத்தை மாலை 4 மணிக்கே மூடிவிடுவார். நாங்கள் உடனே கோகலே ஹால் போய் அமைதியாக உட்கார்ந்து கொள்ள வேண்டும். அவர் பேசும் கூட்டத்திற்குப் பொது மக்கள் அதிகமாக வராமல் இருந்துவிட்டால் என்ன செய்வது? அதற்காகத் தான். அதுமட்டுமல்ல. நாங்கள் கூட்டத்தின் நடுவில் ஓடிவிடாமல் இருக்கக் காவலாளிகளையும் போட்டிருந்தார். மேலும் அவர் பேசும்போது அடிக்கடி கை தட்ட வேண்டும் என்றும் உத்தரவு. உற்சாகத்தில் அவர் பேசுவது புரியாமல் தட்டக் கூடாத இடத்தில் நாங்கள் கை தட்டி அதற்காக அவரது கோபத்திற்கு ஆளான நாட்களும் உண்டு.

(ம. பொ. சி. பேசியது.)

—'சங்கரிபுத்திரன்'

குமுதம் சமீப காலத்தில் யாருடனும் தகராறுக்குப் போகக் காணுமே என்று போன வாரம் தான் நினைத்தேன். வந்துவிட்டது நாச்சியார் கோவில் விவகாரம்!

தேனி ஜி. கண்ணன்

நினைத்தேன், வந்தாய்!

நடந்த உண்மையை முதலில் கூறி விடுவது; பின் மேலிடத்துப் பயமுறுத்தலின் பேரில் பதவியைக் காக்க அதனை மறுப்பது; இன்றைய அதிகாரிகளின் போக்கே இப்படித்தான்.

சென்னை-31 கி. ரங்கராஜன்

எட்டு வருஷத் தி.மு.க. ஆட்சியில் இதைப் போன்ற 'மறுப்புக்கள்' புதியன அல்லவே? திடீர்ப் பிள்ளையார் போலீஸ்காரர், அண்ணாமலை நகர் மாணவன் உதய குமாரின் தந்தை முதலியோர் வெளியிட்ட 'மறுப்பை' மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

சென்னை-8 எஸ். செல்லம்மாள்

கோவில் நிர்வாகி உங்களுக்கெழுதிய லெட்டரில் அச்சம்பவம் நடக்கவில்லையென்று ஒரு வார்த்தை கூடச் சொல்லவே இல்லை. 'அரசாங்க அலுவலர் என்ற முறையில் மேற்படி விஷயங்களை நான் யாருக்கும் சொல்லவில்லை,' என்று அவர் கூறியிருப்பது கூட அரசுக்கு அவர் அஞ்சி நடுங்குவதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. பேட்டியின் பிற்பகுதி அவர் லெட்டர் கிடைப்பதற்கு முன் அச்சாகிவிட்டதாய்க் கொடுத்துள்ள தங்கள் குறிப்பு, குமுதத்தின் தரத்துக்குத் தகுதியற்றதாகவே நான் நினைக்கிறேன்.

நாகப்பட்டினம் எம்.எம். புகாரி

ஷ்ஷ்.. பைத்தியம்!

'பூட்டு' சிறு கதையில் வரும் நாயகனுக்குப் பைத்தியமா? இல்லை, கதை எழுதியவருக்குப் பைத்தியமா? கதாநாயகன் பாதி வரை 'ரமேஷாக' இருக்கிறான். பின் 'சுரேஷாக' மாறி விடுகிறானே!

கெங்கையூர் எம். சேதுபதி

இவ்வளவு நாளும் விமரிசனங்களில் நீர் எதையாவது 'கன்னா பின்னா'வென உளறிக் கொட்டினாலும் அது முழுக்க முழுக்கப் படத்தைப் பற்றியே இருந்து, ரசித்துத் தொலைக்கும்படியாக இருந்தது. இப்போது இரண்டு மூன்று வாரமாக உங்க ஆத்திலே நடக்கும் ஊடல் கூடல்களோடு விமரிசனம் நடைபெறுகிறது. பெரிய ரம்பமாக இருக்கிறது. தயவு செய்து பழைய பாணிக்கே திரும்பவும்.

நாசரேத் கே. ராபின்சன்

அடுத்த படத்தைப் பார்க்கத் திருமணமாகாத விமரிசகராக பார்த்து அனுப்பவும். ஏனென்றால் இரண்டு பக்க சினிமா விமரிசனத்தில் நாலு வரி கூட அந்தப் படத்தைப் பற்றியதாக இல்லாமல் இருக்கிறது.

பரங்கிப்பேட்டை கே.எச். நூர் முகம்மது

இஷ்ட நஷ்டம்

'யாருக்கு என்ன நஷ்டம்' என்ற கதையைப் படித்தேன். கதையைப் படித்த எனக்கு 10 நிமிட நேரம் நஷ்டம். பிரசுரித்த உமக்கு 4 பக்கம் நஷ்டம். கதையைப் படித்ததனால் என் மனதிற்குக் கஷ்டம். இது போன்ற கதைகளை வெளியிடுவது உங்கள் இஷ்டம்.

சென்னை-14 ருக்குமணி

மூன்று ரூபாய் மருந்தை ரூ. 37.75 என்று விற்பதாக வெளியான துணுக்கைக் குறிப்பிட்டு, மருந்து விலையில் ஒரு பைசா கூட்டக் கூட அரசின் அனுமதி வேண்டும் என்றும், ரீடெய்ல் கடைக்காரர் பெறுவது ரூபாய்க்கு 8 பைசா முதல் 10 பைசாதான் என்றும் கூறுகிறார் மேலைச்சிவபுரி மாணிக்கப்பாரி.

பெரியார் பாலத்திற்கும் சின்மயா நகருக்கும் இடையே ஓடிக்கொண்டிருக்கும் பேருந்து 17-C அல்ல என்றும் 17-A என்றும் திருத்துகிறார் சென்னை-24 எம். வி. ஞானசூரியன்.

ஜெயப்பிரகாஷ் அவர்களைத் திட்டி, கேலி செய்வதை நிறுத்தாவிட்டால், குமுதத்தை நடுத் தெருவில் வைத்துக் கொளுத்துவேன் என்று எச்சரித்திருக்கிறார் கடலூர்-4 எஸ். ஏ. சபாபதி.



எல்லோரும் நல்லவரே ■■

"என்ன இது, அரை டம்ளர் கொண்டு வந்திருக்கிறாய்!"

"குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்றீர்களே?"

"இது எந்த மூலேக்கு? இரண்டு சொம்பாவது வேண்டும் இப்போது."

"ரொம்ப அழகுதான். இது 1975'ம் வருடம். சென்னே நகரம். இரண்டு சொம்பு வேண்டுமாமே. இரண்டு சொம்பு. குடித்துவிட்டுக் கொடுங்கள்."

"ஹூம். இந்தா டம்ளர். இது மட்டும் சென்னேயாக இல்லாமல், 'எல்லோரும் நல்லவரே'யில் வருகிற கிராமமாக இருந்தால்—"

"இருந்தால்?"

"வெள்ளம்! வெள்ளம்! வீடே முழுகிப் போய்விடும் அளவுக்கு வெள்ளம்! அதுதான் கிளேமாக்ஸ் காட்சி. அபாரமாக எடுத்திருக்கிறார்கள். அதைப் பார்த்தால் அப்புறம் ஒரு வருடத்துக்குத் தாகம் எடுக்காது!"

"அதைத் தான் பார்த்தேனே இப்போது? சரி, கதையைச் சொல்லுங்கள்."

"ஒரு கிராமத்தில் வட்டிக்குக் கடன் கொடுக்கிற பொல்லாத கஞ்சன் ஒருவர் இருக்கிறார் மேஜர். ஊராரைக் கஷ்டப்படுத்தவே பிறந்தவர்."

"பரவாயில்லே. மேஜருக்கு வேலேக்கார ரோல்தானு என்று நீங்கள் அலுத்துக் கொண்டது யார் காதிலோ விழுந்து விட்டாற் போலிருக்கிறது."

"எதிர்மாருக ஒரு நல்லவர் இருக்கிறார். கோகுல்நாத்."

"யாரது கோகுல்நாத்?"

"பார்த்தால் தெரிந்து கொள்வாய். பணக்காரரான மேஜர் சாகும்போது ஈ காக்காய் வருவதில்லே. போதும் போதாதற்கு மண்ணே வாரித் தூற்றுகிறார்கள். பரோபகாரியான நல்லவர் தற்கொலே செய்து கொள்ளும் போது ஊரே திரண்டு வந்து மரியாதை செய்கிறது."

"என்னங்க இது, எடுத்த எடுப்பிலேயே சாவு, தற்கொலே என்று சொல்லிக் கொண்டு! காதல் கீதல் இல்லேயா?"

"அதெல்லாம் இல்லாமலா? மஞ்சுளா ஆற்றில் குளிக்கிறார். பக்கத்

னில் முத்துராமன் இருந்து கொண்டு ஜாடையாகப் பார்க்கிறார். இப்படி."

"சகிக்கவில்லை. கதையைச் சொல்லப் போகிறீர்களா இல்லையா?"

"நீ சொல்ல விட்டால் தானே? மேஜர் சாகும்போது, தன் வெறுப்பை எல்லாம் மகனிடம் ஒப் படைத்துவிட்டுப் போகிறார்."

"முத்துராமனிடமா!"

"ஐயையோ. முத்துராமன் நல்லவர். கோகுல்நாத்தின் பிள்ளை. மேஜரின் மகன் ஒரு கன்னடப் புது முகம். உருண்டையான பம்பளிமாஸ் முகம். லோகேஷ் என்று பெயராம். ஜெயந்தியும் வருகிறார்."

"யாராக?"

"பம்பளிமாஸின் மனைவியாக. ஜெயந்தியும் மஞ்சுளாவும் பழைய தோழிகள். அவர்கள் கணவன்மார்கள் இருவரும் கீரியும் பாம்புமாக இருப்ப தால் இரண்டு பேருக்கும் ஏற்படும் கஷ் டங்களை உருக்கமாகக் காட்டியிருக் கிறார்கள்."

"கலர்ப் படம் அல்லவா?"

"பளிச்சென்று இருக்கிறது. ஜெயந்தியின் கணவன் மனம் மாறும் கட்டத்தில் கலரை வித்தியாசமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஜெயந்தி, 'ஏன் இப்படி ஊரார் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறீர்கள்? மஞ்சுளா வின் கணவனோடு சினேகமாய்ப் போங் கள்,' என்று துணிந்து கூறும்போது, ஒரு மனப் போராட்டம் நடக்கிறது. அதை அவர் முகத்தில் கலரை மாற்றி மாற்றி அடித்துக் காட்டியிருக்கிறார் கள்."

"ஸீரியஸ் கதை போலிருக் கிறது."

"ஆமாம். ஒரே ஒரு கட்டத் தில்...ஹஹ்ஹஹ்ஹா—"

"சொல்லிவிட்டுச் சிரியுங் களேன்."

"மூர்த்தியும் அவரது மூன்று தோழர்களும் சாப்பிட வேண்டியிருக் கிறது. கையிலுள்ள காசோ ஒரு டிக் கட் வாங்கத்தான் போதும். அடையா ளம் தெரியாதபடி முக்காடு போட்டுக் கொண்டு நாலு பேரும் கூட்டமில்லாத ஓட்டலில் நுழைந்து, ஒருத்தர் சாப் பிட்டதும் இன்னொருவர் இடம் மாற்றிக் கொண்டு..ஹஹ்ஹஹ்ஹா.."

"படத்தில் வில்லன் யார் என்று சொல்லவே இல்லையே!"

"போச்சுடா! மேஜரும் லோகேஷும் பின்னே என்னவாம்? வில்லனுக்கு வில்லனை எடுத்த எடுப் பிலேயே கணக்கப்பிள்ளை ராகவன் வந்து, அடுத்துக் கெடுக்கப் போகிற தாகப் பிரமாதமாக அறிக்கை விடு கிறார். தேர்தல் அறிக்கை தேவலை என்று வைத்துக் கொள். தாடையைத் தேய்த்துக் கொள்வதோடு சரி."

"கடைசியில் லோகேஷ் திருந்தி விடுகிறாராக்கும். முடிவு நல்ல முடிவுதானே?"

"அதை உடனே காட்டி விடாமல் கொஞ்சம் நீட்டுகிறார்கள். தற்கொலை பண்ணிக் கொள்ளப் போன மஞ்சுளாவை, அதாவது முத்துராமன் மனைவியை, வில்லன் காப்பாற்றுகிறார். அதேபோல்— "

"தற்கொலை பண்ணிக் கொள்ளப் போன ஜெயந்தியை, அதா வது லோகேஷின் மனைவியை—"

"ஜெயந்தி தற்கொலை பண் ணிக் கொள்ள நினைக்கவில்லை. அணை உடைந்ததும் வெள்ளத்தில் மாட்டிக் கொள்கிறார். டைரக்ஷன் சில இடங் களில் ரொம்ப தூக்காக இருக்கிறது. ஆனால்—"

"ஆனால்—"

"கிட்டே வா, சொல் கிறேன்."

"யார் நல்லவரானாலும் நீங் கள் கெட்டவர்தான். போங்கள் அந் தண்டை."



உதவி மானேஜர் ஒரு முசுடு

"அந்த முசுடு கிட்டே ஏண்டி கேட்டே?" என்று சலுகையுடன் கோபித்துக் கொண்டாள் வனஜாட்சி. "ராம் குமாரிடம் சொல்லிட்டுக் கிளம்பக் கூடாதோ?"

சந்தியா மெதுவாக, "கிளம் பறப்போ, அவர்—சிவராஜன்— பார்த்து விட்டார். 'என்ன மேடம், பெர் மிஷனு?'ன்னு கேட்டார். நான் பதில் சொல்வதற்குள், 'அந்த ஸ்டாடிஸ் டிக்ஸ் ரிப்போர்ட்டை டைப் அடிச் சிட்டுப் போங்கோ,'ன்னு சொல்லி விட்டார்!"—சீக்கிரம் வீடு சென்று, நாத்தனாரின் பெண் பார்க்கும் வைப வத்தில் கலந்து கொள்ளலாம் என்று எண்ணியிருந்த சந்தியாவுக்கு ஏமாற்ற மாயிருந்தது.

வெளியே ஹாலிலிருந்து சிவராஜனின் கட்டைக் குரல் கேட் டது. யாரோ புதிதாகச் சேர்ந்த பெண்ணை விரட்டிக்கொண்டிருக்கிறான்.

அந்த விளம்பரக் கம் பெனியில் கிட்டத்தட்ட ஒரு டஜன் பெண்கள் வேலை பார்த்து வந்தார் கள். எல்லாரும் மணமாகிக் குடியும் குடித்தனமுமாக இருப்பவர்கள். 'குழந் தைக்கு உடம்பு சரியில்லை', 'கண வருடன் வெளியே போக வேண்டும்' என்ற சாக்கில், யாராவது ஒரு பெண் தினமும் அனுமதி கேட்டுச் சீக்கிரம் வீட்டுக்குச் சென்று விடுவாள். அல்லது தாமதமாக ஆபீசுக்கு வருவாள். மானே ஜர் பத்ரிநாத் எப்போதுமே இதற் குக் குறுக்கே நிற்க மாட்டார். என்ன, எதற்கு என்று கேட்கா மலே சம்மதம் கொடுத்து விடு வார். ஆனால் அசிஸ்டெண்ட் மானேஜர் சிவராஜன் இருக்கி றானே, லேசில் விட மாட்டான். ஆயிரத்தெட்டுக் கேள்விகள் கேட் பான். அதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டு நிற்பதை விட, பேசாமல் குறிப்பிட்ட நேரம் வரை வேலை செய்து விட்டுப் போய் விடலாமே என்று தான் எல்லா பெண்களுக்கும் தோன்றும். அதுவும் போன மாசம் நடந்த ஒரு நிகழ்ச்சி—

சின்ன சமாசாரம்தான். சியாமளா என்ற ஒரு பெண் வேலை யில் சேர்ந்திருந்தாள். வாழ்க்கை யில் மிகவும் அடிபட்டவள். கணவன் விவாக ரத்து கோரி அவளைத் தள்ளிவைத் திருந்தான். வேறு நல்ல உத்தியோகம் சம்பாதித்துக் கொள்வதற்காக, அவள் ஏதோ பிரைவேட்டாகப் படித்து வந் தாள்.

அதை இந்தச் சிவராஜன் கண்டுபிடித்து, தலைமை அலுவலகம் மூலம் தடுத்து விட்டான்.

சியாமளா ஓவென்று அழுது விட்டாள். சக ஊழியர்கள் சமா தானம் சொல்லியும் கேட்கவில்லை.

தினமும் தனியாகப் பெண் கள் உட்கார்ந்து சாப்பிடும் சமயம், சிவராஜனின் தலை உருளாமல் இருக் காது. அன்றும் அப்படித்தான்.


"உதவி மானேஜர் ஏன்தான் இப்படிப் பெண்களைக் கண்டால் கரிக் கிறாரோ!" என்றாள் சீதா.

"ஏன் என்று எனக்குத் தெரியும். இன்னும் ஒரு மாதத்தில் ஆள் தலைகீழாய் மாறும்படி செய் கிறேன் பார்!" என்று சவால் விட் டாள் வனஜாட்சி.

"எப்படி? எப்படி?" என்று மற்றவர்கள் அவளை மொய்த்தார்கள். ஆனால் அப்போதைக்கு அவள் சொல்ல மறுத்து விட்டாள்.

அடுத்த மாதம்!

சிவராஜனின் அறைக்குள் மிஸஸ் தாமஸ் நுழைந்தாள்.



''ஓ...என்ன மேடம்?'' என்று நிமிர்ந்தான் சிவராஜன்.

''ஹாஸ்பிடல் போகணும். ஒன் அவர்லே வந்து விடுவேன்.''

''இட்ஸ் ஆல் ரைட்,'' என்று சொல்லிவிட்டுத் தன் வேலையில் மூழ்கினான் சிவராஜன்.

''ஏண்டி, வெளியே வானம் மூட்டம் போட்டிருக்கிறதா என்று பார். கடுவன் பூனை சாதுவாகி விட்டதே!'' என்று ராஜி சந்தியாவின் காதைக் கடித்தாள்.

''ஏதோ வேலையிலே பிஸி,'' என்றாள் சந்தியா.

''என்ன பிஸியானாலும், நம் மாதிரிப் பெண்கள் போனால் சீறாமல் விடமாட்டாரே! இன்றைக்கு என்ன ஆயிற்று?'' என்று வியந்தாள் சீதா.

வனஜாட்சியை அனைவரும் பார்த்தார்கள். அவள் மர்மமாய்ப் புன்னகை செய்து கொண்டிருந்தாள்.

கிட்டத்தட்டப் பத்து நாள் ஆகியிருக்கும். ஆபீசுக்கு வந்தவுடனே வனஜாட்சி சந்தியாவிடம், ''ஒரு பெட்!'' என்றாள் புன்னகை மிளிர.

''என்ன?''

'தமயந்தி'

''நீ, நான், சீதா மூன்று பேரும் சினிமாவுக்குப் போவோம். மூணரை மணிக்கே கிளம்பி விடலாம்!''

''என்னடி இது! மானேஜர் வேறே இல்லை. சிவராஜன் தான் 'ஆக்டிங்.' இன்னிக்குப் பார்த்தா?''

''சிவராஜன் கிட்டேயே கேட்டு அனுமதி வாங்கறேன். என்ன பந்தயம்?''

''உண்மையைச் சொல்லி, அதாவது சினிமாவுக்குப் போவதை மறைக்காமல் சொல்லி, 'பெர்மிஷன்' வாங்கணும், முடியுமா உன்னாலே?'' என்று சீதா நிபந்தனை போட்டாள்.

''ஓ எஸ்!'' என்று வனஜாட்சி ஒப்புக் கொண்டாள்.

சொன்னபடி கரெக்டாக மூன்றரை மணிக்கு வேலைகளை முடித்து விட்டு சிவராஜன் மேஜை அருகே போய் நின்றாள் வனஜாட்சி.

''பழைய இந்திப் படம் 'மினர்வா'வில் ஓடுகிறது. நாங்கள் மூன்று பேரும் போகிறோம். ப்ளீஸ், சார். பர்மிஷன்...''

சிவராஜன் முகம் லேசாக மாறியது. ''அவசியம் போய்த்தான் ஆகணுமா?'' என்று மெதுவாகக் கேட்டான்.



சென்னைக் கடற்கரைச் சாலையை அடுத்துப் பல இடங்களில் துவாரங்களுடன் கூடிய வண்ண விளக்குக் குழாய்களைச் செங்குத்தாக நிறுத்தி அமைத்திருக்கிறார்கள். **Fabricated Lighting** என்று இதைக் கூறுகிறார்கள்.

வண்ணப்படம்: எஸ். வி. சேகர்.

படத்தில்: குமாரி சசிகலா.

"ஆமாம் சார். இன்னிக்குத் தான் கடைசி நாள்," என்றாள் சந்தியா.

என்ன ஆச்சரியம்! சிவராஜன் சீறவில்லை, வெடிக்கவில்லை.

"சரி, போங்கள்."

வெளியே வந்த சீதாவும் சந்தியாவும் திகைப்பில் ஆழ்ந்து போனார்கள். "நம்பவே முடியலியே!" என்று சொல்லிச் சொல்லி ஆச்சரியப் பட்டார்கள்.

"எனக்கும் சேர்த்து முதலில் டிக்கெட் வாங்குங்கள்," என்றாள் வனஜாட்சி. "ஒரு காரணம் இருக்கு சிவராஜனின் மாறுதலுக்கு."

தியேட்டரை அடைந்ததும் தான் வனஜாட்சி ரகசியத்தைச் சொன்னாள். "போன மாசம் ஒரு நாள் சிவராஜன் வீட்டுப் பக்கம் போயிருந்தேன். அவரோட தங்கையொருத்தி எம். ஏ. வரை படித்துவிட்டு, ஆனால் வேலை எதுவும் கிடைக்காமல் வீட்டோடு இருப்பது தெரிந்தது. அதைப் பற்றித் தங்கையின் மீது எரிந்து விழுந்து கொண்டிருந்தார் நான் போன போது."

"அப்படியா?"

"ஆமாம். அதனால்தான் நம் மாதிரி எஸ். எஸ். எல். சியும், பி.யு.சியும் வேலைக்கு வந்து கை நிறையச் சம்பளம் வாங்குவது அவர் கண்ணை உறுத்தி இருக்கிறது. நம்மைக் கண்டாலே வள் வள்ளென்று விழுந்தது அதனால்தான்!"

"தெரிந்த பிறகு நீ என்ன செய்தாய்?"

"என் மாமா பெரிய ஆபீசராய் இருக்கிறாரில்லையா? அவர் மூலம் அந்தப் பெண்ணுக்கு ஒரு வேலை கிடைக்கும்படி ஏற்பாடு செய்தேன். அதற்குப் பிறகு சிவராஜனின் சுபாவத்தில் மாறுதல் ஏற்படுமென்று நினைத்தேன்."

"நினைச்சு, பந்தயம் வைச்சு, ஜெயித்தாயாக்கும்!" என்று சந்தியா அவளைக் கிள்ளுவதற்கும், படம் ஆரம்பிப்பதற்கும் சரியாக இருந்தது.

38'ம் பக்க மூலை

நம் வீடுகளிலுள்ள 'செப்டிக் தொட்டி'களின் விஷ வாயுப் போக்கிக் குழாயின் நுனியை ஒரு துணி போட்டு மூடிக் கட்டினால் கொசு உற்பத்தியும் மலேரியா போன்ற நோய் பரவுதலும் குறையும்.

—நூர்ஜஹான் கரீம்



வசுமதிக்காகப் போராட்டம்

மேற்கு மகாராஷ்டிரத்தில் சங்கிலி என்ற ஊர். அங்கே வசுமதி என்ற ஓர் இளம் பெண். கணவனை இழந்து விதவையாகிவிட்டாள்.

அவள் தலையை மொட்டையடித்துக் கொள்ள வேண்டும் என்று மாமனார் வீட்டினர் வற்புறுத்தப் போக, அது பெரும் அமளியாக உருவெடுத்துவிட்டது.

'வற்புறுத்தல்' என்றால் எப்படி? வசுமதியை ஓர் அறைக்கு இழுத்துச் சென்றார்கள். அங்கே அவளை மொட்டையடித்துக் கோரப் படுத்தும் 'புனிதப் பணி'க்காக ஒரு வயோதிக நாவிதர் காத்திருந்தார். வசுமதியின் கையையும் காலையும் கட்டினார்கள். சடங்கு நிறைவேறியது.

வசுமதியின் எதிர்ப்புக் கூச்சல்கள் அக்கம் பக்கத்தாருக்குக் கேட்டன. ஈசுவர தீட்சித்தின் வீட்டிலாரகளா? அவர்களால் நம்ப முடியவில்லை. 'வேத விற்பன்னர்' என்று மகராஷ்டிர அரசினரின் பட்டம் பெற்ற பெரிய மனிதராயிற்றே அவர்!

இச்செய்தி சங்கிலி நகர் பூராவும் காட்டுத் தீ போல் பரவியது. மறுநாளே மாதர் சங்கங்கள் கூட்டம் போட்டு, அந்தச் சம்பவத்தைக் கண்டித்தன. சுமார் 700 பெண்கள் ஊர்வலமாகத் திரு.சாஸ்திரியின் வீட்டுக்குச் சென்று கோஷமிட்டார்கள். அகில இந்திய மாதர் கவுன்சிலைச் சேர்ந்த ஒரு தூது கோஷ்டி திரு.தீட்சித்தை நேரில் சந்தித்து, அந்தக் காட்டுமிராண்டித்தனமான நிகழ்ச்சி பற்றி விசாரித்தார்கள்.

அவர்களிடம் திரு. தீட்சித் என்ன சொன்னாராம் தெரியுமா? "உடன் கட்டை ஏறும் பழக்கம் மட்டும் இன்று அமுலில் இருக்குமானால் வசுமதியை அவளுடைய கணவனின் சிதையிலேயே விழுந்து உயிரை விடும்படி செய்திருப்பேன்," என்றாராம்.

வசுமதிக்கு நான்கு குழந்தைகள் இருக்கின்றன. மாமனாருக்குக் கீழ்ப்படிய மறுத்திருந்தால், அந்தக் குழந்தைகளை யார் பார்த்துக் கொள்வது? அதுதான் வசுமதியின் பிரசினை.

அரசியல்வாதியும் தொழிலதிபருமான குல்கர்னி என்பவரின் மனைவியான சுசீலா வெறுமே கண்டனம் நடத்தியதோடு நிற்கவில்லை. பத்தாயிரம் ரூபாய் நிதி திரட்டினார். அதை வைத்துக் கொண்டு புது வாழ்வு தொடங்குமாறு வசுமதியிடம் சொன்னார். ஆனால் அதை அவள் வாங்கிக்கொள்ளத் தயாராயில்லை என்று தெரிகிறது. தனது விவகாரம் ரொம்பப் பெரிதாகிவிட்டதில் அவளுக்குச் சங்கடம்.

அடுத்து மகாராஷ்டிர சட்ட மன்றத்தில் இந்தப் பிரசினை எழுப்பப்பட்டது. வசுமதியை மொட்டையடித்துக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்தினார்கள். ஆனால் அரசாங்கம் என்ன செய்ய முடியும் என்று கைவிரித்தார் சமூக நல அமைச்சர். வசுமதியே போலீசில் புகார் செய்திருந்தாலன்றி யார் என்ன செய்ய முடியும் என்பது அமைச்சரின் கட்சி.

போலீசில் வசுமதி புகார் செய்யாதது மட்டுமல்ல. கண்டன ஊர்வலம் நடந்த அதே தினத்தில் உள்ளூர்ப் பத்திரிகைகளில் ஓர் அறிக்கை வெளியாகியிருந்தது—வசுமதியின் பெயரால். மதப் பழக்க வழக்கத்துக்கு ஏற்பத் தானே மனமுவந்து தலையை மொட்டையடித்துக் கொண்டதாக அந்த அறிக்கையில் 'வசுமதி' கூறியிருந்தாள்.

கடைசியில் சங்கிலி மாதர்கள் அந்த ஊர் நாவிதர்கள் அனைவரையும் ஒன்றுகூட்டினார்கள். வசுமதியின் கூந்தலை அகற்றிய நாவிதரும் வந்திருந்தார். இந்த மாதிரி காரியம் இனி செய்வதில்லை என்று எல்லா நாவிதர்களும் உறுதியெடுத்துக் கொண்டார்கள்.

நன்றி: •'.பெமினா

லட்சுமியின் டைரியிலிருந்து ஒரு வாரம்:



20-4-74 ஞாயிறு: 'சட்டாம்பி கல்யாணி' மலையாளப் படத்திற்கான ஷூட்டிங். காலை 7 மணியிலிருந்து இரவு 9 மணி வரை. எனக்கு 'ரௌடி' போன்ற பாத்திரம். கள்ளக் கடத்தல்காரர்களிடமிருந்து தப்பி ஓடுவதற்காக அந்தப் பெண் பைத்தியம் பிடித்தது போன்று நடிக்கிருள். ஒரு முழுப் பாட்டு. முகத்தை அஷ்ட கோணலாக வைத்துக்கொண்டு சேஷ்டை. இதுவரை எந்த ஷூட்டிங் போதும் நானும் சரி, ஸெட்டில் இருந்த மற்றவர்களும் சரி; அப்படிச் சிரித்துச் சிரித்து விழுந்ததில்லை. மதியம் ஒன்றரை மணிக்கு வீட்டில் லஞ்ச். நல்ல முழுச் சாப்பாடு. 6 மணிக்கு மேல் நான் சாதாரணமாக ஷூட்டிங் வைத்துக் கொள்வதில்லை என்ருலும், படம் முடியும் தருவாயில் இருந்ததால் வேறு வழி இல்லை. தனது திருமண நிறைவு விழாவுக்காகச் சிநேகிதி இந்து சாப்பிடக் கூப்பிட்டிருந்தாள். போக முடியவில்லை. வீண் மனஸ்தாபம். இரவு உணவுக்குப் பிறகு, முகத்தில் நைட் க்ரீம், நைட் கவுன், தலையில் பாண்ட் இவற்றுடன் கண்ணுடியின் முன் உட்கார்ந்து காலையில் செய்த சேட்டைகளை நினைத்துச் செய்து என்னையே பார்த்துக் கொண்டேன். ஒரே சிரிப்பு. இன்னும் சில கோணல் சேட்டைகள், ஐடியாக்கள் வந்தன. ஸினிரமா, ஸினிரசிகா என்ற இரு மலையாளப் பத்திரிகைகள் சென்ற

வரை பாத்ரூமில் கலாட்டா. எண்ணெய் தேய்த்துக் குளித்தேன். என் மகள் சாந்திக்கும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டினேன். ஒரு மணியிலிருந்து 5 மணி வரை கார்பெட்டில் (படுக்கையில் படுக்காமல்) படுத்துத் தூங்கினேன். அம்மா, சாந்தியுடன் ஷாப்பிங்—மவுண்ட் ரோடு வரை. கன்னடத்தில் ராஜ்குமார், தெலுங்கில் என். டி. ஆருடன் நடிக்கவிருக்கும் புதுப் படத்திற்கு டிரெஸ்கள் ட்ரையலுக்கு வந்தன. பம்பாயிலிருந்து டைரக்டர் மோகன் செய்கால் படத்தின் கால்ஷீட் பற்றி போனில் பேசினுர். Sisters of Sorrow புத்தகம் பாக்கி முடித்தேன். இரட்டையர்கள் கதை. மனத்திலே அதைப்பற்றி நினைவு. இங்கிலீஷ் படங்களிலிருந்து ஷாட்களையும், ஐடியாக்களையும் ஓசைப்படாமல் உபயோகிக்கும் நமக்கு, நல்ல கருத்து மிக்க ஆங்கிலக் கதைகள் இருப்பது ஏன் தெரிவதில்லை?

23 புதன்: காலை 5—30 மணிக்கு எழுந்து, பீச்சுக்குச் சென்றேன். இரும்பு பாலம் வரை காரை ஓட்டிச் சென்று திரும்பினேன். இனிய குளுமையான காற்று. பலதரப்பட்ட வயதினர் இளைப்பதற்காக பீச்சில் நடப்பதையும், ஓடுவதையும் பார்த்தேன். பம்பாய் தயாரிப்பாளர்பிரேம்ஜி கால்ஷீட் பற்றிப் பேசினுர். 10 மணிக்கு பிரஸாத் ஸ்டுடியோவில் தெலுங்கு டப்பிங். ஜூலி படம்

22-23-

20-21-



யோகாசனங்கள். 26'ம் தேதி ஸ்டூடியோ...த்தின் புதுப்படம் பூஜை ஒன்று. அவர் பம்பாயிலிருந்து போன் செய்தார். 'ஜூலி' படம் நன்ருக 'பிக் அப்' செய்து வருகிறது என்று பம்பாய் டிஸ்டிரிபியூட்டர் போன். எனக்குப் பிடித்த 'ஸ்ரீகண்ட்' ஸ்வீட் அனுப்பியிருப்பதாயும் அவர் சொன்னுர். 8 மணிக்கு நான் பம்பாய்க்கு ரீடா பாதுரிக்கு டெலிபோன் செய்தேன். 'மாலூரி கங்கா' தெலுங்குப் படத்திற்குத் திருநீர்மலையில் அவுட்டோர். எனக்குப் பாவாடை தாவணி உடை. 3 மணிக்கு வீட்டில் சாப்பிட்டேன். நான் இப்படி லேட்டாக, நேரம் கெட்ட நேரத்தில் சாப்பிட வந்தால் அம்மாவுக்குக் கோபம் வரும். சாப்பிடக்கூட முடியாமல் ஏன் இப்படி உழைக்கணும் என்பார்கள். எப்படியோ போய்க் கொண்டிருக்கிறது. 3 மணியிலிருந்து 6 மணிவரை ஓய்வு நேரம் கிடைத்தது. Ingelbird Humberdink, New Ventures ஆகிய பாப் மியூஸிக் இசைத்தட்டுக்களை ஸ்டீரியோவில் ஆனந்தமாகக் கேட்டேன். மீண்டும் மாலை 6 மணியிலிருந்து நடு ராத்திரி 2 மணி வரை கோவளம் அருகே அவுட்டோர். குடிசைவீடுகளில் படப்பிடிப்பு. காலையில் திருநீர் மலையிலிருந்த கூட்டத்துக்கும் இரவிற்கும் எவ்வளவு வித்தியாசம்! 9 மணிக்கு இரவு உணவு. 2 வாழைப் பழம், ஒரு டம்ளர் பால் (வீட்டிலிருந்து). கே. எஸ். ஆர். தாஸ் டைரக்‌ஷன். காலை 3 மணிக்கு வீடு திரும்பினேன்.

22 செவ்வாய்க்கிழமை:

எட்டு மணிவரை தூக்கம். 12 மணி ...றன! 3 மணி வரை டப்பிங் இருந்தது. மூட் கொஞ்சம் 'டல்லாக்' இருந்தது. ஆரஞ்ச் ஐஸ்க்ரீம் வீட்டில் செய்தேன். தூரத்து உறவினர்கள் சிலர் இரவு உணவுக்கு வீட்டிற்கு வந்திருந்தார்கள். காலையில் இருந்த 'மூட்' மாறி மகிழ்ச்சியாக இருந்தேன். இன்னும் பலர் என்னிடம் உண்மையாக அன்பாக இருக்கிருர்கள். விச்ராந்தியாக சாப்பாடு. ஜோக்ஸ்.

24 வியாழன்: யோகாசனங்கள். பிரசாத்தில் தொடர்ந்து டப்பிங். சிங்கப்பூரிலிருந்து ரசிகர்கள் ஒரு பார்சல் அனுப்பியிருந்தார்கள். அழகிய புடவையும், நெயில் பாலிஷ்களும். 'Speak Better, Write Better' என்ற புத்தகத்தை குறித்து ரீடர்ஸ் டைஜஸ்ட்டிடமிருந்து லெட்டர் வந்திருந்தது. அதை வாங்கத் தயார் என்று அந்தக் கடிதத்திற்குப் பதில் கையெழுத்து போட்டுத் தபாலில் போடச் சொன்னேன். பிறகுதான் அம்மா சொன்னுள்—தானும் அதே புத்தகம் வாங்க லெட்டர் போட்டிருப்பதாக. பரவாயில்லை. இரண்டு புத்தகங்கள் வந்தால், ஒன்றை நல்ல பரிசாகக் கொடுக்க முடிவு செய்தேன். என்றைக்கும் எந்த நேரத்துக்கும் இது நல்ல பரிசு. யாருக்கு? சாந்தி எல். கே.ஜி.யில் முதல் ராங்க்கில் பாஸ் செய்திருக்கிருள். ஏதோ ஐ. ஏ. எஸ். பரீட்சை தேறிய மாதிரி மகிழ்ச்சி. நான் என்றுமே படிப்பில் ஃபர்ஸ்ட் வந்ததில்லை. வரணும் என்று முயற்சித்தது

இல்லை. 'ஜூலி'யில் நான் போட்ட 'மாக்ஸி' மாதிரி அதே கலரில் சாந்திக்கு ஒரு 'மாக்ஸி' பிரெஸண்ட். இரவு 'ரைம்' சொல்லித் தருவதற்குப் பதிலாக ஒரு கதை சொன்னேன். அப்பப்பா! என்ன கிராஸ் கேள்விகள்! பதில் சொல்வதற்குள் எனக்குத் தூக்கம் வந்துவிட்டது.

25 வெள்ளி: 8 மணிக்கு எழுந்தேன். எனக்கே கஷ்டமாக இருந்தது. தலைக்கு எண்ணெய் வைத்துக் கொண்டேன். குளிக்கத் தண்ணீர் இல்லை. கிணற்றில் பம்ப் போட்டால், தண்ணீருக்குப் பதில் மண்ணும் சேறும்தான் வந்தது. ஒரே ஆத்திரம். தண்ணீர்ப் பஞ்சத்திற்குக் காரணமாக இருப்பவர்களை, இல்லாதவர்களைத் திட்டினேன். கிணற்றுத் தண்ணீரை வடிகட்டி, ஒரு மாதிரி தலைக்குச் சமாளித்தேன். 10–30 மணிக்கு 'டப்பிங்'. 12 மணிக்கு 'பங்காரு மனுஷி' என். டி. ராமராவுடன் புதுப் படம் பூஜை. அவரை நான் நேரில் சந்தித்து மூன்று வருஷங்கள் ஆகின்றன. கால்ஷீட் ஒத்துப் போகாததுதான் காரணம். மூன்று வருடம் முன்பு பார்த்தது மாதிரியே அப்படியே இருந்தார். பாராட்டினேன். நானும் 'ட்ரிம்' ஆக இருப்பதாக அவர் சொன்னார். 'இதெல்லாம் உங்களைப் பார்த்துத்தான்,' என்றேன். 1–30. லெட்டர்கள் எழுதினேன். மாலைக்குள் அம்மா எப்படியோ தண்ணீர் பிடித்து வைத்திருந்தாள். நன்றாகக் குளித்தேன். 7–45. ஏர் போர்ட்டுக்குக் கிளம்பும்போது 'டோயோடா' கார் டிரபிள். எனது கஸினும் நானும் மற்றொரு காரில் விரைந்தோம். எனக்கு dust allergy இருப்பதால், விமானப் பயணத்தின் போது தொண்டை கட்டிக் கொள்வதுண்டு. பம்பாயில், இரவு 12 மணிக்கு ஹோட்டலுக்குச் சென்று படுத்தேன்.

26 சனிக்கிழமை: பிற்பகல் 3 மணிக்குத்தான் ஷூட்டிங். சில நண்பர்களுக்குப் போன் செய்தேன். 12 மணிக்கு லஞ்ச். சுனில்தத் சகோதரர் ஸோம்தத் வந்திருந்தார். 12–30 மணிக்கு 'ரூப்தாரா' ஸ்டுடியோவிற்குச் சென்றேன். ஸ்டுடியோ என்றே நம்ப முடியவில்லை. பாழடைந்த கட்டிடங்கள். குப்பை, அதையெல்லாம் பார்த்த பிறகுதான் நமது சென்னையில் இருக்கும் நல்ல ஸ்டுடியோக்களின் அருமை பெருமை புரியும். சுனில் வந்தார். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, மேக்-அப் போட்டுக் கொண்டிருந்த போது என்னைப் பார்க்க ஒருவர் வந்தார். நர்கீஸ்! எனக்கு மிகவும் பரபரப்பாக இருந்தது. இரவு 'பாபி' புகழ் பின்னணி பாடகர் நடிகர் ஷைலேந்திர சிங் வீட்டில் எனக்கு விருந்து. எனது பழைய சினேகிதி ரேகா அங்கு போன் செய்தாள். தமிழிலும், தெலுங்கிலும் இருவரும் மனம் விட்டுப் பேசினோம். அவளுக்குக் காலில் அடிபட்டிருக்கிறதாம். 10–30 மணிக்கு ஹோட்டலுக்குத் திரும்பினேன். ரீடா பாதுரி, பவன் தத்தா, இரு போட்டோகிராபர்கள், எனது பி. ஆர். ஓ. திரேந்திர கிஷன் ஆகியவர்கள் டெலிபோன் செய்திருந்ததாக ஸ்லிப் இருந்தன. 11 மணிக்கு குளிர் நீரில் ஷவர் எடுத்தேன். சென்னைக்கு ஒரு லைட்னிங் கால் போட்டுப் பேசிவிட்டுப் படுத்தேன்.

—பேட்டி: எஸ். ரஜத்

விழுங்கல்கள்

விபசாரம்	—	செல்வத்தை விழுங்கும்
பிரார்த்தனை	—	துன்பத்தை விழுங்கும்
தர்மம்	—	நோயை விழுங்கும்
பொய்	—	உணவு - உடை - உறைவிடத்தை விழுங்கும்
புறம்	—	இறை வழிபாட்டை விழுங்கும்
கவலை	—	வயதை விழுங்கும்

(சொன்னவர்: நபிகள் நாயகம்)

—ஜூவைரி

'கலவை' என்று ஒரு கிராமம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

1907'ம் வருட ஆரம்பம். தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள திண்டிவனத்தில் கிறிஸ்துவ மிஷன் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். முந்தின வருடம் எங்கள் டவுனுக்கு வந்திருந்த காமகோடி பீடம் சங்கராச்சாரிய சுவாமிகள் கலவை கிராமத்தில் சித்தி அடைந்து விட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆற்காட்டிலிருந்து 20 மைல் தொலைவிலும் காஞ்சியிலிருந்து 25 மைல் தொலைவிலும் இருப்பது அந்தக் கிராமம்.

என் தாய் வழி சகோதரரான ஒருவர், சிறிது காலம் ரிக்வேதம் அத்யயனம் செய்த பின் ஆசாரிய சுவாமிகளின் முகாமில் சேர்ந்திருந்தார். அவரைப் பீடாதிபதியாக ஆக்கியிருந்ததாய்ச் செய்தி வந்தது. என் தாயாரின் ஒரே சகோதரி—விதவை, திக்கற்றவள்—அவளுடைய ஒரே மகன் அவர். முகாமில் அவளைத் தேற்றுவதற்கு ஒரு ஆத்மாவும் கிடையாது. அந்தச் சமயம் என் தந்தை திண்டிவனம் தாலுகாவில் பள்ளிக்கூட சூப்பர்வைசராக இருந்து வந்தார். திண்டிவனத்திலிருந்து 60 மைல் தூரத்திலிருந்த கலவைக்குத் தமது மாட்டு வண்டியில் குடும்பத்தோடு செல்வதென்று அவர் திட்டமிட்டிருந்தார். ஆனால் திருச்சிராப்பள்ளியில் ஒரு கல்வி மாநாடு இருந்ததால் அத் திட்டத்தை அவர் கைவிடவேண்டியதாயிற்று.

மகன் சன்னியாச ஆசிரமத்தைத் தேர்ந்தெடுத்து விட்டது குறித்துத் தன் சகோதரியைத் தேற்றும் பொருட்டு என் அம்மா என்னையும் மற்றக் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு கிளம்பினாள். ரயிலில் காஞ்சிபுரம் சென்று, அங்குள்ள சங்கராச்சாரியார் மடத்தில் தங்கினோம். குமார கோஷ்டி தீர்த்தத்தில் என் அன்றாடக் கடன்களை முடித்துக் கொண்டேன். ஆசாரிய பரம குரு சித்தியடைந்த பத்தாம் நாளன்று மகா பூஜை நடத்துவதற்காகச் சாமான்கள் வாங்க வேண்டி, கலவையிலிருந்து சிலர் மடத்து வண்டியில் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர்—பரம்பரையாக வந்த மடத்து மேஸ்திரி—என்னைக் கூட வருமாறு அழைத்தார். எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த



மற்றவர்கள் தனியே பின்னல் வர ஒரு வண்டி அமர்த்தப்பட்டது.

பிரயாணத்தின்போது அந்த மேஸ்திரி, நான் திரும்பி வீட்டுக்குப் போக இயலாமற் போகக் கூடு மென்றும், என் எஞ்சிய வாழ்க்கை மடத்திலேயே கழிய வேண்டியிருக்க லாம் என்றும் ஜாடையாகக் குறிப்பிட்டார். என் ஒன்றுவிட்ட சகோதரர் மடாதிபதியாகிவிட்டதால், நான் அவருடன் வசிக்க வேண்டுமென அவர் விரும்புகிறுர் போலிருக்கிறது என்று முதலில் எண்ணினேன். அப்போது எனக்கு வயது பதின்மூன்றுதான். எனவே, மடத்தில் அவருக்கு என்ன விதத்தில் உதவியாக இருக்கப் போகிறேம் என்று நினைத்துக் கொண்டேன்.

ஆனல் வண்டி ஓட ஓட மேஸ்திரி பக்குவமாக விஷயத்தை விளக்கினர்: பூர்வாசிரமத்தில் என் ஒன்று விட்ட சகோதரராக இருந்த ஆசாரிய சுவாமிகளுக்குக் காய்ச்சல் ஏற்பட்டு ஜன்னி கண்டுவிட்டதாம். அதனல்தான் என்னைச் சீக்கிரமாய்க் கலவைக்கு அழைத்துச் செல்வதற்காக, குடும்பத்திலிருந்து என்னைப் பிரித்துத் தனியே கூட்டிச் செல்கிறுர்களாம்.

என்னை அழைத்து வருவதற்காகத் திண்டிவனத்துக்கே அவர் போக விருந்ததாயும் அதற்குள் காஞ்சிபுரத்திலேயே என்னைச் சந்தித்துவிட்டதாயும் சொன்னர்.

இந்த எதிர்பாராத திருப்பங்களினல் நான் அதிர்ந்து போய் விட்டேன். அதிர்ச்சி காரணமாக, வண்டிக்குள்ளேயே மண்டியிட்ட நிலையில் பிரயாணம் முழுக்க ராமா ராமா என்று ஜபிக்கத் தொடங்கினேன். அது ஒன்றுதான் எனக்குத் தெரிந்திருந்த பிரார்த்தனை.

என் அம்மாவும் மற்றக் குழந்தைகளும் கொஞ்ச நேரம் கழித்து வந்து சேர்ந்தார்கள். பாவம், என் அம்மா, சகோதரியைத் தேற்றுவதற்காகப் புறப்பட்டு வந்தவள், தன்னையே பிறர் தேற்ற வேண்டிய நிலைக்கு ஆளாகியிருந்தாள்.

நானகத் துறவு பூண்டு சன்னியாச ஆடை அணியவில்லை; கொஞ்ச காலத்துக்கேனும் ஒரு குருவின் கீழே பயிலும் பாக்கியமும் எனக்குக் கிட்டியதில்லை. சன்னியாசம் ஏற்ற முதல் நாளே ஒரு மாபெரும் சமஸ்தானத்தின் வசதிகளும் பொறுப்புக்களும் என்னைச் சூழ்ந்து கொண்டு விட்டன.

நான் சன்னியாச ஆசிரமம் ஏற்றபோது தும்முலூர் ராமகிருஷ்ணய்யாவும் அடையப்பாளையம் பசுபதி ஐயரும் கலவையில் இருந்தார்கள். இருவரும் தென்னற்காடு ஜில்லா கோர்ட்டில் பணியாற்றி வந்தார்கள். என் குருவின் குருவுக்கு அத்தியந்த சீடர்களாக விளங்கியவர்கள் அவர்கள். என் இளமை வாழ்வை உருவாக்குவதில் உதவுவதென்று இருவரும் உறுதியாயிருந்தார்கள் என்று பிற்பாடு தெளிவாய்த் தெரிந்தது.

பசுபதி அடிக்கடி என்னைத் தனியே சந்திப்பார். இடைக் காலத்தில் என்னிடம் என்னென்ன பலவீனத்தைக் கவனித்திருந்தாரோ அதையெல்லாம் சுட்டிக் காட்டுவார். அவைகளை வெல்லுவதற்குத் தாம் கூறும் யோசனைகளைக் கேட்கும்படி மன்றுடுவார். சில சமயம் அவர் என்னிடம் கடுமையாக நடந்து கொள்ள வேண்டியிருக்கும். அப்போது, சன்னியாச ஆசிரமத்திலிருக்கும் என்னிடம் தாம் செய்யும் அபராதங்களுக்காக, பிற்பாடு பிராயச்சித்தம் செய்து விடுவதாகக் கூறுவார்.

வாழ்க்கை எனக்குக் கற்பித்திருப்பது இதைத் தான்: 'மற்றவர்களுக்காக மட்டுமே வாழ்வதற்காகவே இறைவன் சில பேர்களைப் படைக்கிறுன்.'

நன்றி : பவன்ஸ் ஜர்னல்

புதுடெல்லி ஆல் இந்தியா ரேடியோவிலிருந்து ஓர் இசைக் கலைஞருக்கு ஒத்திகை பார்க்க ரேடியோ நிலையத்துக்கு வரும்படி ஓர் அழைப்பு வந்தது. ஒத்திகைக்காகக் குறிப்பிட்டிருந்த தேதி: 1975'ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 31'ந் தேதி (31-2-75)

—ஹிந்துஸ்தான் டைம்ஸ்

BHEL நிறுவனத்தின் புதிய பிரிவு — வெள்ளம் வருமுன்னே அணைகட்டுவது.

சேதம் வருமுன் காப்பதே காப்பு— என்பது பல்லாயிரம் முறை எத்தனையோ பேர் சொன்னதுதான்.

இந்த நல்வாக்கு, சக்தி தயாரிக்கும் அனல்-மின்சார மற்றும் நீர்-மின்சார நிலையங்களுக்கும் பொருத்தமான வாசகம்.

ஏனென்றால் பாதுகாப்புப் பராமரிப்பு, கருவிகள் பழுதாகாமல் பார்த்துக் கொள்வது, கருவிகளை இடையறாது கவனித்து வருவது போன்ற எச்சரிக்கை நடவடிக்கையே பிரச்னை எழுமுன் தடுக்கக்கூடிய வழியாகும். பாரத நாட்டின் பரந்த வயல்களுக்கும் ஆலைகளுக்கும் இடையறாது விசைசக்தி பாய்ந்தபடி இருக்கச் செய்யும் வழியும் இதுவே.

இதற்காக எழுந்ததே BHEL நிறுவனத்தின் இந்தப் புதிய பிரிவு, இதற்கு அனுசரணையாக இருப்பவை பிராந்திய பராமரிப்புத் தொழிற் சாலைகள், அனுபவமிக்க எஞ்ஜினியர்களும் பராமரிப்பு வல்லுனர்களும் கொண்ட பிரிவு.

தேவையான அளவு சாதன உபரி உறுப்புகளை (இறக்குமதியானவையும் உள்நாட்டுத் தயாரிப்பும்) இருப்பில் கொண்ட பிரிவு; இங்கே பழுதுகளைச் சீராக்கும் சாதனங்களும் உள்ளன.

''இந்தப் பிரிவு வழங்கும் பணிவகைகள் என்ன? நலன்கள் யாவை?''

பணிகள் மற்றும் உபரிசாதனப் பிரிவு—

● பெரும் ஜெனரேட்டர் சாதனங்கள் இருக்கும் இடத்திலேயே தீவிர பராமரிப்புப் பணிகளை நடத்த உதவுகிறது. அது தவிர பிராந்திய பராமரிப்புத் தொழிற்சாலைகளிலும் கூட இவை நடைபெற உதவுகிறது. ஜெனரேடிங் நிலையங்கள், மின்சாரம் ஏற்றி அனுப்பும் சாதனங்கள், டிரைவுகள், ரெக்டிபையர், தொழில்களுக்கான கண்ட்ரோல் கீயர் ஆகியவை அனுபவமிக்க எஞ்ஜினியர்கள் மூலம் கவனிக்கப்படுகிறது.

● அதிநுட்பமான விசேஷப் பணிகளை ஏற்கிறது. (கான்டிராக்ட் அடிப்படையில்). டர்பைன், ஜெனரேட்டர், பாய்லர் போன்றவற்றை, குறிப்பிட்ட கால இடைவெளிகளில், அவ்வப்போது சரிபார்க்க முடிகிறது.

● அனல்-மின் மற்றும் நீர்-மின் நிலையங்களில் சேதாரத் தடுப்புப் பராமரிப்பு விஷயமாக ஆலோசனைகள் வழங்குகிறது.

● பராமரிப்புப் பணி நடைமுறைகள் நன்கு இயங்க உதவுகிறது.

● சக்தி நிலையங்களை நவீனப்படுத்தவும் திறன் பெருக்கவும், கவச உறைகளைப் புதுப்பிக்கவும் ஆலோசனைப் பணி வழங்குகிறது.

● மின்தடைக் காரணங்களை ஆராய்ந்து அறியவும், செப்பனிடவும், சக்தி உற்பத்தி முறைகள் பற்றி பூரண ஆராய்ச்சி நடத்துகிறது. இதனால் இன்றைய மின்-நிலையங்களிலிருந்து முழுப்பயனையும் பெற வாய்ப்பு உண்டு.

''இதனால் இறக்குமதியான உபரி சாதனங்களைப் பெற முடியுமா? ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க முடியுமா?''

முடியும்.

ஸ்டேன்டர்டு சாதனங்களுக்குத் தேவைப்படும் அவசியமான உபரிப் பகுதிகளை BHEL இருப்பில் வைத்திருக்கும். பழுதடைந்த மின்சாரத் தயாரிப்புக் கருவிகள் தாமதமின்றி மீண்டும் இயங்க இந்த ஏற்பாடு வழிசெய்யும். விசேஷக் கருவிகளானால், அவற்றுக்குத் தேவைப்படும் உபரிப் பகுதிகளை புதிதாகத் தயாரிக்கவும் உதவும். தேவைப்படும் மின்நிலையத்தில் அவை போய்ச் சேரவும் உதவும்.

சில பகுதிகள் விரைவில் தேய்ந்து விடும். அவற்றை இனம் கண்டு முன்னரே தருவித்து விடுவதால் 'ஓவர்ஹால்' சமயம் கருவி இயங்காது வீணாகும் நேரம் மிதமாகக் குறைக்கப்படுகிறது. இத்தகைய சேதாரத் தடுப்புப் பராமரிப்பு புதிய பிரிவின் ஒரு முக்கிய பணி.

மேலும், இறக்குமதியான பெருங்கருவிகளுக்கான உபரிக் கருவிகளை நம் நாட்டிலேயே சிறிதுசிறிதாகத் தயாரித்துக் கொள்ளும் சீரிய பணியிலும் இந்தப் பிரிவு உதவுகிறது.

மேலும் ஒன்று. மின்விசை நிலையங்களை நிர்வகிக்கவும் இயக்கவும் எஞ்ஜினியர்களுக்கு BHEL பயிற்சி அளிக்கும்.

மின்விசை தயாரிப்போர் எவருக்கும் எந்த உதவி தேவையானாலும்—அதை வழங்கி—மின்பற்றுக்குறை நேராமல் தடுக்கும் பணியில் முனைந்துள்ளது.

எனவே, BHEL நிறுவனத்தின் பணி-மற்றும் உபரிசாதனப்பிரிவுடன் தொடர்பு கொள்ளுங்கள். அவர்களுடன் தொடர்பு கொள்ள ஒரு டெலிபோன் பேச்சு போதுமே.

BHEL மக்களுக்கு சக்தி

பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்

பதிவுபெற்ற அலுவலகம்:
18-20 கஸ்தூர்பா காந்தி மார்க்
புது டில்லி 110 001

இந்தப்பிரிவு எங்கே இருக்கிறது?

பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட், சர்வீஸ் அண்டு ஸ்பேர்ஸ் யூனிட்

முதல் மாடி, 'சந்தரலோக்' 36 ஜன்பாத், புதுடெல்லி 110 001 டெலிபோன்: 48480



நான் மேற்கொண்ட சோவியத் பயணத்தின் போது, பைலோ ரஷ்ய நாட்டின் தலைநகரான மின்ஸ்க் நகருக்குப் போய்ச் சேர்ந்ததும் முதன் முதலில் நான் அங்கு பார்க்க விரும்பிய இடம், தேச பக்திப் போர் பற்றிய காட்சிக் கூடம்தான். அங்கு ஹிட்லரின் நாஜிப் படைகள் புரிந்த ஈவிரக்கமற்ற கொடுமைகளை எடுத்துக் காட்டும் சான்றுகளையும் புகைப்படங்களையும் தவிர சோவியத் மக்களின் தேசபக்தியையும் வீரத்தையும் புலப்படுத்திய பொருள்களும் சான்றுகளும் நூற்றுக் கணக்கில் இருந்தன.

அத்தகைய பொருள்களில், ஒரு சின்னஞ் சிறிய கறுப்பு நிறத் துணிப் பை என் கவனத்தைக் கவர்ந்தது. அதன் அருகில், "இந்தப் பையில்தான் நாஜித் தலைவ

இரண்டு மணிக்கு வெடிக்கும்

ரகுநாதன்

ஞை வில்ஹெம் குபேயைக் கொன்ற வெடி குண்டை, எலிஞ மஸானிக் கொண்டு சென்ருர்,' என்ற குறிப்பும் இருந்தது. பார்த்ததும் அதற்குள் அருமையான கதை அடங்கியிருக்குமோ என்ற இயல்பான குறுகுறுப்பு என்னுள் எழுந்தது. எனவே என்னேடு துணையாக வந்திருந்த மின்ஸ்க் நகரப் பத்திரிகையாள நண்பரை அர்த்த புஷ்டியோடு திரும்பிப் பார்த்து, ''இந்தக் காலிப் பைக்குள் ஒரு சுவையான கதை அடங்கியுள்ளது. இல்லையா?'' என்று அவரிடம் கேட்டேன்.

''ஆம். சுவையான கதை தான்,'' என்று ஆமோதித்த அவர் அந்தக் கதையையும் என்னிடம் கூறத் தொடங்கினர்.

ஜெர்மன் நாஜிகள் பைலோ ரஷ்யாவை ஆக்கிரமித்த பின்னர், ஆக்கிரமித்த பகுதியின்மீது ஆணை செலுத்துவதற்காக, ஹிட்லர் தனது நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமான வில்ஹெல்ம் குபே என்பவனை ரஷ்யாவின் கமிசாராக [ஆட்சியாளன்] நியமித்தான். ரத்த பயங்கரமான கொடுங்கோலாட்சியை அங்கு நிலை நாட்ட விரும்பிய குபே, பைலோ ரஷ்யாவைச் சேர்ந்த ஆண் பெண் சிறுவர் சிறுமியர் அனைவரையும் நர வேட்டையாடி லட்சக் கணக்கில் கொன்று குவித்தான். அங்கு தலைமறைவாக இருந்து போராடி வந்த பைலோ ரஷ்யக் கொரில்லாப் படை வீரர்கள் இந்த வெறியாட்டத்தைக் கண்டு நெஞ்சம் கொதித்தனர். எனவே அவர்கள் ஒன்று கூடி, குபேயைக் கொன்று விடுவது என்று தீர்மானித்தனர். எனினும் இந்த மரண தண்டனையை அவர்களால் நெடு நாட்களாக நிறைவேற்றவே முடியவில்லை. குபேயை அவர்கள் எங்குமே வசமாக மடக்க முடியவில்லை. எனவே குபே தனக்கு மிகவும் பாதுகாப்பான இடம் என்று எதைக் கருதிக் கொண்டு இருந்தானே, அங்கேயே, அதாவது அவன் வசித்து வந்த வீட்டிலேயே அந்தத் தண்டனையை நிறைவேற்றி விடுவது என்று அவர்கள் முடிவு செய்தனர்.

மின்ஸ்க் நகரம் நாஜி ஆக்கிரமிப்புக்கு உள்ளானபோது, எலிஞவுக்கு வயது இருபத்தாறு. நகரைக் காலி செய்துவிட்டுப் பாதுகாப்பான இடங்களுக்குக் குடி பெயர்ந்து சென்ற மக்களோடு செல்ல இயலாமல், எலிஞ மின்ஸ்க் நகரிலேயே மாட்டிக் கொண்டு விட்டார். இந்நிலையில் அவரது நண்பர்கள் சிலரது உதவியால் குபேயின் தலைமையகத்தில் அவருக்குக் 'கிளீனர்' வேலை கிடைத்தது. அங்கே தினம் தினம் நர வேட்டைக்குச் சென்று திரும்பி வரும் நாஜி அதிகாரிகள், தாம் கொன்ற அல்லது கொள்ளையடித்த நபர்களின் ரத்தக் கறை படிந்த துணிமணிகளையெல்லாம் கொண்டுவந்து குவித்தனர். அவற்றையெல்லாம் துவைத்து வெளுத்து, காய வைத்து, பெட்டி போட்டுக் கொடுப்பதே எலிஞவின் வேலையாக இருந்தது. பெட்டி போட்டு முடிந்த பின்னல், அந்தத் துணிமணிகள் எல்லாம் ஜெர்மனிக்குப் போய் விடும். மேலும் இவ்வாறு நர வேட்டை

தேச பக்தியைச் சித்திரிக்கும் சோவியத் நாட்டு நிகழ்ச்சி.

யாடிவிட்டுத் திரும்பும் அந்த நாஜி அதிகாரிகள், ஒவ்வொரு நாளும் அங்கு திரும்பி வந்த பிறகு, அன்றைக்குத் தாம் புரிந்த கொடுமைகளைப் பற்றி வீரப் பிரதாபத்தோடும் குதூகலத்தோடும் உரையாடிக் கொள்ளவும் செய்தனர். இத்தகைய உரையாடல்களையெல்லாம் கேட்கக் கேட்க எலினுவின் ரத்தம் கொதித்தது. ஹிட்லரின் அபிமானத்துக் குரியவனுக இருந்த குபேதான் இத்தகைய வாழ்த்துக்களை அதிகமாகப் பெறும் 'மகா புருஷ'னுக இருந்தான். எனவே, எலினுவின் கோபாவேசம் முக்கியமாகக் குபேயின் மீதே அதிகமாகத் திரும்பியது. குபேயிடம் ஏற்கெனவே வேலைக்காரியாக இருந்தவரும், எனினும் பின்னுல் நம்பிக்கைக்கு உரியவரல்ல என்ற காரணத்தால் டிஸ்மிஸ் செய்யப்பட்டவருமான தாத்தியானு கலிதா என்ற பெண்ணின் மூலம் எலினு கொரில்லாப் படையினரோடு ரகசியமாகத் தொடர்பு கொண்டார். கொரில்லாப் படையினரும், குபேயைத் தீர்த்துக் கட்டும் பணியை எலினுவிடம் விடுத்தனர். இதன் பின், எலினுவும் கொரில்லாப் படையைச் சேர்ந்த மற்றொரு பெண்மணியான மரியா ஒசிப்போவா என்பவரும் ஒன்று சேர்ந்து, குபேயை எங்கு, எப்படிக் கொல்வது என்பதைத் திட்டமிடத் தொடங்கினர்.

இறுதியாக அந்த நாள்—நியாயத் தீர்ப்பு நாள் வந்தது. மரியா குறித்த நேரத்தில் வெடிக்கும் ஒரு வெடி குண்டை, ஒரு பழக் கூடைக் கடியில் மறைத்து வைத்துக்கொண்டு, எலினுவின் வீடு தேடி வந்தார். வருகிற வழியில் நாஜிப் போர் வீரன் ஒருவன் அவரைத் தடுத்து நிறுத்தி, ''கூடையில் என்ன?'' என்று அதட்டி, கூடையைத் திறந்து காட்டுமாறு கோரவும் செய்தான். அது மட்டுமல்ல, அவன் அந்தப் பழங்களை அளைந்து உள்ளே வேறு என்ன இருக்கிறது என்று பார்க்கவும் முனைந்தான். ஆனுல் மரியாவோ, ''அப்படியெல்லாம் பழத்தை அளையாதே, கை பட்டு நைந்து போனுல் பிறகு யார் இதை வாங்குவார்கள்?'' என்று சாகசத்தோடு கூறியவாறு, அவனது கைக்குள் பணத்தைத் திணித்தார். கையில் பணம் வந்ததுமே அந்தப் போர் வீரன் மரியாவைப் போக விட்டு விட்டான்.

எலினுவிடமிருந்து ஒரு ஜோடிப் பூட்சுகளை வாங்க வந்தவள் போல் நடித்த மரியா, நாற்பது நிமிடத்துக்கு மேல் எலினுவுடன், 'அரட்டை' அடித்தார். உண்மையில் அந்த நாற்பது நிமிடத்துக்குள் அவர் எலினுவுக்கு வெடி குண்டை எப்படிச் சரி செய்து வைக்க வேண்டும் என்ற ரகசியத்தைக் கற்றுக் கொடுத்து விட்டார்.

மறுநாள் காலையில் எலினு தனது துணிப் பையில் அந்த வெடி குண்டை எடுத்துக்கொண்டு குபேயின் வீட்டுக்குக் கடைசி முறையாகச் சென்ருர். திட்டமிட்டபடி எல்லாம் செவ்வனே முடிந்துவிட்டால், வீதி முனையில் மரியா தப்பியோடத் தயாராக ஒரு காருடன் காத்திருப்பதாகத் திட்டம். ஒருவேளை எலினு தமது முயற்சியில் தோல்வியுற்று அகப்பட்டுக்கொள்ள நேர்ந்தால், தற்கொலை செய்துகொள்ளக் கொடிய விஷமும் அவர் வசம் இருந்தது. குபேயின் வீட்டுக்குள் எலினு புகுந்தபோது காவலர்கள் யாரும் அவரைச் சோதிக்க முனையவில்லை. அந்த அளவுக்கு அவர்களது நம்பிக்கையையும் அவர் பெற்றிருந்ததுதான் அதற்குக் காரணம். வீட்டுக்குள் சென்றதும் எலினு உடை மாற்றிக்கொள்ளச் சென்ருர். உடை மாற்றிக் கொள்ளும்போது,



''அக்கா! அத்தான் கையைத் தொட்டால் எனக்கு ஷாக் அடிக்கிறமாதிரி தோணுது.''

''இருக்கும். அவருக்கு, எம். ஈ. எஸ். ஸில் ஒயர்மேன் வேலையாச்சே?''

தேர்தல் என்பது எந்தக் கட்சி உங்களைச் சுரண்டப் போகிறது என்று நீங்கள் தீர்மானிக்கக் கால் கடுக்க க்யூவில் நிற்க



பத்தாவது படித்துக் கொண்டிருந்த இந்த மாணவி இன்று தமிழ் நடிகை மட்டுமல்ல, கன்னடப் படத் தயாரிப்பாளருமாவார்.

பார்க்க: 62'ம் பக்கம்.


—'ஆனந்த்'



அந்த வெடிகுண்டை உடையின் உட்புறம் இருதய பாகத்துக்கு அருகே மறைத்து வைத்து, அதற்குமேல் ஒரு மேலங்கியைப் போர்த்திக் கட்டிக் கொண்டார். நாள் பூராவும் அந்த வெடிகுண்டை இவ்வாறு சுமந்தவாறே அவர் தமது வேலைகளை வழக்கம்போல் கவனிக்க வேண்டியிருந்தது. அப்போதெல்லாம் அந்த வெடிகுண்டு குறித்த நேரத்துக்கு முன்னால் வெடித்துவிடுமோ என்ற தீராத பயமும் அவரை வாட்டி வதைத்தது.

அந்தக் குண்டைத் தமது இருதயத்தோடு சேர்த்து அழுத்திப் பிடித்தவாறு, வீட்டு வேலைகளையெல்லாம் தமது வழக்கமான புன்னகையோடு செய்து முடித்தார். குபேயின் அறையை அவர் சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாகக் குபே அங்கு திடீரென்று வந்தான். எலினாவைக் கழுகுப் பார்வையோடு ஊடுருவி நோக்கவும் செய்தான். அப்போது அந்த வெடிகுண்டு திடீரென்று பாறாங் கல்லைப்போல் கனத்துப் போய்விட்டதாக எலினாவுக்குத் தோன்றியது. அந்தச் சுமையை இனியும் தாங்கிக் கொண்டிருக்க முடியாது என்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. சரியாக இரவு இரண்டு மணிக்கு வெடிக்கும் விதத்திலேயே குண்டின் சூட்சுமம் அமைக்கப்பட்டிருந்தது. ஒருவேளை குறித்த நேரம் தவறி அது முன் கூட்டியே வெடித்துவிடுமோ என்று அஞ்சினார் எலினா. அப்படி நேரக்கூடுமானால், குபேக்கு மிகவும் அருகில் நெருங்கிச் சென்றுவிட வேண்டும். அப்போதுதான் அந்தக் குண்டு தன்னை மட்டுமல்லாமல் குபேயையும் சேர்த்துக் கொல்லும் என்று தனக்குள் திட்டம் போட்டார் எலினா. என்றாலும், குபே அங்கிருந்து உடனே சென்றுவிட்டான். அவன் சென்ற பின்னர், எலினாவின் மனத்திலும் உடம்பிலும் படபடப்பு நீங்கி மீண்டும் அமைதி குடி கொண்டது. அதன்பின் அவர் யாரும் பார்க்காத வேளையில், ஒரு நல்ல தருணத்தில் அந்த வெடிகுண்டை வெளியே எடுத்து, அதனைக் குபேயின் கட்டிலில் விரிக்கப்பட்டிருந்த மெத்தைக்கடியில் வைத்து விட்டு வெளியேறிவிட்டார்.

மறுநாள் காலையில், அதாவது 1943 செப்டம்பர் 22 அன்று,



கஸ்தூரி

சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' ஜெனீவாவிலிருந்து, 'பைலோ ரஷ்ய மக்களைக் கூண்டோடு கொன்று குவித்தும் கொள்ளையடித்தும் வந்த கொலைகாரனை வில்ஹெம் குபே நேற்றிரவு மின்ஸ்க் நகரில் கொலை செய்யப்பட்டார்' என்ற செய்தி பெர்லினிலிருந்து அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது என அறிவித்தது.

இதயச் சிலிர்ப்பூட்டும் இந்தக் கதையைக் கேட்டதும், "அந்த வீராங்கனை இன்னும் உயிரோடு இருக்கிறாரா?" என்று ஆவலோடு கேட்டேன்.

"உயிரோடுதான் இருக்கிறார். மேலும் அவர் தனது சொந்த ஊரான இதே மின்ஸ்க் நகரில்தான் வசித்து வருகிறார்," என்றார் அவர்.

மின்ஸ்க் நகரைவிட்டுப் புறப்படு முன்னர் அவரைப் பார்த்துவிடவாவது வேண்டும் என்று நான் கூறியவுடன், அதற்கு ஏற்பாடு செய்ய முயல்வதாக நண்பரும் கூறினார். ஆயினும் அதிர்ஷ்டவசமாக, அந்த வீராங்கனையை நான் அன்று மாலையே எதிர்பாராத விதமாகச் சந்திக்க நேர்ந்தது. சந்தித்த இடமும் எதிர்பாராத விதத்தில் மிகவும் பொருத்தமான இடமாக அமைந்தது.

அன்று மாலையில் நானும் எனது நண்பரும் மின்ஸ்க் நகரின் அருகிலுள்ள 'புகழ்க் குன்றத்'துக்குச் சென்றிருந்தோம். மின்ஸ்க் நகரிலிருந்து மாஸ்கோவுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் 21 கிலோ மீட்டர் தொலைவில் அது உள்ளது. அந்தக் குன்றைக் காண வந்திருந்த பயணிகள் கூட்டத்தின் மத்தியில் தென்பட்ட ஒரு மூதாட்டியை எனது நண்பர் சுட்டிக் காட்டியவாறு, "அதோ பாருங்கள்; அவர்தான் எலினா மஸானிக்," என்று ஆனந்தத்தோடு கூவினார்.

பல்கேரியாவிலிருந்து வந்திருந்த ஒரு மாதர் குழுவுடன் எலினாவும் அங்கு வந்திருந்தார்.

எனது நண்பர் என்னை அறிமுகம் செய்து வைத்தார். பைலோ ரஷ்ய மக்களுக்கெல்லாம் எல்லையற்ற மகிழ்ச்சியைத் தேடித் தந்த அந்த வீராங்கனையோடு நான் கை குலுக்கிய போது, மகிழ்ச்சிப் பெருக்கினால் வார்த்தைகள் எழாமல் என் வாய் அடைத்துப் போய்விட்டது. முதுமை தட்டிவிட்ட அவரது முகத்தில் பளிச்சிட்ட அந்தக் கவர்ச்சிகரமான புன்னகையோடு, சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் குபேயைக் கொல்வதற்காகக் கொண்டு சென்ற குண்டை அவர் ஒளித்து வைத்திருந்த அதே இதய பாகத்தின் மீது 'சோவியத் நாட்டின் மாவீரர்' என்ற விருதுடன் கூடிய தங்கப் பதக்கமும் சுடர் விடக் கண்டேன்.

அண்மையில் எங்கள் கல்லூரியில் நடைபெற்ற விளையாட்டு விழாவின் பரிசளிப்பு நிகழ்ச்சிக்கு, கிரிக்கெட் ஆட்டக்காரர் பேடி வந்திருந்தார். அப்பொழுது அவர் ஒரு சம்பவத்தை விவரித்தார்.

ஆஸ்திரேலியாவில் அவர் விளையாடிக் கொண்டிருந்த பொழுது ஒரு பார்ட்டி நடந்ததாம். அப்பொழுது ஓர் ஆஸ்திரேலியப் பெண் இவரைக் கேட்ட கேள்வி: "காதல் செய்யும்போதுகூட நீங்கள் டர்பனுடன்தான் இருப்பீர்களா?"

"ஏன் அதை நீயே சோதித்துப் பார்க்கக்கூடாது?" என்றார் பேடி.

அதற்கு அந்தப் பெண் சம்மதித்தார். பிறகு...அவர் பேடியின் மனைவியானார்.

—சொ. இரா.

நடத்தக் கூடிய கம்யூனிஸ்டுகள் தொழிலாளர்களுக்கு உரிய கடமைகளை வலியுறுத்திச் சொல்லாமல், தொழில் வர்க்கத்தினரின் 'மொராலிடியையே' கெடுத்து விட்டார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. ரஷ்யாவில் தொழிலாளர்கள் பாடுபட்டு வேலை செய்யக் கற்று வைத்திருக்கிறார்கள். கல்வியின் தரம் வெகு உயர்வு.

வர: ஜே.பி. இயக்கம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

வெங்: 'மத்திய அரசின் ஊழலை எதிர்த்து நான் போராட்டம் நடத்துவதைப் போலவே ஒரிசாவில் இருக்கும் பிஜு பட்நாயக்கும் ஊழல் பண்ணியவர்தான். அவரை எதிர்த்துப் போராடுவேன். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் கருணாநிதியும் ஊழல்தான் பண்ணியிருக்கிறார், இன்னமும் பண்ணிக் கொண்டிருக்கிறார். அவரை எதிர்த்துப் போராடுவதற்கும் தயாராக இருக்கிறேன்,' என்று அவர் கண்டித்தால் ஜெயப்பிரகாசருடைய தியாகத்துக்கும், மரியாதைக்கும் எடுத்துக்காட்டாக இருக்கும்.

வர: மாநில சுயாட்சி என்கிற பெயரில் ஷேக் அப்துல்லாவைப் போலத் தமிழ்நாட்டுக்கும் தனி அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறாரே கருணாநிதி?

வெங்: அண்ணா கேட்டதே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதுதான். திராவிடநாடு என்ற பெயரை மாற்றி இப்போது கருணாநிதி மாநில சுயாட்சி என்று பெயர் சூட்டியிருக்கிறார். அண்ணா தி.மு.க.வும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பது எல்லோரும் கேட்பதுதான். காந்தியார் கிராம அளவிலேயே அதிகாரம் வேண்டுமெனக் கோரி அதையே ராமராஜ்யம் என்று சொன்னார். ஆனால் கருணாநிதி இங்கே என்ன செய்கிறார்? எப்படி இவர் கொஞ்சம் கொஞ்சமாகப் பஞ்சாயத்து யூனியன்களிடமிருந்த அதிகாரங்களைப் பிடுங்கிக் கொண்டு விட்டார் என்பதை ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருக்கும் என்னால் சொல்ல முடியும். அப்பேர்ப்பட்டவர்தான் மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறார். சொல்லுக்கும் செயலுக்கும் கொஞ்சங்கூடச் சம்பந்தமில்லை... நீங்கள் ஏதாகிலும் சமுதாயப் பணி செய்கிறீர்களா?

வர: ஜெயிலிலிருந்து விடுதலையான கைதிகளின் நல்வாழ்வுக்காக ஒரு சங்கம் நடத்துகிறோம். அவர்களுக்குத் தச்சு வேலைப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு பட்டறை நடைபெறுகிறது. மீண்டும் அவர்கள் யோக்கியமாக வாழ்வதற்கு வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கிறோம். தமிழ்நாடு அரசு சீஃப் செகரட்டரிதான் இந்தச் சங்கத்தின் தலைவர். நான் இந்தச் சங்கத்தின் செயலாளராக இருக்கிறேன்.

வெ: நீங்கள் முன்பு ஒரு 'பாயிண்டை'ப் பற்றிக் கேள்வி கேட்டீர்கள். நான் பதில் சொல்வதற்குள் பேச்சு வேறு மாதிரியாகத் திரும்பி விட்டது. கருணாநிதி பல சமூக சேவைகள் செய்திருக்கிறாரே என்று சொன்னீர்கள். அதெல்லாம் சேவை அல்ல. நீங்கள் செய்கிறீர்களே, இதுதான் சேவை. ஏற்கெனவே காங்கிரஸ் கட்சி சின்னச் சின்னதாகத் திட்டம்போட்டுச் செய்துவந்ததை இவர் பதவிக்கு வந்ததும் விளம்பரப் படுத்தி மிகைப்படுத்தி அதிகமாகச் செய்கிறார். பாவம், காங்கிரசுக்காரர்களுக்கு விளம்பரப்படுத்திக் கொள்ளத் தெரியவில்லை.

வர: உங்களோடு இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்ததில் எனக்கு ரொம்பவும் சந்தோஷம். நண்பர் ரஹீமுக்கும் என் நன்றியைத் தெரிவியுங்கள்..

பேட்டி: பால்யூ. படம்: சுபா

பக்கிங்ஹாம்-ஷைன்-பப்ளிக்-ஹவுஸ் என்ற சிற்றுண்டி விடுதியில் 501 உணவு வகைகள் தயாரிக்கிறார்கள். தடித்த தோல், காரமான ஊறுகாய், சாப்பிடும்போது கடமுட என்ற ஒலி எழுப்பும் தன்மைகள் கொண்ட ஒரு வகை சாண்ட்விச்சுக்கு 'Mother-in-law' என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

—ஆறடியான்

வயது

சுகந்தி

எனக்கு இருபத்தொரு வயதாகி விட்டதாம். கல்யாணம் செய்து வைக்கத் துடித்தார்கள் என் பெற்றோர்கள்.

வயதாகி விட்டதே என்று கவலைப்பட நான் என்ன ஒரு பெண்ணா?

"ராஜா! நீயோ ஒரு கவர்ண்மெண்ட் வேலையில் அமர்ந்து விட்டாய். அரைக் காசு என்றாலும் அரண்மனை உத்தியோகம் என்பார்கள். அந்த ஒரு தகுதிக்காகவே உனக்குப் பெண் கொடுக்க நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு வருகிறார்கள். நாங்கள் நன்றாக இருக்கும் பொழுதே பேரன் பேத்தி எடுத்துக் கொஞ்ச ஆசைப்படுகிறோம்," என்றார் அப்பா.



அம்மா தன் பங்குக்கு, ''நீயாவது பரவாயில்லை ராஜா! உனக்கு இருபத்தொரு வயதில் கல்யாணம் நடக்கப் போகிறது. எங்களுக்குக் கல்யாணம் நடக்கும்பொழுது உன் அப்பாவுக்கு என்ன வயது தெரியுமா? பதினெட்டுதான்!'' என்றாள் அப்பாவுடன் சேர்ந்து கொண்டு.

என்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி அவர்களிருவரும் தினசரி மாற்றி மாற்றி உபதேசம் செய்வார்கள்.

ஒருநாள் சரி என்று நான் சொன்னதும் சந்தோஷம் கரை புரண்டோட அப்பா அங்கவஸ்திரத்தைத் தோளில் போட்டுக் கொண்டு கிளம்பி விட்டார்.

அப்பொழுதே மருமகள் வந்து விட்டதுபோல் அம்மா அவளிடம் என்னென்ன பொறுப்புக்களை ஒப்புவிக்க வேண்டும் என்பதையெல்லாம்கூட யோசிக்கத் தொடங்கி விட்டாள்.

அப்பா ஒரு பெண்ணின் போட்டோவைக் கொண்டு வந்தார் ஜாதகத்துடன்.

அசந்தே போய் விட்டேன். எப்பேர்ப்பட்ட அழகு!

''பதினாறு வயதாகிறதடா இந்தப் பெண்ணுக்கு. பெயர் சித்ராவாம். நேரில் பார்த்தேன். எவ்வளவு அழகாயிருக்கிறாள் தெரியுமா? டைப்ரைட்டிங், ஷார்ட்ஹாண்ட் எல்லாம் பாஸ் பண்ணியிருக்காளாம். சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதியிருக்காளாம். அநேகமாக வேலை கிடைத்து விடுமாம். இந்தக் காலத்தில் கணவன் சம்பாத்தியம் மட்டும் போதாதடா ராஜா, பட்டணத்தில் குடும்பம் நடத்த வருகிறவளும் சம்பாதித்தால்தான் கஷ்டமில்லாமல் காலம் தள்ளலாம்,'' என்றார் அப்பா.

பிறகு, பெண் பார்க்க ஒரு நாளைக் குறிப்பிட்டு விட்டு வந்தார். அன்று மத்தியானம் ஆபீசுக்கு அரை நாள் லீவு போட்டுவிட்டு நான் சீக்கிரமாக வீட்டுக்கு வந்து விட்டேன்.

எல்லோரும் டாக்ஸியில் ஏறிக் கொண்டோம். அப்பா டாக்ஸி டிரைவரிடம், செல்ல வேண்டிய விலாசத்தைக் கூறினார். அந்த விலாசத்தை



எங்கோ எப்போதோ பார்த்திருப்ப தாகத் தோன்றியது எனக்கு.

நாங்கள் போய் இறங்கிய பொழுது பெண்ணின் தகப்பனார் வீட்டின் வாயிலிலேயே நின்று கொண் டிருந்தார். "வாங்கோ வாங்கோ! நீங்க வர்ற நேரத்திலே இப்போதான் ஒரு நல்ல சமாசாரம் வந்தது. சித்ராவுக்கு ஜூனியர் அஸிஸ்டெண்டாக செலக்ஷ னாகி விட்டது. இன்றுதான் ஆர்டர் வந்தது. எல்லாம் உங்கள் பிள்ளை பெண் பார்க்க வருகிற வேளை தான்!" என்று பல்லெல்லாம் தெரியச் சிரித்து எங்களை வரவேற்றார்.

பெண்ணை அழைத்து வந் தார்கள். இமைகளைக் கொட்டவும் மறந்து போனேன் அவளைப் பார்த்த தும். சில பேர்கள் போட்டோவில் நன்றாக இருப்பார்கள். நேரில் நன்றாக இருக்க மாட்டார்கள். சில பேர்கள் நேரில் நன்றாக இருப்பார்கள். போட் டோவில் நன்றாக இருக்க மாட்டார் கள். இந்தப் பெண்ணோ நேரிலும் சரி, போட்டோவிலும் சரி, நன்றாகவே இருந்தாள்.

விடை பெற்றுக் கொண்டு கிளம்பினோம். வழியில் அப்பா கேட் டார், "ராஜா, பெண் எப்படிடா இருக்கிறாள்?"

அந்த உண்மையை நான் எப்படி வெளியிடாமலிருக்க முடியும்?

"உங்களுக்கு ஒரு விஷயம் சொல்கிறேன். நீங்கள் அதிர்ச்சி அடை யக் கூடாது," என்றேன்.

"என்ன?"

"அவளுக்கு இருபத்து நான்கு வயது அப்பா!"

"என்ன!" — திகைத்துப் போய்க் கேட்டார் அப்பா.

"அப்படியா?" — விக்கித்துப் போய்க் கேட்டாள் அம்மா.

"எப்படி கண்டுபிடித்தாய்?"

"அப்பா, நான் சர்வீஸ் கமிஷன் ஆபீஸில்தானே வேலை பார்க் கிறேன்? இவளுக்கு செலக்ஷன் ஆர்டர் அனுப்பியபொழுது இவள் சம்பந்த மான ஃபைலில் பேப்பரை— அப்ளி கேஷனைப் பார்த்தேன். அதில் அவள் கடைசி 'அட்டெம்ப்ட்' என்பதைக் குறிப் பிட்டிருந்தாள். அரசாங்க வேலைக்கு இருபத்து நான்கு வயது வரைதான் வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முன்பு எவ்வளவு முறை சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதியிருக்கிறாள் என்பதைக் குறிப்பிட்டிருந்தாள். அவ ளுடைய பிறந்த தேதி வேறு இருந்தது. கிட்டத்தட்ட ஆறு முறை படை எடுத்திருக்கிறாள். என்னைவிடக் குறைந் தது மூன்று வயது மூத்தவள் அப்பா பெண்," என்றேன்.

"அப்படியானால்..." என்று இழுத்தாள் அம்மா.

அப்பா, "வேறு பெண் பார்க்க வேண்டியதுதான்," என்றார்.

நான் மனத்துக்குள் செய்து வைத்திருந்த தீர்மானத்தைத் துணிந்து வெளியிட்டேன், "ஏட்டில் எப்படி இருந் தால் என்ன? பார்க்கிறதற்குச் சின்னப் பெண்ணாகத்தான் இருக்கிறாள். அவ ளையே பண்ணிக் கொள்கிறேனே?" என்றேன்.

என்ன சொல்லப் போகிறார் களோ என்று என் மனம் அடித்துக் கொண்டது. அப்பாவின் முகத்தில் ஒரு பிரகாசம். அம்மாவைப் பார்த்தார். பிறகு, "உனக்கு இதுவரை தெரியாத ஒரு ரகசியத்தைச் சொல்லட்டுமா? உன் அம்மா எனக்கு நாலு வருஷம் மூப்பு," என்றார்.

"அதெல்லாம் இல்லை," என்று சிணுங்கினாள் அம்மா. "மூன்று வருஷம்தான்."

நான் அதிர்ந்து போனேன்.

1975 மார்ச் 5 தேதியிட்ட தமிழ்நாடு அரசாங்க கெஜட்டில், சென்னையைச் சேர்ந்த ஒருவர் இதுவரை 'காட்டான்' என்றிருந்த தன் பெயரை மாற்றி இனி 'சுடுகாட்டான்' என்று அழைக்க வேண்டுமென விளம்பரம் செய்திருக்கிறார்.

—சி. டி. அரசு

போரோலின் உங்கள் சருமத்திற்கு சிறந்த பாதுகாப்பு!



போரோலின்

ஆண்டிஸெப்டிக் நறுமண க்ரீம்



இந்தக் காலத்தில் நமது சருமம், வெயிலில் காற்று மற்றும் நம்மை சூழ்ந்துள்ள வஸ்துக்கள் மூலமாகவும் அசுத்தம் அடைகிறது. சோப்பும் நீரும் அந்த சருமத்தை அதிகம் வறண்டுபோகச் செய்கின்றன. வீட்டு வேலைகளாலும் அமித அலங்கரிப்பினாலும், சருமத் துவாரங்கள் சளைத்து விடுகின்றன.

பொரோலின், சருமத்தின் கீழுள்ள திசுக்களை ஈரமாக்கி வறட்சிக்கு காரணமாயுள்ள கோளாறுகளைத் தவிர்க்கிறது. சரும முழுவதையும் வழுவழுப்பாக்கி, மென்மைபெறச் செய்து உங்களை, கவலையற்று சுகத்துடன் இருக்கப் பண்ணுகிறது.

பொரோலின் உங்கள் வழிகாட்டி விண்மீன்!
பொரோலின் உங்கள் சருமப் பாதுகாப்பாளர்!

ஜி. டி. ஃபார்மஸியூட்டிக்கல்ஸ் பி. லிட்.
பொரோலின் ஹௌஸ், கல்கத்தா 700 003

ஒரே ஒரு பொய்

இரவு எட்டரை மணிக்குக் கண்ணன் வீடு திரும்புவதற்குள் அன்று அவன் மனைவி ராதாவிற்குப் பல 'எங்கேஜ்மெண்டுகள்' இருந்தன.

பகல் இரண்டரை மணி முதல் ஐந்தரை மணிக்குள் நகரில் ஒரு புதுத் தியேட்டரில் புதுப் படம் பார்க்க வேண்டும். எதிர் வீட்டுக் கமலா, பக்கத்து வீட்டுப் பங்கஜம், கோடி வீட்டு ராஜி எல்லோரும் கூடி வகுத்த ஏகமனதான புரோகிராம்.

ஆறரை மணிக்கு வீடு திரும்பி உடை மாற்றிக்கொண்டு டி.வி.எஸ். நகருக்குச் செல்ல வேண்டும். போன வாரம் மணம் முடித்துக் கொண்ட ஒரு தோழி மறுநாள் விடியற்காலை 'குவெய்ட்டுக்கு' புறப்பட்டுப் போகிறாள். இனிமேல் எப்பொழுது மறுபடியும் அவளைப் பார்க்க வாய்ப்பு இருக்கிறதோ?

எப்படியும் இரவு எட்டரை மணிக்குத் திரும்பி விடலாம். அப்படியே கண்ணன் சீக்கிரம் வந்து விட்டாலும் கூட அவனிடம் ஒரு சாவி இருக்கிறது.

வாசலில் சைக்கிள் மணி அடித்தது. ஆபீஸ் சேவகன்தான் மறுபடி வந்திருந்தான். அவன் கையில் கண்ணன் கொடுத்து அனுப்பிய கடிதம் இருந்தது.

'டார்லிங் ராதா,

பம்பாயிலிருந்து சேகர் வந்திருக்கிறான். நாளைக் காலை புறப்பட்டுத் திருவனந்தபுரம் போகிறான். நம் வீட்டில் இன்று சாப்பிட அழைத்திருக்கிறேன். அவனுக்கு என்ன பிடிக்கும் என்று உனக்குத் தெரியும். சரியாக எட்டு மணிக்கு வீட்டில் இருப்போம்.

அன்புள்ள,

கண்ணன்.'

ராதா அப்படியே சிலையாக நின்றாள். வரப் போகும் சேகர் கண்ணனுக்கு ரொம்பவும் வேண்டியவன். ராணுவத்தில் பெரிய ஆபீஸர்.

அவளுடைய திட்டமெல்லாம் அவ்வளவுதானா? படத்தை வேண்டுமானால் இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம். குவெய்ட் தோழி நாளைக்கு எத்தனை மைல்கள் போயிருப்பாளோ?

ராதாவிற்குச் சட்டென்று ஒரு யோசனை உதித்தது. ஒரே ஒரு சின்னப் பொய். அதனால் யாரும் பாதிக்கப்படப் போவதில்லை. யார் மனதும் நோகாமல் காரியத்தை முடித்துக் கொள்ளலாம்.

ராதா நான்கு வீடுகளே தள்ளி இருந்த தபால் ஆபிஸிற்கு ஓடினாள். அங்கிருந்த குமாஸ்தாவிடம் கட்டணத்தைச் செலுத்திவிட்டு டெலிபோன் பூத்திற்குள் நுழைந்து கண்ணன் ஆபீஸிற்கு நெம்பரை அழைத்தாள்.

''கண்ணன் ஹியர்.''

''நான் ராதா பேசுகிறேன்.''

''என்ன ராதா? குறிப்பு அனுப்பியிருந்தேனே?''

''இப்பத்தான் வந்தது..''

''குட்.. சமையல் பிரமாதமாக இருக்க வேண்டும். பணம் தேவைப்பட்டால் தபால் ஆபீஸ் பாங்கியிலிருந்து எடுத்துக்கொள். போன தடவை உன் கையால் சாப்பிட்டது இன்னும் மறக்கவில்லையாம். எதிரில்தான் இருக்கிறான் ராஸ்கல். பேசுகிறாயா?''

''வேண்டாம்.. இப்போ ஒரு சிக்கல்.. உங்களுக்குச் சாப்பாடு போட்ட பிறகு நான் வீட்டிற்குப் போக முடியவில்லை..''

அன்னம்

''ஏன்?.. கதவு தானுக பூட்டிக்கொண்டு விட்டதா?''

''இன்னும் எப்படிச் சொல்றது? இன்னும் மூணு நாளைக்கு நான் உள்ளே போய் ஒண்ணையும் தொடக்கூடாது.. புரியுதா?''

கண்ணனுக்குப் புரிந்தது.


''அட கடவுளே, இவன் நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறுன்!''

''என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? ஓட்டலில் வாங்கி வைக்கட்டுமா?'' என்று கேட்டாள்.

''இரு. கேட்டுச் சொல்கிறேன்!'' என்ற கண்ணன் தன் எதிரில் உட்கார்ந்திருந்த சேகரிடம் என்னவோ பேசினுன். பின்னர் ராதாவிடம் திரும்பி, ''வேண்டாம்.. ஓட்டல் சாப்பாடு ஒட்டலிலேயே பார்த்துக்கொள்ளலாம் என்கிறுன். இந்தத் தடவை உன் கைச்சாப்பாடு சாப்பிடக் கொடுத்து வைக்கவில்லை என்று வருத்தப்படுகிறுன்,'' என்றுன்.

''எனக்கும் தான் என்னமோ போல் இருக்கிறது. அடுத்த முறை அவர் வரும்போது நம் வீட்டில் மூன்று நாட்களாவது தங்க வேண்டும் என்று சொல்லுங்கள்..'' என்றுள் ராதா.

''சரி.. சரி.. நான் அவனு



டன் வெளியே போகிறேன். வர நேரமாகும்.''

''அவரைத் தனியாக விடாதீர்கள். நன்றாகக் கவனித்து விட்டு வாருங்கள். வீட்டில் நடத்தவேண்டிய உபசாரம்தான் முடியாமல் போய்விட்டது!'' என நடித்துவிட்டு ராதா ரிசீவரைக் கீழே வைத்தாள்.

ஆறு மாதங்கள் சென்றன.

அன்று பகல் சாப்பாடு எடுத்துப் போக ஆள் வரவில்லை. வாசலுக்கும் உள்ளுக்குமாக நடந்து கால் அலுத்துவிட்டது.

இரண்டு மணிக்குப் பிறகு வாசலில் சைக்கிள் ஓசை கேட்டது. ஓடிப்போய்க் கதவைத் திறந்தாள். வாசலில் ஆபீஸ் சேவகன் நின்று கொண்டிருக்கவில்லை. போலீஸ்காரர் நின்றிருந்தார்.

''நீங்கள்தானே கண்ணன் என்பவருடைய......''

''ஆமாம். என்ன விஷயம்?'' பதறினாள் ராதா.

''உங்கள் வீட்டுக்காரர் ஸ்டேஷனில் இருக்கிறார்.''

''என்ன நடந்தது?'' எனக் கேட்டாள் ராதா. அவள் நெஞ்சு படபடத்தது.

''அங்கே வாருங்கள்.. இன்ஸ்பெக்டர் சொல்வார்,'' என்றார் போலீஸ்காரர்.

கலங்கிபோன ராதா அந்தப் போலீஸ் காரரைப் பின் தொடர்ந்தாள். ஸ்டேஷனில் கண்ணன் 'லாக் அப்'பில் இருந்தான். ராதாவைப் பார்த்து இன்ஸ்பெக்டர், ''உங்கள் கணவர் ஆபீஸ் பணத்திலேருந்து இருபத்தையாயிரம் ரூபாய் கையாடியதாகப் புகார் கொடுத்திருக்காங்க. அவரும் மறுக்கலை.. அறிஞ்சவங்க தெரிஞ்சவங்க மூலமா ஜாமீன்லே கூட்டிக்கிட்டுப் போக ஏற்பாடு பண்ணுங்க,'' என்றார்.

''என்னங்க இது..? நெஜம் தானா?'' விம்மியபடி கண்ணனைக் கேட்டாள்.

லாக்கப்பிலிருந்த அவன் தலையை மேலும் கீழுமாக அசைத்து நடந்ததை உறுதிப்படுத்தினான்.

''நமக்கு என்னங்க செலவு? இரண்டே பேர்தானே? எதுக்குப் பணத்தை எடுத்தீங்க?'' என்று கேட்டாள் ராதா.

''கெட்ட சகவாசம்தான் ராதா.. ஒரு நாட்டியக்காரியோட பழக்கம்.. ஏடாகூடமா ஒரு போட்டோ ஒரு துஷ்டன் கையிலே மாட்டிக் கொண்டு விட்டது. தப்பிக்க முடியாமே....''

''உங்க முகத்தைப் பார்த்து நான் எதையுமே புரிஞ்சுக்கலையே. எத்தனை நாளாக இந்தக் கூத்துங்க?'' கேவினாள்.

''அன்றைக்குச் சேகர் வந்திருந்தானே, அன்று முதல்தான். நீ கூட போன் செய்தாயே அன்றைக்குத்தான். சேகரைக் கூப்பிட்டுக் கொண்டு ஒரு மேற்கத்திய பாணி ஓட்டலுக்குப் போனேன். அங்கே அவன் நண்பர்கள் வந்தார்கள். சும்மா வாருங்கள் என்று கூட்டிப் போனார்கள். விளையாட்டாகப் போனவன் வசமாகச் சிக்கிக் கொண்டேன். சேகருக்குப் பழக்கம் அன்றுடன் முடிந்தது. எனக்குத் தொடர்ந்தது. இன்று இங்கே கொண்டு வந்து நிறுத்திவிட்டது.''

ராதா விம்மி விம்மி அழுதாள்.

மதுரை மாவட்டத்திலுள்ள உசிலம்பட்டிக்கு அருகில் உள்ள மாதரை என்னும் ஊரில் இருக்கும் லட்சுமி டூரிங் டாக்கீஸில் இப்படி ஒரு விளம்பரம் காட்டுகிறார்கள்: ''பேய் ஓட்டுவதில் கைதேர்ந்தவர் காமாட்சி. பேய் பிடித்தவர்கள் அவரை அணுகவும்.''

—முத்துக்கணேசன்

முதல் சம்பளம்

ஸ்ரீவத்ஸன்

அவனைப் பார்க்க மிகவும் பரிதாபமாய்த் தான் இருந்தது.

வந்திருந்த பத்துப் பேர்களில் அவனைவிடப் பலர் நேரடித் தேர்வில் நன்றாகச் செய்திருந்தும், அவன் மேல் இரக்கம் கொண்டார் மானேஜர். அவனையே தேர்ந்தெடுத்தார்.

அப்போதே இருபத்து எட்டு தேதி ஆகிவிட்டது. இனிமேல் இந்த இரண்டு நாளைக்காக அவனைப் போடுவானேன். ஒரே கணக்காக முதல் தேதி அன்று வந்து வேலை ஒப்புக் கொள்ளலாம் என்று மானேஜர் சொன்னபோது அவன் பரிதாபமாகக் கெஞ்சினான்:

''இந்த மாதமே ஒரு நாளைக்கு — முப்பதாம் தேதியாவது, வேலை ஒப்புக் கொள்ள அனுமதியுங்கள் ஸார்—''

''ஒரு நாள் சம்பளமாவது கிடைக்கட்டும் என்று பார்க்கிறாயா?''

''அதற்காகக்கூட இல்லை ஸார். என் அம்மா சாகக் கிடக்கிறாள்



ஸார். நான் சம்பாதிக்கவில்லையே என்ற குறை, ஏக்கமே என் தாயைப் படுக்கையில் தள்ளிவிட்டது. நாட்டு வைத்தியர் அடுத்த மாதம் முதல் தேதிக்குக் கூடத் தாண்டாது என்கிறார்.''

''அதற்காக?''

''நான் சம்பாதிக்கவில்லையே என்ற குறையில் என் தாயின் நெஞ்சு வேகாது ஸார்.''

''வேலை கிடைத்து விட்டது, முதல் தேதி முதல் வேலைக்குப் போகப் போகிறேன் என்று சொல்லேன்.''

''அம்மா நம்பமாட்டாள். இந்தா சம்பளம் என்று கொடுத்தால் தான் நம்புவாள். அதற்காகத்தான் கெஞ்சுகிறேன். முப்பதாம் தேதிக்கு வேலையில் சேர அனுமதியுங்கள். முதல் தேதி அம்மா கையில் அந்த ஒரு நாள் சம்பளத்தைக் கொடுத்துவிட்டால், அப்புறம் அவள் இறந்தால்கூட எனக்கு ஆறுதலாய் இருக்கும் ஸார்.''

மானேஜர் ஒப்புக் கொண்டு அவன் சேர அனுமதித்தார்.

முதல் தேதி. சம்பள நாள்.

அவன் பூரித்துப் போனான்.

ஆபீஸ் காஷியர் அவனைக் கூப்பிட்டுச் சம்பளப் பட்டியலில் கையெழுத்துப் போடச் சொன்னார். எட்டு ரூபாய் சம்பளம்.

''எட்டு ரூபாயையும் ஒரு ரூபாய் நோட்டுக்களாகவே கொடுங்க ஸார்,'' என்றான் அவன்.

''குமார், உங்க மாதிரி அதிர்ஷ்டக்காரர் யாருமே இல்லை,'' என்றார் காஷியர்.

பூரித்துப் போனான் அவன்.

''ஆமாம். குமார். இன்று காலை தந்தி மூலம் சர்க்கார் ஆணை வந்திருக்கிறது. எல்லாச் சர்க்கார் சிப்பந்திகளும் ஒரு நாளைய சம்பளத்தை வறட்சி நிதிக்குக் கொடுக்கும்படி உத்தரவிடப் பட்டுள்ளது. உமது எட்டு ரூபாய் —ஒரு நாள் சம்பளம்— வறட்சி நிதியில் சேர்ந்துவிட்டது.''

அவன் முகம் பேய் அறைந்தது போல் ஆனது.

ஒருநாள் சம்பளத்தைக் கையில் வாங்க, அம்மா பேரைச் சொல்லி எத்தனை சாமர்த்தியமாக நாடகம் போட்டான்! ஒருநாள் சம்பளத்தை முதல் சம்பளமாகக் கையில் வாங்க முடிந்ததா அவனால்?

அவன் தாய் குல தெய்வத்துக்கு, 'எங்க குமார் முதல் சம்பளம் வாங்கியதும், அதிலே பாதியை அப்படியே உனக்குக் காணிக்கையாய்க் கொடுத்துவிடுகிறேன்,' என்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள்.

முதல் தேதி வேலைக்குப் போனால் பிரார்த்தனைப்படி முதல் சம்பளம் இருநூற்று நாற்பது ரூபாயில் பாதியைக் காணிக்கையாய்க் கொடுக்க நேருமே?

அதைவிட ஒரு நாள் சம்பளம் என்றால் எட்டு ரூபாய் வரும்— அதில் நான்கு ரூபாயைக் காணிக்கை கொடுத்தால் போதும்.

அம்மா பிரார்த்தனைக்குப் பிரார்த்தனையும் நிறைவேறியதாகும் நமக்கும் அதிக நஷ்டமிராது என மனத்துக்குள் திட்டமிட்டு அம்மா சாகக் கிடப்பது போல் நாடகமாடி முப்பதாம் தேதி வேலையில் சேர அனுமதிக்கும்படி கேட்டு வெற்றியும் பெற்றான்.

இப்போது ஒரு நாள் சம்பளம் தன் கையால் வாங்க முடியாமல் போய்விட்டது.

அடுத்த மாதம் முழு சம்பளம் கையில் வரப் போகிறது—நூற்று இருபது ரூபாய் காணிக்கை செலுத்தியாக வேண்டும்.

டீக்கு வரி போட்ட நிதியமைச்சர் சுப்ரமணியம் காப்பியை விட்டுவிட்டார். இதிலிருந்து என்ன தெரிகிறது?

அவர் காப்பி குடிப்பார் என்பது தெரிகிறது.

—ஸ்டேட்ஸ்மெனில் ஒரு கடிதம்



சொந்தங்கள் வாழ்க

"என்ன படம் பார்த்து விட்டு வருகிறீர்கள்?"

"உம்."

"உம் என்றால்? அப்படியொரு படமா?"

"உம்."

"எதற்கெடுத்தாலும் உம் தானா? அப்புறம் கோபம் வரும்."

"எனக்கு அதற்கு மேலே கோபம் வரும்."

"நான் என்ன செய்தேனும்? எரிந்து விழுகிறீர்களே!"

"நான் என்ன செய்தேனும்? இப்படிப் படம் எடுத்திருக்கிறார்களே?"

"அப்படியா சமாசாரம்? சரி சரி. என்ன கதை?"

"ஜெயசித்ரா ஒரு தாயில்லாத பெண்."

"ஐயோ பாவம். அப்படியா?"

"கிராக்கே! படத்தில் சொல்கிறேன்."

"நானும் அதைத்தான் சொன்னேன். கிராக்காமே கிராக்கு."

"அப்பாவான மேஜர் ஆசையோடு குழந்தையை வளர்க்கிறார். அவரிடம் ஜெயசித்ராவுக்கு அபார ஈடுபாடு. மதிப்பு."

"இருக்காதா பின்னே?"

"அவர் உள்ளபடியே நல்ல அப்பா. உங்கப்பா மாதிரி இல்லே."

"சரி, கதையைச் சொல்லுங்கள்."

"மேஜருடைய சினேகிதர், வி. கே. ராமசாமி, பெரிய பணக்காரர். அவர் பிள்ளை ஜெயசங்கருக்கும், ஜெயசித்ராவுக்கும் லடாய் உண்டாகிவிடுகிறது, யார் அப்பா உசத்தி என்று. தேர்தலில் விட்டுப் பார்க்கிறார்கள். வி. கே. ஆர். ஒரு மோசடி பண்ணி, கோவில் நகையை மேஜர் எடுத்து வள்ளிக்கண்ணு கிட்டே கொடுத்து விட்டதாக. ."

"அது யார் வள்ளிக் கண்ணு?"

"அதாவது சகுந்தலா. மனோரமாவுக்கும் வள்ளிக்கண்ணு அப்பச்சிக்கும் — அதாவது சோவுக்கும் பெண். பொட்டுக் கட்டினவள்."

"என்னவோ எனக்கு ஒன்றும் புரியவில்லே."

"புரிந்து கொள்ள வேண்டிய விஷயமே எத்தனையோ புரியாது உனக்கு. இது புரியாவிட்டால் பாதகமில்லே. ராமசாமி மோசடி பண்ணி, மேஜர்மீது கதை கட்டிவிட்டு, தேர்தலில் ஜெயித்துவிடுகிறுர். அப்புறம் பதிலுக்கு, ஜெயசித்ரா வேலே செய்கிறுர். தன் உதட்டில் ஜெயசங்கரை முத்தம் கொடுக்கும்படியாகப்பண்ணி—"

"ஐயையோ! அதைக்கூடக் காட்டுகிறுர்களா என்ன?"

"ஆசை ஆசை! ஜெயசித்ரா ஒரு டிரிக் பணணி ஜெயசங்கரையும், வி. கே. ராமசாமியையும் தலே குனிய வைத்துவிடுகிறுர். இருவருக்கும் கல்யாணமாகிறது."

"அப்புறம்?"

"கல்யாணமானதும் மாலேயும் கழுத்துமாக வருகிறுர் ஜெயசித்ரா. 'மாமா மாமியின் காலில் விழு,' என்கிறுர் கணவன் ஜெய். "எனக்கு அப்பாதான் ஒசத்தி, அவர் காலில்தான் விழுவேன்," என்கிறுர் ஜெயசித்ரா. அந்த வாதம் முதலிரவுப் படுக்கை அறை வரை போகிறது."

"அங்கே என்ன நடக்கிறது?"

"ஜெய் ஒரு நோட்டுக் கட்டைத் தூக்கிக் கட்டிலின் மத்தியில் போட்டு, 'இதோ பார். கல்யாணத்துக்குப் பிறகும் பிறந்த வீட்டைப் பெரிதாக நினேக்கிறவள் காசுக்காக உடலுறவு வைத்துக் கொள்ளும் வேசியைப் போன்றவள். உனக்குப் பிறந்த வீடுதான் முக்கியம் என்ருல் அந்த நோட்டை எடு. எனக்கு மட்டுமே சொந்தம் என்ருல் அதை விட்டுவிட்டு வா,' என்று விளக்கம் சொல்கிறுர்"

"அபத்தக் களஞ்சியம்! முதலிரவில் மனேவியைப் பார்த்துக் கணவன் பேசுகிற பேச்சைப் பார்க்கலே?"

"எம். என். ராஜம் மட்டும் என்னவாம்? தான் சொல்கிற பெண்ணே மகன் கட்டிக் கொள்ள மாட்டேன் என்றதும், 'நீ ஒருத்தனுக்குப் பிறந்தது உண்மையானல் இந்தப் பெண்ணேக் கட்டிக் கொள். இல்லாட்டி நான் வேசின்னு அர்த்தம்," என்கிறுரே!"

"சகிக்கவில்லே! மனசைத் தொடுகிற மாதிரி ஒன்றுகூட இல்லேயா?"

"பஞ்சாயத்துப் போர்டு பிரசிடெண்ட் ராமசாமி, காட்ட வேண்டியதைக் காட்டி, செய்ய வேண்டியதைச் செய்து தேர்தலில் வெற்றி பெறுகிறுர் இல்லேயா? தோற்றுப்போன மேஜரே வந்து அவருக்கு மாலேபோடுகிற கட்டம் கொஞ்சம் மனத்தைத் தொடுகிற மாதிரி இருந்தது. 'எப்பவும் உனக்கு நான்தான் முதல் மாலே போடுவேன். இந்தத் தடவை இப்படி ஆயிட்டுது,' என்று சொல்லிக் கொண்டு மேஜர் மாலே போடுகிறுர். வி.கே.ஆர். "நான் ஊருக்குத்தான் பெரிய மனுசன். உண்மையிலேயே பெரிய மனுசன் நீதான்," என்று சொல்கிறுர். நெகிழ்ச்சியான இடம்தான். ஆனல் அதற்கு அடுத்தாற்போல் வருவதெல்லாம் பெரிய போர்."

"மொத்தத்தில் படம் எப்படி?"

"பரிசு கொடுக்க வேண்டும்."

"யாருக்கு? கதாசிரியருக்கா? டைரக்டருக்கா? காமெராமெனுக்கா?"

"எனக்கு."

"உங்களுக்கா? ஏனும்?"

"பாதியில் எழுந்து வராமல் உட்கார்ந்திருந்தேன் அல்லவா? அந்தச் சகிப்புத் தன்மைக்கு."



சிறு சேமிப்புப் பரிசு டெப்பாசிட் திட்டத்தில் (ரூ. 50 வரிசை)

வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கு **பாராட்டுதல்கள்**

இரண்டாவது மாதாந்திரக் குலுக்கல் சென்னையில் **29-3-75** அன்று நடைபெற்றது.

முதல் பரிசு (ரூ. 20,000)	எண்: 166696	4-வது பரிசு (ரூ. 3,000)	எண்: 305293
2-வது பரிசு (ரூ. 10,000)	எண்: 458463	5-வது பரிசு (ரூ. 2,000)	எண்: 462231
3-வது பரிசு (ரூ. 5,000)	எண்: 385978	6-வது பரிசு (ரூ. 1,000)	எண்: 442704

ஆறுதல் பரிசுகள் (தலா ரூ. 100)

எண்கள்:

100114	100943	102943	104318	104741	106004	108865	111636	117214
117590	117792	123536	124759	127654	128117	130354	136708	137568
140985	142550	144357	146096	148300	149136	149140	149233	150701
152714	153961	158265	159043	159523	163238	163528	166880	167882
174876	175801	176618	179293	181785	184990	185504	188018	188367
188564	189678	191175	192580	193318	193469	193694	198962	203358
204335	204853	208164	209183	210287	214940	216543	217569	217589
218819	221481	221879	229497	230542	230772	233033	236868	238604
239064	241476	241721	242316	251328	251386	252028	258735	260147
260910	261188	264078	264239	264376	267815	268198	269328	271125
271156	271715	273616	273927	285334	288197	290443	290545	291057
291116	292150	292979	301246	302225	302554	302789	304279	306010
306240	307804	312452	319679	323409	324143	324998	333934	334888
336773	338073	340169	342863	355617	355733	356014	368731	373607
375686	376653	378149	381195	385959	387330	387784	388377	389061
391151	391246	398126	399651	400313	402260	406949	410478	410490
411603	412259	412381	412562	413007	415884	416327	417160	417239
417756	421388	422546	423572	424571	431364	431669	433701	439442
441622	442254	442715	445924	448019	453336	453730	454625	455018
455728	456103	458757	461257	462566	463671	464300	464445	465206
465810	469777	470137	471595	472386	472628	472884	475184	477144
478108	482144	483050	483316	483338	484273	485784	490836	491343
491553	495753	496098	498832	499655				

இத்திட்டத்தில் உள்ள எல்லா டெப்பாசிட்தாரர்களுக்கும் எங்கள் நன்றி. இந்த முறை இங்கு எண்கள் இல்லாத நபர்களுக்கு ''அடுத்தமுறை அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கலாமே'' என்று கூறிக்கொள்கின்றோம்.

பிரசித்திபெற்ற இத்திட்டத்திற்கு பொதுமக்களிடமிருந்து வரும் தொடர்ச்சியான கோரிக்கையின் பேரில் இன்னும் தொடர்ந்து சேரலாம். ரூ. 50 மட்டுமே நீங்கள் டெப்பாசிட் செய்கிறீர்கள். மேலும் ரூ. 20,000 வரை அல்லது பல அரிய ரொக்கப் பரிசுகளில் அடுத்தடுத்து வரும் மாதாந்திரக் குலுக்கல்களில் வெற்றி பெற வாய்ப்பு உண்டு. எது வருகின்றதோ இல்லையோ, உங்கள் டெப்பாசிட் 10 வருட காலத்தில் இரட்டிப்பாகின்றது.

நல்லது, எதற்காக காத்திருக்கிறீர்கள்.

இன்றே எங்களது அருகாமையிலுள்ள கிளையை அணுகுவீர்

பாங்க் ஆப் மதுரை லிமிடெட்.,

தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலத்தின் மிகப் பெரிய தேசிய மயமாக்கப்படாத வங்கி.

நிறுவியது: 1943.

33, வடக்கு சித்திரை வீதி, மதுரை—625001.

இந்தியாவெங்கிலும் கிளைகள் உள்ளன.


உங்கள் வீட்டில் மூட்டைப் பூச்சிகளா?
ராலீஸ் ஹவுஸ்ஹோல்டு
பூச்சிக் கொல்லிகள்
மூலம் அவற்றிலிருந்து
விடுதலை பெறுவீர்.
மூட்டைப் பூச்சிகள்
டிக்-20
கரப்பான்கள்
மற்றும் எறும்புகள்
ஹெக்ஸிடே
பி 10
Hexidole
கொசுக்கள்
ரிப்ளெக்ஸ்
செல்லுகள்
சூபர்
டெர்மெக்ஸ்
ராலீஸ் இந்தியா லிட்.
வருடக்கணக்காக பூச்சிக்கள் கட்டுப்படுத்தலுக்கே !
(RADEUS/R-SP-1

டெஸ்டிலே பாஸ்

தன்னைப் போலவே இண்டர்வியூவுக்கு வந்திருந்த மற்றப் பெண்களையும் பார்த்தாள் மல்லிகா. நான்கு பேர்கள் இருந்தார்கள் அவளைத் தவிர. ஒருத்தி பாப் செய்த தலையில் ஷாம்பு போட்டுக் குளித்துவிட்டு வந்திருக்க வேண்டும். தலை புஸ்ஸென்று ஹேர்பின்களின் செருகலையும் மீறிப் பிடரியின் கீழ் 'குப்'பென்று கிடந்தது.

சிலர் ஆடைகளிலும் அலங்காரத்திலும் அட்டகாசமாக இருந்ததைப் போலவே 'யூ நோ, யூ நோ' என்று இங்கிலீஷில் வேறு பிளந்து கட்டிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுடைய இங்கிலீஷைக் கேட்டதும் வாயடைத்துப் போய் உட்கார்ந்து விட்டாள் மல்லிகா. என்னவோ அவள் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்துவிட்டாளே தவிர, சுட்டுப் போட்டால்கூட வாயில் ஒரு இங்கிலீஷ் வார்த்தை வராது பாவம்.

இண்டர்வியூவில் இங்கிலீஷில் எதையாவது கேட்டுத் தொலைத்துவிட்டால் என்ன செய்வதென்கிற பதை பதைப்பு உண்டாயிற்று மல்லிகாவுக்கு. நிச்சயம் தனக்கு வேலை கிடைக்காதென்று அப்பொழுதே தீர்மானித்து விட்டாள் அவள்.

''மானேஜர் வருகிறார்,'' என்று கூறிக்கொண்டே வந்தான் பியூன்.

எல்லோரும் 'கப்சிப்' பாயினர்.

வயதான ஒருவர் மானேஜராக வரப் போகிறார் என்றெண்ணியிருந்த மல்லிகா, ஓர் இளைஞன் ஹிப்பித் தலையும் சைட் பர்ன்ஸும் யானைக் கால் பாண்டும் நியூஸ்பேப்பர் சட்டையும் கூலிங்கிளாஸும் போட்டுக் கொண்டு வந்ததைப் பார்த்ததும் ஏமாந்தே போனாள்.

அவனுடைய நாகரீகத்துக்கு ஏற்றபடியாக மற்றப் பெண்களின் ஆடைகளும் அலங்காரங்களும் இருக்கவே, தனக்கு வேலை கிடைத்தாலும் கிடைக்கலாம் என்கிற கொஞ்சநஞ்ச நம்பிக்கை கூடப் போய்விட்டது மல்லிகாவுக்கு.

''ரிட்டன் டெஸ்ட்!'' என்றான் அவன்.

எல்லோருக்கும் பேப்பர் வழங்கப்பட்டது. பேனாவைத் திறந்து மூடியை அதன்பின் செருகிக் கொண்டார்கள். மல்லிகா ஒருத்திதான் கையில் வளையல் அணிந்திருந்ததால் வலது கை வளையலை முட்டுவரை தள்ளி விட்டு விட்டு டெஸ்ட் எழுதத் தயாராகிக் கொண்டாள்.

''உங்கள் பெயர்?''

''மிஸ் ரோஸ்லின்!'' என்று முதல் பெண் ஏனோ 'மிஸ்' என்பதில் அழுத்தம் கொடுத்தாள்.

''வெரிகுட்...! நீங்கள் உங்களுக்குத் தெரிந்த பதினைந்து மலைகளின் பெயரை – அதாவது இந்தியாவுக்கு வெளியே மற்ற நாடுகளிலுள்ள மலைகளின் பெயர்களை – எழுத வேண்டும்!'' என்றான் அவன்.

இப்படியே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான டெஸ்ட்...

மானேஜர் மாதவன் மல்லிகாவிடம் வந்தான்.

''மல்லிகா!'' என்று ஈனஸ்வரத்தில் முனகினாள் மல்லிகா.

''தைரியமாயிருங்கள்...''

சுகந்தி



என்று அவளுடைய பயந்த முகத்தைப் பார்த்துக் கூறிவிட்டு, "உங்களை வெளி நாட்டு விஷயங்கள் எதையும் நான் எழுதச் சொல்லப் போவதில்லை... நீங்கள் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? பதினைந்து இங்கிலீஷ் வார்த்தைகள் — அடிக்கடி நம் பேச்சிலோ எழுத்திலோ வராததாக ஸ்பெல்லிங் பிழை இல்லாமல் — எழுத வேண்டும்...! ஸ்டார்ட்!" என்று கூறிவிட்டு கைகளைப் பின்புறமாகக் கட்டிக் கொண்டு அங்கு மிங்குமாக உலாவலானான்.

எந்த மாதிரியான டெஸ்ட் தனக்கு வைத்து விடப்படுமோவென்று மல்லிகா பயந்து கொண்டிருந்தாளோ அந்த இங்கிலீஷ் டெஸ்ட்டே வைக்கப் பட்டதும், திணறிப் போய்விட்டாள் அவள்.

கடவுள் மீது பாரத்தைப் போட்டாள். கண்முன்னே பளிச் பளிச்சென்று இங்கிலீஷ் வார்த்தைகள் பிரசன்னமாயின மல்லிகாவுக்கு. மட மடவென எழுதித் தள்ளிவிட்டாள்.

எல்லோருடைய பேப்பர் களையும் வாங்கி அங்கேயே படித்துத் திருத்தினான் மாதவன்.

எல்லோரும் நான்கைந்து வார்த்தைகளுக்கு மேல் எழுதவில்லை. மல்லிகாதான் பதினைந்து இங்கிலீஷ் வார்த்தைகளையும் எழுத்துப் பிழையில்லாமல் சரியாக எழுதியிருந்தாள். அவளே தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவித்த மாதவன், அவளருகில் வந்து, "எல்லோரும் இரண்டொரு விடைகளுக்கு மேலெழுத முடியாமல் நிறுத்திவிட்டார்கள். நீங்கள் எப்படிப் பதினைந்து இங்கிலீஷ் வார்த்தைகளை ஒரு பிழைகூட இல்லாமல் எழுதினீர்கள்?" என்று கேட்டான்.

"உங்கள் உதவியால்தான்!" என்று கூறிச் சிரித்தாள் மல்லிகா.

"என் உதவியா?"

"ஆமாம்!"

"எப்படி?"

"நீங்கள் போட்டுக் கொண்டிருக்கிறீர்களே நியூஸ் பேப்பர் சட்டை...! அதில் ஆங்கிலச் செய்திகளும் விளம்பரங்களும்தானே அச்சடிக்கப்பட்டிருக்கின்றன? நீங்கள் முன்னும் பின்னுமாகக் குறுக்கும் நெடுக்குமாக, நடந்தபொழுது உங்களைப் பார்த்து எழுதிவிட்டேன்!" என்றாள் மல்லிகா.

"அப்படியா! கங்கிராசுலேஷன்ஸ்?" என்று சிரித்தான் அவன்.

சென்னை மிட்லண்ட், ஸ்ரீ கிருஷ்ணா, மேகலா, கமலா
(AIR CONDITIONED) மற்றும் தென்னகமெங்கும்





‘என்னடா தம்பி, போன காரியம் அதுக்குள்ளேவா முடிஞ்சிட்டுது?’

‘எந்தக் காரியம் அம்மா?’

‘அதாண்டா, உன் சிநேகிதன் அருள் கிட்டே சொல்லி அனுப்பிச்சியே?’

‘அருள்கிட்டேயா! என்ன சொல்லி அனுப்பினேன்!’

‘என்னடா இது இப்படிச் சொல்றே! நீங்க ரெண்டு பேரும் நீலா வீட்டுக்குப் போய் அவள் எழுதின லெட்டர் எல்லாத்தையும் அவள் அப்பாகிட்டே காட்டி அவங்களை வழிக்குக் கொண்டு வரப் போகிறதாய்ச் சொல்லி, எல்லாத்தையும் நீ வாங்கிட்டு வரச் சொன்னதாக...’

‘எல்லாத்தையும் எடுத்துக் கொடுத்திட்டியா!’

‘ஒண்ணு விடாமல் கொடுத்து அனுப்பினேனே!’

'போச்சு! எல்லாமே போச்சு! உனக்குக் கொஞ்சமாவது அறிவு இருக்கா!'

'என்னடா சொல்றே?'

'எல்லாத்தையும் கெடுத்திட்டான்!'

'அவன் ஏண்டா கெடுக்கணும்? அவன்தான் உன் சினேகிதனாச்சே!'

'அப்படித்தான் நெனச்சு ஏமாந்துட்டேன், அம்மா. துரோகி! கூட இருந்தே குழி பறிச்சிட்டான். இப்போ அவன் எங்கே போயிருந்தாலும் சரி, அவனைச் சும்மா விடப் போறதில்லே. தேடிப் பிடித்துச் சரியான பாடம் கற்பிக்கிறேன் பாரு.'

'பாஸ்கர். தேடுகிற கஷ்டத்தை உனக்கு நான் வைக்கவில்லை!'

'அருள்! நீயா!'

'நானேதான்.'

'அருள்! நீ... நீ... உனக்கு என்ன ஒரு இது இருந்தா... அந்தக் கடிதங்களை வாங்கிட்டுப் போனியாமே?'

'ஆமாம். இதோ வைத்திருக்கிறேன்.'

'அப்படியானால் நீலாகிட்டே கொடுக்கவில்லையா? நல்ல வேளை... என்னவோ நினைச்சு பயந்திட்டேன். இதை எதுக்காகடா வாங்கிட்டுப் போனே?'

'முதலில் நேத்து நடந்ததைச் சொல்றேன். உன்னைப் பார்க்கிறதுக்கு முன்னாலே—அதாவது கடித விஷயத்தை நீ என்னிடம் சொல்றதுக்கு முன்னாலே, நீலா வீட்டுப் பக்கம் தான் போயிருந்தேன்.'

'என்கிட்டே சொல்லலியே?'

'கேள். அவங்க வீடு, வீடாகவே இல்லே. ஒரு மூலையில் நீலா தலை குனிந்து அமர்ந்திருந்தாள். அவள் உடல் குலுங்கியதிலிருந்து அவள் அழுகிறாள் என்பதைப் புரிந்துகொண்டேன். அவள் தந்தை என்னைப் பார்த்து விட்டார். தலையசைப்பால் வரவேற்றார். நீலாவும் அவள் தாயும் எழுந்து போய் விட்டார்கள். நான் மெல்ல விசாரித்தேன். அவர் நீண்ட பெருமூச்சோடு, நீ கல்யாணம் நிச்சயமான பிறகு எக்கச்சக்கமாய்ப் பணம் கேட்டுத் தொல்லை கொடுப்பதாகச் சொன்னார். நீலாவும் விம்மி விம்மி அழுது கொண்டே ''நான் எழுதிய லெட்டர்களை ஒரு வியாபாரப் பொருளாக ஆக்கிட்டாரே? அப்படிப்பட்டவரையா நான் கல்யாணம் பண்ணிக்க முடியும்? வேண்டாம். இந்தக் கல்யாணம் நடக்கவே வேண்டாம்'' என்று கதறினாள். ''அது சரியம்மா... இந்தக் கல்யாணத்தை நிறுத்திட்டால் கூட அவன் கிட்டே இருக்கிற லெட்டர்களை எல்லாம் வாங்கணுமே?'' என்றார் அவள் அப்பா...'

'அந்த வேலையை உன்கிட்டே ஒப்படைத்தார்களாக்கும்?'

''என்னால் நம்ப முடியல்லே. அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதாக ஒப்புக்கொண்டு கடைசி நிமிடத்தில் நீ இப்படி பிளாக் மெயில் செய்திருப்பாய் என்று என்னாலே கற்பனை பண்ணிக் கூடப் பார்க்க முடியல்லே. அதனால்தான் நான் நேரா உங்க வீட்டுக்கு வந்து மெல்லப் பேச்சுக் கொடுத்தேன். அவங்க சொன்னது அத்தனையும் உண்மைங்கறது வெளிச்சமாச்சு. எனக்கு விடியற வரைக்கும் தூக்கமே வரலே. யோசிச்சு முடிவுக்கு வந்தேன். அந்தக் கடிதங்கள் தான் உன்னை இப்படியெல்லாம் செய்யத் தூண்டுது; அதனாலே அந்தக் கடிதங்களை எப்படியாவது கைப்பற்ற

ஆறு. இராமநாதன்

வேண்டும் என்பதே என் முடிவு. அதனுலேதான் உன் அம்மாவை ஏமாற்றிக் கடிதங்களை வாங்கிட்டுப் போனேன்...'

'கிழவியை ஏமாற்றலாமா தம்பி! உனக்கே நல்லா இருக்கா?'

'உஷ்! சும்மா இரு அம்மா! அதுதான் மறுபடி கொண்டு வந்து விட்டானே? அருள்! கடிதங்களை இப்படிக் கொடு.'

'ஆமாம். பாஸ்கர். என்ன இருந்தாலும் நீ என் உயிர் சிநேகிதன் இல்லையா? மனசு கேக்கலே. கடைசி முறையா உங்கிட்டே கேட்டுவிட்டுப் பிறகு கொடுக்கலாம்னு திரும்ப எடுத்துக்கிட்டு வந்துட்டேன்...'

'அருள், நீயும் சரி, நீலாவும் சரி, என்னைக் கேடு கெட்டவன்னு முடிவுக்கு வந்துட்டீங்க இல்லே? நான் ஏன் இப்படிச் செய்தேன் தெரியுமா? நீலாவின் அப்பாவோட திமிரை அடக்க வேண்டும்

இங்கிலாந்தில் ஸ்டோக்ரோ கிராமத்தில், ஒரு பழைய கிணற்றைப் பார்க்கலாம். 1863-ல் அக்காலக் காசி ராஜா கட்டியது அது. வட மேற்கு மாகாண உதவி கவர்னராக இருந்த ரீட் என்பவர், ராஜாவின் மகனை ஒரு முறை காப்பாற்றினராம். ரீட் வறட்சியால் கஷ்டப்பட்ட ஸ்டோக்ரோ கிராமத்திற்கு அருகே வசித்து வந்ததால், காசி ராஜா தம் நன்றிக் கடனை இவ்வாறு தீர்த்துக் கொண்டார்.

—எம். எஸ். கல்யாணசுந்தரம்

காசி ராஜா கிணறு

என்று தானேயொழிய, கல்யாணத்தை நிறுத்த வேண்டும் என்று அல்ல. நீலாவின் பெற்ருேர் என் பெற்ருேர்களை ஏழைகள் என்று முன்பு அவமரியாதை செய்தார்கள். அதனுல் பழிக்குப் பழி வாங்கவே அப்படி நடித்தேன்! கொண்டா லெட்டரை!..'

'ரொம்ப மகிழ்ச்சி பாஸ்கர், ரொம்ப மகிழ்ச்சி. இந்தா, எல்லா லெட்டரும் இந்தக் கட்டில் அப்படியே இருக்கு. சரியாக இருக்கா பார்த்துக் கொள். ஏன் பாஸ்கர் சிரிக்கிருய்?'

'ஹஹ்ஹஹ்ஹா.

'சொல்லு பாஸ்கர். சிரிப்பு என்ன வேண்டியிருக்கிறது?'

'அருள், நீ ஒரு முட்டாள். இந்தக் கடிதங்களை வைச்சிக்கிட்டு அவங்களை எப்படி ஆட்டிப் படைக்கிறேன் பார்!'

'வேண்டாம், பாஸ்கர், வேண்டாம்.'

'கெட் அவுட்!'

'அவன்தான் கோவமாக இருக்கிருனே! போ தம்பி.'

'சரி, நான் போகிறேன். பாஸ்கர், உன்னை நல்ல வழிக்குக் கொண்டு வர நான் எவ்வளவோ முயற்சி பண்ணினேன். ஆனு முடியலே.'

'பாஸ்கர் மனசு வைத்தால் வைத்ததுதான். எந்தத் தந்திரமும் அவன்கிட்டே பலிக்காது.'

'அப்படியா? கேட்டுக்கொள் பாஸ்கர். உன் கையில் இருப்பது நீலா எழுதின கடிதங்கள் இல்லே.'

'அருள்!'

'உண்மைக் கடிதங்களை நீலாகிட்டே கொடுத்துக் கொளுத்தி விடச் சொல்லிட்டேன்!''

'அடே துரோகி!'

'உன்னுடைய பேராசைக்கு உடந்தையாயிருந்து உயிர் நண்பன்னு பேர் வாங்கறதை விட, ஒரு குடும்பத்தினுடைய மானங் காத்து உன்கிட்டே துரோகின்னு பட்டம் வாங்கறதை நான் பெருமையா கருதறேன். அதே முகூர்த்தத்திலே எங்க இரண்டு பேருக்கும் கல்யாணம் நடக்கப் போகிறது. முடிந்தால் வந்துசேர்—அம்மாவையும் அழைச்சிட்டு!'

'அருள்! யூ...யூ...'



உறவுக்குக் கை கொடுப்போம் ■■

ஒரு வகையில் இது பழைய 'வரவு எட்டணு—செலவு பத்தணு' தீம்தான். அசட்டு ஊதாரியும், அதிகப்பிரசங்கியுமான மூத்த பிள்ளை, தான்தான் குடும்பத்தைத் தாங்குவதாக எண்ணிக் கொண்டிருக்கிறுன். அவன் பெண்டாட்டி நல்லவள், கெட்டிக்காரி. மாமனுருடைய ஒத்தாசையுடன் ஒரு நாடகம் ஆடி, புருஷன்காரனைத் தனிக் குடித்தனம் போட வைத்து, விழி பிதுங்கப் பண்ணி, அவனுகவே 'போதுமடா சாமி. ஒன்ருகவே இருப்பது மேல்,' என்று சொல்ல வைத்து விடுகிருள்.

குண சித்திரம்—குறிப்பாக ஜெமினியுடையது— அழுத்தமாகவும் வித்தியாசமாகவும் விழுந்திருக்கிறது. அந்த 'உளறல் மன்னன்' ஜெமினி எந்த நேரத்தில் எந்த வார்த்தைகளைப் பேசக் கூடாதோ அந்த நேரத்தில் அந்த வார்த்தைகளை வெகு அழகாக உளறி வைப்பது வழக்கம். அதைக் கேட்டு அப்பா ராகவனும் அம்மா லட்சுமியும் கொதிப்பார்கள்.

ராகவன் பாவம் சாப்பிடும்போது இரண்டு ஏப்பம் விட்டு விடுவார். ஆபீஸ் புறப்பட்டுக் கொண்டிருக்கும் கௌரவ ஜெமினியின் வாய் சும்மா இருக்காது. 'நாற்பது வயசுக்கு மேலே போனுல் கண்டபடி சாப்பிடக் கூடாது. காவ் காவ் என்று இப்படியா ஏப்பம் விடுவது?'' என்று சொல்லி வைப்பார்.

அம்மா நோயாளியாகப் படுத்திருக்கிறபோது, தான் பத்திரிகையில் படித்த ஒரு செய்தியை மனைவியிடம் உரக்க, ''சோவியத் நாட்டிலெல்லாம் வயசானவர்களை வீட்டிலேயே வைத்திருக்க மாட்டார்களாம். தனியே ஒரு தீவுக்கு அனுப்பி விடுவார்களாம்,'' என்பார். இவ்வளவுக்கும் தான் தப்பாக ஏதும் சொல்லி விட்டோம் என்ற உணர்வே இருக்காது.

மொத்தக் குடும்பமும் அப்போதுதான் சாப்பிட உட்கார்ந்திருப்பார்கள். திடீரென்று நாலு விருந்தினர்களைக் கூட்டிக் கொண்டு வந்து சேர்வார் ஜெமினி. எல்லோரும் மேல் ஆபீசர்கள் என்பார். குடும்பத்தினர் தங்கள் தட்டுக்களைக் கவிழ்த்து வைப்பார்கள். சவுகார் பரபரப்புடன், தன் மைத்துனனை ஒட்டலுக்கு அனுப்பி, வடை, ஸ்வீட் வாங்க விரட்டிவிட்டு,

பரிமாறத் தொடங்குவதற்குள் ஜெமினி துடித்துப் போவார்—'எங்கே, வடை எங்கே? ஸ்வீட் பண்ணலையா?' என்று.

அவருக்கு வரட்டுக் கௌரவம், வெட்டி ஆடம்பரம், குடும்பத்தில் யார் எப்படிக் கிடந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாத அலட்சியம். சரியான ட்யூப் லைட். தான் செய்த தவற்றை அத்தனை சாமானியமாய் உணர முடிகிறதா அவரால்? 'என்ன பேசினேன், எங்கே பேசினேன்? யார் சொன்னார்கள், என்ன சொன்னார்கள்?' என்று படபடவென்று பொரிவார். விஷயத்தை மனைவி பிட்டுப் பிட்டு வைத்த பிறகுதான் 'இஸ்ஸ்ஸ்' என்று ஓர் இழுப்பு இழுப்பார். தீர்ந்தது.

கே.எஸ்.ஜி. ரக விளக்கமும் விளம்பரும் இந்தப் படத்தில் பரிபூரணமாய் அமைந்திருக்கின்றன. உதாரணம்: 'இரண்டிலே ஒண்ணு இன்னிக்குத் தெரிஞ்சாகணும்,' என்று மருமகளை மடக்கி விசாரணை துவங்குகிறார் ராகவன்: 'உன் புருஷனுக்கு என்ன சம்பளம்?' 'ஐந்நூறு'. 'அதிலே அவர் செலவுக்கு எவ்வளவு எடுத்துக்கறான்?' 'இருநூறு'. 'மீதி உன் கையில் வருவது?' 'முன்னூறு'. 'ஐந்நூறு ரூபாய் சம்பாதிக்கறவன் முன்னூறு கொடுக்கிறான். இருக்கட்டும். சின்னவனுக்கு என்ன சம்பளம்?' 'இருநூறு. நூத்தி ஐம்பது ஓ.டி. வரும்.' 'அவன் எவ்வளவு கொடுக்கிறான் குடும்பச் செலவுக்கு? சொல்லம்மா. ஏன் தயங்குகிறே?' 'முன்னூறு.' இப்படி..இப்படி.

பொதுவாக, சம்பவங்கள், நடிப்பு, உரையாடல், எல்லாமே ஓவர்தான். பொடி வைத்துச் சொல்கிற நைஸ் வேலையெல்லாம் கே.எஸ்.ஜி. கிட்டே எதிர்பார்க்கக் கூடாது. கரண்டியைத் தணலில் வைத்து ஓர் இழுப்பு இழுத்து விடுவார். நமக்குச் சங்கடமாகத்தான் இருக்கும். என்றாலும் கற்றுக் கொண்ட பாடம் மறக்

கவே மறக்காது என்பதே அதிலுள்ள நன்மை.


கதைப்போக்கில் ஒரு குறை. ஜெமினிக்கு ஞானோதயம் ஏற்படுத்த வேண்டி ஒரு நாடகம் நடத்துவது என்று சௌகாரும் ராகவனும் பேசி வைத்துக்கொண்ட மாதிரி ஓரிடத்தில் தோன்றுகிறது. சில இடங்களில், நிஜ மாகவே சண்டை போட்டுக் கொள்கிற மாதிரி இருக்கிறது. அதற்கப்புறம் வரு கிற மோதல்கள், ஒவ்வொருவரும் மேற்கொள்ளும் கோணங்கள், விவா தங்கள், பதில்கள்— சக்கையாய்ப் பிழிந்து தந்திருக்கிறுர் அந்தக் காட்சி களை. ரொம்ப நீளம் என்பது ரொம்ப நேரத்துக்குப் பிறகுதான் ஞாபகம் வருகிறது.

நாகேஷை எந்தக் கிர கத்திலிருந்தோ இறக்குமதி செய்திருக்கி ருர்கள். ஆ! என்ன மேக்கப்! சபேசா! என்னடா சொல்றே? நான் எந்தக் கிரகத்திலேயிருந்து இறங்கி வந்தேன்னு கேட்கிறுங்கடா..சொல்லேன் பதில்..


ஒரு சம்பவம் குறிப்பிடத் தகுந்தது.

நிலைமை புரியாத ஜெமினி எட்டத்திலிருந்து ''இன்னும் ஸ்வீட் கொண்டு வா,'' என்று உத்தரவு போட, கையைப் பிசைந்த சவுகா ருக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அவர் சொல்லித் தந்தபடி ஓரகத்தி லட் சுமி (புதுமுகம்)வெறும் தட்டில் வாழை யிலையை மூடி வைத்துக் கொண்டு, 'இன்னும் ஒரு ஸ்வீட் போட்டுக் கொள்ளுங்களேன். ஒன்றே ஒன்று,' என்றெல்லாம் ஜெமினியின் நண்பர் களை விழுந்து விழுந்து உபசரிப்பது போல் பாவலா காட்டும் இடத்தில், 'சரி போடு,' என்று யாரும் சொல்லி விடுவார்களோ என்று நமக்கே பக்பக் என்று இருக்கிறது. அப்படியிருக்க, கதவுக்கு அந்தண்டை காத்திருக்கும் சௌகார் அண்ட் ஃபாமிலியின் இரு தயம் எப்படி அடித்துக் கொள்ளும் என்று சொல்லவும் வேண்டுமா? சவுகார் எட்டடி பாயச் சொன்னுல் ஓரகத்தி பதினுறடி பாய்வது ஒரு டேஞ்சரான வேடிக்கைதான்.

குடும்பத்தில் ஏற்படக்கூடிய சில இயல்பான சிக்கல்களை உற்சா கத்தோடு எடுத்துக் காட்டியிருக்கிறுர் கோபாலகிருஷ்ணன். அரசியல் சாடல் களும் இல்லாமல் இல்லை.



விட்டேனு பார். அடித்து நொறுக்கி விடுகிறேன்.
தாங்கள் நல்ல உள்ளம் படைத்தவர்கள் தாக்குங்கள்! பணிவோடு பொறுத்துக் கொள்கிறேன்.
பாராட்டுக்கள்
ராஜாராம் நாயுடு



உனக்கு இரை போட்டுக் கட்டுபடி யாகலை. இனிமேல் உன் பாட்டை நீயே பார்த்துக்கொள்.
இப்படிக் காவு கொடுக்கிறதற் இத்தனை நாள் வளர்த்தீங்க
உலகம்
அமெரிக்க பாதுகாப்பு
அமெரிக்கா
வட வியட்நாம்
தெற்கு வியட்நாம்

ணவனைக் கொலை

தமிழக அரசாங்க ஊழியர்
வேலையில் இருக்கும்போது இறந்து
விட்டால் அந்தக் குடும்பத்தினருக்கு
அரசு ரூபாய் பத்தாயிரம் வழங்
கும் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது.
ஒர் ஆசிரியரை அவருடைய மனைவி
அந்தப் பத்தாயிரம் பெறுவதற்காக
கொலை செய்ததாக வழக்குப் பதிவாகி
இருக்கிறது.

செய்து விட்டு

மதுரை மாவட்டம் திரு
மங்கலம் சவுகத்அலி முஸ்லிம் தெருவில்
பள்ளி ஆசிரியர் பழனிச்சாமித் தேவர்
என்பவர் ஒரு நாள் இரவில் இறந்து
விட்டார்.

இறந்த பின் சம்பிரதாயப்
படி கொட்டு மேளங்களுடன் சவ

பத்தாயிரம் ரூபாய்

அடக்கம் நடந்தது. அவர் கள்ளர்
பள்ளியில் ஆசிரியராக இருந்து வந்த
வர். இந்த ஆண்டு ஏப்ரலில் வேலையில்
இருந்து ஓய்வு பெறுவதாக இருந்தது.
ஆனால் வேலைக் காலத்துக்கு முன்பே
இறந்துவிட்டதால் அரசிடமிருந்து அவ
ருடைய மனைவி அமிர்தம்மாள் ரூபாய்
பத்தாயிரம் கோரி அதை அடையவும்

வாங்குவது எப்படி?

அடைந்துவிட்டார். அமிர்தம்மாளும்
ஆசிரியையாக இருந்து வருபவர்.

1.3.75'ம் தேதியன்று திரு
மங்கலம் போலீஸ் இன்ஸ்பெக்டர்
திரு.கே. ராமசாமி இறந்தவரின் மனைவி
மீதும், இன்னும் ஐந்து பேர் மீதும் இ.
பி.கோ. 302, 201 பிரிவின்படி வழக்குத்
தொடர்ந்தார். பழனிச்சாமித் தேவரை

அவரது மனைவியும் இன்னும் ஐந்து
பேரும் சேர்ந்து கொலை செய்துவிட்டுப்
பிணத்தை எரித்துவிட்டதாக வழக்கு
தொடரப்பட்டிருக்கிறது.

போலீஸ் விசாரணையில் ஆசி
ரியை அமிர்தம்மாள் கொடுத்த வாக்கு
மூலத்தின் சுருக்கம்:

என் கணவர் சிறு பிராயத்
திலேயே ஒரு கால் ஊனமானவர்.
1943'ல் எனக்கும் அவருக்கும் திரு
மணம் நடந்தது.

'என் கணவர் சாராயம்
குடிக்கும் பழக்கம் உள்ளவர். எனக்கும்
அவருக்கும் தகராறு ஏற்பட்டு வந்தது.
கடன் வாங்கிச் செலவழித்தார். பணம்
கேட்டு என்னைக் கொடுமைப்படுத்தி
னார். சித்திரவதைப்பட்டு வந்தேன்.
இது விவரத்தை என்னுடைய தங்கை
மகன் மாயாண்டியிடம் தெரிவித்தேன்.
என் கணவரைக் கொலை செய்துவிட
வேண்டும் என்றான். என் கணவரின்
கொடுமைகளில் இருந்து விடுபட்டு
வாழ ஆசைப்பட்டு, கணவரை கொலை
செய்வதற்காக இரண்டாயிரம் கொடுப்
பதாகவும் முதலில் ஆயிரம் ரூபாயும்,
கணவர் கொலை செய்யப்பட்ட பின்
அரசாங்கத்திடம் பத்தாயிரம் வாங்
கியபின் ஆயிரம் கொடுப்பதாகவும்
பேசி முடித்தேன். 30.10.74ம் தேதி
இரவில் மாயாண்டி மற்ற மூன்று பேர்
களுடன் வந்து என் கணவரைக் கொலை
செய்துவிட்டுச் சென்றார்கள்.'

வழக்கு தற்சமயம் விசாரணை
யில் இருந்து வருகிறது.

—ஆர். தர்மராஜ்



...கொலையுண்ட ஆசிரியர்...



யாருக்கு மாப்பிள்ளை யாரோ? ■ ▪

ஆரம்பமெல்லாம் சுமார் தான். நீச்சல் குளத்தில் தன் உயிரைக் காப்பாற்றிய ஜெய்சங்கரை, மூன்று மாதத்தில் சாகப் ்போகும் பிளட் கான்ஸர் பேஷண்ட் என்று தவறுதலாக நினைத்துக் கொண்டு ஜெயசித்ரா அவரிடம் அனுதாபம் காட்டி நெருங்கிப் பழகும் போதும் சரி; கண்டிப்புக்கார மனைவியான ஃபடாஃபட் ஜெயலட்சுமியிடம் காணமுடியாத சுகத்தை ஷர்மீலியிடம் (சகுந்தலா) ஸ்ரீகாந்த் காணும் போதும் சரி; படம் ரொம்பச் சாதாரணமாக இருக்கிறது.

ஆனால் அடுத்த கட்டத்தில், அதாவது மனைவியிடம் ஸ்ரீகாந்த் கையும் களவுமாக அகப்பட்டுக் கொள்ளக்கூடிய நேரத்தில், நண்பன் ஜெய்சங்கரின் மனைவிதான் சகுந்தலா என்று அறிமுகப்படுத்தித் தப்பித்துக் கொண்ட பிறகு ஆரம்பிக்கிறதே சிக்கல், அது மேன்மேலும் சிக்கலாகிக் கொண்டே போகும் விதம் சிரித்துச் சிரித்து வயிறே சிக்கலாகி விடும்படி செய்துவிடுகிறது.

அத்தனையும் நம்ப முடியாத சம்பவங்கள்தான் என்றாலும், பிற்

பகுதியைப் பொறு... வரையில் எல்... ருமே நம்பும்படி ... திருக்கிறார்கள்.

துப்பாக்கி பிடி... வி. கே. ராமச... தான் துர்ப்பாக... வான். மற்றப்... (பழைய பாத்தி... தான் என்று ஆ... சந்தோஷத்தை... கொண்டாட அ... புட்டி, துக்கத்... மறக்க அரைப் பு... என்று குடிக்கும் சு... ராஜனும் அவர் ஜோ... யான ஸி. கே. ச... வதி ஆகட்டும்; ம... ரமாவும் அவரு... லோட்டா போ... அவர் கணவன் அ... களுகட்டும்; நகை... சுவைக்குத் தங்க... லான பங்கைத் த... ளமாகவே செ... யிருக்கிறார்கள்.

ஜெய்சங்கர் — ... காந்த் நட்பின் நெ... கம் இதம். ஆரம்... தில் பரிதாபப்பட்டு ஏதோ கொஞ்... உதவப் போய், அடுத்தடுத்து எத்த... பழிகளை நண்பனுக்காக ஏற்றுக் கொ... நேருகிறது! ஐயோ பாவம், ஜெய்... கர். அவர் கொஞ்சம் முரண்டு... போதும், 'டேய், காப்பாத்துடா... என்று சடாரென்று அவர் கா... பிடித்துக் கொண்டுவிடுகிறாரே ஸ்ரீகா... அப்போதும் சரி, மாமனாரோ ... வியோ ஓர் உத்தரவு போட்ட... போதும், 'ஆகட்டும் மாமா, ... படியே செய்கிறேன்,' என்று தா... (ஜய்ங் ஜக் என்று நிஜத் தாள... போடுகிறாரே அப்போதும் சரி ... காந்த் ரொம்பப் பொருத்தமாய் இ... கிறார்.

படாபட் ஜெயலட்சுமி... முகபாவம் போதாது. இருந்தா... அந்தக் கெடுபிடி, அலட்சியம், து... முனகலிலும் ஓர் அதட்டல் இவை ... லாம் அதற்கு ஈடுசெய்கின்றன.

ஆள்மாறாட்டக் கோமா... கூத்துத்தான். ஆனாலும் ரசிக்கும்... யான கோமாளிக் கூத்து.

மீனுவின் மாமியார் பாகீரதி தங்கக்கட்டி. ஒரு வார்த்தை அதிர்ந்து பேச மாட்டாள். ஊரில் மீனுவின் அம்மா, வார்த்தைக்கு வார்த்தை, "துப்பு இல்லை. குதிர் மாதிரி வளர்ந்து இதுகூடத் தெரியவில்லை!" என்று சாடுவாள். அவள் மாமியார் அப்படி இல்லை. இதமாக, "நீ செய்வதும் சரிதான். இருந்தாலும் இப்படிச் செய்தால் இன்னும் நன்றாக இருக்கும்!" என்றுதான் திருத்துவாள். மீனுவின் நாத்தனார் விஜயாவுக்குக் கல்யாணம் நிச்சயமாயிற்று. ஆனால் முகத்தில் மகிழ்ச்சியே இல்லாமல் பாகீரதி சிந்தனையில் மூழ்கியிருந்தது மீனுவுக்கு என்



மீனிங்லெஸ்

னவோ போல் இருந்தது. பெற்ற பெண்ணை இன்னொரு வீட்டிற்கு அனுப்பும்போது ஒரு தாய்க்கு வருத்தம் ஏற்படுவது இயல்புதான். ஆனால், அது மகிழ்ச்சி கலந்த ஒரு துன்பம். விரும்பி ஏற்கும் கசப்பான மருந்து.

"ஏன் அம்மா, ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?" என்று மீனு கேட்டாள் மாமியாரை.

"விஜயாவுடன் நீ அதிகம் பழகவில்லை. காலேஜ்லீவு என்றால்தானே இங்கே வருகிறாள்? அவள் சுபாவம் உனக்குத் தெரியாது," என்றாள் பாகீரதி.

"ஏன் அம்மா, நன்றாகக் கலகலப்பாகப் பழகுகிறாளே!"

"ஒரே பெண் என்று அவள் அப்பாவும் செல்லம் கொடுத்து வளர்த்து விட்டார். அப்படிப்பட்ட அப்பா ஏதோ ஒரு நாள் கோபமாக இரண்டு வார்த்தை பேசிவிட்டார் என்பதற்காக

அன்னம்

ஒரு வாரம் பூராவும் அவருடன் ஒரு தரம்கூடப் பேசவில்லை.''

''பார்த்தால் அப்படித் தெரியவில்லையே!'' என்றுள் மீனு நம்ப முடியாமல்.

''இது வரையில் அவள் எண்ணப்படி எல்லாம் நடந்தது. இப்போது இன்னொரு வீட்டிற்குப் போகிறுள். அங்கே மாமியார் எப்படியோ, புருஷன் எப்படியோ? அனுசரித்துக் கொண்டு போகத் தெரிய வேண்டாமா? எதையாவது எதிர்த்துச் சொல்லிச் சண்டை பிடித்துக் கொண்டு வந்து நிற்கப் போகிறுள்!''

மீனுவுக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

''நான் ஒன்று சொல்கிறேன் கேளுங்கள். . இன்னும் பதினைந்து நாட்களுக்கு நீங்கள் என்னை எப்படி வேண்டுமானுலும் அதிகாரம் செய்யுங்கள். . கொஞ்சம் 'ஓவரா'கக்கூட இருக்கட்டும். விஜயா பார்க்கட்டும். மாமியார் என்றுல் இப்படித்தான் என்ற அனுபவம் வரட்டும்... அப்புறம் எங்கேயும் எதிர்த்துப் பேசமாட்டாள்!'' என்றுள்.

''போடி அசடே! நீ தங்கம் அல்லவா? உன்னைக் கோபித்துக் கொள்ள யாருக்கு மனம் வரும்?'' என மறுத்தாள் பாகீரதி.

''பரவாயில்லை அம்மா. இது நாடகம்தானே? ஒரு நல்ல உத்தேசத்துடன் தான் செய்கிறீர்கள்,'' என்று மீனு வற்புறுத்திச் சம்மதிக்க வைத்தாள்.

காலையில் மீனுவின் கணவர் ரயிலடிக்குப் போய் விஜயாவைக் கூட்டி வந்தார்.

விஜயா, மீனுவைப் பார்த்ததும், ''என்ன அண்ணி! எப்படி இருக்கிறீர்கள்? இத்தனை நாள் தூக்கி வைத்து விளையாட எனக்கு ஒரு மருமகன் கிடைப்பான் என்று எதிர்பார்த்தேன். ஏமாற்றிவிட்டீர்களே!'' என்றுள் உரிமையுடன்.

''உன் அண்ணியே இன்னும் குழந்தை மாதிரிதானே இருக்கிறுள்? மசமசவென்று நிற்பதைப் பாரேன். . தெருவில் கிடக்கிற சாமான்களைக் கொண்டு போய் உள்ளே வைக்கத் தோன்றுகிறதோ? எல்லாம் நான் சொல்ல வேண்டும். தனக்காக ஒரு முன் யோசனை கிடையாது. .'' எனப் பொரிந்து தள்ளினுள் பாகீரதி.

கூடவே மீனுவைச் சாடையாகப் பார்த்துத் தன் கண்களால், 'சரிதானு?' எனக் கேட்டாள். மீனு தலையை லேசாக அசைத்தாள்.

விஜயா முகம் கழுவிப் பொட்டிட்டு வருவதற்குள் காப்பியைக் கொண்டு போய் மேஜையின் மேல் வைத்தாள் மீனு.

''பட்டிக்காடு, பட்டிக்காடு! அவள் உள்ளே வந்த பிறகு காப்பியைக் கலந்தால் என்ன? மாட்டுக்குத் தொட்டி கலக்குறுப்போல் காப்பியைக் கலந்து வைத்தால் நன்றுக இருக்குமா? அப்படிச் செய்யாதே என்று எத்தனை முறை சொல்வது?'' என இரைந்தாள் பாகீரதி.

அன்று மாலை, விஜயா கேட்டாள் என்பதற்காக மீனு வீணையை எடுத்து இரண்டு பாட்டு வாசித்தாள்.

''ரொம்ப நன்றுக இருக்கிறது! டிபன் செய்யப் போகாமல் வீணைக் கச்சேரியா? சமையலறைக்குப் போகவே உடம்பு வணங்குவதில்லை! ஊம்!'' என்று பாகீரதி அதட்டினுள்.

''இப்போ என்னம்மா டிபனுக்கு அவசரம்? நான்தான் வாசிக்கச் சொன்னேன்,'' என்றுள் விஜயா. தன் தாயாரின் அதிகாரம் அவளுக்கே அதிகமாகப்பட்டிருக்க வேண்டும்.

பாகீரதி சாமர்த்தியமாகச் சமாளித்தாள்.

''ஓஹோ. எனக்கே புத்தி

படுக்கை

லண்டனில் நடைபெற்ற ஒரு பர்னிச்சர் கண்காட்சியில் இந்தப் படுக்கை பரிசு பெற்றிருக்கிறது. இந்தப் படுக்கையின் கால்மாட்டில் எட்டு கன சதுர அடி காலி இடம் இருக்கிறது. தலையணை, போர்வை முதலியன வைத்துக் கொள்ளலாம். தலைப் புறத்தைத் தக்கபடி ஏற்றியிறக்க வசதி உண்டு.

—வேணு



சொல்கிறுயா? உன் விதண்டா வாதத்தை எல்லாம் உன் சினேகிதிகளுடன் வைத்துக் கொள். நாளேக்கு ஒரு வீட்டில் குப்பை கொட்டப் போகிற பெண். வாய் கிழியப் பேச வேண்டாம்..''

அந்தப் பத்து நாட்களில் நாடகம் பிரமாதமாக நடந்தது.

விஜயாவிற்குக் கல்யாணம் ஆயிற்று. அவள் மாமியார் ரொம்பவும் சாது. வெகுளியாகத் தெரிந்தாள்.

''இப்படி ஒரு நாடகம் ஆடியிருக்கத் தேவையில்லேயே!'' என்று கூட மீனு நினேத்தாள்.

விஜயா மீனுவிடம் தனியாக விடைபெற்றுக் கொள்ள வந்தாள்.

''உன்னேப் பார்த்தால்தான் பாவமாக இருக்கிறது அண்ணி! என் அம்மா... அம்மாவா அவள்...? ராட்சஸி — உன்னேப் பம்பரமாய் ஆட்டுகிருள் என்றுல், அதற்கு நீதான் காரணம். நீயாகத் தருவித்துக் கொண்டதுதான். குட்டக் குட்டக் குனிந்து கொண்டே வந்திருக்கிருய். இப்போது? நிமிர முடியவில்லே. ஆரம்பத்திலேயே இரண்டு அதட்டல் போட்டு அடக்கி வைத்திருக்க வேண்டும். வளரவிட்டு விட்டாய். அடுத்த தடவை பார்.. என் மாமியார் என்னேக் கண்டு எப்படி நடுங்குகிருள் பார்.. . ஆரம்பத்திலிருந்தே நான் யார் என்பதைக் காட்ட மறப்பேனு? இங்கே நடக்கற கூத்தைப் பார்த்த பிறகு எச்சரிக்கையாக இருக்க மாட்டேனு?'' என்றுள்.

மீனுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவர்கள் ஒன்று நினேத்தால் — நடந்தது...? நாடகமே மீனிங்லெஸ் ஆகிவிட்டதே! ஐயோ பாவம். விஜயாவின் மாமியார்.. இந்த வாயாடி எப்படியெல்லாம் ஆட்டி வைக்கப் போகிருளோ?

பாகீரதி பெண்ணேக்கொண்டு போய்விட்டு, ஊரிலிருந்து திரும்பி வந்தாள். பயண அலுப்பு. இரவில் உடனே படுக்கப் போய்விட்டாள்.

மறு நாள் காலே. மணி ஆறு அடித்து இருக்கும். மீனு புரண்டு புரண்டு படுத்தாள்.

''இது என்ன குடும்பம் நடத்தற வீடா? இல்லே சத்திரமா? கேட்கிறேன். வெயில் உறைத்தும்கூட எழுந்திருக்காத பெண் ஜன்மம் என்ன ஜன்மம்? வயது மட்டும் ஆனுல் போதுமா..? பொறுப்பு வளர வேண்டாம்!'' அவள் மாமியார் கத்திக் கொண்டிருந்தாள். நல்ல வேடிக்கை! நாடகத்தை இன்னும் எதற்காக நடிக்கிருர்?

மீனு சிரித்துக் கொண்டே வெளியே வந்தாள்.

''என்ன சிரிப்பு வேண்டியிருக்கிறது. போய்ப் பல்லே விளக்கிவிட்டு அடுப்பைப் பற்றவை... பால் கறந்து வந்து அரை மணி ஆகிறது..!'' என்றுள் பாகீரதி கடுகடுப்பு மாருமல்.

மீனு திடுக்கிட்டாள். விஷயம் புரிந்தது. தன் தலேயில் தானே மண்ணே வாரி இறைத்துக் கொண்டு விட்டாள். புலிக்கு மனித வாடை எப்படிக் காட்டக் கூடாதோ, அப்படியே மாமியாருக்கு அதிகார வெறியைக் காட்டியிருக்கக் கூடாது. அந்த 'ருசி' அவளே அடியோடு மாற்றிவிட்டது.


காட்பரிஸ்
Cadbury's
5 star
5 ஸ்டார் இனிப்பும் சுவையுமிக்கது!
இனிமையான காட்பரிஸ் 5 ஸ்டார்
இனிப்பூட்டும் காரமல்,
இன்சுவையுள்ள நுகட்டின் மற்றும்
போஷாக்குள்ள மில்க் சாக்கலேட்
கொண்டது.
இளம் உள்ளங்களின்
இன்பப் பூரிப்பு—
காட்பரிஸ் 5 ஸ்டார்!
AIYARS-C.275 REV. TM.



எல்லோரையும் புதிய டெபுடி மானேஜர் ராஜனுக்கு அறிமுகம் செய்த பிறகு, ஓரே ஒரு பெண்தான் எஞ்சி நின்றாள்.

அவளிடம், "இவர்தான் நம்ம ஆபீசுக்குப் புதுசா வந்திருக்கிற டெபுடி மானேஜர்..." என்றார் துணை மானேஜர் ஆசீர்வாதம்.

ராஜன் லேசாக முகத்தைச் சுண்டினார். இதுவரை, மற்ற ஊழியர்களைத் தனக்கு அறிமுகம் செய்து வைத்ததுபோல் செய்யாமல், தன்னை அவளுக்கு அறிமுகப்படுத்திய பாணியும் அந்தப் பாணியில் ஆசீர்வாதம் காட்டிய குழைவும் அவருக்குப் பிடிபடவில்லை. பிடிக்கவுமில்லை. பெண்ணிடம்—அவள் எவ்வளவு கீழான அந்தஸ்தில் இருந்தாலும்—ஆணைத்தான் முதலில் அறிமுகம் செய்து வைப்பது மேல்நாட்டு வழக்கம் என்பது அவருக்குத் தெரியும். என்றாலும், பிற பெண்களை ஆசீர்வாதம் இந்த முறையில் அறிமுகப்படுத்தவில்லையே?

"அந்த அம்மா யாருன்னு நீங்க சொல்லவில்லையே?" என்றார் ராஜன்.

"மறந்துட்டேன்...இவங்க... மிஸ்...இல்லை... மிஸஸ்...இரண்டும் இல்லை...வந்து..."

அந்தப் பெண் குறுக்கிட்டாள்.

''நான்தான் இந்த ஆபீஸில் கிரேட் ஒன் அக்கௌண்டெண்ட். வேறு எந்தத் தகவலும் தேவையா?''

ராஜன் அதிர்ந்து போனுர். சமாளித்துக் கொண்டே, ''மே ஐ நோ யுவர் நேம்?'' என்றுர்.

''ஏஸின்னு கூப்பிட்டா போதுமானது...நீங்க கேட்கிறதினுலே சொல்றேன்...என் பேர் பத்மாவதி..''

ராஜன், அவளை ஏற இறங்கப் பார்த்தார். நாற்பத்தைந்து வயதை முப்பதாகக் காட்டிய மேக்கப்; வெறும் அழகுக்காக நெற்றியில் வைக்கப்பட்ட குங்குமம்; நரைகளை மறைக்கும் கறுப்பு மை. நாலைந்து பிராக்களை ஒன்றன் மேல் ஒன்று போட்டதுபோல் காட்சியளித்த மார்பகம்; லேசாக வீங்கியிருந்த குதிகால்களை மறைத்த சந்தன நிறச் செருப்பு; இளக்காரமான சிரிப்பு; துச்சமான பார்வை.

ராஜன் அவள் மீது நாட்டிய கண்களை எடுக்கவில்லை. அது பிடிக்காதது போல், பத்மாவதி தனது நாற்காலியில் அலட்சியமாக உட்கார்ந்தாள். டெபுடி மானேஜர் போன பிறகு உட்காரலாம் என்று நின்று கொண்டிருந்த ஊழியர்கள், அவள் உட்கார்ந்ததைப் பார்த்ததும், ராஜனின் முகத்தை 'ரியாக்ஷனுக்காகப்' பார்த்தார்கள்.

நிலைமையை எப்போதும் எல்லோரை விட்டுவிட்டுப் பிறகு என்ன செய்வதென்று புரியாமல் தவிக்கும் ஆசீர்வாதத்துக்கு அன்றைக்கு சமயோசித புத்தி வந்து விட்டது.

''லெட் அஸ்...உங்க ரூமுக்குப் போகலாம் ஸார்,'' என்று நகர்ந்து நிலைமையைச் சமாளித்தார்.

மணி பதினுென்று.


ஆபீஸ் பியூன் வந்து பத்மாவதியின் காதைக் கடிக்க, அவள் ஜெனரல் மானேஜர் அறையை நோக்கி நடந்தாள்.

எல்லாரும் விழித்தார்கள்.

''நம்ம ஜெனரல் மானேஜர் டூர் போயிட்டு நைட்டுதான் வந்தார். அதாவது இப்போது நாலு நாளாய்ப் பத்தினி பத்மாவதியை பார்க்காம இருந்திருக்கார்...அதனுல அவளைச் சந்திக்கத் துடிச்சிக்கிட்டு, பத்து நிமிஷம் டி.எம்.மை வரவழைத்துப் பேசினுர். இப்போது பத்தினியோட கொஞ்சிக்கிட்டிருக்காரு...'' என்றுர் திருப்பதி ஹிப்பி அருணுசலம். (திருப்பதிக்குப் போய் முடி எடுத்துக் கொள்ள வேண்டியவர்.)

''என்ன இருந்தாலும், இவளுக்கு இவ்வளவு ராங்கி இருக்கக் கூடாது. டெபுடி மானேஜர் நிற்கும் போதே எவ்வளவு அலட்சியமா உட்கார்ந்தா பார்த்தீங்களா?'' என்றுர்கள் சிலர்.

''அவளை என்ன பண்ண முடியும்? அவளும் பதினைந்து வருஷமா அட்டகாசம் பண்ணுறுள்... தட்டிக் கேட்க ஆளு இல்லே.''



'கடல்மணி'

"காலம் இப்படியே போகாது."

"ஏன் போகாது? இந்தப் பதினைந்து வருஷத்துல ஏழு ஜெனரல் மானேஜர்கள் பார்த்திருக்கேன். ஏழு பேர்ல ஆறு பேரைக் கைக்குள் போட்டுக்கிட்டா. மசியாம இருந்தான் ஒருவன்...பம்பாய்க்குப் போய், எம்.டி. கிட்ட ரெண்டு நாள் தங்கியிருந்து அவனையும் மாத்திட்டா...அவளை யார் என்ன பண்ண முடியும்?"

மிஸஸ் சொர்ணம் பொருமினாள்.

"கடவுள்னு ஒருவர் இருக்கார்...அவளுக்கு சல்யூட் அடிக்கலே என்கிறதுக்காக ஒரு அப்பாவி குமாஸ்தாவை கோள் சொல்லி அந்த மான்சுக்கு மாற்றும்படி பண்ணினா... ஒரு நாள் சீக்கிரம் போறதுக்கு பெர்மிஷன் கொடுக்கலேங்கறதுக்காக அஸிஸ்டெண்ட் மானேஜரைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாகச் சொல்லி 'டிமோஷன்' வாங்கிக் கொடுத்தா... அவ கண் விழுந்த குடும்பமெல்லாம் நாசமாப் போச்சு...அவள் என்ன கெட்டா போயிட்டாள்?"

"இப்போ வந்திருக்கர டி.எம் நேர்மையானவராத் தெரியுது..பொறுத்துப் பார்ப்போம்."

"என்னத்த பாக்குறது... இந்த ஆபீஸில ஜி.எம்.முக்கு அடுத்தபடியா இருக்கிற 'டி பேக்டோ' ஆபீசர் பத்தினி பத்மாவதிதான்.. டி.எம். ஒரு 'குளோரிபய்ட் கிளார்க்'. அவ்வளவுதான்."


பத்மாவதி வருகிறாளா என்று பார்த்துக் கொண்டிருந்த அவர், ஒரு மணி நேரம் கழித்து அவள் வெளியே வந்ததும், "டேய் நிறுத்துங்கடா...பத்தினி வருது... டேய் மோகன்...காலு மேல காலு போடாதேடா... ஹிப்பி, பார்த்தால் பம்பாய்க்குத் தூக்கும்படி பண்ணிடுவா.." என்றார்.

பத்மாவதியின் காலில் இருந்த 'மெட்டி' ஜல்ஜல் சத்தத்தைக் கொடுக்க, மோகினிப் பிசாசு போல் அவள் வந்தாள்.

அவளுடைய மேக்கப் கலைந்திருந்ததையும், தலையில் இருந்த பூவின் 'கன பரிமாணம்' குறைந்திருப்பதையும் அருணாசலம் கவனிக்கத் தவறவில்லை.

பத்மாவதி வந்ததும் செக்ஷனில் நான்கு பக்கமும் பார்த்துவிட்டு, லாவகமாக உட்கார்ந்தாள். செக்ஷனில் என்ன பேசினார்கள், எவ்வளவு நேரம் பேசினார்கள் என்பதெல்லாம் இன்னும் ஒரு மணி நேரத்தில் அவள் காதுக்குப் போய்விடும். அவளைப் பற்றிக் கிண்டல் செய்தவர்களில் 'எட்

காலம்சென்ற இசைமேதை ஓம்கார்நாத் டாகுர், ஒரு கச்சேரியில் பாடிக் கொண்டிருந்தார். முன் வரிசையில் நேருஜியும், வேறு ஒரு முக்கிய நபரும் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தனர். இசைமேதை திடீரென்று பாட்டை நிறுத்திவிட்டார். பிறகு நேருஜியிடம், 'நீங்கள் பேசி முடித்தபின் பாடுகிறேன்' என்றார்.



நேருஜி பண்பாடு தெரிந்தவர். கோபிக்காமல் புன்னகையுடன் பாடகரின்கண்டனத்தை ஏற்றுக் கொண்டார். பிறகு பேசவேயில்லை. கச்சேரி முடியும் வரை இருந்தார்.

ஆதாரம்: டைம்ஸ் அ·ப் இந்தியா

—செம்பா



ஆந்திராவில் நாடகம் ஒன்றில் வாணிஸ்ரீ நடிக்கும்போது ஒரு காட்சியில் ''எங்கே போய்விட்டு வருகிருய்?'' என்று மற்றவர் கேட்டதற்கு, ''நாகேஸ்வரராவ் நடித்த தேவதாஸ் போய்விட்டு வருகிறேன்'' என்று கூறினராம். —சொந்த வசனத்தில். நாடகத்துக்கு வந்திருந்த கிருஷ்ணுவுக்கு—புதிய தேவதாஸில் நடித்திருப்பவர்— இதனல் கோபமுண்டாகி எழுந்து போய்விட்டாராம்.

—ரா. ரா.

டப்பன்களுக்கு' குறைச்சலில்லே. இன்னும் கொஞ்ச நேரத்தில் போய், ''உங்களேப் பத்தி ஹிப்பி இப்படிப் பேசினன்...மஞ்சள்காரி இப்படி இப்படிச் சொன்னுள்...'' என்ற முன்னுரையுடன், ''எனக்கு ஒரு வாரம் கோவாவுக்கு போய்ட்டு வரணுன்னு ஆசை... அம்மாதான் தயவுபண்ணி ஜி.எம். கிட்டச் சொல்லி டூர்ல அனுப்பணும்,'' என்ற நடுவுரையுடன், ''உங்களேப் போய் இப்படிப் பேசுருங்க பாருங்க...அவங்க நாக்குல சீக்கு வர,''' என்ற முடிவுரையுடன் சில பேர்வழிகள் போவதும், வருவதும் அங்கே சகஜம்.

ராஜன் வந்து ஒரு மாதம் ஆகி விட்டது.

ஒரு நாள், வேகமாக அந்த செக்ஷனுக்குள் நுழைந்தபோது, பத்மாவதி அவசர அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்போது மணி மூன்று இருக்கும். அவள் புறப்படுவதைப் பொருட்படுத்தாமல், ''மேடம், நான் சொன்னபடி நாலு மணிக்குள் அந்த ஸ்டேட்மெண்டைக் கொடுத்திடுவீங்கன்னு நினைக்கிறேன்,'' என்ருர்.

பத்மாவதி, அவர் சொன்னதைக் காதில் வாங்காமல், புறப்படுவதற்குரிய ஆயத்த வேலைகளில் இறங்கினள். ராஜன் எரிச்சலுடன், ''நாலு மணிக்குக் கொடுத்திடுவீங்கல்ல?'' என்ருர்.

பத்மாவதி அவரை அலட்சியமாகப் பார்த்தாள். ''நான் நேத்தே ஜி.எம்.மிடம் சீக்கிரம் போறதுக்குப் பெர்மிஷன் வாங்கிட்டேன்... ஐ ஆம் கோயிங்.''

''இன்னைக்கு நான்தான் இன் சார்ஜ்... நீங்க போறதுக்கு நான் பெர்மிஷன் கொடுக்கலே...''

''நீங்க யாரு எனக்குப் பெர்மிஷன் கொடுக்க? நான் போகத்தான் போறேன்.''

''டோண்ட் டாக் நான்சென்ஸ்...நம்ம கம்பெனி மேல சந்தேகப்பட்டு, மனுபலி கமிஷன் சில தகவல்களைக் கேட்டிருக்கு... எம்.டி. டெலிபிரிண்டர் மெஸேஜ் கொடுத்திருக்கார்... அந்த ஸ்டேட்மெண்ட் இன்னைக்குப் போயாகணும்...''

''அது யுவர் ஹெட்டேக். என் டாட்டருக்கு இன்றைக்கு பெர்த்டே. ஜி.எம். அதற்காகவே இன்னைக்கு லீவு போட்டுட்டு என் வீட்ல பிரிப்ரேஷன் பண்ணிக்கிட்டிருக்காரு...''

ராஜன் ஏதோ சொல்லப் போனர். கைப் பையைச் செல்லமாகத் தட்டிவிட்டுக் கொண்டே அவரை இளக்காரமாக ஏறிட்டு நோக்கிவிட்டு அவள் நகர்ந்தாள்.

செக்ஷன் ஜீவன் இல்லாமல் அவரைப் பார்த்தது. ஒரு வாலிபன் மட்டும், ''ஸார்... அவள் மேலே... டிஸிப்ளினரி ஆக்ஷன் எடுக்காட்டால் நீங்க டி.எம்.மாய் இருக்கிறதில அர்த்தமே இல்ல,'' என்று கொதித்தான். அவனை ஹிப்பி அருணுசலம் கண்களால் அடக்கிவிட்டு, இயலாமையில் தவிக்கும் ராஜனைப் பரிதாபமாகவும் அனுதாபமாகவும் பார்த்தார். ராஜன் மௌனமாகத் தன் அறைக்கு

புத்தம் புதிய புத்துணர்வு உங்களுக்கு நித்தமும் வழங்கிடும் குடிகூரா.



உங்கள் மேனிமீது குலவி, என்றும் மாறாப் புத்துணர்வு நாள் முழுவதும் நீடித்திருக்க பதினைந்து மலர் மணங்கள் உள்ளன குடிகூரா டால்கம் பவுடரிலே...தவறாமல் பயன்படுத்தி வந்தால், உங்கள் மேனியை இளமையுடனும், களங்கமில்லாத அழகுடனும் வைத்திருக்கும் குடிகூரா. இதுவே குடிகூரா உங்களுக்கு வழங்கும் வாக்குறுதி.



பாம்பூ சைஸிலும் கிடைக்கிறது.

குடிகூரா

குடும்ப முழுமைக்குமான மணங்கமழும் அனைத்துபயோக டால்கம்.



தவிர, உலகுபுகழ் குடிகூரா சோப்பும் விற்கப்படுகிறது.

JAISONS-3170-TAM

வந்து, ஸ்டெனேவிடம் 'டிக்டேட்' செய்தார்.

சிறிது நேரத்தில் அருணு சலம் ராஜனைப் பார்க்க வந்தார். உட்கார்ந்து கொண்டே, "ஸார்... நான்...உங்களை விட...அஞ்சு வயது பெரியவன்கற உரிமையில பேசுறேன். தப்பா நினைக்காதீங்க. விஷயத்த இதோட விட்டுடுங்க...அவ எத்தனையோ பேர சமாளிச்சவ...பாவம் நீங்க இப்ப தான் பம்பாய்ல இருந்து வந்திருக் கீங்க...பேசாம இருக்காட்டி...பழைய படி பம்பாய்க்குத்தான் போகணும்."

"மிஸ்டர் அருணுசலம்... போய் ஒங்க வேலையைப் பாருங்க," என்ருர் ராஜன்.

"ஸார், அவள் மேல கம்ப்ளெயிண்ட் எழுதி, அனு வசியமா மாட்டிக்காதீங்க. அவளுக்கு ஒரே ஒரு பொண்ணு இருக்கு. அவளை யும் ஜி.எம். கிட்ட நெருங்கிப் பழக விடுரு..."

"அவள் மகளும் அப்படிப் பட்டவள்தானு?"

"அப்படித் தெரியல ஸார்.. அது நல்ல பெண் மாதிரி தெரியுது. ஆனல் அடி மேல் அடி அடிச்சா அம்மி கூட நகரும். சேலையைப் போல நாலு வந்துதானே ஆகணும்...இதே வேகத்துல போனல்...ஜெனரல் மானே ஜர் அந்தப் பொண்ணை...இன்னும் ஒரு வாரத்தில் முடிச்சுடுவான்.. அவன் கணக்குத் தப்புவதில்லை."

திடீரென்று ராஜன் கொதித் தார்.

"யூ ஸ்கேண்டல் மாங்கர்... ஸ்டுபிட்...யூ கெட் அவுட்... ஐ ஸே, கெட் அவுட்!" என்று கத்தி ஞர். அருணுசலம் அவரைப் புரிந்து கொண்டதாக நினைத்தது எவ்வளவு பெரிய தப்பு என்று நினைத்தவர் போல், "அட வெங்கடேஸ்வரா," என்று முணுமுணுத்துக் கொண்டே எழுந்தார்.

மறுநாள், ராஜன் அலு வலகத்திற்குச் சீக்கிரமாகவே வந்து விட்டார். 'புஷ் டோர்' வழியாக, பத்மாவதியும், அவள் மகள் சரோ ஜாவும் ஜி.எம். அறைக்குள் போவதைப் பார்த்தார். ஜி. எம். இன்னும் வர வில்லை. சரோஜாவுக்கு வயது பதி னெட்டு இருக்கலாம். அம்மாவைப் போல கட்டான உடம்பு; துடுக்கான பார்வை.

ஜி.எம். அறையில் பேச்சுச் சத்தம் கேட்டது.

"பாப்பா...நீ ஜி.எம். கிட்ட நடந்துக்கிற முறை சரியல்ல...அவர் உன் மேல உயிரையே வச்சிருக்கார்."

"நேத்து அவரு வயசான வர் என்கிறதினுலே நெருங்க விட்டேன். மறுபடி அப்படி நடந்தால் ஐ வில் கிக் தெட் பெல்லோ."

ராஜன் உன்னிப்பாகக் கேட் டுக் கொண்டிருந்த சமயத்தில், ஜென ரல் மானேஜர் வந்து விட்டார். ஒரே கும்மாளம்; கூத்து. "பேபி தூக் கக் கலக்கத்திலேயும் அழகாகத்தான் இருக்கிருள்..." என்ருர் ஜி. எம்.

"பாப்பா...பாஸ் எவ்வளவு ஆசையோடு பேசுருரு பார்த்தியா... நீங்க பேசிக்கிட்டிருங்க...நான் டாய் லெட்டுக்குப் போயிட்டு வர்றேன்," என்ருள் பத்மாவதி.

நேராக ராஜன் ஜென ரல் மானேஜரின் கதவைத் திறக்கை யில், நாற்காலியிலிருந்து எழுந்த பத்மாவதியை முட்டிக் கொள்ளாத குறைதான்.

ராஜன், ஜி.எம்.மின் கண் களை நேராகச் சந்தித்துவிட்டு, "நேற்று



"உங்கள் மாதர் சங்கத்துக் கென நான் கண்டு பிடித்த தனிக் கொடி."

உபயோகமற்ற பழைய பாண்ட்டில் கால் பக்கப் பகுதியில் ஏதேனும் ஒரு பக்கத்தைத் தைத்துப் பை மாதிரி செய்துகொள்ளுங்கள். அதில் சில பூச்சி மருந்து உருண்டைகளைப் போடுங்கள். தேவை இல்லாத நாளில் குடையைப் பத்திரமாகப் பாதுகாக்க இப்போது கச்சிதமான ஓர் உறை கிடைத்துவிட்டது உங்களுக்கு. அந்துப் பூச்சிகளால் துவாரங்கள் விழாமல் உங்கள் குடை எப்போதும் புதியதாகவே இருக்கும்.

—பி.ஆர். சீனிவாசன்



இந்த மேடம் இன்டிஸிபிளினாய் நடந்துக்கிட்டாங்க,'' என்றார் ஆத்திரத்தோடு. பத்மாவதி சிரித்துக் கொண்டாள். ஜி.எம். எரிச்சலடைந்தார்.

''மிஸஸ் பத்மாவதி நடந்ததை என் கிட்டச் சொன்னாங்க... நான் பெர்மிஷன் கொடுத்திருக்கையில் நீங்க ஏன் அனாவசியமாய் குறுக்கிட்டீங்க?''

ராஜன், பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டே, ''நான் நடந்துகிட்ட விதம் இருக்கட்டும் .. அத்தனை பேர் முன்னிலையிலும் அலட்சியமாப் பேசிட்டு இங்கிதம் இல்லாம நடந்துக்கிட்டது இன்சபார்டினேஷன்,'' என்றார்.

ஜி.எம். எரிந்து விழுந்தார்.

''சில- சமயங்களில் சந்தர்ப்ப வசத்தால் அப்படி ஆயிடுது.. இவங்க ஆப்டர் ஆல் ஒரு அக்கௌண்டெண்ட்.. நீங்க டெபுடி மானேஜர்... என் ரூமிற்குள் இவங்க இருக்கும்போது நீங்க சட்டுன்னு வந்தது இங்கிதமா?''

''இதோ இருக்குதே அப்பாவிப் பொண்ணு...இவளை...உங்க கிட்ட கட்டி விடுறதுன்னு இந்த ராட்சசி துணிஞ்சிட்டாள். இதை என்னால் சகிக்க முடியாது.''

பத்மாவதி கோபத்தோடு எழுந்தாள். சரோஜ் திடுக்கிட்டாள், ஜெனரல் மானேஜர் அதிர்ந்து போனார்.

ராஜன் போட்ட கூச்சலில், செக்ஷன் ஆட்கள் எல்லோருமே அங்கே வந்துவிட்டார்கள்.

''மிஸ்டர் ராஜன்! நீங்க மன்னிப்புக் கேட்டாலும் நான் ஒத்துக்கத் தயாராய் இல்லே. நான் எம்.டி.க்கு இன்றைக்கே ரிப்போர்ட் எழுதப் போறேன். இந்தச் சின்னப் பொண்ணு வாழ்க்கையைக் கெடுத்து, அவள் அம்மாவைத் தண்டிக்க நினைக்கிறீங்க!''

''நீங்க சொல்றது தப்பு. இந்த அம்மாவை இது வரைக்கும் நான் தண்டிக்காம இருந்ததுக்குக் காரணமே இந்தப் பொண்ணுதான்... ஆனால் பெத்த பொண்ணையே ஏலம் போடத் துணிஞ்சவளை நான் தண்டிக்காமல் விடப் போறதில்லே.''

''மிஸ்டர் ராஜன்! நீங்க சொல்றபடியே இருந்தாலும், அது எங்க சொந்த விவகாரம்...இதில தலையிட உங்களுக்கு உரிமை இல்லே.''

''பெத்த தகப்பனுக்கு இல்லாத உரிமை யாருக்கு இருக்கு?'' ராஜனின் இந்தப் பதிலைக் கேட்ட ஜெனரல் மானேஜர் புரியாமல் தவித்தார். பத்மாவதி ஒரு மூலையில் தலையைச் சாய்த்துக் கொண்டாள். சரோஜ், ராஜனை ஆச்சரியத்தோடு பார்த்தாள். செக்ஷன் ஆட்கள், திகைத்தார்கள்.

''இந்தப் பத்மாவதி என் மாஜி மனைவி. இந்தப் பொண்ணு பிறக்கிற வரைக்கும் ஒழுங்கா இருந்தாள். அப்புறம் என் கண் முன்னாலேயே ஒரு ஹெட் கிளார்க்கோட கொட்டம் மடிச்சதைப் பார்த்துட்டு நான் விலகிப் போயிட்டேன். பெத்த மகளையே ஏலம் போடும்போது என்னால் தாங்க முடியலே..நான்...டெபுடி மானேஜர் என்கிற முறையில் இல்லே... தகப்பன் என்ற அவமானத்தால பேசுறேன்.''

ராஜனால் அதற்கு மேல் பேச முடியவில்லை. குழந்தையைப் போல் கேவிக் கேவி அழுதார்.

சரோஜ் அவர் அருகில் போய், அவர் முகத்தை நிமிர்த்திக் கண்ணீரைத் துடைத்துவிட்டாள்.

சின்ன நெருப்புதானே?

சென்னை சூளையில் சைவ சித்தாந்த ஞான பானுவாய் விளங்கியவர் சோமசுந்தர நாயகரவர்கள். இவர் வட மொழியிலும் தென் மொழியிலும் வரம்பு கண்டவர். இவருடைய புலமையைக் கண்டு வியந்து, பாஸ்கர சேதுபதி, 'சைவசித்தாந்த சண்ட மாருதம்' என்று சிறந்த பட்டம் வழங்கினார்.

அந்த நாளில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விரிவுரை புரிவதிலும், நூல் எழுதுவதிலும் தன் வாழ் நாளைக் கழித்தவர். பர சமயங்களை நடுங்க வைக்கும் அஞ்சாத வீர சிங்கமாக விளங்கியவர். சற்று ஏறக்குறைய 125 நூல்களை எழுதித் தமிழகத்துக்கு உதவிய உத்தமர்.

ஆதி சைவ பிரபாவம் என்ற நூல் இவர் எழுதியது.

சைவர் எழு வகைப்படுவர்.

1. அநாதி சைவர்—சிவன்
2. ஆதி சைவர்
3. மகா சைவர்
4. அநு சைவர்
5. அவாந்திர சைவர்
6. பிராவர சைவர்.
7. அந்நிய சைவர்

இறைவனை எப்போதுந் தீண்டி அபிஷேக அர்ச்சனை செய்கின்றவர்கள் ஆதி சைவர்கள். 'முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுகின்றார்.

ஒரு நாள் சோமசுந்தர நாயகர் ஒரு சிவாலயத்துக்குச் சென்று வழிபாடு செய்து கொண்டிருந்தார். அந்தக் கோயில் குருக்கள் வெளியூருக்குச் சென்றிருந்தார். அவருடைய மகன் பன்னிரண்டு வயதுடையவன் பூசை செய்தான்.

தங்கம் இளகினால் அதில் இரத்தினக் கல் பதியும். அது போல் நம் உள்ளம் உருகினால் உருகிய உள்ளத்தில் இறைவன் ஒன்றி விடுவான்.

சைவ சமயத்திற்குத் தாயகமாகிய நாயகர் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி இறைவன் திருமுன் பக்தி செய்து கொண்டிருந்தார்.

அந்தக் கோயிலின் அறங்



காவலர் அங்கு வந்தார். அவர் சிறிது அகம்பாவம் பிடித்தவர். நாம் இக்கோயிலுக்கு அதிகாரி என்ற மண்டைக் கர்வம்.

குருக்களின் புதல்வன் திருநீறு தந்தான். அறங் காவலர் ஒற்றைக் கையால் வாங்கினார். இதனைக் கண்ட நாயகருக்குச் சீற்றம் பொங்கியெழுந்தது.

''ஐயா! கொடுப்பவர் குருக்கள். கொடுக்கப்படுகின்ற பொருள் மகதைஸ்வரியமான விபூதி. மந்திரமாவது நீறு; வேதத்தில் உள்ளது நீறு. முத்தி தருவது நீறு. இது கங்காளன் பூசுங் கவசத் திருநீறு. பாவத்தைப் போக்கி பரகதியைத் தர வல்லது. இத்தகைய திருநீற்றை நீர் ஒரு கையால் வாங்கலாமா? விபூதியை அலட்சியம் பண்ணலாமா? இது உனக்கு அடுக்குமா?'' என்று உரத்த குரலில் மிடுக்காகக் கண்டித்தார்.

அறங்காவலர் நாயகருடைய ஏற்றத்தையறிந்தவர். அவருடைய சீற்றத்தைக் கண்டு சிறிது அஞ்சினார். ''ஐயா! நான் திருநீற்றை அலட்சியம் செய்தேனில்லை. அதைத் தந்தவன் சிறு பையன் தானே?'' என்றார்.

நாயகர் அது கேட்டு ஆலயத்தை வலம் வருவார் போல் சென்று அங்கு ஒரு புறம் புகைந்து கொண்டிருந்த ஊதுபத்தியைக் கொணர்ந்து அறங்காவலருடைய முதுகில் வைத்தார். அவர் ''ஐயோ'' என்று துள்ளினார்.

''ஐயா! என்ன இது? ஊதுவத்தியை என்மீது வைத்தீரே?'' என்றார். நாயகர் ஏளனமாகச் சிரித்து, ''இது சின்ன நெருப்பு தானே?'' என்றார். அறங்காவலர் குருக்கள் மகனைச் சின்னப் பையன் தானே என்ற வார்த்தைக்கு மறு மொழியாகச் சின்ன நெருப்புத்தானே என்றார். அறங்காவலர் நாணினார்.

ஸீஸர் வந்தாயிற்று

கவலை ஏன்?

கப்பல் கம்பெனி சேர்மன் ராமானுஜம் டைனிங் டேபிளில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். காலடியில் அவரது நாய் ஸீஸருக்குப் பெரிய தட்டில் அதற்கான உணவு பரிமாறப்பட்டிருந்தது. அது சும்மா படுத்திருப்பதை அப்போதுதான் கவனித்தவராய், "சாப்பிடுடா. ." என்றார் அவர்.

ஸீஸர் ஒரு வாய் சாப்பிட்டது. பிறகு நகர்ந்து விட்டது.

"என்ன சமாசாரம்? வயிறு சரியில்லையா?"

ஸீஸர் பீரோப் பக்கம் சென்று தாவித் தாவிக் குதித்தது.

"ஓ! உனக்கு உன் பிஸ்கட்தான் வேண்டுமா? உனக்கில்லாததா ராஜா.." கை கழுவியதும், பீரோவைத் திறந்து நாய் பிஸ்கட் பாக்கட்டிலிருந்து ஏழெட்டு பிஸ்கட்டுகளை ஒரு தட்டில் போட்டு வைத்தார்.

ஸீஸர் பிஸ்கட்டுகளை ஆவலுடன் தின்பதுபோல் நடித்தது.

அவர் திருப்தியுடன் தன் அறைக்குத் தூங்கப் போனார். ஸீஸர் பிஸ்கெட்டுகளை ஒவ்வொன்றாகக் கிண்ணத்தில் கொண்டு வந்து போட்டது. கிண்ணத்தை வாயில் கௌவிக் கொண்டது. யாரும் கவனிக்கவில்லை என்று உறுதி செய்து கொண்டபின், பின்புறக் கேட் மீது தாவி வெளியேறிற்று.

பக்கத்திலிருந்த மைதானத்தில் மர நிழலில் ஒருவன் படுத்துக் கொண்டிருந்தான்.

ஜில்லென்று அவன் முகத்தை யாரோ ஈரத் துணியால் அக்கறையாகத் துடைப்பது போலிருந்தது. உணர்வு வரப் பெற்றவனாக விழித்துப் பார்த்தான்.

ஸீஸர்! அருகே ஒரு கிண்ணம். சோறும், மாமிசத் துண்டுகளும் அதில் இருந்தன.


ஸீஸர் அவன் கையைக் கவ்வி அந்தச் சோற்றில் வைத்தது. அவன் முகத்தைப் பார்த்துக் கெஞ்சியது . . அவனுக்குப் புரிந்தது. கண்கள் கலங்கியவனாக, ஒரு கவளம் சோற்றை உருட்டி எடுத்துச் சாப்பிட்டான்.

"உனக்கு வைத்த சாப்பாட்டை எனக்குக் கொண்டு வந்துட்டியேடா . , ."

ஸீஸர் வாலை ஆட்டியவாறு அவன் முதுகை உரசிக் கொண்டு நின்றது. பசி மிகுந்திருந்த அவன் சாப்பிட்டு முடித்ததும், அது கிண்ணத்தை வாயில் கௌவிக் கொண்டு பூட்டிய காம்பவுண்டு சுவரை ஒரே தாவில் எகிறித் தாண்டிக் குதித்துக் கொண்டு உள்ளே போய்விட்டது.

மில் ஒன்றில் பணியாற்றி வந்த பெரிய துரை ரிடையராகி லண்டன் புறப்படவிருந்த சமயம் அவர் வீட்டு அல்சேஷன் நான்கு குட்டிகளைப் போட்டது. துரை அவற்றை விற்கப் பார்த்தார். அவ்வளவு விலை கொடுத்து வாங்குவாரில்லை. தனக்கென ஒரு குட்டியை மட்டும் எடுத்துக் கொண்டு மூன்று குட்டிகளை வென்னீரில் போட்டு அமுத்திவிடும்படி தோட்டக்காரனை தங்கராஜுவிடம் கூறினார். அவன், மனமில்லாமல், ஆனால் துரையின் கட்டளையை மீற முடியாமல் இரண்டு குட்டிகளைப் போட்டு அமுத்தி விட்டான். மூன்றாவதைக் கொல்ல அவ

நீல. குமார்



னுக்கு மனம் வரவில்லை. மூன்றாவதை அவன் கையிலெடுத்தபோது அது அவன் கட்டை விரலைச் சப்பியவாறு இருந்த விதம் அவன் மனத்தைப் பிழிந்துவிட்டது. தானே வளர்க்க ஆரம்பித்தான். துரை அயல்நாடு போனதும் அவனுக்கு வேலை போய்விட்டது. அவ்வப்போது கிடைக்கும் கூலி வேலையில் தனக்குக் கிடைத்த சொற்ப வருமானம் அவனுக்கும் நாய்க் குட்டிக்கும் ஆரம்பத்தில் போதுமானதாக இருந்தது. ஆனால் ஸீஸர் வளர வளர அதற்குத் தீனிபோட அவன் தன் வயிற்றைக்குறுக்கிக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. பால்மட்டும் தினத்துக்கு இரண்டு ரூபாய்க்கு வாங்குவான். 'பைத்தியக்காரா.. உனக்குக் கட்டுபடியாகுமா?' என்பார்கள் அக்கம் பக்கத்தவர்.

அவன் ஸீஸருக்கு முத்தம் கொடுத்தவாறே, 'என் ஸீஸர் எனக்குப் பாரமா?' என்பான்.

கொஞ்ச நாளாக அவனுக்குச் சோதனையாக எந்த வேலையும் கிடைக்கவில்லை.

சுண்ணாம்பு அடிக்கிற வேலையாவது கிடைக்காதா என்று தாணாத் தெருவில் இரண்டு மூன்று நாள் உட்கார்ந்து பார்த்தான். பலனில்லை. தினமும் சிங்கிள் டீயுடனும் இரண்டு புரையுடனும் இரண்டு நாள் தான் தள்ள முடிந்தது.

மிலிடரிக் கடையில் கணக்குச் சொல்லி வாங்குவது அவ



''நிம்பிள் கடைக்கு சேல்ஸ்மேன் வாண்டட்னியே! நான் வரட்டுமா?''
''நம்பள் கடை மேலே வேலைக்கு வரவனுக்கு ஷுகர் கம்ப்ளெண்ட் இருக்கோணும். நிம்பிள்கி சக்கர் வியாதி இருக்கா?''

னுக்குப் பிடிக்காது. கடனை அடைக்க முடியாது என்பது தெரியும்.

பசி வயிற்றைக் கிள்ளியது. மூன்றுவது நாளன்று, சிங்கிள் டீ மாமூலாகச் சாப்பிட்டதும், டீக்கடைக்காரனிடம் கூச்சத்துடன், ''ஒரு அரை பிளேட் பிரியாணி பார்சல் வேணும் அண்ணே, துட்டு அப்புறம் தரலாமா?'' என்றான்.

கடைக்காரனுக்கு அவ்வளவு இஷ்டமில்லை. ஆனாலும் முதல் தடவையாகக் கேட்கிறானே என்று, 'சரி. நாளைக்குத் தந்துடணும்,' என்ற நிபந்தனையுடன் கொடுத்தனுப்பினான்.

பிரியாணியின் மணம் அவனது மூன்று நாள் பசியை மேலும் கிளப்பியது.

குடிசைக்குள் வந்து பொட்டலத்தைப் பிரித்தான். ஸீஸர் அவனருகே வந்து உட்கார்ந்து அவன் முகத்தையே பார்த்தது. பொட்டலத்தில் கை வைத்த அவன் தன் வாய்க்கு அதைக் கொண்டு போகவில்லை.

ஸீஸரைக் கட்டிக் கொண்டான். ''என்னைவிட உனக்குத்தாண்டா பசி அதிகம். மூணு நாளா உனக்கும் இரண்டே இரண்டு புரைதான். வாயைத் திறந்து ஒரு குரைப்புகூடக் குரைக்காமல் என் கஷ்டம் தெரிந்து பசியை நீ பொறுத்துக்கிட்டிருக்கிறே. நீதாண்டா இன்றைக்குச் சாப்பிடணும்.. இந்தா.''

ஸீஸரை மடியில் கிடத்திக் கொண்டு பிரியாணியை அதற்கு ஊட்டினான்.

நடுவிலே வரும் கறித் துண்டை அது கடித்து ரசித்துச் சாப்பிட்டபோது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

பாதி சாப்பிட்டதும், ஸீஸர் சாப்பிட மறுத்து அவன் முகத்தை நக்கிக் கொடுத்துக் குரைக்கத் தொடங்கியது.

''சாப்பிடுடா ராஜா.''

மீதியிருந்த பிரியாணியுடன் ஸீஸர் இலையை அவன் பக்கம் இழுத்து அவனுக்கு முன்னால் வைத்தது. அவன் கையை வாயால் கவ்வி இலையில் வைத்தது. ஸீஸரைக் கட்டிக் கொண்டு அவன் கண்ணீர் வடித்தான். ''எவ்வளவு புத்திசாலிடா நீ. துரதிருஷ்டம் பிடித்த என்கிட்டே வளர வந்தாயே.''

மூர் மார்க்கெட்டுக்கு வந்த அவன் தனக்குத் தெரிந்த மேஸ்திரி ஒருவனிடம் சைக்கிள் ரிக்ஷா ஓட்டு பவனாகச் சேர்ந்துகொண்டான். மேஸ்திரியின் லைசென்ஸ் பட்டையைக் கையில் மாட்டிக் கொண்டு முதல் கிராக்கிக்காகக் காத்திருந்தான். ஏழெட்டுப் பெட்டி, படுக்கையுடன் கனமான ஆசாமி ஒருத்தர் பெரியமெட்டுக்கு வரச் சொன்னதும் ஆர்வத்துடன் சம்மதித்து அவரை ஏற்றிக் கொண்டு ஒரு பர்லாங்க் போயிருக்க மாட்டான். பழக்கமில்லாமல் மிதித்ததால் மூச்சு இரைக்க மார்பை ஏதோ திடீரென்று அடைத்தது போலிருந்தது. கண்ணில் மசமசவென்று பூச்சி பறந்து இருட்டி வந்தது. வண்டி எங்கேயோ பேரயிற்று. ''ஏய், ஏய்.. ஏய்!'' என்று பல குரல்கள் அவன் காதில் விழுந்தனவே தவிர அவனுக்குப் பிரக்ஞையில்லை. சைக்கிள் ரிக்ஷாவிலிருந்து தொப்பென்று மயக்கமாக விழுந்து விட்டான். பரபரப்புடன் கூட்டம் கூடிவிட்டது. வெய்யில் தாங்காமல் ஸன் ஸ்டிரோக் என்றார்கள் சிலர்.

மூன்று நாள் கழித்து அவனது பக்கத்துக் குடிசைக்காரன் பழைய பேப்பர் பொறுக்குகிற வேலுச்சாமி ஆஸ்பத்திரியில் அவனைப் பார்க்க வந்திருந்தான்.

தங்கராஜுக்கு நினைவு அப்போதுதான் முழுமையாகத் திரும்பி

வந்தது. "வேலு!" என்றவன், "ஸீஸர். ஸீஸர்! .." என்ருன் பலவீனமாக.

வேலுச்சாமி அவனுக்கு ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தான். பையிலிருந்து சில பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவனிடம் தந்தான். "நீ தப்பா நினைத்தாலும் சரி, நாங்களெல்லாம் சேர்ந்து இந்த முடிவைப் பண்ணிட்டோம். மன்னிச்சுக்கப்பா . . . ஜாதி நாய். பெரிய இடத்தில் வளர வேண்டியது. நீயே சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுகிறபோது அதை எப்படிக் காப்பாற்ற முடியும்? பெரிய பணக்காரர் தான். நம்ம சூளைக்காரருக்குத் தெரிந்தவர்தான். அவரும் காவலுக்கு ஒரு நாய் வேணும்னு கேட்டுகிட்டிருந்தாராம். சூளைக்காரரு மீன்ஸ்லேயே வித்துட்டோம்."

தங்கராஜுவின் இதயத்து மேல் பாறுங்கல்லை யாரோ அமுக்கினது போலிருந்தது. கண்ணில் பெருகின நீரைத் துடைத்துக் கொள்ளக்கூட அவனுக்குத் தெரியவில்லை.

வெற்றுச் சூனியத்திலிருப்பது போன்றிருந்தது தங்கராஜுக்கு. ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறும் போது வேலை எதுவும் கிடைக்கவில்லை. வேலை செய்யத் திராணியும் இல்லை.

ஒரு நாள் தோளில் கோணிப் பையைப் போட்டுக் கொண்டு குப்பைக் காகிதங்களைப் பொறுக்கியவாறு ஸி.ஐ.டி. நகர்ப் பக்கம் சென்று கொண்டிருந்தான்.

தாங்க முடியாத வெய்யில். வயிற்றில் அதைவிடச் சூடு. கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது.

அருகில் தெரிந்த பங்களாவுக்குள் துணிந்து நுழைந்துவிட்டான். "அம்மா.. கொஞ்சம் தண்ணி."

மாடியிலிருந்து வெட்டிவேர்த் தட்டி சலசலத்தது கோபத்துடன். அக்கம் பக்கத்திலிருக்கும் குடிசை வாசிகள் அடிக்கடி தண்ணீருக்காகத் தன் பங்களாக் கிணற்றுக்கு வருகிறார்களென்று கிணறைச் சுற்றிலும் இரும்பு வேலி போட்டுப் பெரிதாகப் பூட்டி வைத்திருந்தார் ராமானுஜம்.

'வள்! வள்!' என்ற குரைப்புச் சத்தமும் நாயொன்று விரைந்து ஓடி வரும் சத்தமும் கேட்டது. தொடர்ந்து பங்களாக்காரரின் மனைவி குரல் கொடுத்தாள்: "ஸீஸர்! ஏதோ



"இருமல் மாத்திரை தயாரித்திருப்பதாகச் சொன்னயே! என்ன பேரு?"

"லொக் லொக்!"

கழுதைங்க வந்திருக்கு பார்... விரட்டு."

ஸீஸர் அப்போது அவனைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. பின்னர், திருட்டுத்தனமாக உணவு கொண்டு வந்து அவனுக்குக் கொடுக்கலாயிற்று.

'ஸீஸரைப் பார்த்து விட்டோம். இனிக் கவலையில்லை. தினமும் அதைப் பார்த்துக் கொண்டேயிருப்போம்' என்று எண்ணியவனுக அதே பொட்டல் வெளியில் இராவாய்ப் பகலாய்க் கிடந்தான் தங்கராஜு. தினமும் பனியில் கிடந்ததால் அவனுக்குக் கடுமையான ஜலதோஷமும், ஜுரமும் பிடித்துக்கொண்டு விட்டது. ஒருநாள் உடம்பு குளிர் ஜுரத்தால் கிடுகிடுவென்று நடுங்கிக் கொண்டிருந்தது. துணிகள் கந்தலாகி நைந்திருந்ததால் அவன் குளிரைப் போக்கக்கூடிய அளவு உதவவில்லை.

ஸீஸர் அவனை நக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தது. பங்களா மாடியில் பளிச்சென்று விளக்கு எரிந்ததும் அவசரமாக அவனிடம் விடை பெற்றுக் கொண்டு பங்களாவுக்கு ஓடி விட்டது.

அடுத்த நாள் மாலை. ராமானுஜம் கிளப்புக்குப் புறப்படக் காரில் ஏறி அமர்ந்தார். காரில் அவர் உட்கார்ந்ததுமே ஸீஸர் எங்கிருந்தாலும் ஓடிவந்து அவரை வழி அனுப்பித் தரும்.

"எங்கேடா ஸீஸர்?" என்ருர் டிரைவரிடம்.

அருகிலிருந்த தோட்டக்காரன் தயக்கத்துடன், "மாடியிலே படுத்திருக்குங்க சோர்ந்தாற்போல..." என்ருன்.

வேகமாக மாடி ஏறி ஸீஸரைப் பார்த்தார்.

அதனுடைய உடம்பு கிடு கிடுவென்று நடுங்கிக் கொண்டிருந்தது. "இப்படி நடுக்குகிறதே...ஸீஸர்... ஸீஸர்..."

ஸீஸர் தலையை நிமிர்த்தி அவர் கையை நக்கிக் கொடுத்தது. மறுபடியும் நடுக்கம்.

ராமானுஜம் எழுந்து படுக்கை அறைக்குச் சென்றார். திரும்பி வந்தபோது அவர் கையில் விலையுயர்ந்த கம்பளி இருந்தது. தன் கைப்பட அதை இரண்டாக மடித்து ஸீஸர் மீது போர்த்தினார்.

"டிரைவர்...காலையில் முதல் காரியமாக ஸீஸரை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப்போகணும்..."

கட்டளையிட்டுவிட்டுப் புறப் பட்டார்.

இதமாக இருந்தது தங்க ராஜுக்கு. குளிரின் உபாதை எப்படிக் குறைந்தது?

கண்ணை விழித்துப் பார்த் தான். அவனுக்கு ஆச்சரியமாக இருந் தது. இவ்வளவு விலையுயர்ந்த கம் பளியை எந்தப் புண்ணியவான் அவன் மீது போர்த்துவிட்டுப் போயிருக்கிறார்?

'விண்' என்ற உதை அவனை எழுப்பியது.

அவனுக்குப் பக்கத்திலிருந்த ராமானுஜம் கூறினார்: "இவனேதான் சார். எனக்கு நல்லா ஞாபகமிருக்கு. ஒரு வாரத்துக்கு முன்னே பங்களா வில நுழையப் பார்த்தான்—குப்பைக் காகிதம் பொறுக்குகிற சாக்கிலே. ஏதோ திட்டம் பண்ணிக்கிட்டு இந்தப் பக்கமே வட்டமடிச்சிக்கிட்டு இருக்கிறான். எங்க வீட்டுக் கம்பளிதான் இது. 'ஆர்' என்று பெயர்கூட எம்பிராய்டரி பண்ணியிருக்கிறது பாருங்க."

இன்ஸ்பெக்டர் வாங்கிப் பார்த்துவிட்டு தங்கராஜுவைப் பிடித் தார்.

"ஐயோ...நான் திருட லீங்க..." அவன் மேலும் ஏதோ கூறுமுன் இன்ஸ்பெக்டர் அவன் கையைப் பின்னே முறுக்கி அவனது சட்டை யைக் கிழித்துக் கட்டி முடித்துவிட் டார்.

ஸீஸர்தான் கொண்டு வந்து தந்தது என்று சொல்லிவிடலாமா வென்று பார்த்தான். அதுவாவது நன் றாக இருக்கட்டும் என்று அடக்கிக் கொண்டுவிட்டான்.

"ஏறுடா வேன்லே. மற்ற தெல்லாம் ஸ்டேஷனுக்குப் போய்... போங்க போங்க. இங்கென்ன கூட் டம்?"

பிடரியில் கைவைத்து வண் டிக்குள் அவனை நெட்டினார். வண்டி புறப்பட்டது.

வெளியே நடந்த எதையும் அறியாத ஸீஸர் ராமானுஜத்தின் ஏர் கண்டிஷண்ட் அறைக்குள் மெத்தை விரிப்புத் தரையில் படுத்தவாறு நினைத் துக் கொண்டிருந்தது — தங்கராஜு இப்போது சுகமாகக் குளிருக்கு அடக்க மாகக் கம்பளியில் உறங்கிக் கொண் டிருப்பான் என்று.

நண்பரின் பக்கத்து வீட்டுக் காரர்—ஏர்ஃபோர்ஸில் பைலட்டாக வேலை பார்ப்பவர்—வெளியிலிருந்து வேகமாகச் சைக்கிளில் வந்தார். வீட்டுக்கு அருகில் வந்தவுடன், விமானம் இறங்கும்போது 'ரன்வே'யில் ஓடி நிற்பது போல, சைக்கிளில் நான்கைந்து சுற்றுக்கள் சுற்றிவிட்டுப் பிறகு சைக்கிளை வாசலில் நிறுத்திவிட்டு இறங் கினார். 'பைலட் அல் லவா? விமானத்தை இறக்குவது போலவே சைக்கிளையும் நிறுத்து கிறார் என்று எங்கள் நண்பர் தமாஷாகக் கூறினார்.



சைக்கிளை ஓட்டி வந்தவர் சொன்ன காரணம்: "எனக்குக் கால் தரையில் சரியாக எட்டாது. பிரேக் இல்லை என்ற நினைவில்லாமல் வீட்டுக்கு வெகு அருகாமை வரை வேகமாக வந்துவிட் டேன். அந்த வேகம் குறைவதற்காக நாலைந்து சுற்றுகள் சுற்றுச் சுற்றி இறங்கினேன்! எல்லாம் தொழில் பழக்கம் தான்!"

—பி. வி. ஆனந்த



ராஜாவுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகிவிட்டது. அவர் எங்கள் பெரியப்பா பிள்ளை.

ராஜாவின் கல்யாணம் நிச்சயமானதில் குழந்தைகளான எங்களுக்கு மிகுந்த சந்தோஷம். கல்யாணத்திற்கு அப்பா வருவார், ஸ்வீட்டுகள் வாங்கி வருவார் என்பதுதான் காரணம். 'சுமி, சுமி,' என்று என்னைக் கொஞ்சுவார்.

எங்கள் அப்பா கல்கத்தாவில் இருக்கிறார். ஒரு வருஷமாகவே அவர் அங்கே தனியாக ஓட்டலில் இருக்கிறார்.

இன்னும் ஒரு வருஷமோ இரண்டு வருஷமோ கல்கத்தாவில் இருந்துவிட்டுப் பிறகு சென்னைக்கே மாற்றிக்கொண்டு வந்து விடுவாராம். அதனால்தான் எங்களையெல்லாம் படிப்பு கெட்டுப் போகாமல் சென்னையிலேயே படிக்கட்டும் என்று பெரியப்பா வீட்டில் விட்டுவிட்டுப் போயிருக்கிறார். கல்யாணம் நிச்சயமானதுமே அவருக்குக் கடிதம் எழுதி விட்டாள்.

அவரிடமிருந்து உடனே பதில் வந்து விட்டது. அம்மா சாதாரணமாக அப்பாவிடமிருந்து வரும் கடிதங்களை யாருக்கும் காட்ட மாட்

ஒன்றும் புரியலே

ஹேமா ஆனந்ததீர்த்தன்

டாள். தானே படித்துப் பார்த்து விட்டுப் பெட்டியில் எடுத்து வைத்துக் கொண்டு விடுவாள். விஷயத்தை மாத்திரம் சொல்லுவாள். எனக்கு அது திருப்தியாக இருக்காது. கடிதம் நாலு பக்கம் இருக்கும். அம்மாவோ நாலே வாக்கியத்தில் விஷயத்தைச் சொல்லி விடுவாள். கடிதத்திலுள்ள விஷயம் பூராவையும் சொல்லவில்லை என்று எனக்குத் தோன்றும்.

அப்பா சில சமயங்களில் எனக்குக் கடிதம் எழுதுவார். அதை மட்டும் அம்மா என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டு படிப்பாள். "நீ மாத்திரம் உனக்கு வர்ற லெட்டரைக் காட்ட மாட்டேங்கறியே. நானும் இந்த லெட்டரை உனக்குக் காட்ட மாட்டேன்," என்று சொன்னால் எல்லோரும் சிரிப்பார்கள். நான் நிஜமாகவே கோபத்தோடு தான் சொல்வேன். ஆனால் எல்லோரும் சிரிப்பார்கள்.

இந்தத் தடவை அதிசயமாக அம்மா அப்பாவின் கடிதத்திலிருந்து படித்துக் காட்டினாள். அப்பா எழுதியிருந்தார் — 'ராஜாவுக்குக் கல்யாணம் நிச்சயமானதுபற்றி ரொம்பச் சந்தோஷம். நான் கண்டிப்பாக வருகிறேன். இன்றைக்கே லீவுக்கு எழுதிப் போட்டுவிட்டேன்.'

பெரியப்பா பெண்களான கமலா, பாரதி இரண்டு பேரிடமிருந்தும் கடிதம் வந்துவிட்டன. தத்தம் கணவன்மாருடன் வருவதாக எழுதியிருந்தார்கள்.

கல்யாணத்திற்கு நாலு நாட்கள் இருக்கும்போது அப்பாவிடமிருந்து இன்னொரு கடிதம் வந்தது. அம்மா அதை ஆவலோடு படிக்கும்போது நாங்களெல்லோரும் அவளைச் சுற்றிக்கொண்டோம். கடிதத்தை நான்கு வரிகள் படித்ததுமே அம்மா 'ச்சு' என்று உதட்டைப் பிதுக்கினாள்.

"அவர் வரவில்லையாம். அக்கா. லீவ் கிடைக்கலையாம்!" என்றாள்.

"என்னடி இது அநியாயம்! இப்படி ஒரு ஆபீஸ் உண்டா என்ன?" என்றாள் பெரியம்மா.

"அவன் அனாவசியமா ரெண்டு தடவை லீவ் எடுத்துட்டு வந்ததே தப்பு. இப்போ அவசியத்துக்கு லீவ் இல்லாமல் போய்விட்டது." என்றார் பெரியப்பா.

"முடிஞ்சால் அடுத்த மாசம் வருகிறேன் என்று எழுதியிருக்கிறார்—" அம்மா.

"இப்ப இல்லாம அப்புறம் எப்ப வந்தா என்ன?" என்று கூறிவிட்டுப் பெரியப்பா தன் வேலையைக் கவனிக்கப் போய்விட்டார்.

அம்மாவின் முகம் வாடிப் போய்விட்டது. நான், "வேற என்னம்மா எழுதியிருக்கார் அப்பா?" என்று கேட்டேன்.

"வேற ஒண்ணும் இல்லேடீ," என்று வழக்கம்போலக் கூறிவிட்டாள்.

எனக்கு என்னமோ அந்த லெட்டரில் வேறு சமாசாரம் ஏதோ இருக்கிறாப்போல தோன்றியது. இல்லாவிட்டால் அம்மா ஏன் அவ்வளவு முகம் வாடிப் போக வேண்டும்?

அன்று ராத்திரி அம்மாவும் மற்றவர்களும் கல்யாணத்திற்கு அழைப்பதற்காகப் போயிருந்தார்கள். நான் கூடத்து அறையில் எதையோ எடுக்கப் போனவள் அம்மாவின் புடவை கீழே கிடப்பதையும், அதன் கீழிருந்து ஒரு லெட்டர் தலை நீட்டிக் கொண்டிருப்பதையும் பார்த்தேன். அதை எடுத்துப் பார்த்தேன். அப்பாவின் கடிதம்! அழைக்கப் போகிற அவசரத்தில் புடவை மாற்றிக் கொண்டவள், இடுப்பில் செருகிக் கொண்ட கடிதத்தை மறந்து விட்டிருக்கிறாள். வீட்டில் யாரும் இல்லை. பாலுவும் விச்சுவும் மாத்திரம் வாசலில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு

ஆவலிலும், பயத்திலும், படபட வென்று வந்தது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு கடிதத்தை ஒரே மூச்சில் படித்து முடித்து விட்டேன். அப்பா எழுதியிருந்தார் —

அன்புள்ள கமலி,

என்னை மன்னித்துக் கொள். நான் கல்யாணத்திற்கு வருவதில்லை என்று தீர்மானித்து விட்டேன். லீவ் கிடைக்காது என்பதில்லை, லீவ் தாராளமாகக் கிடைக்கும். ஆனால், கொஞ்சம் யோசித்துப் பார். கமலா, பாரதி இரண்டு பேரும் அவரவர்கள் புருஷன்மாரோடு வருவதாக எழுதியிருக்கிறாய். அண்ணா வீட்டில் இருப்பதோ மூன்றே பெட்ரூம். அண்ணா, எப்போதும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தன் பெட்ரூமை விட்டுக் கொடுக்க மாட்டார். பாக்கி இரண்டும் கமலாவும், பாரதியும் எடுத்துக் கொண்டு விடுவார்கள். நான் ஆறு மாதப் பிரிவுக்குப் பிறகு அங்கு வந்து இருக்கும் பத்து நாளில் நமக்கு ஒரு ரூம் இல்லாவிட்டால் நாம் எங்கே படுப்பது? இங்கே கண் மறைவாக இருக்கும் போது எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருந்துவிடலாம். நேரில் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்ட பிறகு, அதுவும் கல்யாண சம்பிரமத்தில் நீ புதுப் புடவையும் அலங்காரமுமாக வளைய வருவதை நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, இரவில் நெருங்க முடியாமல் இருப்பதைப் போல அவஸ்தை உண்டா? என்னால் தாங்க முடியாது. கல்யாணக் கலாட்டாவெல்லாம் முடியட்டும். கமலா, பாரதி ஊருக்குப் போயாகட்டும். பிறகு வருகிறேன். அதுவரை பொறுத்துக் கொள். உன் ஏமாற்றம், என் ஏமாற்றமும் தான்.... உன் நினைவாகவே இருக்கும்,

பிரபு.

என்ன இது? இவ்வளவு பெரிய வீட்டிலே படுப்பதற்கு இடமில்லையென்பதற்காகவா அப்பா வரவில்லை? ரூம் இல்லாவிட்டால் என்ன? எவ்வளவு பெரிய கூடம் இருக்கிறது! வெராண்டா இருக்கிறது! அப்பா இப்படி எழுதியிருப்பதைச் சொல்லாமல் லீவ் கிடைக்கவில்லை என்று எழுதியிருப்பதாக ஏன் சொன்னாள் அம்மா?

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

நீங்களும் ஒரு தேவர்தான்!

தேவருக்கு மட்டும்தான் பாம்பை வைத்துப் பணம் பண்ணத் தெரியும் என்று நினைத்தேன். ஆனால் நீர் பாம்பை வைத்தே பக்கம் நிரப்பி விட்டீர்.

திருச்சி-6 வி. என். அமிதாப் ராஜன்

முதல்வரின் வரட்சி சபதம்

தலையங்கம் கண்டேன். முதல்வரின் சபதம் ஒரு கேலிக் கூத்தாகுமே தவிர, அரசியல் விவேகமில்லை என்பது உண்மைதான். பஞ்சமும் பட்டினியும் அவர் வீட்டிலோ அல்லது அவரைச் சார்ந்தவர்களின் வீட்டிலோ இல்லையே!

திருச்சி-14 ஜே. மணி மதுரம்

திரு. சி. எஸ். அகங்காரமாக, ஆணவமாக, அதிகப்பிரசங்கியாக, தான்தோன்றித்தனமாக மக்களிடையே தப்பெண்ணம் ஏற்படும் வகையில் ஏதோதானோவென்று பொறுப்பற்றுப் பேசிய பேச்சுக்கு, தன்மானமுள்ள, தரந்தாழாத, பாரம்பரியமுள்ள, சோரம் போகாத எந்தவொரு லட்சியத் தமிழரும் எடுக்க வேண்டிய முடிவைத்தான் முதல்வரும் எடுத்தார்.

மருதூர் ச. ரெங்கராஜன்

'முன்கோபம்' ஒன்றையே மூலப்பொருளாக வைத்துள்ளவர் கலைஞர். தனது முன்கோபத்தால்தான் ஏற்கனவே கழகத்தைப் பலியிட்டார். திரும்பவும் அதே முன்கோபத்தின் துணையினால்தான் இன்று தமிழகத்தையே பலியிட முன்வந்திருக்கிறார்.

சென்னை-13 வண்ணை ராமலிங்கம்

தலையங்கம் கண்டேன். உன் போன்ற 'நல்ல ரத்தம்' ஓடும் ஜனப் பிறவிகளை மன்னிக்கவே முடியாது. அடுத்த பிறவியில் நீங்களெல்லாம் என்னவாகப் பிறப்பீர்களோ?

சென்னை-4 ஆர். ஜெகமுத்து

பட(ா)மோசம்

பாதிப் பக்கத்துக்கு ஜெயசுதா, கமலஹாசன் படத்தைப் போட்ட உமக்கு, 'ஆயிரத்தில் ஒருத்தி' விமரிசனத்தில் ஒரு வரிகூட அவர்களுக்காக ஒதுக்க முடியவில்லையா?

சென்னை ஏ. டி. தாமோதரன்

யாரிடம் ஊசி விற்கிறீர்?

'ஊசியில் நூலைச் சுலபமாகக் கோக்கும் கருவி' ஒன்றும் புதுமையில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்பே ஸிங்கர் கம்பெனியார் மெல்லிய அலுமினியப் பிடியில் கம்பி இணைத்து இந்த உபகரணத்தை விற்பனை செய்தார்கள்.

சென்னை-17 ருக்மணி ராமச்சந்திரன்

பதக்க ஹாக்கி

3-9-73'ம் தேதி இதழில் வெளி வந்திருந்த அந்தக் கார்ட்டூன், கடிதங்கள் பகுதியில் கூறியிருந்தது போல் ஒலிம்பிக் ஹாக்கியைப் பற்றியது அல்ல. ஆம்ஸ்டர்டமில் நடந்த இரண்டாவது உலக ஹாக்கிப் போட்டியைப் பற்றியதாகும். அதில்தான் இந்தியாவுக்கு வெள்ளிப் பதக்கம், (இரண்டாவது இடம்) கிடைத்தது.

தாம்பரம் எஸ். கே. ரவீந்திரன்

ஆபாசப் பூ

'ஒரு பூ பூத்தது' கதையைப் படித்ததும் உங்களை ஓர் அழுகிய முட்டை கொண்டு அடித்தால்கூடப் பாவம் ஆகாது என எண்ணினோம்.


மதுரை-2 எஸ். ஆர். வசந்தா

தாய்மார்களே, தந்தைமார்களே

'ரங்கமன்னார் எனக்கு மகன் போல இருக்கிறார்,' என்று சொல்லியிருக்கிறார் விஜயா. மகன்கள் போன்ற இளம் தலைமுறையினரை வரவேற்று வழிவிட்டு, தாய்கள் போன்ற, தந்தையர் போன்ற நடிக நடிகையர்கள் ஒதுங்கிச் செல்வதே நாகரிகத்திற்கு அடையாளமாகும்.

சேலம்-6 டி. வி. சௌந்தரராஜன்





அங்க்குர்

கிராமத்தில் ஒரு ஜோடி. அவன் பிறவி ஊமை. பண்ணையில் வண்டிக்காரன். அவள் பண்ணை வீட்டில் வேலைக்காரி. லட்சுமி என்று பெயர். அதிகம் பேசமாட்டாள். சுறுசுறுப்பாக வேலை பார்ப்பாள். ஜாடை செய்து கணவனோடு பேசுவாள்.

பட்டணத்திலுள்ள பண்ணையார் தன் பிள்ளையைக் கிராமத்துக்கு அனுப்பி நிலபுலன்களைக் கவனிக்கச் சொல்கிறார். அவன் இளைஞன். புதிதாகக் கல்யாணமானவன். தனிமையில் வாடும் அவனுக்கு, லட்சுமியிடம் ஈடுபாடு உண்டாகிறது. அவள் முதலில் ஒத்துழைக்கவில்லை. ஊமைக் கணவன் குடிகாரனாகவும் இருக்கிறான். அவனால் அவளுக்கு ஒரு சுகமும் இல்லை. ஆகவே, பணக்கார இளைஞனுக்கு இணங்குகிறாள்.

ஒரு நாள் அவள் தந்தை அவன் மனைவியை அழைத்துக் கொண்டு வருகிறார். லட்சுமி படுத்திருந்த கட்டிலில் புதியவள் படுக்கிறாள். அது மட்டுமல்ல. நிலைமையைப் புரிந்து கொண்டு லட்சுமியை விரட்டுகிறாள். அவன் சிபாரிசுக்கு வருகிறான். ''வேலையெல்லாம் யார் செய்வார்கள்?'' என்கிறான். ''நான் செய்கிறேன்,'' என்கிறாள் மனைவி. ''இல்லாவிட்டாலும் வேலைக்காரிகளுக்கா பஞ்சம்?''

லட்சுமி கருத் தரித்திருக்கிறாள். (அங்க்குர் என்றால் நாற்று.) கிழிந்த பாயைச் சுருட்டிக்கொண்டு தன் குடிசைக்குப் போகிறாள். மனத்தை உலுக்கும் கிளைமாக்ஸ் கட்டம் இறுதியில் வருகிறது.

கலர்ப் படம். சத்யஜித்ராய் டைப். போர் அடிக்கிறது. ஆனால் நன்றாக அடிக்கிறது. குறைந்த வசனம். லட்சுமியாக ஷபனா அஸ்மி அருமையாக நடித்திருக்கிறார். புத்திசாலித்தனமான டைரக்ஷன். இயல்பான சூழ்நிலை. ஆந்திர பாத்திரங்கள், இந்தி கதை. புரட்சிகரமான படைப்பு.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும், கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. குமுதம் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெடில் அச்சிட்டவர்: ஏ.பி.ஏ. பெரியகருப்பன். குமுதம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர்: பி.வி. பார்த்தசாரதி. ஆசிரியர்: எஸ்.ஏ.பி. அண்ணாமலை. முகவரி: 83, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை—600010



CMHPF 1-162-Tam

கணக்கில் வரா

க்ஷணநேரம் அந்தக் காரியாலயமே மூச்சடங்கினாற்போல இருந்தது.

டக் டக் என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைந்ததுமே அத்தனை பேர்களின் இதயமும் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது. இன்ஸ்பெக்டர் ஆபீஸ் அறைக்குள்— அதாவது மானேஜர் சாயிராமின் அறைக்குள்—சென்றதும் அத்தனை சிப்பந்திகளும் ஒருவரை ஒருவர் திகைப்பும் பீதியுமாகப் பார்த்துக் கொண்டனர். பெண்கள் மிரட்சியோடு உடல் நடுங்க அவரவர் இடத்தில் உட்கார்ந்துகொண்டனர். ஆண்களோ அதிர்ச்சியோடு அசையாமல் நின்றனர்.

'யாருக்குக் காப்பு காத்துக் கிடக்கிறதோ!' ஒவ்வொருவர் நெஞ்சமும் தாங்கள் செய்த தவறுகளை அலசத் தொடங்கின. சிலர், நாம் ஒன்றும் தலைபோகிற தவறு செய்யவில்லை என்று தீர்மானித்து அடுத்தவர்களை அனுதாபத்தோடு நோக்க ஆரம்பித்தனர். அனைவருடைய பார்வையும் சாயிராமின் அறைக் கதவை மோதி மோதித் திரும்பின.

''சார், அந்த ஒரு லட்சம் உங்களுடைய சொந்தப் பணமாக இருக்கலாம். ஆனாலும் அதைச் சம்பாதித்த கணக்கு விவரம் சொல்ல வேண்டாமா? அனாவசியமாக உங்களை அரெஸ்ட் செய்யும் நிலையில் எங்களை வைத்து விட்டீர்களே?'' இன்ஸ்பெக்டர் கணீரென்ற குரலில் கூறினாலும் வார்த்தைகள் தயக்கத்தோடு வெளிவந்தன. அவர் பார்வை சாயிராமின் கம்பீர முகபாவத்தில் குத்திட்டு நின்றது.

''இன்ஸ்பெக்டர் சார், என்னை மன்னிக்கணும். அந்த ஒரு லட்ச ரூபாய் எனக்குச் சொந்தமாகக் கிடைத்த பணம். அது சத்தியம்.



ட்ச ரூபாய்

'ரத்னு'

ஆனால் அதற்கு விவரம் கூறமட்டும் என்னால் இயலாது.''


''சார், நீங்கள் ரொம்பவும் பிடிவாதம் பிடிக்கிறீர்கள். நீங்கள் ஒரு சாதாரண, நடுத்தரக் குடும்பத்தவர். உங்கள் வரவில் குடும்பச் செலவு போக சேமிப்பது பாங்கியில் பத்தாயிரத்தைக் கூட எட்டவில்லை. உங்களுக்குப் பெண் இருக்கிறாள் கல்யாண வயதில். வரதட்சணையாக மூவாயிரம் நாலாயிரத்துக்கு மேல் ஓடாது என்று நண்பர்களிடம் கூறியிருக்கிறீர்கள். இப்பவும் வாடகை வீட்டில்தான் குடியிருக்கிறீர்கள். இந்த நிலையில், நீங்கள் ஒரு லட்ச ரூபாயை அனாதை இல்லத்துக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறீர்கள். இதிலிருந்து என்னென்ன சந்தேகங்கள்



உண்டாகிறது என்று உங்களுக்குப் புரியவில்லையா மிஸ்டர் சாயிராம்?''

''நான் சொல்லுவது சத்தியம். அதனால் சந்தேகம் தோன்ற இடமில்லை. நீங்கள் சந்தேகிக்கிறீர்கள் என்றால் அது உங்கள் தொழிலின் முறை. ஏன் சார், தானம் செய்ய வேண்டும் என்று நினைத்துச் செய்வது தவறா? அலை ஓய்ந்து பின்னர் கடலில் ஸ்நானம் செய்யவேண்டும் என்று காத்திருக்க முடியுமா? குடும்பத் தொல்லை எப்போதும்தான் இருக்கிறது. நாம் கண்ணை மூடுகிறவரை குடும்பப் பிரச்னைகளுக்கு முடிவே இருக்காது. என் தந்தை லட்ச ரூபாய் தர்மம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருந்தார். அவர் ஆசையை நிறைவேற்றினேன்.''

இன்ஸ்பெக்டர் முறுவலித்தார். ''மிஸ்டர் சாயிராம், உங்கள் தந்தை பெரிய ஆசார சீலர், பண்பாளர் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த மகான் தர்மம் செய்ய இஷ்டப்பட்டிருக்கலாம். சத்புத்திரனாக நீங்களும் அதைச் செய்திருக்கலாம். ஆனாலும் லட்ச ரூபாய் என்பது சாமானியமல்ல. அதை நீங்கள் எப்படிச் சம்பாதித்தீர்கள் என்று மட்டும் நிரூபித்துவிட்டால் போதும். நான் இடத்தைக் காலிபண்ணிவிட்டுப் போய் விடுவேன். பரிசுச் சீட்டில் விழுந்ததாக இருந்தாலும் அதை நிரூபிக்க வேண்டும்.''



''இன்ஸ்பெக்டர் சார், நீங்கள் எத்தனை முறை, எத்தனை விதமாகக் கேட்டாலும் என்னால் பதில் சொல்ல முடியாது. அது கள்ளப் பணமல்ல, என் சொந்தப் பணம். அது மட்டும் சத்தியம்.''

''சத்தியமாக இருந்தாலும் சாட்சி வேண்டும். ஒரு லட்ச ரூபாயை அனாயாசமாக நன்கொடை அளித்திருந்தால் இவரிடம் மேலும் இரண்டு மூன்று லட்சங்கள் இருக்கும் என்று சந்தேகம் ஏற்படுகிறது. லஞ்சம் வாங்கிச் சேர்த்த பணமோ, கள்ளக் கடத்தலில் பங்கு இருக்கலாமோ என்று ஆராய வேண்டியிருக்கிறது. என் கடமையை நான் செய்கிறேன். இதோ வாரண்ட். எந்த நிமிஷம் நீங்கள் உண்மையை நிரூபித்தாலும் அந்த வினாடியே உங்களுக்கு விடுதலை,'' என்று கூறிய இன்ஸ்பெக்டர், கதவருகில் நின்றிருந்த கான்ஸ்டபிள்களைப் பார்க்கவே, அந்த இரண்டு பேரும் சாயிராமின் இரண்டு பக்கமும் வந்து நின்று கொண்டார்கள்.

அடுத்த விநாடி சாயிராம் அமைதியாக எழுந்து கொண்டார். ''இன்ஸ்பெக்டர், ஒரு நிமிஷம் அவகாசம் கொடுக்க முடியுமா?''

''ஓ கே...'' என்றார் இன்ஸ்பெக்டர் சாயிராம் மணி அடித்து, பியூனை உள்ளே வரவழைத்து உதவி மானேஜர் முத்துராமனை வரச் சொன்னார்.

முத்துராமன் நடுக்கத்தோடு வந்து நின்றார்.

''முத்துராமன், இதோ ஆபீஸ் சாவிகள். ஆபீஸ் வேலைகள் எல்லாம் கிளியராகத்தான் இருக்கிறது. ஒன்றும் பயப்படாதீர்கள். இது என் சொந்த விஷயம். நான் இவர்களுடைய பாதுகாப்பில் பத்திரமாக இருப்பேன். மேல் ஆபீசுக்கு டிரங்க்கால் போட்டு எனக்குப் பதிலாக யாரையாவது வரச் சொல்லுங்கள். அப்படியே டைப்பிஸ்ட் சபிதாவிடம் சொல்லி என் வீட்டில் விஷயத்தைச் சொல்லச் சொல்லுங்கள். சரிதானா? அந்த டிராயரில் நாளைக்குள் அனுப்பவேண்டிய முக்கிய லெட்டர்கள் இருக்கின்றன. பார்த்துக் கொள்ளுங்கள். நான் வருகிறேன்...''

''சார்... சார்... சார்... வந்து..'' முத்துராமன் பேசமுடியாமல் குழறினார்.

அவரைக் கவனிக்காமல் சாயிராம், ''இன்ஸ்பெக்டர்! நான் ரெடி. கிளம்பலாமா?'' என்றார். ஏதோ சினிமா பார்க்கப் போவதுபோல சர்வ சகஜமாக சாயிராம் கிளம்பியதைக் கண்டு இன்ஸ்பெக்டரே அயர்ந்து போனார். இரண்டு பக்கமும் கான்ஸ்


'சாரதாஸ்'
கல்யாணப்
பட்டுப் புடவை
மணப்பெண்ணாக இருக்-
கும் சந்தோஷம் வாழ்க்-
கையில் ஒரு முறைதான்.
திருமணப் பட்டுப் புடவை
யும் அதே போல்தான்
அது மிகவும் சிறப்பான-
தாக இருக்கட்டும்.
கணக்கற்ற வண்ணங்கள்
அடங்கிய 'சாரதா'ஸில்
தேர்ந்து எடுக்கப்பட்ட
அசல் பட்டுப் புடவையை
பெற்றோர்கள் கொடுப்பதற்கு
மிகவும் பெருமைப்படுவார்
கள். மணப் பெண்ணும்
மகிழ்ச்சியுடன் வருடக்
கணக்கில் அணிந்து
கொள்வாள்.
சாரதா'ஸ்
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு.
சென்னை-2
போன் : 87177
N.S.B. ரோடு.
திருச்சி-2
போன் : 7077.

38'ம் பக்க மூலை

ஸ்டாம்புகள் ஒன்றோடொன்று நன்ருக ஒட்டிக்கொண்டு பிரிக்க முடியாத படி ஆகிவிட்டால், அவற்றின் மேல் ஒரு மெல்லிய காகிதத்தை வைத்து, சூடான இஸ்திரிப் பெட்டியினுல் மெல்லத் தேய்க்கவும். ஸ்டாம்புகள் தனித்தனியே கிழிந்து விடாமல் பிரிந்து வரும். அவற்றின் பசையும் முன்போலவே சரியாக இருக்கும்.

—பொள்ளாச்சி ஈஸ்வரன்

பிள்ளைகள் சேர்ந்துவர இன்ஸ்பெக்டரைத் தொடர்ந்து நடந்தார் சாயிராம். வியப்பும் திகைப்பும், கனிவும், கலக்கமும், பீதியும் குழப்பமுமாக எத்தனை ஜோடிக் கண்கள் அவரை மொய்க்கின்றன! அத்தனை சிப்பந்திகளும் பொம்மைகளாக நின்றுகொண்டு பார்வையாலேயே வினவுவதை உணர்ந்து ஒரு புன்னகையைப் பதிலுக்கு அளித்தபடி ஹாலைக் கடந்து சென்றுகொண்டிருந்த சாயிராம் சட்டென்று ஓர் இடத்தில் நின்றுர்.

''சேது, இத்தனை நாளும் தூங்கியிருக்க மாட்டாய். இனிமேல் தூக்கம் வரும் இல்லையா? பாவம், தூங்கு.'' என்றுர்.

சேதுபதி தடித்த இதழ்களைக் கடித்தபடி தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

போலீஸ் வேனில் சாயிராம் ஏறியதும், அதிகாரிகளும் ஏறிக்கொண்டனர். வேன் கிளம்பியது. அடுத்த விநாடி ஆபீஸ் ஹாலில் ஒரே கசமுசா.

எல்லோரும் சேதுபதியைச் சூழ்ந்துகொண்டு கேள்விக் கணைகளைத் தொடுக்க அவனும் சளைக்காமல் சொல்லிக் கொண்டிருந்தான்.

''வேஷம் கலைந்துவிட்டது. வேறென்ன?'' என்ற பீடிகையுடன் அவன் கூறிய விவரத்தைக் கேட்டு அத்தனை பேரும் 'இப்படியும் இருக்குமா இது நிஜமா?' என்று குழம்பினுர்கள்'

போலீஸ் வேனில் போய்க் கொண்டிருந்த சாயிராமின் நினைவில் ஒரு வாரத்துக்கு முன் நடந்த நிகழ்ச்சி ஓடியது.

அன்று அவர் அந்த அனுதை இல்லத்தில் திடீரென்று சேதுபதியைக் கண்டதும் ஒரு விடிை துணுக்குற்றுர். அவர் நினைத்தபடியே நடந்துவிட்டது. எதைப் பரம ரகசியமாகச் செய்தாரோ, அது மறுநாள் செய்தித் தாளில் பகிரங்கமாக வெளியாகப் போகிறது. அன்று அனுதை இல்லத்தின் தலைவி கோதாவரி அம்மாள், ''நீங்கள்தான் சாயிராம் இல்லையா.. நன்கொடை தருவதற்காக என்னைச் சந்திக்க விரும்பியது நீங்கள்தானே?'' என்று மகிழ்ச்சியுடனும் வரவேற்றுள்.

''ஆமாம்மா. குழந்தைகளும், வாழ்விழந்த பெண்மணிகளும் இந்த இல்லத்தில் ஓரளவு சந்தோஷத்துடன் திருப்தியுடனும் வசிப்பதாகத் தெரிய வந்தது. இன்னும் சில வசதிகள் வேண்டுமென்று ஒரு மீட்டிங்கில் தாங்கள் பேசியதையும் கேட்டிருக்கிறேன். என்னுல் இயன்ற உதவி செய்ய வந்திருக்கிறேன்,'' என்றுர் சாயிராம்.

''ஓ! அப்படியா? ரொம்ப சந்தோஷம்.'' சாயிராம் நீட்டிய செக் புத்தகத்தில் பார்வையைப் பதித்தவள், ''ஓ... ஒரு ...லட்சம்! நண்பரே, நான் காண்பது கனவல்லவே!'' தடுமாறினுள் தலைவி கோதாவரி.

''இல்லையம்மா. இல்லை.. உண்மைதான். ஆனுல் ஒரு வேண்டுகோள். இந்த நன்கொடையை வெளிப்படுத்தி விளம்பரம் செய்துவிடாதீர்கள். என் மனத்துக்கும் உங்களுக்கும் மட்டும் தெரிந்த உண்மையாக இருக்கட்டும். வேறு யாரிடமும் தெரிவிப்பதில்லை என்று சத்தியம் செய்து கொடுங்கள்.''

கோதாவரி வியப்பின் எல்லையைத் தொட்டுவிட்ட அதிர்ச்சியோடு சாயிராமை நோக்கினுள். ''கால் காசு தானம் செய்துவிட்டுக் காலம் பூராவும்



முன்பெல்லாம் எம். ஜி. ஆர் நடிக்கும் படங்களுக்கு விசிட்டர்களை அனுமதிப்பதில்லை—சில முக்கிய நிருபர்களைத் தவிர. அந்தப் பாணியை இப்போது என். டி. ராமராவ் பின்பற்றுகிருர்.

டமாரம் அடித்துக்கொள்ளும் இந்தக் காலத்தில் உங்களைப் போல ஓர் உத்தமர் இருப்பது அதிசயத்திலும் அதிசயம்.

"உங்கள் இஷ்டப்படி நான் யாரிடமும் சொல்லமாட்டேன். ஆனாலும் இந்த இல்லத்தின் நிர்வாகிகளிடம் சொல்லியாக வேண்டும். நூறு, இருநூறு என்றால் ஏதோ ஒரு நபரின் அன்பளிப்பு என்று கூறலாம். தொகை பெரியது. எங்களுக்கும் பொறுப்பு அதிகம். இதை நல்வழியில் செலவழிக்க வேண்டிய கடமை எங்களுக்கு. அதனால் இந்த இல்லத்தின் டிரஸ்டிகளிடம் மட்டும் சொல்லாமல் இருக்க முடியாது. மன்னியுங்கள். மற்றப்படி வெளி உலகத்துக்கு நான் கூறமாட்டேன், சத்தியமாக," என்றாள் கடமை நிரம்பிய குரலில்.

பிறகு, "சேது!" என்று உள்பக்கம் திரும்பி அழைத்தாள்.

சாயிராம் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தார். அவருடைய ஆபீஸ் சிப்பந்தி சேதுபதிதான் சிரிப்பும் விஷமப் பார்வையுமாக வந்து நின்றான்.

"நிர்வாகி ஒருவரின் பிள்ளை. நன்கொடையைப் பெற்றுக் கொள்ளும்போது சாட்சிக் கையெழுத்துப் போட இவரை அனுப்பியிருக்கிறார்கள், மிஸ்டர் சாயிராம்!"

பூனையை மடியில் கட்டிக்கொண்டு சகுனம் பார்க்கக் கிளம்பியதுபோல உணர்ந்தார் சாயிராம்.



டிம்பிள், ஜெயபாதுரி, பாபிதா, ராகி, மௌஸமி எல்லோருக்கும் பெண் குழந்தைகள் பிறந்தபோது வஹீதா ரஹ்மானுக்கு மட்டும் ஆண் குழந்தை பிறந்தது.

இனிமேல் என்ன செய்யமுடியும்? ஆபீசில் அவருடைய கண்டிப்பும் சேதுவின் அசமஞ்சத்தனமும் மோதுவது வழக்கம். ஆபீசில் தலைவலியாக இருந்த சேதுபதி இப்போது அவருடைய வாழ்க்கையில் தலைவிதியாக நுழைந்திருக்கிறானே!

2

சிந்து மாடிப்படிகளில் உருண்டு விழாத குறையாகப் பரபரப்புடன் இறங்கி வருவதை கவனித்த சக்ரபாணி, "என்னம்மா சிந்து, இப்படி வருகிறாய்? மெதுவா, மெதுவா. கல்யாணத்திற்கு முன்னால் காலைக் கையை ஒடித்துக்கொண்டுவிட்டால் என்னம்மா செய்வது?" பாசமும் பரிவும் மிக்க குரலில் மகளைக் கண்டித்தார்.

நழுவும் தாவணியை இடக்கையின் இடுக்கில் இழுத்துப் பிடித்துக்கொண்டு வலக்கையில் இருந்த செய்தித்தாள் படபடக்கத் தந்தையிடம் வந்த சிந்து, "அப்பா, இதைப் பாருங்களேன்," என்றாள் அவள். குரலில் கலக்கம். முகத்தில் அதிர்ச்சி.

மகள் சுட்டிக்காட்டிய இடத்தைச் சக்ரபாணி மனத்துள் படித்தார். "என்னம்மா சிந்து, இந்த சாயிராம்...?" கேள்வியை எழுப்பி மகளைக் கூர்ந்து பார்த்தார்.

தந்தையின் அருகில் ஒரு ஸ்டூலில் அமர்ந்துகொண்ட சிந்து தயங்கியபடி "அப்பா, அவர்... அவர் தான், மிஸ்டர் முரளியின் அப்பா," என்றாள்.

"என்ன... முரளியின் அப்பாவா... இவரா?" என்றவர் பதட்



லட்சுமியும் மோகனும் மலையாளத்தில் புகழ்பெற்ற ஜோடி. இப்போது இருவரும் ஒரு தமிழ்ப் படத்தில் ஜோடியாக நடித்து வருகிறார்கள்.



'பார்த்தசாரதி கோவிலுக்கு எப்படிப் போவீங்க ஸார்?'

'எப்படின்னு என்ன ஸார். பஸ்ஸிலே போவேன். நடந்து போவேன்.'

'தப்பு ஸார்.'

'ஏன்?'

'கோவிலுக்குப் பயபக்தியோடு போகணும் ஸார்.'

டத்துடன் மறுபடியும் அந்தச் செய்தித் தாளில் இருந்த செய்தியை விளக்க மாகப் படித்தார்.

''அப்பா! அவர் ரொம்ப நல்லவர். நேர்மை தவறுதவர் என்று எல்லோரும் சொல்லக் கேட்டிருக் கிறேன். அவர் இப்படி ஒரு தவறைச் செய்திருக்கவே மாட்டாரப்பா,'' இத ஞல் தன் காதல் நிறைவேருமல் போய்விடுமோ என்ற துடிப்புடன் தந் தையைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

'சாயிராம்.. சாயிராம்..'

சக்ரபாணி எதையோ நினைவு படுத்திக்கொள்ள நெற்றிப்பொட்டை விரலால் தட்டிக் கொண்டார்.

''அப்பா, இதோ அவர் போட்டோகூட வந்திருக்கு,'' என்ருள் சிந்து.

அதை வாங்கிப் பார்த்த சக்ரபாணியின் முகம் விரிந்தது, விழி கள் மலர்ந்தன. மகளின் தலையை வருடினுர்.

''கவலைப்படாதேம்மா! நான் தான் வக்கீலாச்சே! நானே இந்தக் கேஸை ஜெயிக்க வைக்கமுடியும். போய் நம் இரண்டு பேரின் துணிமணி களையும் பெட்டியில் எடுத்து வை. இரண்டு ஸீட் ரிசர்வ் பண்ண குமாஸ் தாவை அனுப்பு. நாம் ராத்திரி ரயிலில் மெட்ராஸ் போகிருேம்.. என்ன?'' என்ருர்.

''நான்கூடவா அப்பா?'' மகிழ்ச்சி லேசாகத் தலைநீட்ட சிந்து வினவினுள்.

''என்னம்மா. அசட்டுப் பெண்ணுக இருக்கிருயே! இந்தச் சம யத்திலே முரளிக்கு உன்னுடைய ஆறு தல் தேவையாக இருக்காதா?''

''அப்பா!'' சிந்து சிறு குழந்தைபோல தந்தையின் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். ஆனந்தமிகுதியில் கண்களிலிருந்து பொல பொலவென நீர்முத்துக்கள் சிந்தின.

சக்ரபாணி மகளை அன்புடன் நோக்கினுர். 'அனுபவிக்கக் கொடுத்து வைக்காமல் அற்பாயுளில் போய்விட் டாயே' என்பதுபோல ஹாலில் மாட்டி யிருந்த மனைவியின் போட்டோவை நோக்கினுர்.

''சிந்து...!''

''என்னப்பா?''

''நாம் அத்தை வீட்டில் தான் தங்கப் போகிருேம். ரிப்பே ராக இருக்கும் ரேடியோவையும் வாட்ச் சையும் எடுத்து வைத்துக்கொள் ளம்மா!''

''எதுக்கு? அங்கே இதெல் லாம் ரிப்பேர் பார்க்க டயம் இருக் குமாப்பா?''

''அட, நீ மறந்துட்டியா? உன் அத்தான் ஜம்பு இருக்கானே, அவன் உன்னைச் சுற்றிச் சுற்றி வராமல் இருக்கணுமே. இந்த இரண்டையும் அவனிடம் கொடுத்துவிட்டால் அவன் பார்ட் பார்ட்டாப் பிரிச்சு அதையே குடைந்து கொண்டிருப்பான். நீ நிம் மதியாக முரளியைச் சந்திக்கச் சௌகரி யமாக இருக்குமே!''

தந்தையின் முன்னெச்ச ரிக்கை சிந்துவுக்கு வியப்பாக இருந்தது. அவருடைய நகைச்சுவையை எண்ணிக் கலகலவெனச் சிரித்தாள். சக்ரபாணி யின் தொழில் வெற்றிக்கு அவருடைய அறிவின் திறமை மட்டுமின்றி சொற் களின் நகைச்சுவையும் காரணம் என்று அவரை அறிந்தவர்களுக்குத் தெரியும்.

பிரயாணத்தின்போது மக ளிடம் தமாஷாக, கோர்ட்டில் நடக்கும் பல நிகழ்ச்சிகளைச் சொல்லிக்கொண்டே வந்தாரே தவிர, இந்தக் கேஸ் விஷய மாக எதுவும் பேசவில்லை. தந்தையின் குணமறிந்த சிந்துவும் அதைப்பற்றிப் பேச்செடுக்கவில்லை.

சென்னையில் இறங்கி டாக்சி யில் ஏறி அமர்ந்து கதவைச் சாத்தும் போது, தற்செயலாக அவர் பார்வை மற்ரெரு டாக்சி பக்கம் சென்றது. அந்த டாக்சிக்குள் ஏறத் தயாராக நின்றிருந்தாள் ஓர் அம்மாள் கையில் சின்னப் பெட்டியுடன். அவள் அருகில் இளைஞன் ஒருவன் ஒரு பிளாஸ்டிக் கூடையும் சிறிய 'பெட்'டுமாக நின்றி ருந்தான்.

''அட, காவேரி அம்மாள் போல இருக்கிறதே?'' என்று சக்ர பாணி வாய்விட்டுக் கூறியபோது அவர் ஏறியிருந்த டாக்சி கிளம்பிவிட்டது.


பொங்கி வரும்
புதுப் புனல்
பூர்த்து வரும்
முழு நிலவு
மன மகிழும்
ரெமி
Remy
JASMINE
tender
talc
ரெமி®
தமிழ்நாடு விநியோகஸ்தர்கள் :
ரெமீ'ஸ் ஏஜென்ஸீஸ்,
863, தம்பு செட்டித் தெரு, சென்னை-600001.
MANI

டாக்சியில் ஏறி அமர்ந்த காவேரி புருவங்களைச் சுருக்கியபடி மகன் சூரியை ஏறிட்டு நோக்கினாள். ரயிலிலிருந்து இறங்கும்போதே அவள் மகனின் முகத்தைப் பார்த்தாள். அவன் முகம் ஏன் இப்படி வெளிறியிருக்கிறது? கல்யாணத்திற்குப் பெண் பார்க்க வரச் சொல்லித் தாயாருக்கு எழுதிய மகனின் முகம் இப்படியா கசப்பு மாத்திரையை விழுங்கியதுபோல இருக்கும்?

''என்ன சூரி, என்ன விஷயம்?'' பொறுமை இழந்தவளாக வினவினாள் தாய்.

''அப்புறம் சொல்கிறேன்,'' என்றவன், ஜாடையாக டிரைவரைப் பார்த்தான்.

காவேரி புரிந்துகொண்டாள். மகன் அன்னியன் எதிரில் பேச விரும்பவில்லை என்று தெரிந்து கொண்டாள். மகிழ்ச்சியான விஷயமாக இருந்தால் தயக்கம் இருக்குமா? அவன் தயங்குவதிலிருந்தே விஷயம் ஏதோ விபரீதம் என்று காவேரி கலக்கம் அடைந்தாள்.

சூரி, சென்னையில் ஹாஸ்டலில் தங்கிப் படிப்பை முடித்து நல்ல வேலையில் அமர்ந்த பின்னர், ஒரு சின்ன வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு திருச்சியிலிருந்த தாயாரை வரவழைத்துக் கொண்டான். திருச்சியிலிருந்த சொந்த வீட்டை விற்றுவிட்டுச் சென்னையிலேயே வாங்கிக் கொள்ளலாம் என்று காவேரி திருச்சி சென்றிருந்தாள். வீட்டை விற்ற பின்னர் உறவினர் ஒருவர் வீட்டில் ஒரு விசேஷத்துக்காகத் தங்கியிருந்தபோது சூரியின் கடிதம் வந்தது. வீடு விற்பனை விஷயமாகக் காவேரி திருச்சியில் தங்கி விட நேர்ந்தது. சூரியின் கடிதம் கண்டதும் அவள் உடனே கிளம்பிவிட்டாள்.

'அம்மா! நீ பாட்டுக்கு அத்தங்காவின் பேத்தியையோ, அம்மாஞ்சியின் பெண்ணையோ பார்த்துவிட்டு முடிவு செய்துவிடாதே. நீ எனக்காகப் பார்க்கவேண்டிய பெண் இந்த ஊரில் தயாராக இருக்கிறாள். நீ வந்து பார்த்து ஏற்பாடு செய்ய வேண்டியதுதான் பாக்கி,' என்று பிள்ளை எழுதியிருப்பதைப் பல தடவை படித்துப் படித்துப் பரவசம் அடைந்தாள் காவேரி.

வெட்கமும், குறுநகையுமாக



சுமார் பதினைந்து வருட களுக்கு முன்பு, கச்சாப் பிலி இறக்குமதி செய்வதற்கு விதி கப்பட்ட தடையை எதிர்த்து, தெ ணிந்திய நடிகர் சங்கம் நடத்தி கண்டனக் கூட்டத்தில் எடுக்கப்பட் படம் இது. வருடம் பதினைந்தா

மகன் தன்னை வரவேற்கப் போகிறான் என்று குதூகலத்துடன் ரயிலை விட்டு இறங்கிய தாய், கருமேகம் சூழ்ந்த வானம் போல சூரியின் முகம் மங்கி, களையிழந்திருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டாள். வீடு வந்து சேரும்வரை அவள் மனதில் சஞ்சல அலை மோதிக் கொண்டிருந்தது.

''என்னடா சூரி, அந்தப் பெண் உன்னை ஏமாற்றிவிட்டாளா என்ன? போகட்டும் விடு. வேறு பெண்...''

காவேரி அனுதாபத்துடன் ஆறுதல் கூற ஆரம்பித்தபோது, சூரி சட்டென்று இடைமறித்தான். வீட்டில் ஊஞ்சலில் அமர்ந்திருந்த தாயின் அருகில் அமர்ந்துகொண்டு, ''அதெல்லாம் ஒன்றுமில்லையம்மா... நர்மதாவின்



லும் அடையாளம் தெரிகிறதல்லவா—எஸ். எஸ். ஆர்., எம். ஜி. ஆர், சிவாஜி, ஜெமினி, ரஞ்சன், பாலாஜி, டி. கே. பகவதி, டி. கே. ராமச்சந்திரன் ஆகியோரை?

—டி. ஜே. நவனீதன்

தெரிகிறதா ?

அப்பா ஒரு ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாரம்மா...'' என்றான்.

''நர்மதா... நல்ல அழகான பெயர்தான். ஆமாம், அவள் அப்பாவுக்கு ஏதாவது ஆக்ஸிடெண்டா என்ன?'' பரிவுடன் விசாரித்தாள்.

''உயிருக்கு ஆபத்தான விஷயமல்ல அம்மா. கௌரவத்தைப் பாதிக்கும் விஷயம். அவர் ஒரு லட்ச ரூபாயை அனாதை இல்லத்துக்கு நன்கொடையாகக் கொடுத்திருக்கிறாராம். அதைச் சம்பாதித்த விதத்தைச் சர்க்கார் கேட்டால் சொல்லமாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கிறார். அது கள்ளப் பணமாக இருக்குமோ, கள்ளக்கடத்தலில் அவர் சம்பந்தப்பட்டிருக்கலாமோ என்று சந்தேகப்பட்டு, அரெஸ்ட் பண்ணிவிட்டார்கள்.''

''அடடா, உண்மையைச் சொல்லிவிடலாமே மனுஷன்!''

''அதுதான் யாருக்குமே புரியவில்லையம்மா. நர்மதாவின் அப்பா சாயிராம் ரொம்ப நல்லவர்; தப்புத் தண்டா வழிக்குப் போகமாட்டார்.''

''என்ன பேர் சொன்னே சூரி?'' காவேரி பதற்றத்துடன் வினவினாள்.


''சா யி ரா ம். இதோ பாரம்மா, இவர்தான்,'' என்று கூறிக்கொண்டே செய்தித்தாளை எடுத்து வந்து தாயிடம் கொடுத்தான் சூரி. போட்டோவையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்த காவேரி பெருமூச்சு விட்டாள்.

"அம்மா, இந்தச் சந்தர்ப்பத்தில் எப்படி நாம் கல்யாண பேச்சை எடுப்பது? அவர்கள் வீட்டில் எல்லோரும் துயரமே உருவாக இருக்கிறார்கள். சாப்பாடு இல்லை, தூக்கம் இல்லை, அமைதி இல்லை."

"பாவம் சூரி! இப்ப கல்யாணத்தைப் பற்றிப் பேசாவிட்டாலும் அவர்களைப் போய்ப் பார்க்கலாம். நர்மதாவுக்குத் தைரியம் கொடுக்க வேண்டாமா? நீ அவளை உதறிவிடுவாயோ என்று நிம்மதியின்றிக் கலங்க மாட்டாளா? பாவம், அவளுக்குத் தைரியம் சொல்லவேண்டும். அவள் தாயிடம் நான் மனம் விட்டுப் பேச வேண்டும். 'கல்யாணத்தை இப்ப நடத்த முடியாவிட்டாலும் நர்மதா என் நாட்டுப்பெண் என்பது தீர்மானமாகிவிட்ட விஷயம், என்று அவர்களிடம் சொல்லவேண்டும்."

"அம்மா!" சூரி வியப்போடு கூவினான். "ஏம்மா, உனக்குச் சம்மதம்தானா? நர்மதாவின் அப்பாவைக் கைது செய்திருக்கிறார்கள்; ஜெயிலுக்குப் போனவர் என்றால் கவுரவக் குறைவு என்று நினைக்கவில்லையாம்மா?"

"சந்தேகப்பட்டுக் கைது செய்துவிட்டால், அவர் குற்றவாளி என்று நம்பிவிடுவதா என்ன? அவர் நிரபராதி என்று என் மனத்துக்குப் படுகிறது. சரி; சீக்கிரம் சமையல் செய்து சாப்பிட்டுவிட்டுப் போகலாம்," என்று எழுந்தாள்.



'உனக்கு வந்த ஆசிர்வாதப் பணம் எவ்வளவு? வெகுமதிப் பொருள்கள் என்னென்ன?"

"ப்ளீஸ் வெயிட் மாமா! இதோ என் பெண்டாட்டியைக் கேட்டுச் சொல்கிறேன்."

3

எதிர் எதிராக வந்த இரண்டு டாக்சிகளும் சாயிராப வீட்டின் எதிரில் நின்றன. சூரி ஒரு டாக்சிக்குப் பணம் கொடுத்துக் கொண்டிருந்தபோது, தானும் சிந்துவும் வந்த டாக்சிக்கு சக்ரபாணி பணம் கொடுத்துக் கொண்டிருந்ததால் காவேரியைக் கவனிக்கவில்லை.

காவேரி திகைப்புடன், "வக்கீல் சார், நீங்களா?" என்று வினவினாள். அவள் பார்வை சிந்துவை அளந்தன. சிந்து அடக்கமாகப் புடவைத் தலைப்பை இழுத்து மூடியபடி தந்தையின் பின்னால் நின்று கொண்டிருந்தாள்.

சக்ரபாணி, "ஓ... காவேரி அம்மாளா! நீங்களும் இங்குதான் வந்திருக்கிறீர்களா? பையன் உங்கள் பிள்ளை தானே?" என்று வினவியபடி சூரியை ஏற இறங்கப் பார்த்தார்.

பார்வையின் கூர்மை தாளாமல் சூரி தாயிடம், "ஏம்மா இவரைத் தெரியுமாம்மா?" என்றான்.

"தெரியும் சூரி," என்று சொன்னவள், சக்ரபாணியிடம், "ஆமாம் சார். இவன் என் பிள்ளை சூரி. 'ஏ.ஜி.' ஆபீசில் வேலை பார்க்கிறான். பி.எஸ்ஸி பாஸ் பண்ணியிருக்கிறான். அந்தப் பெண் உங்கள் பெண் தானே?"

"ஆமாம், சிந்து பி. ஏ. முடித்துவிட்டு இப்ப சும்மா வீட்டில் போரடித்துக் கொண்டிருக்கிறாள்," என்றார் சிரித்தபடி. சிந்துவின் சிவந்த முகம் மேலும் சிவந்தது.

"இந்த வீட்டுக்கு மருமகள் ஆகப்போகிறாள் சிந்து. எனக்குச் சிரமமே வைக்கவில்லை. மாப்பிள்ளையையும் சம்பந்திகளையும் பார்த்துப் பேசலாம் என்று வந்திருக்கிறேன். என் பெண்ணே என்னை மாமனாருக்கு அறிமுகம் செய்து வைக்க அழைத்து வந்திருக்கிறாள்."

(தொடர்ச்சி 73'ம் பக்கம்)

(44'ம் பக்கத் தொடர்ச்சி)

"அதே கதைதான் இங்கே
ும். இவன் இந்த வீட்டு மாப்பிள்ளை
ாகப் போகிருன். மருமகளையும் சம்
ந்திகளையும் பார்க்கத்தான் நானும்
வந்திருக்கிறேன். என்ன அதிசயமான
ந்திப்பு பார்த்தீர்களா?"

இருவரும் வாசலில் நின்று
பேசிக் கொண்டிருந்தபோது வீட்டினுள்
ிருந்து வெளியே வந்த ஓர் இளைஞன்
ிந்துவைக் கண்டதும் திகைப்பும்
வியப்புமாக, "சிந்து...நீ...நீ..."
ன்று தடுமாறினுன்.

சக்ரபாணி சகஜ பாவத்
துடன் தன்னை அறிமுகம் செய்து
கொண்டார். "நான் சிந்துவின் அப்பா.
நீதானே முரளி என்பது?"

முரளி பதில் சொல்லும்
முன்னரே சூரி தாயிடம், "அம்மா
அதோ வருகிருள் பார். அவள்தான்
நர்மதா," என்ருன் ரகசியக் குரலில்.

"முரளி, யார் வந்திருக்
கிருர்கள்? எல்லாரையும் உள்ளே
அழைத்து வாயேன்." உள்ளிருந்து
மென்மையான குரல் ஒலித்தது.

சூரியைக் கண்டு ஆவலுடன்
தலை நீட்டிய நர்மதா அங்கே கூட்ட
மாக நாலைந்து பேராக நிற்பதைக்
கண்டு நாணத்துடன் உள்ளே ஓடி
விட்டாள்.

"வாருங்கள் சார், வாங்
கம்மா," என்ருன் முரளி.

"மிஸ்டர் முரளி! இவர்
மிஸ்டர் சூரி. உங்க வீட்டுக்கு வரப்
போகிற மாப்பிள்ளை. இவங்க சம்
பந்தியம்மா. உபசாரமாக அழைத்துப்
போங்கள். நான் பெண்ணைப் பெற்ற
வன். நான் பின்னுடி வரேன்," என்
ருர் சக்ரபாணி.

காவேரி கலகலவெனச் சிரிக்க
சிந்துவும் சூரியும் புன்னகை பூக்க,
முரளி ஒன்றும் புரியாமல் தவிக்க,
சக்ரபாணி தானே முதலில் உள்ளே
சென்ருர்.

சாயிராமின் மனைவி யமுனு
அனைவரையும் வரவேற்று உபசரித்
தாள். அவளுடைய கணவனைப் பற்றி
ஏதும் சொல்லவே இடம் வைக்கவில்லை
சக்ரபாணி. "இதோ பாருங்கள் அம்மா.
மிஸ்டர் சாயிராமைப் பற்றி எங்க
ளுக்கு நன்ருகத் தெரியும். போலீசில்
அவரைச் சந்தேகத்தின் பேரில்தான்



இன்று அதிகமாக அடிபட்டு
வரும் ஜோக் இதுதான்.

"இங்கிலீஷ்லே மொத்தம் எவ்
வளவு எழுத்துக்கள்?"

"இருபத்தி மூன்று சார்!"

"எப்படி?"

"அதான் L.I.C. மூன்று
எழுத்து எரிந்துபோச்சே!"

கைது செய்திருக்கிருர்கள். அந்தச் சந்
தேகத்தை உடைத்து அவரை மீட்டு
வர நாளுயிற்று. நான் ஒரு வக்கீல்.
உங்கள் வருங்கால சம்பந்தி. எனக்குப்
பொறுப்பிருக்கிறது. கவலையை விடுங்
கள்," என்ருர் அவர்.

யமுனுவுக்குப் புல்லரித்தது.
முரளியையும் நர்மதாவையும் பெற்ற
தில் அவள் உள்ளூரப் பெருமைப் பட்
டுக் கொண்டாள். அவள் குடும்பத்
தைத் தங்கள் குடும்பமாய்க் கல்யாணத்
துக்கு முன்பே ஏற்றுக் கொண்டு வழக்
காட வந்திருக்கிருர்களே பெண்ணைக்
கொடுக்க வரும் சம்பந்தி சக்ர
பாணியும், பெண்ணை ஏற்றுக்கொள்ள
வரும் சம்பந்தி காவேரி அம்மாளும்
அவள் எத்தனை பாக்கியம் செய்தவள்!

அந்தக் கங்கா மட்டும் அவர்
கள் வாழ்க்கையில் குறுக்கிடாமல்
இருந்திருந்தால்... அவளைப் பற்றிய
விவரம் அவர்களுக்குத் தெரிந்திருக்
குமா? தனக்குத் தெரிந்தவரையிலா
வது சொல்லிவிட வேண்டும் என்று
நினைத்தாள் யமுனு.

4

"யமுனும்மா.... நான்
மாலையில் போய் மிஸ்டர் சாயிராமைச்
சந்தித்துப் பேசி இதற்கு ஒரு முடிவு
செய்து வருகிறேன்..."

அன்று வீட்டில் ஏகக் கும்பல். தூங்கி எழுந்ததிலிருந்தே பாத்ரூமுக்கு ஒவ்வொருவராகக் குளிக்கப் போனால் தான் 10 மணிக்குள் எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டுவிட்டு அவரவர் ஆபீசுக்குப் போய்ச் சேரலாம். நாங்கள் இருப்பதோ மாடி வீடு. கழிவு நீர் எல்லாம் பாத்ரூமில் உள்ள வடிகால் ஓட்டையில் சேரும்படி வீட்டு அமைப்பு. பாத்ரூம் வடிகாலிலிருந்து கீழே தரை மட்டத்திற்குக் கழிவு நீரை எடுத்துச் செல்லும் குழாயில் எங்கோ அடைப்பு. பாத்ரூமில் தண்ணீர் தேங்க ஆரம்பித்து விட்டது. ஒவ்வொருவராகக் கம்பியை வைத்துக்கொண்டு வடிகால் ஓட்டையின் மேலே போட்டுள்ள சதுரமான இரும்புக் கிராதியை எடுத்துவிட்டு, கை சளைக்கும் வரை குடைந்தது தான் மிச்சம். தண்ணீர் இறங்கும் வழியைக் காணோம். எங்கள் முயற்சியைப் பார்த்துச் சிரித்தார், டெல்லியிலிருந்து வந்திருந்த மாமா. அவர் ஒரு காரியம் செய்தார். பெரிய கந்தல் துணியை எடுத்து நன்றாகச் சுருட்டி ஒரு கம்பியில் சுற்றிக்கொண்டார். வடிகாலின் சதுர ஓட்டையில் அடைத்து நுழைத்தார். வேகமாக மேலும் கீழுமாக நான்கு முறை ஏற்றி இறக்கினார். ஆச்சரியம்; அடைப்பு நீங்கி, நீர் வடிய ஆரம்பித்தது. வளைவு வளைவாகச் செல்லும் 'டௌன் பைப்'பில் கம்பியால் எட்ட முடியாத தூரத்தில் உள்ள அடைப்பை 'ஹைடிராலிக் பிரஷர்' மூலமாக அவர் சுலபமாக நீக்கி விட்டார்!



—சே. தாமோதரன்

இத்தனை நேரம் நெகிழ்ச்சியுடனிருந்த யமுனாவின் முகம் கம்பீரமாக நிமிர்ந்து. "என் கணவர் அரெஸ்ட் செய்யப்பட்ட விஷயம் தெரிந்தும் நீங்கள் இருவரும் சம்பந்தம் செய்துகொள்ள விருப்பத்துடன் வந்திருப்பதிலிருந்து உங்களுக்கு எல்லா விஷயமும் தெரியும் என்று நினைக்கிறேன்."

காவேரியும் சக்ரபாணியும் திகைப்புடன் பார்த்துக் கொண்டனர்.

"வெறும் நம்பிக்கையினாலோ, மனிதாபிமானத்தினாலோ மட்டும் அல்ல, திட்ட வட்டமாக என் கணவர் நிரபராதி என்று தெரிந்துதான் வந்திருக்கிறீர்கள். இல்லையா?" யமுனா கேட்டாள்.

"ஓ..அப்படியானால் சாயிராம் உங்களிடம் ஒன்றையும் மறைக்கவில்லை என்று புரிகிறது." சக்ரபாணி தலையை ஆட்டிக் கொண்டார்.

"அண்ணா, உத்தம தம்பதிகளுக்குள் ஒளிவு மறைவு இருக்குமா?"

"கங்கம்மாவின் வக்கீல் நீங்கள்தானே?" யமுனா நேரிடையாக வினவினாள்.

"ஆமாம்மா. கங்கையின் வக்கீல் நான்தான். இதோ காவேரி. கங்கைக்கு உயிர்த் தோழியாக, உடன் பிறவாத சகோதரியாக இருந்தவள். எங்கள் இருவருக்கு மட்டுமே தெரிந்த ரகசியம் அது."

"ஆமாம் யமுனா! எனக்கும் கங்கைக்கும் பல வருஷங்கள் வித்தியாசம். என்னைவிட கங்கை பதினைந்து பதினாறு வயது மூத்தவள். அப்படியும் எங்களுக்குள் அப்படி ஒரு பந்தம் ஏற்பட்டது அதிசயம். கங்கை — அந்தப் புனிதமான பெயருக்கேற்ப அவளும் புனிதமானவள். சேற்றில் பிறந்த செந்தாமரை." காவேரி தோழியின் நினைவில் சில நிமிஷங்கள் உருகினாள்.

யமுனா நிதானமாகக் கூறினாள்: "ஒரு மகானின் இதயத்திலும் வாழ்க்கையிலும் பங்குகொண்டவள் நிச்சயமாக பாக்கியவதியாகவும் இருந்திருக்க வேண்டும். எனக்குத் திருமணமாகி முரளிகூடப் பிறந்து சில மாதங்கள் ஆகியிருந்தன. அப்போது ஏற்பட்ட பந்தம்."

"யமுனாம்மா, கங்கையைப் பற்றிய விவரம் உங்களுக்கு எப்போது தெரியும்? கங்கை இறந்த சமயம் தானே?"

"ஆமாம், அப்போதுதான் என் கணவர் விவரம் கூறினார். கங்கை இவரிடம் பணத்தைக் கொடுக்காமல் இருந்திருந்தால் இப்போது இந்தச் சிக்கலும் துயரமும் ஏற்பட்டிருக்காது. ஆமாம், கங்கையை உங்களுக்கு எப்படித் தெரியும்?"

காவேரி யமுனாவிடம் கங்கையைத் தான் சந்தித்து, தொடர்ந்து நட்புடன் வாழ்ந்த விவரங்களைக் கூறத் தொடங்கினாள்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்...

குழந்தை சூரிக்குப் பால் கொடுத்துத் தூங்கவைத்துவிட்டு மெதுவாக எழுந்தாள் காவேரி. அவள் கணவன் அடிக்கடி வெளியூர் போகும் வேலையிலிருந்தான்.

கிணற்றங்கரைக்குச் சென்ற காவேரி அடுத்த வீட்டுக் கிணற்றடியில் ஒரு பெண் நிற்பதைக் கண்டாள். முப்பது வயதிருக்கலாம். ஆனால் அந்த ஒரு நொடியிலேயே அவளுடைய கொள்ளை அழகைக் கண்டு காவேரி மலைத்து நின்றாள். அப்பப்ப! அந்த நிறமும், வெண்ணெயைப் போன்ற வழவழத்த அங்கங்களும், நீண்ட கூந்தலும் அதுமட்டுமின்றி அந்தக் காந்த முகம், முல்லைச் சிரிப்பு. கருவிழிகள். இத்தனை வயதிலும் இப்படிக் குன்றாத அழகு!

காவேரிக்குக் கங்கையிடம் பேச வேண்டும் என்று தவிப்பு. ஒரு நாள் காலை கங்கை வீட்டிலிருந்து தீனமாக முனகும் ஒலி கேட்டது. காவேரி சந்தர்ப்பம் கிடைத்த துள்ளலில் அங்கு ஓடினாள். கங்கைதான் ஜுரத்தோடு முனகிக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா உடம்புக்கு?" காவேரியின் கனிவான குரலைக் கேட்டு விழிகளைத் திறந்து பார்த்தாள் கங்கை.

"நான் பக்கத்து வீட்டிலிருக்கிறேன்."

"ஓ தெரியுமே! நீங்க தென்னாட்டுக் கங்கை இல்லையா?" புன்னகை ஒளிர்ந்தது. காவேரி புரிந்து கொண்டு சிரித்தாள். அதற்குப் பிறகு அந்த இருவரும் உயிர் தோழிகளாக ஆகிவிட்டனர்.

"கங்கை! உங்களுடைய இந்தச் சௌந்தர்யத்தில்தான் நான் மயங்கி, உங்கள் நட்பைப் பெறத் துடித்தேன். ஆனால் .. இப்ப.. உங்கள் புனிதமான குணத்துக்கும் அடிமையாகவே ஆகிவிட்டேன்." காவேரி மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தபடி கூறுவாள்.

"காவேரி! உன் நட்பு கிடைத்த நான்தான் பாக்யவதி. ஆண்களின் காமுகப் பார்வை.. பெண்களின் பயம், வெறுப்பு, உதாசீ

னம் ஆகிய பார்வைகளினால் நான் ரொம்பவும் பாதிக்கபட்டவள் என் குடும்பத்தாராலும் ஊராலும் ஒதுக்கப்பட்ட அனாதை. எனக்கு உன்னுடைய இதயம் கனிந்த நட்புதான் ஜீவநாடி.''

''கங்கை, நான் மட்டும் தானா? அவர்? அதாவது உங்களுடைய அவர்?''

''ஆமாம் காவேரி. அவர் என்னை வாழவைக்கும் தெய்வம். அவரிடம் பிரேமை, பயம், பக்தி அவரிடம் அடிமையாகக் காலடியில் விழந்து கிடப்பவள்.''

காவேரியின் கணவன் திடீரென்று இறந்தபோது கங்கையின் துணை அவளுக்கு மிக ஆறுதலாக இருந்தது. மகன் சூரி வளர்ந்தான். அநேகமாகக் கங்கையின் தோளிலும் மடியிலுமே அவன் வளர்ந்தான். வருடங்கள் ஓடின. சூரி சென்னையில் ஹாஸ்டலில் தங்கிக் கல்லூரியில் படித்தான். அப்போதுதான் கங்கை இறந்து போனாள்.

அவளுடைய இறுதிக் காலம் வரை காவேரி கங்கையை விட்டு நகரவில்லை. கங்கையின் மறைவுக்குப் பிறகுதான் மகனிடம் தங்கச் சென்னைக்கு வந்தாள்.

அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தைக் கேட்டு யமுனா சிலையாக உட்கார்ந்திருந்தாள்.

5

காவேரியும் சக்ரபாணியும் சென்னைக்கு வந்து ஒரு வாரமாகிவிட்டது. சாயிராமின் பிடிவாதம் இம்மியும் குறையவில்லை. சக்ரபாணியின் வாதங்களோ, காவேரியின் கெஞ்சலோ, யமுனாவின் ஊமைத்தனமான துயரமோ, நர்மதாவின் கண்ணீரோ சாயிராமின் உறுதியை இழக்கச் செய்யவில்லை. அன்றும் அப்படித்தான் தங்களால் இயன்றவரை சாயிராமின் மனப்பாறையை அசைக்க முயன்று கொண்டிருந்தபோது போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்தார். எல்லோரும் மரியாதையாக ஒதுங்கி நின்றனர்.

''மிஸ்டர் சாயிராம், உங்களை விடுதலை செய்கிறேன். சாரி,







"இதுக்குத்தான் சொல்றது. அவுட் டோர் ஷூட்டிங் போனால், கண்ட நேரத்தில், கண்ட தீனியையெல்லாம் சாப்பிடக் கூடாது. இப்போ வயிற்று வலின்னு நான் என்ன பண்ண முடியும்?'' மஞ்சுளாவிடம் சிவாஜி இப்படிக் கேட்கிற மாதிரியுள்ள காட்சி 'அன்பே ஆருயிரே' படத்தில் வருகிறது.

உண்மை தெரியாததால் உங்களை அரெஸ்ட் செய்ய நேர்ந்தது. எங்கள் கடமையைச் செய்தோம். மன்னியுங்கள். இன்று உண்மை தெரிந்துவிட்டது. உங்களை விடுதலை செய்ய உத்தரவு,'' என்று கூறிக்கொண்டே சாயிராமின் கையைப் பிடித்து சந்தோஷத்துடன் குலுக்கினார்.

"என்ன! உண்மை தெரிந்துவிட்டதா?'' சாயிராம் படபடப்புடன் வினவினார்.

"அதோ பாருங்கள்.'' எல்லோரும் அவர் சுட்டிக் காட்டிய திசையில் பார்த்தார்கள்.

"ஓ.. முரளியா?''

எல்லோருடைய குரலிலும் வியப்பு, பீதி.

முரளி கையில் விலங்கு! இரண்டு பக்கமும் போலீஸ் பாதுகாப்பு.

"என்ன இது - முரளி!'' சாயிராம் கூவினார்.

"சார்! உங்கள் மகன் கள்ளக் கடத்தல்காரர்களோடு சம்பந்தப்பட்டவர். ஒரு லட்ச ரூபாய் கள்ளப் பணம் அவர் கடத்தலில் சம்பாதித்தது என்று அவரே வந்து ஒப்புக்கொண்டு சரணடைந்துவிட்டார்.''

"முரளி, என்ன உளறல் இது!'' சக்ரபாணி கூவினார்.

முரளி புன்னகை செய்தான். "உளறவில்லை மாமா! உளறவில்லை. வழி வழியாக வந்த லட்சியப் பாதையில் நான் நடக்கிறேன்.''

எல்லோரும் ஒருவரை ஒருவர் புருவங்கள் சுருங்கப் பார்த்துக் கொண்டனர். "அப்பா! லட்சியம் என்பது உங்களுக்கு மட்டும்தான் சொந்தமா? உங்கள் தந்தையின் கௌரவம் பாதிக்கக்கூடாது என்று நீங்கள் குற்றவாளி ஆனீர்கள். நான் உங்கள் மகன். என் தந்தையின் கௌரவத்தைக் காப்பாற்ற உங்களைப் பின்பற்றி வந்திருக்கிறேன்.''

சாயிராமின் தலைகுனிந்தது. சக்ரபாணியின் முகம் மலர்ந்தது. காவேரியின் கண்கள் கனிந்தன. யமுனாவின் இதழ்கள் துடித்தன.

போலீஸ் இன்ஸ்பெக்டர் சிலைபோல் நின்றிருந்தார்.

''இன்ஸ்பெக்டர்!''சாயிராம் மென்று விழுங்கியவாறு அவரிடம் விண்ணப்பித்தார். ''நான் உண்மையை உங்களிடம் கூறிவிடுகிறேன். தயவுசெய்து முரளியை விடுவியுங்கள். நான் தோற்றுப் போனேன். ஆனாலும் எனக்குப் பெருமைதான். வக்கீல் சார், நாம் எல்லோரும் இன்ஸ்பெக்டரிடம் உண்மையைக் கூறிவிடலாம்,''என்றார் சாயிராம்.

''அப்பா, இன்ஸ்பெக்டரிடம் நான் உண்மையைக் கூறிவிட்டேன். சக்ரபாணி மாமா, காவேரி அத்தை, அம்மா எல்லோருடைய வாய்க்கும் நீங்கள் பூட்டுப் போட்டுவிட்டீர்கள். ஆனால் என்னிடம் சத்தியம் ஒன்றும் வாங்கிக் கொள்ளவில்லை — உங்களை மீட்க இது தான் வழி என்று செய்துவிட்டேன். விஷயங்களைக் கூறி நானும் இன்ஸ்பெக்டருமாகச் சேர்ந்து போட்ட நாடகம் இது. கள்ளக் கடத்தலில் சம்பந்தம் என்று நடித்தேன். பயந்துவிட்டீர்களா அப்பா?''

''இல்லை முரளி! அதற்குப் பயப்படவில்லை .. ஆனால் நம் குடும்ப கௌரவத்தையே பாதிக்கும்படியான விஷயத்தை அம்பலமாக்கிவிட்டாயே!'' சாயிராம் வேதனையோடு சொன்னார்.

''அப்பா! நீங்கள் சுயநலக்காரர். உங்கள் அப்பா—அதாவது என் தாத்தா—உண்மையிலேயே தவறு செய்தவர். அப்படியும் அதை மகா பெரிய தவறு என்று சொல்ல முடியாது. சபலம் ஏற்படுவது சகஜமில்லையா? சின்ன வயதிலேயே பாட்டி போய்விட்டாள். ஊர் உலகம் எவரை மகான்என்று புகழ்ந்ததோ அந்த உங்கள் அப்பா ஒரு தாசியிடம் தொடர்பு கொண்டவர் என்று தெரியக்கூடாது என்று எண்ணினீர்கள். ஆனால் எங்களைப் பார்த்து உலகத்தார் 'இவன் கைதியின் பிள்ளை, —லட்சம் ரூபாயை லஞ்சம் வாங்கியவரின் பிள்ளை' என்று ஏசும்படி வைத்தீர்களே, அது என்ன நியாயம்? நீங்கள் நிரபராதியாக இருந்தும் — அவப் பெயரை உண்டாக்க நினைத்தீர்கள். இறந்துவிட்டவரின் கௌரவம் பெரிதா? எங்கள் எதிர்காலத்தின் — உங்கள் நிகழ் காலத்தின் — கௌரவம் பெரிதா? யோசித்தீர்களா? செய்த தவறை மூடி மறைக்க முயன்றீர்கள். நான் செய்யாத தவறுக்கு நீதி கேட்க வந்தேன். நான் செய்தது தவறா? சொல்லுங்கள்.''

''முரளி, என்னை மன்னித்து விடு, நீ கூறுவது அத்தனையும் நியாயமே. இப்போது புரிந்து கொண்டேன். முரளி, தாத்தாவைப் பற்றிய விஷயம் உனக்கு எப்படித் தெரிந்தது? யார் கூறினார்கள்?'' அவர் பார்வை யமுனாவிடம் தான் ஓடியது.



''இல்லே. அம்மா சொல்ல வில்லே. சேதுபதிதான் சொன்ஞர். அதோ அவரையும் வரச் சொல்லி யிருந்தேனே. வருகிருர் பாருங்கள்,'' என்ருன் முரளி.

''சேதுபதி சொன்ஞை? அவ னுக்கு எப்படித் தெரியும்?'' சாயிராம் திடுக்கிட்டார்.

சக்ரபாணி, காவேரி, யமுஞ ஆகியோரும் அங்கு வந்த சேதுபதியை வியப்புடன் நோக்கிஞர்கள்.

''வாருங்கள். மிஸ்டர் சேது பதி. உட்காருங்கள்.'' இன்ஸ்பெக்டர் வரவேற்று உட்காரவைத்தார்.

ஆஜானுபாகுவான தோற் றம். இளம் வயதாஞலும் சிறுவ்யதி லிருந்தே ஏதோ ஒரு ஏக்கத்திஞல் வாழ்க்கையில் ஏற்பட்டுவிட்ட விரக்தி வயதைக் கூடுதலாகக் காட்டியது. நிராசையிஞல் உண்டான முரட்டுத் தனம், உலகத்தையே துச்சமாக உதறி விடும் அலட்சிய மனம். துடுக்கான பேச்சு. இவைகளின் மொத்த உருவமே சேதுபதி.

அவனே ஊன்றிப் பார்த்த காவேரியின் உள்ளத்தில் சந்தேக அலே வளேயமிட்டது.

காவேரி சக்ரபாணியைப் பர பரப்புடன் பார்த்தாள்.

''அண்ணு'' அவள் ஏதோ கூற நினேப்பதை உணர்ந்து கண் சாடையிஞலேயே பேசாதிருக்கும்படி செய்தார் சக்ரபாணி.

''மிஸ்டர் சாயிராம்! முத லில் உங்களே அரெஸ்ட் செய்யவும், பிறகு இப்போது விடுதலே செய்யவும் காரணமாயிருந்தவர் இந்தச் சேதுபதி தான்.'' இன்ஸ்பெக்டர் ஆரம்பித்து வைத்தார்.

''அஞதை இல்லத்தில் நான் நன்கொடை கொடுத்தபோது இவன் தான் சாட்சிக் கையெழுத்திட்டான். அதஞல் நீங்கள் என்னே அரெஸ்ட் செய்ய வந்தபோது இவன்தான் கார ணம் என்று புரிந்துவிட்டது. ஆஞல் இப்போது விடுவிக்க வந்த காரணம் தான் புரியவில்லே.''

''சார்! நீங்கள் எதை மூடி மறைக்க முயன்றீர்களோ அதைப் பகி ரங்கமாக்கவே நான் இப்போது உங்களே விடுவிக்கச் செய்தேன்...''

''என்...ன...என்...ன?'' துடிப்புடன் வினவிஞர் சாயிராம்.

''புரியவில்லேயா? உங்களேப் பற்றி அவதூருகப் புகார் சொன்ன காரணம்—அந்த லட்ச ரூபாய் உங்க ளுக்குக் கிடைத்த உண்மையைக் கூறி விடுவீர்கள் என்று நினேத்தேன். ஆசார சீலரும் பக்திமாஞும் கோவில்களுக்கு



சமீபத்தில் பெங்களூரில் நடந்த "டெர்பி" குதிரைப் பந்தயத்தில் சென்னைக் குதிரையான 'ரெட் காக்கேட்' மேல் (ஹிந்து பத்திரிகை திரு. நரசிம்மனுடையது) 75 லட்ச ரூபாய் பணம் பொது மக்களால் கட்டப்பட்டது. (இதற்கு மேலும் இருக்கலாம் என்பது பலர் ஊகம்.) இதற்கு முன் இவ்வளவு பெரிய தொகை எந்தக் குதிரை மேலும் கட்டப்பட்டது கிடையாதாம். ஆகவே பந்தயத்திற்கு ஒரு வாரம் முன்பிருந்தே அந்தக் குதிரைக்கு பலத்த போலீஸ் காவல் பந்தோபஸ்து தரப்பட்டது. 20-7-75 அன்று நடந்த அந்தப் பந்தயத்தில் எதிர்பாராதவிதமாக அந்தக் குதிரை தோற்றுவிட்டது!

—தகவல்: வி. ஜெயராமன்

நிறைய கைங்கரியம் செய்தவருமான உங்கள் தந்தை கைலாச நாதரின் மறைக்கப்பட்ட வாழ்க்கைச் சரித்திரம் வெளிவரவேண்டும் என்று துடித்தேன். ஆனால், நீங்களோ என்னை ஏமாற்றி விட்டீர்கள். செய்யாத குற்றத்திற்குத் தண்டனை அனுபவிக்கவும் உறுதியாக நின்றீர்கள். அதனால் நானே அதை இன்ஸ்பெக்டருக்கும் முரளி, சூரி ஆகியோருக்கும் தெரியப்படுத்தி உங்களை விடுதலை செய்யச் சொன்னேன்."

அவனுடைய அழுத்தமான சொற்களும், குரலில் தொனித்த அலட்சியமும் சாயிராமுக்கு ஆத்திரத்தை உண்டாக்கினது.

"சேது! என் தந்தையைப் பற்றிய விஷயத்தை வெளிப்படுத்த உங்களுக்கென்ன அவ்வளவு ஆர்வம்? அதனால் உங்களுக்கென்ன லாபம்?" சாயிராம் படபடத்தார்.

சேதுபதி சிரித்தான் ஏளனமாக. "ஏன், என்று சொல்லட்டுமா? உங்களைப் போலத் தந்தை தாயின் அணைப்பில் வளர்ந்திருந்தால், அந்தப் பாசத்தையும் பரிவையும் அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்தால் நானும் அந்தத் தந்தையின் ரகசியத்தை மறைத்திருப்பேன். ஆனால் அது எனக்குக் கிட்டவில்லை. பிறந்த சில மாதங்களிலேயே அனாதையாக்கப்பட்டவன். நினைவு தெரிந்த நாள் முதல் ஒவ்வொரு கணமும் பெற்றவர்கள் யார் யார் என்று அறியத் துடித்தேன். என் நிலையில் இருந்திருந்தால்... நீங்கள்..."

"என்ன சொல்லுகிறீர்கள்.. சேது?" கூவினார் சாயிராம்.

"இன்னமும் புரியவில்லையா? உங்கள் தந்தைதான் எனக்கும் தந்தை!"

சாயிராம் விக்கித்து நின்றார்.

"ஆமாம். என் தந்தை கைலாசத்துக்கும் கங்கைக்கும் பிறந்த பிள்ளைதான் நான்."

"குழந்தை..." காவேரி நாற்காலியைத் தள்ளிவிட்டுப் பாய்ந்து வந்து சேதுவின் முகத்தைத் தன் உள்ளங் கைகளால் தூக்கிப் பார்த்தாள். கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் சேதுவின் முகத்தில் தெறித்தது.

"அண்ணா! இவன் முகத்தைப் பார்த்ததுமே எனக்குச் சந்தேகம் வந்தது. உங்களிடம் கேட்க நினைத்தேன். என் கங்கை கடைசிவரை இதை மட்டும் என்னிடமிருந்து மறைத்துவிட்டாளே!"

"தந்தையின் கௌரவத்தைக் காப்பாற்ற சாயிராம் தண்டனையை ஏற்க வந்ததை நீங்கள் எல்லோரும் ரொம்பப் பிரமாதமாக எண்ணினீர்களே. என் அம்மா செய்த தியாகத்திற்கு இது உறைபோடக் காணாது. அம்மா," என்றான் சேது காவேரியிடம்.

"உண்மைதான்," என்றார் சக்ரபாணி.

காவேரியும் யமுனாவும் தலையை அசைத்தனர். சாயிராம் தலை குனிந்தார். சில நிமிஷங்கள் அந்த மௌனம் நீடித்தது.

"காவேரி! கங்கை...அன்றைக்கு...அவள் இறப்பதற்கு முன்கூட என்னிடம் சொல்லவில்லையே..லட்ச ரூபாயைத் தன்னுடைய சொத்தை சாயிராமுக்குக் கொடுத்தாளே தவிர, தான் பெற்ற பிள்ளைக்கென்று ஒன்றும் கொடுக்கவில்லையே!" என்று சக்ரபாணி கூறினார்.

சாயிராம் தலை குனிந்தபடி சொன்னார்: "என் அப்பா இறப்பதற்கு முன்னால்தான் கங்கையைப் பற்றிக் கூறினார். அத்தனை வருஷங்கள் அவர்கள் வாழ்க்கை ரகசியமாக இருந்திருக்கிறது. அப்பா சொன்னார், 'நான் இறந்து போனதும் கங்கைக்குத் தெரிவி. கங்கை இறந்தபின் அவளுக்குக் கொள்ளி போடு. அவள் சொத்து ஏதாவது கொடுத்தால், கோதாவரி அனாதை இல்லத்துக்கு நன்கொடையாகக் கொடுத்துவிடு. எங்களைப் பற்றி உலகம் அறியக்கூடாது,' என்று சத்தியம் வாங்கிக் கொண்டார்."

"ஓகோ! பெற்ற பிள்ளையை அனாதை இல்லத்தில் விட்டுவிட்டார். அதே இல்லத்துக்கு நன்கொடை அளித்து, தான் செய்த பாவத்திற்குப் பரிகாரம் செய்துவிட்டாராக்கும் அந்த மகான்!" சேது ஏளனமாகக் கூறியதற்குப் பதில் ஏதும்



குமரி அனந்தன் வீட்டினுள் நுழைந்ததுமே அவருடைய மனைவி, ''பார்த்தசாரதி பல முறைகள் ஃபோன் பண்ணினார். தாம்பரம் சாரதா பப்ளிகேஷன் உரிமையாளராம். லண்டனிலிருந்து சில ஆங்கிலப் புத்தகங்கள் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவாம். கப்பல் கட்டணம் கட்டி எடுக்க வேண்டுமாம்,'' என்று கூறினார்.

அடுத்த வாரம் ஒருநாள் குமரி அனந்தன் வீட்டிலிருந்த சமயம் அந்த நபர் கூப்பிட்டார்.

டெலிபோனில் விவரங்கள் கேட்டார் அனந்தன். புத்தகங்களின் நூல்களின் பெயரை மறு முனையில் பேசியவர் வெளியிட்டார்.

''உங்கள் அலுவலகத்திலிருந்து ஆளை அனுப்புங்கள். பணம் தருகிறேன்,'' என்று பதில் சொன்னார் அனந்தன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஓர் ஆள் வந்து கப்பல் கட்டணத் தொகை ரூ. 35–50 பைசாவை அவர் வீட்டிலிருந்து வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

ஒரு மாதம் ஆகியும் புத்தகங்கள் குமரி அனந்தனின் கைக்கு வந்தபாடில்லை.

''பொதுக்கூட்டங்களில் மாலைக்குப் பதிலாக புத்தகங்கள் வாங்கிக் கொள்கிறேனா? என்னை ஒரு நல்ல புத்தகப் பித்து என்று நினைத்து யாரோ இப்படி ஏமாற்றிவிட்டார்கள். இன்னும் எத்தனை பேர்களுக்கு இந்த அனுபவமோ'' என்று குறைபட்டுக் கொண்டார் குமரி அனந்தன். என். பி.

கூற முடியாத சங்கட நிலை ஏற்பட்டது மற்றவர்களுக்கு.

''சேது! உங்கள் பெற்றோரைப் பற்றி எப்போது யார் மூலம் தெரிந்து கொண்டீர்கள்?'' சக்ரபாணி கேட்டார்.

''நான்தான் சொன்னேன்,'' என்று கூறிக்கொண்டு கோதாவரி உள்ளே நுழைந்தாள்.

சூரியும் தொடர்ந்து வந்தான். இன்ஸ்பெக்டர் மேலும் இரண்டு நாற்காலிகளைப் போடச் சொல்லி உட்கார வைத்தார். வயதான அந்த மூதாட்டி எல்லோரையும் ஒரு முறை பார்த்தாள். சக்ரபாணி தன் சுபாவப்படி அந்த அம்மாளுக்குத் தன்னையும் மற்றவர்களையும் அறிமுகப்படுத்தினார்.

பிறர் வினவுவதற்கு முன்பே கோதாவரி தொடங்கினாள். ''கங்கை!'' லேசாக இமைகளை ஒரு விநாடி மூடித் திறந்தாள். ஒரு பெரு மூச்சு. பின் தங்குதடையின்றிச் சொல்லலானாள்!

''கங்கை அந்தப் பெயருக்கேற்ப புனிதவதி. தாசி குலத்துப் பெண். தாய் சரஸ்வதி குலத் தொழிலைச் செய்யப் பெண்ணை வற்புறுத்தினாள். கங்கை எத்தனை மறுத்தும் அம்மாவுக்கும் பெண்ணுக்கும் இடையே பெரிய பிளவே ஏற்படும்படி ஆகிவிட்டது. இருபத்திரண்டு வயது யௌவன குமாரியான கங்கை ஒருநாள் எங்கள் இல்லத்துக்கு ஓடிவந்துவிட்டாள். அடைக்கலம் தேடிவந்த பெண்ணை நான் ஆதரவு கொடுத்து ஏற்றுக் கொண்டேன். எனக்கும் அப்போது முப்பது வயதுதான்.

''கங்கை என்னிடம் பன்னிரண்டு வருஷங்கள் இருந்தாள். எனக்கு எத்தனையோ விதத்தில் உதவியாக இருந்தாள். இல்லத்துப் பெண்கள் அவளிடம் உயிரை வைத்திருந்தார்கள். நான் அவளை என் தங்கை போலவே நேசித்தேன். கங்கையும் அக்கா அக்கா என்று பாசத்தைக் கொட்டுவாள். ஒரு நாள் திடீரென்று அவளைக் காணவில்லை. அதற்கு முன் சில நாளாக அவள் ஏதோ சிந்தனையில் இருந்தாள். நான் அதைப் பெரிதுபடுத்தவில்லை. அவள் குடும்ப வாழ்க்கைக்கு ஏங்கியது எனக்குத் தெரியும். நானும் பெண்தானே?

''கடைசியில் ஒரு நாள் ஒரு சின்னத் துண்டு கடிதம் வைத்துவிட்டுப் போய்விட்டாள். இதோ... பாருங்கள்... இதுதான்.'' கோதாவரி தன் 'ஹாண்ட் பேக்'கிலிருந்து பழைய கடிதம் ஒன்றைச் சக்ரபாணியிடம் நீட்டினாள். அவர் வாய்விட்டுப் படித்தார்!

"அன்புள்ள அக்கா! என்னை மன்னியுங்கள். ஒரு உத்தமரின் துணையோடு நான் வாழ்க்கைப் பாதையில் இறங்கிவிட்டேன். நான் வேண்டியதைக் கடவுள் அளித்துவிட்டார். கவலைப்படாதீர்கள். என்றாவது ஒரு நாள் உங்களைச் சந்திப்பேன்.—

உங்கள் பிரிய கங்கை."

பல வருஷங்களாக மடித்து வைத்திருந்த கடிதம் நைந்திருந்தது.

"அதற்குப் பின்னர் நீங்கள் கங்கையைச் சந்தித்தீர்களா?" சக்ரபாணி வினவினார்.

"இரண்டு வருஷங்களுக்குப் பிறகு எனக்குக் கங்கையிடமிருந்து கடிதம் வந்தது. உடனே தன்னை வந்து சந்திக்கும்படி வேண்டிக்கொண்டு எழுதியிருந்தாள். நானும் அவள் என்ன நிலையில், ஏமாற்றப்பட்டுவிட்டாளோ என்ற பதட்டத்துடன் அவள் எழுதியிருந்த விலாசத்துக்குப் புறப்பட்டுச் சென்றேன். அவள் அன்றலர்ந்த மலரைப் போல பூவாக புன்னகையோடு வரவேற்றாள். அவள் மடியில் ஐந்தாறு மாதத்துக் குழந்தை." கோதாவரியின் பார்வை சேதுவிடம் ஓடியது.

"கங்கை குழந்தையை என் மடியில் வைத்தாள். 'அக்கா, நீங்கள் தான் இந்தக் குழந்தைக்கு அம்மா அப்பா எல்லாமே. உங்களிடம் ஒப்படைத்துவிட்டேன். குழந்தை உங்களிடம் இல்லத்தில் வளரட்டும்..அக்கா. என்னுடைய இடத்தில் இவன் இருக்கட்டும்,' என்றாள். நான் திகைத்தேன்.

"குழந்தையின் தந்தை யார் என்பதை நான் வற்புறுத்திக் கேட்ட பிறகே சொன்னாள். 'என்ன கைலா நாதரா? அந்தப் பெரிய மனிதரா? என்று நான் படபடத்ததும் பாவம் கங்கையின் முகம் வாடிவிட்டது அழுது குமுறினாள்.


"'அக்கா! அவர் ஐம்பது வயதுக்காரர். நானும் பருவப் பெண் ணல்ல. முப்பது வயதை விழு கியவள். தாசி குலத்தில் பிறந்த ஒரே ஒரு குற்றம் தவிர என்னிடம் என்னக் குறை. எங்களிடையே பருவ மோ மில்லை. முன் ஜன்மத்து விட்ட குறை தொட்ட குறை என்றுதான் நாங்கள் நினைக்கிறோம். அவரை நான் காம கண்களால் வளைக்கவில்லை. பக் கொண்டு பணிந்தேன். அவரும் என்னை கவர்ச்சிப் பாவையாக நினைக்கவில்லை என் கண்களில் பெருகிய ஏக்கத்தை புரிந்துகொண்டு தன்னையே அர்ப்பணித் தார். இப்பவும் என்னை அவர் கைவிட வில்லை. சமூகத்தில் அவருடைய பெய ருக்கு இழுக்கு ஏற்படக் கூடாதென்று நான்தான் வலிய இந்த ஏற்பாட்டைச் செய்கிறேன். எனக்குக் குழந்தை வேண் டாம். அவர் அன்பு ஒன்றே போதும்,' என்று திடமாகக் கூறிவிட்டாள். நானு குழந்தையோடு இல்லத்துக்குத் திரும்பி விட்டேன்.

"அவளுடைய குழந்தையைப் பற்றி உலகம் அறியக் கூடாது என்று கனிந்து உருக வேண்டிய நெஞ் சத்தை கல்லாக்கிக் கொண்டுவிட்டாள் அந்தப் புனிதவதி. காரணம், அவளுக்கு வாழ்வு கொடுத்தவரின் கௌரவம் காப்பாற்றப்பட வேண்டுமென்று!" கோதாவரி பெருமூச்சு விட்டாள்.

"அதுசரி. சேதுவிடம் அவன் பிறப்பின் ரகசியத்தை எப்போது கூறி னீர்கள்?" வக்கிலான சக்ரபாணி விஷ யத்திலேயே குறியாக இருந்தார்.

"மிஸ்டர் சாயிராம் லட்ச ரூபாயை அன்பளிப்பாகக் கொடுத்து விட்டுச் சென்றாரே, அன்றைக்குத்தான் சொல்லும்படி நேர்ந்தது."

கோதாவரி தொடர்ந்து விவ ரித்தாள்: "அன்று, சாயிராம் புறப்பட் டுச் சென்ற பின்னர் சேது ஏதோ தீவிர யோசனையில் இருந்தான்.. 'என்ன சேது?' என்று கேட்டேன். அதற்கு அவன், 'சாதாரண மானேஜர் இவர். இவருக்கு லட்ச ரூபாய் ஏது அதிலும் அன்பளிப்பாகக் கொடுக்கிறார். அவருக்குக் குடும்பம், மனைவி குழந்தை



"முந்திரிப் பருப்பு குவிண்டால் என்ன விலை?"

"ரூ. 2000. எவ்வளவு வேணும்?"

"பத்து கிராம்."

கள் இருக்கிறார்களே. இந்தப் பணத்தைச் செலவு செய்ய எத்தனையோ பிரசினைகள் அவர் குடும்பத்தில் இருக்கிறதே,'' என்றான்.

''இவரை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டேன்.

''இவர் என் ஆபீஸில் மானேஜராக இருக்கிறார். அத்தை, நீங்கள் கைலாச நாதரைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்களே..அவருடைய பிள்ளைதான் இந்தச் சாயிராம்,'' என்றான் சேது.

''வக்கீல் சார்! நான் அப்படியே திகைத்துப் போய் உட்கார்ந்து விட்டேன். என் மனம் குழம்பியது. ஏதேதோ பழைய நினைவுகள்...கங்கை ...கைலாசநாதர்.... குழந்தை சேது இப்படி நினைக்கும்போது எனக்கும் ஒரு சந்தேகம் மின் வெட்டாக ஏற்பட்டது. சில தினங்களுக்கு முன்தான் ஒரு ரயில் விபத்தின்போது கங்கை காலமாகிவிட்ட செய்தி காதில் விழுந்தது. திருச்சிக்கு ஒரு மீட்டிங்குக்காகப் போய் விட்டுத் திரும்பி வரும்போது ஸ்டேஷனில் யாரோ இரண்டு பெண்மணிகள் பேசினது. 'நம்ப காலனியிலிருந்தாளே கங்கை.அவள் செத்துப்போய்விட்டாள்,' என்றாள் ஒருத்தி. 'கங்கை போயிட்டாளா. யாருடி கொள்ளி போட்டா?' என்று கேட்டாள் இன்னொருத்தி. நானும் நெஞ்சு படபடக்கக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

''யாரோ மெட்ராசிலிருந்து வந்தார்கள். சாயிராமோ ஜயராமோ சொன்னார்கள். அவர்தான் கொள்ளி போட்டாராம் என்றாள். இப்போது சேது, சாயிராம் என்றதும், அவர்தான் கங்கைக்குக் கொள்ளி போட்டவர் என்பது புரிந்து போய் விட்டது. கைலாசநாதர் உத்தமர்தான். தன் பிள்ளையைக் கங்கைக்குக் கொள்ளி போடச் சொல்லியிருக்கிறார். பாவம் கங்கை. மறைந்து மறைந்து ஒதுங்கி வாழ்ந்தாலும் அனாதையாகப் போகவில்லை.... கங்கைதான் லட்ச ரூபாயை சாயிராமிடம் கொடுத்திருக்கவேண்டும். சாகிற சமயத்தில் தான் பெற்ற பிள்ளையின்



CHAITRA BLS 45 TAM

நினைவு வந்திருக்கும். பணத்தை இந்த இல்லத்துக்குச் கொடுக்கச் சொல்லியிருப்பாள். சாயிராமும் அதை நிறைவேற்றியிருக்கிறார். அப்படியானால் இந்தப் பணம் சேதுவுக்கா, இல்லத்துக்கா? என்னையறியாமல் சேதுவைப் பார்த்துக் கண்ணீர் விட்டேன். ஏதோ ஒரு உணர்ச்சி வேகம் என்னை உந்தியது. சேது சிறுவனாக இருந்தபோது 'என் அப்பா யாரு — அம்மா யாரு ..' என்று அடிக்கடி துளைப்பான். நான் தெரியாதென்று சொல்லி வந்தேன். அவனுடைய பத்தாவது வயதில் இல்லத்து நிர்வாகி ஒருவர் சேதுவைக் குழந்தையாக வளர்க்க அழைத்துக் கொண்டார். அவனுடைய சூட்டிகையும் அழகும் அறிவும் அவரைக் கவர்ந்தன. கங்கையின் நினைவு, பணத்தின் வரவு எனக்குக் குழப்பமாயிருந்தது. சேது, இந்தப் பணம் உனக்காகத்தான் இருக்கவேண்டும். உன் அம்மா, கங்கை, அப்பா கைலாசநாதர்,' என்று பட்டென்று உண்மையை உடைத்து விட்டேன்.

''ஒரு விநாடி சேது திக்பிரமையில் நின்றான். அவனிடம் எல்லா விஷயத்தையும் சொன்னேன். அவன் மௌனமாகக் கேட்டான். அவன் மகிழவும் இல்லை. அழவும் இல்லை. ஆத்திரப்படவும் இல்லை. வெகு அமைதியாக இருந்தான். உணர்ச்சிகளை அப்படியே விழுங்கிவிட்ட நிலையில் இருந்தான். நான் லட்ச ரூபாயை அப்படியே பாங்கியில் வைத்துவிட்டேன். யோசித்துச் செய்யவேண்டிய காரியம் அது.

''பல தினங்கள் கழித்து செய்தித் தாளில் 'சாயிராம் லஞ்சக் குற்றவாளி' என்று படித்து பயமடைந்தேன். சேதுவை வரச் சொன்னேன்.''

கோதாவரி நீண்ட கதையை முடித்தாள். எல்லோரும் சில நிமிஷங்கள் அந்த நினைவில் உழன்றார்கள்.

''சேது! நீங்கள் சொல்லுங்கள் பிறப்பின் உண்மை தெரிந்த பிறகு என்ன செய்தீர்கள்?'' சக்ரபாணி வினவினார்.

''சின்ன வயதில் பெற்றோர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளத் துடித்தேன். உண்மைதான். தெரிந்தபோது எனக்கு ஒரே ஒரு உணர்ச்சிதான் தலை தூக்கி நின்றது. பழிவாங்கும் எண்ணம்.

''என் அம்மா தாசிப் பெண்ணாகப் பிறந்தது அவள் குற்றம் இல்லை.

நான் போனால் நிச்சயம்



கடும் புலி வாழும் காட்டில் இரண்டு முனிவர்கள் பல்லாண்டு காலம் கடுந்தவம் புரிந்தனர். இறைவனை அடைய வேண்டும் என்பது அவர்கள் நோக்கம். ஒருநாள் அவ்விரு முனிவர்களும் ஆற்றங்கரையில் சந்தித்தார்கள். முதலாமவர் சொன்னார்: ''பல்லாண்டு காலம் இறைவனையே நினைத்துத் தவம் புரிந்திருக்கிறேன். ஆகையால் நான்தான் முதலில் இறைவனை அடைவேன்.''

இரண்டாமவர் மறுத்தார். ''இல்லை உமது தவத்தைக் காட்டிலும் என் தவம் வலிமையுடையது. நானே முதலில் அடைவேன்.''

வாதம் முற்றியது. 'நானே முதலில், நானே முதலில்' என முனிவர்கள் அடித்துக் கொண்டார்கள். தண்ணீர் எடுக்க வந்த ஓர் இளம் பெண், முனிவர்களின் வாதத்தை ஒதுங்கி நின்று கவனித்தாள். அவர்களை நோக்கி, ''முனிவர்களே. வீணாக அடித்துக்கொள்ளாதீர்கள். நீங்கள் இருவருமே இறைவனை அடைய முடியாது. ஆனால் 'நான் போனால்' நிச்சயமாக அடையலாம்,'' என்று கூறிவிட்டுப் போய்விட்டாள்.

முனிவர்களுக்கு ஒரே குழப்பம். 'என்ன இது. பல்லாண்டு காலம் தவம் புரிந்த நாம் அடைய முடியாதாம். ஒரு தவமும் புரியாத இவள் அடைவாளாம். எப்படி?' அவள் வீட்டிற்கே இருவரும் சென்று தங்கள் சந்தேகத்தைக் கேட்க அவள் சொன்னாள்: ''நான் போனால் — நான் என்னும் அகந்தை போனால் நிச்சயமாக இறைவனை அடையலாம்!''

—பரமத்தி வேலூர் ஆசிரியர் திரு. பச்சையண்ணன் பேச்சிலிருந்து..

—அ. முனுசாமி.


ஊருக்கு நல்ல மனிதனாக வேஷம் போட்டு மறைவில் விலைமாதிடம் சல்லாபித்திருக்கிறார் ஒருவர். அவரை ஊரே போற்றுகிறது. குற்றம் செய்தவருக்குத் தண்டனை இல்லை. உயிரோடு இருந்தவரை என் அம்மா மறைந்தே வாழ்ந்திருக்கிறாள். ஒரு குற்றமும் புரியாத நான் அனாதையாக வளர்ந்திருக்கிறேன். இது எத்தனை அவமானம்! எத்தனை இரக்கமற்ற செயல்! என் மனம் பழிவாங்கத் துடிதுடித்தது. என்னை உதாசீனப்படுத்தினவர் என்ன உத்தமராக இருந்தாலும் எனக்கு ஒன்றும் பயனும் இல்லை. பயமும் இல்லை. கைலாசநாதரின் நாடகம் வெளிப்பட வேண்டும் என்று திட்டமிட்டேன். போலீஸில் புகார் செய்தால் சாயிராம் நிச்சயம் உண்மையைக் கூறிவிடுவார். என் பிறப்பைப் பற்றித் தெரியாவிட்டாலும் ஒரு வேஷதாரியை உலகம் அறிந்து கொள்ளும் என்று போலீசில் சந்தேகப் புகார் கொடுத்தேன்.

"ஆனால் சாயிராம் பிடிவாதமாக இருந்துவிட்டார். தன் தந்தையின் கௌரவத்தைக் காக்கத் தன்னைக் குற்றவாளியாக்கிக் கொண்டார். என் மனத்தில் குழப்பம். ஒரு நிரபராதியைத் தண்டிக்க வைப்பதா? நான் தோல்வி அடைந்தேன். முரளியைச் சந்தித்து எல்லாவற்றையும் விவரமாகக் கூறினேன். அப்போது சூரியும் வந்தார். கங்கையின் பிள்ளை நான் என்று கூறியதும் மலைத்துப் போய் விட்டார். நான்தான் கங்கையம்மாவுக்குச் செல்லப் பிள்ளையாக இருந்தேன் என்று பழைய சம்பவங்களையும் அவருடைய அம்மா காவேரி அம்மாவை பற்றியும் விவரமாகக் கூறினார். ந கள் மூவருமாக ஆலோசித்து மு செய்தோம். சாயிராமின் முரட்டு சியத்தை அதே வழியில் போய்த்தா முறியடிக்க வேண்டும் என்று இந்த ந கத்தை நடத்தினோம். முரளியை போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் அனு விவரத்தைக் கூறித் தந்தையி மனத்தை மாற்றத் தன்னைப் போலி கக் கைது செய்யும்படி கூறச் செ தோம். அவரும் இதை ஏற்றுக்கொ டார். என் பிறப்பு விஷயத்தை கங்கையைப் பற்றிய உண்மையை வெளிப் படுத்தக் கோதாவரி அத் யையும் வரவழைத்தோம்." சே விஷயங்களை விளக்கிக் கூறினான்.

இன்ஸ்பெக்டர் எழுந் கொண்டார். "சந்தேகங்கள் தீர் தல்லவா?"

"சார்!" என்றார் ச பாணி. "மிஸ்டர் சாயிராமின் பிள் முரளிக்கு என் பெண் சிந்துவையு சாயிராமின் பெண் நர்மதான காவேரியின் பிள்ளை சூரிக்கும் கல் ணம் செய்வதாக முடிவு செய்தி கிறோம். அழைப்பிதழ் வரும். நீங்க கட்டாயம் வரவேண்டும்," என் சிரிப்புடன்.

(முற்றும்)



நண்பர் ஒருவர் லைட் இல்லாமல் சைக்கிளில் சென்றதால், போலீஸ்காரர் பிடித்துக் கொண்டார். உடனே நண்பர், "இந்தத் தொகுதி எம். பி.யை எனக்கு நல்ல பழக்கம்..." என்று இழுத்தார்.

போலீஸ்காரரோ சட்டை செய்யாமல் நண்பருடைய அட்ரசைக் கேட்டு எழுதலானார். மேலும் நண்பர், "உங்க இன்ஸ்பெக்டரையும் தெரியும்..." என்று இழுத்தார்.

போலீஸ்காரர் எழுதுவதிலேயே கவனமாக இருந்தார். நண்பர், "எம்.எ கூட எனக்கு..." என ஆரம்பித்ததும், போலீஸ்காரர், "ஏங்க, மார்த்தாண்டம் பிள்ளை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.


"யார் மார்த்தாண்டம்?" என்று நண்பர் தவித்துக் கொண்டிருக்கையில், "நான்தான் அது!" என்று சொல்லிக்கொண்டே நகர்ந்துவிட்டார் போலீஸ்காரர்.

—எஸ். சௌந்தரபாண்டி

ஒரே பார்வையில் விஷயத்தைக் கிரகிக்கும் சக்தி எவ்வளவுக் கெவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு வாழ்க்கையில் வெற்றி நிச்சயம் என்கிறது 'டெஸ்ட் யுவர் ஸெல்.ஃ.ப்' என்ற புத்தகம்.

ஒவ்வொரு வரிசையிலும் ஒரே மாதிரியான வடிவம் இரண்டு இருக்கின்றன. அவற்றைச் சட்டெனக் கண்டு பிடிக்க முடிகிறதா பாருங்கள்.

மொத்தத்துக்கும் ஒரு நிமிடம்தான் அவகாசம்.





மன்னவன் வந்தானடி

நாட்டுக்குத் தானே அரசன் —தர்மராஜா—என்று சொல்லிக்கொண்டு திரியும் 'மாஜிக்' தெரிந்த அரைப் பைத்தியம்; எதிரிகளை உயிரோடு புலிக்குச் சூயிங்கம் ஆக்கிவிடும் தேயிலைத் தோட்டக் கோடீசுவரர்; கொலையை நேரடியாகப் பார்த்துவிட்ட காரணத்தால் குறி வைக்கப்படும் பயந்த சுபாவ டைப்பிஸ்ட் பெண்; கோடீசுவரரின் கையாலாகாத நல்ல மகனும் (டைப்பிஸ்டின் காதலன்), கையாலாகும் நல்ல மகளும் (கோமாளியின் காதலி); மாடியில் விலங்கு போட்டுக் கட்டப்பட்டிருக்கும் கூச்சல் தாய்; எல்லாவற்றுக்கும் பின்னல் ஒரு கொடைக்கானல் அண்ணு தங்கை மர்மம்—இவை எல்லாவற்றையும் போட்டு மிக்ஸியில் அடித்தால் நுங்கும் நுரையுமாகப் பொங்கக் கூடிய டிரிங்க்: மன்னவன் வந்தானடி.

டிரிங்க்கின் ஸ்பெஷாலிடி: சப்.

சில இடத்தில் ஆட்டம் உண்டு என்பதைத் தவிர ஒளிப் பதிவு (கலர்ப் படம்) திருப்திகரமாக இருக்கிறது.

தர்மராஜா சிவாஜி ஒ
தொத்தல் குதிரையில் ஏறி, 'நா
டைத் திருத்தப் போறேன், இந்த
கோட்டையைப் பிடிக்கப் போறேன்,
என்று மரக்கத்தியும் மன்னன் உடை
மாய் நகர்வலம் புறப்பட்டு வரு
தோரணையிலேயே, 'இது ஒரு அரை
கிறுக்கு,' என்பது அத்துபடி ஆகிவி
கிறது. அடுத்தாற்போல் நாகேஷை
சந்தித்து அவருடைய சில்விஷமத்துக்கு
தண்டனையாகக் கன்னத்தில் அறைந்
பத்து ரூபாய் நோட்டைக் கழற்றி
கையில் கொடுக்கும்போது 'இது என்
சித்துவேலை தெரிந்த அரைக் கிறுக்கோ
என்று தோன்றுகிறது. அப்புற
தொடர்கிற இடிந்த கோட்டை, ஒடிந்
சிம்மாசனம், பெருச்சாளி வேட்டை
தகர டின் ஆலாட்சி மணி, ஒட்டு
போட்ட பட்டுப் பீதாம்பர உடைகள்
இத்தனை தர்பார்களும் பித்துக்குளி
தனத்தின் உச்சத்துக்குக் கொண்
செல்கின்றன,

ஜெயசுதா தன் கதையை
தெரிவித்ததைக் கேட்டதும் ஒரு மி
வெட்டுப்போல்சிவாஜி உணர்ச்சிவசப்ப
வது இருக்கிறதே அது பாலையில் சோ

அடேயப்பா! இந்தக் கோமாளி எங்கே, ஃபாரின் ரிட்டர்ன்ட் கோடீசுவர சிவாஜி எங்கே? அந்தப் படகுக் காரை விட்டு அவர் இறங்குகிற தோரணை, அலட்சியமாக மற்றவர்களைக் கண்காணிக்கும் போக்கு, அடேயப்பா! (ஆனால் எல்லாம் பழசு!) மாமனாரின் தொழிற்சாலையை அவர் சுற்றிப் பார்க்கும் பெரும்போக்கு, செய்யும் சீர் திருத்தங்கள் உத்தரவிடும் பாணி— ரசிக்கும்படியாக இருக்கின்றன.

நாகேஷுக்கு நிறைய வாய்ப்புத் தந்திருக்கிறார்கள்.

வில்லன் மகள் மஞ்சுளாவுக்கும் கோமாளி தர்மராஜாவுக்கும் வேடிக்கையாகப் பிறந்த சினேகபாவம் ஐயோ பாவமாய் வளர்ந்து ஆழமான காதலாய் மலர்ந்துவிடுகிறது. பணக்கார மாப்பிள்ளையை மணந்து கொள்ள மறுத்து ஆ ஊ என்று ஆர்ப்பாட்டம் செய்யாமல் வேறு வழியில்லை என்பது போல் பணிந்து கழுத்தை நீட்டுவதும், மாப்பிள்ளையின் அட்டகாசங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் முதலிரவு அறையை விட்டே ஓடி வருவதும் வழிமறித்த தந்தை இதமாக அட்வைஸ் கொடுக்கும்போது தனது நிலை குறித்து ஒருவார்த்தையும் சொல்லாமல் மௌனமாகத் தலை குனிந்து செல்வதும் குடும்பப் பாங்காய் இருக்கிறது.

அட! ஜெயசுதாவா அது! முந்தானையை இழுத்துப் போர்த்துக்கொண்டு என்ன ஒரு அடக்க ஒடுக்கம். சதா மருளும் கண்களும் எந்த நேரத்தில் எந்தச் சொரூபத்தில் தனக்கு ஆபத்துக் காத்திருக்கிறதோ என்பதுபோல் நடந்து கொள்ளும் விதமும் தேவலையே!

நம்பியார் மாப்பிள்ளையிடம் மாட்டிக் கொண்டு விழிக்கிறார். திருப்திகரமான விழி.

சுகுமாரி, பாவம், வீல் வீல் என்று கத்தி அடைபட்டு ஆர்ப்பாட்டம் பண்ணுவதும் அஞ்சி நடுங்குவதுமாய் வெள்ளைப் புடவையும் வெற்று நெற்றியுமாய் அவதிப்படுகிறார். கதைக்கு மர்மம் கூட்டும் பாங்கைச் செம்மையாகச் செய்துவிட்டார். கடைசியில் பார்த்தால் மர்மம் ரொம்ப சாதாரணம்.

சாடை வசனங்களுக்குக் குறைவில்லை.

கத்து.







தொழிலதிபர் ஹாஜா ஷெரீப்



சென்னை முதல் லைன் பீச் ரோடிலுள்ள மெர்கெண்டைல் பாங்க் கட்டிடத்தின் மூன்றாவது மாடி.

ஷேக் மகம்மது ராவுத்தர் ஷிப்பிங் அண்ட் ஏஜென்ஸீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் இங்குதான் இயங்குகிறது.

நீலக் கடலில் துறைமுகக் கப்பல்களை அங்கிருந்தே கவனிக்கும்படியான ஏர் கண்டிஷன் அறையில் திரு. கே. எஸ். ஜி ஹாஜா ஷெரீப் அவர்களைச் சந்திக்கிறோம்.

நீலநிறம் அதிகமாக ஆதிக்கம் செலுத்தும் அறை. தரையில் நீலக் கார்பெட்டுகள், நீல சோபா செட்டுகள். வயலில் ஆறு பெண்கள் நாற்று நடும் காட்சியைச் சித்திரிக்கும் ஓர் ஓவியம் அறைக்கு ஒரு எக்ஸ்டிரா அணிகலன். ஹாஜாவின் மேஜை மிகப் பெரியது. சிவப்புக் கொண்டையுள்ள ஒரு வெள்ளிச் சேவல் உருவத்தை 'பேப்பர் வெயிட்'டாக வைத்திருக்கிறார்.

அந்த நிறுவனத்தின் மானேஜிங் டைரக்டரும், சேர்மெனுமான ஹாஜா ஷெரீபுக்கு 55 வயது என்று சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள். எலுமிச்சை நிறச் சிவப்பு மேனி. குழந்தை முகம். நீல நிறத்தில் டெரிலின் அரைக் கை ஸ்லாக் வயதைக் குறைத்துக் காட்ட அதிகம் உதவுகிறது.

இடது கை சுண்டு விரலிலும், வலது கை மோதிர விரலிலும் இரண்டு கல் மோதிரங்கள் அணிந்திருக்கிறார். ஒரு நிமிடம் சும்மா இருப்பதில்லை. ஸ்டெனோவுக்கு டிக்டேஷன் கொடுத்தவுடன், பஸ்ஸரை அழுத்திய வண்ணம் சம்பந்தப்பட்ட சிப்பந்திகளை அழைத்து ஏதாவது கேட்டுக் கொண்டேயிருக்கிறார். (''இந்த ஷிப்பிங் பிஸினஸில் அரை மணி நேரம்கூட எதையும்

தாமதம் செய்ய முடியாது. அ
போது முடிக்காவிட்டால்—எல்
ரூபாய் சமாசாரம். ஏகப்பட்ட 'ல
ஆகிவிடும்,'' என்கிறார்.)

கப்பல் வணிகத் துறை
சேர்ந்த சரக்கு ஏற்றுமதி, இறக்கு
தரகு வியாபாரம், பயணிகளுக்கு
கெட் ஏற்பாடு முதலிய எல்லா
வல்களையும் இந்த நிறுவனம் க
கிறது. சென்னையிலுள்ள இருபது மு
கப்பல் ஏஜென்சி நிறுவனங்
ஹாஜா ஷெரீபின் நிறுவனமும் ஒ
தென் இந்திய வர்த்தக சபை
தலைவராகவும் அவர் விளங்குகிறார்

தனியார் துறையில்
அளவுக்குக் கப்பல்களைச் சொந்த

கட்டி ஆளத் தெரிந்தவன்

ச. கலியாணராமன்

பெரிய தாட்டு இலையாகப் போட்டுக் கொண்டு நான்கு வகைக் கறியுடன் வாயூறச் சம்பிரதாயமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான் குப்புசாமி. அருமையாகத் தான் சமைத்திருந்தாள் சங்கரி. சமையலில் கைதேர்ந்தவள். கணவன் நன்ருகச் சாப்பிடக் கூடியவன் என்பதால் மேலும் தேர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்தாள். சிறு குறை என்ருலும் அவனுல் தாங்கிக் கொள்ள முடியாது.

முடியாது என்பது உடனே நடந்தது.

''டே, இங்கே வாடி-'' அவன் அதட்டிஞன்.

என்னவோ ஏதோ என்று ஓடி வந்தாள் சங்கரி.

''கையைக் காட்டு!''

காட்டிஞள்.

''உள்ளங்கையைக் காட்டுடி.''

சொன்னபடி காட்டிஞள்.

எச்சில் கையோடு தன் வாயில் கை வைத்து எதையோ எடுத்தான். எடுத்ததை அவளுடைய சிவந்த மென்மையான உள்ளங்கை நடுவில் வைத்தான்.

சிறிய கல். அரிசியில் இருந்திருக்கலாம்.

அந்தக் கல்லின்மீது தன் கட்டை விரலை வைத்து அவளுடைய உள்ளங்கை புண்ணுகும்படி அழுத்தித் தேய்த்தான்.

''ஆ!'' என்ருள் அவள்.

''என்ன ஆ? கையில் வைத்து அழுத்திஞலே இப்படி 'ஆ ஊ' என்கிறியே? இது என் வயிற்றுக்குள் போய் அங்கே குடலில் பட்டு அழுத்திக் கிழித்தால் எப்படி இருக்கும்?''

அவளுக்குச் சிரிப்பாகவும் இருந்தது; வேதனையாகவும் இருந்தது. இதுவரையில் யாருக்கும் சோற்றில் இருந்த கல் குடலில் சென்று குத்திக் கிழித்ததாக அவள் கேள்விப்பட்டதில்லை. அரிசி களைந்தும், எப்படியோ தவறிப் போய் ஒன்றிரண்டு கல் தங்கிவிடுகின்றன. அதற்காக இப்படி



அவள் ஒன்றும் சொல்லவில்லை.

''என்னடி பேசாமே நிற்கிறே?''

''உப்பிலே இருந்திருக்கும்,'' என்றாள் அவள்.

''இது எல்லாப் பொம்பளெங்களும் சொல்றது தான்.''

''சரிங்க. இனிமே கவனமாப் பார்த்துக்கிறேன்.''

சிலநாள் கழித்துக் கடுமையான காய்ச்சலில் அடிபட்டு மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டாள் சங்கரி. அடிக்கடி தன்னை மறந்து உளறிக்கொண்டும் இருந்தாள். குப்புசாமி கவலையுடன் அவள் அருகில் இருந்தான்.

டாக்டர்கள் கைவிரித்து விட்டார்கள்.

சில ஊசி மாத்திரைகளுக்குப் பிறகு சிறிது உறங்கி விழித்திருந்தாள் அவள்.

''நீங்க வேலைக்குப் போகலியா?'' என்று கேட்டாள்.



பையன்: அப்பா. புதிய ரெகார்டை ஏற்படுத்தின தற்கு கன்கிராஜுலேஷன்!

அப்பா: 'என்னடா உளறுகிறே?

பையன்: ஒரு சப்ஜெக்டில் மாத்திரமில்லாமல் எல்லா சப்ஜெக்டிலும் பத்து மார்க்குக்குக் குறைவாக வாங்கின பையனின் அப்பா என்கிற ரிகார்டை ஏற்படுத்திட்டீங்களே?

''இல்லே சங்கரி, நான் லீவு போட்டுட்டேன்'' என்றான் அவன்.

''சாப்பிட்டிங்களா?''

''நீ தூங்கிகிட்டிருந்தபோது தான் போய் டிபன் சாப்பிட்டு வந்தேன்.'' பிரியத்துடன் அவள் தலையைப் பிடித்து விட்டான்.

''ஓட்டல்லேயா சாப்பிட்டிங்க?''

''ஆமாம்.''

''என்னை வீட்டுக்கு அழைச்சுகிட்டுப் போயிடுங்க. நானே சமையல் பண்ணிடுறேன். நீங்க ஓட்டல்லே சாப்பிட வேணும்.''

அவனுக்குக் கோபம் வந்துவிட்டது.

''மூணு நாளைக்காவது நீ 'பெட்'டிலே இருக்கணும்னு டாக்டர் சொல்லியிருக்கார். தெரியுமா? என் சாப்பாட்டைப் பற்றி நீ கவலைப்பட வேணும்.''

அவள் அவன் முகத்தைப் பார்த்தாள்.

''அதுக்காக இல்லேங்க. நீங்க ஓட்டல்லே சாப்பிட்டால் சாப்பாட்டிலே எவ்வளவோ குறை இருக்கும். சோற்றிலே கறியிலே கல் இல்லாமல் இருக்காது. கல் இருந்தால் உங்களுக்குக் கோபம் வரும். கோபம் வந்தால் அங்கே சமையற்காரன் கையிலே, இல்லேன்னு முதலாளி கையிலே கல்லை வைச்சுத் தேய்ச்சுடுவிங்க. அப்புறம் அவங்க சும்மா இருப்பாங்களா?'' அவள் கண்கள் கலங்கின பழைய நினைவுகளில்.

''சும்மா இரு சங்கரி. இது ஆஸ்பத்திரி,'' என்றான் அவன்.


''நீங்க ஒண்ணு செய்யுங்க. அப்படி ஓட்டல் சாப்பாட்டிலே கல் கிடந்தால் அங்கே ஒண்ணும் சொல்லாமே எடுத்துகிட்டு வந்து என் கையிலே வைச்சுத் தேய்ச்சுவிடுங்க—உங்க ஆத்திரம் தீருகிற வரைக்கும். இல்லேன்னு நான் வீட்டுக்கு வந்துடுவேன் உங்களுக்குச் சமைச்சுப் போட. என்ன சொல்றீங்க?''

அவள் மேற்கொண்டு பேச முடியாமல் மெல்லச் சிரித்தாள்.

அவன் கண் கலங்கினான்.







சுகந்தி

ஊரே திரண்டு வந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ரங்கபாஷ்யத்தால் கூட்டத்தைச் சமாளிக்க முடியாது போலிருந்தது. நல்ல வேளை ஜனங்களே ஒருவர்பின் ஒருவராக நின்று 'க்யூ' முறையை ஏற்படுத்தித் தங்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடைத்துக் கொண்டு அமைதியாக வீட்டினுள்ளே செல்ல ஆரம்பித்தார்கள்.

விடிந்தால் ரங்கபாஷ்யத்தின் மகள் கமலாவுக்குக் கல்யாணம். அவருடைய ஒரே பெண் அவள்.

வீட்டினுள் சென்றுவிட்டு வருபவர்கள் அங்கு வந்லோரிடமும் பேசுவார்கள்.

''அடீயம்மா!....எவ்வளவு பெரிய ஸ்டீல் அலமாரி தெரியுமா?''

''டபுள் கட்டில் தேக்கு மரத்திலே செஞ்சது!''

''ஸ்பெஷலா மெத்தை, தலையணை எல்லாம் மெட்ருஸிலே இருந்து வந்திருக்குது!''

''அடீயம்மா! .அது மாதிரி எவர்சில்வர் ஏனங்களை நம்ம டவுண் பாத்திரக் கடையிலே கூடப் பார்க்க முடியாது!''

''என்ன நைலக்ஸ், என்ன பட்டு, என்ன டெரிவாயில், என்ன காஷ்மீர் சில்க்!''

''நகைகள்! அதுவே முப்பதாயிரம் இருக்கும் போலே இருக்கு!''

''ஹீட்டரு, குக்கரு, டேபிள் ஃபான், காஸ் அடுப்பு!''

ஒவ்வொருவராக வந்து சொல்லச் சொல்ல எல்லோருக்கும் அந்தச் சீர் வகைகளைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டதில் வியப்பில்லையே.

ரங்கபாஷ்யம் அருகே வந்ததும் ஒவ்வொருவரும் அவரை வணங்கி விட்டு உள்ளே சென்ருர்கள். உள்ளே வைக்கப்பட்டுள்ள பொருட்கள் எல்லாம் மாப்பிள்ளை வீட்டாரைச் சேர வேண்டியதல்லவா? அதனுல் மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த முக்கியமான ஒருவர் அங்கேயே நின்று கண்காணித்துக் கொண்டிருந்தார். வருகிறவர்களையும்

ஒருத்தர் வந்தார்.

''சம்பந்தி, ஜனக்கூட்டம் அதிகமாகுது. இதிலே நல்லவங்களும் இருப்பாங்க, கெட்டவங்களும் இருப்பாங்க. எல்லார் கையும் நீளாத கையா இருக்கும்னு சொல்ல முடியாது!.. அதனலே ஒண்ணொண்ணுக்கும் ஒவ்வொரு நம்பரை போட்டுடறேன்!.. அப்போதுதான் சரிபார்க்க சௌகரியமாக இருக்கும்,'' என்ற அவர் அங்கு கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளின் மீதும் சாக்பீஸால் வரிசையாக நம்பர் போட்டார்.

எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். சுவையான சாப்பாடு. இதமான உபசாரம். கனிவான பறிமாறல்.

திடீரென்று துணி எரிந்து தீய்ந்து போகும் நாற்றமடித்தது. எல்லோரும் தங்களைக் காத்துக் கொள்ள அவசர அவசரமாக எழுந்து பார்த்தார்கள். சீர் பொருட்கள் வைத்திருந்த அறையில் தீப்பிடித்து அது 'தக தக' வென எரிந்து கொண்டிருந்தது. எல்லோரும் வெளியே தங்களைக்காப்பாற்றிக் கொள்ள ஓடினர்களே தவிர தீயை அணைக்க முன் வரவில்லை. ரங்கபாஷ்யமும் வேறு சிலரும்தான் முனைந்தனர். ஆனல் அது விரைந்து தீ நன்கு பிடித்துக் கொண்டு சீர் பொருட்களைச் சாம்பலாக்கி விட்டது. நகைகளை மட்டும்தான் அவர்களால் காப்பாற்ற முடிந்தது.

சீர் பொருட்கள் எரிந்து சாம்பலாகக் கிடக்கும் அறையினுள் சென்ருர் ரங்கபாஷ்யம். அவர் பின்னுடியே வந்தாள் அவர் மனைவி அழகம்மை.

''என்னங்க, இப்படி ஆயிடிச்சு?'' என்ருள் அவள்.

''எப்படி அழகு?''

''எல்லாம் எரிந்து போச்சே!''

''ஒண்ணே ஒண்ணு எரியலே அழகு!'' என்ருர் ரங்கபாஷ்யம்.

''என்னங்க சொல்றீங்க?.. எது எரிஞ்சு போகலேங்க?''

''நம்ம மானம், அழகு!'' என்ருர் ரங்கபாஷ்யம்.

''நம்ம மானமா?''

''ஆமாம் அழகு!'' என்ற ரங்கபாஷ்யம் ஒரு குச்சி ... சாம்பலாகக் கிடக்கும் பொருட்களை அப்படியிப்படி விலக்கினர்.

ஒரு காகித பார்சல் சுத்தமாக எரிந்து சாம்பலாகக் கிடந்தது. குச்சியால் அதைத் தொட்டதுமே அது பொடிப் பொடியாக உதிர்ந்து விட்டது.

''ஆமாம், அழகு!.. நம்ம பொண்ணு கமலா இருக்காளே அவள் கல்யாணமாகிறதுக்கு முன்னுடியே ஒரு பையன் கிட்டே சிநேகமாகி தன்னை அவன்கிட்டே இழந்துட்டா!.. அவன், அவள் எழுதின லெட்டரையெல்லாம் போட்டோ பிடிச்சுக் கொணுந்து என்கிட்டே காட்டி அவளைத் தனக்குக் கட்டி வைக்காட்டா அவள் கல்யாணம் நடக்க முடியாதபடி செய்துடுவேன்னு என்னை பயமுறுத்தினன். ஊர் ஜனங்களுடன் வர்ர மாதிரி வந்து கமலா எழுதின லெட்டர் பார்சலை சீர் பொருட்களுக்கு நடுவே வைச்சுட்டுப் போனதை நான் பார்த்துட்டேன். அதை உடனே அப்புறப் படுத்திடலாம்னு பார்த்தேன்!.. அதுக்குள்ள சம்பந்தி வீட்டுக்காரர் எல்லா பொருட்கள் மேலேயும் வரிசையா நம்பர் போட்டாங்க.. அதை அழிக்கலேன்னு நம்ம மகள் ஏற்கனவே கெட்டுப் போனவ என்கிறது மாப்பிள்ளை வீட்டாருக்குத் தெரிஞ்சு அவள் வாழ்க்கையே அழிஞ்சு போயிடும். சீர் பொருட்கள் அழிஞ்சுப் போயிட்டா வேறே நிறைய வாங்கிடலாம். நம்ம பெண்ணோட வாழ்க்கையை நாம எங்கே போய்த் திரும்ப வாங்கிறது அழகு!'' என்ருர் ரங்கபாஷ்யம்.



''ஹலோ! கமலா! ஏதோ ரகசியம் சொல்லப் போகிறேன் என்ருயே! சொல்லு... என் பக்கத்திலேயா? யாரும் இல்லே. ஒரு கழுதைதான் நிற்கிறது. அது, தானே போய்விடும்... நீ சொல்லு.''



வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள்
மிகச் சிறந்த
உஷா
தையல் மெஷின் ஒன்றை
இன்றே...
மிகச் சிறந்த பேரம்
...எளிய
தவணை
களில் பணம்
செலுத்துங்கள்
உங்களுக்குப் பிடித்த தவணைத் திட்டத்தை தேர்ந்தெடுத்து, இன்றே உஷா ஒன்றை வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள். உங்கள் உஷா, தனக்கென செலவழித்த பணத்தை உடனே திருப்பிக் கொடுப்பதைக் காண்பீர்கள்... ஆடை தைப்பதற்காகும் பணத்தில் எவ்வளவு மிச்சமாகிறது என்பதைக் கணக்கிட்டுப் பாருங்கள்!
உஷா தையல் மெஷின்கள், பல ரகங்களில் கிடைக்கும்; கை மெஷின், கால் மெஷின், மின்சாரத்தால் இயங்குபவை. பக்க பலமாக, பாரதம் எங்கிலும், திறனுள்ள, விற்பனைக்குப் பிந்திய சர்விஸ்... உஷாவின் தரத்திற்கான உத்திரவாதமும் உண்டு.
• இம்முறை தேர்ந்தெடுக்கப்பட்ட சில இடங்களில் மட்டுமே உள்ளது.
U-US-1 TAM.
உஷா – பாரதத்தின் பெருமளவில் விற்பனையாகும் தையல் மெஷின்

“கண்ணே, என்னைக் கல்யாணம் செய்து கொள்வாயா?” என்று அவன் கேட்டான்.

ஆச்சரியம் தாளாமல் அவள் கட்டிலிலிருந்து கீழே விழுந்தாள்.

■ தியேட்டரில் இரண்டு பெண்கள் சலசலவென்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

பின்வரிசையிலிருந்த இரண்டு நண்பர்களுக்கு அது பொறுக்கவில்லை. ஒருவன், “நான் போய்ச் சூடச்சூட இரண்டு வார்த்தை கேட்டுவிட்டு வருகிறேன்,” என்று எழுந்து சென்றான். ஆனால் கொஞ்ச தூரம் சென்றதும் திரும்பிவிட்டான்.

“ஏன்?” என்றான் மற்றவன்.

“கொஞ்சம் அருகில் போனதும்தான் முகம் தெரிந்தது. ஒருத்தி என் மனைவி. மற்றவள் என் காதலி. எப்படிக் கேட்பது?”

“அப்படியானால் நான் போய்ச் சொல்கிறேன்,” என்று இரண்டாமவன் சென்றான். அதே போல் திரும்பி வந்து, “எனக்கும் அதே சங்கடம்தான்,” என்றான்.



31'ம் பக்க விடை

■ செருப்பு வாங்கிக்கொள்வதற்காக அந்தப் பெண் வந்திருந்தாள். குட்டைப் பாவாடை அணிந்திருந்த அவளுக்கு, கண் பார்வை சற்றுக் கோளாறு.

கடைக்காரர் அவள் காலடியில் குனிந்து அளவெடுத்தார். அந்த ஆளுக்குத் தலை வழுக்கை. அவள் குனிந்து பார்த்தாள். அவருடைய வழுக்கைத் தலையைக் கண்டு, தன் முழங்கால்தான் தெரிகிறதாக்கும் என்று எண்ணிக் கொண்டு, பாவாடையைக் கீழே இழுத்து விட்டுக் கொண்டாள்.

கடைக்காரர் கத்தினார்:

“சட்! மறுபடியும் லைட் போய் விட்டதா! நல்ல பவர்கட் வந்தது!”

■ “ராஜு ஒரு தும்மல் தும்மினான். முதுகெல்லாம் வீங்கிப் போச்சு”

“அதெப்படி?”

“கட்டிலுக்கடியில் ஒளிந்து கொண்டிருந்தபோது தும்மித் தொலைத்தான்!”

■ டாக்டரிடம் ஓடிவந்தான் இளைஞன். “எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கிறது, டாக்டர். தெரியாத்தனமாய் அந்தப் பெண்ணுடன் சினேகம் ஏற்படுத்திக் கொண்டு விட்டேன்.”

"என்ன ஆச்சு?" என்றார் டாக்டர்.

"கடற்கரைக்குப் போகிறோம் தினந்தோறும். ஆளில்லாத இடத்துக்குப் போனதும் தன்னை அணைத்துக் கொள்ளும்படி சொல்கிறாள். பிறகு என் கையைப் பிடித்துக் கொள்கிறாள்."

"அப்புறம்?"

"அப்புறமா? அப்புறமும் ஏதாவது இருக்கிறதா என்ன?" என்றான் குழந்தை.

■ ஒரு பிரெஞ்சுக்காரன் வீட்டுக்கு வந்தபோது, தன் மனைவி ஓர் ஆளுடன் குலவிக் கொண்டிருந்ததைக் கண்டான். உடனே துப்பாக்கியை எடுத்து மனைவியைச் சுட்டான்.

வழக்கு நடந்தது.

"அந்த ஆளையல்லவா நீ சுட்டிருக்க வேண்டும்? மனைவியை ஏன் சுட்டாய்?" என்று நீதிபதி கேட்டார்.

"இது என்றால் இவள் ஒருத்தியோடு போச்சு. ஆளைச் சுடுவதென்றால் வாரத்துக்கு ஒருவனைச் சுட்டுக் கொண்டிருக்க வேண்டுமே!"

■ ஒரு பணக்காரருக்குத் தன் மனைவிமீது சந்தேகம். வெளியூர் போக நேரிட்டபோது, ஒரு துப்பறியும் பேர்வழியை அமர்த்தி, "அவளைக் கண்காணித்துக் கொண்டே இரு. அவள் நடத்தை கெட்டவள்தானா என்பதைச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் கண்டுபிடித்து எனக்குத் தெரிவிக்க வேண்டும்," என்றார்.

ஊரிலிருந்து திரும்பியதும் அந்தத் துப்பறியும் வீரன் அவரைச் சந்தித்து, தகவல் கொடுத்தான். "நீங்கள் ஊருக்குப் போன தினத்தன்று இரவு ஓர் ஆள் வந்தான். அவனும் அவளுமாகச் சினிமாவுக்குப் போனார்கள். ஓட்டலுக்குப் போனார்கள். கையைக் கோத்துக் கொண்டு கடற்கரையில் சுற்றினார்கள். பிறகு ராத்திரி ஒரு மணிக்குத் திரும்பிவந்து உங்கள் படுக்கையறைக்கு வந்து கட்டிலில் உட்கார்ந்து ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டார்கள். பிறகு விளக்கை அணைத்துவிட்டதால் என்ன நடந்ததென்று தெரியவில்லை."

பணக்காரர் சீறினார்: "சே! என்னய்யா ஆள் நீ! சந்தேகத்துக்கிடமில்லாமல் கண்டுபிடி என்று நான் சொல்லவில்லை?"

■ "ஏன் என்னவோ போலிருக்கிறாய்?"

"நான் விரைவில் தந்தையாகப் போகிறேன்."

"அதிலே வருத்தப்பட என்ன இருக்கிறது?"

"இன்னும் என் மனைவிக்கு அது தெரியாது."

■ "நான் ஆராய்ச்சிக்காகச் செல்லும் இடம் மனித சஞ்சாரமேயில்லாதது," என்றார் புரொபசர், "என்னுடன் பேப்பரோ, ரேடியோவோ, ரிஸ்ட் வாட்சோ, காலண்டரோ எதுவும் எடுத்துக் கொள்ளாமல் போகப் போகிறேன். சமையலுக்காக மட்டும் ஒரு சகிக்க முடியாத கிழவிதான் என்னுடன் இருப்பாள்."

"காலண்டர், ரேடியோ எதுவும் இல்லையென்றால், ஊருக்குத் திரும்ப வேண்டிய சமயம் என்று எப்படித் தெரிந்து கொள்வீர்கள்?" என நண்பர் கேட்டார்.

"என்றைக்குச் சமையல்காரக் கிழவி அழகாகவும் வாலிபமாகவும் தோன்ற ஆரம்பிக்கிறாளோ அன்றைக்கு ஊர் திரும்ப வேண்டிய நாள் வந்துவிட்டது என்று புரிந்து கொள்வேன்."

■ "என் கணவர் தூக்கத்திலே என்னை என்னவெல்லாமோ சொல்லிச் சொல்லிக் கொஞ்சுறார்."

"பரவாயில்லையே!"

"ஆனால் என் பெயரைத்தான் தப்புத் தப்பாய்ச் சொல்கிறார்."

■ இரண்டாம் தாரம் கல்யாணம் செய்து கொண்ட கிழவர், தன் மனைவி கர்ப்பமாகியிருப்பதாக நண்பர்களிடம் சொன்னார்.

ஒரு நண்பர் கேட்டார்: "யார்மீது சந்தேகப்படுகிறீர்கள்?"

(21'ம் பக்க விடை)

நான்கு துண்டுகளும் உடைந்த விதம்
(ஒரு கிலோ, 3 கிலோ, 9 கிலோ, 27 கிலோ)

—கே. வெங்கய்



விதுபாலா (36)

மந்திரத்தில் ஹீரோயினாக முடியுமா?

—ஜி. பால் பிரடெரிக்



சரோஜாதேவி (26)

இதமாக நடித்து, பதம

விலகினார்

—பா. இராசே



ஏ. சகுந்தலா (41)

சில நேரங்களில் சேலையும்

உண்டு



ரோஜா ரமணி (44)

பருவ காலம் பூக்கக் காணோம்

—மு. சாயபு மரைக்காயர்



கமலஹாசன் (40)

பெயரிலுமா பெண்மை?

—ஆர் அண்ட் ஆர்



தேவிகா (25)

தேவிகா—ர்! ஓடவி

—எஸ். பி.

ஐந்து வார்த்தை



நாகேஷ் (43)
ானுல் போகட்டும் போடா
—வி. அருணசலம்



சௌகார் ஜானகி (39)
ஸ்கர்ட் போட்ட பட்டு மாமி
—அ. பாலகிருஷ்ணன்



மேஜர் சுந்தரராஜன் (27)
மேஜர், பல படங்களில் ஆஜர்
—செல்வி ரங்கநாயகி



சந்திரகலா (42)
வளர்பிறையா, தேய்பிறையா?
—பி. தியாகராஜன்



பாரதி (46)
விஷ்ணுவர்த்தனுய நமஹ
—வி. அருணசலம்



சுமித்ரா (31)
சிவப்பு விளக்கு, பச்சைக் கொடி
—ஆர். தனபாலன்



சிவாஜி கணேசன் (29)
லை வைப்பதாயின் ஒன்பது வேண்டும்.
—அ. முகம்மது முகைதீன்



ஸ்ரீகாந்த் (37)
Rape இவருக்கு Grape
—எஸ். ராஜாமணி



ஸ்ரீவித்யா (33)
தமிழ் துரத்துகிறது,
மலையாளம் அழைக்கிறது
—கெ. இரகுநாதன்



மனோகர் (48)
நாடகேசுவரன்.
—பொ. மு. ஜெயபா



எம்.ஜி.ஆர். (38)
மார்க்கண்டேயனின் மைந்தன்?
—என். சுகுமார்



மு. க. முத்து (32)
கழகம் சுற்றும் வாலிபன்
—எஸ். சீனிவாசன்



விஜயகுமாரி (35)
எஸ்யெஸ்ஸார், நோநோ
—கே. காந்



ஸ்ரீப்ரியா (28)
'முருகன்' அருளாலே முன்னுக்குவந்தவர்
—கே. சாந்தாதேவி




ஜோதிலட்சுமி (34)
அசைவுகள் சில, அருவருப்புகள் பல.
—எஸ். கலைச்செல்




எம். ஆர். ஆர். வாசு (47)
அப்பா இல்லாத செட்டில் பிள்ளை விளையாடு
—எஸ். எச். விசுவநாதன்



லதா (30)
இரண்டெழுத்து நடிகை, நாலெழுத்து கட்சி
—ரஹிமுன்னிசா சிக்கந்தர்



ராமதாஸ் (45)
பாஸ்! ஒரு சான்ஸ் தாங்க, பாஸ்!
—எம். பாலசுந்திர பட்



சீதாப்பாட்டியின் விரல்கள் கைக்குட்டையால் மூக்குக் கண்ணாடிக்கு மெருகேற்றுவது போல் துடைத்துக் கொண்டிருந்தன. சற்று முன் டெலிபோனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்ததன் விளைவுதான் அவளை அப்படிச் சிந்திக்க வைத்திருந்தது.

'புரொஃபசர் வெங்கண்ணா' சே! ரியலி எ ஹார்ட் நட் டு க்ரேக்' இப்போ பேசமாட்டாராமே...' என்று அவள் உதடுகள் முணுமுணுத்துக் கொண்டன.

விரல்கள் இன்னமும் சிந்தனையோடு மூக்குக் கண்ணாடியைத் துடைத்தவாறிருந்தன. கண்கள் புத்தக அலமாரியில் 'ஹௌ டு இன்ஃப்ளுயன்ஸ் பீபிள்' என்ற புத்தகத்தில் நிலைத்தன. மெதுவே எடுத்துப் புரட்டத் தொடங்கியவள் அடுத்த நிமிடம் 'தொபீல்' என்று அதைப் போட்டுவிட்டு, ''ஓ! மை காட்!'' என்று அலறிவிட்டாள்.

ஒரு கரப்பான்!

டெலிபோன் உரையாடல் ஏற்படுத்தியிருந்த எரிச்சலோடு, அலமாரிக் கரப்பான் செய்த பரபரப்பும் சேர்ந்தது.

''சே சே! வீடு வரவர ஒரே நேஸ்ட்டியாகப் போய்விட்டது. வேர் த ஹெல் இவர் தொலைந்துவிட்டார்!'' என்று அப்புசாமியின் நினைவு சட்டென்று அவளுக்கு ஏற்பட்டது. அப்புசாமியின் அறையிலிருந்து வந்த சில வாக்கியங்கள் அவர் என்ன செய்கிறார் என்பதற்கு விடையளித்தன.

''யாதும் ஊரே.. திணை—பொதுவியல்; துறை—பொருள் மொழிக் காஞ்சி...

''யாதும் ஊரே.. திணை—பொதுவியல்; துறை—பொருள் மொழிக் காஞ்சி...

கெடுக சிந்தை...திணை—வாகை, துறை மூதின் முல்லை.

கெடுக சிந்தை.. திணை—வாகை, துறை மூதின் முல்லை..''

சீதாப்பாட்டி கைகளால் காதைப் பொத்திக் கொண்டாள்.

பாக்கியம் ராமசாமி

அருகிலிருந்த டேபிள் வெயிட்டை எடுத்து டொக் டொக்கென்று சொல்லத்தான் நினைக்கிறேன் பாணியில் கதவில் தட்டினாள். ''உங்களைத்தானே? காதிலே விழலை... உங்க கரெஸ்பாண்டென்ஸ் கோர்ஸும்... நீங்களும்? நீங்க இப்போ படிக்கவில்லையென்று யார் அழுதது?''

அப்புசாமியின் காதில் இப்போதுதான் விழுந்தது. தபால் பாடங்களைக் கையில் கற்றையாக வைத்துக் கொண்டு, ''கூப்பிட்டியா சீதே... இன்னைக்குள்ளே தமிழைத் தீர்த்துடறதுண்ணு இருக்கேன். அப்புறம் நாளை பூரா அட்வான்ஸ் தமிழ்... அப்புறம்தான் பயங்கரம்... இங்கிலிபீசு.. நீதான் கொஞ்சம் ஹெல்ப் பண்ணணும்... அதற்கப்புறம்...''

சீதாப்பாட்டி பல்லை நறநறத்தாள். ''முந்தா நாள் புரொஃபசர் வெங்கண்ணா வீட்டுக்கு வெஜிடபிள்ஸ் கொண்டுபோய்க் கொடுக்கச் சொன்னேனே... செய்தீர்களோ?''

''அஆ! மறந்தே போச்சுடி சீதே... மூர்மார்க்கெட்டிலே கோனாருக்காக அலையப்போய் விட்டேனா... இன்னும் ஹிஸ்டரி ஒண்ணு... ஹரிஹரன் பரவாயில்லையா, ராமலிங்கம் பரவாயில்லையா? ஐயோ... எப்படித்தான் நான் பாஸாகப் போறேனோ... சீதே... திக் திக்குன்னு இருக்குடி..''

"சரி, சரி, காப்பிக்கொட்டையை அரைத்துவிட்டு இன்றைக்காவது புரொஃபசர் வீட்டுக்கு நான் சொன்ன கடையிலே ஊட்டி வெஜிடபிள்ஸ் வாங்கிட்டுப் போங்க.."

சீதாப்பாட்டி டென்னிஸ் மட்டையைச் சரேலென்று அது மாட்டியிருந்த இடத்திலிருந்து எடுத்துக்கொண்டு வேகமாகப் படியிறங்கிச் சென்று, காரைக் கோபமாக ஸ்டார்ட் செய்தாள்.

மூன்றாவது நிமிஷம் டமால் என்று ஒரு சத்தம், அப்புசாமியின் காதில் இன்பத் தேன் வந்து பாய்வது போல் விழுந்தது. பால்கனியில் சென்று ஆவலோடு எட்டிப் பார்த்தார்.

வழக்கமான ஆக்ஸிடெண்ட்.

"வேணும் குட்டிக்கு ... வேணும்! இந்தா மே! என்கிட்டே கோபித்துக்கொண்டு சுவர்மேலே போய் ஏன் டாஷ் அடிக்கிறே?" என்று உரக்கக் கூவினார்.

பாட்டி அவரைச் சுட்டெரிப்பதுபோலக் காருக்குள்ளிருந்து பார்த்துவிட்டுப் பல்லை நறநறத்தாள். எத்தனை தடவைதான் கார் இப்படி இடிபடுமோ... புரொஃபசர் வெங்கண்ணு மனசு வைக்கமாட்டேன் என்கிறாரே...

அப்புசாமிக்குப் பரீட்சை நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. விழுந்து விழுந்து படித்தாலும் அவருடைய மூளையில் பாடங்கள் ஏறுவதாக இல்லை. கொஞ்சம் ஏறின பாடங்களும் சீதாப்பாட்டி



யோடு ஒரு சண்டை அடித்தால் மறந்து போய்க் கொண்டிருந்தவை.

பரீட்சைக்குப் போகாமல் இருந்துவிடலாமா?

'சே!' என்று அப்புசாமியின் ரோஷ மனம் சீறி எழுந்தது.


'அப்புசாமி! அடேய் அறிஞா! நீ படிடா. நல்லாப் படிடா... நீ எங்கே படிச்சுப் பட்டம் பெற்று நல்லா வந்துடுவியோன்னு கெழவிக்கு உன்மேலே பொறாமை. உன் படிப்பு யாகத்திலே அவள் பொறாமை என்கிற திருவான்மியூர் தண்ணியைக் கொட்டி அணைக்கப் பார்க்கிறாள். வுடாதே நைனா! சவாலை எடுத்துகினியா... சமாளி.

'நினைச்சுப் பாருடா. சீதேக் கிழவி என்ன சொல்லி இடிச்சாள்? 'புரொபசர் வெங்கண்ணாகிட்டே போய் நாலு வார்த்தை பேச உங்களுக்கு யோக்கியதை இருந்தால் நான் ஏன் இப்படி இந்தச் சின்ன விஷயத்துக்கு அலையணும்?' னு சொன்னாளே. உன் மனசுக்கு அப்போ ரொம்பக் கஷ்ட மாயிருந்ததில்லையா? 'அடியே...... நானும் கிராஜுவேட் ஆகிக் காட்ட றேண்டி'ன்னு நீ சவால் எடுத்துக் கொண்ட ஜோரென்ன, பழைய பீரோவைக் குடை குடைன்னுகுடைந்து உன் பழைய எஸ் எஸ். எல். ஸி. புத்தகத்தைத் தேடியெடுத்து, தபால் பாடக் கல்லூரிக்கு அனுப்பினதென்ன, பல்லைக் காட்டிக் கெஞ்சிக் கிழவி கிட்டே பணம் வாங்கிக் கட்டின தென்ன, பரீட்சைக்குக் கட்டக் கடைசிப் பணத்துக்குச் சீதே கழுத்தறுத் தப்போ, கையிலே இருந்த அரேபியா வாட்சை அம்போன்னு விற்றுப் பணத்தைக் கட்டிப் பெருமையுடனிருந்த தென்ன...'

குறுக்கு வழியோ நெடுக்கு வழியோ அப்புசாமி பரீட்சை எழுதத் தீர்மானித்துவிட்டார்.

பரீட்சை தினம்.

'ஆகா, இந்தக் கிழவருக்குத் தான் இத்தனை வயசு காலத்திலும் படிப்பின்மீது எவ்வளவு ஆர்வம்! கொஞ்சம் கூட லஜ்ஜைப்படாமல் எல்லோருக்கும் சமமாக வந்து பரீட்சை எழுத அமர்ந்து விட்டாரே.' என்று பரீட்சை ஹாலி லிருந்த பல வாலிப மாணவர்கள் அப்புசாமியைப் பார்த்து வியந்தனர்.



பள்ளிக் கூ....

மதுரை மாவட்டம் நிலக் கோட்டையில் தனியார் உயர்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. அதன் பெயர்: 'நிலக் கோட்டை இந்து நாடார் உறவின் முறைக்குப் பாத்தியப்பட்ட பெரியசாமி ரெங்கநாயகி பெண்கள் உயர்நிலைப்பள்ளி.' உஸ்..அப்பாடா!

—புலவர் சுப. முருகேசன்

கணகணவென்று முதல் மணி அடித்துவிட்டது.

ஹால் ஒரே கப்சிப்.

அப்புசாமி தனது ஜிப்பாவின் இடது கையின் அடிப் பக்கத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார். முறுவலொன்று படர்ந்தது முகத்தில். ஜிப்பாக் கையோடு ஒட்டினாற்போல் வைக்கப்பட்டிருந்த மர்மப் பைக்குள் அவர் தயாரித்து வந்த விடைத் தாள்கள் வெளியே வரு வதற்கு தகுந்த தருணம் பார்த்துக் காத்திருந்தன.

அப்புசாமியின் வலது கை அதைத் தடவித் தர, உள்ளம், 'அடியே சீதேய்! என்னைப் பார்த்தா கோழி முட்டை வாங்கப் போகிற வன்னு சொன்னே? உன் கண்ணெதிரில் நான் பரீட்சை எழுதிப் பாஸாகிப் பட்டதாரியாகி, உன் மூக்கு மேலே என் விரலை ஓங்கி வைக்கப் போகிறேனா இல்லையா பார்!' என்று கறுவியது.

கேள்வித் தாள் கொடுப்பதற்கான மணி 'ஙண ஙண' என்று ஒலித்தது. கையில் கேள்வித் தாள்களுடனும், ஆன்ஸர் புக்குகளுடனும் அந்த ஹாலுக்குள் பிரவேசித்த சூபர் வைசரைப் பார்த்ததும் அப்புசாமிக் குப் பகீரென்றது!

சீதேக் கிழவி!

புதுமனை புகுவிழாவுக்குப்

போட்ட பந்தல், முகூர்த்த நேரத்தில் பற்றிக் கொண்டாற்போல், நுரையுடன் லஸ்ஸி திரளுவதற்கு முன் கரெண்ட் ஆஃப் ஆன மாதிரி, இவள் எங்கே வந்து இங்கு சேர்ந்தாள்?

பரீட்சை நடந்த இடம் பெண்கள் ஹைஸ்கூல். பரீட்சையைக் கண்காணிக்கும் பொறுப்பும் பள்ளி ஹெட்மாஸ்டருக்கே விடப்பட்டிருந்தது. பா. மு. கழகத்தில் சீதாப்பாட்டியைத் தற்செயலாகச் சந்தித்த ஹெட்மிஸ்ட்ரஸ், பரீட்சையை சூபர்வைஸ் செய்ய ஆட்களில்லையென்று குறைப்பட்டபோது சீதாப்பாட்டி தான் உதவுவதாக முன்வந்த விஷயம் அப்புசாமிக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

பரீட்சை அதிகாரிக்கென்று போடப்பட்டிருந்த மேஜை அருகே சென்று நின்று, எல்லா மாணவர்களையும்—முக்கியமாக அப்புசாமியை—ஒரு பார்வை பார்த்தாள் சீதாப்பாட்டி கம்பீரமாக. "குட்மார்னிங் ஜென்டில்மென், ஐயம் ஹியர் டு சூபர்வைஸ் யு ஆல். சில முக்கியமான இன்ஸ்ட்ரக்ஷன்களை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எவரி ஹாஃப் அனெவருக்கு ஒருதரம் பெல் வில் ரிங். பிஃபோர் கோயிங் டு ஆன்ஸர், உங்கள் ரிஜிஸ்தர் நம்பரை கேர்ஃபுல்லாக ஃபில் அப் செய்யுங்கள். ப்ளீஸ் யூஸ் ஷீட்ஸ் ஸ்பேரிங்லி, அட்லீஸ்ட் ட்வெண்டி லைன்ஸாவது ஒரு ஷீட்டில் இருக்கணும். அனதர் திங், இஃப் எனிபடி வாண்ட்ஸ் வாட்டர் ஆர் அடிஷனல் ஷீட்ஸ்.. எழுந்து நின்றால் போதும். அயம் ஹியர் டு அட்டெண்ட் டு இட். 'இஸ்ஸ்..உஸ்ஸ்...' என்று குரல் கொடுக்க வேண்டியதில்லை.."

திடீரென்று அணில் குஞ்சு ஒன்று 'கிக்கிக்கீ' என்று கத்தியது—சீதாப் பாட்டியைப் பழிப்பது போல.

அப்புசாமிதான் டெஸ்க்கின் கீழே குனிந்து அந்த மாதிரி ஒலி எழுப்பினார்.

எல்லா மாணவர்களும் அந்த எதிர்பாராத ஒலியைக் கேட்டுப் பெரிதாகச் சிரித்தனர்.

சீதாப்பாட்டி பதட்டமடையாமல், புன்முறுவலுடன், "நான் கொஞ்சம் ஸ்ட்ரிக்ட்டானவள். பரீட்சை ஹாலில் அணில் பூனை இவைகளை அலௌ செய்யமாட்டேன். அந்த அணில் ஜெண்டில்மான் இதை அன்டர்ஸ்டாண்ட் செய்து கொள்வது நல்லது," என்றாள்.

இரண்டாவது மணி அடித்தது—கேள்வித் தாள்கள் தரப்பட்டன.

எல்லா மாணவர்களும் தலையைக் குனிந்துகொண்டு கிடுகிடுவென எழுதத் தொடங்கிவிட்டனர்.

அப்புசாமி மட்டும் தூக்கம் வராத கொக்கு மாதிரி தலையை அண்ணாந்து பார்ப்பதும், மோவாயைச் சொறிந்து கொள்வதுமாக, ஒரே ஒரு வார்த்தை கூட எழுதாமலிருந்தார். சீதாப்பாட்டி அவரருகிலேயே வட்டமிட்டுக்கொண்டிருந்தாள்.

முதல் அரைமணி யாகிவிட்டது.

ஜிப்பாக் கையிலிருந்து நைஸாகத் தான் எழுதி வந்த பேப்பர்களை உருவி, அடிஷனல் ஷீட்டுகளுக்குப் பதில் வைத்துவிட வேண்டியது. அவ்வளவுதான்.

அதற்கு ஒரு ஐந்து நிமிஷம் அவகாசம் கொடுக்க இந்தக் கழுகுக் கிழவி அந்தப் பக்கம் பறக்காது போலிருக்கிறதே.

அப்புசாமிக்குச் சட்டென்று ஓர் ஐடியா. பேனாவின் கழுத்தைக் கழற்றினார். இடத்திலிருந்து எழுந்து நின்று, "மேடம்!" என்று வெகு வினயமாகக் குரல் கொடுத்தார்.

சீதாப்பாட்டி, 'அட, இவருக்குக் கூட இந்த அளவு பண்பாடு



தெரிகிறதே!" என்றெண்ணியவளாக அருகில் சென்றாள்.

அப்புசாமி கழுத்தைக் கழற்றிய பேனாவைத் தற்செயலாகக் கீழே போடுவதுபோலத் தள்ளிவிட்டார்.

"அச்சச்சோ! ஸாரிடி சூபர்வைசி! புடவையெல்லாம் ஒரே இங்க் ஆகிவிட்டதே...உடனே பாத்ரூம் போய் புட் சோப்பு.. பட் ஸாரி காஞ்சிபுரம் பட் ஸாரி..." என்றார் அப்புசாமி.

சீதாப்பாட்டி புன்சிரிப்புடன், "தட்ஸ் ஆல்ரைட்! சூபர்வைஸ் செய்து கொண்டிருக்கும்போது நான் போகிறது நல்லதல்ல. ட்ரை வாஷுக்குப் போட்டால் சரியாகிவிடுகிறது.. நீங்க பரீட்சையை எழுதுங்க..டைம் ஆகிறது," என்றாள் இளக்காரமாக.

கிழவி நகரமாட்டேனென்கிறாளே?

"மேடம்!" என்று எழுந்து கொண்டார்.

"எஸ்."

சீதாப்பாட்டி அருகே வந்தாள்.

"கொஞ்சம் தண்ணீர்."

"இதோ கொண்டுவரச் சொல்லுகிறேன்." சீதாப்பாட்டி காலடி எடுத்து வைத்தவள், அடுத்த நிமிஷம், "மை காட்!" என்று கீழே விழுந்து விட்டாள் — அமெரிக்கப் பிரசிடெண்ட் ஃபோர்டைப் போல.

"அடடே! கைத்தடியைத் தலைகீழாக வைத்துவிட்டேன் போலிருக்கிறது," என்ற அப்புசாமி டெஸ்கிலிருந்து விரைந்து வந்து சீதாப்பாட்டியைத் தூக்கிவிட்டார். "அடடே! முழங்காலில் ரொம்ப அடி போலிருக்கிறதே. சே! என்ன தடி... மேடம்... நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளணும்..."

சீதாப்பாட்டி அலட்சியமாக அவரைப் பார்த்தாள். "ஐ யம் கொய்ட் ஆல்ரைட்! இன்னும் ஒன் அவரில் எக்ஸாம் முடிந்ததும் ஐ ஷல் லுக் இன்டு இட்... யு கோ ஆன் வித் யுவர் வொர்க்."

இன்னும் ஒரே ஒரு மணி தான்.

கைக்கெட்டினதை வாய்க்கெட்டாதது மாதிரி கிழவி செய்துவிடுவாள் போலிருக்கிறதே.

அவுட் கேள்விப் பேப்பர் கிடைப்பதற்கு அவர் பட்டபாடென்ன, அவைகளுக்கு மண்டையை உடைத்துக் கொண்டு புத்தகங்களைப் பார்த்துப் பதில் எழுதி வைத்ததென்ன, தையல்காரக் கிட்டானிடம் ஒரு ரூபாய் முழுசாகக் கொடுத்து ஜிப்பாக் கையில் மர்மப் பை வைத்ததென்ன? அத்தனையுமல்லவா வீணாகிவிடும் போலிருக்கிறது. பளிச்சென்று இன்னும் ஒரு யோசனை.

திடீரென்று எழுந்து நின்றார்..."மாடம்." என்று கூவினா.

சீதாப்பாட்டி அலட்சியமாகத் தன் இடத்திலிருந்தவாறு, "எஸ்!

இங்கிலாந்து நாட்டின் எட்டாம் ஹென்றி மன்னர் ஒரு சமயம் பிரஞ்சு அரசர் முதலாம் பிரான்ஸிஸ் மீது கோபம் கொண்டார். பாதிரியார் ஒருவரை அழைத்து, பிரஞ்சு அரசரிடம் சில செய்திகள் கூறிவருமாறு பணித்தார்.

அரசர் கூறுவதுபோல் பிரஞ்சு அரசரிடம் கூறினால் உயிரோடு திரும்பிவர முடியாது என்பதைப் பாதிரியார் உணர்ந்தார். அதை மன்னரிடம் மெதுவாக விண்ணப்பித்துக் கொண்டார்.

அதற்கு அரசர், "அதைப்பற்றி நீர் கவலைப்பட வேண்டாம், பிரஞ்சு அரசர் உம்மைக் கொல்வாரானால் அதன்பின் என் கையிலகப்படும் பிரஞ்சுக்காரர்களின் தலைகளை எல்லாம் கொய்துவிடுவேன்," என்றார்.

அதைக் கேட்ட பாதிரியார் தம்முடைய தலையைத் தடவிப் பார்த்துக்கொண்டு, "அரசே, தாங்கள் அவ்வாறு செய்வீர்கள் என்பதில் எனக்குத் துளியும் சந்தேகம் இல்லை. ஆனால் எனது இந்தத் தலையைப்போல என் கழுத்தில் வேறு எந்தத் தலையும் பொருந்தாதே," என்றார்.

(பொ. திருகூட சுந்தரம்பிள்ளை எழுதிய 'இனிய சுவைகள்.')

—நெல்லை மாரியப்பன்

வாட் டு யூ வாண்ட்...அடிஷனல் ஷீட்ஸ்?'' என்றாள்.

''மேடம்,'' என்று அப்புசாமி இந்தத் தடவை உரக்கக் கூவினார். அதே சமயம் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு தடாலென்று டெஸ்க்கில் பின்னுக்குச் சரிந்து இருதய வலி வந்தவர்போல் துடிக்கத் தொடங்கி விட்டார்.

பேனா ஒரு பக்கம். பேப்பர்கள் ஒரு பக்கம். பரீட்சை ஹாலில் ஒரே பரபரப்பு. ''மாடம்..மாடம்.'' என்று பல குரல்கள் பதறின.

அப்புசாமி துடித்தார். ''ஐயோ...வலி...வலி... நெஞ்சுவலி ...இருதயத்தை ஏதோ அடைக்கிறதே ...சீதே...சீதே... சீக்கிரம் போய் டாக்டரை...நம்ம டாக்டரைக் கூட்டிவா. நீயே போனால்தான் டாக்டர் வருவார்.''

சீதாப்பாட்டி நிதானமாக ''ப்ளீஸ்..கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக் கொள்ளுங்கள்.. ஜிப்பாவை இவ்வளவு டைட்டாகப் போட்டுக் கொண்டு..'' என்று பட்டனை அவிழ்த்து நெஞ்சை லேசாக நீவி விட்டாள். ''இந்த ஜிப்பாவே வேண்டாம்!'' டர்ரென்று கிழித்து ஜிப்பாவைப் பந்து போல் சுருட்டி எடுத்துக் கொண்டு விட்டாள்.

''சீதே! சீதே! ஏ சீதே!'' அப்புசாமி அலறினார். ''பனியனோடு மனுஷன் பரீட்சை எழுதுவானா? பாவி! மூளை இருக்கா உனக்கு?''

''ப்ளீஸ்.. பரீட்சை எழுதாவிட்டாலும் பரவாயில்லை. உங்க ஹெல்த்தான் முக்கியம்..''

''கிடையாது. எனக்குப் பரீட்சை தான் முக்கியம். குடு ஜிப்பாவை..''

''ஐயோ .. காற்று தாராளமாக உங்க மேல் படணும்.'' புன்னகைத்துக்கொண்டாள் சீதாப்பாட்டி.

சென்ற வாரம் தற்செயலாக அப்புசாமியின் அழுக்கு ஜிப்பாவை வாஷுக்குப் போடக் கையில் எடுத்தபோது கையருகே பெரிதாக ஒரு பாக்கெட் இருந்ததை அவள் கவனிக்க நேர்ந்தது. இங்கே கொண்டுபோய் மர்மமாக ஒரு பாக்கெட் வைத்துக்கொண்டிருக்கிறாரே கிராக்குத்தனமாக என்று எண்ணிக் கொண்டாள்.



''காலரா வியாதி என் மகனையும் தொத்திக் கொண்டுவிட்டது. இதுஎப்ப திருமோ?''

பரீட்சை ஹாலைச் சுற்றி வரும்போது அவர் கைப் பகுதியை அவளுடைய கூரிய கண்கள் கவனித்து விட்டன என்பது அப்புசாமிக்குத் தெரியாது.

இதற்குள் யாரோ ஒருத்தர் போய் ஒரு டாக்டரைக் கூட்டி வந்துட்டார். அப்புசாமியின் நெஞ்சில் ஸ்டெதஸ்கோப் வைத்துப் பரிசோதித்தார் டாக்டர். ''ஹி இஸ் கொய்ட் ஆல்ரைட்.. ரொம்ப நார்மலாக இருக்கிறார். ஏதாவது சுளுக்கு அல்லது வாயுப் பிடிப்பாக இருக்கும். லெட் ஹிம் டேக் ரெஸ்ட்.''

சீதாப்பாட்டி குறுஞ் சிரிப்புடன், ''அவருக்கு ரெஸ்ட் பரீட்சை எழுதுவதுதான். அதை எழுதாவிட்டால் தான் அவர் கவலைப்படுவார். லெட் ஹிம் ரைட் த எக்ஸாம்..'' என்றாள்.

அப்புசாமி பல்லை நறநறத்தவாறு பேனா மூடியைக் கழற்றினார்.

விடைத்தாள் பாலைவனம் போல வெறுமையாகக் காட்சி தந்தது. விடைத்தார். அடிப்பாவி! ஜிப்பாவைக் கழற்றி விட்டாயேடி கடைசியிலே.

ஆத்திரமாக வந்தது. தாளில் என்னத்தை எழுதுவது? ஒரு கேள்விக்கும் விடை தெரியவில்லை. ராம ஜெபம்தான் எழுதித் தொலைக்கணும்.

ராம் ராம் ராம் ராம்.. ராம் ராம் என்று வெறி பிடித்தவர்

போல் மடமடவென்று ஐந்தாறு பக்கமும் எழுதித் தள்ளினார்.

ஒரு மாதம் கழித்து ஒருநாள்.

சீதாப்பாட்டி ஒரே உற்சாகமாக அவரிடம் வந்தாள். "யு நோ... புரொஃப்பசர் வெங்கண்ணா இஸ் கமிங் டுடே! நீங்க அவர் வருகிறபோது அபத்தமாக ஏதாவது பேசிக் காரியத்தைக் கெடுத்துத் தொலைப்பீர்கள். யூ பெட்டர் கோ சம்வேர்..ஒரு டு ரூபீஸ் தருகிறேன்."

அப்புசாமி பல்லைக் கடித்தார். "உன் பித்ஸா ரூபாவை நீயே வைத்துக்கொள். நான் ஒண்ணும் நாய் மாதிரி வெளியே போகத் தயாராயில்லை. புரொபசர் வந்தாலும் சரி, புடலங்காய் வந்தாலும் சரி."

கார் ஹார்ன் சத்தம் கேட்டுவிட்டது வாசலில்.

"ஐயோ.. அவர் வந்துவிட்டார்." விழுந்தடித்துக் கொண்டு முகமெல்லாம் மலரச் சீதாப்பாட்டி படிகளில் இறங்கி அவரை எதிர்கொண்டு அழைத்துச் சென்றாள்.

புரொபசர் வெங்கண்ணா ஒரு மாதிரியான பேர்வழி என்பது அவரது நடை, உடை, நெற்றிச் சின்னம் இவைகளைப் பார்த்ததுமே யாருக்கும் பளிச்சென்று தெரிந்துவிடும்.

நெற்றியில் கண்ணை மறைக்கிற அளவுக்குப் பெரிய திருமண். ஆனால் கோட் சூட். வாக்கிங் ஸ்டிக். கையில் சின்ன பாம்ரேனியன் நாய். ரொம்ப முன்கோபக்காரராதலால் சீதாப்பாட்டி அவரை வரவேற்பதில் ஜாக்கிரதையாயிருந்தாள்.

"வாருங்கள். நீங்கள் வரப்போவதாக ரிங் பண்ணினதும் நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன்."

புரொஃப்பஸர் மெதுவாக நடந்து வந்தார் கையிலிருந்த நாய்க் குட்டியைத் தடவியவாறு.

"ப்ளீஸ்.. என்ன கொண்டு வரட்டும்.. காப்பியா டீயா கூல்ட்ரிங்கா?"

"உங்க கணவரைக் கொண்டு வாருங்கள். நான் அவரைத் தரிசிக்கத்தான் வந்தேன். நாட் யூ.." என்றார்.

சீதாப்பாட்டிக்கு இடி விழுந்தது போலாகி விட்டது.


விரைந்து மாடிக்குப் போய் அப்புசாமியிடம் விஷயத்தைச் சொல்லி அவரைக் கூப்பிட்டாள்.

அப்புசாமியைக் கண்டதும் வெங்கண்ணா, "மிஸ்ட்டர் ஃபைவ் ஸீரோ எயிட் நைன் நைன்! உங்களைக் கன்கிராஜுலேட் செய்யத்தான் வந்தேன்," என்றார்.

அப்புசாமி, "ஹிஹி.. அதுதான் என் நம்பர். ஆனால் பெயிலாப் போச்சே..நோ பாஸ்..வாட்டு?" என்று உளறினார்.

சீதாப்பாட்டி "கர்மமே!" என்று தலையிலடித்துக் கொண்டாள்.

வெங்கண்ணா அப்புசாமியின் கையைப் பற்றிக் குலுக்கினார். "மிஸ்டர் அப்புசாமி.. என் வாழ்க்கையில் ஏறக்குறைய முப்பது வருடங்கள் பரீட்சைப் பேப்பர்கள் திருத்தியிருக்கிறேன். இந்த வருடத்துடன் நான் திருத்துவது கடைசி. அந்தக் கடைசி வருடம் கடைசிப் பேப்பரைத் திருத்தக் கையிலெடுத்தேன்.. மனசுக்குள் ஒரே இடிந்துபோன பிரமை. இனி கல்வி உலகம் என்னை ஏன் மதிக்கப் போகிறது என்ற வெறுமை



என்னை வாட்டியது. பெருமூச்சுடன் பேப்பரைப் பிரித்தேன்.

'ராம் ராம் ராம் ராம்' என்று பேப்பர் முழுவதும் எழுதியிருந்தது. என் மனக் குறைக்கு ஆண்டவனே ஆறுதல் கூறுகிற மாதிரி இருந்தது. தாங்கள் எழுதியிருந்தது. 'உழைத்தது போதும்டா வெங்கண்ணு. இனி நீ என்னைத் துதிப்பதில் உன் காலத்தை மகிழ்ச்சியாகக் கழி,' என்று உங்கள் விடைத்தாள் கூறியது. இந்த ஞானத்தை எனக்குத் தந்த அந்த விடைத்தாளை எழுதியவர் யாரென்று விசாரித்தேன். எனக்கு இன்னும் தூக்கி வாரிப் போடும் செய்தி கிடைத்தது. இவ்வளவு வயசானவர் பரீட்சை எழுதினரே என்று. பரீட்சை ஹாலில் உங்களுக்கு ஹார்ட் அட்டாக் வந்து விட்டதாம். அந்தக் கடைசி கட்டத்திலும் நீங்கள் மனத்தை ஒருமைப்படுத்தி 'ராம் ராம் ராம்' என்று இவ்வளவு தாள்களில் எழுதியது என்பது நிச்சயம் தெய்வச்செயல்தான். வெங்கண்ணுவுக்காகவே தெய்வம் எழுதியது போலிருக்கிறது. உங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?''

புரொபஸர் வெங்கண்ணு கண்களைத் துடைத்துக் கொண்டார்.

அப்புசாமி வாயைப் பிளந்தவாறிருந்தார். ஒரு குட்டி ஈ குட்டிச் சுற்றுப் பயணம் செய்து விட்டு வெளியேறியது.

சீதாப்பாட்டி, ''ஒரு நிமிஷம் இப்படி வருகிறீர்களா?'' என்று அப்புசாமியை உள்ளே கூட்டிச் சென்றாள். ''ப்ளீஸ்.. புரொபசர்கிட்டே நம்ம வேண்டுகோளைக் கேளுங்கள்..அவருக்குச் சொந்தமான பக்கத்துக் காம்பவுண்டில் ஒரு பத்தடி இடத்தை எப்படியாவது விலை பேசி முடியுங்கள்.. திஸ் இஸ் கோல்டன் ஆப்பர்சூனிடி.. அவரே வந்திருக்கிறார்.''

அப்புசாமி சீதாப்பாட்டியை அலட்சியமாகப் பார்த்தார். ''நான் ஏண்டி கேட்கணும்? நானா காரில் போகிறேன்? உன் கார் தினமும் போகிற போதும் வருகிற போதும் குறுகலான கேட்டிலே இடிக்கிறது என்பதற்காக நான் அவர்கிட்டே பேரம் பேசணுமா?''

''ப்ளீஸ்.. நீங்க உங்க கரெஸ்பாண்டென்ஸ் கோர்ஸுக்காகக் கட்டின பணத்தையெல்லாம் டௌன் காஷா இப்போவே கொடுத்திடறேன்.. ஒரு ஃபைவ் ஹண்ட்ரட் இருக்குமா?''

''ஊஹூம்.. ஒரு ஏழு ஹண்ட்ரடாவது தந்தாகணும்,'' என்றார் அப்புசாமி.

''ஓ கே,'' என்றாள் சீதாப்பாட்டி.

''அது மட்டுமில்லே..செப்டம்பரிலே நான் பரீட்சை எழுத நீ உதவி பண்ணணும்.''

''அக்ஸெப்டட்..'' என்றாள் சீதாப்பாட்டி.

மிஸ் ரம்பா

ஆண்கள் அறையே மேல்!



எல்.ஐ.ஸி. எரிவதை பார்த்து

தீ விபத்துக்குள்ளான பதினாலு அடுக்குக் கட்டிடத்தின் கீழ்த் தளத்தில் இருக்கிறது, பெருமாள் செட்டி அண் கோவின் ஷோ ரூம். அதன் உரிமையாளர்களில் ஒருவரான திரு. வி. சேதுராமன், அந்தப் பயங்கர 22 மணி நேரத்தைப் பற்றிக் கூறுகிறார்:

ஜூலை 11'ம் தேதி. வெள்ளிக்கிழமை. இரவு எட்டேகால் மணி இருக்கும். ப்ளவர்ஸ் ரோடில் இருக்கும் எங்கள் வீட்டிலிருந்து ஓர் டின்னருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். அருகே கீழ்ப்பாக்கம் மெடிகல் காலேஜ் எதிரே இருக்கும் தீ விபத்து நிலையத்திலிருந்து தீ அணைக்கும் வண்டிகள் பல சென்றுகொண்டிருந்தன. மணி ஒலியைக் கேட்டு, ''வர வர இது தினசரி சமாசாரமாக ஆகிவிட்டது,'' என்று வீட்டில் சொன்னேன்.

அப்போது எனக்கு சென்னை நகரிலே இதுவரை நடந்திராத பயங்கர தீ விபத்து நடந்து கொண்டிருக்கிறது என்றோ, அதில் என் நிறுவனமும் சிக்கியிருக்கிறது என்றோ சிறிதளவும் எண்ணத் தோன்றவில்லை.

8–30 மணி அளவில் டின்னர் இடத்தை அடைந்தேன்.

எல். ஐ. ஸி. கட்டிடத்திற்கு வலது புறத்தில் உள்ள பெட்ரோல் பங்க் உரிமையாளர் திரு. வாசுதேவன் 8-45'க்கு அங்கு வந்தவர், எல்.ஐ.சி. கட்டிடத்தில் சிறிய தீ விபத்து ஏற்பட்டிருப்பதாகக் கூறினார்.


வாசுதேவனுடனும், முக்கியமான சில நண்பர்களுடனும் நான் எல்.ஐ.ஸி.க்கு விரைந்தேன்.

நாங்கள் சென்ற சமயம், 2'வது 3'வது மாடியிலிருந்து புகை வெளிவந்துகொண்டிருந்தது.

ஏராளமான தீ அணைக்கும் எஞ்சின்கள் அங்கிருந்தன. எல்.ஐ.ஸி. கட்டிடத்தின் பின் பக்கத்தில் தான் முதலில் புகை வந்து கொண்டிருந்தது. கட்டிடத்தின் பக்கவாட்டிலும், பின்புறமும் தீ அணைக்கும் வீரர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் அடிக்கும் தண்ணீர், 4, 5 மாடிக்கு மேல் போக முடியவில்லை.

தீயணைப்பு எஞ்சினுடன் பொருத்தப்பட்ட ஹைடிராலிக் ஏணி (60 அடி) யின் மீது ஒருவர் தண்ணீர் அடித்துக் கொண்டிருந்தார். அவர் அந்த ஏணியுடன் நன்றாகக் கட்டப்பட்டிருந்தும் அந்த ஏணி தாங்காமல் கீழே விழுந்தார். நல்ல காலம், அடிபடவில்லை.

நுழைவு வாயிலின் வலது புறத்தில் முதலில் இருப்பது எங்கள் ஷோரூம். அதை அடுத்து பின்னி. கம்பெனி, பிறகு ஹாரிஸன் கம்பெனி கடைசியாக உம்மிடியாரின் நகைக் கடை ஷோரூம். ஒவ்வொன்றும் இருபது அடி அகலமும், அறுபது அடி நீளமும் கொண்டது.



திரு. சேதுராமன்

ரவு முழுதும்
கொண்டு நின்றேன்

எல்லா ஷோரூம்களுக்கும், முன்னும் பின்னும் ரோலிங் ஷட்டர்ஸ் உண்டு. பின்புறத்தில் அதையடுத்து மரக்கதவு உண்டு. பின்புறம் மரக்கதவை பூட்டிவிட்டுத்தான் நாங்கள் வருவது வழக்கம்.

அங்கு நாங்கள் சென்றதும் தீ அணைக்கும் படையினர் என்னிடம் கடைச் சாவி இருக்கிறதா என்று கேட்டனர். என்னிடம் சாவி இல்லை. என்னுடைய அனுமதி பேரில் மரக்கதவை உடைத்து, கண்ணாடியை உடைத்து, ஷட்டரில் இருந்த இடைவெளி வழியாகத் தண்ணீரை உள்ளே பாய்ச்சித் தீ அணைக்க முற்பட்டனர். இரும்பு ஷட்டரை உடைக்க முடியாததால் ஷட்டரில் இருந்த இடைவெளி வழியாகத்தான் தண்ணீரை அடிக்க முடிந்தது. இவ்வளவும் நடந்தது நல்ல இருட்டில்—டார்ச் வெளிச்சத்தில். தீ விபத்து காரணமாக எல்ஐஸி கட்டிடம் முழுவதும் மின்சார சப்ளை அணைக்கப்பட்டிருந்தது.

அலங்காரக் கூரைக்கும் அசல் கூரைக்கும் நடுவே இருந்த இடைவெளி வழியாக தீ சுவாலை பெரிய அளவில் எங்கள் ஷோ ரூமிற்குள் நுழைந்திருந்தது. பேப்பர், ஸ்டேஷனரி எல்லாம் விநாடிப் பொழுதில் எரிந்து கொண்டிருந்தன.

ஐ.ஓ.பி. பாங்க் வருவதாக இருந்ததால் கடைசி ஷோ ரூமைப் பந்தோபஸ்துடன் கூடியதாக, நெருப்பு தீ இவைகள் பாதிக்காதபடி கட்டியிருந்தார்கள். அவர்கள் வராததால் உம்மிடியார்ஸ் அதை எடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஸ்ட்ராங் ரூம் காரணமாக அவர்களது நகைகள் அனைத்தும் அன்று காப்பாற்றப்பட்டன.

நெருப்பு பயங்கரமாக உயரே ஒவ்வொரு மாடிக்கும் சென்று கொண்டிருந்தது.

துறைமுகம், ரயில்வே, போர்ட் டிரஸ்ட், மணலி ஆகிய இடங்களிலிருந்து தீயணைக்கும் வண்டிகள் வந்தவண்ணமிருந்தன.

ஒவ்வொரு மாடியிலும் புகை பின்னிப் பின்னி நெருப்பு பரவியது. ஆனால் 6—வது மாடிக்கு மேல் நெருப்பு அணைக்கக் கூடிய உபகரணங்கள் இல்லாததால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அந்த கோரக் காட்சியை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

சாதாரணமாக, தீ விபத்து ஏற்படும் இடங்களில் குழப்பம், கூச்சல், கத்தல் இருக்கும். அதெல்லாம் இங்கு இல்லாமல் அமைதியாக வேலை நடந்தது. ஆனால் அந்த அமைதியே பயங்கரமாக இருந்தது.

எங்கள் ஷோ ரூமைப் பொறுத்தவரை எல்லாமே எரிந்து போய்விட்டன. இரவு 2 மணிக்கு வீடு திரும்பினோம்.

சனிக்கிழமை மீண்டும் 9.30 மணிக்கு அங்கு சென்றோம். ஷோரூமுக்குள் சென்று பார்வையிட்டோம். பேப்பர், பென்ஸில், கணக்கு நோட் புத்தகங்கள், பிரஷ் கலர்கள், பொறியியல் மாணவர்களுக்கான உபகரணங்கள் ஆகிய அனைத்தும் சாம்பல். நாற்காலி, மேஜை, அலமாரி எல்லாம் எரிந்துவிட்டிருந்தன. டெலிபோன் உருகிவிட்டிருந்தது.

இன்னும் இரு வாரங்கள் கழித்து இந்த விபத்து நடந்திருந்தால் இன்னும் 70,000 ரூபாய்க்கு அதிகமாக ஸ்டாக் இருந்திருக்கும்.

தெய்வாதீனமாக ஆபீஸ் நேரம் முடிந்த பிறகு இந்த விபத்து நடந்திருக்கிறது. ஆபீஸ் நடக்கும் போது நடந்திருந்தால் 1000 பேர் போன்று வேலை செய்யும் இடத்தில்—அதிலும் அநேகம் பேர் பெண்கள் இருக்கும் இடத்தில்— பயத்தினாலும் பீதியினாலும் நெரிசல் உண்டாகி எக்கச்சக்கமான உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கலாம்.

—பேட்டி: எஸ். ரஜத்



பட்டிக்காட்டு ராஜா ■

சிவகுமார் பெரிய நடிகர் ஆகிவிட்டார் என்பதற்கு இந்தப் படம் சான்று. இரட்டை ரோல் அவருக்கு! ஒன்று—பட்டிக்காட்டு இளைஞன்; இரண்டு, உருவத்தில் அவனையே ஒத்திருக்கும் அஸிஸ்டென்ட் வில்லனான ராஜா. (ஸீனியர்: மொட்டைகோர அசோகன்).

பட்டணத்தில் படிக்கும் மாமன் மகளை (ஃபடாஃபட்) தேடிக் கண்டுபிடித்துத் தங்கள் கல்யாணத்துக்கு ஓ. கே. வாங்கப் புறப்படுகிறார் பட்டிக்காட்டுச் சிவம். ஆனால் ஃபடாஃபட் அவர் கண்ணிலேயே தட்டுப்படவில்லை. அதற்குப் பதில் பணக்கார ஜெயசுதா பட்டுக்கொண்டே இருக்கிறார். இதற்கிடையில், பட்டிக்காடு, போலீசின் கண்ணில் பட்டுவிடுகிறது, தாங்கள் தேடும் கொள்ளைக்கார ராஜா இவர்தான் என்று அவர்கள் தவறாக முடிவு கட்டிவிடவில்லை. தோற்றத்தில் உள்ள ஒற்றுமையைப் பயன்படுத்தி, பட்டிக்காட்டுக்கு ராஜாபோல் நடிக்கக் கற்றுக் கொடுத்து, வில்லனின் கோட்டைக்குள் அனுப்பச் சாமர்த்தியமாகத் திட்டம் போடுகிறார்கள்.

திட்டம் நிறைவேறாமல் போகுமா? நிறைவேறுகிறது. ஆனால் அதற்குள், படம் பார்ப்பவர்களில் எத்தனை பேர் சிண்டைப் பிய்த்துக்கொண்டு சட்டையைக் கிழித்துக் கொள்கிறார்களோ, கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரிக்குப் போனால்தான் கணக்குத் தெரியும்.

வாழைப்பழக் குலையைத் தோளில் தூக்கி வைத்துக்கொண்டு, கட்டுக் குடுமியுடன், 'யம்மோவ் யம்மோவ்' என்ற அழைப்புடன் தோன்றும் பட்டிக்காட்டு அசட்டுச் சிவகுமார் உற்சாக மூட்டுகிறவராய்த்தான் இருக்கிறார். மாமா பெண்ணுக்கும் தனக்குமுள்ள அன்னியோன்னியத்தை—கரகரவென்று தண்ணீர்ப் பாம்பைச் சுழற்றித் தரையில் அடித்து மாமா பெண்ணைச் சிரிக்க வைத்ததை—தவளைகளை மாலையாய்க் கோத்துப் போட்டுக் கொண்டு மாமா பெண்ணைப் பிரமிக்க வைத்த பிரதாபத்தை—'அப்படியெல்லாம் செய்தது யாரு? யாரு?' என்று கேட்டு முழக்கும் போது முதல் தடவை மட்டும் ரசிக்க முடிகிறது. என்னய்யா இது, "ரிபீட் சாங்" உத்தியா—அந்தப் பிரமாத டய

லாக்கை மூன்று நான்கு முறையா சொல்லிச் சொல்லி அறுக்க?)

குடுமி சிவகுமார்தான் அதிகமாய் அலட்டிக் கொள்கிறுரென்றுலும், வில்லன் சிவகுமாரிடம்தான் நடிப்புக் காணப்படுகிறது. படாலென்று ஒரு பண்டரிபாய் தோன்றி, அன்னை வேளாங்கண்ணி, கிரீடம், சிங்கப்பூர் சீமான் என்று என்னென்னவோ சொல்லி, கடைசியில் தன் ரவுடிப் பிள்ளையைச் சுட்டு வீழ்த்துகிற கட்டத்தில், வாயிலிருந்து ரத்தம் ஒழுகச் சிவகுமார் துடித்துத் துடித்துப் பேசுவது பரவாயில்லை. புரியும்படியான் கதையாகவும் அமைந்திருந்தால் இன்னும் நன்றுயிருந்திருக்கும். பாவம், சிவகுமார் கொடுத்துவைக்கவில்லை.

வக்ரமான வாயசைப்பு—விசித்திரமான உச்சரிப்பு—இதுதான் அசோகன் என்பது தீர்ந்துபோன சங்கதி. ஆனல் இந்தத் தடவை அதிலும் ஒரு படி மேலே. பட்டுக் குஞ்சலம் மாதிரி தலையின் இரண்டு பக்கத்திலும் இரண்டு பின்னல் வேறே. தலையை இரண்டு கன்னிகள் அவ்வப்போது பிடித்து இழுத்துப் பின்னுக்குச் சாய்க்கிறுர்கள். அது போகட்டும். திடீரென்று தலை வேறே, கை கால் வேறே என்று பஞ்சு பஞ்சாகப் பிய்ந்து போகிற பொம்மை அசோகன் ஒருத்தர் முளைக்கிறுரே; அது என்ன கஷ்ட காலம்?

'மற்றதெல்லாம் ரொம்பக் கதையோடு ஒட்டி வாழறதாக்கும், நான் ஒட்ட!' என்று மனேரமா சண்டைக்கு வரக்கூடும், ஒட்டவில்லை என்று சொன்னுல். அவரும், தேங்காயும் பக்கத்துப் பக்கத்து அறையில் கைரேகை நிபுணர்களாகப் போட்டித் தொழில் செய்வதும் சரி; குடிகார கஸ்டமரை மனேரமாவின் அறைக்கு அனுப்பி வைக்கும் தேங்காயின் குறும்பும் சரி; அந்தக் குடிகாரன், 'தோ ரஹா!' என்று ஒரே வார்த்தையில் தன் விஜயத்தின் நோக்கத்தை விளக்க, மனேரமா அலறியோட, தக்க சமயத்தில் வந்து தேங்காய் காப்பாற்ற—ஏதோ கொஞ்சம் சிரிக்கலாம்.

முக்கிய பாத்திரம்போல் நுழையும் கமலஹாஸன் புஸ்வாணம் ஆகிவிடுவது ஒரு டிராஜடி.

'எனக்கு யாரையும் தெரியாது. நீ போகலாம்' என்று அவர் சுருக்கமாகப் பதிலளித்துவிட்டுத் தொடர்ந்து டான்ஸ் செய்யப் போய்விடுவது; கைவிட்டுவிட்டதாக அழுகின்ற காதலி, 'நான் தமிழ்ப் பெண்...' என்று ஆரம்பித்ததும், 'நீ தமிழ்ப் பெண்ணே, தெலுங்குப் பெண்ணே...' என்று நிதானமாகக் கூறுவது; ரசிக்கும்படி இருக்கிறது.

ஸ்ரீப்ரியா—ஒரு வேஸ்ட்.

ஃபடாஃபட், அடக்கமான ஏமாளிப் பெண். நம்பும்படி இருக்கிறது. 'மாமா, இது உங்கள் வீடு. உங்களைப் போகச் சொல்ல எனக்கு உரிமையில்லை. ஆனல் நீங்கள் இங்கே இருந்தால் நான் பழைய இடத்துக்கே போய்விடுகிறேன்,' என்று சொல்லும்போது அதில் உறுதியும் சங்கடமும் தொனிக்கின்றன.

வீறாப்புடன் புறப்படும் பட்டிக்காட்டுச் சிவகுமார், மோட்டார்க்காரி ஜெயசுதாவின் உதவியோடு ஒவ்வோரிடமாகத் தேடுகிற வரையில் கதை தெளிவாக—ஏன், விறுவிறுவென்றுகூட—ஓடுகிறது. திடீரென்று போலீஸ் இலாகாவில் சிவகுமாரை மடக்கி, சிவகுமாரைப் போலவே இருக்கும் ஒரு வைரக் கடத்தல்காரரைப் பிடித்துத் தரும்படி அமர்த்துகிறுர்கள், பாருங்கள். அந்த விஞடிக்குப் பிறகு—

யார் நல்ல சிவகுமார், யார் பொல்லாத சிவகுமார், எவர் அசல் போலீஸ்காரர், எவர் மோசடி, எவர் இவர், எவர் அவர், எவர் நாம், எங்கே நாம் இருக்கிறேம்—என்பது எதுவும் புரியாத சிடுக்குக் காட்டிலே சிக்கிக் கொள்கிறேம்.

கோணு மாணு.



இரண்டு சாமான்களை நீங்கள் கடையில் கேட்கும்போது கடைக்காரர் உங்களை ஏற இறங்கப் பார்ப்பார் என்று கூறி, முதலாவது நிரோத் என்று தெரிவித்திருக்கிறீர்கள். இரண்டாவது என்ன தெரியுமா? குமுதம்.

அரூர் எஸ். டி. நாகராஜன்

அந்த இன்னொன்று என்ன?

நேர்மை உமதா?

யோவ் வார்னிஷ் கிராக்கி! பாட்டு நன்றாக இல்லையா? யோவ்! நாளை நமதே, நீல நயனங்களில், உன்னை விட்டால் இந்த மூன்றும் முத்துக்களாயிற்றே.

பெங்களூர்-16 ஐ. சாமுவேல்

வெ. ஆ. நிர்மலாவுக்கு எம். ஜி. ஆரோடு நடிக்கக் கிடைத்த ஒரே ஒரு வாய்ப்பும் போய் விட்டது என்று எழுதியுள்ளீரே! 'ரகசியப் போலீஸ் 115'—இல் எம். ஜி. ஆரோடு அவர் ஒரு டூயட்டே பாடியிருப்பதை மறந்து விட்டீரா?

தொட்டியம் சி. மனோகரன்

கவியின் கோபம்

உலகமகா கவி பட்டம் பற்றி 'அரசு' கூறிய பதிலைக் கண்டு எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. உலக மகா கவி என்ற பட்டம் டாக்டர் கலைஞருக்கு 1970'ல், அமெரிக்க நகரான பீனிக்ஸில் உள்ள உலக மகா கவிஞர்கள் சங்கத்தின் நிர்வாகிகளால் அளிக்கப்பட்டது. இதற்காக டாக்டர் மில்லர் என்பவர் அமெரிக்காவிலிருந்து வந்தார். 'கவியரசு' என்ற பட்டம் கண்ணதாசனுக்கு இச்சங்கத்தினரால் அளிக்கப்பட்டது. முன்னாள் மேயர் திரு. வை. பாலசுந்தரம் அவர்களுக்கு, கவிதைக்கு அவர் செய்த சேவையைப் பாராட்டிப் பட்டம் வழங்கப்பட்டது. இதுவும் அச்சங்கத்தினரால் தான். எனவே, இவை திரு. கிருட்டின சீனிவாஸ் அவர்களால் மட்டும் அளிக்கப்பட்ட பட்டங்கள் அல்ல. பொட்டலம் மடிக்க லாயக்குள்ளது 'குமுதம்' இதழ்கள்தான்.

சென்னை-17 என். லெட்சுமணன்

பழையதின் நறுமணம்

குமுதத்தின் ஒரிஜினல் பாணி விமரிசனம் எவ்வளவு உருப்படியாக இருக்கிறது!

பெரிச்சிபாளையம் அ. நூருல்லா

ஆயிரம்தான் இருந்தாலும் தம்பதியர்கள் ஊடலுடனும், கூடலுடனும் விமரிசித்ததில் இருந்த கிளுகிளுப்பும் பரவசமும் இந்த விமரிசனத்தில் இல்லை.

கடலூர்-2 தங்க குஞ்சிதபாதம்

நீட்டுக—கம்பி!

'நீட் வெரி நீட்' கதையின் பெயரில்தான் நீட் இருந்ததே தவிர, கதை ஒரே அசிங்கம்! தூ!

காஞ்சிபுரம்-3 கா. த. ஸ்ரீதரன்

முத்துராமன் மறுப்பு

தங்கள் 10—7—75 இதழில் தவறான தகவலின்பேரில் சில செய்திகளை வெளியிட்டிருந்தீர்கள். நான் ஒரு படத்தில் நடிக்க ஆரம்பிக்கும்பொழுது அந்தப் படத்தை முடிக்கும்வரை தேவையான கால்ஷீட்களைக் கொடுத்து விடுவது வழக்கம். குறிப்பிட்ட அதிபர் கேட்ட தேதிகளை நான் வேறு ஒரு படத்திற்குக் கொடுத்திருந்தபடியால், முறையாக இந்தப் படத்திலிருந்து விலகிக்கொண்டு உடனே அட்வான்சையும் திருப்பிக் கொடுத்துள்ளேன். இதில் யாரும், யாரையும் மிரட்ட வேண்டிய அவசியமோ, பாதிப்போ, வருத்தமோ இல்லை. அத்தோடு நான் சொந்தப் படம் எடுப்பதாகக் குறிப்பிடப் பட்டிருந்தது. இதுவரை நான் எந்தப் படமும் எடுக்கவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை-18 ஆர். முத்துராமன்

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும், கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. குமுதம் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெடில் அச்சிட்டவர்: ஏ.பி.ஏ. பெரியகருப்பன். குமுதம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர்: பி.வி. பார்த்தசாரதி. ஆசிரியர்: எஸ்.ஏ.பி. அண்ணாமலை. முகவரி: 83, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை—600010.



மைசூர் மகாராஜாவுக்கு இப்படி ஒரு பிள்ளையா?

மைசூர் மகாராஜா.

பெயரை ஒரு முறை சொன்னாலுமே அந்த வாட்ட சாட்டமான உருவம் கண் முன்னே எழும். பளபளவென்ற அந்தத் தலைப்பாகையும், சரிந்த, பெரிய மனுஷத்தனமான தொப்பையும், வழவழ வென்ற பிரம்மாண்டமான கோட்டும், வைரக் கடுக்கனும், ரத்தின மாலையும் ஞாபகம் வரும்.

அது மட்டுமல்ல.

அவருடைய பன்மொழிப் புலமை, தெய்வ பக்தி, புண்ணியத் தல யாத்திரை ஆகியவையும் கூடவே நினைவு வரும். அவர் எழுதிய பல புத்தகங்கள், இயற்றிய துதிப் பாடல்கள் – இவையெல்லாம் கூடச் சிந்தனையில் எழும்.

அவருடைய குமாரர்—

ஸ்ரீகாந்த தத்த நரசய்ய உடையார் எம். ஏ. என்ன செய்கிறார்?

சினிமா உலகத்தில் நுழைந்திருக்கிறார்.

தனது சொந்தத் தயாரிப்புக்குப் பம்பாயில் பூஜை போட்டார் அண்மையில். அதற்கான விழா வோடு 'காக்டெயில்' பார்ட்டியும் ஜாம் ஜாமென்று நடந்தது.

மூக்குக் கண்ணாடி, மனோரஞ்சன் தாடி, இளம் தொந்தி (அப்பாவை ஞாபகப்படுத்தும் ஒரே அம்சம்?) முதலியவற்றுடன் காட்சியளித்த இன்றைய மைசூர் மகாராஜா, தொடக்க விழாவில் பத்திரிகைக் காரர்களை லட்சியம் பண்ணவில்லையாம். மது வகை களை எடுத்துச் செல்லும் வெயிட்டர்களின் பின்னா லேயே சுற்றிக் கொண்டிருந்தாராம்.

பிள்ளையின் புதிய தொழிலை ஆசீர்வதிப் பதற்காக மெனக்கெட்டு மைசூரிலிருந்து பம்பாய்க்கு வந் திருந்தாராம் மைசூர் ராஜமாதா! விழாவுக்குப் பிறகு 'ஷாப்பிங்' போகப் போவதாகச் சொன்னாராம் அங்கி ருந்தவர்களிடம்.

'கையிலே ஒரு டன் எடையுள்ள வைர மோதிரம் போட்டுக் கொண்டிருக்கிறார் இந்த அம்மாள். இவர் போய் வாங்கும்படியாக என்ன இருக்கிறது கடைகளில்!' என்று பரிகாசம் செய்கிறது ஸ்டார் அண்ட் ஸ்டைல் பத்திரிகை.

ஆதாரம்: ·ˑ·பிலிம்·ˑ·பேர், ஸ்டார் அண்ட் ஸ்டைல்.



உறவு சொல்ல ஒருவன்■■■

மூலக் கதையை யாரோ
கர்—நன்ருய்த்தான்
எழுதியிருக் கர்.

விரலுக்குத் தக்கபடி வீங்
காமல் பூசணிக்காயளவு வீங்கும் இளம்
பெண்ணின் (பத்மப்ரியா) சோகக்
கதை இது.

ஒரு நல்ல சமாசாரம்: பத்ம
ப்ரியா நடிக்க ஆரம்பித்துவிட்டார்.

பக்கத்துப் போர்ஷன்
குமாஸ்தா சிவகுமாரை அம்மா சிபாரிசு
செய்ததும், ''அவருக்கு என்னம்மா
பிரமாத சம்பளம்? நானூரே ஐந்
நூரே இருக்கும்; வருஷத்தில் இரு
பதோ முப்பதோ இன்க்ரிமெண்ட்.
அவரைக் கல்யாணம் செய்துகொண்
டால் இப்படியேதான் கஷ்டப்பட்டுக்
கொண்டிருக்கணும். நான் லட்சாதிபதி
மாப்பிள்ளை தேர்ந்தெடுத்துவிட்டேன்
அம்மா!'' என்று டம்பமாய்ச் சொல்
லும் போதும்; லட்சாதிபதி என்று
அவர் நினைத்திருந்த முத்துராமன் சிவ
குமாரைவிட மட்டம் என்று தெரிந்து
அதிர்ச்சி அடையும்போதும்; தன் மனத்
தில் இருப்பதை நாம் புரிந்து கொள்

ளப் போதிய அளவுக்குப் பத்மப்ரிய
நடித்திருக்கிருர். புரியாதபோதுதா
இருக்கவே இருக்கிறது, 'ஆசை, ஆசை
ஆசை,' என்று பின்னணியிலிருந்து ஒலி
கும் அந்தரங்கக் குரல்!

நோயாளி மனைவியுட
மாடிக்குச் செல்லும் முத்துராமனிட
'ஊம்—ஷி ஈஸ் நாட் ஃபர் இட
என்று ஜாடையாய் எச்சரிப்பது நாசு
காக இருக்கிறது.

ஆரம்பக் காட்சி- அவ
ஒரு தொடர்கதை? அனுவசிய அதிர்ச்
சக நர்சுகளிடம் ஜம்பம் கொட்டி
கொள்கிருரே, பத்மா, அதிலிருந்
துவங்கியிருக்கலாம்.

துணிச்சலுள்ள வாலிட
களுக்கு முத்துராமன் ஒரு ரசமா
பொழுதுபோக்கைக் கற்றுத் தந்திரு
கிருர். நாலைந்து இளம் பெண்கள் கும்
லாக நிற்கும் இடத்தருகே காரை
ரென்று நிறுத்துவது—'ஹாய்
யாணி!' என்பது. 'ஹாய் உமா!' என
பது. நிச்சயம் அந்தக் கும்பலில் யாரே
ஒரு கல்யாணி, உமா இருப்பா
'என்னது இங்கே நின்னிட்டிருக்கே..
என்னைத் தெரியலை? மோகன். ஆ
வருஷத்துக்கு முன்னே உங்க பக்கத்
வீட்டிலே இருந்தேனே,' என்றவா

நட்புரிமை எடுத்துக்கொண்டு அவள் மூக்கைக் கிள்ளிக் கன்னத்தைத் தட்டி விட்டு, 'டாடா! அம்மாவை ரொம்ப விசாரிச்சதாக்ச் சொல்லு...' என்று சொல்லிவிட்டுப் போய்விடுவது. அந்தப் பெண் எப்படி மண்டையை உடைத்துக் கொள்ளுவாள் என்பதை நினைத்து விழுந்து விழுந்து சிரித்து மகிழலாம்! எச்சரிக்கை: நண்பர் சோவுக்கு ஏற்பட்ட கதியும் ஏற்படலாம்.

கிட்டத்தட்ட இன்டர்வெல் சமயத்தில்தான் சுஜாதா வருகிறார். சும்மா வரவில்லை. நடிப்பு வெள்ளமாக வருகிறார். இதற்கு முன்னால் தமிழ்த் திரையில் ஒரு பெண் இவ்வளவு தூரம் பாத்திரத்தோடு பாத்திரமாய் ஒன்றி நடித்ததுண்டா என்று மூக்கில் விரல் வைக்கும்படி செய்துவிடுகிறார்.

நோயாளிப் பெண்ணாக அவர் அவஸ்தைப்படும்போது நாமும் அவஸ்தைப்படுகிறோம். அவர் ரேடியோ அருகில் சென்று துவண்டு விழுந்து படுக்கைக்குத் திரும்பிவர முடியாமல் தவிக்கும்போது அவரைத் தூக்கிப் படுக்கையில் கிடத்த வேண்டுமென்று நம் கைகள் துடிக்கின்றன. முத்துராமனோடு செஸ் ஆடவேண்டும் என்று அவர் சொல்லும்போது, வாழ்க்கையில் அவருக்கு ஒரு பிடிப்பு ஏற்படுவதை உணர்கிறோம். 'வரமாட்டீங்களா?' என்று அவர் சிணுங்கும் முறை, அந்தக் குரல், அந்தப் பார்வை—அவருக்கு எவ்வளவு ஆர்வம் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. முதலில் படிகளில் இறங்க முடியாமல் இறங்குகிறார், பிறகு கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு இறங்குகிறார், அப்புறம் ஓடி வருகிறார். படிப்படியாக முன்னேற்றம் தெரிகிறது. ஒவ்வொரு படியும் நமக்குத் தெரிகிறது. ஏதோ கதாசிரியருடைய கற்பனையாக இல்லாமல் கண் முன்னால் தத்ரூபமாக, சந்தேகத்துக்கிடமின்றித் தெரிகிறது. இறந்து போய்விடப் போகிறோம், சீக்கிரம் இறந்து தொலைக்க மாட்டோமா என்றிருந்த பெண்ணிடம் ஏற்பட்டிருக்கும் மாறுதலை—புரட்சிகரமான மாறுதலை - உணர்கிறோம்.

'ஆறு மாதத்துக்கு மேல் இந்தக் கேஸ் நீடிக்காது' என்று பெரிய டாக்டர் சொன்னதன் அடிப்படையில், கண்டிப்பாக ஜெயிக்கும் என்று மனப்பூர்வமாகச் சந்தேகத்துக்கிடமின்றித் தெரியும் குதிரையில் ஒருவன் சொத்தையெல்லாம் விற்றுக் கட்டுவதுபோல், பத்மப்ரியா சூதாட்டத்தில் இறங்குவதும், முத்துராமன் சுஜாதாவை மணக்கச் சம்மதம் தருவதும், கடைசியில் அனைத்தையும் இழப்பதும், கதைக்கு ஒரு புதிய பரிமாணத்தைத் தருகின்றன.

வீட்டுக் கார்த்திகை தீப அலங்காரத்தைப் பார்ப்பதற்காக பத்மப்ரியா, சுஜாதாவை அணைத்தபடி மெள்ள அழைத்துவந்து காட்டுவதும், அவர் தன் உடல் வேதனைக்கிடையே அதை ரசித்துப் பத்மப்ரியாவைப் பாராட்டி விட்டு 'நாளெல்லாம்இதைப் பார்க்கணுமென்று ஆசையாத்தான் இருக்கு. என்னாலே நிற்க முடியலையே. கால் வலிக்குதே,' என்று சொல்வது நல்ல உருக்கம்தான்.


பூர்ணமாக உடம்பு தேவலையாகியும் கணவனோடு உறவு கொள்ள முடியவில்லையே என்று அவர் படுகிற ஏக்கமும், டாக்டரம்மாவை மாடிப் படியில் வழி அனுப்பும் போது, நாணத்துடன், 'நான் நல்லாக் குணமாகிவிட்டேன் என்று அவர்கிட்டே நீங்க ஒரு வார்த்தை சொல்லிடுங்க டாக்டர்' என்பதும்...

அற்புதமான டைரக்ஷன்! திறமையான காமிரா வேலை.

சிவகுமார் இரண்டாவது கதாநாயகன்தான் என்றாலும் இதமாகச் செய்திருக்கிறார்.

நினைவில் கொள்ள ஒரு படம்.




ஒரு மாதம் லீவில் போய் வருவதற்குள் ஆபீசே மாறி விட்டதே என்று பார்க்கிறீர்களா சார்?
நம்ம ஆபீசேதான். இதுக்குமேலே கேட்காதீங்க. வெட்டிப் பேச்சுப் பேசிட்டிருந்தேண்ணு எனக்கு ரிமார்க் வந்திடும்.
மத்திய அரசு ஊழியர்

நாமக்கல்லிலே பன்னிரண்டு நாள்

இருபத்தெட்டு வயதாகியும் வரதன் ஒரு 'கால்கட்டு' இல்லாமல் தடிப் பிரம்மசாரியாக நின்றிருந்த போதும், அரையும் குறையுமாக அவனைப் பற்றியும் அவன் ஆபீசிலுள்ள ஒரு கொங்கணிப் பெண்ணைப் பற்றியும் சம்பந்தப்படுத்தி ரங்கநாயகி காதில் சில விஷயங்கள் விழுந்த போதும் அவள் பட்ட கவலையை யார் அறிவார்கள்? அப்போது அவள் தங்கள் குல தெய்வமான நாமக்கல் நாமகிரித் தாயாரை வேண்டிக் கொண்டாள். "தாயே, நல்லபடியாக எங்கள் வரதனுக்கு ஒரு நல்ல இடத்தில் சீக்கிரமே கல்யாணம் ஆகட்டும். அவனையும் அவன் மனைவியையும் உன் சந்நிதிக்கு வந்து பன்னிரண்டு நாள் சேவை செய்ய வைக்கிறேன். கண் திறந்து பார் தாயே நாமகிரி!"

அவள் பிரார்த்தனை சீக்கிரமே பலித்து விட்டது. மைதிலி வரதராஜனின் மனைவியாக வந்தாள். ஸ்ரீரங்கத்துப் பெண். நல்ல அழகி.

"நீ என்னம்மா, என்னைக் கன்ஸல்ட் செய்யாமல் வேண்டிக் கொண்டுவிட்டு இப்போ வந்து தொண தொணக்கறே. ஒரு நாளா ரெண்டு நாளா? பன்னிரண்டு நாள். எப்படி முடியும்? இப்போ ஒண்ணும் நடக்காது. எனக்கு லீவு கிடைக்காது," என்றான் வரதன்.

"எப்ப கேட்டாலும் இப்படியே சொன்னா எப்படிடா?"

"சரி பார்க்கலாம். நாளைக்கு மானேஜரைக் கேட்டுப் பார்க்கிறேன். எப்படியும் கல்யாணமான பிறகு ஹனிமூனுக்குக் கூடப் போகவில்லை. இந்தச் சாக்கை வைத்துக் கொண்டு இப்போது ஒரு பதினைந்து நாள் போய்விட்டு வந்தால் போச்சு," என்றான் வரதன், ஓரக் கண்ணால் மைதிலியைப் பார்த்துப் புன்னகைத்தபடி.

"சீ, வாயை அலம்பு, ஹனிமூன் போறானாம் ஹனிமூன். அப்படியெல்லாம் போய் ஜாலியா இருந்துவிட்டு வர்றதில்லேடா இது."

"என்ன பண்ணணும்கறே பன்னிரண்டு நாளும்?"

"ஒண்ணுமில்லே. தினமும் காலையிலே நரசிம்மதீர்த்தத்துலே குளிச்சுட்டு ஈரத் துணியோடு ஆஞ்சநேயர், கொடிக் கம்பம், நரசிம்மர், தாயார் என்று ஒவ்வொரு பிராகாரத்திலும் பன்னிரண்டு பிரதட்சிணம், நமஸ்காரம் செய்யணும். ஒவ்வொரு பிராகாரத்திலும் அர்ச்சனை செய்யணும். உச்சி கால பூஜை நடக்கும்போது சந்நிதியில் இருக்கணும். ஆரத்தி கொடுத்த பிறகு மூஞ்சியிலே தீர்த்தம் தெளிப்பார்கள். பிறகு பலி சாதம்னு சொல்லி, சின்னதா ஒரு உருண்டை சாதம் கொடுப்பார்கள். அதைச் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்கு வந்து பிறகு தான் சாப்பிடணும். கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கொண்டு சாயங்காலம் மறுபடியும் அதே மாதிரி குளத்தில் குளிச்சிட்டுப் பிரதட்சிணம், நமஸ்காரம், அர்ச்சனை எல்லாம் செய்துவிட்டு வீட்டுக்கு வரணும். ராத்திரி சாப்பிடக் கூடாது. ரொம்பப் பசிக்கிறுப்பலே இருந்தால் பலகாரம் செய்யலாம். பன்னிரண்டு நாளும் இப்படி இருந்ததுக்கப்புறம் பதிமூணாவது நாள் ஸ்வாமிக்கும் தாயாருக்கும் அபிஷேகம் செய்து அர்ச்சனை செய்தால் சேவை முடிஞ்சுது," என்று ரங்கநாயகி விவரித்தாள்.

"அடேயப்பா! தபசுதான் போலிருக்கு," என்றான் வரதன்.

நாமக்கல் வந்து சேர்ந்த அன்றைக்கே மூவரும் மாலை கோவிலுக்குள் போனார்கள்.

ஹேமா ஆனந்ததீர்த்தன்

தாயார் சந்நிதி அர்ச்சகர் எல்லாம் விவரமாகச் சொன்னார். ரங்க நாயகி சொன்னபடியே தான் எல்லாம். ஒன்றை மட்டும் அவள் சொல்ல விட்டு விட்டிருந்தாள். அதை அர்ச்சகர் சொன்னார். "படுக்கையில் படுக்கக் கூடாது. பாய்கூட வேண்டாம். புடவையோ, துண்டோ தரையில் விரிச்சு அதன்மேல்தான் படுக்கணும். தலைக்கு ஏதாவது உசரக் கட்டையோ புஸ்தகமோ வெச்சுக்குங்க," என்றார். "அப்புறம் தம்பதிகள் சேர்ந்து படுக்கப்படாது. தனித்தனியாகப் படுக்கணும். பெண்கள் ரெண்டு பேரும் ரூம்லெ படுத்துக்கட்டும். நீங்க வாசத் திண்ணையிலே படுத்துக்குங்கோ. கண்ட்ரோல் யுவர்செல்ஃப் ஃபர் ட்வெல்வ் டேஸ்," என்று வரதராஜனைப் பார்த்துக் கூறித் தமது தெற்றுப் பற்கள் தெரியப் புன்னகைத்தார். புன்னகை அவர் சொன்ன விஷயத்திற்காகவும் இருக்கலாம். இங்கிலீஷ் பேசியதற்காகவும் இருக்கலாம். வரதனும் அசடு வழியச் சிரித்தபடி விடை பெற்றுக் கொண்டான்.

"குளத்தில் இறங்கிக் குளிப்பியா? குளிருமே?" என்று வரதன் மைதிலியைக் கேட்டான்.

அவர்கள் இருவரும் வாசல் திண்ணையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ரங்கநாயகி உள்ளே வீட்டுக்கார அம்மாளுடன் அரட்டையடித்துக் கொண்டிருந்தாள்.

"எனக்குக் காவேரியில் குளிச்சுப் பழக்கம். உங்களுக்குத்தான் ஆறு, குளம் பழக்கம் கிடையாது."

"பார்க்கலாம், நாளையிலேர்ந்துதானே சேவை ஆரம்பிக்கப் போகிறோம்? இன்னிக்கு நானும் ரூம்லேயே உன்னோடு படுத்துக்கலாம் இல்லையா?" என்று வரதன் விஷயத்திற்கு வந்தான். ரங்கநாயகி வருவதற்குள் இந்த விஷயத்தை முடிவு பண்ணிவிட வேண்டுமென்று அவனுக்கு ஆத்திரம்.

மைதிலி சிரித்தாள்.

"என்ன சிரிக்கிறே? நான் சீரியஸ்ஸா கேட்கறேன்," என்று முகத்தைச் சுளித்தான்.

"எனக்குத் தெரியாதம்மா. அம்மாவைக் கேட்கலாம்."

"அம்மாவையும் கேட்க வேணும் ஒருத்தரையும் கேட்க வேணும். நாளையிலேந்து தான் நியமம்."

"உங்களைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கு. இப்படியும் கூடவா மனசு அலைய விடுவார்கள் கட்டுப்பாடு இல்லாம்?" என்று மைதிலி மறுபடியும் சிரித்தாள்.

"போறும் வாயை மூடு. கன்னத்துலே ஒண்ணு வெச்சேன்னா தெரியுமா சேதி. ரொம்பத்தான் மனசைக் கட்டுப்படுத்தத் தெரிஞ்சவ. உன் வண்டவாளத்தை எங்கிட்டேயே காட்டறியா?" என்று வரதன் கூறிக் கொண்டிருந்த போதே ரங்கநாயகி அங்கே வந்து விட்டாள்.

"என்ன வாக்குவாதம் ரெண்டு பேருக்கும், வாசலில் உட்கார்ந்துகொண்டு?"

"ஒண்ணுமில்லே அம்மா. என்னாலே எல்லா சந்நிதியிலேயும் பன்னிரண்டு பிரதட்சிணம் நமஸ்காரம் பண்ண முடியாதுன்னார். முடியும்,



எனக்கு சக்தி இல்லாட்டாலும் தாயார் சக்தி கொடுப்பாள்னு சொல்லிக் கொண்டிருந்தேன்,'' என்று சமயோசிதமாகப் புளுகினுள் மைதிலி.

பெண்களுக்கே ஆண்களைவிட இது விஷயத்தில் சாதுரியம் அதிகம் என்று நினைத்துக் கொண்டான் வரதராஜன். அதை மறுபடியும் நிரூபித்தாள் மைதிலி. அடுத்த கணமே,

''அம்மா, இன்னிக்கி ராத்திரி எங்க ரெண்டு பேருக்கும் சாப்பாடா, பலகாரமா? சேவை நாளையிலிருந்துதானே?''

''பலகாரம்தான். எனக்கும் சேர்த்து மூணு பேருக்குமே ஒரு உப்புமா கிளறிடறேன். நாளைக்குச் சேவை ஆரம்பிக்கிறதுன்னு இன்னி ராத்திரியிலேந்தே நியமம் ஆரம்பிச்சுடணும்.''

அன்று இரவு வரதன் வாசல் திண்ணையில் துண்டை விரித்துப் படுத்தான். பகலெல்லாம் வெய்யில் பட்டுச் சூடேறியிருந்த சிமெண்ட் திண்ணையில் சூடு இறங்கியிருக்கவில்லை. அந்த வெப்பமும், தனிமையினுல் உடலில் கிளம்பிய வெப்பமும் துன்புறுத்தத் தூக்கமில்லாமல் புரண்டு



புரண்டு படுத்தான்.

மறுநாள் காலை இருவரும் குளத்திற்குக் குளிக்கப் போனுர்கள். வேறு யாரும் இருக்கவில்லை. அவர்கள் இரண்டு பேர் மட்டும் தான். இருவரும் அருகருகே குளத்தில் இறங்கினர்.

''பாசி வழுக்கும். ஜாக்கிரதை!'' என்றுன் வரதன் — மைதிலி புடவையை அவிழ்த்து ஒரு மடிப்பாக உடுத்திக் கொள்வதை ஓரக்கண்ணுல் ஆர்வத்தோடு பார்த்துக்கொண்டு.

''ஆமாம். பன்னிரண்டு நாளும் வழுக்கி விடாமல் ஜாக்கிர

ஞாபக சக்தியை மறுபடியும் வளர்த்துக்கொள்ள சில எளிய வழிகளை Stenin Day எழுதியுள்ள "Memory Book" தருகிறது:

மூக்குக் கண்ணாடியை எங்கே வைத்தோம் என்று அடிக்கடி தேடுவதில் கால விரயம் ஏற்படுகிறதா? இனிமேல் உஷாராயிருங்கள். சரி, படுக்கையில் ஓர் ஓரமாக வைக்கிறீர்கள். உடனே ஒரு நிமிடம் அக் கண்ணாடியை உற்றுப் பார்த்து இப்படி ஒரு கற்பனை செய்யுங்கள்: "பெரிய அளவில் உள்ள விளம்பர போஸ்டரில் இருப்பது போல, மூக்கு கண்ணாடி இந்தப் படுக்கையில் சயனித்திருக்கிறது!" போதும். கண்ணாடி ஞாபகம் வந்ததும், படுக்கையும் பெரிய விளம்பரக் கற்பனையும் மனதில் வந்து வைத்த இடத்தைச் சொல்லிவிடும்!



கதவைப் பூட்ட மறந்து விட்டோமா என்ற ஐயம் வெளியில் கிளம்பிக் கொஞ்ச தூரம் போனதும் கிளம்புகிறதா? சாவியால் பூட்டத் துவங்கியதும் ஒரு நிமிஷம் நில்லுங்கள். சாவியால் பூட்டாது, உங்கள் தலையாலேயே பூட்டுவதாக ஒரு வேடிக்கையான கற்பனை செய்து கொள்ளுங்கள். பூட்டிவிட்டுக் கிளம்புங்கள். சந்தேகம்

தையாக இருக்க வேண்டும்?" என்று கூறிச் சிரித்தாள் மைதிலி.

"பொடி வச்சுப் பேசறியா?" என்றான் வரதன்.

"ராத்திரி தூக்கம் வந்ததா?" என்று மற்றொரு கேள்வியைக் கேட்டாள் மைதிலி. குறும்பு அவள் உதடுகளில் நடனமாடியது.

"உனக்குக் கேலியா இருக்கு. வா வா, சேவை முடியட்டும். அப்புறம் பேசிக்கிறேன்," என்றான் வரதன்.

இருவரும் குளித்தார்கள். இருவருக்கும் அது புது அனுபவம். மைதிலியின் பொன்மேனியில் நீர்த்திவலைகள் முத்து முத்தாக உருண்டோடும் அழகு அவனுக்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

மைதிலியும் ஈரத்தோடு கூடிய கணவனின் பரந்த மார்பையும், உருண்டு திரண்ட தோள்களையும், குளித்துத் துவட்டிக் கொள்வதற்கு முன் உடலில் ரோமங்கள் படிந்து இருக்கும் அழகையும் பார்த்தும் பார்க்காமலும் கிளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்தாள்.

"குளிரவே இல்லை. உங்களுக்கு?"

"எனக்கும் தான்.. போகலாமா?"

இருவரும் ஒவ்வொரு சந்நிதியாகச் சென்று முறையாகப் பிரதட்சிணம், நமஸ்காரம் எல்லாம் செய்துவிட்டு வீடு திரும்பினார்கள். சாப்பிட்டுவிட்டு ஓய்வு எடுத்துக்கொண்டார்கள்.

மறுபடியும் மாலையில் அதே மாதிரி. கோவிலில் அதிகமாகக் கூட்டமே இல்லை. "முன்பெல்லாம் சேவை செய்யறவா நிறைய வருவா. இப்போ உங்களை மாதிரி யாராவது ஒண்ணு, ரெண்டு பேர்தான் வரா. பக்தர்களும் குறைஞ்சு போச்சு. காலம் கெட்டுப் போச்சு. தெய்வ பக்தி குறைஞ்சுடுத்து. என்னைப் போல அர்ச்சகாளுக்கெல்லாம் ஜீவனம் ரொம்பக் கஷ்டமாய்ப் போயிட்டுது," என்றார் அர்ச்சகர்.

"ஏழு நாள் ஓடிவிட்டது," என்றாள் மைதிலி, இருவரும் மண்டபத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது.

"இன்னும் நாலு நாள் பாக்கி," என்றான் வரதன்.

"நல்லா இருக்கு உங்க கணக்கு. பன்னிரண்டிலே ஏழு போனா நாலு நாளா? இன்னும் அஞ்சு நாள்."

"நான் ராத்திரி கணக்குச் சொல்றேன். இன்னும் நாலு ராத்திரிகள் ஓடினால் போதும். பன்னிரண்டாவது நாள் சேவை முடிஞ்சுடறது. அன்னிக்கு ராத்திரி நியமம் ஒண்ணும் வேண்டியதில்லை."

"எப்பப் பார்த்தாலும் இதையே நினைச்சுட்டிருங்கோ!" என்று சிரித்தாள் மைதிலி.

"உனக்கு இந்த நினைப்பே இல்லை என்று நெஞ்சிலே கையை வைச்சு சொல்லு," என்று அவள் நெஞ்சின் மீது தன் கையை வைக்கப் போனான் வரதன்.

"ஊம். இது கோயில். ஆக்கப் பொறுத்தாச்சு. ஆறப் பொறுக்கணும்," என்று மைதிலி அவன் கையைப் பற்றிப் பின்னுக்குத் தள்ளினாள்.



தலையிலிருந்து கிளம்பாது!

தபால்களை எழுதி வைத்து விட்டுப் பெட்டியில் போட மறந்து விடுகிறீர்களா? முகவரி எழுதும் போதே அல்ல, மடிப்புகளை ஒட்டும் போதே ஒரு கற்பனை. வீட்டை விட்டு வெளியேறும்போது, உங்களின் கவனத்தை ஈர்க்கவல்ல - கதவுப்பிடி, வாகனக் கைப்பிடி, பர்ஸின் முகப்பு போன்றவைகளின் மீது கவர் ஒன்று அமர்ந்து 'பிடிவாதம்' பிடிப்பதாக எண்ணுங்கள். அவ்வளவுதான். அன்று நிச்சயம் மறக்கமாட்டீர்கள்.

கற்பனைகள் எவ்வளவுக்கெவ்வளவு வேடிக்கையானதாகவும் நினைவூட்டப்பட வேண்டிய விஷயங்களுக்குத் தொடர்பு கொண்டதாகவும் இருக்கிறதோ, அவ்வளவுபலன்உண்டு. நாளடைவில் எண்ணங்களில் சிதறல்கள் தவிர்க்கப்பட்டு, கட்டுப்பட்ட நினைவுசக்தி வளரும்.

—எஸ். சேஷாத்திரி



பதினொரு நாள் சேவை முடிந்துவிட்டது. திண்ணையில் படுத்திருந்த வரதன் மறுநாள் இரவு மைதிலியுடன் கழிக்கப் போகும் சுகத்தை நினைத்து, நாட்களை எண்ணுவதை விட்டு மணிக்கணக்கில் புகுந்திருந்தான்.

திடீரென்று படபடவென்று மழைத் துளிகள் மேலே விழ ஆரம்பித்ததும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். விரித்துப் படுத்திருந்த வேட்டியையும் தலைக்கு வைத்துக் கொண்டிருந்த டிக்ஷனரியையும் எடுத்துக் கட்கத்தில் இடுக்கிக்கொண்டு கதவைத் தட்டினான்.

கதவைத் திறந்தார்கள். வரதன் அறைக்குள் நுழைந்து சுற்று முற்றும் பார்த்தான்.

''எப்படிப் படுத்துக்கறது? மழை நிற்காது போலிருக்கு. நின்னாலும் கூடத் திண்ணையெல்லாம் ஈரமாயிட்டது,'' என்றான்.

''இங்கேயே படுத்துட்டால் என்ன?'' என்ற மைதிலி மாமியாரியின் முகத்தை நோக்கினாள்.

''மூணு பேரும் இங்கே எப்படிப் படுத்துக்கறது?'' என்று ரங்கநாயகி தயங்கினாள். ''வீட்டுக்காரரை வேணா சின்ன ரூமைத் திறந்து விடச் சொல்லலாமா?''

''வேண்டாம், அம்மா. அவர்களை உபத்திரப்படுத்த வேண்டாம். மணி ஒண்ணாயிட்டுது. இன்னும் நாலு மணி நேரம். நீங்க அப்படி ஓரமா படுத்துக்குங்கோ. அவர் இப்படி இந்த ஓரமா படுத்துக்கட்டும், நான் நடுவிலே படுத்துக்கறேன். பரவாயில்லே,'' என்றாள்.

மூவரும் படுத்துக் கொண்டார்கள். மழை விடாமல் பெய்து கொண்டே இருந்தது.

ரங்கநாயகி சுவரைப் பார்த்தபடி படுத்திருந்தாள். மைதிலியின் இடுப்பை ஒரு கரம் அணைத்துக்கொண்டது. மைதிலி திடுக்கிட்டாள். கணவனின் கையை அகற்றியபடியே, ''வேண்டாமே. இன்னிக்கு ஒருநாள். ப்ளீஸ்,'' என்று முகத்தருகே வந்து கிசுகிசுத்தாள்.

''பரவாயில்லே, மைதிலி. கொஞ்ச நேரம். நான் சும்மா படுத்திருக்கேன்,'' என்று அவன் கெஞ்சுவது போலக் கேட்டான்.

''அப்படித்தான் சொல்லுவீர்கள். அப்புறம் அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக ஜாஸ்தியாயிடும்; உங்களாலே சும்மாயிருக்க முடியாது,'' என்றாள் மைதிலி.

அவள் வாய்தான் அப்படிச் சொல்லிற்றே ஒழிய, கைகள் அவன் தோள்களையும் கன்னங்களையும் வருடின.

தொண்டையைக் கனைத்தபடி ரங்கநாயகி இந்தப் பக்கம் திரும்பினாள். வரதன் உருண்டபடியே தன்னிருப்பிடத்திற்குச் சென்று படுத்துக் கொண்டான். அயர்ந்து தூங்குபவனைப்போல.

''இந்த மழை வந்துட்டுது சனியன். என் ஆஸ்துமாவுக்குக் கொண்டாட்டம்தான். இன்னிக்குத் தூக்கம் அவ்வளவுதான்,'' என்று கூறியபடியே ரங்கநாயகி படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

மைதிலி தூக்கத்திலிருந்து விழித்தெழுபவள் போல எழுந்திருந்து கவலைப்பட்டாள்.

ஒரு கிரிக்கெட் அதிசயம்

இப்போது இங்கிலாந்தில் ஆஸ்திரேலியாவுக்கும், இங்கிலாந்துக்கும் கிரிக்கெட் டெஸ்ட் மாட்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

இங்கிலாந்து கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டக்காரர்கள் அவ்வப்போது அந்த அந்த டெஸ்ட்டுக்கு ஏற்றபடி 'ஸெலெக்ட்' செய்யப்படுவார்கள். அவர்களில் 11 பேர்களை இங்கு தந்துள்ளேன். இதில் என்ன விசேஷம் என்றால் அந்தப் பெயர்கள் Batting order படிஉள்ளன. அதே சமயம் 'Alphabetical order'படியும் இருப்பது ஒரு வேடிக்கையில்லை?

Amiss
Boycott
Cowdrey
Denness
Edrich
Fletcher
Greig
Knott
Old
Snow
Underwood



—'மகரம்'

"நீ தூங்கு. நான் இனி விடிய விடிய இப்படியேதான் உக்கார்ந்திட்டிருப்பேன். இந்தச் சனியன் இப்போ போகாது," என்று மூச்சு இழுத்துக் கொண்டு பேசினாள் ரங்கநாயகி.

மூன்று பேருக்குமே தூக்கமில்லாமல் கழிந்தது அந்த இரவு.

மறுநாள். வரதனும் மைதிலியும் குளிப்பதற்காகக் குளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். கோவில் வெளிப் பிராகாரத்தில் அவர்கள் நடந்து கொண்டிருந்தபோது, மதில் சுவரின் மீது வரிசையாக ஏழெட்டுக் குரங்குகள் வந்து கொண்டிருந்தன.

"இவ்வளவு குரங்குகள் நாம் ஒருநாள் கூடப் பார்க்கலை இல்லையா?" என்றாள் மைதிலி கணவனிடம் அவைகளைச் சுட்டிக் காட்டி.

வரதன் அவைகளைப் பார்த்து, "உஷ்," என்று சீட்டியடித்தான்.

அடுத்த நிமிடம் ஒன்றன்பின் ஒன்றாக அந்தக் குரங்கள் சுவரிலிருந்து குதித்து அவர்கள் எதிரே வந்து வழியை மறைத்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டன.

"உஸ். போ," என்று வ தன் கையை ஓங்கினான்.

"குர்ர்ர்," என்று அ கள் கோரமாகப் பல்லைக் காட்டி கொண்டு உறுமின.

"ஐயோ, எனக்குப் பயம யிருக்கு. நீங்க ஏன் அதுங்களைப் பார்த் விசிலடிச்சீங்க?" என்று மைதிலி அ னோடு ஒட்டிக்கொண்டாள்.

"பயப்படாதே, போயிடும்," என்று அவளுக்கு ஆறுதல் சொல் விட்டு, "தே, போறயா இல்லையா?" என்று கீழேயிருந்த கல்லையெடுத் எறிவது போல் பாசாங்கு செய்தான்.

அடுத்த நிமிடம் ஒரு பெரி குரங்கு 'சங்' கென்று அவன் மீ பாய்ந்துவிட்டது. இன்னொரு குரங் மைதிலியின் புடவையைப் பிடித் இழுக்க ஆரம்பித்தது.

"ஐயோ, குரங்கு! குரங்கு!" என்று மைதிலி வீறிட்டாள்.

நல்ல வேளையாக அந்த வ யாக அப்பொழுது வந்து கொண் ருந்த கோவில் மடைப்பள்ளிக்கார ஒரு தடியைக் கொண்டு வந்து விரட் வும் குரங்குகள் ஓடிப்போய்விட்ட

மைதிலியின் நெஞ்சுப் படபடப்பு வெகுநேரம் அடங்கவே இல்லை.

அன்று மாலை மங்கள ஆரத்தியெல்லாம் முடிந்து, மறுநாள் அபிஷேகத்திற்கான ஏற்பாடுகளைப் பற்றி அர்ச்சகருடன் மண்டபத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள் மைதிலி, வரதன், ரங்கநாயகி மூன்று பேரும்.

பேச்சோடு பேச்சாக அர்ச்சகர் சொன்ன ஒரு விஷயம், ''ஒரு நாள் பாருங்கோ, சேலம் கலெக்டர் வந்திருக்கார். தாயாரைத் தரிசித்து ஒரு அர்ச்சனை பண்ணிடுங்கோன்னு தர்மகர்த்தா சொன்னர். அப்போ நான் குளிச்சிருக்கலே. தாயார் சந்நிதிக்குப் போகப்படாது. தர்மகர்த்தாவிடம் சொன்னேன். அஞ்சு நிமிஷத்திலெ குளிச்சிட்டு வந்துடறேன்னு சொன்னேன். அதெல்லாம் வேண்டாம்னுட்டார். கலெக்டருக்கு நேரமில்லையாம். ஈரோட்டுக்குப் போகணுமாம். சீக்கிரமாக ஆகட்டும், பரவாயில்லை என்ருர். சரின்னு அவர் சொன்ன படியே அப்படியே விழுப்போட மனசுக்குச் சமாதானமில்லாமலே அர்ச்சனையைப் பண்ணிக் கலெக்டரை அனுப்பிச்சுட்டு கர்ப்பக்கிரகத்தின் கதவை மூடப் போற சமயம் தரையிலே என்னமோ பளபளத்தது. தாயாரோட மூக்குத்தி மாதிரி இருந்தது. என்னடாது, மூக்குத்தி எப்படிக் கீழே விழுந்தது என்று அதை எடுக்கப் போனேன். தொட்டேனே இல்லியோ, கையிலே பொட்டுனு போட்டுட்டது, பெரிய செந்தேள்! தாயார் கை மேலே 'பனிஷ்மெண்ட்' கொடுத்துட்டா. மூணு நாள் விரலை அசைக்க முடியலே.''

'குரங்கு என் மேலே விழுந்து ஏன் மிரட்டியது என்று இப்போ புரியுது,' என்கிற அர்த்தத்திலே வரதன் மைதிலியைப் பார்த்து அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

'நல்ல வேளை, இவர் அம்மா இடைஞ்சல்னு நினைச்சோம். அவர் இல்லாம இருந்திருந்தா இன்னும் என்ன அபசாரம் பண்ணியிருப்போமோ. குரங்கு நம்மைக் கடித்துக் குதறியிருக்கும்,' என்று மைதிலி நினைத்துக்கொண்டாள்.

'ஆஸ்துமான்னு பொய் சொல்லி இவர்களை ராத்திரி பூரா நெருங்க விடாம கண்காணிச்சேனே, தப்பித்தார்களோ! இல்லாட்டா என்ன அசம்பாவிதம் நடந்திருக்குமோ,' என்று ரங்கநாயகி தனக்குள் சொல்லிக் கொண்டாள்.



''குழந்தைகள் என்ருல் எனக்குக் கொள்ளை ஆசை. கல்யாணம் இப்போதைக்கு நடப்பதாகத் தெரியவில்லை. அதனுல் கல்யாணம் இல்லாமலேயே ஒரு குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன்.''

—ஃபிலிம் ஃபேர் இதழில் ரேகா கூறியிருப்பது.

—'ஸரோ'

ஒரு வார்த்தை



சிவகுமார் 61

ஆர்ட்டிஸ்ட்—இ
துறைகளில்

—என்.ஆர். நா

சாரதா 62

ஊர்வசி ஆகியும் ஊர்க்குருவி

—கே. சாந்தாதேவி





வி.கே. ராமசாமி

திட்டுவதே தனி

—ஜி. ஆ



அசோகன் 56

கோமாளியா?
சித்திரமா?

—க. வ. கு



ஐ.எஸ்.ஆர்.

சாம்பாரில் கறிவே

—இ. ராஜாவின்



முத்துராமன் 63

..ரும்பியது கிடையாது—வெற்றுக்குடம் அல்ல

—கிங்ஸ்லி



ஜெயலலிதா 52

மயக்கம் என்ன, அதன் மர்மம் என்ன?

—ஆர்.கே. சேகர்



தங்கவேலு 49

ஓல்டு, கோல்டு தாங்க

—சி.என். அமிதாப் ஜான்



எஸ்.வி. சுப்பையா 57

சாது மிரண்டால்
காது கொள்ளாது

—எஸ். சீனிவாசன்



கன்னட மஞ்சுளா 58

புது வெள்ளம்
பெருகுமா?

—ஆர் அண்டு ஆர்



சச்சு 55

சினிமா 'டச்சு'
ரொம்ப இல்லை

—எம். பாலசந்திர பப்



ரேவதி 64

அவளுக்கென்று
..ர் படம்

—எஸ். சீனிவாசன்



பாலாஜி 54

இந்திக் கதை+ கலர்+
சிவாஜி = பாலாஜி

—அ. பாலகிருஷ்ணன்

மனோரமா 51

நகைச் சுவையில் மாதாஜி—நடி
கையிலே சிவாஜி!

—காரை சாயபு மரைக்காயர்



பேதங்கள்

விமலா ரமணி

அகிலா மும்முரமாகப் பரீட்சைப் பேப்பர்களைத் திருத்திக் கொண்டிருந்தாள். ஆயிற்று, இன்னும் கொஞ்சம்தான். தன் கைக் கடியாரத்தைப் பார்த்தாள். இரவு மணி பன்னிரண்டு. இன்னும் கண் விழித்துத் திருத்தினால் அது தன் உடம்புக்கு மட்டும் பாதிப்பல்ல, குறிப்பிட்ட மாணவிக்கும் அவ்வளவு நல்லதல்ல.

அகிலா மெல்லப் பேப்பர்களை ஒழுங்காக அடுக்கிவைத்துவிட்டு நிமிர்ந்தாள். வெகு நேரத்திற்கு முன் அவள் அம்மா கொண்டு வந்து வைத்துவிட்டுப் போன 'டீ' அப்படியே ஆறிக் கிடந்தது. 'என்னை மன்னித்து விடம்மா.' மானசீகமாகத் தாயிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்ட அவள் ஜன்னல் வழியே டீயை வெளியே கொட்டினாள்.

காலை கண் விழித்தபோது அவள் தாய் அறைகளைச் சுத்தம் செய்து கொண்டிருப்பது தெரிந்தது.

ரொம்ப நேரம் தூங்கி விட்டோமோ என்ற பரபரப்பில் எழுந்தாள் அவள்.

"அகிலா, எழுந்திரம்மா.. பள்ளிக்கூடத்திற்கு நேரமாகவில்லை? இந்தா, காப்பி.. இதையும் ஜன்னல் வழியாக வெளியே கொட்டி விடாதே."

ஒரு கணம் அகிலா செயலற்று நின்று விட்டாள்.

"பயப்படாதே அகிலா.. இப்படித்தான் சில காரியங்கள் நாம் ரொம்பக் கவனமாகச் செய்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருப்போம். அது மற்றவர்களுக்குச் சுலபமாகத் தெரிந்துவிடும்."

வெந்நீர் அறையிலிருந்து மெல்லியதாக அகிலா பாடுவது கேட்டது. அத்துடன் சோப்பின் நறுமணமும் கமழ்ந்து வந்தது. 'பைத்தியக்காரி! தான் ரொம்பச் சந்தோஷமாக இருப்பதைக் காட்ட வேண்டுமென்று இப்படிப் போலி நாடகமாடுகிறாள்!' தாயார் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

கடுகு தாளிக்கும்போது ஒரு மிளகாய் அடுப்பில் தவறி விழுந்து விட்டது போலிருக்கிறது.


ஒரே கமறல். தாய் நினைத்துக் கொண்டாள். 'இவளுக்கு எத்தனை முறை திருஷ்டி சுற்றிப் போட்டிருக்கிறேன். அப்போது கமறவில்லை. இப்போது இந்த மிளகாய் என்ன பாடு படுத்துகிறது!'

"என்னம்மா, ஒரே புகை... காரம்..." இருமியபடி வெந்நீர் அறையிலிருந்து வெளியே வந்தாள் அகிலா.

அடுப்பைச் சட்டென்று தணித்த தாய், "ஒன்றுமில்லை, இப்போது எல்லாம் சரியாகிவிடும்," என்றவள், "நேரமாச்சு, சாப்பிட வா," என்று கூறினாள்.

"இதோ ஒன் செகண்ட்," என்று சொன்ன அகிலா, டிரெஸ்ஸிங் ரூமுக்கு ஓடினாள். பாத் ரூம் டவல் ஒன்றினை மட்டும் தன் உடம்பில் சுற்றிக்கொண்டு அவள் ஓடியபோது அவளின் இளமையும், கால்களின் வாளிப்பும் அந்தத் தாயின் கவனத்தைக் கவர்ந்தன.

சிறு வயதில் நாட்டியம் கற்றுக் கொண்டவள் அகிலா. அது ஒரு 'எக்ஸர்ஸைஸ்' மாதிரி என்ற நினைவில் அவள் தாயும் அவளை அனுப்பி வைத்



தாள். அதன் பின் படிப்பில் கவனம் அதிகமாகவே அதை நிறுத்தும்படி ஆகிவிட்டது. ஆனாலும் அந்த உடல் கட்டு, நடனம் ஆடி ஆடிப் பழக்கப்பட்ட கால் தசைகளின் இறுக்கம், கால்களின் அமைப்பு..அந்தத் தாயால் ஒரு பெருமூச்சுத்தான் விட முடிந்தது.


''எத்தனை தடவை சொல்வது, சாப்பிட உட்காருமுன் சுவாமியை நமஸ்காரம் பண்ணிவிட்டு வா என்று?'' தாய் சற்றுக் கண்டிப்புடன் தான் சொன்னாள்.

''ஓ! பார்த்தாயா, நான் ஒரு பைத்தியம் அம்மா! நீ வைத்திருக்கிற ரசத்தின் வாசனை மூக்கைத் துளைத்தவுடன் சாப்பிட உட்கார்ந்துவிட்டேன்.'' சிரித்தபடியே எழுந்த அகிலா, சுவாமி அறைக்குள் நுழைந்தாள். தனக்கு சிரித்த தாய சாதத்தை எடுத்து ஆற்றி வைத்தாள்.

''இப்படி ஒவ்வொரு கா யத்தையும் நீதான் எனக்கு ஞாபக படுத்த வேண்டும்,'' என்றாள் அகிலா.

நெய் ஊற்றியபடியே தா சொன்னாள்: ''அதனால்தான் சொ கிறேன், சீக்கிரம் கல்யாணம் பண்ணி கொள் என்று.''

அகிலா ஒரு கணம் சட



டென்று சாதத்திலிருந்து தன் கைகளை எடுத்தாள்.

''என்னடி?''

''ரொம்பச் சூடு. சாதம்மா!'' கைகளை உதறியபடி அகிலா சொன்னாள்.

சிவந்த அந்த விரல்களையே பார்த்தாள் அவள் தாய். தானே சாதத்தைப் பிசைந்தபடி சொன்னாள். ''அகிலா, உனக்கு எந்தவிதக் குறையும் தெரியக்கூடாது என்பதற்காக உன்னை நான் என் தோளில் மட்டும் போட்டு வளர்க்கவில்லை. என் நெஞ்சிலும் போட்டு வளர்த்திருக்கிறேன். உன்னுள் தன்மான உணர்ச்சிகள் தேவைதான். உன் கால்களில் நீ நிற்கப் பழகிக் கொள்வது தேவைதான். ஆனால் இவைகள் நீ எப்போதாவது சங்கடங்களைச் சந்திக்கும் போது உன்னிடம் இருக்க வேண்டிய பொக்கிஷங்கள். ஆனால் இவைகளையே அடிக்கடி வெளியில் மற்றவர் கண்படும்படி காட்டி, 'என்னிடம் திறமை இருக்கிறது. நான் மற்றவர்களை லட்சியம் செய்யமாட்டேன்,' என்று நீ கூறிக்கொண்டே இருந்தால், அதுவே உன்னை மற்றவர்கள் அலட்சியப்படுத்த ஒரு காரணமாகிவிடும். உன் அப்பா உயிருடன் இருந்தபோது இப்படி ஒரு நிலைமை வருமென்று நான் எதிர்பார்க்கவில்லை. துணிச்சலுடன் இத்தனை பொறுப்புக்களையும் நிர்வகிக்க வேண்டிவரும் என்று நான் கருதவில்லை. ஆனால் அப்படிப்பட்ட ஒரு நிலை வந்தபோது நான் அழுது புலம்பவில்லை. அலட்சியமாகத் தோள்களில் பாரங்களைச் சுமந்து கொண்டேன்.'' அவள் சற்று நிறுத்தினாள்.

அகிலா சாப்பிட்டபடி கேட்டாள். ''இதையெல்லாம் நீ ஏன் இப்போது என்னிடம் சொல்கிறாய்?''

மோர் ஊற்றியபடி தாய் சொன்னாள்.

''இப்போதெல்லாம் நீ மணி வீட்டிற்கு முன் மாதிரி போவதில்லை போலிருக்கிறதே...''

சட்டென்று அகிலா தலை குனிந்தாள். மணிக்கும் அவளுக்கும் இருந்த நெருக்கமான உறவு, அவன் தாய்க்கும் இவள் தாய்க்கும் உள்ள அன்பு...

அவர்கள் எங்கோ சந்தித்தார்கள். எப்படியோ அன்பை வளர்த்துக் கொண்டார்கள். அவர்கள் அன்பு நன்கு வளர்ந்த ஒரு நிலையில்தான் ஒரு நாள் மணி சொன்னான்.

''அகிலா, நம் திருமணம் நடப்பதற்கு முன் நீ உன் வேலையை விட்டுவிட வேண்டும். தெரியுமா?'' இப்படித்தான் சாதாரணமான முறை

யில் அவர்கள் பேச்சு ஆரம்பமாயிற்று.

''ஏன்?'' கொஞ்சம் ரோஷமாகவே கேட்டாள் அகிலா.

''என் மனைவியை என்னால் சம்பாதித்துக் காப்பாற்ற முடியும். அவள் தயவில் நான் வாழ வேண்டிய அவசியம் இல்லை.''

அகிலாவுக்கு ஏனோ கோபம் பொத்துக்கொண்டு வந்தது. 'என் மனைவியை என்னால் காப்பாற்ற முடியும்,' என்ற அவன் ஆண்மையை அவள் பாராட்டினாலும், 'உன் தயவில் நான் வாழ வேண்டிய அவசியமில்லை,' என்று அவன் சூளுரைத்தது அவளை அலட்சியப்படுத்திய மாதிரி இருந்தது.


''மணி, நீங்களும் எல்லா ஆண்களைப்போல் சுயநலமாகத்தான் இருக்கிறீர்கள். உங்களிடம் சில பெருந்தன்மைகளை எதிர்பார்த்தது என் தவறுதான்.''

மணிக்குக் கோபம் வந்தது. ''உன்னை இவ்வளவு தூரம் பேச வைத்திருப்பது உன் உத்தியோகமும், உன் அம்மா உனக்கு அளித்த செல்லமும் தான். நீ என் மனைவியாக வாழ வேண்டும் என்றால் முதலில் உன் உத்தியோகத்தை விட்டுவிட வேண்டும். இல்லையென்றால் என்னை மறந்துவிட வேண்டும்.''

அவள் பதில் பேசவில்லை.

''மனைவியாக வாழ்வதா,

''எனக்குப் பத்துப் பைசா தந்தீர்களே சார்! எதற்கு?''



''தருமம்! நாளைக்காவது சட்டை கிழிசலைத் தைத்துக் கொண்டு ஆபீஸ் வாரும்.''

இல்லை டீச்சரா என்ற போராட்ட மாக்கும்?'' அவன் குரல் கிண்டலா ஒலித்தது.

''இல்லை; வியாபாரியா வாழ்ந்து கொண்டிருந்த ஒருவரை இ வரை மனிதராக நினைத்துவிட்டே என்ற வேதனை...''

''அகிலா, நீதான் என்னை தேடி வருவாய். நினைவிருக்கட்டும்.''

''அப்படியே தேடி வந்தா லும் டீச்சராகவே தான் வருவேன் அதுவும் நினைவிருக்கட்டும்.'' அவ வந்துவிட்டாள்.

அன்று அவனைப் பற்றி நினைவுகளை மறந்தவள்தான். பிற அவனைப் பார்க்க அவள் போகவில்லை

இதெல்லாம். . .இதெல்லா கூட அவள் தாய்க்குத் தெரிந்திரு குமோ?

அவளுக்குச் சாப்பிடப் பிடிக்க வில்லை. தட்டிலேயே கை கழுவிவிட் எழுந்துவிட்டாள். பிற்பகல் சா பாட்டு டிபன் பாக்ஸைத் தந்த தா சொன்னாள். ''எல்லாம் எனக்குத் தெ யும் அகிலா. உனக்கும் மணிக்கு இடையே நடந்த விவாதம். தன் மனை வேலைக்குப் போகக் கூடாது என் நினைக்க ஒரு கணவனுக்கு உரிமை யில்லையா என்ன? ஏன் அப்படி பார்க்கிறாய்? நான் ஆரம்பத்திலே சொன்னேனே. . . ரொம்பக் கவ மாக நாம் செய்யும் சில காரிய கள் நம்மைக் காட்டிக் கொடுத் விடும் என்று. ராத்திரி நீ டியை கொட்டியது பெரிதல்ல. இப்போ உன் வாழ்வையே கொட்டிக் கவிழ்க்க திட்டம் போட்டிருக்கிறாயே, அதுதா தப்பு.''

செருப்பை மாட்டிக்கொண் அகிலா சோர்வுடன் தன் தாயை பார்த்தாள். ''கல்யாணம் செய் கொண்டவர்கள் எல்லாம் என் வாழ்ந்து குப்பை கொட்டிவிட்டார்க என்னை வற்புறுத்தாதேம்மா..... கொஞ்சம் நிறுத்திச் சொன்னாள். ''நா உனக்குப் பாரமாகத் தெரிகிறே அம்மா?''

அவள் தாய் ஒரு கண வேதனையால் கண்களை மூடிக் கொ டாள். ''ஆமாம், பாரம்தான். வ துக்கு வந்த கன்னிப் பெண் வீட்டி கல்யாணமின்றி அர்த்தமற்ற பிடிவ



கம்யூட்டர்களுக்கும் ஸெக்ஸ் என்ருல் பிடிக்கும் போலிருக்கிறது. ப்ரூஸ் கீலிங் என்னும் 28 வயது இளைஞர், 'சன்டே பீப்பிள்' என்னும் பத்திரிகை நடத்திய 'கம்ப்யூட்டரின் கவர்ச்சிக் கன்னி' என்னும் போட்டியில் கலந்து கொண்டு இந்தப் படத்தை (கம்யூட்டரில் உருவாக்கிய படம்) அனுப்பி முதற் பரிசான 250 பவுனைத் தட்டிக்கொண்டு சென்ருராம்.

—எம். எஸ். செல்வராஜ்

தத்திற்காகக் காத்திருப்பது 'பாரம்' தான். கல்யாணம் ஆகி, கணவனின் அன்புச் சின்னத்தைத் தன் வயிற்றில் பாரமாகத் தாங்கிப் பிறந்த வீட்டிற்கு வர வேண்டிய பெண்ணை, கன்னி கழிக்காமல் வைத்திருப்பது பாரம் மட்டுமல்ல. பாவமும்கூட. போடி பைத்தியம், இன்னும் வாழ்வில் நீ சந்திக்க வேண்டிய திருப்பு முனைகள் எத்தனையோ. அதற்குள் இதுதான் வாழ்வு என்று முடிவு கட்டிவிடாதே. அர்த்தமற்ற பிடிவாதங்கள் வாழ்வாகிவிடாது. வறட்டுக் கொள்கைகள் வாழ்வாகிவிடாது. வாழ்வில் ஒருவர் மற்றவருக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் தெரியுமா?''

அகிலா மௌனமாகப் பள்ளிக்குக் கிளம்பினுள்.

அன்று அவளுக்குப் பள்ளியில் வேலையே ஓடவில்லை.

தலைவலி என்று கடைசி பிரீயட் 'பர்மிஷன்' கேட்டுக்கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டாள்.

வீடு பூட்டி இருந்தது.

இந்த அம்மா எங்கே போய் விட்டாள்?

எதிர்வீட்டு அம்மாள் வருவது தெரிந்தது.

''உன் அம்மா இந்த விலாசத்திற்கு உன்னை உடனே வந்து பார்க்கச் சொன்னுள்...''

அகிலா அந்த விலாசத்தைப் பார்த்தாள். அது ஓர் ஆஸ்பத்திரியின் விலாசம்.

அம்மாவுக்கு என்ன? அடிக்கடி நெஞ்சு வலி வரும். ஒரு வேளை நெஞ்சு வலி அதிகமாகி ....

ஆஸ்பத்திரியில் பயந்தபடியே நுழைந்தாள் அகிலா. அதோ... அதோ ..அந்த நெடிய வராந்தாவில் அவள் அம்மா காத்துக் கொண்டிருந்தாள்.

தன் தாய்க்கு ஒன்றுமில்லை என்று தெரிந்தவுடன் மனத்திற்குத் தென்பாக இருந்தது அவளுக்கு.

தாய் பேசவில்லை. எதிர் அறை ஒன்றைச் சுட்டிக் காட்டினுள்.

ஒன்றும் புரியாத குழப்பத்தில் அகிலா அந்த அறைக்குள் நுழைந்தாள். ஒரு நர்ஸ் எச்சரித்துக் கொண்

டிருந்தாள். ''பேஷண்டைத் தொந்தரவு பண்ணுதீங்க. இப்பத்தான் நினைவு திரும்பி இருக்கு. ஆளுக்கு ரெண்டு நிமிஷம் பார்த்துட்டு வெளியே வந் திடுங்க...''

திகைத்தபடி அகிலா அந்த 'பேஷண்டை'ப் பார்த்தாள். வெண்மை யான அந்தக் கட்டிலில் உடல் முழு வதும் கட்டுக்களுடன் படுத்திருப்பது..?

மணி. ஆமாம், மணியே தான்!

அதற்குள் அவள் வந்த விவ ரத்தை அவனிடம் யாரோ சொல்லி விட்டார்கள். அவள் எந்தப் பக்கம் வருகிறுள் என்பது கூடத் தெரியாமல் ஏதோ ஒரு திசையைப் பார்த்தபடியே அவன் பேசினுன்.

''வா அகிலா, பாக்டரியை சூபர்வைஸ் பண்ணும்போது திடீ ரென்று ஏற்பட்ட ஒரு விபத்து.. கை யின் விரல்கள் போய்விட்டன..... இதோ இந்த பாண்டேஜில் மூளியான கை தான் இருக்கிறது. கண் பார்வை யும் வருமோ, இல்லே வராதோ தெரிய வில்லே. பரவாயில்லே... நிறைய நஷ்ட ஈடு தருவார்கள். ஆனுல் அகிலா, என் வாழ்வின் நஷ்டத்தை யார் செப்பனிடப் போகிறுர்கள்? என் மனைவியை நான் சம்பாதித்துக் காப்பாற்றுவதாகச் சொன்னேன். இப்போது என்னையே யாராவது காப்பாற்ற வேண்டும் போலிருக்கிறதே!''

அவள் திகைத்து நின்றுள்.

'அகிலா, நீ ஜெயித்துவிட் டாய்! நீ விரும்பியது..நீ வேலைக்குப் போக வேண்டும். இனி மணி உன்னைத் தடுக்கமாட்டான். அவன் இப்போது உன் நிழலில்.. நீ வழி காட்டினுல்தான் அவனுல் நடக்கவே முடியும்! இதுதானே நீ விரும்பிய சுதந்திரமான வாழ்வு? கிடைத்துவிட்டதல்லவா?' அவள் உள் மனம் கேலி செய்தது.

என் 'சிஷ்யனை' நானே பார்த்ததில்லை



திரு. கி.வா.ஜ. தன் நண் பர்களிடம் இப்போது அடிக்கடி சொல் லும் விஷயம் இதுதான்:

''என்னுடைய சிஷ்யன் என்று சொல்லிக்கொண்டு, 35 வய துள்ள மனிதர் ஒருவர் பல ஊர்களில் கைச் செலவுக்குப் பணம், மோதிரம் எல்லாம் வாங்கிக் கொண்டு ஏமாற்றி விட்டுப் போய் விடுகிறுர். சுப்பிரமணி யன், தியாகராஜன், ஸ்ரீநிவாஸன் என்று ஒவ்வொரு இடத்திற்கும் பெயரை மாற்றி வைத்துக் கொள்கிறுராம்.''

''அதெப்படி? உங்கள் சிஷ் யர் என்றுல் அதற்கு ஏற்ற தகுதி வேண்டாமா? மற்றவர்கள் சுலபமாக நம்ப முடியுமா?'' என்று கேட்டேன்.

''அதுதான் பெரிய அதிச யம். அவர் நன்றுகத் தமிழ் படித்திருக் கிறுர். சில இடங்களில் 10 நாட்களுக்கு மேல் கதாகாலட்சேபம் செய்திருக்கிறுர். ஊருக்குக் கிளம்பும் போதுதான் எதை யாவது சொல்லி வசூல் பண்ணிக் கொண்டு போய் விடுவாராம். அவர் பிரசங்கம் பண்ணுகிற அழகும், நடந்து கொள்ளுகிற விதமும் கொஞ்சம்கூடச் சந்தேகம் படும்படியாக இல்லை என் கிறுர்கள் ஏமாந்தவர்கள். அத்தகைய அபூர்வமான சிஷ்யனை இன்னமும் ஒரு முறை கூட நான் நேரில் பார்த்தது கிடையாது,'' என்று அங்கலாய்த்துக் கொள்கிறுர் திரு. கி.வா.ஜ.

—என். பி.

100 பேர்களைக் கொண்ட
...தப்பில் 68 ஆங்கில ஆசிரியர்
...5 கணக்கு ஆசிரியர்கள், 51
...ன ஆசிரியைகள் இருக்கிறார்கள்.
...ளில் 13 பேர் ஆங்கிலம்,
...த இரண்டும் போதிப்பவர்கள்.
...பர்கள் கணக்கு, சயன்ஸ் சொல்லிக்
...டுக்கிறவர்கள். 17 பேர்கள்
...ஸ், இங்கிலிஷ். 8 பேர்கள் இந்த
...று பாடங்களுமே சொல்லித்
...கிறார்கள். 'வென் டயாகிரம்'
...ாட்டுப் பார்த்தால் விடை சரியாக
...மாட்டேன் என்கிறதே?

இதற்கு உடனடியாகப் பதில்
...சால்ல முடியாது. திரு. நடராஜன்
...வென் டயாகிராம்' போட்டுப் பார்த்து
...பால் மூலம் சரியான விடையை
அனுப்பி வைத்தார்.

டெலிபோனில் கேட்கப்படும் சந்தேகங்களை எல்லாம் ஒரு ரிஜிஸ்தரில் குறித்து வைத்துக்கொண்டு 48 மணி நேரத்திற்குள் பதிலைத் தபால் மூலமோ போனிலோ தெரிவிக்கிறார்கள். தினசரி 20 டெலிபோன் 'கால்'கள் இப்போது வருகின்றன. தபாலில் 70 கேள்விகள் வருகின்றன.

88742 எண்ணுக்குச் சந்தேகம் கேட்பவர்களெல்லாம் ஆசிரியர்களாகத் தான் இருப்பார்கள் என்பதில்லை. அல்லது பாட சம்பந்தமாகத் தான் இருக்கும் என்பதுமில்லை.

''என் பேரனுக்கு இந்தக் கணக்கு ஒன்றுமே புரியவில்லை.



தி. நகர் இராமகிருஷ்ண உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. வி. எம். மந்திரம், உதவித் தலைமையாசிரியர் திரு. பி. எஸ். கிருஷ்ணசாமி, ஆசிரியர்கள் கே. சேதுராமன், டி. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் போனில் கேட்கிறார்கள்.

ட்யூஷனுக்கு நீங்கள் ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா?' என்று ஒரு பெண்மணி கேட்டார்!

மூர் மார்க்கெட்டில் குருவி வாங்கிய ஒருவர் சத்தம் போட்டார்: ''நான் ஒரு குருவி வாங்கினேன். விற்கிறபோது அதன் காலில் கற்பூரத்தை வைத்து ஒரு தொட்டி தண்ணீரில் மிதக்க விட்டார் வியாபாரி. குருவி தண்ணீரில் மூழ்கவில்லை. அதை விலைக்கு வாங்கி வீட்டுக்கு எடுத்து வந்தவுடன் அதே மாதிரி செய்து பார்த்தால் தண்ணீரில் மூழ்குது ஏன்?''

திருவல்லிக்கேணி பெண்கள் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியை திருமதி டி. என். ராதா, விஞ்ஞான ஆசிரியை குமாரி பத்மஜா, கணித ஆசிரியை திருமதி வி. சியாமளா ஆகியோர் 88742'க்குப் போன் செய்து சந்தேகம் கேட்கிறார்கள்.



பேட்டி: என். பி

க்
த்
ங்
10
ங்கு
ர்வி
ல்லி
ண்டு
டதா
குமாரி
சிரியை

அறுபது வயதாகிறது

யாரிடமும் சொல்லாதே

(இரவு மணி எட்டு. மாதுர்பூதம் சாப்பிட்டுவிட்டு ஈஸிசேரில் அமர்ந்திருக்கிறார். அவர் மனைவி சரஸ்வதி வெற்றிலைத் தட்டுடன் வந்து எதிரில் அமர்கிறார்.)

சரஸ்வதி (வெற்றிலை மடித்துக் கொடுத்துக்கொண்டே) : ஏன்னா, அடுத்த வெள்ளிக்கிழமை உங்கள் நட்சத்திரம் வருகிறதே. அன்னிக்கு அறுபது வயசு பூர்த்தியாகிறது உங்களுக்கு.

மாதுர்பூதம்: அதற்கென்ன, கோவிலுக்குப் போய் சுவாமிக்கு ஒரு அர்ச்சனை பண்ணிக்கொண்டு வந்துவிடு.

சர: அர்ச்சனைதான் பண்ணப் போகிறேனே. அது போதுமா? சாந்தி ஹோமம் பண்ணி அறுபதாம் கல்யாணம் பண்ணிக் கொண்டால் வீட்டுக்கு நல்லது. ஒரு பீடை பரிகாரம் என்று சொல்வார்கள். உங்களுக்கு என்ன குறைச்சல்? கை நிறையச் சம்பாதிக்கிறீர்கள். குழந்தைகள் எல்லாருக்கும் கல்யாணமும் பண்ணி வைத்தாகிவிட்டது. நீங்கள் சரி என்று ஒரு வார்த்தை சொன்னால் அத்தனை பேரும் ஓடிவந்து ஏற்பாடு பண்ணிவிடுவார்கள்.

மாது (துள்ளி எழுந்து): ஏண்டி, எவ்வளவு தடவை உனக்குச் சொல்கிறது? நான் மாட்டேன் என்றால் மாட்டேன்தான். ஆபீஸ் ரெகார்ட்படி எனக்கு இன்னும் சர்வீஸ் முடியவில்லை. 'என்னய்யா, அறுபதாம் கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டீர்; இன்னும் வேலையில் இருக்கிறீரே,' என்று கேட்கமாட்டானா? அதிலேயும் எங்க ஆபீஸ் அக்கௌண்டண்ட் ராமாமிர்தம் இங்கே நம் வீட்டுக்குப் பக்கத்திலேயே வீடு வாங்கிக் கொண்டு வந்து விட்டானாம். அவன் ஒருத்தனுக்குத் தெரிந்தால் போதுமே, ஆபீஸ் பூரா டமாரம் அடித்துவிடுவானே?

சர: போதும். உங்கள் ஆபீஸூம், நீங்களும். என் ஃப்ரெண்டு ஜெயத்தின் வீட்டுக்காரர் அறுபதாம் கல்யாணம் பண்ணிக் கொண்டாரே, எப்படியெல்லாம் நடத்தினார்? காசி யாத்திரை பண்ணி, மாலை மாற்றி, ஊஞ்சல் போட்டு, நலங்கு விளையாடி, சாயந்தரம் ரிஸப்ஷன்கூட வைத்து ஜமாய்த்துவிட்டார்கள். குழந்தைகள் எல்லாரும் கல்யாணமான மறுநாளே அம்மாவையும் அப்பாவையும் ஹனிமூனுக்குப் பெங்களூர் அனுப்பினார்களே!

மாது: போடி அசடே, உனக்கு இப்போ ஹனிமூன் போக பால்யம் திரும்பி இருக்கிறதா? விலைவாசி இருக்கிற இருப்பிலே ஒரு தடவை கல்யாணம் பண்ணவே முழி பிதுங்குகிறது. இதிலே அறுபதாம் கல்யாணமாம்!

சர: உம். நான் சொல்லி நீங்க என்றைக்குச் செய்திருக்கிறீர்கள்?

(கோபமாக உள்ளே போகிறாள். மாதுர்பூதம் வெற்றிலை போடுகிறார்.)



'சுப்பு'

2

(வெள்ளிக்கிழமை காலை சரஸ்வதி, துர்க்கையம்மன் சன்னிதியில் நிற்கிருள்.)

சர: அயகிரி நந்தினி நந்தித மேதினி...

(ராஜம் வருகிருள்— சரஸ்வதியின் பழைய சினேகிதி.)

ரா: யாரு, சரஸ்வதியா? எவ்வளவு நாளாச்சுடி உன்னைப் பார்த்து. சௌக்கியமா? நீ எங்கே இருக்கிருய் இப்போது?

சர: யாரு, ராஜமா? அப்பாடி. வருஷக் கணக்காச்சு உன்னைப் பார்த்து. நான் இங்கேதான் கோவில் பக்கத்திலேயே இருக்கிறேன். நீ?

ரா: நானும் இங்கே பக்கத்திலே ஒரு மாசம் முந்திதான் வீடு வாங்கிக் கொண்டு வந்தேன். வீட்டுக்கு வாயேன்.

சர: வரேன். வீடு எங்கே?

ரா: இங்கேதான். பாரதீய வித்யா பவன் இருக்கிறதில்லையா? அதன் எதிரில்தான்.

சர: சரி, அந்த வழியாகத் தானே நானும் வீட்டுக்குப் போகணும்?

ரா: இன்றைக்கு வெள்ளிக் கிழமையாச்சே, அர்ச்சனை பண்ணினுயா?

சர: என் அகத்துக்காரருக்கு இன்றைக்கு அறுபது வயசாகிறது.



ஜன்ம நட்சத்திரம் இன்றைக்கு. அதற்குத்தான் அம்பாளுக்கு அர்ச்சனை பண்ணலாம் என்று வந்தேன். ஒரே கூட்டம். அவர் தரிசனம் பண்ணி விட்டு முன்னாடி போய்விட்டார். ஆபீஸுக்கு லேட்டாகிவிடுமல்லவா? நான் அர்ச்சனையை முடித்துக்கொண்டு பிரதட்சிணம் பண்ணிக் கொண்டிருந்தேன். சரி, போகலாம் வா.

ரா (நடந்துகொண்டே): ஏண்டி, அறுபதாம் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லையா?

சர (சலிப்புடன்): ஒன்றும் இல்லை போ. அவருக்கு இஷ்டமில்லை.

ரா: இதுதான் வீடு. இப்போதுதான் வாங்கினோம். (வீட்டைச் சுற்றிக் காண்பிக்கிறாள்.)

சர: சின்னதாய் இருந்தாலும் வசதியாய் இருக்கிறது. ஒரே மாதிரி சாமான்களை அழகாகப் பாட்டிலில் போட்டு அடுக்கி வைத்திருக்கிறாய். ஓ, இத்தனை பாட்டில் ஏது?

ரா: டானிக் பாட்டில். அதை ஏன் கேட்கிறாய்? பிடிக்கிறதோ இல்லையோ, தவறாமல் டானிக் வாங்கிக் கொடுத்துச் சாப்பிடு என்று உயிரை எடுத்து விடுவார்.

சர: அதிர்ஷ்டக்காரிதான். சரி, குங்குமம் கொடு. நேரமாகி விட்டது.

ரா: ஆமாம். உன் அகத்துக்காரர் எங்கே வேலையாய் இருக்கிறார்?



“இவனுக்கு என்ன ஆச்சு?”

“கடிகாரத்தை ஒரே கடியில் கடி ஆகாரமாக்கிட்டான்..”

சர: என். என். ஓ. சி ஆபீஸிலேதான். மாதுர்பூதம் என்று பேர்.

ரா: அதிலேதான் என் அகத்துக்காரரும் இருக்கிறார். ராமாமிர்தம். அக்கௌண்டன்ட்.

சர (திடுக்கிட்டு): அப்படியா! சரி, போய் வருகிறேன்.

(வெற்றிலை பாக்கு வாங்கிக் கொண்டு பரபரப்புடன் நடக்கிறாள்.)

3

(அன்று இரவு. மாதுர்பூதம் சாப்பிட்டுவிட்டுப் பேப்பர் படித்துக் கொண்டிருக்கும்போது சரஸ்வதி தயங்கித் தயங்கி அருகில் வருகிறாள்.)

சர: வந்து...இன்றைக்கு என் பழைய ஃப்ரெண்ட் ராஜத்தைக் கோவிலிலே பார்த்தேன். எனக்கு முதலிலே அவள் அகத்துக்காரர்தான் உங்கள் ஆபீஸ் அக்கௌண்டண்ட் ராமாமிர்தம்னு தெரியாது. உங்களுக்கு அறுபது வயசு ஆனதைச் சொல்லிட்டேன். அப்புறம்தான்...

மா (பதறியவராக): ஐயோ ஐயோ! உனக்கு என்ன ஆட்டு மூளையா? எவ்வளவு தடவை சொல்லியிருக்கேன். உன்னை யார் ஊர் முழுக்கச் சொல்லச் சொன்னது? ஐயோ, அவன் நாளைக்கே ஆபீஸ் பூரா டமாரம் அடித்துவிடுவானே?

சர: ஆமாம். எனக்கு ஆட்டு மூளைதான். (கோபமாகக் கத்துகிறாள்). அப்படி இருக்கிறபோது என்னை ஏன் கல்யாணம் பண்ணிக் கொண்டீர்கள்? நீங்களெல்லாம் ரொம்பக் கெட்டிக்காரர். உங்கள்கூட வேலையாய் இருக்கிறவர்தானே அவரும்! அழகாய் வீடு வாங்கிவிட்டார். நாம் என்னத்தை வாங்கினோம்?

மா: ஆமாம். வீடு வாங்கினான். மகா கஞ்சன். பெண்டாட்டிக்குச் சோறுகூடச் சரியாய்ப் போட மாட்டான்.

சர: உங்களுக்குத் தெரிந்த லட்சணம் அவ்வளவுதான். சோறு போட மாட்டான் என்கிறீர்களே! போய்ப் பாருங்கள். ஒரே டானிக் பாட்டிலாய் அடுக்கி வைத்திருக்கிறார்கள் அங்கே. ஒரு ஐம்பது பாட்டில் இருக்கும். அத்தனையும் அவள் சாப்பிட்டதுதானாம். அத்தனையிலேயும் சாமானெல்லாம் போட்டு வரிசையாய்



'குப்தஞான்' படத்தைத் தொடர்ந்து உடலுறவு பற்றிய 'அறிவை' வளர்க்கும் படமாம் 'காம் சாஸ்திரா.'

கதைக்குக் கதை, மருத்துவத்துக்கு மருத்துவம் இரண்டையும் பின்னி எடுக்கப்பட்டிருக்கும் இப்படத்தில் இரட்டைக் குழந்தை பிறப்பதைக் காட்டியிருப்பதும் ஒரு விசேஷ அம்சமாம்.

பிந்து, ஹெலன், அல்கா, மனிஷா முதலிய கவர்ச்சி நடிகைகள் இப்படத்தில் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர்.

—தாரா

உங்கள் ஒய்ஃப்பைப் பார்த்தாளாம். உங்களுக்கு அறுபது வயது பூர்த்தியாகி விட்டதாமே? கங்க்ராஜுலேஷன்ஸ்!

மாது (தயங்கி விழித்து): ஹி... ஹி... அதைப் பற்றி என்ன... ஆபீஸிலே ஒருத்தருக்கும் தெரிய வேண்டாம்.

ராமா (மனத்துக்குள்): தெரிய வேண்டாமாமே, தெரிய? முதல் வேலையாக ஜி. எம். மிடம் வத்தி வைக்க வேண்டும். வரட்டும்.

மாது: உங்கள் வீட்டிலே ஒரே டானிக் பாட்டிலாய் அடுக்கி வைத்திருந்ததாமே? யார் ஸார் அவ்வளவு டானிக் சாப்பிடுகிறார்கள் உங்கள் வீட்டிலே?

ராமா (முகம் வெளுக்க): அதுவா? அதுதான் வீட்டிலே ஒரு பட்டாளம் இருக்கிறதே பேரக் குழந்தைகள்...நாங்கள் எல்லாரும்தான் சாப்பிடுகிறோம்.

மாது (மனத்துக்குள்): இருக்கட்டும், இருக்கட்டும். இதை ஜி. எம். மின் கவனத்துக்குக் கொண்டுவராவிட்டால் என் பேர் மாதுர்பூதம் இல்லை.

5

(ஜெனரல் மானேஜர் அறையிலிருந்து அழைப்பு வர மாதுர்பூதமும், ராமாமிர்தமும் போகிறார்கள்.)

வைத்திருக்கிறாள். எவ்வளவு அழகாய் இருக்கிறது தெரியுமா?

மா: என்னது, டானிக் பாட்டிலா! (வியப்புடன்) மகா கஞ்சனுச்சே அவன். தான் சாப்பிடுகிற பாலிலேயே தண்ணியை விட்டுக்கொண்டு சாப்பிடுகிறவனுச்சே! (யோசித்து) சரிதான். பயல் இப்படியா செய்கிறான்? மாசா மாசம் 'எனக்கு உடம்பு, மிஸஸுக்கு உடம்பு' என்று ஆபீஸிலே மெடிகல் பில் போட்டு டானிக் வாங்கிச் சாப்பிடுகிறானு? சரி, அவன் சிண்டு என் கையிலே. அவன் என்னைப் பற்றி வாயைத் திறந்தால், நான் சும்மா இருப்பேனு?

4

(ஆபீசில் மாதுர்பூதத்திடம் ராமாமிர்தம் வருகிறார்.)

ராமா: ஹலோ மாதுர் பூதம் ஸார். நேற்றைக்கு என் ஒய்ஃப்

ஜெனரல் மானேஜர்: வாருங்கள் மிஸ்டர் மாதுர்பூதம், வாங்க ராமாமிர்தம். உட்காருங்கள்.

ராமா: குட்மார்னிங் ஸார். (உட்காருகிறுர்கள்.)

ஜெ. மா: டூர் எல்லாம் நன்றுய் முடிந்தது. அந்த பெங்களூர் பார்ட்டியைப் பார்த்து ஒரு வழியாய் அரேஞ்ச் பண்ணிட்டேன். இன்னும் கல்கத்தா டூர் ஒன்று பாக்கியிருக்கிறது. இன்றைக்கே கிளம்பணும். அதற்குள் இங்கே முக்கிய விஷயமாய் வரும்படி ஆகிவிட்டது. (புன்னகையுடன்) எனக்கு வியாழக்கிழமை அறுபதாம் கல்யாணம் நடந்தது...

(மாதுர்பூதமும் ராமாமிர்தமும் ஆச்சரியத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர்.)

ராமா: கங்க்ராஜுலேஷன்ஸ் ஸார்.

மாது (கம்பீரமாக எழுந்து): கங்க்ராஜுலேஷன்ஸ் ஸார்.

மா.: தாங்ஸ். அப்போ நாங்கள் வரோம். ஸார்.

ஜெ. மா.:பை த வே, இந்த ப்ரிஸ்கிரிப்ஷனை நம்ப யு. டி. சி. மணிகிட்டே கொடுத்து ஒரு ஃபெரடால் பாட்டில் வாங்கிக்கொண்டு வரச் சொல்லுங்கள்.


மாது: என்ன ஸார், வேறே ஏதோ மருந்து எழுதியிருக்கிறதே. மாற்றிக் கொடுத்துவிட்டார்களா என்ன?

ஜெ. மா.: இல்லே, இல்லே. நீங்கள் மணிகிட்டே கொடுங்கள். அவருக்குத் தெரியும். இந்த டானிக்குக்கெல்லாம் ரீ எம்பர்ஸ்மென்ட் கிடையாதே என்று மருந்து எழுதி வாங்கிக் கொண்டேன். இதை மணி அவனுக்குத் தெரிந்த மருந்துக் கடையிலே கொடுத்து டானிக் வாங்கித் தருவான். இல்லாவிட்டால் இருபதும் இருபத்திரண்டும் கொடுத்து டானிக் பாட்டில் வாங்க முடியுமா? பேருதான் பெத்த பேரு. வருகிற சம்பளத்தில் வயிறு நிறையச் சாப்பிடக்கூட முடியாது.

மா: ரொம்பக் கரெக்ட் ஸார். (வெளியே போகின்றனர்.)

ரா: என்ன ஸார். அஸ்திவாரமே மட்டமாய் இருக்கிறபோது நம்மைப்போல வாசற் கதவுகளும், ஜன்னல் கதவுகளும் எப்படிப் போனல் என்ன? இனிமேல் நீங்களும் பயப்பட வேண்டாம். நானும் பயப்பட வேண்டாம்.

(சிரித்துக்கொண்டே போகிறுர்கள்.)



சமீபத்தில் தாய்லாந்து பிரதமர் சீனுவுக்கு வந்திருந்தபோது, ''என்னைச் சந்தித்ததால் உங்களுக்கு துரதிர்ஷ்டம் எதுவும் ஏற்படாது,'' என்று மா சே துங் அவருக்குத் தேறுதல் கூறினுராம்.

காரணம்: இதற்கு முன்பு மா-சே- துங்கைச் சந்தித்த கையோடு பிரிட்டிஷ் பிரதமர் எட்வர்ட் ஹீத், அமெரிக்க ஜனுதிபதி நிக்ஸன், ஜப்பானிய பிரதமர் தனகா ஆகியோருக்குப் பதவி போய்விட்டதுதான்.

—வி.ந. ஸ்ரீதரன்

நல்ல வேளை,
சில பொருட்கள் என்றும் மாறுவதே இல்லை!

பாசத்திலே சிறந்தது தாய்ப்பாசம். துணிகளின் சிறப்பிலே உயர்ந்தது பின்னி. இவை என்றும் மாறா மதிப்புள்ளவை இவை இரண்டுமே இணையற்ற ஒரு ஜோடி என்று நீங்களே ஒப்புக்கொள்வீர்கள்.

காலத்திற்கேற்ற மனப் போக்குள்ள இளம்தாய் கூட விடாப்பிடியாக பின்னி டெரீன் இழைகலந்த துணிகளையே வேண்டுமென்பர். காரணம் பின்னி கடுமையாக உழைத்து, நீங்கள் தரும் பணத்துக்கு ஏற்றதாய் இருப்பவை. இந்த நாட்களில் அவற்றை விரும்பாதவர் யார்.



நாகரீகம், அத்துடன் நீடித்தும் உழைப்பவை

பின்னி மட்டுமே நயமுடன் இணைத்துத்தர முடியும்!

Interpub BB/54/76 Tam

அந்த இடத்துக்குப் பிசாசுப் பாறை என்று பேயர்.

பிசாசு அந்த மலைப்பாறையின் ஒட்டு நுனியிலே உட்கார்ந்திருந்தது. நேர் கீழே முன்னூறு அடிக்குச் செங்குத்தான பள்ளம். தலை சுற்றவைக்கும் அந்த இடத்தில், காட்டுப் பூக்கள் மண்டிக் கிடக்கும் புதர்களுக்கு நடுவே, கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கீழே உள்ள பள்ளத்தையே பார்த்தவண்ணம் அது உட்கார்ந்திருந்தது.

மனிதப் பிறவியாயிருந்தால் அங்கே உட்கார்ந்திருக்காது. அது மானிட உடலை விட்டு ஐம்பது வருடங்களுக்கு மேல் ஆகப் போகிறது.

அதன் தலைக்கு மேலே குறுகலாகச் செல்லும் மலைப் பாதையில் பல பேச்சுக் குரல்கள் கேட்டன. அன்று சாரி சாரியாக டூரிஸ்ட்கள் வருவார்கள் என்று அதற்குத் தெரியும். ''அதோ தெரிகிறது பார்த்தாயா? அதுதான் பழனி,'' என்று வயதான ஐயா காட்ட, வயதான அம்மாள் கன்னத்தில் போட்டுக்கொள்வாள்; "டார்லிங், ஆயுள் பூரா இங்கேயே இருந்து விடலாம் போல் இல்லை?'' என்று காதலியின் இடுப்பை வளைத்துக் கொண்டு இளைஞன் கொஞ்சுவான். சிறுவர்களானால் சின்னக் கற்களை வீசியெறிந்து அது அடிவாரத்தில் விழுகிற ஓசை கேட்கிற மாதிரி கற்பனை செய்துகொண்டு மகிழ்வார்கள். அல்லது 'ஓ..ஓ' என்று குரல் கொடுத்து எதிரொலியைச் செவி மடுப்பார்கள்.

அது இவ்வளவையும் பார்த்துக் கொண்டும் ரசித்துக் கொண்டும் அந்தப் பாறை நுனியில் உட்கார்ந்திருக்கும்.

அதன் மனதைச் சங்கடப் படுத்தக் கூடிய காரியம் ஒன்றும் நடு நடுவே நிகழ்வது உண்டு.

உள்ளூர்க்காரன் எவனாவது 'கைடு' என்கிற பெயரில் வந்து சேருவான். ஆவென்று வாயைப் பிளந்தபடி கேட்கின்ற கும்பலுக்குப் பிசாசைப் பற்றிப் பொய்யும் புனைசுருட்டுமாக அளஅளவென்று அளப்பான். அதைக் கேட்கக் கேட்க அதற்குச் சில சமயம் சிரிப்பு வரும். பல சமயம் வருத்தமாகவும் கோபமாகவும் இருக்கும். ஆனால் அதனால் என்ன செய்யமுடியும்? 'ஏகப்பட்ட வயதாகிவிட்டது. இப்போதும்கூட நமக்கு இவ்வளவு அவப் பெயரா!' என்று மனம் நொந்து கொள்ளுமே தவிர வேறு எதுவும் செய்யாது.

சிறிது நேரம் கடையைப் பார்த்துக் கொள்ளும்படி பையனிடம் சொல்லிவிட்டுச் சிவப்பிரகாசம் உள்ளே வந்தார்.

வீட்டின் முன்புறம் கடை. அங்கே இன்னதுதான் வியாபாரம் என்றில்லை. டிரான்ஸிஸ்டர் ஸெல்லும் கிடைக்கும். தேன் புட்டியும் விற்பனைக்கு உண்டு. சீசன் டயத்தில் பலாப் பழம் கூடக் கிடைக்கும்.

மணி பிற்பகல் மூன்றாகிக் கொண்டிருந்தது. காற்றில் குளிர் ஏறத் தொடங்கி விட்டது. சாயந்தர வேளையில் சில டூரிஸ்ட் பஸ்கள் கொடைக்கானலுக்குப் போய்விட்டு அப்படியே திரும்பும் வழியில் இங்கே வருவதுண்டு. இரண்டு மூன்று மணி நேரத்தில் புறப்பட்டு விடுவார்கள், முருகன் கோவிலில் போன வருஷம் மூன்று யாத்திரிகள் விடுதி கட்டினார்கள். அதில் ராத்திரி தங்கிவிட்டுக் காலையில் போகிறவர்களும் உண்டு.

சிவப்பிரகாசம் உள்ளே வந்த

டி. துரைசாமி

பிசாசின் காதல்



சத்தம் கேட்டதும், சமையலறையில் தோசை சுட்டுக் கொண்டிருந்த மனோன்மணி, ''என்னங்க, இந்த ஷெல்பை ஒரு ஆணி அடிச்சு மாட்டிக் கொடுங் கண்ணு எத்தினி நாளா சொல்றேன்?'' என்று குரல் கொடுத்தாள்.

''ஏன், வீட்டிலேதான் ஒரு தண்டச் சோறு இருக்கிறானே, அவனண்டை சொல்லிச் செய்துக்கக் கூடாதா?'' என்று சிவப்பிரகாசம் கடுகடுத்தார்.

''வாயைத் திறந்தால் போதும் கருணு மேலே பாய்ஞ்சிடுங்க!'' என்று மோவாயைத் தோளில் இடித்துக் கொண்டாள் மனோன்மணி. ''பக்கத்து ரூமிலேதான் தூங்கறான். காதிலே விழுந்தால் குழந்தை வருத்தப்படுவான்.''

''ஐயோ பாவம்! கலெக்டர் வேலை பார்த்துப் பார்த்துக் களைப்பு!'' என்று சிவப்பிரகாசம் கிண்டல் செய்தார். ''நாள் பூரா கழுதை மாதிரி சுத்தறான். வீட்டுக்கு வந்தால் மூக்கைப் பிடிக்கச் சோறு, தூக்கம். 'யோக்கியமாய் நாலு காசு சம்பாதிச்சிட்டு வந்தாலொழிய வீட்டுக்கு வராதேடா நாயே'ண்ணு கண்டிப்பாகச் சொல்ல நமக்குத் துப்பில்லை.''

''சரி, சரி. அவனும் பச்சைக் குழந்தையில்லை. வயசு இருபதாகிறது. பொறுப்பில்லாமல் போகாது. கண்டபடி பேசாதீங்க,'' என்றவள், ''ஷெல்பு அடிச்சுத் தாங்கண்ணு கேட்டது தப்புதான். நீங்க போய்க் கடையைப் பாருங்க,'' என்றாள்.

''இண்ணைக்கு இல்லாட்டி நாளைக்கும் நான்தானே செய்யணும்? அதை இண்ணைக்கே செய்திடறேன்.

சுத்தி ஆணியெல்லாம் எங்கே வைச்சிருக்கே?''

''நடு ரூமிலே பீரோ மேலே இருக்கும் பாருங்க.''

சிவப்பிரகாசம் நடு ரூமை அடைந்தார். பக்கத்து அறையில் அவர் மகன் கருணு கட்டிலில் புரண்டு படுப்பது மாதிரி காதில் விழுந்தது. எரிச்சலும் கசப்பும் நிறைந்த ஒரு பெருமூச்சை வெளியேற்றிவிட்டு, பீரோவின் மீது கை வைத்தார்.

சுத்திக்குப் பதில் ஒரு சிறிய பெட்டி— லேசான மெல்லிசான பலகை போட்ட, கையகலப் பெட்டி— கையில் தட்டுப்பட்டது. வியப்புடன் வெளியே எடுத்துப் பார்த்தார். பார்த்தவுடனே என்ன பெட்டியென்று தெரிந்துவிட்டது. இருந்தாலும் சந்தேகத்துக்காக அதைத் திறந்தும் பார்த்தார். நினைத்தபடியே தான்.

உடம்பு மொத்தமும் ஆத்திரத்தால் கொதித்தது. கோபத்துடன் பல்லைக் கடித்துக் கொண்டார். சுத்தியும் ஆணியும் எடுத்துக்கொண்டதோடு அந்தப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு சமையலறைக்குச் சென்றார்.

''இந்தா மனோன்மணி, வாயில் விரலை வைத்தால் கடிக்கக்கூடத் தெரியாது என் பிள்ளைக்குன்னு மூச்சுக்கு முன்னூறு வாட்டி சொல்லுவியே!'' என்று பெட்டியைத் திறந்து காட்டினார் மனைவிக்கு. ''கண்ணைத் துடைச்சிட்டு நல்லா பார்த்துக்க!''



''உன்னைப் பெண் பார்க்க திரு. பதி வருகிறாராமே! என்ன டிபன்?''
''லட்டும், வடையும்.''

தோசை மாக் கையைப் பாத்திரத்தில் வழித்துவிட்டுத் திரும்பிப் பார்த்தாள் அவள். ''ஐயய்ய! என்னங்க இது கண்ணறாவி!''

''துரை ஒவ்வொரு புதுப் பழக்கமாக் கத்துட்டு வர்றார்! புரியல்லே? உன் பிள்ளையைப் போய்க் கேள். மெனக்கெட்டு டவுனுக்குப் போய் வாங்கி வந்திருக்கிறாரே!''

''யார், நம்ம கருணுவுங்களா?''

''இல்லே. அடுத்த வீட்டுக் கருணு! அடச் சீ போ! அது உருப்படாத கழுதைன்னு நான் தலைதலையாய் அடிச்சுக்கிறேன். உனக்கு லட்சியமில்லே. இந்த ரேட்டிலே போனால் அவனோட அடுத்த விலாசம் ஜெயில்தான்,'' என்று ஆத்திரத்துடன் ஆணியைச் சுவரில் வைத்து சுத்தியை ஓங்கிப் போடலானார்.


வாசல்புறம் ஒரு பஸ்ஸின் ஹாரன் கேட்டது.

''யாரோ வர்றாங்க. போய்ப் பாருங்க. பிள்ளை மேலே இருக்கிற கோபத்தில் வியாபாரம் போயிடப் போகுது,'' என்றாள் மனோன்மணி.

மறுவினாடி, 'அப்பா!' என்று ஒரு கத்துக் கத்தி கட்டை விரலைச் சப்பிக்கொண்டார். அப்படியும் விரலின் ஓரத்தில் ரத்தம் கசிந்தது. பரவாயில்லை என்று விரலைப் பொத்திக்கொண்டு முன் பக்கம் வந்தார்.

வந்திருந்தது பெரிய வேன். அதில் வந்திருந்தவர்கள் மொத்தம் ஆறு இளம் பெண்கள். அவர்களுடைய தலைவி போல் தோற்றமளித்த பெண், பச்சிளங் கொத்துமல்லி போல் தளதளவென்றும் துருதுருவென்றும் இருந்தாள். சிம்பிளாக டிரெஸ் செய்துகொண்டிருந்தாலும் சிரிப்பும் கலகலப்பும் நூறு கோடி நகைகளைப் பூட்டிய மாதிரி அவளுக்கு அழகூட்டின. அவள்தான் வண்டியை ஓட்டி வந்தாள் போலும். எல்லாரும் இறங்கிய பின் இஞ்சினை ஆஃப் செய்துவிட்டு முன்புறமாகக் கீழே குதித்து, ஹாண்ட்பாக்கை ஒரு சுழற்றுச் சுழற்றித் தோளில் போட்டபடி, ''ஆளுக்கொரு கோக் கொடுங்கள். ஆறு மாத ஸ்டாக்கானல் பரவாயில்லை. ஒரு வருஷத்து ஸ்டாக்கானல் வேண்டாம்,'' என்றாள் சிவப்பிரகாசத்திடம்.

''எல்லாம் புதிசுதாம்மா,'' என்று அவர் கொகாகோலா புட்டிகளை



வைக்கப்போரில் சாய்ந்து கிடக்கும் பத்மப்பிரியாவைப் பற்றி அக்கப்போர் ஏதாவது வந்து விடுமோ என அஞ்சுகிறரா ஜெய்?

படம்: 'எங்களுக்கும் காலம் வரும்'.

—'ஆனந்த்'

எடுத்தபோது, காயம் பட்ட விரலைக் கவனித்து விட்டாள் போலும். "அடடே! என்ன கையிலே கடைக்காரரே?" என்ருள்.

"ஒன்றுமில்லே. சின்ன க் காயம்," என்ருர் சிவப்பிரகாசம். முன் பின் தெரியாத ஒரு பெண் இப்படி உரிமையுடன் பேசுவது அவர் மனத்தை நெகிழச் செய்தது.

"டீ மல்லி! வண்டியிலே ஃபஸ்ட் எய்ட் கிட் இருக்கிறது பார். எடுத்து வா," என்று அவள் கட்டளையிட்டாள்.

"வேண்டாம்மா, இது ஒன்றும் பெரிசில்லே," என்று சிவப்பிரகாசம் சொல்லச் சொல்ல அந்தப் பெண் கேட்காமல், அந்த விரலுக்கு ஆயின்ட்மென்ட் தடவி, பஞ்சு சுற்றி பாண்டேஜும் போட்டுவிட்டு, "ரைட்! இப்போது எடுங்கள் ட்ரிங்ஸ்ஸை," என்று கூறி, தானும் அருந்தி மற்றவர்களுக்கும் வழங்கிஞள்.

சிவப்பிரகாசம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். உபயோகமில்லாத தறுதலைப் பிள்ளையைக் கொடுத்ததற்குப் பதில் இந்த மாதிரி பொறுப்பும் சமர்த்தும் சுறுசுறுப்பும் உள்ள ஒரு பெண்ணைக் கொடுத்திருக்கக் கூடாதா என்று கடவுளைக் கோபித்துக் கொண்டது அவர் மனம்.

அவள் பெயர் பாரதி என்றும் அவர்கள் கல்லூரி மாணவிகள் என்றும் தெரிந்தது. கோவில் விடுதியில் ராத்திரி தங்கிவிட்டுக் காலையில் புறப்படப் போகிருர்களாம்.

"கடைக்காரரே, பிசாசுப் பாறை என்கிற இடத்துக்கு இப்படியே நேராய்ப் போகலாமில்லையா?" என்று பெண்களில் ஒருத்தி கேட்டாள்.

"வயசுப் பெண்கள் நீங்களெல்லாம் ஏம்மா அங்கே போகணும்?" என்று அவர்களது ஆர்வத்தைக் குறைக்க முயன்ருர் சிவப்பிரகாசம்.

"நீங்க இப்படிச் சொல்றீங்க! எங்க பாரதி என்ன சொல்ருள் தெரியுமா? இப்பப் போக வேண்டாம், ராத்திரி பத்து மணிக்கு மேல் போகிறேன் என்கிருள்!"

"ஐயோ! ஏம்மா, அப்படியா?" என்று அவள் பக்கம் திரும்பினுர்.

"ஆமாம் சார், இது நிலாக் காலம் இல்லையா? பத்து மணிக்குமேலே மலையும் பள்ளத்தாக்கும் மரங்களும் செடிகளுமாய் என்ன அற்புதக் காட்சியாக இருக்கும்!" என்ருள் அவள்.

"ஏன் அத்தோடு நிறுத்திட்டே? ஏதோ சுருட்டுப் பிசாசாமே, அது கூட நிலா வெளிச்சத்தில் உலாக் கிளம்புமாம்!" என்று சொல்லும் போதே ஒரு தோழியின் குரல் நடுங்கியது.

"சுருட்டுப் பிசாசுமாச்சு, மண்ணுங்கட்டியுமாச்சு!" என்று பாரதி சிரித்தாள். "உங்க பயத்தையும் நம்பிக்கையையும் டிஸ்ப்ரூவ் பண்ணுவதற்காகவே நான் பத்து மணிக்கு மேலே அங்கே போய்க் காட்டப் போகிறேன்."

''இவள் பிடிவாதத்தை மாற்றக் கடவுளாலும் முடியாது,'' என்று பெருமூச்சு விட்டாள் ஒருத்தி. ''நீ ராத்திரி போய்ப் பார்த்து, என்ன வேணுமானலும் ஆகிக்கொள். நாங்கள் சாயந்தர வேளையிலேயே அந்த இடத்தைப் பார்த்துக்கறோம். கடைக்காரரே, நீங்க கொஞ்சம் வந்து அந்த இடத்தைக் காட்டறீங்களா?''

சிவப்பிரகாசம் பொதுவாகக் கடையை விட்டுவிட்டு டூரிஸ்ட்களுடன் போகிறவரல்ல. ஆனல் இம்முறை பாரதி என்ற பெண்ணிடம் ஏனே அவருக்கு அளவற்ற பிரியம் ஏற்பட்டுவிட்டது. பைத்தியக்காரத்தனமாய் அவள் ஏதும் செய்துவிடாமல் தடுப்பதற்காகவேனும் அந்த இடத்தைக் காட்டி எச்சரிக்கவேண்டுமென்று எண்ணியவராக, ''சரி, வாருங்கள்,'' என்று கூறி அவர்களுடைய வானில் ஏறிக் கொண்டார்.



காதல் தேவன் சமீப காலமாகத் தன் கருணையை 'ஏர் இந்தியா' விமான பணிப் பெண்கள் மீது அளவுக்கு மீறியே பொழிய முற்பட்டிருக்கிருன். இந்த வருடத்தில் முதல் ஆறு மாதத்திற்குள் சுமார் 40 விமானப் பணிப் பெண்கள், விமானத்தில் பயணம் செய்ய வருபவர்களையே திருமணம் செய்துகொண்டுவிட்டனர். இது ஏர் இந்தியா சரித்திரத்திலேயே ஒரு ரிகார்டை ஏற்படுத்தியிருக்கிறது.

ஒரு விமானப் பணிப் பெண்ணைத் தயார் செய்ய 'ஏர் இந்தியா' சுமார் ரூ. 5,000 வரை செலவு செய்கிறதாம், பாவம்!

— எஸ். சந்திரிகா

பிசாசு இன்னும் அந்தப் பாறை முகட்டிலேயே உட்கார்ந்திருந்தது. எத்தனையோ காலமாக அங்கேதான் அது இருக்கிறது. இன்னும் எத்தனையோ காலத்துக்கு இருக்கவும் போகிறது. இப்படி அப்படி நகரக்கூட அதற்கு விருப்பம் கிடையாது. அதற்கான வலுவும் இல்லை. மேலே பாதையில் ஜனங்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். அது உட்கார்ந்திருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டிப் பேசிக் கொண்டார்கள். அது மௌனமாக எல்லாரையும் பார்த்துக் கொண்டும், எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டும் உட்கார்ந்திருந்தது.

''இதோ இந்த இடம் தான்,'' என்று மலைப் பாதையின் வளைவில் நின்றவாறு சுட்டிக் காட்டினர் சிவப்பிரகாசம். மேற்கு அடிவாரத்தில் சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். அதன் மஞ்சள் வெளிச்சத்தில் மலையும் காரும் பூக்களும் கனிகளும் சிரித்துக் குலுங்கிக் கொண்டிருந்தன.

''லவ்லி! லவ்லி!'' என்று கை தட்டினுள் பாரதி. ''அழகு கொஞ்சுகிற இந்த இடத்திலே சுருட்டுப் பிசாசாம். மண்ணுங்கட்டி! இன்று ராத்திரி இங்கே நான் வருகிறேனு இல்லையா பாருங்களேன்!''

''கொஞ்சம் மெதுவாக மூச்சை இழுத்துப் பாருங்க. ஒரு வாசனை தெரியும்,'' என்றூர் சிவப்பிரகாசம்.

எல்லாப் பெண்களும் இழுத்துச் சுவாசம் இழுத்தார்கள். விட்டார்கள், ''ஒண்ணும் தெரியலியே!'' என்றுள் ஒருத்தி.

''சுருட்டு வாசனை தெரியலே? அதான் இங்கே விசேஷம்!''

ஆளுக்கு ஆள் மூச்சை இழுத்துப் பார்த்தார்கள். ''அடடே! ஆமாம்! தெரிகிறதே, சுருட்டு வாசனை!''

''ஏன் சார், அதென்ன விசித்திரமான பெயர் சுருட்டுப்பிசாசென்று?'' பெண்களில் ஒருத்தி கேட்டாள்.

''அதென்னவோ பரம்பரை பரம்பரையாய் அப்படித்தான் சொல்லிட்டு வர்ருங்க,'' என்றூர் சிவப்பிரகாசம். ''இந்த வட்டாரத்திலே பெரும் பணக்காரராக இருந்து வந்தார் ஒருத்தர். சுருட்டுன்னு கொள்ளை ஆசை அவருக்கு. ஒரே பெண்ணுக்குக் கல்யாணம் ஏற்பாடு பண்ணினர். நல்லா நடத்தினர். அன்று ராத்தி சுருட்டுப் பிடிச்சிட்டே படுத்திருந்தவர் அதைத் தலை மாட்டுக்குப் பக்கத்

திலே அணைக்காமலே வச்சுட்டுத் தூங்கிட்டார். படுக்கையிலே தீ பிடிச்சு வீடு பூரா எரிஞ்சு கல்யாணப் பொண்ணு மாப்பிள்ளை ரெண்டுபேருமே போயிட்டாங்க. அந்தப் பணக்காரரும் மனசு உடைஞ்சு இங்கே வந்து குதிச்சுத் தற்கொலை பண்ணிட்டார்.''

''அடப் பாவமே!''

''திடீர் திடீர்னு இங்கே சுருட்டு எரிஞ்சிட்டு கிடக்கிறது உண்டு. இல்லேன்னா கூட யாரோ சுருட்டுப் பிடிக்கிற மாதிரி ஒரு வாசனை வந்திட்டேயிருக்கும்.''

''நல்ல கதைதான் போங்க. அந்தப் பணக்காரர்தான் பிசாசாய் அலைகிறாராமா?'' என்று பாரதி சிரித்தாள்.

''சிரிக்காதே குழந்தை! நிறைவேறாத ஆசைகளோடே மனசு ஒடிஞ்சு தற்கொலை செய்து கொண்டவர் சும்மாவா இருப்பார்? பேயாய் அலைகிறார். இருட்டின பிறகு யார் இங்கே வந்தாலும் அவ்வளவுதான். சுருட்டுப் பிசாசுங்கிற பேரைக் கேட்டாலே நடுங்காதவங்க கிடையாது. அது பண்ணுகிற அட்டகாசம்.. அப்பப்பா!''

''அதை இன்றைக்கு ராத்திரி பார்த்து விடுகிறேன்,'' என்றாள் பாரதி.

''சொன்னால் கேளம்மா,'' என்று வேனில் திரும்ப ஏறுகிறபோது கூடச் சிவப்பிரகாசம் சொல்லிக்கொண்டேயிருந்தார்.

எல்லாவற்றையும் பிசாசு கேட்டுக் கொண்டுதான் இருந்தது. துயரமிகுதியினால் அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது. அதன் உள்ளம் கனத்தது. இந்த மாதிரி எத்தனை பொல்லாப்புக்களை அது கேட்டிருக்கிறது! அதன் மானிட வாழ்க்கையில் நடந்ததாகச் சொல்லப்படுவதெல்லாம் உண்மைதான். ஆனால் அதற்காக, அது இங்கே வருவோர் போவோரையெல்லாம் துன்புறுத்துவதாகவும் பயமுறுத்துவதாகவும் எத்தனை அபாண்டங்கள் கட்டி விடுகிறார்கள்!

பற்பல வருடங்களுக்கு முன்னால் அது விளையாடியதுண்டு. குறும்புகள் செய்ததுண்டு. இப்போது பரிபூரணக் கிழட்டுத்தனம். இம்மியளவு கூட நகரவும் முடியாத பருவத்தை அடைந்தாகி விட்டது. இந்தச் சமயத்திலே கூடப் பயங்கரமான அவதூறுகளைப் பரப்புகிறார்களே? அதன் நெஞ்சு வேதனையினால் துடித்தது. ஆனாலும் ஒன்றும் செய்ய முடியாமல் தவித்தது.




Cadbury's
5 star
காட்பரிஸ்
5ஸ்டார் இனிப்பும் சுவையும் மிக்கது!
இனிமையான காட்பரிஸ் 5 ஸ்டார்
இனிப்பூட்டும் காரமல்,
இன்சுவையுள்ள நுகட்டின் மற்றும்
போஷாக்குள்ள மில்க் சாக்கலேட்
கொண்டது.
இளம் உள்ளங்களின்
இன்பப் பூரிப்பு—
காட்பரிஸ் 5 ஸ்டார்!
AIYARS-C. 275 REV. TM.

பிசாசுப் பாறைக்கு வெகு தூரத்துக்கு அப்பாலே தோழிகள் நின்று விட்டார்கள்.

"பாரதி! ப்ளீஸ்! வேண்டாம்டி!" என்று இரண்டொருவர் கடைசி முறையாகச் சொல்லிப் பார்த்தார்கள்.

"சாயந்தரம் போனபோது, அடையாளத்துக்காக ஒரு கர்சீப்பைக் கட்டினேனில்லையா அந்தக் கொய்யா மரத்தில்? அதை எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்," என்று சொல்லி விட்டுப் புறப்பட்டு விட்டாள் பாரதி.

குளிர், தேகத்தைக் கத்தி போல் வெட்டியது. சால்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டாள்.

அதுவரை நடுவானத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த நிலா ஏனோ இப்போது மறையத் தொடங்கியது. கன்னங்கரேலென்ற மேகங்கள் சூழ்ந்துகொண்டு, பாதையில் இருட்டைப் பரப்பின.

வேனுக்குத் திரும்பப் போய் டார்ச் லைட்டை எடுத்து வரலாமா என்று ஒரு கணம் நினைத்தாள் பாரதி. 'சீ! அவ்வளவுதானா உன் தைரியம்!' என்று பரிகசிப்பார்கள். வேண்டாம். இந்த அரைகுறை வெளிச்சம் போதும்.

அவள் மேலே நடந்தாள். இருட்டு என்பது ஓர் உருவமற்ற விஷயமாக இருந்தது மாறி, அதற்கும் கை கால்கள் முளைத்து, ஒரு வடிவமாக உருவெடுத்து, தட் தட்டென்ற ஓசையுடன் பின்தொடர்ந்து வருகிறமாதிரி தோன்றியது. சே! என்ன பிரமை! ஹாஸ்டலில் இருப்பதாக எண்ணிக்கொண்டு மெல்ல விசிலடித்தாள். லவுட்ஸ்பீக்கரில் கேட்பது போலப் பிரம்மாண்டமாய் எதிரொலித்தது.

அதோ அந்த வளைவு.. ஆமாம். காலடியில் ஏதோ காகிதம் தட்டுப்படுகிறதே. குனிந்து எடுத்து, தடவிப் பார்த்தாள். சாக்லேட் காகிதம். சாயந்தரம் அவர்கள் சாப்பிட்டு எறிந்தது. அப்படியானால் சரியான பாதையில்தான் வந்து கொண்டிருக்கிறாள்.

திடுப்பென்று அவளை யாரோ இழுத்த மாதிரி இருந்தது. திடுக்கிட்டாள். பிறகு தன்னை மறந்து சிரித்தாள். பாதையோரத்தில் வளர்ந்திருந்த ஒரு முள்செடிதான் புடவையில் குத்தியிருக்கிறது. விலக்கி விட்டுக்கொண்டு முன்னே நடந்தாள்.

என்ன அது ஓசை? யாரோ உஷ்ணமாய் மூச்சு விடுகிற மாதிரி? காட்டு விலங்குகள் நடமாடுகிறதோ? இந்தக் குளிரில் எந்தப் பிராணியும் வெளியே வராது.

அவள் நின்றாள். இம்முறை அவள் இதயம் சில விநாடி நேரத்துக்கு நின்றது. பயம் அவள் மூளைக்குள் புகுந்து கொண்டது. இழுத்துச் சுவாசித்தாள். ஆம். ஆம். ஆம். சந்தேகமில்லை.

ஒரு சுருட்டுப் புகையின் மணம் எங்கிருந்தோ வருகிறது!

உள்ளம் படபடக்கப் பார்வையை ஓட்டினாள். இருட்டின் நடுவே திரையைக் கிழித்துக்கொண்டு ஒரு சிவப்புப் பொட்டு— நெருப்பின் வாய்— மினுமினுப்பதைக் கண்டாள். ஓவென்று

அனாதைக் குழந்தைக்கு அமைச்சரின் பெயர் ஏன்?



தார்வார் (கர்நாடகம்) நகரிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரியில் ஓர் அனாதைக் குழந்தையை வளர்த்து வருகிறார்கள். அதற்கு ஒரு வயது ஆகிறது. கர்நாடக மாநில சுகாதார மந்திரியின் பெயரை அதற்கு வைத்திருக்கிறார்கள்! சித்த வீரப்பா. காரணம்: போன வருஷம் ஒரு நாள் அந்த ஆஸ்பத்திரிக்கு அந்தச் சுகாதார மந்திரி விஜயம் செய்வதாக இருந்தது. அன்று அவரை எதிர்பார்த்து எல்லோரும் ஆவலாகக் காத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர் வரவில்லை, பதிலாக அந்த அனாதைக் குழந்தை வந்து சேர்ந்தது.

—சரோஜா ராமச்சந்திரன்.

அலற அவள் மனம் துடித்தபோதிலும், புலன்கள் அவளுடைய இஷ்டத்துக்கு இயங்கத் தயங்கின. வாயைத் திறந்தாள். அந்தச் சுருட்டின் நெருப்பு முனை வெகு வேகமாக அவளை நோக்கிப் பாய்ந்து வந்தது. இன்னது இப்படி என்று அவள் நிதானிக்கு முன், புசுபுசுவென்று ஏதோ வொன்று அவள் உடலை அணைத்தது. இறுகத் தழுவிக் கீழே தள்ளியது.

அவள் துள்ளினாள். துடித்தாள். ஆனால் அவளைப் புரட்டிப் புரட்டி மூலைக்குக் கொண்டு போய்.. கொண்டு போய்..



அட்டைப்படக் குமாரி ராதிகா தலையில் தண்ணீர்ப் பானையுடன் நடந்து வருவதை காமிரா கண்கொண்டு பார்த்துக் காலை எட்டு மணிக்குப் படம் பிடித்திருக்கிறார் புகைப்படக்காரர்.

கொடைக்கானலில் எடுக்கப்பட்ட படம் இது. படம் எடுப்பதைக் காட்டிலும், பானை வாங்குவதற்குப் பட்ட பாடுதான் சற்று அதிகம் என்கிறார் அவர்.

வண்ணப்படம்:
வி. கே. ராஜாமணி

விடிந்த பிறகு
ஊர்க்காரர்கள் அந்த இடத்
போய்ப் பரிசோதித்தார்கள்.

"வெறுமே ஆளுங்களை அ
சுப் போடறதோடு நிற்காம்ம, இ
பொம்பிளைகளைக் கெடுக்கிறதிலே
இறங்கிட்டுது பார்த்தீங்களா?" எ
எல்லோரும் பேசிக்கொண்டார்

அணைந்து கிடந்த சுருட்
திக்கித் திணறி ஆஸ்பத்திரியில் பா
சொன்ன தகவல்களும் அது ஐயத்துக்
மின்றிச் சுருட்டுப் பிசாசின் வேலைத
என்று நம்ப வைத்தன.

கூட்டம் கூட்டமாகக் கூ
அந்த இடத்தில் சிவப்பிரகாச
ஒருவராக, வாய் பேசாமல் கவனித்
கொண்டிருந்தார். எட்டத்தில் கிட
அந்த எரிந்த சுருட்டை அவர் கண்
வெறிக்க வெறிக்க நோக்கின. யா
தொட அஞ்சிய அதை அவர் ஆரா
தார். கையிலெடுத்துத் திருப்
திருப்பிப் பார்த்துவிட்டுத் தூர எ
தார் பெருமூச்சுடன்.

உள்ளூர் ஆஸ்பத்திரி
இரண்டு நாள் படுத்துக் கிடந்த பி
பாரதி புறப்பட்டாள். ஊருக்குத்
தியடித்ததால் அவளுடைய அண்ணனு
அண்ணியும் அலறிப் புடைத்
கொண்டு வந்திருந்தார்கள். எல்லோ
ருடனும் அதே வேனில் திரும்பி
போனாள். சிவப்பிரகாசம் பிரமை பி
தவராகப் பார்த்துக்கொண்டு நின்று
ஊருக்கு வந்தபோது இருந்த கலக
பென்ன! சிரித்த சிரிப்பென்ன!
போது அவள் நடை பிணமாய் ஊரு
குத் திரும்புகிற பரிதாபம் என்ன!

பாறை நுனியில் உட்கார்
பிசாசு அழுது கொண்டிருந்தது. பொல்ல
வன், உயிர் குடிக்கிறவன், நிரபராதிகளை
துன்புறுத்துகிறவன் என்று இருக்
கெட்ட பெயரெல்லாம் போதாதா?
போது, ஒரு பாவமும் அறியாத கன்
பெண்ணைக் கற்பழிக்கிறவன் என்ற பழி
சேர்ந்து விழுந்து விட்டதே தலை
'நானா கற்பழிக்கிறவன்! உடம்பு தளர்
நாடி மெலிந்து, எலும்பும் தோலு
ஆகிவிட்ட நானா காமவெறி பிடித்
துள்ளுகிறவன்!' அதற்கு அழுகை அழு
யாய் வந்தது. மாலை மாலையாய்க் க
ணீர் வடிய அது உட்கார்ந்திருந்தது.
தனை உயரத்துக்கும் மேலே, சிகரம
சிகரத்தில் ஒருவன் இவ்வளவையும் பா
துக் கொண்டு இருக்கிறான். அவன் நியா
வழங்காமல் போக மாட்டான்...



பெண்களின் நீச்சல் உடை என்ருல் கவர்ச்சியாம். ஆண் என்ருல் ஏனே முகம் சுளிப்பார்!

படம்: ஒரே தந்தை, தேங்காய் சீனிவாசன், சுருளிராஜன், ஜெய்சங்கர்.

—''சலன்''

"ஏய்! கருணு! உனக்கு ஏதோ தபால் வந்திருக்கிறது!'' என்று உள்பக்கம் பார்த்து உறையை வீசியெறிந்தார் சிவப்பிரகாசம்.

அவர் மகன் உள்ளேயிருந்து வந்து அதைப் பொறுக்கிக் கொண்டான். பிரித்தான்.

''வேலைக்கு மனுப் போட்ட இடத்திலிருந்து ஏதாவது வந்திருக்கிறதா?'' என்று கடையில் இருந்தபடியே கேட்டார் சிவப்பிரகாசம்.

''இல்லே நயினு, ஒரு பிரெண்ட் எழுதியிருக்கிருன்,'' என்று தெரிவித்துவிட்டு உள்ளே போய்விட்டான் கருணு.

''தண்டச் சோத்துக்குத் தண்டச் சோறுதான் எழுதுவான்! பின்னே கவர்னரா எழுதுவார்!'' என்று முனகினுர் தந்தை. குரல் தான் அப்படிக் கடுமையாக ஒலித்ததே தவிர, ஏனே அவர் உதட்டில் ஒரு குரூரமான புன்னகை விளையாடிக்கொண்டிருந்தது.

உள்ளே சென்ற கருணு, அந்தக் கடிதத்தை மீண்டுமொரு முறை படித்துப் பார்த்தான். அவன் இருதயத்தில் பரவசமும் பீதியும் ஒருங்கே இணைந்தன.

'அன்புள்ள கருணு,

என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனுல் உங்களை எனக்குத் தெரியும். போன வாரம் பாரதியுடன் வந்திருந்த சினேகிதிகளில் நானும் ஒருத்தி. முதல் தடவை உங்கள் அப்பாவின் கடையில் கிரஷ் வாங்கிக் குடித்துக் கொண்டிருந்தபோது நீங்கள் நடையில் நின்று எங்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். அப்போதே என் மனசை உங்களிடம் பறி கொடுத்துவிட்டேன்.

உங்கள் மீதுள்ள காதலை மறக்கமாட்டாதவளாக மறுபடி உங்கள் ஊருக்கு நாளை வருகிறேன். அதே பிசாசுப் பாறையருகே அதே நேரத்தில் காத்திருப்பேன். கட்டாயம் வாருங்கள்.

என்றும் உங்கள்
கல்யாணி.'

அவன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் கடிதத்தைக் கிழித்து வெளியே எறிந்தான். அவன் உள்ளம் மகிழ்ச்சியால் படபடத்தது. கல்யாணி! அன்று வந்திருந்த பெண்களின் முகங்களை நினைவுபடுத்திக்கொண்டு பார்த்தான். அவர்களில் கல்யாணி என்பவள் எவளாக இருக்கும்?..

இருட்டி வெகு நேரமாகி விட்டது.

அவன் அலங்காரம் செய்து கொண்டான். புறப்பட்டான்.

நிலாக் காலம் முடிந்து, தேய்பிறை ஆரம்பமாகிவிட்டதால், மேகங்கள் சூழாமலே வானம் இருண்டிருந்தது. போன வாரத்தைக் காட்டிலும் குளிர் அதிகரித்திருந்தது.

வளைந்து வளைந்து செல்லும் மலைப்பாதையில் அவன் போய்க் கொண்டிருந்தான். திடீரென்று அவனை யாரோ பின்னாலிருந்து இழுத்தார்கள்.

'கல்யாணி,' என்று உவகையுடன் அவன் கூப்பிட நினைத்தான். அதற்குள் பலமாய் ஓர் அடி அவன் தலையில் விழுந்தது. அலறிக்கொண்டு விழுந்தான். புரட்டிப் புரட்டி எடுக்கப்பட்டான். பொதேர் பொதேரென்று குத்துக்களும் அறைகளும் அடிகளும் அவன் உடலெங்கும் சரமாரியாய் இறங்கின.

பொழுது விடிந்த போது அவன் சவமாகிக் கிடந்தான்.

"அடேய் தம்பி! கருணா! என் செல்லமே!" என்று அவன் மீது விழுந்து விழுந்து கதறினாள் அவன் தாய்.

அருகிலே வாயை மேல் துண்டினால் புதைத்துக் கொண்டு சிலை போல நின்றார் சிவப்பிரகாசம்.

அவர்களுக்கு ஆறுதல் சொல்லும் வகை தெரியாமல் ஊர் ஜனங்கள் கூடி நின்றார்கள். பக்கத்திலே கிடக்கும் பாதி எரிந்த சுருட்டைப் பார்ப்பதும் தங்களுக்குள் பேசிக் கொ வதுமாக இருந்தார்கள்.

"பாவிப் பையன் எதற் இந்த இடத்துக்கு வந்தான்? போ வாரம்தானே ஒரு அப்பாவிப் பெண் அது கெடுத்தது? அப்படியும் தீரவில்லையா? அதற்குள் ஒரு பச் பிள்ளையின் உயிரையே குடி விட்டதே!" என்று கண்ணைத் துடை துக் கொண்டார் ஒருவர்.

பிசாசு அந்தப் பாறையின் நு யில் அவர்கள் பேச்சையெல்லாம் கே கொண்டுதான் இருந்தது. ஆனால், மறு இப்படி அபவாதம் வந்து சேர்ந்ததே என வருத்தப்படவில்லை. நேற்றிரவு எல்லாவற் யும் பார்த்துக் கொண்டிருந்ததால் அத ஆறுதல் ஏற்பட்டிருந்தது.


இந்தச் சிவப்பிரகாசத்துக் தான் எத்தனை நேர்மையுணர்ச்சி! கிருந்தோ வந்த ஒரு பெண்ணைக் கெடு வன் தன் பிள்ளைதான் என்பதை அந் சுருட்டின் மூலம் கண்டு கொண்டதும், னைத் தந்திரமாக இங்கே வரவழைத் தன் கையாலேயே அடித்துக் கொ போட்டு நீதியை நிலைநாட்டி விட்ட அவன் ஒரு சுருட்டைக் கொளுத்திப் போ எல்லோரையும் ஏமாற்றிய மாதிரி, இவ அதே சுருட்டை வைத்து, எல்லாரும் நம் மாதிரி பண்ணிவிட்டார்!

பழையபடி சுருட்டுப் பி செய்த அக்கிரமம் என்று மக்கள் பே கொள்வார்கள். பேசிக் கொள்ளட்டும். இ ஊரில் ஒரே ஒரு ஆத்மாவுக்கு மட்டுமா தெரியும், இதெல்லாம் என் வேலை அ என்று. போதும்.

பிசாசு பாறை நுனி அமர்ந்த வண்ணம் நிம்மதிப் பெருமூ விட்டது.

மிஸ் ரம்பா

மீசையின் பய



பிரிவினை வாதிகள் பற்றிய கருத்துச் சித்திரம் (24-7-75 குமுதம்) கண்டேன். 'மீன்' பலராலும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்ட உணவாகும். மங்களூரிலும், வங்காளத்திலும் பிராமணர்களும் ஏற்றுக் கொண்டுள்ள உணவுப் பண்டம்.

பெங்களூர்-8 முத்து செல்வன்

மீன் என்றால் மட்டமா?

காலத்திற்கும் சமய சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு, மக்களுக்கும் அரசுக்கும் தகுந்த கருத்தைக் கூறும் தலையங்கமையா உமது தலையங்கம்!

மன்னார்குடி பி. வின்செண்ட் ஜெயக்குமார்

உமது விஷமமான தலையங்கம் மூலம் வாசகர்களின் நெஞ்சைச் சுட்ட நெருப்பு, கவிஞரின் கவிதை மழையால் தணிந்தது.

அனஞ்சனூர் ஏ. ஞானமூர்த்தி

தெய்வக் குழந்தை

'தருமன்' எழுதிய 'ஒரு போட்டி மட்டும்' சிறுகதை என் உள்ளத்தைத் தொட்டது. நிர்மலா எத்தனை கோடி செலவழித்தாலும் பெற முடியாது. இறைவன் ஒருவனால்தான் அதை அவள் பெற முடியும். சிறந்த கருத்து.

திருவப்பூர் எஸ். எஸ். ஜமால் முஹம்மது

தேடி கண்டுகொண்டேன்

படத்தில் மட்டுமல்ல, 'கோணமாண' உங்கள் விமரிசனத்திலும் தான். இந்த அறுப்புக்கு, பழைய பாணி கொஞ்சல் விமரிசனங்களே தேவலாம் போல் இருக்கிறது.

காரைக்கால் இரா. துரைராஜன்

கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்த போது அட்மிட் ஆகியிருந்தவர்களில் தெரிந்த முகம் மாதிரி ஒருவர் தென்படவே, யார் இவர் என்ற என் கேள்விக்கு, 'இவர்தான் குமுதம் சினிமா விமரிசகர்,' என்று கூறினார்கள்.

போடிநாயக்கனூர் எஸ். சையதுமுகமது

உங்களது மதிப்பீடு துல்லியமாகவும், நேர்மையாகவும் இருந்தது. இப்படி எழுதுவது அப்படக் கலைஞர்களுக்கு நல்ல பாடமாகவும், படம் பார்க்கப் போகிறவர்களுக்கு முன்னெச்சரிக்கையாகவும் இருக்கும்.

மேட்டுப்பாளையம் மனோகர்

அப் அப் அப்சாமி

அப்புசாமி கதைதான் ரீஸண்ட் குமுதம் கதைகளிலேயே 'சுபர்ப்'பாக இருக்கிறது. வாழ்க அப்புசாமி.

மன்னார்குடி டி. எஸ். கோபாலகிருஷ்ணன்

தேர்வுக் கண்காணிப்பாளராகக் கல்லூரி ஆசிரியர்கள்தான் நியமிக்கப்படுவார்களேயன்றி, சீதாப் பாட்டி போலக் கண்ணில் அகப்படுபவர்களெல்லாம் கண்காணிப்பாளராக நியமிக்கப் படமாட்டார்கள்.

திண்டுக்கல்-4 எஸ். சங்கர்

எந்த ஒரு பரீட்சை நடந்தாலும் அங்கு சூபர்வைஸ் செய்யும் ஒவ்வொருவரும், பரீட்சை ஆரம்பமாவதற்கு முன், "என் உறவினர்கள் யாரும் இங்கு பரீட்சை எழுதவில்லை," என்று உறுதி மொழி தர வேண்டும்.

சேலம்-8 மு. சி. சம்பந்தம்

விடிகாலையா! பிடி அவரை!

ஓர் அவசரச் சட்டம் போட்டு உம்மை முதலில் கைது செய்ய வேண்டும். அப்பொழுதுதான் 'விடிகாலை 8–00 மணிக்கே எழுந்து ஆபீஸ் ஓடினார்,' என்பது போன்ற அபத்தமான ஜோக்குகளைப் போடமாட்டீர்கள். எல்லா ஊர் மக்களுக்கும் விடியற்காலை என்பது 4–00 மணியாக இருக்கும்பொழுது உமக்கு மட்டும் 8–00 மணியா?

தில்லைநகர் ஜி. விஜயகுமார்

இஞ்சும் மஞ்சுவும்

இரண்டு படத்தில் நடித்த உடனேயே அடையாளம் தெரியாமல் பெருத்துப் போகும் நட்சத்திரங்கள் உள்ள இன்றைய நிலையில், தமிழ், தெலுங்குப் படவுலகங்களில் கொடி கட்டிப் பறக்கும் மஞ்சுளா, மூன்று வருடத்தில் இரண்டு 'இஞ்ச்' பெருத்ததைப் பெரிதாகப் புள்ளி விவரத்தோடு வெளியிட்டிருக்கிறீர்களே?

ஈரோடு-3 வி. முத்துமாணிக்கம்

அக்காவுக்கு மட்டுமென்ன, கொம்பா?

ஜி. கே. சரோஜா

"போட்ட பந்தல்
பிரிக்கலியே—
வந்த உறவு போகலியே—
போட்ட மாலே உதிரலியே—
எந்தன் உயிரை காணலியே—"

'டேப்' அலறிக் கொண்டிருந்தது. ஜெயப்ரியா சோபாவில் சாய்ந்து கண்ணே மூடியபடி பாட்டின் கூடவே வாயசைத்துக் கொண்டிருந்தாள். எதிரே இரண்டு மூன்று திண்டு போர்வழிகள் உட்கார்ந்திருந்தார்கள். டீப்பாயில் ஐஸ் மிதக்கும் கூல் டிரிங்க்ஸ்; ஒரே சிகரெட்டுப் புகை.

ரமாவுக்குக் கண்ணேக் கரித்தது. மனசும் கரித்தது.

"ஏண்டி ரமா, இந்த ஆஷ் டிரேயை எடுத்துப்போய் அவர்களிடம் வை." அம்மா ஆர்டர் பண்ணியது போலிருந்தது ரமாவுக்கு.

"வேணுமானல் அக்காவே வந்து எடுத்துக்கொண்டு போகட்டுமே?" வெடுக்கென்று சொன்னுள் ரமா. "என்னமோ சினிமாவிலே நடிக்கிரு, அந்தப் பெருமையிலே ராணி மாதிரி இருக்கா அக்கா. நான்தான் வேலேக்காரி மாதிரி வேலே செய்ய வேண்டி யிருக்கிறது." ரமாவின் வாய் முணுமுணுத்தது.

"ஸ்...ஸ்...பாட்டு ரொம்ப நல்லா அமைஞ்சிட்டது. இனி உங்க பொறுப்பு. ஆடியன்ஸ் எல்லாரையும் இந்த சீன் பார்க்கிறப்போ கொடமொடமாக் கண்ணீர் கொட்ட வச்சிடணும். அந்த மாதிரியான சோகக் காட்சி இது!" ஹாலில் சினிமா டைரக்டர் பேசிக்கொண்டிருந்தார்.

"காஸ்ட்யூம் பாயை அனுப்பறேன். டிரயல் பார்த்திட்டா நாளேக்குச் சுலபமாயிருக்குமில்லே?" பட முதலாளி வேலேயிலேயே கண்ணுயிருந்தார்.

"அப்ப நாங்க வரட்டுமா?" சினிமாக்காரர்கள் கோரஸ் இது.

"அப்பப்பா..!" பெருமூச்சு விட்டாள் ரமா. "என்ன அரட்டை, என்ன கும்மாளம்! இந்த வீட்டிலே நிம்மதியா படிக்கவே முடியாது."

கட்டிலில் தொப்பென்று விழுந்தாள் அவள். வீட்டிலே எத்தனே பேதம்!

உள்ளே சமையற்கட்டில் அக்கா ஜயப்ரியாவின் குரல் கேட்டது. "பாயில்ட் வெஜிடபிள்ஸ் கூட வேண்டாம். வெறும் ஜூஸ் மட்டும்போதும்."

'ஏன் நாங்கள் எல்லோரும் சோற்றையும் குழம்பையும் தானே சாப்பிடுகிறோம்? எங்களேவிட நீ என்ன வாழ்கிருய்?' மனதிற்குள் பொருமினுள் ரமா.

ஜெயப்ரியா சினிமாவில் நடிக்க ஆரம்பித்ததிலிருந்து வீட்டில் அவளுக்கு ராஜ உபசாரம்தான். காப்பிக்குப் பதில் ஓவல். சாப்பாட்டுக்குப் பதில் பாயில்ட் வெஜிடபிள்ஸ். இடை இடையே சாத்துக்குடி ஜூஸ். வைடமின் மாத்திரைகள். பழ வகைகள்...

அவள் தூங்கிக் கொண்டிருந்தால் வீட்டில் மயான அமைதி நிலவ வேண்டும். "சூ! யாரும் சத்தம் போட்டுத் தொலேக்காதீர். குழந்தை இப்பொழுதுதான் கண்ணசந்திருக்கிருள்." அம்மாவுக்கு எப்படித்தான் இப்படிப் பாகுபாடு செய்யத் தோன்றுகிறதோ!

நான் படித்துக் கொண்டிருந்தால் மட்டும் வீட்டில் இந்தக் கும்மாளம்! ரமா மனத்துக்குள் வெதும்பினுள்.

வீட்டுக்குள் நடமாட அக்காவுக்கு மட்டுமே அறுபது ரூபாயில் ஹவுஸ் கோட். வயிற்றைப் பற்றி எரிந்தது ரமாவுக்கு.



'எனக்கு மட்டும் ஒரு சான்ஸ் கிடைக்கட்டும் சினிமாவிலே— நான் இவளைவிட நன்றாகவே நடிப்பேன்.' ரமாவுக்கு அது எப்பவுமே உள்ள ஆசை.

ஹாலில் யாரோ ஒருவர் பேசிக் கொண்டிருந்தார். "ஒரே ஒரு நாள் கால்ஷீட்டுத்தான். உங்கள் ஸிஸ்டரே நடித்தால் நன்றாக இருக்கும்."

ரமா காதைக் கூர்மையாக்கிக்கொண்டாள். "என் ஸிஸ்டர் படித்துக்கொண்டிருக்கிறாள். அவளுக்குச் சினிமாவில் நடிக்கப் பிடிக்குமா என்று தெரியவில்லை..." அக்காவின் பேச்சு கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை ரமாவுக்கு.

"நீங்கள் கேட்டுப் பாருங்களேன். சரி என்றால் எங்களுக்குத் தொல்லையே இல்லை." பட முதலாளி கெஞ்சினார்.

"ரமா!"

காத்திருந்ததுபோல் ஓடிவந்தாள் ரமா.

எப்படியோ ரமாவுக்குப் படப்பிடிப்பு நாளும் வந்தது. காலை நாலு மணிக்கே குளித்து ரெடியாகிவிட்டாள் ரமா. அவளுக்கு உள்ளமும் உடலும் படபடத்தன. என்ன வசனம் கொடுப்பார்களோ? என்ன உடையோ?

"சூடாயிருக்கு. ஆறிப் போறதுக்கு முன்னே சாப்பிட்டுவிடு," அம்மா தந்த காப்பியை வெறித்துப் பார்த்தாள் ரமா.

மேக்கப்பில் முகம் எப்படி மாறுமோ? சரித்திரப் படமாயிற்றே! தலையில் கொண்டைக்கு மேல் கொண்டையை வைத்துக் கோபுரம் கட்டிவிடுவார்களோ என்னவோ? ரமா தனக்குள்ளே நினைத்துக் கொண்டாள்.

"ரமா, காப்பி சாப்பிடேன்." சிந்தனையைக் கலைத்த அம்மாவை எரித்துவிடுபவள் போல் பார்த்தாள் ரமா. "அம்மா, நீ கொஞ்சம் சும்மா இரேன். எனக்கு இப்போ எதுவுமே வேண்டாம்."

அம்மா உள்ளே போய்விட்டாள். வாசலில் ஸ்டுடியோ கார் ஹாரன் கேட்டது.

பளிச்சென்ற ஒளியில் கண்ணாடி முன் உட்கார்ந்திருந்த ரமாவுக்குத் தன் முகமே மாறிவிட்டது போல் தோன்றியது. தலையில் நறுக்கென்று கொண்டை ஊசி ஒன்று இறங்கியது.

"ஹாவ்!" வாய்விட்டு கத்திவிட்டாள் ரமா.

"ஓ! ரொம்ப ஸாரி அம்மா." ஹேர் டிரெஸ் செய்யும் மேரி ஊசியைச் சரி செய்தாள்.

தலையில் ஓர் அம்மிக் குழவி! அவ்வளவு பாரம். கழுத்தே உள்ளே இறங்கிவிடும் போலிருந்தது. "ஐய்யோ ஐய்யோ—இது கொஞ்சம்கூட நன்றாக இல்லை. பைஸா நகர கோபுரம் போல." வெறுப்போடு தலையைக் குலுக்கினாள் ரமா.

"அம்மா, ஆர்ட் டைரக்டர்



'அமமா அரிசி போடு.'
'என்னது? அம்மா அரிசியா!'
'தாய் - லாந்து அரிசி வரப் போகுதுன்னுங்களே!'

போட்ட ஸ்கெட்ச். இதோ பாருங்க. நான் இதன்படிதான் ஹேர் டிரெஸ் பண்ண வேண்டும்.'' சொல்லிக் கொண்டே மேரி ஸ்கெட்ச் பேப்பரை ரமாவின் மடியில் போட்டாள்.

''என்னமா அலட்டிக்குது? இதெல்லாம் பிடிக்கல்லேன்னு இந்த நடிப்புத் தொழிலுக்கே வந்திருக்கக் கூடாது. உங்க அக்கா இருக்காங்களே, சாதுப் பொண்ணு. எத்தனை பொறுமை தெரியுமா? வாயே திறக்காது. அது தான் ஹீரோயினுயிட்டது.'' மேரி யாரிடமோ சொல்வதுபோல் சொன்னுள்.

''அம்மாடி! சே, மூச்சே நின்னுடும் போலிருக்கே. கொஞ்சம் லூஸ் விடம்மா. இப்படியா டாக்கா பிடிக்கறது?'' ரமாவுக்குச் சோளியைப் பிய்த்து எறிந்துவிட வேண்டும் போலிருந்தது.

''அம்மா, இங்கே லூஸ் விட்டா ஸ்கெட்ச்சே போயிடும். அப்புறம் செட்டுக்குப் போனு ஆர்ட் டைரக்டர் எங்களைத்தான் கோவிச்சுப்பார். ஹிஸ்ட்டாரிகல் ஸப்ஜக்டுன்னு டிரெஸ்ஸெல்லாம் கரெக்ட் ஃபிட்டிங்காயிருந்தாத்தான் நல்லாயிருக்கும். நீ நல்லா டைட் பிடிப்பா!'' டெய்லர் ராமய்யாவை அறைந்து விட வேண்டும் போலிருந்தது ரமாவுக்கு.

''அம்மா, டிபன் கொண்டாரட்டுமா?'' பையன் கேட்டான்.

தலையோ, விண் விண்ணென்று தெறித்தது. இறுக்கிப் பிடித்த சோளியால் மூச்சே விட முடியவில்லை. இந்த லட்சணத்திலே இட்டிலியும் தோசையும் எப்படிச் சாப்பிடுவது? ''டிபன் வேண்டாம்,'' ரமா தீர்மானமாகச் சொல்லிவிட்டாள்.

செட்டுக்குள் நுழையும் போதே ரமாவுக்கு வெட வெடவென்று நடுங்கியது. பரீட்சை கேள்வித்தாள் போல, நான்கைந்து பேப்பர் வசனம் ரமாவிடம் கொடுத்தார்கள். ''இத்தனையுமா பேசவேண்டும்?'' ரமா விக்கித்துப் போனுள்.

''டமிள் நல்லா பேச வருதா?'' நாற்காலியில் சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்த அவளிடம் ஒரு குண்டு கேட்டது.

ரமாவுக்குப் பற்றிக்கொண்டு வந்தது.

''அம்மா, டிபன் சாப்பிடலையே?'' பையன் மறுபடியும் கேட்டான். ''இப்பொழு டயலாக் பேசவா டிபன் சாப்பிடவா?'' ரமா முறைத்த முறைப்பில் பையன் ஓடிவிட்டான்.

இரண்டு டேக், மூன்று டேக், ஐந்து டேக்—

''வாய்ஸ் ரொம்ப வீக்கா இருக்கிறது. வசனமும் தெளிவாக இல்லை.'' யாரோ ஒருவர் பேசிக் கொண்டிருந்தது ரமாவின் காதில் விழுந்தது.

''அம்மா, இந்தாங்க,'' பையன் பெரிய கிளாஸ் ஒன்றில் சா... துக்குடி ஜூஸ் கொண்டு வந்தான்.

ஐஸ் மிதந்து கொண்டிருந்தது. ரமா கிளாஸை வாங்கி மடமடவென்று குடித்தாள் ஒரே மூ... சில். சற்றே தெம்பு வந்தது.

மத்தியான 'பிரேக்'கி... போது: ''அம்மா, உங்க அக்கா கொடுத்தனுப்பிச்சாங்க.'' ரமா கூ... யைப் பார்த்தாள்.

''ஜெயப்ரியா அம்மாதா... உங்களுக்கு ஜூஸ் அனுப்பினுங்க. அவ... களுக்குப் பக்கத்து ஸ்டுடியோவி... தான் ஷூட்டிங்காம்.'' பைய... கேரியரை எடுத்துப் பிரித்தான்.

கையில் இட்டுக் கொண்... ருக்கும் 'அல்டா'வுடன் குழம்பை... ரசத்தையும் எப்படிப் பிசைந்து ச... பிடுவது? பெரிய பிரசினைதா...

மென்று விழுங்கினுலும் உணவு உள்ளே போகாத அளவு இறுக்கிப் பிடித்த சோளி. எதற்கு இத்தனை சிரமம்? சாப்பாடே வேண்டாம். ரமா மீண்டும் சிந்தித்தாள். 'இன்று ஒரு நாள் சாப்பிடாமல் இருக்கலாம். ஆனல் அக்காவைப்போல் இரவு பகல் படப்பிடிப்பு இருந்தால்? பாவம், அக்கா!'

பிரித்த டிபன் செட்டை எதிரில் வைத்தான் பையன். துண்டு துண்டாய் நறுக்கிய மாம்பழம். அடுத்தது கெட்டித் தயிர். இன்னென்றில் வேகவைத்த காய்கறியும், ஒரு ஸ்பூனும் மற்றென்றில் வெண்ணெய் தடவிய ரொட்டித் துண்டு. ரமா இரண்டே நிமிடத்தில் எல்லாவற்றையும் காலி செய்தாள்.

மறுபடியும் செட்டுக்குள் நுழைந்தாள் ரமா. காரசாரமான சீன். வசனத்தை மென்று விழுங்கிக்கொண்டிருந்தாள் அவள். ஷூட்டிங்கைப் பார்க்கவென்று ஒரு கும்பல் வேறு. போதுமடா சாமி!

இரவு 10 மணிக்கு வீட்டுக்கு வந்த ரமாவுக்குப் படப்பிடிப்புக்கான உடையைக் களைந்ததும் ஓர் இரும்பு உறையிலிருந்து விடுபட்டது போலிருந்தது. "இந்தாடி, இதைப் போட்டுக்கோ." அம்மா கொடுத்த ஹவுஸ் கோட்டை —அக்காவினுடையதுதான்— போட்டுக்கொண்டதும் ரமாவுக்கு வெகு நிம்மதியாக இருந்தது.

"அம்மா, மத்தியானம் நீ அனுப்பிய..." ரமா முடிக்கவில்லை.

"நான் எங்கே அனுப்பினேன்? நீ ஒன்றுமே சொல்லவில்லையே? ஜெயப்ரியாவுக்கு மட்டும்தான் அனுப்பினேன் சாப்பாடு. அவள் அதை உனக்கு அனுப்பிவிட்டு ஸ்டுடியோவிலே சாப்பிட்டாளாம். போன் பண்ணினள்." அம்மா சொல்லிக்கொண்டே போனுள்.

ஒரு புதுப் பாடம் படித்து விட்ட நிம்மதியில் அன்றிரவு கண்ணயர்ந்தாள் ரமா.

மறுநாள் ரமா வாங்கிக் கொண்டு வந்த பையைப் பார்த்தாள் அம்மா. "என்னடீ ரமா. இத்தனை ஆப்பிள் எதற்கு இந்த அநியாய விலையில்? இது ஆப்பிள் ஸீஸன்கூட இல்லையே!" என்று அங்கலாய்த்தாள்.

"உனக்கு ஒண்ணும் தெரியாது அம்மா. நீ பேசாமே இரு," என்று சொல்லிக்கொண்டே மிக்ஸியில் ஆப்பிளைத் துண்டம் துண்டமாக நறுக்கிப்போட்டு ஜூஸ் பண்ண ஆரம்பித்தாள் ரமா.

அக்காவுக்கு எது வேண்டும் என்று அவளுக்கு அல்லவோ தெரியும்? பாவம் அக்கா!



சென்னையில் செயற்கை மூட்டு ஆபரேஷன் செய்து கொண்ட 5 வயதான ராஜம்மா


மூட்டுக்களில் ஏற்படும் 'ஆர்த்ரைடிஸ்' என்னும் மூட்டு அழற்சி நோயினல் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்த மூட்டை அகற்றிவிட்டுப் பிளாஸ்டிக் மூட்டைப் பொருத்தும் அதிசயம் (குமுதம் 24-7-75) லண்டனில் மட்டும் நடக்கவில்லை. இப்போது சென்னையிலேயே கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் நடந்து வருகிறது.

இதைச் செய்யும் இளம் டாக்டர் ஒருவர் இதற்காக லிவர்பூல் (இங்கிலாந்து) பல்கலைக் கழகத்தில் பயிற்சி பெற்றுத் திரும்பி வந்துள்ளார். தென்னிந்தியாவிலேயே முதல் முறையாக இந்தச் செயற்கை மூட்டு ஆபரேஷனை அவர் சென்னையில் நடத்தினர்.

—இ. எஸ். எஸ். இராமன்

குமுதம்

மதி 28 மலர் 41
31-7-75


திரு. கிளார்க்

இயற்கையா? செயற்கையா?

இயற்கையோ, செயற்கையோ - மழை பெய்வது குறித்து மகிழ்ச்சிதான். ஆனல் செயற்கை மழை சமாசாரத்தில் இரண்டில் ஒன்று தெரிய வேண்டும்.

அது உண்மைதானு? அல்லது வெறும் பிரசாரமா?

பூண்டி சத்தியமூர்த்திசாகர் நீர்த் தேக்கத்துக்குள் மேற்கொண்டு பத்துக் கோடி காலன் பாய்ந்திருப்பதாகவும், அதன் பலனுக நீர் மட்டம் இரண்டு அடி உயர்ந்திருப்பதாகவும் விவசாயத் துறை விசேஷ காரியதரிசி திரு. கே. சொக்கலிங்கம் தெரிவித்திருக்கிருர்.

மழை பெய்தது என்னவோ உண்மையாக இருக்கலாம். கோடிக் கணக்கான காலன் தண்ணீர் ஏரியில் பாய்ந்திருக்கலாம். ஆனல் அதெல்லாம், இஞ்சினியர் பிரெட் கிளார்க் நடத்திய முயற்சியின் பலன் என்பதற்கு என்ன அத்தாட்சி?

சில வாரங்களுக்கு முன்பு வரை, மழையே துப்புரவாக இல்லாத ஒரு துடைத்துப் போட்ட கட்டம் இருந்தது. அப்போது திரு. கிளார்க் வந்து மழையை வருவித்திருந்தாராஞல், மழைக்கும் அவருடைய மேக வேட்டைக்கும் உள்ள தொடர்பு சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவாகியிருக்கும். அப்போது அவர் வரவில்லை.

போதுமான அளவு பெய்யாவிட்டாலும், சென்னையிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் இயற்கையாகவே மழை பொழியத் தொடங்கி விட்ட பருவத்தில் அவர் தன் சாமர்த்தியத்தைக் காட்டிவருகிருர். தாஞகப் பெய்யும் மழைக்குக்கூட, அவர் தெளிக்கு[ம்] ஸில்வர் அயோடைட்தான் காரண[ம்] என்று முடிவு கட்டிவிடக் கூடிய சாத[க] மான சூழ்நிலை அவருக்கு இருக்கிறது.

இந்த நிலையில், மழை வர[] வழைத்த பெருமை எந்த அளவுக்கு[த்] திரு. கிளார்க்கைச் சாரும் என்பது கேள்வி.

அதை நிர்ணயிக்க, அரசாங்[க] அதிகாரிக்கோ, பொது மக்களுக்கே[ா] தகுதி இல்லை என்று தோன்றுகிறது.

விஞ்ஞான பரிசோதனையின் விளைவுகளை விஞ்ஞானிகள்தான் எடை போட முடியும். இது சம்பந்தமா[க] அரசாங்கம் உடனடியாக ஒரு குழுவை நியமிப்பது நலம்.

செயற்கை மழை போதி[ய] அளவு வெற்றி பெற்றதாக அந்த[க்] குழு நற்சான்று வழங்கும் பட்சத்தில் இதற்கென்று தனியே ஒரு துறை அமைத்து, நம்மவர்களை உரிய முறையில் பயில்விக்கவும், ஆங்காங்கே செயற்கை மழை வருவிக்கவும் சுறுசுறு[ப்] பாக ஏற்பாடு செய்யலாம்.

அமெரிக்க இஞ்சினியர்களி[ன்] பங்கு மிகவும் குறைவு என்று குழு தீ[ர்] மானிக்குமாகில், இந்த முயற்சிகளி[ல்] இறங்கிப் பணத்தையும் நேரத்தையு[ம்] வீணுக்கிக் கொண்டிருக்க வேண்டி[ய] தில்லை.

இரண்டில் ஒன்று தெரிந்[து] கொள்வது நல்லது.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்[தி] அமைக்கவும், கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. குமுதம் பிரிண்டர்[ஸ்] பிரைவேட் லிமிடெடில் அச்சிட்டவர்: ஏ.பி.ஏ. பெரியகருப்பன். குமுதம் பப்ளிகேஷன்[ஸ்] பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர்: பி.வி. பார்த்தசாரதி. ஆசிரியர்: எஸ்.ஏ.பி. அண்ணுமலை. முகவரி: 83, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை—600010.

ஒப்பந்தமா?

அப்படியெதுவும் கிடையாது!

■■ தேனாம்பேட்டை எல்டாம்ஸ் ரோடு போயஸ் சந்தில் சுருளிராஜனின் வீடு இருக்கிறது.

எதிலும் பட்டுக் கொள்ளாமல் தன் வேலையைப் பார்த்துக் கொண்டு போகிறவர் சுருளி. "நான் குறிப்பிட்ட ஒருத்தரையே எப்போதும் நம்பிட்டு இருக்கிறதில்லே. கடவுள் விஷயத்தில் கூடத்தான். இதோ பூஜை ரூமிலே பாருங்க. ஏசுநாதர், மெக்கா, சுப்ரமணியர் இப்படி எல்லாக் கடவுளும் இருக்காங்க!" என்றார்.

■■ 'மன்னவன் வந்தானடி' படத்தின் படப்பிடிப்பு. வேலைக்காரனாக நடிக்கும் நாகேஷைப் பார்த்து நம்பியார் கூப்பிட வேண்டும். எப்படி நாகேஷை அழைப்பது என்று குழம்பியவர்போல் அவர் பேச வேண்டும்.

"டேய் மாதவா, பாலமுருகா, ஆறுமுகா, சங்கரா," என்று நம்பியார் பேசினார்.

அவர் குறிப்பிட்ட நால்வரும் யார்?

மாதவன் (டைரக்டர்), பாலமுருகன் (வசனகர்த்தா), ஆறுமுகம், சங்கரன் (தயாரிப்பாளர்கள்).

■■ வாஹினி ஸ்டுடியோவில் ஒரு இந்தி படப்பிடிப்புக்காக வந்திருந்தார் ஜிதேந்திரா. அவரைத் தேடி வந்திருந்த ஒரு ஜோசியர், மூத்த குழந்தை பெண்ணாக இருந்தால் ரொம்ப யோகம் என்றார்.

ஜிதேந்திராவுக்கு ஒரே குஷி. உடனே டெலிபோன் அருகே ஓடி பம்பாய்க்கு டிரங்க்கால் போட்டார் தனது மனைவியிடம் அதைச் சொல்ல. இப்போதுதான் ஒருபெண் குழந்தைக்குத் தாயாகியிருக்கிறார் ஷோபா.

■■ "ஸ்ரீதருடன் இருந்த ஒப்பந்தம் என்ன ஆயிற்று?" என்று பத்மப்பிரியாவிடம் கேட்டேன்.





"ஒப்பந்தமா? அப்படி எதுவும் கிடையாது. முதன் முதலில் ஸ்ரீதர் படத்தில் சிவாஜிக்கு ஜோடியாக அறிமுகமானால் நல்லது என்பதற்காகத்தான் மூன்றாண்டுகளாகக் காத்திருந்தேன். முடியவில்லை. அதற்குள் வேறு படங்கள் வந்துவிட்டன," என்றார் பத்மப்பிரியா.

"நான் காரோட்டிக் கண்ணனில் நடித்ததுதான் சார் கொஞ்சம் தப்பாப் போச்சு. புரொட்யூசர் முதலில் சொன்ன கதை வேறு. எடுத்தது வேறு. பொதுவாக என் பெயரைக் கெடுத்த படம் அது," என்கிறார் அவர்.


—'ராதா'

தென்னங்கீற்று ■

மனத்தளவில் எப்படி இருந்தாலும் உடலளவில் பூப்பு எய்தாத ஒரு பெண்ணின் அகப் போராட்டத்தை (ஓரளவுக்குப் புறப் போராட்டமும் கூடத்தான்) திரைப் படமாகத் தயாரிப்பதென்றால் அதற்குக் கொஞ்சம் துணிவும், எக்கச்சக்கமான சாமர்த்தியமும் தேவை.

பாபா மூவீஸாரிடம் அந்தத் துணிவு இருந்திருக்கிறது.

தலைப்பு, பொருத்தமானது.



சம்பவங்களின் போக்கை— தந்தை செந்தாமரையின் கவலை; விஜயகுமாரிடம் சுஜாதாவுக்குள்ள காதல்; (பெரிய மனுஷி ஆகாத ஒரு கன்னிக்கு அத்தனை இளமைத் துடிப்பு இருக்குமா என்ற பிரசினையை மருத்துவ நிபுணர்களுக்கு விட்டு விடுவோம்). அதிர்ச்சி வைத்தியம் செய்யலாம் என்று டாக்டர் கல்பனா யோசனை சொல்வது; வாழைப் பழத்தோல் சம்பவம்; ரயில் விபத்து; ஆகியவற்றைச் சரிவரப் புரிந்துகொள்பவர்கள் ஓ. ஹென்றி ரகக் கதைக்கான சாத்தியக் கூறுகள் இருப்பதை உணர்ந்து கொள்வார்கள்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, பாலசந்தர் பாணியில் படம் தயாரிக்க வேண்டும் என்ற ஆசை (பேராசை?) படத்துக்கும் ரசிகர்களுக்கும் இடையில் ஓர் இரும்புத் திரையைப் போட்டு விடுகிறது. (டைரக்டர் அரங்கேற்றத்திலும் சொல்லத்தான் நினைக்கிறேனிலும் துணை புரிந்தவர்) மையப் பிரசினையை, பாலசந்தர், நினைத்தும் பார்க்க முடியாத அளவுக்கு வெளிப்படையாகச் சொல்லிவிட்டு, பல நிகழ்ச்சிகளை, குறிப்பாக முடிவை—குறிப்பால் மட்டுமே உணர்த்தியிருக்கிறார்கள். விளைவு? குழப்பம்.

கதாநாயகி பாத்திரம், சுஜாதாவால் சுமக்கப்படுகிறது. 'டெலிக்கேட்'டான ஒரு குறை இத்தனை பகிரங்கமாக—அதுவும் எடுத்த எடுப்பிலேயே—ஒலி பரப்பப்பட்டு, இவ்வளவு வெளிப்படையாக அலசப்பட்ட பின்னரும், படத்திடம் நமக்குக் கசப்பு ஏற்பட்டுவிடாதபடி ஏதோ ஒன்று காக்கிறது என்றால் அது சுஜாதாவே. அவரைப் பொறுத்தவரையில் இது ஒருபடி இறக்கம்தான்.

கல்பனா—எவ்வளவு நாள்கடந்த மறு சந்திப்பு! டாக்டராக வரும் அவரிடம் மெருகு இருக்கிறது. ஆனால் அந்தச் சிரிப்பு! அந்தக் குரலின் குழைவு! ஒரே செயற்கை மயம்.

ரயில்வே பிளாட்பார நிகழ்ச்சி ஒரு வகையில் ஆன்ட்டி கிளைமாக்ஸாகவும் இன்னொரு வகையில் விரச

மாகவும் அமைந்துவிடுகிறது. ஆனானப்பட்ட டாக்டர்களால் சாதிக்க முடியாததை, பக்கெட்பக்கெட்டாகக் கண்ணீர் சிந்தப்படுவதற்குக் காரணமாக இருந்த குறையை, எதிர்பாராத நேரத்தில் ஒரு



சாதாரண வாழைபபழத் தோல் சாதித்துவிடுகிறதே!

கல்பனாவுக்கும் விஜயகுமாருக்கும் உள்ள முற்காலத் தொடர்பே மசமசவென்று பனிப்படலமாக இருக்கும்போது, கல்பனாவுக்கும் அவர் தம்பிக்கும் உள்ள உறவு வேறு நடுவில் குறுக்கிட்டு, சில சமயம் அவர் கதாநாயகன்தானோ என்ற சந்தேகத்தை மூட்டிக் குட்டையைக் குழப்புகிறது. ஏனோ இந்த அனாவசியங்கள்? (அந்த அனாவசியங்களையும் எடுத்துவிட்டால் சிறுகதை, குட்டிக் கதையாகிவிடும் என்பது உண்மை).

செந்தாமரை இருக்கிறாரே—அடேயப்பா, ஆரம்ப கட்டத்தில் முருகன்மேல் வசைபாட ஆரம்பிக்கிறாரய்யா, 'என் பெண்ணை ஏன் இப்படி வைத்திருக்கிறாய்? சொல்லு முருகா, சொல்லு' என்று. அப்புறம் அவர் வாய் ஓய வேண்டுமே. சீனுக்கு சீன் வந்து சோபாவில் சாய்ந்து கொண்டு ஓயாமல் பெண்ணைப் பற்றிய புலம்பல்தான். மனைவியின் வேண்டுகோளுக்காகத் தன் மகளை ஒரு நல்ல பிள்ளைக்கு—அவனுக்கும் தன் கம்பெனியில் மானேஜர் பதவி கொடுத்த பிறகு—கட்டி வைத்துத் தொலைக்கிறார். அவனாயிற்று அவளாயிற்று என்று சிறிசுகள் எப்படியோ அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்ளட்டும் என்று விட்டுத் தொலைத்திருக்கக் கூடாதோ? அப்புறமும் ஓயாமல் மூக்கை நீட்டி அந்தப் பிள்ளைக்குத் துரோகம் செய்துவிட்டதாகப் புலம்பி அவனுக்கு வேறு கல்யாணமும் செய்து வைக்க முயல்கிறார்.

கண்ணாடிக் கதவுக்குப் பின்னால் பேசிக் கொள்வதை பாலசந்தர் ஓசையின்றிக் காட்டினாரென்றால், அந்தக் கட்டத்தின் முக்கியத்துவம் என்ன! சுறுசுறுவென்ற ஊகங்கள் என்ன! 'இந்த நேரத்தில் டாக்டரம்மாவிடமிருந்து உங்களுக்கு ஏன் போன் வர வேண்டும்?' என்று பருவம் கெட்ட மனைவி கேள்வி கேட்டவுடன், கண்ணாடிக் கதவைச் சாத்திவிட்டு மனைவியிடம் கணவன் பேசுவதை ஊமைப்படமாய்க் காட்டுவது—எந்த எஃபக்டைக் கூட்டுவதற்காக? தெரியவில்லை.

பாவம், காமிக் என்ற பெயரில் டைப்பிஸ்ட் கோபு செய்யும் அரை வேக்காட்டு முயற்சிகளைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. வசனத்திலோ நடிப்பிலோ நகைச்சுவையைக் காமிக்கச் சந்தர்ப்பம் இருந்தால்தானே?

சில இடங்களில் காமெரா காரரின் திறமையைக் கண்டு, 'சபாஷ்' என்று வாய்விட்டுச் சொல்ல வேண்டும் போலிருக்கிறது. (சில இடங்களில் மட்டும்.) ஒலிப்பதிவாளர் அனேகமாக எல்லா இடங்களிலும் வாங்கிக் கட்டிக் கொள்கிறார்.

ஆனால் ஒன்று.

வித்தியாசமான சப்ஜெக்ட் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கோவி. மணிசேகரனின் புதுமை வேட்கையை வரவேற்காமல் இருக்க முடியாது. டைரக்‌ஷனிலும் வசன அமைப்பிலும் அவர் முழு வெற்றி பெறாவிடினும், இப்படித்தான் படம் எடுக்க வேண்டும் என்று மனத்தில் வரையறை செய்து வைத்துக் கொண்டு, முழு மனத்துடன் அதை அடையப் பாடுபட்டிருக்கிறாரே, அந்த லட்சிய நோக்கைப் பாராட்ட வேண்டும்.

வெறும் சலசலப்பு.



அரசு பதில்

☐ சி. ராஜமாணிக்கம், திருச்சி.

நடிகர் நாகேஷ் எழுதும் கட்டுரைகளில் தத்துவங்கள் நிறைய வருவது போல் மற்ற நடிகர்களில் கட்டுரை எழுதத் தெரிந்தவர்கள் யார்?

எழுதுவாரோ என்னவோ தெரியாது, ஆனல் தத்துவம் பேசுவதில் நாகேஷுக்கு அண்ணு ஒருவர் இருக்கிருர்; எஸ். வி. சுப்பையா.

☐ ஆர். சுப்பிரமணியன், கூத்தாநல்லூர்.

என் ஒரு வயதுக் குழந்தை குமுதத்தை எந்த இடத்தில் கண்டாலும் கிழித்துவிடுகிருள்.

ஒன்று, அவள் தி.மு.க.வாக இருக்க வேண்டும்; கோபத்தில் கிழிக்கிருள். அல்லது, குமுதம் விற்பனையாளரின் கையாளாக இருக்க வேண்டும்; விற்பனையைக் கூட்டப் பார்க்கிருள்.

☐ பவானிராஜன், சென்னை.

கோவில்களின் பண உதவி பெற்றுத் திறக்கப்பட்டிருக்கும் கருணை இல்லங்களில் சுவாமி படங்கள் மாட்டப்பட்டுள்ளனவா?

எத்தனையோ காலமாகத்தான் சாமி இருந்தது, கோவில் இருந்தது, பணம் இருந்தது. 'கருணை இல்லம்' இருந்ததா? கருணை இல்லம் ஏற்பட யார் காரணமோ அவருடைய படம் மாட்டப்படுவதுதான் இன்றைய நியாயம்.

☐ வி. மதிவாணன், நன்செய்புகளூர்.

முத்தம் கொடுப்பதில் என்ன இன்பம் இருக்கிறது?

முத்தம் இல்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? குழந்தை கொடுக்கும் முத்தத்தில் தூய்மை இருக்கிறது. தாய் கொடுக்கும் முத்தத்தில் பாசம் இருக்கிறது. காதலன் கொடுக்கும் முத்தத்தில் ஆசை இருக்கிறது. வேசி கொடுக்கும் முத்தத்தில் வியாதி இருக்கிறது.

☐ எம். நஸீர் நிஸா, உடன்குடி.

பணம் வரும்போதுதானே சிலருக்குத் தலைக்கனம் வருகிறது? இது சொல்லத் தெரியவில்லை. சும்மா கிடக்கும் பெண்களை வம்புக்கு இழுக்கிறீரே?

'பணம் என் கால் தூசுக்குச் சமானம்' என்று ஓர் ஏழை நினைப்பதாக வைத்துக் கொள்வோம். அது தலைக்கனம் ஆகாதா? அகம்பாவ இயல்பு உள்ளவர்களால், எதை வைத்து வேண்டுமானலும் கர்வப்பட்டுக் கொள்ள முடியும்.

☐ ச. சிட்டிபாபு, கெருகம்பாக்கம்.

இந்த வருடம் செயற்கை மழை பெய்தால் அடுத்த வருடம் மழை குறைவாக இருக்கும் என்று சொல்கிருர்களே?

கிளார்க் எங்கே போய்விடப் போகிருர்? அவரது ஸில்வர் ஐயோடைட் எங்கே போய்விடப் போகிறது? கூப்பிட்டால் ஓடி வருகிருர்.

☐ மன்சூர், போடிநாயக்கனூர்.


குன்றக்குடி அடிகளாரும், குன்னக்குடி வைத்தியநாதனும் ஒரே ஊர் தானே? பின் ஏன் குன்றக்குடி, குன்னக்குடி என்று வேறுபாடு?

எழுத்தில் குன்றக்குடி. பேச்சு வழக்கில் குன்னக்குடி.

☐ எஸ். சாயகுமார், தஞ்சை.

மாக்ஸிம் கார்க்கியின் நாவல்களில் உங்களைக் கவர்ந்ததும் சிறப்பானதும் எது?





ஓல்ட் ஸ்பைஸ்
ஆணின் வெற்றிக்கு அடிகோலுகிறது.
எழில்துள்ளும் பெருங்கடல்.
அழகுப் பொக்கிஷமாக
அவள் அருகிலிருக்க—
ஆம் அவன் ரசனைக்கு
சுருதி கூட்டுகிறது.
வழவழவென ஷேவ்,
குளுகுளுவென குளியல்,
எண்ணத்தைக் கிளர்ந்திடும்
எண்ணற்ற அலுவல்கள்:
இவற்றிற்கெல்லாம்
வேண்டிய உற்சாகம்
பொங்கும் புத்துணர்ச்சியை
அள்ளித்தரும்
ஓல்ட் ஸ்பைஸ்.
ஆண்களின் அழகுக்காக
ஓல்ட் ஸ்பைஸ் அளிக்கும்
அணிவரிசை:
• ஆஃப்டர் ஷேவ் லோஷன்*
• கொலோன்*
• லாதர் ஷேவிங் க்ரீம்*
• பிரஷ்லெஸ் ஷேவிங் க்ரீம்
• பாடி டால்க்*
• ஹேர் க்ரீம்
• பிரிலியண்டைன்.
ஓல்ட் ஸ்பைஸ்
ஆண்மையின் சின்னம்
Old Spice
the mark of a man
Old Spice
Old Spice
* எலுமிச்சை மணத்திலும் கிடைக்கின்றன.
இந்தியாவெங்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைகளில் கிடைக்கின்றன. தயாரிப்பவர்கள்: கோல்:பாக்ஸ் லாபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் மெனஸீஸ்-ஷுல்டன் எண்டர்ப்ரைஸ்.
OS 2(TAM)

7—8—75 (2—3)



வாணிஸ்ரீ (72)

உருப்படியான ஒரே ஸ்ரீ

—ரா. மு. விஜயன்



சுபா (69)

என்னோட திறமை யாருக்கும் தெரியலே!

—ஏ. சி. வர்மன்

ஐந்து வார்த்தை



லட்சுமி (79)

சுயேச்சை அபேட்சகர்

—என். சுகுமார்



ஜெயபாரதி (65)

பார்த்த ஞாபகம் இல்லையோ?

—ஆர். ராஜ்மோகன்



ஜெய்குமாரி (78)

நடிப்பில் கவனம்
செய் குமாரி


—எஸ்பி. சுந்தரம்



சகஸ்ரநாமம் (73

நடிப்பிலே அருன
நாடகப் பெருமை

—மெ. குமரப



சாவித்திரி (59)
ு சுடர் விட்ட திரி
—சுகந்தா ராமகிருஷ்ணன்



சோ (68)
ியுண்டு, முடியில்லை
—எஸ். முத்து



சுஜாதா (76)
தமிழ் அடுப்பு, மலையாள நெருப்பு
—காரை சாயபு மரைக்காயர்



பி. பானுமதி (74)
அண்ணா பாராட்டிய அஷ்டாவதானி
—க. வ. குமாரசாமி



அஞ்சலிதேவி (75)
பாட்டி ஆயினும்
பருவம் மறக்கவில்லை
—வி.ஆர். ராமானுஜம்



ஜெமினி கணேசன் (66)
வரவு எட்டணா,
செலவு பத்தணா
—எஸ். சீனிவாசன்



ஜெயந்தி (77)
சப்-ஜூடிஸ்
—கே. ராமன்



விஜயகுமார் (80)
V— சும்பத்தைத் தொடுவாரா
—எஸ். எச். விசுவந



பண்டரிபாய் (71)
பெட்டர் லேட், தென் நெவர்
—அ. பாலகிருஷ்ண



ஜெயகௌசல்யா (53)
ரிடர்ன் டிக்கட்
கிடைக்குமோ?
—எஸ். சினிவாசன்



எம். என். நம்பியார் (70)
கட்டு கட்டு, சபரிமலைக்கு
மூட்டை கட்டு
—கே.கெஜலக்ஷ்மி



ரமாபிரபா (67)
சென்னைக்கு வடக்கே சிரி
—ரஹிமுன்னிசா லி

இப்போது ...
கும் சில படங்களில் நடிக்கும்படி என்னைத் தயாரிப்பாளர்கள் கேட்டிருக்கிறார்கள்.


—நிர்மலா

கடந்த பத்தாண்டுகளில் சுமார் முன்னூற்றைம்பது தமிழ்ப் படங்கள் வெளிவந்திருக்கும். ஆனால் அவற்றில் நான் ஓர் ஆறு படங்களை மட்டுமே பார்த்திருக்கிறேன்.

—கண்ணதாசன்

என் அம்மாவின் பெயர் ஜெயலட்சுமி. ஹேமமாலினியின் அம்மா பெயரும் ஜெயா தான். (ஜெயா சக்கரவர்த்தி.) நான் ஐயங்கார். அவரும் ஐயங்கார். ஹேமாவை முதன் முதல் டைரக்டர் ஸ்ரீதர்தான் மேக்கப் டெஸ்ட் போட்டுப் பார்த்தார். நானும் அவர் படத்தில் தான் முதன் முதலாக நடிக்க ஆரம்பித்தேன்.

—பத்மப்ரியா



சொன்னார்கள்

நான் நடித்த படங்களைப் பார்த்து விட்டு என் நடிப்பை நேரில் பாராட்டுகிறார்கள். பத்திரிகைகளில் பாராட்டி எழுதுவதில்லை, என் சிறந்த நடிப்பைப் பாராட்டி எழுத முடியாத அளவுக்குப் பத்திரிகையாளர்கள் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. என் நடிப்பைப் பாராட்டி எழுதினால் பெரிய இரண்டு நடிகர்களின் கோபத்துக்கு ஆளாக வேண்டியதிருக்கிறது என்றும் பத்திரிகையாளர்கள் என்னிடம் கூறுகிறார்கள்.

—முத்துராமன்

செட்டில் டஜன் கணக்கில் இட்டிலிக்கு ஆர்டர் கொடுப்பதாக ஒரு பத்திரிகையில் என்னைப்பற்றி எழுதியிருந்தார்கள். டஜன் கணக்கில் இட்டிலி சாப்பிட்டால் இப்படியா ஒல்லியாக இருப்பேன்? 70 எம் எம் மாதிரி இருக்கமாட்டேனா?

—பத்மப்ரியா

நடிகர் சிவாஜிக்கும் எனக்கும் தகராறு எதுவும் கிடையாது.

கேள்வி: நீங்கள் நன்றாகப் பாடுவீர்களாமே? இசையமைப்பாளராக மாறும் எண்ணம் உண்டா?

பதில்: காற்றாடி உயரமாக விடத் தெரிந்தவனை, ஏரோப்ளேனும் விடுவீர்களா என்று கேட்பது போல் இருக்கிறதே! ஏதோ பாடுகிறேன். அதற்காக இசை அமைக்கும் அளவுக்குப் போக முடியுமா?

—கமலஹாசன்



சலவைக் கற்களால் தரை போடப்பட்ட அந்த பெரிய கூடத்தின் ஒரு மூலையில் ஒரு சாய்வு நாற்காலி. அந்தச் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் அலமு. மாலை நேரம். மணி ஐந்து இருக்கும். தம்பி தியாகுவின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவ்வளவு பெரிய பங்களாவில் அலமுவையும் தியாகுவையும் தவிர வேறு யாரும் காலடி கூட எடுத்து வைத்ததில்லை. அவர்கள் அப்பா காலத்திலிருந்து வேலை செய்யும் தோட்டக்கார சின்னசாமி தினமும் வந்து வந்து போவான். வேலைக்காரி தாயி வருவாள். என்றைக்காவது தாயி வரமுடியாமல் போய் அவள் மகள் காந்தா வேலைக்கு வந்து விட்டால், மறுநாள் தாயிக்குச் சரியான அர்ச்சனை விழும். வயது வந்த பெண் தன் வீட்டிற்குள் காலடி வைப்பது அலமுவுக்குக் கொஞ்சமும் பிடிக்காது.

கார் சப்தம் கேட்டது. அதோ தியாகு வந்துவிட்டான். மூக்குக் கண்ணாடியை அணிந்து கொண்டாள். தியாகுவின் முகம் பளிச்சென்று தெரிந்தது. கையில் ஏதோ பெரிய படத்துடன் அவன் உள்ளே நுழைந்தான். நேராக மாடிக்குப் போக, படிகளில் ஏறினான்.

"ஏண்டா தியாகு, கையில் என்ன? ஏதோ ஓவியம் போல் தோன்றுகிறதே?"

"ஆமாம் அக்கா. கையினால் வரைந்த ஓவியம். என் சினேகிதி ராதை எனக்கு அளித்த பரிசு." பதிலுக்குக் காத்திருக்கக் துணிச்சல் இல்லாதவன்போல் படிகளில் ஏறினான்.

"டேய் தியாகு, நில் அப்படியே! இங்கே வா, அந்த ராதை இந்தக் கிருஷ்ணனை எத்தனை நாளாகப் பிடித்திருக்கிறாள்? இன்று படத்தை அன்பளிப்பு என்கிறாள். நாளை தன்னையே அன்பளிப்பு என்பாள். பிறகு தன் படத்தை நிரந்தரமாக உன் இதயத்தில் மாட்டி விடுவாளடா. இந்தக்காலத்துப் பெண்களை நம்பாதே. அதுவும் வேலை பார்க்கும் பெண்களை."— பொரிந்து தள்ளினாள் அலமு.

தியாகு பதில் பேசவில்லை.

அலமு மீண்டும் தொடர்ந்தாள். "இப்பொழுதெல்லாம் அடிக்கடி டெலிபோனில் ஒரு பெண் குரல் கேட்கிறதே? அவளாடா ராதை?"

"..வந்து.. அவளேதான்."

நேருக்கு நேர் அலமுவைப் பார்க்கத் தைரியமில்லாமல் தலை குனிந்தவாறே பதிலளித்தான் தியாகு.

"தியாகு, உன் பணத்துக்காகவும் பதவிக்காகவும் தான் உன்னை வலை வீசுகிறார்கள்..ஜாக்கிரதையாக நடந்துகொள்."

"இப்பொழுது நான் என்ன அக்கா செய்துவிட்டேன்?"

"நீ ராதையைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாயா?"

"ஏன், நான் கல்யாணமே செய்து கொள்ளக் கூடாதா?"

"அப்படித்தான் வைத்துக் கொள். இந்த அலமு உயிருடன் உள்ள வரை, உன்னை வேறு எந்தப் பெண்ணுக்கும் சொந்தமாக்கி விடமாட்டேன். இந்த ஜன்மத்தில் தியாகுவின் பாசம், அன்பு, எல்லாம், இந்த அலமுவுக்குத் தான் சொந்தம்..அலமுவுக்குத் தான் சொந்தம்.." வெறி பிடித்தவள் போல் கத்தினாள் அவள்.

தியாகு யோசித்தபடியே மாடிக்குச் சென்றான்.

சகோதரியின் மனத்தை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அது ஒருவித விசித்திரப் போக்காகக் காணப்பட்டது. தியாகுவுடன் யார்

டபிள்யூ. ஸி. சரோஜா

அக்கா தடுத்த கல்யாணம்

நீ கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது, தியாகு! உன் அக்கா நான் சொல்கிறேன். கூடாது!

பேசினாலும் சிரித்தாலும், முக்கியமாகப் பெண்கள் பேசினால், அலமுவுக்குப் பிடிப்பதில்லை. அலுவலகத்தில் கூடப் பெண்கள் வாடையே அவனுக்குக் கூடாது என்பாள். அக்கம் பக்கத்துக்காரர்களுடன் சண்டை. அவர்களும் பேசுவது கிடையாது.

இளம் வயதில் அலமு நல்ல அழகி. தான் அழகி என்ற கர்வம் படைத்தவள். ஒரே பெண் என்பதால் அவள் தந்தை சுவாமிநாதன் அவளைச் செல்லமாக வளர்த்து, நல்ல இடத்தில் அவளைத் திருமணம் செய்து வைத்தார். கணவனுடன் ஆறு மாத காலம் கூடச் சரியாகக் குடித்தனம் செய்யவில்லை. வயிற்றில் இரண்டு மாத சிசுவுடன் பிறந்த வீட்டிற்கு அவளை அனுப்பி விட்டான். "உங்கள் பெண் ரொம்ப அடங்காப்பிடாரி. வாயாடி, எனக்கு வேண்டாம்," என்றும் சொல்லிவிட்டான். அந்த அதிர்ச்சியிலேயே அலமுவின் தந்தை



காலமாகிவிட்டார். அலமுவின் கணவன் வெளிநாட்டுக்குச் சென்றவன் அங்கேயே ஒரு வெள்ளைக்காரியை மணம் செய்து கொண்டு தங்கி விட்டான்.

அலமுவின் குழந்தையாவது உயிருடன் இருந்ததா என்றால் அதுவும் இல்லை. சுமைக்கூலியைப் பெற்றுக் கொண்டு கணக்குத் தீர்த்துவிட்டுப் போய்விட்டது.

வாழ்வில் ஒரே பற்றுக்கோல் தம்பி தியாகுதான் என்று ஆகிவிட்டது அவளுக்கு.

தியாகு வளர்ந்து, படித்து, ஆளாகி இன்று சொந்தக் கம்பெனியில் பெரிய பதவி வகிக்கிறான். இத்தனை வருடமும் பிரியாதிருந்த தம்பி, எந்தச் சந்தர்ப்பத்தில் தன்னை விட்டுப் போய் விடுவானோ என்ற பயம் அலமுவை வாட்டியது.

"அம்மா!" என்ற தோட்டக்காரனின் குரல் அலமுவைச் சிந்தனை உலகிலிருந்து மீட்டு வந்தது.

"என்னப்பா வேண்டும்?" உள்ளிருந்து தியாகு வந்தான்.



"பயப்படாதே, கௌதம்.... இதுதான் லேடஸ்ட் பாஷன் எக்ஸ்-ரே ஃப்ராக்."

"என் பெண்ணுக்கு அடுத்த மாதம் கண்ணாலங்க. பரிசம் போடக் கொஞ்சம் பணம் போதல்லே..இப்போ கொடுத்தீங்கண்ணா ஊருக்குப் போய்க் கொஞ்சம் கழனியை வித்துப் புட்டு, உங்க கடனை அடைச்சுடறேன்."

"ரொம்ப சந்தோஷம். எவ்வளவு பணம் வேணும்பா.. கல்யாணம் முடிந்த பிறகு தம்பதிகளை இங்கே அழைத்து வா.." என்றான் தியாகு.

"நூறு ரூபாய்."

தியாகு எடுத்து வந்து தந்தான்.

பணத்தைப் பெற்றுக்கொண்டதும் தோட்டக்காரன், "சாமி..உங்களுக்கும் ஒரு கல்யாணம் வரணும்.." என்றவன், அப்போதுதான் அங்கு வந்த அலமுவிடம் திரும்பி, "ஏம்மா, ஐயாவுக்கு ஒரு நல்ல இடமா பார்த்து முடிச்சுடலாங்க.. வயசாயிட்டே போகுதே.." என்றான்.

அலமுக்கு ஆத்திரம் வந்து விட்டது. "போதும், நிறுத்து உன் பிரசங்கத்தை. எனக்குத் தெரியும் எப்பொழுது கல்யாணம் செய்ய வேண்டும், வேண்டாமென்று. தியாகு நிம்மதியாக இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா? ஒரு பிடாரியை வீட்டுக்கு வரவழைத்து, அவனைச் சித்திரவதை செய்யணுமாக்கும்? அதற்கு நான் இடம் தர மாட்டேன்! உன்வரை பணம் கிடைத்து விட்டதல்லவா.. போய்ச் சேர்!"

தோட்டக்காரன் நடுங்கிக் கொண்டு போய் விட்டான்.

அன்று பிற்பகல்.

"அலமு, சௌக்கியமா? ரொம்ப நாளாச்சு உன்னைப் பார்த்து," என்றபடி அவளுடைய பழைய சிநேகிதி உஷா வந்தாள்.

அவள் ஒருத்தியைத்தான் அலமு வீட்டுக்குள் அனுமதிப்பது வழக்கம் — அதுவும் வயதில் தன்னையொத்தவள் என்பதால்.


அலமு அன்று காலை தோட்டக்காரனுடன் நடந்த சண்டையை அவளிடம் தெரிவித்தாள்.

உஷா சிரித்தாள்.

"அலமு, நான் சொல்றேன் என்று கோபித்துக் கொள்ளாதே. எல்லோரும் உன்னைப்பற்றி என்ன பேசுகிறார்கள் தெரியுமா? நீ ஒரு பைத்தி



கண்மணிப் பாப்பாவுக்கு மிகச் சிறந்ததென
நீங்கள் கண்டுகொண்ட பவுடர்...
உங்களுக்கும்
மிகச் சிறந்ததே
Johnson's* baby powder
PUREST PROTECTION
ஜான்ஸன்ஸ் பேபி பவுடர், உங்கள் அருமையறிந்து உருவாக்கிய அருமையான செல்வம். வேறெந்தப் பவுடரிலும் நீங்கள் அனுபவித்தறியாத சொகுசான இன்பம். மலர் மாரி பொழிந்து உடலாரத் தழுவும் மென்மை— உலகில் உன்னதமான இயற்கை நறுமணமேந்திவரும் மென்மை.
இளந் தளிர் மேனிக்கென்றே ஈடிலாத் தூய்மையும் மென்மையுமே உருவான படைப்பு: ஜான்ஸன்ஸ் பேபி பவுடர். அதனால்தான் 75 ஆண்டுகளாகப் பாப்பா உலகின் நம்பிக்கைக்கும் பாத்திரமாக விளங்குகிறது. அதனால் தான் உங்களுக்கும் இதுவே உகந்த பவுடர்.
ஜான்ஸன்ஸ்*
பேபி பவுடர்
அருமைப் பாப்பாக்களின் ஆசை இதுவே:
நீங்களும் உபயோகியுங்கள் ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்
* Trade Mark © Johnson & Johnson



யம் என்று. இவ்வளவு அறிவையும் அழகையும் தந்த ஆண்டவன் உன் மனத்தை ஏனோ கல்லாக்கி விட்டான்.''

அலமுவின் முகம் சிவந்தது. ''சரி, சரி. நீயும் உபதேசம் செய்ய ஆரம்பித்துவிடாதே.''

''தியாகு என்ன நேற்றுப் பிள்ளையா..? அவனும் தான் பொறுமையாக எத்தனை வருடம் உனக்காக வாழ்ந்து விட்டான்! நீ அவனுக்காக இனிமேலாவது வாழக் கற்றுக்கொள், அலமு. தியாகு நல்ல பிள்ளை. வேறு யாராவதாக இருந்தால் உன்னை உதறித்தள்ளிவிட்டுப் போயிருப்பான்.''

''போதும் உன் உபதேசம்! எனக்குத் தெரியும். போய் விடு இங்கிருந்து. இதற்குத் தான் இத்தனை நாட்களுக்குப் பிறகு வந்தாயா?'' திடீரென்று கேவிக் கேவி அழுதாள் அலமு.

''மன்னித்துக்கொள் அலமு. உன் மனத்தைப் புண்படுத்தி விட்டேன். நான் வருகிறேன்.'' உஷா போய் விட்டாள்.

தியாகு வழக்கத்திற்கு மாறாக, அன்று சற்றுச் சீக்கிரம் வீடு திரும்பி விட்டான். அலமு அவனை அந்த நேரத்தில் எதிர்பார்க்கவில்லை. திடீரென்று உள்ளே நுழைந்த தியாகுவைக் கண்டு பரபரப்படைந்தாள். ''என்னடா தியாகு, எனக்கு இன்றைக்குப் பிறந்த நாள் என்று எப்படி உனக்குத் தெரியும்? அதனால்தான் அக்காவுடன் சிறிது நேரம் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருக்க வேண்டுமென்று சீக்கிரம் வந்துவிட்டாயா?'' என்று ஆவலுடன் அவன் பதிலை எதிர்பார்த்தாள்.

''எனக்கு ஒரேடியாகத் தலை வலிக்கிறது. உடம்பு கணகணவென்று இருக்கிறது.''

அலமு அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். நெற்றி சுட்டது. முகத்தில் ஜுர வேகம் காணப்பட்டது. அவளுக்கு என்னவோ போலாகிவிட்டது. தியாகுவுக்கு உடம்பு என்று தெரியாமல், தன்னைப் பற்றியே நினைத்துக்கொண்டு கேட்டுவிட்டாளே!

சூடாகக் காப்பி போட்டுத் தந்தாள். மாத்திரைகளுடன் காப்பியை விழுங்கினான் தியாகு. படுக்கையில் புரண்டான்.

எதிரிலிருந்த அந்த ஓவியம் அவனைச் சுண்டி இழுத்தது. ராதையைப் பற்றி அவன் எண்ணங்கள் ஓடின. அக்கா பேச்சைக் கேட்டு

பறிமுதல் ஆகி, இப்போது தணிக்கை செய்தபடி ஓடுகிறதே, அந்தப் படத்திலிருந்து ஒரு காட்சி இது.

ஹேமமாலினி, பிரோஸ்கான் நடிக்கும் 'தர்மாத்மா'—ஆங்கிலத்தில் நாவலாகவும் படமாகவும் வந்த 'காட்ஃபாத'ரின் தழுவலாம். சரியான தழுவலாக இருக்கும் போலிருக்கிறது.



என்னைக் கைவிட்டு விடுவீர்களா என்று ராதை அழுவது போலிருந்தது.

நேரமாக ஆக அவன் ஜுரம் அதிகரித்தது. மறுநாள்—

தியாகு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான். டைபாய்டு என்று டாக்டர்கள் முடிவு எடுத்தார்கள். நாட்கள் உருண்டன. ஆனுல் ஜுரம் இறங்கினபாடில்லே. ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாக அலமு அலேந்து கொண்டிருந்தாள். ஏற்கெனவே ரத்த அழுத்த நோய் உள்ள அவளால் இந்த அலேச்சலேயும் கவலேயையும் தாங்கிக்கொள்ள முடியவில்லே.

அன்றுடன் தியாகு ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சரியாகப் பதினேந்து நாட்கள் ஆகிவிட்டன. அன்று காலேயிலிருந்தே அலமுவுக்கு இரத்த அழுத்தம் சற்று அதிகமாகக் காணப்பட்டது. தலே சுற்றியது.

கண்களில் கண்ணீர் வழிந்தது. துடைத்துக்கொண்டாள். ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும். ஆனுல் எழுந்திருக்க முடியவில்லே.

வேலேக்காரி தாயியிடம் அன்று உணவுகளே ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தாள்.

"இன்று பூரா தம்பி பக்கத்திலேயே உட்கார்ந்திரு. தெரிகிறதா?" என்று உத்தரவிட்டு அனுப்பினுள்.

தாயி கையில் பிளாஸ்க்குடன் சென்றவள், அரைமணி நேரத்தில் திரும்பி விட்டாள்.

அலமு பதற்றமடைந்தாள். "என்ன தாயி.. ஏன் இவ்வளவு சீக்கிரம்...."

"அம்மா, ஐயாவுக்கு யாரோ ஒரு பெண் காப்பி கொடுத்திட்டிருக்குது ..ரொம்ப நல்ல பெண்ணுய்த் தோணுதம்மா."

"சீ நிறுத்து!" என்று சீறிஞள் அலமு. அந்த ராதாவாகத்தான் இருக்க வேண்டும். டசப்புக்காரி! அவளுக்கு எப்படித் தெரியும் தியாகுவிற்கு உடம்பு சரியில்லே என்று?

"ஐயாவுக்கு இண்ணேக்கு உடம்பு நல்லா தேவலே அம்மா... கொஞ்ச நேரத்திலே டிஸ்சார்ஜ் செஞ்சிடுவாங்களாம்.. அந்தப் பொண்ணே அழைச்சிட்டு வர்றேண்ணு சொன்னுங்க.." வேலேக்காரி போய் விட்டாள்.

ரத்தம் கொதித்தது அலமுவுக்கு. என்ன ஒரு துணிச்சல் இருந்தால், தியாகுவுடன் இந்த வீட்டுக்குள்ளேயே நுழைவாள்! அவளே.. அவளே..

அலமுவின் தலேக்குள் பல மின்னல்கள் தெறித்தன. அவள் மூளேயில் ஒரு வெறி சீறியெழுந்தது. அந்த ராதையைச் சும்மா விடக்கூடாது. அவள் தியாகுவின் வாழ்க்கையில் நுழைய இடம் தரக்கூடாது ..

அவள் கண்கள் அலமாரியை ஆராய்ந்தன. அதோ —

'விஷம்' என்று சிவப்பெழுத்துடன் காட்சி தரும் புட்டி! தோட்டத்தில் தெளிப்பதற்காக வாங்கிய பூச்சி மருந்து!

அலமு கை பதருமல் அதை எடுத்தாள். காப்பிக் கோப்பையில் ஊற்றித் தயாராய் வைத்துக்கொண்டாள்.

வாசலில் காரின் சத்தம் கேட்டது. தியாகுதான்! அலமு எட்டிப் பார்த்தாள். கைத்தாங்கலாக அவனே அழைத்து வருகிருள் ராதை. ஹாலில் சோபாவில் உட்கார்த்தி வைக்கிருள்.

கோப்பையைக் கையில் எடுத்தாள் அலமு.

தியாகுவின் நெற்றியில் கை வைத்தபடியே ராதை பேசிக் கொண்டிருந்தாள். ''தியாகு, இனி மேல் நீங்கள் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்...''

''கவலைப்படாதே. என் அக்கா இருக்கிறாள்,'' என்றான் தியாகு.

''பாவம், உங்கள் அக்கா வுக்கும் வயதாகி விட்டது. இரத்த அழுத்த வியாதி வேறு. உங்களை யும் கவனித்துக் கொண்டு, தன்னை யும் எப்படிக் கவனித்துக் கொள்ளப் போகிறாரோ எனக்குப் புரியவில்லை. இருவரையும் கவனித்துக் கொள்ள, மூன்றாம் நபர் உங்கள் வீட்டில் யாரு மில்லையே!'' துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது ராதைக்கு. ''வாழ்க் கையில் நொந்து போனவர் உங்கள் சகோதரி.. அவருக்குத்தான் யார் இருக்கிறார்கள்!.. தியாகு, உங்கள் அக்காவுக்கு என்னைப் பிடிக்காவிட்டா லும் பரவாயில்லை. வேறு யாராவது நல்ல பெண்ணை மணந்து கொண்டு, சகோதரிக்குத் துணை தேடித் தரக் கூடாதா.. இப்படியே எத்தனை நாள் இருப்பது? நீங்கள் முந்திக் கொண்டு விட்டால், உங்கள் அக்காவின் கதி என்ன ஆவது? அல்லது அவர் முந்திக் கொண்டு விட்டால், உங்கள் கதி என்ன! யோசித்துப் பாருங்கள்..''

எல்லாவற்றையும் கேட் டுக் கொண்டிருந்த அலமுவுக்குத் தலை சுழன்றது. தள்ளாடினாள். வாழ்க்கை யின் தத்துவத்தை எத்தனை சுருக்க மாக நேற்றுப் பிறந்த ஒரு பெண் உணர்த்தி விட்டாள்! ஆம்.. தனக் குப் பிறகு தியாகுவிற்கு யார் இருக் கிறார்கள்? ஆனால் அதற்காக, அவனை இன்னொரு பெண்ணுக்கு விட்டுக் கொடுப்பதா! முடியாது.. ஒருநாளும் முடியாது.. அவள் கைகள் கோப் பையைப் பற்றின...

''அக்கா..அக்கா..''—கீழி ருந்து கூப்பிட்டான் தியாகு.

பதில் கிடைக்கவில்லை.

''அக்கா எங்கேயும் போக மாட்டாளே!'' திகைத்தவன் ராதை யின் கையைப் பிடித்துக்கொண்டு மாடிக்கு மெல்ல ஏறி வந்தான்.

அறையைத் திறந்தான்.

''அக்கா!'' என்று அலறி னான்.

...மீட்டர்

இன்னதுதான் கண்டு பிடிக்கிறது என்கிற விவஸ்தை கிடை யாது இந்த மேல்நாட்டுக்காரர்களுக்கு. பக்கத்திலே படுத்திருப்பவருக்கு எவ் வளவு ஆசை என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? அவள் கையில் பொருத்தி யிருக்கும் எலெக்ட்ரோடு இவன் காதுக் கும், இவன் கையில் பொருத்தியிருக் கும் எலெக்ட்ரோடு அவள் காதுக்கும் அதைத் தெரிவிக்குமாம்! அந்த ஆசைக்குத் தகுந்தபடி நடந்து கொள்ளலாமாம்! இந்த அபா ரக் கண்டுபிடிப்புக்கும் பெயர் ரிலாக்ஸோமீட்டர்.

—ஊர்மிளா



சில கெட்ட பழக்கங்கள்

(சிவசிவா அண்ட் கோ அலுவலகம். காலை பதினொரு மணி. சிப்பந்திகள் அனைவரும் சுறுசுறுப்பாய் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விஜயனின் மேஜையில் ஏழெட்டு இங்கிலீஷ் பத்திரிகைகள் கிடக்கின்றன. ஒவ்வொன்றாக யானை, மாடு, குதிரைப் படங்களை எடுத்துக் கத்தரித்துக்கொண்டிருக்கிறான். மானேஜர் முருகபூபதி பக்கத்திலே வந்து நிற்கிறார். விஜயன் கவனிக்கக் காணோம்.)

முருக: (தொண்டையைக் கனைத்து) ரொம்ப சுவாரஸ்யமான வேலை போலிருக்கு?

[விஜயன் தலைநிமிரக் காணோம்.]

முருக: (மறுபடி இருமி) ரொம்ப சுவாரஸ்யமான வேலையான்னு கேட்டேன்!

[விஜயன் கத்திரித்ததை எட்ட வைத்துக் கொண்டு அழகு பார்க்கிறான்.]

முருக: (அவன் கையிலிருந்து அதைப் பறித்து) இனிமேல் இருமினால் எனக்கு ஆஸ்துமா வந்துவிடும். நீயா இஞ்செக்ஷன் போட்டுப்பே?

விஜ (அப்போதுதான் அவரைக் கவனித்தவனாக) சார்! இந்தக் குதிரை போட்டோ எத்தனை அழகாயிருக்கு பார்த்தீங்களா?

முருக: ஷட் அப்! இதெல்லாம் என்ன வேலைங்கறேன்?

விஜ: ஏன் சார்? அஞ்சு மணி வரையிலே ஏதாவது பொழுது போகணுமே சார்? என் குழந்தை அம்முவை இந்த வருஷம் யூகேஜியிலே சேர்த்திருக்கிறேனே இல்லையோ? இந்த மாதிரி படமெல்லாம் ஒட்டிட்டு வரச் சொன்னாங்களாம் ஸ்கூல்லே. அழுதிட்டேயிருந்தது. 'வைத்தியமே! இதுக்கு ஏண்டி அழறே? ஆபீசிலே எனக்கு வேறென்ன வேலை? இன்னைக்குச் செய்து எடுத்திட்டு வர்றேன்'னு...

முருக: (பல்லைக் கடித்துக் கொண்டு) ஓகோ! குழந்தை வாக்ய பரிபாலனம் பண்ணுகிறாயா? பேஷ் பேஷ்!

விஜ: சார்... வந்து... நீங்க ஏதோ கோபமாய்...

முருக: கோபமா? சே, சே! இந்தக் காட்சியைப் பார்க்க ஆனந்தமாயிருக்கு! ஆனந்தத் தாண்டவம் ஆடணும் போலேயிருக்கு! (குரலை உயர்த்தி) இதிலே ஒண்ணும் தப்புன்னு உனக்குத் தோணலை?

விஜ: தப்பா! நோ, நோ! இதெல்லாம் ஆபீஸ் பத்திரிகை இல்லை சார். தெருக் கோடியிலே பழைய பேப்பர்க் கடை இருக்கே, அங்கே காசு கொடுத்து வாங்கினேன் சார்.

முருக: பத்திரிகை வாங்கினது இருக்கட்டும். ஆபீஸ் நேரத்திலே, இப்படி வீட்டு வேலையைச் செஞ்சிட்டு இருக்கிறதைப் பத்தி உனக்கு மனச்சாட்சி உறுத்தல்லே?

விஜ: (திருதிருவென்று விழித்து) ஆபீஸ் நேரத்திலே வீட்டு வேலையைக் கவனிக்காமே பின்னே வேறென்ன கவனிப்பாங்க? என்ன சார் புதிசா சொல்றீங்க?

ஹம்ஸா

முருக: ஏன், நாளைக்கு வீட்டிலேயிருந்து ஸ்டவ்வை எடுத்திட்டு வந்து இங்கே பத்த வைச்சு ரிப்பேர் பாரேன்!

விஜ: எங்க வீட்டிலே ஸ்டவ் கிடையாது சார். கியாஸ் அடுப்புதான்.

முருக: (அவன் மேஜை மீதிருந்த பத்திரிகைகள், கத்திரிக்கோல், படங்கள் எல்லாவற்றையும் சுருட்டி எடுத்துக்கொண்டு) இந்த விளையாட்டெல்லாம் இனிமேல் வேண்டாம்னேன். காலையிலே டாண்ணு பத்து மணிக்கெல்லாம் ஆபீசுக்கு வரணும்.

விஜ: எந்த ஆபீசுக்கு, சார்?

முருக: இந்த ஆபீசுக்குத்தான். உங்களுக்கெல்லாம் தண்டச் சம்பளம் கொட்டியழறுங்களே, சாட்சாத் இதே ஆபீசுக்குத்தான். சாயந்தரம் அஞ்சு மணிக்கு முன்னலே யாராவது வீட்டுக்குக் கிளம்பிணுங்கன்னு, அப்புறம் அங்கேயே இருந்துக்க வேண்டியதுதான்.

விஜ: சார்...

முருக: ஆபீஸ்லே இருக்கும் நேரத்தில் ஆபீஸ் வேலையைத் தவிர வேறு எதுவும் மூச்சு விடக்கூடாது. இந்தப் பக்கம் அந்தப் பக்கம் திரும்பக்கூடாது. பொடி, சிகரெட், வெற்றிலை பாக்கு—எதற்காகவும் எழுந்து கிழுந்து போகக்கூடாது...

விஜ: சார்...இப்படியெல்லாம் ஏதோ கவர்மெண்ட் ஆபீஸ்லே வந்திருக்கிறதாகச் சொன்ணுங்க...நம்மது பிரைவேட்...



முருக: கவர்மெண்ட் ஆபீஸ்களே அப்படி அலர்றப்போ, பிரைவேட் ஆபீசெல்லாம் தூள் பறக்கணும்! புரியுதா?

விஜ: வந்து...சார்...

முருக: இன்னொண்ணு. ஒவ்வொரு வந்து சார் போயி சாருக்கும் பத்து ரூபாய் அபராதம்.

[விஜயன் வாயைப் பொத்திக் கொள்கிறுன்.]

முருக: லெட்ஜரிலே மூணு மாசத்துப் போஸ்டிங் அப்படியே நிற்குது. அதை முடி முதல்லே. (போகிறுர்)

விஜ: சார், சார்! அந்தப் படங்கள்! அம்மு அழும் சார்!

முருக: நத்திங் டூயிங். முதல்லே போஸ்டிங்கை முடி.

விஜ: (யோசித்தபடி) லெட்ஜரா? அது எப்படி இருக்கும்? போஸ்டிங்காமே, அப்படின்னு என்ன செய்யணும்? (பக்கத்து மேஜை சேஷாத்திரியிடம்) ஏன் சார், உங்களுக்குத் தெரியுமா?

சேஷா: எனக்கென்னப்பா தெரியும்? நான் வேலைக்கு வந்து பத்து வருஷம்தான் ஆகுது.


2

(இரவு ஒன்பது மணி. விஜயனின் வீடு. சத்தம் போடாமல், ஓசை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காகச் செருப்பைக்கூடக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டு, விஜயன் உள்ளே நுழைகிறுன். விரலால் கதவைத் தட்டியதும் அவன் மனைவி கல்யாணி திறக்கிறுள்.)

விஜ: (கிசுகிசு குரலில்) அம்மு தூங்கிட்டுதா? அது கேட்ட படம் கொண்டுவரல்லே...

கல்: அப்பா ஏம்மா இன்னும் வரல்லேன்னு என்னைத் துளைச்சு எடுத்திட்டாள்.

[கல்யாணி சமையலறைக்குச் செல்கிறுள். விஜயன் சட்டையைக் கழற்றிவிட்டு லுங்கி அணிந்து கொள்கிறுன். கட்டிலின் நடுவே தூங்கிக் கொண்டிருக்கும் அம்முவின் கன்னத்தில் ஆசையுடன் முத்தமிட்டுவிட்டுச் சாப்பிட வருகிறுன்.]



மதுரை ஒத்தக் கடையில் பார்த்தேன். 'நர்சரி பள்ளி' என்பதற்கு 'மழலையர் பள்ளி' என்று மொழி பெயர்த்திருக்கிறுர்கள்.

—சித்துமதுரை

கல்: (தட்டில் சப்பாத்தி வைத்தபடி) நீங்க படம் கத்திரிச்சிட்டு வராதது இருக்கட்டும். அம்முவோட டீச்சர் ஒரு நோட் வேறே எனக்கு அனுப்பியிருக்காங்க.

விஜ: கொத்சு இன்னும் கொஞ்சம் போடு. என்னன்னு?

கல்: 'வீட்டிலே பேரண்ட்ஸும் கோச்சிங் கொடுக்கணும்'னு எழுதியனுப்பியிருக்காங்க.

விஜ: சுத்த நியூசென்ஸ்.

கல்: இந்த வட்டாரத்திலேயே அதுதான் நல்ல ஸ்கூல். அம்முவுக்கு இடம் கிடைக்க எத்தனை கஷ்டப்பட்டோம்னு மறந்துபோச்சா?

விஜ: ஸ்கூலைச் சொல்லல்லே. அம்முவோட டீச்சரைச் சொன்னேன். நீலாயதாட்சியோ, பச்சையாதாட்சியோ—சுத்தக் கிழம். திடீரென்று முழங்காலைப் பிடிச்சிட்டு நடு ரூம்லே உட்காரத்தான் தெரியும்.

கல்: (சிரித்து) அதென்னது?

விஜ: போன வாரம் பீஸ் கட்டறதுக்காகப் போயிருந்தேன் இல்லையா? ஹெட்மிஸ்ட்ரஸைச் சும்மா எட்டிப் பார்த்து விஷ் பண்ணப் போனேன். இந்தக் கிழவி வந்து ஏதோ ரெண்டு வார்த்தை பேசிட்டிருந்தது, திடீர்னு தரையிலே உட்கார்ந்திட்டது. முழங்காலைப் பிடிச்சிட்டு ஆ ஆன்னு கத்துது. நரம்பு இழுத்துட்டுதாம்!

கல்: பாவம்.

[சாப்பாட்டை முடித்துக் கொண்டு விஜயன் எழுந்து கொள்கிறுன். கல்யாணியும் பாத்திரங்களை எடுத்து வைத்துவிட்டுப் படுக்கையறைக்கு வருகிறுள். கட்டிலில் அம்முவுக்கு மறு பக்கத்தில் படுக்கிறுள்.]

விஜ: ஓகோன்னுனும். (அம்

முலை மெதுவே தூக்கி இந்தண்டை நகர்த்துகிறன்.)

கல்: என்னங்க...

விஜ: சொல்லுங்க...

விஜ: டாக்டர்கிட்டே போயிருந்தேன். 'உடம்பே நல்லாயில்லே. கொஞ்ச நாளைக்கு வம்பு தும்பு இல்லாமே சமர்த்தா இரேன்'னு சொன்னுங்க.

விஜ: அவங்க என்ன டாக்டரா, போலீஸ்காரரா? இடம் கொடுத்தால் பெட்ரூமிலே எட்டிப் பார்த்து நியூசென்ஸ் சார்ஜ்கூடப் பண்ணிடுவாங்க போலிருக்கே!

[அணைத்துக் கொள்கிறன் மனைவியை, அவள் சிணுங்கலைப் பொருட்படுத்தாமல்.]

3

[காலை எட்டு மணி. விஜயன் காப்பி சாப்பிடத் தயாராய் வருகிறன். டைனிங் டேபிள் மீது குழந்தை அம்மு உட்கார்ந்திருக்கிருள். கல்யாணி இருவருக்கும் காப்பி எடுத்து வருகிருள்.)

அம்மு: இதிலே ஊத்து அம்மா. (கோப்பையை எடுத்து நீட்டுகிருள்.)

கல்: சமர்த்தாய்க் கீழே உட்கார்ந்திட்டுக் காப்பி சாப்பிடேம்மா?

அம்மு: சீ! வாயை மூடு!

[அதிர்ச்சியினல் ஒரு துள்ளுத் துள்ளுகிறன் விஜயன். ஆனல் கல்யாணி அவனுக்குக் கண் ஜாடை காட்டுகிருள். திகைப்புடன் மௌனமாகிறன்.]

விஜ: அம்முக் கண்ணு, நேத்து ஸ்கூல்லே என்ன படிச்சே!

அம்மு: உதைப்பேன்!

விஜ: (அது காதில் விழாததுபோல் அசட்டுச் சிரிப்புடன்) என்ன, இன்னிக்கு அம்முக் கண்ணு புதுசு புதுசாப் பேசுது!

('சும்மா இருங்கள்' என்று கல்யாணி மறுபடி ஜாடை காட்டுகிருள்.)

அம்மு: படமெல்லாம் கொண்டு வரேன்னியே, கொண்டு வந்தியா?

விஜ: எடுத்து வச்சிருந்தேம்மா. எங்க மானேஜர் திடீர்னு வந்து எல்லாத்தையும் பிடுங்கிக்கிட்டார்.

அம்மு: கம்னுட்டி!

விஜ: (தடாலென்று கோப்பை கீழே விழ) ஆ! என்ன... என்ன சொன்னே?

கல்: (தலையில் அடித்துக் கொண்டு) ஐயையோ! அவளிடம் எதுவும் கேட்காமல் இருங்களேன்!


அம்மு: (மறுபடி அழுத்தந் திருத்தமாக) கம்னுட்டி!

கல்: வாசல்லே யாரோ கூப்பிடருங்க போலிருக்கே? யார், போய்ப் பார் அம்மு.

[குழந்தை வாசல் பக்கம் போகிருள்.]

விஜ: என்ன இது கல்யாணி அநியாயம்?

கல்: அதான் எனக்கும் புரியல்லே. காலையிலே பல் தேய்ச்சிட்டு



5 லட்சம் போலீசார் தப்பினார்களாமே!

எல். ஐ. சி. கட்டிடம் தீப் பிடிக்க ஆரம்பித்த மறுநாள் காலை.

பேப்பரை முதலில் பெற்ற என் தம்பி, "எல். ஐ. சி.யில் தீ! ஐந்து லட்சம் போலீஸ்காரர்கள் காப்பாற்றப்பட்டார்களாம்!" என்று கூவிக்கொண்டே வந்தான்

அதைக் கேட்டதும் எங்களுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. எந்த இடத்தில் அந்தச் செய்தி போடப்பட்டிருக்கிறது என்பதைக் காண்பிக்கச் சொன்ன பொழுது அவன் அந்தத் துணைத் தலைப்பை காண்பித்தான். அதில் இருந்தது -

Five Lakh Policies Saved!

—எஸ். எஸ். நடேசன்.

வாடீங்கறேன். 'சீ போ ராஸ்கல்'னு சொன்னாள்.

விஜ: ஐயையோ! அப்புறம்?

கல்: டப்பாவைத் திறந்து ஒரு ஸ்பூன் சர்க்கரை எடுத்தாள். வாயிலே போட்டுக்கிறப்போ, பிடுங்கிட்டேன். 'இடியட்!'னு திட்டினாள்.

விஜ: ஏதோவொரு சினிமாவிலே ஒரு குழந்தை இந்த மாதிரி சில கெட்ட வார்த்தை பேசறதா வந்ததே, அதைப் பார்த்திருப்பாளோ?

கல்: இருக்காதே.. சினிமாவுக்குப் போனால் இவளைப் பாட்டி வீட்டிலே விட்டுட்டுப் போகிறோமே தவிர எங்கே அழைச்சிட்டுப் போறோம் நம்மோடு?

விஜ: அப்படியானால் எல்லாம் அந்தப் பாழாய்ப் போன பள்ளிக்கூடத்திலேதான் கத்திட்டு வர்றாள். அது ஒரு பாடாவதி ஸ்கூல். ஊரிலே இருக்கிற ரோக் குழந்தைகள்ளாம் அங்கேதான் படிக்குது போலிருக்கு.

விஜ: ஸ்! அம்மு வர்றா.

[இரண்டு பேரும் வேறு எதையோ பற்றிப் பேசிக்கொண்ட மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு செயற்கையாகச் சிரிக்கிறார்கள்.]

அம்மு: செருப்பால் அடி! டர்ட்டி ஸ்கௌண்ட்ரல்!

[போகிறாள்.]

4

[அடுத்த நாள் இரவு. அம்மு தூங்கியாயிற்று என்பதைக் கவலையுடன் கவனித்தபடியே உள்ளே நுழைகிறான் விஜயன்.]

கல்: ஏங்க, ஸ்கூலுக்குப் போகப் போறதாய்ச் சொன்னீர்களே?

விஜ: போகாமல் இருப்பேனா? காலையில் ஆபீசுக்குப் போறப் போவே போனேன். அந்தக் கிழம்—அம்முவோட டீச்சர்—வரக் காணோம். ஹெட்மிஸ்ட்ரஸ்கிட்டே சொன்னேன். அம்முவோட கிளாசிலே இருக்கிற பசங்களைப் பத்தி விசாரிக்கிறேண்ணு சொன்னாங்க.

[யாரோ கதவைத் தட்டுகிறார்கள். கல்யாணி போய்த் திறக்கிறாள்.]

கல்: அடடே! வாங்க வாங்க. இப்பத்தான் உங்களைப் பத்திப் பேசிட்டிருந்தோம்.

> பீல்ட் மார்ஷல் மானெக்ஷா குன்னூரில் தனது வீட்டில் புதுப்புது ரோஜா செடிகளை வளர்க்கிறார். மலர்களுக்கு தமது நண்பர்கள் பெயரையும், ரேஸ் குதிரைகள் பெயரையும் வைத்திருக்கிறார்.
>
> —டெக்கான் ஹெரால்ட்டிலிருந்து கே. சரஸ்வதி.

[விஜயன் எட்டிப் பார்க்கிறான். அம்முவின் டீச்சர் வந்திருப்பதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறான்.]

விஜ: வாங்க, வாங்க!

டீச்சர்: (சிரித்தபடி) உங்களோடு சண்டை பிடிக்கலாம்னுதான் வந்தேன். (விஜயனிடம்) காலையிலே ஸ்கூலுக்கு வந்து, என் கிளாஸ் மேலே கம்ப்ளெண்ட் பண்ணினீர்களாமே?

விஜ: வந்து. . .அது. . .நீங்களே பாருங்க. . .அம்மு என்னென்னவோ கெட்ட வார்த்தையெல்லாம் கத்திட்டு வந்து சொல்றாள்.

டீச்: இங்கே கூடத்தான் லொகாலிடி ரொம்ப மட்டம். அக்கம் பக்கத்துப் பிள்ளைகள்கிட்டே கத்திட்டிருக்கலாம்.

கல்: ஆமாமாம். நீங்க அதைத் தப்பாய் நினைக்காதீங்க. அம்மு நல்லா படிக்கிறாளா?

டீச்: அதெல்லாம். . .ஆ! ஆ!

(தன் காலைப் பிடித்துக் கொண்டு அலறுகிறாள்.]

கல்: என்ன, என்ன? தேளா?

டீச்: கால்! கால்! நரம்பு இழுத்துட்டுது. . .ஐயோ! ஆ!

விஜ: இதுக்குப் பச்சைத் தண்ணி வைத்தியம்தான் பெஸ்ட்!

[விரைந்து சென்று கூஜாவில் குளிர்ந்த நீர் எடுத்து வருகிறான். அதைக் கால்மீது ஊற்றிக் கொள்கிறாள் டீச்சர். கல்யாணி உருவி விடுகிறாள்.]

டீச்: அம்மாடி. . .அம்மா. . . இரண்டு மணி நேரத்துக்குக் காலை

அசைக்கக்கூட முடியாதே? நான் எப்படி வீட்டுக்குப் போவேன்?

கல்: ஏன் போகணும்? ராத்திரி இங்கே படுத்துக்கொண்டு விட்டுக் காலேயில் போகலாம்.

டீச்: உனக்கு ஒண்ணும்..

கல்: ஒரு கஷ்டமுமில்லே. [விஜயனிடம்] நீங்க அப்படி ஹாலிலே படுத்துக்குங்க. நானும் டீச்சரும் இங்கே படுத்துக்கிறோம்.

[விஜயன் முறைப்புடன் தலேயணே ஜமக்காளம் எடுத்துக்கொண்டு வெளியேறுகிறான்.

கிட்டத்தட்ட நடுராத்திரி ஆகிறது. கல்யாணியை டீச்சர் தட்டி எழுப்புகிறாள்.)

கல்: என்ன, என்ன?

டீச்: உஷ்! கேளுங்க...

(கல்யாணி எழுந்து உட்கார்ந்து உற்றுக் கேட்கிறாள். அவள் முகத்தில் ஆச்சரியம் பரவுகிறது. எழுந்து கதவைத் திறந்து பார்க்கிறாள்]

கல்: ஓகோ! இப்படியா சமாசாரம்!

5

(மறுநாள் காலே. அம்முவைச் சிறிது நேரம் கொஞ்சிவிட்டுப் புறப்படுகிறாள் டீச்சர்.]

டீச்: மிஸ்டர் விஜயன்! அம்மு விஷயம்...எங்கே கோளாறுன்னு நேத்து ராத்திரி நானும் உங்க மிஸஸ்ஸும் கண்டுபிடிச்சிட்டோம். உங்க மிஸஸ்ஸையே கேட்டுக்குங்க.

[புறப்பட்டுச் செல்கிறாள். கொஞ்ச நேரம் கழித்து ஆயா வந்து அம்முவைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துச் செல்கிறாள்.]

விஜ: (கண்ணுடி முன் தலே வாரியபடி) ஏய் கல்யாணி! அந்த டீச்சர் கிழம் என்னமோ மிஸ்டீரியஸ் ஸாய்ச் சொல்லிட்டுப் போகிறதே? அம்முவுக்குக் கெட்ட வார்த்தை சொல்லித் தந்ததெல்லாம் யாராம்!?

கல்: (சிரிப்புடன்) யாருன்னு அந்தக் கண்ணுடியிலே தெரியலே?

விஜ: யார்...என்ன! நானு? என்னேயா சொன்னுங்க? நான்ஸென்ஸ்!

கல்: அதேதான்! தினம் இனிமேல் ஆபீஸ் விட்டதும் நேரே பீச்சுக்குப் போங்க. ஆளில்லாத இடமாய் உட்கார்ந்துகிட்டு, வாய்விட்டு உங்க மானேஜரை கன்னுபின்னுன்னு திட்டித் தீர்த்துவிட்டு அப்புறமாய் வீட்டுக்கு வாங்க!


விஜ: என்னது?

கல்: கொஞ்ச நாளாய் உங்க ஆபீசிலே ஏகப்பட்ட கெடுபிடி இல்லே? அங்கே ஒண்ணும் வாயைத் திறக்க முடியாமல் இருக்கு. அதனுலே ராத்திரி தூக்கத்திலே உங்களே அறியாமல் மானேஜரைக் கண்டபடி திட்டறீங்க. அதெல்லாம் அம்மு காதிலே விழுகிறது. அப்படியே கப்புனு பிடிச்சுக்கிறாள். நான் நல்லாத் தூங்கறவளானதாலே அதைக் கவனிக்கல்லே. நேத்து ராத்திரி டீச்சர் உங்க பேத்தலேயெல்லாம் கேட்டு, என்னேயும் எழுப்பிக் காட்டினுங்க!

விஜ: மை காட்!

கல்: இனிமேல், ஆபீஸ்லே கெடுபிடிகள் பழக்கமாகிற வரைக்கும் நீங்க அம்மு பக்கத்திலேயே வராதீங்க. நானும் அம்முவும் உள்ளே. ஐயா வெளியிலே! டாக்டரோட அட்வைஸையும் கேட்ட மாதிரி இருக்கும்.

விஜ: கல்யாணி! உன் மனம் கல்!



''அடடா! என்ன காலில் பேண்டேஜ்?''

''நாய்த் தோல் செருப்பு வாங்கினேனே, கடித்துவிட்டது.''

ரஞ்சனா

"ஆத்மா, ஆத்மா! டேய், எங்கிருந்துடா பிடிச்சே? அசப்பிலே ரேகா மாதிரியே இருக்காடா. எப்படி, எப்படிடா டேய்!"

"ஏண்டா, டிராமா காண்ட்ராக்ட் மட்டும்தான் பேசினியா? வேறே அட்ஜஸ்ட்மெண்ட் ஏதுனா.."

"நீ சும்மா இருடா..'நவராத்திரிக்கு நாயனக் கச்சேரி, காலட்சேபம், வாய்ப்பாட்டு இப்படித்தானே இதுவரைக்கும் வச்சிருக்காங்க, ஃபர் எ சேஞ்ச் இந்தவாட்டி ஒரு டிராமா குரூப் ஏற்பாடு பண்ணா என்ன'ண்ணு இவன் கேட்டான். அப்பவே எனக்குத் தெரியும்."

"என்ன....என்னடா தெரியும்? என்னமோ இந்த ரஞ்சனா அமெச்சூர் குரூப் நாடகம் பார்த்தேன். இவ ஆக்டிங் பிடிச்சிருந்தது. நாம் அனுபவவிச்சதை மற்றவங்களும் அனுபவிக்கட்டும்ணுதான்.."

"இரு இரு. நீ அனுபவிச்சதையெல்லாம் .. ஐ மீன் எல்லாமே நாங்க அனுபவிக்கணும்ணு சத்தியமா ஆசைப்பட்டியா? சொல்லுடா."

"முழிக்கிறான். முழிக்கிறான் பாரு. நாங்க ஆக்டிங் மாத்திரம் பார்க்கணும் ..இவர் அதுக்கு மேலே பார்த்துக்குவார் .... ஏண்டா, அப்படித்தானே?"

"கிக்கிக்கீ ....என்னடா சிரிப்பு?"

"அட சீ! நான் சிரிக்கலேடா. அதோ, அந்தப் பிச்சைக்காரி ஈன்னு நிக்கறதைப் பாரு."

"ஏய் .... ஏ புள்ளே! என்ன இங்கே வேடிக்கை? நாலு வெடைப் பசங்க நின்னு பேசிக்கிட்டிருந்தால் போதுமே! வந்து நின்னுடும். துரத்துடா பீடையை."

"முகரை நாய் வண்ணமா இருந்தா எவனாவது இசித்துட்டு போவான். இதும் மூஞ்சிக்கு .... போம்மே. இந்தா காசு. ஏதுனா டிபன் வாங்கிக்கோ போ."

"டேய், இதே கண்டி ரஞ்சனாவா இருந்தா இப்படிப் பேசுவியா? ஏதோ அனாதை..அதன் தலையெழுத்து இப்படி ஆயிட்டுது."

"போச்சுடா. இந்தச் சாவு கிராக்கிகிட்டே சுந்தரத்துக்கு அப்படியே பாசம் பொங்கி வழியறாப்பலே இருக்கு. ஒண்ணு செய். உனக்கும் கல்யாணம் ஆகிற வழியாத் தெரியலே. ஜோடிப் பொருத்தம் தேவலே. முடிச்சுடுவோமா?"

"டேய்,ஆத்மா நம்பளை டைவர்ட் பண்றான். கமிங் டு த பாயிண்ட், ரஞ்சனா சமாசாரம் என்ன?"

"சத்தியமாச் சொல்றேன். இப்பத்தாண்டா ஃபீலர் விட்டுப் பார்த்திருக்கேன். முடிஞ்சதும் சொல்றேன்."

"சொல்றதோட நிற்காதேடா. யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்னு சொன்னியே, அதை மறந்திடாதே."

"ஏண்டா, ஆத்மாவை

பி. எஸ். எஸ்.



என்னன்னு நினைச்சுப் பேசறீங்க?''

''அதானே? விடுங்கடா அவனை. நீ போடா ராஜா. ரஞ்சனு காத்திட்டிருப்பா.''

■ ■ ■

இந்தத் தடவை நவராத்திரி விழாவை நாடக விழாவாக நடத்துவது என்று ஊர்கூடித் தீர்மானம் போட்ட வுடனே ஆத்மாவின் பெயர்தான் அத்தனை பேருக்கும் நினைவில் வந்தது.

நாடகக் குழுவை ஏற்பாடு செய்ய, இருந்து கவனித்துக் கொள்ள அவனை விட்டால் தகுதியான ஆள் கிடையாது.

லேவாதேவி ராமலிங்கத்தின் ஒரே பிள்ளை அவன். கணக்கில் வராத பணமெல்லாம் அவன் கையில் புரண்டது. நினைத்தால் பெங்களூர்தான், மெட்ராஸ்தான். எத்தனை எத்தனையோ ரகங்களைச் சுவைத்தவன். சொந்த அனுபவத்தை வைத்துப் புதிய காம சூத்திரம் தயாரிக்கத் தகுதி பெற்றவன். நாலும் தெரிந்தவன். பெண்கள் விஷயத்தில் அவன் அப்படி இப்படி இருந்தாலும் பொதுக் காரியங்களில் நாட்டம், ஊருக்கு உபகாரம். நல்ல பிள்ளை. இளகிய மனசு.

''ஆத்மா, உனக்குத் தெரியாத நாடகக் குழுவா? பிரமாதமான ட்ரூப் அரேஞ்ச் பண்ணு. அவர்கள் வந்ததிலிருந்து வழியனுப்பும் வரை எல்லாம் உன் பொறுப்புத்தான்,'' என்று டிரஸ்டி அவன் தலையில் பூச் சூட்டியதைப் பெருமையாக எடுத்துக் கொண்டான்.

சென்னையில் ரஞ்சனு நாடகக் குழு நடித்த நாடகம் ஒன்றைப் பார்த்ததிலிருந்து அந்த ரஞ்சனுவின் மேல் அவனுக்கு ஒரு கண். என்னவோ நெருங்கிப் பார்க்க வாய்ப்பில்லாமலே ஏதாவதொரு விவகாரம் குறுக்கிட்டுக் கொண்டிருந்தது. இப்போது கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ளாமல் விடுவதற்கு அவனுக்குப் பைத்தியமா என்ன?

கௌன்சிலர் கல்யாண மண்டபத்தில் ரஞ்சனு நாடகக் குழுவினரைக் கொண்டு வந்து நவராத்திரிக்கு முந்தின தினமே இறக்கி விட்டுவிட்டான்.

''ஆத்மா, நீங்கள் எப்பொழுதும் எங்களுடன்தான் இருக்க வேண்டும்,'' என்று ரஞ்சனுவே வலிய வந்து சொல்லும்படி நடந்து கொண்டான்.

மேக்கப்பே தேவையில்லை ரஞ்சனுவுக்கு. அந்த ரோஜா நிற மேனி, கரிய பெரிய விழிகளின் சுழற்சி, எப்போதும் தேனூறும் அதரங்கள், எடுப்பான உடல், கதுப்புக் கன்னங்கள் - எப்போது எப்போது என்று அவனைத் துடிக்க வைத்துக் கொண்டிருந்தன.

நாடகக் குழுவின் ஒவ்வொரு நாடகமும் ரஞ்சனுவுக்குப் புகழை அள்ளிக் கொடுத்தன. ஆனால் அவள் நடந்து கொண்ட முறை—தன்னைச்

சுற்றி ஒரு வேலி அமைத்துக் கொண்டு ஐந்நூறு ஆயிரம் என்று அவள் காலில் கொட்ட வந்த பணக்காரர்களை நெருங்க வொட்டாமல் தடுத்த விதம்—அவனை வருக்கும் வியப்பைத் தந்தது.

ஆத்மா ஒருவனிடம் மட்டும் சரளமாகப் பழகினாள். ஆனால் அவனையும்கூட ரொம்ப நெருங்க அனுமதிக்க வில்லை.

டிரெஸ்ஸிங் மேசைக்கு எதிரில் அமர்ந்து எண்ணெய்ப் பஞ்சினால் முகத்து மேக்கப் பூச்சை வழித்துப் போடும் நேர்த்தியை, அந்த லாகவத்தை அவளுக்குப் பக்கத்தில் ஒரு டீப்பாயை இழுத்துப் போட்டு அதில் அமர்ந்து ரசித்துக் கொண்டிருந்தான் ஆத்மா.

''ரஞ்சனா, சத்தியமாய்ச் சொல்றேன். இன்றைக்கு உங்க ஆக்டிங் சுபர்ப். அதிலேயும் அந்த ஃபஸ்ட் நைட் சீன்லே எனக்கு ரொம்பப் பொறாமையா இருந்தது.''

அவள் மேக்கப்பைக் கலைப்பதை நிறுத்திக் கொண்டு கழுத்தை வளைத்து ஒயிலாக அவனை அளவெடுத்தாள். ''ஊம்? என்ன பொறாமை?'' குழலாய் இழைந்தது குரல்.

''சொல்லட்டுமா? நிஜமாய்ச் சொல்லிடுவேன்.''

''ஊம்.... நானென்றும் பயப்பட மாட்டேன்.''

''நான் அங்கே கதாநாயகனாய் இல்லையே என்று பொறாமையாய் இருந்தது.''

ரஞ்சனா மேக்கப்பைக் கலைத்து விட்டு எழுந்து வந்து அவன் தோளில் இரு கரங்களையும் ஊன்றிக் கொண்டு



''உனக்கு என்ன கடி?''

''பண நெருக்கடி. பத்து ரூபா கைமாற்று வேணும்!''

கொஞ்சலாகக் கேட்டாள். ''கதாநா கனாய் இருந்திருந்தால் என்ன செ திருப்பீர்கள்?''

அவளது வெண்டைப் பிஞ் விரல்களை ஆசையோடு தடவிக் கொடுத் ''இதோ இப்படிச் செய்திருப்பேன்,' என்று மோதிரத்தை அணிவித்தான்

■ ■ ■

''ஏய் ஆத்மா, மேக்கப் ரூமில் நீயும் ரஞ்சனாவும் குலாவிய தெல்லாம் பார்த்திட்டுத்தான் இரு தோம்.''

''கந்தர், அதெல்லாம் உங் களுக்குச்சொல்லிப் புரியவைக்க முடி யாது.''

''டேய், பையன் என் னமோ உளர்றான். உளர்றான்.''

''இனிமே நான் அவளைச் சந்திக்கறதையே அவ விரும்ப மாட் டாள்னு நெனைக்கிறேன். எல்லா இவர்களையும் போல இல்லை அவள்.''

■ ■ ■

ஒரு நாள் இரவு, நாடகம் முடிந்து, மேக்கப் எல்லாம் கலைக்கப் பட்டு, அவளுக்கென்று ஏற்பாடு செய்யப் பட்ட தனி விடுதியில் ரஞ்சனா தூங்கச் செல்லும் நேரம்.

உள்ளே நுழைந்த ஆத்மா அவளுடைய சோகம் நிறைந்த தோற் றத்தைக் கண்டு திடுக்கிட்டான்.

அவள் துக்கத்துக்குக் கார ணம் கேட்டான்.

மென்காற்றில் ஒசிந்து விலகு வது போல் உறுத்தல் தெரியாமல் தன்னை விடுவித்துக் கொண்டு தெரு வைச் சுட்டிக் காட்டினாள் அவள்.

எதிர் வீட்டு ஒட்டுத் திண் ணையில் முடங்கிப் படுத்திருப்பது...

ஊருக்குள் அலையும் அந் அனாதைப் பெண் – அவன் நண்பர்கள் செமி என்று அலட்சியப் படுத்திய அந்தப் பெண்.

''அது ஒரு பைத்தியம். அதைப்பற்றி என்ன இப்போது? இப்படி வா.''

அவள் தலை குனிந்து கொண் டாள். அவள் தொடையில் பொட்டா



லேப் கிளாசுக்கு (பரிசோதனை வகுப்புக்கு) மாணவர்கள் செல்லும்போது டிரஸ்ஸுக்கு மேலே வெள்ளை கோட் அணிந்து கொள்வார்களாம். —டிரஸ்ஸின்மீது அமிலம் போன்றவை தெறித்து அவற்றைப் பொசுக்கிவிடுவதைத் தவிர்க்க. இந்த வெள்ளைக் கோட்டுகள் ஏர் - கண்டிஷன்ட் ஆக இருக்கும். அவ்வளவு பொத்தல்கள்.

□ □ கெமிஸ்ட்ரி வகுப்பில் கிண்டல் பெயர்களுக்குப் பஞ்சமில்லை. ''காப்பர் ஸல்ஃபேட்''— எப்போதும் ப்ளூ ஷர்ட் அணிந்து கொண்டிருக்கும் மாணவர். ஸிலிகன் என்றால் மண். மூளை இல்லாத ஸ்டூடண்டுகளுக்கு இந்தப்

கத் தண்ணீர் விழுந்ததைக் கண்டதும் முகத்தை நிமிர்த்தினான் அவன். அவள் அழுது கொண்டிருந்தாள்.

''ஆத்மா, என்னால் எத்தனை குடும்பங்கள் எப்படியெல்லாம் சீரழிந்து போய் விட்டன!'' அவள் பெருமூச்சு விட்டாள்.

விந்தியர் மெடிக்கல் ஷாப்காரருக்கும் அவளுக்கும் ஏற்பட்ட சாதாரணப் பரிச்சயம் அவள் காலடியிலேயே முதலாளி தியாகராசனை கொண்டுவந்து சேர்த்துவிட்டது. அவர்களுடைய ஒரே பெண் சுபா. 'வீட்டிலே வயசு வந்த பெண் ஒன்றை வைத்துக் கொண்டு நீங்கள் இப்படி யாரோ ஒரு நாடகக் காரியின் வீடே கதியென்று கிடப்பது சரியில்லை,' என்று பெண்டாட்டியும் நெருங்கிய உறவுக்காரர்களும் எவ்வளவோ புத்தி சொல்லியும் தியாகராசன் கேட்கவில்லை.

ஒருநாள் தியாகரர்சனின் மனைவி நேரே ரஞ்சனாவின் வீட்டுக்கு வந்து, 'என் குடும்பத்தைத் தெருவில் நிறுத்திவிட்டாயே பாவி!' என்று மண்ணை வாரித் தூற்றியவள், கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டுவிட்டாள். சுபாவை வைத்துக் கொள்ள எந்த உறவுகாரரும் முன்வரவில்லை. அடுக்கடுக்கான அதிர்ச்சி, ஆதரிக்க யாருமில்லை என்ற திகில், சுபாவை அரைப் பைத்தியமாக்கி இப்படித் தெருவில் நிறுத்திவிட்டது.

''ஆத்மா, இந்த ஊரில் தான் அந்தப் பெண் அலைகிறாள் என்பது இங்கே வந்த பிறகுதான் தெரிந்தது. இந்தப் பாவங்களுக்கெல்லாம் நா எப்படிப் பரிகாரம் தேடப் போகிறேன் எப்படி, என்ன செய்து, என் பாவ களைக் கழுவப் போகிறேன்.''

அவன் அவளை ஆதரவுட அணைத்துக் கொண்டான். ''ரஞ்சன குடும்பம் என்று ஒன்று இருந்தா அதற்குச் செய்ய வேண்டிய கா மையைச் செய்துவிட்டுத்தான் ஒருவ மற்றதைக் கவனிக்க வேண்டு அப்படி ஒருவன் செய்யவில்லை என்ற அந்தப் பாவம் அவனைத்தானே பாதி கும்? அதற்கு நீ எப்படிப் பொறுப்பா முடியும்? நீயா வலியப் போய் அவனை குடும்பத்திலிருந்து பிரித்தாய்?''

அவள் விரக்தியாகச் சிரி தாள்.

''ஆத்மா, எங்கள் நாடக குழுவினரிடம் நான் மறைத்து வை திருக்கும் இன்னோர் உண்மையை உங் ளிடம் சொல்லிவிடுகிறேன். எனக் ப்ளட் கான்ஸர் என்று போனமாதமே டாக்டர் சொல்லிவிட்டார். நான் அதி நாள் பிழைத்திருக்க மாட்டேன்.''

''என்ன!'' அதிர்ந் போனான் ஆத்மா.

''ஆமாம், ஆத்மா. உ ரோடுள்ள வரை நான் என்னை நம்பியிருக்கும் கோஷ்டியினருக்கு என்னாலான உதவிகளைச் செய்ய வேண் டுமென்பதே இதுவரை என் நோக்கமா இருந்தது..இனி..இனி..'' அவ எதிர் வீட்டுத் திண்ணையை மறுப காட்டினாள். ''அந்த அனாதைப் பெண் ணையும் சேர்த்து..அவளுக்கு ஒ

பெயர். எல்லாரிடமும், மாணவர் ஒட்டிக்கொள்ளும் மாணவருக்கு "ஸோடியம் குளோரைடு' (சுலபமாகக் கரையக் கூடியது.)

☐ ☐ புரோமின் என்ற திரவம் நெடி வீசும். அதை வெளியில் எடுத்தாலே புகை வரும். அந்த நெடி தொண்டையை எரித்துவிடும். அவ்வாறு புரோமின் நெடி முகர்ந்துவிட்டால் உடனே திறந்த வெளிக்குச் சென்று நல்ல காற்றைச் சுவாசிக்க வேண்டும். லேப் கிளாஸிலிருந்து கால் மணி அரை மணி வெளியே வர வேண்டுமென்றால், அனைவரும் புரோமின் மீது பழியைப் போடுவார்கள். பர்மிஷனும் உடனே கிடைத்துவிடும். பாவம் புரோமின்!

☐ ☐ ஒவ்வொரு கெமிஸ்ட்ரி மாணவிகளுக்கும் சில உபகரணங்கள் கொடுத்து, அவற்றை வைத்துக் கொள்ள 'கப்போர்ட்' கொடுப்பார்கள். லேப் வகுப்பில் வந்து 'கப்போர்டை'த் திறந்தால் சில சமயம் பீக்கரில் (கண்ணாடிக் குடுவையில்) கரப்பான்பூச்சிகள், தவளை போட்டு வைத்திருப்பார்கள். 'ஐயோ' என்று அபயக் குரல் கொடுக்க வேண்டியதுதான்— ஹீரோக்கள் ஓடி வந்து உதவி செய்வார்கள்!

—லதா சுஜித்

அட்டையில்: குமாரி அபர்ணா ஸ்ரீநிவாசன்

வண்ணப்படம்: உத்ரா

வாழ்வு கொடுத்தாக வேண்டும்..." அவளுக்கு லேசாக மூச்சிரைத்தது. அப்படியும் தன் திட்டத்தைக் கூறி முடித்தாள்.

☐ ☐ ☐

"பாரடா, அந்த அரைப் பைத்தியத்துக்கு வந்த யோகத்தை! இதுக்குக் கல்யாணமாமே?"

"டேய், சும்மா சொல்லக் கூடாது. அதைச் சீவிச் சிங்காரிச்சு, காதிலே மூக்கிலே பிரமாதமாய் மாட்டிவிட்டு, பட்டுப் புடவையும் கட்டிவிட்டதும் பாரேன், சும்மா பெரிய வீட்டுப் பொண்ணாட்டம்தான் இருக்கு."

☐ ☐ ☐

மணமகன், ரஞ்சனாவின் நாடகக் குழுவைச் சேர்ந்த இளைஞன் ஆனந்தன். ரஞ்சனா அவன் கையில் கணிசமான ரொக்கம் கொடுத்து அவனைத் திருமணத்துக்குச் சம்மதிக்க வைத்திருந்தாள்.

திருமணச் சடங்குகள் கோலாகலமாய் நடந்து கொண்டிருந்தன. மணமகள் சுபா தன் அழகைக் கண்ணாடியில் ரசித்துக்கொண்டிருந்தாள்.

"மாப்பிள்ளையை வரச் சொல்லுங்கள்..." புரோகிதர் அழைப்பு விடுத்தார்.

மாப்பிள்ளை எங்கே? எங்கே?

குழுவினரைச் சேர்ந்த ஓர் ஆசாமியைப் பிடித்து உலுக்கினாள் ரஞ்சனா. "மாரிமுத்து, சொல். எங்கே ஆனந்தன்? ஆனந்தன் எங்கே?"

"வந்து அம்மா...அவன் கல்யாணப் பெண்ணைப் பற்றி விசாரித்திருக்கிறான். அரைப் பைத்தியம், பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று தெரிந்து போய்விட்டது. உங்களிடம் நேருக்குநேர் வேண்டாம் என்று சொல்லக் கூச்சப்பட்டுக்கொண்டு ஊரை விட்டே ஓடிப் போய்விட்டான்."

"டாக்டர்!.. டாக்டரைக் கூப்பிடுங்கள்."

ஆத்மாதான் பாய்ந்து சென்று ரஞ்சனாவைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான். யாரோ தண்ணீர் கொண்டுவந்து தெளித்தார்கள்.

ரஞ்சனா மெள்ளக் கண் விழித்தாள். ஆத்மாவை அவள் விழிகள் ஊடுருவின. "ஆத்மா, பார்த்தீர்களா? என் ஆசையில் மண் விழுந்துவிட்டதே! நான்...நான் நிம்மதியாய்ச் சாகக் கூடாதா? எனக்கு நிம்மதி கிடைக்காதா? நான் பரிகாரம்...தேட முடியாதா?"

"இல்லை ரஞ்சனா... உனக்கு நிம்மதி கிடைக்கும். அதைத் தர என்னால் முடியும்," என்றான் ஆத்மா.

☐ ☐ ☐

"என்னடா இது அநியாயம்! கடைசியிலே ஒரு பைத்தியத்தைப் போய்க் கல்யாணம் செய்துகொண்டு விட்டானே இந்த ஆத்மா?"

"அது பைத்தியமில்லைடா. இவன்தான் பைத்தியம். முழுப் பைத்தியம்!"



ஏய்! பாலமுல் என்றால் தெரியுமா ?
அது ஒரு தானிய உணவு. பிறந்த மூணாவது மாசத்துலேருந்து சாப்பிடறேன், சுலபமா சீரணமாகுது.
இப்போ எனக்கு மாசத்துக்கு இரண்டு டின் வேணும்!
எனக்குப் பெருமையடிக்கப் பிடிக்காது. ஆனால் 10 மாதத்தில் என் வளர்ச்சியைப் பாருங்கள். பாலமுலில் சாதம், ரவை போன்ற சாதாரண உணவுகளைவிட அதிக ப்ரோட்டீன் இருக்கிறது.
ருசி மிகுந்த சுக்குங்கூட!
எனக்குப் பிடித்தது பாலமுலும் பாலும், பாலமுலும் சூப்பும், பாலமுலும் சாறும், பாலமுல் இல்லாம முடியாது.
எங்களுக்கு ரொம்பப் பிடிச்சது
அம்மா, என்னை, நான் வளர்ந்து கெட்டிக்காரன் ஆவேன். அப்பா, நான் ராவெல்லாம் அசந்து தூங்கறேன்.
இலவசம்:
(ஆங்கிலத்தில்) எழுதிக் கேளுங்கள் பாலமுல் இலவசப் புத்தகத்திற்கு: தபால் பை 10124, பம்பாய் 400001
3 மாதங்கள் ஆனதும்
பாலமுல்
பாலுடன் கூடிய தானிய உணவு
மூளையும் உடலும் முழுமையாக வளர.
குழந்தைகளுக்கு பாலிலிருந்து கெட்டி உணவுக்கு மாற்றும்போது, குழந்தைக்குப் போதுமான அளவு புரதச் சத்துள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். பாலமுல், பாலுடன் கூடிய தானிய உணவு. இது யுனைடெட் நேஷனின் ப்ரொடீன்-காலரி அட்வைஸரி க்ரூப் நிர்ணயித்துள்ள, ப்ரொடீன்-காலரி முறைப்படி தயாரிக்கப்பட்டிருக்கிறது.
பாலமுல் பாட்டிலில் ஊட்டினால்: ½ அமுல்ஸ்ப்ரே, ½ பாலமுல்
பாலமுல் ஸ்பூனில் ஊட்டினால்: பாலமுலுடன் முழு உணவு.
Bal-amul cereal with milk
விற்பனையாளர்:
குஜராத் கோவாபரேடிவ் மில்க் மார்கெடிங் ஃபெடரேஷன் லி. ஆனந்த்.
RADEUS-GCM-8-3



REGD No M 4920 REGISTERED AS A NEWSPAPER IN CEYLON KUMUDAM
29-5-75


50,000 ரூபாய்
மதிப்புள்ள பரிசுகள்
பெறுங்கள்
பாரியின் "ஏற்றதருணம் எது" சேருங்கள்
போட்டியில்
2 முதற் பரிசுகள் — ரூ 10,000 மதிப்புள்ள நகைகள், உங்கள் விருப்பம் போல்
2 இரண்டாவது பரிசுகள் — ரூ 5,000 மதிப்புள்ள நவீன குக்கிங் ரேஞ்ச் அல்லது ரெப்ரிஜிரேட்டர்
50 ஆறுதல் பரிசுகள் — ரூ 400 மதிப்புள்ள காஞ்சீபுரம் பட்டுச்சேலைகள்
முழு விவரங் களடங்கிய நுழைவுத்தாட்கள் உங்கள் அருகாமையிலுள்ள பாரி விற்பனையாளரிடம் பெறுங்கள்.
Parry's "Pick-The
பாரியின் 'ஸ்வீட் பாங்க்' தரமான பாரி மிட்டாய்கள் அடங்கியது. கண்ணைக்கவரும் ஆறு அழகிய வண்ணங்களில். 450 கிராம் மிட்டாய்களுக்கு விலை ரூ 12 தான்!
பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், சென்னை
முந்துங்கள்! போட்டி முடியும் நாள் ஜீன் 15, 1975
SAA/PRS/1665
Parry's


12-6-75
ஐம்பது காசு
REGISTERED AS A NEWSPAPER IN CEYLON KUMUDAM
(விமானப்பதிப்பு) 60 மலேயா காசு. இலங்கையில்